

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ என்னவென்று நான் சொல்ல...? ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ என்னவென்று நான் சொல்ல...? ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
என்னவென்று நான் சொல்ல...?

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

என்னவென்று நான் சொல்ல?...

1

உன்னைத் தொட்ட காற்று...

என்னைத் தொட்ட நொடியை

என்னவென்று நான் சொல்ல..?

கடலோரக் காற்று முகத்தில் படிய.. கண்மூடி அதை ரசித்தாள் மாலினி... அதிகாலை நேரப் பேருந்து பயணமே சுகமான ஒன்று... அதில் ஜன்னலோரம் அமர்ந்து கொண்டு.. காலை நேரக் காற்று முகத்தில் படிய ஜன்னல் கம்பிகளில் முகம் சாய்த்துக் கொள்வது அதைவிட சுகமான ஒன்று. இதில் கூடுதலாக கடலோரப் பாதையில் பேருந்து செல்ல... ஜன்னலோரம் தலை சாய்த்து கடலைப் பார்த்தபடி கடற்காற்றை முகத்தில் படியவிட்டுக் கொள்வது மிக மிக சுகமான ஒன்று.

காற்றில் கேசம் அலைபாய.. கடல் காற்றை ரசித்தபடி சென்று கொண்டிருந்த மாலினி... பக்கத்தில் இருந்த பாட்டியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்...

"எங்கே கண்ணு போகிற..?"

பதில் சொல்லாமல் புன்னகைத்தாள் மாலினி. மீண்டும் ஜன்னல்புறம் திரும்பி கடலை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்...

"ம்ம்... இந்தக் காலத்து பிள்ளைகள் எல்லாத்திலயும் விவரம்.. கேட்ட கேள்விக்கு பதிலும் சொல்லாமல் அதைக் குத்தமா எடுத்துக்கவும் விடாமல் சிரிச்சே மழுப்புதுகளே.."

பக்கத்து ஸீட் பாட்டி.. மாலினியை சிலாகித்துக் கொண்டாள்...

அதற்கும் பாட்டியைப் பார்த்து ஒரு சிரிப்பை உதிர்த்து வைத்த மாலினி.. பதில் பேசாமல் ரசிக்கும் வேலையை மீண்டும் தொடர்ந்தாள்...

கடல் கண்ணுக்கு மறைய... லேசாக இளம் வெயில் அடிக்க ஆரம்பித்திருந்தது. சூடேயில்லாத இளம் வெயிலில் முகத்தைக் காட்டுவதும் பிடித்துப் போக... மாலினி.. பழைய படி ஜன்னலில் சாய்ந்து கொண்டாள்...

"ஏன் கண்ணு... வெயிலடிக்குதே.. தள்ளி உட்காரேன்..." மனம் கேளாமல் பாட்டி கூற... திரும்பிப் பார்த்து மீண்டும் சிரித்து வைத்தாள்.

'யார் இந்த பெண்..? தனியாகப் போகுது.. எங்கே போகுதுன்னு கேட்டால் சிரித்து வைக்குது...'

பாட்டிக்கு அவளைப் பற்றி அறிய ஆர்வமாக இருந்தாலும் பிடி கொடுக்காத மாலினியிடம் பேசிப் பயனில்லை என்று விட்டு விட்டாள்...

"மார்த்தாண்டமெல்லாம் இறங்குங்க..." பஸ்ஸின் நடத்துனர் உரத்த குரலில் கூறிவிட்டு... முதல் ஆளாய் இறங்கினார்...

"இதுதான் கடைசி ஸ்டாப்... இறங்கவில்லையாம்மா..." பாட்டி அக்கறையாய் வினவ...

"நான் பெட்டிகளையும்.. பைகளையும் தூக்கிக் கொண்டு இறங்கணும்.. அதனால கடைசியாய் இறங்கலாமுன்னு நினைக்கிறேன்.. நீங்க முதலில் இறங்குங்க பாட்டி..." என்றாள் மாலினி...

"பரவாயில்லையே.. இவ்வளவு நீளமாய் பேசிட்டாயே. எங்கே.. பேச முடியாத ஊமையோன்னு நினைத்து விட்டேன்..."

இறங்கும்போது மறக்காமல் ஒரு சொல் வீச்சை வீசிவிட்டு பாட்டி இறங்கிவிட்டாள்.. பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்து

கொண்டு வந்தாலும்... வம்பு பேச இடம் கொடுக்காத கோபம் அவளுக்கு.

பாட்டியின் பேச்சினால் எந்தவித பாதிப்பும் அடையாமல் எழுந்து லக்கேஜ் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தனது பெரிய பெட்டிகள் இரண்டையும் இழுத்து கீழே ஸீட்டில் வைத்தாள் மாலினி. குனிந்து காலடியில் இருந்த பெரிய டிராவல் பேக்கை தூக்கி தோளில் மாட்டிக் கொண்டு இரண்டு கைகளிலும் இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினாள்.

"எந்தா.. சேட்டா..." என்று யாரோ கேரள பாஷையில் பேசிக் கொண்டு போக.. சுற்றிலும் பார்த்தாள்..

தலைக்கு குளித்து.. அடர்ந்து நீண்டு தொங்கும் முடியை விரிய விட்டு... நெற்றியில் சந்தனக்

கீற்றுடன்.. கல்லூரிக்கும் வேலைக்கும் கிளம்பிப் போய் கொண்டிருக்கும் இளம்பெண்கள் கண்ணில் பட்டனர்..

'பானு சொன்னது சரியாகத்தான் இருக்கு.. இவர்களைப் பார்த்தால்.. கேரளத்துப் பெண்கள் போலத்தான் இருக்கிறாங்க...'

மார்த்தாண்டத்தின் பக்கத்தில் இருந்த ஊரில் புதிதாக கட்டப்பட்டிருந்த மில்லில் வேலை கிடைத்திருக்கிறது என்று மாலினி கூறியபோது.. அவளுடைய வீட்டினர் அதை வரவேற்கவில்லை. பலமாக ஆட்சேபித்தனர்.

"சென்னையில் இருக்கிற பெண்.. கம்ப்யூட்டர் இன்ஜினீயருக்குப் படித்துவிட்டு கனடாவிற்கு பறந்து போய் வேலை பார்த்தால் அதை பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்து விட்டு எங்கேயோ கேரளா பார்டரில் இருக்கும் மார்த்தாண்டத்திற்கு போய் மில்லில் வேலை பார்த்தால் அதைப் பெருமையாகவா சொல்லிக் கொள்ள முடியும்? பேசாமல் சென்னையிலேயே வேலை தேடிக் கொள். மார்த்தாண்டமெல்லாம் போக வேண்டாம்..."

ஜானகிராமன் சத்தம் போட்டார். அவருடைய கவலை அவருக்கு. ரிட்டயர் ஆவதற்குள் பெண்ணை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டால் கடமையைச் செய்த திருப்தி கிடைக்குமே என்று அவர் யோசித்தார்.

அவருடைய மனைவி காவேரிக்கோ வேறு ஒரு கவலை. ஆண் ஒன்று... பெண் ஒன்று.. என்று அருமையாக இரண்டு குழந்தைகளைப் பெற்று ஆசை ஆசையாக வளர்த்தும்.. மூத்தவனாகிய ரஞ்சித்.. பாசம் என்றால் கிலோ என்ன விலையென்று கேட்கிறானே என்று மனதிற்குள் கிடந்து மறுகிக் கொண்டிருந்தாள் அவள்.

திருமணம் ஆகும் வரை அம்மா அப்பா தங்கை யென்று குடும்பத்தின் மீது பாசமாக இருந்தவன்.. திருமணம் முடிந்த ஒரே நாளில் மனைவியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தனிக்குடித்தனம் போகத் தவித்துக் கொண்டிருக்கிறானே என்று மனம் கலங்கினாள் காவேரி.

வெட்னரி டாக்டருக்குப் படிக்க வைத்து.. வேலையும் வாங்கிக் கொடுத்து.. திருமணமும் செய்து வைத்த பெற்றவர்களை கை கழுவப் பார்ப்பவனை.. மகளின் திருமணத்தைக் காரணம் காட்டி தனிக்குடித்தனம் போக விடாமல் நிறுத்திக்கொண்டிருந்தாள் அந்தத் தாய்.

"உன்னைக் கையெடுத்து கும்பிடுறேண்டா ரஞ்சித்.. உன் தங்கைக்கு அண்ணனாக இருந்து அவள் கல்யாணத்தை மட்டும் நடத்தி வைத்து விடு.. அதற்குப் பின்னால்... உன் பெண்டாட்டியின் விருப்பப்படி நீ தனிக்குடித்தனம் போ. நான் தடுக்க மாட்டேன். அதுவரை பொறுத்திருடா மகனே.."

"ஏம்மா.. எதற்கெடுத்தாலும் அவள் மேல் பழிபோட்டால் என்ன அர்த்தம்... ராதிகா பாவம்.. வாயே திறப்பதில்லை..."

'அது சரி... எங்கள் முன்னால் அவள் ஏன் வாயைத் திறக்கப் போகிறாள்... அதுதான் அவள் சாவி கொடுத்தவுடன் வந்து எங்களிடம் ஆடித் தீர்க்க நீ இருக்கிறாயே...'

மனதிற்குள் குமைந்து கொண்டு வெளியில் மகனிடம் மன்றாடுவாள் காவேரி.

"அவள் தங்கம்னு எனக்கும் தெரியும்டா ரஞ்சித்.. நான் அவளைக் குறை சொல்வேனா.. உனக்கிருக்கிறது ஒற்றை தங்கைடா... அவளுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வைப்பது உன் கடமையில்லையா..?"

மகனின் மனதில் படியும் வண்ணம் உருவேற்றித்தான் வைப்பாள் காவேரி. ஆனால்.. பகலில் தாயின் வார்த்தை களுக்கு பூம்பூம் மாடு போல தலையாட்டுபவனை இரவில் தலையணை மந்திரத்தை ஓதி தன் வசப்படுத்திக் கொள்வாள் ராதிகா.

"அம்மா.. கல்யாணமுன்னா அவ்வளவு ஈஸியான விஷயமா..? நான் வேலைக்குப் போக ஆரம்பித்து ஆறு வருடங்கள்தான் ஆகின்றன.. மாலினி கல்யாணத்திற்கு பொறுப்பேற்றுக் கொள்ள என்னால் எப்படி முடியும்...?"

'மகராசி... ஓதி விட்டாளா...'

காலையில் எழுந்தவுடன் கையில் காபித் தம்ளருடன் வந்து நின்று பேசும் மகனைப் பார்த்தபடி எரிச்சலுடன் மனதிற்குள் பல்லைக் கடித்துக் கொள்வாள் காவேரி...

"நீ சொல்வது நிஜம்தாண்டா ரஞ்சித்... உன் படிப்புக்கும் வேலைக்கும் செலவழிக்காமல் இருந்திருந்தால்.. மாலினியின் பெயரில் கல்யாணத்திற்கு என்று ஒரு தொகையைப் போட்டு வைத்திருக்க முடியும். பெண்ணை உனக்குப் பிடித்துப் போய்விட்டது என்பதற்காக எங்களின் கைப்பணத்தைப் போட்டு உன் கல்யாணத்தை நடத்தி வைக்காமல் இருந்திருந்தால் மாலினிக்கென்று நகைகளைச் சேர்த்து வைத்திருக்க முடியும். இது இரண்டும் உன் எதிர்காலத்திற்காக என்று பார்த்து நாங்கள் கணக்குப் பார்க்காமல் செலவழித்து விட்டோம் ரஞ்சித். இப்போது மாலினிக்கு என்று வரும்போது எங்கள் கை வறண்டு விட்டது. அதனால்தான் அண்ணன்காரன் என்ற முறையில் உன் கடமையைச் செய்யச் சொல்கிறேன்..."

காவேரியின் மறைமுகத் தாக்குதலை உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் ராதிகா, கோபத்தில் கொந்தளிப்பாள்...

"உங்க அம்மா என்னை வெறும் கையுடன் வந்தவள்னு குத்திக் காட்டுகிறாங்க.. இதைக் கேட்டுக் கொண்டு சும்மா வருகிறீங்களே..."

"என்னை வேறு என்னதான் செய்யச் சொல்கிற ராதிகா.. அவங்க கேட்கிற கேள்விகள் எல்லாம் நியாயமாகத்தானே இருக்கு..."

"அப்போ.. நான் அநியாயமாய் பேசுகிறேனா..?"

"நான் அப்படிச் சொன்னேனா..?"

"வேறு எப்படிச் சொன்னீங்க..."

"என் படிப்பிற்கும் வேலைக்கும் கல்யாணத்திற்கும் என் வீட்டில் லட்சக்கணக்கில் பணத்தை செலவு செய்தது நிஜம்.."

"அவங்க கடமையைத்தானே அவங்க செய்தாங்க..?"

"அந்தக் கடமையைத்தானே என்னையும் அவங்க செய்யச் சொல்றாங்க...?"

தங்கையின் விஷயத்தில் மட்டும் முந்தானை முடிச்சின் பிடியிலிருந்து வெளிப்பட்டு நிமிர்ந்து நிற்கும் கணவனை வளைக்க முடியாமல் இயலாமையுடன் கோபப் படுவாள் ராதிகா...

## 2

**உன் முகம் பார்த்தபோது...**

**என் வார்த்தை மறந்த நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மார்த்தாண்டம் பஸ் நிலையம் பெரியதாகவுமில் லாமல் சிறியதாகவுமில்லாமல் அளவாக இருந்தது.. அங்கிருந்த பயணிகள் அமரும் சிமெண்ட் பெஞ்சில் பெட்டிகளை வைத்து அதன் மேல் டிராவல் பேக்கை வைத்த மாலினி... செல்போனை எடுத்து சசிரேகாவின் எண்களை அழுத்தினாள். மறுமுனையில் சசிரேகாவின் குரல் கேட்டது..

"எங்கிருக்கிறாய் மாலினி...?"

"மார்த்தாண்டம் பஸ் ஸ்டாண்டில்..."

"ஓ.. வந்துவிட்டாயா...?"

"ஆமாம் வந்துவிட்டேன்..."

"வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா..?"

"ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ்.."

"நீ அங்கேயே இரு.. காரை அனுப்பி வைக்கிறேன்.."

"உனக்கு எதற்கு சிரமம் சசி.. நீ அட்ரஸை சொல்லு.. நான் ஒரு ஆட்டோவைப் பிடித்து வந்துவிடுகிறேன்.."

"வேண்டாம்.. வேண்டாம்.. என்னை நம்பி.. சித்தப்பா உன்னை என் வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறார்.. உன்னை ஆட்டோவில் வரவைத்தது தெரிந்தால் என்னை உண்டு இல்லையென்று பண்ணிவிடுவார்..."

"நான் சொன்னால்தானே.."

"நீ சொல்லாவிட்டாலும்.. சித்தப்பா விசாரிக்கும் போது நான் சொல்லிவிடுவேனே..."

"பெரிய உண்மை விளம்பி..."

"அப்படித்தான்னு வைத்துக்கொள்.."

"முடிவாய் என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்..?"

"கார் அனுப்புகிறேன்.. வந்து சேர்..."

இவள் எப்போது கார் அனுப்பி எப்போது வீடு போய்ச் சேர்வது.. என்ற சலிப்புடன் அதே பெஞ்சில் அமர்ந்து பஸ் நிலையத்தின் பரபரப்பை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள் மாலினி..

"என் பேச்சைக் கேட்காமல்.. மார்த்தாண்டத்திற்கு போயே தீருவேன்னு.. ஒற்றைக்காலில் நிற்கிறாய்..."

"இல்லையேப்பா.. இரண்டு கால்களிலும் தான் நின்றுகொண்டு இருக்கிறேன்..."

"விளையாட்டுப் பேச்சுப் பேச இது நேரமில்லை மாலினி..."

"சரிப்பா..."

"நீ ஆசைப்படுகிறாய் என்பதற்காக.. அத்துவானக் காட்டுக்கெல்லாம் உன்னைத் தனியாக அனுப்பி வைத்து விட முடியாது..."

"அது அத்துவானக் காடில்லைப்பா.. மார்த்தாண்டம்.."

"இப்போதுதானே சீரியஸாகப் பேசச் சொன்னேன்..?"

"சரிப்பா.."

"அங்கே லேடீஸ் ஹாஸ்டல் இருக்குன்னு சொல்கிற..."

"ஆமாம்பா..."

"அப்படியெல்லாம் உன்னை விட்டுவிட முடியாது.."

"என்னப்பா.. இப்படிச் சொல்றீங்க..?"

"என் ஒன்றுவிட்ட அண்ணனின் மகள் சசிரேகா மார்த்தாண்டத்தில்தான் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்..."

"அவளிடம் கேட்டு.. நல்ல ஹாஸ்டலாய் பார்க்கச் சொல்லப் போறீங்களா..?"

"இல்லை.. அவள் வீட்டிலேயே தங்கிக் கொள்னு சொல்கிறேன்..."

ஜானகிராமன் தீர்மானமாய் சொன்னதும் மாலினி, காவேரியைப் பார்த்தாள்.. அவள் கவலையுடன் ஜானகிராமனைப் பார்த்தாள்...

"ஏங்க... கூடப் பிறந்த அண்ணனே பந்த பாசமில்லாமல் விலகிப் போகிற இந்தக் காலத்தில.. சுற்றி வளைத்து அண்ணன் மகள்னு உறவு கொண்டாடிக்கிட்டு.. சசியின் வீட்டிற்கு மாலினியை அனுப்பி வைப்பது சரியாய் வரும்னு எனக்குத் தோணலைங்க..."

"ஏண்டி.. அவள் பத்தரை மாத்துத் தங்கம்டி...."

"நான் என்ன... அவள் பித்தளையின்னா சொன்னேன்...? அவள் காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டவள்.. உங்களுடைய ஒன்றுவிட்ட அண்ணன்னு சொல்லிக்கொள்ளும் சசிரேகாவின் அப்பாவை ஆக்சுவலாய் நீங்க மூன்று விட்ட அண்ணன்னுதான் சொல்லிக்கணும்.. அவ்வளவு தூரத்து சொந்தம்... அதோடு அவர் அவ்வளவாய் வசதியில்லாதவர்.. ஆனால், சசிரேகாவின் மாமனார் வீடு வசதியில் பெரிய இடம்னு கேள்விப்பட்டேன்... அங்கே சசியைப் பெத்தவங்களுக்கே அவ்வளவாய் மதிப்புக் கிடைக்காதாம். இதில் வீட்டோடு தங்கியிருக்க.. உறவுக்காரியாய் நம்ம பொண்ணு போய் நின்னா.. அவங்க வீட்டில் என்ன மதிப்புக் கிடைக்கும்..?"

"பேசி முடிச்சிட்டாயா.. ஏண்டி.. வாயைத் திறந்தால் மூடவே கூடாதுன்னு வரம் வாங்கிப் பிறந்திருக்கிறாயா.. இப்படி மூச்சுவிடாமல் பேசற...?"

"யதார்த்தத்தை எடுத்துச் சொன்னால் உங்களுக்கெல்லாம் இப்படித்தான் பகடி பேசத் தோன்றும்..."

"போதும்டி.. சசியின் வீடு பெரிய பணக்கார வீடு... அவங்க பணத்தில் மட்டும் பெரியவங்க இல்லை... அவங்க குடும்பமும் பெரியது.. அங்கே நம்ம பொண்ணு தங்கி வேலை பார்ப்பது அவளுக்கு பாதுகாப்பு..."

"இருந்தாலும்.. விருந்தும் மருந்தும் மூன்று நாள்ங்கிறது பழைய காலத்தில் சொல்வது.. இப்போது மூன்று மணி நேரம் இருந்தாலும் அதிகம். அப்படியிருக்க.. நம்ம பொண்ணு விருந்தாளியாய் போய் வருஷக் கணக்கில் அங்கே தங்குவதா? இது உங்களுக்கே கொஞ்சம் அதிகப் படியாய் தோன்றவில்லையா...?"

"வருஷக்கணக்கில் யார் விட்டு வைக்கப் போகிறது..?"

"பின்னே..."

"நல்ல இடத்தில் மாப்பிள்ளை அமையும் வரை நம் மகள் ஆசைப்படி வேலை பார்க்கட்டும்.. கல்யாணம் நிச்சய மானதும் வேலையை விடச் சொல்லிவிடலாம்..."

காவேரிக்கும் இது சரியான யோசனையாய் பட.. அவள் அரை மனதுடன் சம்மதித்தாள்...

பக்கத்து வீட்டு பானுவோ... இன்னும் ஒரு படி மேலே போய் மார்த்தாண்டத்தைப் பற்றி வரைபடமே தயாரித்து தந்தாள்...

"நாகர்கோவிலில் இருந்தே மலையாளம் பேசுகிற மக்கள் ஆரம்பித்து விடுவார்கள் மாலினி.. அவர்கள் பேசும் தமிழே ஒரு மார்க்கமாய் இருக்கும்..."

"உன்னைப் போலவா..?"

"ஊஹூம்... உன் அண்ணியைப் போல..."

"ஏண்டி.... கிளம்புகிற நேரத்தில் உள் வீட்டுக் கலவரத்தை வெடிக்க வைக்கப் பார்க்கிற.. அவங்க காதில் விழுந்துவிடப் போகுது.. வீணாய் வம்பு வந்துவிடும்... பேசாமலிரு..."

"இல்லாட்டியும்... உன் அண்ணி வம்பு வளர்க்காத ஆள்தான்.. அதுதான் வகையாய் அமைதியின் சிகரமாய்

உன் அண்ணன் மாட்டியிருக்கிறாரில்ல.. இது வெளுத்துக் கட்டுது..."

"சும்மாயிரு பானு..."

"இப்படிச் சொல்லிச் சொல்லியே என்னை அடக்கி வைத்தே.... நீ மட்டும் வாயைத் திறக்காமல் இருந்திருந்தால்.. உன் அண்ணனை கணக்குப் பண்ணி நான் உன் அண்ணியாக வந்திருப்பேன்..

நீ சொன்னாய்ன்னு அடக்கி வாசித்தேன். கடைசியில் காத்திருந்தவள் காதலனை நேற்று வந்தவள் தள்ளிக் கொண்டு போய்விட்டாள்..."

"ச்சீ.. அசிங்கமாய் பேசாதேடி..."

"என் கவலை எனக்கு.. யாருக்குடி.. இப்படி வாய்பேசாத வெடரினரி டாக்டர் மாப்பிள்ளையும்.. பயந்து நடுங்கும் மாமியாரும்.. சித்தர் போல இருக்கும் மாமனாரும்.. ஒதுங்கிப் போகும் நாத்தனாரும் கிடைப்பார்கள்.. கொடுத்து வைத்த மகராசி.. அவளுக்குப் போய் இவ்வளவும் கிடைத்திருக்கு.."

"ஊஹூம்.. நீ இன்றைக்கு ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறாய்.. கிளம்பு... கிளம்பு..."

"நான் கிளம்புவது இருக்கட்டும்.. நீ எப்போது கிளம்பப் போகிறாய்..?"

"நாளை மறுநாள்..."

"அடுத்த நாளே போய் வேலையில் ஜாயின் பண்ண வேண்டுமா..?"

"இல்லை.. ஒரு நாள் தள்ளித்தான் போவேன்.."

"புது இடம்... பார்த்துப் பழகு..."

"ம்ம்.. நீ இதைச் சொல்கிறாய்.. ஆனால்.. அண்ணி இதைப் போல் ஒரு வார்த்தை.. வாயைத் திறந்து சொல்ல வில்லை பானு..."

"நீயேன் எதிர்பார்க்கிற?"

"எதிர்பார்க்காமல் எப்படி இருக்க முடியும்டி.. நானென்ன அண்ணனின் பணத்தையா எதிர்பார்க்கிறேன்..? அவரின் பாசத்தைத்தான் எதிர்பார்க்கிறேன். அதையும் அவங்க உரிமையில் நான் பங்கு போட வருகிறேன்னு ஜாடையாய் சொல்லிட்டாங்க. நானும் அதிகமாய் அண்ணனிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டேன்.. இப்போது வெளியூருக்கு வேலைக்குப் போகிறேன். இப்போதுகூட என்னிடம் பாசமாய் நான்கு வார்த்தைகள் பேசக்கூடாதா..?"

"விடேன்டி.. பாசத்தைப் பற்றி அவளுக்கென்ன தெரியும்? வேஷத்தைப் பற்றி வேணும்னா தெரியும். அவள் ஒரு பிறவின்னு நீ அவளைப் பற்றி இவ்வளவு தூரம் ஏங்கிப் பேசுகிற.. உன்னை என்னதாண்டி செய்வது.."

பால்ய காலம் முதல் பழகி வரும் தோழி உரிமையுடன் கண்டித்தாள். ஆனாலும் மாலினியின் மனம் ஆறவில்லை. மழைக்கு ஏங்கும் சாதகப்பட்சி போல அண்ணனின் பாசத்திற்காக அவள் மனம் ஏங்கியது.

மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றபடி அவள் பெட்டிகளில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த போது...

"மாலினி..." என்ற ரஞ்சித்தின் குரல் கேட்டது...

"அண்ணா..." என்று உற்சாகமாக எழுந்தாள் மாலினி...

"இந்தாம்மா..."

ரஞ்சித் அவளிடம் சில பிளாஸ்டிக் பைகளை நீட்டினான்.. அவள் திகைப்புடன் வாங்கிக் கொண்டாள்...

"என்ன அண்ணா இது..?"

"வேலைக்குப் போகப் போகிறாய். அதனால் கொஞ்சம் புதிதாய் சுடிதார் செட்டுக்களை எடுத்தேன். பிடித்திருக்கிறதா..?"

"பிடித்திருக்கிறது.."

"பார்க்காமலேயே சொல்கிறாயே..."

"இதைப் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை அண்ணா.. நீங்கள் வாங்கிக் கொடுப்பது எதுவாக இருந்தாலும் எனக்கு அது உயர்வான ஒன்றுதான்.."

கண்ணீர் மல்க.. பாசத்தில் கரைந்த தங்கையைக் கண்டு பாகாய் உருகிப் போனான் ரஞ்சித். தங்கையை லேசாய் அணைத்து அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான்...

"இப்படியெல்லாம் நடிக்க எனக்குத் தெரியாது.. என்னமாய் மாய்மாலம் பண்ணி கண்ணில இருந்து தண்ணியைக் கொட்டுறா உங்க தங்கை. அப்பப்பா.. இவளுக்கு ஊர்வசி அவார்டெல்லாம் பத்தாது. ஆஸ்கார் அவார்டு தான் தரணும்.." முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டு ராதிகா.. தனிமையில் கணவனிடம் புலம்பினாள்...

## 3

**நீ பார்த்த பார்வை...**

**எனக்கு உணர்த்திய செய்தியை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

நேரம் நகர்வதை உணர்ந்தவளாய்... லேசாக நகம் கடித்தாள் மாலினி.. பேசாமல் ஒரு ஆட்டோவைப் பிடித்துப் போய் விடலாம். ஆனால்.. சசிரேகா அவ்வளவு தூரம் வற்புறுத்தும்போது அவள் பேச்சை எப்படி மீறுவது என்ற யோசனையாகவும் அவளுக்கு இருந்தது...

ரஞ்சித்கூட கவலைப்பட்டான்.. காவேரியிடம்.. ஒன்றிற்கு பத்து முறை சசிரேகாவின் வீட்டைப் பற்றி விசாரித்தான்...

"ஏம்மா.. அவங்க மாமியார் வீட்டுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்.. அங்கே போய் மாலினி தங்குவது சரியாய் வருமா..?"

"இதையேதான் நான் உன் அப்பாவிடம் கேட்டேன்.. என்னை வாயை மூடுடின்னு சொல்லிவிட்டார்.. நீயாவது கேட்டுப் பாரு.."

கணவன்.. அவனுடைய தங்கையின் மேல் அதிகமான பாசத்தைக் காட்டுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ராதிகா, தாய்க்கும் மகனுக்குமான உரையாடலில் குறுக்கிட்டாள்..

"ஏங்க.. பெத்தவங்களுக்கு தெரியாத யோசனை-யையா நீங்கள் சொல்லிவிடப் போகிறீங்க.. அவங்களுக்குத் தெரியாதா.. அவங்க பெண்ணிற்கு எது நல்லது.. எது கெட்டதுன்னு. நமக்கு ஏன் இந்தப் பேச்சு.. நீங்க உள்ளே வாங்க..."

மாலினிக்கும் ரஞ்சித்திற்கும் எந்தவித உறவுமே இல்லாதது போலவும்.. அவளுடைய நலனை ஜானகி ராமனும் காவேரியும் பார்த்துக் கொள்வார்கள் என்றும் பேசிவைத்த ராதிகாவை எரித்துவிடுவது போல பார்த்தாள் காவேரி..

'கடன்காரி.. என்னவோ.. தெருவில் நடந்து போகிறவளின் மேல் இவள் புருஷன் அக்கறை காட்டிவிட்டது போல என்னமாய் ஸீன் போடுகிறாள்.. அண்ணன்காரன்.. தங்கைக்கு ஆதரவாய் ஒரு வார்த்தை வாயைத் திறந்து பேசிவிடக்கூடாதா..?'

மாமியாரின் பார்வையை லட்சியம் செய்யாமல் கணவனை ராதிகா முறைக்க.. அவன் பதிலுக்கு முதல் முறையாய் மனைவியை பதிலுக்கு முறைத்தான்.

"நீ கொஞ்சம் பேசாமல் இருக்கிறாயா ராதிகா. உனக்கு எந்த நேரம் எதைப் பேச வேண்டுமென்று தெரியாது. என் தங்கையின் மேல் எனக்கு அக்கறை இருக்கக் கூடாதா... பெத்தவங்களுக்கு ஈக்குவலா கூடப்பிறந்த அண்ணனுக்கும் பொறுப்பும் பாசமும்

இருக்கு. நீ உன் வீட்டில் நான்கு பெண்களுடன் பிறந்தவள்.. அக்கா தங்கை பாசத்தைப் பற்றி உனக்குத் தெரியும்.. அண்ணன் தங்கை பாசத்தைப் பற்றி என்ன தெரியும்..?"

இதுவரை அவளுடைய பேச்சுக்கு மறுபேச்சு பேசியறியாத கணவன்.. முதன்முறையாக எதிர்பேச்சு பேசவும் ராதிகா பதுங்கினாள்..

'சும்மாவே இவருக்கு தங்கையின் மேல் பாசம் பொங்கி வழியும். இதில் இவள் வேறு தூரம் தொலைவு போகிறேனென்று கிளம்புகிறாள். அணை கட்டி வைத்த பாசம் உடைத்துக் கொண்டு வருகிறது. நாம் அடக்கி வாசிக்காவிட்டால் தொலைந்தோம்' என்று எண்ணியவளாய் ஏதோ வேலையிருப்பது போல் அறைக்குள்ளே போய்விட்டாள்...

காவேரிக்கு கண்கள் கலங்கிவிட்டன.. மகனின் மனதில் பாசம் முற்றிலும் வற்றிவிடவில்லை என்ற உண்மை அவளுக்கு உயிர் கொடுத்தது...

ரஞ்சித் எதுவுமே நடக்காதது போல் ஜானகிராமனிடம் தன் ஆட்சேபத்தை தெரிவித்தான்...

"சசிரேகாவே நமக்கு தூரத்து சொந்தம் அப்பா.. இதில் காதல் கல்யாணம் வேறு பண்ணியிருக்கிறாள்.. அவளுடைய மாமனார் வீட்டிற்கும் அவள் பிறந்த வீட்டிற்கும் அவ்வளவு சுமுகமான உறவு இல்லை. இந்த லட்சணத்தில் நம்ம மாலினியை எந்த தைரியத்தில் அவள் வீட்டில் தங்க வைக்க நினைக்கிறீங்க..?"

"சசியிடம் மார்த்தாண்டத்தைப் பற்றி விசாரிக்கும் போது.. அவளே... என் வீட்டில் மாலினி தங்கிக் கொள்ளட்டும் சித்தப்பான்னு சொன்னாள்டா..."

"அவள் சொல்லிவிட்டால்.. உடனே நீங்கள் 'ஊம்' என்று தலையை ஆட்டிவிடுவதா..?"

"அறியாத ஊரில்.. சொந்தக்கார மனுஷங்க வீட்டில் பெண்பிள்ளை இருப்பதுதாண்டா பாதுகாப்பு..."

"நீங்க இன்னும் உங்க காலத்திலேயே இருக்கீங்கப்பா... இந்தக் கால நடைமுறையே வேறு..."

"எனக்கு அதைப் பற்றி என்னடா தெரியும்... இப்போது ஊர் பழகும் வரை சசிரேகாவின் வீட்டில் மாலினி இருக்கட்டும்.. கொஞ்சம் ஊர் பழகியவுடன் பிடிக்கவில்லைன்னா வேறு இடம் பார்த்து வைக்கலாம்.."

"அப்படியா சொல்றீங்க..."

ஒருவழியாய் சமாதானம் ஆனான் ரஞ்சித்.. ஆனாலும் தங்கையை தனியாய் அழைத்து.. ஆயிரம் அறிவுரைகள் கூறினான்..

"நீ படித்து... வேலைக்குப் போவதில் எனக்கு சந்தோஷம்தான் மாலினி.. பெண்கள் என்றைக்குமே மற்றவங்களை எதிர்பார்க்காமல் அவங்க சொந்தக்காலில் நிற்கணும். ஆனாலும்.. வீட்டுக்குள் உனக்கு கிடைக்கும் பாதுகாப்பு வெளியுலகில் கிடைக்காது. நீ ஜாக்கிரதையாய் இருக்கணும்.."

"நான் அலர்ட்டாக இருப்பேன் அண்ணா..."

"எந்த நேரமும் அலர்ட்டாக இருந்தாக வேண்டும் மாலினி..."

"ஆகட்டும் அண்ணா..."

"நீ நம் அம்மா.. பழைய பாடல்களை டி.வி-யில் பார்க்கிறப்போ சேர்ந்து பார்ப்பாய்தானே..."

"சில சமயம் பார்ப்பேன்.."

"அதில் ஒரு பாட்டை கேட்டதுண்டா..?"

"என்ன பாட்டு அண்ணா..?"

"வீட்டை விட்டு வெளியில் போனால்..

நாலும் நடக்கலாம் - அந்த

நாலும் தெரிந்து நடந்துக்கிட்டா

நல்லா இருக்கலாம்..."

"ஃபென்டாஸ்டிக்..."

"இந்தப் பாட்டு எந்தக் காலத்திலும் பெண்களுக்குப் பொருந்துகிற பாட்டு. இந்த உலகத்தில் ஆண்களைவிட பெண்களைத் தாக்கும் ஆபத்துகள் மிக அதிகம் மாலினி..."

"நான் பத்திரமாய் இருந்து கொள்வேன் அண்ணா.. நீங்க பயப்பட வேண்டாம்..."

"அந்த வீட்டில் உனக்கு இருக்கப் பிடிக்கவில்லைன்னா உடனே எனக்குத் தகவல் கொடு. நான் வந்து ஒரு நல்ல லேடீஸ் ஹாஸ்டலாகப் பார்த்து உன்னைத் தங்க வைக்கிறேன்..."

அண்ணன் காட்டிய அதீதமான அக்கறை கண்டு நெகிழ்ந்து போய் விட்டாள் மாலினி. இத்தனை நாளாய் இந்த பாசத்தை இவன் எங்கே ஒளித்து வைத்திருந்தான் என்று திகைத்துப் போனாள்...

காவேரி.. வெகு காலத்திற்குப் பின் பேசும் சங்கடத்துடன் சசிரேகாவின் அப்பாவிற்கு போன் பண்ணிப் பேசினாள்.

"சசியின் போன் நம்பர் வேணுமே.. மாமா..."

"தம்பிகிட்ட இருக்குமேம்மா..."

"நான் கேட்டால் அவர் தரமாட்டார்.. நீங்க சொல்லுங்க..."

"அடிக்கடி பேசிக் கொண்டிருந்தால் உனக்குத் தெரிந்திருக்கும். திடீர்னு பேசணும்னா.. உனக்கு நம்பர் தெரியாது தான்.."

'நேரம் பார்த்து இந்த மனுஷன் குத்திப் பேசுகிறார்...' மனதிற்குள் நினைத்துக் கொண்ட காவேரி.. மழுப்பலாக பதில் சொன்னாள்..

"பேசக்கூடாதுன்னு இல்லை மாமா.. ஆனால்.. பேச எனக்கு எங்கே நேரமிருக்கு.. பொழுது விடிஞ்சு எழுந்து.. நடுராத்திரி வரைக்கும் வேலை செய்து ஓய்வது தானே எங்க பொம்பளை ஜென்மங்களின் தலையெழுத்து.. நான் என்ன வேண்டுமென்றேவா பேசாமல் இருந்தேன்..?"

"எல்லாத்துக்கும் தெளிவாய் ஒரு பதில் வைத்திருக்க.. ம்ம்.. நம்பரைக் குறித்துக் கொள்.."

அப்படிக் கஷ்டப்பட்டு.. சசிரேகாவின் போன் நம்பரைக் கண்டுபிடித்து.. கணவன் அறியாமல் அவளிடம் பேசினாள் காவேரி...

"என்ன சசி.. உன் சித்தப்பா இப்படிச் சொல்கிறாரு..?"

"என்ன சொல்கிறார் சித்தி.."

"மாலினி உன் வீட்டில் தங்கி வேலை பார்க்கட்டு முன்னு சொல்கிறாரே..."

"நான் சொன்னதைத்தானே சொல்கிறார்.."

"நீ தனிக்குடித்தனமாய் இருந்தாலும் பரவாயில்லை ஆனால்.. நீயே கூட்டுக் குடும்பத்தில் இருக்கிறாய். இந்த நிலைமையில் மாலினியை உன் வீட்டில் தங்க வைத்துக் கொள்வதில் பிரச்னை எதுவும் வந்துவிடாதே..."

"அதெல்லாம் ஒரு பிரச்னையும் வராது சித்தி.. மாலினியை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"உனக்கு எதுக்கும்மா வீண் சிரமம்..?"

"இதில் சிரமப்பட என்ன இருக்கு சித்தி.. கடல் போல் எங்க வீடு இருக்கு.. மாலினி இங்கே தங்குவதற்கு யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க சித்தி.."

சசிரேகா தைரியம் கொடுத்தாலும் காவேரி மனது கேட்காமல் புலம்பிக் கொண்டுதான் இருந்தாள்.

"ஆயிரம்தான் இருந்தாலும்.. அடுத்த வீடு.. அடுத்த வீடுதான்.. அது ஒரு போதும் நம்ம வீடு ஆகிவிடாது.."

"இது அநியாயம் அம்மா.. ஏதோ.. தெரியாத ஊருக்கு சொந்தக்காரப் பெண்.. வேலை செய்ய வந்துவிட்டாள் என்பதற்காக அவர்கள் இருக்க இடம் கொடுத்தால்... உடனே அவர்களின் வீட்டை நமக்கு எழுதி கொடுக்கச் சொல்லிக் கேட்டு விடுவதா..?"

"நான் எங்கேடி அப்படிக் கேட்டேன்..?"

"அப்போ.. நீங்க பேசுவதற்கு என்ன அர்த்தம்..?"

"போடி அரட்டை.. ஊரில் உலகத்தில் எல்லோரும் தான் வேலை பார்க்கப் போகிறாங்க. உன்னைப் போலவா அடுத்த வீட்டில் தங்கி வேலை பார்க்கிறேன்னு போறாங்க..?"

"நான் என்னம்மா செய்யட்டும்... அப்பாதான் என்னை லேடீஸ் ஹாஸ்டலில் தங்கவிட மாட்டேன் என்கிறாரே..."

ஒருவழியாய் வீட்டினரை சமாதானம் செய்துவிட்டு.. மாலினி கிளம்பும் நாள் வந்தபோது மீண்டும் பிரச்னை தலைதூக்கியது..

4

**உனைப் பார்த்த போது...**

**என் உயிர் துடித்த துடிப்பை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினியை மார்த்தாண்டத்திற்கு ஜானகிராமன் தான் அழைத்துச் செல்வதாக இருந்தது.. கிளம்பும் நாள் வந்தபோது அவரது ஆபீஸில் இன்ஸ்பெக்ஷன் வந்து சேர.. அவரால் மகளுடன் மார்த்தாண்டம் செல்ல முடியாமல் போய்விட்டது.

"ரஞ்சித்.. நீ போய் உன் தங்கையை சசிரேகாவின் வீட்டில் விட்டுவிட்டு வாடா..."

ரஞ்சித் மறுப்புச் சொல்லாமல் உடனே கிளம்பினான். ஆனால், சாகசம் மிக்க ராதிகா... தன் பிறந்த வீட்டுக்குப் போன் செய்து கணவனின் செல்போனுக்கு போன் செய்து பொய் தகவல் ஒன்றைச் சொல்லச் சொன்னாள்.

மகள் பதினாறு அடி பாயும்போது அவளைப் பெற்ற தாய் எட்டடியாவது பாய வேண்டாமா..?

ராதிகாவின் அம்மா அலறிக் கொண்டு மருமகனுக்குப் போன் செய்தாள்..

"மாப்பிள்ளை.."

"என்ன அத்தை.. ஏன் அழுகறீங்க..?"

"உங்க மாமாவுக்கு ஹார்ட் அட்டாக் மாப்பிள்ளை.."

"அடக்கடவுளே..."

"ஆஸ்பிடலுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போனோம்.. அவர் பிழைத்தது மறுபிழைப்பாய் போச்சு.. ராதிகாவையும் உங்களையும் பார்க்கணும்னு துடிக்கிறார்.. நீங்க உடனே கிளம்பி வாங்க.."

"இதோ... இப்போதே கிளம்பிவிட்டோம்..."

ரஞ்சித் வேறுவழியில்லாமல் கெஞ்சுதலாய் தங்கையைப் பார்க்க.. அவள் உடனே நிலைமையைச் சமாளித்தாள்...

"நைட்டில் பஸ் ஏறினால் விடிந்தவுடன் மார்த்தாண்டத்தில் இறங்கப் போகிறேன்... சசிக்கு தகவல் கொடுத்து விடுங்கப்பா... நான் பத்திரமாய் போய் கொள்வேன்.."

கடைசியில் அதுதான் நடந்தது.. வீட்டுப் பெண்ணை அறியாத ஊருக்கு வேலைக்கு அனுப்ப... ஆயிரம் யோசனை செய்த அந்தக் குடும்பம்.. வேறு வழியில்லாமல் பெண்ணை தனியே மார்த்தாண்டத்திற்கு பயணம் செய்யும் படி விட நேர்ந்ததும் காலத்தின் கட்டாயம்தான்.

மாலினி கைக்கடிகாரத்தில் மணி பார்த்தபோது அவளது செல்போன் அலறியது. எடுத்துப் பார்த்தாள்.. சசிரேகாதான் அழைத்தாள்...

"சசி..."

"கார் பஸ் ஸ்டாண்டிற்கு வந்துவிட்டது மாலினி.. காரின் நம்பரை நோட் பண்ணிக் கொள்.. சில்வர் வொயிட்..

ஸ்விஃப்ட் கார்.. டிரைவர் காரில் இருப்பார். உன் பெயரைக் கேட்பார். சொல்லிவிட்டு காரில் ஏறி வீட்டிற்கு வந்துவிடு..."

இவ்வளவு தூரம் மர்மக் கதை போல் சொல்பவள் ஒரு எட்டு வந்து கூப்பிட்டுக் கொண்டு போகக் கூடாதா என்ற கோபம் மனதில் எழ... சட்டென்று அதை அழித்தாள் மாலினி...

உரிமைப்பட்ட தகப்பனும் தமையனும் உடன்வர முடியாத நிலைமையில் இருக்கும்போது.. தூரத்து உறவுக் காரப் பெண்ணிடம் இதைவிட அதிகமாய் எதிர்பார்க்கக் கூடாது என்ற எண்ணத்துடன் தோள் பையை மாட்டிக் கொண்டு பெட்டிகளை கையில் எடுத்துக் கொண்டாள். பஸ் ஸ்டாண்டின் வாசலை நோக்கி நடந்தாள்..

மாலினி சொன்ன காரின் அருகே சென்று டிரைவரைப் பார்த்தாள்..

"நான் மாலினி... சசிரேகாவின் சித்தப்பா மகள்..."

"உங்களுக்காகத்தான்ம்மா காத்துக் கொண்டிருக்-கிறேன்.. ஏறிக்கங்க..."

டிரைவர் காரின் கதவைத் திறந்துவிட்டார்.. மாலினி ஏறிக் கொண்டாள்...

"பெட்டிகள்..?"

"இங்கே கொடுங்க.. டிக்கியில் வைத்து விடுகிறேன்.."

கார் கிளம்பியது.. லேசாக நரைத்த தலையுடன் முரட்டு மீசையுடன் காணப்பட்ட டிரைவர்.. சளசளவென்று பேசியவண்ணம் காரை ஓட்டிக் கொண்டிருந்தார்..

"நீங்க சின்னம்மாவின் தங்கச்சிங்களா..."

"ஆமாம்..."

"என் பெயர் பரந்தாமன்ங்க.."

"அப்படியா..?"

"நான் இருபது வருஷமாக கோட்டையூர் ஜமீன் வீட்டில்தான் வேலை செய்கிறேனுங்க.."

"அப்புறம் எப்படி இந்தக் காரை ஓட்டிக்கிட்டு வந்தீங்க...?"

"இது என்னங்க.. இப்படிக் கேட்டுப்புட்டீங்க.. நான் என்ன ஊரான் வீட்டுக் காரையா ஓட்டிக்கிட்டு வந்தேன்.. நான் வேலை செய்கிற வீட்டுக் காரைத்தானே ஓட்டிக்கிட்டு வந்தேன்..?"

"கோட்டையூரில் வேலை பார்ப்பதாக நீங்கள் தானே சொன்னீங்க..?"

"அடக்கடவுளே.. நீங்க அப்படி வருகிறீங்களா..?"

தான் எப்படி வந்தோம் என்ற யோசனையுடன் பரந்தாமனை உற்றுப் பார்த்தாள் மாலினி...

"உங்க அக்கா வாழ்க்கைப்பட்டிருப்பது எந்தக் குடும்பத்திலன்னு நினைத்தீங்க..?"

'நான் எதையுமே நினைத்ததில்லை.. ஏன்.. இந்த மார்த்தாண்டத்தில் வேலை கிடைக்கும் வரை சசியைப் பற்றியே நினைத்ததில்லை..'

மனதில் இருப்பதை எப்படி வாய்விட்டுச் சொல்வது.. ஊர் விட்டு ஊர் வேலைக்கு வந்தவளை.. உரிமையுடன் அழைத்து.. தன் வீட்டில் தங்க வைத்துக் கொள்பவளை நினைத்தும் பார்த்ததில்லையென்று எப்படிச் சொல்வது..?

வார்த்தைகள் வராமல் மௌனித்தாள் மாலினி.. அதைக் கண்டுகொள்ளாதவராய் பரந்தாமன் தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தார்..

"உங்க அக்காவின் மாமனார் வீடுதான் கோட்டையூர் ஜமீன் வம்சத்து வீடும்மா..."

"இது மார்த்தாண்டம்தானே..."

"சந்தேகமாயிருந்தா.. அந்தக் கடையில் மாட்டியிருக்கும் போர்டைப் பாருங்க.. நான் வேணும்னா காரை நிப்பாட்டுகிறேன்..."

"ஜோக்கா..?"

"ஹா.. ஹா..."

"நீங்கதானே சார்.. வாய்க்கு வாய் கோட்டையூர்.. கோட்டையூர்னு பிளந்து கட்டினீங்க.."

"அவங்க கோட்டையூர் ஜமீன் வம்சத்து ஆளுக தான்ம்மா.. மார்த்தாண்டத்திற்கு தொழில் செய்யன்னு வந்து நான்கு தலைமுறைக்கு மேலாகுது.. இப்ப மார்த்தாண்டத்திலே கொடி கட்டிப் பறக்கிறாங்க இல்ல.."

"ஓஹோ..."

மாலினிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.. இரவு பூராவும் பஸ் பயணம் செய்த அலுப்பு உடலை அசத்தியது.. எப்போது வீட்டிற்குப் போய் குளித்து ஒரு வாய் சாப்பிடு வோம் என்ற நிலையில் இருந்தவளுக்கு கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் கொடியைப் பற்றிய கதை கேட்பதில் ஆர்வமில்லை...

ஆனால் பரந்தாமன்.. மாலினியின் பசியை அறியாத வராய் நீ கேட்டாலும் கேட்காவிட்டாலும் என் எஜமானர் வீட்டுப் பெருமையை நான் சொல்லியே தீருவேன் என்று கங்கணம் கட்டியவராய்.. தான் பேசிக் கொண்டிருந்த புராணத்தைத் தொடர்ந்து பேசி அவருடைய எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டிருந்தார்..

"அதென்னம்மா.. ஓஹோன்னு ஒற்றை வார்த்தையில் கேட்டு பேச்சை முடித்துவிட்டீங்க..."

"வேறு என்ன செய்யச் சொல்றீங்க..?"

"இந்த ஊருக்கு பிழைப்புக்காக வந்திருக்கீங்க.."

'ஆமாம். பிழைப்பில்லாமல் இருந்துவிட்டு.. பிழைப்பைத் தேடி உங்க ஊருக்கு வந்திருக்கிறேன்.. போய்யா...'

"எங்க ஐயா வீட்டுக்கு உறவுக்காரங்களா வேறு போயிட்டீங்க..."

'உன்னிடம் இப்படிப் பசியோடு கதை கேட்க வேண்டிவரும்னு தெரிந்திருந்தால்... உன் உறவே வேண்டாம் போடின்னு சசியிடம் சொல்லியிருப்பேன்...'

"அவங்க வீட்டில் தங்கப் போறீங்க.."

'இதையே ஆள் மாற்றி ஆள்.. எத்தனை தடவை சொல்வீங்க..?'

"அவங்க வீட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா..?"

'அதைத் தெரிந்துகொண்டு எனக்கு ஆகப் போவதென்ன.. வேகமாய் காரை ஓட்டி என்னை வீட்டில் சேர்க்கும் வேலையைப் பாருய்யா..'

பாவம் பரந்தாமன்.. பசியின் இம்சை தாங்க முடியாமல் மாலினி.. மரியாதையாய் அவரை மனதிற்குள் விளிப்பதை அறியாதவராய்.. மனம்விட்டு மாலினியின் அமைதியைப் பாராட்டிப் பேச வேறு செய்தார்...

"ஒன்றைப் பாராட்டித்தான் ஆக வேண்டும்மா..."

"எதை..?"

"நீங்களும் சசியம்மாவைப் போல ரொம்ப சாது..."

'நான் பேசி நீ இன்னும் கேட்கவில்லை.. அதுதான் எனக்கு சாது பட்டம் கொடுக்கிறாய்.. ஓட்டுய்யா வண்டியை..'

"என்னம்மா பேசாமல் வருகிறீங்க..?"

"அதுதான்.. எனக்கும் சேர்த்து.. நீங்கள் பேசிக்கொண்டு வருகிறீங்களே..."

"ஆஹா.. இதுவல்லவோ அமைதி.. இதுவல்லவோ அடக்கம்..."

'யோவ்.. பசிக்குதுய்யா.. வாயை மூடிக்கொண்டு காரை மட்டும் ஓட்டும் வேலையைப் பார்.. உனக்கு 'ஊம்' போடக்கூட எனக்கு தெம்பு இல்லை...'

"கோட்டையூர் ஜமீன் வம்சம்னா.. திருவனந்தபுரத்து ராஜ வம்சத்து ஆளுகளே மரியாதை கொடுப்பாங்க.. அப்பேர்ப்பட்ட ஜமீன் பரம்பரை.. எங்க ஐயாவின் பரம்பரை.."

"ஊம்..."

"அந்தக் காலத்தில்.. இந்த ஏரியாவிலேயே முதல் முதலாய் கார் வாங்கிய பரம்பரை எங்க ஐயாவின் பரம்பரை..."

"ஊம்..."

"எல்லோரும் இரும்பு மரக்காலில் நெல்லளந்து போட்டால்.. தங்க மரக்காலில் நெல்லளந்து போட்ட பரம்பரை எங்க ஐயாவின் பரம்பரை..."

"ஊம்.."

மாலினி... ஜன்னல் வழியே இறங்க வேண்டிய இடம் வந்துவிடாதா என்று ஆவலுடன் பார்த்தபடி 'விதியே' என்று 'உம்' போட்டாள்...

5

**உன் நிழல் தேடி என் நெஞ்சம்...**

**நெகிழ்ந்திட்ட நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

நீ 'உம்' போட்டாலும் போடாவிட்டாலும் நான் சொல்ல வந்ததை சொல்லாமல் விடமாட்டேன் என்ற முடிவு கட்டிவிட்டவராக பரந்தாமன்.. தன் எஜமானர் வீட்டுப் பழம்பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தார்..

"எங்க ஜமீன்தாரய்யா நடந்து வந்தால்.. அவர் வரும் பாதையில் பூப்போட்டு வணங்குவாங்க..."

"உம்..."

"அந்த மகராசன் போய்ச் சேர்ந்த பின்னால்.. அவர் விட்டுப் போன குலப் பெருமையைக் கட்டிக் காப்பது எங்க ஐயாதான்.."

"உம்..."

"எந்த ஐயான்னு கேட்கவில்லையே.."

"எந்த ஐயா.."

"எங்க பிரபாகரன் ஐயா..."

"எந்த பிரபாகரன்.. கேப்டன் பிரபாகரனா..?"

பரந்தாமன் சட்டென்று பிரேக் பிடித்து வண்டியை நிறுத்தவும்.. மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது...

'இந்த ஆள் இன்றைக்கு என்னைச் சாப்பிடவிடக் கூடாதுன்னு முடிவே கட்டிவிட்டாரா...'

"ஏன் சார் காரை நிறுத்திவிட்டீங்க..."

"நீங்க ஊருக்குப் புதுசு.. எங்க சின்னம்மாவுக்கு தங்கச்சி முறைங்கிறதால நான் உங்களைச் சும்மா விடுகிறேன்.. வேறு ஒரு ஆள் இப்படிப் பேசியிருந்தால் இங்கே நடப்பதே வேறு..."

'ஐயையோ.. நான் பசி மயக்கத்தில் என்னத்தைச் சொல்லித் தொலைத்துவிட்டேன்..?' மாலினி பயந்து போய் விட்டாள்...

"நான் என்ன சார் சொன்னேன்..?"

"எங்க ஐயாவின் பெயரைச் சொல்லக்கூட நாங்கள் யோசிப்போம். நீங்க... அவங்க பெயரைக் கிண்டல் பண்ணுகிறீங்களே..."

"அடடா.. நான் வேடிக்கைக்காக கேட்டுவிட்டேன் சார்..."

"வேடிக்கைப் பேச்சையெல்லாம் சென்னையிலேயே மூட்டை கட்டி வைத்து விடுங்கம்மா. இது மார்த்தாண்டம். இங்கே நாவடக்கம் ரொம்ப முக்கியம். அதுவும் எங்க ஐயாவுக்கு அவருக்கு முன்னால் நின்று யாராவது எதிர்வாதம் பண்ணினால் சுத்தமாய் பிடிக்காது. பேசுகிற ஆளை உண்டு இல்லைன்னு பண்ணிவிடுவார்.."

சளசளவென்று பேசும் சசிரேகா... 'அமைதியின் சிகரம்' என்று பெயர் வாங்கியிருப்பதற்கான அடிப்படைக் காரணம்

எது என்பதைக் கண்டுகொண்ட மாலினி.. பரந்தாமனுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தாள்.

"பாருங்க பரந்தாமன் சார்.. நீங்கள்தான் உங்கள் ஐயாவின் பெயரைச் சொன்னீங்க.. நான் சொல்லவில்லை.."

"உங்களுக்குத் தெரியணும்கிறதுக்காக சொன்னேன்.."

"நான் தெரியாமல் பேசிவிட்டேன்... இதைப் போய் பெரியவங்க நீங்க பெரிது பண்ணலாமா..?"

பரந்தாமன் சமாதானமடைந்தவராய் காரைக் கிளப்பினார்.. சண்டை வந்துவிட்டதால் இனி அவர் பேச்சை நிறுத்திவிடுவார் என்று மாலினி போட்ட கணக்கை தப்புக் கணக்காக்கி விட்டு அவர் பேச்சைத் தொடர்ந்தார்..

"இப்போது பேசியதை விட்டுவிடலாம்... இனி இப்படிப் பேசி வைக்காதீங்க..."

"வாயைத் திறப்பேனா..? நீங்க கவலைப்படாமல் வண்டியை வேகமாக ஓட்டுங்க சார்..."

"எங்க வீட்டு சட்டதிட்டம் தெரியாமல் பேசுகிறீங்க..?"

'இது என்னடா வம்பாப் போச்சு..' என்றிருந்தது மாலினிக்கு... அவர்கள் வீட்டு சட்டதிட்டங்களைப் பற்றி அலசி ஆராயும் நேரமா அது என்று நொந்து கொண்டவளாய் பரந்தாமனை ஒரு மௌனப் பார்வை பார்த்தாள் அவள்.

"என்னம்மா பேசாமல் இருக்கிறீங்க..."

"நான்பாட்டுக்கு எதையாவது எதார்த்தமாக பேசிவைக்கப் போய் நீங்க பாதியிலேயே வண்டியை நிறுத்துவதற்கா சார்.. எனக்கு இந்த வம்பே வேண்டாம். நான் வாய்திறக்கப் போவதில்லை..."

"இவ்வளவு நேரமும் வாய் திறக்காமலா இவ்வளவு பேச்சையும் பேசினீங்க.. ஹா... ஹா..."

'நீயெல்லாம் பேச... நான் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டதே...' மாலினி மனதிற்குள் எரிச்சல் பட்டாள்..

"அம்மா.. வீட்டுப் பெண்கள் காரில் ஏறினால் காரை வேகமாக ஓட்டக்கூடாதுன்னு எங்க ஐயா உத்தரவு போட்டிருக்கிறாரு..."

"ஓஹோ..."

"எங்க பெரியய்யா போனதும்.. எங்க ஜமீன் வம்சத்துப் பெருமையைத் தூக்கி நிறுத்தியது எங்க

ஐயா தான்..."

'இவர்பாட்டுக்கு பெரியய்யா.. எங்கய்யா என்கிறாரே.. யார் பெரியய்யா.. யார் எங்கய்யா.. இரண்டு ஐயாமார்களுக்கும் இடையே இருக்கும் உறவுப் பாலம் தான் என்ன?'

மாலினியின் மனதிலிருந்த கேள்விகளைப் படிக்க முடியாதவராக பரந்தாமன்.. அவருடைய ஐயாவின் பெருமைகளைப் பற்றித் தொடர்ந்து பேசவும்.. மாலினி பொறுத்தது போதும் என்று இடைமறித்தாள்...

"ஒரு சந்தேகம் கேட்கலாமா பரந்தாமன் சார்..?"

"கேளுங்கம்மா..."

"இந்தப் பெரியய்யா யார்.. ஐயா என்பது யார்..?"

"நல்லவேளையாய் இந்தக் கேள்வியை என்கிட்ட வந்து கேட்டு வைத்தீங்க..."

'இது என்ன கேட்கக்கூடாத கேள்வியா..?' மனதிற்குள் பல்லை நறநறவென்று கடித்தாள் மாலினி...

பேசாமல் ஒரு ஆட்டோவைப் பிடித்து வீட்டிற்குப் போயிருந்தால்.. இந்நேரம் சாப்பிட்டுவிட்டு குட்டித்தூக்கம் ஒன்றைப் போட்டுவிட்டு எழுந்திருந்து இருப்பாள்...

அதை விட்டுவிட்டு அழைத்துக் கொண்டு போகிறேன் பேர்வழின்னு வளவளவென்று ரம்பம் போட்டுக் கொண்டு ரோட்டில் நடந்து போகிறவனெல்லாம் ஓவர்டேக் செய்யும் அளவிற்கு 'பொன்னே.. பூவே...' என்று மெதுவாக காரை ஓட்டிக் கொண்டு என்னவோ.. மாலினியாக ஓடிவந்து

அவரிடம் கேள்வி கேட்டது போல் பேசி வைத்த பரந்தாமனை பசிவெறியுடன் பார்த்தாள் மாலினி...

"அம்மா... எங்க கோட்டையூர் ஜமீன்தார் கார்த்தி கேயன்தான் எங்க பெரிய ஐயா..."

'இவர் பெயரைச் சொன்னால் தப்பில்லையாம்.. அதுவே நான் பெயரைச் சொன்னால் அது தப்பாம்...'

"எங்க பெரிய ஐயாவுக்கு மூன்று மகன்கள்... ஒரே ஒரு பெண்..."

'எத்தனை மனைவிகள்?' என்று மனதிற்குள் கேட்டுக் கொண்ட மாலினி... மானசீகமாய் தனக்குத் தானே குட்டுவைத்துக் கொண்டாள்..

'சே.. இந்த டி.வி. சீரியல்களைப் பார்த்துப் பார்த்து நானே எப்படி யோசிக்கிறேன் பார்.. இந்த இரண்டு பெண்டாட்டி கட்டுவதை நியாயப்படுத்தும் சீரியல் எடுப்பவர்களை என்னதான் செய்வது..?'

"மூத்தவருதான் எங்க ஐயா பிரபாகரன்.. இரண்டாவது ஐயாதான் உங்க அக்கா சசியம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட கருணாகரன் ஐயா.. மூன்றாவது ஐயா வின் பெயர் தினகரன்..."

சென்னையில் பிறந்து வளர்ந்த மாலினிக்கு.. பரந்தாமன் போட்ட 'ஐயா..' வைப் பார்க்க அதிசயமாக இருந்தது..

"இவங்க மூன்று பேருக்கும் செல்லத் தங்கை.. சின்னத் தங்கை.. எங்க வீட்டு இளவரசி.. காயத்ரி.. கடைக்குட்டி..."

'ஓ.. சின்னதம்பி குஷ்பூவா..? நடக்கட்டும்.. நடக்கட்டும்...'

"எங்க பெரியம்மாவின் பெயர் நர்மதா..."

"ஆழகான பெயர்..."

தன்வீட்டு எஜமானியின் பெயரைப் புகழ்ந்து மாலினி பேசிவிட்டதில் பூரிப்படைந்து போனார் பரந்தாமன்...

"எங்க ஐயா வைத்ததுதான் அந்த வீட்டில் சட்டம்..."

"கோபித்துக் கொள்ளாதீங்க டிரைவர் சார்..."

"என்னம்மா..."

"இப்ப நீங்க ஐயான்னு சொன்னது.. பிரபாகரன் ஐயாவைத்தானே..."

"அதிலென்ன சந்தேகம்.. எங்க வீட்டிலும் சரி.. ஃபேக்டரியிலும் சரி.. மில்லிலும் சரி.. ஐயான்னு சொன்னால்.. அது பிரபாகரன் ஐயா ஒருத்தரைத்தான் குறிக்கும்..."

"அவருடைய தம்பிகளை எப்படிச் சொல்வீங்க...?"

"சின்னய்யா.. சின்னச் சின்னய்யா.."

'என்னங்கடா இது..' என்று மானசீகமாய் தலையில் கைவைத்துக் கொண்டாள் மாலினி.. அவள் 'சின்னச் சின்ன வண்ணக்குயில்..' என்றுதான் பாட்டு ஒன்றைக் கேட்டிருக்கிறாள்.. முதல் முறையாக இப்போதுதான் 'சின்னசின்னய்யா..' என்று ஒருவன் விளிக்கப்படுவதைக் கேட்கிறாள்..

"அது சரி.. ஆமாம் டிரைவர் சார்.. இத்தனை பேரைப் பத்தியும் சொன்னீங்க.. ஒருத்தரைப் பத்தி நீங்க சொல்லாமல் விட்டுவிட்டீங்களே..."

"யாரைச் சொல்கிறீங்க...?"

"உங்க ஐயாவின் வொய்ஃப்பைப் பற்றிச் சொல்லவே இல்லையே..."

பரந்தாமன் ஒரு நொடி மௌனம் சாதித்தார்.. பின் மெதுவான குரலில் கூறினார்...

"ஐயாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லைம்மா..."

"இது என்னங்க கதையாய் இருக்கு.. அவருக்கும் இளையவருக்குத்தானே எங்க சசியைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கிறோம்...?"

"நிஜம்தான்ம்மா.. வேலையில் கவனம் வைத்துக்கிட்டு.. எனக்கு இப்பக் கல்யாணம் வேணாம்.. என் தம்பி காதலிக்கிறான்.. அவனுக்கு முதலில் கல்யாணத்தை பண்ணி வைக்கலாமுன்னு ஐயாதான் முடிவெடுத்து முன்னால் நின்னு இந்தக் கல்யாணத்தை பண்ணி வைத்தார்..."

"ஓ... ஐஸீ..."

குடும்பப் பொறுப்பை கையில் வைத்திருக்கும் ஒருவன்.. தன் வீட்டினரைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன்.. தன் கல்யாணத்தை மறுத்து தம்பிக்கு காதல் கல்யாணத்தை முதலில் நடத்தி வைத்திருக்கிறானா..?

கேட்கும்போதே ஆச்சரியமாய் இருந்தது மாலினிக்கு..

"அதோ.. அதுதான் எங்க ஐயாவின் வீடு.."

பரந்தாமன் அதுவரை அளந்த அளப்பைக் கேட்டு.. அந்த வீட்டின் மேல் அவளையுமறியாமல் ஒரு ஆர்வத்தை கொண்டுவிட்ட மாலினி.. ஆவலுடன் அந்த வீட்டைப் பார்த்தாள்.. அந்தத் தெருவிலேயே பாதியை அடைத்துக் கொண்டு மிகப் பெரும் மாளிகையாய் பிரமாண்டமாய் தெரிந்தது சசிரேகாவின் புகுந்த வீடு...

## 6

**உன் விரல் தொட்ட நொடியில்...**

**என் உடல் கொண்ட சிலிர்ப்பை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினியின் கவனத்தை முதலில் கவர்ந்தது.. கோட்டை மதில் சுவர்போல் மேலெழும்பி நின்ற அந்த வீட்டின் மதில் சுவர்தான்..

'அடேங்கப்பா.. மார்த்தாண்டம் மாமன்னரின் அரண் மனைன்னு பார்க்கிறவங்க நினைக்க வேண்டுமாக்கும்..'

அந்த கோட்டைச் சுற்றுச் சுவரின் நடு மையத்தில்.. அந்த சுவர்களுக்கு இணையாக.. உயரமான பெரிய இரும்பு கேட் பளபளவென்ற கரும் பச்சை வண்ண பெயிண்டுடன் அதன் விளிம்புகளில் குத்தூட்டி போல் வடிவமைக்கப்பட்ட கூம்பு பகுதிகளில் தங்க முலாமுடன் தகதகத்தது...

'தக தக தங்க வேட்டை என்பது இதுதான் போல... ம்ம்...'

கேட்டிற்கு பக்கத்தில்.. சுவருக்கும் கேட்டிற்கும் இடையில் கட்டப்பட்டிருந்த சின்ன அறையில் சீருடை அணிந்த காவலாளி ஒருவன் இருந்தான்.. அந்த அறையில் டேபிள் சேர் போடப்பட்டு இருக்க.. டேபிளின் மேல் டெலிபோன் இருந்தது.. மின்விசிறியின் கீழே அமர்ந்திருந்தவன்.. காரைக் கண்டதும் அவசரமாய் வெளியே வந்து கதவைத் திறந்துவிட்டான்...

'வாயிற் காவலாளி கதவைத் திறந்துவிட்டார்.. கோட்டைக் கதவுகளும் திறந்து கொண்டன..

இனி ஐயாவின் அரண்மனைக்குள் பிரவேசிக்க வேண்டியதுதான்...'

மாலினிக்கு ஒரு கணம் தான் காருக்குள் உட்கார்ந்திருக்கிறோமா.. இல்லை.. பல்லக்கில் உட்கார்ந்திருக்கிறோமா என்று சந்தேகம் வந்துவிட்டது...

ஒரு கணம் தன்னை அண்டை நாட்டு இளவரசியாக கற்பனை செய்து பார்த்தாள் மாலினி...

மூடு பல்லக்கில் அவள் பயணம் செய்து மார்த்தாண்ட மாமன்னரின் அரண்மனைக்கு வருகிறாள்.. பல்லக்கை இறக்கி வைத்துவிட்டார்கள்.. பல்லக்கின் திரையை விலக்கி அவளை வெளியே அழைக்கிறார்கள்..

'எங்கள் அரண்மனைக்கு விஜயம் செய்திருக்கும் அதிரூப சுந்தரியே.. அண்டை நாட்டு இளவரசியே... மயக்க வைக்கும் அழகைக் கொண்ட மாலினி தேவியாரே.. உமக்கு

வந்தனம்.. தங்கள் திருப்பாதம் இந்த அரண்மனையில் பட நாங்கள் பாக்கியம் செய்திருக்கிறோம்.. இறங்குங்கள் இளவரசி.. என்ன இளவரசியாரே... இறங்க மனமில்லையா...?'

கற்பனை தந்த மயக்கத்தில் திளைத்தவள் தன்னையும் அறியாமல்..

"அப்படியெல்லாமில்லை.." என்று கூறினாள்..

"எப்படியெல்லாமில்லை.." என்ற சசிரேகாவின் குரலைக் கேட்டுத் தூக்கிவாரிப் போடத் திரும்பிப் பார்த்தாள்...

கார் கதவைத் திறந்து அவள் இறங்குவதற்கு வசதியாகப் பிடித்துக் கொண்டு சசிரேகா நின்றிருந்தாள்..

'இது நேரம் வரை நான் கற்பனையில் மூழ்கிவிட்டேனா..' மாலினிக்கு வெட்கமாய்ப் போய்விட்டது...

'ச்சு.. இந்த டிரைவர்.. இந்த வீட்டைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் அளந்த அளப்பைக் கேட்டு எனக்கு கற்பனை ஊற்று பீறிட்டு விட்டதே...'

"என்னடி மாலு... இறங்க மனமில்லையா என்று நான் கேட்டதற்கு அப்படியொன்றுமில்லை என்று பதிலைச் சொல்லிவிட்டு இன்னும் காருக்குள்ளேயே உட்கார்ந்திருந்தால் எப்படி.. உன் கால்களைத் தரையில் வைத்து இறங்கு..."

சசி கேலியாகக் கூறவும்.. மாலினிக்கு முகம் சிவந்து விட்டது...

"நைட்டெல்லாம் பஸ் ஜர்னி பண்ணியதில் தூக்கமில்லை சசி.. அதுதான் காரிலேயே குட்டித்தூக்கம் போட்டு விட்டேன்.." சமாளித்தபடி காரை விட்டு இறங்கினாள் மாலினி...

சசிரேகா, மாலினியின் கையைப் பிடித்து நலம் விசாரிக்க ஆரம்பித்தாள்... அதற்குப் பதில் கூறிக்கொண்டே அந்த வீட்டின் சுற்றுப்புறத்தை பார்த்தவள், விழி விரிய அப்படியே நின்றுவிட்டாள்...

'வாவ்.. இப்படிக்கூட ஒரு தோட்டம் இருக்குமா..?'

காம்பவுண்டு கேட்டிற்கும் வீட்டிற்கும் இடையே நீண்ட சிமெண்ட் போடப்பட்ட பாதை இருந்தது.. அதன் இருபக்கமும் பாத்திக் கட்டியது போல் குட்டி குட்டியான குரோட்டன்ஸ் செடிகள் வரிசை கட்டி அலங்காரமாய் அமைந்திருக்க.. அவற்றின் இடையே மெர்க்குரி விளக்குகளின் டூம் கம்பங்கள் வெண்ணிறக் கடைசலுடன் காணப்பட்டன...

'நைட் நேரத்தில்.. இந்த லைட்டுகள் எரியும்போது வந்து பார்த்துவிட வேண்டும்...'

மாலினி ஆர்வத்துடன் சிமெண்ட் பாதையின் ஒரு பக்கம் அமைந்திருந்த தோட்டத்தைப் பார்த்தாள்.. ஒரு அழகிய பூங்காவின் அத்தனை கலையம்சத்தையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு காட்சி தந்தது அந்தத் தோட்டம்...

அலங்கார வளைவுகளும் ஆங்காங்கே போடப்பட்டிருந்த சாய்வான வேலைப்பாடுகள் மிகுந்த

மர பெஞ்சுகளும் தோட்டத்தின் இடையே ஓடிய முயல்குட்டிகளும்.. பல வண்ண மலர் செடிகளுமாய் தோட்டத்தைப் பார்க்கப் பார்க்க தெவிட்டவே இல்லை மாலினிக்கு...

பாதையின் மறுபக்கம்.. ஓங்கி அடர்த்தியாய் வளர்ந்திருந்த செடிகளுக்கு அப்பால் நீச்சல்குளம் தென்பட்டது.. செயற்கை அன்னங்களுக்குப் பதில் இயற்கையான உயிருள்ள வாத்துக்கள் நீந்திக் கொண்டிருக்க.. இந்த முறை வாய்விட்டு...

"வாவ்..." என்றாள் மாலினி...

அவளது ரசனையை உணர்ந்தவளாய் சசிரேகா சிரித்தாள்...

"இந்தப் பக்கம் முயல்குட்டிகள் ஓடுது.. அந்தப் பக்கம் வாத்துக்கள் தண்ணீரில் மிதக்குது.. என்ன சசி இது.. நான் இப்படியெல்லாம் எந்த வீட்டிலும் பார்த்ததே இல்லை தெரியுமா..?"

மாலினியின் கேள்விக்கு சசிரேகா பதில் சொல்லும் முன்னர் முந்திக் கொண்டு பதில் சொன்னார் பரந்தாமன்..

"எங்க ஐயாவுக்கு செயற்கையே பிடிக்காதுங்க.. எல்லாமே இயற்கையாய இருக்க வேண்டும்..."

மாலினி, சசிரோகாவின் காதோரமாக சரிந்து முணு முணுத்தாள்...

"சசி.. இந்த ஆளுக்கு உன் வீட்டுக்காரரின் அண்ணனின் பெருமைகளை அவிழ்த்துக் கொட்டுவ தென்றால் அல்வா சாப்பிடுவது போல இருக்கும்போல.. வருகிற வழியில்.. ஒரே ஐயா புராணம்தான்.. என் காது ஜவ்வே கிழிந்துபோய்விட்டதுன்னா பார்த்துக்கொள்..."

சசிரேகா.. மாலினியின் பேச்சைக் கேட்டுக் குலுங்கிச் சிரித்தாள்.. அதைப் பார்த்த பரந்தாமன்... தானும் புன்னகைத்தபடி வெகுளியாய் வினவினார்...

"என்னங்கம்மா... இப்படிச் சிரிக்கறீங்க.. அப்படி உங்க தங்கச்சியம்மா என்னதான் சொல்கிறாங்க..?"

"சும்மா.. ஜோக்காக எதையோ சொன்னாள்..."

"ஆமாமாம்.. இவங்க காரில் வரும்போது என்கிட்டயும் இப்படித்தான் வேடிக்கையாய் நிறையப் பேசினாங்க..."

பரந்தாமன் பேசிக் கொண்டே டிக்கியைத் திறந்து மாலினியின் பெட்டிகளை எடுத்துக் கொடுக்க.. மாலினி பல்லைக் கடித்துக் கொண்டு சன்னக்குரலில் மீண்டும் சசிரேகாவின் காதைக் கடித்தாள்...

"பசி உயிர் போகுது சசி.. உன் வீட்டு டிரைவர் காரை வேகமா ஓட்டவும் மாட்டேன்னு சொல்லிட்டார்... உன் ஐயாவின் பெருமைகளை சொல்வதை நிறுத்தவும் மாட்டேன்னு சொல்லிவிட்டார்.. பசியோடு இருப்பவளிடம், கதை கேளு.. கதை கேளுன்னு சொன்னால்.. எனக்கு எப்படியிருந்திருக்கும்.. நீயே கொஞ்சம் யோசித்துப் பார்.. இதில் நான் வேடிக்கையாய் பேசினேனாம்.. விட்டால்

இவரைக் கொன்று விடும் கொலைவெறியோடு இருந்தேன் தெரியுமா..."

மாலினியின் பேச்சிற்கு பதில் சொல்வதற்குள்... பரந்தாமன் பெட்டிகளை எடுத்துக் கொண்டு டிக்கியைப் பூட்டிவிட்டு நிமிர.. சசிரேகா அவரைப் பார்த்து...

"ஹி.. ஹி.. திரும்பவும் இவள் வேடிக்கையாகத் தான் பேசுகிறாள்..." என்று மழுப்பினாள்...

"அதுதான் எனக்குத் தெரிந்த சங்கதியாச்சே.." என்றபடி அவர் பெட்டிகளோடு உள்ளே செல்ல மாலினி ஆச்சரியமாய் சசிரேகாவை ஏறிட்டாள்...

"என்னடி சசி.. உன் வீட்டு டிரைவருக்குப் போய் இந்தப் பயம் பயப்படுகிறாய்..?"

"உஷ்.. மாலினி.. மெதுவாகப் பேசு.. அவர் காதில் விழுந்து விடப் போகிறது..."

"விழுந்தால் விழுகட்டுமே.. நீ ஏன் பயப்படு-கிறாய்னுதான் நான் கேட்கிறேன்..."

"இவர்.. என் வீட்டுக்காரரின் அண்ணனுக்கு நம்பகமானவர்.. அவருக்கு இவர் வலது கை போன்று வைத்துக்கொள்ளேன்..."

"தோடா.. அவருக்கு இவர் அல்லக் கையாகவே இருந்துவிட்டுப் போகட்டும்.. அதுக்கு நீயேண்டி பயப்படுகிற...?"

"சும்மாயிருடி.. நீ வேற இந்த வீட்டின் நிலவரம் புரியாமல் பேசாதே..."

"என்னடி.. நிலவரம்..? பெரிய கலவரம் போல் இப்படி ஒரு பில்டப்பைக் கொடுக்கிறாயே..."

"இந்த வீட்டில்.. என் வீட்டுக்காரரின் அண்ணன் வைத்ததுதான் சட்டம் மாலினி..."

"ப்பூ.. இதைச் சொல்லத்தான் இத்தனை பில்டப்பா.. அதுதான் எனக்குத் தெரியுமே.."

"எப்படித் தெரியும்..?"

"அதுதான் வழியில்.. உன் மச்சான்காரனின் அல்லக்கை திறந்த வாயை மூடவே இல்லையே..."

"தெரியுதில்ல.. அதனால் தேவையில்லாமல் பேசாதே..."

"என்னடி இது அநியாயமாய் இருக்கு.. பேசக்கூட முடியாத வீட்டிலா நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்..?"

"ம்ஹூம்.. உனக்கென்னடி தெரியும் என் அவதி... இங்கே வந்து வாயைத் திறக்கவே யோசிக்கும் நிலைமையில் ஆகிவிட்டது என் நிலைமை.. நான் எதைச் சொன்னாலும் எல்லோரும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருந்தாங்க.. என் கணவர்.. சசி.. நீ இப்படி பேசியிருக்கக் கூடாது.. அப்படிச் சொல்லியிருக்கக் கூடாதுன்னு சொல்லிச் சொல்லி எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போகுமாறு செய்துவிட்டார்..."

"அடிப்பாவி.. இதுதான் நீ காதல் கல்யாணம் செய்து கொண்ட லட்சணமா.. இதை வெளியில் சொல்லிவிடாதே.."

"பேசினால்தானே பிரச்னைன்னு நான் சுத்தமாய் பேசுவதையே நிறுத்திவிட்டேன்..."

"ஓ.. இதுதான்.. நீ 'அமைதியின் சிகரம்'னு பெயர் வாங்கியிருப்பதற்கான காரணமா.. வெல்டன் சசி.. தேறிவிட்டாய் போ..."

"உனக்கு என் நிலைமையைப் பார்த்தால் கேலி பண்ணத் தோன்றுகிறதா..?"

"அப்புறம் என்னடி.. உன்னை அடக்க நினைப்-பவங்களை எதிர்த்துப் போராடுவதை விட்டு விட்டு... இப்படி வாயிருந்தும் ஊமையாய்ப் போய்விட்டேன்னு நிற்கிறாயே..."

மாலினியின் கோபத்தைக் கண்ட சசிரேகா ஆறுதல் கொண்டவள் போல் புன்னகைத்தாள்.. அவளின் கை.. மாலினியின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டது..

7

## புலர்கின்ற பொழுதில்...

## உன் முகம் கண்ட என் கனவை...

## என்னவென்று நான் சொல்ல..?

"மாலு.. நீ இங்கே வந்து தங்கி வேலை பார்க்க சித்தப்பா என்னிடம் அனுமதி கேட்டபோது நான் எவ்வளவு சந்தோசப்பட்டுப் போனேன் தெரியுமா..?"

"எதற்குடி.. உன் கூட சேர்ந்து கொள்ள இன்னொரு ஊமை வந்து அகப்படப் போகிறாள்னா..? ஏண்டி.. இப்படி வாயிருக்கும் ஜீவன்களை.. வாயிருந்தும் ஊமையாக மாற்றும் வீடு இதுன்னு என்னிடம் ஒரு வார்த்தை சொன்னாயா நீ...?"

"சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பாய்..?"

"உன் வீட்டுப் பக்கமே.. ஏன்.. உன் இந்த அருமையான வீடு இருக்கும் ஏரியாப் பக்கமே தலை வைத்து படுத்திருக்க மாட்டேன்..."

"அதனால்தான் சொல்லவில்லை..."

"என்ன ஒரு நல்லெண்ணம்.. ஏண்டி.. என்னைப் பற்றி உனக்கே தெரியும்தானே.. நான் மனதில் நினைப்பதை பேசித் தொலைப்பேண்டி.. என்னைக் கொண்டு வந்து இந்த வீட்டில் சிக்க வைத்திருக்கிறாயே.. எத்தனை நாளாய் என்னை இப்படிப் பழிவாங்கக் காத்திருந்தாய்..?"

"மாலு.. உன்னைப் போல் ஒருத்திதாண்டி எனக்கு வேண்டும்..."

"எதற்கு.. உன் கதையை நான் கேட்க.. என் கதையை நீ கேட்பதற்கா..?"

"ஒருவகையில் அப்படித்தான்னு வைத்துக் கொள்ளேன்..."

"அடிப்பாவி.. அதையும் நீ ஒப்புக்கொள்கிறாயா..?"

"மனம்விட்டுப் பேச எனக்கென்று ஒரு ஜீவன் இந்த வீட்டில் இல்லைடி..."

"இது என்னடி வேடிக்கையாய் இருக்கு.. உன் ஹஸ்பெண்ட் இருக்காரில்ல.. அதுவும் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்ட காதல் கணவன்.. அவரைப் பார்த்தால் உனக்கென்று இருக்கும் ஒரு ஜீவனாக உன் கண்ணிற்குத் தெரியவில்லையா..?"

இயல்பாக இதைக் கேட்டுவிட்டு சசிரேகாவின் முகம் பார்த்த மாலினி.. அவள் ஏன் அப்படி வெட்கப்படுகிறாள் என்று புரியாமல் திருதிருவென்று விழித்தாள்...

"அது.. அது... அது வந்து மாலினி..."

"அதுதான் நீயும் இந்த வீட்டிற்கு மருமகளாய் வந்து விட்டாய்.. உன் உறவைப் பிடித்துக் கொண்டு விருந்தாளியாய் நானும் வந்து விட்டேனில்ல.. அப்புறமும் எதுக்கு இப்படி வந்து போயின்னு மென்று விழுங்குகிறாய்.. விஷயத்தைச் சொல்லு...?"

"அவர்.. தினமும் காலையில் ஃபேக்டரிக்குப் போனால் நைட்டாகும் போதுதான் திரும்பி வருவார்..."

"வரட்டுமே.. அதற்கும் நீயும் அவரும் பேசிக் கொள்வதற்கும் என்னடி சம்பந்தம்..?"

"அதற்குப் பின்னால் அவரிடம் பேச உட்கார்ந்தால் அவரும் பேசமாட்டார்.. என்னையும் பேசவிட மாட்டார்டி.."

"அது ஏண்டி.. அப்படி..?"

"உனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை மாலினி..."

"ஆகா.. கண்டுபிடித்துவிட்டாயே.. உலக மகா கண்டுபிடிப்புதான்.. நீ கெட்டிக்காரிதான்.. பிழைத்துக் கொள்வாய்..."

"அடிப்போடி இவளே.. உனக்குக் கல்யாணமாகி யிருந்தால் இது புரிந்திருக்கும்.. பேசாமல் வாயை மூடிக் கொண்டு

உள்ளே வா..."

இவள் ஏன் இப்படி அதட்டல் போடுகிறாள் என்ற கோபம் மனதிற்குள் சுருசுருவென்று எழ.. மாலினி.. சசிரேகாவை முறைத்தாள்...

"பசியோடு வந்து நிற்பவளுக்கு ஒரு துண்டு இட்லியைக்கூடக் கண்ணில் காட்டாமல்.. இவ்வளவு நேரமும் உன் வீட்டில் பேச முடியாத கொடுமைக் கதையை என்னிடம் பேசிக் கொட்டித் தீர்த்தவள் நீ.. இப்போது என்னைப் பார்த்து வாயை மூடச் சொல்கிறாய்.. இப்போது தெரியுதடி... ஏன் உன்னை இந்த வீட்டில் பேசா மடந்தையாய் ஆக்கிவைத்திருக்கிறார்கள் என்று..."

"ஐயோ மாலினி.. அதெல்லாம் உனக்குப் புரியாது.."

"புரியாவிட்டால் போகுது விடு. பேசாமல் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு அதனுடன் கொஞ்சிப் பேசு.. அதை யாரும் தடுக்க வர மாட்டார்களே..."

"நல்ல ஐடியாதான்..."

"நான் மோசமான ஐடியாவைச் சொல்ல மாட்டேன்.."

"ஆனால்.. இப்போதைக்கு என் வீட்டுக்காரரர் குழந்தை பெற்றுக் கொள்ளக்கூடாது என்கிறாரே..."

"இது என்னடி கதையாய் இருக்கு.. ஏன் அப்படிச் சொல்கிறார்..?"

"அவருடைய அண்ணனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை மாலினி..."

"அதுதான் எனக்குத் தெரியுமே..."

"எப்படித் தெரியும்..?"

"ப... ப.. சொன்னார்..."

"ப.. ப.. வா..?"

"அதுதாண்டி.. பழம்பெருமை பரந்தாமன்.."

"அடிப்பாவி.. அவருக்கு பட்டப்பெயரே வைத்து விட்டாயா..?"

சசிரேகா தன் பேசாத விரதத்தை மறந்து பொங்கிச் சிரித்தாள்.. அவள் கண்களில் நீர் துளிர்த்துவிட்டது...

"இப்படிச் சிரித்து எத்தனை நாள்களாகி விட்டன மாலினி..."

"ஐந்தறிவு உள்ள விலங்குகளுக்கும் ஆறறிவு உள்ள நமக்கும் உள்ள வித்தியாசம் இந்த சிரிப்புதான்.. அதையே மறந்துவிட்டாய்னு சொல்கிறாயே.. உனக்கே இது அநியாயமாய் தெரியவில்லையா..?"

மாலினி கோபத்துடன் கேட்க.. மனப்பூர்வமாய் 'இல்லை' என்று தலையாட்டினாள் சசிரேகா..

"உனக்கே தெரியும் மாலினி.. என் வீட்டினரின் நிலை என்ன என்பது.. நீ வசதியான குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவள்.. சித்தப்பா ஸ்டேட் கவர்ன்மெண்டில் பெரிய வேலையில் இருக்கிறார்.. அண்ணன் வெடரினரி டாக்டர்.. சென்னையில் சொந்தமாக வீடு, கார்

என்று வாழ்ந்தவள் நீ... வாடகை வீட்டில் வருகின்ற வருமானத்தில்.. வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி

படிக்க வேண்டி வந்த என் நிலைமை உனக்குத் தெரியும்தானே..."

"சசி..."

"நான் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது எங்கள் காலேஜ் ஃபங்ஷனுக்கு சீஃப் கெஸ்டாய் வந்தவர் தான் என் வீட்டுக்காரர்.. அந்த விழாவில் நான் ஆடிய நடனத்தைப் பார்த்து மயங்கிப் போய் என்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டார்..."

"ஏன்.. நீ அவரைக் காதலிக்கவில்லையா..?"

"நான் அப்படிச் சொன்னேனா.. எனக்கும் அவர் மேல் காதல் வந்துவிட்டது.. அவரின் வசதியைப் பற்றி அறிந்ததும் என் காதல் நிறைவேறாதுன்னு நினைத்து அவரிடமிருந்து

விலகிவிடத்தான் நினைத்தேன்.. ஆனால் தெய்வம் போல் வந்து நின்றார் அவருடைய அண்ணன்.."

"யாரை தெய்வம் என்கிறாய்.. இந்த வீட்டு ஹிட்லரையா..?"

"எனக்கு இது.. அப்போது தெரியாதே..."

"ஐஸீ.. மேலே சொல்லு..."

"அவர் கல்யாணத்திற்கு முன்னாலேயே எங்கள் கல்யாணத்தை நடத்தி வைத்தார்.. இப்படி ஒரு அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்த பின்னால்.. பேசவும் சிரிக்கவும் முடியாமல் போனது எனக்கு பெரிய விஷயமாய் ஆரம்பத்தில் தோன்றவில்லை..."

"இப்போது தோன்றுகிறதா..?"

"ஆமாம்.. மூச்சு முட்டுகிறது..."

"அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.. அளவுக்கு மீறிய கட்டுப்பாடு.. அதுதான் உன் பிரச்னையே.."

"ம்ம்.. இதில் நீ சொன்னது போல் நான் நினைத்தவுடன் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது மாலினி... ஏற்கெனவே அண்ணன் இருக்கும்போது.. தான் முதலில் கல்யாணம் பண்ணிக் கொண்டோமென்ற குற்ற உணர்வு.. என் கணவரின் மனதில் இருக்கிறது.. அதனாலேயே.. வீட்டிலிருக்கும் மற்றவங்க முன்னால் என்னிடம் பேசக்கூட யோசிப்பார்..."

"இதில் சிரிப்புக்கு எங்கே போகிறது..."

"புரிந்துகொண்டாய்.. அதனால்.. அண்ணனுக்கு கல்யாணமாகி அவர் குழந்தை பெற்றுக் கொள்ளும் வரையில் நாங்கள் குழந்தை பெற்றுக்கொள்ளக் கூடாதுன்னு தீர்மானமாய் இவர் சொல்லிவிட்டார்.."

"அப்படியா விஷயம்..?"

"அப்படித்தான்..."

பேச்சை பாதியிலேயே நிறுத்திவிட்டு சசிரேகா வாய்மூடிக் கொள்ள.. அவள் எதிரில் நின்று.. உள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த பரந்தாமனைத் திரும்பிப் பார்க்காமலேயே "வாங்க பரந்தாமன் சார்..." என்றாள் மாலினி...

"அது எப்படிம்மா.. என்னைத் திரும்பிப் பார்க்காமலேயே கரெக்டாகக் கண்டுபிடித்தீங்க..?"

பரந்தாமன் பொங்கிப் பூரித்துவிட்டார்... சசிரேகாவின் முகம் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே மாலினி பதில் சொன்னாள்...

"எனக்கு முதுகிலும் ஒரு கண்ணிருக்கு சார்..."

"உங்களுக்குத்தானே.. இருந்தாலும் இருக்கும் சின்னம்மா.. உங்க இரண்டு பேரையும் பெரியம்மா கூப்பிடுகிறாங்க..."

பரந்தாமன் போய்விட.. சசிரேகாவின் முகத்தைப் பார்த்த மாலினி புருவம் உயர்த்தினாள்.. சற்றுமுன் மாலினியிடம் சகஜமாய் பேசிக்கொண்டிருந்த சசிரேகாவின் முகத்தில் இனம்புரியாத கலவரம் தெரிந்தது...

அதைக் கண்டுகொள்ளாதவள் போல் வேடிக்கையாய் பேசி அவளை சகஜமாக்க முயன்றாள் மாலினி...

"ஏன் சசி... என் அம்மா.. சென்னையில் இல்ல இருக்கிறாங்க.. இவர்.. இங்கே வந்து பெரியம்மான்னு சொல்கிறாரே..."

"சும்மாயிரு மாலினி.. அவர் என் மாமியாரைத்தான் அப்படிச் சொல்கிறார்..."

"அதைச் சொல்லு.. அவருக்குத்தான் உன் மாமியார் மேல்.. சாமியாரின் மேலிருக்கும் பக்தியைப் போல பக்தி பொங்கி வழிகிறதே..."

"நான் வாசலில் பேசியது என் மாமியாருக்குத் தெரிந்திருக்குமோ.. எனக்கு பயமாய் இருக்கிறது மாலினி..."

இப்படிச் சொன்னவளின் இருண்ட முகத்தை யோசனையுடன் பார்த்தாள் மாலினி...

8

**கார்காலப் பொழுதில்...**

**என் கனவு சொன்ன தூதை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

சசிரேகா அவசரமாக வீட்டுக்குள் செல்ல.. அவளைப் பின்தொடர்ந்து சென்றாள் மாலினி.. ஹாலின் நடுமையத்தில் மாலினியின் பெட்டிகளை வைத்து.. அதன் மேல் பெரிய டிராவல் பேக்கை வைத்துவிட்டு பரந்தாமன் சென்றிருக்க.. அங்கிருந்த பெரிய சோபாக்களில் நடு நாயகமாக இருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு தோரணையாய் சாய்ந்து அமர்ந்திருந்தாள் அந்தப் பெண்மணி...

சந்தன நிறத்தில் கெட்டி ஜரிகையிட்ட புடவையுடுத்தி.. நெற்றியில் சந்தனக்கீற்று வைத்து..

தங்கத்தினாலேயே பிரேமிட்ட மூக்குக் கண்ணாடியை லேசாக சரிசெய்து கொண்டு சசிரேகாவை மூக்குக் கண்ணாடிக்குள் விழியுருட்டி உறுத்துப் பார்த்தாள் அவள்.. அந்தப் பார்வையைக் கண்டு சசிரேகா நடுங்கிய நடுக்கத்தைக் கண்டு அவள்தான் சசிரேகாவின் மாமியார் நர்மதா என்பதை மிகச் சரியாக யூகித்துக் கொண்டாள் மாலினி...

'அடேங்கப்பா.. மகாராணி போல் என்னவொரு கம்பீரம்.. ஜமீன் வம்சம் என்பது அப்படியே தெரிகிறதே.. இப்படியிருக்கும் இந்த அம்மாவிற்கு.. காலில் பூப்போட்டு பரந்தாமன் கும்பிடுவதில் ஆச்சரியம் இல்லை...'

வைரங்கள் ஒளிர அமர்ந்திருந்த நர்மதா.. மாலினியை ஏற இறங்கப் பார்த்தாள்.. பின் வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படத்தில் வரும் வெள்ளைக்கார உயர் அதிகாரி வினவியதைப் போல...

"நீதான் மாலினி என்பதோ..?" என்று வினவினாள்..

'நீங்கள்தான் சசிரேகாவின் மாமியாராகப் பட்ட மேன்மைமிகு நர்மதா என்பதோ..!' என்று பதிலுக்கு கேட்கலாமா என்று யோசித்த மாலினி.. பக்கத்தில் மருண்ட பார்வையுடன் நின்று கொண்டிருந்த சசிரேகாவின் முகத்தைப் பார்த்ததும் அந்த யோசனையை உடனடியாக கைவிட்டாள்...

'எதற்கு வம்பு.. இதுதான் உன்னைப் பெற்றவர்கள் உன்னை வளர்த்து வைத்திருக்கும் லட்சணமா என்று இவங்க கேட்டு வைப்பாங்க.. சென்னையில் தேமே என்று தாங்களுண்டு தங்கள் வேலையுண்டு என்று இருக்கும் என்னைப் பெற்றவர்களுக்கு ஏன் அந்தப் பெயரை வாங்கி வைக்க வேண்டும்...' என்ற யோசனையுடன்,

"ஆமாம் மேடம்..." என்றாள் மாலினி...

"மேடமா..?" அவள் சசிரேகாவைப் பார்க்க.. சசிரேகா கைகளைப் பிசைந்தாள்...

'இது என்ன.. இந்த அம்மா.. என்னைக் கேள்வி கேட்டுவிட்டு சசியை முறைக்கிறாங்க.. கேள்வி இங்கே.. பார்வை அங்கேயா...'

"நான் எதுவும் தவறாக சொல்லிவிட்டேனா மேடம்..?" என்று மாலினி மீண்டும் ஒரு மேடத்தைப் போட்டு வைத்தாள்...

நர்மதாவின் முகத்தில் மெல்லிய சிரிப்பின் ரேகை ஓடியது...

"எதனால் என்னைப் பார்த்து மேடம் என்று சொல்கிறாய்..?"

"உங்களைப் பார்த்ததும் என் மனதில் பொங்கி வரும் மதிப்பும் மரியாதையும்.. அப்படிச் சொல்ல வைக்கிறது மேடம்..."

மாலினி இதைப் பவ்யமாய் நர்மதாவிடம் சொன்ன விதத்தைக் கண்டு சசிரேகா அயர்ந்துவிட்டாள்..

'இது மாலினிதானா.. இவளுக்கு இப்படியெல்லாம் அடக்க ஒடுக்கமாய் நின்று பேசக்கூடத் தெரியுமா..' அவள் ஆச்சரியத்தில் இமை மூடித் திறந்தாள்...

"பரவாயில்லையே.. நன்றாகப் பேசுகிறாயே.. உன்னைப் பெற்றவங்க நன்றாகத்தான் உன்னை வளர்த்திருக்கிறாங்க..."

'ஆஹா.. ஒருவழியாய் என்னைப் பெற்றவங்களுக்கு இந்தம்மா வாயால் நல்ல பெயர் வாங்கிக் கொடுத்து விட்டேன்...' என்று மாலினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்...

"உங்களைப் பற்றியும்.. இந்தக் குடும்பத்தின் அருமை.. பெருமைகளைப் பற்றியும் அப்பாவும்.. அம்மாவும் நிறையச் சொல்லி அனுப்பினாங்க மேடம்..." என்று சொல்லும் போதே.. அந்த நிறையச் சொல்லிய விஷயங்கள் என்ன என்ன என்பது மாலினியின் நினைவில் தோன்றியது...

"அந்த அம்மா ராங்கி பிடிச்ச பொம்பளையாம் மாலினி.. அது போட்டிருக்கும் மூக்குக்கண்ணாடிகூட தங்கத்திலேயே செய்ததாம்.. வைரமும்.. பிளாட்டினமுமாய் வேளைக்கு ஒரு நகை போடுமாம்.. பணக்கார இடம்.. பார்த்து நடந்து கொள்.. அதுகிட்ட அதிகமாய் பேச்சு வைத்துக் கொள்ளாதே.. போனோமா.. வேலையைப் பார்த்தோமான்னு இருக்கணும்.. புரிந்து நடந்து கொள்.." என்றாள் காவேரி...

"சசியின் மாமியார் முன்னால் யாரும் பேசவே பயப்படுவாங்களாம்.. என் தம்பி குடும்பத்தை மனுஷரா மதித்ததே இல்லையாம்.. அந்த அம்மாளின் திமிரைப் பற்றிக் கேள்விப்பட்டும் உன்னை அவங்க வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியதாகப் போய்விட்டது மாலினி.. வேறு வழியில்லை.. அந்த வீடுதான் உனக்குப் பாதுகாப்பாக இருக்கும்.. ம்ஹூம்.. மனிதரை மதிக்கத் தெரியாத பிறவியான அந்தம்மா இருக்கிற வீட்டுக்குப் போகப் போகிறாய்.. பார்த்து இரும்மா.. கூடுமானவரை

அவங்க கண்ணில் படாமல் இருக்கப் பார்..." என்றார் ஜானகிராமன்..

இப்படிப் பெருமையாய் தன் பெற்றோர் கூறியதை இந்த அம்மாவிடம் சொன்னால்... இந்த அம்மாவின் முகம் எப்படி மாறிவிடும் என்று நினைத்துப் பார்த்த மாலினிக்கு லேசாக சிரிப்பு வந்தது...

"பரவாயில்லை.. சிரிச்ச முகமாய் இருக்கிறாய்.. சசியின் சித்தப்பா மகளுக்கு சிரிக்கக்கூடத் தெரியுமா..?" நர்மதா மருமகளை கூரிய பார்வை பார்த்த வண்ணம் வினவினாள்...

'அதுசரி.. சசிக்கு சிரிக்காமல் இருக்கத்தான் தெரியாது... அவளின் சிரிப்பைப் பிடுங்கிக் கொண்டு சவடால் வேறு அடிக்கிறீங்களா...' என்று நன்றாக நான்கு கேள்விகள் கேட்டு வைக்க வேண்டும் என்று மாலினிக்குத் தோன்றியது...

ஆனால், அவள் அப்படிச் செய்துவிடப் போகிறாளே என்ற பயத்துடன்... விழியால் எச்சரித்த சசியின் பயந்த பார்வையைக் கண்டதும் தன் எண்ணத்தினைக் கைவிட்டவளாய் மாலினி அமைதியை வரவழைத்துக் கொண்டு நர்மதாவைப் பார்த்தாள்...

"இந்த வீட்டிற்குள் வந்து உங்கள் முகத்தைப் பார்த்த பின்னாலும் ஒருவருக்கு கவலை முகம் வருமா..?" என்று மீண்டும் ஒரு ஐஸ்கட்டியைத் தூக்கி நர்மதாவின் தலையின் மேல் வைத்தாள்...

இப்போது நர்மதா வாய்விட்டுச் சிரித்தாள்...

"பரவாயில்லை சசி.. உன் சித்தப்பா மகள் கெட்டிக் காரியாகத்தான் இருக்கிறாள்.. பிழைத்துக் கொள்வாள்.." என்று மருமகளைப் பார்த்து சொன்னாள்...

'இந்தம்மா சொல்லாவிட்டால் நான் பிழைத்துக் கொள்ள மாட்டேனா...' மாலினி விழிகளால் சசியிடம் வினவினாள்...

அவசரமாய் தன் பார்வையை விலக்கிக் கொண்ட சசியை நினைத்து மனதிற்குள் பரிதாபம் மேலிட...

"பிழைக்கத்தானே இந்த ஊருக்கு வந்திருக்கிறேன் மேடம்..?" என்று கூறினாள் மாலினி...

"புரியவில்லையே..." தன் மூக்குக்கண்ணாடியை சரிசெய்தபடி வினவினாள் நர்மதா...

"ஐ மீன்.. வேலை செய்வதற்காகத்தானே இந்த ஊருக்கு வந்திருக்கிறேன்.. அதைச் சொன்னேன் மேடம்.."

"பரவாயில்லையே.. நீ கெட்டிக்காரி மட்டுமில்லை.. புத்திசாலியும்கூட... நீ பேசுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது..."

'இப்படிக் குல்லாய் போட்டு.. ஜால்ரா அடித்தால் யாருக்குத்தான் பிடிக்காது...'

எண்ணியதை வெளியே சொல்லாமல் இதழ் விரியச் சிரித்தாள் மாலினி...

"எனக்கும் உங்களை ரொம்பப் பிடித்திருக்கிறது..."

"நேற்று எந்நேரம் வீட்டை விட்டுக் கிளம்பினாய்.."

"ஈவினிங் டைம் மேடம்..."

"ஐயோ பாவம்.. விடிய விடிய பஸ் பிரயாணம் செய்து களைத்துப் போய் வந்திருப்பாய்..."

'அதுகூட உங்களுக்கு நினைவிருக்கிறதா...'

"பசியோடு இருப்பாய்..."

'அப்பா.. இப்போதாவது என் வயிற்றுக்கு எதையாவது ஈய வேண்டுமென்ற ஈகை குணம் உங்களுக்கு வந்ததே...'

"போய் குளித்துவிட்டு வந்து சாப்பிடு..."

'எங்கே போய் குளிப்பது...?'

"எது பேசினாலும்.. பதில் பேசாமல் அமைதியாய் நிற்கிறாயே.. அப்படியே சசியின் குணம்தான்..."

'ஐயையோ.. என்னையும் அவளைப் போல் ஆக்கி விடத் திட்டம் போட்டு விட்டீங்களா...'

"ஆனால், ஒரு விஷயம் மாலினி..."

"என்ன விஷயம் மேடம்...?"

"வார்த்தைக்கு வார்த்தை மேடம் போடுகிறாயே.. இதுதான் விஷயம்.."

"ஏன் மேடம்..?"

"திரும்பவும் மேடமா..?"

"ஐ ஆம் ஸாரி.. ஆனால், மரியாதைக்குரிய உங்களை வேறு எப்படித்தான் கூப்பிடுவது..?"

"அத்தையென்று கூப்பிடுவது..."

'என்னடா இது.. மனிதரை மதிக்காத பிறவின்னு அப்பா இந்தம்மாவைப் பற்றி சொன்னார்.. ராங்கி பிடித்த பொம்பளைன்னு அம்மா சொன்னாங்க.. இந்தம்மா என்னடா வென்றால்.. உறவுக்கு கை கொடுக்கிறாங்களே...'

"அது வந்து.. நான் எப்படி உங்களைப் போய் அத்தையென்று கூப்பிடுவது..?"

"ஏன் வாயால்தான் கூப்பிட வேண்டும்.. ஹ.. ஹ..."

சசிரேகாவிற்கு மாமியாரின் சிரிப்பைக் கண்டு ஆச்சரியம் வந்துவிட்டது.. வெள்ளைக் காக்கா பறந்து போயிருந்தால்கூட அப்படி விழி விரிய அதிசயமாய் பார்த்திருக்க மாட்டாள்.. மாமியார் சிரிப்பதை அத்தனை அதிசயமாய் பார்த்து.. நம்ப முடியாமல் மீண்டும் இமை மூடித்திறந்தாள்..

'ஜோக்கடித்து விட்டாங்களாக்கும்.. இந்தம்மா ஜோக்கை இவங்களேதான் ரசித்துச் சிரிக்க வேண்டும்..' என்று எண்ணியபடி சசிரேகாவைப் பார்த்த மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது...

'இவள் ஏன்.. இவளுடைய மாமியாரை மியூஸியத்தில் வைத்திருக்கும் அபூர்வ விலங்கினம் போல் பார்க்கிறாள்...'

மாலினிக்கு சசிரேகாவின் திகைத்த தோற்றத்தைக் கண்டதும் சிரிப்பு வந்துவிட்டது.. அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பை தன்னுடைய நகைச்சுவையை ரசித்துதான் அவள் சிரிப்பதாக நர்மதா எண்ணிக் கொண்டு இன்னும் பலமாக கலகலவென்று சிரித்தாள்..

9

**இமையோரம் உன் நினைவில்...**

**என் இதயம் வாழும் நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்த ஹாலில் நர்மாதவுடன் இணைந்து.. மாலினி சிரிக்கும் சத்தத்தை வியப்புடன் கேட்டபடி மாடியிலிருந்து இறங்கி வந்தான் கருணாகரன்...

காலடியோசையிலேயே அது கணவன் என்பதை கண்டுபிடித்துவிட்ட சசிரேகா.. முகம் மலரக் கணவனிடம் திரும்பினாள்...

"என்னங்க.. இவள்தான் மாலினி... என் சித்தப்பாவின் மகள்.. மாலினி.. இவர்தான் என் கணவர்.."

கருணாகரனைக் கண்டதும் சிரிப்பை வாயில் புதைத்துக் கொண்ட மாலினி.. மரியாதையுடன் கைகுவித்தாள்...

"வணக்கம்..."

"வாங்க..."

சிறு தலையசைவுடன் பதில் சொன்ன கருணாகரனிடம் சங்கடத்துடன் பேசினாள் மாலினி...

"எனக்குப் போய் வாங்க.. போங்கன்னு மரியாதை கொடுக்க வேண்டாம்.."

"அப்படியென்றால் சரிம்மா.. இனி வா.. போ என்றே கூப்பிடுகிறேன்.. அம்மா.. இந்தப் பெண்தான் மாலினி..."

"இதை நீ எனக்குச் சொல்கிறாயா.. இவ்வளவு நேரமாக இந்தப் பெண்ணுடன்தான் நான் பேசிக் கொண்டிருந்தேன்..."

"நான் வரும்போது இரண்டு பேரும் சிரித்துக் கொண்டு இருந்தீர்களே..."

"அதுவா கருணா.. மாலினி என்னை மேடம் என்று கூப்பிட்டாள்.. நான் அத்தையென்று கூப்பிடச் சொன்னேன்.. அவள்.. அப்படி எப்படிக் கூப்பிடுவது என்று கேட்டாள்.. நான் உடனே வாயால்தான் கூப்பிட வேண்டும்னு சொன்னேன்.. இது எப்படி இருக்கு.. ஹ.. ஹ..."

'நல்லாவே இல்லை...' என்று சொல்லத்தான் மாலினி ஆசைப்பட்டாள்...

ஆனால்.. தாயோடு இணைந்து புன்னகைத்த கருணாகரனைக் கண்டதும் வாய்மூடிக் கொண்டாள்..

"புதியவள்தானே அம்மா.. நம்மையெல்லாம் இப்போது தான் பார்த்திருக்கிறாள்.. அதனால் தயக்கமாய் இருந்திருக்கும்..."

"நீ சொல்வது சரிதான் கருணா.. ஆனால்.. நாம் நமக்காக மட்டுமே எப்போதும் பார்க்க முடியுமா.. வீடு நிறைய வேலையாள்கள் இருக்கிறார்கள்.. அவர்கள் காதில்.. மாலினி 'மேடம்' என்று என்னைக் கூப்பிடுவது விழுந்து வைத்தால் என்ன செய்வது.. நாம் உறவுக்காரப் பெண் என்று சொல்லியிருக்கிறோம்.. அவங்க முன்பின் தெரியாத.. அயல்வீட்டுப் பெண் என்று நினைத்துவிடக் கூடாதில்லையா...?"

இதில் இத்தனை விஷயம் அடங்கியிருக்கிறது என்று மாலினிக்கு இப்போதுதான் புரிந்தது.. அவள் நர்மதாவை

புதிதாய் தோன்றிய மதிப்புடன் வியப்பாக பார்த்தாள்... சும்மா ஒன்றும் பரந்தாமன் புகழ்ந்துவிட வில்லையென்று அவளுக்கு தோன்றியது...

"கேட்டாயா மாலினி..." கருணாகரன் நட்புடன் புன்னகைத்தான்...

"கேட்டேன் சார்..." என்று மரியாதையுடன் மாலினி பதில் சொல்லி வைக்க...

"என்ன சொன்னாய்.. சாரா..?" என்று கேட்டு நர்மதா இன்னும் சிரிக்க ஆரம்பித்தாள்...

கருணாகரனின் முகத்திலும் சிரிப்புத் தோன்ற, அவன் மனைவியைப் பார்த்தான். இப்போது சசிரேகாவும் சிரித்துக் கொண்டிருந்தாள்...

"நல்லா 'சார்' போட்ட போ.. இவர் உனக்கு அக்காவின் கணவர் இல்லையா..?" என்று நர்மதா கேட்க,

'நான் அதை எப்போது மறுத்தேன்..?' என்ற நினைவுடன் மாலினி.. 'ஆமாம்' என்ற பாவனையில் தலையை அசைத்தாள்...

"சசி.. உன் தங்கையிடம் சொல்லிவிடம்மா.. என்னை அத்தையென்றுதான் அழைக்க வேண்டும்.. உன் கணவரை அத்தான் என்றுதான் அழைக்க வேண்டும்.."

"சரிங்க அத்தை..."

"மாலினிக்கு எந்த ரூமை கொடுக்கலாம்...?"

"நீங்களே சொல்லுங்கள்..."

"மாடியிலிருக்கும் கெஸ்ட் ரூம்களில் ஒன்றைக் கொடு.."

"சரிங்க அத்தை..."

"இவள் வேலைக்கு எப்போது போக வேண்டுமாம்..?"

"நாளைக்குப் போக வேண்டுமாம்..."

"அப்படியா.. ம் ம்.. கருணா..."

"அம்மா.."

"இவள் வேலை பார்க்கப் போகும் மில் எங்கே இருக்கிறது..?"

"தக்கலையில் இருக்கிறதும்மா..."

"ஓஹோ.. இங்கேயிருந்து தினமும் எப்படி அங்கே போய் வேலை பார்த்துவிட்டு வரப் போகிறாள்...?"

'இந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம்..?' என்று திகைத்துப் போய் சசிரேகா கணவன் முகத்தைப் பார்த்தாள்..

வீட்டில் உள்ள அனைவரிடமும் சம்மதம் வாங்கிய பின்னர்தான் அவள் மாலினியை வரச் சொல்லியிருந்தாள்.. இப்போது மாமியார் இப்படிப் பேசுவது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை...

ஆனால், மாலினி அந்தக் கேள்வியை இலகுவாக எடுத்துக் கொண்டு நர்மதாவிற்கு பதில் சொன்னாள். சென்னையில் பிறந்து வளர்ந்தவளுக்கு போக்குவரத்து ஒரு பிரச்னையாகவே தோன்றவில்லை...

"நான் பஸ்ஸிலே போய் கொள்வேன் மேடம்... ஸாரி.. ஸாரி.. அத்தை..."

நர்மதா.. மாலினியின் தடுமாற்றமான அத்தையைக் கேட்டுப் புன்னகைத்தாள்...

"உனக்கு இது புரியாதும்மா..."

"ஏன்.. எனக்குப் பஸ்ஸில் போய் வந்து பழக்கம் உண்டு அத்தை.. நான் சென்னைக்காரி..."

"ஆனால், இது சென்னையில்லைம்மா.. மார்த்தாண்டம்..."

"அதனால் என்ன..?"

"இங்கே.. நீ இன்னார் வீட்டு உறவுக்காரப் பெண் என்றுதான் பார்ப்பார்கள்.. எங்கள் வீட்டில் இருந்து கொண்டு நீ பஸ்ஸில் போய் வருவது சாத்தியப்படாது.."

'என்னடா.. இது..' என்று அலுப்பாக இருந்தது மாலினிக்கு..

நினைத்தவுடன் பஸ்ஸையோ ஆட்டோவையோ பிடித்து கல்லூரிக்கும் கடைகளுக்கும் போய் வந்து பழக்கப் பட்டவள் அவள்.. சுதந்திரமாய் இருந்தவளுக்கு ஏதோ சிறையில் வந்து மாட்டிக் கொண்டதைப் போல முதல் நாளிலேயே மூச்சு முட்டியது...

சசிரேகாவை ஏக்கத்துடன் பார்த்தாள்.. அவள் செய்வது அறியாதவளாய் கணவனைப் பார்த்தாள்.. அவனோ தாயின் வாய்மொழியை அறிய அவள் முகம் பார்த்தான்.. நர்மதா வாய் திறந்தாள்..

"கருணா..."

"அம்மா..."

மாலினிக்கு ஏனோ அந்தக் காலத்து மகாராணி ஒருத்தி அரியாசனத்தில் அமர்ந்து கொண்டு 'யாரங்கே..' என்று அழைப்பது போலவே இருந்தது...

"பரந்தாமனிடம் சொல்லிவிடு.. தினமும் காலையில் மாலினியைக் கொண்டு போய் விட்டுவிட்டு.. மாலையில் வேலை முடிந்ததும் கூப்பிட்டுக் கொண்டு வந்துடட்டும்.."

"ஆகட்டும்மா..."

'ம்ஹூம்.. இனி தினமும் இந்த வீட்டினரின் பாரம்பர்ய பெருமையை காது புளிக்கப் பரந்தாமன் பேச.. நான் விதியே என்று 'உம்' கொட்ட வேண்டுமா...'

மானசீகமாய் தலையில் கை வைத்துக் கொண்டாள் மாலினி... சசிரேகாவோ தன் சித்தப்பாவின் மகளுக்கு வீட்டில் கிடைத்துவிட்ட பாதுகாப்பைக் கண்டு முகம் மலர்ந்து போய் மாலினியைப் பார்த்தாள்...

கருணாகரன், சசிரேகாவிடம் மெதுவாக எதையோ கூற.. அவள் அவசரமாய் தலை அசைத்தாள். அவன் நர்மதாவின் அருகே அமர்ந்து பேச ஆரம்பிக்க.. சசிரேகா மாமியாரின் முகத்தைப் பார்த்தாள்...

"சரிம்மா... உன் தங்கைக்கு ரூமைக் காட்டு.."

நர்மதா ஒருவழியாய் விடுதலை கொடுக்க.. உத்தரவு கிடைத்துவிட்ட நிம்மதியுடன் மாலினியைப் பார்த்தாள் சசிரேகா..

"வா மாலினி..."

"பொறு சசி.. என் பெட்டிகளைத் தூக்கிக் கொள்கிறேன்..."

மாலினி பெட்டிகளுக்கு அருகே சென்று குனிந்து தூக்க முயல... பதற்றத்துடன் சசிரேகா அவளைப் பிடித்து நிறுத்தினாள்.. அவள் பார்வை செய்யக்கூடாத செயலை மாலினி செய்வதைக் கண்டிப்பதைப் போல அவளைப் பார்த்தது...

"ஏன்.. சசி..." மாலினி புரியாமல் வினவினாள்.. சசிரேகா பதில் சொல்லாமல் மாமியாரைப் பார்க்க.. அவள் உள்பக்கமாய் திரும்பி...

"பொன்னி..." என்று குரல் கொடுத்தாள்...

"என்னங்கம்மா.." என்றபடி இருபத்து நான்கு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் ஓடிவந்து நின்றாள்..

"நீயும் செந்தாமரையும் சேர்ந்து இந்தப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு போய் மாடி ரூமில் வையுங்க..."

நர்மதா பேச்சு முடிந்தது என்பது போல் சசிரேகாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு மகனின் பக்கம் திரும்பிவிட.. மாலினியின் புறங்கையில் ஒரு தட்டு தட்டி.. அவளை அழைத்துக் கொண்டு மாடியேறினாள் சசிரேகா...

மாடிப்படிகளின் முடிவில் நின்று கீழே ஹாலில் அமர்ந்திருந்த நர்மதாவை ஒரு முறை திரும்பிப் பார்த்த மாலினி...

"ஸ்ஸ்... அப்பாடி.. இப்பவே கண்ணைக் கட்டுதே.. நீ எப்படிடீ இந்த வீட்டில் குப்பை கொட்டுகிறாய்..?" என்று சசிரேகாவிடம் கேட்டு வைத்தாள்...

"வாயைத் திறக்காதே மாலினி... யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது..." என்று கலவரத்துடன் கூறிய படி

சற்று முற்றும் பார்த்துக் கொண்டாள் சசிரேகா...

"இதுதான்.. உன்னுடைய ரூம்.." சசிரேகா அறையைத் திறந்துவிட்டாள்...

"அதாவது, நான் தங்கப்போகும் ரூம்..."

"ஆமாம்..."

"அதைச் சரியாகச் சொல்லு.. இல்லாவிட்டால் இந்த ரூமை நான் எப்படிச் சொந்தம் கொண்டாடலாம் என்று உன் மாமியார் தடியைத் தூக்கிக் கொண்டு என்னை அடிக்கவந்து விடுவாங்க..."

"சும்மாயிருடி..."

அறைக்குள் வந்து செந்தாமரையும் பொன்னியும் பெட்டிகளை வைத்துவிட்டுப் போக.. அதுவரை வாயை மூடிக் கொண்டிருந்த சசிரேகா.. அவர்கள் போனதும் அவசரமாக கதவை அடைத்தாள்..

பெட்டிகளில் இருந்த துணிகளை அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்த மாலினி.. புருவம் உயர்த்தினாள்..

"எதற்காக இந்த முன்ஜாக்கிரதை நடவடிக்கை சசி..?"

"பயமில்லாமல் பேசலாமில்லையா..?"

"ஏண்டி.. என்னிடம் நீ பேச யாருக்கு பயப்பட வேண்டும்.. இந்த வீட்டில் நடப்பதையெல்லாம் பார்த்தால் எனக்கு என்னவோ காமெடி ஸீனைப் பார்க்கிறது போலவே இருக்கிறது..."

"இன்னும் நீ ஹிட்லரை நேரில் பார்க்கவில்லை. அவரைப் பார்த்தவுடன் சொல்லு... உனக்கு காமெடி தோன்றுகிறதா.. இல்லை டிராஜடி தோன்றுகிறதான்னு.."

சசிரேகாவின் வார்த்தைகளைக் கேட்டதும் மாலினி சிரித்துவிட்டாள்.. ஆனால்.. சசிரேகா கூறிய அந்த ஹிட்லரை நேரில் பார்த்தபோது.. சசிரேகா கூறியது உண்மையென்று தெரிந்தது...

## 10

**நீ சிந்துகின்ற சிரிப்பை...**

**சேகரிக்கும் என் தவிப்பை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"என்னவோ மாலினி.. நீ வந்தபின் எனக்கு தெம்பு வந்தது போல் இருக்கிறது.. எங்கே எனக்கு பேச்சே மறந்து விடுமோன்னு நான் பயந்து கொண்டு இருந்தேன்..."

"இப்போது அந்த பயம் உன்னிடமிருந்து எனக்கு வந்துவிட்டது..."

"என்னடி சொல்கிற...?"

"இங்கே நான் வந்ததால் உனக்கு பேச்சு, திரும்பவும் கிடைக்கலாம் சசி... ஆனால், எனக்கு பேச்சு மறந்துபோய் விட்டால் என்ன செய்வது..?"

"போடி அரட்டை.. அப்படியெல்லாம் ஆகாது..."

"எந்த தைரியத்தில் சொல்கிறாய்..?"

"நீ யாரோ.. இந்த வீட்டில் இருப்பவர்கள் யாரோ என்ற தைரியத்தில்தான் சொல்கிறேன்.. நான் இந்த வீட்டு மருமகள்.. இவர்கள் சொல் கேட்டு நடக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.. உனக்கு அப்படியா..?"

"ஓ... அப்படியொரு பாயிண்ட் இருக்கில்ல..?"

"ஆமாம்.. அதோடு நீ வேலை செய்ய என்று பகல் முழுவதும் வெளியே சென்று விடுவாய்..."

"தப்பித்துப் போய்விடுவேன்னு சொல்லு..."

"ஒரு வகையில் அப்படித்தான். நான்தான் இருபத்து நான்கு மணி நேரமும் இவர்கள் பார்வையில் இருக்க வேண்டுமே..."

"அந்தக் கொடுமையைச் சொல்லு..."

"சரி.. சரி.. குளித்துவிட்டு வா.. சாப்பிட போகலாம்.."

"தேங்க்ஸ் சசி..."

"எதற்குடி எனக்குப் போய் தேங்க்ஸ் சொல்லுகிற சென்னையில் இருந்து என் ஊருக்கு வேலைக்கு வந்திருக்கிறாய். உன்னை என் வீட்டில் தங்க வைத்துக் கொள்வது என் கடமையில்லையா..?"

"நான் அதற்கு தேங்க்ஸ் சொல்லவில்லை..."

"வேறு எதற்குடி சொன்னாய்..?"

"இப்போதாவது எனக்குச் சாப்பாடு போட வேண்டும் மென்ற நினைவு உனக்கு வந்ததே.. அதற்கு தேங்க்ஸ் சொன்னேன்..."

"உன்னை...!"

சசிரேகா பொங்கிச் சிரிக்க.. மாலினி.. மாற்றுடையுடன் குளியலறைக்குள் புகுந்தாள்...

ஆரஞ்சு வண்ண பிரிண்டட் சில்க் புடவையுடுத்தி அழகாக முடியை பின்னலிட்டு.. தன்னைக் கண்ணாடியில் ஒரு தரம் பார்த்துக் கொண்டாள் மாலினி... கழுத்தினில் போட்டிருந்த இரட்டை வடத்தில் முத்துக்கள் கோத்தது போன்ற செயினும் மூன்று இதழ்களைக் கொண்ட டாலரும் அட்டிகை போலவும் இல்லாமல் நீண்ட செயினைப் போலவும் இல்லாமல் இடைப்பட்டு கழுத்தினில் இருந்து சற்று இறங்கி அழகாக அவளது சேலையின் மேல் படிந்து நின்றது. காதுகளில் பூவிதழ்கள் விரிந்ததைப் போன்ற தோடு கலைநயத்தோடு வடிவமைக்கப்பட்டு இருந்தது..

"யூ லுக் வெரி பியூட்டிஃபுல்.." என்றால் சசிரேகா..

"உன்னை விடவா நான் அழகு..?"

"இதற்கு நான் என்ன பதிலைச் சொல்ல... மல்லிகை அழகா.. முல்லை அழகா என்று கேட்பதைப் போல் இருக்கிறது உன் கேள்வி..."

"புலவியாகவே மாறிவிட்டாய்டி.. குளித்து முடித்து நீ சொன்னது போல சுடிதாரை மாட்டாமல் சேலையைக் கட்டிக் கொண்டும் விட்டேன்... இனியாவது சாப்பாட்டைக் கண்ணில் காட்டு சசி..."

"உன்னோடு முடியாது மாலினி.. வா, போகலாம்..."

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே அறையை விட்டு வெளியே வந்ததும்.. ஸ்விட்ச் போட்டது போல் சட்டென்று சசிரேகாவின் பேச்சு நின்றுவிட்டது. அதற்குப் பழகிப் போயிருந்த மாலினி.. லேசாகத் தோளைக் குலுக்கிக் கொண்டு படிகளில் இறங்கினாள்...

டைனிங் ஹால் மிகப் பெரியதாக இருந்தது. அத்தனை பெரிய ஹாலை அடைத்துக் கொண்டு டைனிங் டேபிள் போடப்பட்டு இருக்க.. அதன் இரு முனைகளிலும் இரண்டு சேர்களும் பக்கவாட்டில் ஏறக்குறைய பக்கத்திற்கு பதினொன்று வீதம் இருபத்து இரண்டு சேர்களும் போடப்பட்டிருந்தன..

அந்த டைனிங் ஹாலின் நடுமையத்தில் கூரையிலிருந்து அழகான லஸ்தர் விளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

திரைப்படங்களில் மட்டுமே இதுபோன்ற வீடுகளையும் டைனிங் ஹாலையும் பார்த்திருந்த மாலினிக்கு நேரில் அவற்றைப் பார்க்கும் போது மலைப்பாக இருந்தது..

இவ்வளவு பெரிய அரண்மனை போன்ற வீட்டில் இருப்பவர்களுக்கு பெருமையும் கர்வமும் இருப்பதில் ஆச்சரியமில்லை என்று எண்ணிக் கொண்டாள் மாலினி..

டைனிங் டேபிளின் ஒரு முனையில் இருந்த சேரில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் நர்மதா.. அவளுக்கு அருகில் பக்கவாட்டில் இருந்த சேர்களில் இரண்டு பக்கமும் இருவர் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க.. அவர்களின் ஒருவன் கருணாகரன் என்று கண்டுகொண்ட மாலினி. இன்னொருவன் யாராக இருக்கும் என்று யோசித்தாள்..

'இவன்தான்.. இந்த வீட்டின் ஹிட்லரோ...'

ஆனால், தற்செயலாகத் திரும்பி மாலினியைப் பார்த்த அந்த அவனின் கண்களில் வெட்டிய மின்னலையும் உதடுகளில் தோன்றிய புன்னகையையும் கண்டு அவசரமாக தன் நினைவை மாற்றிக் கொண்டாள் மாலினி...

'ஊஹூம்.. இவன் அவனில்லை.. அவனுக்காவது சிரிப்பு வருவதாவது...'

அந்த இவன்... மாலினியைப் பார்த்து இன்னும் அகலமாய்ப் புன்னகைக்க.. வேறுவழியின்றி லேசாக பதிலுக்குப் புன்னகைத்தாள் மாலினி...

"ஹாய்..."

"ஹாய்..."

"நீங்கள்தான் மாலினியா..?"

பதிலுக்கு நீங்கள்தான் இன்னாரா என்று கேட்க முடியாமல்.. 'ஆமாம்' என்ற பாவனையில் தலையசைத்தாள் மாலினி...

"நான் யாரென்று தெரியவில்லையா..."

அவன் இயல்பாக வினவினான்.. அவனது சிரிப்பிலும் இயல்பான பேச்சிலும் கவரப்பட்ட மாலினி.. மீண்டும் தலையசைத்தாள்...

"நான் தினகரன் உங்கள் அக்காவின் கொழுந்தனார்.. உங்கள் அக்காள் கணவரின் இளைய தம்பி.. என் அம்மாவிற்கு செல்ல மகன்..."

மகன் பேசிய விதத்தில் நர்மதா சிரித்தாள்...

"போதும்டா.. சாப்பிடு. சசி.. நீயும் மாலினியும் சாப்பிட உட்காருங்கம்மா.."

'இதற்குகூட அனுமதி வேண்டுமா..?' என்ற எண்ணத்துடன் மாலினி, சசியைப் பார்த்தாள். அவள் மாலினியின் பார்வையைத் தவிர்த்து.. கணவனின் அருகே அமர்ந்தாள்.. அவள் பக்கத்தில் மாலினி உட்கார்ந்தாள்..

"செந்தாமரை.. மாலினி இந்த வீட்டு விருந்தாளியாக இருந்தாலும் இனி இங்கேதான் தங்கியிருக்கப் போகிறாள்.. அவளுக்கு வேண்டியதைக் கேட்டு பரிமாறு.."

விருந்தோம்பலில் நர்மதா காட்டிய கவனத்தைக் கண்டு மாலினியின் மனதில் அவள் மேல் ஒரு மரியாதை உதித்தது…

எதையும் அவள் அவளாகப் பேசுவதையும் ஆணையிடும்போது அவளின் குரலில் தொனிக்கும் கம்பீரத்தையும் அவளின் கண்ணசைவில் பெற்ற பிள்ளைகளும் வேலையாள்களும் பணிந்து அவள் சொன்ன வேலைகளைச் செய்து முடிப்பதையும் பார்க்கும் போது அவள் உண்மையிலேயே ஒரு மகாராணிக்கு உரிய அனைத்து தன்மைகளையும் பெற்றிருப்பது மாலினிக்கு தெளிவாகப் புரிந்தது…

## 11

**நீயிருக்கும் திசையில்…**

**என் நினைவிருக்கும் நிலையை…**

**என்னவென்று நான் சொல்ல..?**

பசியின் வேகத்தில்.. தன் முன் வைக்கப்பட்ட பதார்த்தங்களை மின்னல் வேகத்தில் காலி செய்தாள் மாலினி.. ஒருவழியாய் பசி அடங்கியதும்தான் தலை நிமிர்ந்து மற்றவர்களைப் பார்த்தாள்…

நர்மதா அப்போதும் கருணாகரனிடம் எதையோ வினவிக் கொண்டிருக்க.. அவன் தாய்க்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான். சசிரேகா குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.. தினகரன் மட்டும் பார்வையை விலக்காமல் மாலினியைப் பார்த்துக்

கொண்டிருந்தான்.. அவன் விழிகளில் தெரிந்த மயக்கம் மாலினியை சங்கடத்தில் ஆழ்த்தியது...

"நீங்க இன்ஜினீயராமே.." அவன் வினவினான்...

"ஆமாம்.. மெக்கானிக்கல் இன்ஜினீயர்..."

"ஆச்சுவலா.. சென்னையில் இருக்கிறவங்க கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங்தான் படிப்பாங்க... ஏதோவது ஒரு ஐடி கம்பெனியில் சாஃப்ட்வேர் இன்ஜினீயராக நுழைந்து விடுவாங்க.. ஆனால், நீங்கள் இதிலும் வித்தியாசமாய் இருக்கீங்க..."

'வேறு எதிலே நான் வித்தியாசமாக இருக்கிறேன்..' என்று யோசித்தவாறு தினகரனைப் பார்த்தாள் மாலினி...

"எனக்கு இந்த கோர்ஸ்தான் பிடித்திருந்தது..."

"ஊஹூம்.. பிடித்ததை செய்யவும் ஒரு மன திடம் இருக்க வேண்டும்.. அது உங்களிடம் இருக்கிறது..."

'இன்ஜினீயரிங் கோர்ஸில் பிடித்த கோர்ஸை படித்ததற்கு இவன் ஏன் ஜான்ஸி ராணி லட்சுமிபாயின் ரேன்ஜிற்கு என்னை உயர்த்தி பில்டப் கொடுக்கிறான். இவன் பேசுவது இவனுக்கே ஓவராய் தெரியவில்லையா..'

தலையை நிமிர்த்தியதால் இப்படி ஒரு பேச்சுவார்த்தையைச் சந்திக்க வேண்டுமென்று முன்பே தெரிந்திருந்தால்.. பேசாமல் தலையை நிமிர்த்தாமலேயே சாப்பாட்டை முடித்திருக்கலாமே என்று தாமதமாய் ஞானோதயம் வந்தது மாலினிக்கு...

"என்ன மாலினி.. பதிலைக் காணோம்..."

"யோசித்துக் கொண்டிருக்கிறேன்..."

"எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசித்துக் கொண்டிருக்கிறீங்க..?"

"உங்களுக்குச் சொல்வதற்கான பதிலைப் பிடிக்கத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்..?"

தலை நிமிர்த்தாமல் மீண்டும் சாப்பாட்டில் கவனமாகி விட்ட மாலினி கூறிய பதிலைக் கேட்டு தினகரன் ரசித்து சிரித்தான்..

"இவ்வளவு இன்ட்ரஸ்டிங்காய் பேசுவீங்கன்னு எனக்குத் தெரியாது..."

'நீயும் இப்படி ரம்பம் போடுவாய்னு எனக்கும் தெரியாது...'

"உங்களுடன் பேசிக் கொண்டிருப்பது ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது..."

'எனக்கு தலை வேதனையாய் இருக்கிறது...'

"பை தி வே.. மாலினி.. நாளைக்கு நீங்கள் வேலையில் ஜாயின் பண்ண வேண்டுமில்லையா..."

'பின்னே.. வேண்டாமென்றா சொல்வேன்.. வேறு எதற்கு சிங்கார சென்னையை விட்டுவிட்டு இந்த மார்த்தாண்டத்திற்கு வந்து இறங்கியிருக்கிறேன் என்று நினைத்தாய்... நீ கடலை போடுவதை சகித்துக் கொள்வதற்கா..?'

மனதிற்குள் எரிச்சலுடன் கேட்டுக் கொண்ட மாலினி.. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருக்க முடியாது என்பதால் தலைநிமிர்ந்து பதில் சொன்னாள்..

"ஆமாம்..."

"நானே உங்களை டிராப் பண்ணி விடுகிறேன்..."

'இது என்ன புது வம்பாக இருக்கிறது...' என்ற நினைவுடன் மாலினி, நர்மதாவை நோக்க.. அவள் முகத்தில் எந்தவித உணர்வையும் பிரதிபலிக்காமல் மகனைப் பார்த்துச் சொன்னாள்.

"தினா.. மாலினிக்கு கார் அனுப்புவது என் பொறுப்பு.. உனக்கு இதைவிட முக்கியமானதாய் ஆயிரம் பொறுப்புகள் இருக்கின்றன.. நீ அதைக்கவனி. நான் இதைக் கவனித்துக் கொள்கிறேன்..."

"இது அநியாயம் அம்மா..."

"எது அநியாயம்..."

"பொறுப்பில்லாமல் இருக்கிறேனென்று நீங்கள் தானே அடிக்கடி சொல்வீங்க..."

"இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்..."

"அதனால் பொறுப்பாக ஒரு வேலையைச் செய்ய நினைத்தால் அதற்கு தடை போடுகிறீங்களே..."

"இதைச் செய்யத்தான் பரந்தாமனை நாம் வேலைக்கு வைத்திருக்கிறோம்..."

"இட்ஸ் ஓகே..."

தினகரன் தோளைக் குலுக்கிக் கொண்டு எழுந்து சென்றுவிட்டான்..

"நீங்கள் சொன்னது போலவே செய்து விடுகிறேன் அம்மா..."

"கவனம் கருணா.. எதையும் பிரபாவிடம் கலந்து விட்டுச் செய். அதுதான் உனக்கு நல்லது..."

"இதை நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டுமா..? எனக்கு அது தெரியாதா..? அண்ணனிடம் நேற்றே இதைப் பற்றிப் பேசிவிட்டேன்..."

கருணாகரன் எழுந்து கைகழுவச் சென்றுவிட.. அவசரமாய் அவனைப் பின்தொடர்ந்தாள் சசிரேகா...

சாப்பாட்டு அறையில் நர்மதாவுடன் தனித்து விடப்பட்ட மாலினி.. பெரியவளிடம் என்ன பேசுவது என்று அறியாத சங்கடத்துடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்..

நர்மதாவின் பார்வை தன் மேல் கூர்மையுடன் படிவதை உணர்ந்தவளின் நெற்றியில் முடிச்சு விழுந்தது..

'இந்தம்மா.. ஏன் என்னை இப்படிப் பார்த்து வைக்கிறாங்க.. இந்நேரம் வரை இவங்க மகன் என்னை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்.. இப்ப இவங்க வேறு தினுசாய் பார்த்து வைக்கிறாங்க.. ஆனால், இவங்க மகனின் பார்வைக்கு

அர்த்தம்... சைட் அடிப்பது என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவங்க பார்வைக்குத்தான் என்ன அர்த்தமுன்னு விளங்கித் தொலைக்க மாட்டேங்குது...'

நர்மதாவின் முகம் கண்டிப்புக்கு மாறியது. அவள் மாலினியின் முகத்தைப் பார்த்தபடி...

"தினா.. சிறுவயதிலிருந்தே செல்லமாக வளர்ந்தவன்.." என்று கூறினாள்..

'இதையேன் என்னிடம் சொல்கிறாங்க...' என்ற நினைவுடன்.. மரியாதைக்காக...

"அப்படியா அத்தை..." என்றாள் மாலினி...

"அவன் உன்னிடம் மட்டுமில்லை... எல்லோரிடமும் சகஜமாகத்தான் பேசிப் பழகுவான்.."

"அப்படியா..."

"பிரபாவுக்கும் கருணாவிற்கும் யாரிடம் எந்த அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற லிமிட் தெரியும். ஆனால், தினாவுக்கு அது தெரியாது.."

"அப்படியா..."

"கருணாவின் கல்யாண விஷயத்தில் எனக்கு துளிக்கூட விருப்பமில்லை. ஆனால், பிரபா பிடிவாதமாக இருந்தான்.."

"அப்படியா..."

"கருணாவின் காதல்தான் இந்தக் குடும்பத்தில்... முதலும் முடிவாகவும் இருக்க வேண்டும்னு நான் நினைக்கிறேன்..."

இப்போது மாலினி 'அப்படியா..' என்று சொல்ல வில்லை. நர்மதா சொல்ல வருவது என்ன என்று அவளுக்கு விளங்கிவிட்டது..

'இந்தம்மாவிற்கு இருக்கும் நினைவைப் பாரேன். சசியின் நிலையைப் பார்த்த பின்னும் இந்த

வீட்டிற்கு மருமகளாய் வர எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. மனதில் இருப்பதை வாய்விட்டுப் பேச

முடியாத வாழ்க்கையெல்லாம் ஓர் வாழ்க்கையா.. இப்படியொரு வாழ்க்கை கோடி ரூபாய்களை கொட்டிக் கொடுத்தாலும் எனக்கு வேண்டவே வேண்டாம்...'

ஆனால், இதை மனதில் மட்டும் நினைத்துப் பயனில்லையே.. வாய்விட்டு நர்மதாவிடம் சொல்லியாக வேண்டுமே. அதை எப்படிச் சொல்வது என்ற யோசனையுடன் மாலினி நர்மதாவைப் பார்த்தாள்...

"உண்மையில் அத்தை.. எனக்கு உங்கள் கருத்தில் உடன்பாடு இருக்கிறது..."

"என்ன சொல்கிறாய்.."

"இந்தக் காதல்.. கத்தரிக்காய் எல்லாம் டேன்ஜரான சமாசாரம்.. ஆயிரம்தான் சொல்லுங்கள்.. அப்பா.. அம்மா பார்த்து செய்து வைக்கும் கல்யாணத்திற்கு ஈடாகுமா... சசியின் விஷயத்தில் நீங்கள் பெருந்தன்மையுடன் அவளை ஏற்றுக் கொண்டதால் அவளது காதல் பிழைத்தது. இல்லா விட்டால்.. அவள் நிலைமை என்னவாகியிருக்கும்..?"

"இது உன் பெரியப்பாவின் மகளுக்கு நினைவில் இருப்பது போல் தெரியவில்லை. நீயாவது சொல்லு அப்போதாவது அவளது புத்தியில் இது ஏறுகிறதா என்று பார்ப்போம்..."

"அதற்கென்ன அத்தை.. சொல்லிவிட்டால் போச்சு இதைவிட எனக்கு வேறென்ன முக்கியமான வேலை இருக்கப் போகிறது..."

"தினா..?"

"நான் சென்னையில் பிறந்து வளர்ந்தவள் அத்தை.. அவரைப் போல் தினமும் பலரைச் சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.. அவாய்ட் பண்ண எனக்குத் தெரியும்..."

"நீ புத்திசாலிப் பெண்..."

"தேங்க் யூ..."

கை கழுவ எழுந்து கொண்ட மாலினியின் மனதில் சீக்கிரமாய் ஏதாவது ஒரு லேடீஸ் ஹாஸ்டலில் இடம்

பார்த்துக் கொண்டு அந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகத் தோன்றியது...

## 12

**உறங்காத என் விழிகள்..**

**உனைத் தேடும் தவிப்பை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

அறைக்கதவு படபடவென்று தட்டப்பட்டதும் உறக்கத்திலிருந்து உலுக்கி விழித்தாள் மாலினி அருகிலிருந்த செல்போனை எடுத்து மணி பார்த்தாள். மாலை ஆறு என்றது..

'இவ்வளவு நேரமாகவா தூங்கிவிட்டேன்...'

பதற்றத்துடன் எழுந்து சென்று கதவைத் திறந்தாள். சசிரேகா நின்றிருந்தாள்.. அவள் பின்னாலேயே காபி-டிபன் தட்டுக்களுடன் செந்தாமரை தென்பட்டாள்..

"என்ன மாலினி.. இப்படித் தூங்கிவிட்டாய்..?"

"நேற்று சாயந்திரம் பஸ்ஸில் ஏறியது சசி.. உனக்கே தெரியும்.. பஸ் பிரயாணத்தில் எனக்குத் தூக்கம் வராது என்று.. விடிய விடிய விழித்திருந்தது உடம்பில் அயர்வை உண்டுபண்ணிவிட்டது..."

"அதற்காக மதியம்கூடச் சாப்பிட வராமல் தூங்குவாயா..?"

"ஆமாமில்ல.. காலையில் டிபன் சாப்பிட்டதும்.. ரூமில் வந்து படுத்ததுதான் தெரியும்..."

"மதியம் நான் வந்து பலமுறை கூப்பிட்டுப் பார்த்தேன்.. நீ கதவையே திறக்கவில்லை..."

"ஸாரி... ஸாரி..."

அதற்கு மேலும் எதையோ பேசப் போன சசிரேகா.. செந்தாமரையைப் பார்த்து அமைதியாகி விட்டாள்...

"உன் பெயர் செந்தாமரைதானே..."

மாலினி வினவவும்.. மகா சந்தோஷமாய் அவள் "ஆமாங்கம்மா.." என்றாள்..

"ஏன்.. கை வலிக்க பிளேட்களை வைத்துக் கொண்டிருக்கிறாய்.. இங்கே கொடு..."

"இருக்கட்டும்மா..."

"இதோ பார் செந்தாமரை.. நானே தூக்கத்தில் மதியம் சாப்பிடாமல் இருந்துவிட்டேன்.. இதில் டிபன், காபியை எனக்குக் கொடுக்காமல் இருக்கட்டும்னு நீ வைத்துக் கொள்வது நியாயமா..? எனக்குப் பசி தாங்காது செந்தாமரை..."

"அம்மா..."

செந்தாமரை அடக்க முடியாமல் சிரித்துவிட... இந்த முறை பயமில்லாமல் சசிரேகாவும் கூடச் சேர்ந்து சிரித்தாள்...

"இவள் இப்படித்தான் செந்தாமரை.. சிரிக்கச் சிரிக்க பேசி வைப்பாள்.. இவள் பேச்சைக் கேட்டு நாம்தான் வயிறு வலிக்கச் சிரிப்போம். இவள் ஒன்றுமே நடக்காதது போல நம்மைப் பார்த்துக் கொண்டு நிற்பாள்..."

"ஆமாம்மா.. உங்களைப் போல உங்கள் தங்கை அமைதியான சுபாவமில்லை.. கெட்டிக்காரங்களாக இருக்கிறாங்க..."

செந்தாமரை காபி, டிபன் தட்டுக்களைக் கொடுத்து விட்டு சிரித்துக்கொண்டே படியிறங்கிப் போய்விட.. மாலினி.. சசிரேகாவைப் பார்த்து குறும்புடன் வினவினாள்...

"ஏன் சசி... இப்ப உன் வீட்டு வேலைக்காரப் பெண் என்ன சொல்லிவிட்டாள்னு இப்படி மகிழ்ந்து போய் சிரித்துக் கொண்டு நிற்கிறாய்.. அவள் என்னைக் கெட்டிக்காரின்னு சொல்லிவிட்டுப் போகிறாள்.."

"அதற்கு என்னடி..?"

"போடி மக்கு.. நீ கெட்டிக்காரியில்லைன்னு மறைமுகமாய் சொல்லிவிட்டுப் போகிறாள்..."

"அவள் பாவம் யதார்த்தமாய் பேசினாள்.. நீ உடனே அதிலே திரியைப் போட்டு வெடியைப் பத்த வைக்காதே.."

"ஊஹூம்.. நீ தேறவே மாட்டாய்..."

"நான் தேறுவது இருக்கட்டும்.. உனக்கு இப்போ காபி, டிபன் வேண்டுமா.. வேண்டாமா..?"

"அடிப்பாவி... செந்தாமரையிடமிருந்து இந்தத் தட்டுக்களை கைப்பற்றியது நீயே காலி செய்யும் நோக்கத்தில் தானா... நீ இப்படிச் செய்தால்.. நான் எப்படித் தேறுவது..?"

"தெரியுதில்ல.. என்னைத் தேற்றுவதை விட்டு விட்டு.. நீ தேறுகிற வழியைப் பாரு... போய் முகம் கழுவி விட்டு வா..."

"அதற்கும்.. டிபன், காபி சாப்பிடுவதற்கும் என்ன சம்பந்தம்..?"

சசிரேகாவுடன் ஊர்க்கதையைப் பேசியபடி டிபன் தட்டை நொடிப்பொழுதில் காலி செய்த மாலினி, காபியைக் குடித்து முடித்ததும் தெம்பாக நிமிர்ந்தாள்.. சசிரேகாவைப் பார்த்தாள்..

"இப்போது சொல்லு... இனிமேல் நாம் என்ன செய்யலாம்..?"

"முகம் கழுவி.. தலை வாரிக்கொண்டு வா.. தோட்டத்துப் பக்கமாய் போகலாம்.."

"இது பேச்சு.. இதோ.. ஒரு செகண்டில் வருகிறேன் பார்..."

தோட்டத்து அலங்கார வளைவுகளை ரசித்தபடி இருவரும் பேசிக்கொண்டே சுற்றி வந்தார்கள்.. முயல் குட்டிகள் ஓட, மாலினி அவற்றைத் துரத்திக் கொண்டு பின்னால் ஓட ஆரம்பித்தாள்.. அவள் கைகளில் அகப்பட்டுக் கொள்ளாமல் அவை பூச்செடிகளின் அடியில் பதுங்கிவிட.. உற்சாகமாய் சிரித்தபடி நிமிர்ந்தாள்..

"வாயில்லா பிராணிகளின் பயத்தைக் கண்டு இவ்வளவு சந்தோஷமா..?"

அவளது முதுகிற்குப் பின்னாலிருந்து வந்த கோபக் குரலைக் கேட்டு அதிர்ந்து திரும்பினாள்.. அப்படியொரு கோபக் குரலில் அதற்கு முன்னர் அவளிடம் யாருமே பேசியது இல்லை..

அவளைக் கடிந்து கொண்டவனின் முகத்தில் கடுமை நிலவியது.. இரு புருவங்களும் முடிச்சிட.. கண்கள் தீட்சண்யமாய் மின்ன.. மாலினியை முறைத்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்..

முதல் பார்வையிலேயே அவனது முகக் கடுமையையும் தாண்டி அவனது உயரமான கம்பீரமான தோற்றம் மாலினியின் மனதில் பதிந்துவிட்டது..

'வாவ்.. இவன்தான் எப்படியொரு மேன்லி ஹேண்ட்சம்மாக இருக்கிறான்...'

அவனது ஆண்மை ததும்பும் தோற்றத்தையும் அலையலையாய் படியாமல் சிலுப்பிக் கொண்டு நின்ற கேசத்தையும் மனதிற்குள் ரசித்தபடி பார்த்த மாலினி...

"அந்த வாயில்லா பிராணிகள் பயந்து போய்விட்டதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..

அவை வந்து உங்களிடம் சொல்லினவா..?" என்று வினவினாள்..

எதிரே நின்றிருந்தவனின் கண்களில் சிறு மின்னல் வெட்டியது.. அவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.. அவனது அந்த எடை போடும் பார்வை.. ஏனோ மாலினியின் மனதிற்கு உற்சாகத்தை தந்தது...

'பேசாமல்.. இவன் முன்னால்... பூனை நடை நடந்து காண்பித்து விடலாமா..' என்று எண்ணியவள்.. சசிரேகாவின் அரண்ட முகத்தைக் கண்டு அந்த நினைவை அரைமனதாய் கைவிட்டாள்...

'பாவம்.. போனால் போகிறதென்று இருக்க இடம் கொடுத்திருக்கிறாள்.. பிழைத்துப் போகட்டும்...'

சசிரேகாவின் முகத்திற்காக அவள் அமைதியைக் கடைப்பிடித்துக் கொண்டிருப்பதை உணராதவனாக அவன்...

"பயத்தைச் சொல்ல அவைகளுக்கு வாயில்லை என்ற தைரியமா உனக்கு..?" என்று பதிலுக்கு வினவினான்...

'அட.. கேள்விக்கு கேள்வியைத்தான் இவன் பதிலாகத் தருவானா.. என்ன ஒரு தெனாவெட்டு...'

"அவைகளின் உற்சாகத்தைச் சொல்லவும் அவை களுக்கு வாயில்லை என்ற பரிதாபம்தான் எனக்கு.."

மீண்டும் அவனது கண்களில் மின்னல் தோன்றி மறைந்தது.. கண்களில் தோன்றும் சுவாரஸ்யத்தை கவனத்துடன் அவன் மறைத்துக் கொள்வதை மாலினி கண்டு கொண்டாள்...

'ம்ஹூம்.. இலகுவாக பேசக்கூட மாட்டானாம்.. ஏனாம்.. என்னைப் பார்த்தால் இவனுக்கு சமதையாய் பேசத் தோன்றாதா..?'

"துரத்துகிறவர்களைக் கண்டால் ஓடுகிறவர்களுக்கு உற்சாகம் எப்படி வரும்..?"

"ஓடிப்பிடித்து விளையாடும் விளையாட்டைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதே இல்லையா..?"

"என்னைப் பார்த்தால் விளையாட்டுப் பையன் போல உனக்குத் தோன்றுகிறதா..?"

"என்ன சார் இது.. விளையாட்டுப் பையன்கள் தான் விளையாட வேண்டுமா? அப்படியென்றால்.. டோனி.. சச்சின்.. யுவராஜ்சிங்.. மகேஷ் பூபதி.. செஸ் ஆனந்த்.. இவர்கள் எல்லோருமே உங்கள் பார்வையில் விளையாட்டுப் பையன்கள்தானா..?"

"கெட்டிக்காரத்தனமாய் பேசுவதாக நினைப்பா..?"

"என் மனதில் எந்த நினைவும் இல்லை.. உங்கள் மனதில்தான் என்னைப் பார்த்தால் முயல்குட்டிகளைத் துரத்தும் கொடூரமானவள் என்கிற நினைவு இருக்கிறது.."

"பயத்தில் ஓடும் முயல்குட்டிகளின் கண்களை ஒரு தரம் பார்... அப்போது உனக்கு அவைகளைத் துரத்தத் தோன்றாது..."

"பாவம்.. அதன் பார்வையே அப்படித்தான் சார்.. மருண்ட மான் விழிப் பார்வை என்பார்கள்.. அதனால்.. மானைப் பார்த்துவிட்டால் தொட்டு விளையாட ஆசை வராமல் போகுமா..?"

"மானுடன் விளையாட ஆசைப்பட்ட சீதையின் கதி என்னவாகிப் போனது என்பதை நினைவில் வை.. பெண்கள் தேவையில்லாத பொருள்களின் மீது ஆசைப்படவும் கூடாது.. தேவையில்லாத விளையாட்டுகளை விளையாடவும் கூடாது.. தேவையில்லாத பேச்சுகளை பேசவும் கூடாது.. மைண்ட் இட்.."

மாலினி துணுக்குற்றாள்.. எதற்கு எதை இணை கூட்டிப் பேசுகிறான் இவன்... அவள் என்ன சொல்லிவிட்டாள் என்று இவ்வளவு கடினமான வார்த்தைகளை அள்ளி அவள் மேல் வீசுகிறான்.. இவன் யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்.. முன்பின் தெரியாத பெண்ணிடம் முதல் அறிமுகத்தில் அக்கினிக் கங்குகளைப் போன்ற வார்த்தைகளை அள்ளிவீச வேண்டிய அவசியம் என்ன..?

மாலினி சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள்.. சசிரேகாவின் கெஞ்சல் கலந்த பார்வையை லட்சியம் செய்யாதவளாக அவன் முகம் பார்த்து சண்டைக்கு போய்விட்டாள்..

"ஏன் சார்.. நானும் பார்க்கிறேன்.. அது என்ன.. உங்கள் ஆண்குலம் எல்லாம் வாயைத் திறந்தால்.. சீதை மானின்மேல் ஆசைப்பட்டாள்.. சீதை கோட்டைத் தாண்டினாள்.. அதனால் அவள் கதி என்னவாச்சுன்னு

பெண்குலத்திற்கு அட்வைஸ் பண்ணக் கிளம்பி விடுகிறீங்க..?"

"உள்ளதைத்தானே சொல்கிறோம்.."

"உங்களுக்கு வேண்டியதை மட்டும் சொல்கிறீங்க.."

"புரியவில்லை..."

"உங்களுக்கா புரியாது.. எல்லாம் நடிப்பு..."

"நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் தெரியுமா..?"

"ஒரு ஆணாதிக்க மனப்பான்மை படைத்த மனிதரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்னு தெரியது..."

"என்னைப் பார்த்து இப்படிப் பேச உனக்கு எவ்வளவு தைரியம்..?"

"நீங்கள் என்ன... சிங்கம்.. புலி... கரடியா.. என்னைப் போல் நீங்களும் மனித ஜீவன்தானே.. உங்களிடம்

பேச எனக்கு என்ன தைரியம் வேண்டிக்கிடக்கு..?"

"நான் யார் என்று தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்.."

"நீங்கள் யாராக இருந்தால் எனக்கென்ன சார்.. பேச்சு என்று வந்துவிட்டால்.. அதற்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.. பதில் சொல்லாமலிருக்க என்னால் முடியாது..."

கோபத்தில் முகம் சிவக்க.. வரிந்து கட்டிக்கொண்டு பேசத் தயாராக நின்றவளை சிறு வியப்புடன்

பார்த்தான் அவன்.. அவன் முகத்தில் எதுவோ தோன்றி மறைந்தது..

**யாரோவென்று உனைப் பார்த்தபோது**
**நீயெனக்கு அனைத்துமாகி போன கதையை**
**என்னவென்று நான் சொல்ல..?**

"சரி சொல்லு..."

உத்தரவிடும் பாவனையில் அவன் சொல்ல... ரோஷத்துடன் மாலினி அவனை உறுத்துப் பார்த்தாள்...

"சீதை யார் சார்..?"

"அதையும் நீயே சொல்லு.. எனக்கெதற்கு வம்பு..?"

"அடேங்கப்பா.. நீங்கள் வம்புக்குப் பயப்படுகிறவர் தான்..."

"அதை நீ சொல்கிறாயா..? வெரிகுட்..."

"உங்களைப் பற்றிய பேச்சு இப்போது எனக்கு எதற்கு..?"

"வேறு எப்போது உனக்கு வேண்டும்..?"

"எப்போதுமே எனக்கு வேண்டாம்.. இப்போது நமக்குள் இருப்பது சீதையைப் பற்றிய பேச்சுத்தான்..."

"அது எனக்கு நினைவில் இருக்கிறது..."

"எனக்கும் மறந்துவிடவில்லை.. சீதை யார் சார்.. தெருவில் போகும் சாதாரணப் பெண்ணா..?"

"இல்லைதான்..."

"அவள் ஜனகனின் மகள்.. மிதிலையின் இளவரசி.. ஆனானப்பட்ட.. சிரிப்பதற்கு கூலி கேட்கும் ராமனையே தன் கண்ணசைவில் கட்டிப் போட்ட காதலி..."

"பொறு.. பொறு.. ராமன் சிரிப்பதற்கு கூலி கேட்பார்னு யார் உனக்குச் சொன்னது..?"

"வேறு யார் வந்து சொல்வார்கள்..? எல்லாம் நம்ம வால்மீகியும் கம்பரும்தான் சொல்கிறார்கள்.."

என்னவோ கம்பரும் வால்மீகியும் அவளின் பக்கத்து வீட்டுக்காரர்கள் போல சாதாரணமாகப் பேசிய மாலினியைப் பார்த்தவனின் இதழ்கள் லேசாக விரிந்தன.. சசிரேகாவோ சிரிப்பை அடக்கிக் கொள்ள படாத பாடுபட்டாள்...

"அப்படியா... ம்ம்.. மேலே சொல்லு..?"

"எதைப் பற்றிச் சொல்ல.. சீதையின் சிறப்பைப் பற்றியா.. ராமனின் சிரிப்பைப் பற்றியா..?"

"முதலில் ராமனின் சிரிப்பைப் பற்றிச் சொல்லி விடேன்..."

"ஏன் சார்.. எப்போது பார்த்தாலும் கடமை.. கண்ணியம்.. கட்டுப்பாடு என்று எம்.ஜி.ஆர். ரேன்ஜிற்கு வசனம் பேசிக் கொண்டு... வில்லைத் தூக்கி தோளில் மாட்டிக் கொண்டு அம்பை விட ரெடியாக இருப்பவருக்கு சிரிப்பு எப்படி சார் வரும்.. இப்போது உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள்.. முயல்குட்டிகளுடன் நான் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தேன்.. அதைப் பார்த்து உங்களுக்குச் சிரிப்பு வந்ததா.. வரவில்லையே.. அது ஏன்..?"

"ஏன்...?"

"உங்களை மாதிரி ஆண்களுக்கு எல்லாம் அது வராது சார்..."

'கடவுளே...' என்று மனதிற்குள் தெய்வத்தை துணைக்கு அழைத்தபடி சசிரேகா, மாலினியை கலவரமாக பார்த்தாள்.. உன் பார்வையைக் கண்டுகொள்வேனா என்று பிடிவாதமாக சசிரேகாவின் முகத்தைப் பார்க்காமல் சட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தவளைப் பார்த்து உணர்ச்சிகளைக் காட்டாத குரலில் வினவினான் அவன்..

"ஏன் அப்படி..?"

"ஏனென்றால்.. நீங்கள் எல்லோரும் தீவிரமாய் சிந்திப்பவர்கள்.. உங்களுக்கு முயல் உற்சாகமாய்

ஓடுவதாகத் தோன்றாது.. பயத்தில் ஓடுவதாகத்தான் தோன்றும்..."

"ஓஹோ... ராமராஜ்ஜியத்தில் குற்றங்களே கிடையாதும்மா.. அதற்குப் பின்னால் ஆயிரம் ராஜ்ஜியங்கள் வந்திருக்கின்றன.. அதற்கு முன்னாலும் ஆயிரம் ராஜ்ஜியங்கள் இருந்திருக்கின்றன.. ஆனால், புராண காலம் தொட்டு இன்றுவரை... ராமராஜ்ஜியத்திற்கு இணையான ஆட்சி இதுவரை நடந்ததே இல்லை..."

"இருந்து என்ன சார் பிரயோஜனம்.. கிருஷ்ணனை நினைத்தால் மனதில் தோன்றும் புத்துணர்வு ராமனை நினைத்தால் வருகிறதா.. கிருஷ்ணன் ஜாலியான கேரக்டர் சார்..."

"உனக்கு ஜாலியான ஆண்களைத்தான் பிடிக்கும் போல..."

அவன் ஒரு தினுசான குரலில் வினவினான்.. அதற்கு அவள் சொல்லும் பதிலால் பிற்காலத்தில் எத்தனை மனவேதனைகளைச் சந்திக்கப் போகிறாள் என்பதை அறியாதவளாக.. அவனை மட்டம் தட்டிவிடும் வேகத்துடன் உற்சாகமாய் மாலினி பதில் சொன்னாள்...

"ஆமாம் சார்.. அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது...?"

"பார்த்தாலே தெரிகிறது.."

"இப்போது சீதையின் விஷயத்திற்கு வருவோம்.."

"வா.."

"அப்பேர்ப்பட்ட ராமனையே காதலிக்க வைத்த பேரழகி அவள்.. ராமனை மணந்தவள்.. ராமனின் மனைவி.. அயோத்தியின் ராணி.. தசரத சக்கரவர்த்தியின் மருமகள்.. அப்பேர்ப்பட்ட ராஜகுல அரசி.. கணவன் அனைத்தையும் துறந்து காட்டிற்கு போகிறானென்று போனபோது தானும் பின்னாலேயே போனாளே.. அதை நீங்கள் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா...?"

"நினைத்துப் பார்த்திருக்கிறேன்..."

"என்னவென்று..."

"இந்த மகராசி பேசாமல் அரண்மனையிலேயே அடங்கி உட்கார்ந்திருந்தால் ராமன் நிம்மதியாய் வனவாசம் முடித்துவிட்டு திரும்பி வந்திருப்பார் என்று நினைத்துப் பார்த்திருக்கிறேன்..."

மாலினி பல்லைக் கடித்துக் கொண்டு அவனை முறைத்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தினான்...

"அதுதானே பார்த்தேன்.. உங்கள் நினைப்பு வேறெப்படிப் போகும்? சார்.. ராமனின் மேல் அவளுக்கிருந்த காதல்.. அவளை எல்லாவற்றையும் துறந்து அவன் பின்னால் போகச் செய்தது.. இன்றைக்கும் ராமன் இக்குமிடம்தான் சீதைக்கு அயோத்தியென்று எல்லோரும் சொல்கிறாங்க.."

"அப்படியா.."

"இதெல்லாம் வசதியாய் உங்களுக்கு நினைவுக்கு வராமல் போய்விடுமே.. அதை விடுங்க.. ராமனைப் பிரிந்திருக்க முடியாத சீதையின் காதல்.. உங்கள் கவனத்தில் படவில்லையா..?"

"அதைவிட.. கடமையாற்றப் போன கணவனுக்காக பிரிவை ஏற்றுக்கொண்டு காத்திருந்த ஊர்மிளையின் துயரம்தான் என் கவனத்தில் படுகிறது.."

"ஊர்மிளையும் பெண் குலம்தான் சார் அதை நீங்க மறந்து விடாதீங்க.."

"மறக்கவில்லைம்மா.. நீ கதையைச் சொல்லி முடி..."

"காட்டுக்குப் போன சீதை.. பட்டு வேண்டும் என்று ஆசைப்பட்டாளா.. இல்லை வைரம் வேண்டும் என்று ஆசைப்பட்டாளா.. சும்மா.. காட்டுக்குள் அலைந்து கொண்டு இருந்த மான்குட்டியின் மேல்தானே ஆசைப் பட்டாள்.. அது ஒரு பெரிய தப்பா..?"

"உன்னிடம் போய் அது தப்பு என்று நான் சொல்லிவிட முடியுமா..?"

"ஆஹா.. நீங்கள் ரொம்ப பயந்தவர்தான்.. எல்லோரையும் பயமுறுத்தப் பிறந்தவர் நீங்கள்.. சரி, சார்.. சீதை தான் மானின் மேல் ஆசைப்பட்டாள் என்றால் இந்த ராமன் என்ன செய்திருக்க வேண்டும்..?"

"என்ன செய்திருக்க வேண்டும்..?"

"என்னால் அதைப் பிடித்துத் தர முடியாது.. நீ பேசாமல் இரு'ன்னு சொல்லியிருக்க வேண்டும்..

அதை விட்டுவிட்டு பெண்டாட்டி கேட்டுவிட்டாள் என்றவுடன் வில்லைத் தூக்கிக் கொண்டு மானின் பின்னால் போய் விடுவதா...?"

"அதுதான் ஆண்மை, தன்னுடையவள் எதைக் கேட்டாலும் அதைத் தருவதுதான் ஆண்மையின் அடையாளம்..."

"என்னவோ போங்க.. லட்சுமணன் போகும்போது கோட்டைக் கிழித்து வைத்துவிட்டுப் போனார்.. சீதை அதை தாண்டிவிட்டாள்னு குற்றப்பத்திரிகை வாசிக்கிறீங்களே.. சீதை என்ன பாண்டி ஆடவா அந்தக் கோட்டைத் தாண்டினாள்..?"

சசிரேகா இப்போது அடக்க முடியாமல் சிரித்துவிட.. அவனின் பார்வை.. மாலினியை விட்டுவிட்டு சசிரேகாவின் மேல் தாவியது.. உடனே ஸ்விட்ச் போட்டாற்போல் சசிரேகாவின் சிரிப்பு நின்றுவிட்டது...

"இல்லைதான்.." அவன் மீண்டும் மாலினியைப் பார்த்து பதில் கூறினான்...

"உங்களைப் போல் ஒரு ஆண்தான் வந்து அவளைக் கோட்டைத் தாண்டவைத்தான்..."

"என்னைப் போல் ஒருவன்..?"

"ஆமாம்..."

"எவன்.. அவன்...?"

"அவன்தான் சார்.. ராவணன்..."

இப்போது சசிரேகாவின் சிரித்த முகம் மாறி வெளிறிவிட்டது.. அவள் பயத்துடன் மாலினியை அடக்க முயன்றாள்...

"சும்மா இரு மாலினி..."

"அதெல்லாம் சும்மா இருக்க முடியாது.. பேச்சை ஆரம்பித்தால் அதை முடித்தே தீருவேன்..."

"விடேன் சசி.. அவள் பேசியே முடிக்கட்டும்.. நீ பேசும்மா..."

'இது எங்கே போய் முடியப் போகிறதோ..?' என்று உலகில் உள்ள அத்தனை கடவுள்களையும் உதவிக்கு அழைத்து கையைப் பிசைந்து கொண்டிருந்தாள் சசிரேகா...

"எங்கே விட்டேன்..?"

"ராவணனில் விட்டாய்.. ஏம்மா.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. எதை வைத்து ராவணனை என்னைப் போல் ஒருவன் என்று சொன்னாய்..?"

அப்போதுதான்.. ஏன் சசிரேகா அப்படியொரு அச்சப்பார்வையை பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது மாலினிக்கு..

"ஐயையோ சார்.. நீங்கள் அந்த அர்த்தத்தில் எடுத்துக் கொண்டீங்களா.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை சார்..."

"வேறு எந்த அர்த்தத்தில் சொன்னாய்..?"

"அவனும் ஆண்குலம்தானே.. அந்த அர்த்தத்தில் தான் சொன்னேன்.."

"ஓஹோ.. ம்ம்.. அப்புறம்..?"

"அந்த ராவணன் வந்து மாறுவேடத்தில் சாப்பாடு கேட்டான்.. பசிக்கு சாப்பாடு போடத்தானே சீதை கோட்டைத் தாண்டினாள்..?"

"ஆமாம்.. பாண்டி ஆடத் தாண்டவில்லைதான்..."

சசிரேகாவின் முகம் இப்போது தெளிந்துவிட்டது.. லேசான புன்னகையுடன் அவள் மாலினியைப் பார்த்தாள்.. அவள் முகத்தில் கடவுள் காப்பாற்றி விட்டாரென்ற நிம்மதி தெரிந்தது...

"அப்படியிருக்க, சீதையின் மேலேயே தப்பு சொல்லலாமா சார்.."

"சொல்லக்கூடாதுதான்.. ஏன் சசி.. இந்தப் பெண்தான் நம் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளியா..?"

அதுவரை அவன் யாரென்று தெரியாமலேயே பேசிக்கொண்டிருந்த மாலினி விழித்தாள்...

'நம் வீடா... இது என்ன.. 'நம் நாடு' என்பது போல இவன் 'நம் வீடு' என்கிறான்.. யார் இவன்..?'

"ஆமாம்.. பெரிய அத்தான்..." என்று சசிரேகா பதில் சொன்னதும், மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது...

அவள் பதறிப் போய் தன்னையுமறியாமல் மீண்டும் வாய் விட்டாள்...

"என்னது... பெரிய அத்தானா..? இவர்தான் அந்த 'ஹிட்லரா...'"

"ஹிட்லரா..?!" என்றபடி அவன் சசிரேகாவைப் பார்க்க.. அவள் பேயறைந்தது போன்ற முகத்துடன் மீண்டும் ஊரில் உள்ள கடவுள்களை எல்லாம் துணைக்கு அழைக்க ஆரம்பித்தாள்..

## 14

**உன்னோடு ஒருநாள்...**

**என்னுயிர் கலந்த நொடியை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"ஹிட்லரா..? நானா..? ம்ம்.. நீ ரொம்ப தைரியசாலி தான்..." அவன் நிதானமாக மாலினியை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அளவெடுத்து வைக்கும் பார்வை யொன்றைப் பார்த்து வைத்தான்...

"என்ன சார்.. பெண்பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளை பார்ப்பது போலவே என்னையும் பார்த்து வைக்கறிங்க.." என்று மாலினி அவனைப் பார்த்து கேட்டு வைத்தாள்...

"மாலினி.." சசிரேகா இப்போது அதட்டியே விட்டாள்...

ஆனால்.. மாலினியின் கேள்வியைக் கேட்ட பிரபாகரனின் கண்களில் ஒரு மின்னல்தான் வந்துபோனதே தவிர.. அவன் முகம் கோபத்தைக் காட்டவில்லை.. அதே சமயம் சிரிப்பையும் காட்டவில்லை..

"உன் சித்தப்பா மகள் பெரிய அறிவாளியாய் இருக்கிறாளே சசி.." அவன் அமர்த்தலாய் கூறவும்.. சசி கொஞ்சம் ஆசுவாசமானாள்..

"ஆமாம் அத்தான்..."

"ஆனால், இந்த அறிவுக்கடலை மார்த்தாண்டம் தாங்குமான்னுதான் தெரியவில்லை.." என்று அடுத்து அவன் கூறியதைக் கேட்டதும்.. சசிரேகாவின் முகத்தில் பயம் வந்துவிட்டது..

"நான் இவளிடம் சொல்லிவைக்கிறேன் அத்தான்.."

"என்ன சொல்வாய் சசி.. நீ சொல்லும் விவரங்களை வைத்து இவள்.. இன்னும் யார் யாருக்கு என்ன என்ன பட்டப் பெயரையெல்லாம் வைக்கப் போகிறாளோ.. தெரியவில்லை.. ஹிட்லர்! ஆமாம் மாலினி.." என்று சசிரேகா விடம் ஆரம்பித்து.. மாலினியிடம் கேள்வி கேட்டான் பிரபாகரன்..

அவள் 'என்ன' என்பது போல் பார்த்து வைக்க...

"பேச மாட்டாயா..?" என்று வேறு துணை கேள்வி கேட்டான்...

"ஏன் சார்.. இவ்வளவு நேரமும் என்னைப் பேச வைத்து வேடிக்கை பார்த்துவிட்டு இப்படி ஒரு கேள்வியைக் கேட்கறீங்களே.. இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா..?"

"இல்லை. பேச்சு மறந்துவிட்டதோன்னு நினைத்தேன்..."

'உன் வீட்டில் இன்னும் கொஞ்ச நாள் இருந்தால் கட்டாயம் மறந்துதான் போகும்..'

"என்ன பதிலைக் காணோம்..."

"நான் ஊமையில்லை சார்.. நீங்க கேட்க வந்ததை தாராளமாக கேளுங்க..."

"உன் பெயர் மாலினிதானே..."

'தேவைதான் எனக்கு..' என்று மனதிற்குள் நினைத்தபடி அவனை இமைக்காமல் பார்த்தாள் மாலினி..

அவளை வாயைத் திறக்கவிட்டால் எக்குத்தப்பாய் எதையாவது பேசி வைத்துவிடுவாள் என்று பயந்து போன சசிரேகா.. அவசரமாய் பதில் சொன்னாள்..

"ஆமாம் பெரிய அத்தான்.. இவள் பெயர் மாலினி தான்..."

"ஏன்.. உன் தங்கை வாய் திறந்து பேச மாட்டாளா..?"

இப்போதும் கேள்வியை சசிரேகாவிடம் கேட்டுக் கொண்டே பார்வையை மாலினியின் மேல் பாய்ச்சினான் பிரபாகரன்...

"எதற்கு சார் வம்பு..? நான் வாயைத் திறந்தால் அவ்வளவு சீக்கிரமாக மூட மாட்டேன்..."

"பரவாயில்லை.. உனக்கும் இது தெரிந்திருக்கிறது.."

"ஊருக்கே தெரியும் சார்.. அதனால் தானே உங்களிடம் அறிவுக்கடல்னு பட்டம் வாங்க வேண்டியிருக்கு.."

"ஹிட்லர் என்கிற பட்டத்தைவிட அறிவுக்கடல் என்கிற பட்டம் மட்டமாகப் போய்விடவில்லை..."

அவன்.. இவ்வளவு இலகுவாக.. விஷயத்தை விட்டு விட்டானே என்று சசிரேகா நிம்மதியாக உணர்ந்து கொண்டிருந்தபோது.. அவன் மீண்டும் மாலினியைப் பார்த்து..

"அது ஏன்.. எனக்குப் போய் ஹிட்லர் என்கிற பட்டப் பெயரை வைத்தாய்..?" என்று மீண்டும் கேட்டு வைத்தான்..

"அதைவிட பொருத்தமான வேறு பட்டப்பெயர் எனக்கு கிடைக்கவில்லை சார்.." மாலினி போலி மரியாதையோடு கூறினாள்...

சசிரேகாவிற்கு சற்று முன் கிடைத்த நிம்மதி பறந்தே போய்விட்டது.. உயிர் வந்து உயிர் போகும் இந்த நிலைமை மாறாதா என்று அவள் மனதிற்குள் ஏக்கப்பட ஆரம்பித்தாள்..

மாலினியின் பதிலைக் கேட்ட பிரபாகரனின் கண்களில் மீண்டும் மின்னல் வெட்டு வந்து போனது..

"ஓஹோ.. அதுசரி.. சார்.. சார்னு என்னைப் பார்த்துக் கூப்பிடுகிறாயே.. நீயென்ன.. என் ஆபீஸ் ஸ்டாஃபா..?"

"இல்லைதான்..."

"பின் ஏன் சார் போடுகிறாய்..?"

"வேறு என்ன போடுவது..?"

'எப்படித்தான் இவள் வாயை மூடவைப்பது..' என்று கடுமையாக யோசிக்கவே ஆரம்பித்து விட்டாள் சசிரேகா..

அந்த வீட்டில் பிரபாகரனுக்கு எதிராக நின்று பேச நர்மதாவே யோசிப்பாள்.. அப்படியே

பேச நேர்ந்தாலும்.. 'சரிப்பா.. சரிப்பா..' என்றுதான் மரியாதையுடன் பதில் கூறுவாள்.. அப்பேர்ப்பட்டவனிடம் கொஞ்சம்கூட பயமில்லாமல் மாலினி வாயடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு சசிரேகாவிற்கு கவலையாக இருந்தது...

ஆனால் பிரபாகரன்.. மாலினியின் பேச்சை இலகுவாக எதிர்கொண்டான்...

"என்ன போடுவதா..? ஏன்.. 'அத்தான்' போடுவது.." என்று அவன் சொல்லவும்.. சசிரேகாவிற்கு ஆச்சரியமாகப் போய்விட்டது...

'பெரிய அத்தானா.. இப்படிப் பேசுவது..?' என்று அவள் திறந்த வாயை மூடாமல்.. பிரபாகரனைப் பார்த்தாள்...

"அத்தான் என்று சொல்வதா..? யாரை..? உங்களையா..?" மாலினி.. கழுத்தைச் சாய்த்து பிரபாகரனை ஒரு மார்க்கமாய் பார்த்தாள்...

"ஏன்.. என்னை அத்தான் என்று கூப்பிட்டால் ஆகாதா..?"

"முன்பின் தெரியாதவங்களிடம் எல்லாம் நான் உறவுமுறை சொல்லிக் கூப்பிடுவது இல்லை..."

"நான் முன்பின் தெரியாதவன் இல்லையே..."

"அதுதானே.. என் கண்ணெதிரேதானே நீங்க நின்று கொண்டிருக்கீங்க..."

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை.."

"வேறு எந்த அர்த்தத்தில் சொன்னீங்க..."

"சசிரேகாவின் பெரிய அத்தான்.. உனக்கும் அத்தான் முறைதானே ஆக வேண்டும்..? நான் அந்த அர்த்தத்தில் சொன்னேன்..."

"எனக்கு அப்படியெல்லாம் கூப்பிட வராது சார்.."

"ஊஹூம்.. இந்த சாரை அவாய்ட் பண்ணு.. என் வீட்டில் உறவுக்காரப் பெண்ணாக வந்து தங்கியிருப்பவள் என்னை சார்ன்னு கூப்பிட்டு வைத்தால் இந்த ஊர் என்ன சொல்லும்..?"

"என்ன சொல்லும்..?"

"நீ எங்கள் உறவுக்காரப் பெண்ணில்லையென்று சொல்லும்..."

இதையேதான் நர்மதாவும் சொன்னாள் என்பதை நினைவுகூர்ந்த மாலினி.. பதிலுக்கு வழக்கடிக்காமல் அமைதி காத்தாள்...

"என்ன பதிலைக் காணோம்..."

'இவன் பெரிய கேள்வியின் நாயகன்.. கேள்விக் கணைகளை வீசிக்கொண்டே இருப்பான்.. நான் வாய் வலிக்கப் பதில் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்...'

மனதிற்குள் பிரபாகரனை தாளித்தபடி வெளியே அதைக் காட்டிக் கொள்ளாமல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் மாலினி...

"அதுவா அத்தான்.. நீங்கள் கேள்விகளை நான்தான் கேட்பேன்னு.. அத்தான்.. குத்தகைக்கு எடுத்து வைத்திருக்கிறீங்களா அத்தான்.. அதனால் அத்தான்.. என்னால் அத்தான்.. உங்கள் வேகத்துக்கு ஈடுகொடுத்து அத்தான்.. பதில் பேச முடியவில்லை அத்தான்.. போதுமா அத்தான்..."

"ஒரு அத்தான் போடச் சொன்னதற்கு.. நீ எட்டு அத்தான் போட்டுவிட்டு பின்னாலும் நான் போதாது என்று சொல்வேனா.. அதுதான் வார்த்தைக்கு ஒரு அத்தானைப் போட்டு விட்டாயே.. இன்றைக்கு இதுபோதும்.."

"நாளைக்கும் இருக்கிறதா அத்தான்..."

"இல்லாமல் போய்விடுமா..."

அவன் இப்போது மெல்லிய சிரிப்பை உதிர்த்து விட்டு வீட்டை நோக்கிச் சென்றான்.. வீட்டுப்படிகளில் ஏறியவன்.. கடைசி வினாடியில் திரும்பி மாலினியைப் பார்க்க.. அவ்வளவு நேரமும் அவனையே பார்த்துக் கொண்டிருந்த மாலினி... அவசரமாய் பார்வையை விலக்கிக் கொண்டாள்...

அவளுடைய பார்வையை கண்டுகொண்ட மர்ம சிரிப்புடன் அவன் வீட்டிற்குள் சென்றுவிட்டான்...

'கண்டுகொண்டானே..' மாலினிக்கு வெட்கமாக போய்விட்டது...

"மாலினி.." சசிரேகா ஆச்சரியத்துடன் பேசினாள்..

"என்ன சசி..."

"இது.. கனவா.. இல்லை, நனவான்னு எனக்கு இருக்கு..."

"ஏன்..?"

"பெரியவர் யாரிடமும் இவ்வளவு நேரம் நின்று பேசியதில்லை..."

"பெரியவரா.. உன் வீட்டில் வயதானவர்கள் யாரும் இல்லையே.. உன் மாமியாரையா சொல்கிறாய்...?"

"ஏண்டி.. நீ வேற... நான் பெரிய அத்தானைச் சொல்கிறேன்.."

"ஹிட்லரையா பெரியவர்னு சொன்னாய்.. நான் என்னவோ தடியூன்றும் தொண்டுக் கிழவர்னு நினைத்து விட்டேன்..."

"இந்த வாய்தானேடி என்னைக் கதிகலங்க வைக்குது..."

"கவலையே படாதே.. இனி கொஞ்சம் அடக்கி வாசிக்கிறேன்..."

"அதைச் செய்யடி தாயே.. உனக்கு கோடி புண்ணியமாக போகும்.. கொஞ்சம் கருணை காட்டு.."

அவர்கள் சற்றுநேரம் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.. பேச்சின் மும்முரத்தில் நேரம் ஓடுவதை மறந்துவிட்ட சசிரேகா.. பதறிப்போய் எழுந்தாள்...

"என்னடி.. என்ன ஆச்சு...?"

"இருட்டி இவ்வளவு நேரம் ஆகிவிட்டதா...?"

"அதனால் என்னடி.. வீட்டுக்குள்தானே இருக்கிறோம்...?"

"உனக்குப் புரியாது.. என் ஹஸ்பெண்ட் வரும் நேரமாகி விட்டது.. வா.. வீட்டுக்குள் போய்விடலாம்..."

சசிரேகா.. மாலினியின் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தபோது.. காரின் முன்பக்க விளக்கின் ஒளிவெள்ளம் அவர்கள்

மேல் பாய்ந்தது...

"அத்தான் வந்துவிட்டார்.." சசிரேகா பதறி நின்றாள்...

'இவள் ஏன் இப்படிப் பயப்படுகிறாள்..?' என்ற யோசனையுடன் காரைப் பார்த்தாள் மாலினி...

காரின் கதவைத் திறந்துகொண்டு கருணாகரன் இறங்கினான்.. மனைவியைப் பார்த்து... அவன் மெலிதாகப் புன்னகைக்கவும்...

"அப்பாடி.." என்று வாய்விட்டுச் சொல்லி நிம்மதியாக மூச்சுவிட்டாள் சசிரேகா..

"ஏண்டி.. இப்படிச் செத்துச் செத்துப் பிழைக்கிறாய்..."

"என் தலைவிதி..."

"உன்னைப் போய் எல்லோரும் மார்த்தாண்ட அரண்மனையின் இளைய ராணின்னு பெருமையாய் பேசிக்கிறாங்க.. கடைசியில் உன் நிலைமை இதுதானா..?"

"அத்தான் வருகிறார் மாலினி.. கீப் கொய்ட்..."

அவர்களை சமீபித்த கருணாகரன்.. மாலினியைப் பார்த்து...

"ரெஸ்ட் எடுத்தாயாம்மா..?" என்று விசாரித்தான்..

"எடுத்தேன் அத்தான்..."

"எங்கள் வீட்டில் இருப்பதில் உனக்கு வசதிக் குறைவு எதுவும் இல்லையே..."

'அது இருக்கிறது நிறைய.. ஆனால், அதை வாயைத் திறந்து என்னால் சொல்லவா முடியும்..?'

"அதெல்லாம் இல்லை அத்தான்..."

"குட்.. சசி.. உன் தங்கையை சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டு வா.."

"நான் வந்து கொள்வேன் அத்தான்.. சசி.. நீ போய் அத்தானைக் கவனி..."

நன்றி கலந்த பார்வையை மாலினியின் மேல் வீசி விட்டு சசிரேகா கணவனின் பின் சென்றுவிட.. மாலினி யோசனையுடன் மாடிப்படி ஏறினாள்...

"நீதான்.. இந்த வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளியா...?"

ஏளனமான அந்தக் குரலைக் கேட்டதும்.. நிமிர்ந்து பார்த்தாள் மாலினி.. எதிரே.. மிகப் பகட்டான.. விலையுயர்ந்த சுடிதாரில் இருந்த பெண்ணின் விழிகளில் உதாசீனம் தென்பட்டது.. அவளது கை.. காது... கழுத்துக்களில் இருந்த வைர நகைகள் ஒளிர்விட.. அவள் மிக அலட்சியத்துடன் நின்று கொண்டிருந்தாள்...

## 15

**உன்னைத் தொட்ட காற்று...**

**என்னைத் தொட்ட உணர்வை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

'ஏன் இந்தப் பெண் இப்படியொரு உதாசீனப் பார்வை பார்க்கிறாள்..?' என்றுதான் அவளைப் பார்த்தவுடன் மாலினி யோசித்தாள்.. அதே ஆராய்ச்சியுடன் தான் அந்தப் பெண்ணைப் பார்க்கவும் செய்தாள்.. ஆனால், அந்தப் பெண்ணோ...

'நீயெல்லாம் எனக்க நிகரா...' என்பது போல ஒரு அலட்சியப் பார்வை பார்த்தபடி உதடுகளை ஏளனமாக வளைத்தாள்..

"என்ன அப்படிப் பார்க்கிறாய்... நீ வைரங்களை பார்த்திருக்க மாட்டாய்தான். என் நகைகளின் ஜொலிப்பைப் பார்த்தால் பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்த்தது போல பார்க்கத் தோன்றும்தான். அதற்காக இப்படியா ஆன்னு வாயைப் பிளப்பாய்..?"

'ஓ.. இவளுக்கு.. இவளுடைய வைர நகைகளின் மேல் தற்பெருமையா.. ஆனால்.. இந்த வீட்டில் பிறந்த பெண் இப்படி அலட்டிக்கொள்ள மாட்டாளே.. நிறைகுடம் எங்காவது தளும்புமா..?'

மாலினிக்குள் யோசனை வந்தது.. அப்போது.. "ஸ்வேதா.. யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய்..?" என்று கேட்டபடி வேறு ஒரு பெண் படியிறங்கி வந்தாள்...

ஆகாய வண்ணத்தில் பிரிண்டட் சேலையுடுத்தி-யிருந்த அந்தப் பெண்ணும் வைர நகைகளைத்தான் அணிந்திருந்தாள்.. சுடிதார் பெண்ணிடம் இருந்த உதாசீனப் பார்வை அவளிடம் இல்லை.. மாறாக நளினம் கலந்த கம்பீரமான அழகுடன்.. ஒரு ராஜகுமாரியைப் போல் இருந்தாள் அவள்...

'ராஜகுமாரி..! ஒருவேளை.. இவள்தான் இந்த வீட்டின் கடைக்குட்டி பெண் காயத்ரியோ...'

மாலினி நினைத்தது சரியென்று உணர்த்தினாள் அந்த ஸ்வேதா...

"நான் ஒன்றும் இவளுடன் பேசிக் கொண்டிருக்க வில்லை காயத்ரி.. இவள்தான் என் வைர நகைகளைப் பார்த்துவிட்டு வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறாள்..."

ஸ்வேதா பேசியதைக் கேட்டதும்... கண்டிப்புடன் முகத்தைச் சுளித்தாள் காயத்ரி...

"ஸ்ஸ்.. இப்படியெல்லாம் பேசக்கூடாதுன்னு உனக்கு லட்சம் தடவை சொல்லிவிட்டேன் ஸ்வேதா.. நீ கேட்கிறபாடாய் இல்லை.. அம்மாவுக்கும் பெரிய அண்ணனுக்கும் நீ இப்படிப் பேசியது தெரிந்தால் கோபப்படுவார்கள்..."

"என்னவோ போ.. கருணா அத்தானுக்கு நமக்கு சமமில்லாத வீட்டிலிருந்து பெண்ணை எடுத்தாலும் எடுத்தீங்க.. யார் யாரோ உறவு கொண்டாடிக்கிட்டு இந்த வீட்டுக்குள் வந்து நின்றுவிடுகிறாங்க..?"

ஸ்வேதாவின் இந்தப் பேச்சு சுருக்கென்று முள்ளாக மாலினியின் மனதில் தைத்தது...

'இவளுக்கு எதற்காக.. இவ்வளவு ஆணவம்...'

மாலினி கோபத்துடன் பேச வாய்திறந்தபோது காயத்ரி அவளை முந்திக்கொண்டு ஸ்வேதாவை அதட்டினாள்...

"ஷட் அப் ஸ்வேதா.. நீ கீழே போ.. நான் வருகிறேன்.."

"மூன்றாம் மனிதர்கள் முன்னால் என்னை அதட்டாதே காயத்ரி..."

"இவங்க மூன்றாம் மனுஷியில்லை.. என் அண்ணியின் தங்கை.. வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளி.. புரிந்ததா..?"

ஸ்வேதாவின் கோபத்தின் பரிமாணம் அவள் தடதட வென்று படிகளில் இறங்கிப் போன வேகத்திலிருந்தே தெரிந்தது...

"அவள் பேசியதை மனதில் வைத்துக் கொள்ளாதீங்க..." காயத்ரி அழகாக புன்னகைத்தாள்...

"நீங்கள் தான் காத்ரியா..?"

"என்னை உங்களுக்குத் தெரியுமா..?"

"உங்கள் வீட்டுக்கு வருவதற்கு முன்னாலேயே.. உங்க வீட்டில் இருக்கிறவங்க எல்லோரின் பயோடேட்டாவும் எனக்குத் தெரியும்..."

"எப்படி... அண்ணி சொன்னாங்களா..?"

"அவள் போனில்.. ஹலோ சொன்னாலே அதிகம்.."

"வேறு யார் சொன்னது..?"

"எல்லாம்.. அந்த பரந்தாமனின் வாக்குமூலம்தான்.."

"ஓ.. பரந்தாமன் சொன்னாரா..?"

"ம்ம்ம்..."

"நீங்கள் மெக்கானிக்கல் இன்ஜினீயராமே..."

"ஆமாம்.. நீங்க என்ன பண்றீங்க..?"

"பி.ஈ.. கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங் படிக்கிறேன்..."

"எங்கே..?"

"கன்யாகுமரியில்..."

நட்புடன் புன்னகை செய்த காயத்ரி.. தலையசைத்து விட்டுப் படியிறங்க.. மாலினி படியேறி.. அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள்...

சற்று நேரத்தில் அறைக்கதவு தட்டப்பட்டது.. அலமாரியில் இருந்த துணிகளை சரிபார்த்துக் கொண்டிருந்த மாலினி.. அறைக்கதவைத் திறந்தாள்.. பொன்னி நின்றிருந்தாள்..

"என்ன பொன்னி...?"

"அம்மா சாப்பிட வரச் சொன்னாங்க.."

"இதோ வருகிறேன்..."

அறைக்கதவை பூட்டிவிட்டு பொன்னியிடம் பேசிய படி இறங்கினாள் மாலினி..

டைனிங் ஹாலில் போடப்பட்டிருந்த பெரிய டைனிங் டேபிளைச் சுற்றியிருந்த இருபத்து நான்கு சேர்களிலும் அவர்கள் அமர்ந்திருந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணியபடி சசிரேகாவின் அருகே சென்று அமர்ந்து கொண்டாள் மாலினி...

"வர வர நம் வீட்டில் நிம்மதியாகவே சாப்பிட முடியவில்லை அத்தை..." என்றாள் ஸ்வேதா...

'ஆஹா.. இவள் ஏதோ வில்லங்கமாய் பேசப் போகிறாளோ...' என்று எண்ணினாள் மாலினி...

அவள் எண்ணியதையே காயத்ரியும் எண்ணினாளோ என்னவோ அவள் விழிகளால் ஸ்வேதாவை அதட்டினாள்...

ஆனால்.. ஸ்வேதாவா அதைக் கண்டுகொள்வாள்..?

அவள் தன் போக்கில் உதாசீனப் பார்வையென்றை மாலினியின் மீது வீசியபடி நர்மதாவின் பக்கம் பார்த்தாள்..

"ஏன் ஸ்வேதா அப்படிச் சொல்கிறாய்..?" என்றாள் நர்மதா..

அவள் அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தானே ஸ்வேதா அப்படிச் சொன்னாள்.. அவள் உடனே வாய்திறந்தாள்..

"வரவர நம் வீடு சத்திரம் சாவடியைப் போல ஆகிவிட்டது அத்தை.. நம் மனுஷங்களாக உட்கார்ந்து ஒருவாய் சாப்பிட முடியவில்லை..."

ஸ்வேதாவின் பார்வை மாலினியின் மேல் படிய.. அவள் மாலினியைத்தான் சொல்கிறாள் என்பது எல்லோருக்கும் விளங்கிவிட்டது...

நர்மதா தர்மசங்கடம் அடைந்தாள்.. வெளிப்படையாய் ஸ்வேதாவைக் கண்டிக்க முடியாது.. அப்படிக் கண்டித்தால் மாலினி சங்கடப்படுவாள்.. கண்டுகொள்ளாமல் இருக்கவும் முடியாது.. ஏனென்றால்.. ஸ்வேதா அதை தனக்குச் சாதகமாக நினைத்துக் கொண்டு மேலே மேலே பேசுவாள்..

'என்ன செய்வது...' என்று நர்மதா யோசித்துக் கொண்டிருக்கும் போது.. மாலினி நிமிர்ந்து ஸ்வேதாவின் முன்னால் இருந்த தட்டைப் பார்த்தாள்...

தட்டில் சிறிதளவுகூட இடம் இல்லாமல்.. உணவு வகைகள் நிரம்பியிருந்தன...

'இதுதான் இவள் ஒரு வாய் சாப்பிடும் லட்சணமா..? ஒரு வாய் சாப்பிடும் திருவாயா இது..? பத்துப் பேர் சாப்பிடுவதை இவள் ஒற்றை ஆளாக வரிந்து கட்டிக் கொண்டு உள்ளே தள்ளிவிட்டு பேச்சை பார் பேச்சை..!'

மாலினியின் பார்வை அவளது நினைவைச் சொல்லி விட.. ஸ்வேதாவின் முகம் கடுத்தது...

'கொஞ்சமாவது ரோஷம் வருகிறதா.. அதை விட்டு விட்டு என் தட்டை பார்வையிடுகிறாளே...'

மாலினி, சசியின் பக்கம் திரும்பினாள்.. ஒன்றும் அறியாதவள் போல முகத்தை வைத்துக் கொண்டு வினவினாள்..

"சசி... இந்தச் சத்திரம் சாவடின்னா என்ன..? நான் பிறந்ததில் இருந்து இதைக் கேள்விப்பட்டதே இல்லை.. நீ கேள்விப்பட்டிருக்கிறாயா..?"

ஸ்வேதா.. கருணாகரனுக்கு ஒன்றுவிட்ட மாமன் மகள்.. ஸ்வேதாவின் அப்பா.. நர்மதாவின் பெரியப்பா மகன்.. அந்த உறவுமுறையைச் சொல்லிக் கொண்டு அவளுடைய ஊரான கருங்கல்லில் இருக்காமல் மார்த்தாண்டபுரத்திலேயே மையம் கொண்டு விடுவாள்.. அவள் வரும்போதெல்லாம் சசிரேகாவை மட்டம் தட்டுவதால் சசிரேகாவிற்கு அவளைக் கண்டாலே ஆகாது.. போதாக் குறைக்கு.. அவள் கருணாகரனை மணந்து கொள்ள நினைத்தாளென்று ஒரு நாள் கருணாகரன் பேச்சுவாக்கில் மனைவியிடம் சொல்லிவிட.. அது முதல் சசிரேகா, ஸ்வேதாவை எதிரியைப் பார்ப்பது போலத்தான் பார்த்து வைப்பாள்...

பல நாள் பகையைத் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்த உற்சாகத்தில் சசிரேகா நிமிர்ந்து அமர்ந்தாள்..

"ஊஹூம்... எனக்கும் அதைப் பற்றியெல்லாம் தெரியாது.. நம் வீட்டில் அதைப் பற்றி பேசியது கூட இல்லையே.. நாமெங்கே அதைக் கண்டோம்..?"

ஸ்வேதாவின் முகத்தில் ஈயாடவில்லை.. இதுபோல ஒரு உடனடியான பதில் தாக்குதல் வரும் என்று நினைத்துக் கூடப் பார்த்திராதவள்.. என்ன சொல்வது என்று தெரியாமல் வேறு பேச்சிற்கு தாவினாள்..

"ஸ்..ஸ்... என்ன அத்தை.. டைனிங் ஹாலில் ஏ.ஸி.. பண்ணுங்கன்னு எத்தனை நாள் உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.. இப்படி புழுங்குகிறதே.."

'புழுக்கம் உன் உடலிலா.. இல்லை மனதிலா...' மாலினியின் இதழ்களில் கேலிப் புன்னகை உதயமானது..

நர்மதாவோ வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.. அவளுக்கு மாலினியின் புத்திசாலித்தனத்தைக் கண்டு பிரியம் வந்தது...

"செந்தாமரை.. மாலினிக்கு என்ன வேண்டும்னு கேட்டுப் போடு..." என்று உத்தரவு வேறு பிறப்பித்தாள்..

"இதென்னம்மா.. என் தட்டில் எல்லாம் காலியாகி விட்டது.. என்னைக்கூடக் கவனிக்காமல்.. புதிதாய் வந்திருக்கும் பெண்ணைக் கவனிக்கிறீங்களே.. இது உங்களுக்கே நியாயமாய் இருக்கா.." என்று பிரபாகரன் கேட்டதும்.. சசிரேகாவைத் தவிர அங்கேயிருந்த எல்லோருமே ஆச்சரியப்பட்டுப் போனார்கள்...

காயத்ரி வெளிப்படையாகவே தன் கையைக் கிள்ளிக் கொண்டாள்..

"என்ன காயத்ரி இது.. சிறுபிள்ளை போல் கையைக் கிள்ளிக் கொள்கிறாய்.. கை வலிக்காதா..?" நர்மதா மகளைக் கடிந்து கொண்டாள்...

"இது கனவா.. இல்லை நனவான்னு எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது அம்மா..." காயத்ரி குறும்புடன் பிரபாகரனைப் பார்த்து நகைத்தாள்...

அங்கிருந்த எல்லோருமே காயத்ரியின் கேலியைப் புரிந்துகொண்டு சிரித்தார்கள், ஸ்வேதாவைத் தவிர...

"ஏன் உனக்கு அப்படியொரு சந்தேகம் வந்தது காயத்ரி..?" என்று அவள் கேட்டாள்...

"பெரியண்ணா இவ்வளவு இயல்பாக கிண்டலடித்துப் பேசி நான் இப்போதுதான் கேட்கிறேன் ஸ்வேதா..." காயத்ரி சிரிப்பு மறையாமல் பதில் சொன்னாள்..

"அவர் இருக்கும் உயரத்திற்கு.. அவர் இவ்வளவு கீழே இறங்கி வந்தெல்லாம் பேசவே கூடாது.. இதைக் கண்டிப்பதை விட்டுவிட்டு.. அத்தை கூட சேர்ந்து சிரிக்கிறாங்களே என்று எனக்கு இருக்கிறது.. வரவர இந்த டைனிங் ஹால் சமபந்தி போஜனம் நடக்கும் இடமாகி விட்டது.." ஸ்வேதா பார்வையாலேயே மாலினியைச் சுட்டாள்...

'நீ பார்க்கும் பார்வை என்னை ஒன்றும் செய்து விடாது...' என்பது போல அலட்சியமாய் ஒரு பதில் பார்வை பார்த்த மாலினி.. ஸ்வேதாவின் பேச்சிற்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பது போல சாப்பாட்டில் கவனமாக இருந்தாள்..

சசிரேகாவினால் அப்படி இருக்க முடியவில்லை.. அவள் நிமிர்ந்து கருணாகரனை ஒரு பார்வை பார்த்தாள்.. கருணாகரன்.. பிரபாகரனைப் பார்த்தான்.. பிரபாகரன் அழுத்தமான பார்வை ஒன்றை ஸ்வேதாவின் மீது வீசினான்...

எப்போது அவன் தன்னைப் பார்ப்பான் என்று காத்துக் கிடந்த ஸ்வேதாவிற்கு அந்தப் பார்வையைக் கண்டதும் உள்ளுக்குள் குளிரெடுத்தது...

## 16

**நீ தொடாத போதும்...**

**உன் பார்வை தொடும் உணர்வை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"நான் என்ன பேச வேண்டும்.. எதைப் பேசக் கூடாது என்று சொல்ல நீ யார்..?" பிரபாகரனின் கேள்வி கடுமையாக வெளிவந்தது...

"அத்தான்..." ஸ்வேதா ஏதோ சொல்லப் போனாள்..

"ஸ்டாப் இட்... இந்த டைனிங் ஹால் சமபந்தி போஜனம் செய்யும் இடமாகிவிட்டதுன்னு எதை

வைத்துச் சொல்கிறாய்.. நீயும் எங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதாலா..?" பிரபாகரன் அனலாய் சுட்டான்...

"அத்தான்..." ஸ்வேதாவின் முகம் அவமானத்தில் சிறுத்துவிட்டது...

'இதைவிட மோசமாக இவள் மூக்கு உடைபட முடியாது...' மாலினி நினைத்துக் கொண்டாள்...

அதற்குப் பின் டைனிங் டேபிளில் யாருமே வாய் திறக்கவில்லை... குண்டூசி விழுந்தால்கூடச் சத்தம் கேட்கு மளவிற்கு அங்கு அமைதி நிலவியது...

'ரொம்ப நாள் கழித்து பெரியண்ணன் சிரித்து இரண்டு வார்த்தை பேசினார். அதை இந்த ஸ்வேதா வாய்விட்டுக் கெடுத்துவிட்டாளே..' என்று காயத்ரி... ஸ்வேதாவை மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்...

மாலினி கைகழுவ எழுந்தாள்.. பின்னாலேயே வந்த சசிரேகா கிசுகிசுப்பான குரலில்...

"உன் அறைக்குப் போய்விடு.. நான் பின்னாலேயே வருகிறேன்.." என்றாள்...

மாலினி தலையசைக்காமல் அங்கிருந்து வெளியேறி.. மாடிப்படிகளில் ஏறினாள்.. அவசரக் காலடியோசை அவளுக்குப் பின்னால் கேட்டது.. ஸ்வேதாவாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்...

"ஏய்.. நில்லு..."

மாலினியின் கணிப்பு சரியாக இருந்தது.. ஸ்வேதா மூச்சிரைக்க மாலினியின் அருகே வந்து நின்றாள்...

'நீ.. சொல்லி நான் நிற்பதா...'

மாலினி நிற்காமல் படியேறினாள்.. ஸ்வேதாவின் கோபம் அதிகமானது.. அவள் மாடி ஹாலில் மாலினியை வழிமறித்தாள்...

"உனக்கு எவ்வளவு திமிரிருந்தால் நான் கூப்பிடக் கூப்பிட காதில் விழாதது போலப் போவாய்..."

"எனக்கு டயர்டாக இருக்கிறது.. நாளைக் காலையில் நான் வேலையில் ஜாயின் பண்ண வேண்டும்.. நின்று பேச எனக்கு நேரமில்லை..."

இவளிடமெல்லாம் இப்படித்தான் பேச வேண்டும் என்ற முடிவோடு மாலினி அலட்சியமாகப் பதில் கூறிவிட்டு நகரப் போனாள்.. ஸ்வேதாவின் முகம் பயங்கரமாய் மாறிவிட்டது..

"உனக்குத்தான் வேலையிருக்கிறது.. எனக்கு வேலை இல்லையென்கிறாயா..?"

"அப்படி நான் சொல்லவில்லையே.. நீங்கள் வேலை பார்க்கறீங்களா..? எங்கே வேலை பார்க்கறீங்க..?"

"கூலிக்கு வேலை பார்க்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை... நான் கூலி கொடுக்கும் முதலாளி பரம்பரையில் பிறந்து வளர்ந்தவள்.."

கர்வமாக ஸ்வேதா பேச.. அதை முகத்தில் சலனமில்லாமல் கேட்டுவிட்டு..

'எனக்கென்ன..' என்று ஒரு பார்வையையும் ஸ்வேதாவை பார்த்து வைத்தாள் மாலினி...

"லுக் மிஸ் ஸ்வேதா.. உங்கள் பெருமை உங்களோடு.. எனக்கு அதைக் கேட்க நேரமில்லை.. நான் தூங்க வேண்டும்.. நேற்று ஃபுல் நைட் பஸ் ஜர்னி பண்ணிவிட்டு வந்திருக்கிறேன்.. ஐ ஆம் ஸோ டயர்டு.."

ஸ்வேதாவிற்கு கோபம் அளவு கடந்து வந்தது.. எவ்வளவு உதாசீனப்படுத்தினாலும் அதைக் கண்டுகொள்ளாமல் நொடிப் பொழுதில் அதைவிட நூறு மடங்கு அதிகமாக

உதாசீனம் செய்யும் மாலினியைப் பார்த்து பல்லைக் கடித்தாள்...

"இப்படியொரு சாப்பாட்டை இதற்கு முன் நீ சாப்பிட்டதே இல்லையா... அந்த வெட்டு வெட்டினால் தூக்கம் வரத்தான் செய்யும்..."

"இதை நீங்கள் சொல்லக்கூடாது... உங்கள் தட்டுதான் நொடிப்பொழுதில் நிறைந்து, மறுநொடியில் காணாமல் போய் கொண்டிருந்ததே.. போன வாரம் டி.வியில் ஒரு பழைய பாட்டுப் பார்த்தேன்.. அதில் கடோத்கஜன் இப்படித் தான் சாப்பாட்டைக் காலி செய்தான்.. பாட்டுக்கூட நினைவில் இருக்கிறது..."

ஸ்வேதா முறைப்பதைப் பொருட்படுத்தாமல் மாலினி வாய்விட்டுப் பாடினாள்...

"கல்யாண சமையல் சாதம்...

காய்கறிகளும் பிரமாதம்...

அந்த கௌரவ பிரசாதம்...

இதுவே எனக்குப் போதும்"

"போதும் மாலினி.. என் கோபத்துடன் அதிகம் விளையாடுகிறாய்.. இது உன் ஊரில்லை.. பார்த்து நடந்து கொள்..."

"எனக்கும் இது சென்னையில்லை.. மார்த்தாண்டம் தான்னு தெரியும் ஸ்வேதா.. என் கண்பார்வை தெளிவாகத் தான் இருக்கிறது.. நான் பார்த்துதான் நடக்கிறேன்..."

"நான் இந்த வீட்டின் வருங்கால மருமகள்..."

'பாவம்.. எவன் உன்னிடம் மாட்டப் போகிறானோ...'

"எனக்கு இந்த வீட்டில் எல்லா உரிமையும் இருக்கிறது..."

'இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்.. எனக்கு அதைப் பற்றி என்ன வந்தது.. நான் உன்னிடம் இதைக் கேட்டேனா...?'

"நானும் பெரிய அத்தானும் இன்றைக்கு அடித்துக் கொள்வோம்.. நாளைக்கு கூடிக் கொள்வோம்..."

'உன்னைப் போய் ஒரு மனித ஜீவன்.. கூட நினைக்குமா... அந்த பிரபாகரனை விவரமான ஆள்னு நினைத்தேனே...'

"எங்களுக்குள் ஆயிரம் இருக்கும்.."

'ஒரு கோடியேகூட இருக்கட்டும்.. எனக்கென்ன வந்தது.. ஏன்.. என்னிடம் வந்து ரம்பம் போடுகிறாய்...'

"நீ தேவையில்லாமல் மனப்பால் குடிக்காதே..."

'இவள் என்னதான் சொல்ல வருகிறாள்..' மாலினிக்கு சுர்ரென்று கோபம் வந்துவிட்டது..

"நான் பசும்பாலை மட்டும்தான் குடிப்பேன்.. நீங்கள் சொல்லும் பாலைக் குடித்து எனக்குப் பழக்கமில்லை... உங்களுக்குத் தோன்றுவதையெல்லாம் என்னிடம் பேசிக் கொண்டிருக்காதீங்க.. எனக்கு அது பிடிக்காது..."

"அதைப் பற்றி எனக்கென்ன கவலை...?"

"இருக்க வேண்டும்.. கவலையிருக்க வேண்டும்.. இந்த வீட்டின் வருங்கால மருமகள்னு பெருமையாய் சொல்லிக்கிறீங்க.. உங்களின் வருக்கால மாமியாரின் கோபத்திற்கு ஆளாகலாமா..?"

ஸ்வேதாவின் முகம் மாலினி சொன்னதைக் கேட்டதும் வெளிறிவிட்டது...

"நீ என்ன சொல்கிறாய்...?"

"என் மனதைப் பாதிக்கும்படி யார் பேசினாலும் உடனே வந்து அவங்களிடம் சொல்லிவிடும்படி அத்தை என்னிடம் சொல்லியிருக்கிறாங்க..."

"அத்தையா... யார் யாருக்கு அத்தை..."

"சசிரேகாவின் மாமியார்.. எனக்கு அத்தை.."

"என்ன ஒரு தைரியம்..?"

"இதைச் சொல்ல தைரியம் வேண்டியதில்லை ஸ்வேதா.. உறவுமுறையிருந்தால் போதும்.. என் பெரியப்பாவின் மகளுக்கு யார் மாமியாரோ.. அவங்களே எனக்கு அத்தையும் ஆவாங்க.. ஆம் ஐ கரெக்ட்..?"

"அப்போ.. பெரியத்தானை நீ எப்படிக் கூப்பிடுவாய்..?"

"அது என்ன பெரியத்தான்.. பெரிய.. அத்தான்..! அவருக்கென்ன தடியூன்றி நடக்கும் வயதா ஆகிவிட்டது? ஸ்மார்ட்டாய்.. ஹேண்ட்சம்மாய்.. மேன்லியாய்.. என்ன ஒரு அழகாய்.. அட்டகாசமாய் இருக்கிறார் தெரியுமா..? வாவ்.. ஐ லைக் ஹிம் வெரிமச்! அதனால் நான் அவரை ஆசையாய் 'அத்தான்.. அத்தான்'னுதான் கூப்பிடுவேன்.."

மாலினி காதலுடன் அந்த 'அத்தானை...' கிறக்கத் துடனும் மென்மையுடனும் உச்சரித்த விதத்தில் ஸ்வேதா கொதித்துப் போனாள்..

"நீ எப்படி அவரை அத்தான்னு சொல்லலாம்..?"

"அத்தை மகனை அத்தான்னு கூப்பிடாமல் வேறு எப்படிக் கூப்பிடுவது..?"

"மாலினி..."

ஏறக்குறைய ஸ்வேதா அலறியே விட்டாள்..

"உஸ்ஸ்.." என்று வாயில் விரலை வைத்து அவளை அடக்கினாள் மாலினி...

"சத்தம் போடக்கூடாது... நானும் கெஸ்டாய் வந்திருக்கிறோமேன்னு அடக்கி வாசிக்கிறேன்.. நீ ஓவராய் பேசுகிறாயே.. உன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்..? நான் உன்னை வாங்க போங்கன்னு கூப்பிடுகிறேன்.. நீ.. வா போ என்கிறாய்.. மரியாதை கொடுத்தால் தான் மரியாதை கிடைக்கும்.. புரிந்ததா? நான் வேலை செய்ய வந்திருக்கிறேன்.. புது ஊர் என்பதால் என் பெரியப்பா மகளின் வீட்டில் தங்கியிருக்கிறேன்.. என்னை பொறுத்தவரையில் இங்கே நான் வந்து தங்கியிருப்பதற்கான காரணம் இது மட்டும்தான்.. உன்

மனதில் வேறு பயம் வந்தால் அதற்கு நான் பொறுப்பில்லை. புரிந்ததா.. அதை விட்டுவிட்டு என்னை ஓவராய் கிராஸ் பண்ணினேன்னு வை.. நிஜமாகவே உன் பெரிய அத்தானை சைட் அடிக்க ஆரம்பித்து விடுவேன்.. அவரையும் என்னை சைட் அடிக்க வைத்து விடுவேன்.. அண்டர்ஸ்டாண்ட்..?"

அதற்கு மேல் அங்கே நின்றால் மாலினி.. நிஜமாகவே பிரபாகரனை சைட் அடிக்க கிளம்பிவிடுவாள் என்று தோன்றியதாலோ என்னவோ ஸ்வேதா அந்த இடத்தை விட்டு அவசரமாய் அகன்றுவிட்டாள்...

எரிச்சலுடன் வாய்க்குள் முணுமுணுத்தவாறு அங்கு இருந்து நகரப் போன மாலினி.. அந்த ஹாலின் வாசலில் கைகளைக் கட்டியபடி சுவரில் ஒரு காலை ஊன்றி சாய்ந்து நின்ற பிரபாகரனைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டவாளாய் நின்றாள்...

அவன் சாவதானமாக.. அவளருகில் வந்தான்.. அவனுடைய கண்கள் சிரித்துக் கொண்டிருந்தன...

"ஸ்வேதாவை மிரட்டுகிறாயா.." என்று கேட்டான்..

மாலினிக்கு போன கோபம் திரும்பவும் வந்து விட்டது...

"அவளை ஒரு ஆள் மிரட்ட முடியுமா..?" என்று பதிலுக்குக் கேட்டாள்...

"ஏன்.. நான் அவளை டைனிங் ஹாலில் மிரட்ட வில்லையா..?" அவன் கண்களில் அதே சிரிப்பு நிலைத் திருக்க.. மீண்டும் கேட்டான்...

"உங்களுக்கும் அவளுக்கும் ஆயிரம் இருக்கும்.. நீங்கள் அவளை மிரட்டலாம்.. மற்றவர்கள் மிரட்ட முடியுமா..?" மாலினி அவனுடைய பாணியிலேயே பதில் கொடுத்தாள்..

"அவளை சிறுவயதிலிருந்து எனக்குத் தெரியும்..."

"அப்படியா..."

தனக்கு அந்தக் கதையைக் கேட்க ஆர்வமில்லை என்பதை பிரபாகரனுக்கு உணர்த்தும் விதமாக.. அசுவாரஸ்யமாக கேட்டபடி தன் கையிலிருந்த கைக்கடிகாரத்தை பார்த்தாள் மாலினி...

"அவளுக்கும் என்னை சிறு வயதிலிருந்து தெரியும்.."

மாலினி அவனை ஒரு மார்க்கமாக பார்த்தாள்...

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்..."

"வேறு எப்படிப் பார்ப்பது.. சென்னையிலிருந்து மார்த்தாண்டம் எவ்வளவு தூரமோ அதே அளவு தூரம் தானே மார்த்தாண்டத்திலிருந்து சென்னைக்கும் இருக்கும்..? இதைப் போய் ஒரு பெரிய விஷயமாக நினைத்து என்னிடம் கதை சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே..."

பக்கத்தில் நின்று பதற்றத்துடன் கைபிசைந்து அதட்ட சசிரேகா இல்லாத காரணத்தினால் தன் மனதில் நினைத்ததை வாய்விட்டுச் சொல்லிவிட்டாள் மாலினி...

சிறுவயதிலிருந்து உனக்கு அவளைத் தெரிந்தால் அவளுக்கும் உன்னைத் தெரிந்துதானே இருக்கும் என்ற ரீதியில் மாலினி பதில் சொன்னதைப் புரிந்துகொண்டவனாக பிரபாகரன் கண்களில் ஒரு பாராட்டுதலுடன் அவளைப் பார்த்தான்..

"அதை எதற்குச் சொன்னேன் தெரியுமா..?"

"சொன்னால்தானே தெரியும்..?"

"அவள்கூட என்னை ஸ்மார்ட்டாய்.. ஹேண்ட்சம் மாய்.. மேன்லியாய்.. அழகாய்.. அட்டகாசமாய் இருக்கிறேன்னு சொன்னதில்லை..."

பிரபாகரனின் வார்த்தைகளில் குறும்பு கூத்தாடியது.. மாலினி வெட்கத்துடன் முகம் சிவக்க.. வேறு பக்கம் பார்வையைத் திருப்பினாள்...

'அடக்கடவுளே.. இவன் அதைக் கேட்டுவிட்டானா..?'

அத்துடன் விட்டுவிடவில்லை பிரபாகரன்.. அவள் அருகில் வந்து மெதுவான குரலில்..

"உன்னைப் போல் ஆசையாய்.. 'அத்தான்..'னும் கூப்பிட்டதில்லை.." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்...

17

**வாய் தொட்ட வார்த்தை...**

**வெளிப்படாத நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்..

"இன்னும் நீ உன் அறைக்குப் போகவில்லையா மாலினி..?" என்று கேட்டபடி சசிரேகா அங்கு வந்தாள்..

"போகணும்னு எனக்கும் ஆசைதான்.. போகவிட்டால் தானே..." அலுப்புடன் கூறினாள் மாலினி..

"ஏண்டி.. என்ன ஆச்சு..?"

"முதலில் மோகினிப் பேய் வந்து வழிமறித்தது..."

"யாரு.. அந்த ஸ்வேதா வந்தாளா..?"

"அது எப்படிடீ சரியாக அவள்தான் பேய்னு கண்டு பிடித்தாய்..."

"இதுக்குப் போய் வெத்தலையில் மை தடவியா பார்க்கணும்..? அவளால்தான் எனக்கு இம்சையே..."

"அதுவும் செய்கிறாளா..?"

"அடுத்து யார் வந்தது...?"

"ஹிட்லர்..."

"பெரிய அத்தானா..?"

"அவரேதான்..."

மாலினி தனக்குத் தரப்பட்டிருந்த அறையை நோக்கி நடந்தபடி கூறினாள்.. அவளுடன் அறைக்குள் சென்ற சசிரேகா.. கதவை மூடிவிட்டு மாலினியுடன் கட்டிலில் அமர்ந்தாள்..

"ஸோ.. உன் வீட்டில் வெற்றிகரமாக இன்று ஒரு நாள் முடிந்துவிட்டது..." என்றாள் மாலினி..

"என் வீட்டு மனிதர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய் மாலினி..." என்று கேட்டாள் சசிரேகா...

"ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம்.. உன் வீட்டில் இருப்பவர்கள் மனிதர்கள்தான். ஆனால், அந்த ஸ்வேதாவை மனித குலத்தில் நான் சேர்க்கவே மாட்டேன்..." கட்டிலில் அமர்ந்து தலையணையை எடுத்து மடியில் வைத்தபடி கூறினாள் மாலினி..

"நானும் சேர்க்க சொல்லமாட்டேன்.. அவளால் நான் படும் அவதி இருக்கிறதே... அப்பப்பா..."

"ஏன்.. உன்னை அவள் என்ன பண்ணினாள்..?"

"என் கணவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவள் நினைத்திருந்தாளாம்..."

மாலினி ஆச்சரியத்துடன் சசிரேகாவன் பேச்சை இடைமறித்தாள்...

"பொறு.. பொறு... இப்போது என்ன சொன்னே?"

"அவள் என் ஹஸ்பெண்டின் மேல் ஆசைப்பட்டாளாம்டி..."

"என்னடி நீ இப்படிச் சொல்கிற.. அவள் வேறு மாதிரி சொன்னாளே..."

"என்ன சொன்னாள்..?"

"ஹிட்லரின் மீதுதான் அவள் ஆசைப்படுகிறாளாம்.."

"அது இப்போ.. இது அதுக்கு முன்னாடி..."

"என்னடி இது.. அவள் உன் வீட்டிலிருக்கிற அத்தனை ஆண்பிள்ளைகள் மேலேயும் ஆசைப்பட்டாள்னு சொல்லுவ போல இருக்கே.. தினகரனை மட்டும் விட்டு வைத்திருக்கிறாளே.. அது ஏன்..?"

"அவரையும் விடவில்லை.. ஆனால், நெருங்க மாட்டாள்..."

"இதைப் பாருடா.. ஏன் தினகரனின் மீது மட்டும் கருணை காட்டினாளாம்..?"

"இவள் பாச்சா அவரிடம் எடுபடவில்லை..."

"பரவாயில்லையே.. தினகரன் ஜாலியான ஆளுன்னு நான் நினைத்தேன்.. சுதாரிப்பான ஆள்தான்..."

"அதனால் அவளுடைய பார்வையை பெரிய அத்தானின் மேல் திருப்பிவிட்டாள்..."

"என்னவோ.. பெரிதாக ஹிட்லர்.. ஹிட்லர் என்கிறாயே.. கடைசியில் அவர் போயும் போயும் இவளிடம்தான் மயங்கி நிற்கிறாரா.. இவ்வளவுதானா அவர்...?"

இதைச் சொல்லும்போது.. ஏன் தன் மனம் இப்படி வலிக்கிறது என்று யோசித்தாள் மாலினி...

"அவர் ஒன்றும் இவளிடம் மயங்கி நிற்கவில்லை..."

"அப்பாடா..." என்று இருந்தது மாலினிக்கு.. பிரபாகரன், ஸ்வேதாவிடம் மயங்கவில்லை என்ற செய்தி ஏன் தன் மனதிற்கு இத்தனை இதத்தை தருகிறது என்று தனக்குத் தானே வினவிக் கொண்டாள் அவள்...

"அவளாகத்தான் உன் பெரிய அத்தானின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறாளா...?"

"ஆமாம்.. என் ஹஸ்பெண்டிற்கு முதலில் கல்யாணம் ஆகிவிட்டதால் பெரியத்தானின் மேல் அவளுக்கு கருணை வந்துவிட்டதாம்... அவளை விட்டால் அவரைக் கல்யாணம்

பண்ணிக் கொள்ள ஆளில்லையாம்.. பெரியத்தானின் தியாகத்திற்கு பரிசாக அவள் தன்னையே தரப்போகிறாளாம்..."

"இப்படியெல்லாம் அவள் யாரிடம் பிதற்றினாள்.. ஹிட்லரிடமா..?"

"அவர் இவளிடம் நின்று பேசக்கூட மாட்டார்..."

"ஈஸிட்..?"

இந்தப் பதில் ஏன் தன் மனதிற்கு இத்தனை திருப்தியைத் தருகிறது என்ற ஆராய்ச்சியில் மீண்டும் இறங்கினாள் மாலினி...

"நிஜம்தான் மாலினி.. பெரியத்தானுக்கு பெண் கொடுக்க நான் நீன்னு எங்கள் சொந்தக்காரங்க வட்டாரத்தில் அடித்துக் கொண்டு நிற்கிறாங்க.. இந்த ஸ்வேதா என்ன பெரிய வசதியானவளா..? இவள்தான் அப்படி பீற்றிக் கொண்டிருக்கிறாள்.. இவளைவிட ஆயிரம் மடங்கு வசதியானவர்கள் எல்லாம் அவர்களுடைய பெண்ணைக் கொடுக்கப் பறக்கிறாங்க..."

"அப்படியா..?"

மாலினிக்கு திடீரென்று சசிரேகாவின் பேச்சில் சுவாரஸ்யம் போய்விட்டது.. பிரபாகரனின் திருமணப் பேச்சை விட்டுவிட்டு வேறு பேச்சை இவள் பேசக்கூடாதா என்று மனதில் நினைத்தள் அவள்...

ஆனால், சசிரேகா அதை அறிவாளா.. அவள் தன் போக்கில் ஆரம்பித்துவிட்ட பேச்சை பாதியில் நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தாள்...

"பெரியத்தான் தக்கலையில் பெரிய மில் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார்.. அவருடைய கனவெல்லாம் அதில்தான் இருக்கிறது.. கல்யாணத்தில் இல்லை..."

'அட.. இதுகூட நல்லாயிருக்கே.. ஹீரோ.. நான் வேலை பார்க்கப் போகும் ஊரிலேயும் கால் பதித்துவிட்டாரா.. வெரிகுட்..'

"ஏண்டி.. எங்க மில்லுக்கு போட்டி மில்லைக் கட்டுவார் உங்க பெரியத்தான்.. நீ அதை என்னிடம் வந்து பெருமையாய் சொல்கிறாயா...?"

"உங்க மில்லா.. சரிதான் போ... இன்னும் போய் வேலையிலேயே ஜாயின் பண்ணவில்லை.. அதற்குள் உரிமைக்குரல் எழுப்புகிறாயா..?"

"பின்னே.. என்னை யாரென்று நினைத்தாய்..?"

"உன் விசுவாசத்தை பாராட்டுகிறேன்.. ஆனால்.. ஒன்று.. என் பெரியத்தான் யாருக்கும் போட்டியில்லை..."

"அவ்வளவு பெருந்தன்மையானவரா..?"

"ஊஹூம்.. அவ்வளவு உயரத்தில் இருப்பவர்.. அவருக்குப் போட்டியாக வர ஒரு தகுதி இருக்க வேண்டும்..."

"என் மில்லுக்கு அந்த தகுதி இருக்கிறது..."

"உன் மில்லா.. நீ சொந்தமாக எந்த மில்லை வாங்கி இருக்கிறாய் மாலினி...?"

"கிண்டலா...?"

"பின்னே.. நீ என் பெரிய அத்தானிடம் போட்டி போடுவாய்.. நான் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கணுமா..?"

"சும்மா இருக்காதே.. அவருக்கு சப்போர்ட்டாய் போர்க்கொடியைப் பிடி.. இப்போது ராத்திரி நேரம்.. நைட்டில் போர் செய்யக்கூடாது.. அதனால் நீ உன் அத்தானுடன் தூங்கப் போ.. நான் தனியாக தூங்குகிறேன்..."

"ஏய்ய்..."

சசிரேகா முகம் சிவக்க.. மாலினியின் கையில் கிள்ளிவிட்டுப் போய்விட்டாள்...

அதிகாலையில் எழுந்து கொள்ள வேண்டும் என்று நினைத்த மாலினி.. செல்போனில் அலாரம் வைத்துவிட்டு உறங்கிவிட்டாள்...

காலையில் சேவல் கூவும் ஒலி அவள் காதருகில் கேட்டதும் விழித்துக்கொண்டாள்.. செல்போனை அணைத்து விட்டு எழுந்து அமர்ந்து இரண்டு உள்ளங்கையையும் சேர்த்து வைத்துப் பார்த்தாள்.. அறைக்கதவு தட்டப்பட்டது.. எழுந்து சென்று கதவைத் திறந்தாள்...

கையில் காபிக் கோப்பையுடன் செந்தாமரை நின்று கொண்டிருந்தாள்..

"ஹாய்.. செந்தாமரை..."

"ஹை.. அம்மா..."

"இது உனக்கே கொஞ்சம் ஓவராகத் தெரியலையா செந்தாமரை.. நான் என்ன உனக்கு அம்மாவா..? அவ்வளவு வயதானவள் போலவா இருக்கிறேன்..?"

"அது வந்தும்மா.. எங்க சின்னம்மாவுக்கு நீங்க தங்கச்சி முறையாகுதுங்களா.. அதனால்.."

"எதனால வேணும்னாலும் இருக்கட்டும்.. என்னை அம்மா.. சும்மான்னு கூப்பிடக்கூடாது.."

"வேற எப்படிக் கூப்பிடறது..?"

"எனக்குப் பெயர் ஏன் வைத்திருக்கிறாங்க..? மாலினின்னு கூப்பிடு..."

"ஆத்தாடி.. பெரியம்மாவுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்னுபுடுவாங்க..."

'என்னடா இது.. பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது இந்த வீட்டின் எஜமானியை கொலைகாரியாய் ஆக்கிவிடுமா..?'

மாலினி இரக்கத்துடன் செந்தாமரையைப் பார்த்தாள்...

"அப்படின்னா ஒண்ணு செய்யலாம்..."

"என்ன.. என்ன..?"

'ம்ஹூம்.. இந்த வீடு.. மாற்றத்திற்காக ஏங்குது.. இந்த வேலையாள்கூட இந்த பரபரப்புக் காட்டினால்.. வீட்டில் இருக்கிறவங்க எவ்வளவு பரபரப்பை காட்ட மாட்டாங்க...?'

"பொறுமை.. செந்தாமரை.. பொறுமை..."

"ஹி.. ஹி..."

"நாம் தனியாகப் பேசும்போது நீ என் பெயரைச் சொல்லிக் கூப்பிடு.. அத்தையின் முன்னால் என்னவோ செய்து கொள்..."

"சரிங்கம்மா..."

"பார்த்தியா.. திரும்பவும்.. 'அம்மா' போடுகிறாய்..?"

"சரிங்க மாலினியம்மா..."

"உன்னால் 'அம்மா' போடாமல் இருக்கவே முடியாதா...?"

"அது எப்படிங்க.. மண்டையில் அடித்ததைப் போலப் பெயரைச் சொல்லிக் கூப்பிடுறது..?"

இவர்களின் உள்ளத்தில் காலம் காலமாய் ஊறிவரும் உணர்வு இது என்று நினைத்துக் கொண்டாள் மாலினி...

இவர்களை மாற்ற முடியாது.. இவர்கள் இப்படித்தான் இருப்பார்கள்...

'பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் தலையில் அடித்ததைப் போல் வலிக்குமா..?'

"செந்தாமரை..."

"என்னங்க.. மாலினியம்மா..."

"உனக்கு கோடி புண்ணியமாக இருக்கும்.. அந்த அம்மாவை விட்டுவிடேன்..."

"ஏம்மா.. என் வேலைக்கு உலை வைக்கப் பார்க்கறீங்க..."

'ஊஹூம்.. இது வேலைக்கு ஆகாது..' என்ற நினைவுடன் கையிலிருந்த காபித் தம்ளரை காலி செய்துவிட்டு காலி தம்ளரை செந்தாமரையிடம் நீட்டினாள் மாலினி...

'இன்றைக்கு வேலையில் ஜாயின் பண்ணணுமே...!'

அவசரமாய் குளியலறைக்குள் புகுந்தவள் அரைமணி நேரத்தில் தயாராகி வெளியில் வந்தாள்...

18

**உன் நினைவு தரும் இதத்தை...**

**உன் நிழல் தரும் வரத்தை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மெரூன் கலரில் பொடிப் பொடியாய் கொடி பின்னல் போல் சிறு மலர்கள் தெறித்து விழுந்த டிஸைனில் கார்டன் சேலையை உடுத்தியிருந்தாள் மாலினி... அதே புடவையில் வெட்டித் தைக்கப்பட்ட ரவிக்கை பாந்தமாக பொருந்தியிருப்பதை ஆளுயுரக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்...

அடர்த்தியான கூந்தலை சிறு பின்னலாக போட்டு கூந்தல் பேண்டில் இறுக்கியிருந்தாள்.. காதுகளில் மெரூன் கற்கள் பதித்த பூத்தோடு.. கழுத்தில் மெரூன் வண்ணக் கற்கள் பதித்த அட்டிகை...

"எதுக்கும்மா கல் அட்டிகைகளைக் கொண்டு போகச் சொல்கிறீங்க.. எனக்கு ஃபேன்ஸியாய் எதையாவது மாட்டிக் கொள்ளத்தானே பிடிக்கும்..?"

காவேரியிடம் அவள் முரண்டுபிடித்து பார்த்தா.. மாலினியின் அடம் காவேரியிடம் எடுபவில்லை...

"நீ தங்கப் போகும் இடம் பாரம்பர்யம் பார்க்கும் குடும்பம்.. உன் சுடிதார்களையும் ஃபேன்ஸி நகைகளையும் இங்கேயே மூட்டை கட்டி வை.. அந்த வீட்டுப் பெண்கள் வேளைக்கொரு வைர நகைகளைப் போட்டுக் கொண்டு இருப்பவர்கள்.. நீ அவர்கள் அளவுக்கு இல்லாவிட்டாலும் போலி நகைகளைப்

போடாமல் நாளுக்கொரு கலரில் தங்க நகைகளைப் போடு..."

"அவர்கள் அளவுக்கு அவர்கள் இருக்கிறார்கள்..."

"நம் அளவுக்கு நாமும் இருக்கலாமில்லையா..?"

"அதுக்காக.. இப்படி எல்லா நகைகளையும் மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு போகச் சொன்னால் எப்படிம்மா..? அங்கே இவைகளை எப்படிப் பாதுகாப்பேன்..?"

"வெளியில் சொல்லிவிடாதே.. கேட்டவர்கள் சிரித்து விடுவார்கள்.. வைரங்கள் கொட்டிக் கிடக்கும் வீட்டில் நம் தங்க நகைகளை யார் கை வைப்பார்கள்..?"

காவேரி கூறியபோது அதை பெரிதாக மாலினி எடுத்துக் கொள்ளவே இல்லை.. இப்போது.. இந்த வீட்டில் காலடி எடுத்துவைத்த பின்னால்தான் அன்னையின் அறிவுரையில் இருந்த அர்த்தம் புரிந்தது...

பெண்களுக்கான நுட்பமான அறிவை எண்ணி வியந்து கொண்டாள் அவள்...

கைப்பையை எடுத்துக் கொண்டு அறையைப் பூட்டிவிட்டு கீழே இறங்கினாள்.. பாதிப் படிகளில் அவளை எதிர்கொண்ட செந்தாமரை...

"வந்துட்டீங்களாம்மா.." என்று வாயெல்லாம் பல்லானாள்...

"செந்தாமரை.." மாலினி பொய் கோபம் காட்ட...

"கீழே பெரியம்மா இருக்காங்கம்மா..." என்று ரகசியம் பேசினாள்..

"அப்போ சரி..."

மாலினி.. டைனிங் டேபிளுக்குச் சென்றாள்.. அங்கே எல்லோரும் அமர்ந்திருக்க.. காயத்ரி.. மாலினியைப் பார்த்து சிநேகமாக சிரித்தாள்...

"இன்னிக்குத்தான் டியூட்டியில் ஜாயின் பண்ணப் போகிறீங்களா..?"

"ஆமாம்..."

மாலினி.. சசிரேகாவின் அருகில் அமர்ந்து கொண்டே பதில் சொன்னாள்...

முதல் நாள் இரவு மாலினி குடுத்த குடுப்பில் ஸ்வேதா அடங்கிவிட்டது போலத் தெரிந்தாள்.. அதனால்.. சாப்பிடும் இடத்தில் கலவரம் வெடிக்கவில்லை...

"யூ லுக் வெரி நைஸ்..." தினகரன் நிமிர்ந்து பார்த்துச் சொல்ல...

"தேங்க்ஸ்.." என்று பதிலுக்கு சொல்லி வைத்தாள் மாலினி...

சசிரேகாவிடம் மெல்லிய குரலில் பேசியவாறு தோசையை மென்றுகொண்டிருந்தவள்.. தண்ணீர் குடிக்க நிமிர்ந்தபோது.. பிரபாகரன் அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டு இருந்தது தெரிந்தது.. அவனது புருவச் சுளிப்பு உணர்த்திய அதிருப்தி செய்தியைக் கிரகித்துக் கொண்டவள்...

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?' என்று யோசித்தாள்.. ஒன்றும் பிடிபடவில்லை...

'எதற்கோ முறைக்கிறான்.. முறைத்தால் முறைத்து விட்டுப் போகட்டும்...' அலட்சியப்படுத்த முயன்றாள்..

ஆனால், மனம் சுற்றிச் சுற்றி அவனிலேயே வந்து நிற்க...

'என்ன இது.. அவன் கோபமாய் பார்த்தால் எனக்கென்ன வந்தது...' என்று அலுப்புடன் எழுந்து கொண்டாள்..

"அத்தை.. ஒரு நிமிடம்..." என்ற குனிந்து நர்மதாவின் பாதத்தை நாசூக்காய் ஒரு விரலில் தொட்டுவிட்டு மாலினி நிமிர...

"என்னம்மா.. இது..?" என்று நர்மதா அதிசயப்பட்டுப் போனாள்..

"முதன்முதலில் வேலைக்குப் போகிறேன்.. பெரியவங்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ள

வேண்டும்.. அதனால் தான்..."

மாலினி பேசியபடி ஸ்வேதாவைப் பார்த்தாள்.. அவள் முகம் பயங்கரமாய் மாறியிருந்தது...

'உடம்பெல்லாம் மிளகாயை அரைத்துப் பூசியது போல் எரிகிறதா.. எரியட்டும்...' கேலியுடன் சிறு சிரிப்பொன்றை சிரித்தபடி சசிரேகாவைப் பார்த்தாள் மாலினி...

'பிரமாதம்...' அவள் கண்களால் பாராட்டினாள்.. நர்மதாவிற்கு உச்சி குளிர்ந்துவிட்டது...

"பூஜையறையில் போய் சாமியைக் கும்பிட்டுக்கம்மா.. அதுபோதும்..."

"காலையிலேயே கும்பிட்டுவிட்டேன் அத்தை.." மாலினி பவ்யமாகக் கூறினாள்...

"தினா.. பரந்தாமனைக் கூப்பிடு..."

நர்மதா உத்தரவிட்டதும் தினகரன் எழுந்து கொள்ளப் போனான்.. அவனை பார்வையிலேயே அமரவைத்த பிரபாகரன்,

"பரந்தாமன் எதுக்கும்மா..?" என்று வினவினான்...

"மாலினியை தக்கலையில் விட்டுவிட்டு சாயந்திரம் போய் கூப்பிட்டுக் கொண்டு வர வேண்டும்..."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

பிரபாகரன் இலகுவாக கூறிக்கொண்டு எழுந்து நிற்கவும், மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது...

'இவன் பார்த்துக் கொள்ளப் போகிறானா.. யாரை பார்த்துக் கொள்ள போகிறான்.. என்னையா..?'

அவள் மனதிற்குள் நினைத்ததை வாய்விட்டுக் கேட்டாள் ஸ்வேதா...

"நீங்கள் எதைப் பார்த்துக் கொள்ளப் போகிறீர்கள் அத்தான்..."

பிரபாகரன் பதில் சொல்லாமல் கடுமையாய் ஒரு பார்வை ஸ்வேதாவை பார்த்து வைத்தான்.. அவள் அடங்கிப் போனாள்.. நர்மதாவின் பக்கம் திரும்பியவன்..

"அம்மா... தக்கலையில் கட்டிக் கொண்டிருக்கும் மில்லைப் பார்க்க தினமும் நான் போய் வந்து கொண்டிருக்கிறேன்..." என்று சொன்னான்...

"ஆமாம் பிரபா..."

"நான் போகும் போது மாலினியை அவள் வேலை பார்க்கும் மில்லில் விட்டுவிட்டு வரும்போது கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்.. பரந்தாமன் ஏன் வீணாய் அலைய வேண்டும்..?"

"அதுதானே.. பரந்தாமன் அலைய வேண்டாம்தான்.."

"இங்கே.. வீட்டில் இருக்கிறவங்களுக்கு திடீர்னு வெளியில் போக வேண்டிய வேலை வந்துவிடும்.. அப்போது பரந்தாமன் இல்லாமல் கஷ்டமாகிவிடாதா..?"

"அதுதானே.. பரந்தாமன் இல்லாமல் கஷ்டமாகி விடும்தான்..."

"மாலினி.. நம் வீட்டுக்கு.. நம்மை நம்பி வந்திருக்கிறாள்.. நாம்தான் அவளைப் பொறுப்பாக பார்த்துக் கொள்ள வேண்டும்..."

"அதுதானே.. நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் தான்..."

"இரண்டு பேரும் ஒரே ஊருக்கு.. ஒரே நேரத்தில்.. தனித்தனி காரில் போய் வருவதைப் பார்க்கிறவர்கள் என்ன சொல்வார்கள்..? நம் சொந்தக்காரப் பெண்ணை அப்படித் தனி காரில் அனுப்பலாமா..?"

"அதுதானே.. அனுப்பக் கூடாததுதான்..."

நர்மதாவின் கம்பீரமான தோற்றமும் அவளுடைய கண்டிப்பும் பிரபாகரனின் முன்னால் பணிந்து போவதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலினி...

'இவனுக்கு ஹிட்லர்னு பெயர் வைத்ததில் தப்பேயில்லை...'

ஸ்வேதா கொதிகலனாய் மாறிக் கொண்டிருப்பதை மாலினியால் உணர முடிந்தது.. அவளைக் கடுப்பேற்று வதற்காகவாவது பிரபாகரனுடன் காரில் சேர்ந்து போக வேண்டும் என்று கண நேரத்தில் முடிவெடுத்தாள் அவள்..

"அப்போ.. நாங்க கிளம்புகிறோம் அம்மா..."

"போய்விட்டு வாங்க..."

மாலினி, பிரபாகரனைப் பின்தொடர யத்தனிக்கும் போது நர்மதாவின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது..

"மாலினி.. மதியச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டாயா..?"

"அங்கே கான்டீன் இருக்கும் அத்தை.. பார்த்துக் கொள்கிறேன்..."

பிரபாகரன் அவளைப் பார்த்த பார்வையில் பொருள் விளங்காதவளாய் புருவம் உயர்த்தினாள் மாலினி...

"கான்டீனில் போய் என்னத்தைப் பார்ப்பாய்..?"

"சாப்பாட்டைத்தான்.."

"அதை அங்கே போய் பார்க்க வேண்டாம்.. என்னோடு சேர்ந்து சாப்பிடு.. அம்மா.. எனக்கு லஞ்ச் அனுப்பும் போது மாலினிக்கும் சேர்த்து அனுப்புங்கள். அவள் என்னோடு சாப்பிட்டுக் கொள்வாள்..."

"அதுக்கென்ன பிரபா.. அப்படியே செய்து விடுகிறோம்..."

மாலினி ஒன்றைக் கவனித்தாள்.. பிரபாகரனின் பேச்சிற்கு எதிர்பேச்சைப் பேச யாரும் துணியவில்லை... அவன் வார்த்தைகளை வேதவாக்காய் எடுத்துக் கொண்டு செயல்பட்டார்கள்..

'பலே.. கில்லாடிதான்...'

அந்தக் கில்லாடி.. அவளுக்காக காரின் முன்பக்க கதவைத் திறந்துவிட்டான்...

'இவனை யார் இதையெல்லாம் செய்யச் சொன்னது.. எனக்கு ஏறிக்கொள்ளத் தெரியாதா...?'

மாலினி சங்கடத்துடன் ஏறி.. அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.. கார் கிளம்பியது...

சிலுசிலுவென காற்று வந்து முன்னுச்சி முடியைக் கலைக்க.. அவன் சன்னமாய் விசிலடித்தபடி காரை ஓட்டினான்...

'அட ஹிட்லருக்கு இதெல்லாம்கூடத் தெரியுமா..?' அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள்...

மெதுவாக... கூர்ந்து கவனித்தபோது.. அவன் விசிலில் ஒரு பாடலை 'ஹம்' பண்ணுவது அவளுக்குப் புரிந்தது.. அவளின் பார்வையை உணர்ந்தவன்.. விசிலை நிறுத்தாமல் அவளைப் பார்த்து புருவம் உயர்த்தினான்...

"இது என்ன பாட்டு..?"

"அம்மாடி.. பொண்ணுக்கு தங்க மனசு..

பொங்குது சின்ன மனசு..

கண்ணுக்கு நூறு வயசு...

அவ சொல்லுக்கு நாலு வயசு..."

பிரபாகரன் பாடிக் காட்டினான்.. அவனது குரல் அவளை வசீகரித்தது.. வீட்டில் அவன் காட்டிய கண்டிப்பான முகத்திற்கும் இப்போது இவன் காட்டும் இலகுவான முகத்திற்கும் சம்பந்தமே இல்லை என்று அவளுக்குத் தோன்றியது...

'இவனுக்குத்தான் எத்தனை முகங்கள்...?'

## 19

**உன் முகம் பார்த்தபோது...**

**என் மனம் நிறைந்த நிறைவை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"என்னெயில் எரியும் விளக்கு..

அவள் என்னையே அழைக்கும் சிரிப்பு..

என்னவோ நடக்குது நடப்பு..

அதில்.. ஏனோ சுகமும் இருக்கு..

யாருக்கு இந்தக் கதை தெரியும்..?

சாமிக்கு மட்டும் அது புரியும்...

பாலுக்குள் மோரும் கூட இருக்கும்..

நாலுக்கும் காலம் வந்தால் நடக்கும்.."

பிரபாகரன்... மாலினியின் புன்னகையை ரசித்த வண்ணம் உற்சாகமாகப் பாடினான்.. அவளுக்கு அவனை அந்தத் தோற்றத்தில் பார்க்கப் பார்க்க ஆச்சரியம் கூடிக் கொண்டிருந்தது...

"நிஜத்தில்.. உங்களுக்கு பாட்டை ரசிக்கக்கூடத் தெரியாதுன்னு நான் நினைத்தேன்..." உண்மையைச் சொன்னாள் மாலினி...

"வேறு எதை ரசிக்கத் தெரியும்னு நினைத்தாய்..?"

"பணத்தை.. புகழை..."

"ஊஹூம்? பெண்களின் அழகை ரசிக்கத் தெரிந்த வன்னு நினைக்கவில்லையா...?"

இவன் ஏன் இந்த வார்த்தையை இப்போது சொல்லு கிறான் என்று யோசித்தாள் மாலினி.. சம்பந்தமில்லாமல் அவன் எதையும் பேசிவிட மாட்டானே என்று இருந்தது அவளுக்கு.. தேவையில்லாத எந்த வார்த்தையையும் அவன் உதிர்க்க மாட்டான் என்று அறிந்து வைத்திருந்தாள் அவள்...

"எதற்காக இதைச் சொல்றீங்க..?" நேரடியாய் கேட்டு விட்டாள்...

"தினகரன் உன் அழகைப் புகழ்ந்ததும் அவனுக்குத் தேங்க்ஸ் சொன்னாயே.. அதனால் கேட்டேன்..."

'ஓஹோ.. கதை அப்படிப் போகிறதா.. ஹிட்லர் என்னை சைட் அடிக்க ஆரம்பித்து விட்டானா.. இதனால் தான் காலையில் அந்த முழி.. முழித்தானா..?' மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"ஏன் சிரிக்கிறாய்..?"

"அவரை என் அழகைப் புகழச் சொல்லி நானா கேட்டேன்..? அவராகப் புகழ்ந்தார்.. அதற்கு என்ன பதில் சொல்வதுன்னு தெரியாமல் தேங்க்ஸ் சொன்னேன்..."

மாலினி இயல்பாக பேசிய விதத்தில் பிரபாகரன் அவளை அழமாகப் பார்த்தான்...

'என்னடா இது.. இவன் இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்...' மாலினி முகம் சிவந்தாள்..

"ஸோ.. உன் அழகைப் புகழ்வதைப் பற்றி உனக்கு ஒன்றுமே இல்லை..."

'இவன் ஏன் சுற்றிச் சுற்றி அழகிலேயே வந்து நிற்கிறான்...?'

"அழகு என்பது எது அத்தான்..?" மாலினி வேண்டு மென்றே அத்தானை அழுத்தமாக உச்சரித்தாள்...

பிரபாகரன் சுற்றுமுற்றும் பார்த்தான்.. ஏன் இப்படிப் பார்க்கிறான் என்று மாலினியும் சுற்றிலும் பார்த்து வைக்க...

"அத்தான்னு நீ யாரைக் கூப்பிட்டாய்..?" என்று கேட்டு வைத்தான் அவன்...

"இந்தக் காரில் நீங்களும் நானும் மட்டும் தானே இருக்கிறோம்.. இதில், அத்தான்னு யாரை நான் கூப்பிடுவேன்...?"

"ஹப்பா.. என்னை ஒருவழியாய் உன் அத்தான்னு ஒப்புக்கொண்டாயே..."

"இப்போ இதுதான் பிரச்னையா..?"

"ஊஹூம்.. உண்மையான அழகு எது என்பதுதான் பிரச்னை..."

"ம்ம்.. சொல்லுங்க..."

"அது என்ன தேவைக்கு..? நீ மனதில் அதைப் பற்றி ஒரு முடிவோடு இருக்கிறாய்.. நான் எதைச் சொன்னாலும் நீ அதற்கு எதிர்வாதம் பண்ணத்தான் போகிறாய்.. அதற்கு முதலிலேயே நீ சொல்லிவிட.. நானும் கேட்டுக்கொள்வது பெட்டர் இல்லையா..?"

அவன் வரவழைத்துக் கொண்ட பவ்யத்துடன் பேசினான்...

அவ்வளவு பெரிய வீட்டில்.. தாய் முதற் கொண்டு அனைவரையும் கட்டுக்குள் வைத்திருக்கும் கண்டிப்பானவன்.. அவளிடம் மனம்விட்டுப் பேசி.. பாடி சிரிப்பதை நினைத்து அவள் வியந்து போனாள்.. அவன் பேச்சுக்கு எதிர்பேச்சு பேச எவரும் துணியாதபோது.. அவள் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசாமல் அவளை அவன் பேசவிடுவதை நினைத்து அவளது வியப்பு இன்னும் அதிகரித்தது...

"அழகு என்பது மனம் சார்ந்த ஒன்று அத்தான்..."

"யாருடைய மனம் சார்ந்தது..?"

"பார்ப்பவரின் மனம் சார்ந்தது.. மனம் விரும்பாத எதையும் அழகு என்று மனம் ஏற்றுக்கொள்ளாது... அதே சமயம் மனம் விரும்பிவிட்டால் அதைத்தான் உலகம் பேரழகு என்று சொல்லும்..."

பிரபாகரனின் விழிகளில் வியப்பும் பாராட்டும் கலந்து தோன்றி மறைந்தது...

"ஊம்.. அப்புறம்..?"

"நானென்ன கதையா சொல்கிறேன்..."

"இதைக் கதைன்னு யாராவது சொல்வாங்களா..? நீ கன்டினியூ பண்ணு மாலினி..."

"முக அழகைவிட அக அழகு வசீகரம் நிறைந்தது.."

"ஷ்யூர்..."

"அன்னை தெரஸா அழகா.. ஐஸ்வர்யாராய் அழகா.. என்ற கேள்வி வந்தால் நீங்கள் என்ன சொல்வீங்க..?"

"நான் சொல்வது இருக்கட்டும்.. நீயென்ன சொல்வாய்..?"

"அன்னை தெரஸாதான் அழகுன்னு சொல்லுவேன்..."

"நம்ம தினாவைக் கேட்டால்.. ஐஸ்வர்யாராய் தான் அழகும்பான்..!" பிரபாகரன் வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான்...

சிரிக்கும்போது அவன் முகத்தில் தோன்றிய கவர்ச்சி அவளை ஈர்த்தது...

'இவன் தான் எவ்வளவு அழகாக இருக்கிறான்...'

ஒரு கணம் அவன் அவ்வளவு பெரிய கோடீஸ்வரனாக இல்லாமல் சாதாரண நிலையில் இருப்பவனாக இருந்திருக்கக் கூடாதா என்று மாலினி ஏங்கினாள்...

'அப்படி மட்டும் இவன் எட்டும் கனியாக இருந்திருந்தால் நான் என் மனதை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையே...'

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட எண்ணங்கள்தான் ஆட்டுவிக்கும் என்று புரிந்தவளாய் மாலினி.. ஜன்னல் பக்கம் முகம் திருப்பிக் கொண்டாள்...

"தினாவின் நேச்சர் அப்படியாக இருக்கலாம்.." மாலினி மெதுவாக கூறினாள்...

"ம்ம்.. அவனுக்கு அழகான பெண்கள் மீது ஆர்வம் அதிகம்.. நீ அழகான பெண்..." பிரபாகரனின் முகத்தில் ஏதோ யோசனை படர்ந்தது...

"அழகைப் பற்றிச் சொல்லிவிட்டேன்.. அதற்கப்புறமும் என்னை அழகுன்னு சொன்னால் நானென்ன சொல்ல..?"

"அன்னை தெரஸாவுக்கு எது அழகு சேர்க்கிறது..?"

"அவர்களின் இரக்கம்.. கருணை.. அன்பு.. பாசம்.. தொண்டு.. அருள்.. இப்படி எத்தiயோ சொல்லலாம்.. அவங்க வாழ்விலயும் இளமை வந்தது.. ஆனால், அவங்க தன் இளமைக் காலம் முழுவதையும் தொண்டிலேயே செலவழிச்சாங்க.. ஷி இஸ் ஸோ கிரேட்..."

"ரியலி..."

பிரபாகரன் மாலினியைப் பார்த்த பார்வையில் வேறு ஏதோ ஒன்று இருக்க.. அது என்னவென்று புரியாமல் மாலினி குழம்பினாள்...

"மாலினி.."

"சொல்லுங்க அத்தான்..."

"நீ சொன்னது உண்மையா..?"

இப்படி மொட்டைக் காத்தான்.. குட்டையில் விழுந்தான் என்று சொல்லி வைக்கிறானே என்று மாலினிக்கு இருந்தது..

"எதைச் சொன்னேன்..? யாரிடம் சொன்னேன்..? எப்போது சொன்னேன்..?"

"யாரிடம்.. எப்போது சொன்னாய்னு மட்டும் நான் சொல்கிறேன்.. எதைன்னு நீயே புரிந்து கொள்..."

பிரபாகரனின் கண்களில் சிரிப்பு இருந்தது.. அவன் உல்லாசமாய் பேசினான்.. அவன் அப்படி நினைத்து நினைத்து மகிழ்ந்து போவதைப் போல தான் எதைச் சொன்னோம் என்று புரியாமல் விழித்தாள் மாலினி...

"அதையாவது சொல்லுங்களேன்..."

"நேற்று நைட்.. நீ ஸ்வேதாவிடம் சொன்னாயே..."

அவ்வளவுதான்.. மாலினியின் முகம் குங்குமமாய் சிவந்துவிட்டது.. இவன் அதை விடமாட்டான் என்று அவள் புரிந்து கொண்டாள்...

"லீவ் தட் மேட்டர்.. ப்ளீஸ்..."

"அது எப்படி.. அவ்வளவு சீக்கிரம் விடக்கூடிய விஷயமா அது..?"

"ஸ்வேதாவை கடுப்பேற்ற அப்படிச் சொல்ல வேண்டியதாகிவிட்டது.. ஐ ஆம் ஸோ ஸாரி..."

பிரபாகரனிடமிருந்து எந்த பதிலும் வராமல் போகவும்.. அவள் திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள்.. சற்று முன் அவளிடம் இருந்த இலகுத் தன்மை மறைந்து ஓர் கடினத்தன்மை அவனிடம் வந்திருந்தது..

'ஏன்.. இப்படி..?' அவளுக்கு பிடிபடவில்லை..

"ஸோ.. நீ பொய் சொல்லியிருக்கிறாய்..." என்று அவன் கூறவும்,

'இவ்வளவுதானா...' என்று நிம்மதியடைந்தாள் அவள்...

"நான் விளையாட்டுக்குக்கூட பொய் சொல்வதில்லை அத்தான்.." அவளுக்குத் தெரியும்.. அவள் 'அத்தான்' என்று அழைத்துவிட்டால் அவன் மலையிறங்கி விடுவான் என்பது. அவள் கணிப்பு சரியாக இருந்தது.. அவன் முகத்தில் லேசாக இணக்கம் தோன்றியது...

"இப்போதுதான்.. ஸ்வேதாவை கடுப்பேற்ற பேசினேன்னு சொன்னாய்..?"

"ம்ம்.. உண்மையாக இருந்தாலும்.. எல்லா நேரத்திலேயும் அதை வெளியில் சொல்லிவிட முடியுமா..?"

"ஏன் சொன்னால் என்ன..?"

மாலினி இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்ற நினைவுடன் அவனைப் பார்த்து சிரித்தாள்...

"சிரித்து மழுப்பாதே.. கேட்டதற்கு பதிலைச் சொல்லு..."

"அத்தான்.. ஸ்வேதாவை கடுப்படிக்க நான் உண்மையைச் சொன்னேன் போதுமா.. கொஞ்சம் ரோட்டைப் பார்த்து காரை ஓட்டுங்க..."

அவள் சொன்ன பதிலில் அவனது கோபம் முற்றிலும் தணிந்துவிட.. அவன் பழையபடி இலகுத் தன்மையுடன் அவளுடன் பேச ஆரம்பித்தான்...

"இது என்ன சென்னையா..? டிராஃபிக் ஜாம் ஆகிவிட..? மார்த்தாண்டம்மா..."

"என்னது.. அம்மாவா.. நான் உங்களுக்கு அம்மாவா..?"

அவள் விளையாட்டாய் சண்டைக்கு கிளம்ப.. அவன் கேலியாக சிரித்தான்..

"ஒரு மரியாதைதான்..."

"யாருக்கு வேணும் உங்க அம்மாங்கிற மரியாதை.. இப்படிக் கூப்பிட்டால் நான் உங்களை அத்தான்னு கூப்பிட மாட்டேன்..."

"வேற எப்படிக் கூப்பிடுவாய்...?"

"மகனேன்னு கூப்பிடுவேன்..."

"அஃது.. அந்த பயம் இருக்கட்டும்..."

அவன் பதில் சொல்லாமல் அவளைப் பார்த்தான்.. அவனது மௌனப் பார்வைக்குப் பின்னால் கட்டாயம் ஏதாவது ஒரு செய்தியிருக்கும் என்று அறிந்து வைத்திருந்தாள் மாலினி,

"ஊம்... சொல்லுங்கள்.." என்றாள்...

"எதைச் சொல்ல..?"

"உங்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணத்தைச் சொல்லுங்கள்..?"

"ஹா.. ஹா..."

"சிரித்துவிட்டால் தப்பித்துவிட முடியுமா..?"

"ஊம்.. ஹிட்லரையே பயமுறுத்தும் உன்னை என்ன பெயர் சொல்லிக் கூப்பிடுவதுன்னு நினைச்சேன்.. சிரிச்சேன்..."

தக்கலையில் இருந்த மில்லின் முன்னால் மாலினியை இறக்கிவிட்டான் பிரபாகரன்...

## 20

**உன் கண் போன போக்கில்...**

**என் கால் போகும் நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்த விசித்திரமான உணர்வை நினைத்து மனதிற்குள் ஆச்சரியப்பட்டாள் மாலினி...

வேலை பார்ப்பதற்காக என்று சென்னையை விட்டு மார்த்தாண்டம் கிளம்பி வந்தபோதுகூட இப்படியொரு உணர்வை அவள் உணரவில்லை...

பெற்றவர்களையும் கூடப் பிறந்தவனையும் பிரியப் போகும் வருத்தமிருந்தாலும் வேலைக்குப் போகிறோம் என்ற நினைவு அதை மறக்கடித்துவிட்டது...

ஆனால்.. மார்த்தாண்டத்திலிருந்து காரில் அழைத்து வந்து அவள் வேலை பார்க்கப் போகும் மில்லின் முன்னால் பிரபாகரன் இறக்கிவிட்டபோது.. முதல் நாள் பள்ளிக்கு தாயை விட்டுப் பிரிந்துபோகும் குழந்தையின் மன நிலையை அடைந்தாள் அவள்..

தயக்கத்துடன் பிரபாகரனைப் பார்த்தபடி மில்லிற்குள் செல்ல அவள் கால் வைத்தாள். அது நேரம் வரை அவள் முகத்தின் உணர்வுகளை ஆராய்ந்தபடி காருக்குள் அமர்ந்திருந்தவன்...

"ஒரு நிமிடம் மாலினி..." என்றபடி காரை விட்டு இறங்கினான்...

"என்ன அத்தான்..?"

"வா..."

"நீங்களும் என்கூட வருகிறீங்களா..?"

"ம்ம்ம்..."

சட்டென்று மாலினியின் கலக்கம் பறந்துபோய் விட, அவள் முகம் மலர்ந்தாள்...

"தேங்க்ஸ் அத்தான்..."

அவளுடைய மலர்வைக் கவனித்த பிரபாகரன், கனிவாக சிரித்தான்...

"எதுக்கு தேங்க்ஸ்... இது எங்கள் ஊர்... நீ என்னை நம்பி என்னுடன் வந்தவள்..."

பிரபாகரன் வேண்டுமென்றே அவளை வம்புக்கு இழுப்பதை அவனுது சிரிக்கும் கண்கள் காட்டிக் கொடுத்து விட்டன...

"வேண்டாம் அத்தான்... ஸ்வேதாவின் முன்னால் இப்படி வாய்விட்டு வைத்து விடாதீங்க..."

"ஏன்...?"

"அவளுக்கு இதயம் வெடித்துவிடும்..."

"அப்படிப் பார்த்தால்.. அவளுக்கு எத்தனையோ தடவை இதயம் வெடித்திருக்க வேண்டும்.. நீ... வா..."

பிரபாகரன்... அந்த மில்லின் மேனேஜிங் டைரக்டரின் அறைக்கே அவளை அழைத்துக் கொண்டு போய்விட்டான்.. பிரபாகரனை அங்கே அந்த நேரத்தில் எதிர்பார்த்திராத எம்.டி. எழுந்து அவனிடம் கைகுலுக்கினார்.. அவர் விழிகளில் அப்பட்டமான ஆச்சரியம் தெரிந்தது...

"வாங்க கே.பி.! எங்க மில்லில் உங்க காலடி பட்டிருக்கிறது.. வாட் கேன் ஐ டு பார் யு..?"

"ஷி இஸ் மாலினி..."

பிரபாகரன், மாலினியைக் காட்டிக் கூற... அவர் மாலினியைப் பார்த்து லேசாக தலையை ஆட்டினார்..

அடுத்து பிரபாகரன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் அவர் விழிகளில் ஆச்சரியம் அதிகரித்தது.. மாலினிக்கோ

தூக்கிவாரிப் போட்டது...

"இவள் என் அத்தையின் மகள்..."

'இது எப்போதிருந்து..?'

மாலினி திருதிருவென்று விழித்துக் கொண்டு பிரபாகரனைப் பார்க்க... அவனோ அவள் பார்வையைத் தவிர்த்தான்.. அவன் இதழ்களில் குறும்புச் சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்தது...

"உங்கள் மில்லில் வேலைக்குச் சேர வந்திருக்கிறாள்..."

"அந்த சென்னைப் பெண் இவங்கதானா..?"

"ஆமாம்.."

"உங்களிடம் எத்தனையோ தொழில் இருக்கு.. அதை விட்டு விட்டு என் மில்லில் இவங்க ஜாயின் பண்ண வந்திருக்காங்களே..."

"என் மில்லில் வேலை செய்தால் வேலை கற்றுக் கொள்ள முடியாது.. முதலாளிக்கு அத்தை மகள்னு முடக்கி விடுவாங்க.. இவள் வேலையை வேலையாக செய்ய வேண்டாமா..?"

இவன் எதற்கு இப்படி உதார் விடுகிறான் என்று விளங்காமல் இமை கொட்டினாள் மாலினி.. அவளை அவன் இதற்கு முன்னால் பார்த்ததுகூட இல்லை.. மார்த்தாண்டத்திற்கு வேலை கிடைத்த பின் அதைக் காரணமாக வைத்து வந்து இறங்கியிருக்கிறாள் மாலினி..

விஷயம் இப்படியிருக்க.. இவன் சணல் கயிறை திரிக்கிறானே என்று இருந்தது அவளுக்கு...

"வெல் மிஸ்டர் தங்கப்பன்! என் அத்தை மகளை விட்டு விட்டுப் போகிறேன்.. பார்த்துக் கொள்ளுங்கள்.."

'நானென்ன.. ஸ்கூலில் எல்.கே.ஜி-யில் சேர்ந்திருக்கும் குழந்தையா.. நீ பார்த்துக் கொள்ளச் சொல்ல...' மாலினி பல்லைக் கடித்தாள்...

"அதற்கென்ன பிரபாகரன்.. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். டோண்ட் வொர்ரி..."

'என்னத்தை பார்த்துக் கொள்வார்.. இவர் என்னுடைய எம்.டி... இவரிடம் போய் ஸ்கூல் டீச்சரிடம் பேசுவதைப் போல இவன் பேசுகிறானே..' மாலினி தலையில் கைவைத்துக் கொள்ளாத குறையாய் பிரபாகரனைப் பார்த்தாள்...

"வேலையை எல்லாம் நல்லா பார்ப்பாள்.. வெரி கிளவர் கேர்ள்.. ஸ்மார்ட் வொர்க்கர்..." பிரபாகரன், மாலினியை ரசனையாய் பார்த்தபடி தங்கப்பனிடம் பேசினான்...

'ஆமாம்.. நீ ரொம்பக் கண்டுவிட்டாய்...'

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமே..." தங்கப்பன் புகழ்ச்சியாக பேசி வைக்க...

'இதை ஏன் அவர் இப்போது போய் சொல்கிறார்...' என்று பலத்த சிந்தனையில் ஆழ்ந்தாள் மாலினி..

மாலினியின் மனதைப் படித்தவனாக பிரபாகரன்...

"எதனால் அப்படிச் சொல்கிறீங்க..?" என்று கேட்டான்...

மாலினி மகா நன்றியுடன் பிரபாகரனை ஒரு பார்வை பார்த்தாள்...

"உங்கள் வீட்டிலிருக்கும் உங்கள் அத்தை மகள்.. புத்திசாலியாகவும் வேலையில் கெட்டிக்காரத்தனமாகவும் இருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது பிரபாகரன்..? அப்படி இல்லாவிட்டால் தான் ஆச்சரியப்படனும்.." தங்கப்பன் படு வினயமாகப் பதில் சொன்னார்..

'ம்ஹூம்.. உலகத்தில் ஐஸ் வைப்பவர்களைப் பார்த்திருக்கிறேன்.. ஐஸ்கட்டியை வைக்கிறவர்களைப் பார்த்திருக்கிறேன்.. இப்படி ஐஸ் பாறையையே தூக்கி வைப்பவர்களை இப்போதுதான் பார்க்கிறேன்...' மாலினி நொந்தே போனாள்...

"அப்ப நான் கிளம்புகிறேன் தங்கப்பன்..."

"போய் வாங்க பிரபாகரன்..."

"மாலினி..?"

"வேலையை ஆரம்பிக்கட்டும்..."

பிரபாகரன் ரகசியப் புன்னகையுடன் ஒரு சிறு தலையசைவுடன் விடைபெற்றுக் கொண்டு அறை வாசல் வரை போனவன்.. நின்று மாலினியைத் திரும்பி பார்த்தான்...

"லன்ச் அவர்ஸ் என்ன தங்கப்பன்..?"

"ஒன் டு டூ..."

"மாலினி லன்சுக்கு நான் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்..."

மாலினியின் பதிலை எதிர்பார்க்காமல் அவன் வெளியேறிவிட்ட பின்னால்தான் அவள் சுதந்திரமாய் உணர்ந்தாள்.. கட்டுகளற்ற ஆசுவாசப் பெருமூச்சு விட்டபடி தங்கப்பனைப் பார்த்து வணக்கம் சொன்னாள்..

"ப்ளீஸ்.. டேக் யூவர் ஸீட்..."

அவர் மிகுந்த அக்கறையுடன் சொல்லவும்... ஸீட்டில் அமர்ந்து அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரை அவரிடம் கொடுத்தாள்.. அவர் போனை எடுத்து.. உதவியாளரை அழைத்தார்...

"ஜிஎம்மை என் ரூமிற்கு வரச்சொல்லுங்க..."

ஜெனரல் மேனேஜர்.. மாணிக்கவாசகம் உள்ளே வந்ததும்...

"இவங்க மாலினி.. நம்ம மில்லில் இன்றைக்கு ஜாயின் பண்ண வந்திருக்கும் மெக்கானிக்கல் இன்ஜினீயர்..." என்று அறிமுகப்படுத்தினார்...

"தெரியுமே சார்.. சென்னையிலிருந்து வருகிறாங்க.."

"உங்களுக்கு அது மட்டும்தானே தெரியும். இவங்க கேபியுடைய அத்தை மகள்.. அது தெரியுமா..?"

"ஈஸிட்.. இவங்க இன்டர்வியூவில் அதைப் பற்றிச் சொல்லவேயில்லையே..."

மாணிக்கவாசகம் திரும்பி மாலினியை ஆச்சரியமாகப் பார்க்க.. அவள் சலிப்புடன் தன் தலையைப் பிடித்துக் கொண்டாள்...

'யோவ்.. எனக்கே.. இப்படியொரு மாமன் மகன் இருப்பது நேற்றுத்தான் தெரியும்யா..!'

"கேபியே நேரில் வந்து சொல்லிவிட்டுப் போனார்.."

"அவரே வந்தாரா..?"

'உங்களுக்கு மட்டும்தான் ஆச்சரியமா.. எனக்கும் அவன் மில்லுக்குள் வந்து கலக்கிவிட்டுப் போனதில் ஆச்சரியம்தான்.. நான் நினைத்தா பார்த்தேன்..? இப்படி யெல்லாம் நடக்குமென்று...'

"இவங்களுடைய வொர்க் என்னன்னு சொல்லிடுங்க மாணிக்கவாசகம்.. ஜாயினிங் ரிப்போர்ட் வாங்கிக்குங்க.. கேபியுடைய அத்தை மகள்.. நம் மில்லில் வேலைக்குச் சேர்ந்திருப்பது நமக்கெல்லாம் பெருமையான விஷயம்..."

'சும்மாவா பழம்பெருமை பரந்தாமன் அப்படி அளந்துவிட்டார்...!'

பிரபாகரனின் செல்வாக்கின் அளவை நேரிலேயே கண்கூடாக கண்டுவிட்ட மாலினி.. மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

சென்னையிலிருந்து மிகப் பெரிய மில்லில் ஜூனியர் இன்ஜினீயராக வேலை பார்க்கப் போகும் பெருமையுடன் அவள் மார்த்தாண்டத்தின் மண்ணை மிதித்திருக்கிறாள்..

அந்த மில்லின் முதலாளி எழுந்து நின்று கைகுலுக்கி பிரபாகரனை வரவேற்கிறார் என்றால்.. பிரபாகரன் எவ்வளவு பெரிய ஆளாக இருக்க வேண்டும்..?

சற்று நேரத்திற்குள்ளாகவே பிரபாகரனின் அத்தை மகள் அந்த மில்லில் வேலைக்குச் சேர்ந்திருக்கும் செய்தி மில் முழுவதும் பரவியது..

எல்லோரும் ஏதாவது ஒரு வேலையை சாக்கிட்டுக் கொண்டு வந்து அவளைப் பார்த்துவிட்டுப் போனார்கள்..

"கேபி சாருக்கு அத்தை மகளாம்..."

முணுமுணுப்புகள் காதில் விழுந்தன.. அதைக் கேட்காததைப் போன்ற பாவனையுடன் அவள் வேலையைப் பற்றி அறிய முயன்று கொண்டிருந்தாள்.. சற்று நேரத்தில் அவளுக்கு வேலை பிடிபட்டுவிட்டது...

"ஒரே நாளில் எல்லாத்தையும் கரைச்சுக் குடிச்சு கத்துக்க முடியாது மிஸ் மாலினி.. முதலில் நேச்சர் ஆஃப் வொர்க் என்னாங்கிறதைச் சொல்கிறேன்.. நாளாக ஆக நீங்களே பழகிக்குவீங்க..."

அவளுடைய சீனியர் இன்ஜினீயர் ரமேஷ் கூறினான்.. அவன்தான் காலையிலிருந்து அவளுக்கு பொறுமையாக வேலையின் தன்மையைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தான்..

"நீங்க மட்டும் டீச்சராகப் போயிருந்தீங்கன்னா.. உங்க கிளாஸ் ஸ்டூடண்ட்ஸ் எல்லோருமே உங்க சப்ஜெக்டில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கியிருப்பாங்க.." மாலினி பாராட்டதலாகக் கூறினாள்...

அவன் ஏதோ சொல்ல வாய் திறந்துவிட்டு சட்டென்று மௌனமாகி விட்டான்...

'இவனுக்கு என்ன ஆச்சு.. என்னிடம் சகஜமாகப் பேச ஏன் யோசிக்கிறான்..?'

மாலினிக்குப் புரியவில்லை.. அவள்தான் நினைப்பதையெல்லாம் வெளியில் கேட்டுவிடுவாளே..

அவளும் கேட்டாள்.. ரமேஷும் பதில் சொன்னான்.. அவன் சொன்ன பதிலைக் கேட்டு மாலினிக்கு சிரிப்பதா.. இல்லை அழுவதா என்று தெரியவில்லை...

**இரவினில் தூங்க.. இமை மூட முயன்றால்..**

**உன் முகம் வந்து துயிலை.. துரத்துகின்ற நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"நீங்க கே.பி. சார் வீட்டுப் பெண்.. உங்களிடம் சகஜமாகப் பேசிப் பழக யோசனையாக இருக்கு..."

மாலினிக்கு சட்டென்று பிரபாகரனின் மேல்தான் கோபம் வந்தது.. இயல்பாக இருக்க முடியாமல் அவளுடைய சுதந்திரம் பாதிக்கப்படுவதைப் போல உணர்ந்தாள்...

'இவனை யார் என்னை உறவு கொண்டாடிக் கொண்டு என் மில் வரைக்கும் வரச் சொன்னது...'

அவளுக்குள் எரிச்சல் உற்பத்தியானது.. அவன் யார்.. அவள் யார்.. ஒரு திரைப்படப் பாடலில் வருவதைப் போல.. நேற்று வரை அவள் யாரோ.. அவன் யாரோ.. இன்று மட்டும் வேறு வேறாக இல்லாமல் ஒன்றாகிவிட்டார்களா என்ன..?

'இதெல்லாம் அவனுக்கே ஓவராகத் தெரியலையா..?'

"நான் இங்கே வேலை பார்க்க வந்திருக்கிறேன் சார்... என்னை உங்களின் ஜூனியர் இன்ஜினீயராக மட்டும் பாருங்கள்.. நான் யார் வீட்டுப் பெண்ணாக இருந்தால் என்ன..? இந்த மில்லில் அது என் அடையாளமில்லையே.. என்னை.. என் அடையாளத்துடன் பாருங்கள்.."

"ஓகே..."

அவள் இயல்பாகிச் சிரித்தான்.. அதற்குப் பின்னால் தயக்கமில்லாமல் அவளிடம் பேசிப் பழகினான்...

மதிய உணவு நேரம் நெருங்கும்போது மாலினியின் செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தாள். அடையாளம் தெரியாத நம்பர் என்றது போன். எச்சரிக்கையுடன் மிக மெதுவான குரலில்...

"ஹலோ.." என்றாள்..

"எதுக்கு இவ்வளவு பயம்..? என் அத்தை மகளிடம் போன் பேசக்கூட இந்த ஊரில் யாரும் துணிய மாட்டார்கள்" என்றான் பிரபாகரன்..

என்ன சொல்வது என்று புரியாமல் எதிரில் அமர்ந்திருந்த ரமேஷைப் பார்த்தபடி...

"சொல்லுங்க..." என்றாள் மாலினி...

"மில்லுக்கு வெளியில் காரில் வெயிட் பண்ணிக் கொண்டு இருக்கிறேன்.. வா..."

"எதுக்கு..?"

"ம்ம்.. உச்சி வெயிலில் ஊர் சுற்றிப் பார்க்க? மணி என்னன்னு பார்த்தியா..?"

மாலினி கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்று என்றது. அதைச் சொன்னாள்.

"தெரியுதில்ல.. வா.."

"எதுக்கு..?"

"மண்டு.. இது கொட்டிக் கொள்கிற டயம்..."

'ஓ.. லன்ச் டயமா.. ஆனால்.. அதுக்கு எதுக்கு இவன் என்னை வெளியில் கூப்பிடுகிறான்...'

ரமேஷை வைத்துக் கொண்டு இதற்கு மேல் பேசக் கூடாது என்ற நினைவுடன் மாலினி எழுந்து கொண்டாள்..

"என்ன?" என்றான் ரமேஷ்...

"லன்ச் முடித்துட்டு வர்றேன்.." மாலினி கைப்பையை எடுத்துக் கொண்டாள்...

"நீங்க கையில் எடுத்துக்கிட்டு வரலையா..?"

"இல்லை..."

"நம்ம மில் கான்டீனில் சாப்பாடு வெரைட்டியாகவும் ருசியாகவும் இருக்கும்..."

மாலினி தயக்கத்துடன்...

"அத்தான் வந்திருக்கிறார்.." என்றாள்...

"யார்.. கே.பி. சாரா..?" ரமேஷ் பரபரப்புடன் கேட்டான்...

"ஆமாம்..."

"எனக்கு உங்களைப் பார்த்தால் பொறாமையா இருக்கு மாலினி..."

"எதுக்கு..?"

"கே.பி. சாரின் பக்கத்தில் நின்று ஒரு வார்த்தை யாவது பேசிவிடணும்கிறது என்னுடைய நீண்ட நாள் கனவு.. இதுவரைக்கும் அது நிறைவேறவில்லை. நீங்க கொடுத்து வைத்தவங்க. அவருடைய உறவுக்காரப் பெண்ணாக இருக்கிறீங்க. அவருடன் பேசிப் பழக உங்களால் முடிகிறது..."

இந்த வார்த்தைகளை ஒரு பெண் சொல்லியிருந்தால் அதில் ஒரு அர்த்தம் இருக்கிறது.. இதைச் சொன்னது ஆண்...

மாலினிக்கு ரமேஷின் ஏக்கத்தைப் பார்க்கும் போது ஒரு பக்கம் அதிசயமாகவும் மறுபக்கம் வேடிக்கையாகவும் இருந்தது..

"என்னுடன் வாங்களேன்.. உங்களுக்கு அவரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.." என்று அழைத்தாள்..

"நிஜமாகவா..?" ஆர்வத்துடன் எழுந்து வந்தான் ரமேஷ்.

மில்லிற்கு வெளியே நின்றுகொண்டிருந்த பிரபாகரனின் காரருகே சென்றவுடன் மாலினி குனிந்து.. கார் ஜன்னலின் வழியாக பிரபாகரனைப் பார்த்தாள்...

"அத்தான்.. இவர் என் சீனியர் இன்ஜினீயர் ரமேஷ்..."

"அப்படியா..."

பிரபாகரன் காரை விட்டு இறங்காமல் லேசாக முறுவலித்தான்.. அதற்கே ரமேஷ் மகிழ்ந்து போய்விட்டான்..

"போகலாமா மாலினி..."

பேச்சு முடிந்துவிட்டது என்பதை உணர்த்தும் விதமாக அவன் கூற... மாலினி கார் கதவைத் திறந்து அவனருகில் அமர்ந்து ரமேஷிற்கு கையசைத்தாள்..

கார் கிளம்பியதும் பிரபாகரன் இறுக்கமான குரலில் அவளிடம் வினவினான்.

"நீ வேலையில் ஜாயின் பண்ணி மூன்று மணி நேரம் தான் ஆகிறது. அதற்குள். 'டாட்டா' சொல்கிற அளவுக்கு அவனுடன் பழகிவிட்டாயா..?"

மாலினிக்கு அவனது குரலின் தொனியும் அவன் முகத்தின் கோபமும் கேள்வி கேட்ட விதமும் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

"உங்களைக்கூட எனக்கு நேற்று ஈவினிங்கில் இருந்து தான் தெரியும். உங்கள் பக்கத்தில்

காரில் உட்கார்ந்து வேலைக்கு வருகிற அளவுக்கு பழகவில்லையா.. அது போல்தான் இதுவும்.." என்று பட்டென்று சொல்லிவிட்டாள்....

பிரபாகரன் திரும்பி அவளை முறைத்த முறைப்பில் தெரிந்த பயங்கரம்.. அவளது முதுகுத் தண்டை சில்லிடச் செய்தது...

"அவனும் நானும் ஒன்றா..?" வில்லில் இருந்து வெளிப்பட்ட கூரிய அம்பு போல் கேள்விக்கணை பாய்ந்து வந்தது...

'ஆமாம்..' என்று சொல்லத்தான் மாலினி ஆசைப் பட்டாள்..

ஆனால்.. பிரபாகரனுக்கு காட்டமாக பதில் சொல்ல வேண்டும் என்ற பிடிவாதத்திற்காக மனதை மறைத்து பொய் சொல்ல அவளால் முடியவில்லை...

பார்த்த முதல் பார்வையிலேயே அவளது கருத்தை கவர்ந்து நிறைந்த முதல் ஆண் மகன் பிரபாகரன்தான்..

ரமேஷ் அலுவலகத் தோழன். அவனும் பிரபாகரனும் எப்படி ஒன்றாக முடியும்...?

மாலினி மௌனம் சாதித்தாள்...

"என்ன.. பதிலைக் காணோம்..?" பிரபாகரன் காரை சாலையோரமாக நிறுத்திவிட்டான்..

"இப்ப எதுக்காக காரை நிறுத்தறீங்க..."

"உன் பதிலைக் கேட்க..."

"அதை காரை ஓட்டிக்கொண்டே கேட்கலாமே..."

"காரை ஓட்டினால் என் மில் வந்துவிடும்..."

"வந்தால் என்ன..?"

"அங்கே ஆண்கள் வேலை செய்து கொண்டிருக்கிறாங்க..."

"வேலை செய்தால் என்ன..?"

"நம்மைக் கவனிப்பார்கள்..."

"கவனித்தால் என்ன?"

"நீயென்ன கே.பி. சுந்தராம்பாளா.. எதுக்கெடுத்-தாலும் 'என்ன... என்ன.. என்ன'ன்னு கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாய்..?"

பிரபாகரனின் குரலில் பழைய கேலி லேசாக திரும்பியிருப்பதைக் கண்டதும்.. இன்னதென்று விவரிக்க முடியாத வகையில் மாலினியின் மனம் அமைதியானது. அவன் பாணியிலேயே பதிலைக் கொடுக்க அவளும் உற்சாகமாய் முனைந்தாள்...

"கே.பி யின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறேன் இல்லையா.. அதனால்தான் கே.பி. சுந்தராம்பாள் ஆகிவிட்டேன்.."

பிரபாகரனின் முகத்தின் இறுக்கம் இன்னும் கொஞ்சம் குறைந்தது..

"இதிலெல்லாம் குறைச்சல் இல்லை..."

"வேறு எதில் குறைச்சல்...?"

"கே.பி-யின் அத்தை மகள்... கூட வேலை பார்க்கிறவனுக்கு டாட்டா சொல்லலாமா...?"

பிரபாகரன் அதிலேயே நிற்க.. மாலினிக்கு கோபம் போய் சிரிப்புத்தான் வந்தது...

"அத்தான்..." என்றாள் சிரித்துக் கொண்டே...

அந்த ஒரு வார்த்தைக்குத்தான் எத்தனை சக்தி..?

பிரபாகரன் முக இறுக்கம் முற்றிலும் தளர்ந்தவனாய் அவளைப் பார்த்தான்...

"அவரும்.. நீங்களும் ஒன்றில்லைன்னு இப்போது புரிகிறதா... அவர் என்னுடன் வேலை பார்ப்பவர்... வெறும் நண்பர்.. நீங்கள் என் அத்தான்..."

பிரபாகரனின் விழிகளில் உல்லாசம் நிரம்பியது...

"ம்ம்.. அப்புறம்..?" என்று அவளை மேலும் பேசத் தூண்டினான்...

"அப்புறம்.. நீங்கள் என் மாமா மகன்.. வெரி ஹேண்ட்சம் மேன்.. அதனால்..." மாலினி முடிக்காமல் நிறுத்த...

"அதனால்..?" என்று ஆவலுடன் வினவினான் பிரபாகரன்...

"அதனால்... சைட் அடிக்கணும்னு நினைத்தால் உங்களைத்தான் சைட் அடிப்பேன்.. இப்பவாவது காரைக் கிளப்புறீங்களா..?"

பிரபாகரன் இப்போது முகமெல்லாம் சிரிப்பாக...

"ஹா.. ஹா.." என்று சிரித்தான்...

காரைக் கிளம்பியபடி அவளை திரும்பிப் பார்த்து...

"அப்படின்னா.. நீ இன்னும் என்னை சைட் அடிக்க ஆரம்பிக்கவில்லையா..?" என்று விஷமமாக கேட்டான்...

மாலினியின் முகமும் சிவந்துவிட்டது.. அவள் நகத்தைக் கடித்தபடி ஜன்னல் பக்கமாக முகம் திருப்பிக் கொண்டாள்...

"ஆனாலும் மாலினி.. கூட வேலை பார்க்கிறவங்-களிடம்கூட அளவாகப் பழக நீ பழகிக் கொள்ள வேண்டும்..."

பிரபாகரன் அதிலேயே நிற்க... இவன் இந்தப் பேச்சை விட மாட்டானா என்று எரிச்சல்பட்டாள் மாலினி...

"அத்தான்.. நான் சென்னையில் பிறந்து வளர்ந்தவள்..."

"ஆனால், இது மார்த்தாண்டம்..."

"இன்ஜினீயரிங் படிக்கும் போது.. ஆண்களுடன் சேர்ந்துதான் படித்தேன்..."

"அதை இப்போது எதற்காக சொல்கிறாய்..?"

"ஆண்.. பெண் வித்தியாசமில்லாமல் எல்லோரிடமும் இயல்பாய்.. நட்பாய் பழகித்தான் எனக்குப் பழக்கம்..."

"ஸோ.. என் பேச்சை நீ கேட்க மாட்டாய்..?"

பிரபாகரன் மறுபடி காரை நிறுத்திவிட... இவன் வீட்டிற்கு வந்தாலும் வந்தோம்.. பசித்த நேரத்தில் ஒரு வாய் சாப்பாட்டை ஒழுங்காக உள்ளே தள்ள முடியவில்லை என்று மானசீகமாய் தலையில் கைவைத்துக் கொண்டாள் மாலினி,

"உங்கள் பேச்சைக் கேட்காமல் யார் பேச்சை நான் கேட்கப் போகிறேன் அத்தான்.. தயவுசெய்து காரை எடுங்க..."

"மாலினி..."

"அந்த ரமேஷிற்கு உங்கள் மேல் அளவு கடந்த காதல்...!"

"என்ன.. என்ன சொன்னாய்...?"

தன் காதுகளில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாமல் மாலினியைப் பார்த்தான் பிரபாகரன்...

'நான்தான் சரியாகக் கேட்கவில்லையா...?'

"அந்த ரமேஷிற்கு உங்கள் மேல் கரை கடந்த காதல்னு சொன்னேன்.."

"ஏய்ய்..."

பிரபாகரன் அவளை அடிக்க கையை ஓங்கினான்.. மாலினி கலகலவென்று தலையைச் சாய்த்து அவனைப் பார்த்து சிரித்தாள்..

அந்த நிமிடத்தில் அவர்கள் இருவரும் காலம் காலமாய் பழகியவர்கள் போல் உணர்ந்தார்கள்...

## 22

**நீ உயிர் துறக்கச் சொன்னால்...**

**உடனே என் உயிர் பிரியும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

முதல் நாள் மாலையில்தான் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். ஆனால்.. பிறந்ததில் இருந்து அறிந்தவர்களைப் போல அவர்கள் பேசிப் பழகிக் கொண்டர்கள்...

"நிஜமாகத்தான் சொல்கிறேன் அத்தான்... நான் உங்களுக்கு உறவுக்காரியென்பதில் ரமேஷிற்கு அவ்வளவு பொறாமை. உடனே இதற்கு குதர்க்கமாய் அர்த்தம் கண்டு பிடித்து விடாதீர்கள். அவர் பொறாமைப் பட்டது என்னைப் பார்த்து, உங்களைப் பார்த்து இல்லை..."

"அது ஏன்..?"

"ஏன்னா.. என்னால் உங்களோடு பேச முடிகிறதாம்.. பழக முடிகிறதாம்.. அவரால் அது முடியலையாம்.. உங்களைப் பற்றிப் பேசும்போது அவருடைய முகம் ஜொலித்த ஜொலிப்பு இருக்கிறதே.. அந்த ஜொலிப்பை ஸ்வேதாவிடம்கூட நான் பார்க்கவில்லை..."

"இப்போது எதுக்கு ஸ்வேதாவின் பேச்சை எடுக்கிறாய்..?"

"அவள்தானே உங்களை.. என்னுடைய ஆள்னு சொன்னாள்..."

இதைக் கேட்டதும் பிரபாகரனின் கண்கள் மின்னின...

'இவன் எதற்கு ஒரு மார்க்கமாய் பார்க்கிறான்...' என்று யோசித்தாள் மாலினி...

புரியாமல் அவனைப் பார்த்து புருவம் உயர்த்தினாள் மாலினி...

"நான் உன்னுடைய ஆளா..?"

'கடவுளே.. இவன் அதற்கு இப்படியொரு அர்த்தத்தை கண்டுபிடித்திருக்கிறானா...'

"அவசரப்படாதீங்க அத்தான்.. அவள் உங்களை அவளுடைய ஆளுன்னு சொன்னாள்.. அதைத்தான் நான் இந்த லட்சணமாய் சொல்லிவிட்டேன்..."

"நிஜமாவா..?"

அவன் நம்பாத பாவனையில் கூற... இருவரும் இணைந்து சிரித்தார்கள்...

"அவள் சொன்னால்.. நீ கேட்டுக் கொள்வதா..?"

"இதென்ன வம்பா போச்சு.. நான் முந்தா நாள் பெய்த உறவுமுறையில் நேற்று முளைத்த உறவுக்காரி... அவள் பிறந்ததிலிருந்து உங்களுக்குச் சொந்தக்காரி. அவள் சொன்னால் நான் கேட்டுக் கொள்ளாமலிருக்க முடியுமா..?"

"திரும்பவும் என்னிடம் அடி வாங்கப் போகிறாய்..."

"என்னை அடித்தால் நான் சொன்னது இல்லை யென்றாகி விடுமா..?"

"அவள்.. எங்க உறவில் பாதிப் பேரை அவளுடைய ஆள்னுதான் சொல்வாள்.. எங்கள் வீட்டிலேயே முதலில் கருணாவை சைட் அடித்தாள்.. அவன் தப்பித்து சசிரேகாவின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டான்..."

"ஐஸீ..."

"அடுத்து.. தினகரனின் மேல் காதல் கணையை விட்டுப் பார்த்தாள்.. அவன் இவளிடமெல்லாம் கிளீன் போல்டு ஆகமாட்டான். இவள் விட்ட அம்பை திருப்பி இவள் பக்கமே வீசிவிட்டு.. கல்லையும் மண்ணையும் பார்ப்பதைப் போல இவளையும்.. உனக்கெல்லாம் ஒரு கணக்கானு பார்த்துவிட்டுப் போய்விடுவான்..."

மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது. சிரித்தாள். அவள் சிரிக்கும் அழகை ரசித்தவாறு தொடர்ந்து பேசினான் பிரபாகரன்...

"இப்போது என் பெயரைச் சொல்லிக் கொண்டு அலைகிறாள்..."

"நீங்கள் தடா போட மாட்டீங்க என்ற தைரியமாக இருக்கலாம்..."

மாலினியின் பேச்சில்.. 'நீ தடா போடவில்லை...' என்ற மறைமுக குற்றச்சாட்டு எதிரொலித்தது...

பிரபாகரனுக்கு அது புரிந்தது.. அவன் பார்வை கூர்மையாக அவள் மேல் படிந்தது. அந்தப் பார்வையைக் கண்டு அவள் திணறிப் போனாள்...

"நான் தடா போடவில்லைன்னு உனக்குத் தெரியுமா...?"

மாலினி இதற்கு மேல் அதைப் பற்றிப் பேசக்கூடாதென்ற உணர்வுடன் மௌனித்து விட்டாள்...

"என்ன பேச்சைக் காணோம்..?"

"இவ்வளவு பேசியதே அதிகப்படி..."

"நீ அப்படிக்கூட நினைப்பாயா..?"

பிரபாகரன் கிண்டலுடன் கேட்டுவிட்டுச் சிரித்தான்.. அவன் சிரிக்கும்போது தெரிந்த வரிசைப் பற்களின் வசீகரத்தில் மயங்கிப் போனாள் மாலினி.

'ச்சீ... என்ன நினைப்பு இது.. இவனே எட்டாக்கனி. இவனைப் பார்த்து மயங்கி என்ன லாபம்..?' தன் மனதை அடக்க முயன்றாள்...

"ஸ்வேதா என் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணனின் மகள். அவளைக் கடிந்து பேசினால் அம்மாவிற்கு மனதிற்குள் வருத்தமாக இருக்கலாம். பெண்களுக்கே உரிய பிரத்தியேக உணர்வு அது. அவங்களுக்கு பிறந்தவிட்டுப் பாசம் அதிகமிருக்கும். அவங்க பெரியப்பாவின் பேத்தியைச் சொன்னால்

அவங்க வருத்தப்படுவாங்கன்னு பொறுமையாய் போகிறதுதான்.."

"எதுவரை பொறுமையாய் போவீங்க..."

"அவள் லிமிட்டைத் தாண்டாத வரை.. நேற்றே பார்த்தாய்தானே..."

நிஜம்தானே... ஸ்வேதா அளவைக் கடந்து பேசியதும் பிரபாகரன் அவளை வன்மையாகக் கண்டிக்கத் தயங்க வில்லையே...

தக்கலையின் பிரதான சாலையிலிருந்த மிகப் பெரிய கட்டடத்தின் வளாகத்திற்குள் கார் சென்றது.

மாலினி வேலைக்கச் சேர்ந்திருந்த மில்லைவிட மிகப் பெரியதாக இருந்த அந்த மில்லின் சுற்றளவை அவள் வியப்புடன் பார்த்தாள்...

"என்ன பார்க்கிற..?" என்று கேட்டான் பிரபாகரன்..

"எங்க மில்லைவிட.. பத்து மடங்கு பெரியதாக இந்தமில் இருக்கும் போல இருக்கே..."

"உங்க மில்லா.. நீ அந்த மில்லை விலைக்கு வாங்கியிருக்கிறாயா..?"

"ம்ஹூம்.. வேலை செய்கிற விசுவாசத்துடன் ஒரு வார்த்தை பேசிவிடக் கூடாதே.. உடனே குற்றம் கண்டு பிடித்து விடுவீங்களே..."

மாலினி அந்த மில் வளாகத்தை ஆர்வத்துடன் பார்க்க ஆரம்பித்தாள்...

மிகச் சிறிய கிராமத்தைப் போல ஆங்காங்கே கட்டங்கள் வரிசையாகத் தென்பட.. அவற்றைச் சுற்றி வளைத்து அகன்ற சாலைகள் ஓடின.. சாலையின் இருபக்கமும் வரிசையாக மரக்கன்றுகள் நடப்பட்டு இருந்தன. ஒவ்வொரு கட்டடத்தின் வாசலிலும் மலர்களின் பெயர்களைக் கொண்ட பலகைகள் தென்பட்டன.

மாலினி அவற்றை வாய்விட்டுப் படித்தாள்.

"முல்லை.. மல்லிகை.. ரோஜா.. சாமந்தி.. அல்லி.. சூரியகாந்தி.. தாமரை.. அந்தி மந்தாரை.. வாவ்.. மருக்கொழுந்தைக்கூட விடவில்லையே அத்தான்..."

"ம்ம்.. இங்கேயிருக்கும் ஒவ்வொரு செக்ஷனுக்கும் ஒரு பூவின் பெயரை வைத்தேன்.."

"பூன்னா அவ்வளவு இஷ்டமா..?"

"ம்ம்.. பூவைப் போல சிரிக்கிறவங்கன்னாலும் எனக்கு ரொம்ப இஷ்டம்தான்..."

மாலினி மலர் சிரிப்பைக் கவனித்தபடி அவன் கூறவும், மாலினியின் முகம் சிவந்துவிட்டது.

"சென்னையில் பிறந்து வளர்ந்தேன்னு வெறும் வாய்சவடால் அடிக்கிற.. ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்.. இப்படி வெட்கப்படறே..."

பிரபாகரன் அவளை ரசனையாய் பார்த்தபடி கூறவும்.. அவளது வெட்கம்.. இன்னும் அதிகமாகி விட்டது...

"அட..." என்று சிரித்தவன்.. அவளைத் தனது அலுவலகம் இருந்த மெயின் பில்டிங்கிற்கு அழைத்துக் கொண்டு போனான். மூன்று தளங்களுடன் இருந்த அந்தக் கட்டடத்தில் லிஃப்ட் வசதி இருந்தது. மூன்றாவது மாடியில் நீண்ட வரண்டாவில்.. நடு மையத்தில் மிகப் பெரியதாக இருந்த அவனது அறையின் முன்பகுதி ஹால் போல இருந்தது. சோபாசெட்டுகள் போடப்பட்டிருக்க.. ஹாலின் நடுமையத்தில் டீப்பாய் இருந்தது. அதில்.. தினசரி.. வாராந்திர.. மாதாந்திர பத்திரிகைகள் வைக்கப்பட்டிருந்தன.. ஹாலின் மூலையில் டி.வி. இருந்தது.

வெறுமையாக இருந்த சுவர்களைப் பார்த்த மாலினி..

"இதில்.. அழகான பெயிண்டிங்குகளை வாங்கி மாட்டி வைக்கலாமே..." என்று கூறினாள்...

"அதை நீயே செய்யேன்.." இலகுவாக பதில் சொன்னான் பிரபாகரன்..

"நானா...?" அவள் மலைத்தாள்.

"ஏன்.. உன்னால் முடியாதா..? பணம் நான் கொடுக்கிறேன்ம்மா.. செலக்ஷனை மட்டும் நீ செய்தால் போதும்..."

"பின்னே.. மார்த்தாண்டபுரத்து மகாராஜாவின் மில்லுக்கு என் கைப்பணத்தை போட்டு பெயிண்டிங் வாங்கி மாட்டவா நான் நினைப்பேன்? அந்த அளவுக்கு எனக்கு வசதி பத்தாது அத்தான்..."

"அப்புறம் எதுக்கு அந்த 'நானா..'? ..ம்ம்...?"

"அந்த 'நானா..'.. வேறு ஒன்றுக்கு போட்ட 'நானா..'.. புரிகிறதா..?"

"எந்த ஒன்றுக்கு போட்ட 'நானா..'ன்னு சொன்னால்தானே புரியும்..?"

"இவ்வளவு பெரிய மில்லை.. ஏறக்குறைய ஒரு ஊர் போல இருக்கிறது.. இதை திட்டமிட்டுக் கட்டி.. ஒவ்வொரு

பில்டிங்கிற்கும் மலர்களின் பெயரை வைத்துன்னு தூள் கிளப்புகிற.. உங்கள் ரூமில் நான் இன்டீரியர் டெக்கரேட் பண்ணுவதா..? எனக்கு உங்கள் அளவிற்கு எல்லாம் மண்டையில் மசாலா இல்லை அத்தான்..."

"யார்? உனக்கு? மண்டையில் மசாலா இல்லை..? இதை நான் நம்ப வேண்டுமாக்கும்.. நேற்றைக்கு நைட்.. ஸ்வேதாவை தாக்குதாக்கென்று தாக்கினாயே.. உனக்கா மண்டையில் மசாலா இல்லை?"

"ஆஹா.. என் அறிவைப் புகழ உங்களுக்கு வேறு உதாரணமே கிடைக்கவில்லையா அத்தான்.. ஸ்வேதாதான் கிடைத்தாளா? இல்லை.. இதை சாக்கு வைத்து அவள் பெயரைச் சொல்லிக் கொள்ள ஆசையா..?"

"உன்னை..."

அவன் மீண்டும் கையை ஓங்க.. அவள் கலகல வென்று சிரித்தாள்.. பிரபாகரனின் முகத்தில் இளநகை அரும்பியது...

"உள்ளே வா..."

முன்புற ஹாலைத் தாண்டியதும் இருந்த அறையில் பக்கவாட்டில் ஜன்னலோரமாக சோபாக்கள் போடப்பட்டு இருக்க.. சுழல்நாற்காலியுடன் இருந்த டேபிளின் முன்னால்... இரண்டு குஷன் வைத்த சேர்கள் போடப்பட்டிருந்தன. அறையுடன் ஒட்டிய அட்டாச்சுடு பாத்ரூம்...

இங்கும் சுவர்கள் வெறுமையாக இருந்தன. மாலினி அதைப் பார்க்க...

"ஹாலை அலங்கரித்தது போல இங்கேயும் அலங்கரித்து விடு..." என்றான் பிரபாகரன்..

"ஹாலை அலங்கரித்தேனா..?" மாலினி திகைத்தாள்...

"மனதில் அலங்கரிக்கவில்லையா..?.?"

"அத்தான்.. நீங்கள் பெரிய ஆள்தான்..."

"அப்படித்தான் இந்த மார்த்தாண்டத்தில் சொல்லிக் கொள்கிறார்கள்..."

பிரபாகரனின் எதிரே இருந்த சேரில் அமர்ந்து கொண்ட மாலினி.. டேபிளில் இருந்த சாப்பாட்டுக் கூடையை தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்...

23

**உன்கால் பதித்த தடத்தில்...**

**என் கால் நடக்கும் நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி... பிரபாகரனுக்கும் தனக்கும் தட்டு வைத்து பரிமாற ஆரம்பித்தாள். அதை மனதிற்குள் வெகுவாய் விரும்பிய பிரபாகரன்.. வெளியே வாய் வார்த்தைக்காக...

"உனக்கு ஏன் சிரமம்..?" என்று சொல்லி வைத்தான்..

"ஹை.. ஹை... பரிமாற ஆள் வேண்டும்னுதானே வேலை மெனக்கெட்டு எங்கள் மில்லுக்கு வந்து லன்ச் சாப்பிடுன்னு சொல்லி என்னைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தீங்க.. அப்புறம் எதுக்கு பாவலா பண்றீங்க..." என்று தலைசாய்த்து சிரித்தாள் மாலினி...

"கண்டுபிடித்துவிட்டாயே..." என்று விளையாட்டாய் பதிலுக்குப் பேசிய பிரபாகரன்... எதிரே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மாலினியை ஊன்றிக் கவனித்தான்...

அவள் பேசும்போதும் சிரிக்கும்போதும் லேசாக தலைசாய்த்து கொள்வதை அவன் கவனித்திருந்தான்..

சசிரேகாவிடம் பேசும்போது அவள் கண்களைச் சிமிட்டி.. தலைசாய்த்து சிரித்ததை நினைவில் வைத்திருந்தான்.

அடர்ந்த.. கரிய கூந்தலை.. சென்னை நாகரிகத்தின் படி அவள் வெட்டி விட்டிருந்தாள்... சிவந்தமேனி. ஒல்லியாக இல்லாமல் லேசாக பூசினாற்போல இருந்தது. வட்ட முகத்தில்.. அழகான.. பெரிய கருவிழிகள் அம்சமாக இருந்தன. குடைபோல் அடர்ந்த முடிகளுடன் கூடிய கவிழ்ந்த இமை. அவளது விழிகளின் அழகுக்கு அழகைச் சேர்த்தது.

குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவள்.. நிமிராமலேயே... "பார்வையிட்டு முடித்தாச்சா..?" என்று விசாரித்தாள்...

அவனுக்கு தூக்கிவாரிப் போட்டதுடன் சிரிப்பும் சேர்ந்து வந்தது...

'ஹா.. ஹா...' என்று சிரித்து முடித்தவன்...

"எப்படிக் கண்டுபிடித்தாய்..?" என்று கேட்டான்..

"இதைக் கண்டுபிடிப்பது என்ன பெரிய கஷ்டமான விஷயமா..?" மாலினி கைகழுவ எழுந்தாள்..

அவன் அவளை பார்த்ததை இயல்பாக எடுத்துக் கொண்டு அவள் எதிர்கொண்ட விதம் அவனைக் கவர்ந்தது...

காரில் மில்லுக்கு திரும்பும்போது "தேங்க்ஸ்..." என்றான் அவன்.

"எதுக்கு..?" அவள் புரியாமல் பார்த்தாள்..

"ரொம்ப நாளாச்சு மாலினி.. நான் இப்படி மனம் விட்டு சிரித்து. வேலை.. வேலை.. வேலைதான். வீட்டுக்கு வந்தால் இங்கேயும் என்கூட சிரித்துப் பேச ஆளிருக்காது..."

"ஏன்.. காயத்ரி இருப்பாளே..."

"அவளுக்கு பெரியண்ணா என்ற பாசமும் மரியாதையும் நிறைய உண்டு. ஆனால்.. என் முன்னால் நின்று பேச மாட்டாள்..."

"தினகரன்..? அவர் விளையாட்டுத்தனமானவராச்சே..."

"அது எப்படி உனக்குத் தெரியும்..?"

அவன் குரல் மாறி ஒலித்தது. அவள் வாயைக் குவித்து "ஊப்ப்..." என்றாள்...

"என்ன..?"

"ஒரு வார்த்தை மத்தவங்களைப் பத்தி நான் பேசிவிடக்கூடாதே. உடனே முறைக்கிறீங்களே. என்ன சார்... என்ன விஷயம்..?"

"சாரா...?" பிரபாகரன் முகம் விளக்கெண்ணெயை குடித்தவனைப் போல ஆனது..

"இந்த அத்தான்... பொத்தானையெல்லாம் அப்புறமாய் பேசிக்கலாம். முதலில் நான் கேட்பதற்கு பதிலைச் சொல்லுங்கள்..."

"என்ன கேட்கப் போகிறாய்..?"

"என்னை காதல் கீதல் பண்ணுகிறீங்களா..?"

பிரபாகரன் வியப்புடன் அவள் முகத்தைப் பார்த்தான்.. அவள் குறும்பாக புருவங்களை மேலே தூக்கினாள்...

"ஏய்ய்.. மாலினி..." பிரபாகரன் மீண்டும் சிரித்தான்..

இதுவரை அவன் வாழ்வில் இப்படி ஒரு பெண்ணை அவன் சந்தித்ததே இல்லையென்று அவன் மனதிற்குத் தோன்றியது.

மாலினி அழகானவளாகத் தெரிந்தாள்.. அறிவான வளாக இருந்தாள்.. குறும்புத்தனத்துடன் சுட்டித்தனமும் அவளிடம் இருந்தது. சிரித்துப் பேசினாள். சிரிக்கப் பேசினாள்.. ஒரு பார்வையில் முகம் சிவந்தாள். இன்னொரு பார்வையை இயல்பாக எதிர்கொண்டு பரிகசித்தாள்...

கடைசியாக.. அவனைப் பார்த்து 'என்னைக் காதலிக்கிறாயா...' என்று கேட்டுச் சிரித்து வைத்தாள்...

ஒவ்வொரு தருணங்களிலும்... ஒவ்வொரு கோணங்களிலும் அவள் வெளிப்படுத்திய பரிமாணம் அவனை எங்கோ அழைத்துச் சென்றது...

இத்தனை நாளும் அவன் காத்திருந்தது இப்படியொரு பெண்ணிற்காகத்தான் என்று அவன் மனம் சொன்னது...

"என் இனிஷியல் 'ஏய்ய்..' இல்லை.. 'ஜே...'.. அது தெரியுமா.. இல்லை தெரியாதா..? அதனால் என்னை 'ஏய்ய்.. மாலினி...'ன்னு கூப்பிடாமல், 'ஜே. மாலினி...'ன்னு கூப்பிடுங்க..." அவள் அதற்கும் சிரித்தாள்...

"ம்ம்.. உன்னிடம் பேசி ஜெயிக்காமல் விட்டால் என் பெருமை என்ன ஆவது..?"

"ஸோ..?"

"ஆமாம்.. நான் உன்னைக் காதல்தான் பண்ணுகிறேன்னு நான் சொல்கிறேன்னு வை... என்ன பதில் சொல்வதாக உத்தேசம்..?"

மாலினியின் மில் வந்து விட்டிருந்தது. கார் கதவைத் திறந்து கொண்டே மாலினியும் பதில் சொன்னாள்...

"அதை ஈவினிங் நீங்க கூப்பிட வரும்போது சொல்கிறேன்.. பை..."

அவள் கையாட்டிவிட்டு மில்லுக்குச் சென்றுவிட்டாள்... அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரபாகரனின் உதடுகளில் உற்சாகப் புன்னகை வந்தது.. முதல் நாள் மாலையில் இருந்து இந்த உலகமே அழகாக மாறிப் போய்விட்டதை எண்ணி வியந்தபடி காரைத் திருப்பினான்...

"ஒருமாலை இளவெயில் நேரம்..

அழகான இளவேனில் காலம்..

சற்றுத் தொலைவிலே...

அவள் முகம் பார்த்தேன்...

அங்கே தொலைந்தவன் நானே..."

வாய்விட்டுப் பாடியவாறு காரை ஓட்டிக் கொண்டிருந்த பிரபாகரனுக்கு.. இது அவனேதானா என்று சந்தேகம் ஏற்பட்டது....

'இத்தனை நாளும்.. இந்த உற்சாகமும் புத்துணர்வும் எங்கே போனது..? என்னால் இப்படிப் பேசிச் சிரிக்க முடியும் என்பது எனக்கே.. இப்போதுதானே தெரிகிறது..? வேலையின் பளுவைத் தாங்க முடியாமல் மூச்சுத் திணறித் திணறி கடுமையான முகமூடியின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தேனே.. என்னை மீட்கவென்று வந்த தேவதையா.. இவள்..?'

அவன் மனக்கண்ணில்.. பூவாய் மலர்ந்த சிரிப்பும் மாசு மருவற்ற பால் போன்ற முகத்துடன் மாலினி தெரிந்தாள்...

'பார்க்கலாம்.. ஈவினிங் என்ன பதிலைச் சொல்கிறாள் என்று...'

பம்பரமாய் சுழன்று வேலை பார்த்து.. வேலையும் வாங்கும் முதலாளி.. இன்றைக்கு நிதானமாக நடை பழகி வேலை சொல்லிக் கொண்டிருந்ததை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் வேலையாட்கள்...

மாலையில்.. மாலினியின் மில்லின் முன்னால் மனமெல்லாம் ஓர் எதிர்பார்ப்புடன் காத்திருந்தான் பிரபாகரன்...

தூரத்தில் தெரிந்த மாலினியின் முகத்தையே பருகுவதைப் போல அவன் பார்த்துக் கொண்டிருக்க... காரில் ஏறி அவனருகே அமர்ந்தவள்.. கைகளை அவன் முன்னால் ஆட்டிச் சிரித்தாள்...

"என்ன ஆச்சு.. மார்த்தாண்டபுரத்தின் மகாராஜா.. அந்திவேளையில் ஆனந்தமாய் கனவு கண்டுகொண்டிருக்கிறாரா..?"

பிரபாகரன்.. லேசான புன்னகையுடன் காரைக் கிளப்பி மெதுவாக ஓட்டினான்...

"நீ செந்தமிழ்நாட்டின் தமிழ்ச்சின்னு எனக்குத் தெரியும்.. அதுக்காக இப்படி எதுகை மோனையோடு தமிழ் பேசி என்னைக் கலங்கடிக்க வேண்டாம்..."

"தமிழைப் பற்றியெல்லாம் நீங்கள் பேசவே கூடாது.."

"ஏன்.. ஏன்.. ஏன்..?"

"எதற்கு இத்தனை.. 'ஏன்..'?"

"உன் சென்னைத் தமிழைப் பற்றி எனக்குத் தெரியாதா..? இன்னாம்மே.. கயிதே.. கசுமாலம்.. லொட்டு.. லொசுக்குன்னு.. அங்கே பிறந்து.. வளர்ந்தவள்னு பெருமையடிச்சுக்கிட்டு.. நீ என்னைத் தமிழ்ப் பேசக்கூடாதுன்னு சொல்றயா..?"

"தோடா.. இவர் பெரிதாக சென்னைத் தமிழைப் பற்றிச் சொல்ல வந்துட்டார்.. அது சிங்காரத் தமிழாக்கும்.."

"சிங்கார சென்னைன்னு நான் கேள்விப்பட்டிருக் கிறேன்... இப்போது உன் புண்ணியத்தால் தான் சிங்காரத் தமிழைப் பற்றிக் கேள்விப்படுகிறேன்.. அதுசரி.. உன் சிங்காரத் தமிழைவிட எங்கள் தமிழ் எந்த வகையில் குறைந்து போய்விட்டது..?"

"நீங்கள் பேசுவது தமிழா..? அதை மலையாளம்னு தான் சொல்லணும்.."

"கேரளா பார்டரில் இருக்கிறோம்.. எங்கள் பேச்சு கொஞ்சம் மலையாள வாடை கலந்துதான் இருக்கும்.. பட்.. எங்க வீட்டில் யாரும் அப்படிப் பேச மாட்டோமே.. சுத்தத் தமிழில்தானே பேசுவோம்..."

"இது ஒரு பெருமையாக்கும்.."

"இல்லையாக்கும்.."

அந்தி நேரத்துக் காற்றில்.. அலை பாயும் முடியை லேசாக ஒதுக்கிவிட்ட வண்ணம் அவளுடன் சரிக்குச் சரியாய் வம்பிழுத்து விளையாட்டாய் பேசிக் கொண்டு காரை ஓட்டிக்

கொண்டிருந்தவனைப் பார்த்தபோது.. அவளுள் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்தது...

அந்தச் சுற்று வட்டாரமே முழுப் பெயரையும் சொல்லாமல் மரியாதையுடன் 'கே.பி..' என்று சொல்லும் ஒருவன்.. அவனருகே நின்று பேச.. ஒரு சிறிய வாய்ப்புக் கிடைக்காதா என்று பல உயர்மட்ட ஆண்களை ஏங்க வைக்கும் ஒருவன்.. பெற்ற தாய்கூட எதிரே நின்று பேச யோசிக்கும் தன்மை கொண்ட ஒருவன்.. கண்டிப்புக்கும் கறார் தன்மைக்கும் பெயர் பெற்ற ஒருவன்.. தந்தையை மிஞ்சிய பெருமை கொண்ட ஒருவன்.. தன் குடும்பத்திற்கு ஆணிவேரைப் போன்ற ஒருவன்.. எங்கும் எதிலும் முதன்மையான அந்தஸ்தைப் பெற்ற ஒருவன்... அவளுக் காக காரை ஓட்டியபடி அவளுடன் சரிசமமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை உணர்ந்தவளுக்கு பிரமிப்பாக இருந்தது..

அவன் யார்.. இவள் யார்..? இருவருக்கும் இடையே உள்ள பந்தம்தான் என்ன? அப்படியொன்றும் நெருங்கிய சொந்தமில்லையே...

அவளுடைய தூரத்துச் சொந்தக்கார பெரியப்பாவின் மகளை அவனுடைய தம்பி காதல் திருமணம் பண்ணிக் கொண்டிருக்கிறான்...

சுற்றி வளைத்து மூக்கைத் தொடும் இந்த சொந்தத்தில் அவன் எப்படி அவளுக்கு அத்தானாக மாறினான் என்பது அவளுக்கு இப்போதும் ஆச்சரியத்தைத் தந்தது...

சசிரேகா உருவகித்த விதத்தில் அவனை ஹிட்லராக நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு அவனது இந்த இன்னொரு கலகலப்பான முகம் எதிர்பாராத ஒன்றாக இருந்தது..

அவன்.. அவள் விரும்பிய வகையில் மிக கம்பீரமான முழுமையான ஆண்மகனாக இருந்தான்.. அதுவரை ஆண்களின் முகம் பார்த்து விழி பார்த்துப் பேசும்.. நேர்கொண்ட பார்வையுடன் கூடிய நிமிர்வான மாலினி.. முதன்முறையாக ஒரு ஆண்மகனைப் பார்த்து வெட்கி முகம்

சிவந்து விழி தாழ்த்தினாள் என்றால்.. அது பிரபாகரனைப் பார்த்துதான்...

24

**நீ பார்க்கும் பார்வை...**

**என் நிழலாகும் விதத்தை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"இப்போது பதில் சொல்..?" என்றான் பிரபாகரன்..

இவன் எதைப் பற்றிச் சொல்லச் சொல்கிறான் என்ற நினைவுடன் புரியாமல் அவனைப் பார்த்தாள் மாலினி...

"என்ன பதிலைச் சொல்லச் சொல்கிறீங்க... எதற்கு பதிலைச் சொல்ல சொல்கிறீங்க..?"

"என்னவோ ஆண்கள் தான் மறதியில் எக்ஸ்பெர்ட்.. பெண்களை மறந்துவிடுவாங்கன்னு சொல்லுவாங்க... நீ பிளேட்டையே மாத்திப் போடுகிறாயே..."

"என்னத்தை மாத்தி யோசிச்சேன்..?"

அவள் குழம்பிப் போனவளாக விழிக்க... அவன் விஷமச் சிரிப்புடன் எடுத்துக் கொடுத்தான்...

"மதியம்... யாரோ என்னைக் காதல் பண்றீங்களான்னு கேட்ட நினைவு.. அதுக்கு நானும் காதல் பண்ணுவதாக வைத்துக் கொண்டால் அதுக்கு அவங்க என்ன பதில் சொல்வாங்கன்னு கேட்டதாக நினைவு..."

இப்போது நினைவுக்கு வந்துவிட.. அவள் முகம் சிவந்தாள்.. அவன் மேலும் சீண்டினான்...

"என்ன மேடம்... பதிலைக் காணோம்..."

"மேடமா.. நானா.. உங்களுக்கா..?"

"ஹ.. பேச்சை மாற்றாதே.. பதிலை சொல்லு..?"

'விட மாட்டேன்கிறானே..' மாலினி நகம் கடித்தாள்..

"நகம் கடிக்காதே.. அது மோசமான பழக்கம்..."

"என் நகம்.. நான் கடிக்கிறேன்..."

"ஊஹூம்.. அந்தப் பேச்செல்லாம் என்னிடம் செல்லாது.. முதலில் கையை ஒழுங்காக வைத்துக் கொண்டு உட்காரு.. இன்னொரு தடவை என் முன்னால் நகம் கடித்தேன்னு வை.. அடி விழும்..."

மாலினி.. அவசரமாக கைகளைக் கோத்துக் கொண்டு நேராக உட்கார்ந்து அவனை முறைத்தாள்...

"இது என்ன பெரிய அராஜகமாக இருக்கிறது... மிலிடிரி கண்டிஷனையெல்லாம் என்கிட்ட போட்டால் எப்படி...?"

"நான்தான் ஹிட்லராச்சே.. இப்படித்தான் இருப்பேன்.. இந்தப் பெயரை எனக்கு வைத்தவள் நீதானே.. ஹிட்லரின் கண்டிஷன் எப்படியிருக்கும்னு உனக்குத் தெரியாதா..?"

"அடேங்கப்பா.. பெரிய பெருமைதான்.."

"அந்தப் பெருமையை விடு.. முதலில் என் கேள்விக்குப் பதிலைச் சொல்லு..?"

திரும்பவும் நகம் கடிக்க வேண்டிய நிலைமைக்கு ஆளான மாலினி.. கையை வாயருகே கொண்டு போன போது அவன் பார்வை அதட்டியதைக் கண்டு அவசரமாய் கையை மீண்டும் கோத்துக் கொண்டாள்...

"நீ சொல் பேச்சே கேட்கமாட்டியா..?"

"இப்படி என்னை டென்ஷனாக்கினால் நான் என்ன செய்வதாம்..?"

"எதுக்கு டென்ஷன்..? கேள்வி கேட்க தைரியமிருந் தவளுக்கு பதில் சொல்லத் தைரியமில்லையா..?"

பிரபாகரன் காரின் வேகத்தை இன்னும் குறைக்கவும்.. மாலினி அவன் பக்கம் திரும்பினாள்...

"ரோட்டில் நடந்து போகிறவனெல்லாம் நம்மை ஓவர்டேக் பண்ணிவிட்டுப் போகிறான்.. இப்படியா காரை ஓட்டுவீங்க.. உங்கள் பில்ட் அப்பைப் பார்த்தால் சோழாவரம் கார் ரேஸில் ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்குகிறவர்ன்னு இல்ல நான் நினைச்சேன்..."

பிரபாகரன் இப்போது காரை நிறுத்தியே விட்டான்...

"ஏன்.. உங்க வீட்டுக்கு என்னைக் கூப்பிட்டுக் கொண்டு போகும் எண்ணமே இல்லையா..?"

"சோழவரம் ரேஸில் கலந்துக்கிறதைப் போல நான் காரை ஓட்டினேன்னு வை.. ஒரே நிமிஷத்தில் நாம் வீட்டிலிருப்போம்..."

"செய்ய வேண்டியதுதானே.. யார் உங்க கையைப் பிடித்தது..?"

அவளுடைய பேச்சினால் பிரபாகரன் கவரப்பட.. கீழ் உதட்டை மேல் பல்லால் கடித்தபடி ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தான்.. அவனது பார்வை அவளை என்னவோ செய்தது..

'இவன் ஒருத்தன்.. வாயைத் திறந்து இவனிடம் ஒரு வார்த்தை அதிகமாக பேசித் தொலைத்துவிடக்கூடாது. உடனே 'சைட்' அடிக்க ஆரம்பித்து விடுவான்.. எனக்கு வேறு இவனைப் பிடித்துத் தொலைக்கிறது. இவனோ உச்சாணிக் கொம்பில் இருந்து தொலைக்கிறான்..

எனக்கு சமமாக இருந்தாலாவது தைரியமாக பதிலுக்கு சைட் அடித்து வைக்கலாம்.. இவனுடைய உயரமே வேறு.. அண்ணாந்துகூட நான் பார்க்க முடியாது.. எட்ட முடியாத தொலைவில்.. வானத்தைத் தொடும் மலையுச்சியில் இருப்பவனிடம் நான் காதலைப் பற்றி எப்படிப் பதிலைச்

சொல்வது... வேடிக்கையாக நான் பேசினதை விடமாட்டேன்னு இவன் பிடித்துத் தொங்கி கொண்டிருக்கிறானே...'

என்னவென்று சொல்ல முடியாத மனக்கிளர்ச்சியை அடைந்த மாலினி.. பதில் சொல்லாமல் மௌனித்தாள்..

"கையைப் பிடிப்பாயா..?" அவன் மௌனத்தை கலைத்தான்...

"அத்தான்.. ப்ளீஸ்..." அவள் குரல் மன்றாடலாய் வெளிப்பட்டது...

"நீதானே.. என் கையைப் பிடிப்பதைப் பற்றிப் பேசினாய்...?"

"அடடா..."

"என்னையா.. 'டா..'ன்னு சொன்னாய்..?"

"உங்களைப் போய் அப்படிச் சொல்வேனா.. நான் ஒரு பேச்சுக்கு அப்படிச் சொன்னேன்..."

"எல்லாத்தையுமே பேச்சுக்குத்தான் சொல்வாயா..?"

'இவன் கையைப் பிடிப்பதிலேயே நிற்கிறான்...' அவள் முகம் சிவந்தாள்..

"நீங்க பிடித்தால் பிடித்த பிடிதான் அத்தான்.. விடவே மாட்டேன்கிறீங்களே..."

திரும்பவும் அவனிடம் மாட்டப் போவதை அறியாமல் வாய்விட்டாள் மாலினி...

அவன் கண்கள் ஒளிரவும்தான்.. தான் பேசிய வார்த்தைகளின் பொருளே அவளுக்குப் புரிந்தது.. அவள் கையை பிசைந்தாள்...

'இன்றைக்கு எனக்கு என்னவாகித் தொலைத்தது.. இப்படி வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டிருக்கிறேனே...'

"என் பிடியில் இன்னும் நீ சிக்கவேயில்லையே மாலினி... அதற்குள் என் பிடியைப் பற்றி இவ்வளவு தெளிவாக தெரிந்து வைத்திருக்கிறாயே..."

பிரபாகரன் கிண்டலாகப் பேச ஆரம்பிக்க.. மாலினி சட்டென்று தன் காதுகளைப் பிடித்துக் கொண்டாள்...

"போதும்.. அத்தான்.. போதும்.. தெரியாமல் வாய் விட்டு விட்டேன்.. நீங்க கொஞ்சம் புண்ணியம் பார்த்து என்னை விட்டு விடுங்களேன்..."

"பார்த்தாயா.. இப்போதும் நீதான் வாய் விடுகிறாய். நானென்ன.. உன்னைப் பிடித்தா வைத்திருக்கிறேன்... விடச் சொல்கிறாயே..."

"ஒரு காம்ப்ரமைஸிற்கு வரவே மாட்டீங்களா அத்தான்..."

"வந்துவிட்டால் போச்சு..."

"ஆயிரம்தான் இருந்தாலும் நான் உங்க கெஸ்ட்..."

"வெறும் கெஸ்ட் மட்டும்தானா..? அத்தை மகளாச்சே..."

'அந்த அத்தை மகளை நீ விடவே மாட்டாயா..'

இதை வாய்திறந்து சொல்லிவைத்தால்.. அடுத்து அவன் அதைப் பிடித்துக் கொள்வான் என்று அறிந்து வைத்திருந்ததால்.. மாலினி அதைக் கண்டுகொள்ளாமல் பேசினாள்...

"தெரியாத்தனமாய் வாய் விட்டுவிட்டால் அதைப் போய் நீங்க பெரிது பண்ணலாமா..?"

"நீயா தெரியாமல் பேசுகிறவள்..?"

"உங்களைப் பற்றித் தெரியாமல் பேசிவிட்டேன்.. போதுமா.. இப்பவாவது காரை எடுக்கறீங்களா..?"

"அப்ப.. நீ பதில் சொல்ல மாட்டாய்..."

"அதுதான் சமாதானத்திற்கு வந்துவிட்டேனே.. அப்புறமும் எதுக்கு வம்பு..?"

"நல்லாயிருக்கே கதை.. நீதானே.. காதல் பண்றீங்களான்னு கேட்டாய்.. நான் அதுக்கு பதிலைச் சொன்னேனா.. இல்லையா..? நீ மட்டும் ஜகா வாங்கினால் என்ன அர்த்தம்..? எனக்கு அதெல்லாம் தெரியாது.. நீ பதிலைச் சொல்லு.."

இவன் ஓட ஓட விரட்டினான்.. அவள் ஓடிக் கொண்டேயிருக்க வேண்டுமா..?

சட்டென்று அவன் பக்கம் பார்த்த மாலினி புருவத்தை கித்தாய்ப்பாக உயர்த்தினாள்.. அவன் கண்கள் மின்னின..

"இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது ஹிட்லர் சார்.. நீங்க என்ன சொன்னீங்க.. 'நான் காதலிக்கிறேன்னு வை..'ன்னு சொன்னீங்க.. அப்படி உத்தேசமாய் சொல்லுவதற்கெல்லாம் நான் என் உத்தேசத்தை சொல்லிவிட முடியாது..."

"ஊஹூம்..? ஓகே.. நான் உன் வழிக்கே வருகிறேன்.."

"வந்துதானே ஆகணும்.."

"நான் உன்னைக் காதலிக்கிறேன்.. இப்ப இதுக்கு என்ன பதிலைச் சொல்லுவாய்..?"

"ஊம்.. கண்டதும் காதல் வந்துவிடுமா..?"

"வந்துவிட்டதுன்னு வைத்துக் கொள்ளேன்..."

"நீங்கள் ராஜ பரம்பரையில் பிறந்தவர்ங்கிறதை அப்பப்போ நினைவுபடுத்திக் கொண்டால் தேவலை..."

"எதுக்காக..?"

"சும்மா.. சும்மா.. வைத்துக் கொள்வதைப் பற்றியே பேசுகிறீங்களே..."

"ஏய்ய்..."

பிரபாகரன் வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான்..

"எப்படித்தான் இப்படிப் பேசுகிறாயோ மாலினி..."

"அதுசரி ஹிட்லர் சார்.. உங்கள் கேள்விக்குப் பதிலைச் சொல்லவா.. வேண்டாமா..?"

"சொல்லு.. சொல்லு.. அதைப் போய் வேண்டாமுன்னு நான் சொல்லுவேனா..?"

"இந்தக் கண்டதும் காதல் வருவதில் எல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை ஹிட்லர் சார்.. அப்படி நம்பிக்கை வரும்போது.. இதுக்கு பதிலைச் சொல்கிறேன்.. போதுமா..?"

"போதாதுன்னு நான் சொன்னால் ஆஹான்னு கேட்டுக்கவா போகிறாய்..?"

பிரபாகரன் கேலியாகக் கூறிய வண்ணம் காரைக் கிளப்பினான்..

"ஆக மொத்தம் இது ஒண்ணைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறீங்க..."

"எதை..?"

"ஏதாச்சும்.. நீங்க கார்னர் பண்ணணும்னு நினைச்சா காரை நிறுத்திவிட்டு என்னை அலற வைக்கறீங்களே... அதைத்தான் சொல்கிறேன்.. உங்களை நம்பி.. உங்கள் பின்னால் வந்திருக்கிறேன் என்ற எண்ணம் கொஞ்சமாவது உங்களுக்கு இருந்தால் இப்படி பிளாக்மெயில் பண்ணுவீங்களா...?"

'இவள் சொல்வதைப் புரிந்துதான் சொல்கிறாளா..?' பிரபாகரனின் இதழ்களில் புன்னகை தெரிந்தது...

"ஏன்.. எதுக்குச் சிரிக்கறீங்க..?"அவள் பாய்ந்தாள்..

"எப்படியோ... நீ என்னை நம்பி.. என் பின்னால் வந்திருக்கிறாய் என்பதை உன் வாயாலேயே ஒப்புக் கொண்டாயே.. அதுவே பெரிய விஷயம்..."

அப்போதுதான் தான் சொன்னதன் பொருளைப் புரிந்துகொண்ட மாலினி.. வாய் பொத்திச் சிரித்தாள்...

"நீங்க இன்னிக்கு காலையில் மில் வாசலில் வைத்து என்னிடம் இதே வார்த்தையைச் சொன்னீங்க இல்லையா..?"

"இந்த 'வைத்து' என்கிறதை கொஞ்சம் அவாய்ட் பண்ணேன்.."

"அதில் உங்களுக்கென்ன அலர்ஜி..?"

"ஏன் சொல்ல மாட்டாய்.. இப்போது நீ யாரோ.. நான் யாரோன்னு இருக்கோம்.. ஈஸியாக எதுக்கெடுத்தாலும் 'வைத்து..'ன்னு பேசி வைப்பாய்.. இதுவே நாம் நீ வேறோ நான் வேறோன்னு ஒண்ணுமண்ணாய் ஆகிவிட்டோமுன்னு வை.. அப்போ பேசி வைப்பாயா..?"

அவளைச் சொல்லிவிட்டு அவன்.. 'வை..' என்று சொல்லிவைக்க.. அதை உணர்த்தும் விதத்தில் அவள் கலகலவென்று சிரித்தாள்.. அதை உணர்ந்தவனாய் அவனும் கூடச் சேர்ந்து சிரித்தான்...

25

**சாரெலென உன் நினைவு வந்து...**

**தூறலாக என் மனதை நினைத்ததை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஸ்வேதா.. கடுப்புடன் மாடி பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.. பிரபாகரனின் கார் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தது..

'அந்த மாய்மாலக் கள்ளியும் கூட வருகிறாளா...' ஸ்வேதா கொதிப்புடன் வந்து எட்டிப் பார்த்தாள்...

ஸ்வேதாவினால் 'மாய்மாலக் கள்ளி..' என்று அழைக்கப் பட்ட மாலினி.. பிரபாகரனுடன் சிரித்துப் பேசியவாறு இறங்கினாள்..

'வந்து ஒரு நாள்தான் ஆகுது.. அதுக்குள்ள இந்த பிரபாகரனை கைக்குள் போட்டுக் கொண்டாளே.. நானும் இத்தனை வருஷமா என்னென்னவோ செய்து பார்க்கிறேன்.. இவன் அசைய மாட்டேன்னு முறைத்தானே.. இப்போது இவள்கூட பல்லைக் காட்டிக் கொண்டு

வருகிறானே.. அப்படி.. எந்த வகையில் இவள் என்னைவிட உயர்த்தி..?'

அவளுக்கு உடம்பெல்லாம் எரிந்தது.. கீழே பிரபாகரனுடன் இணைந்து கதை பேசியபடி நடந்து வந்த மாலினி.. தற்செயலாக மேலே பார்வையை உயர்த்தி ஸ்வேதா நின்றுகொண்டிருப்பதை பார்த்து விட்டாள்...

சரேலென்று பால்கனியிலிருந்து மாடி ஹாலுக்குள் சென்றுவிட்ட ஸ்வேதாவின் நெஞ்சம் படபடத்தது..

'கண்டு கொண்டாளே...'

மாலினியின் பார்வையில் தென்பட்டுவிட்டோமே என்று ஸ்வேதாவிற்கு அவமானமாக இருந்தது...

'அவள் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்..? என் வசதிக்கும்.. தகுதிக்கும் அவள் இணையாவாளா..? அவள் பிரபாகரனுடன் பழகுவதைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன் என்று நினைத்துக் கொள்ள மாட்டாளா...?'

தான் பொறாமைதான் பட்டோம் என்று ஸ்வேதாவின் உள்மனதிற்கு நன்றாகவே தெரியும். இருந்தும்... அவள் அலட்டிக் கொண்டாள்...

பிரபாகரன்.. நர்மாதவுடன் பேசியபடி நின்றுவிட.. மாலினி ஓர் விடுதலை உணர்வுடன் மாடிப்படிகளில் ஏறினாள்...

"காற்று பலமாக அடித்தால் காகிதம்கூடப் பறந்து கோபுரத்தில் ஒட்டிக் கொள்ளும்.." என்ற குரல் கேட்டது..

என்னடா இது.. அசரிரீ போல இருக்கிறது என்று மாலினி சுற்றுமுற்றும் பார்த்தாள்...

ஸ்வேதா.. மாடிப்படிகளின் உச்சியில் நின்று கொண்டிருந்தாள்...

'இவள்தானா...' மாலினி அவளைக் கண்டுகொள்ளாமல் படியேறுவதைத் தொடர்ந்தாள்...

"ஏய்.. நில்லு.." என்றாள் ஸ்வேதா...

"ஏய்ன்னு கூப்பிடாதே.." சீறினாள் மாலினி...

"கூப்பிட்டால் என்ன செய்வாய்..?"

"பல்லை உடைப்பேன்..."

"என்ன சொன்னாய்..?"

ஸ்வேதாவிற்கு ஆத்திரத்தில் பேச்சு மறந்துபோக.. மாலினி வெறுப்புடன் அவளை முறைத்தபடி நகரப் போனாள்...

"யார் பல்லை யார் உடைப்பது..?" ஸ்வேதாவிற்கு பேச்சு வந்துவிட்டது..

"உன் பல்லை நான் உடைப்பேன்.." தைரியமாக பதில் சொன்னாள் மாலினி...

"அத்தையிடம் சொல்லவா..?"

"வா.. சொல்லலாம்.. நேற்று ராத்திரி என்னை நீ மிரட்டியதிலிருந்து இப்போது கோபுரத்தில் காதிதம் போய் ஒட்டிக்கொண்ட கதை வரை சொல்லலாம்.. அவங்க இதற்கு ஒரு முடிவைக் கட்டட்டும்..."

மாலினி திரும்பவும் படிகளில் இறங்க முயல.. ஸ்வேதா அவசரமாகப் பின்வாங்கினாள்...

"என்ன... கீழே வருகிறாயா..?"

மாலினி களைத்திருந்தாள்.. உடை மாற்றிவிட்டு சற்று நேரம் ஓய்வெடுக்க நினைத்து மாடிக்கு

வந்தவளை அதற்கு விடாமல் வழிமறித்து வம்பிழுத்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா.. அவளுடன் வார்த்தையாடும் மனநிலையில் மாலினி இல்லை.. எதைச் சொன்னால் ஸ்வேதா ஓடுவாளோ அதைச் சொன்னாள் மாலினி... ஸ்வேதா ஓடிவிட்டாள்...

'இவளோடு பெரிய ரோதனையாப் போச்சு...'

அறைக்குச் சென்று குளித்து உடை மாற்றி சற்று நேரம் படுத்திருந்த பின் களைப்பு நீங்கியவளாக எழுந்து தலைவார ஆரம்பித்தாள். அறைக்கதவு தட்டப்பட்டது...

'செந்தாமரையாக இருக்கும்...' என்ற நினைவுடன் கதவைத் திறந்தாள்...

"என்னங்கம்மா.. வேலைக்குப் போயிட்டு வந்துட்டீங்களா.." வாயெல்லாம் பல்லாக செந்தாமரை தான் நின்று கொண்டிருந்தாள்..

"அம்மான்னு சொன்னால்.. உன் கூட டூ விட்டு விடுவேன் செந்தாமரை..."

"ஐயையோ.. அப்படியெல்லாம் செய்துராதீங்கம்மா.. நீங்க பேச மாட்டேன்னு சொன்னா.. என் கதி என்னாகும்..?"

"அப்போ... என்னை எப்படிக் கூப்பிடுவ...?"

"மாலினியம்மா..."

"குட்.. கையிலிருக்கிற காபி.. டிபனை கொடுக்கும் உத்தேசம் இருக்கா.. இல்லையா...?"

"ஐயையோ.. இது உங்களுக்குத்தான் மாலினியம்மா..."

"எனக்கே...

எனக்கா...

இந்த காபி.. டிபன்..

எனக்கே.. எனக்கா..?"

மாலினி பாடியவாறு வாங்கிக் கொள்ள.. செந்தாமரை சிரித்துக்கொண்டே மாலினியின் அறையை விட்டு வெளியேறினாள்.. கோபாவேசத்துடன் மாடி ஹாலில் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவைக் கவனிக்காமல் மாடிப்படிகளில் இறங்க முற்பட்டாள்...

'அந்த மாலினி வந்த பின்னால்.. வேலைக்காரிக் குக்கூட என் மேல் அலட்சியம்..' ஸ்வேதா மனதிற்குள் பொங்கினாள்...

"செந்தாமரை..."

அதட்டலாக ஸ்வேதா அழைக்கவும்...

"அம்மா..?" என்று பதறித் திரும்பிப் பார்த்தாள் செந்தாமரை..

"எங்கே போய்விட்டு வருகிற..?"

"நம்ம மாலினியம்மாவிற்கு காபி.. டிபன் கொடுத்து விட்டு வருகிறேன்ம்மா..."

"ஏன்..? மகாராணிக்கு ரூமில் போய்த்தான் காபி டிபனை கொடுக்கணுமா.. அவள் கீழே வந்து கொட்டிக் கொள்ள மாட்டாளா..?"

"மாட்டாங்களாம்..."

"அவள் அப்படிச் சொன்னாளா...?"

"ஊஹூம்.. நம்ம பெரியம்மா அப்படிச் சொல்லியிருக்கிறாங்க..."

நர்மதாவைப் பற்றிக் கேட்டதும் ஸ்வேதா சட்டென்று அந்தப் பேச்சை விட்டுவிட்டு வேறு பேச்சிற்குத் தாவினாள்...

"எதுக்கு சிரிச்சுக்கிட்டு வருகிற...?"

"இது ஒரு குத்தமா..?" செந்தாமரை எரிச்சல் பட்டாள்...

"மாலினியம்மாகூட ஒரு வார்த்தை பேசினாலும் அவங்க சிரிக்க வைச்சிருவாங்கம்மா.."

"எனக்கு அவளைப் பார்த்தால் அப்படித் தோன்ற வில்லையே.. அவகூட ஒரு வார்த்தை பேசினாலும்.. அவள் கழுத்தைப் பிடித்து நெரிக்கத்தானே தோன்றுகிறது.."

'நீ மனிதப் பிறவியாக இருந்தால்தானே...' செந்தாமரை நினைத்ததை சொல்லாமல் நின்றாள்...

"சரி.. போ.."

ஸ்வேதா உத்தரவிடுவதைப் போலச் சொன்னாள்.. மாலினியின் இயல்பாகப் பேசிப் பழகும் குணத்தையும் ஸ்வேதாவின் அதிகாரத் தோரணையையும் ஒப்பிட்டபடி செந்தாமரை கீழே இறங்கிப் போய்விட்டாள்...

ஸ்வேதாவிற்கு அந்த வீட்டில் வேலை செய்கிறவர்களை அதட்ட மிகவும் பிடிக்கும். அதன்

மூலம் தானும் அந்த வீட்டில் ஒருத்தி. அந்த வீட்டின் வருங்கால மருமகள் என்று நிலைநாட்டிக் கொள்ள முனைவாள்.. ஆனால், வேலையாள்கள் அதை விரும்ப மாட்டார்கள்.. மனதிற்குள் எரிச்சல்பட்டபடி வெளியே காட்டிக் கொள்ளாமல் அவள் சொன்னதைச் செய்வார்கள்.. தங்களுக்குள் பேசிக்கொள்ளும்போது தாழ்ந்த குரலில் ஸ்வேதாவின் அராஜகத்தைப் பற்றிப் பேசுவார்கள்...

"இந்தம்மா இப்பவே இந்தப் பாடுபடுத்துதே.. நிஜமாவே இந்த வீட்டுக்கு மருமகளா வந்துட்டா.. நம்ம பாடு என்னாகுமோ..."

"என்னாகுமா..? அதோகதிதான்.. பொழுது விடிஞ்சு பொழுது சாயறவரைக்கும் எண்ணெய்ச் சட்டியில் அப்பளமாய் பொரிய வேண்டியதுதான்..."

வேலையாள்களை.. அவள் அந்த வீட்டின் மருமகளாக வந்துவிடுவாளோ என்ற கவலையில் ஆழ்த்தும் ஸ்வேதாவை கவலையில் ஆழ்த்தவென்று மாலினி வந்து விட்டாள்...

மாலினியின் இயற்கையான அழகையும் இயல்பான பேச்சையும் அவளின் வசீகரம் கலந்த பெண்மையின் நளினத்தையும் பார்க்கும்போது ஸ்வேதா மிகுந்த கவலைக்கு உள்ளானாள்...

அதுவும்.. அவள் வளைக்கப் பார்த்து.. வளைக்க முடியாத தினகரனும் பிரபாகரனும் போட்டி போட்டுக் கொண்டு மாலினியுடன் பழக விருப்பம் காண்பித்ததும் அவள் இடிந்தே போனாள்...

'எப்படி இவளை இந்த வீட்டை விட்டு விரட்டுவது..?'

இரண்டு நாள்களாக இந்த கவலை ஒன்றே ஸ்வேதாவின் மனதை அரித்துக் கொண்டிருந்தது..

எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவதைப் போல அன்று இரவு உணவு வேளையின்போது மாலினியின் பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த காயத்ரி...

"மாலினி.. யூ ஆர் ஸோ ஸ்மார்ட்.." என்று சொல்லி வைத்ததும்.. பிரபாகரனின் பார்வையும் தினகரனின் பார்வையும் ஒரே நேரத்தில் மாலினியின் மேல் படிந்தது..

அதைக் கவனிப்பதைவிட ஸ்வேதாவிற்கு வேறு என்ன வேலை இருக்கப் போகிறது..?

எப்போதுமே நர்மதாவின் வீட்டுச் சாப்பாடு அவளுக்கு மிகவும் பிடிக்கும்.. அவள் வீட்டில்.. எல்லோரும் பண்ணும் அழிச்சாட்டியத்தில் மாதத்திற்கு ஒரு சமையல் ஆள் வருவார்கள்.. அவர்கள் செய்து வைக்கும் சமையலை வாயில் வைக்க முடியாது...

நர்மதாவின் வீட்டில் நீண்ட வருடங்களாக ஒரே சமையல் ஆள்தான்.. அவள் பெயரே அன்னபூரணி.. பெயருக்கேற்றாற் போல் அவள் சமையலில் ருசி மணக்கும்.. வாயில் போடும் கவளம் கரைந்து உள்ளே போகும்...

அப்படிப்பட்ட சாப்பாட்டின் மீதுகூட அவளுக்கு ஆர்வம் குறைந்திருந்தது.. எந்த நேரத்தில்.. யார் பார்வை மாலினியின் மீது விழுமோ என்று அடிவயிறு கலங்க அவள் பதற்றத்துடன் அமர்ந்திருந்தாள்...

தினகரன்.. மாலினியின் முகத்தைப் பார்த்தபடி காயத்ரியிடம்...

"நீ ரொம்ப லேட் காயூ..." என்றான்..

"எதில் லேட்.. சின்ன அண்ணா..?" காயத்ரி புரியாமல் வினவினாள்..

"மாலினி ஸ்மார்ட்னு புரிந்துகொள்வதில்.. நான் அவங்களைப் பார்த்த முதல் செகண்டிலேயே புரிந்து கொண்டு விட்டேனாக்கும்..."

தினகரன்.. மாலினியின் முகம் நிமிராதா.. அவளுடைய பார்வையைச் சந்திக்க முடியாதா

என்ற தாபத்துடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க.. அவள் நிமிர்ந்து பிரபாகரனின் முகத்தைப் பார்த்தாள்...

அவள் பயந்தபடியே அவன் முகச் சுளிப்புடன் அவள் முகம் பார்க்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.. மாலினி என்னவோ தான் குற்றம் செய்துவிட்டதைப் போல தவித்துப் போனாள்...

அந்த மூவரின் பார்வைகள் போகும் திசைகளையும் அவர்களின் முகபாவங்களையும் கவனித்துக் கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு அவர்களுடன் விளையாடிப் பார்க்க ஒரு வழி தென்பட்டு விட்டது...

## 26

**உனை மட்டும் என்மனது...**

**தினம் நினைக்கும் நினைவை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

தினகரன் ஆசையுடன் மாலினியைப் பார்த்தான்.. மாலினியோ அவனைப் பார்க்காமல் ஒருவித பயத்துடன் பிரபாகரனைப் பார்த்தாள்.. பிரபாகரனோ அவளை நிமிர்ந்து பார்க்காமல் கோப முகத்துடன் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்...

'வாரேஹ் வா! முக்கோணக் காதல் கதை உருவாகுதா.. எனக்கு இது போதுமே. ஒன்று.. இந்த இரண்டு தடியன்களில் ஒரு தடியனுக்கு நான் கழுத்தை நீட்ட வேண்டும்.. இல்லாவிட்டால்.. இந்த இரண்டு

தடியன்களுக்குமே இந்த மாலினி பிசாசு இணங்கக் கூடாது...' ஸ்வேதா மனதிற்குள் கறுவிக் கொண்டாள்...

பிரபாகரனின் கடுமை மனதைப் பாதித்ததால்... மாலினி சஞ்சலத்துடன் தோட்டத்துப் பக்கமாய் போனாள். சசிரேகா, மாலினியைத் தேடி அங்கே வந்தாள்...

"என்னடி.. இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கே..."

"ஜஸ்ட் ரிலாக்ஸ். வேறு ஒன்றுமில்லை.. சசி.. உன்வீட்டில் இருக்கும் மனிதர்களைவிட.. இந்தத் தோட்டம் ரொம்பக் குளுமையாக இருக்கிறது..."

சசிரேகா பயந்து போனவளாய் அவசரமாய் சுற்று முற்றும் பார்த்தாள்...

"என்னடி.. இப்படிப் பார்க்கிற.. இருட்டைப் பார்த்து பயமா..?"

"இல்லைடி இவளே.. உன்னைப் பார்த்துதான் பயம்.."

"என்னைப் பார்த்து அந்த ஸ்வேதா பயப்பட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கிறது. நீ பயந்தால் நான் என்னத்தைச் சொல்ல..?"

"ஒன்றையும் சொல்ல வேண்டாம்.. நீ சென்னையிலிருந்து வரும்போது ஒரு முடிவோடதான் கிளம்பி வந்தாயா..?"

"என்ன முடிவு..?"

"என்னை இந்த வீட்டை விட்டுக் கிளப்பும் முடிவு தான்..."

"அடிப்பாவி.. எனக்கு இருக்க இடம் கொடுத்து சொல்லிக் கொள்ள சொந்தங்களையும் கொடுத்த புண்ணியவதி நீ.. உனக்குப் போய் நான் கெடுதல் நினைப்பேனா.. அந்த ஸ்வேதாவிற்கே கெடுதல் நினைக்காத மனுஷிடி நான். என்னைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டாயே.. என் மனசு இதைத் தாங்குமா..?"

"எல்லாம் தாங்கும். உனக்கு வைரம் பாய்ந்த மனசு.."

"ம்ஹூம்.. என் அம்மா.. பூப்போல மனசுன்னு அடிக்கடி என்னைப் பார்த்துச் சொல்வாங்க..."

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு..."

"அப்படின்னா.. என் அம்மாவை நீ காக்கைன்னு சொல்கிற.. இரு.. இன்றைக்கு நைட் அம்மாவிடம் பேசும் போது மறக்காமல் இதைப் போட்டுக் கொடுக்கிறேன்..."

"நீ கொளுத்திப் போடுவதிலேயே குறியாக இரு.."

"இதுக்கு முன்னால எதைக் கொளுத்திப் போட்டேன்..?"

"ஏண்டி.. பகலில் பக்கம் பார்த்துப் பேசு.. ராத்திரியில் அதையும் பேசாதேன்னு ஒரு பழமொழி இருக்கா இல்லையா...?"

"அதையேன் இப்போ சொல்கிற..."

"நீ பாட்டுக்கு என் வீட்டு மனிதர்களைப் பத்தி இப்படி வியாக்கியானம் பேசுகிறாயே.. யார் காதிலாவது விழுந்து வைத்துவிட்டால் என்ன ஆகும்..?"

"பெரிதாய் ஒன்றும் ஆகாது.. நான் லேடீஸ் ஹாஸ்ட்லில் இடம் தேடிக் கொள்ள வேண்டியிருக்கும்.. நானும் சந்தோஷமாய் ஸ்வேதாவிடமிருந்து தப்பித்து அங்கே ஓடிவிடுவேன்..."

"நீ உன்னைப் பற்றியே நினை. என்னைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்படாதே..."

"உனக்கென்னடி.. நீ இந்த வீட்டின் சின்ன ராணி.."

"உனக்கு பெரியப்பா மகளாக பிறந்த பின்னால்.. இந்த சின்ன ராணிப் பட்டம் நிலைக்குமாடி மாலினி...?"

சசிரேகா பரிதாபமாக இதைக் கேட்ட விதத்தில் மாலினி மனக்கவலையை மறந்து சிரித்து விட்டாள்...

"ஏண்டி.. இவ்வளவு கவலைப்படுகிற..?"

"நீ கொஞ்சம் அடக்கி வாசித்தால் நான் ஏன் கவலைப்படப் போகிறேன்..?"

மாலினியுடன் பேசிக்கொண்டே வீட்டைத் திரும்பிப் பார்த்த சசிரேகா.. அவசரமாய் அங்கிருந்து நகரப் போனாள்..

"எங்கேடி போற..?"

"என் ஹஸ்பெண்ட் என்னைத் தேடுகிறார்டி..."

அப்போதுதான்.. வீட்டு வாசலில் வந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த கருணாகரனைக் கவனித்தாள் மாலினி..

"ஓகே.. குட்நைட்.. நீ போ..."

"நீ..?"

"என்னை எந்த ஹஸ்பெண்ட் தேடப் போகிறார்.. உன்னைத் தேடத்தான் உன் ஹஸ்பெண்ட் இருக்கிறாரே.. நீ போ.. என்னைத் தேடி ஹஸ்பெண்ட் இல்லாததால் நான் கொஞ்சம் உலாவி விட்டு தூங்கப் போறேன்..."

"போடி அரட்டை..."

மாலினியின் முதுகில் செல்லமாய் தட்டிவிட்டு சசிரேகா கணவனை நோக்கி விரைந்தாள்..

அவர்கள் இருவரும் தாழ்ந்த குரலில் பேசியபடி வீட்டுக்குள் செல்வதைப் பார்த்தபடி மாலினி நகர்ந்து அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சினில் அமர்ந்தாள்.

பூச்செடிகளில் இருந்து வந்த நறுமணம் அவளைச் சுற்றிக் கமழ்ந்து கொண்டிருந்தது. தோட்டத்திற்கே உரிய சில்வண்டுகளின் ரீங்காரம் மெல்லிசை போல் அவள் காதில் நுழைந்தது. இரவின் நிசப்தம் அவளைச் சூழ்ந்திருந்தது. மாலினி... அந்த இரவு நேரத்தின் தோட்டத்துச் சூழலை ரசித்தாள்.. அந்த தனிமையை மனமார அனுபவித்தாள்...

"தனிமையிலே... தனிமையிலே..."

மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தவள்.. தன் பாடலை யாராவது கேட்கிறார்களா என்று சுற்றிலும் பார்த்தாள்.. யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு.. பாடலைத் தொடர்ந்து பாட ஆரம்பித்தாள்...

"தனிமையிலே...

இனிமை காண முடியுமா..?

நள்ளிரவினிலே...

சூரியனும் தெரியுமா..?"

மாலினியின் மனதிலிருந்த இனம்புரியாத வேதனை அவளை வருத்திக் கொண்டிருந்தது.. பாடலின் மூலம் அதை மறக்க முயல்பவள் போல் அவள் பாடினாள்...

"மலரிருந்தால் மணமிருக்கும்...

தனிமையில்லை...

செங்கனியிருந்தால் சுவையிருக்கும்..

தனிமையில்லை...

நாம் காணும் உலகில் எங்கும்..

தனிமையில்லை..."

தன்னை மறந்து அவள் பாடிக் கொண்டிருக்கும் போது... "யாரும்தான் தனியாக இல்லையே... நீ மட்டும் ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய்..?" என்ற குரல் கேட்டது...

சட்டென்று மாலினியின் பாட்டு நின்றது.. அவள் அந்தக் குரலை இனம் கண்டுகொண்டாள்... சற்று முன்னால் முகம் சுளித்தவன்... தானே வந்து பேசவும், அவளது மன வேதனை சடுதியில் மறைந்து போனது...

"நான் தனியாக உட்கார்ந்திருக்கிறேன்னு யார் சொன்னது..?" என்று திரும்பாமல் அவள் கேட்டாள்...

"ஏன்.. நான்தான் சொல்கிறேன்..."

"நீங்க இருக்கும்போது நான் எப்படித் தனியாவேன்..?"

மாலினிக்குத் தெரியும்.. இந்தப் பதில் அவன் மனதை குளிர்விக்கும் என்பது...

அவள் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை.. பிரபாகரன் அவளருகில் வந்து அமர்ந்தான்...

"உனக்கு ரொம்பத்தான் தைரியம்..." என்றான்...

"எதை வைத்து அப்படிச் சொல்கிறீங்க...? இந்த இருட்டு வேளையில் தோட்டத்தில் தனியாக உட்கார்ந்து பாடிக் கொண்டிருக்கிறேனே.. அதை வைத்தா..?"

"பாடிக் கொண்டிருந்தாயா..?"

"ஓகே.. கத்திக் கொண்டிருந்தேன்.. போதுமா..."

"அதை வைத்துச் சொல்லவில்லை..."

"சென்னையிலிருந்து வேலை பார்க்க மார்த்தாண்டத்திற்கு தனியாக வந்திருக்கிறேனே.. அதைச் சொல்கிறீங்களா..?"

"ஊஹூம்..."

"உங்கள் ஆசை மாமன் மகள் ஸ்வேதாவை தினசரி பார்த்தும் பயந்து ஓடாமல் இன்னும் இந்த வீட்டிலேயே இருக்கிறேனே.. அதைச் சொல்கிறீங்களா..?"

"மாமன் மகள்னு மட்டும் சொல்லு... இந்த ஆசை தோசையையெல்லாம் சேர்த்துச் சொல்லாதே..."

"பார்க்கலாம்.. என் கேள்விக்கு என்ன பதில்..?"

"அதுவும் இல்லை..."

"வேறு எதைத்தான் சொல்கிறீங்க அத்தான்..."

அடுத்த மலர்க் கணையை அவனை நோக்கி ஏவி விட்டாள் மாலினி.. அவளுக்குத் தெரியும்.. அவள் வீசும் இந்த பந்து அவனைக் க்ளீன் போல்டாக்கிவிடும் தன்மை கொண்டது என்பது...

அவளது 'அத்தான்...' என்ற அழைப்பை ரசிப்பது போல அவன் அமைதியாக அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

இருளில் தெரிந்த அவருடைய உருவம் ஒரு தேவதையின் அழகைப் போல இருந்தது.. பூவாசத்தையும் தாண்டிய மெல்லிய வாசம் அவளின் இருப்பை அவனுக்கு உணர்த்தியது...

அந்தக் கருமைநிற இருள் போர்வையிலும் அவனது கூர்மையான பார்வையை அவள் உணர்ந்தாள்.. பகலில் அவன் அருகிலிருந்தபோது வராத மயக்கம்.. இந்த இரவு வேளையில் அவளுக்கு வந்து தொலைத்தது...

"இந்த வீட்டிலிருக்கும் மனிதர்களைவிட தோட்டம் உனக்கு குளுமையானதாக இருக்கிறதா.. ம்ம்ம்...?"

சசிரேகா 'பகலில் பக்கம் பார்த்துப் பேசு.. இரவில் அதையும் பேசாதே...' என்று ஏன் கூறினாள் என்பது அப்போது மாலினிக்குப் புரிந்தது...

'நான் சசியிடம் சொன்னதை இவன் கேட்டுவிட்டான்...' மாலினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"என்ன.. பதிலைக் காணோம்..."

"இந்த ராத்திரி நேரத்துக் காற்று, எப்படி சிலுசிலுன்னு வருகிறது.. பார்த்தீங்களா அத்தான்..."

'நானென்ன கேட்கிறேன்.. இவளென்ன பதில் சொல்கிறாள்.. பேச்சை மாற்றப் பார்க்கிறாளா..?' அவன் இதழ்களில் குறுநகை தவழ்ந்தது...

"காற்றை பார்க்க முடியுமா..?" அவள் போக்கிலேயே பதிலைச் சொன்னான் அவன்...

"அடேங்கப்பா.. பெரிய நக்கீரன் பரம்பரைதான்..."

"என் பரம்பரைப் பெருமையைப் பற்றி உனக்கென்ன தெரியும்..?"

"அது நிறையத் தெரியும்..."

"எப்படி..?"

"ப.ப. சொன்னார்..."

"ப.ப. வா.. யார் அது..?"

"பழம்பெருமை பரந்தாமன்..."

"ஹா.. ஹா.. அவரையும் நீ விட்டு வைக்கலையா.. ஹா..ஹா.. பழம்பெருமை பரந்தாமன்..? ஹா.. ஹா..."

"மெல்ல.. பல் சுளுக்கிக் கொள்ளப் போகிறது..."

"பல் சுளுக்குமா.. ஹா.. ஹா..."

'இவன் சிரிக்கும் சிரிப்பில்.. வீடே.. தூக்கத்திலிருந்து எழுந்துவிடும் போல இருக்கே...'

மாலினி கவலையுடன் வீட்டைப் பார்த்தாள்... பின்பு அவனைப் பார்த்தாள்.. வாயில் சுட்டுவிரலை வைத்து.. "உஸ்ஸ்..." என்றாள்...

## 27

**அறிமுகமில்லாத என் மனதில்..**

**உன் திருமுகம் பதிந்த ஒருபொழுதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அவர்கள் அமர்ந்திருந்த பூமரத்திலிருந்து மலர்கள் உதிர்ந்து அவர்களைச் சுற்றி விழுந்திருந்தன... அத்தனை நாளும் இல்லாத ஓர் அழகை அன்று தோட்டத்தில் கண்டான் பிரபாகரன்...

இன்று போல் முன்பு எந்த நாளும் இந்தத் தோட்டம் இத்தனை அழகுடன் இருந்ததில்லை என்ற எண்ணம் அவன் மனதில் வந்தது...

எவரும் வாய் திறந்து பேசப் பயப்படும் அவனிடம் வாயின் மேல் விரலை வைத்து "உஷ்.." என்று அடக்கினாள், அந்த அழகிய இளம்பெண்...

அவளை அவன் சந்தித்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன என்பதை அவன் உள்ளம் ஏற்க மறுத்தது...

அவளுடைய எல்லா இயல்புகளும் இன்னது என்று தனிப்பட வரையறுத்துக் கூற முடியாமல் ஒன்றுசேர அவனைக் கவர்ந்தன...

"ஏன்.. 'உஷ்ஷ்' என்கிறாய்..." என்று வினவினான் பிரபாகரன்...

"இது ராத்திரி நேரம்.." அவள் குரல் அமானுஷ்யமாக ஒலிப்பது போல் அவனுக்கத் தோன்ற.. அவன் அதற்கும் சிரித்தான்...

"இப்போதுதானே கீப் கொயட்டுன்னு சொன்னேன்.."

"நீ அப்படியா சொன்னாய்.. 'உஷ்'ன்னு சொன்னாய்.."

"ஆமாம் சொன்னேன்... சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொன்னேன்... நீங்க கண்டீங்க..."

"என்ன காய்..."

"சுரைக்காய்..."

"சுரைக்காய்... உப்பு.. ஹா.. ஹா..."

பொறுக்க முடியாமல் மாலினி... தன் தளிர் கரத்தால் அவன் வாயைப் பொத்திவிட்டாள்.. நடந்ததை அவள் உணர்ந்து கையை விலக்கிக் கொள்ள.. சற்று முன் அவன் வாய் தொட்டு விலகிய தளிர் கரத்தின் மென்மையை நினைவுகூர்ந்தபடி அவன் அசையாமல் அமர்ந்துவிட்டான்...

இப்போது அவனுடைய சிரிப்பு சுத்தமாக நின்று விட்டது... மாலினி எழுந்து கொள்ள முனைய.. அவன் அவள் கரம் பற்றித் தடுத்தான்...

"அத்தான்..." அவளது குரலும் கையும் சேர்ந்து நடுங்க, அவசரமாய் அவள் கையை விட்டு விட்டான்...

"உட்கார் மாலினி..."

"இல்லை.. நான் போக வேண்டும்.."

"போகலாம் உட்கார்..."

"எதற்காக..?"

"எனக்கு உன்னிடம் பேச வேண்டும்..."

"இன்றைக்கு பகல் பூராவும் பேசினோமே.. நாளைக்குப் பகலிலும் பேசப் போகிறோமே..."

"இதை.. இந்தப் பேச்சை.. இப்போதே பேசிவிட வேண்டும்.. நாளைக்கு இதன் பவர் குறைந்துவிடும்..."

மாலினி தயக்கத்துடன் அமர்ந்தாள்.. பிரபாகரன் மெதுவான குரலில் அவளிடம் வினவினான்...

"ஏன் அப்படிச் சொன்னாய் மாலினி...?"

"எப்படி..?"

"வீட்டில் இருக்கும் மனிதர்களைவிட தோட்டம் தான் குளுமையாக இருக்கிறதுன்னு..."

மாலினி சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.. பின்னர் மெல்லிய குரலில் சொன்னாள்.. அவள் குரலில் தழதழப்புத் தெரிந்தது...

"உங்களுக்கு ஏனென்று தெரியாதா..?"

தெரியும்.. பிரபாகரனுக்கு அது மிக நன்றாகவே தெரியும்.. சாப்பாட்டு மேஜையில் பிரபாகரனின் முகம் இறுகிப்போனதைத்தான் மாலினி குறிப்பிடுகிறாள் என்பதை அவன் நன்கு அறிவான்.. ஆனால்... அவன் அதை அவள் வாய்மொழியில் கேட்க விரும்பினான்.. கேட்டும் விட்டான்...

"எனக்குத் தெரிவது இருக்கட்டும்.. உனக்கும் அது தெரியும்தானே..."

"எது..?"

"ஏன்.. நான் குளுமையில்லாமல் இருந்தேன் என்று..."

மாலினி திரும்பவும் எழுந்துகொள்ள முயன்றாள்.. இப்போது அவள் கைபிடித்து தடுத்த பிரபாகரனின் பிடி.. இரும்புப் பிடியாக இருந்தது...

"கையை விடுங்க... அத்தான்..."

"விட முடியாது..."

"யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்..."

"இந்த இருட்டில் யாரும் பார்க்க மாட்டாங்க..."

என்ன மாதிரியான உரையாடல் இது என்ற நாணம் மாலினிக்குள் எழுந்தது... இவனுக்கென்ன.. இவன் பாட்டுக்கு அவள் கையைப் பிடித்து நிறுத்துவான்.. இப்படிப் பேசி வைப்பான்.. அவளுக்குத்தானே எல்லாப் பாடும்..?

'சேலையில முள்ளு பட்டாலும்.. முள்ளு மேல சேலை பட்டாலும்.. சேதம் சேலைக்குத்தான்...'

சில நாள்களுக்கு முன்னால்.. டி.வி-யில் அவள் பார்த்த பழைய திரைப்படத்தில் இருந்து அபத்தமான வசனம் நேரம் காலம் தெரியாமல் அந்த நேரத்தில் அவளுக்கு நினைவுக்கு வந்து தொலைத்தது...

இவன் உட்காராமல் விட மாட்டான் என்ற உணர்வுடன் அவள் அவன் பக்கத்தில் அமர்ந்தாள்... தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.. தன் உள்ளங்கையில் அடங்கியிருந்த அவளது உள்ளங்கையை பற்றி அழுத்திய பின் மெதுவாக விடுவித்தது அவனுடைய கரம்...

அவள் தடுமாறிப் பின் தன் கரத்தை விலக்கிக் கொண்டாள்... அவளது இதயம் படபடவென்று.. வேகமாக அடித்துக் கொள்ளும் சத்தம் அவளுக்கு கேட்டது.. நடுங்கும் கரங்களை கோத்து தன்னிலைக்கு கொண்டு வரப்போராடிக் கொண்டிருந்தாள்...

"நீ தினாவுடன் பேசிப் பழக நினைக்கிறாயா..?" பிரபாகரன் குரல் ஆழ்ந்து ஒலித்தது...

மாலினி திடுக்கிடலோடு நிமிர்ந்தாள்.. ஓர் இனிய கனவு கலைந்துவிட்ட துக்கம் அவள் மனதில் தோன்றியது.. சற்றுமுன் அவள் கரம் பிடித்து உள்ளங்கையைத் தொட்ட அவனது ஸ்பரிசம் உணர்த்திய உணர்வின் அலை.. அவனுடைய கேள்வியைக் கேட்டதும் அடங்கிவிட்டது...

"எனக்கு இந்தக் கேள்வி பிடிக்கவில்லை..."

"இதைக் கேட்க எனக்கும் பிடிக்கவில்லைதான்... ஆனால், எனக்கு வேறுவழியில்லை. தினாவுக்கு உன் மேல் ஆர்வம் இருக்கிறது.. அது அவன் பேச்சில் தெரிகிறது..."

"எனக்கு இல்லை..."

"இனி வரலாமில்லையா..?"

"ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்... ப்ளீஸ்.. நீங்க என்னை என்னவென்று நினைத்துக் கொண்டீங்க... உங்க வீட்டில் நான் தங்கியிருந்தால்... என்னை என்ன வேண்டுமானாலும் கேட்டு விடுவீங்களா..?"

"ஸாரி.. ஐ ஆம் ஸோ ஸாரி.. பட்.. எனக்கு தெளிவாக தெரிய வேண்டியிருக்கிறது.."

"எதற்காக..?"

"உனக்குத் தெரியாதா..?"

மீண்டும் பிரபாகரனின் குரல் ஆழ்ந்து ஒலிக்க.. மாலினிக்கு துக்கமாக வந்தது...

"நான் இந்த மார்த்தாண்டத்திற்கு வந்திருக்கவே கூடாது..." என்று அந்தத் துக்கத்துடடேன கூறினாள்...

"ஏன் இப்படிச் சொல்கிறாய் மாலினி.. இங்கே வந்த தனால்தான் என் முகத்தில் விழித்தாயென்ற வருத்தம் உனக்கு வந்துவிட்டதா..?"

"அத்தான்..."

மாலினி அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்... அவன் மெதுவான குரலில் அழுத்தமாகப் பேசினான்...

"நான் ஒன்றை நினைத்துவிட்டால் அதிலிருந்து மாறாத ரகம்..."

"இதை ஏன் இப்போது என்னிடம் சொல்கிறீங்க..?"

"ஒன்றை நினைத்துவிட்டால் கடைசிவரை அதிலேயே நிற்பேன்.. ஒருபோதும் அதைவிட மாட்டேன்.."

"இருக்கட்டும் அத்தான்.. இதையேன் சொல்கிறீங்க..."

"நான் இந்த வீட்டிற்கு மூத்தவன்.. குடும்பத் தலைவன்..."

"ஸோ.. வாட்..?"

"ஒரு செயலைச் செய்யும் முன் அது என் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவங்களைப் பாதிக்கிறதா என்று பார்த்துச் செயல்பட வேண்டியது என் கடமை..."

"தாராளமாய் செயல்படுங்க.. உங்கள் குடும்பம்.. உங்கள் வாழ்க்கை.. இதையேன் என்னிடம் ஒப்பிக்கிறீங்க..?"

"தினாவிற்கு நான் அண்ணன் மட்டுமில்லை... ஒரு தகப்பனின் ஸ்தானத்தில் இருப்பவன்..."

"இருந்துவிட்டுப் போங்க..."

"அவன் ஆர்வம் காட்டும் எதன் மீதும் நான் ஆர்வம் காட்ட முடியாது..."

பிரபாகரன் எங்கே வருகிறான் என்று மாலினிக்குப் புரிந்துவிட்டது.. அவள் கோபத்துடன் அவனை முறைத்தாள்...

"உங்கள் வீட்டுப் பெருமையைக் கேட்க எனக்கு இஷ்டமில்லை.. உங்கள் தம்பிக்கு நீங்கள் தகப்பனாக இருந்தால் எனக்கென்ன... இல்லை தாத்தாவாகவே இருந்தால் தான் எனக்கென்ன.. எப்படியோ செல்லம் கொஞ்சிவிட்டுப் போங்க.. ஆனால்.. தேவையில்லாமல் என்னை டிஸ்டர்ப் பண்ணினால் நான் சும்மா இருக்க மாட்டேன்.."

"யார் உன்னை டிஸ்டர்ப் செய்தது..?"

"நீங்களும் உங்க தம்பியும்தான்..."

"புரியவில்லை..."

"புரியாது.. நீங்கள் பப்பா பாருங்க..."

"ப்ளீஸ், மாலினி.."

பிரபாகரனின் குரல் இறைஞ்சலாக ஒலிக்கவும்.. மாலினி ஆயாசமாக உணர்ந்தாள்...

'இது எனக்குத் தேவையில்லாதது.. நான் வேலை பார்க்கத்தானே ஊர் விட்டு ஊர் வந்தேன்.. இவனும் இவன் தம்பியும் எக்கேடு கெட்டால் எனக்கென்ன..?'

அவள் சொல்லத் தெரியாதவளாய்.. சொல்ல முடியாத கோபத்துடன் பக்கத்திலிருந்த பூச்செடியின் இலைகளைக் கிள்ளி கோபத்துடன் விட்டெறிந்தாள்...

"அப்படிச் செய்யாதே..." பிரபாகரன் அதட்டினான்..

"ஏன்..?" அவள் செடியைக் கிள்ளுவதை நிறுத்த வில்லை...

"உன்னைக் கிள்ளினால் உனக்கு வலிக்காதா..? அதைப் போலத்தான் செடிக்கும் வலிக்கும், விட்டு விடு.."

மாலினி இலைகளை கிள்ளுவதை விட்டுவிட்டு அவன் பக்கம் திரும்பினாள்...

"செடிக்கு வலிக்கும்னு இவ்வளவு வருத்தப்-படறீங்களே... என் மனம் வலிக்கும்னு கொஞ்சமாவது நினைத்துப் பார்க்கறீங்களா..?"

"மாலினி..."

"உங்களுக்குத்தான் வாய் இருக்கிறதா.. உங்களால் தான் பேச முடியுமா..?"

"உனக்கு வாய் இல்லைன்னு இந்த செடிகூட சொல்லாது..."

"நான் வாயாடிதான்.. ஆனால்.. என் பேச்சு எவரையும் காயப்படுத்தியதில்லை..."

"நான் யாரைக் காயப்படுத்தினேன்..?"

"என்னை.. என் மனதை காயப்படுத்தினீர்கள்.."

"நான் தினாவுக்கு போட்டியாக முடியாது மாலினி..."

"எனக்கு தினகரனின் மேல் இன்ட்ரஸ்ட் இல்லை மிஸ்டர் பிரபாகரன்.. மைண்ட் இட்..."

அவனைப் பெயர் சொல்லி அழைத்தவாறு மாலினி எழுந்து கொண்டாள்.. இந்த முறை அவன் கைக்கு எட்டாமல் தள்ளியே நின்று கொண்டவள்...

"உங்களுடைய தம்பிக்காக நீங்கள் எதை வேண்டு-மானாலும் விட்டுக் கொடுங்க பிரபாகரன்.. ஆனால்.. அது உயிரில்லாத பொருளாக இருக்க வேண்டும்.. உயிருள்ள ஜீவனாக இருக்கக்கூடாது. குட் நைட்.." என்று கூறிவிட்டு வீட்டை நோக்கிச் சென்றுவிட்டாள்...

## 28

**உன்னைச் சந்தித்த பொழுதையே...**

**சிந்திக்கும் என் மனதையே...**

**என்னவென்று நான் சொல்ல..?**

காரில் ஏறியதிலிருந்து மௌனமாக இருந்த மாலினியைப் பேச வைக்க என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான் பிரபாகரன்...

இப்போதுதான் அவள் மௌனமாகி விட்டாள் என்றில்லை. காலை உணவு நேரத்தின்போதும் அவள் அமைதியாகத்தான் இருந்தாள்...

"இன்றைக்கு நீங்க மௌன விரதம் இருக்கீங்களா மாலினி..?" என்று கேட்ட காயத்ரிக்கு பதில் சொல்லாமல் லேசாக சிரித்தாள்...

"நீங்க பேசினாலும் அழகு.. மௌனமாக இருந்தாலும் அவதுகூட ஒரு தனி அழகுதான்..."

வாய்ப்பை நழுவவிடாமல் ஊடே புகுந்து தினகரன் பேசியபோது சாப்பிட்டுவிட்டதைப் போல எழுந்து கைகழுவச் சென்றுவிட்டாள்...

மற்றவர்கள்.. ஏன்.. தினகரனே அதை இயல்பான ஒன்றாக நினைத்துக் கொண்டான்...

ஆனால், பிரபாகரனுக்கு மட்டும்தான் தெரியும்... அவள் வேண்டுமென்றே பாதி சாப்பாட்டில் எழுந்து போய்விட்டாள் என்பது..

அதற்கு மேல் சாப்பிட முடியாதவனாய் அவனும் எழுந்து கொண்டான்... வேலைக்குச் செல்லத் தயாராய் மாலினி வாசலில் காத்திருப்பதை உணர்ந்தவன்.. புருவங்கள் முடிச்சிட... நர்மதாவிடம் சொல்லிவிட்டு வாசலுக்கு சென்றான்...

'என்னைக் கூப்பிடவும் இல்லை... அம்மாவிடம் சொல்லிக் கொள்ளவும் இல்லை.. கோபம் வந்துவிட்டால் இப்படித்தான் தூக்கி எறிவாளா..?'

கார் கதவைத் திறந்துவிட அவன் முயன்றபோது.. அவளே கார் கதவைத் திறந்து கொண்டு.. ஏறி அமர்ந்து விட்டாள்...

காரை அவன் கிளப்பி.. சாலையின் போக்குவரத்தில் கலந்த பின்னாலும் அவள் வாயைத் திறக்கவே இல்லை... பிரபாகரன் காரின் வேகத்தை குறைத்தான்..

"பேச மாட்டாயா..?" என்றான்...

"எனக்கு நேரமாகிவிட்டது..." என்றாள் அவள்...

"அதெல்லாம் நேரமாகவில்லை.. இன்றைக்கு சீக்கிரமாகவே நீ கிளம்பிவிட்டதை நான் பார்த்துக் கொண்டுதானே இருந்தேன்.."

மாலினி பதில் பேசவில்லை...

"என் மேல் கோபமிருந்தால் அதை என்னிடம் காட்டு... அம்மாவிடம் ஏன் காட்டுகிறாய்...?"

மாலினிக்கு கோபம் வந்துவிட்டது..

"உங்கள் மேல் எனக்கெதற்கு கோபம் வரப் போகிறது... உங்க அம்மாவின் மேல் நான் அதைக் காட்டினேன்னு சொல்வது நன்றாக இல்லை..."

"காலையில் வேலைக்குக் கிளம்பும்போது அம்மா விடம் சொல்லிக்கொண்டாயா...?"

"சொல்லிக் கொள்ளவில்லைன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"நீதான் காலையிலிருந்து பேசவே இல்லையே... இப்போதுதானே உன் திருவாயை திறந்திருக்கிறாய்..."

"வாயால் பேசித்தான் சொல்லிக் கொள்ளணும்னு அவசியம் இல்லை.. தலையை அசைத்தும் சொல்லிக் கொள்ளலாம்..."

"அப்படி ஒன்று இருக்கிறதா..?"

பிரபாகரன் ஆச்சரியத்துடன் மாலினியைப் பார்த்தான்.. அவள் அவனுடைய தாயிடம் விடைபெற்றுக் கொண்டு தான் வந்திருக்கிறாள் என்பதை அறிந்து கொண்டதும் அவன் மனதில் சாரல் அடித்தது...

"ஏன் சரியாகச் சாப்பிடவில்லை..?"

அவள் மீண்டும் மௌனம் சாதிக்கவும்.. காரை அவன் சாலையோரமாக நிறுத்திவிட்டான்...

"இதுதான் நீங்க என்னை வேலைக்கு கூப்பிட்டுக் கொண்டு போகும் லட்சணமா..?" அவள் கோபத்துடன் கேட்டாள்...

"நீ இப்படிப் பதில் பேசாமல் என் உயிரை எடுத்தால்... நானும் இப்படித்தான் செய்வேன்..." அவன் பல்லைக் கடித்துக்கொண்டே பதில் சொன்னான்...

"ஏன் சார் இப்படி அழிச்சாட்டியம் செய்யறீங்க..." மாலினி அலுத்துக் கொண்டாள்...

"சாரா..?" பிரபாகரனின் முகம் விளக்கெண்ணெயை குடித்தது போல ஆகிவிட்டது...

"ஆமாம்... என் லிமிட்டை நான் தாண்டாமலிருப்பது தான் நல்லது..."

"யாருக்கு நல்லது...?"

"எனக்கு நல்லது... அப்புறம் இன்னொரு விஷயம்.. நான் கூடிய சீக்கிரத்தில் லேடீஸ் ஹாஸ்டலில் இடம் பார்த்துக் கொண்டு உங்கள் வீட்டை விட்டுப் போய்விடுவேன்..."

"நான் உன்னைப் போக விட மாட்டேன்.."

"என்னைத் தடுக்க நீங்கள் யார்..?"

பிரபாகரன் அவளை உறுத்துப் பார்த்தான்... அவன் விழிகளில் சினம் துளிர்த்தது...

"கோபம் வந்தால் இப்படித்தான் பேசுவாயா.. நான் யாருன்னு உன் மனச்சாட்சியைக் கேட்டுப் பார்.."

"மனச்சாட்சியை ஏன் கேட்க வேண்டும்.. அதுதான் இந்த ஊருக்கே தெரியுமே.. இந்த ஊரில் இருக்கிற கைக்குழந்தையைக் கேட்டால்கூட உங்கள் பெயரைச் சொல்லுமாமே..."

"அப்படி யார் அள்ளிவிட்டது...?"

"எல்லாம் உங்க குடும்பத்தின் பக்தகோடி பரந்தாமன் தான்.."

"பழம்பெருமை பரந்தாமன்.. இப்போது பக்தகோடி பரந்தாமனாய் ஆகிவிட்டாரா..."

அவனுக்குச் சிரிப்பு வந்தது... சிரிப்பை அடக்கிக் கொண்டான்.. அவள் முன்னால் சிரித்து வைத்தால்.. அவளிடம் கோபம் காட்டிப் பேச முடியாதே...

"கைக்குழந்தையை ஏன் கேட்க வேண்டும்..? அதைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சும் பொறுமையெல்லாம் எனக்கு இல்லை..."

இப்போது மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது.. அவளும் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்...

'இவன் பண்ணும் லொள்ளுக்கு நான் சிரித்து வைத்து விட்டால்.. என்னை லேசாக நினைத்துவிடுவான்.. சிரித்து விடக்கூடாது..'

அவள் தன் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிரிக்காமல் சொன்னாள்...

"ஆமாமாம்.. நீங்கள் கைக்குழந்தையைக் கொஞ்சும்ரகமா...?"

"வேறு யாரைக் கொஞ்சும் ரகம்..?"

"தடிமாட்டுத் தாண்டவராயன்களைக் கொஞ்சும் ரகம்..."

'இவள் தினகரனைச் சொல்கிறாள்..'

ஏனோ... அவள் தினகரனை அப்படிச் சொன்னது பிரபாகரனுக்குப் பிடித்தமான ஒன்றாக இருந்தது...

ஆனால்.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்...

"யாரை தடிமாட்டுத் தாண்டவராயன்னு சொல்கிறாய்.. என் தம்பியையா..?" என்று அறியாதவனைப் போல வினவினான்...

"இதற்கெல்லாம் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.. நீங்க காரை இப்போது கிளப்புகிறீங்களா... இல்லையா...?"

"முடியாதுன்னு நான் சொன்னால் என்ன செய்வாய்.. அதட்டலெல்லாம் பலமாய் இருக்கு.."

"காரை விட்டு இறங்கி நடந்தே போய் விடுவேன்.."

மாலினி கார் கதவில் கைவைக்க.. அவளது கைமேல் தன் கையை வைத்தான் பிரபாகரன்...

மாலினி பேச்சிழந்தாள்.. நடுங்கும் விரல்களை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயன்றபடி...

"கையை எடுங்க.." என்றாள்...

"முடியாது..." அவன் உல்லாசமாகச் சிரித்தான்..

"என்மேல் ஆணை.. கையை எடுங்க..." மாலினியின் இதழ்கள் துடித்தன...

"மாலினி..." அவன் திகைப்புடன் அவளைப் பார்த்தான்...

"நீங்கள் கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் வந்தவர்.. பெரிய ஜமீன்தார் கார்த்திகேயனின் மகன்.. இந்த ஏரியாவே மரியாதை கொடுக்கும் மிகப் பெரிய வி.ஐ.பி. இவையெல்லாம் உண்மையென்றால்.. என் அனுமதியில்லாமல் இனி என் கையைத் தொடாதீங்க..."

அவன் சட்டென்று கையை எடுத்துவிட்டான்.. கலங்கி சிவந்திருந்த தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள் மாலினி...

"உங்களைப் போல் வம்சாவளிப் பெருமை வேண்டுமானால் எங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்.. ஆனால்.. எங்கள் பரம்பரைக்கும் ஒரு பெருமை உண்டு.."

"அதை நான் குறைத்துப் பேசினேனா..?"

"பேசினால்தானா.. செய்கையில் காண்பிக்கறீங்களே.. இது போதாதா..?"

"அப்படி நான் என்ன செய்துவிட்டேன்..?"

"என் கையைத் தொடலாமா..?"

"சென்னையில் பிறந்து வளர்ந்தவள் இப்படிக் கேட்பது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.."

"ஹலோ.. மைண்ட் யூவர் வேர்ட்ஸ்... சென்னையில் பிறந்து வளர்ந்த நாங்கள் ஆண்களிடம் இயல்பான நட்புடன் பேசுவோம்... தொட்டுப் பேசி பழகுவோம்... ஆனால், எங்கள் தொடுகையில் ஆண்.. பெண் வித்தியாசம் இருக்காது...

உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்.. உங்கள் மனதில் விகல்ப-மில்லாமல்தான் என் கையைத் தொட்டீங்களா..?"

முதல் நாள் இரவு.. தோட்டத்தில் அவளது உள்ளங்கையைப் பிடித்து அழுத்தியதை அவள் நினைவுபடுத்துவது அவனுக்கும் புரிந்தது...

அவள் கேள்வி அவனைச் சுட... அவன் மௌனமானான்... "நான் உங்கள் வீட்டுக்கு விருந்தாளி... நான் வந்து மூன்று நாள்கள்கூட ஆகவில்லை.. நீங்க என் விஷயத்தில் என் அனுமதி இல்லாமலே அதிக உரிமை எடுத்துக் கொண்டீங்க..."

"உன் மனம் அனுமதிக்கவில்லையா... உன் மனச்சாட்சியைக் கேட்டுப் பார்...?"

"மனச்சாட்சியைப் பற்றிப் பேச உங்களுக்கு தகுதி கிடையாது..."

"மாலினி..."

"உங்கள் மேல் எனக்கு ஈடுபாடு இருப்பதாக உங்க மனச்சாட்சிக்குத் தெரியுமா.. தெரியாதா..?"

"தெரியாமலா உன் கை தொட்டேன்...?"

"அதற்குப் பின்னால் உங்க தம்பியைப் பற்றிய கேள்வி எதற்கு சார்.. ஒருவேளை

உங்களை சைட் அடித்துக்கொண்டே உங்களின் தம்பிக்கும் நான் ரூட் விடுகிறேன்னு நினைத்துவிட்டீங்களா..?"

அவளின் நேரடியான கேள்வி அவனைத் தாக்கியது.. அந்தக் கேள்வியில் இருந்த தார்மீகக் கோபம் அவனை சுட்டது...

"சேச்சே.. என்ன பேச்சு இது மாலினி...?"

"என்னை இப்படிப் பேச வைப்பது நீங்கள்தானே...?"

"உன் வாயிலிருந்து இப்படிப்பட்ட பேச்சுகள் வரலாமா..?"

"உங்கள் திருவாய் மட்டும் அருமையாக பேசியதாக உங்களுக்கு நினைப்பா..?"

பிரபாகரன் சங்கடப்பட்டான்.. மாலினியின் இந்தக் கோபம் அவன் எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தது... அதே நேரம் தினகரனைப் பற்றிய நினைவும் அவனை அரித்துக் கொண்டிருந்தது...

"நான் ஒன்றை தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினேன்..."

"அதை என் கை தொடாமலேயே நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்..."

மாலினி அவன் முகத்தைப் பார்க்கக்கூட விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு இதைப் பேசியவிதம் கண்டு பிரபாகரன் தன்னைத்தானே நொந்து கொண்டான்...

'அவசரப்பட்டு வாய்விட்டு விட்டேனே...'

"ஐ ஆம் ஸாரி மாலினி..."

"சில செயல்களுக்கும் வார்த்தைகளுக்கும் மன்னிப்பே கிடையாது..."

"என் நிலையை நீ புரிந்துகொள்ள மாட்டாயா..?"

"அதற்கான அவசியம் எனக்கில்லை..."

"ஒரே நாளில் நான் உனக்கு வேண்டாதவனாக ஆகிவிட்டேனா..?"

"நீங்கள் எனக்கு வேண்டியவரும் இல்லை... வேண்டாதவரும் இல்லை. நான் உங்கள் தம்பி மனைவியின் ஒன்று விட்ட சித்தப்பாவின் மகள். ஜஸ்ட் எ ரிலேடிவ்! அவ்வளவு தான்..."

"அவ்வளவேதானா..?"

"அவ்வளவேதான்..."

மாலினிக்கு வெறுப்பாக இருந்தது.. முதல் நாள் முழுவதும் தூங்காமல் விழித்திருந்ததால்.. அவளது இமைகள் மூடச் சொல்லி கெஞ்சிக் கொண்டிருந்தன...

'என்ன ஒரு மனிதன் இவன்... முன்னால் போனால் கடிப்பதும் பின்னால் போனால் உதைப்பதுமாக இருந்தால் இவனுடன் எப்படிப் பேசிப் பழக முடியும்...'

அவள் முகம் போலவே மனமும் இறுகிப் போய் இருந்தது.. அதை பிரபாகரனால் உணரவும் முடிந்தது...

## 29

**மயிலிறகைப் போல...**

**மனம் வருடும் உன் நினைவை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி பல்லைக் கடித்து தன் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்.. அவள் மனம் அலைகடலாய் கொந்தளித்துக் கொண்டிருந்தது...

அவள்பாட்டுக்கு வேலை பார்க்கவென்று மார்த்தாண்டத்திற்கு வந்தாள்.. 'இருக்காதே.. இருக்காதே.. லேடீஸ் ஹாஸ்டலில் இருக்காதே...' என்று அவளுடைய அப்பா மாட்சிமைமிகு ஜானகிராமன் அவளைப் பார்சல் பண்ணி சசிரேகாவின் புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்... இங்கே என்னடாவென்றால் வந்து இறங்கிய மூன்று நாள்களிலேயே அண்ணனும் தம்பியும் ஒருசேர அவளை ஆர்வமாக பார்த்து தொலைக்கிறார்கள்...

'பேசாமல் லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போயிருந்-திருக்கலாம்.. இந்தத் தொல்லையே வந்திருக்காது..' என்று நினைக்கும் போதே அவள் மனம்..

'பிரபாகரனை.. தொல்லையென்று நினைக்கிறாயா..?' என்று எதிர்கேள்வி கேட்டது...

'இவன்.. எனக்குத் தொல்லையா..?'

பிரபாகரனை அவன் பார்க்காத போது பாராததைப் போலப் பார்த்தவளின் மனம் வலித்தது....

'இவனை நான் சந்தித்திருக்கவே கூடாது...' என்று மனம் நொந்து கொண்டாள்...

அவள் எல்லோரிடமும் பழகுவதை போல்தான் அவனிடமும் இயல்பாகப் பழகினாள்.. அவன் கண்ணுக்கு அவள் வித்தியாசமானவளாக தெரிந்து தொலைவாள் என்று அவள் கனவா கண்டாள்...?

பிரபாகரன்தான் வலிய வந்து அவளைக் காரில் அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.. அவளை மதிய உணவுக்குக்கூட தனித்துவிடாமல் கூடச் சாப்பிட வைத்தான்.. தன் பார்வையிலும் பேச்சிலும் காதலை உணர்த்தினான்.. தினகரனைப் பற்றிய சிறு பேச்சைக்கூட மாலினியைப் பேசவிடாமல் முகம் சுளித்தான்.. தோட்டத்தின் தனிமையில் இரவின் இனிமையில் அமர்ந்திருந்தவளிடம் தானாக வந்துதான் பேசினான்.. அருகே உட்கார்ந்தான்.. அவள் கைபிடித்து இழுத்து உட்கார வைத்தான்...

இத்தனையையும் செய்துவிட்டு கடைசியில் கேட்டானே ஒரு கேள்வி..! அதைத்தான் மாலினியால் ஜீரணிக்க முடியவில்லை.. அவளால் பிரபாகரனை மன்னிக்க முடியவில்லை...

"கடைசியாக என்னதான் சொல்ல வருகிறாய்..?"

"நான் உங்கள் வீட்டில் தங்கியிருக்கும் விருந்தாளி.. அதற்கு மேல் நமக்கு இடையே எதுவும் இல்லை. இதற்கு சம்மதமென்றால் நான் உங்கள் வீட்டில் தொடர்ந்து தங்குவேன்..."

"இல்லையென்றால்..?"

"வேலையே வேண்டாம்னு சொல்லிவிட்டு சென்னைக்கு திரும்பிவிடுவேன்.."

மாலினியின் வார்த்தைகளில் தெரிந்த தீர்மானத்தைக் கண்டு பிரபாகரன் அமைதியாகிப் போனான்.. கார் கிளம்பியது.. மில் வாசலில் இறங்கிய மாலினி.. அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மில்லுக்குள் சென்று மறைந்து விட்டாள்..

அரும்பும்போதே மறைந்துபோன தன் காதல் உணர்வுகளை நினைத்து மனம் வெந்த பிரபாகரன், பேசாமல் போய் விட்டான்...

மதிய உணவுக்கு அவன் அழைத்துக் கொண்டு போக வந்தபோதும் காலையில் நடந்த கதைதான் தொடர்ந்தது...

மாலினி தன்னைச் சுற்றி ஒரு வட்டம் போட்டுக் கொண்டாள். பிரபாகரனுடன் காரில் ஒன்றாகப் போவாள்.. வருவாள்.. மதிய உணவை அவனுடன் சேர்ந்து சாப்பிடுவாள்.. ஆனால்.. ஒரு வார்த்தைகூட அவன் முகம் பார்த்துப் பேச மாட்டாள்.. அவன் வலிய பேசினாலும் ஆமாம்... இல்லை என்ற ஒரு சொல்லில் பேச்சை முடித்துக் கொள்வாள்..

நத்தை தன் கூட்டிற்குள் ஒடுங்கிக்கொள்வதைப் போல ஒடுங்கிக் கொண்டிருந்தவளை எந்த வழியில் அணுகுவது என்று பிரபாகரனுக்கு பிடிபடவில்லை... அவள் கூட்டை விட்டு தானாக வெளிவர மாட்டாள் என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாக புரிந்திருந்தது... அவளுடைய கூட்டை உடைத்து அவளை அவன்தான் வெளிக்கொணர வேண்டும்.. அதற்கான நேரம் வாய்க்குமா என்று ஓடுமீன் ஓட காத்திருக்கும் உறுமீனைப் போல அவனும் காத்திருந்தான்...

அப்படி ஒரு நாளும் வந்தது.. ஆறு மாத காலமாக அவனருகில் இருந்தும் மனதால் தொலைதூரத்தில் விலகியிருந்த மாலினி.. தன் மனக்கதவைத் திறக்கும் நேரமும் வந்தது...

காயத்ரியைப் பெண்பார்க்க வந்திருந்தார்கள்.. அவர்களது வீட்டில் எந்த விசேஷம் நடந்தாலும் குழுமிக்கொள்ளும் உறவினர்களின் வட்டாரம் அன்றும் குழுமியிருந்தது..

காலையில் இருந்தே விருந்தினரின் வருகை ஆரம்பித்துவிட்டது.. காயத்ரியைப் பெண்பார்க்க வரும் மாப்பிள்ளையின் குடும்பமும் அவர்களுக்கு நெருங்கிய சொந்தம் என்பதால் இரு வீட்டினரின் சார்பாகவும் வரும் உறவினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது...

மாலினி அன்று மில்லுக்குப் போகவில்லை... முதல் நாளே நர்மதா காலை உணவு நேரத்தில் கட்டளை போல அவளுக்கு மறைமுக கோரிக்கையை வைத்திருந்தாள்...

"உனக்கு லீவு கிடைக்குமில்லையா மாலினி..?"

"கிடைக்கும் அத்தை... நான்தான் எடுத்தக் கொள்வதில்லை...?"

"ஏன்..?"

"மொத்தமாக சேர்ந்தால் சென்னைக்குப் போய் வரலாமேன்னு ஒரு எண்ணம்..."

"நல்ல பொண்ணு நீ.. எல்லோரும் காசு பணம் நகையைச் சேர்ப்பாங்கன்னு பார்த்தால் நீ லீவைச் சேர்க்கிறாய்..."

"நான் மட்டுமில்லை அத்தை.. வேலைக்குப் போகிறவர்கள் எல்லோருமே இதைத்தான் செய்கிறோம்.."

"அப்படியா.. எனக்காக உன் சேமிப்பிலிருந்து ஒரு நாளை நீ செலவழிக்கணுமே..."

"எதற்காக அத்தை..."

"நாளைக்கு நம் காயத்ரியைப் பெண்பார்க்க வருகிறாங்கம்மா.. சசி சொல்லியிருப்பாளே..."

சசிரேகா அதைச் சொல்லவில்லை.. ஸ்வேதா பண்ணிய ஒரு அழும்பை நினைத்து அழுது புலம்பியவள்.. அதைச் சொல்ல மறந்துவிட்டிருந்தாள். திருதிருவென்று விழிக்கும் தன் பெரியப்பா மகளைக் காட்டிக் கொடுக்க மனமின்றி...

"ஆமாம் அத்தை.. சொன்னாள்.." என்று பொய் சொல்லி வைத்தாள் மாலினி...

"அதுதானே.. அவளாவது சொல்லாமல் இருப்பதாவது... பொறுப்பான பெண்ணாச்சே..."

நர்மதா பெருமையுடன் மருமகளைப் பார்க்க.. அவள் மாலினியின் முறைப்பான பார்வையைச் சந்திக்காமல் ஜாக்கிரதையாய் திரும்பி அமர்ந்து கொண்டு ஈயென்று ஒரு அசட்டுச் சிரிப்பை சிரித்து வைத்தாள்...

"ஆமாமாம்.. ரொம்ம்ம்..ப... பொறுப்பானவள்.." மாலினி, சசிரேகாவைப் பார்த்படி பல்லைக் கடித்தாள்..

"காயத்ரியைப் பெண்பார்க்க வருகின்ற மாப்பிள்ளை வீட்டார் வேறு யாருமில்லை... காயத்ரியின் அப்பாவுடைய சித்தப்பாவின் மகள்வழிப் பேரன்தான்..."

இந்த உறவுமுறை.. அறிமுகப் படலமெல்லாம்.. என்றுமே மாலினிக்குப் பிடிபடுவதில்லை.. பேசாமல் இன்ன உறவுமுறை என்று நேரடியாகச் சொல்லிவிடலாமே என்று இருந்தது அவளுக்கு...

'காயத்ரிக்கு ஒன்று விட்ட அத்தையின் மகன்.. என்றால் போதுமே.. அதற்கு ஏன் சுற்றி வளைத்து மூக்கைத் தொட வேண்டும்' என்று யோசித்தாள்...

அதை அப்படியே நர்மதாவிடம் அவளால் சொல்லிவிட முடியுமா.. சொன்னால்தான் நன்றாக இருக்குமா..? அதனால் வேறுவழியின்றி...

"அப்படியா.. அத்தை.." என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டாள்...

"ஆமாம்மா.. இரண்டு வீட்டுக்கும் பொதுவான சொந்தக்காரங்க நாளைக்கு காலையிலிருந்தே வந்து இறங்க ஆரம்பித்து விடுவாங்க.. இன்றைக்கு ராத்திரியில் இருந்தே வேலைகள் ஆரம்பித்துவிடும்.. ஆயிரம்தான் வேலையாள்கள் வேலை செய்தாலும் நாம் செய்வதைப் போல ஆகுமா..?" நர்மதா நைச்சியமாகக் கேட்டாள்..

'ஆஹா.. இந்தம்மா.. என்னை வேலை வாங்க பார்க்குதே..' என்று நினைத்துக் கொண்டாலும்.. மறுத்துப் பேச

மாலினிக்கு மனமில்லை..

ஆறு மாத காலமாக அந்த வீட்டில் ஒருத்தியைப் போல் உரிமையுடன் தங்கிக் கொண்டு காரில் வேலைக்குப் போய் திரும்புவது இந்தக் குடும்பத்தின் தயவில்தானே... பதிலுக்கு நன்றிக்கடனில்... கொஞ்சத்தையாவது திருப்பிச் செலுத்த இது ஒரு வாய்ப்பு என்ற எண்ணத்துடன உடனே சரியென்று சொல்லிவிட்டாள்..

"ரொம்ப நல்லதாப் போச்சு.. வீட்டை அலங்காரம் செய்வது உன் பொறுப்பு. உன் ரூமை அழகாய் வைத்திருக்கிறாயே.. அதிலிருந்தே உன் திறமை தெரிகிறதே.. வீட்டையும் அதைப் போல் அழகுபடுத்த உனக்குச் சொல்லியா தரவேண்டும்.." என்று நர்மதா.. மாலினிக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்துவிட்டாள்...

மாலினியும் அதை மறுத்துப் பேசவில்லை.. மறு நாளுக்கு லீவைச் சொல்லிவிட்டு வந்து காத்திருந்த பிரபாகரன் காரில் ஏறிக் கொண்டவள்.. ஜன்னல் வழி வெளியே பார்த்தபடி...

"நாளைக்கு நான் லீவ்.." என்றாள்...

"தெரியும்.." என்றான் அவன்...

அவள் அப்படித் தெரியுமென்று கேட்கவில்லை.. அவன் அதை எதிர்பார்க்காமல்...

"காலையில்.. டைனிங் டேபிளில் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாயே..." என்றான்...

மாலினி மௌனப் போர்வையின் பின்னால் மறைந்து கொண்டவளாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தாள்... அது பழகிப் போனவனாக பிரபாகரன்.. ஒரு சிறு பெருமூச்சுடன் காரைச் செலுத்தினான்...

அன்று இரவு.. சாப்பாட்டிற்குப் பின்னர்.. அவன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான்.. தோட்டத்தின் இருளின் மறைவில்.. செடிகளுக்கு இடையே நின்று

கொண்டிருந்தவனை யாரும் கவனித்தாலும் கண்டுகொள்ள முடியாது...

வீட்டு வாசலில் சலசலப்புக் கேட்டதும் அவன் திரும்பிப் பார்த்தான்.. செந்தாமரையும் பொன்னியும் முன்னால் வர.. சசிரேகாவும் மாலினியும் சன்னக்குரலில் எதையோ பேசிச் சிரித்தவாறு பின்னால் வந்தார்கள்...

மாலினி வந்த பின்னால்.. சசிரேகாவின் முகத்தில் தோன்றியிருந்த மலர்வை பிரபாகரன் கவனிக்கவே செய்தான்...

'ம்ஹூம்.. அவள் வந்ததால் நீ மட்டுமா சந்தோஷமாக இருக்கிறாய்..? நானும்தான் சந்தோஷமாக இருக்கிறேன். ஆனால்.. அவள் உன்னைக் கண்டுகொள்கிறாள்.. என்னைக் கண்டுகொள்ளவே மாட்டேன் என்கிறாளே..'

அவர்கள் நால்வரும் வாசலுக்குப் போய் நின்றார்கள்.. என்ன செய்யப் போகிறார்கள்..? அதை அறிந்து கொள்ள பிரபாகரனுக்கு ஆவலாக இருந்தது..

மெதுவாக நடந்து காம்பவுண்டுச் சுற்றுச் சுவருக்கு அருகே சென்று நின்றான்.. அவன் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து வாசல் நன்றாகத் தெரிந்தது..

பொன்னி வாசலைப் பெருக்கி முடிக்க.. செந்தாமரை தண்ணீர் தெளித்தாள்..

மாலினி சேலை முந்தானையை இழுத்துச் செருகி முன்கொசுவத்தை தூக்கிச் செருகிக் கொண்டு குனிந்து அமரவும் பிரபாகரனுக்கு கண்கள் விரிந்தன...

அவள் குனிந்து அமர்ந்தபோது.. அவள் தோளின் இரு பக்கமும் சரிந்த மல்லிகைச் சரம் அவளது கன்னம் தொட்டு விளையாடியது... மார்த்தாண்டத்திற்கு வந்த பின்னால் முடியை வெட்டிவிடாததால் வளர்ந்திருந்த முடி பின்னலாக மாறி அவளது இடையைத் தொட்டது...

அந்தக் குடும்பப்பாங்கான தோற்றத்தில் அவளைப் பார்க்கும்போது அவனுள் ஏதோ செய்தது.. சசிரேகாவை

அண்ணாந்து பார்த்து பல்வரிசை தெரிய அவள் சிரித்த போது தாங்க முடியாமல் கையிலிருந்த செல்போனில் அவளைப் படம்பிடித்து விட்டான்...

சசிரேகாவின் கையிலிருந்த கோலப்பொடி கிண்ணம் மாலினியின் கைக்கு மாற.. அவள் தெருவை அடைத்துக் கோலம் போட ஆரம்பித்தாள்...

## 30

**காற்றோடு கலந்து...**

**உன் காதல் சொன்ன தூதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி போட்ட ரங்கோலி கோலத்தில்... மாலினியின் சொல்படி மற்ற மூவரும் கலர் பொடியைத் தூவ ஆரம்பித்தார்கள்.. ஒரு பக்கம் மாலினி கோலம் போட்டுக்கொண்டே வர.. அவர்கள் அந்தக் கோலத்தில் கலர் பொடியை பரப்பிக் கொண்டே வந்தார்கள்...

"என்ன பொன்னி.. வேகம் குறையுது.." என்றாள் சசிரேகா...

"குறுக்கு வலிக்குதும்மா.." என்றாள் பொன்னி...

"என்னவோ.. உன் ஊரில் நாற்று நடவிட்டால்.. ஒரு மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கரில் நட்டுவிடுவேன்னு பெருமை பீத்திக்கிட்ட.. இப்ப இந்தக் கோலத்தில் கலர் பொடியைத் தூவுவதற்குள் குறுக்கு வலிக்குதுங்கறயே.. நீ வெறும்

பெருமை பீத்தல் களஞ்சியம்தானா..?" மாலினி.. கோலம் போட்டுக் கொண்டே பொன்னியிடம் வம்பிழுத்தாள்...

பிரபாகரன்.. அவளை ரசனையோடு பார்த்தான்.. எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இடத்தில் தன்னைச் சுற்றி உற்சாக அலைகளை நொடிப்பொழுதில் பரவவிடும் மாலினியின் இயல்பு அவனை என்றும் போல இன்றும் வசீகரித்தது...

"இது என்னம்மா இப்படிச் சொல்லிட்டீங்க.. அந்த வேலையும் இந்த வேலையும் ஒண்ணா..?" பொன்னி சலித்துக் கொண்டாள்...

"அடேங்கப்பா.. என்னமா அலுத்துக்கறே பொன்னி.. நாற்று நடுகிற வேலை ஈஸியானதாக்கும்..? கோலத்தில் கலர் பொடியைத் தூவுகிற வேலை கஷ்டமானதாக்கும்..?" மாலினியின் வாய் பேசிக் கொண்டிருக்க.. கை சரசரவென கோடுகளை இழுத்து இணைத்துக் கொண்டிருந்தது...

"நாற்று நடவு நடக்கிறப்போ நாங்க பாட்டு பாடிக் கிட்டே நாற்று நடுவோம்.. அலுப்புத் தெரியாது.. இங்கே அப்படியா..?" பொன்னி பெருமூச்சு விட்டாள்...

"எதுக்கு இப்படிப் பெருமூச்சு விடறே பொன்னி.. நீ பாடணும்னா பாடேன்.. கேட்கிறதுக்கு நான் ரெடி.." என்றாள் மாலினி...

"ஏண்டி.. கோலம் போடலாம் வான்னு வாசலுக்கு கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டு பொன்னியைப் பாட வைத்து என்னை ஓட ஓட விரட்டலாமுன்னு பார்க்கறியே.. இது உனக்கே நல்லாயிருக்கா..? பொன்னி.. இவள் பேச்சை நம்பி நீ வாயைத் திறந்தேன்னு வை.. உள்ளே போய் அத்தையிடம் சொல்லிவிடுவேன்.." சசிரேகா.. பொன்னியை மிரட்டினாள்...

"ஏம்மா.. இப்ப நான் என்ன சொல்லிப்புட்டேன்னு சின்னம்மா இப்படிக் கோவிச்சுக்கறாங்க.. ஆடிப்பாடி வேலை செய்தா அலுப்பிருக்காதுன்னு சொல்லுவாங்க..

அதைத் தானே நானும் சொன்னேன்.." பொன்னி அங்கலாய்த்தாள்...

"இவ கிடக்கிறா பொன்னி.. இவ காலேஜ் படித்த போது காலேஜ் ஃபங்ஷனில் ஆடிய ஆட்டத்தைப் பார்த்துத் தான் உன் சின்னய்யா இந்த மேடத்தின் மேல் காதலாகி கசிந்துருகிப் போனாராம்.." மாலினி.. சசிரேகாவின் குட்டை உடைக்க.. பொன்னியும் செந்தாமரையும்.. 'ஆ..' வென்று வாய் பிளந்தார்கள்...

"அப்புறம்..?" கதை கேட்கும் ஆவலில் செந்தாமரை கேட்க.. சசிரேகா அவளை முறைத்தாள்...

"செந்தாமரையை ஏண்டி முறைக்கிற... நீ கேளு செந்தாமரை.. அப்புறம் என்ன ஆச்சுன்னா.. கட்டினால் இவளைத்தான் கட்டுவேன்னு கருணா அத்தான் ஒற்றைக் காலில் நின்னாராம்..." மாலினி, சசிரேகாவைப் பார்த்துக் கண் சிமிட்ட.. அதை மறைந்திருந்து பார்த்த பிரபாகரன் மயங்கினான்...

"அப்புறம்..?" பொன்னி கேட்டாள்...

"அப்புறம் என்ன.. ஒற்றைக் காலில் நின்றால் அவருக்கு கால் வலிக்குமேங்கிற அக்கறையில் இவளின் பெரியத்தான் தம்பிக்கு இவளைக் கட்டி வைத்துவிட்டாராம்.. போதுமா...?"

கதை சொல்லி முடித்து மாலினி நிமிரவும்.. கோலம் கலர் பொடி தூவப்பட்டு முற்றுப் பெறவும் சரியாக இருந்தது...

"எப்படிம்மா..?" பொன்னி ஆச்சரியத்துடன் வினவினாள்..

"அது அப்படித்தான் பொன்னி.. ஆடிப்பாடி வேலை செய்தால் தான் அலுப்பில்லாமல் இருக்குமா.. கதை பேசிக் கிட்டே வேலை செய்தாலும் அலுப்பிருக்காது..." மாலினி.. இலகுவாகப் பேசிக்கொண்டே செருகியிருந்த சேலையை சரிசெய்து கொண்டாள்...

அவர்கள் நால்வரும் தள்ளி நின்று கோலத்தின் அழகை ரசிக்க.. பிரபாகரன் செடி மறைவில் நின்று கொண்டு

மாலினியின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்..

வாசலில் அமர்ந்திருந்த காவலாளி.. காம்பவுண்டு கேட்டை மூடிவிட்டு கோலத்தின் முன்னால் இருந்த ஸ்டூலில் அமர்ந்து கொள்ள.. அவர்கள் நால்வரும் வீட்டுப் போர்டிகோவின் முன்னால் வந்து நின்று கொண்டார்கள். பொன்னி தண்ணீர் தெளிக்க.. மாலினி பழையபடி சேலையைத் தூக்கிச் செருகினாள்..

இப்போது பிரபாகரன்.. அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் கால் நீட்டி சாவதானமாக அமர்ந்து அவர்களை நன்றாகப் பார்க்க முடிந்தது...

மாலினி கோலத்தின் கோடுகளை இழுக்க ஆரம்பிக்க.. மற்ற மூவரும் கலர் பொடியைத் தூவ ஆரம்பித்தார்கள்..

"ஏன் பொன்னி.. நீ பாடுவாய் ஓகே.. ஆடுவதற்கு ஆளை எங்கே பிடிப்பது..?" திரும்பவும் மாலினி பேச்சை ஆரம்பித்து வைத்தாள்...

"ஏம்மா ஆளில்லே..? இதோ.. இந்த செந்தாமரையை ஆடச் சொன்னா போச்சு.." பொன்னி, செந்தாமரையைக் கை காட்ட.. அவள் அலறினாள்..

"வாயை வச்சுக்கிட்டு சும்மாயிருந்து தொலை.. நம்ம பெரியம்மா காதில் விழுந்து வைச்சிரப் போகுது.. நான் ஆடினா இந்த உலகம் தாங்குமா..?"

"பொன்னி பாடினால் கூடத்தான் உலகம் தாங்காது.. அவள் பாட ஆசைப்படவில்லையா.." சசிரேகா, செந்தாமரையைப் பார்த்துக் கேட்டாள்...

"ஏம்மா.. என் பாட்டுக்கென்ன குறை..?" பொன்னிக்கு கோபம் வந்துவிட்டது...

"இப்ப நீயேன் முகத்தை தூக்கி வைத்துக்கறே பொன்னி.. நீ பாடணும்னா பாடு.. நான் இருக்கிறேன் அதைக்கேட்க.." மாலினி.. பொன்னியை உற்சாகப்படுத்தினாள்..

"ஏண்டி.. உன் ஒருத்தியைப் பற்றி மட்டும்தான் நீ யோசிப்பியா..? எங்க இரண்டு பேரின் நிலைமையைப்

பத்திக் கொஞ்சமாவது நீ நினைத்துப் பார்த்தாயா..?" சசிரேகா சண்டைக்கு வந்தாள்...

"நினைத்துப் பார்க்காமலா இதை உங்க இரண்டு பேருக்காவும் எடுத்துக் கொண்டு வந்தேன்..?"

மாலினி தன் கையிலிருந்த பஞ்சை சசிரேகாவிடம் நீட்டினாள்...

"இது எதுக்குடி..?" சசிரேகா திகைத்தாள்...

"நீயும் செந்தாமரையும் காதில் வைத்துக்கங்க.."

மாலினி கூறியதைக் கேட்டு பிரபாகரன் சத்தமில்லாமல் சிரித்தான்...

'இவளுக்கு வால் மட்டும்தான் இல்லை.. மத்தபடி இவ அடிக்கிற லூட்டி இருக்கே.. அப்பப்பா.. எப்படித்தான் இவளுடைய அம்மாவின் வயிற்றில் அடங்கி.. பத்து மாசம் இருந்தாளோ..' என்று பிரபாகரன் எண்ணிக் கொண்டிருக்கும்போதே..

"குறை மாதத்தில் பிறந்தவள்ங்கிறதை புரூஃப் பண்ணுகிறாயேடி..." என்று மாலினியிடம் சண்டைக்குப் போனாள் சசிரேகா...

'அடிச்சக்கை.. அதுதானே பார்த்தேன்.. இந்த அவசரக் குடுக்கை.. இவளின் அம்மாவின் வயிற்றில் பத்து மாசம் அடங்கியிருந்திருக்க மாட்டாளே.. குறைப் பிரசவத்தில் குதித்துக் கொண்டு வந்துவிட்டாளா..?'

பிரபாகரனுக்கு தன் மதிப்பீடு சரியாக இருந்ததைக் கண்டு சிரிப்பு வந்தது....

"ஏம்மா.. நீங்க குறைப்பிரசவமா..?" செந்தாமரை கன்னத்தில் கை வைத்து அதிசயப்பட்டாள்...

"அதெல்லாமில்லை செந்தாமரை.. இவ.. இவளுடைய அம்மாவின் வயிற்றில் இருநூற்றி தொண்ணூறு நாள்கள் இருந்தாளாம். நான்.. இருநூற்றி எண்பத்தி ஐந்து நாள்களில் பிறந்துவிட்டேனாம்.. மேடம்.. ஐந்து நாள்கள்

அதிகமாக அம்மா வயிற்றுக்குள் இருந்ததால் இவங்க நிறைப் பிரசவமாம்.. ஐந்து நாள் குறைவாக இருந்த நான் குறைப் பிரசவமாம்.." மாலினி விளக்கினாள்...

அந்த ஒன்றுவிட்ட சகோதரிகளின் கலகலப்பைக் கண்டு பிரபாகரனுக்கு அவர்கள் மேல் பொறாமை வந்தது...

"என்னவோம்மா... இந்தக் கோலத்தை போடறப்ப வாவது ஒரு பாட்டுச் சத்தத்தைக் கேட்டுவிட்டால் எனக்கு நிம்மதியாயிருக்கும்.." பொன்னி ஏக்கமாய் சொன்னாள்..

"பாட்டைக் கேட்கணுமா..? நீ பாடப் போறதில்லையா..?" மாலினி.. போலியாய் வியந்தாள்...

"ஏண்டி.. அவளே பாட்டுப் பாடணும்கிற ஆசையை வாபஸ் வாங்கிவிட்டாள்.. நீயேண்டி அவளைத் தூண்டி விடற..." சசிரேகா.. மாலினியை முறைத்தாள்...

"இவ கிடக்கிறா பொன்னி.. நீ பாடு..." மாலினி விடாமல் பொன்னியைத் தூண்டிவிட..

"வேண்டாம்மா.. சின்னம்மா கோவிச்சுக்-கிடுவாங்க.." என்று பொன்னி ஜகா வாங்கினாள்...

"நான் இருக்கிறேன் பொன்னி.. உனக்கு.." மாலினி தைரியம் கொடுத்தாள்...

"நீங்க இருப்பீங்க.. நான் இந்த வீட்டில் வேலைக்கு இருப்பேனா.. அதையும் பார்க்கணுமில்ல..?" பொன்னி தான் புத்திசாலி என்பதை நிரூபித்தாள்...

"இதைப் பாருடா.. நீ இத்தனை விவரமான ஆளா பொன்னி? நான் உன்னை என்னமோன்னு நினைச்சேன்.." மாலினி பாராட்டு போல் கூறவும்...

"எப்படிம்மா நினைச்சீங்க.. கேணைன்னு நினைச்சீங்களா..?" என்று பொன்னி பதிலுக்கு கேட்டாள்..

மாலினி பொங்கிச் சிரித்தாள்.. அவள் சிரிப்பைக் கேட்கவும் பார்க்கவும் மிகவும் நன்றாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் பிரபாகரன்..

"உனக்கு என்ன வேணும் பொன்னி.. பாட்டுத்தானே வேணும்..? நான் பாடுகிறேன் கேளு..."

மாலினி கோலம் போட்டுக் கொண்டே சன்னமான இனிமையான குரலில் பாடினாள்...

"வெள்ளிக் கிழமை...

விடியும் நேரம்...

வாசலில்.. கோலமிட்டேன்..."

"அட.. விடிஞ்சா வெள்ளிக்கிழமை.. எப்படிம்மா.. இப்படியொரு பாட்டைக் கரெக்டாப் பாடினீங்க.." மீண்டும் கன்னத்தில் கைவைத்து அதிசயித்தாள் செந்தாமரை...

"இதுகூடத் தெரியாதா.. இதுக்குப் பேர்தான் சிச்சுவேஷன் சாங்... இல்லையா மாலினி.." சசிரேகா குறும்பாக சிரித்தாள்...

அவர்கள் அங்கே இல்லாதது போன்ற பாவனையுடன் மாலினி பாடலையும் கோலத்தையும் தொடர்ந்தாள்..

"வள்ளி கணவன்...

பெயரைச் சொல்லி...

கூந்தலில் பூ முடிந்தேன்..."

மாலினியின் பாடலைக் கேட்ட பொன்னிக்கு வேறொரு சந்தேகம் வந்துவிட்டது..

"ஏம்மா.. இந்த வள்ளியோட புருசன்கிறது யாரு..?"

"ஏய்.. இவ கேட்கிறது காதில் விழுந்ததா.. பதிலைச் சொல்லுடி..."

மாலினி.. பொறுமையாக நிமிர்ந்து பொன்னியைப் பார்த்தாள்..

"அதுவா பொன்னி.. நம்ம தெய்வானைக்கு யார் புருஷனோ.. அவர்தான் வள்ளிக்கும் புருஷன்..."

இப்போது சசிரேகா.. சிரிப்பை அடக்க முடியாமல் மடங்கி உட்கார்ந்து விட்டாள்...

31

**நீ மலர் சிரிப்பு சிரித்து...**

**என் மனதை திருடிய விதத்தை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

வண்ணக்கோலம்... வாசலிலும் காம்பவுண்டு வளாகத்திலும் பரந்து படர்ந்திருந்தது.. அவற்றைப் பார்த்த பிரபாகரனின் மனதில் அதை உருவாக்கியவள்.. அவற்றை உருவாக்கும் போது அந்த இடத்தைச் சுற்றி பரவ விட்ட உற்சாகத்தின் அலைகள் தோன்றின.. இப்போது நிறைந்திருக்கும் அமைதி சற்று முன் இந்த இடத்தில் இருந்ததா..?

பொன்னியும் செந்தாமரையும் சசிரேகாவும் ஒரு வினாடிக்கு ஒரு தடவை குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தார்களே.. ஏன்..?

அந்தச் சிரிப்பலைகளை அவர்களிடம் உருவாக்கியவள் சிரிக்காமல்.. ஆனால் பேச்சை நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தாளே.. அவளது ஒவ்வொரு வார்த்தைக்கும் அவளருகில் இருந்த மற்ற மூவரும் தான் வெடித்துச் சிரித்தனர்..

அப்பேர்ப்பட்டவள்.. அவனருகில் மௌனமாக அமர்ந்து மௌனமாக பார்த்துவிட்டுப் போய் விடுகிறாள்.. மற்றவர்களின் மேல் அவள் காட்டும் கருணையில் ஒரு

துளியளவாவது பிரபாகரனின் மேல் அவள் காட்டினால் ஆகாதா..?

கோலத்தைப் போட்டுவிட்டு அறைக்குச் சென்ற மாலினி.. குளித்து நைட்டிக்கு மாறினாள்.. தூங்குவதற்கு முன்னால் தாங்கள் போட்டிருந்த கோலத்தைப் பார்க்கும் ஆவல் மனதில் தோன்ற.. பால்கனிக்கு வந்தாள்.. குனிந்து கோலத்தைப் பார்த்தவள் அவசரமாய் பின்னுக்கு நகர்ந்தாள்...

'இவன் கோலத்துக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு என்ன செய்கிறான்..?'

மீண்டும் பால்கனியின் கம்பி வளைவின் அருகே வந்து மெதுவாக குனிந்து பார்த்தாள்...

பிரபாகரன் கோலத்தையே பார்த்துக கொண்டு நின்றிருந்தான்...

'தோடா.. கோலத்துக்கும் ஹிட்லருக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாதே.. அப்புறம் இவனுக்கு இங்கென்ன வேலை...'

இத்தனை நாள்களாக சரியாகப் பார்க்காமல் விலகிச் சென்று கொண்டிருந்த மாலினிக்கு.. அவனறியாமல் அவன் தோற்றத்தை ரசிக்க அது ஒரு நல்ல வாய்ப்பாக தோன்றி விட்டது.. கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் அவள் இறுகப் பற்றிக் கொண்டாள்..

போர்டிகோவின் முன் பக்க நியான் விளக்கின் வெளிச்சத்தில் அவன் தெளிவாகத் தெரிந்தான்.. அவனுடைய உயரத்தையும் கம்பீரத்தையும் ஆண்மை கலந்த நிமிர்வான தோற்றத்தையும் பார்த்துக் கொண்டிருந்தவள்.. அவனால் வசீகரிக்கப்பட்டாள்..

அவன் முகத்தின் சுளிப்பை அவளால் மாடி பால்கனியிலிருந்து பார்க்க முடிந்தது.. அவளுக்குத் தெரியும்.. அவளுடைய ஒரு ரகசியமான பார்வை அந்த முகச்சுளிப்பை அழித்துவிடும் என்பது..

'எப்படி.. அப்பப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்ட இவனை எப்படி நான் மன்னிக்க..?'

அவள் பெருமூச்சுடன் அங்கிருந்து நகரப் போன போது யதேச்சையாக பிரபாகரன் அண்ணாந்து பால்கனியைப் பார்த்தவன்.. அவளுடைய பார்வையைச் சந்தித்து விட்டான்...

அவன் கண்கள் மின்னுவதை அவளால் தெளிவாக கண்டுகொள்ள முடிந்தது.. அங்கிருந்து நகரச் சொல்லி.. அவள் மனம் கடிந்து கொண்டது.. ஆனால்.. அவள் கால்கள் நகர மறுத்து ஆணியடித்தாற் போல் அங்கேயே நிலை பெற்றுவிட.. மாலினி அசையாமல் நின்றாள்...

அவர்களின் பார்வைகள் பின்னிப் பிணைந்தன.. பிரபாகரனின் மேல் விழுந்த வெளிச்சத்தில் பாதியளவு தான் மாலினியின் மேல் விழுந்தது.. அந்தக் குறைந்த வெளிச்சத்திலும் அவளை பிரபாகரனால் நன்றாகப் பார்க்க முடிந்தது...

அவளது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றை பிரபாகரன் கண்டுகொண்டு விட்டான்.. அவள் எதிர்பார்த்த படியே அவன் முகச்சுளிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.. அதை ஒருவித மனத்திருப்தியுடன் அவள் பார்த்தாள்.. அவள் அவனைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால்.. அவனது மன வேதனையிலிருந்து அவனை மீட்க நினைத்தாள்..

அது தானாக நடந்துவிட்ட மகிழ்வை அவள் முகம் பிரதிபலித்ததை கீழே நின்றுகொண்டிருந்த பிரபாகரன் கவனித்தான்.. சற்று முன்.. அவன் மனதிலிருந்த பாரம் அகன்று மயிலிறகாய் மனம் லேசானதைப் போல அவன் உணர்ந்தான்...

அதற்கு மேல் அங்கே நிற்க முடியாதவளாய் மாலினி உள்ளே ஓடிவிட்டாள்.. பிரபாகரன் ஒரே தாவில் வீட்டுப் படிகளைத் தாவி ஏறிக் கடந்து மாடிப்படிகளில் விரைவாக ஏறினான்.. பால்கனியிலிருந்து முகச் சிவப்புடன் மாலினி மாடி ஹாலுக்குள் வருவதற்கும் அவன் அவள் முன்னால்

வழிமறித்ததைப் போல போய் நிற்பதற்கும் மிகச் சரியாக இருந்தது...

தன் எதிரில் நிற்பவனைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் மாலினி இமை கொட்டி விழித்தாள்...

'இப்போதுதானே.. இவன் கீழே நின்று கொண்டிருந்தான்.. அதற்குள் எப்படி இங்கே வந்தான்..?'

அவளது திகைப்பை ரசிக்கும் முறுவல் ஒன்று அவன் முகத்தில் உதித்தது...

அவன் அவளைப் பார்த்து புருவங்களை கேலியாக உயர்த்தினான்...

அவள் பிடிபட்டுவிட்ட உணர்வுடன் பார்வையை தழைத்துக் கொண்டாள்.. அங்கிருந்து அவசரமாக நகரப் போனவளை நர்மதாவின் குரல் தடுத்து நிறுத்தியது..

"கோலம் அழகாயிருக்கு மாலினி..."

இவள் எப்போது வந்தாள் என்ற உணர்வுடன்..

"தேங்க்ஸ் அத்தை..." என்றாள் மாலினி..

"ஆச்சரியம்தான்.. இல்லையாடா பிரபா..." நர்மதா மகனின் பக்கம் திரும்பிக் கேட்டாள்...

'எதற்கும்மா..?' என்று பதிலுக்கு கேட்காமல்...

"ஆமாம்.. அம்மா.." என்றான் அவன்...

'இவன் ஆமாம் சாமி போடும் ஆளில்லையே.. அப்புறம் எதற்கு இப்போது ஆமாம் சாமி

போடுகிறான்.. அப்படி எந்த ஆச்சரியத்தை என்னிடம் கண்டுவிட்டான்..?'

மாலினியின் விழி வினவிய வினா பிரபாகரனுக்குப் புரிந்தது...

'உன்னிடம் ஒரு ஆச்சரியம்தான் இருக்கிறதா.. ஓராயிரம் ஆச்சரியங்கள் உண்டே...'

அவன் மனதிற்குள் சொல்லியபடி அவளைப் பார்த்தான்.. அவள் மனம் சொல்லியதை அவனுடைய விழியும் சொல்லியதோ என்னவோ.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. உடனே அவளது உதடுகளின் மீது அவனது பார்வை படிந்தது.. அவள் முகம் சிவந்து போனாள்..

ஒரு நாள்.. இரண்டு நாள்கள் அல்ல.. ஆறு மாதங்களாக அவள் விலகிப் போனதில் ஏற்பட்டிருந்த மனத்துயரம் மாயமாய் மறைய.. அவன் உல்லாசம் நிரம்பிய விழிகளோடு அவளைப் பார்த்தான்...

"சென்னையில் பிறந்து.. கான்வென்டில் படித்த இன்ஜினீயர் பெண்ணுக்கு.. இவ்வளவு அழகான கோலம் போடத் தெரிகிறதே..."

தான் ஆச்சரியப்பட்டதற்கான காரணத்தை நர்மதா கூறினாள்...

"இதை அம்மா சொல்லிக் கொடுத்தாங்க அத்தை.." மாலினி வெட்கத்துடன் சொன்னாள்...

"அம்மா கற்றுக் கொடுப்பதை அக்கறையாய் கற்றுக் கொள்ளும் பெண்கள் குறைவுதான். அந்த வகையில் நீயும் சரி.. சசியும் சரி.. படித்திருந்தாலும் குடும்பத்திற்கு ஏற்ற பெண்களாக இருக்கறீங்க..."

சசிரேகாவுடன் இணைந்து தன்னையும் நர்மதா கூறியதில் லேசாக சங்கடமடைந்தாள் மாலினி...

சசிரேகா அந்த வீட்டின் மருமகள்.. மாலினி வெறும் விருந்தாளி.. இருவரும் எப்படி இணையாக முடியும்..?

நர்மதா அதை உணர்ந்து கொண்டாளோ இல்லையோ... கழுகுக்கு மூக்கு வியர்த்ததைப் போல அங்கே வந்து விட்ட ஸ்வேதா உணர்ந்து கொண்டாள்.. அவள் முகம் கடுத்தது...

"அது என்னவோ அத்தை.. என் வீட்டில் என் அம்மா இதையெல்லாம் எனக்குச் சொல்லித் தரவில்லை.." விழிகள் பளபளக்க ஸ்வேதா கூறினாள்...

நிச்சயம் அவள் நல்லவிதமாய் பேசப் போவதில்லை என்று மாலினிக்கு புரிந்துவிட்டது..

அது புரியாத நர்மதா.. இயல்பாகச் சிரித்தாள்...

"அண்ணிக்கே... அது தெரியாதே.. அவங்களுக்குத் தெரிந்திருந்தால் தானே உனக்குச் சொல்லிக் கொடுத்திருப்பாங்க..."

கோலம் போடுவதைப் பற்றித்தான் ஸ்வேதா சொல்கிறாள் என்ற நினைவுடன் நர்மதா பேசுவது மாலினிக்கு தெரிந்தது.. அவள் முகம் இறுக.. ஸ்வேதாவை சட்டை பண்ணாமல் நர்மதாவைப் பார்த்துக் கொண்டே நின்றாள்...

"அம்மாவுக்கு என்ன அத்தை.. என் பாட்டி.. கொள்ளுப்பாட்டி.. ஏன்.. எங்க பரம்பரையில் இருக்கும் பெண்களுக்கே இது தெரியாது..."

மாலினி பல்லைக் கடித்தபடி தன்னையுமறியாமல் பிரபாகரனைப் பார்த்தாள்.. அவன் விழிகளால் அவளை அமைதியாக இருக்கும்படி சமிக்ஞை செய்தான்..

"இல்லையே.. பாட்டிக்கு கோலம் போடத் தெரியுமே.." நர்மதா கோலத்தைப் பற்றிய பேச்சிலேயே நின்றாள்...

"அம்மா.. காயத்ரியின் நகைகளை பேங்க் லாக்கரி லிருந்து எடுத்து வந்து கொடுத்தேனே.. அதைப் பத்திரப் படுத்தி விட்டீங்களா..."

பிரபாகரன் நினைவுக்கு வந்ததைப் போல திடீரென்று கேட்கவும்... நர்மதாவின் கவனம் திசை திரும்பியது...

"பத்திரமாய் வைத்து விட்டேன்ப்பா.." அவள் அவசரமாகப் பதில் சொன்னாள்...

பிரபாகரன் பேச்சை மாற்றிவிட்டதை மாலினி.. ஸ்வேதா இருவருமே புரிந்து கொண்டார்கள்...

'அவ்வளவு அக்கறையா இவள் மீது...' ஸ்வேதா ஆத்திரப்பட்டாள்...

"எதற்கும் அந்த அறைச்சாவியை உங்க பொறுப்பிலேயே வைத்துக்கங்கம்மா.. வீடு பூராவும் விருந்தாளிகள் கூட்டம் வரப்போகுது..." பிரபாகரன் மேலும் நர்மதாவை கலவரப்படுத்தினான்...

"என்ன பிரபா இது.. நம் சொந்தக்காரங்க மீது நாமே சந்தேகப்படலாமா..?" நர்மதா ஆட்சேபித்தாள்...

"அதுதானே.. நம் வீட்டுக்கு வருகிற நம் பக்கத்து சொந்தக்காரங்க யாரும் அன்னக்காவடி இல்லையே அத்தான். அவங்களுக்கு வைர நகைகள் புதிதில்லையே.. ஒருவேளை இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்காத விருந்தாளியை நினைத்து நீங்க பயப்படறீங்களோ..." ஸ்வேதா சரியானபடி தாக்கிவிட்டாள்...

மாலினியின் முகம் கோபத்தில் சிவந்தது.. நர்மதா மட்டும் பக்கத்தில் நிற்காமல் இருந்திருந்தால் அவள் ஸ்வேதாவை ஒரு கை பார்த்திருப்பாள்.. ஆனால்.. வீட்டிற்கு எஜமானி அருகில் நிற்கும் உணர்வோடு பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக நின்றாள்...

"ஊஹூம்.. நீ புரியாமல் பேசுகிறாய் ஸ்வேதா.. வைர நகைகளைப் பற்றித் தெரிந்தவங்களால்

தான் ஆபத்தே வரும்... எங்கள் காயத்ரியின் வைர நகைகள்... பரம்பரையாய் இந்த வீட்டில் பிறக்கும் பெண்களுக்கு கொடுக்கப்படுபவை... அதன் மதிப்பை வார்த்தையால் சொல்ல முடியாது.. விலை கொடுத்தாலும் அப்படிப்பட்ட வைர நகைகளை இப்போது வாங்க முடியாது.. இதையெல்லாம் நகைமேல் பித்தாக இருக்கிறவங்கதான் தெரிஞ்சு வைத்துக்குவாங்க... கோலத்தையும் வானத்தையும் தென்றலையும் இசையையும் ரசிக்கும் ரசிக மனதைக் கொண்ட

வங்க கண்டுக்கவே மாட்டாங்க.. அவங்களுக்கு வைரத்தை விட வானவில் உயர்த்தியாய் தெரியும்..

ஸோ.. நகைகளைப் பற்றித் தெரிந்த உன் போன்ற ஆளுககிட்ட இருந்துதான் நகைகளைப் பாதுகாக்க

வேண்டும்.."

பிரபாகரன் இப்படி நேரடியாய் பேசிவிடுவான் என்று எதிர்பார்த்திராத ஸ்வேதாவின் முகம் கன்றிப் போய்விட்டது...

"என்னைப் பார்த்தால்... திருடியைப் போல் உங்களுக்குத் தெரிகிறதா அத்தான்..." அவள் கண் கலங்கக் கேட்டாள்...

நர்மதாவும் பிரபாகரனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.. அவளுடைய மூத்த மகன்... எல்லோரிடமும் கண்டிப்பாக இருப்பான்.. ஆனால், தேவையில்லாமல் யாரையும் புண்படுத்த மாட்டான்... அவனா இப்படிப் பேசுவது..?

32

**உன் சின்னஞ்சிறு சொல்லால்...**

**என் மனதை சிதற வைத்த விதத்தை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பிரபாகரன் மிகவும் கண்டிப்பான நிர்வாகி, நர்மதா விடம்கூட முகத்தில் ஒரு கண்டிப்போடுதான் பேசுவான். வீட்டு வேலையாள்களுக்கு அவன் சிம்ம சொப்பனம்... உடன் பிறந்தவர்களோ அவன் முகத்தைப் பார்த்து பேசக்கூட பயப்படுவார்கள்.. அப்படிப்பட்ட இயல்புடையவன் இதுவரை கோபச் சொல்கள் பலவற்றை உதிர்த்திருக்கிறான்.. ஆனால், சுடுசொல்லை உதிர்த்ததில்லை...

இன்று ஸ்வேதாவிடம் அவன் பேசிய ஒவ்வொரு சொல்லும் அமிலச் சொல்.. இதையேன் பிரபாகரன் பேசினான் என்ற ஆராய்ச்சியில் அவள் மனம் இறங்கியது...

பிரபாகரனுக்கு ஸ்வேதாவைப் பிடிக்காது.. கொஞ்சம்கூட பிடிக்காது... இதை நர்மதா நன்கு அறிவாள்.. பிடிக்காததனால் அவன் இதுவரை விலகிப் போயிருக்கிறானே யொழிய... ஸ்வேதாவின் மனம் வலிக்கப் பேசியதில்லை.. இப்போது மட்டும் அவனுக்கு என்னவாயிற்று..?

அதை அறிய வேண்டிய அவசியம் தனக்கு இருப்பதாக அவள் உணர்ந்தாள்...

"என்ன விஷயம் பிரபா..?" நர்மதா மகனின் முகம் பார்த்துக் கேட்டாள்...

"அம்மா.. உங்களிடம் நிறைய தடவை நான் சொல்லியிருக்கிறேன்.. என்னதான் உறவுக்காரப் பெண்ணாக இருந்தாலும் நம் வீட்டு விவகாரங்களில் தேவையில்லாமல் ஸ்வேதா மூக்கை நுழைக்கக் கூடாதுன்னு.." பிரபாகரன் கோபமாகக் கூறினான்...

"ஆமாம்.." நர்மதா சங்கடத்துடன் பதில் சொன்னாள்...

"அவள் அதைக் கேட்பதாக இல்லை... தேவையில்லாமல் மூக்கை நுழைத்தால் இப்படி மூக்கு உடைபடத்தான் செய்யும்.. நீங்க இதைக் கண்டு கொள்ளாதீங்க..." பிரபாகரனின் குரலில் கண்டிப்புத் தெரிந்தது...

"இருந்தாலும் பிரபா.. அவள் நம் வீட்டு விருந்தாளி.."

"அந்த நினைவு அவளுக்கும் இருக்க வேண்டுமில்லையா..? இதோ மாலினியும்தானே நம் வீட்டில் இருக்கிறாள்.. ஒரு நாள் ஒரு பொழுதாவது அதிகப்படியாய் ஒரு வார்த்தை பேசியிருப்பாளா.. தேவையில்லாத விஷயங்களில் மூக்கை நுழைத்திருப்பாளா..?"

"மாலினி.. கெட்டிக்காரப் பெண் பிரபா..."

நர்மதா வாஞ்சையுடன் மாலினியைப் பார்த்து புன்னகைத்து வைக்க.. ஸ்வேதாவிற்கு தாங்க முடியவில்லை...

"அத்தான்.. இது கொஞ்சம்கூட நன்றாக இல்லை.."

"எது..?"

"என்னை இந்தப் பெண்ணுடன் இணை சேர்ப்பது.."

"அதுதானே பார்த்தேன்.. நீ இங்கேதான் வருவாய்ன்னு எனக்கு நல்லாத் தெரியும்.. கேட்டுக்கங்க அம்மா.. இவள் மனம் புண்பட நான் பேசியதைவிட இவளை மாலினிக்கு இணையாக நான் பேசியதுதான் இவளைப் பாதித்திருக்கிறது..."

நர்மதா சட்டென்று மகனின் கோபத்திற்கான ஆணிவேரைக் கண்டுபிடித்து விட்டாள்.. அவள் முகத்தில் இப்போது கடுமை வந்திருந்தது...

"ஸ்வேதா.. இதைப் போல பேசுவது இதுவே கடைசியாக இருக்கட்டும்..." என்று ஸ்வேதாவிடம் சொன்னாள்...

"அத்தை..." ஸ்வேதாவின் வாய் அடைத்துக் கொண்டது...

"பேசாதே... நீ இந்த வீட்டில் எப்படியோ அதுபோல் தான் மாலினியும்.. இதில் சமமாக பேசக்கூடாதுன்னு

எந்த அர்த்தத்தில் சொல்கிறாய்...?"

"நான் உங்கள் அண்ணன் மகள் அத்தை..."

"ஒன்றுவிட்ட அண்ணனின் மகள்.. மாலினியும் சசிரேகாவின் ஒன்றுவிட்ட சித்தப்பாவின் மகள், உனக்கு இருக்கும் அதே உரிமை மாலினிக்கும் இருக்கிறது.. நான் இந்த வீட்டின் எஜமானியென்றால்.. சசிரேகா இந்த வீட்டின் சின்ன எஜமானி. என் சொந்தமென்று இந்த வீட்டில் தங்க உனக்கு உரிமையிருக்கும் போது அவளுடைய சொந்த மென்று தங்க மாலினிக்கும் உரிமையிருக்கிறது..."

"அது எப்படி அத்தை.. இவளும் நானும் எப்படிச் சமமாவோம்...?"

"இல்லைதான்.. மாலினிக்கு நீ சமமில்லைதான்.. மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்துவிட்டு சென்னையிலிருந்து மார்த்தாண்டத்திற்கு வேலை பார்க்கவென்ற காரணத்துடன் வந்தவள் மாலினி..

உன்னைப் போல் எந்தக் காரணமும் இல்லாமல் இந்த வீட்டைச் சுற்றவில்லை..."

"அத்தை..."

நர்மதா இதைப்போல் பலமுறை ஸ்வேதாவை கண்டித்திருக்கிறாள்.. ஆனால்.. அப்போதெல்லாம் ஸ்வேதா தனியாக அவளிடம் மாட்டியிருந்தாள்.. ஆனால்.. இப்போது மாலினியின் முன்னால் நர்மதா திட்டியதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

நர்மதாவிற்கோ கோபம் கரைபுரண்டு கொண்டிருந்தது... இந்த ஆறு மாத கால அவளில் அவள் மாலினியைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.. அந்த வீட்டில் இருக்கும் இடம் தெரியாமல் வளைய வந்து கொண்டிருந்தாள் மாலினி.. ஒரு வார்த்தை அதிகமாய் பேசியதில்லை.. முதல் நாளுக்கு பின்னால் தினகரன் வலிய வந்து பேசும் போதெல்லாம் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்து பதில் சொன்னதில்லை.. பிரபாகரனுடன் காரில் போய் வந்தாலும் தேவையில்லாமல் அவனிடம் நின்று பேசியதில்லை...

இத்தனைக்கும் தன் கலகலப்பான சுபாவத்தால் வீட்டில் இருந்த வேலையாள்களைக்கூட கவர்ந்திருந்தாள் மாலினி.. ஆயினும்.. நர்மதாவின் முன்னால் அமைதியாகத் தான் இருப்பாள்...

'குடும்பத்திற்கு ஏற்ற பெண்..'

மாலினியைப் பற்றிய நர்மதாவின் மதிப்பீடு இது.. காயத்ரி, மாலினியைப் பற்றி வியந்து பேசுவாள்...

"சின்ன அண்ணியின் தங்கை வெரி ஸ்மார்ட்ம்மா.. அவங்ககூடப் பேசினால் எத்தனை விஷயம் தெரியுது தெரியுமா.. உலக அரசியல் முதல் பேட்டை அரசியல் வரை விரல் நுனியில் தெரிந்து வைத்திருக்கிறாங்க.. விளையாட்டா..? கிரிக்கெட் முதற்கொண்டு நம்ம ஊரு கபடி வரை அவங்களுக்கு அத்துப்படி.. சினிமாவா.. 'டைட்டானிக்'கில் ஆரம்பித்து நம்ம ஊர்.. 'ஆழகர்சாமியின்

குதிரை...' வரைக்கும் அக்குவேறு ஆணிவேராய் கமெண்ட் பண்ணுகிறாங்க.. மார்வெலஸ் கேர்ள்..."

காயத்ரி யாரையும் இப்படிப் புகழ்ந்து பேசமாட்டாள்.. அத்தனை வருடங்களாய் அறிந்த ஸ்வேதாவைப் பற்றிப் பேச்சு வந்தால் பேசுவதற்கு ஒன்றுமேயில்லை என்பதைப் போலத் தோளைக் குலுக்கிக் கொண்டு போய்விடுவாள்..

அத்தகைய குண இயல்புடைய மாலினியை ஸ்வேதா குறைவாக பேசுகிறாள்.. அதுவும்.. நர்மதாவின் முன்னாலேயே பேசுகிறாள் என்றால் அதைக் கேட்டுக் கொண்டு எப்படி பொறுமையாய் இருப்பது..? நர்மதா கோபம் கொண்டாள்...

"நானும் பேசக்கூடாதுன்னு பார்த்தேன்.. நீ என்னைப் பேச வைக்கிறாய்.. உன் சிறுபிள்ளைத்தனத்திற்கு

அளவே யில்லாமல் போய்விட்டது.. உன்னைப் பொறுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் எனக்கில்லை.. உன் அப்பாவின் முகத்திற்காக பார்க்கிறேன்..."

"அப்பாவின் நினைவுகூட இல்லாமல் என்னை இப்படி மூன்றாம் மனுஷியின் முன்னால் நிற்க வைத்துப் பேசலாமா அத்தை.." சட்டென்று ஸ்வேதா.. நர்மதா விட்ட நூல் முனையைப் பிடித்துக் கொண்டாள்...

"சட்.. உன் புத்தி உன்னை விட்டுப் போகவே போகாதா.. உன்னைப் பெத்தவங்களை எனக்கு நான் பிறந்ததிலிந்து தெரியும்.. மாலினியைப் பெத்தவங்களை நான் பார்த்ததுகூட இல்லை.. பெத்தவங்களின் முகத்தாட்சண்யத்திற்காக மாலினியைப் பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் நடந்து கொள்கிறாளே.. அவள் பெண்ணா.. இல்லை நீ பெண்ணா..."

ஸ்வேதா வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்தாலாவது நர்மதா அத்துடன் விட்டுவிட்டுப் போயிருப்பாள்.. அவள் மேலும் வாயைக் கொடுக்கவும்.. நர்மதாவின் கோபம் அதிகமாகிவிட்டது.. அவள் தன் கோபத்தை கொட்ட ஆரம்பித்து விட்டாள்...

"இந்தக் குடும்பம் பணத்தை மட்டும் பார்க்கும் குடும்பமில்லை.. குணத்தையும் பார்க்கும் குடும்பம்.. சசிரேகாவிடம் அது நிறைய இருக்கிறது.. எங்கள் வீட்டின் பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றும் விதமாகத்தான் அவள் நடந்து கொள்கிறாள்.. அவளின் தங்கையென்ற மரியாதையை மாலினியும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாள்... கொஞ்ச நேரத்திற்கு முன்னால் எதையோ ஜாடையாக சொல்ல வந்தாயே.. என்ன சொல்ல வந்தாய்..?"

நர்மதா, ஸ்வேதாவின் பேச்சைக் கவனித்துக் கொண்டு தான் இருந்திருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட மாலினியின் மனதில் நர்மதாவைப் பற்றிய மதிப்பீடு உயர்ந்தது...

'இந்த அம்மாதான் எவ்வளவு நுணுக்கமா எல்லாவற்றையும் கவனிக்கிறாங்க...!'

அவள் பார்வையும் பிரபாகரனின் பார்வையும் சந்தித்துப் பிரிந்தன.. அதைக் கவனித்துவிட்ட ஸ்வேதாவின் ஆத்திரம் பன்மடங்காகப் பெருகிவிட்டது...

"என்னசொல்ல வந்தேன்..? என் பரம்பரையில் இருக்கும் பெண்களுக்கு சுட்டுப்போட்டாலும் இது தெரியாதுன்னு சொல்ல வந்தேன்..."

"எது..?"

நர்மதாவின் குரல் கண்டிப்பாக ஒலித்தது... அவள் முகத்தில் தெரிந்த கோபாக்கினியின் ஜூவாலையைக் கண்டு மாலினியே அச்சமுற்றாள்.. பிரபாகரனின் கோபம் எங்கிருந்து வந்தது என்பதை அவளால் கண்டுகொள்ள முடிந்தது..

ஆனால் ஸ்வேதா.. அதை சட்டை செய்யவே இல்லை.. இந்த வீட்டுக்கு மருமகளாக வேண்டுமென்ற கனவு அவளுக்குள் இருந்தது உண்மைதான்.. அதற்காக எவ்வளவு தான் பொறுத்துப் போவதென்ற அளவு இல்லையா...? நர்மதாவின் வாய்வார்த்தையை வேதவாக்காக எடுத்துக்

கொள்ள அவளென்ன சசிரேகாவைப் போல அன்றாடங் காய்ச்சியின் வீட்டிலிருந்து வந்தவளா...?

'நான் மட்டும் இந்த வீட்டிற்கு மருமகளாக வந்தேன் என்றால்.. இந்தக் கிழவியைத் தூக்கி மூலையில் உட்கார வைத்துவிடுவேன்...'

அப்படியொரு வன்மம் நர்மதாவின் மேல் ஸ்வேதாவிற்கு நீண்ட நாள்களாக உண்டு..

"இப்படி முறையில்லாமல் காதல் வலைவீசி பணக்காரவீட்டு ஆண்பிள்ளைகளை கைக்குள் போட்டுக் கொள்வது...."

"ஸ்வேதா..."

இப்போது மாலினி அதிர்ந்து போய்விட்டாள்... எவ்வளவு தைரியம் இருந்தால் ஸ்வேதா இதைப் போல் பேசுவாள்..? அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.. அப்போதுதான் நர்மதா அந்தக் காரியத்தைச் செய்தாள்...

ஸ்வேதாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள்..

"அத்தை.." ஸ்வேதா கன்னத்தைப் பிடித்துக் கொண்டு சிலையாக நின்றுவிட்டாள்..

"நானும் பொறுமையாய் பேசிப் பார்க்கிறேன்.. நீ அடங்க மாட்டேன்னு அடம்பிடிக்கிறாயே.. இப்படிப்பட்ட வார்த்தைகளை இந்த வீட்டுப் பெண்களைப் பார்த்துப் பேசும் தைரியத்தை உனக்கு யார் கொடுத்தது..?"

"நான் இந்த வீட்டுப் பெண்ணில்லையா..?"

"இல்லை.. இனி அப்படியொரு நிலையும் வராது... எவ்வளவு தைரியம் உனக்கு.. என் பெரியப்பாவின் பேத்தியாக இருந்தால் நீ என்ன வேண்டுமானாலும் பேசிவிடுவாயா...?"

"நான் அப்படியென்ன தப்பாக பேசிவிட்டேன்..? கருணா அத்தானை அந்த சசி காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டு இந்த வீட்டுக்குள் வந்தவள்தானே.."

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. ராஸ்கல் என் மருமகளைப் பார்த்து என்ன வார்த்தை

பேசுகிறாய்..? கருணா.. சசியைக் காதலித்தான்.. அது உண்மை.. ஆனால், அவங்க இரண்டு பேரும்

காதல் கல்யாணம் பண்ணிக்கொள்ள வில்லை.. கருணா அவன் மனதிலிருந்ததை என்னிடமும் பிரபாவிடமும் சொன்னான்.. நாங்க சசியைப் போய் பெண் பார்தோம்.. குறை சொல்ல முடியாத

நிறைகுடமாய் அவள் இருந்தாள்.. இப்போதும் இருக்கிறாள்.. இனியும் இருப்பாள்.. எங்க குடும்பத்திற்கு ஏற்ற பெண்ணுன்னு முடிவு பண்ணினோம்.. கல்யாணம் பண்ணிவைத்தோம்... எங்கள் சம்மதமில்லாமல் கருணா ஒரு காரியத்தையும் செய்ததில்லை.. இனியும் செய்ய மாட்டான்..."

கருணாகரனை மணந்துகொள்ள வேண்டுமென்ற கனவு ஒரு காலத்தில் ஸ்வேதாவிடம் இருந்தது.. எல்லா முறை மாப்பிள்ளைகளுக்கும் கண்களால் வலைவீசிக் கொண்டிருந்தவள்.. கருணாகரனின் மீது அதிகமாக வலை வீசினாள்.. ஆனால்.. அவனோ சசிரேகாவை மணந்து கொண்டான்.. அந்த ரணம் இன்னும் அவள் மனதில் மீதமிருந்தது...

"காதல்னு சொல்லி.... சசி இந்த வீட்டில் நுழைந்தாள்ன்னு சொல்லுங்க.. இல்லாவிட்டால்..

இந்த வீட்டின் மருமகளாக அவளால் முடியுமா..? இந்த வாழ்க்கையை கனவில் நினைத்துப் பார்க்கக்கூட அவளுக்கு தகுதியில்லை.. பட்டும் தங்கமுமே அவளுக்கு எட்டாக்கனி.. இதில் வைரங்களும் மாளிகையும் இந்த சொத்து சுகமும் கிடைக்குமுன்னு அவள் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்.. எனக்கு என் அப்பா.. கொடுக்கப் போகும் சீர்வரிசைகளின் மதிப்பாவது அவளுக்குத் தெரியுமா.. என் ஒரு வைர மாலைக்கு ஈடாக மாட்டாள் அவள்.. அவளெல்லாம் இந்த வீட்டுக்கு மருமகள்.."

"வாயை மூடுன்னு சொன்னேனா இல்லையா..? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வருகிறவன்.. உன்னிடம் இருக்கிற வைரங்களுக்காகவும் சொத்து சுகத்திற்காகவும்தான் உன்னைப் பெண் கேட்டு வருவான்.. உனக்காக.. உன் அழகுக்காக.. உன் குணத்திற்காக உன்னைப் பெண் கேட்டு வர மாட்டான்.. ஆனால்.. சசியை அவளுக்காக நாங்கள் பெண் கேட்டுப் போனோம்.. அவளுக்கு நீ ஈடா..?"

"அத்தை..."

"உனக்கு ஒன்று தெரியுமா.. சசி.. கருணாவைக் காதலித்தபோது அவன் இவ்வளவு பணக்காரன்னு அவளுக்குத் தெரியாது.. தெரிந்தவுடன் விலகிப் போயிருக்கிறாள்..."

"எல்லாம் நடிப்பு..."

"அவளுக்கு நடிக்கத் தெரியாது... அதுக்கான அவசியமும் அவளுக்கு இல்லை.. ஏன் இவ்வளவு சொல்கிறாயே.. இந்த வீட்டின் பெருமைக்காகவும் சொத்து சுகத்திற்காகவும் தானே நீ இந்த வீட்டு ஆண்களை சுற்றி வருகிறாய்...?"

'கேட்டாளே ஒரு கேள்வி...' மாலினிக்கு நர்மதாவை கட்டிப் பிடித்துக் கொஞ்ச வேண்டும் போல இருந்தது...

"அத்தை..."

"போதும் ஸ்வேதா.. இத்தோடு நிறுத்திக்கொள் இனியும் நீ என் மருமகளைப் பற்றியோ அவளுடைய தங்கையைப் பற்றியோ குறைவாக ஒரு சொல் சொன்னாலும் நான் சும்மாயிருக்க மாட்டேன்.. உன் வீட்டாரை வரவழைத்து விஷயத்தைச் சொல்லி உன்னை அவங்களோடு அனுப்பி வைத்துவிடுவேன்.. அதற்குப் பின் நீ இந்த வீட்டில் காலடி வைக்கவே முடியாது..."

"அத்தை..."

ஸ்வேதா ஸ்தம்பித்து விட்டாள்.. இப்படிப்பட்ட கடுமையை நர்மதா வெளிப்படுத்துவாள் என்று அவள்

நினைத்துக்கூடப் பார்த்தது இல்லை..

"போ.. போய் உன் ரூமில் உட்கார்ந்து நீ நடந்து கொள்ளும் முறையை யோசித்துப் பார்.."

நர்மதா கடுமையாய் ஸ்வேதாவின் அறையை நோக்கி கை காட்டவும்.. ஸ்வேதா அங்கிருந்து ஓடியே போய்விட்டாள்...

33

**உன் நிழல் தேடி.. என் நெஞ்சம்..**

**தினம் தவிக்கும் நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

'கொடுத்து வைத்தவள்' ஆயிரத்து ஐந்தாவது முறையாக சசிரேகாவைப் பற்றி ஆச்சரியத்துடன் நினைத்துக் கொண்டாள் மாலினி...

எப்பேர்ப்பட்ட குடும்பம் இது.. ஸ்வேதா மிகைப் படுத்திக் கூறினாலும் அதில் சிறிதளவு உண்மை இருக்கத்தானே செய்கிறது...?

சசிரேகாவின் குடும்பம் ஏழ்மையானதுதான்.. அந்த வீட்டில் பிறந்த பெண்ணிற்கு கண்ணுக்கு லட்சணமாய் கணவனும் கிடைத்து அவனுடைய காதலும் சேர்த்துக் கிடைப்பதே பெரிய வரம்..

சசிரேகாவிற்கு அது கிடைத்தது.. கணவனின் குடும்பம் மிகப் பெரிய பணக்கார குடும்பமாக அமைந்து விட்டதில் அவளுக்குச் சந்தோஷம்தான் என்றாலும்.. அது இல்லாமல் கருணாகரன் சாதாரண கூலித் தொழிலாளியாக இருந்திருந்தாலும் அவள் அதை பெரிதாக நினைத்திருக்க மாட்டாள்...

அவளுக்கு வேண்டியது கருணாகரன் மட்டும் தான்.. ஆனால்.. நர்மதாவின் அன்பு.. பாசம்.. மருமகளின் மேல் அவள் காட்டிய கனிவு.. இவையெல்லாம் காணக் கிடைக்காத பொக்கிஷம் அல்லவா..?

ஸ்வேதா.. நர்மதாவின் சொந்தப் பெரியப்பாவின் பேத்தி.. ஒன்றுவிட்ட அண்ணன் மகள்.. அவளையே தன் வீட்டிற்கு வந்த மருமகளுக்காக தூக்கி எறிந்துவிட்டா ளென்றால் சசிரேகாவின் அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது...

அந்த நொடியில்... சசிரேகாவை நினைத்து மாலினிக்கு லேசாக பொறாமை வந்தது.. அது அவளுடைய புகுந்த வீட்டின் அளவற்ற செல்வத்தை நினைத்து வரவில்லை... அவளுக்குக் கிடைத்திருக்கும் அருமையான உறவுகளை நினைத்து வந்தது...

அதிகாலையில் விழிப்பு வந்தவுடன் கோலத்தின் நினைவுதான் மாலினிக்கு முதலில் வந்தது.. அழிந்து விட்டிருக்குமோ என்ற அச்ச உணர்வு தலைதூக்க.. அவள் எழுந்து உடை மாற்றிக் கொண்டு கீழே ஓடினாள்...

கோலம் அழகாக.. அப்படியே அலுங்காமல் இருந்தது... அதைப் பார்த்து ரசித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தவளின் நாசியில் காபியின் மணம் நுழைந்தது...

'ஸ்..ஆ...' என்று ரசித்து அந்த நறுமணத்தை நுகர்ந்தபடி திரும்பினாள் மாலினி...

"என்னம்மா.. அப்படி வாசம் பிடிக்கறீங்க..." வாயெல்லாம் பல்லாக கேட்டபடி காபி தம்ளரை நீட்டினால் செந்தாமரை..

"அன்னபூரணி மெஸ் காபியின் மணம் கமழும் போது அதை ரசித்து வாசம் பிடிக்கத் தோணுமா.. இல்லை குடிக்கத் தோணுமா.." என்று கேட்டபடி காபித் தம்ளரை வாங்கிக் கொண்டாள் மாலினி...

"அன்னபூரணி மெஸ்ஸா...?" கண்களை அகல விரித்தாள் செந்தாமரை...

"நம்ம கிச்சன் கேபினட் மினிஸ்டரைத்தான் சொன்னேன்..." மாலினி சிரித்தாள்...

"ஏம்மா.. மினிஸ்டருன்னா மந்திரிதானுங்களே..." செந்தாமரை சந்தேகம் கேட்டாள்...

"மந்திரியேதான்..."

"நம்ம வீட்டில் யாருக்கும்மா கோழி மந்திரின்னு பெயரை வைத்திருக்கீங்க.."

"கோழி மந்திரியா..?"

காபி குடிப்பதை நிறுத்திவிட்டு செந்தாமரையை விசித்திரமாகப் பார்த்தாள் மாலினி..

"ஆமாம்மா.. கோழி மந்திரிதான்.. நீங்கதானே சிக்கன் மினிஸ்டருன்னு சொன்னீங்க..."

'இவள் கிச்சன் கேபினட் மினிஸ்டருன்னு சொன்னதை சிக்கன் மினிஸ்டருன்னு நினைத்து விட்டாள்...'

மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது.. அவள் ஏன் அப்படி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்கிறாள் என்று புரியாமல் செந்தாமரை விழித்தாள்...

"ஹைய்யோ.. ஹையோ.. செந்தாமரை.. அது சிக்கன் மினிஸ்டரில்ல.. கிச்சன் மினிஸ்டர்.."

"அப்படின்னா...?"

"கிச்சன்னா சமையல்கட்டு.."

"ஓ.. நீங்க நம்ம அன்னபூரணியை சமையல்கட்டு மந்திரின்னு சொல்கிறீங்களா..."

"அறிவுக்கொழுந்து.. ஒருவழியாய் புரிஞ்சுக்கிட்ட.."

"நானே.. படிக்காத கூதரை.. என்கிட்ட சொன்னீங்கன்னா நான் என்னத்தைக் கண்டேன்..?"

"அதுக்காக கோழி மந்திரியையா கண்டுபிடிப்பே?"

கேலியாக வினவியவாறு கையிலிருந்த காலி காபித் தம்ளரை செந்தாமரையிடம் நீட்டினாள் மாலினி.. அவள் என்னவோ.. தன்னைப் புகழ்ந்துவிட்டதைப் போல மகிழ்ந்து போய் சிரித்தவாறு வீட்டுக்குள் சென்றாள் செந்தாமரை..

அதிகாலைக் காற்றை ரசித்தபடி தோட்டத்துப் பக்கம் சென்றாள் மாலினி.. ஏதேதோ யோசித்தவாறு இலக்கில்லாமல்.. வாய்க்குள் ஏதோ பாடலை முணுமுணுத்தவாறு தோட்டத்தைச் சுற்றி வந்தாள்...

"வருஷம்.. மாதம்.. தேதிபார்த்து..

வயது வந்த பெண்ணைப் பார்த்து..

புருஷனாக வருவேனென்று

சொன்னாரு...

அத்தான்.. பூமிக்குள்ள...

பொன்னைத் தேடி நின்னாரு...

அத்தான்.. பூமிக்குள்ள..

பொன்னைத் தேடி நின்னாரு..."

பாடியவாறு செடிகளைக் கையால் அணைத்தபடி சென்றாள்...

மற்றைய நாள்களைவிட அன்றைய நாள் அதிக சந்தோஷம் கொண்டதாக அவளுக்குத் தோன்றியது...

வீட்டில் தோன்றியிருந்த விழா நாளின் உற்சாகம்.. காலையில் எழுந்ததும் அரக்கப்பறக்க வேலைக்கு கிளம்பத் தேவையில்லாத விடுதலை உணர்வு.. இவை எல்லாம் சேர்ந்து அவளுக்குள் உற்சாக ஊற்றை உருவாக்கின...

இவையெல்லாவற்றையும்விட முதல் நாளிரவு பிரபாகரன் அவளைப் பார்த்த பிரத்தியேகப் பார்வை... இனிப்பாய் மனதில் உறைந்துநின்றது...

'அத்தான்..' என்று அழைக்கப்படுவதை அவன் மிகவும் விரும்புவான்.. அதனாலேயே.. அத்தானைப் பற்றிய

பாடலை அவள் பாடினாள்...

எதிரில் அவன் நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தவளின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

அவனை முதன்முதலில் இந்தத் தோட்டத்தில் தானே சந்தித்தோம் என்று நினைத்துக் கொண்டாள்...

"ஒரு அத்தான் போடச் சொன்னதற்கு நீ எட்டு அத்தான் போடுகிறாயே..." என்று அவன் அன்று சொன்னதும் இன்று அவள் நினைவுக்கு வந்து தொலைத்தது...

'அத்தான்...' தனக்குத்தானே சொல்லிக் கொண்டு சிரித்தாள்...

"அத்தான்... என் அத்தான்...

அவன் என்னைத்தான்..

எப்படிச் சொல்வேனடி.."

எதிரில் இருந்த பூச்செடியிடம் கேட்டவாறு அங்கேயிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டாள்.. கால்களை ஆட்டியவாறு பின்னலை முன்னால் விட்டுக் கொண்டாள்...

"அன்பே.. அன்பே...

அன்பே.. அன்பே...

அத்தான்.. அத்தான்...

என்றால் உள்ளம் உருகாதா..?"

முழங்கால்களைத் தூக்கி கைகளால் கட்டி அதில் தலைகவிழ்ந்து கொண்டு அடுத்த பாடலை யோசித்துக் கொண்டிருந்தவளின் காதில்...

"என்ன ஆச்சு.. நினைவுக்கு வரவில்லையா...?" என்ற கேள்வி நுழைந்தது...

அவள் அவசரமாக தலையை நிமிர்ந்தாள்.. பிரபாகரன் அவளுக்கு அருகே சுவாதீனமாக அமர்ந்தான்.. மாலினி

அவசரமாக பெஞ்சிலிருந்து இறங்கிக் கொண்டாள்.. அவன் கேள்வியுடன் அவளைப் பார்த்தான்...

"என்ன ஆச்சு.. என் பக்கத்தில் உட்கார மாட்டாயா..?"

மாலினி பதில் பேசாமல் போக முயல.. பிரபாகரன் எழுந்து அவள் பாதையை மறித்தான்...

"வழியை விடுங்க..."

"நீ முதலில் உட்கார்..."

"நான் போக வேண்டும்.."

"போகலாம்.. போகாமல் இங்கேயே இருந்துவிட முடியுமா..?"

"எனக்கு வேலை இருக்கிறது..."

"நானும் வெட்டிப் பயல் இல்லை..."

கே.பி. என்று அனைவராலும் அறியப்படும் அவனைப் போய் வெட்டிப்பயல் என்று விளையாட்டுக் குழந்தைகூடச் சொல்லாது என்று நினைத்துக் கொண்டவள்.. அதைச் சொல்ல வாய் வரை வந்த வார்த்தையை இழுத்துப் பிடித்து தொண்டைக்குள் விழுங்கிக் கொண்டாள்...

"என்ன சொல்லணுமோ அதைச் சீக்கிரமாய் சொல்லி முடிங்க..."

"உட்கார்.. சொல்கிறேன்.."

"பரவாயில்லை.. நின்றுகிட்டே கேட்கிறேன்..."

"கால் வலிக்காதா..?"

"என் கால்தானே வலிக்கும்.. வலித்தால் வலித்து விட்டுப் போகட்டும்.."

"நான் அக்கறைப்படக் கூடாதா..?"

"அது என்ன தேவைக்கு..?"

"ஓஹோ... அப்படியா..?"

அவளை உச்சந்தலையிலிருந்து பாதம் வரை ஒரு மார்க்கமாய் பார்வையிட்டான் அவன்..

"ஏன் இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்.. என்னவோ பெண்பார்க்க வந்திருக்கிற மாப்பிள்ளை பார்ப்பதைப் போல.. என்ன பார்வை வேண்டிக் கிடக்கு.."

ஒரு நொடி அவனை பெண்பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளையைப் போல் கற்பனை பண்ணிக் கொண்டாள் மாலினி.. அவள்தான் திருமணப் பெண்.. அவன் அவளை சபை நடுவில் உட்கார்ந்து பார்க்கிறான்..

மாலினியின் கண்கள் கனவில் மிதந்தன.. அவளது முகம் சிவந்து போனது.. அவள் முன்னால் அமர்ந்து பார்வையால் அவளை விழுங்கிக் கொண்டிருந்தவனின் கரம் தொட்டு உறவாட அவள் மனம் விழைந்தது...

'ஆனால்..?'

அவன் அன்று சொல்லிய வார்த்தை.. அவள் மனதில் உருவான மென்மையான உணர்வுகளை கணப்பொழுதில் அழிக்க, அவள் முகம் திருப்பிக் கொண்டாள்..

"ஏன் மாலினி.. என் முகத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா..?" பிரபாகரன் ஆழ்ந்த குரலில் கேட்டான்...

மாலினி ஓர் அதிர்வுடன் அவனைப் பார்த்தாள்..

இளங்காலை இன்னும் ஆரம்பித்திருக்காத அதிகாலைப் பொழுது.. புலர்ந்தும் புலராத விடியல் வேளை.. இதமான குளிருடன் கூடிய தன்மையான வெப்பநிலை.. சுற்றிலும் பூச்செடிகள்.. உடலைத்

தழுவும் காலை நேரக் காற்று.. அதுபோன்ற சூழ்நிலையில் இயல்பான தோற்றத்துடன் வசீகரமாக எதிரே நின்றவனை ஆவலுடன் அவள் பார்த்தாள்..

இந்த வசீகரனின் முகம் பார்க்க அவளுக்குப் பிடிக்க வில்லையா...?

34

**அந்த வசீகரனின் கண்ணசைவில்..**

**இந்த வஞ்சிமயிலின் மனம் அசைவதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்தப் பொல்லாதவன்.. இவளது முகம் பிரதிபலித்த உணர்வுகளின் அலையை உள்வாங்கிக் கொள்பவனாக இமைக்காமல் அவள் முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

அவனது இதழ்களில் கேலிப் புன்னகை நெளிந் தோடியது...

'இவன் என்னைக் கண்டுபிடித்து வைத்திருக்-கிறான்..?' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

இவனுக்குத் தெரியாமல் இருக்காது.. இவனிடம் அவள் மயங்கிப் போய்விடுவதை உணர்ந்துதான் இருக்கிறான்.. இந்த தைரியமான வார்த்தைப் பிரயோகமும் இவனது கண்வீசும் வீச்சும் அந்தத் தன்னம்பிக்கையில் வருவதுதான்...

ஆனால்.. அதை உடைக்க வேண்டும் என்ற வேகம் அவளுக்குள் வர மறுப்பதை ஓர் இயலாமையுடன் அவள் உணர்ந்தாள்..

"சொல் மாலினி.. என் முகம் பார்க்கப் பிடிக்கவில்லையா..?" அவன் மீண்டும் வம்புக்கு இழுத்தான்...

"அப்படி ஸ்வேதாகூடச் சொல்ல மாட்டாளே..." இப்போது மாலினி அவனை வம்புக்கு இழுத்தாள்...

"ஊகும்.. உனக்கு ஸ்வேதான்னா ரொம்பப் பிடிக்குமோ..." அவன் குறும்பாக வினவினான்...

அவளுக்கு எரிச்சல் வந்துவிட்டது... ஸ்வேதாவின் பேச்சை எடுத்தது அவள்தான் என்பதை மறந்துபோன வளாக முகம்

சுளித்தாள்...

"எனக்கு சூர்ப்பனகையைப் பிடிக்கும்னு சொல்லுங்க, கேட்டுக்கறேன்.. பூலான்தேவிதான் என் உயிர் சிநேகிதின்னு சொல்லுங்க.. ஆஹான்னு தலையை ஆட்டுகிறேன்.. ஆனால்.. உங்க ஆசை மாமன் மகளை மட்டும் எனக்குப் பிடிக்குமுன்னு சொல்லாதீங்க.. அதுக்குப் பதில் உங்க கையால நாலு அடி வேண்டுமானாலும் அடித்துக் கொள்ளுங்க.. சந்தோஷமா வாங்கிக்கறேன்.."

"ஆசை மாமன் மகளா.. அவளா..? ஹா.. ஹா..." அவன் ரசித்துச் சிரித்தான்...

"என் ஆசைக்கு உரியவள்.. மாமன் மகளில்லையே.. அத்தை மகள்தானே.. அதுசரி.. உன்னைப் போய் என்னால் எப்படி அடிக்க முடியும்..?"

அவன் சரஸமாய் வினவ...

'ஏன் முடியாது..?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் மாலினி...

'என் மனதில் அடிக்க உன்னால் முடியும்போது நிஜமாகவே என்னை அடிக்க உன்னால் முடியாதா..?'

அவனோ முடியாது என்றுதான் சொன்னான்...

"உன்னை அடிக்க என்னால் முடியாது மாலினி.. உனக்கு வலித்தால் அதைவிட பத்து மடங்கு அதிகமாக எனக்கு வலிக்குமே..."

'பெரிய ரோமியோ.. காதல் மன்னன்.. இப்படி உருகுகிறவன் அன்றைக்கு ஏன் அவனுடைய தம்பியின் பேச்சை எடுத்தானாம்...'

அவள் மனதில் ஓடிய எண்ணங்களைப் படித்தவனைப் போல அவன் சொன்னான்...

"பொஸஸிவ் உணர்வு பெண்களுக்கு மட்டும் சொந்தமானது இல்லை மாலினி.. ஆண்களுக்கும் அது வரும்..."

"நீங்கள் பேசியது பொஸஸிவ் இல்லை..."

"அதை நீயாய் முடிவு பண்ணினால் எப்படி..?"

"நான் பாதிக்கப்பட்டவள்..."

"என்னைவிட அதிகமாக பாதிக்கப்பட்டவள் இல்லை..."

"ப்ச்சு.. இதெல்லாம் சும்மா சொல்வது.."

"நீ இந்த அளவுக்கு ராட்ஸஸியா..?"

"நான் ராட்ஸஸிதான்.. உங்க மாமன் மகள் ஸ்வேதாதான் அழகு தேவதை.."

"அவள் பேச்சை நீ விடவே மாட்டாயா..?"

"என்னை நீங்கள் விட்டுவிட்டால் நானும் அவள் பேச்சை விட்டுவிடுகிறேன்.."

"விடாமல் உன் கையைப் பிடித்தா நிறுத்தியிருக்கிறேன்..?"

அவன் கண்கள் சிரிக்க.. அவள் பல்லைக் கடித்தாள்...

'இவன் கையைப் பிடித்து இழுப்பதிலேயே கவனமாக இருப்பான்.. ரௌடி.. காதல் ரௌடி..'

"பேச்சால் நிறுத்தியிருக்கீங்க..."

"உன்னிடம் பேசக்கூட எனக்கு உரிமையில்லையா?"

'உரிமையைப் பற்றி நீ பேசாதே..' அவள் மனதிற்குள் வெகுண்டாள்..

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் - நெஞ்சம் கடுத்ததைக் காட்டும் முகம்.." என்றான் அவன்..

"என்ன ஆச்சு.. குறளெல்லாம் தூள் பறக்குது..?" அவள் கேலியாக வினவினாள்..

"அந்தக் காலத்திலேயே ஹைக்கூ கவிஞர் திருவள்ளுவர்.. பளிங்கு போல இருக்கும் உன் முகத்தைப் பற்றி எழுதியிருக்கார். அதைச் சொன்னேன்..."

"பளிங்கு முகமா..?"

அவள் முகம் அழகாயிருக்கிறதென்று சொல்கிறானா.. இருக்காதே.. இப்போது அவன் முக அழகைப் பற்றிப் பேச வேண்டிய தேவை இல்லையே...

"உன் மனதில் இருப்பதை உன் முகம் காட்டுது.. அதைத்தான் அப்படிச் சொன்னேன்..."

அவளது கோபத்தை குறிப்பிடுகிறான்.. அவள் இதழ் வளைத்துச் சுழித்து அழகு காட்டினாள்...

"இதிலொன்றும் குறைச்சலில்லை..."

"வேறு எதிலும் குறைச்சல் இல்லை.. எங்கே.. அதை உனக்கு உணர்த்த நீதான் விட மாட்டேன்கிறாயே.. உன்னைத் தொடக்கூடாதுன்னு என் கைகளைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறாயே..."

அவள் மனதில் உணர்வுகள் பிரவாகமாய் பொங்கி எழ... அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்..

"மாலினி..."

"ம்ம்ம்..."

"என்னைப் பார்..."

'எதற்கு... திரும்பவும் என்னை நீ மயக்குவதற்-காகவா..?' முகம் திருப்பவில்லை..

"உன்னை அடிக்கச் சொல்கிறாயே.. உன்னைத் தொடாமல் என்னால் அடிக்க முடியுமா..?"

மாலினி கண்மூடித் தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்தப் போராடினாள்.. மயிலிறகைப் போல மனம் வருடிச்சென்றன, அவனுடைய வார்த்தைகள்.. அவள் மனம் மயங்கியது..

"நீ உன்மேல் ஆணைன்னு சொல்லி என் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டாயே கண்ணம்மா..."

அவன் குரல் பட்டுப்போல மிருதுவாக ஒலித்தது.. மாலினி பல்லைக் கடித்துக் கொண்டு அங்கிருந்து ஓட முயன்றாள்...

"நில் மாலினி..." என்றான் பிரபாகரன்..

அவள் நிற்காமல் நகர முனைய...

"என் மேல் ஆணை.. நான் சொல்லும் வரை நீ இங்கேயிருந்து போகக்கூடாது.." என்று அழுத்தமான குரலில் ஆணித்தரமாக அவன் சொன்னான்..

அசைய முடியாமல் அப்படியே மாலினி நின்று விட்டாள்.. பிரபாகரன் அவளருகில் வந்து நின்றான்..

"ஆணை வைக்க உனக்கு மட்டும்தான் தெரியுமா.." என்று கேட்டான்..

மாலினி பதில் பேசவில்லை.. அவள் முகத்தையே உற்றுப் பார்த்தவனின் கண்களில் சினம் வந்தது...

"ஓராயிரம் வார்த்தைகளை உன்னிடத்தில் பேசியிருக்கிறேன்... அதில் ஒரு வார்த்தைகூட உன் மனதில் நிற்கவில்லையில்ல.. தேவையில்லாத ஒரு வார்த்தையைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறாயே.. நம்மிருவருக்குள்ளும் தேவைப்படும் ஒரே ஒரு வார்த்தையை நீ நினைத்துப் பார்த்தால் நம் பிரச்னை ஒரு முடிவுக்கு வந்துவிடும்..."

சினத்தோடு அவன் பேச... 'அது என்ன வார்த்தை?' என்ற கேள்வியோடு அவனைப் பார்த்தாள் மாலினி...

"என்ன முழிக்கிறாய்.. அந்த வார்த்தை என்னவென்று உனக்குத் தெரியவில்¡யா.. உன்னைப் போன்ற ஒரு பிடிவாதக்காரிக்கு அந்த வார்த்தையைப் பற்றி எப்படித் தெரியும்..?"

"ம்ச்ச்..."

"இப்போ எதற்கு இப்படிச் சலித்துக் கொள்கிறாய்.. அந்த வார்த்தை என்ன தெரியுமா..? மன்னிப்பு..."

மாலினி வியப்புடன் பிரபாகரனை நிமிர்ந்து பார்த்தாள்.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் வாரிசு.. கே.பி என்று இரண்டு எழுத்தால் அனைவராலும் அறியப்படும் அந்த மிகப் பெரிய வி.ஐ.பி. அவளுடைய சீனியர் ஆபீஸர், அருகில் வந்த நின்று பேச முடியுமா.. என்று மலைக்கிற அளவுக்கு உயரத்தில் இருக்கும் ஒருவன்.. மிகவும் சாமானியப் பெண்ணான மாலினியிடம் மன்னிப்புக் கேட்கிறான்…

35

**உன் கை தொடாத போதும்..**

**உன் கண் தொடுகின்ற தொடுகையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"என்ன அப்படிப் பார்க்கிறாய் மாலினி.. நான் மன்னிப்புக் கேட்டுவிட்டால் உன் மனம்

அமைதியாகி விடுமென்றால் சொல்… நான் மன்னிப்புக் கேட்கிறேன்.."

"வேண்டாம்… வேண்டாம்…" அவசரமாக அவள் தடுத்தாள்…

"ஏன் வேண்டாம்..?" அவன் விழிகளில் இனம் விளங்காத திருப்தி ஒன்று உதயமாகியது…

"என்னிடம் போய் நீங்க மன்னிப்புக் கேட்பதா..?"

"கேட்டால் என்ன? நான் தவறு செய்தவன்தானே..?"

"அப்படி நான் சொன்னேனா…?"

"ஏய்ய்.. பிறகு எதற்காக என்கூட பேசமாட்டேன்னு விரதமிருக்கிறாய்..?"

"ம்ப்ச்…"

"இப்படி.. 'ச்' கொட்டினால் மட்டும் நீ தப்பித்துவிட முடியாது.. எனக்கு ஒரு பதிலைச் சொல்லு..."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அத்தான்..."

"என்ன சொன்னாய்..?"

அவன் விழிகள் மின்னின.. அவளருகில் ஒரு எட்டு அவன் முன்னால் வைக்க.. அவள் அவசரமாக பின்னடைந்தாள்.. அவன் அப்படியே நின்று தீர்க்கமாக அவளைப் பார்த்தான்..

"ஏன்.. பின்னால் போகிறாய் மாலினி..? உன் பேச்சை நான் மீறுவேனா..?"

தன் தவறு புரிந்தவளாக அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு தன்னையறியாமல் சொன்னாள்..

"ஸாரி அத்தான்..."

அந்த ஒரு வார்த்தையில் முகம் மலர்ந்து போனான் பிரபாகரன்..

"எத்தனை நாளாச்சு தெரியுமா.. நீ இப்படி.. 'அத்தான்'னு இயல்பாய் கூப்பிட்டு. நான் ஏங்கிப் போயிட்டேன் மாலினி.." அவன் குரலில் தெரிந்த தவிப்பைக் கண்டு அவள் உருகிப் போனாள்...

"ஐ ஆம் ஸாரி எகெய்ன் அத்தான்..."

"நீயேன் திருப்பித் திருப்பி ஸாரி சொல்கிறாய் மாலினி.. நான்தானே இதை ஆரம்பித்து வைத்தவன்.. நான்தான் ஸாரி கேட்கணும்.."

"வேண்டாம் அத்தான்.."

"எது வேண்டாம்.. நானா..?"

அவள் முறைத்தாள்.. அவளது கோபத்தைக் கண்டு அவன் உல்லாசமாய் நகைத்தான்..

"இதுதான் சாக்குன்னு ஸ்வேதாவிடம் போய் கோர்த்துக் கொள்ளும் திட்டம் ஏதுமிருக்கா..?"

"அடிப்பாவி.. இப்படி ஒரு பழியை என்மேல் போடலாமா.. இது நியாயமா..?"

"ஆண்பிள்ளைகள் மனது அலைபாய்கிற மனது.. அது எந்தப் பக்கம் வேணும்னாலும் பாயும்..."

"இதைச் சொல்லு கேட்டுக்கறேன்.. இன்னும் கொஞ்ச நேரத்தில் என் தங்கையை பெண்பார்க்க வரும் ஃபங்ஷனில் கலந்துகொள்ளப் போகும் சாக்கில் என் முறைப்பெண்கள் எல்லாம் வரிசை கட்டிக் கொண்டு இங்கே வரப் போகிறாங்க.. அதில் எவளாவது ஒருத்தியிடம் என் மனம் அலைபாயலாம்.. அதையெல்லாம் விட்டுவிட்டு ஸ்வேதாவை மட்டும் சொல்லாதே மாலினி.. உனக்கு கோடி புண்ணியமாக இருக்கும்.."

"ஓஹ்ஹோ... ஐயா சைட் அடிப்பீங்களா.."

"அடிப்பேன்..."

"கணக்குப் பண்ணுவீங்களோ.."

"கணக்கு மட்டுமில்லை.. சயின்ஸையும் சேர்த்துப் பண்ணுவேன்.."

"சயின்ஸா..?"

"ஆமாம் மாலினி.. கெமிஸ்ட்ரி வொர்க் அவுட் ஆகணுமில்ல.. கெமிஸ்ட்ரி.. சயின்ஸில்தானே வருது..?"

பிரபாகரன் சிரிக்காமல் வினவ.. மாலினி குபீரென்று சிரித்தாள்.

"ஏன் அத்தான்.. டி.வி-யில் டான்ஸ் ஷோ அதிகமாய் பார்ப்பீங்களோ..?"

"அதுக்கெல்லாம் எனக்கேது நேரம்... ஆமாம் திடீர்னு ஏன் இப்படிக் கேட்கிறாய்..?"

"கெமிஸ்ட்ரியைப் பத்தி அதில்தான் அதிகமாக சொல்லுவாங்க.."

மாலினி தன் அழகிய பல் வரிசை தெரிய.. இதழ் விரித்துச் சிரித்தாள்.. பிரபாகரன் அவள் சிரிக்கும் அழகை ரசித்தவனாக அவளையே விழுங்கிவிடுவதைப் போலப் பார்த்துக் கொண்டு நின்றான்..

"மாலினி.." மெதுவான குரலில் அழைத்தான்..

அவன் அழைப்பில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை வசப்படுத்த, அவள் கிளர்ச்சியுடன் நிலம் பார்த்து...

"ம்ம்ம்.." என்றாள்...

"நான் உன்னைத் தொடக்கூடாதா..?"

மாலினியின் முகம் சிவந்துவிட்டது.. அவள் அங்கிருந்து ஓட யத்தனித்தாள்.. பிரபாகரன் அழுத்தமான குரலில்...

"என் மேல் ஆணை வைத்திருக்கிறேனே.. மறந்து விட்டாயா..?" என்று கேட்டான்...

"என்ன அத்தான் இது.. நான் போக வேண்டும்.."

"என் வார்த்தையை மீறிப் போவதானால் போ.."

"எப்படிப் போக முடியும்.. நீங்கள்தான் ஆணை வைத்திருக்கிறீங்களே..."

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிற..?"

"உங்கள் ஆணையை திரும்ப வாங்கிக்கங்க..."

"அதுதான் எப்படி..?"

"என் மேல் ஆணை.. நீ போன்னு சொல்லிவிடுங்க.. சரியா போய்விடும்..."

"அப்போ.. நீயும் சொல்லு.."

"என்ன சொல்ல..?"

"என்மேல் ஆணை.. என்னைத் தொட்டுப் பேசுங்கன்னு..."

"என்னது..? என்னால் அது முடியாது.."

"அப்போ.. என்னாலும் இது முடியாது.."

"அத்தான் ப்ளீஸ்..."

"ஊஹூம்.. நீ சொல்லு.. நானும் சொல்கிறேன்.."

"நான் எப்படி அத்தான்.. அப்படிச் சொல்லுவேன்..?"

"வாயால்தான் சொல்லணும்.. நான் வேண்டும்னா அதைச் சொல்லிக் காண்பிக்கவா..?"

மாலினியின் முகம் இன்னும் சிவந்தது.. அவள் வெட்கத்துடன் தடுமாறினாள்.. அவன் சொன்னதைச் சொல்ல.. அவளால் முடியவில்லை.. கைபிசைந்தாள்...

"வேறு எதையாவது சொல்லச் சொல்லுங்க.. சொல்கிறேன்.. இது வேண்டாம் அத்தான்..."

"ஏன்...?"

"எனக்கு.. எனக்கு..."

"உனக்கு.. உனக்கு..?"

"என்னவோ போல் இருக்கிறது..."

அவள் விழிகளில் நீர் மல்கியே விட்டது.. அவள் வெட்கத்தில் தவிப்பதைக் கண்டவனுக்கு அவள் மேல் ஆசை கிளர்ந்தது..

"சரி.. போ.." என்றான்...

"நிஜமாகவா அத்தான்.." என்றாள் அவள் ஆச்சரியத்துடன்...

"நிஜமாகத்தான்.. போ.." அவன் தலையசைத்தான்..

ஒரு விடுதலை உணர்வுடன் விட்டால் போதுமென்று அவள் சிட்டாகப் பறந்துவிட்டாள்...

அவள் விட்டுச் சென்ற உணர்வுகள் அலைகளாக அவனைச் சுற்றிக் கொள்ள.. அவன் அங்கேயே அமர்ந்து விட்டான்...

'எனக்கு.. எனக்கு.. என்னவோ போல் இருக்கு...'

மனம் மறைக்காமல் அவள் உதிர்த்த வார்த்தைகள் அவன் நினைவில் நிழலாடின.. அவன் இதழ்களில் அவளது வெட்கத்தை எண்ணிய இளநகை படர்ந்தது...

சென்னையில் பிறந்து வளர்ந்தவள்.. மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்தவள்.. அவ்வளவு தொலைவிலிருந்து வேலை செய்ய தனியாக வந்திருக்கும் தைரியசாலி.. முன் பின் பார்த்திராத ஆண் என்ற எண்ணமும் பயமும் சிறிதளவு கூட இல்லாமல் முதல் நாளே அவள் முகத்தை நேருக்கு நேர் பார்த்து வாயாடிய துறுதுறுப்புக்காரி.. இன்று அவன் முகம் பார்த்து ஒரு வார்த்தை சொல்ல வெட்கப்படுகிறாள்...

மாலினியிடம் தெரிந்த அந்தப் பெண்மை.. அவனை காந்தமாய் கவர்ந்து இழுத்தது...

அவளது ஒவ்வொரு அசைவிலும் தெறித்து விழுந்த மென்மையைக் கண்டு அவன் தாபம்.. திமிறிய குதிரையாக சிலிர்த்தது...

அவள் வேண்டும் போன்ற உணர்வை அவன் உணர்ந்தான்.. அவளைத் தொட வேண்டும்.. அணைக்க வேண்டும்.. அவளது கூந்தல்மலர் காட்டில் முகத்தை புதைக்க வேண்டும் என்ற வேகம் அவனது உடலெங்கும் வியாபிக்க.. சுகமான ஓர் அயர்வுடன் அவன் கண்மூடிக் கொண்டான்..

"அத்தான்..."

அவனது நினைவுகளின் சுரங்களிலிருந்து விலகி.. பிசிறு தட்டிய குரலில் அபஸ்வரமாக ஒலித்தது.. அந்த அழைப்பு...

அந்தக் குரல் மாலினியுடையது அல்ல என்று அவனுக்குத் தெரியும்...

மாலினி அழைக்கும் 'அத்தானி'ல் ஒரு துள்ளல் இருக்கும்.. துடிப்பு இருக்கும்.. உயிர்ப்பு இருக்கும்... ஈர்க்கும் விசை இருக்கும்.

இதுபோல சாகஸம் இருக்காது.. அவனுக்குத் தெரியும்.. கண் திறக்காமலே அது ஸ்வேதாவின் அழைப்பு என்பதை உணர்ந்தான் பிரபாகரன்...

"என்ன..?" என்றான் விழி திறக்காமல்...

"தோட்டத்திற்கு வந்தீங்களா அத்தான்.." அவள் கொஞ்சிப் பேசுவதாக நினைத்துக் கொண்டு தமிழை கொலை செய்தாள்..

அதை சகிக்க முடியாமல் விழி திறந்து முகம் சுளித்தான் பிரபாகரன்...

"உன்னிடம் லட்சம் தடவை சொல்லிவிட்டேன் ஸ்வேதா.."

"எதை.. அத்தான்?"

"இப்படி செயற்கையாய் பேசித் தொலைக்காதேன்னு.. நீ கேட்கிறதாக இல்லை..."

"எப்போதும் பேசுவதை எப்படி அத்தான் மாற்றிப் பேசுவது..."

"நீ எப்போதுமே இப்படியா பேசித் தொலைக்கிறாய்..? அம்மாவிடம் இப்படிப் பேசிப் பார்.. அடுத்த நிமிடமே.. உன்னை ஊருக்கு பார்சல் பண்ணி விடுவாங்க..."

"அத்தான்..."

ஸ்வேதா செல்லமாய் சிணுங்குவதாக நினைத்துக் கொண்டு ஊளையிட்டு வைக்க.. பிரபாகரனின் முகம் விளக்கெண்ணெயைக் குடித்ததைப் போலாகிவிட்டது..

"தலைவலியை வர வைக்காதேம்மா.. நீயேன் என்னிடமும் கருணாவிடமும் தினாவிடமும் இதுபோலவே பேசி வைக்கிறாய்..?"

"கருணா அத்தானை சொல்லாதீங்க அத்தான்... அவரிடம் நான் பேச்சே வைத்துக் கொள்வதில்லை..."

"அது இப்போ.. நான் சொல்வது அப்போ..."

"அப்போன்னா.. எப்போது அத்தான்..?"

"அவன் சசியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முந்ததைய 'அப்போ..'"

ஸ்வேதாவின் முகம் இதைக் கேட்டதும் விழுந்து விட்டது... அவள் சுதாரித்துக் கொண்டு பேச்சை மாற்றினாள்...

"தோட்டத்திற்கு வந்தீங்களான்னு கேட்டால் அதுக்குப் பதில் சொல்லாமல் வேறு எது எதையோ பேசறீங்களே... அத்தான்..."

"காலங்கார்த்தாலேயே கடுப்படிக்கணும்கிற முடிவோடு நீ வந்திருக்கிறாயா.. இப்படி அபத்தமாய் பேச உன்னால் மட்டும்தான் முடியும்.. தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறவனைப் பார்த்து தோட்டத்துக்கு வந்திருக்கிறாயான்னு கேட்கறியே.. எனக்கு எவ்வளவு எரிச்சல் வரும்னு நினைத்துப் பார்க்கறியா...?"

'எரிச்சல் வருதா... ஏன் வராது.. இவ்வளவு நேரமும் அந்த அன்றாடங்காய்ச்சியிடம் பல்லைக் காட்டிக் காட்டிப் பேசிக் கொண்டிருந்தாயே.. அப்போது எரிச்சல் வரவில்லையா..? நான் பேசினால் மட்டும் மிளகாயை அரைத்து உடம்பில் பூசியதைப் போல எரிச்சல் வருகிறதா.. அவள் பேசினால் இனிக்கிறது.. நான் பேசினால் கசக்கிறதா..? அப்படி அவள் என்னைவிட அழகில் உயர்ந்தவளா..? பணத்தில் உயர்ந்தவளா..? வயிற்றுப் பிழைப்புக்காக வேலைக்கு வந்தவளை என்னைவிட உயர்த்தியாக நீயும் உன் தம்பியும் நினைக்கறீங்களா..?'

ஸ்வேதா மனதிற்குள் குமுறினாள்.. வெளியே அதைக் காட்டிக் கொள்ளாமல் பிரபாகரன் அருகே அவள் அமர.. சட்டென்று எழுந்து வீட்டை நோக்கிப் போய்விட்டான் பிரபாகரன்...

ஸ்வேதா வன்மத்துடன் அவன் முதுகை வெறித்தாள்...

## 36

**உன்வாய் உதிர்க்கும் வார்த்தை..**

**என்னை வசீகரிக்கும் விதத்தை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

தினகரன் அழகாக உடையை உடுத்திக் கொண்டு அவனது அறையிலிருந்து வெளிப்பட்டான்.. அதற்காகவே காத்திருந்த ஸ்வேதா.. கவனமாக பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்துக் கட்டிய ஆகாய வண்ண பிரிண்டட் சேலையை ஒற்றையாய் தோளில் படியவிட்டு முடியை விரித்து விட்டு கழுத்திலும் காதிலும் கைகளிலும் வைரங்கள் மின்ன.. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாடலின் பூனை நடையோடு அவன் எதிரே நடந்து வந்தாள்..

அந்த ஹாலில் போடப்பட்டிருந்த சோபா.. டீப்பாய்.. சேர்களைக்கூட சுவாரஸ்யமாய் தினகரன் பார்த்துவிடுவான் போல.. அந்த உயிரில்லாத பொருள்களிடம் காட்டிய கவனத்தைக்கூட அவன் எதிரே பூனை நடை நடந்து வந்த ஸ்வேதாவிடம் காட்டவில்லை. கல்லையும்.. மண்ணையும் பார்ப்பதைப் போல அவளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு அகன்றான்...

'இரண்டு மணி நேரமாய் கண்ணாடி முன்னால் நின்று மெனக்கெட்டதெல்லாம் இதற்காகத்தானா..?' ஸ்வேதா இடிந்துவிட்டாள்...

"அத்தான்.." கடந்து போனவனை சப்தமாக அழைத்தாள்...

"யார்..?" அவன் நின்று திரும்பிப் பார்த்துவிட்டு..

"நீயா..?" என்றான் அசுவாரஸ்யமாக..

ஸ்வேதாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவளும் தான் என்ன செய்வாள்.. அவளும் அந்த வீட்டிற்கு வந்த நாள் முதல் இந்த நாள் வரை பிரபாகரனையும் தினகரனையும் வளைக்க என்னென்னவோ யுக்திகளை கையாண்டு விட்டாள்.. ஒன்றுமே கதைக்கு ஆகவில்லை யென்றால் அவளுக்குத்தான் எப்படி இருக்கும்.. பற்றிக் கொண்டு வராதா..?

பிரபாகரனாவது ஸ்வேதாவிடம் மட்டுமில்லாமல் எல்லோரிடமும் இரும்பு முகத்தைக் காட்டுவான்..

ஆனால் இந்த தினகரன்.. ஸ்வேதாவைத் தவிர மற்ற எல்லாப் பெண்களிடமும் வழிவான்.. அதுதான் ஸ்வேதா

விற்குத் தாங்க முடியாமல் போனது...

"என்ன ஸ்வேதா, சொல்லு..? எனக்கு நிறைய வேலையிருக்கு.." தினகரன் கைக்கடிகாரத்தை பார்த்தவாறு கேட்டான்...

"என்ன அத்தான்.. இப்படிச் சொல்கிறீங்க.. இன்றைக்கு என்ன நாள் என்பதை மறந்துவிட்டீங்களா..?" பொய் கோபத்துடன் முறைத்தாள் ஸ்வேதா...

என்னவோ அவர்கள் இருவருக்கும் அன்றுதான் திருமணநாள் என்பது போலவும் தினகரன் என்னவோ அதை மறந்துவிட்டது போலவும் அவள் கொஞ்ச.. தினகரனுக்கு கடுப்பு கிளம்பியது..

அவன் ஸ்வேதாவை ஒரு மார்க்கமாய் முறைத்துப் பார்த்தான்...

'இவன் ஏன் இப்படி முறைக்கிறான்..?'

"உனக்கு ஒழுங்காகவே பேச வராதா..?"

'ஆமாம்.. இது ஒன்றை அண்ணனும் தம்பியும் கண்டு பிடித்து வைத்துக் கொண்டு மாற்றி மாற்றி சொல்லிக் காட்டுவீங்களே.. உங்களிடம் இப்படிப் பேசியே வேலைக்கு ஆகவில்லை.. இந்த லட்சணத்தில் நான் ஒழுங்காகப் பேசினால் அவ்வளவுதான்.. என்னைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டீங்க...'

"நீ சுத்த போர் ஸ்வேதா.."

'அதை நீ சொல்லி நான் கேட்கணும்கிறது என் தலையெழுத்து.. நீ மட்டும் கார்த்திகேயன் ஜமீன்தாரின் கடைசிமகனாக பிறந்திருக்காவிட்டால் நான் உன்னைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டேன்...'

"எப்ப பார்த்தாலும் எதையாவது சொல்லிக்கிட்டு.. உனக்குப் பேச வேறு ஆள் கிடைக்கவில்லையா..?"

'நீ இப்படி சொல்லுவாய்னு தெரிந்ததுதானே காலங்கார்த்தாலேயே உன் அண்ணனிடம் நூல் விட்டுப்

பார்த்தேன்.. ஆசாமி சிக்கவில்லையே.. நான் என்ன செய்ய..? அவனுக்கு அடுத்து நீதானே என்னிடம் மாட்டியாகணும்...'

"நீ எனக்கு ஒன்றுவிட்ட மாமாவின் மகள்தான்.."

'ஹப்பா.. இப்போதாவது உனக்கு அந்த நினைப்பு வந்ததே..'

"அதுக்காக நீ போடும் ரம்பத்தையெல்லாம் நான் சகித்துக் கொள்ளணும்கிற அவசியம் ஒன்றும் எனக்கு இல்லை..."

'அடப்பாவி.. வயதுப்பெண்.. அதுவும் முறைப்பெண்ணிடம் நீ பேசுகிற லட்சணமா இது..?'

"நீ விருந்தாளியுமில்லை.. வீட்டுப் பெண்ணும் இல்லை... உன்னை எந்தக் கணக்கில் வைப்பதுன்னே எனக்குத் தெரியவில்லை..."

'உன் பெண்டாட்டியாய் வைத்துப் பார்.. கணக்கு சரியாகிவிடும்..'

"விருந்தும் மருந்தும் மூன்று நாள்கள்தான்னு சொல்லுவாங்க.. நீயோ வருஷக்கணக்கில் இந்த வீட்டில் டேரா போட்டிருக்கிறாய்.. உன்னை விருந்தாளி கணக்கிலும் சேர்க்க முடியாது..."

'சேர்க்காதே...'

"என் அம்மாவின் கூடப் பிறந்த அண்ணனின் மகளாகக்கூட நீ இல்லை.. உன் அப்பா.. என் அம்மாவுக்குப் பெரியப்பாவின் மகனாம்.. உன்னைப் போய் எப்படி... வீட்டுப் பெண்ணாய் நினைக்க முடியும்..?"

'ஒரு தாலியைக் கட்டிவிடு.. அப்புறம் நீ என்ன நினைத்தால் எனக்கென்ன..?'

"நான் இத்தனை பேசுகிறேன்.. அசையாமல் மரம் போல நிற்கிறாயே.. நீ என்ன செவிடா..?"

தினகரன் கோபத்துடன் கேட்கவும்.. ஸ்வேதா கலகலவென்று சிரித்தாள்...

"ஐயோ.. அத்தான்..."

"நல்ல நாளும் அதுவுமாக என்ன வார்த்தையைச் சொல்லித் தொலைக்கிறாய்.. சே.."

"நீங்கள் பேசும் அழகை ரசித்துக் கொண்டிருந்தேன் அத்தான்..."

அந்த நேரம் பார்த்தா மாலினி அவளுடைய அறையிலிருந்து வெளிப்பட வேண்டும்...

உடைத்த பாசிப் பருப்பின் வண்ணத்தில் பிரிண்டெட் சேலையுடுத்தி இடுப்பு வரை அடர்ந்திருக்கும் கூந்தலை விரித்து விடாமல் தளர்வாக பின்னி.. அதில் முல்லைச் சரத்தை சூடிக் கொண்டு அழகு தேவதையாக எதிரே வந்து கொண்டிருந்தவளை ஏக்கத்துடன் பார்த்தான் தினகரன்...

"ம்ஹூம்... நீ என் அழகைப் பார்த்து ரசித்து எனக்கென்னம்மா ஆகப் போகிறது.. ரசிக்க வேண்டியவங்க ரசிக்க மாட்டேன்கிறாங்களே..."

ஏற்கெனவே அவன் பார்வை போன திசைப்பக்கம் பார்வையை ஓட்டிய ஸ்வேதா.. பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள்.. போதாகுறைக்கு எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவதைப் போல் தினகரன் பேசி வைக்கவும், அவள் கொதிகலனாகவே ஆகிவிட்டாள்..

"கருணா அத்தான் தரமில்லாமல் செய்த வேலை நம்மை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது..?"

மாலினியின் அழகை ரசித்துக் கொண்டிருந்த தினகரன் புருவங்கள் முடிச்சிட ஸ்வேதாவைப் பார்த்தான்..

"எங்கே நிறுத்தியிருக்கிறது.. நான் என் வீட்டு ஹாலில் தானே நின்றுகொண்டிருக்கிறேன்.. ஒருவேளை.. நீ அடுத்தவர் வீட்டில் நிற்கிறோமேயென்று இப்படிச் சொல்கிறாயா ஸ்வேதா..?"

அதற்குள் மாலினி அவர்களை சமீபித்துவிட ஸ்வேதா பல்லைக் கடித்துக் கொண்டே அவளைப் பார்த்தபடி கூறினாள்..

"இது எனக்கு ஒன்றும் அடுத்தவர் வீடு இல்லை அத்தான்.. என் அத்தையின் வீடு.. நானொன்றும்.. கட்டிய புடவையோடு ஒருத்தியை முன்னால் அனுப்பிவிட்டு அவளிடம் சொந்தம் கொண்டாடிக் கொண்டு பின்னாலேயே வந்து ஊரார் வீட்டில் டேரா போடவில்லை.."

இதைக் கேட்ட தினகரனின் முகம் கோபத்தில் ஜிவு ஜிவுத்துவிட, தினகரனையும் ஸ்வேதாவையும் கண்டு கொள்ளாமல் கடந்து போகப் போன மாலினி நின்றாள்.. ஸ்வேதாவை திரும்பிப் பார்த்தாள்...

'இருடி.. உன்னை ஒருவழி பண்ணுகிறேன்..' என்று எண்ணமிட்டபடி தினகரனைப் பார்த்து...

"ஹாய்.." என்றாள்...

தினகரன் அயர்ந்துவிட்டான்.. அன்று வரை அவனிடம் ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் மாலினி பேசியதில்லை அவனாக வலியப் போய் பேசினாலும் கண்டுகொள்ளாமல் நகர்ந்து விடுவாள்...

அப்படிப்பட்டவள் இன்று தானே வந்து 'ஹாய்..' சொன்னவுடன் அவன் வாயெல்லாம் பல்லாகிவிட்டான்..

"என்னிடமா ஹாய் சொன்னீங்க..?"

"உங்களிடம் சொல்லாமல் இந்த அம்மாவிடமா 'ஹாய்' சொல்வேன்..?"

மாலினி, ஸ்வேதாவை கைகாட்டி கேட்க.. தினகரன் வாய்விட்டு சிரித்துவிட்டான்.. ஸ்வேதாவோ சினந்தாள்..

"யாரைப் பார்த்து அம்மாங்கிற..?"

"ஏன் உன்னைப் பார்த்துதான் சொன்னேன்..?"

"என்னைப் பார்த்தால் அம்மா மாதிரியா தெரியுது.."

"சேலை கட்டியிருப்பதால் அம்மா மாதிரிதான் தெரியுது.. நிச்சயம் அப்பா மாதிரி தெரியவில்லை..."

"மாலினி..."

"ஸ்ஸ்.. சத்தம் போடக்கூடாது.. அது அத்தைக்குப் பிடிக்காது...?"

"யாருக்கு யார் அத்தை..?"

"அடடா.. இந்த சந்தேகம் உனக்கு தீரவே தீராதா.. இங்கே நிற்கிறாரே என் சின்னன்.. ன.. அத்தான்.. இவருடைய அம்மாதான் எனக்கு அத்தை.. என்ன அத்தான்.. நான் சொல்வது சரிதானே..."

மாலினி 'சின்ன அத்தானுக்கு' கொடுத்த அழுத்தத்தில் சொக்கிப்போன தினகரன்.. தேன் குடித்த நரியைப் போல் ஆகிவிட்டான்...

"நீங்க சொன்னால் அது தப்பாகவா இருக்கும்...? சரிதான்..."

"பார்த்தாயா ஸ்வேதா.. சின்ன அத்தான் என்ன சொல்கிறாருன்னு.. இன்னும் உனக்கு சந்தேகம் தீரவில்லைன்னா வா.. கீழே போய் என் அத்தையிடமே பேசி உன் சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.."

ஸ்வேதா செய்வதறியாத கோபத்துடன் மாலினியை முறைத்துக் கொண்டு நிற்க.. மாலினி அவளுடைய கோபத்தை குதூகலமாக பார்த்துக் கொண்டே தினகரனிடம் பேச்சை வளர்த்தாள்...

"ஏன் சின்ன அத்தான்.. இந்த நகைகளையும் பணத்தையும் காட்டி கணவனை விலைக்கு வாங்க வேண்டிய நிலையில் இருக்கும் பெண்களைப் பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க..?"

இது தனக்கான அம்பு என்று ஸ்வேதாவிற்குப் புரிந்து விட்டது.. கவனமாய் அம்பை அவள்மேல் எய்த மாலினி.. அடுத்த அம்பை செலுத்த தயாரானாள்..

"எங்க சசியின் அழகுக்கும் அன்புக்கும் முன்னால காசு பணம் நிற்க முடியல சின்ன அத்தான்.. வைரத்தையும் சொத்தையும் சசியின் வீட்டுக்காரர் முன்னால் போட்டாலும் அவர் அதை ஏறெடுத்துப் பார்க்காமல் எங்க சசியைப் பார்த்திட்டிருக்கிறாருன்னா சசியிடம் அந்த

வைரங்களையும் சொத்தையும்விட மேலான ஒன்றை அவர் பார்த்திருக்கிறாருன்னுதானே அர்த்தம்..? சசியின் உயர்வுக்கு பக்கத்தில் பேச்சுக்குகூட யாராலும் நிற்க முடியாது அத்தான்.. எங்க சசியை கட்டின புடவையோடு அனுப்பினாலும் அடுத்த வங்க மனதைப் புண்படுத்தாமல் பேச வேண்டும்.. பெரிய வங்ககிட்ட மரியாதையாய் இருக்க வேண்டும்னு ஆயிரம் குணங்களை சொல்லிக் கொடுத்து அந்த குணங்களை சீர்வரிசையாய் அனுப்பியிருக்கோம்.. அதெல்லாம் சுட்டுப் போட்டாலும் மத்தவங்களுக்கு வராது..."

37

**அலைகடலாய்.. உன் நினைவு..**

**ஆக்கிரமித்து.. எனை மயக்குவதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

தினகரன்... மாலினியின் சொல்லம்புகளை ரசித்துக் கொண்டிருந்தான்.. அவனுக்கும் சரி.. அவனுடைய அண்ணன்மார்களுக்கும் சரி... ஸ்வேதாவின் சாகசப் பேச்சுக்களை கட்டோடு பிடிக்காது... அதேசமயம் அவளை வாயடக்க வைக்கவும் அவர்களால் முடியாது. நர்மதா ஒருத்திதான் அவ்வப்போது ஸ்வேதாவை கடிந்து கொள்வாள்.. அவளுமே இப்படியbல்லாம் பேசக்கூடாது என்று சொல்வாளேயொழிய ஸ்வேதாவின் சாகஸம் நிறைந்த ஜாடைப் பேச்சிற்கு பதிலடி கொடுத்ததில்லை.. முதலில் அவள் பேசுவது ஜாடைப் பேச்சு என்று புரியும் முன்னரே ஸ்வேதா அடுத்த பேச்சிற்கு தாவி விடுவாள்..

அத்தகைய பாரம்பர்யம் கொண்ட ஸ்வேதாவின் ஜாடைப் பேச்சை இமைப் பொழுதில் கண்டுகொண்ட தோடு அவள் பேச்சிற்கு எதிர் பேச்சை அவள் பாணியிலேயே பேசி அவளை வாயடைக்க வைத்த மாலினியின்

கெட்டிக்காரத்தனத்தை தினகரன் மனதிற்குள் மெச்சிக்கொண்டான்.. அத்தோடு அவன் நிறுத்தியிருக்கலாம். மனதில் நினைத்ததை வாய்விட்டுச் சொல்லிப் பாராட்டியும் வைத்தான்...

"வாவ்... இதை நான் உங்களிடம் எதிர்பார்க்கவே இல்லை மாலினி.. அழகோடு அறிவும் சேர்ந்திருக்கும் பெண்ணை இப்போதுதான் பார்க்கிறேன்..."

இதைவிட ஸ்வேதாவின் மூக்கை உடைக்கும் வார்த்தைகள் வேறு எதுவும் இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்ட மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"நீங்க சிரிக்கும்போது இன்னம் அழகாக இருக்கீங்க மாலினி..." தினகரன் கிடைத்த சந்தர்ப்பத்தை விடாமல் வழிய ஆரம்பித்தான்...

ஸ்வேதா பல்லைக் கடித்தாள்...

'மகனே.. இத்தனை நேரமும் உன் முன்னால் நின்று நான் கடலை போட்டபோது விளக்கெண்ணெயைக் குடித்தவன் போல முகத்தை வைத்துக் கொண்டிருந்து விட்டு இப்போது இவளைக் கண்டதும்.. இஞ்சி தின்ற குரங்கைப் போல பல்லைக் காட்டுகிறாயா.. இருக்குடா உனக்கு...'

ஸ்வேதாவின் முகபாவனையை வைத்தே அவளது எண்ணவோட்டத்தை யூகித்துக் கொண்ட மாலினி, உள்ளூர சிரித்துக் கொண்டாள்.. அவளுக்கு ஸ்வேதாவின் மேலிருந்த கோபம் இன்னும் தீரவில்லை.. அவளைப் பேசியிருந்தால் கூட அவள் பொறுமையாக போயிருப்பாள்.. ஆனால் ஸ்வேதா.. முதல் நாள் இரவே.. 'எங்கள் குடும்பத்துப் பெண்களுக்கு இதெல்லாம் வராது..' என்ற ரீதியில் மாலினியின் குடும்பத்துப் பரம்பரையில் வந்த பெண்களையெல்லாம் வம்புக்கு இழுத்துவிட்டாள்.. அவளுக்கு பதிலடி கொடுக்காவிட்டால்... மாலினியின் பாட்டி.. கொள்ளுப் பாட்டி.. கொள்ளுக் கொள்ளுப் பாட்டியெல்லாம் கோபித்துக் கொள்ள மாட்டார்கள்..?

அதனால் தன் குடும்பப் பெண்களின் பாரம்பர்யப் பெருமையைப் பாதுகாக்க களம் இறங்க வேண்டிய கட்டாயம் மாலினிக்கு வந்துவிட்டது...

"ஈஸிட்..? நீங்க இதுவரைக்கும் அழகான பெண்களைப் பார்த்ததில்லையா.. இல்லை அறிவான பெண்களைப் பார்த்ததில்லையா..?"

ஸ்வேதாவைப் பார்த்தவாறே தினகரனிடம் கேள்வி கேட்டாள் மாலினி...

"நான் பார்க்காத பெண்களா..?" தினகரன் பெருமையாய்க் கூற...

"அதுதான் எனக்குத் தெரியுமே... அந்தப் பெண்கள் உங்களைத் திரும்பிப் பார்த்தார்களா..?" என்று சந்தடி சாக்கில் தினகரனின் மூக்கையும் சேர்த்து உடைத்தாள் மாலினி...

அதை உணர்ந்து கொண்ட தினகரனின் விழிகளில் தெரிந்த பாராட்டுதலின் சாயை அதிகமானது.. அதைப் பார்த்த ஸ்வேதா...

'ரோஷமில்லாதவன்.. இவள் இப்படியொரு கேள்வியைக் கேட்கிறாள்.. அதையும் கேட்டுக் கொண்டு 'ஈ'..ன்னு பல்லைக் காட்டுகிறானே...' என்று மனதிற்குள் தினகரனை திட்டித் தீர்த்தாள்...

"ஏன் மாலினி... பெண்கள் என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டார்களா..?" கேலியான குரலில் தினகரன் வினவினான்...

"ஏன் திரும்பிப் பார்க்க மாட்டார்கள்... அதெல்லாம் திரும்பிப் பார்ப்பார்கள்.. அதைத்தான் தினமும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே..." ஸ்வேதாவை ஜாடையாய் பார்த்தபடி மாலினி கூற, ஸ்வேதா முகம் மலர்ந்தாள். தினகரன் முகம் கடுத்தான்...

"நான் கேட்டது வேறு பெண்களை..." அவன் எரிச்சலுடன் சொன்னான்...

"வேறு பெண்களா... அது யார் சின்ன அத்தான்..?" மாலினி வரவழைத்துக் கொண்ட ஆச்சர்யத்துடன் வினவினாள்...

"நான் கேட்டது அழகான பெண்களை.. அறிவான பெண்களை..." தினகரன்.. ஸ்வேதாவை இப்போது வெளிப்படையாகவே முறைத்தான்...

"ஓ.. நீங்க அப்படி வருகிறீங்களா..." மாலினியும் ஸ்வேதாவைப் பார்த்தபடி கிண்டலாகப் பதில் சொன்னாள்...

"அப்படித்தான்.. இப்பச் சொல்லுங்க.. அப்படிப்பட்ட பெண்கள் என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டாங்களா..?"

"அது என்னவோ... எனக்குத் தெரியாது... ஆனால்.. சசிரேகாவை உங்க அண்ணன்தான் முதலில் திரும்பிப் பார்த்திருக்கிறார்.. சசி அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை..."

மாலினி வீசிய இந்த சொல்லம்பு தனக்கானது என்று ஸ்வேதாவிற்கா புரியாது..? அவளது முகம் கறுப்பதைப் பார்த்தபடி தன் தாக்குதலைத் தொடர்ந்தாள் மாலினி...

"எங்கள் குடும்பத்துப் பெண்கள்... ஆண்களை ஏறெடுத்துதான் பார்க்க வைப்போம்... நாங்கள் யாரையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம். எங்களைத் தேடி பெரிய குடும்பங்களில் இருந்து பெண் கேட்டு வர வைப்போம்... நாங்களாகப் போய் இந்த வீட்டிற்கு மருமகளாக மாட்டோமா என்று தவம் கிடக்க மாட்டோம்.. எங்கள் குடும்பத்துப் பெண்களுக்கு நீங்கள் சொன்ன அழகும் அறிவும் நிறைய இருக்கும்.. சாகசம் இருக்காது... பொறுமை இருக்கும்... பெருமை இருக்காது... பணிவும் பண்பாடும் இருக்கும்.. பகட்டு இருக்காது.. அடக்கம் இருக்கும்.. ஆணவம் இருக்காது... நேர்மை இருக்கும்.. சிறுமை இருக்காது..."

விட்டால் அன்று முழுவதும் மாலினி... அவள் குடும்பத்துப் பெண்களின் சிறப்பம்சங்களைப் பட்டியலிட்டுக் கொண்டிருப்பாள் என்பது புரிந்துபோக... ஸ்வேதா அந்த இடத்தை விட்டு வேகமாக அகன்றாள்...

மாடிப்படிகளில் அவளது கோபமான காலடியோசை தேய்ந்து மறைவதைக் கேட்டபடி மாலினியைப் பார்த்த தினகரன்...

"தேங்க்ஸ்..." என்று நன்றியுணர்வுடன் கூறினான்...

அவன் உண்மையாகவே நன்றி சொல்கிறான் என்பதை அவனது முகம் உணர்ந்தத...

"எதற்கு இந்த தேங்க்ஸ்..?" என்று ஆச்சரியத்துடன் மாலினி கேட்டாள்...

"ஸ்வேதாவிடமிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு.."

"இது உங்களுக்கே ஓவராகத் தெரியவில்லையா..?"

"கொஞ்சம்கூடத் தெரியவில்லை.. உங்களுக்கு எப்படிங்க என் கஷ்டம் புரியும்... நீங்கதான் தாய்க்குலமாச்சே... பெண்களை விட்டுக் கொடுப்பீங்களா என்ன..?"

"அதெல்லாம் உங்க மாமன் மகளை விட்டுக் கொடுப்பேன்.. ஏன்னா.. அந்த ஜீவன் தாய்க்குலமேயில்லை.."

"அப்படின்னா அவ யாரு..? பேய்க்குலமா..?"

"ஊஹூம்.. அப்படி நான் சொல்ல மாட்டேன்..."

"ஏன்...?"

"அப்புறம் பேய்கள் என்கூட சண்டைக்கு வந்து விடாதா.. பெண்ணுன்னா பேயே இரங்கும்.. இவள்.. இவளைத் தவிர மற்ற பெண்களை மனுஷியாகவே நினைக்க மாட்டேன்கிறா..."

"சரியான மதிப்பீடு..."

"தேங்க்ஸ்..."

"என்னவோ போங்க... அவள் எப்போது பார்த்தாலும் என்னிடம் 'மொக்கை' போடுவாள்தான்.. ஆனால், இன்றைக்கு என்னடாவென்றால் காலையிலேயே ஆரம்பித்துவிட்டாள்..."

"எதை ஆரம்பித்து விட்டாள்...?"

"'மொக்கை' போடுவதைத்தான்..."

மாலினிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.. அவள் வாய் பொத்தி சிரித்துக் கொண்டிருக்கும் போது அந்த ஹாலில் பிரபாகரன் நுழைந்தான்.. தினகரனிடம் நின்று சிரித்துக் கொண்டிருந்த மாலினியையும் அவளது சிரிப்பை ரசித்துக் கொண்டிருந்த தினகரனையும் பார்த்தவனின் முகம் மாறியது.. அவனை அங்கே கண்டவுடன் மாலினியின் சிரிப்பு நின்றுவிட்டது.. அதைப் பார்த்தவாறே அவன் அவர்களுக்கு அருகில் வந்தான்...

"என்ன தினா.. உன்னை பேங்க்குக்குப் போகச் சொன்னேனே.. போகவில்லையா..?" அழுத்தமான குரலில் வினவினான்...

"இதோ போய்க்கிட்டே இருக்கேன் அண்ணா..." தினகரன் அவசர நடையுடன் மாடிப் படிகளை அடைந்தான்...

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த பிரபாகரன், சாவாதானமாய் மாலினியின் பக்கம் திரும்பினான்..

'கடவுளே.. இவன் சும்மாவே சாமியாடுவானே... இப்போது நான் சிரிப்பதை நேரில் பார்த்துவிட்டானே... என்ன செய்ய காத்திருக்கிறானோ..' மாலினி மனம் நடுங்கினாள்...

அவள் முகம் சிரிப்பைத் தொலைத்துவிட்டு கலக்கமாக இருக்க.. பிரபாகரன் கூர்மையாக அவளைப் பார்த்தான்...

"தினா... ஜோக்கடித்தானா...?"

"இல்.. இல்லை..."

"ஊஹூம்.. அப்போ நீ ஜோக்கடித்தாயா..?"

"அதுவும் இல்லை..."

"எதுவுமில்லாமல் ஏன் அப்படி அவனிடம் சிரித்தாய்..?"

'ஆரம்பித்து விட்டாயா..?' என்று இருந்தது மாலினிக்கு...

என்றைக்கும் சிரிக்காதவள் திருவிழாக் கடையில் சிரித்தாளாம்... அந்தக் கதையாய் இன்றைக்கு ஆகிப்போய் விட்டதே என்று வருத்தப்பட்டாள் மாலினி...

காலையில்தான் அவர்கள் இருவருக்கும் இடையே ஆறு மாத காலமாக இருந்த பிணக்கு முடிவுக்கு வந்தது.. இப்போது திரும்பவும் பிணக்கு ஆரம்பித்தால் அவள் தாங்குவாளா..?

தினகரனுடன் நின்றுகூடப் பேசாதவளை அன்று நின்று பேச வைத்துவிட்ட ஸ்வேதாவை மனதார மனதிற்குள் திட்டித் தீர்த்துக் கொண்டாள் மாலினி...

"யாரைத் திட்டுகிறாய்..?" என்று அவளது முகபாவனையைக் கவனித்தவாறே கேட்டான் பிரபாகரன்...

'இவன் ஒருத்தன்... இவன் முன்னால் மனதில்கூட எதையும் நினைத்துத் தொலைக்க முடியாது.. 'மைண்ட்ரீடிங்' தெரிந்தவனைப் போல உயிரை எடுப்பான்.. பெரிய 'சந்திரமுகி ரஜினி'ன்னு மனதிற்குள் ஒரு நினைப்பு...'

"என்ன பதிலைக் காணோம்..?"

"நான் என்னத்தை பதில் சொல்லி நீங்க என்னத்தைக் கேட்டு.. அதெல்லாம் வேலைக்கு ஆகாது அத்தான்..."

"நீ சொல்லு... அது வேலைக்கு ஆகுமா ஆகாதான்னு நான் முடிவு பண்ணிக்கிறேன்..."

அவன் அமர்த்தலான குரலில் சொன்னான்...

# 38

**உன் வாய் பேசாத போதும்...**

**உன் கண் பேசும் கதையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"நான் எதற்காக அத்தான் இன்றைக்கு லீவு போட்டேன்...?"

"அதைத்தான் நீ மறந்துவிட்டாயே..."

மாலினியின் கேள்விக்கு பிரபாகரன் பதிலடி கொடுக்க... அவள் மௌனமாக அவனை முறைத்தாள்.. அவன் அயராமல் பதில் பார்வை பார்த்தான்...

"காயத்ரியைப் பெண்பார்க்க வருகிறாங்க.. எனக்கு ஒத்தாசையாய் இருன்னு அத்தை சொன்னாங்க.. அதுக்காக லீவு போட்டேன்..."

"ஓ.. அப்படியா.. தினாவின் பேச்சுக்கு சிரித்துக் கொண்டு நிற்பதுதான் நீ பண்ணும் ஒத்தாசையா..?"

இப்போது மாலினிக்கு குற்றஉணர்வு போய் கோபம் வந்துவிட்டது... அவள் எரிப்பதை போல் பிரபாகரனை பார்க்க ஆரம்பித்து விட்டாள்...

"உங்கள் தம்பி.. உங்களுக்குத்தான் உயர்த்தி.. எனக்கு இல்லை..."

"ஓஹோ..."

"சிரிக்க வைக்கக்கூட அவருக்குத் தெரியுமா..?"

"அது எனக்குத் தெரியாது... சிரித்த உனக்குத்தான் தெரியும்..."

"கஷ்டகாலம்.."

"யாரைச் சொல்கிறாய்..?"

"உங்களைச் சொல்லவில்லை..."

"ஏன்.. அதையும்தான் சொல்லிப் பாரேன்..."

"சண்டைக்கு வருகிறீங்களா..?"

"எனக்கு வேறு வேலையே இல்லையா.. என்னைச் சொல்லவில்லைன்னா வேறு யாரைச் சொன்னாய்.. தினாவையா..?"

"அவரைப் போய் சொல்வேனா..?"

"அதுதானே பார்த்தேன்.."

மாலினி இமைக்காமல் பிரபாகரனையே பார்த்துக் கொண்டிருக்க.. அவனும் சளைக்காமல் அவள் பார்வையைச் சந்தித்தான்...

"நீங்க அடங்கவே மாட்டீங்களா..?"

"நீதான் அடக்கிப் பாரேன்..."

"உங்களை அடக்க என்னால் முடியுமா.. அதனால் அந்தக் கதையை விட்டுவிட்டு வேற கதையைப் பேசலாமா..?"

"பேசு..."

"நான் கஷ்டகாலம்னு ஸ்வேதாவைச் சொன்னேன்.."

"அவள் எங்கே இங்கே வந்தாள்...?"

"அதுசரி... இவ்வளவு நேரமும் நான் உங்கள் தம்பியுடன் தனியாக நின்று பேசிக் கொண்டிருந்தேன்னா நினைத்தீங்க... சரியாப் போச்சு போங்க..."

இப்போது பிரபாகரனின் முகத்தில் இறுக்கம் கொஞ்சம் தளர்ந்தது...

"ஸ்வேதாவும் இங்கே இருந்தாளா..?"

"ஆமாம்.. நான் டிபன் சாப்பிட கீழே வரலாம் என்று ரூமை விட்டு வெளியே வரும்போது இவள் உங்க தம்பியுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள்..."

"என்ன பேசினாளாம்...?"

"'மொக்கை' போட்டாளாம்..."

"'மொக்கையா..?'"

பிரபாகரன் தன்னையுமறியாமல் வாய்விட்டு சிரித்தான்...

"பார்த்தீங்களா... நீங்களே சிரித்துட்டீங்க..."

"ஏன் எனக்குச் சிரிப்பு வராதா..? நானும் மனிதன் தானே..."

"எது எப்படியோ... மனிதப் பிறவிகளுக்கு சிரிப்பு வரும்கிறதை நீங்க ஒப்புக்கொண்டதே எனக்குப் போதும். ஏன்னா.. உங்க தம்பி இதைச் சொன்னவுடன் எனக்குச் சிரிப்பு வந்து தொலைத்துவிட்டது..."

மாலினி அலுப்பாக கூறியவுடன்... பிரபாகரனின் முகஇறுக்கம் முற்றிலும் தளர்ந்துவிட்டது.. அவன் இயல்பாக பேச ஆரம்பித்துவிட்டான்...

"நான் உன்னைத் தேடித்தான் வந்தேன்..."

"என்ன விஷயம்..?"

"காயத்ரிக்கு அலங்கரிக்க பியூட்டி பார்லரிலிருந்து ஆள் வரவழைக்க வேண்டாம்னு அம்மாவிடம் சொல்லிவிட்டாயாமே..."

"ஆமாம்... நான் பார்த்துக் கொள்கிறேன்.. சசி எனக்கு ஹெல்ப் பண்ணுவாள்..."

"அதற்காக ஏதும் வேண்டுமா..? நான் வாங்கி வரட்டுமா...?"

"பெண்களின் சமாசாரம் உங்களுக்கு எப்படித் தெரியும்..? நானும் சசியும் போய் வாங்கிக் கொண்டு வருவோம்..."

"துணைக்கு யார் வருவது..?"

"ஏன்.. உங்க.. ப.ப. பரந்தாமன் என்ன ஆனார்..?"

"அவருக்கு ஆயிரம் வேலையிருக்கு.. நான் உங்களைக் கூப்பிட்டுக் கொண்டு போகிறேன்.. சீக்கிரமாய் டிபனை முடித்துக் கொண்டு கிளம்புங்க..."

அந்த வீட்டு டிரைவருக்கு ஆயிரம் வேலைகள் இருக்கிறதாம்.. அந்தக் குடும்பத்தின் தலைமகன்.. பலதொழில்களின் பொறுப்பை தன் தோள் மேல் தாங்கிக் கொண்டிருப்பவனுக்கு ஒரு பொறுப்பும் இல்லையாம்...

மாலினியின் முகத்தில் புன்னகை படர்ந்தது.. அதைப் பார்த்த பிரபாகரனின் முகத்தில் உல்லாசம் படர்ந்தது...

"என்ன... என்கூட வருகிறாயா...?"

என்னவோ.. 'ஓடிப் போகலாமா..?' என்ற தொனியில் அவன் கேட்கவும், அவளுக்கு சிரிப்பு அதிகமாகியது...

"வருகிறோம்..." என்று சொன்னாள்...

பிரபாகரன் அங்கிருந்து நகராமல்.. அவளையே பார்த்துக் கொண்டு நிற்கவும்.. மாலினிக்கு அங்கேயிருந்து போக மனமில்லாமல் போய்விட்டது...

எதைப் பேசுவது என்று புரியாமல் இருவரும் திகைத்தனர்.. பிரபாகரன் தேவையில்லாமல் கைக்கடி- காரத்தைப் பார்த்துக் கொண்டான்.. மாலினி.. உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளது உதட்டின் மேல் அவன் பார்வை படிய.. முகம் சிவக்க.. தலையைத் தாழ்த்திக் கொண்டாள்... அவளது அந்த வெட்கத்தைக் கண்டு மனம் சிறகடிக்க.. அவன் லேசாக விசிலடித்தான்..

அவள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவன் புருவங்களை உயர்த்தினான்...

"என்ன அப்படிப் பார்க்கிற..?"

"ஏன்.. பார்க்கக் கூடாதா..?"

இதைச் சட்டென்று கேட்டுவிட்ட மாலினி.. வெட்கத்துடன் நாக்கைக் கடித்துக் கொண்டு யோசிக்காமல் பேசிவிட்டோமே என்று மானசீகமாக தனக்குத்தானே ஒருகுட்டை வைத்துக் கொண்டாள்.. பிரபாகரன் கிளர்ந்து விட்டான்..

"ஏய்ய்.. மாலினி..." என்று கண்கள் மின்ன அழைத்தான்...

அதற்கு மேல் அங்கே நிற்க முடியாமல் மாலினியை நாணம் சூழ்ந்து கொள்ள... அவள் மாடிப்படிகளின் அருகே ஓடி.. இறங்கிவிட்டாள்...

டைனிங் ஹாலில் அமர்ந்து மதிய.. இரவு.. உணவு விருந்திற்கு என்னென்ன பதார்த்தங்களைச் செய்யச் சொல்லலாம் என்று கருணாகரனிடமும் சசிரேகாவிடமும் கேட்டுக் கொண்டிருந்த நர்மதா.. புயல் வேகத்தில் வந்து நின்ற மாலினியைப் பார்த்ததும் வியந்தாள்..

"ஏம்மா... இப்படி வேகமாய் வருகிற..?"

அதுவரை ஹாலில் உட்கார்ந்து நகம் கடித்துக் கொண்டே மாலினியை மட்டம் தட்ட

ஆயிரம் திட்டங்களை மனதிற்குள் யோசித்துக் கொண்டிருந்த ஸ்வேதா.. மாலினியை எகத்தாளப் புன்னகையுடன் பார்த்தாள்...

"வேறு எதுக்கு ஓடி வரப்போறா.. எல்லாம் சாப்பிடத்தான் இப்படி ஓடி வருகிறா.. சாப்பாட்டுக்கு முந்தி வராவிட்டால் எல்லாம் தீர்த்து விடுமோங்கிற பயம்.. நீ கவலையே படாதே மாலினி.. என் அத்தையின் வீட்டில் உன் வீட்டில் சமைப்பதைப் போல அளவாக சமைக்க மாட்டார்கள். எத்தனை பேர் வந்தாலும் இந்த வீடு தாங்கும். அடித்துப் பிடித்துக் கொண்டு சாப்பிட ஆளாய் பறக்காதே.. பொறுமையாகவே வா.. சாப்பாடு எங்கேயும் ஓடிப் போய் விடாது..."

இந்த வார்த்தைகளை நர்மதாவின் முன்னால் பேசாமல் வேறு இடங்களிலும் ஸ்வேதா பேசியிருந்தால் கதையே வேறாக இருந்திருக்கும்... ஸ்வேதா பேசியதை விட ஆயிரம் மடங்கு வேகத்துடன் மாலினி அவளைத் திருப்பிப் பேசி.. மூக்கை உடைத்திருப்பாள்...

ஆனால்... மாலினி.. நர்மதாவின் முன்னால் அதிகமாக பேச மாட்டாள்.. இதை நன்கு அறிந்து வைத்திருந்த ஸ்வேதா.. டைனிங் ஹாலுக்கு சாப்பிட வந்த மாலினியை நோக்கி வார்த்தைகளை வீசிவிட்டாள்...

சசிரேகாவின் முகம் கோபத்தில் சிவந்துவிட்டது.. ஆனாலும் அவளும்தான் மாமியாரின் முன்னால் வாயைத் திறக்க மாட்டாளே.. எனவே.. மௌனப் பார்வை ஒன்றை

கணவனின் மேல் வீசிவிட்டு பல்லைக் கடித்தபடி ஸ்வேதாவை முறைத்தாள்..

கருணாகரனால் இந்தப் பெண்களின் சொற்போரை எதிர்கொள்ள இயலவில்லை.. அவன் தினகரனை பார்வையில் துணைக்கு அழைக்க.. தினகரன் பேச முனைந்த போது மாலினியின் பின்னாலிருந்து பிரபாகரனின் குரல் ஒலித்தது...

"இதெல்லாம் உனக்குத்தானே நன்றாகத் தெரியும் ஸ்வேதா.. ஏன்னா.. வருஷக்கணக்கில் இந்த வீட்டில் வந்து எந்த வேலை வெட்டியும் இல்லாமல் சாப்பிட்டு பொழுதைக் கழிப்பவள் நீ... மாலினிக்கு இதைப் பற்றி என்ன தெரியும்..? அவள் பாவம்.. இன்ஜினீயராக வேலை பார்க்க சென்னையிலிருந்து மார்த்தாண்டத்திற்கு வந்திருப்பவள்.. இன்றைக்கு என்னவோ.. அம்மாவுக்காக.. அவங்க சொன்ன ஒரு வார்த்தைக்காக லீவைப் போட்டுவிட்டு வீட்டில் இருக்கிறாள்... மற்ற நாள்களில் நீ பேசும் இந்த வெட்டிப்பேச்சைக் காது கொடுத்து கேட்க அவளுக்கு நேரம் இருக்குமா... சாப்பிட நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருப்பவளிடம் சாப்பாட்டைப் பற்றி நீ பேசினால் அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்..? இதெல்லாம் உன் டிபார்ட்மெண்ட்... அதனால இதைப் பற்றி நீ தனியாகவே ஆராய்ச்சி செய்து பிஹெச்.டி. பண்ணி டாக்டரேட் பட்டம் வாங்கு.. மாலினியை விட்டுவிடு.. அவளுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கு..."

நர்மதா உள்பட அங்கிருந்த அனைவரும் குறுஞ்சிரிப்புடன் ஸ்வேதாவைப் பார்க்க... அவளுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.. பிரபாகரன், மாலினிக்கு ஆதரவாக இந்த அளவுக்கு பேசிவிட்ட பின்னால் அந்த வீட்டிலிருக்கும் வேலையாள்கள்கூட இனி மாலினியைத் தான் மதிப்பார்கள்.. தன்னை ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள் என்று அவளுக்குப் புரிந்து போனது...

"மாலினி.." அதட்டலாக அழைத்தான் பிரபாகரன்...

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"சீக்கிரமாய் டிபனை முடி.. சசி.. உன்னையும் தான். நாம் மூவரும் வெளியே போக வேண்டியிருக்கிறது.."

பிரபாகரனின் வார்த்தைகளைக் கேட்டதும் சசிரேகா மரியாதையுடன்...

"சரி.. பெரிய அத்தான்.." என்று பதில் சொல்லிவிட்டு வேகமாய் சாப்பிட ஆரம்பித்தாள்...

மாலினி, சசியின் அருகே அமர... இயல்பாக அவள் அருகே அமர்ந்த பிரபாகரன். அவள் தட்டில் பூரிகளை வைத்துவிட்டு குருமா கிண்ணத்தையும் நகர்த்தி வைத்தான்...

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு மேனி எரிந்தது... அவள் பிரபாகரனைப் பார்த்து...

"நீங்க மூன்று பேரும் எங்கே போறீங்க அத்தான்...?" என்று விசாரித்தாள்...

'இப்போதுதான் இவளை மிக மோசமாக மட்டம் தட்டிப் பேசினான் பிரபாகரன்.. அதை உடனேயே தட்டி விட்டு எதுவும் நடக்காததைப் போல அடுத்த விஷயத்தை அறிய மூக்கை நுழைக்கிறாளே.. இவளெல்லாம் என்ன ஜென்மம்?' என்று நினைத்துக் கொண்டு சசியைப் பார்த்தாள் மாலினி...

அவளுக்கும் அதே நினைவுதான் என்பது அவளது பதில் பார்வையிலிருந்து புரிய.. பேசாமல் குனிந்து சாப்பிட ஆரம்பித்தாள்...

நர்மதா கண்டிப்புடன் நிமிர்ந்து ஸ்வேதாவைப் பார்த்தாள்.. மற்ற நாள்களில் அவள் ஸ்வேதாவை லேசாக கடிந்து கொண்டு விட்டு விடுவாள்.. இன்று அவளுடைய செல்ல மகளைப் பார்க்க வருகிறார்கள்.. இன்று ஸ்வேதாவை எளிதாக விட்டு விட நர்மதா தயாராக இல்லை...

## 39

## பொட்டு வைத்த போது...

**எனைத் தொட்டுச் சென்ற உன் நினைவை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"அவர்கள் எங்கே போனால் உனக்கென்ன ஸ்வேதா..?" நர்மதாவின் குரல் கண்டிப்புடன் வெளியே வந்தது...

"அதில்லை அத்தை... நான் வீட்டில் சும்மாதானே இருக்கிறேன்...?"

"அதைத்தானே பிரபா இவ்வளவு நேரமும் சொல்லிக் கொண்டிருந்தான்..?"

நர்மதாவின் குரலில் தெரிந்த கோபம் கலந்த கேலியை ஸ்வேதா கண்டுகொண்டதாகவே தெரியவில்லை...

"நானும் அவர்களுடன் போகிறேனே அத்தை..."

"எதற்காக..? அவர்களுக்கு வேலையிருக்கு... போகிறார்கள்..."

"நானும் அவர்களுக்கு ஹெல்ப் பண்ணுகிறேனே.."

"அவர்களுக்குத் செய்யும் உதவியை நீ வீட்டிலிருந்து செய்..."

"அது எப்படி அத்தை.. அவர்கள் கூடப் போனால் தானே உதவ முடியும்..?"

"அவர்கள் கூடப் போகாமல் நீ இருந்தாலே அவர்களுக்கு அது மிகப் பெரிய உதவிதானே ஸ்வேதா.."

மாலினி சிரிப்பை அடக்கிக் கொள்ள மிகவும் பிரயத்தனப்பட்டாள்.. சசிரேகாவைப் பார்த்தபோது.. அவள் முகத்தில் எந்தவித உணர்வையும் பிரதிபலிக்காமல் சிலை போல அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்...

'இவளால் எப்படித்தான் இப்படி இருக்க முடிகிறதோ...' மாலினி ஆச்சரியப்பட்டுப் போனாள்...

மாலினியின் முகத்தில் தெரிந்த சிரிப்பை ஸ்வேதா பார்க்காமல் இல்லை. அவள்தான் எதை... எங்கே.. எப்போது கண்டுகொள்ள வேண்டும் என்பதில் கைதேர்ந்தவள் ஆயிற்றே...

அதனால் மிகச் சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டு வேதாளம் தன் முயற்சியைத் தொடர்வதைப் போல விடாமல் தன் முயற்சியைத் தொடர்ந்தாள்...

"வீட்டில் இருந்து நான் என்ன செய்யப் போகிறேன் அத்தை...?"

"இத்தனை நாள்களாய் என்ன செய்து கொண்டு இருந்தாயோ அதையே செய்..."

"வீட்டில் நடக்கும் விசேஷத்தில் என் பங்கும் இருக்க வேண்டாமா அத்தை..?"

"அது உனக்கு நினைவில் இருந்தால் இந்த விசேஷம் முடிகிறவரை நீ வாயைத் திறக்காதே.. மௌனவிரதம் இரு..."

"நான் உதவி செய்ய வந்தால் மறுக்கறீங்களே.. இது நியாயமா அத்தை..."

"கடுப்பைக் கிளப்பாதே ஸ்வேதா.. நேற்று ராத்திரி முழுவதும் கஷ்டப்பட்டு சசியும் மாலினியும் வாசலிலும் போர்டிகோவிலும் பெரிய பெரிய கோலங்களைப் போட்டாங்களே... அப்போது நீ போய் உதவி செய்ய வேண்டியதுதானே.. உன் கையைப் பிடித்து யார் தடுத்தது..?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் ஸ்வேதா திணறிக்கொண்டிருக்கையில்.. காயத்ரி லேசான சிரிப்போடு...

"அதுசரி.. மாலினியும் சின்ன அண்ணியும் கோலம் போட்டால் ஸ்வேதா எப்படி ஹெல்ப் பண்ணப் போவாள்.. அந்த இடத்தில் பெரிய அண்ணனும் தினா அண்ணனும்

இருந்திருந்தால் ஹெல்ப் பண்ண ஓடியிருப்பாள்.." என்று கூறினாள்...

ஸ்வேதா வெட்கப்படுவதைப் போல காயத்ரியைப் பார்த்து கொஞ்சும் குரலில்...

"கேலி பண்ணாதே காயத்ரி.." என்று சொல்லவும், நர்மதா எரிச்சலுடன் தன் பெரியப்பாவின் பேத்தியை முறைத்தாள்..

"நான் சொன்னால் சொன்னதுதான் ஸ்வேதா.. காயத்ரியைப் பெண்பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து போகிறவரை நீ அடங்கியிருப்பதாக இருந்தால் மட்டுமே இந்த மட்டில் இரு. இல்லை.. இப்படி அபத்தமாகத்தான் உளறிக் கொண்டிருப்பேன்னு அடம் பிடித்தால் இன்றைக்கு வரும் உன் அப்பாம்மாவுடன் வீட்டிற்கு கிளம்பிவிடு.."

"என்ன அத்தை பிரிச்சுப் பேசறீங்க... இதுதானே என் வீடு...?"

தினகரன் கைகழுவ எழுந்து கொண்டே காயத்ரியைப் பார்த்து ஜாடை காட்டி சிரித்தான்.. பின் ஸ்வேதாவைப் பார்த்து...

"அதுவா ஸ்வேதா.. நீ வருஷக்கணக்கில் இந்த வீட்டில் முகாம் போட்டிருக்கிறாயில்லையா.. அதனால் வந்த பிரமைதான் இது.. உன் வீடு.. கருங்கல்லில் இருக்கிறது ஸ்வேதா.. இது எங்களின் வீடு.. கோட்டையூர் ஜமீன்தார் கார்த்திகேயன் பெற்ற பிள்ளைகளுக்குச் சொந்தமானது... அதனால் பேச்சுக்குகூட இதை உன் வீடுன்னு சொல்லாதே... நான் ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்க மாட்டேன்.. கேஸ் போட்டுவிடுவேன்.." என்று சொல்லியபடி சென்று விட்டான்...

சசிரேகா எழுந்துகொண்டே கணவனின் அனுமதியைக் கண்களால் வேண்ட.. அவன் லேசாக தலையசைத்து அவளுக்கு சம்மதம் சொன்னான்.. அவள் முகமலர்ச்சியுடன் கைகழுவ விரைந்தாள்..

சின்ன மருமகள்.. பார்வையிலேயே கருணாகரனிடம் அனுமதி வாங்கிய விதத்தைக் கண்டு நர்மதாவிற்கு மனதிற்குள் பெருமையாக இருந்தது..

'அருமையான பெண்.. கோட்டையூர் ஜமீன் வமிசத்தின் பெருமையைக் காப்பாற்ற வந்தவள்...' மனதிற்குள் சசிரேகாவை சிலாகித்துக் கொண்டாள்...

அதையறியாமல் ஸ்வேதா.. கருணாகரனுடன் சசிரேகா பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டதற்கு புது அர்த்தத்தை கற்பித்தாள்...

"என்ன காயத்ரி இது.. வயதுப் பெண்கள் இருக்கும் இடத்தில் கருணா அத்தானின் மனைவி அடக்கி வாசிக்க வேண்டாமா.. நம் முன்னோலேயே இப்படி அத்தானை பார்த்து வைக்கிறாளே.. நம் குடும்பத்தில் எல்லாம் இப்படி இருக்கவே மாட்டோம்.. சேச்சே.."

அவ்வளவுதான்.. நெற்றிக் கண்ணின் உக்கிரத்தை தன் இரு கண்களிலும் தேக்கி நர்மதா அக்கினிப் பிழம்பாக அவளை ஒரு பார்வை பார்த்தாள்.. ஸ்வேதா நடுங்கிவிட்டாள்...

"அத்தை.."

"நீ அடங்கவே மாட்டாயா.."

"இல்லை அத்தை.. அது வந்து..."

"ஷ்ஷ்ஷ்..."

நர்மதா வாயில் தன் ஆள்காட்டி விரலை வைத்து ஸ்வேதாவை அடக்கினாள்.. பின்னர் கைகளால் அவளைப் போய்விடும்படி சமிக்ஞை செய்தாள்...

நர்மதா அவ்வளவு கோபத்தை அதுவரை ஸ்வேதா விடம் காட்டியதில்லை.. நர்மதாவின் கோபத்திற்கு முன்னால் எப்போதுமே ஸ்வேதாவினால் எதிர்த்து நிற்க முடிந்த தில்லை.. அவள் அவசரமாக எழுந்து அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்...

நர்மதாவின் உக்கிரத்தைக் கண்டு காயத்ரியே பயந்து போய் மௌனமாகிவிட.. மாலினி எழுந்து கொண்டாள்…

"என்னம்மா சாப்பிட்டு விட்டாயா..?" அக்கறையுடன் நர்மதா வினவினாள்…

அவ்வளவு சீக்கிரமாய் அவள் இயல்பு நிலைக்கு திரும்பிவிட்டதைக் கண்ட மாலினி.. மனதிற்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்…

'சும்மாவா இந்த அம்மாவை எல்லோரும் ஒரு மகாராணியைப் போலக் கொண்டாடுகிறார்கள்..'

மனதில் தோன்றிய மெச்சுதலுடன்…

"சாப்பிட்டு விட்டேன் அத்தை…" என்று மரியாதை யாகச் சொன்னாள் மாலினி…

"என்னவோ போ.. மற்ற நாள்களில்தான் உட்கார்ந்து சாப்பிட நேரமில்லாமல் ஓடிவிடுகிறாய்னு பார்த்தால்.. இன்றைக்குமா இப்படி ஆக வேண்டும்..?"

நர்மதாவின் வருத்தம் புரிந்தாலும்.. அவளுடைய ஒன்றுவிட்ட அண்ணன் மகளைப் பற்றிய கவலைக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்ற எண்ணத்துடன் மாலினி.. மறைமுகமாக அவளுக்குத் தன் பதிலைச் சொன்னாள்..

"நான் சென்னையில் பிறந்து வளர்ந்தவள் அத்தை.. இதுபோல நிறைய பார்த்திருக்கிறேன்.. எதுவுமே என்னைப் பாதிக்காது அத்தை.. இதுவரைக்கும் நானுண்டு என் படிப்புண்டுன்னு போய்க்கிட்டு இருந்தேன்.. இனிமேல் நானுண்டு என் வேலையுண்டு இருக்கப் போகிறேன்.. அதனால் நீங்கள் எதைப் பத்தியும் கவலைப்பட்டுக்க வேணாம் அத்தை.. இன்றைக்கு வீட்டில் விசேஷம் நடக்கப் போகுது.. நீங்க ஃப்ரீ மைண்டா இருங்க…"

மாலினி மறைமுகமாக ஆறுதல் சொல்வதை புரிந்து கொண்ட நர்மதா.. பிரபாகரனைப் பார்த்து.. 'கவனித்தாயா..' என்பது போல் சிரிக்க.. அவனும் மெல்லிய சிரிப்புடன் தலையை ஆட்டினான்…

"நான் சசியுடனும் பெரிய அத்தானுடனும் வெளியே போய்விட்டு வரவா அத்தை..?" மாலினி வினயமாக நர்மதாவிடம் அனுமதி கேட்டாள்...

நர்மதாவின் முகம் மலர்ந்துவிட்டது..

"தாராளமாய் போய்விட்டு வா.. காயத்ரிக்கு அலங்காரம் பண்ணத் தேவையானதை வாங்கத்தானே போறீங்க.. பிரபா என்னிடம் ஏற்கெனவே சொல்லிவிட்டானே..."

"இருந்தாலும்.. நான் சொல்லவில்லையே. நான் சொல்ல வேண்டாமா...?"

நர்மதா, மாலினியை அன்போடு பார்த்தாள்...

"உன் வீட்டில் உன்னை நன்றாக வளர்த்து வைத்திருக்காங்கம்மா.. நல்லா இரு..."

மாலினி மரியாதையுடன் சிரித்துவிட்டு கைகழுவி விட்டு.. வாசலுக்கு சென்றாள்... அங்கே சசிரேகா.. கருணாகரனிடம் நின்று பேசிக் கொண்டிருந்தாள்.. கணவனும் மனைவியும் தனிமையில் பேசிக் கொண்டிருக் கிறார்களே என்று மாலினி தயங்கி நிற்க.. சசிரேகா திரும்பிப் பார்த்து..

"வா.. மாலினி.." என்றாள்...

வேறுவழியின்றி மாலினி அவர்களுக்கு அருகே சென்றாள்...

"உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம் மாலினி.." என்று சசிரேகா கணவனைப் பார்த்தபடி கூறினாள்...

"என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்களா..?" மாலினி திகைத்தாள்...

"ஆமாம்மா.. உன்னைப் பற்றி சசி ரொம்ப கவலைப் படுகிறாள்.. நீ பத்திரமாய் இருக்கணும்னதான் உன் வீட்டில் உன்னை எங்கள் வீட்டில் தங்க வைத்தாங்க..." வருத்தத்துடன் பேசினான் கருணாகரன்..

"நான் இங்கே பத்திரமாகத்தானே இருக்கிறேன் அத்தான்..." மரியாதையுடன் பதில் சொன்னாள் மாலினி..

"பத்திரமாக இருக்கிறாய்.. நிம்மதியாக இருக்கிறாயா..?"

"ஏன் அத்தான்.. என் நிம்மதிக்கு என்ன குறை..?"

"ஸ்வேதாதான் குறை.."

"அவளெல்லாம் எனக்கு ஒரு மேட்டரே இல்லை.."

"அப்படியில்லை மாலினி.."

"இதோ பாருங்கள் அத்தான்.. இப்போது டைனிங் ஹாலில் நீங்களும் சசியும் வந்த பின்னால் அத்தையும் இப்படித்தான் வருத்தப்பட்டாங்க.. அவங்களிடம் என்ன சொன்னேன் தெரியுமா..?"

"என்ன சொன்னாய்..?"

"நான் சென்னையில் பிறந்து வளர்ந்தவள்.. இவளைப் போல எத்தனையோ பேரை தினம் தினம் பார்த்திருக்கிறேன்.. அத்தனையையும் சமாளித்து வந்திருக்கிறேன்.. அதோடு ஒப்பிடும்போது ஸ்வேதா வெல்லாம் சப்பை மேட்டர் அத்தான்.. நான் அவளையெல்லாம் மைண்ட் பண்ணிக்கவே மாட்டேன்.. நீங்களும் அத்தையும் இதை நினைச்சு ஃபீல் பண்ணிக்காம ஃப்ரீ மைண்டா இருந்தால் அதுவே எனக்குப் போதும்..."

மாலினி தெளிவாகப் பேசப் பேச.. கருணாகரன் வியப்புடன் அவளைப் பார்த்தான்...

'பரவாயில்லையே.. இந்தப் பெண் ரொம்பவும் புத்திசாலியாக இருக்கிறாளே...' என்று அவனுக்குத் தோன்ற, மனைவியைப் பார்த்துச் சிரித்தான்...

## 40

## நீ அருகில் வந்தபோது...

**நான் உருகி நின்ற நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

கார் நெடுஞ்சாலையில் விரைந்தது...

"நாம்.. எங்கே போகிறோம் சசி..?" என்று கேட்டாள் மாலினி...

மார்த்தாண்டத்திலிருந்து வெளியேறி கார் நெடுஞ்சாலையில் விரைவதை சசிரேகாவும் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள்.. ஆனால்.. பிரபாகரனிடம் அதைப் பற்றிக் கேட்கும் துணிவு அவளுக்கில்லை...

"ஷ்ஷ்.. என்னை ஏண்டி கேக்கிற..?" என்று மாலினியிடம் அவள் முணுமுணுத்தாள்..

"நீயும் தானே என்கூட காரில் வருகிற.. உன்னைக் கேட்காமல் யாரிடம் கேட்பது..?"

"ஏண்டி.. என்னை மாட்டி விடற.. எனக்கு இது தெரியாது.. காரை ஓட்டுவது பெரிய அத்தான்.. நீ அவரிடமே இதைப் பத்திக் கேளு..."

"அதையும் நான்தான் கேட்கணுமா.. நீ கேட்டுச் சொல்ல மாட்டாயா?"

"இதோ பார் மாலினி. அவர் காரை இந்த கன்யாகுமரி கடலுக்குள் விட்டால்கூட நான் எங்கே போகிறோம்னு அவரிடம் கேட்க மாட்டேன்..."

"அடிப்பாவி.. உன் வீட்டில் தங்கியிருப்பதற்கு நீங்க இதையும் செய்வீங்களா.. உங்களை நம்பி காரில் ஏறி உட்கார்ந்தால் கடலில் விடுவீங்களா.. உங்க இரண்டு பேரையும்விட அந்த ஸ்வேதா எவ்வளவோ தேவலை..."

பின்ஸீட்டில் அமர்ந்து கொண்டிருந்த மாலினியும் சசிரேகாவும் தாழ்ந்த குரலில் வழக்கடித்துக்

கொண்டிருக்க.. பிரபாகரன் காரின் முன்பக்கத்தில் இருந்த கண்ணாடியை சரிசெய்து அதன் வழியாக மாலினியைப் பார்த்தான்.

"என்ன விஷயம்... ஏன் எங்க வீட்டு மருமகளை மிரட்டிக் கொண்டிருக்கிற..?" என்று மாலினியை கேட்க வேறு செய்தான்...

"ஹலோ.. சார்.."

"சாரா.. யார் அது..?"

"வேறு யார்.. எல்லாம் நீங்கதான்..."

"ஆஹா.. மரியாதை பலமாய் இருக்கு.."

"மகிழ்ந்துபோவது இருக்கட்டும்.. இவள் உங்க வீட்டுக்கு மருமகளாக வருவதற்கு முன்னாலேயே என் பெரியப்பாவிற்கு மகளாக பிறந்து விட்டாள்..."

"நேற்றுக் கதை நேற்றோடு.. இன்றைக்கு அவள் யார்...?"

"மிஸஸ் கருணாகரன்..."

தன் கணவனின் பெயரை மாலினி சொல்லவும், சசிரேகாவிற்கு கோபம் வந்துவிட்டது.. அவள் மாலினியின் கையைக் கிள்ளினாள்..

"ஸ்ஸ் ஆ.. ஏண்டி குரங்கே கிள்ளினாய்.." மாலினி கையை உதறினாள்...

"நீதான் என் வீட்டுக்காரருக்கு பெயர் வைத்தாயா..?"

"இல்லையே... அவருடைய அப்பாவும் அம்மாவும் பெயர் வைத்திருப்பாங்க... அதுக்கும் நீ என் கையைப் பிடித்துக் கிள்ளியதற்கும் என்னடி சம்பந்தம் இருக்கு..?"

"என்னவோ நீதான் அவருக்கு பெயர் வைத்ததைப் போலக் கொஞ்சம்கூட பயம் இல்லாமல்.. மரியாதை இல்லாமல் அவர் பெயரை எப்படிடீ நீ சொல்லலாம்..?"

சசிரேகா சண்டைக்கு வரவும்.. மாலினி, பிரபாகரனை முறைத்தாள்..

"இதை நீ உன் பெரிய அத்தானிடமே கேளுடி..."

"என்னிடம் ஏன் கேட்கச் சொல்லுகிறாள்.. சசி..?"

"அவர்தானே நீ யாருன்னு என்னிடம் கேட்டார்..."

"நான் கேட்டால்.. உங்க தம்பியின் வொய்ஃப்ன்னு உன் தங்கை சொல்ல வேண்டியதுதானே சசி.. அதை விட்டு விட்டு ஏன் கருணாவின் பெயரைச் சொன்னாள்னு கேளு சசி..."

"ஆமாமாம்.. உங்க தம்பி பெண்டாட்டிக்கு பேசவே தெரியாது.. நீங்க எடுத்துக் கொடுங்க..."

அதுவரை சசிரேகாவை ஊடே வைத்து விளையாட்டாய் மோதிக் கொண்டிருந்த மாலினி.. நேரடியாய்ப் பேசி விடவும்.. பிரபாகரன் உற்சாகமாகி விட்டான்...

"அது என்னவோ மாலினி.. நீ வரும்வரை சசிக்கு பேசவே தெரியாதுன்னுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்..."

இதைக் கேட்டதும் சசிரேகாவிற்கு மிகவும் வெட்கமாகி விட்டது.. அவள் சங்கடத்துடன் காரின் ஜன்னல் வழியாக வெளிப்புறமாய் பார்க்க ஆரம்பிக்க.. பிரபாகரன் காரின் முன்பக்க கண்ணாடி வழியாக மாலினியைப் பார்வையிட ஆரம்பித்தான்.. தற்செயலாய் விழி உயர்த்தி கண்ணாடியைப் பார்த்துவிட்ட மாலினி, கிளர்ச்சியடைந்தாள்...

'இவன் இவ்வளவு நேரமும் இந்த வேலையைத்தான் செய்தானா..?'

தன் பார்வையை மாலினி கண்டுகொண்டு விட்டதை அறிந்ததும் பிரபாகரன் உற்சாகமாகிவிட்டான்.. மாலினி லேசாக விழியுயர்த்தி கண்ணாடியைப் பார்ப்பதும் அவன் பார்வையை விலக்காமல் இருப்பதைப் பார்த்ததும் அவசரமாய் தன் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதுமாக இருந்தாள்...

'இவன் ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்ட மாட்டானா...'

அழகான அந்த விளையாட்டு தொடர்ந்து கொண்டிருக்கையில் பிரபாகரன்.. மாலினியே எதிர்பார்க்காத வண்ணம் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டான்.. மறுமுறை அவனது விழி நோக்கியபோது லேசாக கண்சிமிட்டி விட்டான்...

'அடப்பாவி.. சசியை காரில் வைத்துக்கொண்டே என்னைப் பார்த்துக் கண்ணடிக்கிறானே...'

அவளுக்கு குப்பென்று முகம் சிவந்துவிட்டது.. உடலெங்கும் ஒருவித பரபரப்பு பரவி ஓடியது.. அவனுடைய சொந்தம் கலந்த அந்தச் செய்கையை மனதிற்குள் அவள் மிகவும் ரசித்தாள்...

'ரௌடி.. காதல் ரௌடி.. என்ன ஒரு அடாவடித் தனம்...'

அதற்கு மேல் விழியுயர்த்தி அவனைப் பார்க்க மாலினியால் முடியவில்லை.. அவளை வெட்கம்

சூழ்ந்து கொண்டது.. அதே சமயம் அவனைப் பார்க்காமல் இருக்கவும் மாலினியால் முடியவில்லை... தன்னையறியாமல் விழியுயர்த்தி அவனைக் கள்ளப்-பார்வை பார்த்தாள்.. அவளது பார்வைக்காக காத்திருந்ததைப் போல அவன் புருவம் உயர்த்தினான்...

'என்னமாய் சைட் அடிக்கிறான்... ராஸ்கல்...'

என்னவோ அவள் அமைதியாக இருப்பதைப் போலவும், பிரபாகரன் மட்டுமே அவளைப் பார்த்துக் கொண்டு வருவதைப் போலவும்.. நினைவு மனதிற்குள் ஓடவும்.. அவளுக்கே சிரிப்பு வந்துவிட்டது...

"என்ன சிரிக்கிறாய்..?"

பிரபாகரன் மௌனத்தை கலைக்க, சசிரேகா கவனம் கலைந்தவளாக ஜன்னல் பக்கமிருந்து தன் பார்வையைத் திருப்பினாள்.. இனி பிரபாகரனின் பேச்சுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பதை உணர்ந்த மாலினி... வாய் திறந்தாள்...

"இல்லை அத்தான்.. வீட்டுக்குள் சாதுவாக எங்களைக் கடைத் தெருவிற்கு கூப்பிட்டுக் கொண்டு போவதாக சொல்லி அழைத்துக் கொண்டு வந்தவர்.. மார்த்தாண்டத்தை விட்டுக் கடத்திக் கொண்டு போகிறீங்களே... அது எங்கேன்னு யோசித்தேன்... சிரித்தேன்..."

மாலினி இப்படிச் சொல்லியவுடன் சசிரேகா பதறி விட்டாள்...

"மாலினி.. என்ன பேச்சு இது..?"

"ஏண்டி.. ஏன் சிரிச்சேன்னு உன் பெரியத்தான் கேட்டதற்குத்தானே நான் பதில் சொன்னேன்.."

சசிரேகாவின் பதற்றத்தைக் கண்டு பிரபாகரன் அவளைத் திரும்பிப் பார்த்து சமாதானப்படுத்தும் விதத்தில் சிரித்தான்...

"இதையெல்லாம் நீ கண்டுகொள்ளாதே சசி..."

"ஆனாலும் பெரிய அத்தான்.. இவள் இப்படிப் பேசலாமா..?"

"அடடா.. நாங்க இன்றைக்கு நேற்றா இப்படிப் பேசிக் கொள்கிறோம்.. உனக்குத்தான் தெரியுமே சசி.. இவளைப் பார்த்த முதல் நாளிலேயே என்னிடம் இவள் என்னமாய் வாயடித்தாள்..?"

"அப்போது நீங்க யாருன்னு இவளுக்குத் தெரியாது.. இப்போது அப்படியா..?"

"அதனால் என்ன..?"

"இல்லை.. பெரியத்தான்..."

சசிரேகா மனத்தாங்கலுடன் வழக்கடித்துக் கொண்டிருக்க.. மாலினியே அவளை விசித்திரமாகப் பார்த்தாள்...

"அடடா.. அவர்தான் எங்களை கண்டுகொள்ள தேன்னு சொல்கிறாரே, அப்புறமும் ஏண்டி அவரைக் கேள்விக் கேட்கிற..?"

"என்னது.. பெரிய அத்தானை நான் கேள்வி கேட்கிறேனா.. ஐயையோ.. பெரிய அத்தான்..

இவள் சொல்வதையெல்லாம் காதிலேயே போட்டுக் கொள்ளாதீங்க.. நான் உங்கள் முன்னால் நின்று பேசவே பயப்படுவேன்..."

"அதுதான் எனக்கே தெரியுமே.. எனக்கே தெரிந் திருக்கும்போது அவருக்குத் தெரியாமல் போகுமா.. நீ அடங்கி உட்காரு..."

"எங்கே.. உனக்கு பெரியப்பா மகளாகப் பிறந்து விட்டு நான் நிம்மதியா காரில் உட்கார்ந்து வந்துவிட முடியுமா..?"

சசிரேகா பரிதாபமாக இதைக் கேட்ட விதத்தில் பிரபாகரன் சிரித்தே விட்டான்.. லேசாகத் திரும்பி அவன் மாலினியைப் பார்த்த பார்வையில் அப்பட்டமான கேலி தெரிந்தது...

"ஏய்ய் வாலு.. நீ என்ன எங்க வீட்டு மருமகளை மிரட்டி ஒரு வழி பண்ணணும்னே சென்னையை விட்டுக் கிளம்பி வந்தாயா..?"

"யாரு..? நான்.. உங்க வீட்டு மருமகளை மிரட்டி வைக்திருக்கிறேன்..? தோடா.. இதை யார் சொல்வதுன்னு ஒரு நியாயம் இல்லையா..? உங்கள் பெயரைச் சொன்னாலே இவளும் சரி... மற்றவர்களும் சரி.. கிடுகிடுவென நடுங்குகிறாங்க.. அப்படிப்பட்ட ஹிட்லர் என்னைப் பார்த்து பழி போடுகிறார்..."

"ஓகே.. ஓகே.. உன்னோடு பேசி என்னால் ஜெயிக்க முடியுமா.. இப்ப என்னதான் உனக்குப் பிரச்னை..?"

"காரை நீங்க எங்கே விடறீங்கன்னு எனக்குத் தெரியணும்..."

"நிச்சயமாய்.. கன்யாகுமரிக் கடலுக்குள் விடப்போவதில்லை.."

"ஆஹா.. எப்பேர்ப்பட்ட உத்தரவாதம்.. சசி.. நாம் நினைத்தது போல உன் பெரியத்தான் கடலுக்குள் காரை விடப்

போவதில்லையாம்டி.." என்று சசிரேகாவிடம் சொன்னாள் மாலினி...

சசி பதிலுக்கு மௌனமாய் ஒரு பார்வை பார்த்து வைத்தாள்.. 'உன்னிடம் போய் சொன்னேனே..' என்று தலையில் அடித்துக் கொண்டாள் மாலினி...

"தலை வலிக்கப் போகிறது..." அக்கறையாய் கண்ணாடி வழியாகப் பார்த்துச் சொன்னான் பிரபாகரன்..

"என் தலை.. நான் அடித்துக் கொள்கிறேன்.. வலித்தால் எனக்குத்தானே வலிக்கும்..?" மாலினி விறைப்பாகச் சொன்னாள்..

இப்போது கன்யாகுமரிக்குள் கார் நுழைந்துவிட.. ஜன்னல் வழியாக கடைகளில் தெரிந்த பெயர்ப் பலகையைப் படித்த மாலினி.. ஆச்சரியத்துடன்..

"சசி.. இது கன்யாகுமரிடி.." என்று சொன்னாள்..

"அட.. ஆமாம்.." நீண்ட நேரத்திற்குப் பின் முதன் முதலாக வாய் திறந்து பதிலைச் சொன்ன சசிரேகா..

"யாரைப் பார்த்து 'அட'ன்னு சொன்னாய் சசி.. உன் பெரிய அத்தானைப் பார்த்தா..?" என்று மாலினி வெடிகுண்டைக் கொளுத்தி போடவும், அலறிவிட்டாள்..

"ஐயோ, பெரிய அத்தான்.. நான் அப்படிச் சொல்ல வில்லை..." கண்களில் நீர் தளும்பிவிட்டது சசிரேகாவிற்கு...

சசிரேகாவின் நிலையைப் பார்த்த பிரபாகரனுக்கு சிரிப்பு வந்துவிட்டது..

"உன் தங்கையைப் பற்றி என்னைவிட உனக்குத் தானே நன்றாகத் தெரியும் சசி.. தெரிந்துகொண்டே அழலாமா.. நான் உன்னைத் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டேன்.." என்று தம்பியின் மனைவியை ஆறுதல் படுத்தினான்...

கார் அந்த மிகப் பெரிய ஸ்டோரின் முன்னால் போய் நின்றது...

41

உனக்காக வென்று.. நான்...

ஒப்பனைகள் செய்வதை...

என்னவென்று நான் சொல்ல..?

சசியின் கண்ணீர் மறையாமல் இருக்க.. பிரபாகரனைக் கள்ளப் பார்வை பார்த்துக்கொண்டே சசிரேகாவைச் சமாதானப்படுத்த முனைந்தாள் மாலினி..

"அதுதான் உன் பெரிய அத்தானே பெரிய மனது பண்ணி உன்னைத் தவறாக நினைக்க மாட்டேன்னு சொல்லிட்டாரே.. அப்புறமும் எதுக்குடி அழுவாச்சியாய் இருக்கிற.. அடச்சீ.. கண்ணைத் துடை.."

"உன்னுடன் கிளம்பி வந்தேன் பார்.. என்னைச் சொல்ல வேண்டும்.." சசிரேகா.. மாலினியை முறைத்தாள்...

"சசி வேறு யார் சொன்னாலும் நம்பலாம்.. மாலினி சொல்வதை நம்பி உன் மேல் கோபித்துக் கொள்வேனா.." பிரபாகரன் வேண்டுமென்றே மாலினியைச் சீண்டினான்..

"அப்படியா.. அப்படி வேறு யார் சொன்னால் இவர் நம்புவாராம் சசி.. ஸ்வேதா சொல்வதையா..?" மாலினி சிரிக்காமல் வினவ.. மற்ற இருவரும் சிரித்து விட்டார்கள்..

"சீக்கிரமாய் ஷாப்பிங் பண்ணி முடிங்க.. எனக்கு வேறு வேலை நிறைய இருக்கு..."

படிகளில் ஏறும்போது பிரபாகரன் கூற.. சசிரேகா "ஆகட்டும்.. பெரிய அத்தான்.." என்று தலையை ஆட்டினாள்...

"என்ன ஆகட்டும்..? அதெல்லாம் சீக்கிரமாய் பர்ச்சேஸ் பண்ண முடியாது.. லேடீஸ் பர்ச்சேஸ் பண்ணினால் கொஞ்சம் முன்னே பின்னே ஆகத்தானே செய்யும்.. இதையெல்லாம் பெண்களுடன் துணைக்கு கிளம்புவதற்கு

முன்னாலேயே யோசித்திருக்க வேண்டும்.." மாலினி கறாராய் கூறினாள்...

"அப்படின்னா.. சரி.. நாம் மெதுவாக ஆற அமர பர்ச்சேஸ் பண்ணிவிட்டு நிதானமாக ராத்திரி பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குப் போய் கொள்ளலாம்.. காயத்ரிக்கு சும்மா தலைவாரிப் பின்னலிட்டு பூ வைத்து பொட்டு வைத்து மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கண்ணில் காட்டும்படி அம்மாவுக்கு போன் போட்டு சொல்லி விடுகிறேன்..." பிரபாகரன் செல்போனைக் கையில் எடுத்தான்..

"வேண்டாம்.. வேண்டாம்.." மாலினி போனைப் பறித்துக் கொண்டாள்...

"நீதானே பர்ச்சேஸ் பண்ண லேட்டாகும்னு சொன்ன..?"

"நானா.. எப்போது சொன்னேன்..?"

"இதைப் பாருடா.. லேடீஸ் பர்ச்சேஸ் பண்ணினால் முன்னே பின்னேதான் ஆகும்னு சொன்னது யார்..?"

"அது ஸ்வேதா போன்ற பெண்கள் பர்ச்சேஸ் பண்ணுவதைப் பற்றிச் சொன்னது.. நான் அப்படிச் சொல்ல வில்லையே.. ஏண்டி சசி.. நீயேதும் அப்படி வாய்விட்டாயா..?"

சசிரேகா அனல் பார்வையொன்றைப் பார்க்க...

"சரி.. சரி.. நீயேன் இப்படிக் கொதிக்கிற.. கூல்.. கூல்..." என்று அவளை அமைதிப்படுத்தினாள் மாலினி..

பெண்களின் ஒப்பனைப் பொருள்கள் விற்கும் பகுதிக்குப் போனவுடன் மாலினி சுறுசுறுப்பாக செயல்பட்டாள்...

கடையின் விற்பனைப் பெண்ணிடம் அவள் ஏதேதோ பொருள்களின் பெயரைச் சொல்வதையும் அவர்கள் எடுத்துக் கொடுப்பதை ஆராய்ச்சியுடன் பார்த்து பலகேள்விகளைக் கேட்பதையும் பார்த்துக் கொண்டிருந்த பிரபாகரனுக்கு ஆச்சரியமாக இருந்தது...

அந்த ஆச்சரியத்தை வாய்விட்டு கேட்டும் விட்டான்..

"ஏன் சசி.. உன் தங்கை மேக் அப் பண்ணிக் கொள்ளாமல் கேஷுவலாய் இருப்பவள்... அவளுக்கு எப்படி இதெல்லாம் தெரிகிறது..?"

"எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஓர் ஆர்வம்தான்னு சொல்லு சசி..."

"ஏன்.. உனக்கு வாயில்லையா..? நீயே நேரடியாய் என்னிடம் சொல்ல வேண்டியதுதானே..."

"எனக்கு வாயில்லை.. நான் வாயில்லாப்பூச்சின்னு சொன்னால்.. நீங்க நம்பி விடுவீங்களா..?"

"இப்போதுதான் பிறந்திருக்கும் குழந்தைகூட அதை நம்பாது..."

"தெரிந்துகொண்டே எதற்காக கேள்வி கேட்கறீங்க..?"

"தெரியமல் கேட்டுவிட்டேன்.."

"இல்லை.. தெரிந்து கொண்டுதான் கேட்டீங்க..."

"எதுவோ ஒன்று.. இப்போது எதற்காக சசியை ஊடே வைக்கிறாய்..?"

"நானா வைத்தேன்.. நீங்கதான் நான் என்னவோ ஏழு கடல் ஏழு மலை தாண்டி அந்தப் பக்கமாய் இருக்கிறதைப் போல சசியிடம் கேட்டுக்கிட்டு இருந்தீங்க.."

அவர்கள் இருவரும் பேசிக்கொள்வதை மெலிதான ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள் சசிரேகா.. பிரபாகரன் யாருடனும் இவ்வளவு இயல்பாகப் பேசக்கூடியவன் அல்ல.. நர்மதாவிடமே அவன் அளவாகத்தான் பேசுவான்...

அப்படிப்பட்டவன் இவ்வளவு எளிமையாக அவர்களுக்கு காரோட்டிக் கொண்டு துணையாக வந்ததுமில்லாமல் அவர்களுடன் சரிசமமாக நின்று பேசுவது அவளுக்கு கனவு போலவே இருந்தது...

ஒரு விஷயத்தை சசிரேகா மிகத் தெளிவாக உணர்ந்தாள்.. அது.. பிரபாகரனுக்கும் மாலினிக்கும் இடையில் ஓடிய

மெல்லிய காதல் உணர்வு...

பிரபாகரனைப் பார்க்கும்போது மாலினியின் முகத்தில் ரகசியப் புன்னகை மலர்ந்தது.. மாலினியைப் பார்க்கும் பிரபாகரனின் முகத்தில் பல்ப் தெரிந்தது.. அவர்களது பேச்சில் அந்நியோன்யம் கலந்த கிண்டலும் கேலியும் வெளிப்பட்டது...

இதை சசிரேகா எதிர்பார்த்திருக்கவில்லை.. சிறு வயது முதல் அவளுக்குப் பிடித்தமான நெருக்கமான தோழியாக மாலினியைத்தான் அவள் நினைத்து வந்தாள்.. கோடை விடுமுறைகளை சென்னையில் மாலினியின் வீட்டில்தான் அவள் கழிப்பாள்.. சசிரேகாவிற்கும் மாலினிக்கும் இடையே அழகான பாசம் கலந்த ஆழமான நட்புப் பிணைப்பு உண்டு...

அந்தக் காரணத்தினால்தான் தனக்காக என்று எதையும் வாய் திறந்து கேட்காத சசிரேகா.. தன் சித்தப்பாமகளைத் தன் வீட்டில் தங்கி வேலை பார்த்துக் கொள்ள அனுமதியை கணவனிடம் கேட்டாள்...

மாலினி வந்த பின்னால் சசிரேகாவிடம் தெரிந்த மலர்ச்சியை கண்ட கருணாகரன்கூட விளையாட்டாய்...

"பேசாமல்.. மாலினியை இந்த வீட்டிலேயே இருக்க வைத்துவிடு சசி.. அப்போதுதான் நீ சிரித்த முகத்துடன் இருப்பாய்.." என்று கூறினான்...

கணவன் சொன்ன சொல்.. உண்மையாகிவிடுமோ என்று அந்தக் கணத்தில் சசிரேகாவின் மனதில் தோன்றியது...

"போகலாமா..?"

வாங்க வேண்டிய பொருள்களை வாங்கி முடித்த மாலினி வினவவும்.. பிரபாகரன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்...

"கிரேட்.. பதினைந்தே நிமிடங்களில் பர்ச்சேஸை முடித்து விட்டாயே..."

"இதில் என் பக்க கிரெடிட் எதுவுமே இல்லை.. நான் கேட்டதெல்லாம் கிடைக்கும் கடைக்கு கூப்பிட்டுக் கொண்டு

வந்த உங்களுக்குத்தான் அத்தனை கிரெடிட்டும் வந்து சேர வேண்டும்..."

"மார்த்தாண்டம் டவுன்தான்.. அதைவிடப் பெரிய சிட்டி கன்யாகுமரி.. இங்கே கிடைக்காத பொருள் கிடையாது! அதனால்தான் உன்னை இங்கே கடத்திக் கொண்டு வந்தேன்..."

பிரபாகரனின் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்றை இனம் கண்டு கொண்டவளாக ரகசியப் பார்வை ஒன்றை அவன் பக்கம் வீசினாள் மாலினி...

"ஏன்.. சசியும்தானே வந்தாள்.. அவளை நீங்கள் கடத்தவில்லையா...?"

"அவள் எங்கள் வீட்டு மகாலட்சுமி..."

"நான்.. ஊரார் வீட்டு மகாலட்சுமியாக்கும்..?"

கேள்வியைக் கேட்டவளும் அதைக் கேட்டுக் கொண்டவனும் வாய்விட்டுச் சிரித்தார்கள்...

"வேலை முடிஞ்சாச்சு.. இனி அடுத்து என்ன..?" பிரபாகரன் காரில் ஏறியவாறே கேட்டான்...

"வேறென்ன அத்தான்.. உங்க மார்த்தாண்டபுரத்து அரண்மனைக்கு காரைவிட வேண்டியதுதானே.." மாலினி வாங்கிய பொருள்களைச் சரிபார்த்துக் கொண்டே பதில் சொன்னாள்...

"அது சரி.. செவிக்கு உணவில்லாதபோது வயிற்றுக்கு கொஞ்சம் ஈயச் சொல்லி இருக்கிறார்கள்.. நீதான் லொடலொடன்னு பேசி செவிக்கு உணவைக் கொடுத்துக் கொண்டே வந்தாயே.. அப்புறம் வயிற்றைப் பற்றி உனக்கெங்கே நினைவிருக்கப் போகிறது..." பிரபாகரன் காரை ஓட்டிக் கொண்டே பேசினான்..

"உன் பெரிய அத்தான் பேசுவதைக் கேட்டாயா சசி.. நான்தான் பேசிக்கொண்டே வந்தேனாம்.. சார் வாயைத் திறக்காமல் மௌனச் சாமியார் போல வந்தாராம்.. இந்தப் பொய்யை வேறு எங்கேயாவது கேட்டிருக்கிறாயா..?"

மாலினி கேட்க.. சசிரேகா.. ஃபெவிகாலைப் போட்டு வாயை ஒட்டிக் கொண்டதைப் போல இதழ் பிரிக்காமல் வெளியே வேடிக்கைப் பார்த்தாள்...

"ஏண்டி சசி.. உன்கிட்டேதாண்டி பேசிக்கிட்டு இருக்கேன்..."

"...."

மாலினி, சசிரேகாவை முறைப்பதை கண்ணாடி வழியே பார்த்த பிரபாகரன் சிரித்தான்...

"என்ன ஆச்சு.. தனக்குத்தானே பேசிக்கிட்டு வருகிற..?"

"ஏன் சொல்லமாட்டீங்க.. நீங்க பக்கத்தில் இருந்தால் தான் உங்க வீட்டு மகாலட்சுமிக்கு நான் பேசினால் காது கேட்கமாட்டேன் என்கிறதே..."

"அப்படியா சசி..?"

"இல்லை.. பெரியத்தான்..."

"அடிப்பாவி.. நான் கேட்டால் பதில் சொல்ல மாட்டாய்.. அதுவே உன் மச்சினர் கேட்டால் உடனே பதில் சொல்லுவாய்.. எந்த ஊர் நியாயம்டி இது..?"

சசிரேகா மௌனித்துவிட.. பிரபாகரனே மாலினியின் கேள்விக்குப் பதில் சொன்னான்...

"எங்க ஊர் நியாயம் இதுதான்..."

"இப்படிப் பாரபட்சமான நியாயம்தான் உங்க ஊர் நியாயமா...?"

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்.. ஆனால்... என்னைச் சாமியார்ன்னு மட்டும் சொல்லாதே.."

"ஏனாம்...?"

"ஏன்னா.. எனக்குச் சாமியாராகப் போகும் ஆசை இல்லை..."

கடலோரமாக இருந்த அந்த ஐஸ்க்ரீம் பார்லருக்கு அருகே காரை நிறுத்திய பிரபாகரன்...

"இறங்குங்க..." என்றான்...

"என்னடி சசி இது.. ஐஸ்க்ரீம் பார்லர் போல இருக்கு..."

"ஐஸ்க்ரீம் பார்லர் போல இல்லை.. ஐஸ்க்ரீம் பார்லரே தான்..."

"அப்பாடி..! ஒரு வழியாய் மௌனவிரதத்தை கலைத்தாயே..."

"அதை நான் கன்டினியூ பண்ணாமலிருப்பது உன் கையில்தான் இருக்கிறது..."

"டிரை பண்ணுகிறேன்.. ஆமாம்.. உன் பெரியத்தான் எதுக்கு நமக்கு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்து கணக்குப் பண்ணப் பார்க்கிறார்..?"

சசிரேகாவிற்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்து விட்டது.. அவள் மாலினியின் முதுகில் ஒரு போடு போட்டாள்...

"ஏண்டி பிசாசே.. அடிக்கிற..?"

"உன்னை அடிப்பதோடு நிறுத்திக் கொள்ளக்-கூடாது.. தூக்கிக் கடலில் போட வேண்டும்.. நீ வாயைத் திறந்தாலே வம்புதாண்டி.. எதைப் பேசுவது.. எதைப் பேசக்கூடாதுன்னு உனக்கு கணக்கே இல்லையா..?"

"ஏண்டி.. நீ மட்டும் இப்ப கணக்கைப் பத்திப் பேசலாமா.. உனக்கு ஒரு நியாயம்.. எனக்கொரு நியாயமா..?"

இப்படிக் கேட்டவளிடம் எப்படிப் பதில் சொல்வது என்று தெரியாமல் திருதிருவென்று விழித்தாள் சசிரேகா...

"அம்மா.. கணிதமேதை ராமானுஜத்தின் மறுபிறவியே... உன் பெரியப்பா மகளுக்கு இந்தக் கணக்கைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது.. அவளை விட்டுவிடு.. பிழைத்துப் போகட்டும்.. பாவம்.." கிண்டலாகச் சொன்னான் பிரபாகரன்...

"இவளுக்கா கணக்குப் பண்ணத் தெரியாது.. அப்புறம் எப்படி கருணா அத்தானை கணக்குப் பண்ணினாள்..?"

என்று மாலினி சந்தேகம் கேட்க...

"பெரியத்தான்.. எனக்கு ஐஸ்க்ரீம் வேண்டாம்.. நான் போகிறேன்.." என்று கடலை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டாள் சசிரேகா...

42

**உன் கண் வீச்சில்.. என்னை...**

**கட்டிப் போட்ட பொழுதை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

கண்ணாடிச் சுவருக்கு அப்பால் தெரிந்த கடலின் அழகில் தன் மனதைப் பறிகொடுத்தாள் மாலினி.. கடலின் அலைகளை ரசித்தபடி தன் முன்னாலிருந்த ஐஸ்க்ரீமை சுவைத்துக் கொண்டிருந்தவளைப் பார்க்கும்போது அமைதியின் வடிவமாக இருக்கும் இவளா.. வாயைத் திறந்தால் வெடிகுண்டை வெடிக்க வைக்கிறாள் என்று பிரபாகரன் மனதிற்குள் ஆச்சரியப்பட்டுப் போனான்...

சற்று முன்னால் சசிரேகாவை சமாளித்து.. ஐஸ்க்ரீம் பார்லருக்குள் அழைத்துக் கொண்டு வருவதற்குள் பிரபாகரனுக்கு போதும் போதும் என்று ஆகிவிட்டது.. அது இவளுக்கு நினைவே இல்லையா என்ன..?

"வேண்டாம் பெரியத்தான்.. இவள் வாயைத் திறக்காமல் இருக்க மாட்டாள்..."

"அதுதான் இந்த ஊருக்கே தெரியுமே.. அப்படியிருக்கும்போது நீ கோபித்து என்ன ஆகப் போகிறது..?"

"இவள் பேசுவதைக் கேட்க என்னால் முடியாது..."

"ஓகே.. அந்தக் கடையில் பஞ்சு வாங்கித் தருகிறேன்.. காதில் அடைத்துக் கொள்..."

"நீங்களும் என்னைக் கேலி செய்கிறீங்களே பெரியத்தான்..."

"சேச்சே.. நான் அப்படிச் செய்வேனா.. பாரும்மா.. நாம் காலாகாலத்தில் ஐஸ்க்ரீமை காலி பண்ணிவிட்டு வீட்டுக்குப் போய் சேர்ந்தால்தான் மேற்கொண்டு வேலை நடக்கும்..? நம் காயத்ரியைப் பெண்பார்க்க வருகிறாங்க.. நீதான் வீட்டு மருமகள்.. நீ பக்கத்திலிருந்து அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டாமா..?"

ஒருவழியாய் சசிரேகா சமாதானமடைந்து.. "வாடி.. போகலாம்..." என்று அழைத்தவாறு திரும்பிப் பார்த்தாள்..

மாலினியைக் காணவில்லை...

"ஐயோ.. பெரியத்தான்! மாலினியைக் காணோமே.." சசிரேகா பதற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்...

"பொறு சசி.. அவள் எங்கேயும் போயிருக்க மாட்டாள்... இங்கேதான் எங்கேயாவது இருப்பாள்..."

"தெரியாத ஊரில் அவள் எங்கே போவாள் பெரியத்தான்..? என்னை நம்பி சித்தப்பா வீட்டில் அனுப்பினாங்களே.. அவளை பத்திரமாய் பார்த்துக்க சசின்னு தினமும் சித்தி எனக்குப் போன் பண்ணு-கிறாங்களே.. அவங்களுக்கு நான் என்ன பதிலைச் சொல்லுவேன்..."

பிரபாகரனுக்கு சசிரேகாவின் புலம்பலைக் கேட்க வேடிக்கையாக இருந்தது...

"ஏன் சசி.. இப்படிப் பயப்படுகிறாய்.. அவள் என்ன சின்னக் குழந்தையா..? இது டூரிஸ்ட் ஸ்பாட்.. கடலைப் பார்க்க ஆசையாக இருந்திருக்கும்.. கடலோரமாக நடந்து விட்டு வரலாமுன்னு போயிருக்கலாமில்லையா..?"

"உங்களுக்கு அவளுடைய கோபத்தைப் பற்றித் தெரியாது பெரியத்தான்.." சசி அங்கலாய்க்க...

'எனக்கா தெரியாது..?' என்று நினைத்துக் கொண்டான் பிரபாகரன்...

"அவளுக்கு கோபமும் ரோஷமும் அதிகம் பெரியத்தான்..."

"ஆளைப் பார்த்தாலே தெரிகிறதே..."

"வேண்டாமென்று விலகி விட்டால்.. அப்புறம் நாம் எவ்வளவு கெஞ்சினாலும் அவள் நம்மைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்..."

பிரபாகரனுக்கு ஏனோ அந்த வார்த்தைகளைக் கேட்டதும் மனம் துணுக்குற்றது...

"இப்போது அவள்பாட்டுக்கு கோபித்துக் கொண்டு சென்னைக்குப் பெட்டியைக் கட்டிவிட்டால்.. அப்புறம் ஆயுளுக்கும் என்கூட முகம் கொடுத்துப் பேச மாட்டாள்..."

சசிரேகா பதறிக் கொண்டிருக்க.. தற்செயலாக ஐஸ்க்ரீம் பார்லருக்குள் திரும்பிப் பார்த்த பிரபாகரனுக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"அங்கே பார்த்தாயா.. சசி.."

பிரபாகரன் சுட்டிக்காட்டிய திசைப் பக்கம் திரும்பிப் பார்த்த சசிரேகா திகைத்துப் போனாள்...

விச்ராந்தியாய் ஒரு மூலையில் அமர்ந்து ஐஸ்க்ரீமை சாப்பிட்டபடி கடலின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள் மாலினி...

சசிரேகா கோபத்துடன் அவளருகே சென்று மீண்டும் முதுகில் ஒரு அடியை வைத்தாள்...

"ஏண்டி சசி.. உன் வீட்டில் சாப்பிட்ட சாப்பாடு உடம்பில் சேருவதற்கு முன்னால் அதைக் கரைத்து-விடணும்னு திட்டம் போட்டு அடி கொடுக்கிறாயா..?"

"பேசாதேடி பிசாசே..."

"எனக்கும் பேசுகிற மூடு இப்போது இல்லை.. அங்கே கடலைப் பாரேன்.. ஹௌ நைஸ்..?"

மாலினி குழந்தை போல் கண்களை விரித்துக் கொண்டு கடலை ரசிக்க ஆரம்பிக்க.. சசிரேகாவிற்கு சிரிப்பு வந்தது...

"உன்னை..! போடி.. இவளே..."

ஒன்றுவிட்ட அந்தச் சகோதரிகள் இருவரும் சமாதானமாகி ஐஸ்க்ரீமை சாப்பிட ஆரம்பித்தனர்...

"சென்னையில் கடல் இல்லையா..?" என்று விசாரித்தான் பிரபாகரன்...

மாலினி அவனை மிதப்பாக ஒரு பார்வை பார்த்தாள்.. "எங்க ஊரில் இருக்கிற மெரீனா பீச்சின் அழகைப் பத்தி இந்த உலகமே பேசுமே.."

"ஓஹோ.. அப்புறம் எதுக்கு அம்மணி.. இந்தக் கடலை இப்படிக் காணாததைக் கண்டது போல் ரசிக்கறீங்களாம்...?"

"வேறு என்ன அத்தான் செய்வது.. நாள் பூராவும் மெஷின்களைப் பார்த்துவிட்டு வருகிற மெக்கானிக்கல் இன்ஜினீயர் நான்.. கண்ணுக்கு குளிர்ச்சியா பச்சக்குன்னு ஏதாவது இயற்கைக் காட்சியைப் பார்த்தால்தான் என் சூடேறிய மூளை குளிர்ச்சியாகும்.. எங்கே? எனக்கு அதுக்கு கொடுத்து கைக்கிறதா..? வேலையை முடித்து வீட்டுக்கு வந்தால் ஸ்வேதாவின் முகத்தில்தான் விழிக்கணும்னு எனக்கு விதிச்சிருக்கு.. இன்றைக்கு எந்த சாமி புண்ணியமோ.. கடலைப் பார்க்க எனக்கு கொடுத்து வச்சிருக்கு.. உங்களுக்கு அது பொறுக்கலையா...?"

மாலினி வெகு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு பேச.. பிரபாகரன் அவளை நோகப் பார்த்து கேட்டான்..

"போனதையெல்லாம் விடு.. இனி வாரா வாரம் உன்னை ஏதாவது ஒரு பிக்னிக் ஸ்பாட்டுக்கு கூப்பிட்டுக் கொண்டு போகிறேன்.. வருகிறாயா...?"

"ஓயெஸ்.. ஸ்வேதாவிடமிருந்து தப்பித்து வெளியே வருவதற்கு யாராவது மாட்டேன்னு சொல்வாங்களா..?"

"நீயென்ன... வந்த இடத்தில்கூட ஸ்வேதாவை மறக்க மாட்டேன்கிற.. அவள் மேல் அவ்வளவு பிரியாமா..?"

"அவ்வளவு வெறுப்பு.."

"பிரியமாக இருக்கிறவங்களைத்தானே நாம அதிகம் நினைப்போம்.."

"அது உங்க கணக்கு..."

"இதோ பார் மாலினி.. கணக்குப் பற்றி நீ பேசப் போய்த்தானே உனக்கும் சசிரேகாவிற்கும் சண்டையே வந்தது.. இன்னும் நீ கணக்கை விடவில்லையா..."

"அதை விடுவதைப் பற்றி அப்புறமாய் நான் யோசிக்கிறேன்.. இப்ப இதைக் கேளுங்க.."

"நீ சொல்லி கேட்காமலிருக்க முடியுமா.. சொல்லு தாயே..?"

"கிருஷ்ணனிடம் ஒரு சமயம் அர்ஜூனன் கேட்டாராம்.. 'கிருஷ்ணா.. உன்னை அதிகமாய் நினைப்பது நான்தானே..'ன்னு. அதற்கு கிருஷ்ணன் 'இல்லை'ன்னு சொன்னாராம். உடனே அர்ஜூனன்.. 'என்னைவிட அதிகமாக உன் பெயரை மனதில் நினைப்பது யாரு'ன்னு கேட்டாராம்.. கிருஷ்ணன் யார் பெயரைச் சொல்லியிருப்பாருன்னு நீங்க நினைக்கறீங்க..?'"

"நாரதர் பெயரைச் சொன்னாரா...?"

"ஊஹூம்.. துரியோதனன் பெயரைச் சொன்னாராம்.."

"என்னது..?"

பிரபாகரன் ஆச்சரியத்துடன் வினவியவாறு சசிரேகாவைப் பார்த்தான்.. அவனது ஆச்சரியத்திற்கு கொஞ்சம் கூட குறையாத ஆச்சரியத்தை தன் கண்களில் பிரதிபலித்தாள் சசிரேகா...

"ஆமாம் அத்தான்.. தூக்கத்தில்கூட அவன் கிருஷ்ணனை மறந்ததில்லையாம்.. இப்போ சொல்லுங்க.. துரியோதனனுக்கு கிருஷ்ணனின் மேல் இருந்தது என்ன..?"

"நிச்சயமாக பிரியமாக அது இருந்திருக்காது..."

"அதுவேதான் ஸ்வேதாவின் மேல் எனக்கிருப்பதும்.."

அவர்கள் திரும்பி வந்தபோதும் மாலினி.. சலசலத்துக் கொண்டுதான் வந்தாள்.. ஆனால்.. பிரபாகரன் அவளிடம் வம்புக்கு வரவில்லை.. சசிரேகாவுடன் அவளை பேச விட்டு விட்டு மௌனமாக கண்ணாடி வழியாக அவளைப் பார்த்துக் கொண்டே வந்தான்..

"இவள் என்ன மாதிரியான பெண்..!"

நினைக்க நினைக்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.. கொட்டுகிற அருவி போல உற்சாகமாக ஆர்ப்பரிக்கும் இவளிடம் ஆழமான பல தன்மைகள் இருக்கின்றன என்று அவன் நினைத்துக் கொண்டான்...

அதுதான் அவனை அவள் பக்கம் ஈர்க்கிறது.. அவளது பேச்சும் சிரிப்பும் பழகும் விதமும் காணக் கிடைக்காதவை என்று அவனுக்கு தோன்ற வைக்கிறது..

இவள் மனுஷியல்ல.. 'யக்ஷிணி..' என்று அவன் நினைத்துக் கொண்டான்.. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வடிவில் காட்சி தரும யக்ஷிணி..

சசிரேகாவிடம் பேசிக்கொண்டே கண்ணாடியை ரகசியப் பார்வை பார்த்தாள் மாலினி.. அவனது பார்வையைச் சந்தித்ததும் அவள் முகம் சிவந்ததை அவன் ரசித்தான்...

அவளுக்குள் காதல் பொங்குவதை அவனால் உணர முடிந்தது.. அதை அள்ளிப் பருக அவன் மனம் துடித்தான்.. அந்தக் காதலை நுகரத் தவித்தான்...

மார்த்தாண்டத்தில் அவர்களது கார் நுழைந்தது.. வீட்டு போர்டிகோவில் கார் நின்றதுமே ஸ்வேதா வேகமாக வந்து எட்டிப் பார்த்தாள்...

"வாசலிலேயே காவல் காக்கிறா பாரேன்.. போன பிறவியில் இவள் வாட்ச்வுமனாக பிறந்திருப்பாளோ..." சசிரேகா சந்தேகம் கேட்டாள்..

"இந்தப் பிறவியிலும் அதே கதைதான்..." என்றாள் மாலினி...

"எதே கதை..?"

"அதுதான்.. வாட்ச்வுமன்.."

"புரியவில்லை..."

"உன் மரமண்டைக்கு எதுதான் புரிந்தது.. மத்தவங்களை வாட்ச் பண்ணிக்கிட்டே அலைகிற வுமனை என்னன்னு சொல்லுவோம்..?"

"வாட்ச் வுமன்..! வாவ்..."

அவர்கள் இருவரும் கிசுகிசுத்தவாறே படியில் ஏற.. அவர்களை துச்சமாக பார்த்தபடி படிகளில் இறங்கி.. பிரபாகரனின் அருகே ஓடினாள் ஸ்வேதா...

"என்ன அத்தான்.. காரை விட்டு இறங்கிட்டீங்க..?"

"இறங்காமல்.. அதிலேயே குடியிருக்கச் சொல்கிறாயா..?"

"அதில்லை அத்தான்.. காயத்ரிக்கு ஹேர் பேண்ட் வாங்கணும்.. அதுக்கு கடைக்குப் போகிறதுக்காக நான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன்..."

"அதுக்காக வெயிட் பண்ணுவானேன்.. தெருமுனையில் இருக்கும் ஸ்டோரில் வாங்கிக் கொண்டு வர வேண்டியதுதானே..."

பிரபாகரன் இலகுவாக கூறிவிட்டு உள்ளே சென்று விட.. தங்களுக்குள் வேறு எதையோ கிசுகிசுத்துக் கொண்டிருந்த மாலினியும் சசிரேகாவும் கலகலத்து சிரித்தார்கள்...

அதைத் திரும்பிப் பார்த்த ஸ்வேதாவின் விழிகளில் வெஞ்சினம் தோன்றியது...

'சிரிங்கடி.. சிரிங்க.. உங்க சிரிப்பு எத்தனை நாளைக்கு நிலைச்சிருக்கும்னு நானும் பார்க்கிறேன்...'

## 43

## உன் இதழ் உதிர்க்கும் ஒரு வார்த்தையில்..

**என் உயிர் குடியிருக்கும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

காயத்ரியைக் கவனமாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள் மாலினி.. அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள் சசிரேகா.. சற்று நேரம் கழித்து மருமகளிடம் எதையோ கேட்டபடி அங்கு வந்த நர்மதா.. மகளைக் கண்டதும் பிரமித்து விட்டாள்...

துளிக்கூட ஒப்பனையின் சாயல் முகத்தில் இல்லாமல் இயற்கையான வனப்பை உணர்த்தியவாறு வானுலகில் இருந்து இறங்கி வந்த தேவதையைப் போல நின்றுகொண்டிருந்தாள் காயத்ரி...

ஒப்பனைப் பெண்களின் துணை இல்லாமலேயே அவர்களைவிடச் சிறப்பாக மகளைத் தயார் செய்திருந்த மாலினியை அன்புடன் நோக்கினாள் நர்மதா...

"உனக்குத் தெரியாத விஷயமே கிடையாதா மாலினி..?" நர்மதா பாராட்டுதலாகக் கூறவும்.. மாலினி தன்னடக்கத்துடன் பதில் சொன்னாள்...

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அத்தை..."

"எதை ஒன்றுமில்லைன்னு சொல்கிற.. நேற்று ராத்திரி என்னடான்னா அவ்வளவு அழகாக

ரங்கோலிக் கோலங்களைப் போட்டிருக்கிற.. இன்றைக்கு என்னடான்னா காயத்ரிக்கு தேவையானதை வாங்கிக் கொண்டு வந்து அழகாய் அழகுபடுத்தியிருக்கே.."

மாலினி என்ன சொல்வது என்று தெரியாமல் சிரித்து வைக்க.. அங்கே வந்து எட்டிப் பார்த்த ஸ்வேதாவிற்கு அந்தக் காட்சியைக் காணச் சகிக்க வில்லை..

"அது என்ன அத்தை.. அழகாய் அழகுபடுத்துவது..?" என்று பொறாமையுடன் கேட்டு வைத்தாள்..

"மேக்-அப் பண்ணிக் கொண்டிருப்பதே தெரியாமல் மேக்-அப் பண்ணிக் கொள்வதைத்தான் அப்படிச் சொன்னேன்.. சில பேர் உதட்டுக்குச் சாயம் போட்டு இமைகளில் மஸ்காரா போட்டுன்னு கோரமாய் நிற்பாங்க.. அதுபோல இல்லாமல் அமைதியான முறையில் அழகுபடுத்திக் கொண்டிருப்பதைத்தான் அப்படிச் சொன்னேன்.."

நர்மதாவின் பார்வையில் தெரிந்த செய்தியை ஸ்வேதா புரிந்துகொண்டாள்.. உதட்டுக்கு பளீரிடும் நிறங்களில் லிப்ஸ்டிக் போட்டு இமைகளுக்கு மஸ்காரா போட்டுக் கொள்வது அவளின் வழக்கம்.. அன்றும் அதேபோல நின்றவளைப் பார்த்து அசூசை கண்களில் தெரிய.. வெறுப்புடன் நர்மதா சொல்லவும்.. ஸ்வேதா அவசரமாய் ஏதோ வேலையிருப்பதைப் போல அங்கேயிருந்து ஓடிவிட்டாள்..

மாலினியைப் பார்த்து அன்பாக புன்னகைத்துவிட்டு நர்மதாவும் சென்றுவிட.. காயத்ரிக்கு ஒப்பனையில் ஏதும் குறைவைத்து விட்டோமா என்று ஒருமுறை சரிபார்த்து விட்டு..

"ஓகே.. காயத்ரி.. நானும் போய் டிரஸ் சேன்ஜ் பண்ணிவிட்டு வருகிறேன்.. நீ ஏ.ஸி. ரூமிலேயே இரு.. வெளியே வர வேண்டாம்.." என்று கூறினாள் மாலினி..

காயத்ரி சம்மதமாய் தலையசைக்க.. சசிரேகாவும் மாலினியும் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.. வாசலில் கார்கள் வந்து நிற்கும் சப்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள் சசிரேகா..

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்களா சசி..?" மாலினி வினவினாள்...

"இல்லையில்லை.. இவங்க வேற சொந்தக்காரங்க.. ஆனா.. இவங்களும் நமக்கு நெருங்கிய சொந்தக்காரங்க தான்.."

சசிரேகா என்னவோ இயல்பாகத்தான் இதைச் சொன்னாள்.. ஆனால், அதைக் கேட்டுக் கொண்டே

மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த ஸ்வேதாவின் முகத்தில் ஏளனம் தெரிந்தது..

"என்ன சசிரேகா.. அந்தப் பெண்ணிடம் போய் நம்ம சொந்தம்கிற.. வந்திருக்கிறவங்க என் வீட்டைச் சேர்ந்தவங்க.. என் அப்பா.. பெரியப்பா.. சித்தப்பா.. குடும்பத்து ஆளுங்க.. அவங்க உங்க ரெண்டு பேருக்கும் சொந்தமா..? நீயாவது அடிக்கிற காத்தில் குப்பைமேட்டி லிருந்து பறந்து போய் கோபுரத்தில் ஒட்டிக் கொண்ட காகிதம்.. என் கருணா அத்தானை வளைத்துப் போட்டு கழுத்தை நீட்டிட்ட.. இவள் யார்..?"

மாலினி வாசல் பக்கம் பார்த்தாள்.. வந்திருந்த உறவினர்களை நர்மதா வரவேற்றுக் கொண்டிருக்க.. அவர்கள் அங்கேயே அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டு தேங்கிநின்றனர்.. மாலினி பார்வையைத் திருப்பி ஸ்வேதாவைப் பார்த்தாள்..

"நான் யாருங்கிறது இருக்கட்டும்.. முதலில் நீ யார்..? கல்யாணமாகாத பெண்.. எங்க சசியின் கணவரைப் போய் 'என் கருணா..'ங்கறயே.. உனக்கு கொஞ்சம்கூட வெட்கமாக இல்லையா.. இப்படியா.. அடுத்தவளின் கணவனின் மேல் உரிமை கொண்டாடுவாய்..?"

"மாலினி.."

"உஷ்.. கத்தாதே.. ஏற்கெனவே உனக்கு நான் வார்ன் பண்ணியிருக்கிறேன்.. அதிகமாய் ஆடாதேன்னு.. நீ அடங்க மாட்டேன்கிறாய்.. நீயாய் அடங்கிவிடு.. நான் அடக்கினால் நீ தாங்க மாட்டாய்..."

"எவ்வளவு தைரியம்..."

"இதை நான் உன்னிடம் கேட்க வேண்டும்... எவ்வளவு தைரியமிருந்தால் என் சசியைப் பார்த்து குப்பைமேட்டுக் காகிதம் என்பாய்.. அவளொன்றும் குப்பை மேட்டுக் காகிதம் இல்லை.. அது நீதான்.. உன் மனசெல்லாம் குப்பை.. உன் பேச்செல்லாம் குப்பை.. ஏன் நீயே குப்பைதான்.. ஏய்.. வாடி சசி.. இவள் வீட்டு ஆளுகளைப்

போய் நீ நம் சொந்தம்னு சொன்னாயே.. உன்னைச் சொல்ல வேண்டும். இவளே இப்படின்னா இவள் வீட்டு ஆளுக எப்படியிருப்பாங்க..?"

மாலினி வேகமாய் மாடியேற.. சசிரேகாவும் அந்த வேகத்திற்குக் குறையாதவளாய் அவளைப் பின்தொடர்ந்தாள்..

அவர்கள் மாடியேறுவதைக் கோபத்துடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்த ஸ்வேதா.. மெல்லிய கைதட்டலைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்...

கருணாகரன் லேசாக கை தட்டியவாறு அங்கே வந்தான்... "உன் வீட்டாளுகளுக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்து விட்டாய் ஸ்வேதா... நான் கேட்க வேண்டிய கேள்விகளையெல்லாம் மாலினி கேட்டு விட்டுப் போய்விட்டாள்.. இதற்கு மேலும் நீ வாய் திறந்து பேசலாமா..? கூடாது. ஆனால், நீ அதைச் செய்ய மாட்டாயே.. மாலினியை விட அதிகமாக அம்மா உன்னைத் திட்டியிருக்காங்க.. நீ அடங்கவில்லையே..."

"என்ன அத்தான்.. நேற்று வந்தவளுக்காக பிறந்ததில் இருந்து சொந்தக்காரியாக இருக்கும் என்னைக் கோபித்துக் கொள்கிறீங்களே..."

"சொந்தமா.. எனக்கா.. நீயா..? கிடையவே கிடையாது.. என் பெண்டாட்டிக்கும் அவளுடைய தங்கைக்குமே நீ சொந்தமில்லையெனும் போது நீ மட்டும் எனக்கு எப்படி சொந்தமாவாய்..."

"அவர்களுக்காக என்னை ஒதுக்குவீர்களா..?"

"நிச்சயமாக.. நான் வேறு.. சசி வேறு என்றில்லை.. நீ அவளையே குப்பைமேட்டுக் காகிதம்னு சொன்ன ஆளு.. உன்கூட எனக்கென்ன பேச்சு..?"

"அத்தான்..."

"இந்த அத்தான் பொத்தான்னு உறவு கொண்டாடும் வேலையை வேறு எங்காவது வைத்துக்கொள்.. என்னிடம்

வேண்டாம்.. ஆனால் ஒன்று.. இனி ஒரு தரம் இதுபோல சசியிடம் நீ பேசினால் நான் உன் பல்லைக் கழட்டிவிடுவேன்.. அப்புறம் பேச முடியாமல் நீ பொக்கைவாய்க் கிழவியைப் போல பெப்பெப்பேன்னு தான் அலையணும்.."

ஸ்வேதாவின் வீட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்த போது கருணாகரன் அவர்களைக் கவனிக்காத வனைப் போல அவர்களுக்கு முதுகு காட்டிய வண்ணம் மாடிப்படிகளில் ஏறிவிட்டான்..

"யார்.. கருணா மாப்பிள்ளையா போவது.. எங்களைப் பார்க்கவில்லையா..?" ஸ்வேதாவின் தந்தை மாணிக்க வாசகம் வியப்புடன் வினவினார்...

நர்மதா யோசனையுடன் கருணாகரனின் முதுகைப் பார்த்தாள்.. அவள் அறையில் இருந்தபோது கருணாகரன் தான் வந்து ஸ்வேதாவின் வீட்டு மனிதர்கள் வருவதைச் சொன்னான்.. இப்போது இப்படிப் போகிறான் என்றால் அதில் ஏதோ இருக்க வேண்டும். எதுவும் நடக்காமல் கருணாகரன்.. வீட்டுக்கு வந்திருக்கும் உறவினர்களை அதுவும்.. ஒரே தங்கையின் பெண் பார்க்கும் விசேஷம் நடக்கப் போகும் சமயத்தில் வரவேற்காமல் தவிர்க்க மாட்டான்..

அங்கே நின்றுகொண்டிருந்த ஸ்வேதாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள் நர்மதா.. அவமானத்தில் முகம் மாறி நின்றிருந்தவள்.. அவசரமாகப் புன்னகைக்கவும் அவளுக்கு சந்தேகம் உறுதியாகிவிட்டது..

'இவள்தான் எதையோ பேசித் தொலைத்திருக்கிறாள்..'

நர்மதா எரிச்சலுடன் மாணிக்கவாசகத்தைப் பார்த்தாள். அவரோ மகளைப் பாசத்துடன் பார்த்தபடி..

"எப்படியிருக்கிறாய் ஸ்வேதா.." என்று அன்புடன் கேட்டார்...

"இந்த வீட்டில் எனக்கென்ன குறையிருக்கப் போகுதுப்பா.." ஸ்வேதா பதிலுக்கு பாசத்தைப் பிழிந்தாள்..

யாராவது இந்த உரையாடலைக் கேட்டால் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்ற நினைவேயில்லாமல் தகப்பனும் மகளும் பேசிக் கொள்வதைப் பார்த்த நர்மதாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

என்னவோ.. ஸ்வேதாவை அந்த வீட்டில் மணம் முடித்து கொடுத்திருப்பதைப் போலவும் புகுந்த வீட்டிலிருக்கும் மகளிடம் தகப்பன் நலம் விசாரிக்க.. மகள் அதற்குப் பதில் சொல்வதைப் போலவும் அந்த உரையாடல் இருக்க.. நர்மதா பல்லைக் கடித்தாள்...

நர்மதாவின் முக மாற்றத்தை கண்டு கொண்ட பெரியவர் ஆளவந்தார் புன்னகைத்தார்...

"ஏண்டா மாணிக்கம்.. அத்தை வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கும் உன் பெண்ணிடம் நீ இப்படிக் கேட்பதே தப்பு. அதை விட்டுவிட்டு நீ உன் தங்கையின் முன்னாலேயே ஏடாகூடமாய் கேட்டு வைக்க.. அவளும் உன்னைப் போலவே உளறுகிறாளே.. நாம் எதுக்கு வந்திருக்கிறோமோ அதைப் பார்ப்போம்.." ஆளவந்தார் மகனை அதட்டினார்..

நர்மதா புன்னகையுடன் அவரைப் பார்த்து.. "அதனால் என்ன பெரியப்பா.. அண்ணன் யதார்த்தமாக கேட்கிறார்.." என்று ஒரு பேச்சுக்காக சொன்னாள்..

"அப்படியில்லையம்மா.. ஸ்வேதா கல்யாணமாகாத பெண்.. அவளை இத்தனை மாதங்களாய்.. ஏன் வருஷக் கணக்கில் உன் வீட்டில் விட்டு வைப்பதே தவறு.." ஆளவந்தார் ஏதோ சொல்ல வர.. ஸ்வேதா அவசரமாக இடைமறித்தாள்...

"இது என்ன தாத்தா இப்படிச் சொல்றீங்க.. இது யார் வீடு? என் அத்தையின் வீடு.. காலமெல்லாம் இங்கேயிருக்க எனக்கு உரிமையிருக்கு.."

"ஸ்ஸ்.. பெரியவங்க பேசும்போது குறுக்கே பேசக் கூடாது ஸ்வேதா.. நீ மட்டும்தான் நம் குடும்பத்தில் இப்படியிருக்கிறாய்.. உன் பெரியப்பா மகளும் சித்தப்பா மகளும் இப்படியா இருக்கிறாங்க..? அவங்க எப்படி அமைதியாய்.. சொல் பேச்சு கேட்டு இருக்கிறாங்க..?

அடுத்தவர் வீட்டுக்கு.. அவங்க என்னதான் நெருங்கிய சொந்தமாக இருந்தாலும்.. தனியே போய் இருப்பது தவறுதான்ம்மா.. அவங்க இரண்டு பேரும் பெத்தவங்க இல்லாம எங்கேயும் போக மாட்டாங்க.. அடுத்தவங்க வீட்டுக்குப் போனால் ஒரு மணி நேரம்கூட அங்கே நிற்க மாட்டாங்க.. நீ வருஷக்கணக்காக என் தம்பி மகள் வீட்டில் இருக்கிற.. உனக்கு மட்டுமா இது அத்தையின் வீடு..? உன் பெரியப்பா மகளுக்கும் சித்தப்பா மகளுக்கும் இதுதான் அத்தையின் வீடு. அவங்க உன்னைப் போலவா நடந்துக்கிறாங்க..?"

ஆளவந்தாரின் பேச்சைக் கேட்ட மாணிக்கவாசகம் கோபத்துடன் அண்ணன் தம்பிகளை முறைத்தார்..

## 44

**இதழ்வரை வரும் வார்த்தையை...**

**இதயத்துக்குள் புதைத்திடும் நாணத்தை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

நர்மதாவின் பெரியப்பா ஆளவந்தாருக்கு மூன்று மகன்கள்.. மூத்தவர் மணிவாசகம்.. அவருக்கு ரகுபதி, ராதிகா என்று இரு பிள்ளைகள். இருவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. அடுத்தவர் மாணிக்கவாசகத்திற்கு சுவாதி.. ஸ்வேதா.. சுதர்சனம் என்று மூன்று பிள்ளைகள். மூத்தவள் சுவாதிக்கு மட்டும் திருமணமாகி விட்டது.. அடுத்தவளான ஸ்வேதாவை கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் கொடுத்து விட வேண்டும் என்பது மாணிக்கவாசகத்தின் நீண்டநாள் கனவு.. அவளுடைய சித்தப்பாவின் மகள் நர்மதாவை கோட்டையூர் ஜமீன்தார் கார்த்திகேயன் மணந்திருந்ததால்.. அவருடைய மனதின் ஆசை நிறைவேறிவிடும் என்று நிச்சயமாக

நம்பியிருந்தார்.. அதனால் சிறுவயதிலேயே ஸ்வேதாவிற்கு அதைச் சொல்லிச் சொல்லி வளர்த்து வந்தார்...

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பது பழமொழி. இங்கேயோ மாணிக்கவாசகத்தின் மனைவி பரிமளம்.. ஒரு வாயில்லாத பூச்சி.. ஏதோ அவளால் ஆனதாக அவள் பெற்ற மூன்று பிள்ளைகளில் மூத்தவள் சுவாதியையும் கடைசிப் பையன் சுதர்சனத்தையும் நற்குணங்களுடன் வளர்த்துவிட்டாள்.. ஸ்வேதா மட்டும் தகப்பனின் வளர்ப்பாகவும் வார்ப்பாகவும் போய்விட்டதால் மாணிக்கவாசகம் எட்டடி பாயச் சொன்னால் இவள் எண்பது அடி பாய்ந்தாள்...

கருணாகரனின் மேல் கண் வைத்திருந்தவள்.. அவனுக்குத் திருமணம் முடிந்த செய்தியை அறிந்ததும் யோசிக்க ஆரம்பித்து விட்டாள்...

"அப்பா.. மயிலே மயிலேன்னா இறகைப் போடாது.. நாமதான் இறகைப் பிடுங்கணும்.."

"அதுக்காக இறக்கையையே வெட்டிச் சாய்த்துவிடா தேம்மா..."

"மீதமிருக்கும் இரண்டு பேரில் எவனாவது ஒருத்தன் எனக்குக் கிடைக்க வேண்டும். கிடைக்காவிட்டால் அதைத் தான் நான் செய்வேன்.."

ஸ்வேதா.. தன் பெட்டிகளோடு மார்த்தாண்டம் வந்து இறங்கிவிட்டாள்...

"இரண்டு நாள்களாக என் மகள் கனவில் நீதான் வருகிறாயாம் நர்மதா.. 'அத்தை.. அத்தை'ன்னு புலம்பினாள்.. அதுதான் உன்கிட்டேயே கொண்டு வந்து விட்டுவிட்டேன்.." என்று மாணிக்கவாசகமே நேரில் வந்து சொல்லி மகளை விட்டு விட்டுப் போகும்போது.. நர்மதாவினால் மறுப்புச் சொல்ல முடியாமல் போய்விட்டது..

"என்ன அம்மா.. இது..?" என்று ஆட்சேபணைக் குரல் எழுப்பிய பிரபாகரனிடம்...

"என்னை.. என்ன செய்யச் சொல்கிறாய் பிரபா... எனக்கு கூடப் பிறந்தவங்க யாரும் இல்லை. வீட்டுக்கு ஒற்றைப் பெண்ணாகப் போய்விட்டேன்.. பெரியப்பாவிற்கு பெண்குழந்தை இல்லை.. என்னைத்தான் பெத்த பெண்ணாக அவர் நினைக்கிறார்.. எனக்கு பிறந்த வீட்டுச் சொத்து முழுவதும் வந்தாலும் இன்றைக்கும் உங்களுக்கு செய்ய வேண்டிய தாய்மாமன் சீர்.. என் பெரியப்பா பெற்ற மகன்களிடமிருந்துதானே வருகிறது...? என்னால் எப்படி அவரிடம் முகம் முறித்துப் பேச முடியும்..?" என்று நர்மதா கெஞ்சுதலாக கூறிவிட்டாள்...

"ஆனால் அம்மா.. ஸ்வேதாவின் மனதில் வேறு ஆசை இருக்கிறதே..."

"அதற்கு நாம் என்ன செய்ய முடியும் பிரபா..? கருணாவைக் கட்டிக் கொள்ளத்தான் ஸ்வேதா ஆசைப் பட்டாள்.. கருணாவின் கல்யாணம் முடிந்த பின்னால் உன்னையும் தினாவையும் கை காட்டுகிறாள்.. அவளை என்ன செய்வது.. எப்படி கருணாவின் காதலை நான் மதித்தேனோ அதைப் போலவே உன் விருப்பத்தையும் தினாவின் விருப்பத்தையும் நான் மதிப்பேன்.. என் பிள்ளைகளின் மனதிற்கு மாறாக எதையும் செய்ய மாட்டேன்..."

நர்மதா ஆணித்தரமாக கூறிவிடவும்.. பிரபாகரன் அமைதியாகி விட்டான்...

ஸ்வேதாவும் வருடக் கணக்கில் அங்கே தங்கி எப்படி யெல்லாமோ முயற்சி செய்து பார்த்தாள்.. ஆனால்.. அவளால் பிரபாகரனின் மனத்தையும் தினகரனின் மனத்தையும் வசப்படுத்த முடியவில்லை.. மாறாக.. அவர்கள் இருவருக்கும் இவள் மேல் வெறுப்புதான் அதிகமாகியது..

அதிலும் தினகரன்.. நேருக்கு நேராகவே ஸ்வேதாவை திட்டிப் பேசிவிடுவான்.. ஆனாலும்.. அதையெல்லாம் அவள் கண்டுகொள்ளவே மாட்டாள்..

பிரபாகரன்.. யாராலும் அணுக முடியாத இரும்புப் பிறவி.. அதனால் ஸ்வேதாவினால் அவனிடம் நெருங்க

முடியவில்லை...

கருணாகரனின் குடும்ப வாழ்க்கையில் குழப்பம் விளைவிக்கலாம் என்ற நல்ல எண்ணத்துடன் அவனிடம் பழக முயன்றால்.. அவன் அக்கினிப் பார்வையுடன் ஒதுங்கிப் போய்விட்டான்..

செய்வதறியாமல் கையைப் பிசைந்துகொண்டு ஸ்வேதா இருந்தபோது அவளது மனக்கோட்டையை மண்கோட்டையாக்க மாலினி அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்துவிட்டாள்..

ஆளவந்தாரின் இளைய மகன் வாசவன் பெற்றதும் முத்தாக மூன்று பிள்ளைகள்தான் மாணிக்கவாசகத்திற்கு மூத்தது இரண்டும் பெண் என்றால்.. வாசவனுக்கு மூத்தது இரண்டும் பையன்கள்.. மூத்தவன் ரவீந்திரன்.. அடுத்தவன் சுசீந்திரன்.. அவர்கள் இருவருக்கும்

அடுத்து குடும்பத்தில் கடைக்குட்டியாக பிறந்தவள்தான் பவித்ரா.. தாய் ராஜேஸ்வரிக்கும் தந்தை வாசவனுக்கும் செல்லப் பெண்.. அமைதியானவள்.. அடக்கமானவள்.. அழகானவள்.. பண்பானவள்...

நர்மதாவிற்கு தன் பெரியப்பாவின் பேத்திகளில் பவித்ராவைத்தான் மிகவும் பிடிக்கும்.. அந்த ஒரு காரணத்துக்காகவே ஸ்வேதாவிற்கு பவித்ராவைக் கண்டால் ஆகாது...

இன்றைக்கும் அதைப்போல ஆளவந்தார்.. ஸ்வேதாவையும் மாணிக்கவாசகத்தையும் கடிந்து கொண்டிருந்த போது பவித்ரா குனிந்து நர்மதாவின் பாதம் தொட்டு வணங்கினாள்..

"நல்லாயிரும்மா.." நர்மதா கனிவுடன் அவளை எழுப்பி அணைத்துக் கொண்டாள்...

அதைக் கண்ட ஸ்வேதாவிற்கு வழக்கம் பேல மேனியெல்லாம் மிளகாயை அப்பியதைப் போல எரிய ஆரம்பித்து விட்டது..

'வித்தாரக் கள்ளி...' மனதிற்குள் பவித்ராவைத் திட்டியபடி மாணிக்கவாசகத்தைப் பார்த்தாள்...

அவருடைய முகமும் இறுகியிருந்தது.. தம்பியின் மகளிடம் இயல்பாகத் தென்படும் இதுபோன்ற பழக்கங்கள் ஸ்வேதாவிடம் ஏன் இல்லை என்று அவர் மனதிற்குள் ஸ்வேதாவின் மேல் கோபம் கொண்டார்...

ஸ்வேதாவிடம் இதைச் சொல்லக்கூட வேண்டிய தில்லை.. லேசாக கண் ஜாடை காட்டினாலே போதும்.. அவள் அதைச் செய்துவிடுவாள்.. ஆனால்.. அதில் இயல்பிருக்காது. படு செயற்கைத்தனமாக இருக்கும் என்பதால் மனதிற்குள் வாசவனின் அதிர்ஷ்டத்தை எண்ணி பொறாமைப்பட்டுக் கொண்டார் மாணிக்கவாசகம்...

"எப்படியிருக்கிற பவித்ரா..?" அன்புடன் விசாரித்தாள் நர்மதா...

"நல்லாயிருக்கேன் அத்தை.. காயத்ரி எங்கே..?" பவித்ரா ஆவலுடன் வினவினாள்...

"ம்ஹூம்.. நீ வெளியூரிலிருந்து வந்திருக்கிறாய்.. உனக்கு காயத்ரியைத் தேட வேண்டும் என்று தோன்றுகிறது.. உன் அக்கா இந்த வீட்டில்தான் விருந்தாளியாக இருக்கிறாள்.. அவளுக்கு காயத்ரியைத் தேட வேண்டும் என்று தோன்ற வில்லை. காயத்ரி.. அதோ அந்த ரூமில்தான் இருக்கிறாள்ம்மா.. போ.. போய்ப் பாரு.." நர்மதா கை காட்டினாள்..

ஸ்வேதாவின் முகம் சுருங்கிவிட்டது.. அவள் காயத்ரியை கண்டுகொள்ளவில்லை என்பதை இப்படி எல்லோரின் முன்னாலும் நர்மதா போட்டு உடைத்து விட்டாளே என்று அவள் மனதிற்குள் வெகுண்டாள்...

அவளும்தான் என்ன செய்வாள்.. அந்த வீட்டு ஆண்மக்களின் பின்னால் அலைவதற்கே அவளுக்கு நேரம் சரியாக இருக்கிறபோது காயத்ரியின் அருகே போய் உட்கார அவளுக்கு ஏது நேரம்..?

"ஏம்மா.. ஸ்வேதா.. அத்தை இப்படிச் சொல்கிறதைப் போலவா வைத்துக் கொள்கிறது.. காயத்ரியைப் பார்த்துக் கொள்வது உன் கடமையில்லையா..?" மாணிக்கவாசகம் ஆரம்பித்தார்...

"நான் உங்கள் மகள் அப்பா. ஒருபோதும் கடமையிலிருந்து தவறவே மாட்டேன்.. இன்றைக்கு லேசாய் தலைவலி.. அதனால்தான் காயத்ரியைக் கவனிக்க முடியவில்லை..." ஸ்வேதா தகப்பனாரின் பாணியிலேயே பதில் சொன்னாள்...

அதற்கு மேல் அந்த நாடகத்தை சகித்துக் கொள்ள முடியாத நர்மதா..

"நிற்கறீங்களே பெரியப்பா.. உட்காருங்க.. பெரியம்மா.. உங்க கால் வலி இப்போது தேவலாமா.. பெரியண்ணி சுவாதி எப்படியிருக்கிறதா...? சுதர்சன் வளர்ந்துவிட்டானே.. சின்ன அண்ணி.. ரவியும் சுசியும் வரவில்லையா..? பரிமளா அண்ணி ஏன் அமைதியாய் நிற்கிறாங்க.." என்று பேசியபடி அனைவரையும் ஹாலுக்கு அழைத்துச் சென்றுவிட்டாள்...

தங்களின் பேச்சை கண்டுகொள்ளாமல் நகர்ந்து விட்ட நர்மதாவின் முதுகைக் கோபத்துடன்

வெறித்துப் பார்த்தபடி அசையாமல் நின்ற மாணிக்கவாசகமும் ஸ்வேதாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"இந்தக் கிழவி பேசுவதைக் கேட்டீங்களாப்பா.."

"ஸ்ஸ்.. சத்தமாய் பேசி வைக்காதே ஸ்வேதா.. யாருக்காவது கேட்டுவிடப் போகிறது.."

"கேட்டால் கேட்கட்டும்.. நான் பார்த்தாலும் பார்த்தேன்.. இந்தக் கிழவியைப் போல் அழிச்சாட்டியம் பண்ணும் பொம்பளையைப் பார்த்ததேயில்லை..."

"கோட்டையூர் ஜமீன்தாரிணிம்மா..! அந்தத் திமிர்.."

"எல்லாம் நான் இந்த வீட்டில் மருமகளாக காலடி எடுத்து வைக்கும் வரையில்தான்! அதற்குப் பின்னால் பாருங்க..

இந்தம்மாவைத் தூக்கி மூலையில் போட்டு விடுகிறேன்.."

"அதற்கு முன்னால் நர்மதா உன்னைத் தூக்கி வெளியில் போட்டுவிடக்கூடாது என்பதுதான் என் கவலை.."

"அது தூக்கிப் போட்டால் உடனே நான் வெளியே போய் விழுந்து விடுகிற ஆளா.. அதன் கையை இறுக்கிப் பிடித்துக் கடிச்சுக் குதறிட மாட்டேன்..?"

ஸ்வேதாவின் குரலில் இப்போதே அந்தக் காரியத்தைச் செய்துவிட வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது...

"அடக்கி வாசிம்மா.. நீ இப்ப இந்த வீட்டில் வெறும் விருந்தாளி மட்டும்தான்.. பவித்ராவைப் பற்றி உன் அத்தை பேசுவதைக் கேட்டாய்தானே..."

"ஆமாம்ப்பா.. பவித்ராவைவிட.. நான் நான்கு வயதுதான் மூத்தவள்.. என்னை என்னவோ நூற்றுக் கிழவியாக்கி பவித்ராவிடம் உன் அக்கா.. உன் அக்கான்னு பழமை பேசுதே இந்தக் கிழவி..."

'நீ அதிலேயே இரு..' என்று மனதிற்குள் எரிச்சல் பட்டார் மாணிக்கவாசகம்...

அவர் சொல்வதைக் கொஞ்சமாவது இந்தப் பெண் புரிந்து கொள்கிறதா என்று இருந்தது அவருக்கு..

பவித்ராவின் அருமையை நர்மதா கவனிக்க ஆரம்பித்து விட்டாள்.. இது நன்மைக்கான அறிகுறியல்ல.. எப்போதுமே அடக்கம்.. பண்பாடு என்று பேசி வைக்கும் நர்மதாவின் பார்வை பவித்ராவின் மீது படிந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை அவருக்குள் துளிர் விட்டது...

## 45

**உறங்குகின்ற போதும்..**

**உன் உருவம் மறையாத நிலையை..**

என்னவென்று நான் சொல்ல..?

முகம் கழுவி உடை மாற்றிக் கொண்ட மாலினி.. லேசான ஒப்பனைகளை செய்து முடித்தபின் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்…

இன்றைய தினத்தின் கதாநாயகி காயத்ரிதான் என்பதால் பட்டுப் புடவையை தவிர்த்திருந்தாள்.. இருக்கிற வீடு பணக்காரத்தனம் நிறைந்தது என்பதால் சாதாரண புடவைகளையும் தவிர்த்திருந்தாள்..

ஆகாய நீலத்தில்.. வெண்மை நிறத்தில்.. பொடிப் பொடியாய் கற்கள் பதிக்கப்பட்ட பிரிண்டட் சேலை… அந்தச் சேலையிலேயே வெட்டித் தைக்கப்பட்ட ஜாக்கெட்டின் கையோரமாக சிறு கற்கள் நெருக்கமாகவும் வரிசையாகவும் பதிக்கப்பட்டிருந்தன.. தளர்வாகப் பின்னிய பின்னலின் நுனியில் ஹேர் பாண்டு.. மார்த்தாண்டம் வந்த பின்னால் வெட்டப்படாத தலைமுடி.. அடர்ந்து நீண்டு வளர்ந்து அழகான பின்னலாக மாலினியின் இடுப்பைத் தாண்டித் தொங்கியது..

சேலையில் பதிக்கப்பட்டிருந்த வெண்மை நிறக்கற்களுக்குப் பொருத்தமாக வெண்ணிறக் கல் அட்டிகையைப் போட்டு வெண்ணிற கற்கள் பதித்த புதுவகைமாடல் காதணிகளை அணிந்துகொண்டாள் மாலினி…

அவளுக்கும் சசிரேகாவுக்கும் என்று பிரத்தியேகமாகக் கட்டியதாகச் சொல்லி செந்தாமரை வந்து கொடுத்து விட்டுப்போன நெருக்கிக் கட்டப்பட்ட மல்லிகை மொட்டுக்களின் சரத்தை நீளமாக இரண்டாக மடித்து தலையில் பின் பண்ணிக் கொண்டாள்…

நெற்றியில் மெரூன் நிறப் பொட்டின் மையத்தில் வெள்ளைக் கல் பதிக்கப்பட்டிருந்தது.. லேசாக மையிட்டதே தெரியாமல் மையிடப்பட்ட கண்கள்…

வரிசையான முத்து வளையல்களை தங்க வளையல் களுடன் கலந்து இரு கைகளிலும் அடுக்கிக் கொண்ட பின்னால் கண்ணாடியைப் பார்த்த மாலினி.. தன் அழகைக் கண்டு லேசாக சிரித்துக் கொண்டாள்...

எவ்வளவுதான் குறைவாக ஒப்பனை செய்தாலும் இயற்கை அழகை எப்படி மறைக்க முடியும்..?

மாலினி அறையை விட்டு வெளியே வந்தபோது எதிரே வந்த பிரபாகரனின் கண்கள் மின்னின..

அவன்.. "வாவ்.." என்றான்...

மாலினியின் முகம் சிவந்துவிட்டது.. அவள் மிகச் சாதாரண உடையில் வந்தாலும் இவன் இப்படித்தான் சொல்வான் என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

"உனக்கொரு பழைய பாட்டுத் தெரியுமா..?" என்று கேட்டவன்.. எதையோ நினைத்துக் கொண்டவனாக..

"இந்தக் கேள்வியைப் போய் உன்னிடம் கேட்கிறேனே.. அன்றைக்கே நீ ஒரு பழைய பாட்டைப் பாடியவளாச்சே.." என்று சொன்னான்...

"இப்ப அதுக்கு என்ன பண்ணணும்கிறீங்க... காயத்ரிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பழைய பாட்டைப் பாடி மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை கலவரப் படுத்தச் சொல்கிறீங்களா..?"

"நோ.. நோ.. இது வேற..."

"என்னவாம்..?"

"ஆயிரம் கைகள் மறைத்தாலும்.. ஆதவன் மறைவ தில்லைன்னு ஒரு பாட்டு..."

"அழகான பாட்டுல்ல அது.. எம்.ஜி.ஆர்.. படப்பாட்டு.."

"அது எனக்குத் தெரியாது..."

"வேறு எதுதான் தெரியும்..?"

"நீ என்னதான் குறைவாக அலங்காரம் பண்ணிக் கொண்டாலும் உன் அழகு குறைவதில்லை..."

பிரபாகரன் அவளை விழுங்கிவிடுவதைப் போலப் பார்த்துக் கொண்டு ரசனையாய் கூற... மாலினிக்கு ஜிவ்வென்று ஆகிவிட்டது.. அவள் முகம் சிவந்து போனாள்...

"மாலினி..."

"ம்ம்ம்..."

பிரபாகரன் எதையோ சொல்லத் துடித்தான்.. அவனது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று மாலினியை வசப்படுத்தியது.. அவள் நகர முடியாமல் நின்றாள்.. அந்தச் சமயம் பார்த்து மாடிப்படியில் காலடியோசைகள் கேட்டன.. பலகுரல்கள் சேர்ந்த கலவையொலி காற்றில் மிதந்து வந்து அவர்களின் காதுகளில் நுழைந்தது...

ஒரு பெருமூச்சுடன் பிரபாகரன் வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்.. மாலினி தன்னுணர்வு வரப் பெற்றவளாக மாடிப்படியை நோக்கினாள்..

நர்மதாவின் உறவினர் வட்டாரத்தில் இளம் பெண்கள் செட்டாக வந்து கொண்டிருந்தனர்.. அவளைக் கண்டதும் அவர்கள் கேள்வியோடு அவளைப் பார்த்து விட்டுத் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர்...

அறிமுகமில்லாத பெண்களிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்ற யோசனையுடன் அவர்களைப் பார்த்த மாலினி லேசாகப் புன்னகைத்ததாள்...

பதிலுக்கு அவர்கள் மலர்ந்து சிரிக்கவும்...

"ஹாய்.. ஐ ஆம் மாலினி.. சசிரேகாவின் சிஸ்டர்.. சென்னையிலிருந்து வந்திருக்கிறேன்.." என்று சொன்னாள்..

"ஓ.. நீங்கதான் அந்த இன்ஜினீயரா..." அவர்களில் ஒரு இளம்பெண் சட்டென்று சொல்லவும்.. கூட இருந்த மற்றொரு பெண் வியப்புடன் சொன்னவளைப் பார்த்தாள்..

"உனக்கெப்படி அஞ்சலி இது தெரியும்..?"

"ஸ்வேதா சொன்னாள்.."

"உன்னோடு ஒரு நிமிஷம்தானே பேசியிருப்பாள்..."

"அந்த ஒரு நிமிஷம் பூராவும் இவங்க புராணம் தான்.." என்று சிரித்த அஞ்சலி...

"பட்.. அவ சொன்னதற்கும் உங்களை நேரில் பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசமிருக்கே.." என்று மாலினியைப் பார்த்து கண் சிமிட்டினாள்..

ஸ்வேதா என்ன சொன்னாள் என்று மாலினி, அஞ்சலியிடம் கேட்கவில்லை... அவள் நிச்சயம் நல்லவிதமாகச் சொல்லியிருக்கப் போவதில்லை என்பது மாலினிக்கே தெரியுமே...

எனவே.. லேசாக தோளைக் குலுக்கியபடி அங்கே யிருந்து நகரப் போனாள் மாலினி.. அஞ்சலியிடம் கேள்வி கேட்டவள் இப்போது மாலினியைப் பார்த்து...

"ஐ ஆம் ஸாரி..." என்றாள்...

"நீ எதுக்கு என்னிடம் ஸாரி கேட்கிறாய்..?" வியப்புடன் கேட்டாள் மாலினி...

"நான் ஸ்வேதாவின் தங்கை.. அவள் செய்த தப்பிற்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.." என்று பவ்யமாய் பதில் சொன்னாள் அவள்..

'இதைப் பாருடா.. அப்பேர்ப்பட்ட வில்லிக்கு இப்பேர்ப்பட்ட தங்கையா..?' ஆச்சரியப்பட்டுப் போன மாலினி நினைத்ததை முகத்தில் காட்டிவிட...

"இவ ஒண்ணும் ஸ்வேதாவின் கூடப் பிறந்த தங்கையில்லைங்க.." என்றாள் அஞ்சலி...

"ஈஸிட்..?"

"ஆமாம்.. இவ ஸ்வேதாவின் சித்தப்பாவின் மகள்.. பவித்ரா..."

'எவ்வளவு பொருத்தமான பெயர் இவளுக்கு..' என்று மாலினிக்கு தோன்றியது...

பவித்ரா... பவித்ரமானவள்.. பெயருக்கேற்றபடி முகத்தில் அமைதியையும் அடக்கத்தையும் வெளிப்படுத்திக் கொண்டு அவள் நின்றிருந்தாள்..

ஸ்வேதாவுக்கு நேர்எதிரிடையான குணாதிசயம் கொண்டவள் என்று தோன்றியதாலோ என்னவோ மாலினிக்கு அவளை மிகவும் பிடித்துப் போய்விட்டது.. அவளைப் பார்த்து மிகவும் சிநேகிதமாய் சிரித்து வைத்தாள்...

"என்ன படித்திருக்கிறாய் பவித்ரா..?"

"எம்ஸிஏ..."

"வேலைக்குப் போகவில்லையா..?"

"இல்லை.."

"ஏன்..?"

"என் வீட்டில் ஏனோ அதை விரும்பவில்லை..."

பவித்ரா வெள்ளையாக சிரித்தாள்.. இப்படிப்பட்ட சிரிப்பை ஸ்வேதாவின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் சிரிக்கிறாள் என்றால் அது ஆச்சரியமான விஷயம்தான் என்று நினைத்துக் கொண்டாள் மாலினி...

"மாலினி.." என்று அழைத்தபடி அங்கே வந்தாள் சசிரேகா...

அந்த வீட்டின் சின்ன மருமகள் என்ற முறையில் விலையுயர்ந்த பட்டுச் சேலையையும் வைர நகைகளையும் அணிந்து ஜொலித்துக் கொண்டிருந்த சசிரேகாவை கொஞ்சம்கூடப் பொறாமை கலக்காத பார்வையுடன் ரசித்தாள் மாலினி...

"யூ லுக் வெரி பியூட்டிஃபுல் சசி..." என்று மனமாரப் பாராட்ட வேறு செய்தாள்...

அதைக் கேட்ட சசி...

"கேலி பண்ணாதேடி.." என்றவாறு அங்கிருந்தவர் களிடம் நலம் விசாரிக்க ஆரம்பித்தாள்...

பரஸ்பர நல விசாரிப்பிற்கு பின்னால் மாலினியுடன் பேசியவாறு கீழே சென்றாள் சசிரேகா...

"ஏதாவது சாப்பிட்டாயா காயத்ரி.." மாலினி, காயத்ரிக்கு ஒப்பனையை சரிசெய்தவாறு கேட்டாள்..

"ஊஹூம்.." என்றாள் அவள்...

"ஏன்.. ஜூஸ் சாப்பிட வேண்டியதுதானே..."

மாலினி.. செந்தாமரையை அழைத்து ஜூஸ் கொண்டு வரச் சொல்லும்போது.. பவித்ரா உள்ளே வந்தாள்..

"காயத்ரிக்கு நீங்கதான் மேக்அப் பண்ணி விட்டீங்களா..?"

"ஆமாம்..."

"ரொம்ப அழகாயிருக்கு..."

"தேங்க்ஸ்..."

மாப்பிள்ளை வீட்டார் வந்துவிட.. அவசரமாக சசிரேகா கணவனின் அருகில் நிற்பதற்காக ஹாலுக்கு விரைந்தாள்...

"மாலு.. காயத்ரியைப் பார்த்துக்க.. பக்கத்திலேயே இரு..."

"டோண்ட் வொர்ரி.. நான் பார்த்துக்கறேன்..."

"நான் அத்தையுடன் சேர்ந்து, வருகிறவங்களை இன்வைட் பண்ணணும் மாலினி..."

"நீ போடி..."

அந்தச் சகோதரிகளின் அக்கறையைக் கண்டு பவித்ரா ஆச்சரியப்பட்டாள்...

"உன் அண்ணி உன்மேல் பிரியமா இருக்கிறாங்க.. சரி.. இவங்களும் உன் மேல இத்தனை ப்ரியமா இருக்காங்களே.. எனக்கு உன்னைப் பார்த்தால்

பொறாமையாய் இருக்கு காயத்ரி.. எனக்கு உன்னைப் போல அண்ணி கிடைக்கவில்லையே..."

"சத்தம் போடாதேடி.. உன் அண்ணிகளின் காதில் விழுந்துவிட்டால் வம்பு..."

"அதைச் சொல்லு.."

அவர்களின் பேச்சைக் கேட்ட மாலினிக்கு சிரிப்புத் தான் வந்தது.. நாத்தனாரிடம் நல்ல பெயர் வாங்கியிருக்கும் தன் ஒன்றுவிட்ட சகோதரியை நினைத்து பெருமையாகவும் இருந்தது...

"மாலினி.. காயத்ரியைக் கூப்பிட்டுக் கொண்டு வர சொல்கிறாங்க..."

சசிரேகா பரபரப்புடன் வந்தாள்.. அது நேரம் வரை சிரித்த முகத்துடன் பேசிக்கொண்டிருந்த காயத்ரி.. பதட்ட முகத்துடன் மாலினியை ஏறிட்டுப் பார்த்தாள்..

மாலினியின் கையை இறுக்கிப் பிடித்திருந்த அவளின் கை நடுங்குவதை மாலினியால் உணர முடிந்தது...

46

**இமையோரம் குடியிருந்து...**

**இம்சை செய்யும் உன் நினைவை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஏறக்குறைய மாலினியின் வயதுதான் காயத்ரிக்கும் இருக்கும்.. மாலினியைவிட ஒரு வயது இளையவள் என்று சசிரேகா சொல்லியிருந்தது இப்போது மாலினியின் நினைவுக்கு வந்தது...

மாலினியால் காயத்ரியின் பயத்தை புரிந்துகொள்ள முடிந்தது.. இது பெண்களுக்கே உரித்தான பிரத்தியேக உணர்வு என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

இந்த பயம்.. இந்தப் பதற்றம்.. இந்த நாணம்.. இந்த நடுக்கம்.. இந்த படபடப்பு.. இந்த பரிதவிப்பு.. இந்தக் கலக்கம்.. இவை யாவுமே ஒரு வகையில் பிற்காலத்தில் நினைத்துப் பார்க்கும்போது தித்திப்பைக் கொடுக்கத்தான் செய்யும்.. இன்று அந்த உணர்வுகளை அறிந்து கொண்டு அனுபவபூர்வமாக உணரும் தருணம் காயத்ரிக்கு வாய்த்திருக்கிறது..

மாலினி, காயத்ரியின் கையைப் பற்றி மெதுவாக அழுத்திக் கொடுத்தாள்...

"நான் உன் பக்கத்திலேயே இருப்பேன் காயத்ரி.."

"படபடன்னு இருக்கு மாலினி.."

இதற்கு என்ன பதிலை மாலினியால் சொல்ல முடியும்.. காலம் காலமாக ஏன் இதுபோன்ற முறையில் பெண் பார்க்கும் படலம் நடத்தப்படுகின்றது என்று அவளுக்குமே புரியத்தான் இல்லை..

எல்லோரும் சபையில் அமர்ந்திருக்க.. அவர்களுக்கு முன்னால் காட்சிப் பொருள் போல பெண்ணைக் கொண்டு போய் நிறுத்தினால் அவள்தான் பாவம் என்ன செய்வாள்..?

எல்லோரின் பார்வையும் தன் மேல் பதிந்திருக்கும் உணர்வில் அவளுக்கு கை நடுங்காதா..?

ஒரு நொடி.. பெண் பார்ப்பதற்கு பதில் மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை நடத்தினால் எப்படியிருக்கும் என்று மாலினி நினைத்துப் பார்த்தாள்...

காயத்ரி.. மாலினி.. அஞ்சலி என எல்லோரும் சபையில் அமர்ந்திருக்கிறார்கள்.. மாப்பிள்ளை குனிந்த தலையுடன் மெதுவாக வருகிறான்.. அவனுக்கு துணையாக ஒரு பக்கம் பிரபாகரனும் மறுபக்கம் தினகரனும் வருகிறார்கள்..

இந்த நினைவு சிரிப்பைக் கொடுக்க.. தன்னையறியாமல் வாய்விட்டுச் சிரித்துவிட்டாள் மாலினி.. அவள் எதற்காக அப்படி வாய்பொத்திச் சிரிக்கிறாள் என்று புரியாமல் காயத்ரி விழிக்க.. தன் கற்பனையை அவளது காதோடு சொன்னாள்..

இப்போது காயத்ரி வாய் பொத்தி சிரிக்க.. அஞ்சலியும் பவித்ராவும் ஆர்வமாக அவர்களுக்கு அருகில் வந்தார்கள்..

"என்ன காயு.. எனக்கும் சொல்லேன்.."

தகவல் காயத்ரியிடமிருந்து பவித்ராவின் செவிக்குள் நுழைந்தது.. அவளிடமிருந்து அஞ்சலியின் செவிக்கு நுழைந்தது..

இப்போது சிரிப்பது அவர்களின் முறையாகிப் போக..

"போதும் சிரித்தது.." என்று சசிரேகா அவர்களை அடக்கினாள்...

"நீ கொஞ்ச நேரம் வாயைத் திறக்காதே மாலினி.."

"எதுக்குடி எனக்கு 'தடா' போடுற..?"

"நீ வாயைத் திறந்தாலே வில்லங்கம்தான்.."

"அப்படி என்ன வில்லங்கத்தை இப்ப நீ கண்டு விட்ட..?"

"ஏண்டி.. அங்கே பெண்ணை அழைச்சுக்கிட்டு வரச்சொல்லிவிட்டு எல்லோரும் காத்திருக்கிறாங்க.. இங்கே நீ பெண்ணுக்கு சிரிப்பு மூட்டிக்கிட்டு இருக்கிற.. ஜோக்கடிக்கிற நேரமாடி இது..?"

"அதுவும் சரிதான்.. காயத்ரி.. எதுக்கும் சிரிக்க வேண்டியதையெல்லாம் இங்கேயே சிரித்துவிட்டு ஹாலுக்குப் போம்மா.. நீ பாட்டுக்கு சிரிப்பை அடக்கிக் கொண்டு ஹாலுக்கு வந்து நின்னேன்னு வை.. மாப்பிள்ளை உன்னைப் பார்க்கும்போது நீ வெட்கப்பட்டுக் கொண்டு தலையைக் குனியாமல் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பித்து விடுவாய்.. அப்புறம் கதையே மாறிவிடும்.." என்று சிரிக்காமல் சொன்னாள் மாலினி..

"இவ சொல்றது போல செய்துவிடாதே காயத்ரி.." சசிரேகா பயந்து போனாள்..

"இல்லை அண்ணி.. நான் அங்கே வந்து சிரிக்க மாட்டேன்..." என்று காயத்ரி பலமுறை உத்தரவாதம் கொடுத்த பின்பே ஒரு வழியாக சசிரேகா சமாதானம் ஆனாள்...

மாலினியின் துடுக்குத்தனம் அஞ்சலியைக் கவர்ந்து விட்டது...

"அட்டகாசம் பண்றீங்க போங்க.. விட்டிருந்தால் உங்க சிஸ்டர் அழுதிருப்பாங்க.. இப்படிக் கலாட்டா பண்றீங்களே..." என்று மாலினியிடம் வியந்தாள்..

"ஆல்ரெடி அவள் பலமுறை அழுதிருக்கிறாள்..."

"அதுதானே பார்த்தேன்.."

அவர்கள் காயத்ரியின் பின்னால் வர.. காயத்ரியை தோள் தொட்டு அழைத்துச் சென்று ஹாலில் நிறுத்தினாள் சசிரேகா...

"மாப்பிள்ளை யாரு..?"

மாலினி பக்கத்தில் நின்ற பவித்ராவிடம் ரகசியமாக வினவினாள்.. அவள் அதைவிட ரகசியமாக பதில் கொடுத்தாள்...

"அதோ.. அங்கே.. சோபாவின் நடுவில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்காரு பாருங்க.. அவர்தான் மாப்பிள்ளை..."

மாலினி மாப்பிள்ளையைப் பார்க்க.. மாப்பிள்ளையின் பக்கத்தில் அமர்ந்திருந்த பிரபாகரன் அவளைப் பார்த்தான்.. அவன் விழிகளில் தெரிந்த மின்னலையும் சுவாரஸ்யத்தையும் கண்ட மாலினி அவசரமாய் பார்வையை விலக்கிக் கொண்டாள்...

'கள்ளன்.. என்னமாய் சைட் அடிக்கிறான்.. என்னவோ இவன்தான் பெண்பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளைப் போலவும் நான்தான் இவன் பார்க்க வந்த பெண்ணைப்

போலவும் பார்த்து வைக்கிறானே.. இவனை என்ன செய்தால் தேவலாம்...'

காயத்ரியின் காதருகே குனிந்து...

"நீயும் மாப்பிள்ளையைப் பார்த்துக் கொள்.." என்றாள் மாலினி...

"அதெல்லாம் ஏற்கெனவே அவள் பார்த்த மாப்பிள்ளை தான்.." பவித்ரா கிசுகிசுத்தாள்...

"பார்த்த மாப்பிள்ளையாக இருந்தாலும்.. இப்போது பார்ப்பதைப் போல ஆகுமா..?" பதிலுக்கு மாலினி கிசுகிசுத்த போதுதான் அதைக் கவனித்தாள்...

பவித்ராவின் பார்வை.. ஷியாம்சுந்தருக்கு அருகே படிந்து மீண்டது.. அவள் பார்வை போகும் திசையைப் பார்த்த மாலினி துணுக்குற்றாள்..

ஷியாம்சுந்தரின் இரு பக்கமும் பிரபாகரனும் தினகரனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்..

'இவள் யாரைப் பார்க்கிறாள்.. பிரபாகரனையா.. இல்லை தினகரனையா..?' மாலினி தவித்துப் போனாள்..

பவித்ரா மீண்டும் ஒரு கள்ளப் பார்வையை வீசி வைக்க.. மாலினிக்கு அங்கே நிற்கவே பிடிக்கவில்லை.. நல்லவேளையாக காயத்ரியை அழைத்துக் கொண்டு போகச் சொல்லிவிட்டார்கள்.. மாலினி நிம்மதியாக காயத்ரியுடன் திரும்பிவிட்டாள்..

அறையில் அமர்ந்திருந்தபோதும்.. பவித்ரா அடிக்கடி ஹாலை எட்டிப் பார்ப்பதை பார்த்துக் கொண்டிருந்த மாலினிக்கு நேரடியாகவே அவளிடம் 'நீ யாரைப் பார்க்கிறாய்..' என்று கேட்டுவிடலாமா என்று தோன்றியது.. அடுத்த கணம் இந்த அளவிற்கா தான் பிரபாகரனால் பாதிக்கப் பட்டிருக்கிறோம் என்ற நினைவு தோன்ற.. திடுக்கிட்டுப் போனாள்...

'ஊஹூம்.. இது சரியில்லை.. சதா அவனை நினைத்துக் கொண்டே இருக்காமல் உருப்படியாய் எதையாவது செய்ய

வேண்டும்..'

இவ்வாறு நினைத்துக்கொண்டே எழுந்து.. ஹாலை எட்டிப் பார்த்தாள்.. அவள் பார்க்கும் அதே சமயம் பார்த்துத் தானா அவனும் திரும்பிப் பார்த்து வைக்க வேண்டும்..

அவன் திரும்பி அவளது பார்வையைச் சந்தித்தான்.. அதே ரசனையான பார்வை.. கன்னம் சிவக்க.. உடல் சூடறே.. அவசரமாக காயத்ரியின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டாள் மாலினி...

'இதுதான் நீ செய்யும் உருப்படியான வேலையா..?' அவள் மனம் கேலியாய் சிரித்தது...

பவித்ராவின் பார்வையும் நிற்கவில்லை.. பிரபாகரன், மாலினியைப் பார்ப்பதையும் நிறுத்தவில்லை.. இரண்டு வேறுபட்ட பார்வைகளும் இருவேறுபட்ட உணர்வுகளை மாலினிக்கு கொடுக்க, அவள் களைத்துப் போனாள்...

இரவு விருந்து ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது.. அவள் தோட்டத்துப் பக்கம் கூட்டத்திலிருந்து விலகி தனிமையை நாடிச் சென்றாள்.. அங்கே ஏற்கெனவே நின்றுகொண்டிருந்த பவித்ராவைக் கண்டதும் மாலினி தயங்கி நின்றான்.. பவித்ரா வாசல் பக்கமாகப் பார்த்தாள்.. மாலினியும் அந்தப் பக்கமாக பார்த்தாள்.. பிரபாகரன்.. தினகரனுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தான்...

'இவள் யாரை இப்படி ஒளிந்து நின்று பார்க்கிறாள்..?'

மாலினி திரும்பிவிடலாமா என்று யோசித்தாள்.. அதே கணம் தற்செயலாகத் திரும்பிய பவித்ரா, மாலினியைப் பார்த்துவிட்டாள்.. அகப்பட்டுக் கொண்ட பாவனை முகத்தில் தெரிய, தடுமாற்றமாய் பேசினாள்..

"மா.. மா.. மாலினி.. நான் சும்மா காற்று வாங்க வந்தேன்.. நீங்க எதுக்கு வந்தீங்க.. ஹி.. ஹி.."

"நீங்க வாங்கும் காற்றை நானும் கொஞ்சம் வாங்கிப் போகலாமுன்னு நினைத்துத்தான் வந்தேன்.. காற்று சிலுசிலுன்னு வீசுதில்ல...?"

"ஆமாமாம்.. நிற்கறீங்களே.. கால் வலிக்கப்போகுது.. உட்காருங்க..."

பவித்ரா வாசலைப் பார்த்தவாறே கூற.. இது வேலைக்கு ஆகாது என்று நினைத்துக் கொண்டாள் மாலினி...

'இவன் என் முன்னாலேயே இப்படி பருகு பருகுன்னு பார்த்து வைத்தால் எனக்கு பிபி ஏறாதா..?'

"எனக்குத்தான் கால் இருக்கிறதா.. உங்களுக்கு இல்லையா..?"

"இருக்கிறதே..."

அபத்தமாய் பேசுவதை உணராதவளாக அவசரமாக பேசினாள் பவித்ரா.. மாலினிக்கு சிரிப்பு வந்தது.. 'காதல்' எவ்வளவு பெரிய ஆளையும் முட்டாளாக்கிவிடும் தன்மை கொண்டது என்பதை அவள் அறியாதவளா என்ன..?

"ஏன் சிரிக்கிறீங்க..?" புரியாமல் வினாவினாள் பவித்ரா...

"எனக்கு கால் வலித்தால் உங்களுக்கும் வலிக்காதா..?"

"வலிக்கும்தான்..."

"அப்போ.. நீங்களும் உட்கார வேண்டியதுதானே.."

"நானா..?"

"நீங்களேதான்.. உட்காருங்க..."

அவள் தயக்கத்துடன் மாலினியின் அருகில் அமர்ந்தாள்.. அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தும் வாசலைப் பார்க்க முடிவதை அறிந்ததும் பவித்ராவின் முகம் பிரகாசமடைந்ததைக் கவனித்தாள் மாலினி...

'இவள் யாரைத்தான் பார்க்கிறாள்...'

இதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் இரவில் தூக்கம் வந்து தொலைக்காது என்று தோன்றிவிட.. பேசாமல் பவித்ராவிடமே அதைக் கேட்டுவிடலாம் என்ற முடிவுக்கு வந்தாள் மாலினி...

அவள் வாய் திறக்கப் போகையில்.. அவ்வளவு நேரமாக அவள் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு விடை தெரிந்துவிட்டது...

பிரபாகரனுடன் பேசிக்கொண்டிருந்த தினகரன் வீட்டை நோக்கிப் போக.. பவித்ராவின் பார்வை அவனைத் தொடர்ந்தது...

47

**நீ திரும்பும் திசையெல்லாம்...**

**என் பார்வையும் திரும்பும் நிலையை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

'இவள் தினகரனை விரும்புகிறாள்...'

மாலினிக்கு மனதிற்குள் மத்தாப்பு மலர்ந்தது.. பவித்ராவைப் பார்த்த நொடியிலேயே அவளை மாலினிக்குப் பிடித்துவிட்டது.. ஸ்வேதாவின் குடும்பத்தில் இப்படி ஒரு மென்மையான பெண்ணா... என்று ஆச்சரியப்பட்டுப் போனாள்...

அப்படிப்பட்ட பெண்ணின் மனதில் இருப்பது பிரபாகரனாக இருக்கக்கூடாது என்று மாலினி மனதிற்குள் தவித்துப் போயிருந்தாள்...

இன்னும் பிரபாகரன் எதையும் உறுதியாகக் கூறிவிட வில்லை.. மாலினியும் அவனை எதையும் கூற விடவில்லை.. இருந்தாலும் மனதில் ஒரு மூலையில் அவன்மேல் ஓர் உரிமை உணர்வு ஏற்பட்டுப் போனதை அவளால் மறுக்கமுடியவில்லை..

ஸ்வேதாவும்தான் பிரபாகரனைப் பார்த்தாள்.. எனினும், அவளது பார்வை வேறு.. பவித்ராவின் பார்வை வேறு...

ஸ்வேதாவின் பார்வை கணக்குப் போடும் பார்வை. திசை மாறும் பார்வை.. எந்த நேரம் அவள் பிரபாகரனைப் பார்ப்பாள்.. எந்த நேரம் தினகரனைப் பார்ப்பாள் என்று யாராலும் சொல்ல முடியாது.. அன்று அவள் அந்த இருவரையும் விட்டு விட்டு வீட்டுக்கு வந்திருந்த விருந்தினர்கள் சிலர் மீது பார்வையைப் படர விட்டுக் கொண்டிருந்தாள்...

பவித்ராவின் பார்வை காதல்வயப்பட்ட பார்வை. ஒன்றிலேயே நிலைத்து நிற்கும் பார்வை.. அவள் மனம் பிரபாகரனின் மீது இருந்திருந்தால்.. அதை மாலினியால் தாங்கிக் கொள்ள முடியாமல் போயிருக்கும்...

அந்த மன வேதனையை அவளுக்கு பவித்ரா கொடுக்க வில்லை என்பதனாலேயே பவித்ராவின் மீது மாலினிக்கு அன்பு பெருகியது.. அவள் கனிவுடன் பவித்ராவைப் பார்த்தாள்...

"மெல்ல பவித்ரா.. கண் வலிக்கப் போகிறது..."

மாலினி கேலியாகக் கூறியவுடன்.. பவித்ரா சட்டென்று தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்...

தான் தினகரனைப் பார்த்துக்கொண்டிருந்ததை மாலினி கண்டுபிடித்துவிட்டாள் என்பதை உணர்ந்து கொண்டவளாக நாக்கைக் கடித்துக் கொண்டு லேசாக தலையைக் குனிந்து கொண்டாள் பவித்ரா...

"பவித்ரா..." மாலினி மென்மையாக அவளை அழைத்தாள்.. அந்த அழைப்பில் இருந்த தோழமையும் அன்பும் பவித்ராவின் மனதை வருடிக் கொடுத்தன...

"ம்ம்ம்.." என்றாள் அவள்...

"நீங்க தினகரனை விரும்புகிறீர்களா..?" மாலினி நேரடியாகவே இதைக் கேட்டுவிட்டாள்...

பவித்ரா இந்த நேரடிக் கேள்வியை எதிர்பார்த்திருக்க வில்லை என்பது அவள் பதற்றத்துடன் மாலினியை நிமிர்ந்து பார்த்த விதத்தில் இருந்து தெரிந்தது...

"ஏன் அப்படிக் கேட்கறீங்க..?"

"வெயிட்.. வெயிட்.. எதற்காக இந்தப் பதற்றம் பவித்ரா..? என்னை உங்க ஃப்ரெண்டாக நினைத்துக்கங்க.."

"மாலினி..."

பவித்ரா தயங்கினாள்.. மனதில் ஒளித்து வைத்திருக்கும் காதல் உணர்வை.. யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவளுக்கும் தவிப்பாக இருந்தது...

மனதை பாரமாக அழுத்தும் காதலின் கனம் தாங்காமல் அவள் தனக்குள் புதைந்து கொண்டிருந்தாள்.. வீட்டிலிருக்கும் பெரியவர்கள் முடிவு பண்ணாமல் தானே ஒருவனை மனதில் வரித்துக் கொள்வதா என்ற சங்கடம். அதை வீட்டிலிருப்பவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்ற அச்சம்.. இதை எல்லாவற்றையும் தாண்டிய நாணம்...

அவை அனைத்தும் ஒன்றுசேர அவள் வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.. மாலினிக்கு அவளுடைய தவிப்பை புரிந்துகொள்ள முடிந்தது.. இனம் இனத்தை அறியும்தானே.. காதல் உணர்வுகள் தரும் கனத்தை அந்த ஆறு மாதங்களாக அவள் அனுபவித்துக் கொண்டிருந்தவள்தானே.. அதனால் இதமான ஒரு புன்னகையை பவித்ராவை நோக்கி வீசினாள் மாலினி..

"சொல்லுங்க பவித்ரா..."

"இதைச் சொல்ல எனக்கு தயக்கமாக இருக்கிறது மாலினி..."

"என்னை உங்க ஃப்ரெண்டாக நினைத்துக்கங்கன்னு இப்போதுதானே சொன்னேன்.. ஃப்ரெண்டிடம் போய் யாராவது தயங்குவார்களா..? சும்மா சொல்லுங்க..."

"எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து அவர் மேல்தான் இஷ்டம்..."

'நீ எவர்னு பெயரைச் சொல்லாவிட்டால் எனக்குக் கஷ்டம்..' மாலினி நகம் கடித்தாள்...

"அவர் மேல் எனக்கு கொள்ளைப் பிரியம்.."

"இன்னும் காதலிக்கும் ஆளின் பெயரை நீ சொல்ல வில்லையே..."

அது தினகரன்தான் என்பது தெளிவாகத் தெரிந்தாலும் அதை பவித்ராவின் வாய்மொழியில் கேட்டுவிட்டால் மனம் நிம்மதியாக இருக்குமே என்று மாலினி தவித்தாள்..

"அவர்ன்னா யாரு பவித்ரா..?"

"அவர்தான்... தினா அத்தான்.."

பவித்ரா முகம் சிவக்க கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.. மாலினியின் மனதில் அந்த பவித்ரமான பெண்ணின் மீது அன்பு பெருகியது...

"காதலைச் சொல்ல இவ்வளவு வெட்கமா பவித்ரா..?"

மாலினி.. பவித்ராவின் கரம் விலக்கி அவள் முகம் பார்த்தாள்.. அவளோ கெஞ்சுதலாக மாலினியைப் பார்த்தாள்...

"ப்ளீஸ், மாலினி.. இதை யாரிடமும் சொல்லிவிடா தீங்க..."

"நிச்சயமாய் சொல்ல மாட்டேன். ஆனால் பவித்ரா.. இதை ஏன் மறைக்க வேண்டும்.. தினகரன் உங்களுக்கு அத்தை மகன்தானே..? ஸ்வேதாவிற்கு இருக்கும் உரிமை உங்களுக்கும் உண்டுதானே..?"

"ஸ்வேதா வேறு.. நான் வேறு மாலினி.."

"அது எனக்குத் தெரியாதா..?"

"அவளைப் போல வெளிப்படையாய் எதையும் பேச எனக்கு வராது.."

"ரொம்ப நல்ல பழக்கம்.. நீங்க இப்படியே இருங்க.."

"மாலினி.. எங்கள் வீட்டுப் பெரியவர்கள் கண்டிப்பானவர்கள்.."

"பெரியவங்கன்னு சொன்னாலே கண்டிப்புன்னு தானே அர்த்தம்..."

"ஸ்வேதாவிற்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.."

"அதுதான் இங்கே நிறைய பேருக்கு பெருங்கவலையாக இருக்கிறது.."

மாலினி இதைச் சொல்லிய விதத்தில் பவித்ரா வாய்விட்டுச் சிரித்து விட்டாள்...

"இந்த அளவுக்கு ஸ்வேதாவின் கல்யாணக் கவலை உங்களுக்குக்கெல்லாம் இருக்கிறதா..?"

"அதையேன் கேட்கறீங்க.. அதைப் பற்றி பேச ஆரம்பித்தால் விடிந்துவிடும்..."

"வேண்டாம்.. வேண்டாம் நாம் வேறு பேசலாம்..."

"சரியாச் சொன்னீங்க போங்க.. இன்றைக்கு வீட்டில விசேஷம்.. மனசெல்லாம் சந்தோஷம் நிறைஞ்சிருக்கு.. நாம் வேறு தோட்டத்தில் உட்கார்ந்-திருக்கோம்.. குளிர்ந்த காற்று அடிக்குது.. உங்க காதலைப் பற்றி வேறு பேசிக் கொண்டிருக்கிறோம்.. இந்த நேரத்தில் போய் ஸ்வேதாவின் பேச்சை பேசினால் நம்மைப் போல வடிகட்டின முட்டாள்கள் வேறு யாரும் இல்லை.."

பவித்ரா திரும்பவும் சிரித்தாள்...

"நீங்க நல்லாப் பேசறீங்க மாலினி.."

"நீங்க ஒரு ஆள்தான் பாக்கியிருந்தீங்க.. நீங்களும் இதைச் சொல்லிட்டீங்களா.."

"அப்போ இதுக்கு முன்னாலே நிறையப் பேரு இதைச் சொல்லியிருக்காங்கன்னு சொல்லுங்க.."

"ஊரே சொல்லியாச்சு... "

பவித்ரா இப்போது அதிகமாகவே சிரித்தாள்...

"ஹைய்யா.. உங்ககூடப் பேசினால் வயிற்றை வலிக்க வைத்து விடறீங்களே..."

"இது என்னங்க இப்படி ஒரு பழியைத் தூக்கி என் மேல போடறீங்க.. உங்க வயிற்றை நான் என்ன செய்தேன்..?"

"இப்படிச் சிரிக்க வைக்கறீங்களே.. எனக்கு வயிற்றை வலிக்காதா..?"

"ஈஸிட்.. என்னிடம் பேசினால் உங்களுக்கு அவ்வளவு சிரிப்பு வருகிறதா..? என்னால் நம்பவே முடியலையே..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க..?"

"என்னுடன் பேசினால் ஸ்வேதாவிற்கு எரியுமே.. அவள் என்னிடம் சிரித்துப் பேசியதே இல்லை..."

"உங்களிடம் மட்டும் இல்லை மாலினி.. அவள் யாரிடமும் கணக்காகத்தான் பேசுவாள்.. சிரித்துப் பேச மாட்டாள்..."

"உங்களுடைய அத்தான்களிடம் மட்டும் சிரிக்கிறாளே.."

"அந்தக் கணக்கே வேற..."

"ஓ.. நீங்க கணக்கு பண்ணுகிற கணக்கைச் சொன்னீங்களா பவித்ரா.. உங்களை என்னவோன்னு நினைத்தேன்.. நீங்க பயங்கரமான விவரம்தான்.. பிழைத்துக் கொள்வீங்க.."

"என் தினா அத்தானுடன் பிழைப்பேனா மாலினி..?"

பவித்ராவின் குரலில் தெரிந்த ஏக்கத்தைக் கண்டு மாலினியின் மனம் உருகியது.. இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லும் இவள் மனதில் காதல் எவ்வளவு ஆழமாக இருக்க வேண்டும்..

"ஏன் பிழைக்க மாட்டீர்கள் பவித்ரா.. நன்றாக பிழைப்பீர்கள்.. தினகரனுக்கு உங்களைவிடப் பொரத்தமான பெண் வேறு யார் இருக்கிறாங்க.. நீங்கதான் அவருக்கு சரியான ஜோடி.."

மாலினியின் வார்த்தைகளைக் கேட்ட பவித்ராவின் முகம் மலர்ந்துவிட்டது.. அவள் மாலினியின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்...

"நிஜமாகத்தான் சொல்கிறீங்களா மாலினி..."

"பொய்யாய் பேச எனக்குத் தெரியாது பவி.."

"பவின்னா என்னைச் சொன்னீங்க..?"

'ஆமாம்.. நாம ஃப்ரெண்ட்ஸ்தானே.. ஃப்ரெண்ட்ஸ் பெயரைச் சுருக்கிக் கூப்பிட்டுக் கொள்வது சகஜம் தான் பவி..'

"எல்லாம் சரிதான் மாலு... ஃப்ரெண்ட்ஸ் ஒருத்தரை யொருத்தர் வாங்க போங்கன்னு கூப்பிட்டுக்குவாங்களா..?"

"இனிமேல் அப்படிக் கூப்பிட மாட்டேன் பவி.."

"நானும் உன்னை அப்படிக் கூப்பிட மாட்டேன் மாலு..."

அவர்கள் இருவரும் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்தனர்.. அந்தச் சிரிப்பில் தெரிந்த அந்நியோன்யத்தை நினைத்து மனதிற்குள் வியந்துபோனாள் மாலினி...

அன்று மாலையில்தான் பவித்ரா அவளுக்கு அறிமுகமானாள்.. அதற்குள் அவளுடன் காலம் காலமாய் பழகியதைப் போன்றதொரு உணர்வு எப்படி வந்தது என்று ஆச்சரியத்துடன் நினைத்துக் கொண்டாள்.. மாலினி மனதிற்குள் நினைத்ததை பவித்ரா வாய்விட்டுச் சொன்னாள்..

"உன்னை இன்னிக்குத்தான் மீட் பண்ணியதைப் போல எனக்குத் தோணவேயில்லை மாலினி.. என்னவோ காலம் காலமாய் நாம் பழகியதைப் போலத் தோணுது..."

"எனக்கும் அப்படித்தான் இருக்கு பவி.."

"நாம் என்றைக்குமே இதே நட்போடு இருக்கணும் மாலினி..."

"நிச்சயமாய் இருப்போம்.."

தினகரன் வீட்டுக்குள் செல்வதைப் பார்த்த பவித்ரா இருப்புக் கொள்ளாமல் எழுந்து கொள்ள.. மாலினி புரிந்து கொண்ட பாவனையில் தலையசைத்தாள்...

"ஸாரி மாலினி.. நான் இங்கே இருக்கும் இந்த இரண்டு நாள்களில்தான் அவரைப் பார்த்துக் கொள்ள முடியும்.."

"இதுக்கப்புறம் என்ன செய்வாய்..?"

"இந்த நாள்களில் பார்த்ததை நினைவில் வைத்துக் கொண்டு மீதி நாள்களை ஓட்டுவேன்.."

அவள் இயல்பாக கூறிவிட்டுப் புன்னகைத்தாள்.. அந்த வார்த்தைகளில் தொனித்த காதலை மாலினியால் புரிந்து கொள்ள முடிந்தது..

பிரபாகரனை பார்ப்பதில் உண்டாகும் இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவளுக்கு அது புரியாமல் போகுமா..?

வீட்டுக்குள்ளிருந்து விருந்தினர்கள் தோட்டத்துப் பக்கம் வர ஆரம்பிக்க.. மாலினி அவசரமாக அந்த இடத்தை விட்டு அகன்றாள். ஏனோ அறைக்குள் சென்று படுத்துத் தூங்க அவளால் முடியவில்லை.. மாடி ஹாலிலும் கூட்டம் இருக்க, மாலினி தனிமையை நாடி மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் ஏறினாள்.. எங்கோ தொலைதூரத்தில் பாட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.. யாரோ இந்த நேரத்தில் எஃப்.எம். கேட்கிறார்கள் என்ற நினைவுடன் அவள் மாடியில் கால் பதித்தாள்.

## 48

**உன் உதட்டோர சுழிப்பில்..**

**என் உயிர் சிக்கித் தவிப்பதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

நிலா வெளிச்சம் மொட்டை மாடியில் பரவியிருந்தது.. மாலினி அதை ரசித்தவாறு மொட்டை மாடியின் கைப்பிடி

சுவரருகே நின்று கீழே பார்த்தாள்.. வீட்டின் முன்பக்கமும் தோட்டமும் சாலையும் தெளிவாகத் தெரிந்தன...

அப்படியே சுவரில் சாய்ந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவளின் காதோரம் அந்த குரல் கேட்டது...

"என்னைப் பார்க்கத்தானே இங்கே வந்தாய்..?"

திடீரென்று காதோரம் அந்தக் குரல் ஒலித்ததால் உடல் தூக்கிப் போட்டாலும் அந்தக் குரலை இனம் கண்டு கொண்ட மாலினி ஆனந்தத்துடன் திரும்பினாள்...

கைகளை முன்புறம் மடித்துக் கட்டியவாறு பட்டு வேட்டி பட்டுச் சட்டையில் மாப்பிள்ளையைப்

போல கம்பீரமான அழகுடன் பிரபாகரன் நின்று கொண்டிருந்தான்...

"அடேங்கப்பா.. நினைப்புத்தான் உங்களுக்கு.." அவள் குரல் துள்ளியது...

"ஏன்.. நான் நினைக்கக் கூடாதா.. இல்லை.. நினைத்தால்தான் ஆகாதா..?" அவன் அமர்த்தலாகக் கேட்டான்...

"ஆகும்.. ஆகும்.. இவரைப் பார்க்க மொட்டை மாடிக்கு நான் தேடி வருகிறேனாம்.. இவர் இங்கிருப்பார்னு எனக்கு ஜோஸியமா தெரியும்..?"

"இத்தனை நேரமும் நான் உன்னைப் பார்த்து கொண்டிருந்ததை நீ பார்க்காமலா இருந்திருப்பாய்..?"

"என்னைப் பார்த்தீங்களா..?"

"ஆமாம்.. இவ்வளவு நேரமும் நீயும் பவித்ராவும் என்னவோ நீண்ட நாள் சிநேகிதிகளைப் போல கொஞ்சிக் குழாவிக் கொண்டிருந்தீங்களே.."

"வேவு பார்த்தீங்களா..?"

"அப்படித்தான் வைத்துக்க.. அது என்ன.. எல்லோரிடமும் ஒரு வினாடியில் பழகிவிடுகிறாய்.. என்னை மட்டும்

கண்டுகொள்ளவே மாட்டேன்கிறாயே.."

மாலினிக்கு வெட்கமாகிவிட்டது.. இவன் ஒருவன்.. மனதில் நினைப்பதை பேசி வைத்துவிடுவான்.. மாலினி பெண்.. இவனைப் போலப் பேச முடியுமா..?

ஒரு வார்த்தைகூட இது நாள் வரை காதலை வெளிப்படுத்தி பிரபாகரன் பேசாதபோது மாலினி எந்த உரிமையில் அவனுடன் காதல் பேச்சை பேச முடியும்..?

உணர்வால் அறிந்தது ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு பிரபாகரனிடம் நெருக்கத்தைக் காட்ட மாலினியால் முடியவில்லை..

"உங்களைக் கண்டுகொள்ளும் அளவிற்கு நான் பெரிய ஆள் இல்லையே.. அதோடு உங்களைக் கண்டு கொள்ள ஊர்.. உறவு.. சொந்தபந்தம்னு உங்களுக்கு ஆயிரம் ஜனங்கள் இருக்கிறாங்களே.." என்றாள் மாலினி..

"ஆயிரம் கோடி ஜனங்கள் இருந்தாலும்.. உன்னைப் போல ஆகுமா..? யாரைப் பற்றியும் எனக்கு நினைவில்லை.. எனக்கு வேண்டியது நீதான்.. நீ மட்டும்தான்..." என்று பிரபாகரன் சொன்னான்..

இதை எப்படி எடுத்துக் கொள்வது என்று புரியாமல் மாலினி திகைத்தாள்.. இப்போதும் அவன் வெளிப்படையாய் எதையும் சொல்லிவிடவில்லையே..

"புரியவில்லை..."

"உனக்கா புரியாது..?"

"எனக்குப் புரியாததும் நிறைய உண்டு அத்தான்.."

"உதாரணத்துக்கு ஒன்று சொல் பார்க்கலாம்..."

"நீங்களே ஒரு சிறந்த உதாரணம்தான்.."

பேசிக் கொண்டே பிரபாகரன் அவளருகில் வர.. மாலினி பின்னால் நகர்ந்தாள்.. அவன் நிற்காமல் அவளை நெருங்க.. அவள் பின்வாங்கி மொட்டை மாடியின் மையப்

பகுதியிலிருந்து படிக்கட்டு அமைக்கப்பட்டிருந்த அறையின் பக்க சுவரில் சாய்ந்து நின்றுவிட்டாள்..

அதற்கு மேல் பின்வாங்க முடியாமல் அவள் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்தவனாக பிரபாகரன் நகைத்தான்..

மாலினி நகர்ந்துகொள்ள முடியாமல் அவளுக்கு இருபக்கமும் தன் இரு கைகளையும் நீட்டி.. சுவர் மீது பதித்து நின்ற பிரபாகரன், தனது கைகளுக்குள் சிறைப்பட்டிருந்த மாலினியிடம் ஆழ்ந்த குரலில் வினவினான்...

"சொல் மாலினி.. நான் உனக்குப் புரியாத புதிரா..?"

மாலினி பேச்சிழந்தாள்.. வார்த்தைக்கு வார்த்தை அவனுடன் வாயாடிய மாலினி காணாமல் போய்.. பேச வார்த்தைகள் வராமல் தவித்துக் கொண்டிருந்த மாலினி அவன் முன்னால் நின்றாள்..

"வழியை விடுங்கத்தான்..."

"எதற்கு வழிவிடச் சொல்கிறாய்..?"

"நான் போகவேண்டும்.."

"எங்கே போகப் போகிறாய்..?"

"என் ரூமிற்குப் போக வேண்டும்.."

"அங்கே போய் என்ன செய்யப் போகிறாய்..?"

"இது என்ன அத்தான் கேள்வி..? தூங்கப் போகிறேன்.."

"உனக்கு தூக்கம் வந்துவிடுமா..?"

பிரபாகரனின் குரலில் கேலி இருந்தது.. அவனது வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்தவளாக உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள் மாலினி...

தூக்கம் வருமா.. எப்படி வரும்? இந்த அளவு அண்மையை இதற்கு முன் உணர்த்தாதவன் இப்போது அவனது

மூச்சுக்காற்று அவள் மீது பட்டுக் கொண்டிருக்க நெருங்கி நிற்கிறான்...

ஒன்றை உணர்ந்தாள் மாலினி.. அவனது மூச்சுக்காற்று அவள் மேல் பட்டது.. அவன் மேலிருந்து வந்த இதமான நறுமணம் அவளது நாசியைத் தொட்டது.. ஆனால், அவனது விரல்கூட அவள் மேல் படவில்லை.. மறந்தும் அவன் அவளைத் தொடவில்லை...

அவளால் அசைய முடியவில்லை.. அசைந்தால் அவன் மேல் அவள் பட்டுவிடுவாள்.. அந்த இரும்பு மனிதனின் திட்டம் அவளுக்குத் தெளிவாக விளங்கியது.. அவனாக அவளைத் தொடாமல் அவளை வேறுவழியின்றி அவனைத் தொட வைக்கும் திட்டம்...

'யார் இவன்.. பொல்லாத ஆளாச்சே.. இவன் என்னைத் தொடமாட்டானாம்.. ஆனால், என்னை மட்டும் இவனைத் தொட வைப்பானாம்.. பலே கில்லாடிதான்..' அவள் மனதிற்குள் அவனின் அடாவடித்தனத்தை ரசித்தாள்...

"எனக்கு ஏன் தூக்கம் வராது.. அதெல்லாம் வரும்.."

"நிஜமாகவா சொல்கிறாய்..?"

"ஆமாம்..."

"எங்கே.. என் தலைமேல் அடித்துச் சொல்லு.."

மாலினி செய்வதறியாதவளாக மௌனித்தாள்... அவனுக்கு அந்தச் சாக்கிலாவது அவளைத் தொட வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பது அவளுக்குப் புரிந்தது...

"என்ன மேடம்.. பதிலைக் காணோம்.."

"அத்தான்.. ப்ளீஸ்.. என்னை விட்டுவிடுங்க.."

"நான் என்னவோ உன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நிற்பதைப் போல இல்ல நீ பேசுகிறாய்.. என் விரலாவது உன் மீது பட்டிருக்கிறதா..?"

"ஆஹாஹா.. பெரிய அடக்கமான மனிதர்தான்.."

"பின்னே இல்லையா..?"

"எவ்வளவு நேரம் இப்படியே நிற்பீங்க..?"

"விடியும் வரை.."

"என்னது.. விடியும் வரையா..?"

மாலினிக்கு திகில் பிடித்துக் கொண்டது.. அவன் பேச்சைப் பார்த்தால் அவன் சொன்னதைச் செய்துவிடுவான் என்று தோன்ற, மாலினி அவனிடம் கெஞ்ச ஆரம்பித்தாள்..

"அத்தான் ப்ளீஸ்.."

"எதுக்கு ப்ளீஸ் போடுகிறாய்..."

"நகர்ந்துக்கங்க..."

"முடியாது.."

"சொன்னா கேளுங்க..."

"கேட்க மாட்டேன்..."

அவன் பிடிவாதமாக மறுக்க.. அவள் வேறுவழி தெரியாமல், "இப்போ என்னதான் வேண்டும் உங்களுக்கு..?" என்று அழமாட்டாத குறையாக வினவினாள்...

"நீதான் வேண்டும்..."

"அத்தான்.."

"உன்னை நான் தொடவேண்டும்..."

"ஸ்டாப் திஸ் ப்ளீஸ்..."

"ஏன் நிறுத்தச் சொல்கிறாய்..?"

"நீங்கள் பேசுவது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா..?"

"இருக்கிறது..."

"ம்ப்ச்.. வீட்டில் விருந்தாளிகள் வந்திருக்கிறாங்க அத்தான்..."

"வரட்டுமே.."

"அவங்க யாராவது மாடிக்கு வந்துவிட்டால் என்ன செய்வது..?"

"வர மாட்டாங்களே..."

"அதை எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீங்க.."

"நான்தான் மொட்டை மாடிக் கதவைத் தாழ்போட்டு விட்டேனே..."

மாலினியை பயம் பிடித்துக் கொண்டது.. யாராவது அவளைத் தேடி அறைக்குப் போய் அவள் இல்லையென்று கண்டுபிடித்துவிட்டால் என்ன செய்வது..? கூடவே பிரபாகரனும் இல்லையென்று தெரிந்துவிட்டால் எல்லோருமே என்ன நினைத்துக் கொள்வார்கள்..?

"நீங்களா அத்தான் இப்படியெல்லாம் செய்கிறீங்க...?"

"ஏன்.. நான் இதைச் செய்யக்கூடாதா..? நானும் மனிதன் தானே.. என் மனதிலும் ஆசைகள் இருக்கும் தானே..."

"அதற்காக இப்படியா செய்வது.. நீங்கள் மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டாமா..?"

"அதுதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நீ என்னை உதாரணம் காட்டினாயே..."

"அது வேறு.. இது வேறு அத்தான்.."

"எனக்கு எல்லாம் ஒன்றுதான்.."

பேசிக்கொண்டே அவன் வாய்க்குள் ஏதோ ஓர் பாடலைப் பாடினான்.. இவன் எந்த நேரத்தில் பாட்டுப் பாடிவைக்கிறான் என்றிருந்தது மாலினிக்கு...

"என்ன பாட்டு..?" என்று கேட்டாள் மாலினி...

"ஒன்றுமில்லை.."

"ஒன்றுமில்லாததைத்தான் நீங்கள் பெரிது பண்ணுகிறீங்களே.."

"மாலினி..."

"ம்ம்ம்.."

"நீ எனக்கொரு தடை விதித்திருக்கிறாய்.."

மாலினி உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனித்தாள்.. அதற்காகத்தான் அவளை அவன் சிறைபிடித்து வைத்திருக்கிறான் என்பதை அவள் அறிவாளே..

"அதிலும் உன்மேல் ஆணை வைத்து தடை செய்திருக்கிறாய்.."

"அதனால்..?"

"நீ அந்தத் தடையை விலக்கிக் கொண்டால் நானும் என் கைகளை விலக்கிக் கொள்கிறேன்.."

"இல்லாவிட்டால்...?"

"நீ தடையை விலக்கும் வரை நானும் விலக மாட்டேன்..."

"நடந்து முடிந்திருப்பது உங்கள் தங்கையின் நிச்சயதார்த்தம்.."

"அது எனக்குத் தெரியாதா..?"

"தெரிந்தவர் செய்கிற வேலையா இது..? வந்திருக்கிற சொந்தக்காரங்களுக்கு இது தெரிந்தால் என்ன ஆகுமுன்னு கொஞ்சமாவது நீங்க யோசிச்சுப் பார்த்தீங்களா..?"

"ஏன் உனக்கு மூளையில்லையா.. நீ யோசித்துப் பார்க்க மாட்டாயா..? தடையை விலக்கிக் கொள்ள மாட்டாயா..?"

"நான் ஏன் யோசிக்க வேண்டும்...? காயத்ரிக்குத் கூடப் பிறந்த அண்ணன்.. அதிலும் பெரிய அண்ணன்.. நீங்கள் தான் யோசிக்க வேண்டும்.."

"இவ்வளவு சுயநலமான பெண்ணா நீ..? காயத்ரியின் மேல் உனக்கு அன்பே இல்லையா...?"

இப்படிப் பேசுபவனிடம் இல்லையென்று எப்படிப் பொய் சொல்லுவது.. அவன் அவளைச் சரியாக கணித்து வைத்திருப்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது..

அவளுக்கு நர்மதாவின் மேல் மரியாதையும் காயத்ரியிடம் பிரியமும் உண்டு.. அதை அறிந்து வைத்திருந்தவன் அதைக் கொண்டே அவளை மடக்கிவிட்டான்...

49

**நான் நினைக்கும் நினைவை..**

**நீயும் நினைத்த நிகழ்வை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி மலைத்துப் போய் நின்றுவிட்டாள்.. அவனது மூச்சுக்காற்று அவள் மேல் பட்டுக் கொண்டிருக்க.. அவளுக்குள் ஏதோ ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது..

அக்கம் பக்கம் யாருமில்லாத அந்தத் தனிமையான இரவில் மிக அண்மையில் நின்றுகொண்டிருந்த அவனின் ஆண்மையில் அவள் மயங்கினாள்...

"ஓகே அத்தான்.. நான் என் மேல் வைத்த ஆணையை விலக்கிக் கொள்கிறேன்.. போதுமா..."

அவள் அந்த இடத்தை விட்டு ஓடத் துடித்தாள்.. தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அவளது சுயக்கட்டுப்பாடு தளர்வதை உணர்ந்தவளாக மனம் பதறினாள்...

"போதாதே.." அவன் விடாக்கண்டனாக கூறினான்..

"போதாதா..."

"ஆமாம்.. போதாது.. 'என் மேல் ஆணை...' என்னை தொடுங்க அத்தான்'னு சொல்லணும்.."

"ஊஹூம்.. நான் அப்படிச் சொல்ல மாட்டேன்.."

"அப்போ நானும் விலக மாட்டேன்..."

அவன் முகம் இப்போது அவளது முகத்திற்கு வெகு அருகாமையில் இருந்தது.. அவனது மூச்சுக்காற்றை உணர்ந்தவளின் இதயம் படபடத்தது.. இந்த இன்ப அவஸ்தையை இனிமேலும் தாங்க முடியாது என்று தொய்ந்து போனவளாக அவள் மெல்லிய குரலில் அவன் கேட்டதைச் சொன்னாள்...

"அத்தான்.."

"ம்ம்ம்.. மேலே சொல்லு..."

"என் மேல் ஆணை.."

"அப்புறம்..."

"என்னை.. என்னை.."

"ம்ம்ம்.. உன்னை.. உன்னை..."

"தொடுங்க..."

அவள் சட்டென்று சொல்லிவிட்டு கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். அதற்காகவே அவளது சொல்லிற்காகவே காத்திருந்த பிரபாகரன்.. அவளைத் தோள் தொட்டு அருகே இழுத்துக் கொண்டான்.. அவளது கரம் விலக்கி முகம் பார்க்க அவன் முனைய... அவள் கரம் விலக்க மறுத்தாள்...

"மாலினி..."

"ம்ம்ம்..."

"என்னைப் பார்.."

"மாட்டேன்.."

"ஏய்ய்.. பாருடி..."

அவன் வலுக்கட்டாயமாக அவளது கரம் விலக்கி முகம் பார்க்க.. அவள் வெட்கத்துடன் கண்மூடி அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்...

வார்த்தைகளால் காதல் சொல்லிக் கொள்ளாத அந்தக் காதலர்கள் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். அவளது கூந்தலில் அவன் முகம் புதைத்து பூவாசம் பிடிக்க.. அவனது முதுகில் கரம் பரப்பி அவன் தோளில் முகம் புதைத்தாள் மாலினி...

அவன் சரிந்து தரையில் அமர்ந்து அவளை இழுத்து மடியில் சரித்துக் கொண்டான்.. அவனது கழுத்தில் கைகளை மாலையாக்கிக் கொண்டு அவன் மடிமேல் விழுந்தாள் மாலினி.. அவளது முகம் நோக்கி குனிந்தவன் அவளது இதழோடு இதழ் பதிக்க.. தன் வசமிழந்து கண்மூடிக் கிறங்கிப் போனாள் மாலினி...

"கடைசியில் ஜெயிச்சுட்டீங்கல்ல..."

"தோற்றுப்போனதில் நீ வருத்தப்பட்டது போல எனக்குத் தெரியவில்லையே..." அவன் சரஸமாகச் சிரித்தான்...

அவனது பேச்சில் கிளர்ந்தவள்.. அவனது விரலோடு விரல் பிணைத்துக் கொண்டாள்...

"நான் பார்த்தாலும் பார்த்தேன்.. உங்களைப் போல ஒரு அடாவடிக்கார ஆளைப் பார்த்ததே இல்லை..."

"அப்படி என்னடி நான் அடாவடித்தனம் பண்ணி விட்டேன்..?"

"ஒன்றுமே பண்ணவில்லையா..?"

"இல்லையே.. இப்போது நீ சொல்லவும் தான் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற ஆசை கிளம்புகிறது.."

"ஐயையோ..."

மாலினி பதறி எழ.. அவன் வாய்விட்டுச் சிரித்தபடி.. அவளை எழுந்து கொள்ள விடாமல் அணைத்துக் கொண்டான்..

"மாலினி.." அவனது தோள் மீது சாய்ந்திருந்தவளின் உச்சந்தலையில் முத்தமிட்டவாறு அவன் மென்மையாக அழைத்தான்..

"ம்ம்ம்.." அவள் அவன் தோள் மீது முகம் நிமிர்த்தி அவன் முகம் பார்த்தாள்...

"ஐ லவ் யு.." அவன் சொல்லிவிட்டான்..

"என்ன சொன்னீங்க..?"

"ஐ லவ் யூன்னு சொன்னேன்.."

"இதைச் சொல்ல இவ்வளவு நாளா..?"

அவளது கேள்வியில் தெரிந்த ஏக்கத்தைப் புரிந்து கொண்டவனாக அவன் அணைப்பை இறுக்கிக் கொண்டு அவளது காதோரமாக பேசினான்..

"சொன்னால்தான் காதலாடி..?"

"சொல்லாவிட்டாலும் சில சங்கடங்கள் உண்டு அத்தான்.. அது பெண்களுக்கு மட்டும் சொந்தமானது.. உங்களுக்குச் சொன்னாலும் புரியாது.."

"உன்னைக் கண்டவுடன் பிடித்துவிட்டது.. உன்னோடுப் பழகிப் பார்க்க ஆசைப்பட்டேன்.. உன்னை என்னருகில் என் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டேன்.. ஆனாலும்கூட நமக்குள் தேவையில்லாத வாக்குவாதம் வந்து நீ என்னைத் தொடக்கூடாதுன்னு சொல்லிவிட்டாய்..."

இதைச் சொல்லும்போது பிரபாகரன் உல்லாசமாக நகைத்துக் கொண்டே அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.. அவள் லஜ்ஜையுடன் அவனை நறுக்கென்று கிள்ளினாள்..

"ச்சீய்.. இது ஒரு பேச்சென்று பேசிக்கொண்டே இருக்கீங்களே.. விடவே மாட்டீங்களா.."

"ஊஹூம்.. உன்னைக் கடைசிவரை விடுவதாகவே இல்லை.."

"இதிலொன்றும் குறைச்சல் இல்லை.. வாய்தான் உங்களை வாழ வைக்குது போங்க.."

"எங்கேடி போகச் சொல்றே.. ஸ்வேதாகிட்டயா...?"

அறியாப் பிள்ளைபோல பிரபாகரன் வினவியவுடன் மாலினிக்கு கோபம் வந்துவிட்டது.. அவள் விலக முயன்றாள்.. அவனுடைய பிடி இரும்புப் பிடியாய் இருந்தது...

"இப்பத்தான் சண்டை முடிந்து சமாதான மாகியிருக்கோம்.. திரும்பவும் முறைத்துக் கொண்டு போக நினைக்கிறாயே.. நியாயமா..?"

"முதலில் என்னை விடுங்க.."

"நீ என்னை விடச் சொல்வதிலேயே குறியாய் இரு.. இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இவ்வளவு கோபப் படுகிற..?"

மாலினியின் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்த படி பிரபாகரன் கூற.. அவளது கோபம் இன்னும் அதிகமாகியது..

'கள்ளன்.. என்னோடு இழைந்து கொண்டு அவள் பெயரைச் சொல்கிறான்.. இவனை என்ன செய்தால் தகும்..?'

"என் மகாராணிக்கு என்னடி யோசனை..?"

"என்னைக் கொஞ்சிக் கொண்டே உங்கள் மாமன் மகளை நினைத்துக் கொண்டிருக்கீங்களே.. உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்..."

"நீ கூடத்தான் என்னோடு பேசிக் கொண்டிருக்கும் போதே தேவையில்லாமல் அவள் பெயரை இழுப்பே. அப்போ எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"ஓ.. ஹிட்லர் சார்.. அதுக்குப் பழிக்குப் பழி வாங்குறீங்களா..?"

"யெஸ்.. மைடியர் ஏஞ்சல்..."

பிரபாகரன் அவளது நெற்றியில் விரலை வைத்து கோடாய் இறக்கி... அவளது மூக்கைத் தொட்டு இதழ்களில் கொண்டு வந்து நிறுத்தினான்... மாலினி மயங்கிப் போனாள்...

தொலைதூரத்தில் கேட்டுக் கொண்டிருந்த ரேடியோ சத்தம் சமீபித்தது...

"தட்டுத் தடுமாறி நெஞ்சம்..

கை தொட்டு விளையாடக் கொஞ்சம்...

சிட்டு மலர்மேனி துள்ளும்..."

பாட்டுச் சத்தம் கடந்த பின்னாலும் அந்த பாடல் சுட்டியெழுப்பிவிட்ட உணர்வலைகளுடன் கண்மூடிக் கிடந்தாள் மாலினி..

அந்த இரவின் நிசப்தம் கலந்த அமைதியையும் மொட்டை மாடி தந்த தனிமையையும் பிரபாகரனின் காதல் கிடைத்துவிட்ட சந்தோஷத்தையும் அவனது தொடுகை எழுப்பிவிட்ட கிளர்ச்சியையும் இனி எத்தனை இரவுகள் வந்தாலும் மறக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது...

"நல்ல பொன்னாள் இதுபோலலே..

வருமோ இனிமேலே..."

என்றோ கேட்ட, காலத்தால் அழிக்க முடியாத காவியப் பாடல் வரிகள் அவளது மனதில் ஒலித்தது...

அக்கம் பக்கம் ஆளில்லாத அந்தத் தனிமை நீண்டு கொண்டே இருக்க வேண்டும் என்று அவள் மனம் விரும்பியது.. அந்த இரவு முடியக்கூடாது.. பொழுது விடியக்கூடாது.. அவன் மடி மீது தலை வைத்து இப்படியே அவள் கதை பேசிக் கொண்டிருக்க வேண்டும்.. ஆயுள் முழுக்க அவனை விட்டு இமைப்பொழுதுகூட விலகாமல் உறவாட வேண்டும்..

முடியுமா.. அவள் கேட்பது கிடைக்குமா..?

உணர்வுகளின் வீச்சைத் தாங்க முடியாதவளாக மாலினி அவனோடு ஒன்றிக் கொண்டாள்.. அவளது உணர்வுகளைப் போலவே அவனும் உணர்வுக்கு ஆட்பட்டிருப்பது அவளது

காதோரமாக ஒலித்த பிரபாகரனின் குரலில் தொனித்த அளவு கடந்த தாபத்திலிருந்து தெரிந்தது...

"காயத்ரியின் கல்யாணம் முன்னால் நிற்கிறது மாலினி.. அது மட்டும் இன்றைக்கு நிச்சயமாகியிருக்கா விட்டால் விடிந்தவுடனேயே உன் கழுத்தில் தாலியைக் கட்டிவிடுவேன்.."

அவள் பதில் சொல்லாமல் அவனுக்குள் இன்னும் புதைந்தாள்.. அவளது தோள் தடவிய கரங்கள் அவளை இறுக்கிக் கொள்ள, அவள் கன்னத்தில் சூடான முத்தம் வைத்தான் பிரபாகரன்..

"உன் மேல ஆசை வைச்சேன்..

உத்தமியே மெத்தையுண்டு

சத்தியமாச் சொல்லுறேண்டி..

தங்க ரத்தினமே...

தாள முடியாது கண்ணே..

பொன்னு ரத்தினமே.."

தாள முடியாத தாபத்தை அவளது காதோரமாகப் பாடிய அவனது பாடல் உணர்த்த அவனுடன் உறாவட மனம் துடித்தாள் மாலினி. ஆனால்.. உரிமையில்லாமல் உறவாடக் கூடாதென்று அவளது அறிவு தடுக்க.. உணர்வுக்கும் அறிவுக்கும் இடையே போராடினாள்...

எப்போதுமே அறிவும் உணர்வும் எதிர்மறைத் துருவங்களில்தான் இருக்கும்.. அறிவை உணர்வு ஜெயித்துவிடக் கூடிய சூழல் உருவாக.. மாலினி சட்டென்று அவனிடமிருந்து விலகி அமர்ந்தாள்...

"ஏன் மாலினி..?" அவன் குரலில் தாபம் தெரிந்தது..

"இல்லை அத்தான்.. நாம் எல்லை மீறிவிடுவோம் போலத் தோன்றுகிறது.. கீழே போய்விடலாம்..."

"எல்லை மீறினால்தான் என்ன..? உன் கழுத்தில் ஊரறிய தாலியைக் கட்டினால்தான் நான் உனக்குப் புருஷனா..?"

அந்தக் கேள்விக்கு எப்படிப் பதிலைச் சொல்வது என்று திணறிப் போனாள் மாலினி... அவன் கேட்பதும் நியாயம்தானே.. இவ்வளவு நேரமும் அவன் தோள் சாய்ந்திருந்த போது அவன் வேறு அவள் வேறு என்ற நினைவே அவள் மனதில் எழவில்லையே...

"இல்லைதான்.. ஆனாலும் அத்தான்.. உங்களுக்கும் எனக்கும் நம் குடும்பத்திற்கு பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறதே..."

"கடமை..! நான் கடமையைத் தட்டிக் கழிப்பவனல்ல.. ஆமாம் தெரியாமல்தான் கேட்கிறேன்.. எனக்காக செய்ய வேண்டிய கடமை எதுவும் உன் மனதில் தோன்றவேயில்லையா..?"

அவனது கோபம் புரிந்தவளாக அவள் மெலிதாகச் சிரித்தாள்.. அந்தப் பெயர் பெற்ற ஜமீன் குடும்பத்தின் மூத்தமகன்.. ஹிட்லர் என்ற பட்டப் பெயரை அவளிடமிருந்து வாங்கிய கண்டிப்பானவன்.. கே.பி. என்று அனைவராலும் ஈரெழுத்தில் அழைக்கப்படும் வி.ஐ.பி. காதலின் வேகம் தாளாமல் அவளிடம் கோபப்படுகிறான்..

அவளுக்கு அவனது மனம் புரிந்தது.. உடனடியாக விலகிப் போனால் அவனது கோபமும் தாபமும் அதிகரிக்கும் என்ற பொறுப்புணர்வு மனதில் எழ... 'காதலி' என்ற கடமையுடன் அவனை மடிசாய்த்துக் கொண்டாள் மாலினி..

## 50

**உன் சிறு கோபம் தனில் நெஞ்சம்..**

**சிக்கித் தவிப்பதையே...**

**என்னவென்று நான் சொல்ல..?**

சொல்லத் தெரியாத கோபத்துடன் படபடத்தவன்.. அவளது மடி மீது சரிந்ததும்.. கோபம் அடங்கிவிட்டதை வியப்புடன் உணர்ந்தான்.. அவளது அருகாமைக்கு அவ்வளவு சக்தி இருக்கிறதா என்ற ஆச்சரியத்துடன் நிலவொளியில் களங்கமில்லாத அழகு தேவதையாக அவனை மடிதாங்கியிருந்தவளைப் பார்த்தான்.. அவனது பார்வையை உணராதவளாக அவள் காதலுடன் அவன் முடி கோதி அவன் கையை எடுத்து அதில் முத்தமிட்டாள்..

"இது போதுமா..?" என்றான் பிரபாகரன்..

"எல்லாம் போதும்.." அவள் செல்லமாக அவன் கன்னதில் தட்டினாள்...

"ஏண்டி.. யானைப் பசியில் இருக்கிறவனுக்கு சோளப் பொரி எப்படிடீ போதும்..?"

"நல்ல பிள்ளையில்ல.. சொன்னால் கேட்கணும்.."

"உனக்கு என்மேல் ஆசையே இல்லைடி.."

"எனக்கா ஆசை இல்லை.. அது கடலளவு இருக்கு.."

"சும்மா சொல்லாதே..."

"நிஜமாகத்தான் அத்தான்.. இப்படியே நாம் எங்கேயாவது போய்விடணும்னு தோணுது.. அங்கே நீங்களும் நானும் மட்டும்தான் இருக்க வேண்டும்.. இருபத்து நான்கு மணி நேரமும் நீங்கள் என்னருகில் இருக்க வேண்டும்..."

"ஏய்.. மாலினி..."

அவன் அவளது கைவிரல்களை நொறுக்கி விடுவதைப் போல இறுக்கிப் பிடித்துக் கொள்ள... அவள் கண்மூடி சன்னக் குரலில் பாடினாள்...

"அக்கம் பக்கம் யாருமில்லா...

பூலோகம் வேண்டும்..

அந்தி பகல் உன்னருகே..

நான் வாழ வேண்டும்..

என் ஆசையெல்லாம்..

உன் நெருக்கத்திலே..

என் ஆயுள் வரை..

உன் அனைப்பினிலே..

வேறென்ன வேண்டும் உலகத்திலே..

இந்த இன்பம் போதும் நெஞ்சினிலே..

ஈரேழு ஜென்மம் வாழ்ந்து விட்டேன்.."

அவனது முகத்தோடு முகம் வைத்துப் பாடியவளின் குரலில் இருந்த காதல் அவனைக் கட்டிப்போட்டது.. அவன் கேசத்தில் விரல் நுழைத்து அவன் முடிகோதி தொடர்ந்து பாடினாள் மாலினி...

"நீ பேசும் வார்த்தைகள் சேகரித்து...

செய்வேன்.. அன்பே ஓர் அகராதி..

நீ தூங்கும் நேரத்தில் தூங்காமல்

பார்ப்பேன் தினம்.. உன் தலைகோதி..

காதோரத்தில் எப்போதுமே..

உன் மூச்சுக்காற்றின் வெப்பம் சுமப்பேன்..

கையோடுதான்.. கைகோத்துத்தான்..

உன் மார்புக்கூட்டில் முகம் புதைப்பேன்.."

குனிந்து அவன் மார்பில் தலை வைத்துக் கண்மூடிக் கொண்டவளின் முதுகின் மேல் அவனது விரல்கள் படர்ந்து பரவ அவள் சிலிர்த்தாள்...

"நீயும் நானும் சேருமுன்னே..

நிழல் சேர்ந்து நடக்கிறதே..

நேரம் காலம் தெரியாமல்..

மனம் இன்று விண்ணில் மிதக்கிறதே..

உன்னால் இன்று

பெண்ணாகவே நான் பிறந்ததன்..

அர்த்தங்கள் அறிந்து கொண்டேன்..

உன் தீண்டலில் என் தேகத்தின்..

புது ஜன்னல்கள் திறப்பதை..

தெரிந்து கொண்டேன்.."

குழைந்து அவனோடு ஒன்றிக் கொண்டவளின் நெற்றியிலே முத்தம் பதித்தான் பிரபாகரன்.. இருவரும் மௌனமாக எழுந்து கொண்டார்கள். அந்த அருமையான தருணத்திலிருந்து விடுபட்டு அவசர உலகில் நுழையவேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாக மெதுவாக நடந்தார்கள்.. அவர்கள் இருவரின் மனதிலும் காதல் பொங்கித் ததும்பியதை அவர்கள் இருவருமே உணர்ந்துதான் இருந்தார்கள்..

மொட்டை மாடிக் கதவின் தாழ் விலக்கிய பிரபாகரன் படிகளில் யாரும் இருக்கிறார்களா என்று பார்த்தான்.. யாருமில்லை என்றவுடன் ஒரு பெருமூச்சுடன் அவளைப் பார்த்து...

"நீ முதலில் இறங்கிப் போய்விடு மாலினி.." என்று கூறினான்..

"நீங்கள்?" அவள் தயங்கினாள்..

"எனக்கென்ன..? ஆண்பிள்ளைக்கு..? நான் கொஞ்ச நேரம் கழித்து வருகிறேன்.. முதலில் நீ போய்விடு.. அதுதான் முக்கியம்..."

அவளைப் பற்றிய அக்கறை தொனித்த அந்த வார்த்தைகளைக் கேட்ட மாலினிக்கு பரவசமாக இருந்தது.. அவள் படிகளில் இறங்க காலடி வைத்தபோது.. ஆழ்ந்த குரலில்...

"மாலினி.." என்று அழைத்தான் பிரபாகரன்...

"ம்ம்ம்.." அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"இந்த ராத்திரியை இனி வரும் நாள்களில் எப்போதுமே நான் மறக்காமல் நினைவில் வைத்திருப்பேன்.."

"நானும்தான்..."

"போய் வா.."

"ம்ம்ம்..."

"குட் நைட்.."

"குட் நைட்.."

அடுத்த நொடியில் அவள் நிற்காமல் மான் போல படிகளில் தாவி இறங்கி ஓடினாள்.. இன்னும் ஒரு கணம் அங்கே தாமதித்தாலும் பிரபாகரனுடன் கலந்துவிடுவோம் என்ற பயம் வந்து மாலினியை ஆக்கிரமிக்க.. சிறைபடுத்தும் காதல் உணர்விலிருந்து தப்பிக்க அவளது அறையைத் தேடி ஓடினாள் அவள்.. ஓடிய வேகத்தில் ஸ்வேதாவின் மீது மோதிவிட்டாள்...

"ஏய்... என்ன இது.. கண்மண் தெரியாமல் இப்படி ஓடி வருகிறாயே... பேய் துரத்துகிறதா..?" என்றாள் ஸ்வேதா.

'போயும் போயும் இவள் மீதுதானா நான் மோதித் தொலைக்க வேண்டும்...' என்று மனதிற்குள் நொந்தபடி பதில் பேசாமல் நகர முயன்றாள் மாலினி...

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் போனால் எப்படி.. அது சரி.. நீ எப்படி என் கேள்விக்குப் பதிலைச் சொல்ல முடியும்.. நீயே பேய்.. உன்னைப் போய் இன்னொரு பேய் துரத்த முடியுமா..? ஹா... ஹா.." என்று தன் நகைச்சுவையை தானே ரசித்து ஸ்வேதா சிரிக்க ஆரம்பிக்கவும், மாலினிக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவள் நின்று நிதானமாக ஸ்வேதாவை ஏற இறங்க அளவிடும் பார்வை ஒன்றைப் பார்த்து வைத்தாள்...

"என்ன அப்படிப் பார்க்கிற..?" இகழ்ச்சியாக கேட்டாள் ஸ்வேதா...

"இல்லை.. உனக்கு காலிருக்கான்னு பார்க்கிறேன்.." நிதானமாக பதிலைச் சொன்னாள் மாலினி..

"என்ன சொன்ன.. ஏன் அப்படிச் சொன்ன..?"

"பின்னே.. பேயைப் பற்றியே பேசுகிறாயே.. மனுஷியாக இருந்தால் எப்போதும் பேயின் நினைவு இருக்காதே.. அதுதான் அப்படிப் பார்த்தேன்.."

"யாரிடம் பேசுகிறாய் என்பதை நினைவில் வைத்துப் பேசு.."

"உன்னையெல்லாம் என்னால் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது..."

"மாலினி.."

"சும்மா கத்தாதே.. போ.. போய் படுத்துத் தூங்கும் வழியைப் பாரு.. பேயைப் பற்றி நீதான் பேசுவாய்.. வேறு யார் பேசுவாங்க.."

மாலினி அசட்டையாக ஸ்வேதாவைப் பார்த்தபடி அவளது அறைக்குள் போய்விட.. ஸ்வேதா கொதித்துக் கொண்டிருந்த மனதை குளிரவைக்கும் வகை அறியாமல் கையைப் பிசைந்து கொண்டாள்..

'சை.. இவளை மட்டும் என்னால் மட்டம் தட்டவே முடியலையே.. எப்போது வாயைத் திறந்தாலும் என் வாயை மூடவைத்துவிட்டு அசால்ட்டாக போய் விடுகிறாளே...'

பால்கனியில் வந்த காற்றுகூட ஸ்வேதாவின் மன வெப்பத்தை தணிக்க முடியவில்லை.. கோபத்துடன் திரும்பிய ஸ்வேதா, மாடிப்படியில் இறங்கி வந்து கொண்டிருந்த பிரபாகரனைக் கண்டதும் அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டாள்.. அவளது கண்கள் நிலைக்குத்தி விட்டன... விளக்கு எரியாத பால்கனி இருளில் அவளது உருவம் கண்களுக்குத் தெரியாததால்.. பிரபாகரன் தன்னை யாரும் கவனிக்கவில்லை என்ற எண்ணத்துடன் அவனது அறைக்குப் போய்விட்டான்..

ஸ்வேதா அப்படியே இருளோடு இருளாக கலந்து சிலையாய் சமைந்து நின்றுவிட்டாள்...

அவளால் இன்னுமொரு தோல்வியைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. பணம் படைத்தவள்.. அந்தஸ்து அதிகமுள்ள குடும்பத்தில் பிறந்தவள்.. பரம்பரையாய் வரும் பெயரையும் புகழையும் கொண்டவள்.. அவளை விட்டுவிட்டு அன்றாடங் காய்ச்சியின் குடும்பத்தில் பிறந்த பெண்ணை கருணாகரன் திருமணம் செய்து கொண்டான்...

இன்று அதே வழியில் மாதச் சம்பளம் வாங்கும் பெண்ணின் பின்னால் பிரபாகரனும் போய்விட்டானா..?

காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதுதான் அவள் கண்ட பலனா?

தினகரனின் மீது என்றுமே ஸ்வேதாவிற்கு நம்பிக்கை இருந்ததில்லை. அவன் ஓர் உல்லாசி.. காதல் மன்னன். கல்லூரிக் காலத்திலேயே வாரம் ஒரு காதலியுடன் ஊரைச் சுற்றுவான்..

அவனாவது ஸ்வேதாவைத் திரும்பிப் பார்ப்பதாது. அவனைத் தன் வலையில் சிக்க வைக்க முடியாதென்று ஸ்வேதாவிற்கு மிக நன்றாகத் தெரியும். எதற்கும் இருக்கட்டுமென்றுதான் அவள் அவ்வப்போது காதல் கணைகளை தினகரனின் மீது வீசிக் கொண்டிருந்தாள்..

ஊரையே வலம் வந்த அந்த உல்லாசி.. இவளைத் திரும்பிப் பார்க்காமல் போனதுதான் கொடுமை.. அப்படி அவன் வெறுமனேயேவாவது பழக முயன்றிருந்தால்.. அதை வைத்து அவனை மடக்கிவிடலாம் என்று திட்டம் போட்டு வைத்திருந்தாள் ஸ்வேதா...

'அத்தை.. அத்தை.. உங்களை நம்பித்தானே என் அப்பா என்னை இங்கே விட்டுவிட்டுப் போனார்..? உங்கள் மகனை நம்பித்தானே நானும் அவர் கூடப் பழகினேன்.. காதலிக்கிறேன் என்று சொல்லி என் மனதில் ஆசையை வளர்த்துவிட்டு இப்போது கை கழுவிவிடப் பார்க்கிறாரே அத்தை.. இதற்கு ஒரு நியாயத்தை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.. கோட்டையூர் ஜமீன்தார் பெற்ற குலக்கொழுந்து இப்படிச் செய்யலாமா..' என்றெல்லாம் நியாயம் கேட்க...

பக்கம் பக்கமாய் வசனங்களை எழுதி மனப்பாடம்கூட செய்து வைத்திருந்தாள்…

ஆனால் பாவம்.. தினகரன் அவளுக்கு அந்த வசனங்களை ஒப்பிக்கும் வாய்ப்பைத் தரவேயில்லை…

அது என்னவோ.. அவனுக்கு அவளைக் கண்டாலே ஆகாமல் போய்விட்டது.. அது எதனால் என்பதைக் கண்டு பிடித்து நிவர்த்தி பண்ண ஸ்வேதா ஆனவரைக்கும் முயன்று பார்த்தாள்.. அவன் அவளைக் கிட்டே நெருங்கவிட்டால் தானே அவளால் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும்..? அவன்தான் அவளைக் கண்டதுமே எட்டடிக்கு நகர்ந்து தாவிப் போய்விடுவானே..

அந்தக் காரணத்தினாலேயே பிரபாகரனை மலை போல் நம்பிக் கொண்டிருந்தாள் ஸ்வேதா…

தனக்கு முன்னால் தம்பிக்குத் திருமணம் செய்துவிட்ட பிரபாகரனை அந்தக் காரணத்தை நினைவு படுத்தியே திருமணம் செய்து கொள்ளும் தீவிர முயற்சியில் இருந்தாள் அவள்…

"பாவம் எங்க பெரியத்தான்.. தியாகி.. குடும்பத்துக் காக உழைத்து உழைத்துக் கல்யாணமே வேண்டாமுன்னு இருக்கிறாரு.. எல்லோரும் அவரை மறந்துவிட்டு சொகுசாய் வாழலாம்.. சொந்த மாமன் மகன்.. என்னால் அப்படி இருக்க முடியுமா..? நான் ஒரு நாளும் என் பெரியத்தானை கைவிட மாட்டேன்…"

அந்த வீட்டிற்கு வரும் உறவினர்களிடம் அவள் இப்படியே பேசிவைக்க.. விஷயம் நர்மதாவின் காதுக்குப் போய்விட்டது…

"என் மகனை பாவம்னு சொல்கிற அளவுக்கு அவனை விட நீ நன்றாய் வாழ்கிறாயா.. என் மகன் ஊர்… உலகத்தையே கைதூக்கி விடுகிறவன்.. அவனைக் கைவிடாமல் இருக்க நீ யார்..? இந்த வீட்டில் இருந்து கொண்டு இது போன்ற பேச்சுகளை நீ பேசுவதாக இருந்தால் இனிமேல் இங்கே இருக்காதே.. உன் ஊருக்கு மூட்டையைக் கட்டு…

பிரபாகரனுக்குப் பெண்ணைக் கொடுக்க நீ நானுன்னு போட்டி போட்டுக் கொண்டு சொந்தக்காரங்க வரிசையில நிற்கிறாங்க.. அவனுக்கு பிடித்த பெண்ணை அவன்தான் கை காட்டணுமுன்னு நான் காத்திருக்கிறேன்.. இதில நீ புதுசாய் கதை பரப்பிக்கிட்டு இருக்கிறாயா..? இனிமேல் இப்படிப்பட்ட பேச்சுகளை நீ பேசினேன்னு தெரிந்தது.. தொலைத்து விடுவேன்.. ஜாக்கிரதை..."

நர்மதாவின் காளி அவதாரத்தை அன்று தரிசிக்க நேர்ந்த ஸ்வேதா, நடுநடுங்கிப் போய் தன் அணுகு முறையை மாற்றிக் கொண்டு விட்டாள்...

"என் அத்தையின் வீட்டில் வாழ எனக்கில்லாத உரிமையா..?"

"என் அத்தான்கள்தான் என் உயிர்.."

"எனக்கு பெரியத்தானை ரொம்ப பிடிக்கும்..."

"தினா அத்தானின் மேல் எனக்குப் பிரியம் அதிகம்.."

"அத்தை.. நம் வீட்டுத் தோட்டத்தில் ரோஜா மலர்ந்திருக்கு..."

"நம்ம கார் எங்கே அத்தை..."

"பொன்னி.. எங்க வீட்டில் வேலை செய்வதாக இருந்தால் சுறுசுறுப்பா இருக்கணும்..."

"செந்தாமரை.. ஏன் பாத்திரத்தை டொம்முன்னு வைக்கிற.. இது எங்க குடும்பத்திலே பரம்பரையாய் வரும் பாத்திரம்.."

"பரந்தாமன்... இப்படியா காரை அழுக்காக வைத்து இருப்பது.. தெருவில் போனால் எங்க வீட்டுக் கார் தனியாக தெரிய வேண்டாமா..?"

"முனுசாமி.. எங்க வீட்டுக்குள்ள எப்படிப் பார்த்துப் பார்த்து பராமரிக்கிறோமோ... அதைப் போல தோட்டத்தையும் பராமரிக்கணும்னு நினைப்போம்.. எங்க தோட்டத்துக்குள்ள இவ்வளவு புல்லா..? முதலில் களையெடுங்க..."

இப்படி நர்மதாவின் உறவைப் பயன்படுத்தி உரிமை கொண்டாடுபவளிடம் குற்றம் கண்டுபிடிக்க நர்மதாவினா

லேயே முடியவில்லை...

அவளது அலட்டலைத் தாங்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு.. 'அடக்கிவாசி...' என்பதைத் தவிர அவளால் வேறு எதையும் சொல்ல முடியவில்லை...

ஆனால்.. என்னதான் வாய்க்கு வாய்... 'எங்க வீடு.. எங்க குடும்பம்.. எங்க பொருள்கள்.. எங்க தோட்டம்.. எங்க கார்..' என்று சொன்னாலும்.. நர்மதா முதல் வீட்டு

வேலையாள்கள் வரை அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாமல் அலட்சியம் செய்ததைத்தான் ஸ்வேதாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'இது எங்க வீடு..' என்று அவள் ஆரம்பித்தாலே... வேலையாள்கள் நமட்டுச் சிரிப்பைச் சிரித்து ஸ்வேதாவிற்கு நெஞ்சு வலியை வர வைத்தார்கள்...

'இந்தம்மா காமெடி பீஸ்..' என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்களோ என்ற சந்தேகம் ஸ்வேதாவிற்கு நீண்ட நாள்களாகவே உண்டு...

வேலையாள்களை அழைக்க நினைத்து சசிரேகா லேசாக வாயைத் திறந்தாலே...

"என்னங்கம்மா..." என்று அவளருகே போய் கேட்கும் வேலையாள்கள்.. ஸ்வேதா கரடியாய் கத்தி அழைத்தாலும் காதில் விழாததைப் போன்ற பாவனையுடன் ஏன் நகர்ந்து விடுகிறார்கள் என்பது இதுநாள் வரை ஸ்வேதாவிற்கு புரியாத புதிராகவே இருந்தது...

மதிப்பும் மரியாதையும் தானே வர வேண்டும்.. அதைக் கேட்டு வாங்கக் கூடாது என்பதை அவள் அறியாமல் போனாள்...

அன்பும் பாசமும் தானாக ஒருவரின் மனதில் சுரக்க வேண்டும்.. வெறும் உறவு முறையை மட்டும் வைத்து அவை வந்துவிடாது என்பதும் அவளுக்குத் தெரியாமலே இருந்தது..

கட்டாயப்படுத்தி காதலை வரவைக்க முடியாது.. பூவொன்று தானாக மலர்வதைப் போல காதலும் தானாகவே மலர வேண்டும்.. அப்படி மலர்ந்தால்தான் அது காதல்.. மற்றதற்கு பெயரே வேறு என்பதையும் யாரும் அவளுக்கு சொல்லியிருக்கவில்லை…

## 51

**இனமென்று விளங்காத உணர்வை..**

**நீ என்னுள்ளே விதைத்த பொழுதை**

**என்னவென்று நான் சொல்ல..?**

கண்முன்னே பிரபாகரனின் காதல் பார்வை மாலினியின் மேல் படிந்துவிட்ட நிகழ்வை ஏற்றுக்கொள்ள மறுத்து.. ஸ்வேதா பால்கனியின் இருளிலேயே மறைந்து அமர்ந்து விட்டாள்..

அவளுக்கு பிரபாகரனின் மீது ஒருபோதும் காதல் இருந்ததில்லை.. நர்மதாவின் மூன்று மகன்களில் ஒருவனை வளைத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று மட்டுமே மாணிக்கவாசகம் அவளுக்குப் போதித்திருந்தார்…

அது எவன் என்ற முடிவை எடுக்கும் உரிமையை ஸ்வேதாவிற்கு அவர் கொடுத்திருந்தார்..

ஸ்வேதா யோசித்துப் பார்த்தாள்.. தினகரனுக்கும் அவளுக்கும் சம வயது.. பிரபாகரனைப் பார்த்தாலே அவளுக்கு பயமாக இருக்கும்.. அவன் மற்றவர்களை அதட்டும்போது இங்கே ஸ்வேதாவின் அடிவயிறு கலங்கி விடும். அதனால் அவன் பக்கமே முதலில் அவள் பார்வையைத் திருப்பவில்லை.. அவளைவிட மூத்தவனாக தினகரனைப் போல பெண்களை அதிகமாக ரசிக்கும் ரசிகனாக இல்லாமல் கண்ணியவானாக பிரபாகரனைப்

போல அதட்டல் இல்லாமல் அமைதியானவனாக இருந்த கருணாகரனை வளைத்துப் போட முடிவு செய்தாள்..

முடிவை அவள் செயல்படுத்தும் முன்னாலேயே கருணாகரனுக்கும் சசிரேகாவிற்கும் திருமணம் முடிவாகி விட்டது...

அவளுக்கென்ன.. கருணாகரனின் மீது காவியக் காதலா இருந்தது..? அதனால்.. உடனே தன் பார்வையின் போக்கை மாற்றிக் கொண்டு தினகரனைக் காதல் பார்வை பார்க்க ஆரம்பித்தாள்..

அதற்கு முன்னாலாவது உறவுக்காரி என்று அவளிடம் முகம் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்த தினகரன்... அவளது காதல் பார்வையைக் கண்டதும், விளக்கெண்ணெயைக் குடித்தவன் போல முகத்தை சுளிக்க ஆரம்பித்து விட்டான்.. அவளைத் தூரத்தில் கண்டாலே..

'எஸ்கேப்..' என்று கூவிக்கொண்டு ஓடிவிடும்படி பாதிப்புக்கு ஆளாகிவிட்டான்...

வாழ்நாள் பூராவும் நடுங்கிக் கொண்டு இருந்தாலும் பரவாயில்லை... பிரபாகரனை கணக்கு பண்ணினால்தான் தனது எண்ணம் நிறைவேறும் என்று ஸ்வேதா மூளையைக் கசக்கி யோசித்துக் கொண்டிருக்க.. அவனையும் சத்த மில்லாமல் கணக்குப் பண்ணிக் கொண்டுவிட்ட அந்த சென்னை சிங்காரி மாலினியை என்ன செய்தால் தகும் என்ற ஆவேசம் அவளுக்குள் உற்பத்தி ஆனது...

அவளே நொந்து நூலாகிக் கொண்டிருக்கும் போது.. பவித்ரா ஹாலுக்குள் சுற்றுமுற்றும் பார்த்தபடி வந்து சேர..

'இவள் பின்னால் யார் வரப் போகிறாங்களோ.. என்று அந்தக் காட்சியைக் காண மனதை திடப்படுத்திக் கொண்டு உற்றுப் பார்த்தாள்...'

"என்ன பவித்ரா.. யாரைத் தேடுகிற..?" என்று கேட்டபடி அங்கே வந்து நின்றான் தினகரன்...

கடைசியில் தினகரனை பவித்ரா கணக்குப் பண்ணி விட்டாளா.. அது எப்படி.. கணக்குப் பண்ணுவதில் கைதேர்ந்த ஸ்வேதா தோற்றுப் போக... கணக்கைப் பற்றிய அரிச்சுவடிகூடத் தெரியாத 'மக்கு மாலினி'யும்.. 'பேக்கு பவித்ரா'வும் வெற்றி பெற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்று மண்டையை உடைக்காத குறையாய் யோசித்தாள் ஸ்வேதா...

தினகரனைக் கண்டதும் பவித்ராவின் பார்வை நாணத்துடன் தரையில் படிவதையும் அவளது உடலில் ஒரு பரபரப்பு தோன்றுவதையும் ஸ்வேதா பார்த்துக் கொண்டிருந்தாள்...

'என்னமாய் ஜாலம் பண்ணுகிறா.. ஜாலக்காரி...' பெண்மையின் இயல்பான குணங்களை ஜாலம் என்று தான் அவளால் கணிக்க முடிந்தது...

"அது வந்து.. வந்து.." பவித்ரா தடுமாற..

"அதுதான் வந்துவிட்டாயே.. என்னன்னு சொல்லு.." என்று உல்லாசமாக நகைத்தான் தினகரன்...

"நான்.. நான்..."

"நீ.. நீ..?"

"நான் வந்து.. மாலினியை வந்து.. பார்க்க வந்தேன்.."

ஒரு வழியாக அவள் சொல்லி முடிக்க.. அவளது வெட்கத்தை ஒருவித ஆவலுடனும்.. ஆசையுடனும் ரசித்துப் பார்த்தான் தினகரன்...

அவனுக்கு எப்போதுமே பவித்ராவிடம் தென்படும் இந்த நாணம் மிகவும் பிடிக்கும்..

"ஏன் இப்படி வெட்கப்படுகிறாய் பவித்ரா.. என் முகத்தைப் பார்த்துத்தான் பேசேன்..."

அவன் தூண்ட.. பார்வையை உயர்த்தி அவன் முகம் பார்க்க முயன்று முடியாதவளாக தோல்வியுடன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் பவித்ரா..

"என்ன ஆச்சு..?"

"என்னால் முடியலை.."

"ஏன்..?"

"தெரியலை..."

"சரியாப் போச்சு போ.. விட்டால் இஞ்சி இடுப்பழகான்னு பாடிட்டு.. பாட்டே வரலை.. காத்துதான் வருதுன்னு சொல்லிவிடுவ போல இருக்கே..."

தினகரன் பலமாகச் சிரிக்க.. வெட்கத்துடன் அவனை கள்ளப்பார்வை பார்த்தாள் பவித்ரா.. அவளது பார்வையைக் கண்டதும் சிரிப்பு குறையாதவனாக புருவங்களை உயர்த்தினான் அவன்..

"என்ன..?"

"ஒன்றுமில்லை.."

"சும்மா சொல்லு..."

அவன் அவளை வற்புறுத்திக் கொண்டிருந்தபோது..

"நான் சொல்லவா...?" என்று கேட்டபடி அங்கே வந்தாள் மாலினி...

மாலினியைக் கண்டதும் பவித்ராவின் முகமும் தினகரனின் முகமும் ஒன்றுபோல மலர்வதைக் கண்ட ஸ்வேதா...

'இவள் பாலுக்கும் காவல்.. பூனைக்கும் தோழனா..'

அது நேரம் வரை பவித்ராவின் வெட்கத்தை ரசித்துக் கொண்டிருந்த தினகரனின் பார்வை வினாடிப் பொழுதிற்குள் விலகி.. மாலினியை ரசிக்க ஆரம்பிப்பதை கவனித்த ஸ்வேதா...

'அடப்பாவி.. இவன் என்னைவிட பெரிய எத்தனாக இருப்பான் போல இருக்கே.. நொடிக்கொரு தரம் சைட்டை மாற்றுகிறானே.. இவன் முன்னால் நான் எம்மாத்திரம்..' என்று எண்ணிக் கொண்டாள்...

"ஏன் பேசாமல் நிற்கிறீர்கள் மாலினி.. உங்கள் பேச்சைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கும் என்னை ஏமாற்றி விடாதீங்க.. பேசுங்க மாலினி.. பேசுங்க..."

"என்ன பவித்ரா..! உங்க சின்ன அத்தானின் டிரஸ்ஸைப் பார்த்தா மாடர்ன் ஆள் போல இருக்கு.. ஆனா, இவர் பேச்சைப் பார்த்தா அப்படித் தெரியலையே..."

"ஏங்க.. என் பேச்சுக்கு என்ன குறை..?"

"நீங்க ஜெமினி கணேசன் காலத்தில் பிறக்கலை. அதுதான் குறை..."

"என்னவோ போங்க.. கடைசியில் என்னைக் காதல் மன்னனாக்கிட்டீங்க..."

"இப்பச் சொன்னீங்க பாருங்க.. இதுதான் நூற்றுக்கு நூறு உண்மை.."

தினகரன், மாலினியின் பேச்சை ரசித்துச் சிரித்தான்.. அவன் கண்களில் பாராட்டு தெரிந்தது...

"பவித்ரா ஏன் அப்படிப் பார்த்தாள்னு சொல்லவா..?"

"சொல்லுங்களேன்..."

"நீங்க இஞ்சி இடுப்பழகான்னு உங்களை நீங்களே வர்ணிச்சுக்கிட்டீங்க இல்லையா.. அது உண்மையான்னு உங்க இடுப்பு சைஸை ஆராய்ச்சியாகப் பார்த்தாள்.. இல்லையா பவி.."

"மாலினி.. ப்ளீஸ்..."

பவித்ராவின் முகம் குங்குமாய் சிவந்துவிட.. தினகரனின் பார்வை மீண்டும் அவள் மேல் படிந்தது.. அவனின் பார்வை மனதிற்குள் ரகசிய சந்தோஷத்தை உண்டாக்கினாலும்.. அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாத தவிப்புடன் பவித்ரா, மாலினியின் முதுகிற்குப் பின்னால் மறைந்து கொண்டாள்...

"தூங்கப் போகாமல் இங்கே என்ன மாநாடு போட்டுக் கிட்டு இருக்கீங்க..." நர்மதாவின் குரல் காற்றோடு கலந்து வர...

"குட்நைட் மாலினி.." என்றபடி பவித்ரா சிட்டாக பறந்துவிட்டாள்...

மாலினி அங்கே நின்றுகொண்டிருக்கும் போது நகர மனமில்லாமல் தினகரன் நிற்க.. பவித்ராவின் மனதை அவனிடம் தெரியப்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் மாலினியும் தயங்கி நின்றாள்...

"தினா... உன்னிடம் ஒன்று கேட்க வேண்டுமே.. பிரபாகரன் கையில் செல்போனோடு அவனது அறையிலிருந்து வெளிப்பட்டான்.."

"என்ன அண்ணா..."

மாலினி அங்கு நிற்பதை மறந்தவனாக தினகரன்.. பிரபாகரனின் அருகில் செல்ல.. அவனிடம் தீவிரமாய் எதையோ விவாதிக்க ஆரம்பித்த பிரபாகரன், மாலினியை அங்கு கண்டதும் புருவங்கள் உயர்த்தினான்..

"அவ்வளவுதான் தினா.. இந்த டீடெயில்களை எடுத்து வை. நாம் காலையில் பேசிக் கொள்ளலாம்.." என்று இளைய சகோதரனை அனுப்பிவிட்டு கடுமையான முகத்துடன் மாலினியின் அருகில் வந்தான் பிரபாகரன்..

அவனுடைய முகத்தைப் பார்க்கவே மாலினிக்கு பயமாக இருந்தது.. சற்று முன்னால்.. அவனது அனைத்து அடையாளங்களையும் மறந்து அவளது மடியில் கிடந்த வனா அவன் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் மாலினி...

"இங்கே என்ன செய்கிறாய்..?" அவன் முகம் சுளித்தான்...

"பேசிக் கொண்டிருந்தேன்..." அவள் அமைதியாகச் சொன்னாள்...

"யாருடன்..?" கேள்வி கடுமையாக வெளிப்பட்டது..

"பவித்ராவுடன்.." பொறுமையாக பதில் சொன்னாள் மாலினி..

அவளுக்குத் தெரியும்.. இந்த பதிலைக் கேட்டவுடன் அவனது கடுமை இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விடும் என்று...

அவள் நினைத்ததுதான் நடந்தது..

"பவித்ராவுடனா..?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் பிரபாகரன்..

"ஆமாம்.."

"இங்கே தினகரனும் நீயும்தானே நின்று பேசிக் கொண்டிருந்தீர்கள்..."

"நான் வரும்போது பவித்ராவும் தினகரனும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்..."

"அவள் எங்கே..?"

"அத்தை தூங்கச் சொல்லி அதட்டியவுடன் இப்போது தான் ஓடினாள்..."

"நீ ஏன் போகவில்லை..."

"நீங்கள் வந்தால் என்னால் உடனே எப்படிப் போக முடியுமாம்..."

பவித்ராவின் காதலைப் பற்றி அந்த நேரத்தில் மாலினி, பிரபாகரனிடம் சொல்லியிருக்கலாம்.. அவளின் காதலை தினகரனிடம் தெரியப்படுத்ததான் அவள் நின்றிருந்தாக கூறியிருந்திருக்கலாம்...

அவள் அந்த இரண்டையும் செய்யாமல் விட்டு விட்டாள்.. பவித்ரா.. மாலினியை நம்பி அவளது மனதிலிருந்த காதலைச் சொல்லியிருக்கும் போது அதை தன் காதலனிடம்கூட சொல்லிவிடக்கூடாது என்ற நாகரிகத்தை கடைப்பிடித்தாள் மாலினி...

அன்று அவள் பவித்ராவின் காதலை பிரபாகரனிடம் சொல்லாமல் மறைத்த செயலுக்காக பின்னாளில் வருத்தப்பட வேண்டி வரும் என்பதை அப்போது அவள் அறியாமல் போனாள்...

ஒருவேளை அறிந்திருந்தாலும் மாலினி.. பவித்ராவின் காதலை வெளிப்படுத்தியிருக்க மாட்டாள்.. இன்னொருவரின் அந்தரங்கத்தை பகிரங்கப்படுத்தினால் தான் தனக்கு வாழ்க்கை கிடைக்கும் என்ற நிலை வருமானால்.. அப்படிப்பட்ட வாழ்க்கையே வேண்டாம் என்று சொல்லக் கூடிய பெண் மாலினி...

அதனால் அவள் அழகாக புன்னகைத்து தன் காதலனை வசீகரித்தாள்.. அவனும் அவளின் அந்த வார்த்தைகளிலும் பிரத்யேகப் புன்னகையிலும் மயங்கிப் போனான்...

"போகாதே.. என்னுடன் வந்துவிடு..."

"எங்கே.."

"என் ரூமுக்குத்தான்..."

"அதோ அத்தை வருகிறாங்க..."

"குட்நைட் கண்ணம்மா.."

வராத நர்மதாவை வருவதாகக் கூறி பிரபாகரனை சமாளித்துவிட்ட மாலினி.. புன்னகையுடன் அவளது அறைக்குப் போனாள்.. ஸ்வேதா இருளில் இருந்து வெளியே வந்தாள்..

சற்று முன்னால் நடந்த சம்பவங்களில் இருந்து சில விஷயங்கள் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தன.. அதன் மூலம் செயல்பட வேண்டிய வழியும் அவளுக்கு தெரிந்து விட்டது...

52

**உன்னை சந்தித்தபின்தான்..**

**என்னை சிந்திக்க ஆரம்பித்ததை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஸ்வேதா ஹாலில் நடந்த உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்தது வெறும் இருபத்து நான்கு நிமிடநேரம்தான்.. அந்த நேரத்திற்குள் அவள் அந்த நால்வரின் மனநிலையை மிகச் சரியாக கணித்து விட்டாள்..

பவித்ரா, தினகரனைப் பார்க்கும் பார்வையிலேயே காதல் வழிந்தது... அவனுடன் பேசும்போது தடுமாறினாள். அவளது ஒவ்வொரு அசைவும் தினகரனின் மேல் அவளுக்கிருந்த அளவு கடந்த காதலை வெளிப்படுத்தியது...

தினகரன் என்றுமே அழகிய பெண்களை ரசிப்பவன். அவர்களோடு பேசிப் பழக அவனுக்கு மிகவும் பிடிக்கும். பவித்ரா அழகானவள் என்பதை ஸ்வேதா அளவு கடந்த பொறாமையோடு ஒப்புக்கொள்வாள்.. அப்படிப்பட்ட அழகியான பவித்ரா.. நாணப் பார்வையோடு முன்னால் வந்து நின்றால் தினகரன் பார்க்காமல் விடுவானா..? பேசாமல் தான் போவானா..? மற்றபடி காதலுக்கும் அவனுக்கும் காததூரம் என்பது ஸ்வேதாவின் அபிப்பிராயம். அதற்கேற்ப தினகரன், பவித்ராவைப் பார்த்த பார்வையில் சுவராஸ்யம் தான் தென்பட்டது. காதல் துளிக்கூட இல்லை என்பதை ஸ்வேதா கவனிக்கத்தான் செய்தாள்...

மாலினிக்கு பவித்ராவுடன் எப்படி இவ்வளவு இறுக்கமான பிணைப்பு ஏற்பட்டது என்று மனதிற்குள் பொறாமையுடன்

நினைத்துக் கொண்டாள்.. மாலினிக்கும் பவித்ராவிற்கும் இடையே இருந்த நட்பினாலேயே மாலினி... தினகரனுக்கும் பவித்ராவிற்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வந்திருப்பாள் என்பது ஸ்வேதாவின் அனுமானம்.

ஆனால்.. மாலினியைக் கண்டவுடன் பவித்ராவை மறந்து மாலினியின் மேல் தினகரன் பார்வையைப் படரவிட்டது தான் அவளுக்கு எரிச்சலை ஊட்டியது... பவித்ராவையே மறக்கடிக்கும் வசீகரம் மாலினியிடம் இருப்பதை ஸ்வேதாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. மாலினி, தினகரனை பார்த்த பார்வையில் காதல் இல்லை.. நட்புத்தான் இருந்தது..

பிரபாகரன் என்னவோ தினகரனைத் தேடித்தான் அங்கு வந்தான்.. ஆனால், தினகரனுடன் மாலினி நின்று பேசிக் கொண்டிருந்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதை அப்பட்டமான கடுமையைக் காட்டிய அவனது முகம் ஸ்வேதாவிற்கு காட்டிக் கொடுத்து விட்டது.. ஸ்வேதாவிற்கு பிரபாகரனைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. தன் உடைமையென்று அவன் நினைக்கும் எதன்மீதும் மற்றவர்களின் பார்வை படுவதை அவன் சகித்துக் கொள்ள மாட்டான்.. அந்த ஒரு காரணத்துக்காகவே அவனுக்குப் போய் மனைவியாக மாட்ட வேண்டுமா என்று ஸ்வேதா பலமுறை யோசித் திருக்கிறாள்.. ஆனால்.. கோட்டையூர் ஜமீன் வமிசத்தில் கொடியை நாட்ட அவனுக்கு மனைவியாவதைத் தவிர வேறுவழியில்லை என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே அவனைத்துரத்திக் கொண்டிருந்தாள்.. மொட்டைமாடியில் தன்னோடு தனித்திருந்த காதலியையே அவ்வளவு கோபமாய் பிரபாகரன் பார்த்து வைத்ததுதான் மிகச் சாதகமான அம்சமாக ஸ்வேதாவிற்கு தோன்றிவிட்டது..

ஸ்வேதா அந்த நால்வரின் வாழ்வையும் அந்தக் கணத்தில் தன் கையில் எடுத்துக் கொண்டாள்...

எப்போதுமே போலீஸை விடத் திருடன்தான் அதிகப் புத்திசாலியாக இருப்பான். அவனுக்குத்தான் எந்த வழியில்

போனால் எதை அடைய முடியும் என்ற ஆயிரம் குறுக்கு வழிகள் தெரிந்திருக்கும்...

அந்த வகையில் ஸ்வேதா அதிபுத்திசாலி..! அவளுக்கு எங்கே அடித்தால்.. எங்கே வலிக்கும் என்ற நுட்பம் இப்போது தெரிந்துவிட்டிருந்தது...

அன்று இரவு முழுவதும் அவள் தூங்காமல் அந்த நால்வரைச் சுற்றியும் எப்படி வலை பின்னுவது என்ற யோசனையோடு இருந்தாள்.. விடிவதற்கும் மனதிற்குள் திட்டத்தை வகுத்தும் விட்டாள்.. எப்போதுமே அதிகாலையில் எழுந்து கொள்ளும் பழக்கமில்லாத ஸ்வேதா அன்று அதிகாலையிலேயே விழித்துக் கொண்டு விட்டாள். லேசான கொட்டாவியோடு அறையை விட்டு வெளியே தலைநீட்டியவள்.. பொன்னியை அழைத்தாள்..

"என்னங்கம்மா.." அவள் நின்ற இடத்திலிருந்தே கேள்வி கேட்டாள்...

'இவளுக்கிருக்கிற திமிரைப் பார்.. இதுவே அந்த சசியும் மாலினியும் கூப்பிட்டால் முப்பத்திரண்டு பல்லையும் காட்டியபடி.. என்னங்கம்மான்னு நாலுகால் பாய்ச்சலில் போய் கேட்டிருப்பாள்.. ம்ஹூம்.. அவளுகதானே வேலையாளுக்கு சரிசமமா தோள் மேல கை போட்டு பேசுவாளுக.. என்னால் அது முடியுமா..?' என்று முதலில் மனதிற்குள் எரிச்சல்பட்டு.. அடுத்த நொடியே சமாதானமும் சொல்லிக் கொண்ட ஸ்வேதா..

"காபி கொண்டு வா.." என்றாள்...

"இப்போதான் மாடியிலிருந்த எல்லாருக்கும் காபி கொண்டு வந்தேன்..."

"எனக்கும் சேர்த்து கொண்டு வந்திருக்க வேண்டியது தானே..."

"அது எப்படிம்மா.. மத்தவங்க எல்லோரும் சேவல் கூவும்போதே எழுந்திருச்சு சேவலை விரட்டி விடற ஆளுக... நீங்க எப்போ எழுந்திருப்பீங்கங்கறது உங்களுக்கே தெரியாது.. உங்களுக்குப் போய் விடியறப்பவே காபி

கொண்டாந்தா என்னைச் சும்மாவா விடுவீங்க..? ஆய்ஞ்சு விட மாட்டீங்க..? ஏற்கெனவே உங்ககிட்ட இதுக்காக ஏராளமாதிட்டு வாங்கி கட்டிக்கிட்டு இருக்கேன்.. அது போதாதா.. புதுசா வேற வாங்கிக் கட்டிக்கணுமா..?"

"உன்கிட்ட ஒரு வார்த்தை கேட்டால்.. நீயேன் ஒரு மணி நேரத்துக்கு மூச்சுவிடாமல் பதில் சொல்ற..? போ.. போய் உன் வேலையைப் பாரு..."

"அப்போ உங்களுக்கு காபி வேண்டாமா..?"

'எப்படிக் கேட்கிறாள்..?' ஸ்வேதா பல்லைக் கடித்துக் கொண்டே...

"ஏன்.. அது உன் வேலையில்லையா..?" என்று கேட்டாள்...

"ஏம்மா... காலைலேயே என் வாயைப் பிடுங்கறீங்க.. கீழே கைவேலை ஒண்ணைக் கொடுத்து பார்க்கச் சொல்லி பெரியம்மா சொன்னாங்க.. அதை விட்டுப்புட்டு மாடிக்கு வந்து உங்ககிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கறேன்.. உங்களுக்கு காபி கொண்டு வரணும்னா நான் என் கைவேலையை விட்டுப்புட்டு வரணும்..."

"அடேங்கப்பா.. அந்த வேலையைத்தான் நீ செய்வாயா..? வேறு வேலையைச் செய்ய மாட்டாயா.."

"நீங்கதானம்மா சொன்னீங்க..."

"என்ன சொன்னேன்..?"

"என் வேலையை மட்டும் பார்க்கச் சொல்லிச் சொன்னீங்க..."

"இப்போ நீ என்ன சொல்ல வருகிற.. காபி கொண்டு வருவாயா மாட்டாயா..?"

"பெரியம்மாகிட்ட ஒரு வார்த்தை சொல்லிவிட்டு கொண்டு வரேன்..."

நர்மதாவின் பேச்சை எடுத்ததுமே ஸ்வேதா கப்சிப் பென்று அமைதியாகி விட்டாள்..

"எனக்கு காபியே வேணாம் தாயி.. நீ கீழே போ..."

"எனக்கெதுக்கும்மா பொல்லாப்பு.."

"அடேங்கப்பா.. நீ பொல்லாப்பிற்கு பயந்தவள்தான்.. போ.. போ..."

'காலங்கார்த்தாலேயே இந்தம்மா கண்ணுல நான் படுவேனா.. அப்பவே மாலினியம்மா வாயைப் பார்க்காமல் நான் கீழே ஓடியிருக்கணும்..' மனதிற்குள் குமைந்த படி பொன்னி அங்கிருந்து நகரப் போனாள்...

"என்ன வாய்க்குள் முணுமுணுக்கிற..?" என்று அதற்கும் ஸ்வேதா சண்டைக்கு வரவும்..

"எனக்கு பெரியம்மா அந்த மாதிரி எதையும் சொல்லித் தரலைம்மா.. மனசில நினைச்சதை முகத்துக்கு நேரா பேசித்தான் எனக்குப் பழக்கம்.. வேணும்னா வாங்க.. பெரியம்மா கிட்ட இதைப் பற்றிக் கேட்கலாம்..." என்று மிகப் பெரிய அஸ்திரத்தை பிரயோகித்தாள் பொன்னி...

'ஐயையோ.. அந்தக் கிழவி கிட்ட பஞ்சாயத்துக்குப் போனால் காலையிலேயே கதாகாலட்சேபத்தை ஆரம்பித்து என்னை ராமாயணத்தை கேட்க வைச்சிடுமே..' ஸ்வேதா நடுநடுங்கிப் போனாள்...

"சரி.. சரி.. நீ போ.. நான் தோட்டத்துக்குப் போக வேண்டும்.. அப்ப வந்து காபி குடிச்சுக்கறேன்..."

'ஒரு வாய் காபிக்கு இந்தப் பாடா..' என்று ஸ்வேதா அலுத்துக் கொண்டபோது...

'அஃது.. அந்த பயம் மனசில் இருக்கட்டும்.. எங்க பெரியம்மாவா.. கொக்கா.. யாரு கிட்ட..' என்ற பார்வை யோடு பொன்னி கீழே போய் விட்டாள்...

'இந்த வீட்டு வேலையாள்கள் என்னை மிரட்ட அந்த நர்மதா கிழவியின் பெயரைக் கண்டு வைத்திருக்கிறார்களே.. நான் வாயைத் திறந்தாலே.. பெரியம்மா அப்படிச் சொன்னாங்க.. பெரியம்மா இப்படிச் சொன்னாங்கன்னு சொல்லி என் வாயை அடைத்து விடுகிறாங்களே...'

ஸ்வேதாவிற்கு ஏன்தான் சீக்கிரம் விழித்தோமோ என்று இருந்தது.. அந்த எரிச்சலோடு பால்கனியின் பக்கம் அவள் போனாள்.. அங்கே ஏற்கெனவே பிரபாகரன் நின்று கீழே பார்த்துக் கொண்டிருக்க.. யோசனையுடன் பின்வாங்கினாள்...

'இவன் எதைப் பார்க்கிறான்..' என்ற நினைவுடன் சந்தடியில்லாமல் அவளும் ஓரமாகப் போய் எட்டிப் பார்த்தாள்...

காலையிலேயே பிரபாகரன் கடுப்பாக நின்று கொண்டிருந்தற்கு காரணம் அவளுக்குப் புரிந்துவிட்டது..

கீழே தோட்டத்தில்.. தினகரனும் மாலினியும் ரோஜாச் செடியின் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.. தினகரன் கூறிய ஏதோ ஒன்றிற்கு மாலினி குலுங்கச் சிரித்துவிட்டு வீட்டை நோக்கி வந்து விட்டாள்.. அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த தினகரன் ஒரு ரோஜாவைக் கிள்ளி கையில் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி வந்தான்...

பிரபாகரன் கோபத்துடன் திரும்பினான்... அவன் பார்வையில் ஸ்வேதா பட்டு விட்டாள்.. ஒன்று மறியாதவள் போல்..

"தினா அத்தான் என்றுமில்லாமல் இன்றைக்குப் போய் பூவை கிள்ளிக் கொண்டு வருகிறாரே... யாருக்கும் கொடுக்கப் போகிறாரா பெரிய அத்தான்..?" என்று விழி விரிய வினவினாள்...

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்.. போய் அவனிடமே கேளு..." சுள்ளென்று எரிந்து விழுந்தான் பிரபாகரன்..

"அவரிடம் போய் நான் பேசுவதா..? சரியாப் போச்சுபோங்க.. அவருக்கு என்னிடம் பேசப் பிடிக்காதே.. மாலினியிடம் மட்டும்தான் அவருக்கு பேசப் பிடிக்கும்.." அப்பாவி போல அடுத்த அம்பை எய்தாய் ஸ்வேதா...

"என்ன உளறுகிறாய்..?"

"உளறல் இல்லை பெரியத்தான்.. நிஜம்.. அன்றைக்கு என்னடான்னா.. நான் அவர்கிட்டப்

பேசப் போனேன்.. அவர் என்னிடம் முகம் கொடுத்து பேசவேயில்லை.. கொஞ்ச நேரத்தில் பாருங்க.. மாலினி அங்கே வந்தாள்.. தினா அத்தான் அவள்கிட்ட சிரித்துச் சிரித்துப் பேச ஆரம்பித்து விட்டார்..."

அது உண்மையென்பதை பிரபாகரனும் அறிவான் என்பதால் அவன் முகம் கறுத்து விட்டது.. அதை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே ஸ்வேதா பேச்சைத் தொடர்ந்தாள்...

"நேற்றைக்குகூட அப்படித்தான்... எனக்கு தண்ணீர் தாகமாக இருந்தது.. ரூமில் தண்ணீர் இல்லை.. சரி.. ஹாலில் இருக்கிற ஃபிரிஜ்ஜில் தண்ணியைக் குடிக்கலாமுன்னு நினைத்து வந்தால்.. ஹாலில் பவித்ரா.. தினா அத்தானுடன் பேசிக்கொண்டிருந்தாள்.. அவர்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாமுன்னு நான் யோசிச்சு ரூமுக்குள்ளயே நின்று விட்டேன்..."

'இவளாவது மத்தவங்களுக்கு தொந்தரவாக இருக்கக் கூடாதுன்னு நினைப்பதாவது.. ரூமுக்குள் ஒளிந்து நின்று வேவு பார்த்திருப்பாள்..' என்று நினைத்துக் கொண்டாலும்.. ஸ்வேதா சொல்வது உண்மை என்பதையும் சேர்த்தே நினைத்துக் கொண்டான் பிரபாகரன்...

அவன்தான் முதல் நாளிரவில்.. தினகரனும் மாலினியும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தானே...

"பவி.. தினா அத்தானிடம் அவ்வளவு ஆசை ஆசையாய் பேசுகிறாள்.. தினா அத்தான் அவளிடம் சரியாகவே பேசவில்லை.. அந்த நேரம் பார்த்து மாலினி அங்கே வந்தாள்.. உடனே தினா அத்தான் அவளிடம் கலகலன்னு பேச ஆரம்பிச்சுட்டார்.. பாவம்.. பவியின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை..."

இப்படியாவது பவித்ராவின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை என்று சொல்ல முடிந்ததே என்ற

சந்தோஷம் ஸ்வேதாவிற்கு.. ஆனால்.. பவித்ராவின் முகம் எப்படிப் போனால் எனக்கென்ன என்ற கடுப்புடன் பிரபாகரன் அவளை முறைக்க ஆரம்பிக்கவும், சுதாரித்துக் கொண்டு பேச்சை வளர்த்தாள்...

"மாலினி வந்தவுடன் பவித்ராவுக்கு ஏமாற்றமாய் போய்விட்டது போல பெரிய அத்தான்... அவள் பட்டென்று போய் விட்டாள்.. அவள் போய்விட்டதைக் கவனிக்காமல் தினா அத்தான் மாலினியிடம் கடலை போட்டுக் கொண்டிருந்தார்.. அவள் அவர் பேச்சை ரசித்து என்னமாய் சிரித்துக் கொண்டிருந்தாள் தெரியுமா..?"

அதற்கு மேல் அந்தப் பேச்சைக் கேட்கப் பிடிக்காமல் பிரபாகரன் வீட்டுக்குள் செல்லத் திரும்பினான்.. ஸ்வேதா அவ்வளவு எளிதாக அவனைப் போக விட்டு விடுவாளா என்ன..?

"இப்போது தினா அத்தான் கொண்டு வரும் ரோஜாப் பூவை யாருக்குக் கொடுப்பாருன்னு நினைக்கறீங்க பெரிய அத்தான்..?" என்று இமைகளை அறியாப் பெண்போல கொட்டினாள் ஸ்வேதா...

53

**கொட்டி வைத்த மலர் போன்ற..**

**உன் பச்சரிசி சிரிப்பை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பிரபாகரன் நின்று நிதானமாக ஸ்வேதாவையே தீர்க்கமாக பார்த்தான்.. ஊடுருவும் அவனது பார்வையைக் கண்டவளுக்கு முதுகுத்தண்டு ஜில்லிட்டது.. ஆனாலும் எடுத்த காரியத்தை முடித்தாக வேண்டுமே.. மாணிக்க வாசகம் அவளை அப்படித்தானே வளர்த்திருந்தார்...

அதனால் பிரபாகரனின் பார்வையின் பொருள் புரியாதவள் போல குழந்தையின் பாவனையை முகத்தில் கொண்டு வந்து,

"ஏன் அத்தான் அப்படிப் பார்க்கறீங்க..?" என்று கேட்டாள்..

பிரபாகரனுக்கு ஸ்வேதாவின் நோக்கம் தெளிவாகப் புரிந்தது.. அவளைப் போல எத்தனை மனிதர்களை அவன் வாழ்க்கையில் தினம் தினம் சந்திருக்கிறான்.. ஏன் அவனையும் அவள் குணத்தையும்தான் அவன் நன்கு அறிவானே.. எனவே...

"நிச்சயமாய் உனக்குக் கொடுப்பான்னு நான் நினைக்கலை..." என்று முகத்தில் அடித்ததைப் போலச் சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான்...

ஸ்வேதாவின் முகம் பயங்கரமாக மாறியது...

'போகிறாயா.. போ.. உன்னைச் சுற்றியிருக்கும் கோபம் என்னும் நூலின் முனையை நான் பிடித்துவிட்டேன்.. அதைச் சிக்கலாக்கும் வித்தை எனக்கு கை வந்த கலை.. நீயெல்லாம் என் சாகஸத்திற்கு முன்னால் சின்ன பாப்பா...'

அதே நேரத்தில் பிரபாகரனும் ஸ்வேதாவைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்.. ஒரு பெரிய தொழில் சாம்ராஜ்ஜியத்தை நிர்வகித்து கட்டிக் காத்துக் கொண்டிருப்பவனிடம் ஒரு ஜாலக்காரியின் சாகஸப் பேச்சு எடுபடும் என்று எப்படி அவள் நம்புகிறாள் என்று யோசித்துக் கொண்டிருந்தான்..

'இருந்தாலும்...' அவனது புருவங்கள் சுளித்தன...

'ஸ்வேதா சொல்வதில் உண்மை இருக்கிறதே.. நேற்றைக்கு ராத்திரி எப்படிப்பட்ட ராத்திரி.. அந்த நினைவலைகளின்

கனம் தாங்காமல் மனமும் உடலும் அவளைத் தேடித் தவிக்க.. அதிலிருந்து தப்பிக்கும் வழி தேடித்தானே நான் வேலையில் இறங்கினேன்.. அதைப் பற்றிப் பேச தினாவைத் தேடிப் போனால்.. இவள் எந்த விதப் பாதிப்பும் இல்லாமல் அவனோடு சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாளே.. அது எப்படி அவளால் இயல்பாக இருக்க முடிந்தது.. அவள் தூக்கமில்லாமல் தவித்துக் கொண்டிருப்பாள் என்றுதானே நான் நினைத்திருந்தேன்..' அவன் மனம் முரண்டியது..

அவனுக்குத் தெரியாது.. முதல் நாள் இரவில் தூக்கம் வராமல் தவித்த மாலினி.. ஒரு தடவையாவது பிரபாகரனின் முகத்தைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவலில் தான் அறையை விட்டு வெளியே வந்தாள் என்பது...

மாடி ஹாலில் பவித்ராவும் தினகரனும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவர்களைக் கடந்து போக முடியாமல் வேறுவழியின்றி அவர்களிடம் பேச்சுக் கொடுத்தபடி நின்றாள் என்பது...

பவித்ரா போனவுடன் அவளது காதலைப் பற்றி தினகரனிடம் சொல்வதற்காக மட்டும் அவள் தாமதிக்க வில்லை.. தினகரன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டால்... ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி பிரபாகரனை அறையை விட்டு வெளியே வரச் செய்து பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்புடன்தான் அவள் தாமதித்தாள் என்பது...

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போல அவள் முகம் பார்க்கத் துடித்த பிரபாகரன்.. தானாகவே தினகரனைத் தேடிக் கொண்டு வந்தவுடன் முகமும் அகமும் மலர்ந்தவளாய் அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் என்பது...

இவை எதையும் அறியாத பிரபாகரன் தன்னைப் போன்ற மனத்துடிப்பு அவளுக்கும் ஏன் வரவில்லை என்ற மனத்தாங்கலுடன் குளியலறைக்குள் நுழைந்தான்...

காபியை நினைத்துக் கொண்ட ஸ்வேதா.. அதைக் குடிக்க சமையலறைக்குப் போகவேண்டிய தனது நிலைமையை நொந்துகொண்டே மாடிப்படிகளில் இறங்கலானாள்.. எதிரே தினகரன் கையில் ரோஜாவை வைத்துக் கொண்டு படியேறினான்.. அவன் கையில் இருந்த ரோஜாவைப் பார்த்துக் கொண்டே...

"பூ யாருக்காக.. அத்தான்..?" என்று கேட்டாள்...

"இது எப்படி உனக்குத் தெரிந்தது..." என்று ஆச்சரியப்பட்டான் அவன்...

"நான்தான் மாடியிலிருந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேனே.." ஸ்வேதா எதற்கும் இருக்கட்டு மென்று சில்க் ஸ்மிதாவைப் போல ஒரு பார்வையை வீசி வைத்தாள்...

மற்ற நேரமாக இருந்திருந்தால் தினகரன் அவளின் பார்வையைக் கண்டு முகத்தைச் சுளித்திருப்பான்.. 'ஏன் இப்படிக் கண்றாவியாய் பார்த்து வைக்கிற ஸ்வேதா..' என்று நேரடியாகவே கேட்டிருப்பான்...

ஆனால்.. அப்போது அவன் இதமான மனநிலையில் இருந்தான்.. அதனால் இயல்பாக அவளைப் பார்த்து...

"மாடியிலிருந்து பார்க்கத்தானே முடியும்.. கேட்க முடியாதே..." என்று சிரித்தான்...

தினகரன் அவளைப் பார்த்து சிரித்துவிட்டானா.. அந்த அதிசயத்தை நம்ப முடியாமல் இமை கொட்டிய ஸ்வேதா.. தன் பரபரப்பை வெளிக் காட்டிக் கொள்ளாமல்,

"எதைக் கேட்கணும் தினா அத்தான்..." என்று கொஞ்சினாள்..

"மாலினியின் கவிதையைத்தான்..." தினகரனின் முகத்தில் ஒரு ரகசிய சந்தோஷம் பரவியிருந்தது...

"கவிதையா..?" கேட்கக் கூடாத வார்த்தையைக் கேட்டுவிட்டவளைப் போல ஸ்வேதா முகம் சுளித்தாள்..

அதைக் கவனிக்காமல் தினகரன் தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தான்...

"கவிதைதான் ஸ்வேதா.. நான் தோட்டத்தில் இந்தப் பூவை ரசித்துக் கொண்டு நின்றிருந்தேனா.. அப்போது மாலினி அங்கு வந்தாள்..."

"ம்ம்ம்..."

"என் கையிலிருந்த இந்தப் பூ அப்போது செடியில் இருந்தது..."

"ம்ம்ம்..."

"பூவைப் பறிக்கப் போகிறீங்களா.. உங்க பெரிய அண்ணனிடம் சொல்லிவிடவான்னு வம்புக்கு இழுத்தாள்.."

தினகரனிடம் பேசும்போதுகூட மாலினியின் மனதில் பிரபாகரனின் நினைவு இருந்ததை ஸ்வேதா கண்டுகொண்டாள்...

"அதுக்கென்ன இப்ப அத்தான்..."

"இன்னும் இருக்கு பொறுமையாய் கேளு..."

அவளையும் ஒரு ஜீவனாக நினைத்து தினகரன் அவளருகில் நின்று பேசுவதே பெரிய விஷயம் என்பதால் கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விடும் மனமில்லாமல் கடனே என்று 'உம்..' என்று கொட்டினாள் ஸ்வேதா..

"ம்ம்ம்..."

"நான் விளையாட்டாய், பூ பறிக்கத்தானே இருக்கு.. வேறு யாருக்காக இருக்குன்னு அவளிடம் கேட்டேன்.."

"ம்ம்ம்..."

"அவள் உடனே என்ன கேட்டாள் தெரியுமா..?"

"என்ன கேட்டாள்..?"

"அப்போ.. அவள் என்னைப் பார்த்து.. 'பூ யாருக்காக'ன்னு கேட்கறீங்களான்னு கேட்டாள் ஸ்வேதா.."

இதை எதற்கு இத்தனை பரவசத்துடன் அவன் சொல்கிறான் என்று சத்தியமாக ஸ்வேதாவிற்குப் புரியவில்லை... அவள் விசித்திரமாக தினகரனைப் பார்த்தபடி அதற்கும் 'உம்' போட்டாள்...

"உடனே அவள்.. 'பூ யாருக்காக' என்கிற தலைப்பில் ஒரு கவிதையைச் சொன்னாள் பாரு.. அட.. அடா.. அடா.."

இதில் வியக்க என்ன இருக்கிறது என்று மனதிற்குள் எரிச்சல் பட்டாள் ஸ்வேதா...

"அது என்ன கவிதைன்னா..."

தினகரன் சொல்ல ஆரம்பிக்க.. இப்படி இவன் பேச்சுக் கொடுக்கிறானே என்ற சந்தோஷத்தில் மாட்டிக் கொண்டு விட்டோமே என்று தன்னைத்தானே நொந்து கொண்டு அவன் சொன்ன கவிதையைக் காது கொடுத்து கேட்க ஆரம்பித்தாள் ஸ்வேதா...

"கவிஞனுக்கு கவியளித்து...

காட்சிதரும் கவிப்பூவே..?

மணம் கொண்டு மலர்ந்து நின்று

நீ மயங்குவது யாருக்காக..?

நீலக்கடல் ஓரத்திலே..

நித்தம் எழுந்து உலாவரும்

கதிரவனின் வரவுக்காக - உன்

கமலமுகம் மயங்கியதோ..?

இருள் சூழ்ந்த இரவில் வரும்

இதம் நிறைந்த வெண்நிலவின்

வெண்மையொளி உனில் நிறைய

உன் அல்லி இதயம் விரும்பியதோ..?

ஆனால்.. மலர் விட்டு மலர் தாவும்

மாசு நிறைந்த வண்டிற்காக

ஏங்குகிறேன் என்று மட்டும்

என்னிடத்தில் சொல்லாதே..."

எப்படித்தான் இவன் மாசு நிறைந்த வண்டைப் பற்றிக் கவிதையில் கேட்டும் அதை சட்டை செய்யாமல் பேசுகிறானோ என்று ஸ்வேதாவிற்கு ஆயாசமாக இருந்தது...

"பரவாயில்லையே... மாசு நிறைந்த வண்டைப் பற்றி மாலினி பிட்டுப் பிட்டு வைத்திருக்கிறாளே..." ஸ்வேதா வேண்டுமென்றே பாராட்டினாள்...

"இதுதான் உன்கிட்ட எனக்குப் பிடிக்காத விஷயம்.."

'என்கிட்ட இருக்கும் எந்த விஷயமும் உனக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியாதா.. போடா... டேய்..'

"நான் பூவைப் பற்றிய கவிதையைச் சொன்னால் நீ வண்டைப் பற்றிப் பினாத்துகிறாயே.. டூ பேட்.."

'அதுசரி.. உனக்கானதை மட்டும் நீ எடுத்துக் கொள்வாய்.. ஆகாததை நான் சொன்னால் உனக்கு கடுப்பாகத்தான் இருக்கும்...'

"உன்னிடம் போய் நான் கவிதை சொல்ல வந்தேனே.."

'நான் கேட்டேனா...'

பேச்சு வண்டைப் பற்றிப் போய்விட்ட கோபத்தில் தினகரன் கையிலிருந்த பூ நழுவுவதை உணராதவனாக மாடியேறிப் போய் விட்டான்...

அந்தப் பூவை கையில் எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள் ஸ்வேதா.. சமையலறைக்குள் அவள் நுழையும்போது காயத்ரியின் அறையிலிருந்து மாலினி வெளிப்பட.. சட்டென்ற யோசனை ஒன்று ஸ்வேதாவின் மூளையில் உதயமானது...

அங்கே வேலையாக இருந்த பொன்னியை அழைக்கப்போனவள்.. வேண்டாமென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

'பொன்னி புத்திசாலி.. நான் பூவைக் கொடுத்தால் ஆயிரம் கேள்விகள் கேட்பாள்.. செந்தாமரை வெகுளி.. இந்த விஷயத்திற்கு இவள்தான் லாயக்கு...'

"செந்தாமரை..."

"என்னங்கம்மா.."

அந்தப் பக்கமாக சென்று கொண்டிருந்த செந்தாமரை நின்று பவ்யமாக ஸ்வேதாவைப் பார்த்தாள்..

"இது என்ன தெரியுதில்ல..."

"என்னாங்கம்மா.. இதை எனக்குத் தெரியாதா.. பூவு..."

"இது வெறும் பூ இல்லை செந்தாமரை..."

"அதுவும் எனக்குத் தெரியுமே.. ரோஜாப் பூ..."

"வெறும் ரோஜாப் பூ இல்லை..."

"இதென்னம்மா... அணுகுண்டை கையில் வைத்திருக்கிறதைப் போல இப்படி பீடிகை போடுகிறீங்க.."

"எனக்கில்லாதது எனக்கு அணுகுண்டு போலத்தான்.."

"புரியலைங்களே..."

"இந்தப் பூவைப் பார்த்தாயா செந்தாமரை..."

இவள் ஏன் அந்தப் பூவைப் பற்றி அவ்வளவு விளக்கிச் சொல்கிறாள் என்று புரியாத செந்தாமரை, அந்தப் பூவை உற்றுப் பார்த்தாள்...

"என்ன செய்யறே..?"

"நீங்கதானேம்மா பூவைப் பார்க்கச் சொன்னீங்க.."

செந்தாமரை அப்பாவியாய் வினவ.. 'கிழிஞ்சுது போ..' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா...

அது எப்படி.. ஒரு வீட்டிற்குள் அதிபுத்திசாலியான பொன்னியும் அடிமுட்டாளான செந்தாமரையும் வேலை யாள்கள் என்ற பெயரில் ஒன்றுசேர்ந்தார்கள் என்று அந்த வீட்டிற்கு வந்த நாள் முதல் இந்த நாள் வரை ஸ்வேதா யோசித்துக் கொண்டுதான் இருந்தாள்...

வாழ்க்கை அறிமுகப்படுத்தும் விசித்திரங்களில் இதுவும் ஒன்றுபோல என்று தத்துவார்த்தமாக நினைக்க வேறு தொடங்கிவிட்ட ஸ்வேதா...

'ஸ்ஸூ.. இப்பவே கண்ணைக் கட்டுதே...' என்று பெருமூச்சு விட்டபடி செந்தாமரையைப் பார்த்தாள்...

"இந்தப் பூ.. நம் வீட்டுத் தோட்டத்தில்.. மூலையில் இருக்கும் ரோஜாச் செடியில் இப்போதுதான் மலர்ந்ததாம்.."

"அப்படீங்களா..."

"என்ன அப்படீங்களான்னு ஆவலா கேட்கிற..."

"ஏன்ம்மா கேட்கக்கூடக் கூடாதா..."

செந்தாமரை மீண்டும் அப்பாவியாய் வினவ.. ஸ்வேதா தன் நாடகத்தை அரங்கேற்றத் துவங்கினாள்...

## 54

**வேல் போன்ற விழிகள் கொண்டு**

**என்னை வேட்டையாடும் உந்தன் அழகை**

**என்னவென்று நான் சொல்ல..?**

"இப்படித்தான் நானும் ஆவலாய் அப்படியான்னு கேட்டு வைத்தேன் செந்தாமரை..."

"யார்கிட்டம்மா..?"

"வேற யார்கிட்ட.. என் அருமை அத்தைகிட்டதான்.."

"அவங்க உடனே இந்தப் பூவை உங்க கையில் கொடுத்து தலையில் வைத்துக் கொள்ளச் சொன்னாங்களா..?"

"நீ சொல்வதில் முக்கால்வாசி சரி.. கால்வாசி தப்பு.."

"என்னம்மா புதிர் போடுகிறீங்க.. நானே படிக்காத கழுதை... எனக்கென்ன விளங்கும்..?"

'நீ மட்டுமா படிக்கலை..? இந்தப் பொன்னியும் தான் படிக்கலை.. அவள் சக்கைப்போடு போடும்போது.. நீ மட்டும் ஏன் இப்படி வெள்ளந்தியாய் இருக்கிற செந்தாமரை...'

சமையலறைக்குள் அன்னபூரணியை அதட்டிக் கொண்டிருந்த பொன்னியைப் பார்த்தபடி நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா..

"அதாவது செந்தாமரை.. நான் அப்படியான்னு கேட்டவுடன் அத்தை இந்தப் பூவை என் கையில் கொடுத்து தென்னவோ உண்மைதான்.. அதனால நீ சொன்னதில் முக்கால்வாசி சரி.. ஆனால், இந்தப் பூவை என்னைத் தலையில் வைத்துக் கொள்ளச் சொன்னாங்கன்னு சொன்னே பாரு.. அதுதான் தப்பு..."

"அப்புறம் எதுக்கு பெரியம்மா உங்க கையில பூவைக் கொடுத்தாங்க..?"

"அது உனக்கும் தெரியுது.. எனக்கும் தெரியுது.. அத்தைக்குத் தெரியலையே.. இந்தப் பூவைக் கொண்டு போய் நான் மாலினியின் கையில் கொடுக்க வேண்டுமாம்.."

"எதுக்காம்..?"

"அவள் தலையில் வைத்துக் கொள்ள வேண்டுமாம்..."

"அப்படீங்களாம்மா.. கொடுங்க.. நான் உடனே போய் பெரியம்மா கொடுத்து விட்டாங்கன்னு மாலினியம்மாகிட்ட கொடுத்துடறேன்.. இன்றைக்குத்தான் இந்தப் பூ மலர்ந்துச்சா..."

அந்தப் பூவை உடனடியாக மாலினியிடம் சேர்த்து.. அது அன்று காலையில்தான் மலர்ந்தது என்ற விவரத்தை சொல்லாவிட்டால் செந்தாமரைக்கு எந்த வேலையும் ஓடாது என்பதை புரிந்துகொண்டவளாக ஸ்வேதா நமட்டுச் சிரிப்புடன் செந்தாமரையிடம் பூவைக் கொடுத்தாள்...

ஓட்டமும் நடையுமாக சென்று கொண்டிருந்த செந்தாமரையை கோபத்துடன் வெறித்தாள் ஸ்வேதா...

அந்தப் பூவை ஸ்வேதா தலையில் வைத்துக் கொள்ள நர்மதா கொடுத்தாளா என்று வினவியது செந்தாமரைதான். அதை மாலினிக்காக கொடுத்தாள் என்று ஸ்வேதா புரூடா விட்ட அடுத்த கணமே ஸ்வேதாவைப் பற்றிக் கொஞ்சம் கூட யோசிக்காமல் அந்தப் பூவை பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டு எப்படி இவளால் ஓடமுடிகிறது என்று யோசித்தாள் ஸ்வேதா...

அந்த அளவுக்கு ஒரு வேலையாளிடம் அன்பையும் பாசத்தையும் மாலினி ஏற்படுத்தி வைத்திருக்கிறாளே என்று அவளுக்கு வயிற்றெரிச்சலாக இருந்தது..

குளிக்கப்போன பிரபாகரனோ.. செல்போனின் ஒலியைக் கேட்டு குளிக்காமல் அறையை விட்டு வெளியே வந்தான்...

"தினா.. இந்த போன்காலை அட்டெண்ட் பண்ணு.."

"என்ன அண்ணா..."

"நேற்றைக்கு நைட் நான் கேட்ட விவரம்தான்.. நீயே அவரிடம் விளக்கமாய் சொல்லி விடு.."

தினகரன், பிரபாகரன் நீட்டிய செல்போனை வாங்கி காதுக்கு கொடுத்தான்.. அவன் பேசிக் கொண்டிருக்கும் போது அவன் கையில் ரோஜாப் பூ இல்லாததை கவனித்தான் பிரபாகரன்...

'அந்தப் பூவை இவன் என்ன செய்தான்.. யாருக்குக் கொடுத்தான்..?' என்ற கேள்வி அவன் மனதில் வண்டாகக் குடைந்தது..

தமையனின் மனப் போராட்டத்தை அறியாமல் போன் பேசி முடித்த தினகரன் போனை பிரபாகரனிடம் நீட்டினான்...

மாடிப்படியில் ஏறிக்கொண்டிருந்த மாலினியிடம் வாயெல்லாம் பல்லாக செந்தாமரை வந்து அந்த ரோஜாப் பூவை நீட்டினான்...

"என்ன செந்தாமரை.. எனக்காக பூவெல்லாம் கொண்டு வந்து கொடுத்து ஐஸ் வைக்கிற... என்ன விஷயம்...?"

"போங்கம்மா.. இந்தப் பூவை பெரியம்மா கொடுத்து விட்டாங்க..."

"நிஜமாகவா...?"

"ஆமாம்.. இது நம்ம வீட்டுத் தோட்டத்தில் இன்றைக் குத்தான் மலர்ந்துச்சாம்... அந்தப் பூவை நீங்கதான் தலையில வைக்கணுமாம்..."

ஸ்வேதா, செந்தாமரையைப் பற்றிப் போட்ட கணக்கு மிகச் சரியானது என்பதை செந்தாமரை அந்தக் கணத்தில் நிரூபித்தாள்...

அந்தப் பூ ஸ்வேதாவின் கையிலிருந்து வந்தது என்பது மாலினிக்குத் தெரிந்திருந்தால் அதைத் தொட்டுக்கூடப் பார்த்திருக்க மாட்டாள்... அதோடு.. அதன் பின்னணியில் இருக்கும் ஸ்வேதாவின் எண்ணம் என்ன என்று யோசிக்க ஆரம்பித்திருப்பாள்...

அதைப் பற்றித் தெரியாத மக்கு செந்தாமரை.. நர்மதா கொடுத்துவிட்டதாகச் சொல்லி அந்தப் பூவைக் கொடுத்ததும் ஆச்சரியமும் பரவசமுமாக அந்தப் பூவை ஆனந்தத்துடன் பெற்றுக் கொண்டாள்...

முதல் நாள் இரவு பிரபாகரனின் அணைப்பில் அடங்கிய பின்னால்.. அவன் வேறு.. தான் வேறு என்ற எண்ணமே மாலினியின் மனதில் தோன்றவில்லை... அவளது நாடி நரம்பெங்கும் அவனது நினைவே வியாபித்திருக்க.. மனதளவில் தன்னை பிரபாகரனின் மனைவியாகவே நினைக்க ஆரம்பித்திருந்தாள் மாலினி..

அவளுடைய பிரபாகரனைப் பெற்ற அன்னை.. அவளுக்காக அன்று பூத்த புது மலரை கொடுத்து விட்டிருக்கிறாள் என்றதுமே.. என்னவோ அப்போதே நர்மதா, மாலினியைத் தன் மருமகளாக விரித்துக் கொண்டதைப் போல மகிழ்ந்து போய் விட்டாள் அவள்..

தினகரன் நீட்டிய போனை வாங்கிக் கொண்ட பிரபாகரனிடம்...

"என்ன அண்ணா..?" என்று வினவினான் தினகரன்...

"என்னடா..?"

"என்னிடம் எதையோ நீங்கள் கேட்க நினைப்பதைப் போல இருக்கிறதே..."

'நினைப்பதையெல்லாம் கேட்டுவிட முடிகிறதா.. என்ன..' என்ற அலுப்புடன்...

"த்சு.. ஒன்றுமில்லைடா.." என்றான் பிரபாகரன்...

தமையனை மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருந்த தினகரனின் விழிகள் திடீரென்று மின்னவும்.. தன் முதுகிற்குப் பின்னால் ஒரு பெண் வந்து கொண்டிருக்கிறாள் என்று யூகித்து விட்டான் பிரபாகரன்..

இவனுக்கு தினகரன் என்று பெயர் வைத்தற்குப் பதிலாக மன்மதன் என்று பெயர் வைத்திருக்கலாம்..

எரிச்சலுடன் திரும்பிப் பார்த்தவன் அதிர்ந்து விட்டான்.. அங்கே கையில் ரோஜாப் பூவை.. ஏதோ பொக்கிஷத்தை வைத்துக் கொண்டிருப்பதைப் போல முகபாவனையுடன் பிடித்துக் கொண்டு வந்தாள் மாலினி..

தினகரனின் விழிகளில் ஏன் அந்த மின்னல் வந்தது என்று இமைப் பொழுதில் பிரபாகரனுக்கு புரிந்துவிட்டது...

'கடைசியில் இவன் கொடுத்த பூவை இவள் வாங்கிக் கொண்டாளா..?'

பிரபாகரனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை...

'எப்படி இது சாத்தியமானது..? மாலினி அப்படிப் பட்ட பெண்ணில்லையே...'

அவன் மனதுக்குக்குள் சொல்லிக் கொண்டாலும்.. மாலினி ஒருமுறைகூட தினகரனிடம் முகம் முறித்துப் பேசியதில்லை.. அவன் பேச வரும்போது அவனைத் தவிர்த்ததுமில்லை என்று அவன் மனது எதிர்வாதம் புரிந்தது....

'நீங்கள் அழகாக இருக்கீங்க...' என்று தினகரன் சொன்னபோது ஆட்சேபனையாய் பதில் சொல்லாமல்,

'தேங்க்ஸ்..' என்று மாலினி பதில் சொல்லியது இன்றளவும் பிரபாகரனின் நெஞ்சில் இருந்தது...

தினகரனுடன் ஸ்வேதா பேசிக்கொண்டிருந்தாள் என்று மாலினி சொல்லியபோது.. ஸ்வேதா போன பின்னாலும் ஏன் இவள் தினகரனுடன் நின்று பேசிக் கொண்டிருந்தாள் என்று பிரபாகரனின் மனம் கேள்வி எழுப்பியதும் அவனது நெஞ்சில் இருந்தது...

மனதுக்குள் எழுந்த காதல் அலையில் அவனும் மாலினியும் நனைந்து எழுந்த பொழுதிற்குப் பின்னாலும் அவள் தினகரனுடன் பேசிக்கொண்டிருந்தது இன்னும் அவனது நெஞ்சில் இருந்தது...

இத்தனைக்கும் சிகரம் வைத்ததைப் போல... இரவு முழுவதும் தூங்காமல் மாலினியை நினைத்துக் கொண்டிருந்த பிரபாகரன் ஆவலுடன் அவளைத் தேடி தோட்டத்திற்கு போனபோது... அங்கு அவள் தினகரனுடன் நின்று பேசிக் கொண்டிருந்த காட்சி அவனது நெஞ்சில் இருந்தது...

அதைப் பார்க்கப் பிடிக்காமல் மாடிக்கு வந்து பால்கனியில் நின்று பார்த்தபோதும்... அவர்கள் அங்கேயேதான் நின்று பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள் என்ற நினைவு அவனது நெஞ்சில் இருந்தது...

மாடிக்கு வந்த தினகரனின் கையில் அந்த ரோஜாப் பூ இல்லை... அவனுக்கு பின்னாலயே வந்த மாலினியிடம்

அந்தப் பூ இருக்கிறது என்றால் அதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான் இருக்க முடியும் என்று பிரபாகரனின் மனம் சொன்னது...

அது.. தினகரன் அந்தப் பூவை மாலினியிடம் கொடுத்திருக்கிறான்.. அதை பத்திரமாக கையில் ஏந்திக்கொண்டு மாலினி வருகிறாள்..

தான் கொடுத்த பூவை மாலினி பத்திரமாகப் பிடித்துக்கொண்டு வருவதைப் பார்த்த பெருமையால் தான் தினகரனின் கண்கள் அப்படி மின்னியிருக்கின்றன..

பரவசத்துடன் ஹாலுக்குள் வந்த மாலினி.. பிரபாகரனைக் கண்டதும் அப்படியே நின்றுவிட்டாள்.. காலையில் இருந்து அவனைப் பார்க்கத் துடித்தும்.. பார்க்க முடியாத தவிப்பு அவள் மனதில் பொங்கியது...

அவனுக்காக அவள் தோட்டத்தில் காத்திருந்த போது தினகரன் வந்து ரம்பம் போட்டான்.. பிரபாகரன் வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன்.. அவனிடம் நின்று பேசிக் கொண்டிருந்த மாலினி.. அவன் வருவதைப் போல இல்லை என்று தெரிந்தவுடன் தினகரனிடம் இருந்து கழன்று கொண்டு வீட்டுக்குள் வந்து விட்டாள்...

மாடியில் அவனைப் பார்க்கலாம் என்று மாடிப்படியில் கால் வைத்தவுடன் காயத்ரி அவளை அழைத்து விட்டாள்.. அவளுடன் பேசிமுடித்து விட்டு வந்தவளை செந்தாமரை வந்து பிடித்துக் கொண்டாள்.. நர்மதா தந்த தாகச் சொல்லி அவள் கொடுத்த ரோஜாப்பூவை பிரபாகரனிடம் காட்ட வேண்டும் என்ற ஆவலுடன் மாடிக்கு வந்தவளை பிரபாகரன் அறிமுகமில்லாத பார்வையொன்றை பார்த்து வைக்கவும், அவளுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது..

அவளுக்குள் பொங்கிக் கொண்டிருந்த உணர்வுகள். தண்ணீர் பட்ட சுடுபால் போல அடங்கிப் போனது..

"அது என்ன கையில் பூ..?" பிரபாகரன் வினவினான்...

அதற்கு 'அத்தை கொடுத்து விட்டாங்க..' என்ற பதிலை மாலினி சொல்லியிருந்தால் எவ்வளவோ நன்றாக

இருந்திருக்கும்.. அதை விட்டு அவள் குதுகலமான குரலில்...

"நான் மரியாதையும்.. மதிப்பும் வைத்திருக்கும் சொந்தக்காரங்க இதைக் கொடுத்தாங்க.." என்று சொல்லி விட்டாள்...

55

**உன் வாய் மொழியின் வார்த்தை**

**என் நெஞ்சைத் தொட்ட விதத்தை**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி சொன்னதைக் கேட்டதுமே அங்கே நின்று கெண்டிருந்த சகோதரர்கள் இருவரில் ஒருவன் முகம் கன்ற.. மற்றொருவன் முகம் மலர்ந்தான்...

'என் மாலினியின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளா இவை..' பிரபாகரன் துணுக்குற்றான்..

'நான் கொண்டு வந்த ரோஜாப்பூ எப்படி இவள் கைக்குப் போனது..?' என்று யோசித்தாலும்.. அவன் கொண்டு வந்த பூவைப் பற்றி மாலினி உயர்வாகப் பேசிய விதத்தில் தினகரன் சிறகேயில்லாமல் வானில் பறந்தான்...

"தினா.. பரந்தாமனை நான் இருக்கச் சொன்னதாக கீழே போய் சொல்லிவிட்டு வா.. வீட்டுப் பெண்கள் வெளியே போக வேண்டுமென்று அவரைக் கூப்பிட்டுக் கொண்டு போய்விடப் போகிறார்கள்..."

பிரபாகரன் உத்தரவிட்டதும்.. அங்கிருந்து நகர மனமின்றி நகர்ந்தான் தினகரன்...

தனிமை கிடைத்துவிட்ட ஆனந்தத்தில் மாலினி எதையோ பேச வாய் திறக்க கடுமையுடன் அவளை உறுத்துப் பார்த்தான் பிரபாகரன்...

அவனது கனல் கக்கும் விழிகளைப் பார்த்ததும் மாலினிக்கு பேச நா எழவில்லை...

'நான் என்ன தப்பு செய்துவிட்டேன்னு இவன் என்னை இப்படிப் பார்க்கிறான்..?'

மாலினி என்ற ஒருத்தி அங்கே இல்லாததைப் போன்ற பாவனையுடன் பிரபாகரன் அவனது அறைக்குச் செல்ல முனைய...

"ஒரு நிமிஷம்..." என்று அவசரமாக அவனை தடுத்தாள் மாலினி..

"என்ன..?" அவன் திரும்பிப் பார்க்காமலேயே வினவினான்.. மாலினி பேச வாய் திறந்தபோது.. ஸ்வேதா அங்கே வந்து விட்டாள்.. வந்தவள் சும்மா இருப்பாளா.. விஷமமாக பிரபாகரனைப் பார்த்தபடி...

"என்ன மாலினி.. கையில் இருப்பது ரோஜாப்பூவா..?" என்று கேட்டாள்...

பிரபாகரனின் கோபத்திற்கு என்ன காரணம் என்று கேட்க முடியாமல் ஸ்வேதா வந்துவிட்ட எரிச்சலில் இருந்த மாலினி...

"ஏன்.. உனக்கு இதைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது..?" என்று கேட்டாள்...

"ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாகத் தெரிய இது என்ன மனிதப் பிறவியா..? பூ.. மாலினி.. ரோஜா ரோஜாவாகத்தான் எனக்குத் தெரியுது..." என்று வியாக்கியானம் சொல்லியபடி மீண்டும் பிரபாகரனைப் பார்த்தாள் ஸ்வேதா...

'இவள் என்ன இன்றைக்கு ஒரு மார்க்கமாக பேசுகிறாள்..? இப்படியெல்லாம் யோசிக்கக்கூட இவளுக்குத் தெரியுமா..?' மாலினி யோசனையாக ஸ்வேதாவைப் பார்த்தாள்...

ஸ்வேதாவின் பார்வையோ மாலினியின் கையிலிருந்த பூவில் பதிந்து.. பிரபாகரனின் மேல் மீண்டும் படிந்தது.. அவளது பார்வை 'இது தினகரன் பறித்துக் கொண்டு வந்து பூ..' என்று சொல்லாமல் சொல்லி எள்ளி நகையாட.. பிரபாகரனின் மனம் கொதிகலனானது...

தன் காதலி.. இன்னொருவன் கொடுத்த பூவை வைத்துக் கொண்டு நிற்பதை ஸ்வேதா சுட்டிக்காட்டுவது அவனுக்குத் தெரியாமல் இல்லை.. அவனது ஆண்மை இந்த செயலை பொறுத்துக் கொள்ள முடியாமல் தவித்தது..

"அதுதான் உனக்குத் தெரியுதில்ல.. அதுக்கப்-புறமும் கையில் இருக்கிறது என்னன்னு என்ன கேள்வி வேண்டிக்கிடக்கு.."

"இது ரோஜான்ன எனக்கும் தெரியுது மாலினி.. ஆனால், கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நீ தோட்டத்திலிருந்து வரும்போது உன் கையில் ரோஜா இல்லையே..."

"ம்ம்.. இல்லைதான்.. அதுக்கென்ன இப்ப..."

"ஸோ.. நீ இதைப் பறிக்கலை..."

"அது எப்படி நான் பறிப்பேன்.. பூவைப் பறித்தால் தான் உன் பெரியத்தானுக்குப் பிடிக்காதே..."

மாலினி கூறியது இயல்பான உரையாடல்.. பிரபாகரன் காதல் சொல்வதற்கு முன்னாலே என்றால்.. ஸ்வேதாவிடம் வம்பிழுக்க வேண்டும் என்பதற்காகவே.. 'என் அத்தான்..'

என்று வாய்க்கு வாய் சொல்லுவாள்.. இப்போதோ.. 'உன் பெரிய அத்தான்' என்றுதான் அவளுக்கு சொல்ல வந்தது..

இதற்கான காரணம் மிக இயல்பானது.. மாலினியின் வீட்டில் ஜானகிராமனைப் பற்றி ரஞ்சித்திடமும் மாலினியிடமும் காவேரி பேசும்போது... 'உன் அப்பா..' என்றுதான் சொல்லுவாள்... சசிரேகா.. தன் கணவனைப் பற்றி மாலினியிடம் பேசும்போது.. 'உன் அத்தான்' என்று சொல்லுவாள்.. மாலினியின் அண்ணி ராதிகா... ரஞ்சித்தைப் பற்றிக் குறிப்பிடும் போது.. மாலினியிடம் 'உன் அண்ணன்..' என்றும் காவேரியிடம் 'உங்க மகன்..' என்றும் சொல்லுவாள்...

மாலினி, ஸ்வேதாவிடம் கூறியதும் அதைப் போலத் தான்.. அதை உணராத பிரபாகரன், ஸ்வேதாவின் முன்னால் மாலினி அவனை விட்டுக் கொடுத்து விட்டதாகவே நினைத்தான்.. ஸ்வேதா வேறு எரியும் கொள்ளியில் இன்னும் கொஞ்சம் எண்ணெயை ஊற்றினாள்...

"என் பெரிய அத்தானா..? பார்த்தீங்களா அத்தான்.. இந்தப் பூ செய்யும் மாயத்தை.. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை நீங்கள் மாலினியின் அத்தானாக இருந்தீங்க.. இந்தப் பூ கைக்கு வந்த உடனே உங்களை என் பெரியத்தானாக்கி விட்டாள்..."

"சும்மா உளறாதே ஸ்வேதா.. இந்தப் பூவைப் பற்றியே நீ எதுக்குப் பேசற..? அது உனக்குத் தேவையில்லாத விஷயம்..."

"எனக்கு மட்டும் தேவையில்லையா.. இல்லை.. என் பெரிய அத்தானுக்கும் தேவையில்லையா..."

ஸ்வேதாவின் சாகஸப் பேச்சை மாலினி நன்கு அறிவாள்.. ஆனால்.. அப்போது அவள் பேசிக் கொண்டிருந்த சாகஸப் பேச்சின் உட்கருத்தைத்தான் அவளால் அறிய முடியவில்லை... அதைவிட ஸ்வேதாவை பேச விட்டு விட்டு பிரபாகரன் மௌனமாக இருப்பதன் காரணமும் அவளுக்கு விளங்கவில்லை...

"இதோ பார் ஸ்வேதா.. எனக்கு வேலைக்கு கிளம்பவேண்டும்.. நேரமாகிறது.. உன்னுடன் வெட்டிப் பேச்சுப் பேச வேறு ஆளைத் தேடிப்பிடி.."

"பொறு மாலினி பொறு.. இப்போதுதான் உனக்கு நேரமாவது நினைவுக்கு வந்ததா..? காலையில் விடிந்தவுடன் கீழே இறங்கிப் போனவள்.. வேலைக்கு கிளம்பும் நினைவில்லாமல் யாருடன் மணிக்கணக்காக பேசிக்கொண்டிருந்தாய்..."

"எல்லாம் இந்த வீட்டில் இருப்பவர்களுடன்தான் பேசிக் கொண்டிருந்தேன்..."

"நான் மட்டும் என்ன.. நீ ரோட்டில் இருப்பவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாய்ன்னா சொன்னேன்..?"

"ஏன் சொல்லித்தான் பாரேன்.. அப்போது இந்த மாலினி யாருன்னு உனக்குத் தெரியும்..."

"எனக்கு எப்போதோ நீ யாருன்னு தெரியும்.. தெரிய வேண்டியவங்களுக்குத்தான் அது இன்னமும் தெரிய மாட்டேங்குது..."

"விட்டால் நீ இன்றைக்கு முழுவதும் பேசிக்-கொண்டிருப்பாய்.. உன்னோடு பேச நான் ஆளில்லை..."

"அப்படின்னா மகராசியாய் போ.. போவதற்கு முன்னால் அந்தப் பூவை என்னிடம் கொடுத்துவிட்டுப் போ..."

'ஆக.. அங்கே சுற்றி.. இங்கே சுற்றி இந்த பூவைப் பறிக்கும் நோக்கத்தில்தான் நீ இருக்கிறாயா...'

நர்மதா தனக்கு பூ கொடுத்துவிட்டதை பொறுக்காத ஸ்வேதா.. அதைத் தன்னிடமிருந்து பறித்துக் கொள்ளப் பார்க்கிறாள் என்று மாலினி நினைத்துவிட்டாள்...

வருங்கால மாமியாரின் கையால் முதன்முதலாக வாங்கிய பூவை விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற வேகம் அவளுக்குள் எழுந்தது...

"இது எனக்காக கொடுக்கப்பட்ட பூ.. இதை வேறு யாருக்கும் நான் கொடுக்க மாட்டேன்.." என்று பட்டென்று சொல்லி விட்டாள்...

"கேட்டீங்களா அத்தான்.. எப்போதும் என் மேலேயே குற்றம் கண்டுபிடித்து இவளை சப்போர்ட் பண்ணுவீங்களே.. நீங்களே இதுக்கு ஒரு நியாயத்தைச் சொல்லுங்க.. நான் மாலினியிடம் அப்படி என்ன பெரிதாக கேட்டு விட்டேன்.. ஒரு பூவைத்தானே ஆசைப்பட்டுக் கேட்டேன்.. அதை அவள் எனக்குக் கொடுக்கக்-கூடாதா..?" ஸ்வேதா குறைபட்டுக் கொள்வதைப் போல ஏளனமான குரலில் பிரபாகரனிடம் கேட்டாள்..

"இதென்ன ஸ்வேதா.. இந்தப் பூவை அவ்வளவு ஈஸியாக நினைத்துவிட்டாய்...?"

"ஓ... அப்படின்னா.. இது ஈஸியில்லையா..?"

"இல்லை..."

"இந்தப் பூ.. உனக்கு அவ்வளவு உயர்வானதா..?"

"ஆமாம்..."

"எதனால் உயர்வு மாலினி.. இதைக் கொடுத்தவங்களை நீ அவ்வளவு உயர்வானவங்களாக நினைக்கிறாயா..?"

"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்..."

ஸ்வேதா மட்டும் பக்கத்தில் இல்லாமல் இருந்திருந்தால் பிரபாகரன் மாலினியை கன்னம் கன்னமாக அறைந்திருப்பான்... அவ்வளவு ஆவேசம் அவனுக்குள் இருந்தது...

அதையறிந்து கொண்ட ஸ்வேதா மனதிற்குள் நகைத்துக் கொள்ள.. அறியாத மாலினி.. அந்தப் பூவை இறுக்கமாக பிடித்துக் கொண்டு நின்றாள்..

"உனக்கு பூவுன்னா இவ்வளவு பிடிக்கும்னு எனக்குத் தெரியாமல் போச்சு மாலினி.. பூ யாருக்காகன்னு கவிதையெல்லாம் தினா அத்தானிடம் சொன்னாயாமே..

எனக்கும் கவிதை பிடிக்கும்.. என்னிடமும் கவிதை சொல்லேன்..."

"கவிதையை ரசிக்கவும் ஒரு அறிவும் மனமும் வேண்டும்.. உன்னிடம் அது இல்லை..."

"அங்கே தினா அத்தானிடம் மட்டும் அது இருக்குன்னு உனக்கு எப்படித் தெரிந்தது மாலினி... அவருடைய அறிவை விடு.. மனத்தை எப்படிப் புரிந்து கொண்டாய்..? உங்களுக்குத் தெரியுமா பெரிய அத்தான்.. நம்ம மாலினி.. காலையில் தோட்டத்தில் தினா அத்தானுக்கு கவிதை சொன்னாளாம்.. நீங்களும் தான் தினமும் இவளுடன் காரில் போய் வர்றீங்க..

ஒரு நாளாவது உங்களிடம் இவள் கவிதை சொல்லியிருக்காளா..?"

இல்லை.. பிரபாகரனிடம் பேசிச் சிரிப்பதிலேயே இன்பத்தை கண்டுவிடும் மாலினி.. அவனிடம் ஒரு நாள்கூட கவிதை சொன்னதில்லை.. ஏன்.. மாலினிக்கு கவிதை வருமென்பதே அதுவரை பிரபாகரனுக்குத் தெரியாது.. அவன் விழிகள் மாலினியைச் சுட்டெரிக்க, அவளுக்குள் குளிர் பிறந்தது...

'இது என்ன.. யதார்த்தமாக தினகரனிடம் கவிதை சொன்னது இவ்வளவு பெரிய பிரச்னையாகிறதே..' மாலினி கலங்கினாள்...

"என்னமோ போங்க அத்தான்.. நீங்க என்னவோ இந்த வீட்டின் நிர்வாகம் உங்க கையில் இருக்குங்கற நினைப்பில் இருக்கீங்க.. ஆனால்.. ஆளாளுக்கு மனசில பல நினைப்பை வைச்சுக்கிட்டில்ல அலையறாங்க.." ஸ்வேதா, மாலினியைப் பார்த்தபடி பிரபாகரனிடம் சொன்னாள்...

அதற்கு மேலும் அங்கு நின்று வார்த்தை வளர்க்க விரும்பாத மாலினி.. பிரபாகரனுடன் பேசும் ஆசையை கைவிட்டு.. அங்கிருந்து நகர முயல.. கடுமையான முகத்துடன், "நில் மாலினி.." என்றான் பிரபாகரன்...

அவனது அதட்டலைக் கேட்க மாலினிக்கு சங்கடமாக இருந்தது.. போயும் போயும் ஸ்வேதா சொல்வதைக் கேட்டு மாலினியை பிரபாகரன் அதட்டுகிறானா...?

ஆனாலும்.. தடுத்து நிறுத்துவது பிரபாகரன் என்பதால் மாலினி தயங்கி நின்றாள்...

"அந்தப் பூவைக் கொடு..."

"இதை எனக்காக கொடுத்தாங்க..."

"இருக்கட்டும்.. நான் கேட்கிறேன்.. இதை என்னிடம் கொடு..."

மாலினி கொடுத்து விட்டாள்.. பிரபாகரன் வெற்றிப் பார்வையோடு ஸ்வேதாவைப் பார்க்க.. அவள் முகம் விழுந்து விட்டது.. பெரிதாக அணுகுண்டைப் போல பிரச்னை வெடிக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்போடு நின்றவளுக்கு.. அப்படி எதுவும் நடக்காமல் புஸ்வாணமாகப் போய்விட்டதில் என்னவோ போல் ஆகிவிட்டது...

56

**சிறுபிணக்கில் உன்னைத்**

**திட்டிவிட்ட என் மனவலியை**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஸ்வேதா ஏமாற்றத்துடன் அவளது அறைக்குப் போய் விட்டாள்.. முதன்முதலாக நர்மதா ஆசையாக கொடுத்த பூவை பிரபாகரன் வாங்கிக் கொண்டு விட்டானே என்ற கோபத்துடன் மாலினியும் போய்விட்டாள்.. பிரபாகரன் கையில் இருந்த ரோஜா மலரைப் பார்த்தான்.. அழகான அந்தப் பூ அவனைப் பார்த்து சிரிப்பதைப் போல இருந்தது...

'ஒரு பூவாலே.. இத்தனை மன வலியா...'

அவன் மௌனமாக ஹாலில் இருந்த கார்த்திகேயனின் படத்தின் முன்னால் அந்தப் பூவை வைத்துவிட்டுப் போய்விட்டான்.. அவனது மனதின் தீ அணையாமல் இருக்க.. வெளியில் இறுக்கமான முகபாவனையுடன் அலுவலகத்துக்கு கிளம்பினான்..

டைனிங் ஹாலில் தினகரனின் கண்கள் மாலினியின் தலையில் ரோஜாப் பூவைத் தேடி

ஏமாந்ததை பிரபாகரன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. அவன் கவனிப்பதை ஸ்வேதாவும் கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்ற உணர்வில் அவன் அசட்டையாகக் காட்டிக் கொண்டான்...

காயத்ரியின் நிச்சயதார்த்தத்திற்கு வந்த உறவினர்கள் வீட்டில் இருந்ததால் வீடே கலகலப்பாக இருந்தது.. பவித்ராவிடம் பேச முடியாத மாலினி.. மாலையில் வந்து அவளுடன் பேசுவதாகக் கூறிவிட்டு வேலைக்கு கிளம்பினாள்...

பிரபாகரனின் காரில் ஏறி... அவனருகில் அமர்ந்த பின்னால்தான் மாலினிக்கு நிம்மதியாக இருந்தது.. முதல் நாள் இரவில் அவனைப் பிரித்ததில் இருந்து அவள் மனதிற்குள் தோன்றியிருந்த இனம்புரியாத ஏக்கம் மறைந்து... தாயின் மடியை அடைந்துவிட்ட மழலை போல உணர்வு வந்தது.. ஆனாலும்.. பிரபாகரனின் மேல் இருந்த சின்ன கோபம் மனதின் ஓர் ஓரத்தில் இருக்க.. அவள் வேடிக்கைப் பார்ப்பதைப் போல வெளியில் பார்த்துக் கொண்டு வந்தாள்...

பிரபாகரன் பேசவே இல்லை.. அவனது அந்த மௌனம் மாலினியை மிகவும் பாதித்தது.. தவறு செய்தது அவன்.. அவள் கையில் இருந்த பூவை வாங்கிக் கொண்டது அவன்.. அப்படியிருக்க.. மாலினி தவறு செய்துவிட்டதைப் போல அவன் குற்றம்சாட்டும் பாவனையில் மௌனமாக வந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

சும்மா இருந்தால் அது மாலினி ஆகிவிடாதே.. அவனது மௌனத்தை உடைக்க முடியாதவளாய் அவள் காரில்

பாடல்கள் இருந்த சிடியை ஒலிக்க விட்டாள்...

"ஒரு நாளைக்குள் எத்தனை கனவு

உன் பார்வையில் விழுகின்ற பொழுது

தொடுவானத்தைத் தொடுகின்ற உணர்வு

ஓஹோ ஹோஹோ..."

இனிமையான ஆண்குரல் ஒலித்தது. பிரபாகரனின் மனம் கிளர்ந்தது... முதல் நாள் முழுவதும் மாலினியின் அருகாமையில் இருந்த நினைவு அவனது நெஞ்சில் எழுந்தது.. அதையடுத்து அவள் தினகரனுடன் பேசிச் சிரித்ததும் சேர்ந்தே நினைவில் வர.. அவன் இறுக்கமான முகத்துடன் அவளை முறைத்தான்...

"ஒரு நிமிடத்தில் எத்தனை மயக்கம்..

அந்த மயக்கத்தில் எத்தனை தயக்கம்..

இந்தத் தயக்கத்திலும் வரும் நடுக்கம்.."

மாலினி மெதுவாக ஆண் குரலைத் தொடர்ந்து பாடிய பெண்குரலுடன் இணைந்து பாடினாள்.. பிரபாகரன் சட்டென்று பாடலை நிறுத்தினான்.. மாலினிக்குள் கோபம் கிளர்ந்தது.. இவனும் பேச மாட்டான்.. பாடலைக் கேட்கவும் விடமாட்டான் என்றால் என்ன அர்த்தம்.. ஒரு மனுஷிக்கு பாட்டுக் கேட்பதற்குக்கூட உரிமையில்லையா என்ன?

பொறுத்தது போதும் என்று பொங்கியெழுந்தாள் மாலினி...

"ஏன் பாட்டை நிறுத்தினீங்க..?" என்று சண்டையை ஆரம்பித்து வைத்தாள்..

"ம்ச்ச்.. தலைவலி..."

பிரபாகரன் இதைச் சொன்ன விதம் மாலினியைப் பாதித்தது.. அவன் தனக்கு வந்த தலைவலியாக

உடல் வேதனையைச் சொல்கிறானா.. இல்லை மாலினியைச் கொல்கிறானா என்ற சந்தேகம் அவளுக்குள் எழுந்தது.. மனதில் நினைத்ததை மறைக்காமல் கேட்டாள்...

"தலைவலின்னு எதைச் சொல்கிறீங்க.. இல்லை யாரைச் சொல்கிறீங்க..."

அவளது தீர்க்கமான பார்வையை தனது அலட்சியமான பார்வையால் எதிர்கொண்டான் பிரபாகரன்..

"என்ன.. அதட்டல் பலமாக இருக்கு.. மிரட்டிப் பார்க்கறியா..?"

"உங்களைப் போய் யாராலும் மிரட்ட முடியுமா.. நீங்க யாரு..?"

"கே.பிரபாகரன்.. கே.பின்னு இந்த தமிழ்நாடே சொல்லும்..."

"நான் அப்படிச் சொல்ல மாட்டேன்..."

"அது சரி.. எல்லோருக்கும் ஒரு வழின்னா.. உனக்குத் தனி வழியாச்சே..."

"இதை நான் சொல்லணும்.. கேபியாம்.. கே.பி.. சரியான ஹிட்லர்..."

"ஹிட்லர்.. மத்தவங்களுக்கு வேண்டும்னா என்மேல் அப்படிப்பட்ட பயமிருக்கலாம்.. உனக்கு அந்த பயம் இருக்கா..?"

மாலினியின் முகம் மாறியது.. இவன் ஏன் இதைச் செல்கிறான்.. காரணமில்லாமல் சொல்ல மாட்டானே.. இதற்கு என்ன பதிலைச் சொல்வது..? உன்னைப் பார்த்து நான் ஏன் பயப்பட வேண்டும் என்று அவனிடம் அவளால் கேட்க முடியுமா..?

"உங்களிடம் பயப்பட வேண்டிய அவசியம் இது வரை எனக்கு வந்ததில்லை அத்தான்..."

"அத்தான்...! குட்.. இதை ஒன்றை நீ கண்டுபிடித்து வைத்திருக்கிறாய் மாலினி.. வாக்குவாதம் வந்துவிட்டால் அத்தான்னு கூப்பிட வேண்டியது... சமாதானமாகி விட்டால் அந்த அத்தனை அம்போன்னு விட்டுவிட வேண்டியது..."

"ம்ச்ச்.. இப்ப நமக்குள் என்ன வந்துவிட்டது..?"

"எதுவும் வரவில்லையா..?"

"என்னைப் பெறுத்தவரை எதுவும் இல்லை. நீங்கள் தான் இப்போது நீங்களாகவே இல்லை அத்தான்..."

"ஓஹோ.. இந்தக் குற்றம் வேறு சொல்கிறாயா.. நான் நானாக இல்லாமல் எப்படியிருக்கிறேன்..?"

"மாறிப் போய்விட்டீங்க..." மாலினி மனம் குமுறினாள்..

"உங்கள் மனச்சாட்சியிடம் இதைக் கேளுங்க..."

"ஏன்.. உன்னிடம் கேட்டால் நீ பதில் சொல்ல மாட்டாயா..?"

"ம்ச்ச்.. நானே கடுப்பில் இருக்கிறேன் அத்தான்.. என் வாயைப் பிடுங்காதீங்க.. எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லை..."

"எது..?"

"ம்ம்..? இப்படிக் காதலைச் சொல்வது.. அதன் பின்னால் நீ யாரோ நான் யாரோன்னு முறைப்பது.."

"ஓ.. மேடம் அப்படிச் சொல்கிறீங்களா.."

"ஆமாம்.. நான்பாட்டுக்கு நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருந்தேன்.. விடாமல் சைட் அடித்து.. கடலை போட்டு.. கடைசியில் காதலையும் சொல்லிவிட்டு சாமியாரைப் போல் ரூமில் போய் பதுங்கிக் கொண்ட ஆள்தானே நீங்க..."

மனதை அழுத்திக் கொண்டிருந்த உணர்வுகள்.. அவளையுமறியாமல் வார்த்தையில் வெளிப்பட்டுவிட.. மாலினி நாக்கைக் கடித்துக் கொண்டு பேச்சை நிறுத்தி விட்டாள்....

"ஏய்ய்.. மாலிhனி..." பிரபாகரன் கிளர்ந்து விட்டான்..

"நானாடி சாமியாரைப் போல ரூமில் போய்ப் பதுங்கிக் கொண்டேன்..? காயத்ரிக்கு கல்யாணம் ஆகணும்.. நீங்கதான் பெரிய்ய்ய்ய அண்ணன்னு கதை சொல்லி.. மொட்டை மாடியை விட்டு முதலில் ஓடினவள் நீதானேடி.. அப்படியிருந்தும்.. தூக்கம் வராமல்

ஹாலுக்கு வந்தால்.. நீ தினகரனுடன் வாயடித்துக் கொண்டிருந்தாய்.. ஒரு வார்த்தை பேசிவிட்டு ஓடி விட்டாய்.. விடிந்ததும் உன்னிடம் பேச வந்தால்.. அப்போதும் நீ தினகரனுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தாய்.. நீ என்னைச் சொல்கிறாயா..?"

பிரபாகரன் கோபத்துடன் பொரியவும், மாலினி திகைத்து விட்டாள்...

"அத்தான்.. நான் தினகரனுடன் பேச நினைத்து பேச வில்லை..."

"இது ஒரு பேச்சாடி..?"

"நிஜம்தான் அத்தான்.. உங்களுக்கு எப்படித் தூக்கம் வரவில்லையோ அதைப் போல எனக்கும் தூக்கம் வரவில்லை.. பால்கனியில் நின்றுவிட்டு வரலாமென்று தான் ரூமைவிட்டு வெளியே வந்தேன்.. அங்கே பவித்ராவும் தினகரனும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.. நான் அதில் கலந்துகொண்டேன்.. என் நேரம்.. நீங்க வரும்போது அவள் ஓடிவிட்டாள்..."

மாலினியின் முகத்தில் நிஜமான வருத்தம் தெரியவும்.. பிரபாகரன் சற்று மனம் தெளிந்தான்..

"காலையில் எதுக்குடி தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாய்..? அதிலும் கவிதை வேறு சொல்லியிருக்கிறாய்.."

"ஏன் அத்தான் என் வயிற்றெரிச்சலைக் கிளப்பு கிறீங்க..."

"ஏன்.. என்னாச்சு..?"

"விடிந்தவுடன் உங்களைப் பார்க்கணுமுன்னு மனசு தேடிருச்சு.." இதைச் சொன்ன மாலினியின் முகத்தில் வெட்கச் சிரிப்பு வந்தது.. அவளது கண்களில் மயக்கம் இருந்தது.. பிரபாகரனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் தவிப்புடன் அவளது பார்வை அங்குமிங்கும் அலைந்தது...

அந்த நொடியில் பிரபாகரனின் மனதிலிருந்த சந்தேகமேகங்கள் அகன்று விட்டன.. அவனது மனதை

சூழ்ந்திருந்த குழப்பங்கள் விலகின. மாலினியின் முகத்தில் அப்பட்டமான காதல் தெரிவதை உணர்ந்தான் பிரபாகரன்..

அதில் வேஷமில்லை.. பொய்யில்லை.. அவள்.. அவனது காதலியாக உருகுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

"மனசு தேடினால்.. என்னைப் பார்த்துவிட வேண்டியது தானே..."

"அதற்குத்தான் தோட்டத்துக்குப் போனேன்.. அங்கே உங்களுக்காக காத்திருந்தால்.. உங்கள் தம்பி வந்து நிற்கிறார்.. கொஞ்ச நேரம் பேசிட்டுப் போய் விடுவாருன்னு பார்த்தால்.. விடாமல் ரம்பம் போட்டார்.."

"அவனே ரம்பம் போட்டிருக்கிறான்.. அவனிடம் போய் எதற்கு கவிதையைச் சொன்னாய்..?"

"அந்தக் கவிதையைச் சொல்கிறேன்.. நீங்களே கேளுங்க..."

மாலினி சொன்ன கவிதையைக் கேட்டதும் பிரபாகரன் அயர்ந்து விட்டான்.. அவனுடைய காதலி வெளிப்படுத்திய மற்றுமொரு பரிமாணம் கண்டு அவன் மனம் வியந்தது....

'இவள்தான் எப்பேர்ப்பட்டவள்...'

அவனது வியப்பை அறியாத மாலினி.. இயல்பாக தன் பேச்சைத் தொடர்ந்தாள்...

"நானே மலர்விட்டு மலர் தாவும் வண்டைப் பற்றிய கவிதையைச் சொல்கிறேன்.. அதைப் புரிந்து கொள்ளாத உங்கள் தம்பி.. ஆஹா.. ஓஹோன்னு பாராட்ட ஆரம்பித்து விட்டார்.. இது வேலைக்கு ஆகாதுன்னு உங்களை தோட்டத்தில் பார்க்கும் ஆசையை விட்டுவிட்டு வீட்டுக்குள் வந்து விட்டேன்.."

"வண்டைப் பற்றிய கவிதையை அவனிடம் ஏன் சொன்னாய்..?"

"ஆமாங்க.. இது பெரிய பிரம்ம சூத்திரம்.. உங்களுக்குத் தெரியாது.. என்கிட்ட வந்து கேளுங்க.. கொஞ்சம் பார்க்கிறதைப் போல ஒரு பெண் அவர் கண்ணில் தென்பட்டுவிட்டால் போதும்.. உடனே என்னமாய் கடலை போட ஆரம்பித்து விடுகிறார் தெரியுமா..?"

பிரபாகரனுக்கா அது தெரியாது..? அது மாலினிக்கும் தெரிந்திருக்கிறது என்ற நிம்மதியுணர்வுடன் அவன் வாய் விட்டுச் சிரித்தான். அவனது இறுக்கமான முகபாவனை மாறி.. அவனது கண்களும் சேர்ந்து சிரிக்கும் அதிசயத்தை அவனிடம் கண்டவள் அந்தச் சிரிப்பில் மயங்கிப் போனாள்..

'என்னமாய் சிரிக்கிறான்...'

அவனையே அவள் விழி விரிய பார்க்க... அவன் அவனைப் பார்த்து கண் சிமிட்டினான்...

## 57

**பொய்கோபம் கொண்டு மௌனிக்கையில்**

**உன் புன்னகையில் அதை நீ வெல்வதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினியின் உடலெங்கும்.. 'குப்..' பென்று ஓர் உணர்வு பற்றிக் கொண்டது.. வயிற்றினில் பட்டாம்பூச்சிகள் பறக்கும் அனுபவத்தை அன்றுதான் அவள் உணர்ந்தாள்.. உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலைகுனிந்து கொள்ள.. அதற்கு மேலும் தாளமுடியாதவனாக அவன் தாபத்துடன் மாலினியை நெருங்கினான்...

"அத்தான்.. வேண்டாம்.." மாலினி எதிர்பார்ப்புடன் பொய்யாக சிணுங்கினாள்...

"காதலிக்கும் பெண்.. வேண்டாம்னு சொன்னால் என்ன அர்த்தம் தெரியுமா..?" பிரபாகரன் கேலியாக நகைத்தான்..

"என்ன அர்த்தமாம்.." தெரிந்துகொண்டே அவள் அறியாதவளைப் போல வினவினாள்..

"வேண்டும்னு அர்த்தம்.." பிரபாகரனின் இதழ்கள் அவளது இதழ் மீது பதிந்தன..

மாலினிக்குள் பரவசம் பொங்கியது.. அவள் கண்மூடி அவன் தோளில் சாய்ந்தாள்.. அவளை நெருங்கி அமர்ந்த பிரபாகரன், அவளது தோளைச் சுற்றிக் கையை படரவிட்டான்...

மாலினியின் மேல் அவனுக்கிருந்த மனத்தாங்கல் இருக்குமிடம் தெரியாமல் ஓடி மறைந்துவிட்டது. அவன் தொட்டவுடன் பாகாய் உருகுகிறவளிடம் குற்றம் கண்டு பிடிக்க அவனால் முடியவில்லை..

"ஏன்.. என் மேல் கோபமாய் இருந்தீங்க..?" அவள் குழந்தை போல் வினவியதும் அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது..

"ஸாரி கண்ணம்மா.. என் குணம்தான் உனக்குத் தெரியுமே.. ஏதோ ஒரு சொல்லத் தெரியாத கோபம்.." அவன் உண்மையான வருத்தத்துடன் கூறியதும் அவள் இளகிவிட்டாள்..

"இதுக்குப் போய் ஸாரி சொல்லணுமா அத்தான்.. உங்கள் கோபத்தை என்னிடம்தானே காட்டினீங்க.. இதைக் கூட நான் தாங்கிக் கொள்ள மாட்டேனா.." அவள் காதலுடன் அவனது விரலோடு தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டாள்...

இப்படிப் பேசுவளிடம் எப்படி பிரபாகரன் அந்த ரோஜாப்பூவைப் பற்றிக் கேட்பான்..?

தன்னிடமிருந்த தவிப்பையும் துடிப்பையும் மாலினியும் பிரதிபலித்ததை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொண்ட பின்னால் அவளைச் சந்தேகித்து கேள்வி கேட்க பிரபாகரனுக்கு மனமில்லை...

அவர்களைக் கடந்து சென்ற காரை ஓட்டிக் கொண்டிருந்தவர்.. வியப்புடன் திரும்பிப் பார்த்துவிட்டுப் போவதைக் கண்டவுடன் மாலினி.. அவசரமாக விலகி அமர்ந்தாள்...

"ஏன்..?"

"அந்தக் காரில் போகிறவர்.. உங்க காரைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் போகிறார்.. நீங்க கவனிக்கலையா...?"

"உங்க காரா..?"

பிரபாகரன் குற்றம் சாட்டும் பாவனையில் வினவ...

"தப்புத்தான் சாமி... கன்னத்தில் போட்டுக்கறேன்.." என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் மாலினி...

"சரியாச் சொல்லிப் பழகு.."

"நம்ம கார்... போதுமா.."

"இது.. இப்படியே பேசிப் பழகு.. நம் வீடு.. நம்ம காயத்ரி.. நம்ம மில்.. புரியுதா..?"

மறந்தும் அவன் 'நம்ம தினகரன்..' என்று சொல்ல வில்லை என்பதை கவனித்துக் கொண்டாள் மாலினி...

"புரியுது.."

"அந்தக் காரில் போகிறவர் எனக்குத் தெரிந்தவர்.. என் கார் இங்கே நிற்குதுன்னு திரும்பிப் பார்த்துவிட்டுப் போகிறார்.. ஆனால்.. கார் கண்ணாடிக் கதவுகள்தான் மூடியிருக்கே.. அப்புறம் எதுக்கு தள்ளிப் போகிற..?"

"இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்.."

"எனக்கு முக்கியம்டி.."

அவளுக்கு முகச்சிவப்பு அதிகரித்தது.. அவளது வழக்கமாக அவன் கையில் கிள்ளினாள்...

"காதல் பண்ணுவதை விட்டு விட்டு காரைக் கிளப்புங்க.."

"அதற்குள்ளாகவா..?"

"நேரமாச்சு அத்தான்.. நான் இதுவரை வேலைக்கு லேட்டாகப் போனதில்லை..."

"இன்றைக்கு லேட்டாய் போ.."

"அப்படிப் போனால் என்ன சொல்லுவாங்க தெரியுமா..?"

"என்ன சொல்லுவாங்க..?"

"கேபியின் அத்தை மகள் லேட்டாய் வருகிறாள்னு சொல்லிவிட மாட்டாங்களா..?"

அவள் எதற்கும்.. எதற்கும் முடிச்சுப் போடுகிறாள் என்ற நினைவில் அவன் சிரித்துக்கொண்டே காரைக் கிளப்பினான்..

"நீ கெட்டிக்காரிடி.."

"என்ன கெட்டிக்காரத்தனம் இருந்து என்ன பண்ண.. என் வருங்கால மாமியார் கொடுத்த பூவை உங்ககிட்ட இருந்து கைப்பற்றிக் கொள்ள முடியலையே.."

காரை ஓட்டிக் கொண்டிருந்த பிரபாகரன்.. அவள் சொல்வதைக் கேட்டதும்.. சிரிப்பை நிறுத்திவிட்டு.. தீவிரமான முகபாவனையுடன் அவளைப் பார்த்தான்..

"நீ எதைச் சொல்கிற..?"

"காலையில் நீங்க வாங்கி வைத்துக் கொண்ட ரோஜாப் பூவை சொல்கிறேன்.."

"அதை அம்மா கொடுத்தாங்கன்னா சொன்ன..?"

"ம்ம்ம்.. அத்தைதான் கொடுத்துவிட்டாங்களாம்.."

"அப்போ.. அம்மா.. நேரடியாக உன்னிடம் அந்தப் பூவை கொடுக்கவில்லையா..?"

"ஊஹூம்.. செந்தாமரையிடம் கொடுத்து விட்டாங்க.."

'செந்தாமரை கொடுத்தாளா..?'

செந்தாமரை பொய் சொல்ல மாட்டாள்.. ஆனால்.. தினகரனின் கையில் இருந்த பூ எங்கே போனது..?

பிரபாகரனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந்தன..

அவனது மனப் போராட்டத்தை உணராத மாலினி இயல்பாக தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்...

"அந்தப் பூ.. நம்ம வீட்டுத் தோட்டத்தில் இன்றைக் குத்தான் மலர்ந்ததாம்... அதை அத்தை எனக்காக கொடுத்து விட்டாங்களாம்.. செந்தாமரை இதைச் சொல்லி.. என் கையில் அந்தப் பூவை கொடுத்தபோது எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்தது தெரியுமா..?"

'பூவுக்குள் பூகம்பம் என்பது இதுதான் போல..'

ஒரு பழத்துக்காக.. அண்ணன் விநாயகருக்கும் தம்பி முருகனுக்கும் மனத்தாங்கல் வரும்போது.. பூவை வைத்து ஏன் இத்தனை பிரச்னைகள் வராது என்று நினைத்துக் கொண்டான் பிரபாகரன்...

"ஸாரிடி செல்லம்.. அப்பா படம் ஹாலில் இருந்ததில்ல..?"

"ஆமாம்..."

"அதுக்கு தினமும் ஒரு பூவை வைப்பேன்.. உன் கையில் அந்தப் பூவைப் பார்த்ததும் கீழே இறங்கிப் போக சோம்பல் பட்டுக்கொண்டு அந்தப் பூவை வாங்கி வைத்து விட்டேன்..."

"அவ்வளவுதானா..?" மாலினி லேசான மனத்தோடு சிரித்தாள்..

"நான் என்னமோன்னு நினைத்து பயந்துவிட்டேன் அத்தான்.."

"என்னமோன்னு நினை.. என்னை மட்டும் நினைத்து விடாதே..."

அதற்குள் மில் வந்துவிட.. இறங்கிக் கொண்ட மாலினி.. பிரபாகரன் இருந்த பக்கம் வந்து குனிந்தாள்...

"மறந்தால்தானே நினைப்பதற்கு..?"

இதைக் கேட்டு விட்டு வேகமாய் அவள் சென்று விட.. அவளின் வார்த்தைகள் மழைச் சாரலாய் அவனது மனம்

நனைத்தன...

'மாலினி..' அவன் மனம் மயங்கினான்...

அவனுடைய கார் வளைந்து திரும்பி மில்லை நோக்கிப் போகாமல் வீட்டை நோக்கி விரைந்தது...

பிரபாகரன்.. கோட்டையூர் ஜமீன்தார் கார்த்திகேயனின் மூத்த மகன்.. பெரிய தொழில் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிய கர்த்தா.. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும் முதலாளி.. பல தொழில்களை கட்டுக்குள் வைத்திருக்கும் மிகச் சிறந்த நிர்வாகி...

அவன் வீட்டுக்குள் குழப்பம் முளைப்பதா..?

தினகரனின் கையிலிருந்த பூ.. மாலினியின் கைக்கு செந்தாமரை மூலம் வந்திருக்கிறது.. அதை நர்மதா கொடுத்துவிட்டதாக செந்தாமரை சொல்லியிருக்கிறாள்.. அந்தப் பூவை மாலினி வைத்திருப்பதைக் கண்ட தினகரனின் கண்கள் ஜொலிக்கின்றன.. ஸ்வேதாவோ அதைக் குத்திக் காட்டிப் பேசுகிறாள்...

தவறு எங்கிருந்து ஆரம்பித்து என்று கண்டுபிடிக்கா விட்டால் அவன் பிரபாகரன் இல்லையே...

இதுவரை இதுபோன்ற மனக்குழப்பம் அவனுக்கு வீட்டுக்குள் ஏற்பட்டதில்லை.. வெளியே எவ்வளவு பிரச்னைகள் இருந்தாலும் வீட்டுக்குள் வந்துவிட்டால் அதுதானாக மறந்துவிட வேண்டும். அப்படி மறக்கடிப்பதற்குப் பெயர்தான் வீடு என்ற கொள்கையை உடையவன் பிரபாகரன்.. நர்மதாவும் மூத்த மகனின் மனதிற்கேற்ப வீட்டை நிர்வகித்து வந்தாள்.. இன்று முதன்முறையாக ஒரு பிரச்னை தோன்றியிருக்கிறது. அதன் ஆணிவேரைக் கண்டுபிடித்து முளைக்கும் போதே கிள்ளி எறிய வேண்டியது அவசியம் என்று பிரபாகரனுக்குத் தோன்றியது..

எஜமானனின் காரைக் கண்டதும் பரந்தாமன் அவசரமாக அருகில் ஓடிவந்தார்...

"என்னங்கய்யா.. போன சுருக்கில் திரும்பிட்டீங்க.."

"ஒன்றுமில்லை பரந்தாமன்.. முக்கியமான ஃபைல் ஒன்றை மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டேன்..."

"நீங்க அவ்வளவு சீக்கிரம் மறக்க மாட்டீங்களே.."

"இன்றைக்கு என்னவோ மறந்து விட்டது..."

பிரபாகரன், நர்மதாவைத் தேடிப் போனான்.. காலை உணவிற்குப் பின்னால் அவள் எப்போதுமே சற்று நேரம் ஓய்வெடுப்பாள்...

அப்போதும் அதுபோல் படுத்திருந்தவள்.. மூத்த மகனைக் கண்டதும் பரபரப்பாய் எழுந்து கொண்டாள்...

"என்ன விஷயம் பிரபா..?"

"அம்மா.. நீங்க காலையில் மாலினிக்கு ரோஜாப் பூ கொடுத்துவிட்டீங்களா..?"

"இல்லையேப்பா.."

இந்தப் பதில் பிரபாகரன் எதிர்பார்த்ததுதான். அவன் யோசனையோடு...

"செந்தாமரை நீங்கள் கொடுத்ததாகச் சொல்லி ஒரு ரோஜாப்பூவை மாலினியிடம் கொடுத்திருக்கிறாள்மா... அதுவும் சும்மா கொடுக்கவில்லை... இன்றைக்கு காலையில்தான் அந்தப் மலர்ந்ததாகவும்.. அதை மாலினிதான் வைத்துக் கொள்ள வேண்டுமென்று

நீங்க கொடுத்துவிட்ட தாகவும் சொல்லிக் கொடுத்திருக்கிறாள்.."

நர்மதாவின் புருவங்கள் யோசனையுடன் சுளித்தன..

"பொன்னி.. செந்தாமரையை வரச் சொல்லு..." என்றாள்...

"என்னாங்கம்மா..." என்று உடனே செந்தாமரை வந்து நின்றுவிட்டாள்...

"காலையில் மாலினிக்கு ரோஜாப்பூ பூவை கொடுத்தாயா..?"

"நீங்க கொடுத்துவிட்ட பூவுதானேம்மா... கொடுத்துட்டேனே..."

"பொறு.. பொறு.. அது நான் கொடுத்துவிட்ட பூவுன்னு உனக்கு எப்படித் தெரியும்..? நான் உன் கையில் பூவைக் கொடுக்கலையே..."

"நீங்க கொடுத்துவிட்டதாகச் சொல்லி ஸ்வேதாம்மா கொடுத்தாங்கம்மா... அது இன்னிக்கு பூத்த பூவாம்.. அதை ஆசையாய் மாலினியம்மாவுக்கு கொடுத்து விட்டீங்களாம்.. இதையும் அந்தம்மாதான் சொன்னாங்க.. இந்த விவரம் பூராவும் மாலினியம்மாகிட்ட சொல்லித்தானே பூவைக் கொடுத்தேன்..?"

"சரி.. நீ போ..."

நர்மதா மகனைப் பார்த்தாள்.. பிரபாகரனின் புருவங்கள் சுளித்திருந்தன.. அவன் மனம் ஒருபக்கம் தினகரன் அந்தச் செயலை செய்யவில்லை என்பதில் திருப்தி அடைந்திருந்தது.. மறுபக்கம்.. இந்த வீட்டில் இருந்து கொண்டு இந்த வீட்டின் வேலையாளைப் பயன்படுத்தி இப்படியொரு காரியத்தை செய்யத் துணிந்த ஸ்வேதா... வேறு எதற்குத்தான் துணியமாட்டாள் என்று கேள்வி கேட்டது...

ஸ்வேதா மிகவும் சாதுர்யமாக அந்த விளையாட்டை விளையாடியிருந்தாள். ஆனானப்பட்ட பிரபாகரனே ஒரு கணம் தம்பி கொடுத்த பூவை மாலினி வாங்கிவிட்டாள் என்று நினைக்க வைத்து விட்டாளே...

பிரபாகரன் பல்லைக் கடித்தான்...

## 58

## உறக்கத்திலும் என் மனது...

உன் முகத்தை நினைக்கும் நினைவை..

என்னவென்று நான் சொல்ல..?

கத்தி முனையில் நடப்பது என்று சொல்வார்களே.. அது போன்றது காதலில் விழுந்தவர்கள் பேசுகின்ற பேச்சுகள்.. அவர்களையும் அறியாமல் சிறிது கவனப்பிசகாகிப் பேசிவிட்டாலும் அந்தப் பேச்சு கத்தி முனையைவிடக் கூர்மையாக இதயத்தை அறுத்துவிடும். காலம் பூராவும் அந்த ரணம் ஆறாமல் வலி இருந்து கொண்டே இருக்கும்...

கண்ணகி பேசிய எந்த வார்த்தையும் கோவலனைக் காயப்படுத்தவில்லை.. அதுவே அவனது காதலியான மாதவி பாடிய 'கானல் வரிக் கவிதை..' அவனைக் கோபப் படுத்தியது. அந்தக் கோபத்தில் அவன் மாதவியைப் பிரிந்தான். மணிமேகலையுடன் அவளை அநாதையாக நிற்க விட்டு விட்டு ஊரை விட்டே சென்றுவிட்டான்...

அதுபோல பிரபாகரனும் ஏதேனும் மாலினியைக் கேள்வி கேட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்..? குற்றமற்ற மாலினி அந்தச் சொல்லைப் பொறுத்திருப்பாளா..? அந்த வினாடியே பிரபாகரனை விட்டுப் பிரிந்து சென்றிருக்க மாட்டாளா..?

நினைக்கும் போதே நடுங்கியது அவனது நெஞ்சம்.. மாலினியில்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கவே அவனால் முடியவில்லை...

அதுதான் ஸ்வேதாவின் திட்டமா..? அப்படியென்றால் அவள் இனிமேலும் அந்த வீட்டில் இருப்பது சாத்தியப்படாது என்று முடிவெடுத்தான் பிரபாகரன்..

அது அவனுடைய வீடு.. அங்கே அவனுடைய தாயும் தங்கையும் சகோதரர்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்..

ஸ்வேதா பிரிக்கப் பார்த்தது மாலினியையும் பிரபாகரனையும் மட்டும் அல்ல.. அண்ணனையும்

தம்பியையும் பிரிக்கப் பார்த்தாள்.. அந்த தைரியமும் துணிச்சலும் அவள் மனதிற்கு வந்து விட்ட பின்பு அவளை அந்த வீட்டில் தங்குவதற்கு பிரபாகரனால் அனுமதிக்க முடியாது..

"அம்மா..."

"சொல்லுப்பா..."

மகனின் தீவிரமான ஆலோசனையைக் கண்டவுடன் ஏதோ நடந்திருக்கிறது என்று யூகித்துக் கொண்டு அவனது உத்தரவிற்காக காத்திருந்த நர்மதா கேட்டாள்...

"ஸ்வேதாவின் வீட்டினர் இன்னும் இருக்காங்க இல்லையா..?"

"ஆமாம் பிரபா.. இன்னும் இரண்டு மூன்று நாள்கள் கழித்துதான் அவங்க கிளம்புவாங்க..."

"அவங்க போகும்போது ஸ்வேதாவை அவங்களுடன் அனுப்பி வைத்து விடுங்க.."

"பிரபா.."

"இது என் வேண்டுகோள்ம்மா.. இதை உத்தரவாக நீங்க எடுத்துக் கொண்டாலும் சரி.. இனி அவள் இந்த வீட்டில் இருக்கக் கூடாது.."

"என்ன நடந்தது பிரபா..?"

"சொல்கிற விஷயமாக இருந்தால் நானே உங்களிடம் சொல்லியிருப்பேனேம்மா.. இவள் நம் குடும்பத்தை உடைக்கப் பார்க்கிறாள்.. அவள் இந்த வீட்டில் இருப்பது பெரிய ஆபத்தில் கொண்டு போய் விட்டு விடும்மா..."

"நீயா இப்படிப் பேசுவது..?"

"நானேதான் பேசுகிறேன்.. மகாபாரதத்தில் பீஷ்மர் வில்லைப் போட்டுவிட்டு நிராயுதபாணியாக ஏன் நின்றார்ம்மா..? அவரை எதிர்த்த அர்ஜுனனின் தேரில் இருந்த சிகண்டி பிறப்பால் ஒரு பெண்.. மாவீரன் எவனும் பெண்ணை எதிர்த்துப் போராட மாட்டான்.. அப்படிப்

போராடினால் அவன் ஆண்மகன் அல்ல.. நான் வீரன்ம்மா ஆண்மகன்.."

இதற்கு மேல் எப்படி நர்மதா வாதாடுவாள்..? அவளுக்கு மூத்த மகனின் சொல்தான் வேதம்.. பிரபாகரன் எதைச் சொன்னாலும் கேள்வியே கேட்காமல் ஏற்றுக்கொள்வதுதான் அவளுடைய பழக்கம்...

ஆளவந்தாருக்காகவும் விசாலாட்சிக்காவும் அவர்களின் பேத்தியை பிள்ளைகளின் மறைமுக எதிர்ப்பையும் மீறி அத்தனை நாள்களாக வீட்டில் இருக்க விட்டிருந்தாள்...

இப்போது பிரபாகரன் தீர்மானமாக சொல்லிவிட்ட பின்பு அவளைத் தங்க வைக்க நர்மதாவால் எப்படி முடியும்...?

"ஆகட்டும் பிரபா..."

அதற்கு மேல் அங்கே நிற்காமல் பிரபாகரன் போய் விட்டான்.. நர்மதா ஆயாசத்துடன் எழுந்து கொண்டாள்.. இனி காலைத் தூக்கம் போட அவளால் முடியாது. அறையை விட்டு வெளியே வந்தவள் ஆளவந்தாரைத் தேடிச் சென்றாள்...

"பெரியப்பா..."

மாடி பால்கனியில் மனைவி விசாலாட்சியுடன் கதை பேசிக் கொண்டிருந்த ஆளவந்தார் திரும்பிப் பார்த்தார்..

"வாம்மா நர்மதா..."

"காபி சாப்பிட்டீங்களா பெரியப்பா..."

"ஆச்சும்மா.. நீ உட்காரு..."

நர்மதா, விசாலாட்சியின் அருகே அமர்ந்தாள்.. எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று அவளுக்குத் தயக்கமாக இருந்தது...

தம்பி மகளின் முகக் குறிப்பிலிருந்து அவள் எதையோ சொல்வதற்காக வந்திருப்பதை ஆளவந்தாரால் புரிந்து கொள்ள முடிந்தது...

"என்ன விஷயம் நர்மதா..?"

"பெரியப்பா.. எனக்கு அம்மா.. அப்பா இல்லாத குறையை நீங்களும் பெரியம்மாவும்தான் போக்கிக்கிட்டு இருக்கீங்க..."

"அதுக்கென்னம்மா.. உன்னை நாங்க பெத்த பெண்ணாகத்தான் நினைக்கிறோம்.. வேற்றாளாய் நினைக்கலியே..."

"அண்ணன்கள் மூன்று பேரையும் என் கூடப் பிறந்த அண்ணன்களாகத்தான் நான் நினைக்கிறேன்.."

"இதை நீ சொல்லணுமாம்மா..."

"அந்த உரிமையினால்தான் ஸ்வேதாவை இத்தனை நாளாய் இங்கே தங்க வைச்சிருந்தேன்.."

ஆளவந்தாருக்கும் விசாலாட்சிக்கும் நர்மதா கூற வந்த விவரம் என்னவென்று விளங்கி விட்டது. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

"பெரியம்மா.. நான் சொல்லித்தான் உங்களுக்கு புரியணும்னு இல்லை.. எப்போதுமே கண்ணுக்கு முன்னால் இருக்கிற பொருள் மீது யாருக்கும் அவ்வளவு சீக்கிரத்தில் கவர்ச்சி ஏற்பட்டுவிடாது. எட்ட இருக்கும் பொருளின் மேல்தான் பிடிப்பு வரும்..."

"நிசம்தான் நர்மதா..." என்றாள் விசாலாட்சி...

"இத்தனை வருஷமாக ஸ்வேதா இந்த வீட்டில்தான் இருக்கிறாள்.. ஆனால்.. பிரபாவோ தினாவோ அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் பிரியப்படலை.." நர்மதா தயக்கத்துடன் கூறினாள்..

"பிரியமில்லாத பிள்ளைகளை வற்புறுத்த வேணாம் நர்மதா.. பெண் கொடுத்து பெண்ணை எடுத்தால்தான் நம்சொந்தம் நிலைக்கும்னு இல்லை.. இது எப்போதுமே மாறாத சொந்தம்.. இதுக்கு எதுக்கு இப்படிக் கலங்கறே.." ஆறுதலாகப் பேசினாள் விசாலாட்சி...

"அப்படியில்லை பெரியம்மா.. அண்ணன் என் வீட்டில் பெண் கொடுக்க ரொம்பவும் ஆசைப்படுகிறார்.."

"யாராருக்கு எங்கே முடியணும்னு ஆண்டவன் போட்ட கணக்கு இருக்கு.. அதுப்படிதான் நடக்கும்.. வீணாய் நீ ஏன் மனசைப் போட்டுக் குழப்பிக்கறே? ஸ்வேதாவை எங்க கூட கூப்பிட்டுக் கொண்டு போகணு முன்னுதான் நாங்களும் முடிவு பண்ணியிருந்தோம்.. வயதுக்கு வந்த பெண்ணை வருஷக்கணக்கில் அத்தையின் வீட்டில் விட்டு வைக்கிறது சரியில்லைன்னு தான் நானும் உன் பெரியப்பாவும் நினைக்கிறோம்..."

"பெரியம்மா..."

"த்ச்சு.. உன் அண்ணனுக்குத்தான் புத்தியில்லை.. பெத்த பெண்ணை வளர்க்கத் தெரியாமல் வளர்த்து வைத்திருக்கிறான்.. அதை நாங்க எடுத்துச் சொன்னால் காதில் போட்டுக்கவும் மாட்டான்.. அதுக்கு நீ என்னம்மா பண்ணுவ..? உன் மேல் என்ன குற்றமிருக்கு..?

நீ கண்கலங்காதே.. கண்ணைத் துடைச்சிக்கிட்டு வேலைகளைக் கவனி.."

"பெரியப்பா.."

"நாங்க பார்த்துக்கறோம் நர்மதா.. சுவாதியும் ஸ்வேதாவும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்தான்.. ஆனால், சுவாதி இருக்கிற இடமே தெரியாது.. குணத்திலயும் பண்பிலயும் அவ அப்படியே அவளுடைய அம்மா பரிமளத்தின் வார்ப்பு.. அவளோட வளர்ப்பு. ஸ்வேதாவை சின்ன வயதிலிருந்தே உன் அண்ணன் இப்படி வளர்த்து வைத்துவிட்டான்.. நாங்க சொன்னால் எங்களையே எதிரியாகப் பார்க்கிறான்..."

"இப்படிச் பேச வேண்டாம் பெரியப்பா.. நம்ம பெண்ணை நாமே விட்டுக் கொடுத்தால் எப்படி..? அந்த நினைவில்தான் நான் ஸ்வேதா செய்த எந்தக் காரியத்தையும் கண்டிக்க மட்டுமே செய்தேன்.. அவளை கருங்கல்லுக்கு திருப்பி அனுப்ப வேண்டுமுன்னு நினைக்க வில்லை. ஆனா, இன்னிக்கு பிரபாகரன் முடிவாகச் சொல்லிவிட்டான்..."

"பிரபாகரன் சொன்னானா..? என்ன சொன்னான் நர்மதா..?"

"இந்த ஸ்வேதா என்ன பண்ணித் தொலைத்தாள்னு தெரியவில்லை பெரியப்பா.. இனி ஸ்வேதா இந்த வீட்டில் இருக்கக் கூடாதுன்னு சொல்லிவிட்டான்.."

ஆளவந்தாரும் விசாலாட்சியும் திகைப்புடன் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களுக்குப் புரிந்து விட்டது.. நர்மதா சொல்வது மறைமுகமான செய்தி.. அந்த செய்தி சொல்ல வருவது என்னவென்றால்.. ஸ்வேதா அந்த வீட்டின் மருமகளாக இனி ஒருபோதும் வர முடியாது..

கார்த்திகேயனின் மறைவுக்குப் பின்னால் அந்த வீட்டில் பிரபாகரன்தான் குடும்பத் தலைவன்.. அவன் எடுக்கும் முடிவிற்கு அவனது தாய் உட்பட எல்லோரும் கட்டுப்படுவார்கள்.. அப்பேர்ப்பட்ட பிரபாகரன் இனி ஸ்வேதா அந்த வீட்டில் விருந்தாளியாகக்கூட இருக்கக் கூடாது என்ற முடிவை எடுத்துவிட்டான்.. அதைக் கண்டிப்பாக தாயிடம் கூறியும் விட்டான்...

விருந்தாளியாகக்கூட அந்த வீட்டில் ஸ்வேதா இருக்கக்கூடாதென்று சொல்லிவிட்டவன்.. மருமகளாக அவளை எப்படி இந்த வீட்டில் காலம் முழுவதும் இருக்க அனுமதிப்பான்..?

இந்த முடிவை மாணிக்கவாசகம் எப்படி எதிர் கொள்ளப் போகிறாரென்று ஆளவந்தாரும் விசாலாட்சியும் கவலைப்பட்டார்கள்.. அவர்களும் ஆயிரம் முறை இரண்டாவது மகனுக்கு புத்தி சொல்லிப் பார்த்துவிட்டார்கள்.. மாணிக்கவாசகம் கேட்டுக் கொள்வதாகவே இல்லை. எல்லோரும் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று சொன்னால், அவர் மட்டும் அது ஒற்றைக் கால்தான் என்று இன்னும் அதிகமாக பிடிவாதம் பிடிப்பவராக இருந்தார்..

"கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பொண்ணைக் கொடுக்கணும்கிறதுதான் என்னோட லட்சியம்.. இதுக்கு நீங்க குறுக்கே வராதீங்கப்பா..."

"ஏண்டா.. எனக்கு மட்டும் என் பேத்தியை அங்கு கொடுக்கணும்கிற ஆசையிருக்காதா..?"

"இருக்குது அப்பா.. உங்க மனசில் அந்த ஆசையிருக்கு.. ஆனா, அது நான் பெத்த மகளைக் கொடுக்கணும்கிற ஆசையில்லை.. வாசவன் பெத்த மகளைக் கொடுக்கணும்கிற ஆசை.."

"அபாண்டமாய் பேசாதே மாணிக்கம்..."

"நான் காரணமில்லாமல் சொல்லவில்லை.. இப்போது கூட உங்கள் வாயிலிருந்து உங்க பேத்தியை அந்த வீட்டில் கொடுக்கணும்கிற ஆசையிருக்குன்னு தானே வருது.. ஸ்வேதாவை அந்த வீட்டில் கொடுக்கணும்னு வரவில்லையே..."

"ஏண்டா.. ஸ்வேதா என் பேத்திதானேடா.."

"ஆனா.. பவித்ராவும் உங்க பேத்திதானேப்பா.. எப்பவுமே உங்களுக்கு என்னைவிட.. அண்ணன் மேலயும் தம்பி மேலேயும் பாசம் அதிகம்ப்பா.. அண்ணன் வீட்டில் ராதிகாவை கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டாங்க.. அதனால அவளை விட்டு விட்டீங்க.. தம்பி வீட்டில் பவித்ரா கல்யாணத்துக்கு தயாராக இருக்கிறா.. அதனால் அவளை உங்க மனதில் வைத்துக்கிட்டு பேசுகிறீங்க.."

"இப்படியெல்லாம் நினைக்க உன்னால் மட்டும் தான் முடியும்டா மாணிக்கம்..."

"அப்போ.. பவித்ராவை நர்மதாவின் வீட்டிலிருந்து பெண் கேட்டு வந்தால்.. கொடுக்க முடியாதுன்னு சொல்லி விட்டு என் மகளைத்தான் அவ மருமகளாக்கிக்கணும்னு கண்டிஷன் போடுவீங்களா..?"

அங்கே சுற்றி இங்கே சுற்றி மாணிக்கவாசகம் இங்கே வந்து நின்று கிடுக்கிப் பிடி போடுவார் என்று எதிர்பார்த் திருக்காத ஆளவந்தார் திகைத்துப் போனார்...

# 59

**ஒரு சின்னஞ் சிறு சொல்லில்**

**என் இதயம் சிதறிவிட்ட நிலையை**

**என்னவென்று நான் சொல்ல..?**

"பேசணும்னு எதையும் பேசாதே மாணிக்கம்..." ஆளவந்தார் கண்டிப்புடன் சொன்னார்...

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்கப்பா.."

"நீ எதிர்பார்க்கும் பதிலை என்னால் சொல்ல முடியாது மாணிக்கம்.."

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்..?"

"இதோ பார் மாணிக்கம்.. பவித்ராவை நர்மதா பெண் கேட்டால் கொடுக்கிறதும் மறுக்கிறதும் வாசவனின் விருப்பம்.. அதில் நான் தலையிட முடியாது.."

"நீங்க இப்படித்தான் பேசுவீங்கன்னு எனக்குத் தெரியும்ப்பா.. எப்பவுமே உங்களுக்கு அவன்தான் உசத்தி.."

"அப்போ உன் அண்ணன் உசத்தியில்லையா? இப்பத்தானே எனக்கு உன்னைத் தவிர.. மற்ற இரண்டு மகன்கள் மேலயும் அன்பும் பாசமும் ஜாஸ்தின்னு சொன்ன..?"

"அப்பா.. முடிவா என்னதான் சொல்றீங்க.. நீங்க பார்த்து நர்மதாகிட்ட அழுத்தமா ஒரு வார்த்தை சொன்னால் போதும்.. அவ கேட்டுக்குவா..."

"நான் சொல்லமாட்டேன்..."

"ஏன்ப்பா உங்களுக்கு இந்த கெட்ட எண்ணம்..? உங்க பேத்தி நன்றாக வாழணும்கிற ஆசை உங்களுக்கு இல்லையா..?"

"அது என் நெஞ்சு நிறைய இருக்கிறது மாணிக்கம்.. ஆனால்.. அதற்காக என் தம்பி மகளை ஒரு நாளும் வற்புறுத்த மாட்டேன்.. அவளுக்கு உன் மகளை மருமகளாக ஆக்கிக் கொள்ளணும்னு ஆசை வந்தால் அதற்கு நான் தடை சொல்ல மாட்டேன். அதேசமயம் பவித்ராவை மருமகளாக்கிக்கணும்னு அவள் நினைத்தாலும் மறுப்புச் சொல்ல மாட்டேன்.. இல்லை.. இவங்க இரண்டு பேரையும் விட்டு விட்டு அவள் வெளியே பெண் கட்ட நினைத்தாலும் அதில் நான் தலையிட மாட்டேன்..."

"ஆனால்.. தாய்மாமன் வீட்டுச் சீர்செய்ய மட்டும் முதல் ஆளாகப் போய் நிற்க மட்டும் தவற மாட்டீங்க.."

"அது என் கடமை..."

"எனக்கு வயிறு எரிகிறதுப்பா.. ஒன்றுக்கு நான்கு பெண்கள் நம் வீட்டில் இருக்கு.. நாங்க அண்ணன் தம்பிகள் மூன்று பேரும் பெண்பிள்ளைகளை பெற்று வைத்திருக்கிறோம்.. நர்மதாவுக்கு மூன்று மகன்கள் இருக்காங்க.. அவங்க மூன்று பேருக்கும் எங்க மூன்று வீட்டிலும் பெண் எடுத்தால் சொந்தமும் இறுகும்.. நாங்க அண்ணன் தம்பி மூன்று பேரும் ஒற்றுமையாக இருப்போம்.. அதை விட்டு விட்டு கருணாகரனுக்கு வெளியே பெண் கட்டிணதிலிருந்து பிரச்னை ஆரம்பித்து விட்டது..."

"ஒரு பிரச்னையும் இல்லை. எல்லாம் அவங்கவங்க மனதில்தான் இருக்கிறது.. மனுஷக் கழுதையாகப் பார்த்து மலையை மடுவாக்கலாம்.. மடுவை மலையாக்கலாம்..."

"பெண்ணையாவது எங்க மூன்று பேரின் வீட்டில் கொடுப்பான்னு பார்த்தால்.. அதுவும் இல்லை..."

"காயத்ரிக்கு ஷியாம் சுந்தரைத்தானே பிடிச்சிருக்கு..?"

"தட்டிக்கழிக்க இது ஒரு சாக்கு.. அதென்னப்பா.. பெற்ற பிள்ளைகளுக்கு வால் வளர்த்துவிடுவது..? இவங்களைத்தான் கட்டணும்னு சொன்னால்.. கண்ணை மூடிக்கிட்டு அவங்க கட்டிக்கிரணும்.. அதை விட்டுவிட்டு..

அவனைப் பிடிக்குது, இவனைப் பிடிக்குதுன்னு சொல்லிக் கிட்டு அலைந்தால்.. அது நன்றாகவா இருக்கு..?"

"இதை உன் மகளுக்கு சொல்லிக் குடு.. இப்போ ஆளை விடு.."

அறிவுரை சொல்ல ஆரம்பித்தாலே மாணிக்கவாசகம் கதி கலங்க வைக்க ஆரம்பிக்க.. அவரிடம் வாயைத் திறக்கவே ஆளவந்தார் பயப்பட ஆரம்பித்தார்...

"ஏங்க.. இந்த மாணிக்கம் செய்வது கொஞ்சம்கூட சரியில்லை.. வருஷக்கணக்காய் ஸ்வேதாவை நர்மதாவின் வீட்டில் விட்டு வைக்கலாமா..? சொந்த பந்தம் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்லி முடியலை.. நீங்களாவது அவன் கிட்ட சொல்லக் கூடாதா..?" விசாலாட்சி தாங்க முடியாமல் கேட்பாள்...

"ஏன்.. நீ பெற்ற தாய்தானே.. நீதான் அவன் கிட்ட சொல்லிப் பாரேன்.." ஆளவந்தார் கடுப்புடன் பதில் சொல்வார்...

"ஐயோ.. நான் சொல்வதா..?"

"சொல்லச் சொன்னதற்கே இப்படி அலறுகிறாயே.. நான் சொல்லிவிட்டு படும் அவஸ்தையைப் பற்றி உனக்குத் தெரியுமா..?"

மாணிக்கவாசகத்தின் விதண்டாவாதமான கேள்வி களுக்குப் பயந்து ஆளவந்தார்.. மகனைக் கேள்வி கேட்கும் வேலையை விட்டுவிட்டார்...

தகப்பனின் வாயை மிகச் சாமர்த்தியமாக அடைத்து விட்ட மாணிக்கவாசகம்.. மார்த்தாண்டத்தில் இருந்து மகளை அழைத்துக் கொண்டு வரும் நினைவே இல்லாமல் இருந்தார்.. அதை நினைவுபடுத்திய மனைவியையும் அதட்டி அடக்கி வைத்தார்...

"ஏன் மாணிக்கவாசகம்.. உங்களுடைய இரண்டாவது பெண் ஸ்வேதா எங்கே..?" என்று உறவினர்கள் யாராவது கேட்டால்..

"அவள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கிறாள்.." என்று அமர்த்தலாக பதில் சொல்லுவார்...

"இருக்கவேண்டிய இடமா..?"

"ஆமாம்.. மார்த்தாண்டபுரத்தில் இருக்கும் என் தங்கையின் வீடுதான் அவள் இருக்கவேண்டிய இடம்.."

இவ்வளவு உறுதியாக இருக்கும் மாணிக்கவாசகத் திடம் நர்மதாவின் முடிவை எப்படிச் சொல்வது என்று கவலைப்பட்டார் ஆளவந்தார்.. அந்த வேலையைப் பார்க்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டாள் விசாலாட்சி..

"பரிமளம்.. இங்கே வாம்மா.."

"என்னங்கத்தை.."

"உன் புருஷன் எங்கே..?"

"ஸ்வேதாவுடன் பேசிக் கொண்டிருக்கிறார்.."

'அப்படி என்னதான் மகளுக்கு ஓதுவானோ.. என்ன ஓதி என்ன செய்ய..? நர்மதா பெண்ணைப் பிடிக்கலைன்னு சொல்லிட்டா..

நல்லதை ஓதியிருந்தா.. அவளும் நல்லபடி இருந்திருப்பா.. சாகஸம் பண்ண ஓதினா.. இப்படித்தான் பெயர் எடுப்பா.. அறிவு கெட்டவன்...'

மனதிற்குள் இரண்டாவது மகனைத் திட்டித் தீர்த்தாள் விசலாட்சி..

"பரிமளா.. உன்கிட்ட சொல்வதை பொறுமையாய் காதைக் கொடுத்துக் கேளும்மா.."

"சரிங்கத்தை..."

'நீ கேட்டு விடுவாய்.. நீ போய் ஒப்பிப்பதை உன் புருஷன் கேட்கணுமே...'

"என்னத்தை போசாமல் இருக்கீங்க..."

'எப்படிப் பேசுவதுன்னு மனதில் ஒத்திகை பார்த்துக் கிட்டு இருக்கேன்ம்மா...'

"அத்தை.. அத்தை.."

பேச அழைத்துவிட்டு விசாலாட்சி ஒரு மார்க்கமாக பார்த்துக் கொண்டு அமர்ந்து விடவும்.. பரிமளா பயந்து விட்டாள்...

"என்ன பரிமளா..."

"எதையோ சொல்ல வந்தவங்க.. பேசாமல் உட்கார்ந்துட்டீங்களே.."

"அதை எப்படிச் சொல்கிறதுன்னு யோசித்துக்கிட்டு இருக்கேன் பரிமளா.. வேறு ஒன்றுமில்லை..."

"என்ன விஷயமாக இருந்தாலும் என்கிட்ட சொல்லுங்க அத்தை.."

"நம்ம நர்மதா இன்றைக்கு ஒரு விஷயம் சொன்னாள்.."

"என்னவாம்.."

"நம்ம ஸ்வேதாவை நாம் போகும்போது கூடவே கூப்பிட்டுக் கொண்டு போய்விடச் சொல்கிறாள்..."

"அத்தை.."

பரிமளம் அதிர்ந்துவிட்டாள்.. அவளுக்குத் தெரியும்.. இது மிகப் பெரிய அவமானம்.. இதைத் தேடித் தந்துவிட்ட கணவரின் மீது அவளுக்கு அடக்க முடியாத கோபம் ஏற்பட்டது...

விசாலாட்சி மருமகளை இரக்கத்துடன் பார்த்தாள்..

"உன் வேதனை எனக்குப் புரியுது பரிமளா.. இப்படி ஒரு சொல் வந்துவிடக் கூடும்ன்னுதான் நான் தலைப் பாடாய் உன் புருஷன்கிட்ட அடிச்சுக்கிட்டேன்.. அவன் என் சொல் கேக்கல.. இப்ப.. இப்படி ஒரு வார்த்தையை காது கொடுத்து கேட்கும்படியாகி விட்டது. உன் மாமாவும் புத்தி சொல்லிப் பார்த்துவிட்டார்.. மாணிக்கவாசகம் அவர்கூட சண்டைக்குப்

போனான்.. இப்ப நர்மதாவின் வாயிலிருந்து இப்படி ஒரு வார்த்தை வந்து விட்டது.. இனிமேல் என்ன செய்ய..?"

"நர்மதாவும் தான் ஏன் இப்படிச் சொல்ல வேண்டும் அத்தை..?"

"கல்யாணம் பண்ணிக் கொண்டு இன்னொரு வீட்டிற்கு வாழப் போகிற அடுத்த வீட்டுப் பெண்ணை தன் வீட்டில் ஒரு மனுஷி எத்தனை காலம்தான் தங்க வைத்துக் கொள்வாள்..?"

"ஏன்.. அவளுடைய இரண்டு மகன்களில் ஒருவனுக்கு என் மகளைக் கட்டிக் கொண்டால்தான் என்ன..?"

"இதை அவளிடம் போய் நாம் கேட்க முடியுமா பரிமளா...? பிரபாகரனுக்கு ஸ்வேதா இந்த வீட்டில் விருந்தாளியாகக்கூட இருப்பதில் இஷ்டமில்லையாம்.. அவனுக்கும் அவன் தம்பிக்கும் ஸ்வேதாவின் மேல் கொஞ்சம் கூட பிரியம் வரவில்லையாம்.. வராத பிரியத்தை நம்மால் எப்படி வரவைக்க முடியும் பரிமளா.. அவங்க வீட்டில் இஷ்டப்படாதபோது நாம் கட்டாயப் படுத்தி கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியுமா..? அப்படிக் கொடுக்கும் அளவிற்கு நாம் தாழ்ந்துவிட்டோமா..?"

இயல்பான குடும்ப கௌரவத்தின் கர்வம் விசாலாட்சியின் குரலில் தொனித்தது. பரிமளம் வருத்தத்துடன் மாமியாரின் பேச்சுக்கு தலை அசைத்தாள்..

"நானும் சொல்லிப் பார்த்து விட்டேன் அத்தை... நாம் எதில் குறைந்து விட்டோம்.. நம் பெண்ணை வைரத்தாலேயே இழைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கும் அளவிற்கு நமக்கு வசதியிருக்கு.. அப்புறம் எதுக்கு ஸ்வேதாவை அழையாத விருந்தாளியாக இங்கே கொண்டு வந்துவிடணும்னு.. அவர் என் சொல் பேச்சை எப்போது கேட்டார்? இப்போது கேட்பதற்கு.."

"அதுக்குத்தான் இந்த வார்த்தையை கேட்க வைச்சிட்டான்.. அவங்கவங்க இடத்தில் அவங்கவங்க இருந்தால் தான் மதிப்பு.. இடம் மாறினால் இந்தப் பெயர்தான் வரும்..."

"நான் அவரிடம் இதை சொல்லிவிடுகிறேன் அத்தை..."

மனைவிக்கும் மருமகளுக்கும் இடையே நடந்த உரையாடலை ஊடே குறுக்கிடாமல் செவிமடுத்த ஆளவந்தார் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.. மகனிடம் இந்த செய்தியைச் சொல்ல வேண்டிய பொறுப்பு அவருக்கில்லை..

அதை புத்திசாலித்தனமாக மருமகளின் தலையில் சுமத்திவிட்டாள் விசாலாட்சி..

கோபத்துடன் மாணிக்கவாசகமும் ஸ்வேதாவும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்குப் போனாள் பரிமளம்..

என்றைக்கும் இல்லாத திருநாளாக கோபத்துடன் வந்து நின்ற மனைவியைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தி விட்டு அவளின் முகத்தைப் பார்த்தார் மாணிக்கவாசகம்.. அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

'என்னடா இது.. என் தர்ம பத்தினி கட்டிப்போட்ட சாதுப் பசு போல இருப்பாள்.. இப்ப என்னன்னா காளி அவதாரம் எடுத்திருக்காளே.. என்னவா இருக்கும்..' தாடையைத் தடவி யோசித்தார் மாணிக்கவாசகம்...

பரிமளமே கோபாவேசம் கொண்டிருக்கிறாள் என்றால்.. மாணிக்கவாசகம் பெரிய தவறைச் செய்திருக்க வேண்டும் என்ற நினைவு மனதில் எழ.. சுதாரிப்பாக முந்திக் கொண்டு மனைவியை அதட்டினார் மாணிக்கவாசகம்..

"எதுக்குடி இப்படி பத்ரகாளி போல வந்து நிற்கிறே.."

"உங்களுக்கு பெண்டாட்டியாகிப் போயிட்டேனில்ல.. அப்படித்தான் வந்து நிற்பேன்.."

"இது கருங்கல்லும் இல்லை.. நீ நின்றுகிட்டு இருக்கிறது நம்ம வீடும் இல்லை.. அடக்கி வாசி..."

வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டார் மாணிக்க வாசகம்...

## 60

**நீ விட்டுச் சென்ற நினைவுகளால்..**

**விரிசல் கண்ட என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"ஓஹோ.. அந்த நினைப்புகூட உங்க மனசில் இருக்கா..?"

"எந்த நினைப்பு..?"

"இது உங்க வீடில்லை.. அடுத்தவங்க வீடுங்கிற நினைப்பு..."

பரிமளம் எந்த இடத்திற்கு வருகிறாள் என்று சட்டென்று கண்டுகொண்டார் மாணிக்கவாசகம்.. அவள் அறிவுரை சொல்ல இடம் கொடுத்துவிடக்கூடாதென்று கவனமாக பேச ஆரம்பித்தார்..

"அடுத்தவங்க வீடா..? எது அடுத்தவங்க வீடு.. இது என் தங்கையின் வீடுடி.."

"உங்க தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்த வீடு..."

"அதுக்கென்ன இப்ப..?"

"பொண்ணைக் கொடுத்த வீட்டில் இரண்டு நாள் தங்கவே நாம் ஆயிரம் யோசனை யோசிக்கணும்.."

"இதுதான் உன் பிரச்னையா.. வா.. இப்பவே கிளம்பி நம்ம ஊருக்குப் போகலாம்.."

"ஏய்ய் ஸ்வேதா.. கிளம்புடி..."

"பொறு.. பொறு.. அவளை எதுக்கு இப்ப கிளம்பச் சொல்லுற..?"

"வெட்கமாயில்லை உங்களுக்கு.. நான் எதுக்கு சொல்கிறேன்னு உங்களுக்குத் தெரியாதா..?"

"என்னடி சொன்னே..?"

கோபத்துடன் எழுந்த மாணிக்கவாசகம் பரிமளத்தின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டார்.. திருமணம் ஆகி அவருடைய மனைவியாக பரிமளம் வாழ ஆரம்பித்த நாளில் இருந்து அதுவரை மாணிக்கவாசகம் கோபமாக பேசும்படிகூட பரிமளம் நடந்து கொண்டதில்லை.. அன்று அவர் அடித்தே விட்டார்.. ஆனாலும் பரிமளம் அசையாமல் முறைப்பாய் அவரது பார்வையை எதிர்கொண்டாள்..

"ரொம்ப சந்தோஷமாயிருக்குங்க.. சொல்லு பொறுக்காத குணம் இன்னும் உங்க ரத்தத்தில் இருக்குன்னு தெரியுது.."

"இன்னும் என் ரத்தத்தில் இருக்குன்னு சொல்கிறாயா..? அது என் ரத்தத்தில் ஊறினதுடி.. என்னை யாருன்னு நினைச்சே.. கருங்கல் ஆளவந்தாரின் மகன் மாணிக்க வாசகம்டி.."

"அந்தப் பெருமையே நம்ம பரம்பரைக்கு போதுமே. அதை விட்டுவிட்டு கோட்டையூர் ஜமீன் குடும்பத்தில் பொண்ணு கொடுக்கணும்னு ஏன் அலைகிறீங்க...?"

"அது என் கனவு பரிமளா..."

"அதுக்கு விலையாய் நம்ம மரியாதையை விட்டுக் கொடுப்பீங்களா..?"

"இப்ப நம்ம மரியாதைக்கு என்ன குறைவு வந்து விட்டது..?"

இதைக் கேட்ட பரிமளம் கோபச் சிரிப்பு சிரித்தாள்.. என்றுமே அன்னைக்குப் பயப்படாத ஸ்வேதாகூட அன்றைக்கு பரிமளம் நின்ற கோபத் தோற்றத்தைக் கண்டு நடுங்கிப் போயிருந்தாள்..

"நம்ம மரியாதைக்கு என்ன குறையா..? ம்ஹூம்.. பூனை கண்ணை மூடிக்கிட்டு பூலோகமே இருண்டு போச்சுன்னு சொல்லிச்சாம்.. உங்க கதையைக் கேட்டா.. அந்தக் கதைதான் எனக்கு நினைவுக்கு வருது.."

"என்னடி சொல்கிற..?"

"உங்க தங்கை.. நாம் ஊருக்குப் போகும்போது ஸ்வேதாவையும் நம்ம கூடக் கூப்பிட்டுக் கொண்டு போகச் சொல்லிவிட்டாளாம்.."

மாணிக்கவாசகம் அதிர்ந்துபோனார்.. அவருக்கு பரிமளத்தின் கோபத்தில் இருந்த நியாயம் இப்போதுதான் பிடிபட்டது.. சாது மிரண்டால் காடு கொள்ளாதுதான்.. ஆனால் சாது மிரளவும் காரணம் இருக்குமல்லவா..? அது எப்படிப்பட்ட காரணம் என்று இப்போது அவருக்குப் புரிந்தது...

மாணிக்கவாசகம் கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பெண் கொடுக்க ஆசைப்பட்டார்தான்.. ஆனால்.. அதற்காக தன் மரியாதையைப் பணயம் வைக்க ஒருபோதும் அவர் விரும்ப மாட்டார்..

தங்கையின் வீட்டில் மூன்று மகன்களும் ஒரு மகளும் இருக்கிறார்கள். அவர் வீட்டில் இரண்டு மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள்.. தங்கை ஏன் அவர் வீட்டில் பெண் எடுத்து பெண் கொடுக்கக் கூடாது என்பதுதான் அவரது பிடிவாதமான கேள்வியாக இருந்தது..

கருணாகரன், சசிரேகாவை காதல் திருமணம் செய்து கொள்ள.. வீட்டிற்கு ஒரே பெண் மகவான காயத்ரியை தனது கணவரின் விருப்பப்படி.. அவரது ஒன்றுவிட்ட தங்கையின் மகனுக்கே திருமணம் செய்து கொடுத்துவிட நர்மதா முடிவு பண்ணிவிட்டாள்...

வேறுவழியின்றி தனது மூத்த மகளுக்கும் மகனுக்கும் வேறு இடத்தில் திருமணத்தைப் பண்ணிக் கொடுத்து விட்டு.. ஸ்வேதாவின் மூலமாக தன் ஆசை நிறைவேறாதா என்ற எதிர்பார்ப்புடன் அவளை நர்மதாவின் வீட்டிலேயே தங்க வைத்தார் மாணிக்கவாசகம்..

பிரபாகரனுக்கும் தினகரனுக்கும் இன்னும் திருமணம் முடிவாகவில்லை.. அவர்கள் இருவரில் ஒருவனுக்கு தன் மகளை மணம் முடித்துக் கொள்ளச் சொல்லும் கோரிக்கையை மறைமுகமாக அதன் மூலம் நர்மதாவிற்கு உணர்த்தினார் அவர்..

நர்மதாவினால் அவரது கோரிக்கையை நிராகரிக்க முடியவில்லை.. அது மறைமுகமான நிர்ப்பந்தம் என்பது அவளுக்கு புரிந்தாலும்.. தமையனாக முன்னால் நிற்கும் தன் ஒன்றுவிட்ட சகோதரனிடம் முகம் முறித்துப் பேச அவளால் இயலவில்லை...

அவளது அந்தத் தயக்கத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டார் மாணிக்கவாசகம்...

"இது உனக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரிய வாய்ப்பு ஸ்வேதா.. இன்றைக்கு இந்த வீட்டில் விருந்தாளி யாக இருக்கிறவள்.. இந்த வீட்டின் மருமகளாகிக் காட்ட வேண்டும். அது உன் கையில்தான் இருக்கிறது..."

இப்படிப்பட்ட அறிவுரையை அவர் மகளுக்குச் சொல்லியபோதே பரிமளம் அதை ஆட்சேபித்தாள். அவர் அப்போது அதை காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியம் செய்தார்..

'அதற்குத்தான் இப்போது அனுபவிக்கிறேனோ.. குற்றம் செய்யாத அவர் மனது குறுகுறுத்தது..'

"யாரிடம் சொன்னாளாம்..?"

"உங்க அப்பாவிடம் சொன்னாளாம்..."

"அவர் அதை வாய் மூடிக் கேட்டுக்கிட்டாரா.."

"வேறு என்ன செய்யணும்னு சொல்கிறீங்க.. உங்கமகளை இந்த வீட்டில் கல்யாணமா செய்து கொடுத்திருக்கீங்க..? அப்படி கொடுத்திருந்தால் நாம எதிர்த்துக் கேள்வி கேட்கலாம்.. இப்போ எதிர்கேள்வி கேட்டால் அசிங்கம் யாருக்கு..?"

"அதுக்காக.. அண்ணன் மகள் என்கிற மரியாதை கூட இல்லாமல் பட்டுன்னு நர்மதா இப்படி ஒரு சொல்லைச் சொல்லலாமா..?"

"அந்த மரியாதையைக் காப்பாத்திக்கணும்கிற எண்ணம் உங்களுக்கும் உங்க மகளுக்கும் இருந்திருக்கணும்.. அதை விட்டு விட்டு ஊரார் மேல பழிபோடாதீங்க.."

"ஆயிரம்தான் இருக்கட்டும்.. அவ வாயிலிருந்து அந்த வார்த்தை வந்திருக்கக் கூடாது பரிமளா.."

"அது அவள் வாயிலிருந்து வரவில்லை..."

"பின்னே.. வேறு யார் சொன்னதாம்..?"

"பிரபாகரன் எடுத்த முடிவாம்.."

"பிரபாகரனா..?"

மாணிக்கவாசகம் மகளை முறைத்தார்..

"உனக்கு அறிவிருக்கா ஸ்வேதா.. இந்த வீட்டில் பிரபாகரன்தான் முடிவுகளை எடுக்கிறவன்.. அவன் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தையை வர வைத்து விட்டாயே.. அவன் பேச்சுக்கு எதிர்பேச்சை இந்த வீட்டில் யாரும் பேசித் தொலைக்க மாட்டாங்களே.."

"அதில்லை அப்பா.."

"பேசாதே.. உனக்குச் சுட்டுப் போட்டாலும் சாமர்த்தியம் வராது.. என் தம்பி மகள் பவித்ராவைப் பார்.. அவளோட அப்பன் பாடம் எடுக்கிறதைப் போலவா அவள் நடந்துக்கிறா..? நீ மட்டும் ஏன் இப்படி களிமண்ணாய் இருக்கிற ஸ்வேதா..?"

"அப்பா.. பவித்ரா, தினகரனை மயக்கப் பார்க்கிறாள்.."

இதைக் கேட்டதும் மாணிக்கவாசகத்தின் முகம் பயங்கரமாக மாறியது.. எது நடக்கக் கூடாது என்று அவர் நினைக்கிறாரோ அது நடந்துவிடுமோ என்று அவரது நெஞ்சம் நடுங்கியது..

"உனக்கு எப்படித் தெரியும்..?"

"என் கண்ணால் பார்த்தேன்.. அது மட்டுமில்லை.. கருணாவின் பெண்டாட்டிக்கு சொந்தக்காரின்னு சொல்லிக் கொண்டு ஒரு மோகினி இந்த வீட்டில் இருக்கிறாள் இல்லையா..?"

"அவள் பெயர் மாலினியாச்சே...?"

"எனக்கு அவள் மோகினிதான்..."

"அவளுக்கு என்ன..?"

"அவள் பிரபாகரன் அத்தானை மயக்கிவிட்டாள்.."

"என்ன..?" மாணிக்கவாசகம் சேரை விட்டு எழுந்து நின்றார்.. பரிமளம் வெறுப்புடன் அவர்கள் இருவரையும் பார்த்தாள்.. அவள் என்ன சொல்ல வந்தாள்.. இவர்கள் இருவரும் எதைப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்..

"உனக்கு நிச்சயமாகத் தெரியுமா..?"

"பவித்ராதான் தினகரனை மயக்கப் பார்க்கிறாள். தினகரன் அவளிடம் மயங்கவில்லை.. இது எனக்குத் தெரியும்.. ஆனால்.. மாலினியிடம் பிரபாகரன் மயங்கிப் போய் விட்டார்.. இது எனக்கு சர்வ நிச்சயமாகத் தெரியும்.."

மாணிக்கவாசகம் இடிந்துபோய்விட்டார்.. தினகரன், ஸ்வேதாவை விரும்பவில்லை என்று அவரிடமே நேரடியாய் சொல்லிவிட்டவன்...

"பாருங்க மாமா.. நீங்க தங்கை மகன் என்கிற உரிமையில் தாராளமாய் என்னை 'மாப்பிள்ளை..'ன்னு கூப்பிடுங்க.. ஆனால், உங்க பெண்ணைக் கட்டிக் கொள்கிற மாப்பிள்ளை என்ற முறையில் மட்டும் கூப்பிட்டு வைத்து விடாதீங்க..."

"ஏன் மாப்பிள்ளை அப்படிச் சொல்கிறீங்க.. நீங்க என் தங்கை மகன்.. உங்களுக்குப் பெண் கொடுக்க நான் ஆசைப்படக் கூடாதா.. இல்லை.. எனக்குத்தான் அந்த உரிமையில்லையா..?"

"எனக்கு ஸ்வேதாவின் மேல் பாசம் அதிகம் மாமா.."

இதைத் தினகரன் சொன்னபோது.. மாணிக்க-வாசகம் துணுக்குற்றார்.. அப்படி அத்தை மகன் பாசத்தைப் பொழிகிறதைப் போல ஸ்வேதா கண்ணியம் காத்திருக்க மாட்டாள் என்பது அவருக்குத் தெரிந்த விஷயம்தான்...

எப்படியாவது நர்மதாவின் மகன்களில் ஒருவனை வளைத்துப் பிடிக்க வேண்டிய அவசியத்தை அவளுக்கு சொல்லிச் சொல்லி வளர்த்துத் தொலைத்தது அவர்தானே.

அப்படிப்பட்ட ஸ்வேதாவைப் பார்த்து தினகரனைப் போன்ற காதல் மன்னன் ஒருவன் பாசப்பறவையைப் பறக்க விடுகிறான் என்றால் அதற்கு ஒரே ஒரு அர்த்தம் தான் இருக்க முடியும்..

அது.. தினகரனுக்கு ஸ்வேதாவைத் திருமணம் செய்து கொள்வதில் துளிக்கூட விருப்பம் இல்லை என்பதுதான்...

தினகரன் அடுத்துச் சொன்ன வார்த்தைகளும் அதை உறுதிப்படுத்தின..

"எனக்கு ஸ்வேதாவைப் பார்த்தால்.. காயத்ரியைப் பார்ப்பதைப் போலவே இருக்கு மாமா. அவளை மாமன் மகளாய் நினைக்கத் தோன்றவில்லை.."

'அடப்பாவி.. சண்டாளா.. வேறு என்ன நினைப்பு உனக்கு வருது..?'

"என் தங்கையைப் போலவே தோன்றுகிறது.."

இதைச் சொல்லிய தினகரன் ஒன்றும் உத்தமபுத்திரன் இல்லை என்பது மாணிக்கவாசத்திற்கு தெரிந்ததுதான்..

சேலை கட்டிய பெண்களுக்கு என்று ஒரு தனிவாசனை உண்டு என்று சொல்கிற கலாரசிகன்.. சுடிதார் போட்ட சுந்தரிகளை 'சூப்பர்..' என்று வருணிக்கும் கவிஞன்.. ஜீன்ஸ் போட்ட பெண்களிடம் 'ஜொள்ளு..' விடக் கூச்சப்படாத வீராதி வீரன்.. அவருடைய மகளைப் பார்த்து தங்கையென்று சொல்லிவிட்டால்.. அவருடைய நெஞ்சம் தாங்குமா..?

## 61

**பூப்போன்ற என் மனதில்..**

**பொத்தி வைக்கும் காதல் உணர்வை..**

என்னவென்று நான் சொல்ல..?

அவருடைய நெஞ்சம் சுக்குநூறாய் நொறுங்குவதைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்

படாமல் தினகரன் தன் மனதை வெளிப்படையாகச் சொல்லி விட்டு தப்பித்தும் விட்டான்...

அவனை நம்பினால் வேலைக்கு ஆகாது என்பதை புரிந்து கொண்ட மாணிக்கவாசகம் மகளின் பார்வையை பிரபாகரனின் பக்கம் திருப்பிவிட்டார்..

"உன் கவனமெல்லாம் பிரபாகரனின் மேல்தான் இருக்கணும் ஸ்வேதா.. இதுவும் ஒருவகையில் நல்லதிற்குத்தான்..."

"எதனால் அப்படிச் சொல்கிறீங்கப்பா.."

"பிரபாகரன்தான் இந்தக் குடும்பத்தின் ஆணிவேர் ஸ்வேதா.. தொழில் எல்லாம் அவன் கைப்பிடிக்குள் இருக்கு.."

தந்தை கோடு போட்டால் ரோட்டைப் போட்டு அங்கே ஒரு நகரத்தையே நிர்மாணித்துவிடும் வல்லமை படைத்த ஸ்வேதா, அவர் என்ன சொல்ல வருகிறாள் என்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்டாள்...

"ஓ.. நீங்க அப்படி வருகிறீங்களா..?"

"ம்ம்ம்.. அவனுக்கு நீ மனைவியாகிவிட்டால் இந்த அதிகாரம் பூராவும் உன் கையில்..."

"முதலில் உங்கள் தங்கையைத்தான் ஓட ஓட விரட்டுவேன்.." அப்படிப்பட்ட ஆசை மாணிக்க வாசகத்தின் மனத்திலும் இருந்ததால் அவர் மௌனமாக மகளின் கோபத்தை அங்கீகரித்தார்..

இன்று அவருடைய கனவுக் கோட்டை தகர்ந்து தரை மட்டமாகி விட்டது..

எங்கிருந்தோ வந்தவள்.. அந்த கோட்டையூர் குடும்பத்தின் மூத்த மருமகள் என்ற மிகப் பெரிய பதவியை தட்டிப் பறித்துக் கொண்டு போவதா..?

காத்திருந்த தாய்மாமனின் மகள் ஏமாந்து நிற்பதா..?

ஸ்வேதா எதைச் செய்திருந்தாலும் அதை கேள்வி கேட்க முடியாது என்பதை மாணிக்கவாசகத்தின் மனம் உணர்ந்து கொண்டது..

"என்ன செய்தாய்னு கேட்கமாட்டேன்.. அதை மாட்டிக் கொள்ளால் செய்யத் தெரியலையான்னுதான் கேட்பேன்.."

"நான் மாட்டிக் கொள்ள சான்ஸே இல்லைன்னு தான்ப்பா நினைத்தேன்.. இன்னும் நீங்க தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒண்ணு இருக்குப்பா..."

"என்னம்மா.."

"இந்த தினகரனுக்கு மாலினியின் மேல் ஆசை இருக்கு.." இதைக் கேட்ட மாணிக்கவாசகம் ஆச்சரிய மடைந்தார்..

'கதை இப்படிப் போகிறதா..? அண்ணனின் காதலியை தம்பி சைட் அடிக்கிறானா..? வெரிகுட்..'

"ம்ம்.. அப்புறம்..?"

அவர் கதை கேட்கும் ஆர்வத்துடன் வினவ.. பரிமளா தலையில் அடித்துக் கொண்டாள்..

"இப்படிப்பட்ட தகப்பனுக்கு பிறந்த பெண்.. இப்படித் தான் எனக்கு பெயர் வாங்கிக் கொடுப்பாள்.. அவளைக் கெடுக்கிறதெல்லாம் நீங்கள்தான்.. நான் அவளைக் குற்றம் சொல்ல மாட்டேன். உங்களைத்தான் குற்றம் சொல்வேன்.."

"சும்மாயிரு பரிமளா.. நாங்க முக்கியமாகப் பேசிக் கிட்டு இருக்கிறோம்.."

"இது எந்த வகையில் நமக்கு முக்கியம்..? சொல்லுங்க..."

"அவ கிடக்கிறாம்மா.. நீ சொல்லு.."

"தினகரன், மாலினியை சைட் அடிப்பதை பிரபாகரனும் புரிந்து கொண்டிருக்கிறார்..."

"இன்ட்ரஸ்டிங்.. அப்புறம்..?"

"மாலினி, தினகரனிடம் பேசுவதை அவர் ஆட்சேபித்து மாலினியைக் கண்டிப்பதை நான்

காதால் கேட்டேன்.. அவளும் பயந்து பதிலைச் சொன்னாள்.. ஆனால், தினகரனை அவாய்ட் பண்ணவில்லை. இதுதான் பொஸிஷன்னு தெரிந்த பின்னால்... லட்டு போல காலையில் இதுகளுக்கு மத்தியில் குழப்பம் உண்டாக்க எனக்கொரு சான்ஸ் கிடைத்தது.. விட மனசில்லை.. யூஸ் பண்ணிக்கிட்டேன்.."

"என்ன நடந்தது...?"

"அப்பா.. காலையில் தோட்டத்தில் தினகரனுடன் மாலினி சிரித்துப் பேசிக்கிட்டு இருந்தா.. அதை மாடி பால்கனியில் மறைஞ்சு நின்னுக்கிட்டு பிரபாகரன் வேவு பார்த்துக்கிட்டு இருந்தார்.."

"அடிச்சக்கை.. அப்புறம்..?"

"மாலினி முதலில் வீட்டுக்குள் வந்துவிட்டாள்.. அவள் பின்னாலேயே தினகரன் ஒரு ரோஜாப் பூவைப் பறித்துக் கொண்டு வந்தான்..."

"சொல்லு.. சொல்லு..."

"மாடிக்கு வந்த தினகரனின் கையில் பூ இல்லை.. அவன் பின்னாடியே வந்த மாலினியின் கையில் அந்தப் பூ இருந்தது.. இதை நீங்க பார்த்திருந்தால் என்ன நினைப்பீங்க..?"

"என்ன நினைப்பேன்.. தினகரன் அந்தப் பூவை மாலினி கிட்ட கொடுத்திருக்கிறான்.. அவளும் அதை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்னு நினைப்பேன்.."

"அதைத்தான் பிரபாகரனும் நினைத்தார்.. அதாவது.. நான் அவரை அப்படி நினைக்க வைத்தேன்.."

"அப்போ.. உண்மை அது இல்லையா.."

"இல்லை.."

ஸ்வேதா.. தான் செய்ததை விளக்கமாகக் கூறினாள்.. மகளின் புத்திசாலித்தனத்தை மாணிக்க வாசகம் மெச்சிக் கொள்ள.. அவளுடைய புத்திசாலித்தனம் இப்படித் தீய வழிகளில் விரயமாகிறதே என்று பரிமளா கவலை கொண்டாள்..

"நான் நினைத்தது ஓரளவு நடந்துவிட்டதுப்பா.. நான் எதிர் பார்த்த விளைவு நடக்கவில்லை.. அது மட்டும் நடந்திருந்தால் பிரபாகரனுக்கு காதல் தோல்வியையும் தம்பியின் துரோகத்தையும் நினைக்கிறதில்தான் மனசு போயிருக்கும்.. என் தவறைப் பற்றி யோசித்து துப்பறிவதில் மனசு போயிருக்காது.."

"நீ என்ன நடக்கும்னு எதிர்பார்த்தாய்..?"

"மாலினியின் கையில் பூவைப் பார்த்ததும் பிரபாகரன் மனம் கோபப்படும்.. மாலினியின் கன்னத்தில் நாலு அறைவிட்டு கேள்வி கேட்பார்னு எதிர்பார்த்தேன்.."

"அடிவாங்கிய கோபத்தில் மாலினி, பிரபாகரனை விட்டு ஓடிவிடுவாள்னு கணக்குப் போட்டாயா.. வெரிகுட்.."

மாணிக்கவாசகம் மகிழ்ந்து போக.. ஸ்வேதா அவரை யோசனையோடு பார்த்தாள்.. மகளின் பார்வையில் செய்தி இருந்ததைப் புரிந்து கொண்டவர்,

"என்னம்மா.." என்று வினவினார்..

"நீங்க அடிச்சதில் கோபப்பட்டு அம்மா உங்களை விட்டுப் போய் விடுவாங்களாப்பா..?"

மாணிக்கவாசகத்தின் பார்வை பரிமளத்தின் வீங்கிய கன்னத்தில் படிந்தது.. அவர் குற்றஉணர்வுடன் மகளுக்குப் பதில் சொன்னார்..

"அது எப்படிப் போவாள்..?"

"ம்ம்ம்.. அது போலத்தான் மாலினியும்.."

"ஸ்வேதா.. உன் அம்மா எனக்குப் பெண்டாட்டி.."

"மாலினி.. பிரபாகரனின் காதலி.."

"காதலியும் மனைவியும் ஒன்றாகி விடுவாங்களா..?"

"காதலியும் மனதளவில் மனைவிதான் அப்பா. பெண்கள் உடலளவில் பலவீனமானவர்கள் என்றாலும் மனதளவில் ஆண்களைவிட மிகமிக வலிமையானவர்கள். அதைப் போலவே ஆண்களைவிட மிகமிக ரோஷமானவர்கள். ஆண்கள் கட்டிப் பிடித்து உருண்டு பெரண்டு சண்டை போட்டு சட்டையைக் கிழித்துக் கொள்வார்கள். அடுத்த நாளே சமாதானமாகி தோளில் கை போட்டு 'நண்பேன்டா..'ன்னு சொல்லிக் கொள்வார்கள்.. பெண்கள் அப்படியில்லை.. மனதைப் பாதிக்கும் ஒரு சிறு சொல்லைக் கேட்டுவிட்டால் ஆயுள் முடிகிற வரைக்கும் அதைச் சொன்னவர்களுடன் பேசமாட்டார்கள்.."

"இப்போ நீ சொல்ல வருவதுதான் என்ன ஸ்வேதா..?"

"அப்பா.. நீங்கள்னு இல்லை.. கணவன் என்ற உரிமையில் எல்லா ஆண்களும் மனைவிகளை அடிக்கத்தான் செய்கிறார்கள்.. கணவன் அடித்தால் போலீஸில் புகார் கொடுக்கலாம் என்ற சட்டம் இருந்தாலும் எல்லா மனைவிகளும் கணவன் கொடுக்கும் அடிகளை மௌனமாக சகித்துக் கொண்டும் பொறுத்துக் கொண்டும் தான் இருக்கிறாங்க.. இது கணவனிடம் ஒரு மனைவி வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடு.. கணவன் கையால் சாக நேர்ந்தாலும் அவனைக் காட்டிக் கொடுக்காமல் செத்துப்போகும் மனைவிமார்களின் எண்ணிக்கை நம்ம நாட்டில் அதிகம்ப்பா.."

ஸ்வேதாவின் தார்மிக கோபம் மாணிக்கவாசகத்திற்கு புரிந்தது.. பரிமளம் அவரை மட்டும் கண்டிக்கவில்லை.. ஸ்வேதாவையும் சேர்த்துத் தான் கண்டித்தாள்.. ஆனாலும் ஸ்வேதா, பரிமளத்திற்கு ஆதரவாக மாணிக்கவாசகத்தை

சாடுகிறாள் என்பதை நினைக்கும் போது மாணிக்கவாசகத்திற்கு மகளை நினைத்து பெருமையாக இருந்தது...

ஸ்வேதாவிடம் இருந்த நல்ல குணங்களைப் பற்றி பரிமளத்திற்கும் நன்றாகவே தெரியும்.. அவளுக்கு தாயின் மீது பாசம் உண்டு.. ஆனாலும் தாயின் அறிவுரையைக் கேட்காமல் தந்தையின் பேச்சைக் கேட்கிறவளாக அவள் வளர்ந்து விட்டாள்.. அப்படி வளர்ந்திருந்தாலும் நியாயத்தை நியாயம் என்று சொல்லும் அவளின் குணத்தை நினைத்து கண்கலங்கினாள் பரிமளா...

"இவ எப்பேர்ப்பட்ட பொண்ணு.. நமக்கென்ன பணமில்லையா.. சொத்தில்லையா..? நல்ல இடத்தில் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வசதியில்லையா..?"

"அதனால்தான் கோட்டையூர் ஜமீன் வமிசத்தில் பொண்ணு கொடுக்கணும்னு நினைக்கிறேண்டி.. இங்கே பெண்ணைக் கொடுக்க எனக்குத் தகுதியில்லையா..? இல்லை.. சொந்தம்தான் இல்லையா..?"

"நீங்க அதிலேயே நில்லுங்க.. இப்பத்தான் அது கனவுன்னு தெரிஞ்சுபோச்சே.. இனியாவது நம்ம பொண்ணை நம்ம வீட்டுக்கே கூப்பிட்டுக் கொண்டு போய் விடலாங்க.."

பரிமளம் கண்களில் நீர்மல்க கெஞ்சினாள்.. மாணிக்கவாசகம் மகளின் முகத்தைப் பார்த்தார்...

"போகலாம்மா.. நம் வீட்டுக்கு நான் வருகிறேன். இந்த வீட்டை விட்டுப் போய் விடலாம்.. என்னை வேண்டாம்னு சொல்லுகிற இந்த அண்ணன், தம்பிகள் எனக்கும் வேண்டாம். ஆனால், நான் கிளம்புவதற்கு முன்னால் இவர்களின் வாழ்க்கையோடு விளையாடிப் பார்க்காமல் கிளம்ப மாட்டேன்..."

ஸ்வேதாவின் குரலில் உறுதி இருந்தது.. மாணிக்க வாசகம் மகளின் பேச்சைக் கேட்டு..

"சபாஷ்.." என்றார்..

பரிமளம் கலவரப்பட்டாள்.. இப்போதுதான் மகள் திருந்திவிட்டாள் என்று அவள் சந்தோஷப்பட்டாள்.. அது நொடிப் பொழுதில் சீட்டுக்கட்டு மாளிகை கலைந்து விழுந்ததைப் போல சிதறிவிடுவதா...

"வேண்டாம் ஸ்வேதா.. உன் மனதில் பழிஉணர்வு வரக் கூடாதும்மா.. அது உனக்கு நல்லதில்லை.."

"இல்லைம்மா.. இந்த வீட்டில் வருஷக்கணக்காக உட்கார்ந்திருக்கிறேன்.. எதற்காக..? நம் வீட்டைவிட இந்த வீடு வசதியாய் இருக்கிறது.. நம் வீட்டுச் சாப்பாடைவிட இவங்க வீட்டுச் சாப்பாடு நன்றாக இருக்கிறது என்றா இங்கே உட்கார்ந்து இருக்கிறேன்...? நாம் இவங்களைவிட எந்த வகையில் குறைந்தவர்கள்ம்மா..? என் வீட்டுக்கு இவங்க வீடு இணையில்லை.. நம் வீட்டுச் சாப்பாட்டை மிஞ்சிய ருசி இவங்க வீட்டுச் சாப்பாட்டில் இல்லை.."

"ஸ்வேதா..."

மகளின் மனக்குமுறலைக் கேட்டு பரிமளத்தின் பெற்ற வயிறு பதறியது..

எந்த அளவுக்கு இந்த வீட்டாரால் உதாசீனப்படுத்தப் பட்டிருந்தால் ஸ்வேதா இந்த வார்த்தையைச் சொல்லுவாள்..?

இந்த நிலையை மகளுக்கு உருவாக்கிவிட்ட கணவன் மேல் அவளுக்கு வெறுப்பு வந்தது...

## 62

**அடி ஆழ மனதினிலே..**

**அமிழ்ந்திருக்கும் காதலையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

யார் நெஞ்சில் கோபம் இல்லை..? யார் நெஞ்சில் குரோதம் இல்லை..? யார் நெஞ்சில் வஞ்சம் இல்லை...? யார் நெஞ்சில் வருத்தம் இல்லை..? யார் நெஞ்சில் கருணை இல்லை..? யார் நெஞ்சில் காதல் இல்லை..? யார் நெஞ்சில் காமம் இல்லை..? யார் நெஞ்சில் சோகம் இல்லை..? யார் நெஞ்சில் துக்கம் இல்லை...? யார் நெஞ்சில் கஷ்டம் இல்லை..? யார் நெஞ்சில் விரக்தி இல்லை..? யார் நெஞ்சில் வேதனை இல்லை..? யார் நெஞ்சில் பொறுமை இல்லை..? யார் நெஞ்சில் வெறுமை இல்லை..? யார் நெஞ்சில் சாடல் இல்லை..? யார் நெஞ்சில் தேடல் இல்லை?

இந்த உலகில் மகான் என்று அழைக்கப்படுகிற வர்களுக்கும் மறுபக்கம் என்று ஒன்று உண்டு..

அதைப் போல கொலைகாரனுக்கும் ஒரு மறுபக்கம் உண்டு...

அவரவர்க்கு ஒரு நியாயம் கண்டிப்பாக இருக்கும்.. அது இல்லாத மனிதர்கள் இந்த உலகத்தில் இருக்க மாட்டார்கள்...

துரியோதனன் வில்லன்தான்.. ஆனால், அவன் ஏன் வில்லனாக மாறினான்..? அதற்கு அவன் பக்கம் பல நியாயங்கள் இருந்தன..

அவனுடைய தகப்பனான திருதராஷ்டிரன்தான் மூத்தவன்.. அரச பரம்பரையின் வழக்கப்படி மூத்தவனுக்கே அரியணை சொந்தம். ஆனால்.. கண்பார்வையற்றவன் என்ற குறைபாட்டினால் அவனுடைய தம்பி பாண்டு அரியணை ஏறினான்.. இதை விதி செய்த சதியாக துரியோதனன் நினைத்து வெகுண்டான்...

ஒரு கட்டத்தில் காட்டுக்குப் போக வேண்டிய முடிவை எடுத்த பாண்டு.. தன் அண்ணனிடம் அரசை ஒப்படைத்துவிட்டு அவனது இரு மனைவிகளான குந்தி.. மாத்ரியுடன் காட்டுக்குச் சென்றுவிட்டான்.. அரசாட்சி துரியோதனனின் தந்தைக்கு வந்தது.. துரியோதனன் இளவரசனாக.. நாளைய அரசன் என்ற கனவுடன் வளர்ந்து வந்தான்...

காட்டுக்குப் போன பாண்டுவும் மாத்ரியும் மாண்டு போக.. கானகத்தில் இருந்து பாண்டவர்களுடன் ஒரு நாள் குந்தி தேவி திரும்பி வந்தாள்.. துரியோதனன் கனவில் மண்விழுந்தது.. அரசாட்சிக்கு போட்டி ஆரம்பமாகியது..

ஒருவேளை.. பாண்டு காட்டுக்குப் போகாமல் அரசாண்டு கொண்டு இருந்திருந்தால்.. திருராஷ்டிரனும் தற்காலிக மன்னனாக ஆகியிருக்க மாட்டான்.. துரியோ தனனுக்கும் கனவு ஏற்பட்டிருக்காது..

அப்படி நேராமல் போனதற்கு யார் பொறுப்பு..? பிறப்பால் அரசை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டிய மூத்த மகனான தன் தகப்பன் பார்வையற்றவனாகப் போனதை எண்ணி துரியோதனன் கோபத்தில் கொந்தளித்தால் அதில் குற்றம் காண முடியுமா..? அப்படி வேதனைப்படக்கூட அவனுக்கு உரிமையில்லையா..?

வாழ்க்கை சிலசமயம் சிலரை வஞ்சித்துவிடுகிறது. அந்த வேதனையில் அவர்கள் தடம் மாறி விடுகிறார்கள்.. அதனால் அவர்களின் நல்ல குணங்கள் நம் கண்களுக்குப் படாமல் மறைக்கப்படுகின்றன. அல்லது மறக்கப் படுகின்றன...

இன்றளவும் நட்புக்கு உதாரணமாக துரியோதனன்.. கர்ணனின் நட்பைத்தான் சொல்கிறார்கள்..

அதைப் போல செய்நன்றிக்கு உதாரணமாக செஞ்சோற்றுக் கடனுக்காக.. தனது சகோதரர்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களை எதிர்த்து.. நண்பனுக்கு ஆதரவாக உயிரை விட்டு செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்த கர்ணனைத்தான் சொல்கிறார்கள்...

ஸ்வேதாவும்கூட அப்படிப்பட்டவள்தான்.. அவளுக்கு தன் தாயின் மேல் பாசம் அதிகம். தந்தையின் மேல் மரியாதை அதிகம். அதனால்தான் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை..' என்று தந்தையின் வாக்கை வேதமாக நினைத்து கருங்கல்லை விட்டுவிட்டு மார்த் தாண்டத்துக்கு வந்தாள்...

அவள் படித்திருந்தாள்.. அழகாக இருந்தாள்.. பிறப்பி லேயே பெரிய வீட்டுப் பெண் என்ற பரம்பரைப் பெருமை யோடு பிறந்திருந்தாள்.. அளவற்ற செல்வம் அவளுக்கு இருந்தது. இத்தனைக்கும் மேலாக நர்மதாவின் ஒன்று விட்ட அண்ணன் மகள் என்ற செல்வாக்கும் சொந்தமும் அவளுக்கு இருந்தது..

ஒரு பாடலின் வரிகளில்,

'ஆயிரம் இருந்தும்.. வசதிகள் இருந்தும்.. நோ பீஸ் ஆஃப் மைண்ட்..' என்று வருமே.. அதைப் போல இத்தனை தகுதிகள் இருந்தும் ஸ்வேதா அந்த வீட்டு ஆண்மகன்களால் புறக்கணிக்கப்பட்டாள்..

புறக்கணிப்பு என்பது மிகக் கொடுமையான ஒன்று.. புறக்கணிக்கப்பட்ட பெண்கள் வரலாற்றையே மாற்றிப் போட்டிக்கிறார்கள்.. ராமனால் புறக்கணிக்கப்பட்ட சூர்ப்பனகையின் கோபம் ராமாயணத்தில் எந்த அளவுக்கு முக்கிய பங்கு வகித்தது என்பதை அறியாதவர்கள் யார்? அம்பையின் கோபம் ஆனானப்பட்ட பீஷ்மரையே அம்புப் படுக்கையில் தள்ளியதை தெரியாதவர்கள் யார்..?

ஸ்வேதாவின் மனம் வெஞ்சினம் கொள்ளாமல் எப்படி இருக்கும்..? ஒவ்வொரு நாளும் அவள் அந்த வீட்டைச் சேர்ந்தவள் இல்லை என்று அந்த வீட்டாரால் உணர்த்தப் பட்டாள்.. அந்த வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கூட அவள் சொல்பேச்சுக் கேட்காத நிலையைச் சகித்துக் கொண்டாள்.. அழையாத விருந்தாளியாக அந்த வீட்டிற்கு வந்து பல வருடங்களாக டேரா போட்டிருக்கிறாள் என்று சொல்லிக் காட்டப்பட்டாள்..

இவை அத்தனையையும் அந்த வீட்டார் அவளை மட்டும் தனியாக நிற்க வைத்துப் பேசியிருந்தால்கூட.. ஆயிரம் சொன்னாலும்.. நம் அத்தையின் வீட்டு ஆள்கள் தானே என்று ஸ்வேதா பொறுமையாகப் போயிருப்பாள்..

அந்த வீட்டில் அதைச் செய்யவில்லை. மாறாக.. அந்த வீட்டில் வாழ வந்த சசிரேகாவின் முன்னால் அப்படிச் செய்தார்கள்.. சசிரேகாவின் உறவுக்காரி என்ற முறையில்

வந்த மாலினியின் முன்னால் அப்படிச் செய்தார்கள்.. வீட்டு வேலையாள்களின் முன்னால் அப்படிச் செய்தார்கள்...

அதைத்தான் ஸ்வேதாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதற்குப் பதிலாக.. அந்த வீட்டு ஆண் மகன்களின் வாழ்க்கையில் விளையாடிப் பார்க்காமல் அவள் அந்த வீட்டை விட்டு நகர்வதாக இல்லை..

"இத்தனைக்குப் பின்னாலும் இவர்கள் வீட்டில் நான் இருக்க நினைக்கிறேன் என்றால் என் மனதில் எந்த அளவுக்கு வேதனை இருக்கும்னு நினைத்துப் பாருங்கம்மா.."

"இவர்களைவிட உயர்த்தியான மாப்பிள்ளை உனக்குக் கிடைப்பார் ஸ்வேதா.."

"அந்த நம்பிக்கை எனக்கும் இருக்கும்மா.. எனக்கு அப்பாவின் பலம் என்னன்னு தெரியும்.. அக்காவைப் போல என்னையும் வாழவைப்பார் அம்மா. ஆனால்.. இத்தனை நாளாய் இவங்க வீட்டில் இருந்ததற்கு பலன் இதுதானா..?"

"நீ உன் வாழ்க்கையை மட்டும் பார் ஸ்வேதா.."

"பார்க்கிறேன்.. அதுக்கு முன்னால்.. இந்த ஸ்வேதா யாருன்னு இவங்களுக்கு காட்டிவிட்டுப் பார்க்கிறேன்.."

"வேண்டாம்மா..."

"பரிமளா.. அவளை விட்டுவிடு.."

"இவ மனசில் எந்த அளவுக்கு வேதனையை வைத்திருக்கிறான்னு தெரிஞ்ச பின்னாலுமா நீங்க இப்படிச் சொல்கிறீங்க.?"

"அது தெரிந்ததால்தான் சொல்கிறேன்.. விட்டுவிடு.. அவ மனதில் நிம்மதி வரும்னா அவ எதையும் செய்யட்டும். நீ இதில் தலையிடாதே.."

"ஸ்வேதா.. உன் அப்பாவின் பேச்சைக் கேட்காதே.."

ஸ்வேதாவிற்கு தாயின் தவிப்பு புரிந்தது.. அவள் பரிமளத்தை அமைதிப்படுத்தும் விதத்தில் சிரித்தாள்..

"கவலைப்படாதீங்கம்மா.. எனக்கு ஒன்றும் ஆகாது.."

"பழிபாவம் வருமே ஸ்வேதா..."

"என் பழிபாவத்தை ஏற்றுக்கொள்வதைப் பற்றி இவங்க கவலைப்பட்டாங்களா.. அப்படி நான் என்ன தப்பைப் பண்ணிவிட்டேனம்மா? இந்த வீட்டுக்கு மருமகளாக வரணும்னு நினைத்தேன்.. அது தப்பா.? அதுக்கான தகுதியும் உரிமையும் எனக்கில்லையா..?"

இந்தக் கேள்வியில் நியாயமில்லையென்று பரிமளத் தினால் சொல்ல முடியவில்லை...

நர்மதா திருமணம் செய்து கொண்டு.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் நுழைந்த இரண்டொரு வருடங்களிலேயே தாய் தகப்பனை இழந்து விட்டாள்.. அன்று முதல் இன்று வரை அவளுக்கு தாய்வீட்டுச் சீதனம் ஆளவந்தாரின் வீட்டிலிருந்துதான் போய்க் கொண்டிருந்தது.. தாய்மாமன்களின் சீர்செய்ய ஆளவந்தாரின் மகன்கள்தான் முன்னால் நின்றார்கள்.. அதற்கெல்லாம் பெரியப்பாவும் அவர் பெற்ற மகன்களும் வேண்டும். ஆனால்.. மகன்களுக்கு திருமணம் செய்து வைக்க மட்டும் அந்த பெரியப்பாவின் மகன் பெற்ற

மகள் வேண்டாம் என்றால், அது எந்த நியாயத்தில் சேர்த்தி என்று பரிமளமும் மனதில் வினவிக் கொண்டாள்...

பரிமளத்தின் முகத்திலிருந்து அவளது அனுமதி கிடைத்துவிட்டதை உணர்ந்து கொண்ட மாணிக்கவாசகம்,

"சொல் ஸ்வேதா.. நீ காலையில் என்ன செய்ய நினைத்தாய்..?" என்று கேட்டார்..

"அப்பா மாலினி ரோஷக்காரி.. சொல் பொறுக்க மாட்டாதவள்.. வேண்டாமென்று ஒன்றை வெறுத்து விட்டால் ஆயுளுக்கும் அதைத் திரும்பிப் பார்க்க மாட்டாள்..."

"அதற்கும் நீ செய்ய நினைத்ததற்கும் என்ன சம்பந்தம்..?"

"இருக்குப்பா.. மாலினிக்கு பிரபாகரனின் மேல்தான் காதல்.. தினகரனிடம் அவள் அதிகம் பேசமாட்டாள்..

தினகரன்தான் வலியப் போய் அவளிடம் வழிவான்.."

"அப்படியா..?"

"ஆமாம்.. மாலினி நேர்மையானவள்.... அண்ணனுக்கும் தம்பிக்கும் ஒரே நேரத்தில் நூல்

போடுகிற ரகமில்லை..."

இதைச் சொல்லும்போதே இதைத்தான் தான் செய்தோம் என்ற நினைவில் ஸ்வேதா கண்கலங்கினாள்.. மாணிக்கவாசகத்தின் மனம் கனத்தது...

"விடும்மா.. நாம் நடப்பதைப் பார்ப்போம்.." மகளைத் தேற்றினார்...

ஸ்வேதா கண நேரத்திற்குள் சுதாரித்துக் கொண்டாள்...

"அவள் பிரபாகரன் அடித்தால்.. அந்த அடியை சந்தோஷமாகத் தாங்கிக் கொள்வாள்.. ஆனால், அவர் எதையாவது சொல்லி விட்டால்.. அந்த சொல்லைத் தாங்கிக் கொள்ள மாட்டாள்..."

மாணிக்கவாசகம், ஸ்வேதாவின் புத்திகூர்மையைக் கண்டு வியந்து போனார்.. அவரது கண்களில் பாராட்டு தோன்றியது...

"வெல்டன் ஸ்வேதா.. நீ புத்திசாலிங்கிறதை நிரூபித்து விட்டாய். மேலே சொல்லு..."

"பிரபாகரன் மட்டும் மாலினியை ஓர் அடி அடித்து, என்னடி.. தினகரனையும் கணக்குப் பண்ணுகிறாயான்னு கேட்டிருந்தார்னு வையுங்க.. அவள் ஜென்மத்திற்கும் அவர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.. விலகிப் போய்விடுவாள்.. அதுதான் அவளின் குணம். நான் இதுதான் நடக்கும்னு எதிர்பார்த்தேன் அப்பா..."

"பிரபாகரன் மாலினியை சந்தேகப்பட வில்லையா..?"

"ஊஹூம்.. அப்படி நிச்சயமாய் சொல்லிவிட முடியாது.. நான் தினகரனும் மாலினியும் பேசிக்-கொள்வதைப் பற்றி சொன்னதும் அவர் முகத்தில் யோசனை வந்தது.. பூவோடு

வந்த மாலினியை ஒரு மார்க்கமாகத்தான் பார்த்தார்.. பட்.. எங்கேயோ ஒரு சின்னச் சறுக்கல் என் திட்டத்தில் இருந்திருக்கிறது.. அவர் உண்மையைத் தெரிந்துகொண்டு விட்டார்.. அதுமட்டும் நடக்காமல் இருந்திருந்தால் அவர்கள் பிரிந்திருப்பார்கள்..."

63

**உன் வார்த்தையெல்லாம் வடிவெடுத்து..**

**என் உயிர் துடிக்க வைப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்தச் சறுக்கல் இல்லாத திட்டத்தை தன் மகள் மீண்டும் தயாரிப்பாள் என்று நம்பினார் மாணிக்கவாசகம். அதை உறுதிபடுத்திக் கொள்ள வாய்விட்டு கேட்கவும் செய்தார்...

"இனி என்ன செய்யப் போகிறாய்..?"

"அந்தச் சறுக்கல் இல்லாத திட்டத்தைத் தயாரிக்கப் போகிறேன்.."

இதைத்தான் மகள் சொல்வாள் என்று தெரிந்திருந்து மாணிக்கவாசகம் மனைவிக்கு பயந்து.. வாய் வார்த்தையில் அதை மறுத்தார்...

"ஊஹூம்.. அதெல்லாம் வேண்டாம்.. நீ கிளம்பு.."

"இல்லைப்பா.. இவர்களைப் பிரிக்காமல் நான் வரமாட்டேன்.."

"நீதான் இங்கே இருக்க முடியாதேம்மா..."

"என்னப்பா நீங்க.. என்னை 'வா'ன்னு இவங்க அழைத்தா நான் வந்தேன்..? இப்போ.. 'போ'ன்னு இவங்க

சொன்னவுடன் பெட்டியைக் கட்டிக் கொண்டு கிளம்ப நான் என்ன இவங்க வீட்டு கீரைச்சட்டியா..? ஸ்வேதாப்பா.. நானாகத்தான் கிளம்புவேன்.. இவங்க சொல்லி கிளம்ப மாட்டேன்.."

"பிரபாகரன் நீ இருக்கக் கூடாதுன்னு சொல்லிட் டானேம்மா..."

"அவன் ஆசைப்படி நானும் இந்த வீட்டில் இருக்க மாட்டேன்.. என் ஆசைப்படி மாலினியும் இந்த வீட்டில் இருக்கமாட்டாள்.. எப்போது அவளை நான் இந்த வீட்டை விட்டு விரட்டுகிறேனோ அப்போது நீங்க கூப்பிடாமலே நான் நம்ம வீட்டுக்கு வந்திருவேன்..."

"மாலினி இந்த வீட்டில் இருந்தால் நமக்கென்ன.. போனால் நமக்கென்ன.. நமக்கே இந்த வீடு இல்லை யென்றாகி விட்டது.."

"எனக்கு இல்லாத வீடு பவித்ராவிற்கும் மாலினிக்கும் கிடைக்கலாமா..?"

"ஸ்வேதா.."

"என்னை இந்த வீட்டை விட்டு விரட்டிவிட்டு மாலினி மட்டும் இந்த வீட்டில் இருக்கலாமா..?"

"என்னம்மா செய்யப் போகிறாய்..?"

"நிறையச் செய்வேன்.. அதை சான்ஸ் கிடைக்கும் போதெல்லாம் செய்வேன்.."

"திரும்பவும் நீ மாட்டிக்கொள்ள மாட்டாய்னு என்னம்மா நிச்சயம்...?"

"நான் மாட்டிக்கிட்டாலும்.. மாலினியை விரட்டிய பின்னால்தான் மாட்டிக் கொள்வேன்.. இருந்திருந்து இவர்களால் என்னை என்ன செய்துவிட முடியும்? இப்போது என்னை இவர்களால் என்ன செய்ய முடிந்தது..? நீ உன் வீட்டிற்குப் போய் விடுன்னு சொல்லுவாங்க.. அவ்வளவு தானே.. இப்போது பெட்டியைக் கட்டுவதற்குப் பதிலாக அப்போது கட்டிவிட்டுப் போகிறேன்..."

"இப்போ.. என்ன சொல்லி உன்னை விட்டுவிட்டுப் போவது..?"

"காயத்ரியின் கல்யாணத்தை காரணமாக சொல்லுங்க..."

சுயமரியாதைக்கும் பழிஉணர்ச்சிக்கும் இடையில் சிக்கித் தவித்த மாணிக்கவாசகத்தின் முகத்தில் வெளிச்சம் வந்தது...

"அட.. ஆமாமில்ல.. இதை எப்படி நான் மறந்து போனேன்..?"

"இன்னும் இரண்டே மாதங்களில்.. எண்ணி அறுபதே நாள்களில் காயத்ரியின் கல்யாணம்

நடக்கப் போகுது.. இத்தனை நாள்களாய் இந்த வீட்டிலேயே இவர்களின் வீட்டுப் பெண்ணாக இருந்துவிட்டு காயத்ரியின் கல்யாணம் நிச்சயமாகிவிட்ட இந்தச் சமயத்தில் நான் இந்த வீட்டில் இல்லாமல் போனால்.. ஊர் என்ன கேள்வி கேட்கும்னு தாத்தாகிட்ட கேளுங்க.."

"இதை உன் தாத்தாகிட்ட கேட்டு என்னம்மா பண்ண.. நீ இருக்கக் கூடாதுன்னு பிரபாகரன்தானே சொல்கிறான்..?"

"நேராக உங்களிடம் அவர் வந்து சொன்னாரா..?"

மகளின் கேள்வியால் மீண்டும் மாணிக்க வாசகத்தின் முகம் ஒளிர்ந்தது...

"அட.. ஆமாம். அவன் நர்மதாகிட்ட சொன்னான்.. அவள் அப்பாகிட்ட வந்து சொன்னாள். அப்பா அம்மா கிட்டச் சொன்னார்.. அம்மா பரிமளாகிட்ட சொல்லி.. பரிமளா நம்மகிட்ட வந்து சண்டை போட்டாள்.."

"சண்டை போட்டது அவங்க.. அடிச்சது நீங்க.."

ஸ்வேதா மீண்டும் தந்தையின் தவறைக் கண்டித்தாள்.. மாணிக்கவாசகம் குற்ற உணர்வுடன் மனைவியைப் பார்க்க.. அவள் வேறு திசையில் பார்த்தாள்..

"த்சு.. வாய்வார்த்தை தடிச்சிருச்சும்மா..."

"வாய்வார்த்தைக்குப் பதில் வாய்வார்த்தைதான் வரணும்..."

"விடும்மா.. அம்மாவை நான் சமாதானம் பண்ணிக் கறேன். இப்போ செய்ய வேண்டியதை யோசிப்போம். அவர்களைப் போலவே நானும் செய்தியை அப்பாவின் மூலமாகவே அனுப்புகிறேன். அவர் நர்மதாகிட்ட சொல்லட்டும். அவள் மகனிடம் பேசிக்கட்டும். ஆனால், இதில் ஒரு சிக்கல் இருக்கே ஸ்வேதா...?"

"என்ன சிக்கல்ப்பா..?"

"என் அப்பாதான் சிக்கல், அவர் ஏற்கெனவே வயதுப் பெண்ணை அத்தையின் வீட்டில் வருஷக்கணக்கில் தங்க வைக்கலாமான்னு என்னைக் குடைஞ்சுக்கிட்டு இருக்கிறார். இப்பப் போயி நான் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு போக மாட்டேன்னு சொன்னேன்னு வைய்யு. மனுஷருக்கு பழியாய் கோபம் வரும்.. அதுக்கென்ன பதிலைச் சொல்வது? அதுதான் எனக்குப் பிடிபட மாட்டேங்குது..."

தந்தைக்கு ஆலோசனை கூறும் மந்திரியின் பதவி தனக்கு வாய்த்துவிட்டதை உணர்ந்து கொண்டாள் ஸ்வேதா...

"ஒரு பெண்தானே இருக்கக்கூடாது..? இரண்டு பெண்கள் இருக்கலாமில்லையா..?"

"நீ என்னம்மா சொல்கிற..?"

"பவித்ராவையும் ஒரு வழி பண்ணணுமில்லை யாப்பா.. அவள்பாட்டுக்கு சித்தப்பா வீட்டிற்கு போய் விட்டால் என் திட்டம் என்ன ஆவது..?"

"அவள் இங்கே இருந்தால்.. தினகரனிடம் பேசிப் பழக அதிக சான்ஸ் கிடைக்குமேம்மா.."

"கிடைக்கட்டும்..."

"அது பவித்ராவின் கல்யாணத்தில் வந்து முடிந்து விடாதா..?"

"முடியாது.."

"எப்படிச் சொல்கிறாய்..."

"போகப் போக உங்களுக்கே தெரியும்..."

"என்னிடம்கூட சொல்ல மாட்டாயா..?"

"சொல்லிவிட்டுச் செய்தால் அது திட்டமாகாதுப்பா.."

"இப்ப பவித்ராவையும் உன்னுடன் விட்டுவிட்டுப் போகச் சொல்கிறாயா...?"

"ஆமாம்.. இதை நிச்சயமாக தாத்தாவும் மறுக்க மாட்டார்.. அத்தையும் மறுக்க மாட்டாங்க..."

"அதைச் சொல்லு.. அவளுக்குத்தான் பவித்ராவை பிடித்து விட்டதே..."

"அவங்களுக்குப் பிடித்தால் மட்டும் போதுமா..?"

"போதாதா?"

"போதாது.. தினகரனுக்கும் பிடிக்க வேண்டும்..."

"பவித்ராவிற்கு தினகரனைப் பிடித்திருக்கிறதே.."

"அதற்காக அவள் என்ன பாடுபடப் போகிறாள்னு பொறுத்திருந்து பாருங்க..."

ஸ்வேதா சட்டென்று எழுந்து போய்விட்டாள்.. பரிமளத்தின் முகம் வெறுப்பைக் கக்குவதை உணர்ந்தார் மாணிக்கவாசகம்..

"பரிமளா..."

"பேசாதீங்க..."

"உன்னை நான் அடிச்சது தப்புத்தான்.. மன்னிச்சுக்க.."

"அதுக்காகவா நான் உங்களைக் கோவிச்சுக்-கறேன்னு நினைத்தீங்க..?"

"பின்னே.. வேறு எதுக்காக கோபப்படறே..."

"தெரியாததைப் போல நடிக்காதீங்க.."

"நிசமாவே எனக்குத் தெரியலைடி.."

"உங்களுக்கா தெரியாது.. நீங்க ஊருக்கே பாடம் சொல்லிக் கொடுப்பீங்களே.. இப்படி ஸ்வேதாவின் பேச்சுக்கு பூம்பூம் மாட்டைப்போல தலையைத் தலையை ஆட்டுகிறீங்களே.. இது உங்களுக்கே நல்லாயிருக்கா..?"

தலையைத் தலையை ஆட்டுவது பூம்பூம்மாடு மட்டும்தானா..? தஞ்சாவூர் பொம்மைகூடத்தான் தலையைத் தலையை ஆட்டும்.. பொம்மையை விட்டு விட்டு... பூம்பூம் மாட்டை.. அடி வாங்கிய கோபத்தில் மனைவி உதாரணம் காட்டுகிறாளோ என்ற சந்தேகம் மாணிக்க வாசகத்தின் மனதில் எழுந்தது...

'மாட்டை அடிக்கிறதைப் போல ஒரு மனுஷியை அடிச்சா அவள் மாடுன்னு சொல்ல மாட்டாளா..' தன் மனதை சமாதானம் செய்து கொண்டார் மாணிக்கவாசகம்..

"ஏண்டி.. ஸ்வேதா சொல்வதிலேயும் ஒரு நியாயம் இருக்கில்ல.."

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்னு சொல்வாங்க..."

"இப்போ.. எதுக்காகடி இந்த பழமொழியைச் சொல்கிற..?"

"ஊரார் பிள்ளையைக் கெடுக்க நினைச்சா.. நம்ம பிள்ளை எப்படி நல்லா வாழும்..?"

பரிமளம் விசுக்கென்று உள்ளே போய் விட்டாள்...

பெண்கள் இருவரும் ஒன்று சொன்னதைப் போல.. பாதிப் பேச்சிலேயே அவரை அம்போவென்று விட்டு விட்டுப் போய்விட.. தனித்து அமர்ந்து தாடையைத் தடவிக் கொண்டார் மாணிக்கவாசகம்...

'ம்ஹூம்.. தாயும் மகளும் இதில் மட்டும் ஒற்றுமையாய் இருக்காங்க...'

மாணிக்கவாசகம், ஆளவந்தாரைத் தேடிப் போன போது.. அவருடைய அறையில் வாசவன் அமர்ந்து தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தார்.. சின்ன மகன் சொல்வதை ஆதுரத்துடன் கேட்டுக் கொண்டிருந்த தகப்பனைக் கண்டு மாணிக்கவாசகத்தின் மனதில் பொறாமை எழுந்தது..

அறைவாசலில் நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்த ஆளவந்தார்..

"வாப்பா.." என்றார்..

மாணிக்கவாசகம் உள்ளே சென்று வாசவனின் பக்கத்தில் அமர்ந்தார்.. அவர் எதையோ சொல்ல வந்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட ஆளவந்தார் சின்ன மகனைப் பார்த்து..

"அப்புறம்..?" என்று வினவினார்..

அந்தத் தொனியின் அர்த்தம் புரிந்த வாசவன் எழுந்து கொண்டார்..

"அவ்வளவுதான்ப்பா.." என்றபடி போய் விட்டார்..

"நீ சொல்லுப்பா.." மாணிக்கவாசகத்தின் முகம் பார்த்தார் ஆளவந்தார்..

"பரிமளா வந்து சொன்னாள்ப்பா.."

ஆளவந்தாரின் மனம் இதைக் கேட்டதும் வேதனைப் பட்டது.. அவரும் ஒரு தகப்பன்.. பிள்ளைகளைப் பற்றி நல்லவிதமாக கேட்க முடியாவிட்டால் பெற்றவர்களின் மனம் என்ன பாடுபடும் என்று அவருக்கும் தெரியும்..

அவர் தர்மசங்கடமடைந்தார்..

"என்னப்பா செய்வது..? எனக்கும் நர்மதாவின் மேல் கோபம் வந்தது.. ஆனா.. அடுத்த வீட்டில் வயதுப் பெண்ணை விட்டு வைத்தது நம்மளோட தப்பாச்சேப்பா.. அவகிட்ட எப்படி கோபப்படுவது..?"

"இருந்தாலும் நர்மதா இப்படிச் சொல்லியிருக்கக் கூடாது..."

"எனக்கும் அது தெரியுது... என்ன செய்ய முடியும்..?"

"நீயே சொல்லு.. அவளோட மகன்களில் ஒருத்தனுக்குக்கூட ஸ்வேதாவின் மேல் பிரியம் வரவில்லைங்கறப்போ நீயும் நானும் வருத்தப்பட்டு என்ன ஆகப்போகுது..?"

"வாசவன் என்ன சொல்கிறான்ப்பா..?"

"பவித்ராவை நர்மதா புகழ்ந்து பேசினாளாம்..."

இதைச் சொன்ன ஆளவந்தாரும் சங்கடப்பட்டார்.. கேட்ட மாணிக்கவாசகத்தின் முகமும் இருண்டது...

"அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்ப்பா.."

'என்னடா இது.. தம்பி மகளை நர்மதாவுக்கு பிடித்திருப்பதைப் பற்றி இவன் சொல்ல வருகிறானா..?'

உலக மகா அதிசயத்தை பார்ப்பதைப் போல மகனின் முகத்தை பார்த்தார் ஆளவந்தார்..

"இத்தனை நாளாய் ஸ்வேதா இந்த வீட்டில் இருந்திருக்கிறாள்.."

"வருஷங்கள்னு சொல்லு.."

"பார்த்தீங்களா.. அதை நீங்களே சொல்லிட்டீங்க.."

"அதுக்கென்ன இப்ப..?"

"இப்ப.. இந்த வீட்டுப் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது.."

"நீ என்னதாண்டா சொல்ல வருகிற..?"

"இப்போது பார்த்து ஸ்வேதாவை நாம் அழைத்துக் கொண்டு போனால் இந்த ஊர் என்ன சொல்லும்..?"

ஆளவந்தார் இந்த புதிய கோணத்தை எதிர்பார்த் திராததால் திகைத்துப போனார்..

"அதுக்காக.. நர்மதா சொல்லிவிட்ட பின்னாலும் நாம் ஸ்வேதாவை இங்கேயே விட்டு வைக்க முடியுமா..?"

"அப்படி நான் சொன்னேனா.."

"எனக்குப் புரியும்படி சொல்லு மாணிக்கம்.."

"இந்த வார்த்தை வந்த பின்னால்.. நர்மதாவே ஸ்வேதாவை இருக்கட்டும்னு சொன்னாலும் இந்த வீட்டில் அவளை இருக்க விட மாட்டேன்.. அவள் மகன்களுக்கு பெண் கேட்டாலும் கொடுக்க மாட்டேன்.."

ஆளவந்தாருக்கு இதைக் கேட்டு ஆச்சரியம் வந்தது...

64

**உன் புன்னகைக்கு.. பின்னால்..**

**பொதிந்திருக்கும் உணர்வை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

கோட்டையூர் ஜமீன் வமிசத்தில் பெண் கொடுப் பதையே தன் வாழக்கை லட்சியமாக வைத்திருந்த மாணிக்கவாசகத்தின் வாயிலிருந்து வந்த வார்த்தை-களைக் கேட்டதும் வியப்புடன் வாய் பிளந்தார் ஆளவந்தார்..

"நிஜமாகத்தான் சொல்கிறாயா மாணிக்கம்...?"

"இதில் போய் யாராவது பொய் சொல்வாங்-களாப்பா..?"

"திடீர்னு எப்படி இந்த முடிவுக்கு வந்த..?"

"நான் உங்கள் மகன்ப்பா.. கண்ணுக்கு முன்னால் தங்கை ஜமீன் வீட்டில் வாழ்க்கைப்பட்டிருக்கிறதைப் பார்த்ததும் அவள் வீட்டில் பெண் கொடுக்கணும்னு ஆசைப்பட்டேன்.. இது நியாயமாய் எல்லா பெண்ணைப் பெற்றவர்களுக்கும் வருகிற ஆசைதான்.. ஆனால்.. அதுக்காக என் பெண்ணைக் குறைவாகப் பேசினால் நான் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன்..."

"நம் மீதும் தப்பு இருக்கா.. இல்லையா..?"

"என்ன தப்பைப்பா கண்டுவிட்டிங்க.."

"ஸ்வேதா வயதுப் பெண்.. அவளை அத்தையின் வீட்டில்.. கல்யாணமாகாத அத்தை மகன்கள் இருக்கும் போது தங்கவிடலாமா...?"

"என் மகள் மட்டும்தான் வயதுப் பெண்ணா....? எங்கேயோ சென்னையில் இருந்து வந்திருக்கிறாளே.. மாலினின்னு ஒருத்தி.. அந்தப் பெண் வயதுப் பெண்ணில்லையா..? அவளுக்கு நர்மதா என்ன முறையாகணும்ப்பா.. பெரியம்மா முறையாகணுமா..? நர்மதாவின் மகன்கள் அண்ணன்.. தம்பி முறையாகணுமா..?"

"மாணிக்கம்.."

இதைப் பற்றி யோசித்துக்கூடப் பார்த்திராத ஆளவந்தார் திகைத்தார்.. மகனின் கேள்வியிலும் ஒரு நியாயம் இருப்பதை அவரால் உணர முடிந்தது...

"சொல்லுங்கப்பா.. நர்மதா, மாலினிக்கு அத்தை முறையாகணுமா இல்லையா...? இந்த வீட்டு ஆண்பிள்ளைகள்.. அவருக்கு அத்தை மகன்களின் முறையாகணுமா இல்லையா..? ஸ்வேதா இந்த வீட்டில் இருந்தால் மட்டும் தப்பு.. அதுவே மாலினி இருந்தால் சரியா..? எந்த ஊர் நியாயம் இது..?"

"அவள் வேலை பார்க்க வந்திருக்கிறாள் மாணிக்கம்.."

"இருக்கட்டுமேப்பா.. ஊருக்குள் ஆயிரம் லேடீஸ் ஹாஸ்டல் இருக்கு.. அதில எதிலேயாவது தங்கலாமே.."

"அது வந்து..."

"ஏன்ப்பா மென்று முழுங்கறீங்க.. நான் கேட்டது நியாயம்தானே..."

"அவள் இந்த வீட்டு மருமகளின் சித்தப்பா மகள்ப்பா..."

"ஸ்வேதா மட்டும் யார்..?"

ஆளவந்தாரின் மனதிலும் அந்த எண்ணம் இருக்கத் தான் செய்தது.. ஆயிரம்தான் அவருக்கு மாணிக்கவாசகத்தின் செயல்களில் உடன்பாடு இல்லை யென்றாலும்.. ஸ்வேதா அவருடைய பேத்தி என்ற பாசம் அவர் மனதுக்குள்ளேயும் இருந்தது.. ஸ்வேதாவை அழைத்துக் கொண்டு போய்விடச் சொல்லி நர்மதா சொல்லியிருக்கக் கூடாது என்ற எண்ணமும் இருந்தது..

"எனக்கு மட்டும் அந்த கோபம் இல்லைன்னு நீ நினைக்கறியா மாணிக்கம்..?"

"இருந்து என்ன பிரயோசனம் அப்பா..? ஒன்றை யோசித்தும் பாருங்க.. நர்மதாவும் இந்த வீட்டு மருமகள் தான்.. சசிரேகாவும் இந்த வீட்டு மருமகள்தான்.. ஆனால், உறவுக்காரங்களை இந்த வீட்டு மனிதர்களைப் போல் இந்த வீட்டில் தங்க வைக்கும் உரிமை யாருக்கு இருக்கிறது..? நர்மதாவிற்கா.. இல்லை சசிரேகாவிற்கா..?"

மாணிக்கவாசகம்.. ஆளவந்தாருக்கு தம்பி மகளின் மேல் இருக்கும் பாசத்தை உசுப்பி விட்டார்..

"இதையும் நான் நினைத்தேன்டா.."

"நினைத்து என்ன பிரயோஜனம்..? கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பெண்ணைக் கொடுக்கப் போகிறோமுன்னு நீங்களும் உங்க தம்பியும் பெட்டிப் பெட்டியாய் வைரத்தை அள்ளிக் கொடுத்தீங்க.. உங்க தம்பியின் சொத்தை வைத்து எத்தனை ஊரை விலைக்கு வாங்கலாம் தெரியுமா..? அத்தனையும் ஒரே வாரிசுன்னு நர்மதாவின் மூலமா கார்த்திகேயனுக்கும் போய்ச் சேர்ந்தது.. நம் வீட்டுப் பெண்ணுக்கு அந்த சசிரேகா இணையா..?"

"நீ சொல்வது நிஜம்தான்..."

"மகன் ஆசைப் பட்டான்கிற ஒரே காரணத்துக்காக அந்தப் பெண்ணை இந்த வீட்டு மருமகளா கொண்டு வந்தா நர்மதா.. நாம ஏன்னு கேட்டோமா..?"

பிரபாகரனிடம் அப்படியெல்லாம் கேட்டுவிட முடியாது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் மாணிக்க வாசகம் வாயை மூடிக் கொண்டிருந்தார்.. ஆனால்.. பேரன்களின் மீது யாரும் வலுக்கட்டாயமாக தங்களின் விருப்பத்தை திணிக்கக்கூடாது என்ற கொள்கையோடு இருந்த ஆளவந்தார், ஆட்சேபக்குரல் எழுப்பவில்லை என்பது உண்மைதான் என்பதால்.. அவர் அமைதியாக யோசித்தார்...

"இப்ப என்னாச்சுன்னு பாருங்க.. வெறுங்கையோடு வந்த பெண்ணுக்கு இந்த வீட்டில் இருக்கும் செல்வாக்கும் சொல்வாக்கும் நம்ம வீட்டுப் பெண்ணுக்கு இருக்கா..?"

என்னவோ நர்மதாவை ஒதுக்கி மூலையில் உட்கார வைத்துவிட்டு சசிரேகா அந்த வீட்டின் அதிகாரங்களை கையில் எடுத்துக் கொண்டதைப் போலவும் அவள் படும் துயரத்தைக் காணச் சகிக்காமல் அதை ஆளவந்தாரின் கவனத்திற்கு கொண்டு வருகிறவரைப் போலவும் மாணிக்கவாசகம் காட்டிய பாவனையில் ஆளவந்தார் நெஞ்சுருகிப் போனார்..

"நிஜம்தாண்டா மகனே.. என் தம்பி மகளை இந்த வீட்டில் என்ன நிலையில் வைத்திருக்கிறாங்கன்னு நீ சொன்ன பின்னால்தான் எனக்கே தெரியுது..."

உண்மையிலேயே.. நர்மதாவை முடக்கி மூலையில் உட்கார வைக்க வேண்டுமென்ற கனவு.. மாணிக்கவாசகத்திற்கும் அவர் பெற்ற குலக்கொழுந்தான ஸ்வேதாவிற்கும் தான் இருந்தது.. இருக்கிறது என்பதை அறியாத ஆளவந்தார் சொன்னதைக் கேட்ட மாணிக்கவாசகம் மனதிற்குள் புன்னகை செய்து கொண்டார்...

'எங்கே அடித்தால் எங்கே வலிக்குமுன்னு எனக்குத் தெரியும்ப்பா.. பெற்ற மகன்களைவிட உங்களுக்கு தம்பி மகள்தான் என்னைக்குமே உயர்த்தி.. அவள் கஷ்டப்படுகிறாள்னு பில்ட்அப் கொடுத்தால் தான் நீங்க அவளைக் காப்பாற்றுகிறேன் பேர்வழின்னு அவளையே நாலு கேள்வி கேட்பீங்கன்னு எனக்குத் தெரியாதா..'

"இந்த பிரபாகரனையே எடுத்துக்கங்க..."

"அவனுக்கு என்னடா..?"

"அவன் யாருப்பா..?"

"இது என்னடா மாணிக்கம்.. கூறுகெட்டதனமா இப்படிக் கேட்கிற.. அவன் யாருன்னு இந்த தமிழ்நாட்டுக்கே தெரியுமே..."

'ஹூம்.. இந்தப் பெருமையைச் சொல்லலைன்னு இப்ப நான் அழுதேனா...?'

"நர்மதாவுக்கு அவன் யாருப்பா..?"

"பெற்ற மகன்..."

"எல்லா வீட்டிலயும் அம்மாதான் மகனைக் கண்டிப்பா.. இந்த வீட்டில் அது தலைகீழா இல்ல இருக்கு.. மகன்காரன் முகத்தைப் பார்த்துப் பேச பயப்படுகிற அம்மா இந்த உலகத்திலேயே நம்ம நர்மதாவாகத்தான் இருப்பா.."

"நீ சொல்வதை இப்போதுதான் யோசிக்கறேன் மாணிக்கம்..."

"வயித்தெரிச்சலா இருக்குப்பா.. புருஷன் இல்லாத பொம்பளைக மகன்களை அண்டித்தான் வாழணும்.. அதுக்காக.. அவங்க பேசக்கூட பயப்படுகிற அளவுக்கு அடக்கி வைச்சிருக்கலாமா..? அது பாவமில்லையா..?"

நர்மதாவைப் பார்த்து பாவப்படுகிற ஆளா மாணிக்க வாசகம்.. ஆனாலும் வேதாளம் தேவாரம் படித்தது.. அவரும் முதலைக் கண்ணீர் விட்டு சோக ரசம் பிழிந்தார்..

"நர்மதாவிற்கு ஒண்ணுன்னா தட்டிக் கேட்க யாருமில்லைன்னு அந்த பிரபாகரன் நினைத்தானா..? அவளுடைய பெரியப்பன் நானிருக்கேண்டா..."

ஆளவந்தார் பொங்கி எழுந்தார்.. கார்த்திகேயன் இறந்தவுடன் அவர் நிர்மாணித்த தொழில் சாம்ராஜ்ஜியம் ஆட்டம் கண்டது.. அதைக் காப்பாற்ற எத்தனை கோடிகள் தேவைப்பட்டன என்று நர்மதாவிற்கும் அவள் பெற்ற பிள்ளைகளுக்கும் மட்டுமே தெரியும். அந்தச் சரிவை சமாளிக்க தனி மனிதனாக பிரபாகரன் மட்டுமே போராடினான்...

நர்மதா கொண்டு போன சொத்து.. யானைப் பசிக்கு சோளப் பொரியைப் போல.. அவள் மனம் உடைந்தபோது பிரபாகரன்தான் தாயை சமாதானம் செய்தான்..

"அப்பாவின் பெயர் நிலைக்கும். இந்த கோட்டையூர் ஜமீனின் தொழில் அழியாது.. நிமிர்ந்து நிற்கும்.. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீங்க கவலைப்படாதீங்க.."

"ஆனால் பிரபா.. நீ தனியாளாக போராடுகிறாயே.."

"தம்பிகளுக்கு என்னம்மா தெரியும்..? அவர்கள் சின்னப்பையன்கள்.. சுமக்க நான் இருக்கிறேன்.. இந்தச் சுமையை அவர்கள் தாங்க மாட்டார்கள்.. வேண்டாம். அவர்களை இதில் இறக்க மாட்டேன்..."

தனியொருவனாய் சுமைகளைத் தோளில் சுமந்தவன் பிரபாகரன்.. அதிகாரமும் மதிப்பும் பதவியும் ஒருவருக்கு தானாக வந்து விடாது.. மற்றவர்கள் கொடுக்க வேண்டும்..

பிரபாகரனின் வார்த்தைக்கு நர்மதா அடிபணிந்தது. அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பிரமணியைப் போன்ற மகன் அவன் என்பதற்காக...

அண்ணன் சொல்லே வேதம் என்று அவனுடைய தம்பிகளும் தங்கையும் கட்டுப்பட்டு நின்றது.. அந்த அண்ணன் அவர்களை பெற்ற தகப்பனைப் போல பாதுகாத்து நிற்கிறவன் என்பதற்காக...

சும்மா கிடைத்து விடவில்லை சுதந்திரம் என்பதைப் போல பிரபாகரன் அந்தக் குடும்பத்தின் ஆணிவேராகவும் குடும்பத் தலைவனாகவும் ஆனதற்குப் பின்னணியில் அவனுடைய உழைப்பும் தியாகமும் இருந்தன...

இதை அறிந்து கொள்ள முடியாத அறியாமை உடையவரல்ல ஆளவந்தார்.. ஆனால்.. சொல்கிற விதமாகச் சொல்லி.. அவர் கண்களில் பாசம் என்ற திரையைப் போட்டு விட்டார் மாணிக்கவாசகம்...

"இப்போ எதையும் பேச வேணாம்ப்பா.. இது காயத்ரியின் கல்யாண சமயம்.. இது முடியட்டும்.. அப்புறம் பார்த்துக்கலாம்.. அந்த பிரபாகரனை நிற்க வைத்து நாலு கேள்வி கேட்டால்தான் என் நெஞ்சு ஆறும்.."

மனதில் இருப்பதை மறைக்காமல் சொன்னார் மாணிக்கவாசகம். அவர் பிரபாகரனை நிற்க வைத்து கேள்வி கேட்கவிரும்புவது எதற்காக என்று அவர் மனதுக்குத்தான் நன்றாகத் தெரியுமே..

'என் மகளுக்கு என்ன குறை..? ஏன் அவளை உனக்கும் உன் தம்பிமார்களுக்கும் பிடிக்காமல் போனது..? என் மகளைவிட அந்த சசிரேகாவும் அவளுடைய சித்தப்பன் மகளும் எந்த விதத்தில் உயர்த்தியாகப் போனார்கள்..? அவளை விரட்ட என் மகள் நினைத்தால் நீ என் மகளையே விரட்ட நினைக்கிறாயா..?'

இதுதான் பிரபாகரனிடம் மாணிக்கவாசகம் கேட்க விரும்பிய நான்கு கேள்விகள்..

இதை அறியாத கூமுட்டை கோவிந்தசாமியான ஆளவந்த மகாபிரபு.. தன் நரைத்த மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு கர்ஜித்தார்..

"நீ சொல்வதும் சரிதாண்டா மகனே.. என் பேத்தியின் கல்யாணம் முடியட்டும்.. அதுக்கப்புறம் பாரு.. உன் அப்பன் அவனை என்ன கேள்வி கேட்கிறேன்னு.."

"பேத்தியின் கல்யாணமா.. நீங்க என்னப்பா சொல்கிறீங்க..?"

பவித்ராவின் நினைவில் மாணிக்கவாசகம் கதிகலங்கி போனர்.. அவரை விசித்திரமாகப் பார்த்தார் ஆளவந்தார்..

"என்னடா மாணிக்கம்.. இப்படி அறிவுகெட்டதனமா கேள்வி கேட்கிற.. இப்ப நீதாண்டா என் பேத்தியின் கல்யாணத்தைப் பத்திச் சொன்னே..?"

"நான் எப்போ சொன்னேன்..?" மாணிக்கவாசகம் திருதிருவென விழித்தார்...

"போடா மாங்கா மடையா..."

இந்த ஸ்வேதாவிற்காக இன்னும் எத்தனை பட்டப் பெயர்களை தகப்பனாரிடம் இருந்து வாங்க வேண்டியிருக் குமோ என்று நொந்து கொண்டார் மாணிக்கவாசகம்..

"நான் உங்களைப் போல அறிவாளியில்லைப்பா.. டியூப்லைட்.. எதையும் தேங்காயைப் போட்டு உடைத்ததைப் போல பட்டுன்னு போட்டு உடைத்தால் தான் எனக்குப் புரியும்.."

வேறுவழியின்றி.. தகப்பனாரிடம் சமரசமாக பேசி வைத்தார் மாணிக்கவாசகம்.. இல்லாவிட்டால் ஆளவந்தார் பட்டப்பெயர்களை அடுக்கி விடுவாரே..

## 65

**உன்னிடம் கோபம் கொள்ள முடியாமல்..**

**நான் தோற்கின்ற நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"பின்னே என்னடா மாணிக்கம்.. பேத்தியின் கல்யாணம்னு நான் சொன்னா.. இப்படி பேந்தப் பேந்த முழிக்கிறயே.."

'நான் என்ன வைத்துக் கொண்டா வஞ்சனை செய்கிறேன்..? என் முழியே அப்படித்தான்..'

"காயத்ரி யாருடா..?"

"நர்மதாவின் மகள்.."

"நர்மதா யாரு..?"

"உங்க தம்பி மகள்.."

"காய்த்ரி நர்மதாவிற்கு மகள்னா.. எனக்கு என்ன வாகணும்..?"

"இதென்னப்பா கேள்வி.. உங்களுக்கு பேத்தியாகணும்.. இதுகூடத் தெரியலையா..?"

"ம்ஹூம்.. இதை நீ.. என்னைப் பார்த்து சொல்கிறாயா.. நேரம்டா மகனே.. இi்த்தானே நானும் சொன்னேன்.."

"ஓ.. நீங்க காயத்ரியின் கல்யாணத்தைத்தான் உங்க பேத்தியின் கல்யாணம்னு சொன்னீங்களா..?"

"ஆமாம்.. நீ என்ன நினைத்தே..."

"நான் என்னென்னத்தையோ நினைத்து விட்டேன்.. அது எதுக்கு இப்ப தேவையில்லாம.. அப்பா.. நானும் காயத்ரியின் கல்யாணத்தைப் பத்தித்தான் பேச வந்தேன்.."

"சொல்லுப்பா.. தாய்மாமன் சீராக நீ என்ன செய்யப் போற...?"

'நீங்க அதிலேயே இருங்க..' பல்லை நறநறவென கடித்தார் மாணிக்கவாசகம்..

பெற்ற பிள்ளைகளை மொட்டை அடித்து தம்பி மகளுக்கு சீர்செய்ய வைக்கும் அப்பா.. உலகத்திலேயே தன்னைப் பெற்ற அப்பாவாகத்தான் இருக்க முடியும் என்பது மாணிக்கவாசகத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை...

இதை அவ்வப்போது.. இந்த மாதிரி பேசி ஆளவந்தாரும் உறுதி செய்வார்...

"அதுக்கென்னப்பா.. செய்துட்டா போச்சு.. நானும் என் அண்ணன் தம்பிகளும் வேறு எதுக்கு இருக்கோம்..? எங்க வீட்டுப் பிள்ளைகளை வெளியிடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டு.. உங்க தம்பி மகள் பெற்ற பிள்ளைகள்.. வெளியிடங்களில் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்போது சீர்செய்யத்தானே இருக்கிறோம்..?"

சீர்வரிசைப் பட்டியலைப் பற்றி விவரமாக பேச நினைத்து வாயைத் திறந்த ஆளவந்தார்.. மகனின் பேச்சைக் கேட்டதும் வாயை கோந்து போட்டு ஒட்டாத குறையாக மூடிக்கொண்டார்..

"காயத்ரியின் கல்யாணத்திற்கு செய்ய வேண்டிய சீர்வரிசையை குறைவில்லாம செய்வேன்.. நீங்க அந்தக் கவலையை விட்டுவிட்டு இப்ப நடக்கிற பஞ்சாயத்துக்கு வாங்க..."

"என்னன்னு சொல்லுப்பா..."

"இத்தனை வருஷமாய் இந்த வீட்டிலேய ஸ்வேதா இருந்தது நம்ம சொந்த பந்தங்களுக்கு தெரியுமா.. தெரியாதா..?"

"ஏன் தெரியாது..? அதுதான் ஒவ்வொருத்தனும் என்னை நாக்கைப் பிடுங்கிறதைப் போல நாலு கேள்வி கேட்டுக்கிட்டே இருந்தானுகளே.. எங்கே.. நானும் இதைப் பற்றி உன்னிடம் சொல்லிப் பார்த்தேன்.. நீ கேட்பேனான்னு சரிமல்லுக்கு நின்னியே..."

தம்பியின் மகளுக்கு சீர்செய்வதை குத்திக்காட்டிப் பேசிய மகனை பதிலுக்குப் பதில் குத்திக் காட்டிப் பேசி மனதை ஆற்றிக் கொண்டார் ஆளவந்தார்..

'இப்படி ஒரு அப்பாவுக்கு மகனாகப் பிறக்க நான் என்ன வரம் வாங்கி வந்தேன்.. முருகா..'

மாணிக்கவாசகம்.. தாய் தகப்பனிடம் கோபித்துக் கொண்டு பழனி மலையில் குடியிருந்த முருகனை அழைத்து மனதுக்குள் புலம்பிக் கொண்டார்...

"அப்படிக் குத்திக் காட்டின உறவு ஜனங்கள்.. இப்ப காயத்ரியின் கல்யாணம் நடக்கப் போகிற இந்தச் சமயத்தில் ஸ்வேதா இந்த வீட்டில் இல்லாததை கவனிச்சு அதுக்கும் நாலு கேள்வி கேட்க மாட்டாங்களா..?"

ஆளவந்தாரின் உறவு வட்டாரம் அப்படிப்பட்டது தான்.. அதை உணர்ந்தவராக அவரும் தாடையைத் தடவிக் கொண்டு யோசித்தார்...

"ஆமாம்.. இப்படி ஒண்ணு இருக்கே.. இதை எப்படி நான் மறந்துபோனேன்...?"

"அதை என்கிட்ட வந்து கேளுங்க.. கொஞ்சமாவது பெற்ற பிள்ளைகளைப் பற்றி நினைத்துப் பார்த்திருந்தா... இந்த நினைப்பு வந்திருக்கும்.. எப்பப் பார்த்தாலும் தம்பி மகளைப் பத்தியே கவலைப்பட்டுக்கிட்டு இருந்தா இந்த நினைப்பு எப்படி வரும்...?"

"அவளுக்கு என்னை விட்டா யாருடா இருக்கா..?"

"எனக்கும் உங்களை விட்டா யாருமில்லை.. ஸ்வேதா உங்க பேத்தி.. இந்த வீட்டில் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியாதுன்னு ஆகிப் போச்சு.. நாளைக்கு வெளியிடத்திலிருந்து அவளைப் பெண் கேட்டு வரணுமின்னா.. ஒரு சொல் இல்லாம இருக்கணுமா இல்லையா..?"

"நிச்சயமா இருக்கணும்.."

"இந்தச் சமயத்தில் ஸ்வேதாவை நாம கூப்பிட்டுக் கிட்டுப் போனால் பார்க்கிறவங்களுக்கு ஆயிரம் சந்தேகம் வரும். அதனால்.."

"அதனால்..?"

"காயத்ரியின் கல்யாணம் முடிந்தவுடன் கூப்பிட்டுக் கொண்டு போய் விடலாம்.. கேட்கிறவங்களிடம்.. இத்தனை நாள் நர்மதாவின் வீட்டில்.. காயத்ரியுடன் ஸ்வேதாவும் வளர்ந்து வந்தாள்.. இப்ப அவளுக்கு கல்யாணம் முடிந்து போனவுடன் கல்யாண வயசில் அத்தை மகன்கள் மட்டும்

இருக்கிற வீட்டில் இருக்க மாட்டேன்னு ஸ்வேதா சொல்லி விட்டாள்.. அதனால் அழைத்துக் கொண்டு வந்து விட்டோமுன்னு சொல்லிக் கொள்ளலாம்.. நமக்கும் அது கௌரவமாக இருக்கும்.."

இது நல்ல திட்டம் என்று ஆளவந்தாருக்கும் தோன்றி விட்டது.. காயத்ரியின் திருமணத்திற்கு அதிக நாள்கள் காத்திருக்கத் தேவையும் இல்லை.. எண்ணி அறுபதே நாள்கள்.. இத்தனை நாள் ஸ்வேதாவைப் பொறுத்துக் கொண்ட நர்மதா.. இன்னும் ஒரு அறுபது நாள்கள் பொறுத்துக் கொள்ள மாட்டாளா..?

அறுபது நாள்கள் என்பது ஸ்வேதாவைப் பொறுத்த வரை மிக அதிகமான நாள்கள் என்று பாவம்.. அந்த வயோதிகிகருக்குத் தெரியாமல் போய்விட்டது. முதல் நாள் இரவுதான் பவித்ரா.. தினகரனை விரும்புவதையும் தினகரன், மாலினியிடம் ஜொள்ளு விடுவதையும் மாலினி, பிரபாகரனை காதலிப்பதையும் ஸ்வேதா தெளிவாக அறிந்தாள். விடிந்தவுடன் மிகப் பெரிய விபரீத விளையாட்டை அவள் விளையாடிப் பார்த்து விடவில்லையா..? ஒரு நாளிலேயே இதைச் செய்து முடித்த ஸ்வேதாவின் கைகளில் லட்டு போல அறுபது நாள்களை அள்ளிக் கொடுத்து விட்டார் ஆளவந்தார்..

"சரிப்பா.. நர்மதாவிடம் இதைப் பற்றி நான் பேசிப் பார்க்கிறேன்.. அவள் என்ன சொல்கிறாளோ.."

"அவள் சொல்வதற்கு ஏதும் இருக்குதோ இல்லையோ.. நான் சொல்வதற்கு இன்னும் ஒரு விஷயம் இருக்குப்பா..."

"என்னப்பா..."

"இப்படி ஒரு வார்த்தை நர்மதாவின் வாயிலிருந்து வந்தபின்னால்.. நாம் ஸ்வேதாவை மட்டும் தனியாக இந்த வீட்டில் விட்டுவிட்டுப் போகக் கூடாதுப்பா..."

"நாமும் கூடவே இருக்கலாமுன்னு சொல்கிறாயா..? இரண்டு மாசம் இங்கே தங்கினால் நம்ம ஜோலிகளை யாரு பார்க்கிறது..?"

"என்னத்தை பெரிய ஜோலிகளை பார்க்கப் போகிறோம்.. இங்கே என்னென்ன சீர்வரிசைகளை கொண்டு வரணும்னு லிஸ்ட் போடப் போறோம்.. எரிச்சலைக் கிளப்பாம நான் சொல்கிறதைக் கேளுங்கப்பா.."

"நீயேண்டா.. நர்மதாவின் சீர்வரிசையிலேயே நிற்கிற..?"

"நீங்கதான் அதை விட்டு நகராமல் நிற்கறீங்க.. அப்பா.. ஸ்வேதா கூட நாம இருக்கணும்னு நான் சொல்ல வரலை.. கோட்டையூர் ஜமீன் குடும்பத்துக்கு மட்டும் தொழில்கள் இருக்கு.. நீங்க பெத்த பிள்ளைகளுக்கு அது இல்லையா.. நாங்க எங்க தொழிலைப் பார்க்கப் போகணும்.. ஸ்வேதா கூட துணைக்கு இருக்கிற அளவுக்கு நாங்க வேலை வெட்டி இல்லாத ஆளுக கிடையாது.."

"நீ என் கூட சண்டை போடணும்கிற முடிவோட இருக்கிறாயா..?"

"அது நிறைய போட்டாச்சு.. இனிமேலும் நிறைய போடலாம்.. இப்ப நான் சொல்ல வருவது அது இல்லை.. ஸ்வேதா கூட பவித்ராவையும் விட்டுவிட்டுப் போவோம்.."

"இதுகூட நல்ல ஐடியாவா இருக்கே..."

"இப்பத்தான் வாசவனும் நர்மதாவிற்கு பவித்ராவை பிடித்திருக்குன்னு சொன்னான்னு சொன்னீங்க.. அதனால்.. நர்மதாவும் இதுக்கு மறுப்புச் சொல்ல மாட்டாள்.."

"அப்பாடி.. கவலை விட்டது.. நான் இப்பவே நர்மதாவிடம் இதைப் பற்றிப் பேசி விடுகிறேன்.."

அவ்வளவு சீக்கிரம் கவலை தன்னை விட்டுப் போகாது என்பதை அறியாத ஆளவந்தார்.. ஆர்வமாக தம்பி மகளைத் தேடிப் போனார்...

மதிய உணவிற்கு டைனிங் ஹால் தயாராவதை பார்வையிட்டுக் கொண்டிருந்த நர்மதா.. ஆளவந்தாரைக் கண்டதும்..

'வாங்க பெரியப்பா.. உட்காருங்க.. எல்லோரையும் வரச் சொல்கிறேன்.. சாப்பிட்டு விடலாம்..' என்றாள்..

"சாப்பாட்டுக்கு இப்ப என்னம்மா அவசரம்.. நீ சொன்னதைப் பத்தி உன் கூட கொஞ்சம் பேசணுமே.." என்றார் ஆளவந்தார்..

"அதுக்கென்ன பெரியப்பா.. பேசிட்டாப் போச்சு.." நர்மதா தனது அறைக்குள் ஆளவந்தாரை அழைத்துச் சென்றாள்...

அவர்களின் வீட்டில்.. ஒவ்வொரு படுக்கையறையும் தனித் தனி வீடுகளைப் போன்ற அமைப்புடன் இருக்கும்.. முன்னால் வரவேற்பறை.. அடுத்து படுக்கையறை..

அதை ஒட்டிய உடை மாற்றும் அறை.. அதனுடன் இணைந்த குளியலறை என்ற விஸ்தாரமாக விரிந்து பரந்திருக்கும்..

வரவேற்பறையில் இருந்த சோபாவில் ஆளவந்தாரை அமரச் சொல்லிவிட்டு எதிரே அமர்ந்தாள் நர்மதா...

"என்ன விஷயம் பெரியப்பா..?"

"நீ சொன்ன விஷயத்தை உன் அண்ணனிடம் சொல்லி விட்டேன் நர்மதா.."

இதைக் கேட்ட நர்மதா சங்கடமடைந்தாள்..

"அண்ணன் என்னைத் தப்பா நினைச்சிட்டாரா பெரியப்பா.." தம்பி மகள் இப்படிக் கேட்டதும் உருகிவிட்டார் ஆளவந்தார்..

"அதெல்லாம் இல்லைம்மா.. நீ வருத்தப்பட்டுக்காதே.. எப்படியும் ஸ்வேதாவை நாங்க கூப்பிட்டுக்கிட்டுத்தானே போகணும்..."

"என்னை மன்னிச்சிருங்க பெரியப்பா..."

"இதுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்கணுமா..? நீ என்ன தப்பு செய்தே..? ஒண்ணும் இல்லை... உன் வீட்டில் மகளைக் கொடுக்கணுமுன்னு மாணிக்கம் ஆசைப்பட்டான்.. அது நடக்காமல் போய்விட்டது. நாம நினைச்சதெல்லாம்

நடந்துக்கிட்டா இருக்குது..? ஆனால்.. உன் அண்ணன் வேறு ஒன்றைச் சொல்கிறான்.."

"என்ன பெரியப்பா..?"

மாணிக்கவாசகம் கூறியதை ஆளவந்தார் தம்பி மகளிடம் எடுத்துச் சொன்னார்...

'எப்படியோ.. இந்த மட்டிலும் காயத்ரியின் கல்யாணம் முடிஞ்சதும் பெண்ணைக் கூப்பிட்டுக்கிட்டு போய் விடுகிறேன்னு என் அண்ணன் ஒப்புக் கொண்டாரே..'

நர்மதா அதை நினைத்து ஆறுதல்பட்டுக் கொண்டாள்...

"அதுக்கென்ன பெரியப்பா.. நான் பிரபாகிட்ட பேசிக்கறேன்..."

பிரபாகரனின் பேச்சு வந்ததும்.. ஆளவந்தாரின் முகத்தில் யோசனை வந்தது.. அவரின் முகமாற்றத்தைக் கண்ட நர்மதா கேள்வியாக அவரைப் பார்த்தாள்..

"இன்னும் என்ன பெரியப்பா.." என்று கேட்டாள்...

"அம்மாடி.. நீ சந்தோஷமா இருக்கியா தாயி.."

என்னவோ.. நேற்றுத்தான் திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்திருக்கும் புது மணப்பெண்ணிடம் விசாரிப்பதைப் போல அவர் விசாரிக்கவும் நர்மதாவிற்கு என்ன பதிலைச் சொல்வது என்றே பிடிபடவில்லை...

'இந்த பெரியப்பாவிற்கு என்ன ஆகிவிட்டது.. விசித்திரமாக அவரைப் பார்த்தபடி...'

"இதென்ன கேள்வி பெரியப்பா..?" என்று கேட்டாள்..

"அதில்லை நர்மதா.. இந்த வீட்டில் நீ எப்படி இருக்கிற..?"

சகலவித அதிகாரங்களுடன் இருக்கிறாயா என்பதை தம்பி மகளிடம் ஆளவந்தார் கேட்கிறாராம்..

இதெல்லாம் ஒரு வீடா.. இந்த வீட்டில் மனிதன் இருப்பானா.. இது மாதிரி வீட்டில் நீ எப்படி இருக்கிற என்ற தோரணையில் ஆளவந்தார் கேட்டு வைக்க...

"ஏன் பெரியப்பா.. உங்களுக்கு ஏதாவது சௌகர்ய குறைவு இருக்கா..? உங்க ரூமில் ஏ.ஸி. ஒழுங்காகத்தானே ஓடுது..? பாத்ரூமில் ஹீட்டர் வேலை செய்யுதா.. இல்லையா..?" என்று நர்மதா விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்..

'நான் என்ன கேட்கிறேன்.. இவளென்ன பதில் சொல்கிறாள்..' என்று.. தான் கேள்வி கேட்ட லட்சணத்தை அறியாமல் தம்பி மகளின் புத்திசாலித்தனத்தை குறைவாக நினைத்து.. மனதிற்குள் திட்டித் தீர்த்தார் ஆளவந்தார்..

66

**உன் முகம் பார்த்த நொடியில்..**

**என் முகவரி மறைந்த நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"பாரும்மா... நர்மதா..." என்று ஆளவந்தார் ஆரம்பிக்கவும்.. அவர் முகத்தையே.. பயபக்தியோடு பார்க்க ஆரம்பித்தாள் நர்மதா...

"நீ கோட்டையூர் ஜமீன்தாரிணி..."

"அதுக்கென்ன பெரியப்பா.."

"நீ யாருக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை.."

"நான் யாருக்குப் பயப்படப் போகிறேன்..?"

"நீ நில்லுன்னா எல்லோரும் நிற்கணும்.. உட்காருன்னா உட்காரணும்.. புரியுதா..?"

"புரியுது பெரியப்பா.."

"என்ன புரியுது..?"

"நான் நில்லுன்னு சொன்னால் எல்லோரும் நிற்கணும்.. உட்காருன்னு சொன்னால் எல்லோரும் உட்காரணும்.. சரியா.. பெரியப்பா.."

'ம்ஹூம்.. இது வேலைக்கு ஆகாது..' என்று எழுந்து கொண்டார் ஆளவந்தார்..

"என்ன பெரியப்பா.. அதுக்குள்ள எழுந்துவிட்டீங்க.."

"வேறு என்னம்மா செய்யச் சொல்கிற..?"

"நீங்க எதையோ சொல்ல வந்தீங்களே..."

"வேண்டாம்மா.. அதை நான் சொல்ல வந்தால்.. இன்றைக்கு பொழுதே போய்விடும் போல இருக்கு.. அதை இன்னொரு நாள் பார்த்துக்கலாம்..."

"இப்படிச் சொன்னால் எப்படி பெரியப்பா..?"

"நான் எப்படிச் சொன்னால் உனக்கு பிடிபடும்னு எனக்குப் புரியவே மாட்டேன்குதே நர்மதா.. நான் ஒன்றைச் சொன்னால்.. நீ வேற ஒன்றைப் புரிந்து கொள்கிறாய்.. இது பசி நேரம் வேற... அதனால முதலில் சாப்பிடுகிற வேலையைப் பார்ப்போம்.. காயத்ரியின் கல்யாணம் முடிந்த பின்னால் இதைப் பற்றி ஒரு நாள் முழுக்க உட்கார்ந்து விவரமா பேசலாம்.."

"எதைப் பத்தி பெரியப்பா.."

ஒன்றும் புரியாமல் பேந்த பேந்த விழித்தாள் நர்மதா.. இப்படி முதலும் இல்லாமல் முடிவும் இல்லாமல் மொட்டைக் காத்தான் குட்டையில் விழுந்தான் என்ற ரீதியாகப் பேசி வைத்தால் அவள்தான் பாவம் என்ன பண்ணுவாள்..?

"வேண்டாம் நர்மதா.. வயதான பெரியப்பன் மேல் கருணை காட்டி இந்தப் பேச்சை இத்துடன் விட்டுவிடு.. இன்னொரு நாள் இதைப் பற்றி பேசிக்கலாம்..."

"அதில்லை பெரியப்பா.."

"பசிக்குதும்மா.."

வேறுவழியின்றி அந்தப் பேச்சை விட்டு விட்டாள் நர்மதா.. ஆளவந்தாரின் மூலமாக நர்மதா சம்மதித்துவிட்ட செய்தி மாணிக்கவாசகத்திற்கும் போனது. அவர் மூலமாக ஸ்வேதாவின் காதுகளுக்குப் பறந்தது...

மதிய உணவிற்குப் பின்னர் ஊருக்குக் கிளம்பிய பரிமளம்.. மகளிடம் ஆயிரம் புத்திமதிகளை சொல்லி விட்டு கிளம்ப மனமில்லாமல் கிளம்பிச் சென்றாள்...

"மத்தவங்களை அழிக்கிற முயற்சியில் நீ அழிந்து விடாமல் பார்த்துக் கொள் ஸ்வேதா.."

இதுதான் அவள் திரும்பத் திரும்ப மகளிடம் சொன்னது.. வாசவனின் அறிவுரையோ வேறு மாதிரியாக இருந்தது..

"பவித்ரா.. அண்ணன் ஸ்வேதாவை இந்த வீட்டில் வருஷக்கணக்கில் தங்க வைத்தார்.. எப்படியும் தன் மகளை இந்த வீட்டு மருமகளாக்கிடணும்னு கனவு கண்டார்.. அவர் கனவு பலிக்கலை.. உனக்கு அந்த அதிர்ஷ்டம் தானாத் தேடி வருது.. கை நழுவ விட்டு விடாதேம்மா.."

அப்படி கணக்குப் போட்டு காய் நகர்த்துவதில் பவித்ராவிற்கு உடன்பாடில்லை..

'பெரியப்பாவும் சரி.. அப்பாவும் சரி.. இதை கோட்டையூர் ஜமீன் குடும்பம்னே நினைக்கிறாங்க.. நான்.. என்னுடைய தினா அத்தானின் குடும்பம்னு நினைக்கிறேன்.. அது ஏன் இவங்களுக்கு பிடிபட-மாட்டேங்குது.. என் தினா அத்தான் ஜமீன்தாரின் வீட்டில் பிறந்திருக்காமல் ஒரு சாதாரண ஆடு மேய்ப்பவர் வீட்டில் பிறந்திருந்தாலும் எனக்கு அவர்தான் உசத்தி.. இதை ஏன் யாரும் புரிஞ்சுக்க மாட்டேன்கிறாங்க..'

இது காதல் கொண்ட மனது.. அந்த மனது மாலினிக்கு இருந்தது.. அதனால் அவள் சட்டென்று பவித்ராவைப் புரிந்து கொண்டாள்.. ஸ்வேதாவிற்கோ மற்றவர்களுக்கோ

இல்லை. அதனால்.. அவர்களால் பவித்ராவைப் புரிந்து கொள்ள முடியவில்லை..

வாசவனின் கோரிக்கைக்கு பவித்ராவால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..?

"சரிப்பா.." என்று மட்டும் சொன்னாள்..

அன்று மாலை.. பிரபாகரன் மாலினியுடன் வீட்டுக்கு வந்தபோது.. ஸ்வேதா கிளம்பியிருக்கவில்லை. மாறாக.. அவள் கண்களில் வெற்றிக் குறியுடன் தோட்டத்தில் நடை பழகிக் கொண்டிருந்தாள்..

'இந்தப் பிசாசு.. இன்னுமா இங்கே இருக்கு..?' பிரபாகரன் கோபத்துடன் தாயைத் தேடிப் போனான்..

"அம்மா.."

நர்மதாவிற்கு தெரியும்.. வீட்டுக்கு வந்த மகன்.. உடைகூட மாற்றாமல்.. தன்னைத் தேடி வருவது எதற்காக என்று..

"வா, பிரபா! காபி.. டிபன் கொண்டு வரச் சொல்லவா..?"

"அதிருக்கட்டும்.. நான் சொன்னது என்ன? நீங்க செய்திருப்பது என்ன.. இதுதான் என் பேச்சுக்கு நீங்க தரும் மரியாதையா..?"

நர்மதா முகம் மாறிப் போனாள்.. இதுவரை பிரபாகரனின் அதிருப்திக்கு அவள் ஆளானதில்லை.. முதல் முறையாக மூத்த மகனின் கோபத்திற்கு அவளை ஆளாக்கி விட்ட மாணிக்கவாசகத்தையும் அவர் பெற்ற மகளையும் மனதுக்குள் சபித்தபடி மகனுக்கு பதில் சொன்னாள் அவள்...

"நீ சொல்லி.. நான் எதைக் கேட்காமல் போனேன் பிரபா..? நீ அந்தப் பக்கம் போனவுடன் இந்தப் பக்கம் உடனே போய் பெரியப்பாவிடம் ஸ்வேதாவை கூப்பிட்டுக் கொண்டு போகும்படி சொல்லி விட்டேன்..."

தாய் தன்மையாகப் பதில் சொன்னதும்.. பிரபாகரனின் கோபம் வடிந்து விட்டது...

"ஐ ஆம் ஸாரிம்மா.. ஆனால்.. இவள் இன்னும் நம் வீட்டில் இருக்கிறாளே.."

"பெரியப்பா.. அண்ணனிடம் சொன்னதற்கு.. அண்ணன் வேறு ஒரு வேண்டுகோளை வைத்தார் பிரபா.."

"என்னவாம்..?"

நர்மதா பொறுமையாகச் சொன்னாள்.. அதைக் கேட்ட பிரபாகரன் யோசனையாக நின்றான்...

"எனக்கு என்ன பதில் சொல்றதுன்னே தெரியலைப்பா.. அவங்க கேட்கிறதில்யும் ஒரு நியாயம் இருக்கில்ல.."

"ஆமாம்.."

"அவளை கூப்பிட்டுக் கொண்டு போகச் சொல்லி.. சொல்லியாகி விட்டது.. உனக்கும் தினாவுக்கும் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதில் விருப்பமில்லை என்கிறதையும் சொல்லிட்டேன்.."

"அதையும் சொல்லிட்டீங்களா.. அப்பாடி.."

பிரபாகரன் நிம்மதியாக உணர்ந்தான்..

"ஆமாம்பா.. உங்களுக்கு மட்டும்தான் அவள் மேல் வெறுப்பா..? எனக்கும் காயத்ரிக்கும் வெறுப்புத்தான்.. இருந்தாலும் அதை வெளியில் சொல்ல முடியுமா..? என் பெரியப்பாவிற்கு பேத்தியாக போய்விட்டாளே.. என்ன செய்து தொலைப்பதுன்னு வெளியே சொல்லாமல் சகித்துக் கொண்டிருக்கேன்.."

"உங்க மனசு புரியாம கோபமா பேசிட்டேன்.. என்னை மன்னிச்சிடுங்கம்மா.."

"விடு பிரபா! எப்போ.. நீ இந்த அளவுக்கு சொல்லிட்டயோ.. அப்பவே அவ எனக்கு வேண்டாதாவளா ஆகிப் போயிட்டா.. உன் அப்பாவின் கைபிடித்து.. இந்த வீட்டுக்குள் மருமகளாக நுழைந்த நாளில் இருந்து இன்றைக்கு வரைக்கும் நான் என் புருஷன்.. புள்ளைகளைத் தான் முதலில்

வைத்திருக்கிறேன்.. என் பிறந்தவீட்டுக் சொந்தங்கள் எனக்கு இரண்டாம் பட்சம் தான்.."

"எனக்குத் தெரியாதாம்மா...? அவ அதிகமா விளையாடிட்டா.. அதனாலதான் இப்படிப் பேசிட்டேன்.."

"நீ பேசினால் அதற்கு காரணமில்லாமல் இருக்காது.. இத்தனை நாள் இருந்தவ.. இன்னும் எண்ணி அறுபதே நாள்கள்தான்.. இருந்து தொலைத்துவிட்டுப் போகட்டுமே.. அவளுக்கும் கல்யாணம்னு ஒண்ணு நடக்கணுமுல்ல..."

"எவன் மாட்டப் போகிறானோ.. பாவம்.. அந்த தியாகி.."

"அதைப் பத்தி நமக்கென்ன.. இப்போதைக்கு அவ மட்டும் தனியா இல்லாம பவித்ராவும் கூட இருக்கிறா.. அந்த மட்டிலும் நமக்கு நிம்மதி..."

வரும் நாள்களில் பவித்ராவின் நிம்மதி கேள்விக் குறியாகப் போகப்போவது தெரியாமல் நர்மதா பேசிக் கொண்டிருந்தாள்..

"அதைச் சொல்லுங்க.. வாசவன் மாமா.. பெண்ணை அருமையாக வளர்த்து வைத்திருக்கிறார்.."

"எனக்கு மனதுக்குள் ஒரு ஆசை இருக்கு பிரபா... அதை காயத்ரியின் கல்யாணம் முடிந்ததும் சொல்கிறேன்.."

பிரபாகரன் தாயைப் பார்த்து கனிவாக புன்னகைத்து விட்டு வெளியே வந்தான்...

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருப்-பதைப் போல.. பிரபாகரன் நர்மதாவின் அறையை விட்டு வெளியே வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா..

அவளைப் புழுவைப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டே மாடிக்குச் செல்ல மாடிப்படியில் கால் வைத்தான் பிரபாகரன்..

"என்ன பெரியத்தான்.. எப்பவும் வீட்டுக்கு வந்தால்.. முதலில் உங்கள் ரூமுக்குப் போய் குளித்து டிரஸ் மாற்றி விட்டு அப்புறம்தான் வேறு வேலையைப் பார்ப்பீங்க..

இன்றைக்கு என்னடான்னா.. அத்தையின் ரூமுக்குள் போய் மந்திராலோசனை பண்ணிவிட்டு வருகிறீங்க.. எதுவும் முக்கியமான விஷயமா..?" ஸ்வேதாவின் குரலில் இருந்தது ஏளனமா.. இல்லை எகத்தாளமா என்று கண்டு கொள்ளமுடியாமல் இரண்டும் பின்னிப் பிணைந்திருந்தன..

பிரபாகரனோ.. இல்லை தினகரனோ அவளை மணக்கப் போவதில்லை என்று ஆகிவிட்டது. இனிமேலும் இவர்களுக்கு என்ன கணக்கு என்பது அவளின் எண்ணம்..

பிரபாகரன்.. பாவ புண்ணியம் பார்க்கிறவன்.. ஸ்வேதாவின் திருமணம் பாதிக்கும் என்று தெரிந்த பின்னால்.. அவளை காயத்ரியின் திருமணத்திற்கு முன்னால்... கருங்கல்லுக்கு அனுப்ப மாட்டான்...

இருக்கும் நாள்களில் முடிந்தவரை அவனுடன் மோதிப் பார்த்துவிடும் முடிவோடு இருந்தாள் ஸ்வேதா..

மாடியில் ஏறப்போன பிரபாகரனின் புருவங்கள் முடிச்சிட்டன.. இதற்கு முன்.. ஸ்வேதா இவ்வளவு தைரியமாக அவன் முகம் பார்த்துப் பேசியதில்லை..

"முக்கியமான விஷயத்துக்குத்தான் மந்திர ஆலோசனை பண்ணணும்னு இல்லை ஸ்வேதா.. அல்ப விஷயங்களுக்குகூட மந்திர ஆலோசனை பண்ணலாம்.."

அவன் இதைச் சொல்லிய விதம் கண்டு ஸ்வேதாவின் முகம் மாறிவிட்டது.. அவளைப் பற்றிய விஷயம் இவனுக்கு அவ்வளவு அல்பமாய் போய்விட்டதா..?

"பரவாயில்லையே.. கோட்டையூர் ஜமீன்தாரின் குடும்பம்கூட அல்ப விஷயங்களுக்கு கவலைப்பட ஆரம்பித்து விட்டாங்களே.. இது முன்னேற்றமா.. இல்லை பின்னேற்றமா அத்தான்..?"

"கோட்டையூர் ஜமீனின் குடும்பத்தில் பின்னேற்றங் கிறதே கிடையாதும்மா.. அல்ப விஷயம்கூட எங்களுக்கு ஆரம்பத்திலேயே நசுக்கப்பட வேண்டிய விஷயம்தான்.. அந்த வகையில் எங்களுக்கு இது முன்னேற்றம்தான்.."

"எனக்கு இந்த லாஜிக் புரியவில்லை அத்தான்.."

"புத்திசாலிகளுக்குத்தான் இது புரியும்.. உனக்கெங்கே புரியப் போகுது..?"

"ஊஹூம்.. கோட்டையூர் ஜமீன் வீட்டில் அல்ப விஷயங்கள்கூட மண்டையைக் குடைய வைக்க ஆரம்பித்து விட்டன.. இதைப் போய் முன்னேற்றம்னு எந்த புத்திசாலியும் சொல்ல மாட்டாங்க..."

"நிச்சயம் இது முன்னேற்றம்தான் ஸ்வேதா.. நாங்க.. பெரிய வீட்டுக்காரங்க.. பெரிய மனசு படைத்தவங்க.. வெளுத்ததெல்லாம் பால்னு நினைக்கிறவங்க.. சின்னப் புத்தி படைச்ச.. பொடித்தனமான மனுஷங்களும் இருக்காங்கன்னு வீட்டை விட்டு வெளியே போகாமலே நாங்க கண்டுபிடித்து அவங்களை நசுக்குவது முன்னேற்றம் இல்லையா..?"

ஸ்வேதாவின் முகம் இப்போது முற்றிலும் கறுத்து விட்டது.. பிரபாகரனின் சொல்வீச்சை எதிர்பார்த்திருந்தாலும் இந்த அளவுக்கு தாக்குதலை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை...

அவள் சின்ன புத்தி படைச்ச பொடித்தனமான மனுஷியா..?

வாயடைத்துப் போய்விட்டவளை இகழ்ச்சியுடன் பார்த்தபடி பிரபாகரன் படியேறினான்...

அதேசமயம்.. கலகலவென்று சிரித்த வண்ணம் கை கோத்தவாறு மாலினியும் பவித்ராவும் படியிறங்கினார்கள்..

## 67

**உன் நிழலோடு.. நிழலாகி..**

**உன்னைப் பின்பற்றும் என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

இணைபிரியாத தோழிகளைப் போல இசைந்து நகைத்த வண்ணம் படியிறங்கிக் கொண்டிருந்தவர்களைப் புன்னகையுடன் பார்த்தான் பிரபாகரன்.. அவனுடைய புன்னகையை அதிசயத்துடன் பார்த்தாள் பவித்ரா...

'பெரிய அத்தானுக்கு சிரிக்கக்கூடத் தெரியுமா..'

அவன் முன்னால் நின்று பேசுவதற்குகூட பவித்ரா பயப்படுவாள்.. ஏன்.. அவளுடைய அப்பா வாசவனே ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் பிரபாகரனிடம் பேசமாட்டார்.. அதற்கு மேல் நின்று பேச அவன் இடம் கொடுக்க மாட்டான் என்பதுதான் முக்கியமான காரணம்..

அப்படிப்பட்ட பெரிய அத்தான்.. அவளைப் பார்த்து புன்னகைக்கவும் பவித்ராவிற்கு கால் தரையில் நிற்க வில்லை...

"நீங்க இரண்டு பேரும் என்ன இணைபிரியாத தோழிகளா..?" என்று கேட்டான் பிரபாகரன்...

"பார்த்தால் எப்படித் தெரிகிறதாம்.." மாலினி வெட்டும் பார்வையுடன் பதில் சொன்னாள்...

"கோந்து போட்டு ஒட்டிக் கொண்டிருப்பதைப் போல தெரிகிறது.."

"தெரியும்.. தெரியும்.. ஏன் தெரியாது..?"

"ஆமாம்.. நீங்க ஒருத்தரையொருத்தர் பார்த்து இரண்டு மூன்று நாள்கள்தானே ஆகியிருக்கும்..?"

"அதுக்கு என்ன இப்ப..?"

"எனக்கு ஒன்றுமில்லை.. பிறந்ததிலிருந்து தெரிந்தவங்களைப் போல பின்னிப் பிணைகிறீங்களே.. அதுதான் விசாரித்தேன்..."

"நாங்களெல்லாம் அப்படித்தான்..."

"நாங்கன்னா யாரு.. நீயும் பவித்ராவுமா..?"

"நாங்கன்னா.. நாங்கதான்.. பெண்குலம்.."

"அடேங்கப்பா.. நீங்க அப்படித்தான்னு எதைச் சொல்கிறீங்க.."

"உம்.. நட்பை வைத்துச் சொல்கிறோம்.."

"அட.. அப்படி உயிருக்குயிரான நட்பு உங்ககிட்ட இருக்கிறதாக்கும்.. நீங்கன்னா.. நீங்க இரண்டு பேர் மட்டுமில்லை.. ஒட்டுமொத்த பெண்குலத்தையும் சொல்கிறேன்.."

"ஆமாம்.. நாங்க பார்த்த அடுத்த நிமிஷம் பேசிப் பழகிருவோம்.."

"சட்டுன்னு பழகிருவீங்க போல..."

"அப்படித்தான்..."

"உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா.. பழகிய அடுத்த நிமிஷம் சண்டை போட்டு.. வருஷக்கணக்கா ஆனாலும் பேச மாட்டீங்க..."

"இப்ப என்னதான் சொல்ல வரீங்க.."

"சட்டுன்னு சண்டையும் போட்டுக்குவீங்கன்னு சொல்லவரேன்.."

"எங்களைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்..?" மாலினி சண்டைக்கு தயாராக.. பவித்ரா கையைப் பிசைந்தாள்...

"பெண்களைப் பற்றி தெரிந்துகொண்ட மனிதர் யாராவது ஒருத்தர் இருக்க முடியுமா..? கடலைக்கூட ஆழம் கண்டுபிடித்து விடலாம்.. உங்க மனசின் ஆழத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாதே..."

"இதையே எத்தனை காலம்தான் சொல்லிக்கிட்டு இருப்பீங்க..? ஆமாம்.. நாங்க ஆழமானவங்கதான்..

எங்க அன்பும் அதைப் போல ஆழமானது.. கரை காண உங்களால்கூட முடியாது..."

மாலினியின் கண்கள் சிரித்தன.. பிரபாகரன் அவளது வார்த்தைகளைக் கேட்டு கிளர்ந்தான்.. அருகேயிருந்த

பவித்ராவையும் சூழ்நிலையையும் கவனத்தில் கொண்டு கட்டுப்படுத்திக் கொண்டவன்...

'உன்னை..! இரு.. தனியாக அகப்படுவியில்லையா.. அப்போது பேசிக் கொள்கிறேன்..' என்று கண்களால் செய்தி சொன்னான்...

அதை உணர்ந்து கொண்டு நாணப் புன்முறுவலுடன் மாலினி, "வா.. பவி.. போகலாம்.." என்று படியிறங்கிப் போனாள்..

"பவி.." என்று புருவம் உயர்த்தினான் பிரபாகரன்...

"உம்.. பவிதான்.." என்று கேள்வியாகப் பார்த்தாள் மாலினி...

"எங்க சின்ன மாமாவின் மகள் பெயர் பவித்ரா வாச்சே.." இதைக் கேட்டதும் பவித்ராவின் முகம் சிவந்து விட்டது...

"நான் சார்ட் கட்டாய் கூப்பிட்டேன்.. இப்ப அதுக்கு என்ன..?" என்று முறைத்தாள் மாலினி..

"ஒன்றுமில்லையே.. பவித்ராங்கிற பெயர் அப்படி நீளமாகவா இருக்குன்னு யோசிச்சேன்.." பிரபாகரனின் கேள்வியில் கேலி இருந்தது...

"உங்கள் பெயர்கூடத்தான் நீளமாக இல்லை.. அதனால் உங்களை எல்லோரும்.. 'பிரபாகரா.. பிரபாகரா..' ன்னுதான் கூப்பிடுகிறாங்களா.. பிரபான்னு யாரும் கூப்பிட்டதில்லையா..?" மாலினி பதிலுக்கு கேட்டாள்..

பவித்ராவின் விழிகள் விரிந்துவிட்டன.. அவருடைய பெரிய அத்தானை பெயர் சொல்லிக்கூட ஒருவரால் அழைக்க முடியுமா.. அதுவும் மாலினி அழைக்கக்கூடும் என்பதை அன்றுதான் கண்டாள் அவள்...

மையலுடன் மாலினி அவனை 'பிரபா' என்று அழைக்கும் வழக்கத்தை அவள் நினைவூட்டியது புரிந்து போக.. பிரபாகரனின் கண்கள் மின்னின..

"ஓ.. அதை மறந்துவிட்டேனில்ல.. அப்போ.. நீ பவித்ராவை பவின்னு கூப்பிடுவது சரிதான்.. ஆமாம் பவித்ரா.. இந்த உயிர் சிநேகிதியை நீ எப்படிக் கூப்பிடுவாய்.. நான் சார்ட் கட்டாய் கூப்பிடுவதைப் பற்றிக் கேட்டேன்.." என்று பவித்ராவின் பக்கம் திரும்பிக் கேட்டான்...

பவித்ராவிற்கு கைகால்கள் தந்தியடிக்க ஆரம்பித்து விட்டன.. கேட்டதற்கு பதில் சொல்லாமல் இருக்கக்கூடாது என்ற உணர்வுடன்..

"மாலுன்னு கூப்பிடுவேன்.." என்று மெல்லிய குரலில் நடுக்கத்துடன் கூறினாள்...

"தப்பாக கூப்பிடுகிறாயே.. அதுக்குப் பதில் 'வாலு'ன்னு கூப்பிட்டிருந்தேன்னு வை.. பொருத்தமாக இருந்திருக்கும்.."

பிரபாகரன் கடகடவென்று சிரித்துவிட்டுப் படியேறி விட.. அவன் போவதையே பொய் கோபத்துடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்த மாலினியின் கையில் கிள்ளினாள் பவித்ரா..

"ஸ்.. ஆ.. வலிக்குது பவி.."

"கள்ளி.. என்ன நடக்குது இங்கே..?"

"அது.. என்னென்னவோ நடக்குது.. அது எதுக்கு உனக்கு..?"

"எனக்குத் தெரிய வேணாமா..?"

"உனக்கு அதெல்லாம் சொன்னால் புரியாது பவி.."

"ஏன்..?"

"ஏன்னா.. ஏன்னா.. நீயே.. ஒரு அமுல் பேபி.."

இதைச் சொன்ன மாலினி கலீரென்று நகைக்க.. அவள் காதைப் பிடித்துத் திருகினாள் பவித்ரா..

"விடு பவி.." மாலினி சிணுங்கினாள்..

"உன்னை..! நானா அமுல் பேபி..?"

இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்கையில்..

"நானும் ஜாயின் பண்ணிக்கலாமா.." என்ற குரல் கேட்டது.. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. கடைசிப் படியில் ஸ்வேதா நின்று கொண்டிருந்தாள்.. நொடிப்பொழுதில் மாலினியின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து வெறுப்பு வந்தது...

"வா.. பவி.." என்றபடி அவள் மடமடவென்று படிகளில் இறங்கி.. ஸ்வேதா என்ற ஒரு ஜீவன் அங்கே நின்று கொண்டிருப்பதை உணராதவள் போல அவளைக் கடந்து சென்றுவிட்டாள்...

'கொடுத்து வைத்தவள்..' என்று மனதிற்குள் மாலினியின் மேல் பொறாமைப்பட்டாள் பவித்ரா...

அவளால் அப்படிப் போக முடியாதே.. ஸ்வேதா அவளுடைய பெரியப்பாவின் ஆசை மகளாயிற்றே.. எனவே வேறுவழியின்றி ஸ்வேதாவைப் பார்த்து புன்னகைத்தபடி படி இறங்கினாள்..

"நானும் நீ வந்திலிருந்து பார்க்கிறேன்.. அவளோடு கொஞ்சிக் குலாவிக்கிட்டு அலைகிறயே.. என்ன விஷயம்..?" என்று கனல் கக்கினாள் ஸ்வேதா..

'பெண்ணுக்குப் பெண் சிநேகிதமாய் இருப்பது கூடத் தப்பா...' என்று கடுப்பாகிப் போனாள் பவித்ரா...

"ஜஸ்ட் ஃப்ரெண்ட்ஸ்.. வேற ஒண்ணுமில்லை ஸ்வேதா..." என்று.. தன்னைவிட வயதில் மூத்தவளான ஸ்வேதாவை பெயர் சொல்லி அழைத்துப் பதில் சொன்னாள் பவித்ரா...

ஒரு முறை மரியாதை கொடுக்கிறேன் பேர்வழி யென்று ஸ்வேதாவை... பவித்ரா 'அக்கா' என்று அழைத்து விட்டாள்.. ஸ்வேதாவிற்கு படுகோபம் வந்துவிட்டது.. ஆடித்தீர்த்து விட்டாள்.. அன்றிலிருந்து அவளை பெயர் சொல்லித்தான் அழைப்பாள் பவித்ரா.. 'அக்கா' என்று மறந்தும் அழைப்பதில்லை...

"ஃப்ரரெண்ட்ஸா..? அவளுடன் கூடப் படித்தாயா..? இல்லை அவள் கூடத்தான் வேலை பார்க்கிறாயா..?" இடக்காக கேட்டாள் ஸ்வேதா.. பவித்ராவின் முகம் மாறிவிட்டது..

"இது இரண்டும் இருந்தால்தான் ஃப்ரெண்ட்ஸ் ஆக முடியுமா..?" என்று எரிச்சலுடன் கேட்டாள்...

"பின்னே.. இரண்டு நாளில் எப்படி ஃப்ரெண்ட்ஸாக முடியும்..?"

"ஒரே வேவ்லைனில் இருக்கிறவங்க.. ஒருத்தரை யொருத்தர் பார்த்துப் பேசிப் பழக.. ஒரு நொடிகூட அதிகம் ஸ்வேதா.. உனக்கெங்கே அது புரியப் போகுது...?"

பவித்ராவும்தான் எவ்வளவு தூரத்திற்கு பொறுமை-யாக போக முடியும்..? சம வயதில் இருக்கும் பெண்ணிடம் பேசிப் பழகி.. நட்பாக இருப்பதைக்கூட ஸ்வேதா சொல்லிக்காட்டிக் கொண்டிருந்தால்.. அவளுக்கும் தான் கோபம் வராதா..?

"என்னிடமே எதிர்த்துப் பேசுகிறாயா.. இது யார் கொடுத்த தைரியம்..?" ஸ்வேதாவின் கண்களில் அனல் பறந்தது...

"இதுக்குப் போய் யாராவது ஒருத்தர் வந்து தைரியம் கொடுத்துக்கிட்டே இருக்க முடியுமா.. எல்லாம் தானாய் வருவதுதான்.." பவித்ரா அவளைக் கடந்து போக முயன்றாள்..

அவள் கையைப் பிடித்து தடுத்து நிறுத்திய ஸ்வேதா..

"வேண்டாம் பவித்ரா.. அவளுடன் அளவாய் பேசிப் பழகு.. அவள் ஒன்றும் நல்லவள் அல்ல.." என்றாள்..

'இதை நீ சொல்கிறாயா..' என்று நினைத்துக் கொண்டாள் பவித்ரா.. அவளது நினைவை யூகித்தவள் போல...

"நான் சொல்வதனாலேயே... இதை நீ நம்பமாட்டாய்.. பின்னால் பட்டுத் தெரிந்து கொள்ளும்போது.. என் எச்சரிக்கையில் இருக்கும் உண்மையை நீ புரிந்து கொள்வாய்..." என்றால் ஸ்வேதா..

'இவள் ஏன் இப்படிச் சொல்கிறாள்..' என்ற குழப்பத்துடன் பவித்ரா.. அவளைக் கடந்து தோட்டத்திற்கும் போனாள்...

'போகிறாயா.. போ.. உன் மனக் குளத்தில் கல்லை எறிந்து விட்டேன்.. இனி அதைக் கலக்குவதுதான் என் வேலை..'

தனக்குள் சொல்லி சிரித்துக் கொண்டாள் ஸ்வேதா.. பவித்ராவின் மனதைக் குழப்பும் வேலையை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துவிட்ட நிறைவு அவள் மனதில் உதித்தது..

தோட்டத்தில் நீச்சல்குளத்தின் அருகேயிருந்த மரபெஞ்சில் சாய்ந்து அமர்ந்து காலாட்டிக் கொண்டிருந்தாள் மாலினி..

பவித்ராவின் காலடியோசையைக் கேட்டு திரும்பிப் பார்த்து வெள்ளையாகச் சிரித்தாள்...

'இவளையா ஸ்வேதா.. அப்படிச் சொன்னாள்..?'

பவித்ராவின் மனதிலிருந்த குழப்ப மூட்டம் நொடிப் பொழுதில் அகன்றது...

"என்ன பவி.. ஒருவழியாய் தப்பித்து வந்து விட்டாயா..?" மாலினி சிரித்தாள்...

"அதையேன் கேட்கிற.. அவள் என்னவோ.. பாதுகாப்பு அதிகாரியைப் போலவும் நான் அவளுடைய கண்காணிப்பில் இருப்பதைப் போலவும் ஒரே விசாரணை மயம்தான்... தப்பிச்சு வருவதற்குள் போதும் போதும்னு ஆகிவிட்டது.." பவித்ரா அவள் அருகில் அமர்ந்தபடி கூறினாள்...

"நீ சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும் அதுதான் உண்மையான நிலைமை..."

"புரியலை மாலு.."

"ஊஹூம்.. நீ பேசாமல் மாலினின்னே சொல்லி விடு.."

"ஏன்..?"

"நீ மாலுன்னு சொன்னால்.. உன் பெரியத்தானின் நினைவில் எனக்கு 'வாலு'ன்னு காதில் விழுகுது..."

"விழும்.. விழும்.. அதைப் பத்தி அப்புறம் கேட்டுக்கறேன்.. இப்ப எதுக்கு ஸ்வேதாவை பாதுகாப்பு அதிகாரின்னு சொன்ன..?"

"உன் பெரியத்தானையும்.. தினகரனையும் நீ அண்டிவிடாமல் பாதுகாக்கிறவளுக்கு வேறு என்ன பெயர் வைப்பது..? உன்னைக் கண்காணிக்க வேண்டிய பெறுப்பும்.. கவலையும்.. பாவம்.. அவளுக்கும் இருக்குமில்லையா..?"

இதைக் கேட்ட பவித்ரா விழுந்து விழுந்து சிரித்தாள்...

"உன்னை..! உனக்கு பெரியத்தான் சரியாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்..."

"என்ன பெயர் வைத்தாராம்..?"

"அதுதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சொன்னாயே வாலுன்னு.. அந்தப் பெயர்தான்..."

மீண்டும் பவித்ரா சிரிக்க ஆரம்பிக்க.. அவள் காதைப் பிடித்து திருகினாள் மாலினி...

"ஆ..! வலிக்குது மாலினி.. விடு.. பழிக்குப் பழியா?"

"ஆமாம்.. நீ திருகியபோது என் காதும் இப்படித் தானே வலித்திருக்கும்..?"

இருவரும் மனம்விட்டுச் சிரித்தார்கள்...

68

**பெண்ணாக நான் பிறந்ததின்பலனை..**

**உன்னைக் கண்ட நொடியில் உணர்ந்ததை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

காதலைப் போல நட்பும்.. பரம சுகமான விஷயம்.. இதிகாச காலத்தில்.. மனைவியை நேசித்ததைவிட கர்ணனை மிக அதிகமாக நேசித்தான் துரியோதனன்.. அதனால்தான் கர்ணனை தன் அந்தப்புரம் வரை வருவதற்கு

அனுமதித்தான்.. அவனுடைய மனைவியிடம் கர்ணன் காட்டிய பாசத்தை ஆதரித்தான்...

சொக்கட்டான் விளையாட்டின் இடையே பாதியில் துரியோதனன் வந்து கொண்டிருப்பதை உணர்ந்த அவனது மனைவி எழுந்து கொள்ள... அவளது இடுப்பு மணிமேகலையைப் பிடித்து இழுத்து...

'தோற்றுவிடப் போகும் பயத்தில்.. பாதியில் போகிறாயா..' என்று விளையாட்டாய் வினவினான் கர்ணன்...

அவளது இடுப்பு மணிமேகலை அறுந்து மணிகள் தரையில் சிதறின.. அப்போதுதான் துரியோதனன் அங்கு வந்து நிற்பதை உணர்ந்த கர்ணன் பதற்றத்துடன் எழுந்து நின்றான்..

அது மிக மிக சிக்கலான சூழல்.. அரசன் மனைவியின் இடுப்பு மணிமேகலையை இழுத்து அறுத்திருக்கிறான் கர்ணன்.. அந்த கால கட்டத்தில் அது மிகப் பெரிய குற்றம்...

தரையில் விழுந்து கிடந்த மணிமேகலையைப் பார்த்த துரியோதனன்.. கர்ணனைப் பார்த்துக் கேட்டானே ஒரு கேள்வி..!

'எடுக்கவோ..? கோக்கவோ..?'

எத்தனை யுகங்கள் கடந்து சென்றாலும் நிலைத்து நிற்கக்கூடிய கேள்வியில்லவா அது..? அப்படிப்பட்ட நண்பனின் நட்புக்காக தன் உயிரையே கர்ணன் அர்ப்பணித்ததில் வியப்பேதும் இல்லை..

கர்ணனுக்குத் தெரியும்.. குருக்ஷேத்திர யுத்த களத்தில் அவன் எதிர்க்கவேண்டிய பாண்டவர்கள் அவனுடைய சகோதர்கள்தான் என்பது.. குந்தி அவனைப் பெற்ற தாய்தான் என்பது...

தெரிந்தும் அவன் யுத்தம் புரிந்தான் என்றால்... அது தான் நட்புக்கு அவன் கொடுத்த மரியாதை.. அதுதான் நட்பின் வலிமை...

'நண்பேன்டா...'

இதை விளையாட்டாக நாம் பேசினாலும்.. அதன் பின்னாலிருக்கும் உணர்வு அழுத்தமானது.. என்ன ஒன்று.. அப்படிப்பட்ட நட்பை ஆண்களிடம் மட்டும்தான் நம்மால் பார்க்க முடிகிறது.. பெண்களிடம் அதைக் காண முடிவதில்லை...

இதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்.. பெண்களின் இயல்பான எச்சரிக்கை உணர்வு.. உரிமை மனப்பான்மை.. தொட்டாற்சிணுங்கித் தன்மை.. எதையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் சுபாவம் என்று நிறையச் சொல்லலாம்...

பெண்களுக்கும் நட்பை ஆராதிக்கும் குணம் உண்டு.. ஆனாலும்.. எப்படி அவர்கள் திருமணத்திற்குப் பின்னால் தன் சுயத்தை இழந்து.. எல்லாமே தன் கணவன்..

அவனைச் சார்ந்த சொந்த பந்தம் என்று மாறி.. பிறந்த வீட்டுச் சொந்தபந்தங்களை துறக்கிறார்களோ.. அப்படியே அவர்களுக்கு மட்டும் சொந்தமான நட்பையும் சேர்ந்து துறக்கிறார்கள்.. அப்படி அவர்கள் துறந்துதான் ஆகவேண்டும்.. வேறுவழியேதும் அவர்களுக்கு இல்லை..

எது எப்படியாக இருந்தாலும் நட்பு என்பது மிக இனிமையான ஒன்று.. ஒரேவிதமான அலைவரிசையுடைய மனதைச் சேர்ந்தவர்கள் சந்தித்துக் கொள்ளும்போது இந்த இனிமையை அவர்கள் உணர்வார்கள்...

'கற்றோரை.. கற்றோரே காமுறுவர்..'

கற்றோர்.. ஆண்.. பெண்ணாக இருக்க வேண்டிய அவசியமென்ன..? ஆணுக்கு ஆணையும்.. பெண்ணுக்கு பெண்ணையும் பிடித்துப் போய்விடுவதுதான் நட்பு..

இந்த யுகத்தில்.. அதற்கும் ஆயிரம் வகையான பெயர்களும் விமரிசனங்களும் வந்துவிட்டன..

மிருகங்கள்கூட செய்யாத செயலை மனித குலம் செய்ய ஆரம்பித்துவிட்டதன் விளைவு அது..

ஒரே வகையான உணர்வலைகள் இருக்கும் இருவர் பேச அமர்ந்துவிட்டால் நேரம் போவதே தெரியாது.. அதற்கு அந்த இருவரும் காதலர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.. நண்பர்களாக.. தோழிகளாக.. இருந்தாலே போதும்...

அந்த நட்பின் அலைகளைப் பரிபூரணமாக உணர்ந்தார்கள் பவித்ராவும் மாலினியும்..

"ஏய்.. சொல்லு.." என்றாள் பவித்ரா..

"எதைச் சொல்லச் சொல்கிறே.." கள்ளச் சிரிப்புடன் கண்கள் மின்ன வினவினாள் மாலினி..

"பெரியத்தானின் முன்னால் நின்று பேசவே நாங்களெல்லாம் பயப்படுவோம்.. நீயானால் அவருடன் இப்படி சரிக்குச் சரியாய் வம்பிழுக்கிறாயே.. என்ன விஷயம்..?"

"ஒன்றுமில்லையே..."

"இதை நம்ப நான் என்ன.. நீ சொன்னதைப் போல அமுல் பேபியா..?"

"ஒன்றுமில்லாததை ஒன்றுமில்லைன்னுதானே சொல்லணும்..?"

"வேண்டாம் மாலினி.. எனக்கு காது குத்தியாகி விட்டது..."

"அதுதான் உன் வைர தொங்கட்டான்களைப் பார்த்தாலே தெரியுதே.. பவி.. உன் தொங்கட்டானின் டிஸைன் அழகாயிருக்கு.. இதைப் போல நான் தங்கத்தில் வெள்ளைக் கல் பதித்து செய்து கொள்ளப் போறேன்..."

"பேச்சை மாத்தாதே.."

"விட மாட்டாயே..."

மாலினி பொங்கிச் சிரித்தாள்.. பிரபாகரனின் பெயரைக் கேட்டதும் அவளது முகத்தில் தெரிந்த நாணச் சிரிப்பை ரசனையுடன் பார்த்தாள் பவித்ரா..

"ஓஹோ.. கதை அப்படிப் போகிறதா...?"

"எப்படிப் போகிறதாம்...?"

"இப்போதுதானே புரியுது..."

"என்ன புரியுது..?"

"சிங்கத்தை.. உன் சின்னஞ்சிறு கண்ணுக்குள் கட்டி வைச்சிருக்கேன்னு..."

"சின்னக் கண்ணா.. அவர் முட்டைக் கண்ணுன்னு இல்ல சொல்கிறார்.."

"எவர்.. அவர்..?"

"அவர்தான்..."

"அட.. அட.. வெட்கத்தைப் பாரேன்.. ஏனாம்.. மேடம் அவரோட பெயரைச் சொல்ல மாட்டீங்களாக்கும்.."

"போ.. பவி..."

"போகவா.. போய் எல்லோரிடமும் இதைச் சொல்லி விடவா..?"

"பவி.. ப்ளீஸ்.."

"இப்போதுதான் அவரை என்னவோ நீதான் பெயர் வைத்ததைப் போல பிரபா.. பிரபான்னு ஏலம் போட்ட.. இப்ப என்னடான்னா.. அவர் பெயரைக்கூட சொல்ல மாட்டேங்கிற.. சரிதான்.."

அவர்கள் இருவரும் ரகசியத்தை பகிர்ந்து கொண்ட சொந்தத்துடன் சிரித்துக் கொண்டார்கள்...

"அதுதானே பார்த்தேன்.." என்றாள் பவித்ரா...

"என்ன பார்த்தாய்.. அன்றைக்கு உன் தினாவை இதே தோட்டத்தில் ஒளிந்து கொண்டு பார்த்தாயே.. அதைச் சொல்கிறாயா..?" என்று வாரினாள் மாலினி..

"அன்றைக்கு எனக்கு சந்தேகம்தான்..."

"என்னவாம்..."

"நான் தினாவைப் பார்த்ததை நீ பார்த்துவிட்டு ஒரு மாதிரி விழித்தாய்..."

"அடிப்பாவி.. ஒரு மாதிரின்னா அது எந்த மாதிரி.. அதை முதலில் சொல்லித் தொலை..."

"கையில் இருக்கும் பொம்மையை யாராவது பிடுங்கிக் கொண்டு போய் விடுவாங்களோன்னு தன்னோடு இறுக்கப் பிடிச்சுக்கிட்டு குழந்தை பார்க்குமே.. அந்தப் பார்வை பார்த்தாய்..."

மாலினிக்கு வெட்கமாகிவிட்டது.. அவள் நகம் பார்த்தாள்...

"நான் பெரியத்தானை சைட் அடிக்கிறேனோன்னு தானே நீ நினைத்து பயந்தாய்..?"

பவித்ரா விரலை ஆட்டிக் கொண்டே சிரித்தாள்..

"ஆமாம்.." அசடு வழிய கூறினாள் மாலினி..

"நான் தினா அத்தானைக் காட்டியதும் உன் முகத்தில் ஒரு வெளிச்ச வட்டம் வந்தது பாரு.. அப்பவே நான் யோசிச்சேன்.."

"என்ன யோசித்தாய்..?"

"என்னடா இது.. நானும் தினா அத்தானும் ஜோடி சேர்வதில் இந்தப் பொண்ணுக்கு இத்தனை சந்தோஷமான்னு.."

மீண்டும் இருவரும் பொங்கிச் சிரித்தனர்.. அதைக் கேட்டுக் கொண்டே கையில் காபி டிபன் தட்டுக்கள் கொண்ட டிரேயை ஏந்தி வந்த செந்தாமரை தானும் சிரித்தாள்...

வாயெல்லாம் பல்லாக அவள் சிரித்ததைக் கண்ட மாலினி வியப்புடன்..

"இப்ப.. நீ எதுக்கு இப்படிச் சிரிக்கிற செந்தாமரை.." என்று கேட்டாள்...

"நீங்க சொன்ன ஜோக்கைக் கேட்டுத்தான்.. ஹி.. ஹி.. ஹி.."

"இரு.. இரு.. இப்ப நான் ஜோக் சொன்னதை நீ கேட்டாயா..?"

"அப்போ நீங்க ஜோக்கு சொல்லலியா..?"

"ஊஹூம்.. உனக்கு என்னவோ ஆகிவிட்டது.. எதை வைச்சு நான் ஜோக்கடித்தேன்னு நீ நினைச்சே..?"

"வேற எதுக்கு பவித்ராம்மா அப்படி விழுந்து விழுந்து சிரிச்சாங்க..."

"ஏன் பவி.. உனக்கு காயம் கீயம் பட்டிருக்கா.."

"ஏன் அப்படிக் கேட்கிற..?"

"பாரு செந்தாரை.. இவளுக்கு காயம் எதுவும் படலையாம்..."

பவித்ராவும் செந்தாமரையும் மாலினி எதற்காக இதைச் சொல்கிறாள் என்று புரியாமல் விழிக்க.. மாலினியே அமைதியாக அதற்கு விளக்கம் வேறு சொன்னாள்..

"இப்ப செந்தாமரைதானே பவித்ரா விழுந்து விழுந்து சிரித்தாள்னு சொன்னா..."

"அதுக்கென்ன இப்ப.."

"இல்ல பவி.. நீ விழுந்ததில் ஏதும் காயம் பட்டிருக்கணுமே... ஒரு தடவை விழுந்தால் பரவாயில்லை.. நீ நிறைய தடவை விழுந்திருக்கிற போல இருக்கே..."

மாலினி இதை சிரிக்காமல் சொல்ல.. இப்போது செந்தாமரை விழுந்து விழுந்து சிரித்தாள்...

"அம்மா.. ஹா.. ஹா.. விழுந்து விழுந்து சிரிச்சா.. ஹி.. ஹி. அடி படுமா.. ஹோ.. ஹோ..."

"போதும் செந்தாமரை.. பல் சுளுக்கிக்கப் போகுது.. மற்ற சுளுக்குன்னாலாவது பொன்னி சுளுக்கெடுத்து விடும்னு நம்பி நீ காட்டலாம்.. பல்லு சுளுக்கிருச்சுன்னா பொன்னியை நம்பி நீ காட்ட முடியாது..."

"ஏன்ம்மா அப்படிச் சொல்கிறீங்க..."

"கிடைச்சது சான்ஸுன்னு சுளுக்கெடுத்து விடுகிற சாக்குல பொன்னி உன் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துவிட்டால் என்ன செய்வது..."

இப்போது செந்தாமரை வயிற்றைப் பிடித்துக் கொண்டு புல் தரையில் அமர்ந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்...

அவள் சிரிப்பதை ஆர்வமாக பார்த்துக் கொண்டே அங்கு வந்த சசிரேகா...

"என்ன செந்தாமரை இவ என்ன சொன்னா..?" என்று விசாரித்தாள்..

"சோக்கும்மா.. சோக்கு.." என்று சொல்லிவிட்டு செந்தாமரை சிரிக்க ஆரம்பித்தாள்..

"அது என்ன ஜோக்குன்னு சொல்லிவிட்டுத்தான் சிரியேன்.." என்று சசிரேகா விடாப்பிடியாக வினவ..

"அதை எப்படிம்மா நான் சொல்லுவேன்.." என்றாள் செந்தாமரை...

"அடிப்பாவி மாலினி.. நீ 'ஏ' ஜோக்கெல்லாம் அடிக்க ஆரம்பித்து விட்டாயா..?" என்று குண்டைத் தூக்கிப் போட்டாள் சசிரேகா...

பவித்ராவும் மாலினியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள..

" 'ஏ' சோக்குன்னா என்னாம்மா..? இத்தனை சோக்கையும் சொல்லிட்டு அதை மட்டும் என்கிட்ட சொல்லாம ஒளிச்சு வைக்கறீங்ளே.. இது நியாயமாம்மா..?" என்று நியாயம் கேட்டாள் செந்தாமரை..

"கேட்கிறாளில்ல.. நீயே இவகிட்ட.. 'ஏ' ஜோக்குன்னா என்னன்னு சொல்லு..." மாலினி சசிரேகாவை முறைத்தாள்...

"என் மேல ஏண்டி பாயறே.. அவதானே.. அதை எப்படி என் வாயாலே சொல்லுவேன்னு சொன்னா.." சசிரேகா தன்னிலை விளக்கம் சொன்னாள்..

"இது வேற இருக்கா.. அம்மாடி செந்தாமரை.. நீ ஏன் ஜோக்கை உன் வாயால சொல்ல முடியாதுன்னு சொன்ன..?"

"அதை நினைச்சாலே சிரிப்பு பொத்துக்கிட்டு வருது.. அதை வாயாலே சொல்லச் சொன்னா.. ஹா.. ஹா.."

செந்தாமரை மீண்டும் சிரிக்க ஆரம்பித்தாள்...

69

**என் சோகத்திலே என் நெஞ்சம்..**

**உன் மடிதேடி துடிப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி, செந்தாமரையின் பக்கம் கண்காட்டி சசிரேகாவை முறைத்தாள்.. சசிரேகாவின் முகத்தில் குடம் குடமாய் அசடு வழிந்தது...

"கேட்டுக்கிட்டியாடி.. என் பெரியப்பா மகளே.. இவளுக்கு ஏபிசிடியே தெரியாது.. இவகிட்ட போய் 'ஏ' ஜோக்கைப் பற்றிப் பேசுகிறாயே... உன்னை என்னான்னு சொல்லுறது.."

"அம்மா.. அம்மா.. எனக்கு ஏபிசிடி பத்தி தெரியலைங்கிறதுக்காக அந்த 'ஏ' சோக்கை சொல்லாம விட்டுராதீங்கம்மா.. என்கிட்டயும் சொல்லுங்கம்மா.." செந்தாமரை நச்சரிக்க ஆரம்பித்தாள்...

"இவ இப்படியே வீடு பூராவும் போய் சொல்லி என் மானத்தை வாங்கப் போறா.. செந்தாமரை உனக்கு இப்ப என்ன வேணும்..? 'ஏ' ஜோக்குதானே வேணும்..?"

"ஆமாம்மா.. ஆமா..."

"ஒரு ஆளுக்கு கண் பார்வையில ஏதோ பிரச்னையாம்.. அவன் கண் டாக்டர்கிட்ட போனானாம்.."

"உம்.."

"அந்த டாக்டர்.. போர்டுல மாட்டியிருக்கிற எழுத்தில, ஏபிசிடியை காண்பித்து... 'ஏ' யைத் தெரியுதான்னு கேட்டிருக்கிறார்.. அவன் தெரியலைன்னு சொல்லியிருக்கிறான்.. அந்த டாக்டர்.. அவன் கண்பார்வையில ஏதோ கோளாறுன்னு நினைச்சாராம்.."

"உம்..."

"அப்போ பார்த்து அவரோட பாக்கெட்டிலிருந்து ஒரு பத்து ரூபா தாள் தூரமா விழுந்துருச்சாம்... இவன் அந்த டாக்டர் பார்க்கலைன்னு நினைச்சு அதை லபக்கிக்கிறப் பார்த்தானாம்.. அந்த டாக்டருக்கு ஆச்சரியமாகப் போச்சாம்..."

"உம்.."

"ஏய்யா... உனக்கு கண் தெரியாதுன்னு நினைச்சேனே... அப்புறம் எதுக்கு 'ஏ' யைக் காட்டித் தெரியுதான்னு கேட்டால் தெரியலைன்னு சொன்னன்னு கேட்டாராம்.. அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா..?"

"என்ன சொன்னான்ம்மா..?"

செந்தாமரை ஆவலாகக் கேட்பதை பவித்ரா வியப்புடன் பார்த்தாள்.. காலோடு ஒட்டிக் கொண்டு சுற்றும் செல்லப் பிராணியைப் போல.. அவள் மாலினியோடு இழைந்ததைப் பார்க்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"எனக்கு ஏபிசிடி படிக்கத் தெரியாதுங்கன்னு சொன்னானாம்... இது எப்படியிருக்கு.. அவன் 'ஏ' யைப் படிக்கத் தெரியலைன்னு சொல்லியிருக்கான்.. டாக்டர் அவனுக்கு கண் தெரியலைன்னு முடிவு பண்ணிட்டார்.."

"ஆமாம்மா.. 'ஏ'யைத் தெரியலைன்னா.. ஹா.. ஹா.. கண்ணு தெரியலைன்னு ஹி.. ஹி.."

செந்தாமரை மீண்டும் சிரிக்க ஆரம்பிக்க.. மாலினியின் கெட்டிக்காரத்தனத்தை நினைத்து பவித்ராவும் சசிரேகாவும் சிரிக்க ஆரம்பித்தார்கள்...

ஒரு வழியாக எல்லோரும் சிரித்து முடிக்கவும்.. காலி காபி.. டிபன் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு செந்தாமரை தனக்குள் மாலினியின் ஜோக்குகளை நினைத்துச் சிரித்தவாறே வீட்டை நோக்கிப் போனாள்..

அவள் போவதற்காகவே காத்திருந்த அந்த மூன்று பேரும் அவளின் தலை மறைந்ததும் பொங்கிச் சிரித்தார்கள்..

"மாலினி.. நீ சொன்ன 'ஏ' ஜோக்.. ஏ ஒன்.." என்றாள் பவித்ரா...

"இவளை என்ன செய்தால் தேவலாம் பவித்ரா.. இப்படி 'ஏ' ஜோக்கைப் பற்றி அவகிட்ட சொல்லி என்னை மாட்டிவிடுகிறா பாரேன்.." சசிரேகாவைப் பற்றி புகார் சொன்னாள் மாலினி..

"நான் என்னத்தைடி கண்டேன்.. அவ அப்படிச் சொன்னால்.. நான் எப்படி அர்த்தம் எடுத்துக்கிறது..?" சசிரேகா சமாதானத்திற்கு வந்தாள்...

"ஒண்ணுதான் எனக்குப் புரியலை மாலினி..."

"என்னது..."

"நீயேன் அவளிடம் வேடிக்கையாக பேசின..?"

"அப்படிப் பேசலைன்னா அவ இங்கேயிருந்து நகரவே மாட்டா.. அவளுக்கு நான் எதையாவது சொல்லி சிரிக்க வைச்சாகணும்.. இது அவளுக்கு என் மேல இருக்கிற எதிர்பார்ப்பு..."

"அதுதான் ஏன்..?"

"ஏன்னா.. இந்த வீட்டு ஜீவன்கள் அந்த அளவுக்கு சிரிப்பை மறந்து போயிருக்காங்க.. பாரேன்.. ஒரு வேலைக்காரிக்குகூட சிரிப்பு தேவைப் படுகிறதுன்னா.. இந்த வீட்டு மனுஷங்களுக்கு சிரிப்பு தேவைப்படாதா..?"

"நிஜமாகவே இந்த வீட்டில் யாரும் சிரிக்க மாட்டாங்களா...?"

"எனக்குத் தெரியாது.. ஒரு வேளை.. உன் அருமை அக்கா ஸ்வேதா இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்னால்

சிரிச்சுக்கிட்டு இருந்தாங்களோ என்னவோ..."

இப்போது சசிரேகாவும் பவித்ராவும் மீண்டும் சிரிக்க ஆரம்பித்தார்கள்...

"இவ இப்படித்தான்.. சிரிச்சுச் சிரிச்சே நாம் நம்ம வயிற்றைப் புண்ணாக்கிக்கற மாதிரி பேசி வைப்பா.. இங்கே யாருடி சிரிப்புக்கு ஏங்கினது..?"

"தோடா.. இதை சசிரேகாவா சொல்லுறது..? கேளேன் பவி.. இந்த மேடம் இந்த வீட்டுக்கு சின்ன மருமகளா வருவதற்கு முன்னால்.. பேச ஆரம்பித்தால் அப்படியே மத்தாப்பூதான்..."

"நிஜமாகவா..."

"நானென்ன பொய்யா சொல்கிறேன்.. நிஜமாகத் தான்.. இப்பப் பாரேன்.. குத்துவிளக்கைப் போல நிதானமாகப் பார்த்து.. பேசாமடந்தை போல எப்படி இருக்கிறா.."

"ஏய்.. சும்மா இருடி.. இவ சொல்வதையெல்லாம் நீ நம்பாதே பவித்ரா..."

அவர்கள் மூவரும் அரட்டையடித்துக் கொண்டிருந்த போது வீட்டுப் பக்கம் பார்த்த மாலினி.. பவித்ராவிடம் கண்சிமிட்டினாள்...

"இப்பப் பாரேன்.. ஒரு மேஜிக் நடக்கப் போகுது.."

"என்ன மேஜிக்.."

"என் அருமை பெரியப்பா மகள்.. உன்னையும் என்னையும் அம்போன்னு விட்டுவிட்டு சொல்லிக்காம கூட வீட்டை நோக்கிப் பறக்கப் போகிறா.."

"எதை வைச்சு அப்படிச் சொல்கிற..?"

பவித்ரா வினவிக் கொண்டிருந்தபோதே.. அவர்கள் வீட்டுக் காம்பவுண்டிற்குள் கார் நுழையும் சத்தம் கேட்டது.. சசிரேகா அவசரமாக காரின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.. கருணாகரன் காரை விட்டு இறங்குவதைப் பார்த்ததும் அவசரமாக எழுந்து அவர்கள் இருவரையும் கண்டு கொள்ளாமல் கணவனை நோக்கி விரைந்தாள்..

"நான் சொல்லவில்லை.." பவித்ராவைப் பார்த்து சிரித்தாள் மாலினி...

"நீ எப்படித்தான் இப்படி இருக்கிறாயோ.. எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு மாலினி.." பவித்ரா.. மாலினியின் கைபிடித்துக் கொண்டாள்...

"பவித்ரா.."

ஸ்வேதா அழைக்கும் குரல் கேட்டதும்.. பவித்ரா கோபத்துடன் மாலினியிடம் முணுமுணுத்தாள்...

"இவள் ஏன் என்னைக் கூப்பிடுகிறாள்..?"

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்.. உன் அன்புச் சகோதரிகிட்டதான் அதை நீ கேட்கணும்.."

"அவளா அன்புச் சகோதரி.. சரியான வம்புச் சகோதரி.." பவித்ரா கோபத்துடன் எழுந்து ஸ்வேதாவிடம் போனாள்..

அவள் போனபின்.. அற்புதமான தனிமை மாலினியை சூழ்ந்து கொண்டது.. அவள் அமைதியாக கண்மூடி அந்தத் தனிமையை ரசித்தாள்..

"ஸோ.. உனக்கு 'ஏ' ஜோக் சொல்லக்கூடத் தெரியும்.." என்ற குரல் கேட்டதும்.. மனம் துள்ள கண்விழித்தாள்...

எதிரே பிரபாகரன் நின்று கொண்டிருந்தான்...

"ஒட்டுக் கேட்டீங்களா..?"

"ஊஹூம்.. மறைவாய் நின்று கேட்டேன்..."

"இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான்..."

"யாரு அப்படிச் சொன்னது..? இரண்டுக்குமே வேறு வேறு அர்த்தம்..."

"உங்க ஊர் நியாயமே தனிதான்.."

"ஏய்.. இது உன் ஊர் நியாயம்டி.. இன்னும் நீ சென்னைப் பொண்ணுங்கிற நினைப்பிலயே இருக்கயா..? நீ மார்த்தாண்டபுரத்து மகாராணிடி..."

பிரபாகரன் அவளருகே அமர்ந்து கொள்ள.. மாலினி அவசரமாய் சுற்றுமுற்றும் பார்த்தாள்.. இருள் போர்வையாய் அவர்களைச் சுற்றிக் கவிழ்ந்திருக்க.. பிரபாகரனின் கை சுவாதீனமாய் அவள் தோளின் மீது விழுந்தது.. மாலினியின் உடலி ஒருவித பரபரப்பு உற்பத்தியானது..

"யாரும் பார்க்கலை.." என்றான் அவன்..

"தி ஃபேமஸ் ஹிட்லர் பேசுகிற பேச்சைப் பாரேன்.." அவள் குரல் கிசுகிசுப்பாய் வெளிவந்தது...

"ஹிட்லரும் மனிதன்தானே.." அவன் அவளை தன் பக்கம் லேசாக இழுத்து அணைத்தான்..

"வெறும் மனிதனில்லை... இரும்பு மனிதன்.." அவன் பிடியிலிருந்து விடுபட முடியாமல் அவள் சொன்னாள்...

"அந்த இரும்பு மனிதனையும்.. இளக வைச்சிட்டியேடி.." அவன் மீசை அவளது காதோரமாக உராய்ந்தது..

அவள் இன்ப அவஸ்தையுடன் கண் மூடிக் கொண்டாள்...

"நீங்களா இளகறீங்க..? என்னை இளக்கிக்கிட்டு இருக்கறீங்க.." அவள் தோள் மீது தலைசாய்ந்து சொன்னாள்...

"மாலினி..."

அவன் தாள முடியாத தாபத்துடன் அவளை இறுக்கி அணைத்து மடியில் சரித்துக் கொண்டான்.. அவள் அவனது தொடுதலை விரும்பி ஏற்றுக்கொண்டாள்.. அவனது அத்து மீறலை அனுமதித்தாள்...

"ஐ லவ் யூடி கண்ணம்மா..."

காதோரமாக கிறக்கத்துடன் அவன் பேசியதைக் கேட்டாள் விழி மூடி மயங்கினாள்..

"இப்படி உன்னிடம் மயங்கிப் போவேன்னு நான் நினைத்துக்கூடப் பார்க்கலைடி.."

'நான் மட்டும் நினைத்தேனா..' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.. நினைத்ததை வாய் விட்டு சொல்ல முடியாமல் திணறினாள்.. அவன் அருகாமையில் அவளுக்கு பேச்சு வரவில்லை..

"பேசுடி..."

அவன் கொஞ்சினான்.. அவளை இறுக்கித் தழுவிக் கொண்டு காதோரமாக கிசுகிசுப்பாய் பேசினான்..

"இவ்வளவு நேரமும் வாயடிச்சியே.. அந்த வாய் இப்போ எங்கே போனது..?"

எங்கே போனது என்பதை அவளும் அறியவில்லை.. அவன் முன்னால் எல்லாம் மறந்து போய்.. தன் சுயத்தை இழந்து அவனுடன் கரைந்து போய்விடுவதை உணர்ந்து கொண்டாள் மாலினி...

பிரபாகரன்.. அவளது நெற்றியில் முத்தமிட்டான்.. அவளுக்குள் உணர்வின் அலைகள் பொங்கி எழுந்தன.. அவளது கன்னத்தில் அவன் இதழ் பதியும்போது அவளது உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வர அவள் போராடிக் கொண்டிருந்தாள்.. அவளது இதழ் தேடி அவன் குனிந்த போது தாளமுடியாத தவிப்புடன் அவனுடன் ஒன்றிப் போனாள்...

வெகுநேரம் கழித்துத்தான் அவளது இதழ்களை விடுவித்தான் பிரபாகரன்.. நீண்ட நேரமாக அவனது இதழ் கொடுத்த முத்தத்திலிருந்து விடுபட விரும்பாமல்.. அவள் சிக்குண்டிருந்தாள்..

"தாமரை கன்னங்கள்...

தேன் மலர் கிண்ணங்கள்..."

அவளது காதோரமாக அவன் பாடினான்... அவனது கரங்கள் அவள் மேலே பரவ.. அவள் அவனது கரம் விலக்கி மெதுவாக பதிலுக்குப் பாடினாள்...

"மாலையில் சந்தித்தேன்..

மையலில் சிந்தித்தேன்..

மங்கை நான் கன்னித்தேன்..

காதலன் தீண்டும் போது..

கைகளை மன்னித்தேன்.."

அவளது விலக்கலை உதாசீனப்படுத்தி.. அவனது கைகள் அவள் மேல் படர்ந்தன.. மாலினி அந்தக் கைகளை மன்னித்தாள்.. தன்னை அவனிடம் ஒப்புக்கொடுத்தாள்..

பிரபாகரனுக்கு அவளின் அந்த உடன்பாடு மிகவும் பிடித்திருந்தது.. அவனை விலக்காமல் தன்னை ஒப்புக் கொடுத்த அந்தக் காதல் பிடித்திருந்தது.. அவளின் உடல் மீது பரவிப் படர்ந்தவன்.. ஒரு எல்லையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிறு முத்தத்துடன் எழுந்து விட்டான்...

70

**உனக்காக காத்திருக்கும் காலம்கூட..**

**தேனைப் போல இனிப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

காதல்...

அதுதான் எவ்வளவு சக்திவாய்ந்தது.. பெற்று வளர்த்த தாய்.. தந்தை.. உடன் பிறந்து.. உடன் வளர்ந்தவர்களின் பாசம்.. கூடப் பழகும் தோழமை.. அத்தனையையும் ஒரு நொடியில் மறக்க வைக்கும் வல்லமை படைத்தது காதல்..

ரத்த சம்பந்தம் எதுவுமில்லாத யாரோ ஒரு மனிதன்.. எப்படி அவனுடைய காதலிக்கு அனைத்துமாக ஆகிப் போகிறான்

என்ற விந்தைக்கான விளக்கத்தை இதுவரை யாரும் சொல்லவில்லை...

மாலினி.. ஒரு கண்பார்வைகூட தேவையில்லாமல் தன்மேல் படிவதை விரும்பாதவள்..

அப்படிப்பட்டவள்.. திருமணமாகும் முன்னரே தன்னை பிரபாகரனிடம் ஒப்படைத்தாள்..

அது.. அவள் பிரபாகரனின் மேல் கொண்டுள்ள அளவற்ற காதலின் அடையாளம்..

நான் உன் உடைமை.. என் மனதும் உடலும் உனக்குச் சொந்தம்.. நீ தாராளமாக எடுத்துக்கொள்.. திருமணம் ஆனால்தான் நீ என் கணவன் என்று இல்லை..

எப்போது உன்னை மனமாரக் காதலிக்க ஆரம்பித்தேனோ அப்போதே நீ என் கணவன்தான்..

இதைத்தான் மாலினி சொல்லாமல் சொன்னாள்..

ஆனால்.. கோட்டையூர் ஜமீன்தாரான பிரபாகரன்.. நியாயத்திற்கு பெயர் பெற்றவன்...

அவன் மேல் கொண்டுள்ள காதலை தன்னை ஒப்படைத்து மாலினி நிரூபிக்கும்போது.. அவள் மேல் கொண்ட காதலை அவனும் நிரூபித்தாக வேண்டுமில்லையா..?

எனவே.. எல்லையைக் கடக்காமல் அவன் விலகினான்..

"என்மேல் உனக்குப் பயமில்லையாடி..?" அவள் கன்னத்தில் முத்தமிட்டு காதோரமாக கேட்டான்...

"எதுக்குப் பயப்படணும்..?"

"தாலி கட்டாமல் உன்னை ஆண்டுவிடுவேனோன்னு பயமில்லையா..?"

மாலினி அவனது மீசையின் இரு பக்கத்தையும் இருகைகளால் பிடித்து இழுத்தாள்..

"ஆண்பிள்ளை சிங்கம் பயமுறுத்துகிறாரு.. ஆண்டால் தான் என்ன..? உங்களுடைய சொத்தை நீங்க

எடுத்துக்கறீங்க.."

"மாலினி.."

அன்று இரவு.. வெகுநேரம் அவன் உறங்கவில்லை.. அவன் மனதில் மாலினி கூறிய வார்த்தைகள்தான் எதிரொலித்துக் கொண்டிருந்தன...

அவளுடைய காதல் தந்த இதமான மன சுகத்தை அனுபவித்தபடி மெதுவாக கண்ணயர்ந்தான் பிரபாகரன்..

காலையில்.. அழைப்புமணியொலித்ததும் மாலினி கண் விழித்து எழுந்து கதவைத் திறந்தாள்.. பொன்னி காபியோடு உள்ளே வந்தாள்...

"உங்களுக்கு ஏம்மா இந்த ஓரவஞ்சனை.." என்று கேட்டாள்..

"ஓரவஞ்சனையா.. இது என்ன புதுக்கதையா இருக்கு..?" மாலினி காபியை வாங்கிக் கொண்டாள்...

"நேத்து செந்தாமரைக்கு மட்டும் 'ஏ' ஜோக் சொல்லியிருக்கீங்க.. எனக்குச் சொல்லலை.."

பொன்னி படித்த புகாரைக் கேட்டதும்.. காபி குடித்துக் கொண்டிருந்த மாலினிக்கு புரையேறிவிட்டது...

"'ஏ' ஜோக்கா.. நானா.. உன்கிட்டேயும் சொல்லிட்டாளா..?"

"இந்த ஊருக்கே சொல்லிட்டா..."

"கிழிஞ்சது போ..."

மாலினி காலி காபித் தம்ளரைக் கொடுத்துவிட்டு தலைமேல் கை வைத்துக் கொண்டாள்...

பொன்னி அறையை விட்டு வெளியேறாமல் மாலினி முகம் பார்த்துக் கொண்டே நிற்கவும்...

"என்ன..?" என்று கேட்டாள்...

"எனக்கு ஒரு 'ஏ' ஜோக்.." என்று பொன்னி இழுக்கவும்.. நொந்துபோனவளாய் ஒரு பார்வை வைத்தாள் மாலினி...

"என்னாம்மா..?" என்று திகைத்துப் போய் கேட்டாள் பொன்னி..

"செந்தாமரையைப் பத்தி நான் சொல்லியா உனக்குத் தெரியணும் பொன்னி..?"

"அதனால்தானே ஆத்திரம் ஆத்திரமாய் வருது..."

"ஏன்.. என்ன ஆச்சு..?"

"அவளுக்கு புரிகிற ஜோக்கு எனக்குப் புரியாதா.. என்னைவிட அவ விவரமான ஆளா..?"

"அடக்கடவுளே.. பொன்னி.. செந்தாமரைகிட்ட நான் சொன்ன 'ஏ' ஜோக்கையும், அதை எதுக்குச் சொன்னேன்கிற விவரத்தையும் உனக்கு நான் சொல்கிறேன் கேளு..."

சசிரேகாவிடம் செந்தாமரை சொன்னதையும் அதைக் கேட்டுவிட்டு சசிரேகா 'ஏ' ஜோக்கைப் பற்றிச் சொன்னதையும் சொன்னவள்.. தான் சொன்ன ஜோக்கையும் சொன்னாள்...

"இதைப் போயா 'ஏ' ஜோக்குன்னு ஊரு பூரா அவ சொல்லிக்கிட்டு அலையறா..?" பொன்னி மோவாயில் கையை வைத்து ஆச்சரியப்பட்டாள்..

"ஆமாம்.." தலையில் கை வைத்தாள் மாலினி...

"அதுதானே பார்த்தேன்.. ஆயிரம் 'ஏ' ஜோக்கு நான் சொல்வேனே.. என்னை பீட் அடிக்கிறதைப் போல இந்த மாலினியம்மா அப்படி என்ன ஜோக்கைச் சொல்லிப்புட்டாங்கன்னு இல்ல நான் யோசிச்சிக்கிட்டு இருந்தேன்.." அசால்ட்டாக சொல்லிவிட்டு பொன்னி போய்விட.. இப்போது மோவாயில் கை வைப்பது மாலினியின் வேலையானது...

முகம் கழுவி.. உடைகளைச் சரிசெய்து கொண்டு காலை நேர வாக்கிங்கிற்காக அறையை விட்டு வெளியே வந்தாள்.. முதல் நாள் நினைவில் தோட்டத்திற்குப் போவதைத்

தவிர்த்தவள்.. பிரபாகரனை காரில் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் மொட்டைமாடிக்குப் போனாள்..

இளவெயில் ஆரம்பமாகியிருந்தது.. நீண்டு பரந்து விரிந்திருந்த அந்த அரண்மனை போன்ற மாளிகையின் மொட்டைமாடி மிகப் பெரிய மைதானங்கள் பலவற்றை சேர்த்து இணைத்தது போல இருந்தது...

மாலினி.. மெலிதாகப் பாடியபடி மொட்டைமாடியில் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள்..

"அந்த மாப்பிள்ளை...

காதலிச்சான்.. கையைப் பிடிச்சான்..

எந்தன் கையைப் பிடிச்சான்..

அங்கே முன்னால் நின்றான்..

பின்னால் சென்றேன்..

வா.. வா.. என்றானே..

அருகினில்.. வா.. வா.. என்றானே..."

காலை நேரத்து புத்துணர்வுடன்.. மனதில் முதல் நாள் இரவின் கிறங்கடிக்கும் நினைவுகளுடன் உல்லாசமாக பாடியபடி நடை பயின்றாள் அவள்..

அவள் மேல் ஒரு ரோஜாப் பூ வந்து விழுந்தது.. அதைக் கையில் எடுத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள்.. அவள் பின்னாலிருந்து ஒரு கரம் அவள் கண்ணைப் பொத்தியது...

"என்னை விட்டால் யாருமில்லை...

கண்மணியே உன் கையணைக்க..

உன்னை விட்டால் வேறொருத்தி..

என்னமில்லை நான் காதலிக்க.."

பாடலைக் கேட்டதும்..

"பிரபா.." என்றாள் மாலினி ஆனந்தமாக...

"உன் பிரபாதாண்டி..." அவன் கரம் அவளைத் திருப்பி அணைத்துக் கொண்டது...

அவனது முதுகோடு தன் கைகளைப் படரவிட்டுப் பிணைத்துக் கொண்டவள்.. காதலுடன் அவன் முகம் பார்த்தாள்...

"தேங்க் யூ மை டியர்..."

"எதுக்கு இந்த தேங்க்ஸ்...?"

"என்னதான் நாள் முழுவதும் கொஞ்சிக் குலாவினாலும்.. விடிந்தவுடன் உங்களைப் பார்க்கணும்னு மனசுக்குள் பரபரப்பாகிறது..."

"அப்ப எதுக்கு அம்மிணி மொட்டை மாடிக்கு வந்தீங்களாம்.. நம்ம மீட்டிங் ஸ்பாட் காலை நேரத்தில் தோட்டம்தானே..."

"இது உங்களுக்குத் தெரிந்ததைப் போல உங்க தம்பிக்கும் தெரிந்து தொலைத்திருக்கிறதே..."

அந்த நேரத்தில் பிரபாகரனின் மனது கொண்ட கர்வத்தை மாலினி அறியாள்.. அவன் மனதை மயிலிறகைப் போல வருடிச் சென்றன மாலினியின் வார்த்தைகள்..

அவன் அதிகாலையிலேயே எழுந்து விட்டான்.. தோட்டத்துப் பக்கம் போனால் அங்கே தினகரன்.. ரோஜாச் செடிப் பக்கம் நின்றவாறு மாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

'இவன் மாலினிக்காக காத்திருக்கிறானோ..' பிரபாகரனின் மனம் துணுக்குற்றது...

அங்கே நிற்கப் பிடிக்காமல் திரும்பியவனின் பார்வை அருகிலிருந்த ரோஜாச் செடியின் மேல் விழுந்தது..

'நேற்றே ரோஜாவின் மேல் ஆசைப்பட்டாள்...'

மாலினியின் நினைவுடன் ஒரு பூவைப் பறித்துக் கொண்டு மாடியேறினான்.. அவன் மாடி ஹாலில் பிரவேசித்தபோது மாலினி மொட்டைமாடிக்கு படியேறிக் கொண்டிருந்தாள்..

'ஏன் இவள் தோட்டத்துக்கு வரவில்லை..?' என்று யோசித்தவன்.. 'ஒரு வேளை தினாவை அவாய்ட் பண்ண நினைக்கிறாளோ..' என்ற நினைவு வரவும், கண்கள் மின்ன அவளைப் பின்தொடர்ந்தான்...

அவன் கணிப்பு சரியாகவே இருந்ததை மாலினி தன் வாயால் சொல்லவும்.. அவனுடைய மனம் மலர்ந்து விட்டது..

"ஐயோ.. என்ன இது பிரபா.. எலும்பு நொறுங்கி விட்டது.."

அவனின் இறுக்கமான அணைப்பிலிருந்து விடுபட முயலாமல் சிணுங்கிக் கொண்டிருந்தாள் மாலினி...

ஒரு வழியாக வேகம் தணிந்து அவளை விடுவித்த பிரபாகரன்.. குனிந்து தரையில் கிடந்த ரோஜாப் பூவை எடுத்து அவள் கையில் கொடுத்தான்..

"என்னதிது..?"

"பார்த்தால் தெரியலையா.. ரோஜாப் பூ.."

"இது எனக்கா..?"

"இல்லை.. தெருவில் போகிறவளுக்காக கொண்டு வந்தேன்.."

"கோபமா பிரபா..?"

"கொஞ்சாதேடி.. பூவை வைத்துக்க.. நேற்றே ஆசைப்பட்டாயே.."

"அது அத்தை கொடுத்து விட்ட பூ..."

"இது அத்தை மகன் கொடுக்கிற பூ..."

"ஹ.. பேச்சிலே ஒன்றும் குறைச்சல் இல்லை..."

"வேற எதில் குறைச்சல்.. சொல்லு சரிபண்ணிரலாம்.."

"போதுமே.. திரும்பவும் ஆரம்பிக்க வேண்டாம்.."

"எதை..?"

"நான் சொல்ல மாட்டேன்..."

அவள் முகம் சிவக்க ஓடிவிட்டாள்.. மனசெல்லாம் நிறைந்திருக்க.. படியிறங்கினான் பிரபாகரன்...

பால்கனிப் பக்கம் வந்த பவித்ரா.. தோட்டத்தில் நின்றிருந்த தினகரனைப் பார்த்து விட்டாள்.. அவனுடன் பேசும் ஆவல் மனதில் எழும்ப.. தோட்டத்துக்குப் போக வேகமாய் படியிறங்கினாள்..

"எதுக்கு இப்படி ஓடி வருகிற பவித்ரா.. கா˜லக் காபிக்கா..?"

கையில் காபியோடு நின்றிருந்த ஸ்வேதா வினவினாள்..

"சும்மாதான்.."

பூனை போல் மெதுவாக நடந்த பவித்ரா.. ஸ்வேதாவின் பார்வை வேறு பக்கம் திரும்பிய போது.. வாசலுக்கு நழுவினாள்...

அவள் அவசரமாக தோட்டத்துக்குப் போன போது.. தினகரன் மாடி பால்கனியை பார்த்துக் கொண்டிருந்தான்..

'யாரைப் பார்க்கிறான்..' பவித்ராவும் அண்ணாந்து பார்த்தாள்...

அங்கே மாலினி நின்றிருக்கவும் பவித்ராவின் முகம் மலர்ந்தது.. அவள் மாலினியைப் பார்த்துக் கையாட்டினாள்.. பதிலுக்கு மாலினி சிரித்தபடி கையாட்ட.. அதைப் பார்த்த தினகரன்.. தேன் குடித்த நரியைப் போல் ஆகிவிட்டான்...

அவன் இருந்த இடத்திலிருந்து எம்பி உற்சாகமாக அவன் கையாட்டியதைக் கண்டு மாலினியும் பவித்ராவும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர்...

71

**நீ விட்டுச் சென்ற இடத்தை..**

**தொட்டுச் செல்லும் என் மனத்தை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பவித்ராவின் முகம் அதிர்ச்சியைக் காட்டியது.. அதற்கு குறையாத அதிர்ச்சியை மாலினியின் முகம் பிரதிபலித்ததை அவளால் பார்க்க முடிந்தது...

மாலினி சட்டென்று பால்கனியை விட்டு அகன்று விட்டாள்..

திரும்பி விடலாமா என்ற யோசனையுடன் பவித்ரா நின்றிருந்தபோது உல்லாசமாக விசிலடித்தபடி தினகரன் திரும்பினான்.. அது வரை அவள் வருவதை உணராமல் நின்றிருந்தவன்.. அப்போதுதான் அவளைப் பார்த்தவனாய்..

"ஓ.. பவித்ரா.. காலையில் தோட்டத்துப் பக்கம்.. வந்திருக்கிறாயே.. காற்று வாங்க வந்தாயா..."

'இல்லை.. நீ கையாட்டுவதைப் பார்க்க வந்தேன்..'

எரிச்சலுடன்.. நீச்சல்குளத்தைப் பார்த்தாள் பவித்ரா.. அவளுக்கு ஏன் வந்தோம் என்று இருந்தது...

'நான் உன்னை சைட் அடிக்க வந்தால்.. நீ மாலினியை சைட் அடிக்கிறாயா...'

அவள் மனதிற்குள் பொருமிக் கொண்டிருந்ததை உணராதவனாக தினகரன் தன் பிரத்தியேக மயக்கும் புன்னகையை உதிர்த்தான்..

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லாம.. என்ன யோசனையில் இருக்கிற பவித்ரா..?"

"நீங்க எதுக்கு வந்தீங்களோ.. நானும் அதுக்குத்தான் வந்தேன் அத்தான்.."

பவித்ரா இரு பொருள்படப் பேசுவதை உணராத வனாக பலமாக சிரித்தான் தினகரன்...

"இதைப் பாருடா.. என் மாமன் மகள் வாய் திறந்து போட்டுத் தாக்குவதை.. இத்தனை நாளாய் உன்னை ஊமையினுல்ல நினைச்சுக்கிட்டு இருந்தேன்..."

அந்த கேலிப் பேச்சில் மனம் குளிர்ந்து போனாள் பவித்ரா.. சற்று முன் தினகரன், மாலினியைப் பார்த்துக் கையாட்டியதை மறந்தே விட்டாள்...

"போங்க அத்தான்..."

அவள் முகம் வெட்கத்தில் சிவக்க.. மாலினியை மறந்து அவளது நாணத்தை ரசிக்க ஆரம்பித்தான் தினகரன்...

"இது என் வீடு நினைவிருக்கிறதா..?"

"அதுக்கு என்னவாம்..?"

"என்னைப் போங்க அத்தான்னு சொன்னால்.. எங்கே போகச் சொல்லுகிற..?"

"இப்படிக்கூட நீங்க பேசுவீங்களா..?"

"நான் எப்படியும் பேசுவேன்.. என்ன ஒண்ணு.. நீ அதை இப்போதுதான் கேட்கிறாய்.."

"யார் சொன்னது..?"

"ஏன்.. நான்தான் சொல்கிறேன்.."

"அதுதான் இல்லை..."

"ஏய்ய்.. இதுக்கு முன்னாலே என் முன்னால் வந்து நிற்கக்கூட அந்தப் பயம் பயப்படுவாய்.. இந்தத் தடவை தான் தைரியமாக என் முன்னால் நின்று என் முகம் பார்த்து நாலு வார்த்தைகள் பேசுகிறாய்.. ஆமாம்.. எங்கேயிருந்து உனக்கு இந்த அளவுக்கு தைரியம் வந்தது..?"

"ம்ம்.. எல்லாம் கருங்கல்லில் இருந்து வந்ததுதான்.. புதிதாய் ஒன்றும் வந்து விடவில்லை..."

"அடேங்கப்பா.. கருங்கல்காரங்க அவ்வளவு தைரிய சாலிகளாக்கும்..?"

"பின்னே இல்லையா.. உங்களுக்கு சந்தேகமிருந்தால்.. அத்தையிடம் கேட்டுவிடலாமா..?"

"அது எதுக்கு..?"

"என் அத்தையும்.. எங்க வீட்டில் பிறந்தவங்க தானே.."

"அம்மாடியோவ்.. உன்னை என்னமோன்னு நினைத்தேன்.. நீ இந்த அளவுக்கு விவரமான ஆளா..?"

"என்னன்னு நினைத்தீங்களாம்.."

"சொன்னால் அடிக்க வரமாட்டாயே..."

"அந்த அளவுக்கு நீங்க பயப்படுகிற ஆளாக்கும்..? யார்கிட்ட பில்ட் அப் காட்டுகிறீங்க.. என்னன்னு சொல்லுங்க..."

"பச்சைக் குழந்தைன்னு நினைச்சேன்.."

'அமுல் பேபின்னு மாலினி சொன்னதை... இவனும் சொல்கிறான்..' பவித்ரா புன்னகைத்தாள்.. அவளது முகத்திற்கு அழகு சேர்த்த அந்தச் சிரிப்பை ஆச்சரியத்துடன் பார்த்தான் தினகரன்..

"ஏய்.. நீ இப்ப எப்படியிருக்கிற தெரியுமா..?"

"எப்படி..?"

"இந்த பூச்செடிகளின் மத்தியில் சிரிக்கிற உன் முகமும் ஒரு பூவைப் போல இருக்கு பவித்ரா..."

அவன் இயல்பாக அருகிலிருந்த ரோஜாச் செடியில் ஒரு பூவைப் பறித்து.. அவள் முகத்துக்கு அருகே வைத்துப் பார்த்தான்.. அவனது விரல்.. அவளது கன்னம் தீண்ட.. பவித்ரா சொக்கிப் போனாள்...

"அச்சு அசல் பூவேதான்.. கொஞ்சம்கூட வித்தியாச மில்லை..."

அவன் லேசாக அவளது கன்னத்தில் தட்டிவிட்டு.. அந்தப் பூவை அவளிடமே நீட்டினான்...

விழி விரிய அதை வாங்கிக் கொண்டாள் பவித்ரா.. வீட்டை நோக்கிப் போய்விட்டான் தினகரன்..

அப்படியே நீச்சல்குளத்தின் படிகளில் அமர்ந்து விட்டாள் அவள்...

நடந்த நிகழ்வை திரும்பத் திரும்ப அசை போட்டது அவள் மனம்.. அவன் விரல் பட்ட கன்னத்தை அவள் விரல் வருடிக் கொடுத்தது...

"பூக்கள் பூக்கும் தருணம் - ஆருயிரே..

பார்த்த தாரும் இல்லையே..

புலரும் காலைப்பொழுதை -முழுமதியும்

பிரிந்து போவதில்லையே..

நேற்று முதல் நேரம் போகவில்லையே-உனதருகே

நேரம் போதவில்லையே..

எதுவும் பேசவில்லையே - இன்று ஏனோ

எதுவும் தோன்றவில்லையே..

இரவும் விடியவில்லையே- அது விடிந்தால்

பகலும் முடியவில்லையே..."

முழங்கால்களில் முகம் புதைத்து.. பூவைப் பார்த்த வாறு பாடிக் கொண்டிருந்தவளின் அருகே வந்து ஸ்வேதா நின்றாள்...

நீச்சல்குளத்தின் நீரின் மேற்பரப்பில் பிரதிபலித்த அவளின் உருவத்தைக் கண்டதும் ஸ்விட்ச் போட்டதைப் போல பாடுவதை நிறுத்திக் கொண்டாள் பவித்ரா...

"ஏன் பாட்டை நிறுத்திவிட்டாய் பவித்ரா.. பாடு.."

நாடக பாணியில் ஸ்வேதா பேச.. பவித்ரா எரிச்சலுடன் எழுந்து கொள்ளப் போனாள்...

"ம்.. ம்.. ம்.. ஏன் இப்ப எழுந்துக்கிற.. உட்காரு..."

பவித்ராவின் தோளைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்த ஸ்வேதா.. தானும் அருகே அமர்ந்து கொண்டாள்..

"பாட்டெல்லாம் பாடற.. பூவை வேற வச்சிருக்க.. ம்.. தூள் பரத்தறியே பவி.. என்ன.. எல்லாம் உன் அம்மா கொடுத்த டிரெயினிங்கா..."

"ஸ்வேதா.. ஒழுங்காகப் பேசு.. என்னைப் பேசினால் பொறுத்துக்குவேன்.. என் அம்மாவை இழுத்தால் சும்மா விட மாட்டேன்.."

"சும்மா விடாமல் என்னடி செய்வாய்..? பெரிசா பூச்சாண்டி காட்ட வந்துட்டா.."

"வேண்டாம் ஸ்வேதா.. என் கோபத்தை கிளறாதே.."

"கிளறினால் ராட்சஸி ஆகிவிடுவாயா..?"

"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்..."

"எதுக்கு இத்தனை ஆமாம் போடுகிற.. ராட்ஸசி ஆகித்தான் பாரேன்.. எனக்கும் அதுதான் ஆசை.. நீ பெரிய அமைதியின் சிகரம்.. குடும்ப குத்துவிளக்குன்னு நினைச்சுக்கிட்டு இருக்கிற அத்தையம்மாளுக்கு அப்போதுதானே உன் சுயரூபம் தெரியும்..."

"ஓ.. உனக்கு அப்படி ஒரு ஆசையா..?"

"இருக்காதா.. இத்தனை வருஷமாய் இதுகளுக்கு முன்னாடி.. பவ்யமாய் நடிக்க என்ன பாடுபட்டிருப்பேன்.. அதையெல்லாம் கண்டுக்காமல் உன்னைக் கொண்டாடுதுகளே.. இதுகளை என்ன செய்தால் தகும்..?"

"இப்படி நினைப்பை மனதில் வைத்துக்கிட்டு வெளிவேஷம் போட்டால்.. இப்படித்தான் ஆகும்..."

ஸ்வேதாவிற்கு 'சுருக்' கென்று தைத்தது.. எவ்வளவு திமிரும் தெனாவெட்டும் இருந்தால் இந்த பவித்ரா இப்படிப்பட்ட பேச்சுக்களை தைரியமாக அவள் முகத்தைப் பார்த்துப் பேசுவாள்...

'இவளை சும்மா விடக்கூடாதே...'

ஸ்வேதாவின் பார்வை பவித்ராவின் கையிலிருந்த பூவின் மேல் படிந்தது..

அவள் பவித்ராவைப் பின்பற்றி தோட்டத்திற்கு வந்து.. நடந்த அத்தனை நாடகங்களையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்...

"வெளிவேஷத்தைப் பத்தி நீ சொல்கிறாயா..?"

"எனக்கு வேஷம் போடத் தெரியாது..."

"அதைச் சொல்லு.. ஒப்புக்கொள்கிறேன்.. ஆனால்.. வேஷம் போடுகிறவங்களை கண்டுபிடிக்க உனக்குத் தெரியுமா..?"

பவித்ரா துணுக்குற்றாள்..

"நீ என்ன சொல்கிற..?"

"மாலினியின் வேஷமும் தினகரனின் வேஷமும் உனக்குத் தெரியுமா..? உன்னால் அதைக் கண்டுபிடிக்க முடிந்ததா..?"

"தேவையில்லாமல் பேசாதே ஸ்வேதா.."

"எல்லாம் தேவையோடுதான் பேசுகிறேன்.."

"உனக்கு இப்ப என்ன வேணும்..?"

"உன் கையில் இருக்கிற பூ வேணும்னு நான் சொன்னால் உடனே கொடுத்து விடுவயா..?"

பவித்ராவின் கை.. அனிச்சையாய் பூவை மறைத்தது...

"ஒளிச்சு வைச்சிருக்கற போல.. ஏன் பவி.. அது தினகரன் கொடுத்த பூ என்பதாலா..?"

'இவள் பார்த்திருக்கிறாள்..' பவித்ராவின் முகம் சிவந்தது.. அதைக் கடுமையாகக் பார்த்தாள் ஸ்வேதா..

"ரொம்பத்தான் வெட்கப்பட்டு மகிழ்ந்து போகாதே.. தினகரன் உனக்கு பூ கொடுத்ததையும் நான் பார்த்தேன்.. அதுக்கு முன்னால் மாலினியைப் பார்த்து கையை ஆட்டியதையும் நான் பார்த்தேன்..."

சிறகடித்து பறந்துகொண்டிருந்த பவித்ராவின் காதல் சிறகுகளை இரக்கமில்லாமல் வெட்டிக் கீழே தள்ளினாள் ஸ்வேதா..

குற்றுயிரும் குலையுயிருமாக விழுந்த பவித்ராவின் காதல் துடித்துப் போனது...

"ஸ்வேதா..."

"இதற்கு அலறினாள் எப்படி? அதுக்கு முன்னால்.. மாலினி, தினகரனைப் பார்த்து கையாட்டியதையும் நான் பார்த்தேன்..."

"அடிப்பாவி.. மாலினி.. என்னைப் பார்த்து கையாட்டினாள்..."

"அது உன் நினைவு.. இந்தத் தினகரனும் சரி.. மாலினியும் சரி.. இரண்டு பேருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்..."

"என்ன உளறுகிறாய்..."

"நான் பேசுவது இப்போது உனக்கு உளறலாகத்தான் இருக்கும்.. போகப் போக அதை நீ புரிந்து கொள்வாய்..."

"நான் எல்லோரையும் புரிந்துதான் வைத்திருக்கிறேன்.. உன்னையும் தெரியும்.. மாலினியையும் எனக்குத் தெரியும்.."

"இப்பக்கூட தினகரனையும் தெரியும்னு உன் வாய்சொல்ல மாட்டேங்குதே..."

பவித்ராவின் வாய் அடைத்துப்போனது.. ஏளனப் பார்வையுடன் ஸ்வேதா தொடர்ந்து பேசினாள்...

"தினகரனால் பெண்களை சைட் அடிக்காமல் இருக்க முடியாது பவித்ரா.. மாலினியிடம் கையாட்டிய அடுத்த

நிமிஷமே உன்னிடம் பூவைக் கொடுக்க அவனால் மட்டுமே முடியும்.."

"அவரை.. அவன் இவன்னு சொல்லாதே..."

"அது என் இஷ்டம்.. அதைப் போல பிரபாகரனைக் காதலிக்கிற கையோடு தினகரனையும் கவிழ்க்கப் பார்ப்பது மாலினிக்கு ரொம்ப ரொம்ப இஷ்டம்.."

"ஸ்வேதா..."

பவித்ராவின் மனம் அதிர்ந்து மாலினியைப் போயா இவள் இப்படிச் சொல்கிறாள்..?

"சீச்சீ.. என்ன பேச்சுப் பேசுகிற ஸ்வேதா.. இது கொஞ்சம்கூட நல்லா இல்லை.."

"நல்லா இல்லைதான்.. அது எனக்குத் தெரியுது.. உனக்கும் தெரியுது.. மாலினிக்கும் தினகரனுக்கும் தெரியலையே.. நான் தெரியாமல்தான் கேட்கிறேன் பவித்ரா.. அது எப்படி தினகரன் தோட்டத்தில் நிற்கும் நேரம் பார்த்து மாலினி பால்கனிக்கு வந்து நிற்கிறா..?"

பவித்ராவின் முகம் இருண்டது.. இரண்டு நாள்களுக்கு முன்னால் மாடி ஹாலில் தினகரனுடன் தனிமையில் பவித்ரா நின்று பேசிக் கொண்டிருந்தபோது.. மாலினி வந்து குறுக்கிட்டுப் பேசியது அவளுக்கு இப்போது நினைவுக்கு வந்தது..

## 72

**நீரோடை போலிருந்த என் மனது...**

**நின்வரவால் சலனப்பட்டு.. சுழல்வதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

காதல்.. யாரையும் சிநேகிக்க வைக்கும்.. அதுவே யாரையும் சந்தேகிக்கவும் வைக்கும்...

கைப்பொருளை காப்பது போல் காதலை காக்கின்ற குழந்தை மனம் காதல் மனம்...

எந்த நேரத்தில் யார் வந்து பறித்துக் கொண்டு போவார்களோ என்று பயக்கும் மனம் காதல் மனம்...

இந்தக் காதலுக்கு ஆட்பட்ட பவித்ராவுக்கும் இந்த உணர்வுகள் இருந்தன.. அவள் மனம் சஞ்சலப்பட்டது.. தான் அருகிலிருக்கும்போது மாலினியின் மீது தினகரனின் பார்வை தாவுவதை அவள் அறிந்துதான் இருந்தாள்...

அதனையும் தாண்டி அவன் வேண்டும் என்று அவள் மனம் அடம்பிடித்தது.. அதனாலேயே மாலினியைப் பார்த்துக் கையாட்டிய தினகரனின் செய்கையை அவள் மன்னித்தாள்..

ஆனால், மாலினி..?

அவள் மனம் தினகரனின் பக்கம் திரும்பி விட்டால் பவித்ராவின் கதி என்ன ஆவது..?

"அவள்தான் பெரிய அத்தானைக் காதலிக்கிறாளே பவித்ரா.." தன்னையறியாமல் முணுமுணுத்தாள்..

அதைக் கேட்ட ஸ்வேதாவின் முகம் கொடூரமாக மாறியது..

'ஆமாடி.. நான் பூதம் போல இந்த இரண்டு பேரையும் காவல் காத்து வைப்பேன்.. நீங்க இரண்டு பேரும் கந்தர்வ கன்னிகள் போல வந்து லவட்டிக்கிட்டுப் போவீங்க.. அதை நான் வாயில் விரலை வைத்துக் கொண்டு வேடிக்கை பார்பேன். நினைப்புத்தாண்டி உங்களுக்கு...'

"பெரிய அத்தானை அவள் காதலிக்கிறாள்.. ஆனால், உன் தினா அத்தான் அவளை நோட்டம் விடுகிறானே.."

"மாலினி அதை அலெவ் பண்ணணுமே..."

"பண்ணாமலா இவன் பார்வை போகும் திசையெல் லாம் வந்து நின்று தொலைக்கிறாள்..?"

"இருக்காது ஸ்வேதா.. அவள் யதார்த்தமாக வந்து நின்றிருப்பாள்.. நாம் யாரையும் சட்டென்று சந்தேகப்பட்டு விடக்கூடாது..."

இந்த இடத்தில்தான் பவித்ரா தவறு செய்துவிட்டாள்... இருக்காது என்று நிச்சயமாய் நம்புகிறவள்.. அதை வாய்விட்டுச் சொல்ல மாட்டாள்...

அந்த நிகழ்விலேயே அவள் மனதில் சஞ்சலம் இருப்பதை ஸ்வேதாவிற்கு உணர்த்தி விட்டாள்...

அடுத்து.. 'நாம்..' என்று தன்னையுமறியாமல் ஸ்வேதாவுடன் தன்னைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டாள்..

இந்த இரண்டையுமே பவித்ரா உணரவில்லை.. ஆனால், சாகஸமே வடிவான ஸ்வேதா உணர்ந்து கொண்டாள்...

'தூண்டிலில் மீன் மாட்டிவிட்டது..' அவள் புன்னகைத்துக் கொண்டாள்...

"அவ யதார்த்தமாக வந்து நின்னாளோ.. இல்லை பதார்த்தமாக வந்து நின்னாளோ.. அது இனி உன் கவலை. நான் சொல்ல வந்ததை சொல்லிட்டேன்.. இனி உன் காதலைக் காப்பாற்றிக் கொள்வது உன் பாடு.."

"பெரியத்தானுக்கு இதெல்லாம் பிடிக்காதே..."

பவித்ரா யோசனையுடன் கூறினாள்.. பிடி கிடைத்து விட்ட சந்தோஷத்தில் ஸ்வேதா மனதிற்குள் மகிழ்ந்து போய்...

'எங்கேயோ போயிட்ட ஸ்வேதா நீ...' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள்...

அது எப்படி.. அவள் கோட்டைப் போட்டு வைத்தால் அது தானாக ரோடாக மாறுகிறது..?

"பிடிக்காதுதான்.. நம்ம பெரியத்தானுக்கு இப்படிப் பட்ட கீழ்த்தரமான வேலைகள் பிடிக்காதுதான்.. ஆனால், இதை அவருக்கு யார் சொல்லுவா..?"

"அதெப்படி.. அவருக்குத் தெரியாமல் போகும்..?"

"எப்படித் தெரியும் ஸ்வேதா.. உன்னையும் என்னையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு தினகரன், மாலினியை சைட் அடிப்பான்.. அவனோட பெரியண்ணனை பக்கத்தில் வைத்துக்கிட்டு அடிப்பானா..?"

'அதுதானே.. அது முடியாதே...' நகத்தைக் கடிக்க ஆரம்பித்தாள் பவித்ரா...

"இதுக்கே நகத்தைச் சாப்பிட்டுவிட்டால் எப்படி..? மிச்சத்¡யும் கேட்டு விரலைச் சாப்பிடப் போகிற.."

"நீ சொல்லு..."

எப்போதுமே ஸ்வேதா பேசுவதைக் காதில் போட்டுக் கொள்ளாத பவித்ரா அன்று அவள் வாய்மொழியைக் கேட்கத் துடிப்பதிலிருந்து அவள் தன் வழிக்கு வந்து விட்டதை உணர்ந்து கொண்டாள் ஸ்வேதா...

"அதே போல்தான் மாலினியும்.. அவரைப் பார்த்தால் உருகிவழிவாள்.. அவர் அந்தப் பக்கம் போனதும்.. இந்தப் பக்கம் தினகரனுக்கு கண்ணாலே வலை வீசுவாள்..."

"என்ன ஸ்வேதா சொல்கிற..?"

"அவங்க கண்ணால..

ரகசியம் பேசிக்குவாங்க..

அவ இரண்டு பக்கம்..

காதல் வலை வீசிக்குவா..."

ஸ்வேதா பாட.. பவித்ராவின் முகம் வெளுத்தது.. அவள்தான் பாவம் என்ன செய்வாள்.. தினகரன் ஓரிடத்தில் நிலைத்து நிற்காத பிறவியாகப் போய் விட்டான்.. அவளும் அவனைப் போய் காதலித்து தொலைத்து விட்டாள்...

அவள் கண்களில் நீர் தளும்பியது.. அதை திருப்தியுடன் பார்த்தாள் ஸ்வேதா...

"இப்போ எதுக்குடி கண்ணில தண்ணி விடறே.. இது பொதுவா ஹியூமன் நேச்சர்தாண்டி..."

"என்னத்தை நேச்சர்ன்னு சொல்கிற.. எனக்கு பத்திக்கிட்டு வருது..."

"யாராவது நம்மை அழகாயிருக்கிறதாக சொன்னால் நமக்கொரு சந்தோஷம் வருமா.. இல்லையா..?"

"வரும்.."

"அதுவேதான் மாலினிகிட்டயும் இருக்கு.. அவள் பெரியத்தானைக் காதலிக்கிறதாகச் சொல்லிக்கிறா. அதே சமயம் தினகரன் அவளை ரசிப்பதையும் ரசிக்கிறா.. மொத்தத்தில் இரண்டு பேரையும் அவளைச் சுற்ற வைத்துக்கிட்டு இருக்கிறா.."

"இது தப்பில்லையா..."

"அவளுக்கு இது தப்பாகத் தெரியாமல் இருக்கலாம்.."

"அதுக்கு தினா அத்தானையே அவள் காதலித்துத் தொலைத்திருக்க வேண்டியதுதானே..."

இதைச் சொல்லும்போதே மனம் வலிப்பதை உணர்ந்தாள் பவித்ரா.. அவளது அகத்தின் வலி.. முகத்தில் தெரிய.. ஸ்வேதா உற்சாகமானாள்...

'இதுக்கே உன் முகம் இருட்டடிக்குதே.. இன்னும் இருக்குடி உனக்கு...'

"நீ வேற.. அவள் வந்த முதல் நாளிலேயே அண்ணனுக்கும் தம்பிக்கும் போட்டா போட்டி வந்திருச்சு.."

"எதுக்கு..?"

"மாலினியை யார் கொண்டு போய் அவ வேலை செய்கிற மில்லில் விட்டுவிட்டு வருவதுன்னு..."

"என்ன ஸ்வேதா சொல்கிற...?"

"இதுக்கே வாயைப் பிளந்தா எப்படி..? இன்னும் கதையைக் கேளு..."

பவித்ரா மிரண்ட விழிகளால் ஸ்வேதாவைப் பார்க்க.. அவள் கதையைத் தொடர்ந்தாள்...

"தினகரன் தான்தான் கூப்பிட்டுக் கொண்டு போகணுமுன்னு ஒற்றைக் காலில் நின்று பார்த்தான்..."

"அப்புறம் ஏன் கூப்பிட்டுக் கொண்டு போகலையாம்..?"

"உனக்குத்தான் தெரியுமே.. அண்ணன்காரனின் முன்னால் தம்பிகாரன் வாயைத் திறக்கவே மாட்டானே.."

"அதுக்காக.."

"உன் பெரியத்தான் தான்தான் கூப்பிட்டுக் கொண்டு போவேன்ன சொல்லிட்டார்.. தினா வாயை மூடிக்கிட்டு ஒதுங்கிக்கிட்டான்.."

"அதுக்கே ஒதுங்கினவர்.. அண்ணன் காதலிக்கும் பெண்ணை சைட் அடிக்காமலும் ஒதுங்கவேண்டியது தானே..?"

"ஆஹா.. இவள் சரியான ரூட்டில் யோசிக்க ஆரம்பித்து விட்டாளே.. இவள் இந்த ரூட்டில் போகவே கூடாதே.."

ஸ்வேதா உஷாரானாள்..

"புரியாமல் பேசாதே பவித்ரா.."

"ஏன் இப்படிச் சொல்கிற..?"

"தம்பிக்குன்னு அண்ணன் பார்ப்பார்.. அண்ணனுக்- குன்னு தம்பி பார்க்க மாட்டான்.. இது அந்த மாதிரியான குடும்பம் பவித்ரா.."

"இன்னும் எனக்குப் புரியலையே.."

'டியூப்லைட்..' மனதிற்குள் பவித்ராவை திட்டினாள் ஸ்வேதா...

"அண்ணன் காதலிக்கும் பெண்ணை சைட் அடிக்க தினகரன் தயங்க மாட்டான்.. அதனால் அவனிடம் பெரிய அத்தான் மாலினியைக் காதலிக்கும் விஷயத்தை சொல்லுவது வேஸ்ட்.."

சாதுர்யமான ஸ்வேதா.. மாலினி, பிரபாகரனைக் காதலிக்கிறாள் என்று மறந்தும் சொல்லவில்லை..

பிரபாகரன்தான் மாலினியைக் காதலிக்கிறான் என்று சொன்னாள்.. அது பவித்ராவின் மனதில் பதிந்தது..

"நீ அப்படிச் சொல்கிறயா.."

"ஆமாம்.. அதுவே தினகரனை நீ காதலிக்கும் விஷயத்தைச் சொல்லி.. உனக்கும் தினா அத்தானுக்கும் ஊடே மாலினி வருகிறாள்னு நீ பெரியத்தானிடம் சொன்னேன்னு வை..."

"என்ன நடக்கும்..?"

பவித்ரா ஆவலுடன் கேட்டாள்.. ஸ்வேதா ஜாக்கிரதையாக வார்த்தைகளைக் கோத்துச் சொன்னாள்..

"பெரியத்தானுக்கு மாலினியின் மேல் காதல் அதிகம்.. அவளை யாருக்கும் விட்டுத் தர மாட்டார்.. மாலினிக்கும் தினகரனுக்கும் பெரியத்தானிடம் பயம் உண்டு.. அவர் இதுக இரண்டையும் கூப்பிட்டு ஒரு சத்தம் போட்டாருன்னு வை.. இரண்டும் அடங்கிடும்..."

"அடங்கிரும்னா.. அது எப்படி..?"

'உனக்கு எல்லாத்தையும் புட்டுப்புட்டு வைக்கனும்.. மக்கு.. மக்கு..' ஸ்வேதாவிற்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது...

இப்படி ஒரு மண்ணாந்தைப் பெண்ணை பெற்று அப்பாவியாய் வளர்த்து வைத்திருக்கும் சிறிய தகப்பனை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்...

"தினகரனும் மாலினியை சைட் அடிக்க மாட்டான்.. மாலினியும் அவன் இருக்கும் திசைப் பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டாள்..."

"நிஜமாகவா சொல்ற..?"

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது..."

"உண்மை சொல்லத் தெரியாதுன்னு சொல்லு.. நான் கேட்டுக்கறேன்.. பொய் சொல்லத் தெரியாதுன்னு நீ சொன்னால் என்னால் நம்ப முடியுமா..?"

"இவ்வளவு நேரமும் உணக்கையாய் நான் பேசுவதைக் கேட்டுவிட்டு.. என்கிட்டயே வித்தாரம் பேசறியா..? தீட்டின மரத்திலேயே கூர் பார்க்கிற ஆளுடி நீ.."

"இன்னமும் நீ சொல்கிறதை என்னால் நம்ப முடியவில்லை ஸ்வேதா..."

"நம்பினால் நம்பு.. நம்பாவிட்டால் போ.. எனக்கென்ன வந்தது..?"

ஸ்வேதா கோபமாக சொல்வது போல சொல்லிவிட்டு விசுக்கென்று எழுந்து உள்ளே சென்றாள்...

அவளுக்கா தெரியாது..? நம்பாதவளாக இருந்தால் பவித்ரா அவ்வளவு தூரத்திற்கு அமர்ந்து கதை கேட்டிருக்க மாட்டாள்..

முதல் நாள் பவித்ராவின் தெளிந்த மனதில் கல்லை விட்டு எறிந்து சலனத்தை உண்டாக்கியவள்.. அன்று சலனப்பட்ட மனதை சகதியாக்கி கலக்கிவிட்டுச் சென்று விட்டாள்...

பவித்ரா நீச்சல்குளத்தைப் பார்த்தபடி யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.. அவளால் ஸ்வேதா சொன்னதை நம்பவும் முடியவில்லை.. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை..

"இங்கே என்ன செய்கிற பவி.."

பவித்ரா திரும்பிப் பார்த்தாள்.. காயத்ரி வெள்ளையான மலர் சிரிப்புடன் அவளுக்கு அருகில் வந்தாள்...

"சும்மா உட்கார்ந்திருக்கிறேன்..."

காயத்ரி அவளருகே அமர்ந்து பேச ஆரம்பித்தாள் மெல்ல மெல்ல பவித்ராவின் மனது வேறு பேச்சுகள் பக்கம் திரும்பியது...

அவளது கலங்கிய மனம் லேசாக சமனப்பட்டது...

**உனக்காக என் மனது...**

**உறங்காமல் துடிக்கும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"இன்னும் இரண்டு பூரி வைத்துக்க பிரபா.. செந்தாமரை.. ஐயா தட்டைக் கவனி.." நர்மதா உத்தரவிட்டாள்..

மாலினி, பிரபாகரனின் தட்டைக் கவனிக்க.. பக்கத்திலிருந்த சசிரேகா.. கணவனுக்கும் மற்றவர்களுக்கும் கேட்காத குரலில்..

"நீயென்ன செந்தாமரையா..?" என்று கேட்டாள்..

"முதலில் நீ இதுக்குப் பதிலைச் சொல்லு.. நான் என்ன உன் ஹஸ்பெண்டா...?"

"என்னடி இப்படிக் கேட்டு வைக்கிற..?"

"பின்னே.. எப்படிக் கேட்கச் சொல்கிற.. உன் ஹஸ்பெண்டைக் கவனிக்கிறதை விட்டுவிட்டு.. என்னை நோட்டம் பார்த்தால் நான் இப்படித்தான் கேட்பேன்.."

அவர்கள் லேசாக சிரித்துக் கொள்ள.. பிரபாகரன்.. மாலினியையே பார்த்தவாறு பூரிகிழங்கை காலி செய்தான்..

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை புரிந்து கொண்ட புன்முறுவல் அவன் முகத்தில் தவழ.. மாலினி.. நர்மதாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு.. தட்டைப் பார்த்துச் சாப்பிடுமாறு அவளுக்குத் தெரியாமல் பிரபாகரனை பார்வையிலேயே அதட்டினாள்...

பிரபாகரன்.. தாயையும் தங்கை.. தம்பிகளையும் பார்த்தான்.. அவர்கள் கவனிக்கவில்லை என்பதை உறுதி படுத்திக் கொண்ட பின்..

'நீ ஊட்டி விடு..' என்று பதிலுக்கு ஜாடை செய்தான்...

'போதுமே..' முகம் சிவக்க.. மாலினி அழகு காட்டினாள்..

இப்போது பிரபாகரனின் முகத்தில் புன்னகை படர்ந்து விரிந்தது.. அவன் கண்கள் மின்னின.. அவன் காதலுடன் மாலினியைப் பார்த்தபடி கை கழுவ எழுந்தான்..

'காருக்கு வா பேசிக்கறேன்...'

ஒற்றை விரலை உயர்த்தி பயமுறுத்தியபடி அவன் கைகழுவச் சென்றுவிட.. மாலினியும் எழுந்தாள்..

"நினைத்தேன்.." என்று சிரித்தாள் சசிரேகா...

"போடி..." மாலினி பொய் கோபம் போல காட்டிக் கொண்டு போய் விட்டாள்...

மறந்தும் அவள் தினகரன் இருக்கும் திசைப்பக்கம் பார்க்கவேயில்லை...

அதைக் கண்காணிப்பாய் பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவின் முகம் யோசனைக்கு மாறியது...

'மாலினியின் மேல் தப்பில்லை போல இருக்கே..'

அதே சமயம்.. தினகரனின் கண்கள் மாலினியின் மேல் ஆர்வத்துடன் படிந்து கொண்டிருப்பதையும் அவள் கவனிக்கவே செய்தாள்..

மாலினி கைகழுவ எழுந்தவுடன் தினகரனும் எழுந்து அவள் பின்னாலேயே சென்று விட்டான்...

தினகரனின் மனதில் மாலினியின் மேல் எண்ணமிருப்பது தெள்ளத் தெளிவாக பவித்ராவுக்கு புரிந்தது..

அவளுக்குப் புரிந்தது மாலினிக்குப் புரியாமல் இருக்குமா..?

இதுதான் அவள் மனதில் எழுந்த கேள்வி.. மாலினியின் புத்திசாலித்தனத்தை அவள் நன்கு அறிவாள்.. ஸ்வேதாவிடம் அவள் முகம் கொடுத்துப் பேசுவதில்லை.. சசிரேகாவின் கணவனிடம் பாசம் கலந்த மரியாதையைக் காட்டத் தவறுவதில்லை.. நர்மதாவிடம் பணிவை அதிகப்படியாகக் காட்ட அவளுக்குத் தெரிந்திருந்தது..

காயத்ரியிடம் கனிவையும் நட்பையும் காட்டினாள் பவித்ராவிடம் நட்பு பாராட்டினாள்..

இவ்வளவு ஏன்.. செந்தாமரை அந்த வீட்டு வேலையாள்தான். ஆனால், அவளுக்கு மாலினியிடம் இருக்கும் எதிர்பார்ப்பு என்ன என்பதை அவள் புரிந்து வைத்திருந்தாள்.. ஒரு ஜோக்கைச் சொல்லி.. அவளை சிரிக்க வைக்க அவள் மறக்கவில்லை..

இப்படிப்பட்டவள்.. தினகரனைக் கணிக்காமல் இருப்பாளா..? ஒரு வார்த்தை.. ஒரேயொரு வார்த்தை.. பிரபாகரனைத்தான் அவள் காதலிப்பதாக தினகரனிடம் சொல்லிவிட்டால் போதுமே..

அண்ணனின் மேல் பக்தியுடன் இருக்கும் தம்பி.. அண்ணியாகப் போகிறவளை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டானே..

நேரடியாய் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை.. மறைமுகமாய் உணர்த்தியிருந்தால்கூடப் போதுமே...

மாலினி ஏன் அதைச் செய்யவில்லை..?

பவித்ராவிற்கு தலையை வலித்தது.. அவள் அரை குறையாய் சாப்பிட்டேன் பேர்வழி என்று பெயர் பண்ணி விட்டு கை கழுவ எழுந்து சென்றாள்..

இத்தனை பேரின் மன உணர்வுகளையும் நாடகம் போல் கவனித்துக் கொண்டிருந்த ஸ்வேதா, தனக்குள் சிரித்துக் கொண்டாள்..

"என்ன ஸ்வேதா.. உனக்கு நீயா சிரிச்சுக்கறே.." காயத்ரி ஆச்சரியத்துடன் வினவினாள்..

"ஏன் காயத்ரி.. நான் சிரிக்கக் கூடாதா..?"

"ஏன் கூடாது.. நான் அப்படிச் செல்வேனா..? உனக்குச் சிரிக்கத் தெரியாதுன்னு இல்ல இத்தனை நாளாய் நான் நினைத்திருந்தேன்..?"

"மனிதர்களுக்கும் மற்ற விலங்குகளுக்கும் உள்ள வித்தியாசமே இந்தச் சிரிப்புத்தான்.. அதுகளுக்குச் சிரிக்கத் தெரியாது.. நமக்குச் சிரிக்கத் தெரியும்.."

இதைச் சொல்லிவிட்டு கித்தாய்ப்பாய் காயத்ரியை ஸ்வேதா பார்க்க...

'அது சரி.. நீ மனிதப்பிறவியா..?' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் காயத்ரி...

மார்த்தாண்டத்தை விட்டு வெளியேறியவுடன் வழக்கம் போல பிரபாகரனின் கார் வேகத்தைக் குறைத்தது...

"என்ன கேபி சார்.. நடந்து போகிறவங்களையாவது ஓவர்டேக் பண்ணணும்கிற உத்தேசமில்லையா..?" மாலினி அவனை வம்புக்கு இழுத்தாள்..

"காலையில் ஏண்டி.. அந்தப் பார்வை பார்த்த..?"

"என்னோட ஆளாச்சே.. அவர் ஒழுங்காய் சாப்பிடுகிறாரான்னு ஒரு கவலைதான்.. ஐயா மட்டும் ஏன் அப்படி ஜாடை காட்டினாராம்.."

"அக்கறையிருக்கிறவ ஊட்டி விடவேண்டியது தானே.."

"அம்மா முன்னாடியும் தங்கை முன்னாடியும் வாயைத் திறக்க நீங்க ரெடின்னா.. ஊட்டி விட நானும் ரெடிதான்.."

"அந்தத் தைரியம்தானேடி உனக்கு.."

பிரபாகரனின் கார் சாலையோரமாய் நின்றுவிட..

"இது ஒண்ணு இருக்கு உங்ககிட்ட.. காரைக் கிளப்புங்க அத்தான்.." என்று சிணுங்கினாள் மாலினி..

அவன் காதுகள் செவிடாகி விட்டன.. அவள் பேசுவது காதில் விழாதவனைப் போல அவன் தாகத்துடன் அவளை நெருங்கினான்..

"அத்தான்.. இது அநியாயம்.."

"ஏண்டி.. நானென்ன.. அடுத்தவன் காதலியையா கட்டிப் பிடிக்கிறேன்..?"

"நேற்று நைட் தோட்டத்திலும் இதே கதைதான்.."

"ஊஹூம்.."

"இன்றைக்கு விடிந்தவுடன் மொட்டை மாடியிலும் இதே கதைதான்.."

"அப்புறம்.."

"இப்போ.. காரிலும் இதே கதைதானா..?"

"இது தொடர்கதைடி.. இதுக்கு முடிவே கிடையாது.."

பிரபாகரனின் இதழ்கள் ஆவலுடன் அவளது கன்னத்தில் பதிந்து.. பின் அவளது இதழ்களைத் தேடின.. அவள் இசைந்து கொடுக்க.. அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

அவன் அவளை இறுக்கிக் கொண்டான்...

"சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்..

முடிவே இல்லாதது..

எங்கே சென்றாலும் தேடிப் பிடித்து..

இணையும் கதை இது..

உன்னை என்னோடு சேர்த்த தெய்வம்..

எழுதும் புதுக்கதை இது..."

காரில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. மாலினி விடுபட விரும்பாமல் பிரபாகரனின் கைகளுக்குள் புதைத் திருந்தாள்.. அவர்களின் மனமிரண்டும் ஒருமனமாய் அங்கே கலந்து நெகிழ்ந்திருந்தன...

பரபரப்பாக இங்கும்.. அங்கும் ஆள்கள் நடமாடிக் கொண்டிருக்க.. பிரபாகரனின் மில்லிற்குள் மாலினி உதட்டைப் பிதுக்கியபடி யோசித்துக் கொண்டிருந்தாள்..

அவளது உத்தரவை எதிர்பார்த்து.. பெயிண்டர் மாணிக்கம் நின்று கொண்டிருந்தான்..

"ஆபீஸ் ரூமுக்கு ஆகாய நீலத்தில் பெயிண்ட் அடிங்க.."

"அது பெட்ரூமில் அடிக்கும் நிறமாச்சேம்மா.."

"ஆமாம்.. அது மனதை அமைதிப்படுத்தும் நிறம்.. மாணிக்கம்.. ஒரு நாளின் இருபத்து நாலு மணி நேரத்தில் அதிகமான நேரத்தை நாம் தூங்கிக் கழிக்கிறோம்.."

அதைக் கேட்ட மாணிக்கத்தின் விழிகள் வியப்பில் விரிய.. பிரபாகரனின் முகத்தில் புன்னகை விரிந்தது...

அவன் சுழல் நாற்காலியில் சுழன்றபடி சுவாரஸ்யமாக மாலினியைப் பார்த்தான்...

மாணிக்கத்துடன் பேசிக்கொண்டே மாலினியின் விழிகளும் அவ்வப்போது அவன்மீது படிந்து மீண்டன..

விழுங்கிவிடுவதைப் போன்ற அவனது பார்வையைக் கண்டு அவள் முகம் சிவந்தது...

"அடுத்து நாம் அதிகமான நேரத்தை ஆபீஸில் தான் கழிக்கிறோம் மாணிக்கம்.."

"நிஜம்தான்ம்மா..."

"அதனால்.. இங்கேயும் மனதை அமைதிப்படுத்தும் நிறத்தைத்தான் அடிக்கணும்..."

"மத்த இடங்களில்..?"

"லக்சரிஸ் கோல்டன் கலர்.. அட்டகாசமாய் அசத்தணும்.."

மாணிக்கம் அசத்தினான்.. ஒவ்வொரு அறையிலும்.. மாலினியின் எண்ணத்திற்கேற்ப வண்ணங்கள் அடிக்கப் பட்டன..

பிரபாகரனின் அலுவலகம் இருந்த கட்டடம்.. மாலினியின் கற்பனைக்கேற்ப அழகுபடுத்தப்பட்டது...

"வாசலில்.. இந்த இடத்தில் பூச்செடிகள் இருக்கணும்.. ரிசப்ஷனில் ஃப்ளவர் வாஷ்... மாடிப்படிகளில் ஏறும் இந்த இடத்தில் பெயிண்டிங்..."

"ரிசப்ஷன் ஹாலில்.. உள்ளே எண்ட்ரி ஆனதுமே கண்ணில் படுகிற மாதிரி ஒரு படம் மாட்டணும்னு சொன்னீங்களே..

அதுக்கு நேச்சர் பெயிண்டிங் ஏதாவது வாங்கணுமாம்மா.."

"நோ.. நோ.. அங்கே பிரமாண்டமாய்.. நம்ம சாரோட அப்பாவோட படத்தை மாட்டணும்.. கோல்டன் பிரேமில்.. சந்தன மாலையோடு அந்தப் படம் இருக்கணும்.."

சுழல்நாற்காலி அசைவற்று நின்றது.. இதை எதிர்பார்த்திராத பிரபாகரன்.. மாலினியையே பார்த்தான்.. மாணிக்கம் உதவியாளர்களிடம் எதையோ உத்தரவிடு வதற்காக வெளியே செல்ல.. மாலினி அவனைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்...

"எப்படிடீ.. இது உனக்குத் தோன்றியது.." பிரபாகரனின் குரல் நெகிழ்ந்திருந்தது..

"என்ன பிரபா இது.. இதுக்குப் போய் எமோஷனல் ஆகுறீங்க..."

"இல்லைடி.. இதை நான் யோசித்திருந்தால் அது இயல்பான ஒன்று.. நீ யோசிக்கிறாயே..."

"நான் யோசிக்காமல் எப்படி இருப்பேன் பிரபா.. நீங்க உங்க அப்பாவின் மேலேயும் குடும்பத்தின் மேலயும் எவ்வளவு பாசம் வைத்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியாதா..? உங்க அப்பாதான் தொழில் கற்றுக் கொடுத்த குருன்னு அடிக்கடி சொல்வீங்களே.. இது குரு வணக்கம் இல்லையா..?"

"மாலினி..."

"எத்தனையோ தொழில்களை நீங்க உருவாக்கி இருக்கீங்க.. அது அத்தனையையும் திறந்து வைக்க அத்தை வந்திருப்பாங்க.. அதேபோல இதையும் திறந்து வைக்க வருவாங்க இல்லையா..? அப்போ.. வரவேற்பிலேயே அவங்களை வரவேற்க மாமாவின் படம் இருந்தால்.. அவங்களுக்கு எவ்வளவு சந்தோஷ- மாயிருக்கும்.? நினைத்துப் பாருங்க.."

நினைத்துப் பார்த்தான் பிரபாகரன்.. நர்மதாவின் மன நெகிழ்வை அவனது மனம் அப்போதே உணர்ந்தது..

"இதுக்கு முன்னால்.. என் ஆபீஸ் ரூமில் மட்டும் தான் அப்பாவின் படம் இருக்கும் மாலினி. வரவேற்பிலேயே அவருடைய படம் இருப்பது இதுதான் முதல் முறை..."

"ஐய்யே.. நீங்க என்ன பச்சைப் புள்ளையா.. மீசை வளர்ந்த ஆண்பிள்ளை.. இப்படி கண்கலங்கலாமா..?"

மாலினி அவனது மீசையை முறுக்கிச் சிரித்தாள்...

பிரபாகரன் அவளை இழுத்துக் கொள்ள.. அவனது மடியில் அமர்ந்து அவன் கழுத்தில் கைகளை மாலையாக்கினாள்.. சுழல்நாற்காலியில் சுழன்று திரும்பிய பிரபாகரன் அறைக்கு முதுகைக் காட்டி.. மாலினியின் கன்னத்தில் முத்தமிட்டான்...

"ஹப்பா.. ஒரு சின்ன சான்ஸ் கிடைத்தால் போதுமே.. உடனே சந்துக்குள்ளே சிந்து பாடிடுவீங்களே.." மாலினி பொய் கோபத்துடன் விலகிக் கொண்டாள்...

அவர்கள் இருவரும் சேர்ந்து காரில் ஏறிச் செல்வதை பார்த்த மில்லில் வேலை செய்த ஆள்கள்.. அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை மெச்சி தங்களுக்குள் பேசிக்கொண்டனர்..

74

**ஊர் கூடிய கூட்டத்திலே...**

**உன்னை மட்டும் தேடும் மனதை..**

## என்னவென்று நான் சொல்ல..?

வெள்ளை நிறத்தில் சோப்புக் குமிழ்கள் மொத்தமாய் கொட்டுவதைப் போல அருவி கொட்டிக் கொண்டிருந்தது.. அருவியிலிருந்து தெறித்து விழுந்த நீர்.. மத்தாப்பூ போல பொரிவதைக் கண்ட மாலினிக்கு குதூகலம் தாங்கவில்லை..

"ஹௌ நைஸ் பிரபா.." என்று ஆர்ப்பரித்தாள்..

கொட்டுகின்ற நீர்வீழ்ச்சியில் கைகளை நீட்டிக் குதித்துக் கொண்டிருந்த மாலினியைப் பார்த்த பிரபாகரனுக்கு இவளும் ஒரு நீர்வீழ்ச்சிதான் என்று தோன்றியது...

அன்போ.. பாசமோ.. நட்போ.. காதலோ.. அதை முழு மனதாகக் கொட்டுகின்ற நீர்வீழ்ச்சி...

"பிடித்திருக்கா..?" இரு பொருள்பட வினவிக் கண் சிமிட்டினான் பிரபாகரன்..

அவனது கரம்.. அவளது இடுப்பில் பதிந்து அழுத்தியது.. அவனது கேள்வி போகும் திக்கை அறிந்த அவள் வெட்கி முகம் சிவந்தாள்...

"பிடிச்சிருக்கு.." அவன் பாணியிலேயே கிறக்கத்துடன் பதில் சொன்னாள்...

இப்போது அவன் கரம் நகர.. அதை அசையவிடாமல் அவளது கரம் பற்றிக் கொண்டது..

"ஏண்டி..?"

"ஏனா.. வரவர நீங்க பொல்லாத ஆளா மாறிக்கிட்டு வருகிறீங்க பிரபா..."

"நான் பொல்லாதவன்..."

பிரபாகரன் ராகம் போட்டு பாட.. அவன் கையில் நறுக்கென்று கிள்ளினாள் மாலினி...

"ஹிட்லர் பண்ணுகிற அடாவடித்தனம் இருக்கே... அப்பப்பா..."

"அப்படி என்னடி நான் அடாவடித்தனம் பண்ணி விட்டேன்..?"

"தக்கலைக்கு மில்லில் வேலைபார்க்கப் போக வேண்டியவளை திருத்தரப்பு அருவிக்கு கடத்திக் கொண்டு வந்திருக்கீங்களே.. இதை என்னன்னு சொல்கிறது...?"

"வேறு என்ன செய்யலாமுன்னு நீயே சொல்லு.. நானும் இரண்டு வாரமாக கெஞ்சிப் பார்க்கிறேன்... ஞாயிற்றுக்கிழமையன்னிக்கு நீ கால்ஷீட்டே கொடுக்க மாட்டேன்கிற..."

"எப்படிக் கொடுக்க முடியும் பிரபா.. அருவிக்கு வாடின்னு நீங்கபாட்டுக்கு கூப்பிட்டு வைக்கறீங்களே.. அத்தை கேட்டால் என்ன பதிலைச் சொல்வது..?"

"அருவிக்கு போகிறோமுன்னு சொல்றது.."

"ஒரு குடும்பத் தலைவர் பேசுகிற பேச்சா இது..?"

"ஏன்.. என் பேச்சுக்கென்னவாம்..?"

"ஏங்க.. கல்யாண வயதில் ஒன்றுக்கு மூன்று பெண்கள் உங்க வீட்டில் இருக்காங்க.. அவங்க முன்னாலே நாம் ஜோடி போட்டுக்கிட்டு அருவிக்கு கிளம்பினா நல்லாத்தான் இருக்கும்.."

"இரு.. இரு.. நீபாட்டுக்கு மூணு பொண்ணுகன்னு சொல்கிறாயே.. காயத்ரி மட்டும்தானே கல்யாண வயதில் எங்க வீட்டில் இருக்கிறா.. அவளுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆயிருச்சே...."

பிரபாகரன் சந்தேகம் கேட்க...

"ஐயோ... கடவுளே.." என்று தலையில் கை வைத்துக் கொண்டாள் மாலினி...

"இப்ப ஏண்டி.. கடவுளை டிஸ்டர்ப் பண்றே..."

"நீங்க பேசற லட்சணத்துக்கு அவரை எப்படி நிம்மதி யாய் இருக்க விடறது..?"

"சரி.. சரி.. அவரை விட்டு விடு.. என்கிட்டேயே என்னன்னு சொல்லு..."

"ஸ்வேதாவும் பவித்ராவும் உங்க கண்ணில் படலையா..?"

"அவங்க எங்க வீட்டுப் பெண்களா..?"

"இப்ப உங்க வீட்டில் இருக்கிற பெண்கள்.. பிரபா.. நீங்க எல்லோருக்கும் முன்னுதாரணமா இருக்கிறவர்.. நீங்க என்னை மட்டும் தனியே கூப்பிட்டுக் கொண்டு ஆபீஸிற்கு வரலாம்.. அவுட்டிங் போகக் கூடாது..."

பிரபாகரனுக்கும் அது புரிந்திருந்தது.. அதனால் தான் வேலை நாளில் வேலைக்கு மட்டம் போட வைத்து விட்டு மாலினியைக் கடத்திக் கொண்டு திருத்தரப்பு அருவிக்கு வந்து விட்டான்...

"இப்ப புரியுதா.. ஏன் உன்னை ஆபீஸுக்கு பர்மிஷன் போட வைச்சேன்னு.." அவன் விளம்பரப் பாணியில் வினவ...

"பேஷ்.. பேஷ்.. ரொம்ப நன்னா புரியது.." என்று அதே விளம்பரப் பாணியிலேயே பதில் கொடுத்துச் சிரித்தாள் மாலினி...

அருவித் தண்ணீரில் கை நனைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவளை பற்றி இழுத்துக் கொண்டு அருவிக்குள் புகுந்தான் பிரபாகரன்...

'சோ'வென்று கொட்டிய அருவி நீரில் எதிர்பாராமல் நனைந்தவள்.. அதை விட்டு விலக மனமின்றி ரசித்து நின்றாள்..

ஒருவழியாக.. சொட்டச் சொட்ட நனைந்த உடலுடன் அருவியை விட்டு வெளியே வந்தவள்.. ஈரச்சேலை கால் தடுக்க குனிந்து அதைப் பிழிந்து விட்டுக் கொண்டாள்...

"ரொம்ப மோசம் பிரபா நீங்க..."

முகத்தில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே அவள் குற்றம் சாட்டி சிணுங்க...

"அப்படி என்னடி செய்துவிட்டேன்..?" என்று அவன் கண்களை சிமிட்டினான்...

"இது அதைவிட மோசம்..."

அவனது மார்பில் கை வைத்து அவனைப் பொய் கோபத்துடன் தள்ளிவிட.. அவன் பலமாக சிரித்தவாறு அவளது கையை விலகவிடாமல் இறுக்கிப் பற்றி அதில் முத்தமிட்டான்...

"இதுக்கொண்ணும் குறைச்சலில்லை.. ஹிட்லர்னு உங்களுக்கு தப்பாக பெயர் வைத்து விட்டேன்..."

"சரியான பெயர் என்னவோ..."

"ம்ம்.. காதல் மன்னன்.. இப்போ டிரஸ் இப்படி சொட்டச் சொட்ட நனைஞ்சு போச்சே.. இதை எப்படிக் காயவைக்கிறதாம்..?"

"நீ கிராமப் பக்கத்தில் பார்த்ததே இல்லையா..?"

"என்னத்தைப் பார்க்க..?"

"இப்படி சேலையோட அவங்க குளிச்சிட்டா.. எப்படி அதை காய வைப்பாங்கன்னு..."

"நான் பிறந்து வளர்ந்தது சென்னையில் ஹிட்லர் சார்.. கிராமத்தை நான் எங்கே கண்டேன்..?"

"அவங்க.. முந்தானைச் சேலையை மட்டும் சுற்றிக் கிட்டு.. இன்னொரு முனையை மரத்தில் கட்டிவிட்டு தள்ளி நின்னுக்குவாங்க.. அடிக்கிற காத்தில சேலை ஐந்தே நிமிஷத்தில் காய்ந்து விடும்.."

மாலினி நின்று பிரபாகரனை முறைத்தாள்... அவன் அவளது கோபத்தின் காரணம் புரியாமல் புருவம் உயர்த்தினான்...

"அடப்பாவி மனுஷா.. இதையெல்லாம்கூட நீங்க பார்ப்பீங்களா.. உங்களைப் போய் நான் காதலிச்சேனே.."

"நீ அப்படி வருகிறயா.. நான் எங்கேடி இதை யெல்லாம் பார்த்தேன்.. எல்லாம் சினிமாவில் பார்த்ததை வைத்து அளந்துவிட்டதுதான்.."

"கப்ஸா விடாதீங்க…"

"நிஜமாகவே நான் ஏகபத்தினி விரதன் மாலினி.. இந்தப் பிறவியில் உன்னை நினைத்த மனம்.. வேறொருத் தியை நினைக்காது.. உன்னைத் தொட்ட இந்தக் கை வேறொருத்தியைத் தொடாது…"

பிரபாகரனின் குரலில் தெரிந்த உண்மையும் தீவிரமும் மாலினியின் உள்ளத்தைத் தொட்டன…

இப்படிப்பட்ட ஒருவனின் காதல் கிடைத்ததில் அவள் மனதிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்…

வெளியே விளையாட்டாக தலைசாய்த்து சிரித்துக் கொண்டு…

"ஸோ.. நீங்க ராமன்னு சொல்கிறீங்க…" என்றாள்..

"ஆமாம்.."

"அப்போ என்னைக் காட்டுக்கு அனுப்பிருவீங்கன்னு சொல்லுங்க.."

அவள் விளையாட்டாய் பேசியதற்கு அவனிடமிருந்து பதில் வராமல் போகவும்.. அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்…

அவன் விழிகளில் அதிர்வு தெரிந்தது…

"பிரபா.." அவன் தோளைத் தொட்டாள்..

"ஏண்டி அப்படிச் சொன்னே..?" அவன் அவளை வெறித்தான்..

"நான் விளையாட்டுக்கு சொன்னேன் பிரபா.." அவள் திகைத்தாள்…

"விளையாட்டுக்குக்கூட அப்படிச் சொல்லலாமாடி.."

"இல்லை பிரபா..."

"பேசாதே.. என்னை யாருன்னு நினைச்சே.. நீ வாழ்ந்தால் என் கூட வாழ்ந்தாகணும்.. இல்லை.. காட்டுக்குப் போகணுமுன்னு சொன்னா.. என் கூடத்தான் போய் ஆகணும்.. தனியாய் உன்னை விடுவேன்னு நினச்சயா..."

"ஐ ஆம் ஸாரி.. ஐ ஆம் ஸோ ஸாரி.."

மாலினி திரும்பத் திரும்ப தன்னிலை விளக்கம் சொன்னாள்.. மன்னிப்புக் கேட்டாள்.. அவன் ஒரு வழியாக சமாதானமான பின்னால்தான் அவளுக்கு உயிரே வந்தது..

'இரும்பு மனிதன்..' எனப் பெயர் பெற்றவனின் காதலில் இருந்த தீவிரம் கண்டு அவள் அயர்ந்து போயிருந்தாள்...

'இந்த அளவுக்கு இவன் என்னைக் காதலிக்கிறானா..?' அவள் மனம் பொங்கியது...

அவனது காதலுக்குப் பதிலாக அவளது மனதிலும் காதல் ததும்பியது...

அவள் விழிகளில் அதை உணர்ந்தவன் கண்சிமிட்டி சிரித்தான்..

"என்னடி.. பார்வையிலேயே சாப்பிட்டுவிடுவது போல இருக்கே.."

அவன் இயல்பு நிலைக்கு திரும்பிவிட்டான் என்ற நிம்மதியுடன் அவள் அவன் பாணியிலேயே பதிலுக்கு கண்சிமிட்டி....

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறீங்க..." என்று கேட்டாள்..

"ஏய்.. கிளப்பிவிடாதே.. காயத்ரியின் கல்யாணம் ஊடே இருக்கு.."

"எதுக்கு ஊடே இருக்கு...?"

"உன் கழுத்தில் நான் தாலிகட்டுவற்கு ஊடே இருக்கு.."

"ம்ஹூம்... நீங்கள் தாலி கட்டும் வரை பொறுத் திருக்கிற ஆள்போல எனக்குத் தெரியவில்லை.."

"பின்னே..."

"இந்தக் காட்டுக்குள்ளேயே.. காந்தர்வ மணம் புரிந்து ஃபர்ஸ்ட் நைட் நடத்திவிடுகிற ஆள் போலத் தெரிகிறது..."

"பரவாயில்லையே.. நல்ல ஐடியா கொடுத்திருக் கிறாயே.. ம்ம்.. அக்கம் பக்கமும் யாருமில்லை.. கிட்டேவா.."

பிரபாகரன் அவனை இழுத்து அணைத்து அவளது இதழ்களைத் தேட.. அவள் முகம் விலக்கிச் சிரித்தாள்..

"ஹை.. ஆசை.. தோசை.. அப்பளம்.. வடை.."

"ஏன்.. எனக்கு மட்டும்தான் ஆசையிருக்கா..? உனக்கு இல்லையா.? உன் மனதில் இருக்கிறதைத்தானே ஜாடையில் சொன்ன..? வா.. இப்பவே காந்தர்வ கல்யாணம் பண்ணிக் கொள்வோம்.."

பிரபாகரன்.. அவன் கழுத்திலிருந்த வைர முகப்பு வைத்த சங்கிலியை அவிழ்த்து.. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவள் கழுத்தில் போட்டு விட்டான்...

"அத்தான்.. என்ன இது..?" மாலினி அதிர்ச்சியுடன் கேட்டாள்...

"என்னைப் பொறுத்தவரை இது நான் உன் கழுத்தில் கட்டியிருக்கும் தாலி..."

அவன் பேசியபடியே.. அவளது கையை இழுத்து தனது சுண்டு விரலில் போட்டிருந்த வைரமோதிரத்தை கழட்டி அவள் விரல்களில் போட ஆரம்பித்தான்...

"வைரம்.." மாலினி விரலை உருவிக்கொள்ள முயன்றாள்...

"ஊஹூம்.." அவன் கண்டிப்பான குரலில் அதட்டினான்...

"என்ன வேலை செய்கிறீர்கள் அத்தான்.. காலையிலேயே நான் நினைத்தேன்.. இது என்ன இவர் என்றைக்கு

மில்லாமல் சுண்டுவிரலில் மோதிரம் போட்டிருக்காரேன்னு.."

"அந்தக் காலத்தில் பணப் பெருமையைக் காட்டிக்க.. ஐந்து விரல்களிலும் மோதிரம் போடுவாங்களாம்..."

"இந்தக் காலத்திலும் அப்படி ஆளுகு இருக்காங்க.."

"அதைப் போல என்னையும் நினைத்துக் கிட்டாயா?"

"ஊஹூம்.. என் பிரபாவுக்கு நகை போடும் பழக்கமே கிடையாதுன்னு எனக்குத்தான் தெரியுமே..."

அவள் 'என் பிரபா..' என்று உரிமையாகச் சொன்ன விதத்தில் அவன் கிறங்கிப் போனான்...

75

**சிங்கமாக இருக்கும் உன்னை...**

**என் சிரிப்பினிலே மயக்கும் பொழுதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அவன்.. அவள் கன்னத்தில் தன் மூக்கை உரசி வாசம் பிடிக்க ஆரம்பிக்க...

"ஊம்... ஊம்.. ஊஹூம்..." என்று சிரித்தபடி அவள் விலகி நின்றாள்...

"ஏய்ய்.. கிட்டே வா..."

"இந்தப் பஞ்சாயத்தெல்லாம் அப்புறம்தான்.. முதலில் நம்ம பஞ்சாயத்துக்கு வாங்க..."

"த்ச்சு.. என்ன பேச்சு இது மாலினி.. நமக்குள் என்ன பஞ்சாயத்து.."

"இந்த நகைப் பஞ்சாயத்துதான்.. வேறு என்ன..?"

"இதைப் பத்தி என்னடி பஞ்சாயத்து..?"

"நான் உங்க கிட்ட நகை வாங்கிக் கொடுங்கன்னு கேட்டேனா..?"

"நீ கேட்டால் தான் நான் கொடுக்கணுமா..? நீ கேட்டா என் மனதை உன்கிட்ட கொடுத்தேன்..?"

மாலினி பேச்சிழந்தாள்.. எப்போதுமே பேச்சென்று வந்துவிட்டால்.. வெற்றிக்கொடியை நாட்டுகிறவள் அவளாகத்தான் இருப்பாள்.. இன்று அவன் கேட்ட கேள்விக்கு அவளிடம் பதில்லை..

"இருந்தாலும்.. வைர நகைகளை.." அவள் இழுவையாக முணுமுணுத்தாள்...

"ஏய்ய்.. என்னடி பேச்சு இது..?" பிரபாகரன் அவள் முகத்தை கைகளில் ஏந்தி விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தான்...

அவன் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவள் திணறிப் போனாள்.. அவனது பார்வை ஆயிரம் கதைகளைக் கூறியது.. அந்தத் தருணத்தை வாழ்வினில் என்றுமே மறக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது..

வானவில்லைப் பார்க்கும் அரிய தருணம்.. மழை பெய்யும் மாலையில்.. மரத்தின் அடியில் நிற்கும்போது.. பூ மரத்தின் கிளைகள் உதிர்க்கும் சாரல் விழும் தருணம்.. தவழ்ந்து வந்த குழந்தை கை தொட்டு இழுத்து கன்னம் குழியச் சிரிக்கும் தருணம்.. கோபுரத்தின் மாடத்திலே.. மாலையிளம் நேரத்திலே அடைவதற்காக கூட்டிற்குத் திரும்பும் புறாக்களின் சிறகொலியைக் கேட்கும் தருணம்.. முழு நிலவின் ஒளியினிலே வீட்டின் முற்றத்திலே.. அன்னை அமர்ந்திருக்க அவளைச் சுற்றி அமர்ந்து குடும்பத் தின் நிலவொளியில் நிலாச்சோறு உண்ணும் தருணம்..

வாழ்க்கை அறிமுகப்படுத்துகிற அழகான பல தருணங்களில் இது மிக முக்கியமான தருணம் என்று அவளுக்குத் தோன்றியது...

இந்த நொடியில் உறைந்து.. புதையுண்டு போக அவள் விரும்பினாள். அவளது முகத்தை ஏந்தியிருக்கும் பிரபாகரனின் கரம்.. அவள் முகத்தை விட்டு விலகக் கூடாது...

அவளது விழிகளுக்குள் ஊடுருவும் அவனது பார்வை வேறு திசை நோக்கக்கூடாது...

அப்படியே இருவரும் உறைந்துவிட வேண்டும்.. யுகங்கள் கடந்தாலும் அவர்களின் உறைவு கலையக் கூடாது...

அவளது கண்கள் கலங்கி அதிலிருந்து ஒரு கண்ணீர்த்துளி சிதறி அவன் கை மீது விழுந்தது..

"ம்ப்ச்.. எதுக்கு இந்தக் கலக்கம்..?" அவன் அன்புடன் கடிந்து கொண்டான்...

"என் பிரபா.." அவள் விசும்பினாள்...

"உன் பிரபாதான்.. அதில் உனக்கு சந்தேகமே வேண்டாம்.." அவன் அவளை மார்பில் சாய்த்துக் கொண்டான்..

"எனக்கு பயமாக இருக்கு பிரபா.."

"எதுக்கு..?"

"தெரியலை..."

"இதைச் சொல்வது என் மாலினியா.. பைத்தியம்.."

"வைரமெல்லாம் வேண்டாம் பிரபா.."

"ம்ச்ச்.. இதை வைரம்ங்கிறதுக்காக வேண்டாம் என்கிறாயே.. இது நான் கொடுத்தது என்று ஏன் உனக்கு நினைவில்லாமல் போனது மாலினி..?"

"பிரபா.."

"எனக்கு உன் மனது தெரியும்டி.. நான் கொடுத்த ரோஜாவை தலையில் வைத்திருந்தாயே.. சாயங்காலம் அது வாடிப் போயிருக்குமே.. தூக்கி எறிந்துவிட்டாயா..?"

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"எதுக்கு இப்ப முட்டைக்கண்ணை விரித்து இப்படிப் பார்க்கிற.. அதை என்ன செய்தாய்ன்னு நான் சொல்லவா..?"

"சொல்லுங்களேன் பார்ப்போம்.."

"எனது யூகம் சரின்னா.. அது உன் லாக்கரில் இருக்கும்.. நகைப்பெட்டியில் பத்திரமாக இருக்கும்.."

'கண்டுபிடித்து விட்டானே..' முகம் சிவந்துபோனாள் மாலினி..

"அது.. நீங்க முதன்முதலாக கொடுத்த பூ பிரபா.."

"அது இந்த வைரத்தைவிட உனக்கு உசத்தி தானே..?"

"ம்ம்ம்..."

"அப்படியிருக்க.. இதுக்கு எதுக்கு அலட்டிக்கிற மாலினி.. இந்த சங்கிலியை நான் ஏன் உனக்குக் கொடுத்தேன் தெரியுமா..?"

மாலினியின் முகவாயைப் பிடித்து பிரபாகரன் வினவ.. மாலினி தெரியாது என்ற பாவனையில் தலையை அசைத்தாள்...

"இந்த வைர முகப்பு டாலரைப் பார்த்தால் சாதாரண பூ டிஸைன் போலதான் இருக்கும்.. பட்.. இது லாக்கெட்.. இதோ பாரேன்.."

பிரபாகரன் அவள் கழுத்தில் தங்க சங்கிலியின் வைர முகப்பு டாலரை திறந்து காண்பித்தான்.. அந்த லாக்கெட்டின் இரு பக்கங்களிலும் பிரபாகரனும் மாலினியும் சிரித்தார்கள்...

"நம்ம போட்டோ பிரபா.." மாலினி குதூகலித்தாள்..

"யெஸ்.. இது எப்பவும் உன் கழுத்திலேயே இருக்கணும்.. அதில் நீயும் நானும் சேர்ந்திருக்கிற போட்டோக்கள் இருக்கணும்.. இப்ப சொல்லு.. இதுக்கு வைர முகப்பைச் செய்யாமல் நான் எப்படி இருப்பேன்..?"

மாலினியால் இதற்கு பதில் சொல்ல முடியவில்லை. மௌனித்தாள்...

"மோதிரத்திலும் இதே கதைதான்.. வெளியே பார்த்தால் இது டிஸைன் மோதிரம்.. இதை நீ உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்.."

மாலினி உற்றுப் பார்த்தாள்.. அவளது விரலில் இருந்த மோதிரத்தில் இரண்டு கொடிகள் இலைகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதைப் போன்ற தோற்றம் காணப் பட்டது.. சாதாரணமாகப் பார்த்தால்.. இலைகளுடன் இருந்த கொடியின் தோற்றம் பிரபாகரன் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு உற்றுப் பார்க்கும்போது.. 'பி' என்ற ஆங்கில எழுத்தும்.. 'எம்' என்ற ஆங்கில எழுத்தும் பின்னிப் பிணைந்திருப்பது புலப்பட்டது...

"வாவ்.." என்றாள் மாலினி.. அவளது கண்கள் மின்னின...

"ஃபென்டாஸ்டிக் அத்தான்.. நான் இதை எதிர்பார்க்க வில்லை..."

"இப்பத் தெரியுதா.. நான் ஏன் இதை வைரத்தில் செய்தேன்னு.." பிரபாகரன் மீண்டும் விளம்பரப் பாணியில் கேட்டுவிட்டு சிரித்தான்...

அவர்கள் மரத்தின் மீது சாய்ந்து நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.. ஊடே தன்னிச்சையாய் புடவையைச் சரி செய்து கொண்ட மாலினி.. உடைகள் உலர்ந்துவிட்டதைக் கவனித்தாள்...

"டிரஸ் காய்ந்திருச்சே.." மாலினி உற்சாகமாக சொன்னாள்..

"ச்சே.. இப்படி என்னைக் காற்று கவிழ்த்திருச்சே.." பிரபாகரன் ஏமாற்ற முகத்துடன் கூறவும்...

"ஏன்.. என்ன ஆச்சு..?" என்று மாலினி புரியாமல் விழித்தாள்...

"நீ புடவையைக் காய வைக்கும் அழகை என்னால் பார்க்க முடியாமல் போச்சே.. இந்தக் காற்று எனக்கெதிரா சதி வேலை பண்ணுது பார்த்தியா..?"

"ஆஹா.. உங்க மனசில் இப்படியெல்லாம் எண்ண மிருக்கா..? உங்களைப் போய் கண்ணியவான்னு இந்த ஊரே சொல்லுது..."

"காதலிகிட்ட போய் யாராவது கண்ணியம் காட்டு வானா..?"

பிரபாகரன் கைகள் அத்துமீற.. அவற்றைத் தட்டி விட்டு மாலினி உதட்டைச் சுளித்துச் சிரித்தாள்..

அவளது சிரிப்பில் மனதைப் பறிகொடுத்தவனாக பிரபாகரன்...

"இந்தப் புன்னகை என்ன விலை..?" என்று பாடினான்..

"உன் இதயம் சொன்ன விலை.." மாலினி அருவி நீர் ஓடிய நீரோடையில் வரிசையாக இருந்த கற்களின் மீது தாவி ஓடினாள்..

"ஏய்.. மாலினி.. மெல்ல விழுந்துவிடப் போகிறாய்.." பிரபாகரன் அவள் பின்னால் ஓடினான்..

காரை அடைந்து காரில் ஏறி அமர்ந்ததும்..

"பசிக்குது அத்தான்.." என்றாள் அவள் குழந்தையாக...

"நினைத்தேன்.. இப்படி ஒரு சாப்பாட்டுராமியைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறோமேன்னுதான் முன்னேற்பாடாக ஹோட்டலில் இருந்து வெரைட்டியாக வாங்கிக் கொண்டு வந்தேன்.. முழுங்கு.."

பிரபாகரன்.. பேப்பர் கப்பில் இருந்த ஃப்ரைடு ரைஸ்ஸில் ஸ்பூன் போட்டு அவளிடம் கொடுத்தான்..

"எப்படி அத்தான்..?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டபடி வாங்கி ஆவலாக சாப்பிட ஆரம்பித்தாள்...

"எப்படின்னு என்கிட்ட கேட்டால் எப்படி..? இதை நான் செய்யவில்லை.. ஹோட்டலில் வாங்கினேன்.."

"ஐய்யே.. நான் அதைச் சொல்லவில்லை.."

"வேறு எதைச் சொன்ன..?"

"இப்படி வாங்கிட்டு வரணும்னு உங்களுக்குத் தோணியிருக்கே.. அதைச் சொன்னேன்.."

"அதுக்கு முதலிலேயே விளக்கம் சொல்லிட்டேன்.. நீ கொட்டிக்க..."

அவளுக்கு அவன் மேல் காதல் அதிகமாகிவிட.. அவள் அவனையே பார்த்தவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்...

"என்னடி.. ஒரு மார்க்கமா பார்க்கிற..?" அவன் தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஃப்ரைடு ரைஸ்ஸை அவளுக்கும் ஊட்ட.. அவள் வாய்திறந்து வாங்கிக் கொண்டாள்...

"என்னமோ தெரியலை அத்தான்.. எனக்கு உங்க மேல காதல் காதலா வருது..."

அவள் சொல்லிய விதத்தில் அவன் கண்கள் மின்னின.. சாப்பிட்டுக் கொண்டிருந்த ஃப்ரைடு ரைஸ்ஸை அப்படியே வைத்துவிட்டு அவளருகே நெருங்கிவிட்டான்..

"அத்தான்.. வேண்டாம்.. சொன்னா கேளுங்க.."

சொல்லிப் பார்த்த மாலினி.. சொல்லால் பிரயோசன மில்லையென்று அவன் கைகளில் புகுந்து கொண்டாள்..

அவளைத் தழுவிக்கொண்ட பிரபாகரனின் இரும்புப் பிடியில் மாலினியின் எலும்புகள் கலகலக்க அவள் இன்பவலியை உணர்ந்தாள்..

அருவியிலிருந்து திரும்பும்போது.. அவர்களுக்கு இடையே பேச்சுக்களற்ற ஆழ்ந்த மௌனம் நிலவியது...

அது ஒருவரையொருவர் இணைக்கும் மௌனம்.. அவர்களின் உள்ளங்கள் மட்டும் பேசும் மௌனம்...

மாலினி தன் கையிலிருந்த மோதிரத்தையே சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்..

"ஏன்... அதை அப்படிப் பார்க்கிற..?"

"இல்லை.. துஷ்யந்தன்கூட சகுந்தலைக்கு இப்படித் தான் மோதிரம் போட்டான்..."

"மாலினி.."

பிரபாகரன் போட்ட அதட்டலில் மாலினியின் உடல் குலுங்கிவிட்டது.. காரை நிறுத்திவிட்டு.. அவள் பக்கம் திரும்பி பார்த்த பிரபாகரனின் கண்கள் தீக்கங்குகளாக ஜொலித்தன...

"எதுக்கு எதை இணைகூட்டுகிற..?"

"இல்லை பிரபா.. அது வந்து..?"

"பேசாதே.. நானும் அப்போதிலிருந்து பார்க்கிறேன்.. உனக்கு காட்டுக்குச் சீதையை அனுப்பிய ராமனும் கையிலே மோதிரத்தை மாட்டிவிட்டு சகுந்தலையை மறந்த துஷ்யந்தனும்தான் நினைப்புக்கு வருகிறாங்க.. உனக்கு நினைத்துப் பார்க்க வேறு நல்ல கேரக்டர்களே கிடைக்கலியா.."

"ஏன் அத்தான்.. ராமனும் துஷ்யந்தனும் நல்ல கேரக்டர்கள் இல்லையா.."

"அவங்க நல்ல கேரக்டர்கள்தான்.. ஆனால்.. உன் மனசுதான் அலைபாய்கிற மனசா இருக்கே.."

"அத்தான்..."

அதுவரை போட்டுக் கொண்டிருந்த வேஷம் கலைந்தவளாக மாலினி பொங்கி அழுதாள்.. பிரபாகரனின் முகம் மாறியது.. அவளை அருகில் இழுத்துக் கொண்டான்..

"பயமாய் இருக்கு அத்தான்.. நம் காதல் ஜெயிக்குமான்னு பயமாய் இருக்கு.."

அவள் வெகுநேரம் அழுது கொண்டேயிருந்தாள்..

# 76

**பொத்தி வைத்து உன் நினைவை..**

**பொக்கிஷமாக காக்கும் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"ராமனைப் போலவும் துஷ்யந்தனைப் போலவும் சிறந்த காதலன் வேறு யாரும் நம் இதிகாசங்களில் இல்லை மாலினி.. ராமன், சீதையைப் பார்த்த முதல் பார்வையை கம்பர்…

அண்ணலும் நோக்கினான்…

அவளும் நோக்கினாள்ன்னு வர்ணித்திருப்பார்.. அந்தக் காலத்தில் சைட் அடிப்பதை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தவன் ராமன்தான்…"

பிரபாகரன் பேசிய விதத்தில் மாலினியின் இதழ்களில் லேசாக புன்னகை மலர்ந்தது..

"நம்ம துஷ்யந்தனை எடுத்துக்கயேன்…"

ஏதோ பக்கத்து வீட்டுக்காரனைச் சொல்வதைப் போல மாலினியின் பாணியிலேயே பிரபாகரன் சொல்ல ஆரம்பித்தான்…

"அவனும் ராமனைப் போல சகுந்தலையைக் கண்டதும் காதல் கொண்டவன்தான்.. என்ன ஒண்ணு, ராமன் மிதவாத காதல்வாதி.. துஷ்யந்தன் தீவிரவாத கால்வாதி…"

மாலினியின் சிரிப்பு இன்னும் கொஞ்சம் விரிந்தது..

"சைட் அடித்த ராமன்.. சீதையைத் தேடிப் போகாமல் முறைப்படி அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் வழியைத் தேடி சுயம்வர மண்டபத்துக்குப் போனார்.. சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள என்ன வழின்னு பார்த்தார்.. நம்ம பாட்டிக்கு பாட்டி காலத்தில்

கிராமப் பக்கம் ரெண்டு மூணு வழக்கம் இருக்குமாம்.. அது உனக்குத் தெரியுமோ என்னவோ.."

"சந்தேகமே வேண்டாம்.. தெரியாது.."

"அதுதானே... நீதான் மழைக்குக்கூட கிராமத்துப் பக்கம் ஒதுங்காத ஆளாச்சே..."

"என் பெருமை இருக்கட்டும்.. நீங்க சீதையின் பெருமைக்கு வாங்க.."

"கிராமத்துப் பக்கம்.. பெரிய பாறாங்கல்லைக் கட்டி அதைத் தூக்குகிறவனைத்தான் கட்டிக்குவேன்னு என் பாட்டிக்கு பாட்டி காலத்தில் சொல்வாங்களாம்.. இல்லைன்னா.. அடங்காத காளையை அடக்குகிறவனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு அடம்பிடிப் பாங்களாம்.. அதைப் போல ஜனக மகாராஜாவும்.. யாராலும் அசைக்க முடியாத வில் ஒண்ணை வைத்துக்கிட்டு இந்த வில்லை வளைத்து நாணேற்று கிறவனுக்குத்தான் என் பெண்ணைக் கொடுப்பேன் அடம்பிடிச்சுக்கிட்டு இருந்தாராம்.."

"இந்தக் கதை எனக்குத் தெரியாது பாருங்க.. நீங்க எனக்கு கதை சொல்ல வந்துட்டீங்க.."

"நீதான் இதிகாச சுந்தரியாச்சே.. உனக்கு கதை சொல்ல வரவில்லை... ராமனின் கேரக்டரைச் சொல்ல வந்தேன்.."

"இரண்டும் ஒண்ணுதானே.."

"இல்லை.. இரண்டுமே வேறு வேறு.. நீ ராமனையும் துஷ்யந்தனையும் பார்க்கும் கோணம் வேறு.. நான் சொல்லும் கோணம் வேறு..."

மாலினி அவன் என்ன சொல்ல வருகிறான் என்ற எதிர்பார்ப்புடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

"ராமன் போனான்.. வில்லை எடுத்தான்.. அதை கம்பர்

எடுத்தது கண்டனர்..

இற்றது கேட்டனர்ன்னு..

அழகாக சொல்லியிருக்கிறார்.. நொடிப் பொழுதில் வில்லை உடைத்து சீதைக்கு வுட்பியாகி விட்டான்.."

மாலினியின் முகத்தில் இருந்த பயம் அகன்று அவள் மெல்லச் சிரித்தாள்...

"அதுவே நம்ம துஷ்யந்தன் என்ன பண்ணினான்.. இந்த சுயம்வரத்தில் எல்லாம் அவனுக்கு ஆர்வமில்லை.. டகார்ன்னு கையில் இருந்த மோதிரத்தைக் கழட்டி அவள் விரலில் போட்டு விட்டான்.. நீதாண்டி என் பெண்டாட்டின்னு உடனே முதல் பகலை கொண்டாடி விட்டான்.."

"முதல் பகலா..?"

"காட்டுக்குள்ளே வேட்டையாட வந்தவன் ராத்திரியிலா வருவான்..? அவன் சகுந்தலையை பகல் நேரத்தில் தான் காட்டில் பார்த்தான்.. உடனே கொண்டாடினால் அது முதலிரவாகவா இருக்கும்.. முதல் பகல்தானே..?"

"உங்க புத்தி இருக்கிறதே..."

பிரபாகரனைச் செல்லமாக கடிந்துகொண்டே முகம் சிவந்தாள் மாலினி.. அவளது முகச்சிகப்பை ரசித்தபடி பேச்சைத் தொடர்ந்தான் பிரபாகரன்...

"ராமன் அப்படிச் செய்யவில்லை.. சைட் அடித்த பெண்ணை முறைப்படி பெண் கேட்டு.. அப்பா அம்மா முன்னால் வைத்து தாலிகட்டி பெண்டாட்டியாக்கிக் கொண்டான்.. துஷ்யந்தன் யாருக்கும் தெரியாமல் காந்தர்வக் கல்யாணம்னு சொல்லி.. சகுந்தலையையும் காட்டுக்குள் முதல் பகலையும் ஹனிமூனையும் கொண்டாடிவிட்டு சமர்த்தாய் நாட்டுக்கு திரும்பிவிட்டான்.."

"திரும்பியவன் சகுந்தலையை மறந்து போனானே.."

"அது துர்வாச முனிவரின் சாபத்தினால்தானே மாலினி.. மறந்துதானே போனான்..? அவளுக்கு துரோகம் நினைக்கவில்லையே.. அவன் அந்தக் காலத்திலேயே அம்னிஷியாவினால் பாதிக்கப்பட்டவன்.. இந்த கஜினி

படத்தில் நம்ம சூர்யா நடித்திருக்கும் நோயாளி கேரக்டர் போல மறதியினால் பாதிக்கப்பட்டவன்.. அவன் தெரிந்தே தப்பு செய்தானா.. சொல்லு.. கேட்டுக்கறேன்..."

"அது இல்லைதான்.."

"நீயே சொல்லு.. அந்தக் காலத்தில் மகாராஜாவின் பட்டத்து ராணியாக அரியணை ஏறணும்னா.. அந்தப் பெண் ராஜ வம்சத்தில் பிறந்திருக்க வேண்டும்.. சிக்கலில்லாத குடும்பப் பின்னணி இருக்க வேண்டும்.. சகுந்தலைக்கு இது இரண்டுமே இல்லை..."

"அட.. நிஜம்தான்.. இதை எப்படி நான் யோசிக்காமல் போனேன்..?"

"நீதான் இதைத் தவிர எல்லாத்தையும் யோசித்து விட்டாயே.. ஆமாம் இப்ப 'அட'ன்னு சொன்னாயே.. யாரைச் சொன்ன.. என்னையா..?"

"போங்கத்தான்..!"

"எங்கே போகச் சொல்கிற.. இந்த அருவிக்கரை காட்டுக்கா..?"

"ப்ளீஸ், பிரபா.."

"ம்ஹூம்.. நீ எந்த நேரம் அத்தான்னு கொஞ்சுவாய்.. எந்த நேரம் பிரபான்னு கெஞ்சுவாய்ன்னு எனக்குப் பிடிபட மாட்டேங்குது.. என்னவோ செய்.. நான் கதையை கன்டினியூ பண்றேன்.. சகுந்தலைக்கு அப்பா விசுவாமித்திரர்.. அம்மா மேனகை.. இரண்டு பேருமே பிறந்த குழந்தையை அம்போன்னு விட்டுவிட்டு அவங்கவுங்க வழியில் போயிட்டாங்க..."

"ஆமாமில்ல..."

"இப்ப சொல்லு... குழந்தை பிறக்கும் வரை குடும்பம் நடத்திவிட்டு குழந்தை பிறந்ததும்... தவம் செய்யப் போகிறேன்னு விசுவாமித்திரர் எங்கோ போயிட்டார்.. தேவலோகத்தில் டான்ஸ் ஆடப் போகணுமுன்னு மேனகையும் எங்கோ போயிடுச்சு.. கடைசியில்

மாட்டிக்கிட்டது துர்வாசர்தான்.. அவரும் 'பிடி சாபம்' கேஸு.. இப்படிப் பட்ட ஃபேமிலி பேக்ரவுண்டு இருக்கிற பெண்ணை.. நினைவு திரும்பியதும் துஷ்யந்தன் தேடிப் போய் மனைவியாக்கிக் கொண்டானா இல்லையா.. அவள் வயிற்றில் இருந்த குழந்தையை தன் வாரிசாக ஏற்றுக் கொண்டானா இல்லையா..?"

"அந்தக் குழந்தைதான் பரதன்.. அதனால்தான் நம்ம இந்தியா பாரத நாடுன்னு ஆச்சு..."

"சின்ன வயதில் படித்த பாடத்தை ஒப்பிக் கிறாயாக்கும்.. போகுது போ.. இப்ப என் கேள்விக்குப் பதிலைச் சொல்லு.. துஷ்யந்தன் துரோகியா..?"

"இல்லை..."

"அவன் காதலித்த பெண்ணை கைவிட்டானா..?"

"இல்லை..."

"அப்புறம் எதுக்கு அவனைப் பத்தி சொல்லி பயப்படுகிற..?"

மாலினி பேசாமல் இருந்தாள்.. பிரபாகரன்.. அவள் யோசிப்பதை புரிந்து கொண்டவனாக ராமனின் கதைக்கு தாவினான்...

"ராமன், சீதையை காட்டுக்கு அனுப்பினான்தான்.. அவனுடைய அப்பாவுக்கு அறுபதாயிரம் பெண்டாட்டிகளாம்.."

"நீங்கள் கண்டீங்க.."

"இதுக்கு மட்டும் உடனே பதில் பேசிருவியே.. மூணு பெண்டாட்டிகள்ங்கிறதாவது கன்ஃபர்ம்தானே.. இல்லை.. அதையும் இல்லைன்னு சொல்லுவியா..."

"எனக்கு அதெல்லாம் தெரியாது.. ஊருக்குள்ள அறுபதாயிரம் பெண்டாட்டி கட்டியவன்.. ஒருத்தி மீது கூடச் சந்தேகப்படவில்லை.. இந்த ராமன் ஒரே ஒருத்தியைக் கட்டிக்கிட்டு அவளைப் படுத்திய பாடு இருக்கிறதே.. அப்பப்பா..."

"அவன் மட்டும் நிம்மதியாக இருந்தானாடி.. அவன் செய்த யாகத்துக்கு பெண்டாட்டி கூடத்தான் உட்காரணும்னு சொல்லிட்டாங்க.. அவன் என்ன.. இன்னொரு பெண்டாட்டியா கட்டினான்.. சீதையைப் போல தங்கத்தால் சிலை பக்கத்தில் வைத்துக் கொண்டான்டி.."

"அவளைத்தான் உயிரோட இருக்கும்போதே சிலையாக்கி விட்டானே..."

"அவன் ஏகபத்தினி விரதன் மாலினி..."

"சீதை மட்டும் என்ன.. அசோக வனத்தில் அவள் பட்ட சித்ரவதைகள் எத்தனை.. ராவணனை ஏறெடுத்தும் பார்த்தாளா..?"

"சீதை பெற்ற பிள்ளைகளை.. பட்டத்து இளவரசர்களாக ராமர் ஏற்றுக்கொள்ள வில்லையா..?"

"அதுக்காக சீதை.. பூமியில் புதையுண்டு போக வேண்டியிருந்தது.. அதை மறந்துட்டீங்களா..?"

"சீதை போன துக்கத்தில்.. ராமனும் சரயு நதியால் மூழ்கி நீருக்குள் புதையுண்டு தன்னைத்தானே சாகடித்துக் கொண்டான்.. அதையும் நீ மறந்துபோனாயா..?"

"பிரபா..."

"ராமன், சீதையை சந்தேகித்திருந்தால் அவள் நினைவிலேயே வாழ்ந்து அவள் உயிரை விட்டவுடன் தானும் அதைப் போலவே உயிரை விட்டிருக்க மாட்டான்.. அவன் சீதையை உயிருக்குயிராய் காதலித்தாண்டி அவன் மிகச் சிறந்த காதலன்.."

மில்லின் முன்னால் இறங்கிக் கொண்டபோது.. மாலினியின் முகம் தெளிவாக இருந்தது.. அவள் குனிந்து பிரபாகரனைப் பார்த்து புன்னகைத்தாள்..

"தேங்க்ஸ்..."

"எதுக்குடி..?"

"எல்லாத்துக்கும்.."

அவள் சட்டென்று திரும்பி மில்லிற்குள் சென்று மறைந்துவிட்டாள்.. பிரபாகரனின் காதுகளில் வெகுநேரம் அந்த வார்த்தை ஒலித்துக் கொண்டேயிருந்தது..

'எல்லாவற்றிற்கும் நன்றி சொல்கிறாளா..?' அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

அவன் மனம்.. மாலினியுடன் தனித்திருந்த பொழுது களை நினைத்துப் பார்த்தது...

'எல்லாத்துக்கும்' என்று அவள் சொன்ன சொல்லுக்கு புதுப்புது அர்த்தங்களைக் கண்டுபிடித்து மகிழ்ந்தது..

அவனுக்கு அப்போதே மில்லிற்குள் போய் மாலினியின் கைபிடித்து அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் போல இருந்தது...

'என்ன கேபி.. எங்க மில்லுக்குள் வந்து.. எங்க இன்ஜினீயரின் கையைப் பிடித்து இருக்கறீங்க..'

'இவள் என் பெண்டாட்டி தங்கப்பன்..'

சொல்லிவிட்டால்தான் என்ன என்று தோன்றியது அவனுக்கு..

இவள் என் மனைவி.. என்னில் பாதி.. இல்லை யில்லை.. இவளே நான்.. நானே இவள்.. என்னில் முழுமையாக கலந்து விட்டவள்.. இவளை விட்டுத் தனித்திருக்க என்னால் முடியாது.. இப்போதே என்னுடன் கூப்பிட்டுக் கொண்டு போகிறேன்...

பிரபாகரன் செல்போனை எடுத்தான்.. மறுமுனையில் மாலினி எடுத்தவுடன்..

"வா.." என்றான்..

"அத்தான்.." அவள் திகைத்தாள்...

"வந்துவிடு..."

"என்ன இது..?"

"ம்ச்சு.. வாடின்னா.."

"என்னதான் ஆச்சு.."

"எனக்கு நீ வேண்டும்.."

"ஆரம்பிச்சாச்சா.. இவ்வளவு நேரமும் உங்களுடன் தானே ஊர் சுற்றிக்கிட்டு இருந்தேன்.. இப்பவாவது வேலையைப் பார்க்க வேண்டாமா..?"

"உனக்கெதுக்கு வேலை..?"

"உங்க பக்கத்தில் இருக்கத்தான்.."

"விளையாடுகிறயா..?"

"ஊஹூம்.. நம்ம நிலைமையை நினைப்பூட்டு கிறேன்.. நான் என்ன ஸ்வேதாவா..? காரணமில்லாமல் உங்கள் வீட்டில் நான் தங்க முடியுமா.. வேலைக்குப் போகிறேன்னுதானே உங்க வீட்டுக்கு தங்க வந்தேன்.. நான் வேலை பார்க்கணுமுன்னுதானே எங்க வீட்டிலிருந்து உங்க ஊருக்கு அனுப்பி வைச்சாங்க.. சென்னையிலிருந்து மார்த்தாண்டத்திற்கு எதுக்காக வந்தேனோ.. அதையும் நான் பார்க்கணுமில்லையா..?"

"நீ என் வீட்டு மகாராணிடி..."

"இப்போதைக்கு.. உங்க காதலி மட்டும்தான்.. ஊரறிய நீங்க என் கழுத்தில் தாலியைக் கட்டின பின்னால் தான்.. நான் உங்க வீட்டு மகாராணியாக முடியும்..."

"அதுவரைக்கும் பொறுத்திருக்க என்னால முடியாது..."

"பொறுத்திருக்கணும்.. நீங்க கோட்டையூர் ஜமீன்தாரர்.. உங்க அப்பா.. அம்மாவின் மூத்த மகன்.. கருணா.. தினா.. காயத்ரிக்கு மூத்த அண்ணன்.. தி கிரேட் கேபி.. இரும்பு மனிதன்.. நீங்க போய் இப்படித் தடுமாறலாமா..?"

## 77

**இமைப்பொழுதும் விலக முடியாமல்..**

**உன்னுடனே இருக்கும் மனதை..**

என்னவென்று நான் சொல்ல..?

மாலினி குழந்தைக்குச் சொல்வதைப் போல இதமாகச் சொன்னாள்.. அவன் ஒருவழியாக சமாதானமாகி போனை வைத்ததும் செல்போனைப் பார்த்துக் கொண்டே அசைவற்று அமர்ந்திருந்தாள்..

'என்ன மாதிரியான காதல் இது..' அவள் உடல் சிலிர்த்தது..

அவனது காதலின் வீச்சைக் கண்டு அவள் ஸ்தம்பித்தாள்.. அசுர வேகத்தில்.. ஆக்டோபஸ் போல அவளைச் சுற்றி வளைத்த அவனது காதலின் வேகத்தில் அவளுக்கு மூச்சுத் திணறியது.. அவனது இரும்பு மனதின் உறுதியைப் போல அவனது காதலும் உறுதியுடன் அசைக்க முடியாத வலிமையுடன் அவள் மேல் விழுந்து பாரமாய் அவளை அழுத்தியது...

அவள் அந்த பாரத்தில் கரைந்துபோகத்தான் விரும்பினாள்.. யாராலும் அசைக்க முடியாத அந்த இரும்பு மனிதனின் மனதை அசைத்துவிட்டதில் கர்வம் கொள்ளத் தான் செய்தாள்.. மூச்சுத் திணற வைத்த அவனது காதலில் மூழ்கிவிடத்தான் துடித்தாள்.. அவனது காதலின் வேகத்திற்கு.. அவளது காதலின் வேகம் கொஞ்சம்கூட குறைந்ததல்ல என்று அவனுக்கு காட்டத்தான் நினைத்தாள்..

இது அத்தனையையும் தாண்டிய ஏதோ ஒன்று அவளது மனதைப் போட்டுப் பிசைந்தது.. என்னவென்று சொல்ல இயலாத ஏதோ ஒன்று அவள் முன் நின்று பயமுறுத்தியது...

அது என்னவாக இருக்கும்.. அவளால் யூகிக்க முடியவில்லை..

பிரபாகரனின் மிகப் பெரிய எட்டாத உயரமா..? அவனது ராஜவம்ச பின்புலமா..? அவையிரண்டையும்

தாண்டித்தானே சசிரேகாவும் கருணாகரனை அடைந்தாள்..?

கருணாகரன், சசிரேகாவின் மேல் கொண்ட காதலுக்கு சளைத்தல்ல பிரபாகரனின் காதல். இன்னும் சொல்லப் போனால் அதைவிட கோடி மடங்கு வலுவான காதலை மாலினியின் மேல் பிரபாகரன் காட்டினான்.. கொட்டினான்..

இருந்தும் மாலினி மனம் தவித்தாள்...

அது.. அவளது ஆழ்மனம் மட்டுமே அறியும் ரகசியம்.. அது.. அவளது நம்பிக்கை.. அது.. அவள் சிறுவயதிலிருந்தே கண்கூடாக கண்டு வந்த நிகழ்வு.. அது.. அவள் மனம்விட்டுச் சிரிக்கும் போதெல்லாம்.. இந்த சிரிப்பு நிலைக்குமா என்று நெஞ்சில் முள்ளாய் நெஞ்சில் நிரடும் கேள்வி. அது.. அவள் யார் மீதும் பிரியம் வைக்கப் பயப்படும் அச்சம்..

சிறுவயதில் மாலினி ஆசைப்பட்ட பொம்மையை ஜானகிராமன் உடனே வாங்கிக் கொடுத்துவிட்டார்.. இரவும்.. பகலும் அந்த பொம்மையைப் பிரியாமல் பக்கத்தில் வைத்துக் கொண்டே மாலினி உண்டாள்.. உறங்கினாள்.. விளையாடினாள்..

ஒரு நாள் அவள் வீட்டிற்கு ஜானகிராமனின் தங்கை குடும்பத்தினர் விருந்தினராக வந்திருந்தார்கள்.. அவருடைய அத்தையின் மகள் மாலினி பொம்மையை ஆர்வமாகப் பார்த்தாள்.. அவர்கள் ஒரு வார காலம் மாலினியின் வீட்டில் தங்கியிருந்தார்கள்.. அவர்கள் ஊருக்குக் கிளம்பிய அதிகாலையில் பொம்மை.. அவளது கையணைப்பில் இல்லை.. அவளுடைய அத்தையின் மகள் அதைக் கவர்ந்து சென்றிருந்தாள்..

'எனக்குப் பிடித்திருக்கிறது.. இந்தப் பொம்மையை எனக்குத் தந்துவிடு..' என்று ஒரு வார்த்தை அவள் வாய் திறந்து மாலினியிடம் கேட்கவில்லை...

கேட்காமலே களவாடிச் சென்றுவிட்டாள்... களவு கொடுத்த மாலினியின் குழந்தை உள்ளம் அந்த அதிர்ச்சியிலிருந்து

மீள வெகு நாள்களாயின...

அன்றிலிருந்து மாலினி பொம்மையின் மீது ஆசை வைப்பதை நிறுத்திவிட்டாள்..

அவள் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தபோது.. ஈஸ்வரி என்ற சிறுமி அவளுக்கு நெருக்கமான தோழியாக இருந்தாள்.. இருவரும் தின்பண்டங்களை பகிர்ந்து உண்பார்கள்.. பக்கத்து பக்கத்து பெஞ்சுகளில் அமர்ந்து கொள்வார்கள் சேர்ந்தே பாடம் படிப்பார்கள்..

மாலினி, ஈஸ்வரியை மிகவும் நேசித்தாள்.. ஒரு நாள் அந்த ஈஸ்வரி அழுதுகொண்டே பள்ளிக்கு வந்தாள்..

"ஏண்டி அழுகறே.." மாலினி பரபரத்தாள்..

"எங்க அப்பாவுக்கு வெளிநாட்டிலே வேலை கிடைச்சிருக்காம்.. நாங்க குடும்பத்தோட அவர்கூடப் போகிறோம் மாலினி.."

"அப்போ.. நாளையில இருந்து நீ இந்த ஸ்கூலுக்கு வரமாட்டாயா..?"

"வரமாட்டேன்.. டி.ஸி. வாங்கத்தான் இப்ப வந்திருக்கேன்.."

அன்று பார்த்த ஈஸ்வரியை மீண்டும் மாலினி சந்திக்கவே இல்லை.. ஆழமாய் பழகிய நட்பு.. ஒரு நாள் காலையில் அவளை விட்டுப் பிரிந்து சென்றதை அவளது பிஞ்சு மனம் மறக்க வெகு நாள்கள் ஆகின..

அதற்குப் பின்னால்.. யாருடனும் ஆழ்ந்த தோழமையுடன் பழக.. பயப்பட ஆரம்பித்தாள் மாலினி..

'இந்த ஃப்ரெண்ட்ஷிப் எத்தனை நாள் நிலைக்குமோ..?'

அவள் ஆசையாக வாங்கிய சுடிதார் கடையிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் காணாமல் போனது.. அவள் ஆர்வமாக டிஸைன் செய்து அணிந்த தங்க அட்டிகை.. போட்ட முதல் நாளிலேயே அறுந்து விழுந்தது.. அவள் பார்த்துப் பார்த்து வளர்த்த ரோஜாச் செடியை மாடு தின்று

விட்டது.. என்று அவளது கனவுகள் சிதிலப்பட்ட கதைகள் ஏராளம் அவளிடம் உண்டு..

இன்று பிரபாகரனின் மேல் அவள் காதல் கொண்டிருக்கிறாள். அவனது ஆண்மை பொங்கும் கம்பீரமான தோற்றத்தில் மனம் மயங்கியிருக்கிறாள். அவனது தொடுகையை விரும்பி அவனுடன் கலக்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.. அவனது பேச்சில்.. சிரிப்பில்.. கோபத்தில்.. வசீகரத்தில் காதல் கொண்டிருக்கிறாள்..

'இது எத்தனை நாளுக்கு நிலைக்கும்..?'

இதுதான் அவள் மனதை இப்போது ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த கேள்வி..

குழந்தையாக இருந்தபோது பொம்மையின் மீது வைத்த பாசத்தைவிட அதிகமான பாசத்தை பிரபாகரனின் மீது அவள் வைத்திருந்தாள்.. சிறுமியாக இருந்தபோது பள்ளித் தோழியிடம் காட்டிய நட்பைவிட அதிகமான நட்பை பிரபாகரனிடம் காட்டினாள்.. அவள் ஆசையாய் வாங்கிய அணிமணிகளைவிட அதிகமான ஆசையை அவன் மேல் வைத்திருந்தாள்.. இவ்வளவு ஏன்.. அவளைப் பெற்றவர்களைவிடவும் கூடப் பிறந்தவனை விடவும் அதிகமாக பிரபாகரனை நேசித்தாள்..

மொத்தத்தில் மாலினி, பிரபாகரனை தன் உயிருக்கு மேலாக காதலித்தாள்.. அவன் மேல் உயிரையே வைத்து இருந்தாள்..

அவள் அன்பும்.. ஆசையும் வைத்த மற்ற இழப்புக் களுக்குப் பின்னாலும்.. அவளால் அவற்றை மறந்து வாழ முடிந்தது.. பிரபாகரனின் காதலை இழந்துவிட்டால் அப்படி வாழ முடியுமா என்ற கேள்வி மட்டும்தான் அவள் நெஞ்சில் நின்றது..

'செத்துவிடுவேன்..'

மாலினி வேதனையுடன் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

'அவனது காதல் இல்லையென்றால் செத்துவிடுவேன்.. பிரபாகரன் இல்லாமல் மாலினி இல்லை..'

"என்ன மாலினி.. யார்கிட்ட பேசிக்கிட்டு இருக்கீங்க.. காற்றுக்கிட்டயா..?"

ரமேஷின் கேள்வியில் தூக்கிவாரிப் போட்டு தன் உணர்வுக்கு மீண்டாள் மாலினி.

அலுவலக வேலையை மறந்து.. மனது யோசனைக்குள் மூழ்கிவிட்டதை நினைத்து அவளுக்குள் வெட்கம் எழுந்தது..

"சும்மா.. ஒரு குருட்டு யோசனை.." முணுமுணுத்த படி தலைகவிழ்ந்து கொண்டாள்..

"எதைப் பற்றி.. அருவியைப் பற்றியா..?" அவன் சிரித்தான்..

மாலினி சட்டென்று அவனை நிமிர்ந்து வியப்புடன் பார்த்தாள்..

"உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"காலையில் அஃபிஸியலா.. நான் வெளியே போக வேண்டியிருந்தது.. வொர்க்கை முடித்துவிட்டு திருத்தரப்பு அருவி வழியாகத்தான் ஜீப்பில் வந்தேன்..."

"கடவுளே.. உங்க கூட வேறு யாரும் இருந்தாங்களா..?"

"ஏ.ஈ இருந்தார்.. அப்புறம் டிரைவர்.."

"அவங்களும் பார்த்தார்களா..?"

"ஏன்.. பார்த்தால் என்ன...?"

ரமேஷ் புரியாமல் கேட்டான்.. மாலினி பதில் சொல்லவில்லை.. ரமேஷ், மாலினியின் எதிரே அமர்ந்து அவள் முகம் பார்த்தான்..

"யூஸீ மாலினி.. கேபி சாருக்கு இன்னொரு பெயர் உண்டு.."

"தெரியும்.. இரும்பு மனிதர்.."

"தெரிந்துமா பயப்படுகிறீங்க.. அவர் ஒன்றை நினைத்துவிட்டால் கடைசிவரை அதிலிருந்து மாறவே

மாட்டார்..."

'மாறாமல் இருக்க வேண்டும்..' மாலினியின் மனம் பயந்தது...

"அவரின் காதல் கிடைக்க நீங்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்..."

ரமேஷின் குரலில் தென்பட்ட பொறாமையை உணர்ந்தவளாக.. மாலினி வாய்விட்டுச் சிரித்தாள்..

"ரமேஷ்.. நீங்க என்ன பிரபாகரனைக் காதலிக் கிறீங்களா..?"

"பெண்ணாகப் பிறந்திருந்தால் கட்டாயம் அவரைக் காதலித்திருப்பேன்.. அவருடைய ஹீரோ இமேஜின் மேல் எனக்கு அந்த அளவுக்கு வெறிபிடித்த ஆராதனை உண்டு.."

ரமேஷின் கண்கள் மின்னின.. மாலினி இன்னும் அதிகமாக சிரித்தாள்..

"நல்லவேளை.. நான் பிழைத்தேன்.."

மாலினியின் முகத்தையே பரிவுடன் பார்த்துக் கொண்டிருந்த ரமேஷின் முகம் கனிந்தது...

"நீங்க கொடுத்து வைத்தவங்க.. கேபி சாரின் பெயரைச் சொல்லி கூப்பிடுகிற அளவுக்கு அவர்மேல் உங்களுக்கு உரிமையிருக்கு.. அவரும் கொடுத்து வைத்தவர் தான்.. உங்களைப் போல ஒரு பெண் அவரை உயிருக்குயிராய் காதலிக்கும் அதிர்ஷ்டம் அவருக்குக் கிடைத்திருக்கு.. நீங்க இரண்டு பேரும் பொருத்தமான ஜோடி மாலினி.. வாழ்த்துகள்.."

அவளுக்கு ரமேஷின் வாழ்த்து மனபலத்தைக் கொடுத்து அது நேரம் வரை அவள் மனதை அரித்த கவலை மறந்துபோக.. அவள் வெள்ளையாக சிரித்தாள்..

"தேங்க்ஸ் ரமேஷ்..."

அதன் பின்னால் வேலையில் ஈடுபட அவளுக்குச் சிரமமாக இல்லை..

மாலையில் வீடு திரும்பும்போது.. ரமேஷின் நினைவில் பொங்கிச் சிரித்தாள்..

கண்களில் காதல் வழிய.. பிரபாகரன்..

"என்னடி..?" என்று வினவினான்..

"ரமேஷை நினைத்துக் கொண்டேன்.. சிரிப்பு வந்தது..."

"அடிவாங்கப் போகிறாய்.. என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவனின் நினைவா..?"

"பொறாமை.. ம்ஹூம்.. ஆக்சுவலாய் எனக்குத்தான் ரமேஷின் மேல் பொறாமை வர வேண்டும். ஆனால்.. ரமேஷ் என் மேல் பொறாமைப்படுகிறார்..."

"எதற்காம்..."

"ரமேஷ் மட்டும் பெண்ணாகப் பிறந்திருந்தால் உங்களைத்தான் காதலித்திருப்பாராம்..."

இப்போது மாலினியின் சிரிப்பு பிரபாகரனையும் தொற்றிக் கொண்டது...

"போடி.. வாயாடி..."

மாலினி நகர்ந்து பிரபாகரனின் தோள் மீது சாய்ந்து அவனது கையை வளைத்துப் பிடித்து கண்மூடிக் கொண்டாள்...

## 78

**உன் தோள் சாயும் அந்நேரம்..**

**புவியாளும் என் மனதை..**

என்னவென்று நான் சொல்ல..?

பூஜையறையில் கண்மூடி அமர்ந்திருந்தாள் நர்மதா.. அங்கே போன மாலினி சந்தடி செய்யாமல் கைகுவித்து வணங்கிவிட்டு திரும்பப் போனாள்...

"மாலினி.." நர்மதா விழி திறக்காமலே அழைத்தாள்..

"அத்தை.." மாலினி ஆச்சரியப்பட்டுப் போனாள்..

"ஏன் அவசரமாய் போகிறாய்.. உட்கார்..."

நர்மதாவின் எதிரே அமர்ந்த வண்ணம்...

"நான் வந்திருக்கிறேன்னு எப்படித் தெரிந்தது அத்தை.. நீங்க தியானத்தில் இருந்தீங்களே..."

"உள்ளுணர்வு சொல்லியது..."

நர்மதா விழி திறந்து புன்னகைத்தாள்.. கற்பூர ஆரத்தி காட்டிய வண்ணம்...

"எப்படியிருக்கும்மா வேலையெல்லாம்..?" என்று வினவினாள்.. இத்தனை நாளாக இல்லாமல் இன்றைக்கு ஏன் இப்படிக் கேட்கிறாள் என்று மாலினியின் மனம் சஞ்சலப்பட்டது...

"எப்போதும் போல இருக்கு அத்தை.."

"நேற்று திருத்தரப்பு அருவிப் பக்கம் உன்னைப் பார்த்ததாக யாரோ ஒருத்தங்க சொன்னாங்க.. நீ வேலைக்குத் தானே போனாய்..?"

"அத்தை.."

மாலினிக்கு பேச முடியவில்லை. நர்மதா புன்னகை மாறாமல் அவளிடம் கற்பூர ஜோதியைக் காட்ட.. தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்...

பூஜையறையை விட்டு நர்மதா வெளியே வந்தாள்.. மாலினி அவளைப் பின்தொடர்ந்தாள்.. தனது அறைக்குள் சென்ற நர்மதா... அறைவாசலில் தேங்கி நின்றுவிட்ட மாலினியைத் திரும்பிப் பார்த்து புருவம் உயர்த்தினாள்..

"ஏன் நின்றுவிட்ட மாலினி.. உள்ள வா.."

என்றாவது ஒரு நாள் நர்மதாவுக்கு பதில் சொல்ல நேரும் என்று மாலினிக்கு நன்றாகத் தெரியும்தான்.. ஆனால், அந்த ஒரு நாள் இவ்வளவு சீக்கிரமாக வரும் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.. அத்துடன் இந்த நாளை பிரபாகரன் இல்லாமல் தனியாக எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவள் நினைத்துப் பார்த்ததில்லை..

அவள் கைவிரல்கள் நடுங்கியதைப் பார்த்தவாறே சோபாவில் அமர்ந்த நர்மதா.. மாலினிக்கு எதிரேயிருந்த சோபாவைக் காட்டினாள்..

மாலினி தயக்கத்துடன் அமர்ந்து கொண்டாள்..

நர்மதாவின் விழிகள் கூர்மையுடன் அவள்மேல் படிந்தன...

"இதை நான் பிரபாவிடம்தான் கேட்டிருக்கணும்.. அதுதான் நியாயம்.. ஆனால், நான் அவனிடம் கேட்க வில்லை.. உன்னிடம் கேட்கிறேன் ஏன் தெரியுமா..?"

பிரபாகரனின் பேச்சு வந்ததுமே மாலினி இன்னும் அதிகமாக பதற்றமடைந்தாள்.. அதனால் பேச நா எழும்பாமல் ஏனென்று கேள்வி கேட்கும் பாவனையில் விழியுயர்த்தி நர்மதாவைப் பார்த்தாள்...

"அவன் தகப்பனுக்கே பாடம் சொல்லும் சுப்பிரமணியம் சுவாமி.. அவனிடம் கேள்வி கேட்க என்னால் முடியாது..."

'அதுசரி.. காதல் சொல்லிய உங்கள் மகனிடம் கேள்வி கேட்காமல் தகப்பன்சாமி கதை சொல்லி தப்பித்து விடுவீங்க.. மாட்டிக்கிட்டது மட்டும் நானா..?'

"அருவிக்கரையில் உங்களை நிறையப் பேர் பார்த்திருக்கிறாங்க..."

'அருவின்னா அப்படித்தான் கூட்டம் இருக்கத்தான் செய்யும்.. வந்தவங்க பார்த்திருப்பாங்க...'

"எனக்கென்னன்னா.. இதை மத்தவங்க சொல்லி நான் தெரிஞ்சுக்க வேண்டியதாயிடுச்சேங்கிறதுதான்.."

'வேறு என்ன செய்யணும்னு சொல்கிறீங்க.. காதலிக் கிறவங்க வீட்டில் சொல்லிவிட்டா காதலிக்க முடியும்?'

"பிரபாகரனை விடு.."

'நீங்க அதிலேயே குறியாக இருங்க...'

"நீ என்னிடம் சொல்லியிருக்கணுமா.. இல்லையா..?"

'இது நல்ல கதையாய் இருக்கே.. உங்கள் மகனை விட்டுவிடுவீங்க.. என்கிட்ட நியாயம் கேட்பீங்களா.. அப்பா.. பிரபாகரா! உங்க அம்மாகிட்ட இருந்து என்னைக் காப்பாத்த வாங்க சாமி.. உங்களுக்கு கோடி புண்ணியமாய் போகும்..'

அவளின் அபயக் குரல் காதில் விழுந்ததைப் போல..

"அம்மா.." என்று அழைத்தபடி அறைக்குள் வந்தான் பிரபாகரன்.. வந்தவன் மாலினியைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன்..

"ஹேய்.. நீ இங்கேயா இருக்க.. உன்னை எங்கே யெல்லாம் தேடுவது..?" என்றும் கேட்டு வைத்தான்..

'இவன் ஒருத்தன் நானிருக்கும் நிலைமை புரியாமல் பேசி வைப்பான்.. வாயை வைத்துக் கொண்டு இவன் சும்மா இருக்கக்கூடாதா..' மாலினி மானசீகமாய் தலையில் கை வைத்தாள்..

"என்ன விஷயம் பிரபா.." நர்மதா மகனிடம் கேட்டாள்..

'இந்த அத்தை.. மகனிடம் எதைப் பற்றிக் கேட்கிறாங்க.. என்னை எதுக்காக தேடினான்னு கேட்கிறாங்களா..' மாலினி நகம் கடித்தாள்..

"இப்ப எதுக்கு நகத்தை எச்சில் பண்ணுகிற..?" பிரபாகரன் அதட்டியபடி மாலினியின் அருகே சோபாவில் அமர்ந்து

கொள்ள.. மாலினி திகிலடைந்து போனாள்..

'கடவுளே.. நீதானே என்னைக் காப்பாற்றணும்..' அவசரமாய் அவள் எழுந்து கொள்ளப் போக...

"எங்கே போகிற? உட்கார்.." என்று அவள் கைபிடித்து தடுத்தான் பிரபாகரன்...

மாலினியின் கண்கள் நர்மதாவிடம் இறைஞ்சின.. அவள் யோசனையுடன் மகனை பார்த்தாள்.. மாலினி சங்கடத்துடன் மீண்டும் அமர்ந்தாள்..

"பிரபா.."

"என்னம்மா..?"

"நீ ஏதோ கேட்க வந்தாயே..."

"அது ஒன்றுமில்லை.. காயத்ரியின் கல்யாணத்திற்கு மண்டபம் புக் பண்ணியாகி விட்டது.. சமையல் காண்ட்ராக்டரை வரச் சொல்லி இருக்கிறேன்.. அவங்க வந்ததும் மெனுவைக் கேட்டு சரிபார்த்திருங்க..."

"எப்போ வருவார்..?"

"சாயங்காலம் ஆறு மணிக்கு..."

பிரபாகரன், மாலினியின் பக்கமாக சரிந்து எதையோ கேட்க.. அவள் பயத்துடன் நர்மதாவைப் பார்த்தாள்..

"அவ்வளவுதானே பிரபா.."

நர்மதா மகனைக் கிளப்பிவிடுவதில் மும்முரமாக இருந்தாள்..

"அவ்வளவுதான். அப்புறம்.. மாலினி.. இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்..?"

"என் கூடப் பேசிக்கொண்டிருந்தாள்.."

"நானும் ஜாயின் பண்ணிக்கலாமா..?"

"பெண்ணின் பேச்சு உனக்கெதற்கு பிரபா..?"

"இப்படிச் சொல்லியே ஆண்குலத்தை கழட்டி விடுங்க..."

வேடிக்கையாக பேசிய வண்ணம் பிரபாகரன் எழுந்து கொள்ளப் போகையில்.. மாலினி.. அவசரமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்..

அவளது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று பிரபாகரனுக்கு எதையோ அறிவுறுத்த.. அவன் யோசனையுடன் திரும்பவும் அமர்ந்தான்...

"என்ன பிரபா.. உட்கார்ந்துட்ட..?"

"மாலினியிடம் என்னம்மா பேசிக்கிட்டு இருந்தீங்க.."

"நான்தான் சொன்னேனே.. அது பெண்கள் விஷயம்னு.."

"இங்கிருக்கும் இரண்டு பெண்களும் எனக்கு இரண்டு கண்கள்.. அதனால் என்னிடம் சொல்லலாம் தப்பில்லை.."

"பிரபா..."

"அம்மா.. தாய்க்கு பின் தாரம்.. உங்களுக்குப் பின்னால் எனக்கு மாலினி.. இப்போது சொல்லுங்க.. எனக்குத் தெரியக்கூடாத ரகசியப் பேச்சு உங்களுக்குள் உண்டா..?"

அந்த நொடியில் பிரபாகரனைக் காதலித்ததற்காக மனதிற்குள் கர்வப்பட்டாள் மாலினி..

'இவன் எனது ஆண்..' அவள் மனம் பெருமிதத்துடன் சொல்லிக் கொண்டது...

எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் எந்த முன்னுரையும் சொல்லாமல் தெளிவாக போட்டானே ஒரு போடு...

'தாய்க்கு பின் தாரம்.. உங்களுக்குப் பின்னால் எனக்கு மாலினி' என்று.. எத்தனை பேருக்கு இப்படி ஒரு வரம் கிடைக்கும்..? யாருக்கு இப்படிப்பட்ட காதலன் கிடைப்பான்...?

வளவளவென்ற பேச்சு இல்லை.. புரியவைக்கும் முயற்சி இல்லை.. நான் இவளைக் காதலிக்கிறேன் என்று கூடச் சொல்லவில்லை.. 'இவள் என் மனைவி.. அப்புறம்.. வேறு

என்ன பேச்சு இருக்கிறது' என்று நிமிர்ந்து நிற்கிறானே.. இவனுடன் ஒரு நாள் வாழ்ந்தால் கூடப் போதுமே...

மாலினி அவனிடம் வாய்விட்டு அவளிருக்கும் நிலைமையைச் சொல்லவில்லை.. பார்வையிலேயே அவளது பரிதவிப்பைப் புரிந்து கொண்டு உடனே அவளை அவளிருந்த இக்கட்டான நிலைமையிலிருந்து காப்பாற்றி.. கௌரவமும் கொடுத்து விட்டானே..

"ஓராயிரம் பார்வையிலே..

உன் பார்வையை நானறிவேன்.."

அவளது பார்வையில் அவன் என்ன கண்டான்..? உடனடியாக தீர்வை உறுதியுடன் அவனால் எப்படி எடுக்க முடிந்தது..?

அதுதான் அவன்! தி கிரேட் பிரபாகரன்! மாலினிக்கு அவன் கைபிடித்து தோள் சாய்ந்து கொள்ள வேண்டும் போல தோன்றியது...

ஒரு பெண் தனது ஆணிடம் முதலில் வேண்டுவது பாதுகாப்பை.. அதை அவள் கேட்காமலேயே பிரபாகரன் கொடுத்துவிட்டான்.. நர்மதாவின் கேள்விக்கணைகள் அவளைத் தாக்காமல் காப்பாற்றிவிட்டான்.. அவனது தாய் வாய் திறந்து எதையும் கேட்க முடியாமல் செய்துவிட்டான்..

நர்மதாவின் முகம் மாறியது.. அவளுக்கு மாலினியைப் பிடிக்கும்.. அவளது இனிமையான சுபாவம்.. அவளது சுறுசுறுப்பு.. அவளின் அழகு.. அவளின் அறிவு என்று மாலினியிடம் கொண்டாட வேண்டிய நிறைய அம்சங்கள் இருப்பதை நர்மதா அறிவாய்..

ஆனால்.. இதற்காகவெல்லாம் மாலினியை அந்த வீட்டின் மூத்த மருமகளாக ஆக்கிவிட முடியுமா என்று தான் அவளது உள்ளம் கேள்வி கேட்டது...

மாலினியிடம் பிரபாகரன் காட்டுவது அதிகப்படி ஈடுபாடுதான் என்றால்.. மாலினியிடம் பேசும் விதமாகப்

பேசி அவளை ஒதுங்கிக் கொள்ளச் செய்துவிடலாம் என்று தான் அவள் நினைத்திருந்தாள்..

மாலினியும் ரோஷக்காரப் பெண் என்பதால் அவளது வேலை எளிதாக முடிந்துவிடும் என்பது அவளது கணக்கீடாக இருந்தது..

ஆனால்.. எல்லாவற்றையும் ஒரே வார்த்தையில் பிரபாகரன் முடித்து வைத்துவிடுவான் என்று அவள் எதிர்ப்பார்க்கவில்லை..

எதிர்பாராததை தருவதுதானே வாழ்க்கை..?

நர்மதா எதிர்பாராத வண்ணம் பிரபாகரன் அறைக்குள் வந்தான்.. அவனை வெளியே அனுப்ப நர்மதா முயற்சி செய்து வெற்றி பெறப் போகும் நேரத்தில் மாலினி இமை உயர்த்தி ஒரே ஒரு பார்வைதான் பிரபாகரனை பார்த்து வைத்தாள்.. அவன் அப்படியே அமர்ந்து.. நர்மதாவிடம் அவனது திருமணத்தைப் பற்றிய முடிவை அறிவித்து விட்டான்..

பிரபாகரனின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேச இனி இயலாது என்ற உணர்வில் நர்மதா பெருமூச்சு விட்டாள். பிரபாகரன முடிவு எடுத்துவிட்டான்.. இனி மாலினிதான் இந்த வீட்டுக்கு மூத்த மருமகளாக வந்தாக வேண்டும்.. அதில் எந்தவித மாற்றமும் வரவே வராது..

பிரபாகரனின் முடிவு என்பது மாற்ற முடியாத ஒன்று..

சசிரேகாவின் உறவுக்காரப் பெண்ணே தனக்கு மூத்த மருமகளாக வருவதில் நர்மதாவுக்கு சில சிக்கல்கள் இருந்தன..

ஏற்கெனவே கருணாகரனுக்கு அந்நியத்தில் பெண் எடுத்திருந்ததால்.. அவளது உறவினர் வட்டாரத்தில் அவள் மேல் மனத்தாங்கலுடன் இருந்தார்கள்.. இப்போது பிரபாகரனுக்கும் வெளியே பெண் எடுத்தால்.. அவள் ஆளவந்தாரின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும்..

அதைத் தவிர்க்க நர்மதாவினால் முடியாமல் போய் விட்டது..

79

**உன்னுடன் பேசும் போது...**

**உள் மனதில் தோன்றும் மகிழ்வை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பிரபாகரனின் மனதுக்குப் பிடித்த பெண்தான் அவனுக்கு மனைவியாக வரவேண்டும் என்பதில் நர்மதா தீர்மானமாக இருந்தாள்..

அதேசமயத்தில் அவனது மனதுக்குப் பிடித்த பெண் தன் உறவினர் வட்டாரத்தில்தான் அமைய வேண்டும் என்பதிலும் அவள் தீவிரமாக இருந்தாள்..

ஸ்வேதாவை மாணிக்கவாசகம் கொண்டு வந்து விட்ட போது அவள் ஆட்சேபிக்காமல் இருந்ததற்கு அதுதான் காரணம்..!

ஸ்வேதாவினால் பிரபாகரனின் மனதை ஜெயிக்க முடிந்தால் நல்லதுதானே.. அதற்கு அவளுக்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது தான் அவள் எண்ணம்..

ஸ்வேதாவினால் அந்தக் காரியம் இயலாமல் போய் விட்டது என்றதுமே அவள் மனம் பவித்ராவை குறிவைத்தது..

அதற்குள் பிரபாகரன் முடிவை அறிவித்து விட்டான்... பிரபாகரனின் மனவியாக வருகிறவளுக்கு நர்மதாவிற்கு இணையான ஏன்.. நர்மதாவைவிட அதிக மான அதிகாரம் அந்தக் குடும்பத்தில் வந்து சேரும். இது தவிர்க்க முடியாத ஒன்று..

அப்படிப்பட்ட பதவிக்கு மாலினி வருவதில் நர்மதாவுக்கு உடன்பாடு இல்லை...

அவளுக்கோ கணவன் இல்லை.. அவளுடைய மகளுக்கு கடைசிவரை ஜமீன் வீட்டிலிருந்து தாய்வீட்டுச் சீர்வரிசை செல்ல வேண்டும். இல்லாவிட்டால் கோட்டையூர் ஜமீன்

வம்சத்தில் பெண் எடுத்ததற்கான அர்த்தமே காயத்ரியின் கணவனுக்கு இல்லாமல் போய்விடும்..

அந்தச் சீர்வரிசை நர்மதாவின் காலத்திற்கு பின்னாலும் அவளுடைய மகளுக்கு நிற்காமல் நடக்க வேண்டுமென்றால்.. அதற்கு நர்மதாவின் உறவுக்காரப் பெண்ணொருத்தி பிரபாகரனுக்கு மனைவியாக வந்து வாய்க்க வேண்டும்..

"இப்போ.. என் முன்னால் மாலினியிடம் பேச வேண்டியதைப் பேசுங்கம்மா.."

'இனிப் பேசி ஆகப்போவதென்ன..?' நர்மதா பெரு மூச்சை விட்டாள்...

"ஒன்றுமில்லை பிரபா.. நீங்க போங்க.."

"ஏதோ பேச ஆரம்பித்தீங்களே.."

"காயத்ரியின் கல்யாணத்திற்கு சேலைகள் எடுக்கணுமில்லையா.. அதைப் பற்றி பேச நினைத்தேன்.."

"அதுக்கு ஏன் என்னைப் போகச் சொன்னீங்க..?"

"உனக்கு எத்தனையோ வேலைகளிருக்கும்.. சேலையைப் பற்றிப் பேசி உன வேலையைக் கெடுக்கக் கூடாதுன்னுதான் பார்த்தேன்..."

"இனி இதையெல்லாம் நானும் பழகிக்க வேணும் தானே அம்மா.. சும்மா சொல்லுங்க.."

அவன் உல்லாசமாக மாலினியைப் பார்த்துச் சிரித்தான்.. இப்போது அவனது சிரிப்பிற்கு பதில் சிரிப்புச் சிரிக்க மாலினி தயங்கவில்லை.. அதை நர்மதாவும் கவனித்தாள்.. அவள் முகம் இறுகியது...

"சொல்லுங்கம்மா.. என்ன என்ன கலரின் சேலை எடுக்கலாம்.. மாலினி அதிலெல்லாம் எக்ஸ்பர்ட்டும்மா.. நம்மோட தக்கலை மில்லில் மாலினியின் யோசனைப்படி தான் எல்லா இடங்களிலும் அழகுபடுத்தியிருக்கிறோம்.." பிரபாகரனும் உற்சாகமாய் சொல்ல..

'ஓ.. இப்போதிருந்தே இவளது அதிகாரத்தை காட்ட ஆரம்பித்து விட்டாளா..?' என்ற நினைவில் நர்மதா வெறுமையாக பார்த்தாள்..

பிரபாகரனின் செல்போன் ஒலித்து.. எடுத்துப் பேசியவன் எழுந்தான்..

"அம்மா.. எனக்கு அர்ஜெண்ட் வொர்க் இருக்கு.. மாலினி வா.."

"அவள் எதற்கு பிரபா..?"

"கொஞ்சம் பேச வேண்டியிருக்கும்மா..."

நர்மதாவின் பதிலை எதிர்பார்க்கமால் பிரபாகரன், மாலினியை பார்வையால் அழைத்தபடி வெளியே செல்ல.. வேறுவழியின்றி மாலினி அவனைப் பின்தொடர்ந்தாள்..

வாசலில் இறங்கியவன் தோட்டத்துக்கு அருகே வந்ததும் நின்று அவள் முகம் பார்த்தான்..

"என்னடி..?" என்று கனிவாக வினவினான்..

"பிரபா.." மாலினியின் கண்கள் கலங்கிவிட்டன..

"ம்ப்ச்சு.. எதுக்கு கண்ணீர் விடணும்.."

"பயமாயிருந்தது பிரபா..."

"எதுக்கு பயம்..?"

"அத்தை.. திடீர்னு விசாரிக்க ஆரம்பிச்சுட்டாங்க.."

"விசாரித்தால் சொல்ல வேண்டியதுதானே..?"

"எப்படிச் சொல்வதாம்..?"

"வாயால்தான் சொல்லணும்.."

"போதுமே.. ஜோக்கடிக்கிற நேரத்தைப் பாருங்க.."

"அவர்களுக்கு எப்படித் தெரிந்ததாம்..?"

"அருவிக்கரையில் நம்மைப் பார்த்த யாரோ இவங்களிடம் வத்தி வைத்திருக்காங்க.."

"யாராக இருக்கும்..?"

"தெரியவில்லையே.. ஆனால், ஒன்று பிரபா.."

"என்ன..?"

"நம்மை யாருமே கவனிக்கலைன்னு நாம நினைச்சுக்கிட்டு இருப்போம்.. ஆனால்.. நம்மை ஊரே கவனிச்சிருக்கும்.."

"கவனிச்சால் கவனிச்சுட்டுப் போகட்டும்.. இதில் என்ன ரகசியம் வந்து விட்டது..? என்னிக்கு இருந்தாலும் இதை நாம் வீட்டில் சொல்லித்தானே ஆகவேண்டும்.. அதை இன்னிக்கே சொல்லி விட்டேன்.. டோண்ட் ஒர்ரி.."

"உங்களைப் போல ஒரு புருஷன் கிடைத்த பின்னால் நான் ஏன் கவலைப்படப் போகிறேன்.. எனக்கு கவலையில்லை.."

'புருஷன்' என்ற அந்த வார்த்தையில் கிறங்கிப் போனான் பிரபாகரன்..

"ஏய்ய்.. என்னடி.. நேரம் காலம் தெரியாம என்னை மயக்கற.. எனக்கு அர்ஜெண்டா ஒரு வேலை இருக்குடி.. நான் இப்ப கன்யாகுமரிக்கு போகணும்.."

"போயிட்டு வாங்க.."

"இப்படிக் கிறங்கடிச்சா எப்படிப் போவது..?"

"காரில் போங்க.."

"நீயும் கூட வா.."

பிரபாகரனின் கண்களில் தாபம் தெரிந்தது.. மாலினிக்கே காதல் பொங்கியது.. அவள் உதடு கடித்து தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்..

"எல்லாம் போய்விட்டு வந்து கொஞ்சிக்கலாம்.. இப்ப கிளம்பப் பாருங்க..."

பிரபாகரனை தள்ளிவிடாத குறையாக மாலினி கிளப்ப முனைய.. அரைமனதாய் காருக்குள் ஏறப்போனவன், நின்று திரும்பிப் பார்த்தான்..

"என்னங்க..?"

"நீயும் உன் வீட்டில் சொல்லிவிடு மாலினி.."

"இப்ப வேண்டாம்.."

"ஏன்..?"

"இப்போதே தெரிந்தால்.. கல்யாணத்துக்கு முன்னால் ஒரே வீட்டில் பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து இருக்கக்கூடாதுன்னு சொல்லி என் அப்பா.. என்னைக் கிளப்பிக் கொண்டு போய் விடுவார்.. நான் கிளம்ப வேண்டியிருக்கும் பரவாயில்லையா..?"

"வேண்டாம்.. வேண்டாம்.. இத்தனை நாளும் இங்கே இருந்தவள்தானேடி நீ.."

"அப்பாவைப் பொறுத்தவரைக்கும் இது சசியின் புகுந்த வீடு.. என் புகுந்த வீடில்லை.. நீங்கள் யாரோ.. நான் யாரோன்னு அப்பா நினைச்சிருப்பார்.."

"இனிமேல் நீ வேறு.. நான் வேறில்லைன்னு புரிஞ்சுக்குவார் என் மானார்.."

பிரபாகரன் கையசைத்துவிட்டுக் காரைக் கிளப்பிக் கொண்டு போனான்.. மாலினி வீட்டுக்குள் சென்று நர்மதாவின் அறைவாசலில் நின்று அழைப்புமணியை அழுந்தினாள்..

"யாரு..?"

"நான்தான் அத்தை.."

"உள்ளே வா.."

மாலினி உள்ளே போனபோது.. நர்மதா அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டாள்..

அவளுக்கு குற்ற உணர்ச்சி எழுந்தது...

"உட்காரும்மா.." நர்மதா தலை நிமிராமல் சொன்னாள்..

மாலினி அவளுக்கு எதிரேயிருந்த சோபாவில் உட்கார்ந்தாள்..

"என்ன விஷயம்மா..?"

"நீங்க என்னிடம் கேள்வி கேட்டுக்கிட்டு இருந்தீங்க அத்தை..."

"இனிதான் அதுக்கு அவசியமே இல்லையே.. பிரபா அவனுடைய முடிவைச் சொல்லிவிட்டானே... இந்த வீட்டில் பிரபாகரன் எதைச் சொல்கிறானோ.. அது எழுதப்படாத சட்டம்.. அதை மாற்ற முடியாது.. மாற்றவும் நாங்க யாரும் நினைக்க மாட்டோம்.."

நர்மதாவின் குரலில் ஒட்டாத தன்மையை மாலினி கண்கொண்டாள். அவள் முகத்தில் யோசனை வந்தது..

"ஏன் அத்தை.. என்னை உங்க மருமகளாக்கிக் கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையா..?" என்று மெதுவான குரலில் கேட்டு விட்டாள்..

நர்மதா சட்டென்று நிமிர்ந்து மாலினியைப் பார்த்தாள்.. நேர்கொண்ட பார்வையுடன் நர்மதாவின் பார்வையைச் சந்தித்தாள் மாலினி..

அவளின் நிமிர்வைக் கண்ட நர்மதாவிற்கு உள்ளுக்குள் கோபம் துளிர்விட்டது..

'இவளுக்கு பிரபாகரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் திமிரா..?'

"இல்லைன்னு சொன்னால்.. நீ விலகிவிடுவாயா..?" பதிலுக்கு நிதானமாகக் கேட்டாள் நர்மதா..

மாலினி ஒரு வகையில் இதை எதிர்ப்பார்த்தாள்.. அதனால் அவளுக்கு அதிர்ச்சி ஏதும் ஏற்படவில்லை.. நர்மதாவிடம் தென்பட்ட அதே நிதானத்தை அவளும் கடைபிடித்தவாளாக பதில் சொன்னாள்..

"நிச்சயம் விலகி விடுவேன்.. உங்களுக்கு இஷ்டமில்லாத மருமகளாக இந்த வீட்டிற்குள் இருக்க எனக்கு

இஷ்டமிருக்காது.."

"இப்படி நினைக்கிறவள்.. முதலிலேயே என்னிடம் இது பற்றிப் பேசியிருக்கணும்.."

"காதல் பேசி முடிவு பண்ணிவிட்டு செய்யும் விஷயமில்லை அத்தை.. அத்தோடு.. நான் உங்கள் மகனிடம் காதல் சொல்லவில்லை.. அவர்தான் என்னிடம் சொன்னார்..."

"அதையும் என்னிடம் சொன்னாயா..?"

"எப்படிச் சொல்ல முடியும்..? என் காதலைப் பற்றி என் வீட்டில் நான் சொல்லலாம்.. உங்கள் மகனின் காதலைப் பற்றி அவர்தானே உங்களிடம் சொல்லணும்..?"

"நீ வந்து அன்றே நான் ஒன்று சொன்னேன்.. அது உனக்கு நினைவிருக்கிறதா..?"

"எப்படி மறக்கும்..?"

"தினா உன்னை ஆர்வமாக பார்த்தான்.."

"சைட் அடித்தான்னு சொல்லுங்க..."

"ஆசையாய் உன்னிடம் பேசினான்.."

'கடலை போட்டார் அத்தை..'

"அப்போதே நான் உன்னிடம் சொன்னேனா இல்லையா.. நீயும் உன் மனதில் அதை நினைவில் வைத்துக் கொள்வதாகச் சொன்னாயே..."

"இப்பவும் என் மனதில் நினைவிருக்கு.. நான் தினகரனிடம் அளவுக்கதிகமாக பேசியதே இல்லை அத்தை.."

"அப்புறம் எப்படி பிரபாகரனிடம் பழகினாய்..?"

"தினகரன் வேறு... பிரபாகரன் வேறு அத்தை.."

அந்த வீட்டிலும் சரி.. வெளியிலும் சரி.. அவர்களுடைய உறவினர் வட்டாரத்திலும் சரி.. பிரபாகரனையாரும் பெயர் சொல்லி அழைத்ததில்லை..

நர்மதாவிற்கு மட்டுமே இதுவரை இருந்து வந்த அந்த உரிமை, மாலினியிடமும் போய்விட்டதை ஒருவித பொறாமை உணர்வுடன் உணர்ந்தாள் நர்மதா...

"இரண்டு பேரும் என் மகன்கள்தான்ம்மா.. தினகரனைப் பற்றி என்ன சொன்னேனோ.. அது பிரபாகரன் விஷயத்திலும் பொருந்தும்.."

"அது எப்படி அத்தை.. தினகரன் விளையாட்டுத் தனமானவர்.. தீராத விளையாட்டுபிள்ளை.. பிரபாகரன் அப்படியில்லை.. ஒன்றை நினைத்துவிட்டால் அதிலேயே நிற்கும் ரகம்.. இரண்டு பேரும் எதிர்மறை துருவங்கள் அத்தை.. எப்படி இவங்களை ஒன்றுபோலன்னு நீங்க சொல்கிறீங்க..?" மாலினியின் புத்திசாலித்தனத்தின் மீது நர்மதாவிற்கு கோபம் வந்தது...

80

**உன்னை கண்களால் சிறைபிடிக்க முயன்று..**

**உன் கண்களுக்குள் நான் சிறைபட்ட கதையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

'இவள் இவ்வளவு புத்திசாலியாய் இருந்து தொலைக்கக்கூடாது..' நர்மதா எரிச்சலுற்றாள்..

அதை அறிந்தும் அறியாதவள் போல் மாலினி பேச்சை வளர்த்தாள்..

"தினகரன் என்னைக் காரில் தக்கலைக்கு கூப்பிட்டுக் கொண்டு போவதாக சொன்னார்.. நீங்க மறுத்து விட்டீங்க.. அதையே பிரபா சொல்லியபோது நீங்க ஏன் மறுத்துப் பேசலை அத்தை..?"

"அது.. அது.. வந்து.."

"ஏன்னா.. பிரபாகரனின் பேச்சுக்கு எதிர்பேச்சு நீங்க பேச மாட்டீங்க.. அதுதானே அத்தை.."

"இப்பவும் அப்படித்தான்ம்மா.. உன் கல்யாணத்தைப் பத்தி நான் எதிர்பேச்சு பேச மாட்டேன்.."

"ஆனால்.. மனசுக்குள் எதிர்ப்பா நினைப்பீங்க.. அப்படித்தானே.."

"ம்ஹூம்.. கோட்டையூர் ஜமீன்தார் கார்த்திகேயனின் பெண்டாட்டிக்கு அதற்குக்கூட உரிமையில்லையா என்ன..?"

"உங்களுக்கில்லாத உரிமையா..?"

"நீ கொடுத்து உரிமையை வாங்க வேண்டிய நிலைமையில் நானில்லைம்மா..."

"நானும் கொடுக்கப் போவதில்லை.. அதேசமயம் நீங்க கொடுக்காம இந்த வீட்டின் மருமகள்கிற உரிமையை நான் எடுத்துக்கவும் மாட்டேன்.."

"பிரபா கொடுத்திருக்கும் உரிமையை ஒரு நாளும் நான் பறிக்க மாட்டேன்.. மறுக்க மாட்டேன்.."

"அதை மனப்பூர்வமாக நீங்க செய்கிறீங்களா அத்தை..?"

"என் மனதைப் பற்றி நான் பெற்ற பிள்ளையே கவலைப்படவில்லை.. நீ யாரு கவலைப்பட..?"

நர்மதாவின் குரலில் தெரிந்த விரக்தியும் சோகமும் மாலினியை மிக அதிகமாக பாதித்தன..

கம்பீரம் குலையாத.. அந்த வீட்டின் மகாராணியைப் போன்ற அந்த வயோதிகப் பெண்மணியின் கம்பீரம் தளர்ந்திருப்பதை முதன்முதலாக கண்டாள் மாலினி..

அவள் அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது பார்த்த நர்மதாவின் கம்பீரம் குலைவதைப் பார்க்க மாலினிக்கு பொறுக்கவில்லை...

அவள் எழுந்து நர்மதாவின் காலடியில் தரையில் அமர்ந்தாள்.. அதை எதிர்பார்த்திராத நர்மதா பதறிப் போனாள்..

"என்னம்மா இப்படி உட்கார்ந்திருக்கிற.. எழுந்திரு.."

"இருக்கட்டும் அத்தை.. நான் உங்களுக்கு இந்த நொடியில் வாக்கு கொடுக்கிறேன்.. உங்களுக்கு இந்த அளவுக்கு மனக்கஷ்டம் இருந்தால் நான் விலகிக் கொள்கிறேன்.. நீங்க வருத்தப்படாதீங்க..."

"மாலினி..."

நர்மதாவிற்கு தன் காதுகளையே நம்ப முடிய வில்லை.. ஒரு மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தின் அதிபதி.. மாலினியைக் காதலிக்கிறான்.. அவனோ இரும்பு மனிதன்.. தொட்டதை சாகும் வரை விட்டு விடாத ரகம்..

அவனின் மனைவியானால்.. சமுதாயத்தில் மிகப் பெரிய உயரத்திற்கு மாலினி போய்விடுவாள்.. அந்த வாய்ப்பை விட்டு விலகுவதாக அவள் நர்மதாவிடம் கூறுகிறாள்...

"எனக்கு நீங்க முக்கியம் அத்தை.. உங்க கம்பீரம் முக்கியம்.. உங்க நிமிர்வு முக்கியம்.. உங்களிடம் எனக்குப் பிடித்த விஷயங்கள் இது அத்தை.. இது குறைய ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட்டேன்..."

"அம்மாடி..."

"எனக்கு உங்க பணம்.. சொத்து.. செல்வாக்கு.. ஜமீன் பரம்பரைங்கிற அந்தஸ்து.. இது எதுவுமே வேண்டாம் அத்தை.. என் பிரபாவை அதற்காக நான் காதலிக்க வில்லை.. உங்களுக்கே தெரியும்.. இந்த அத்தனை அடையாளங்களும் இல்லாமலேயே அவர் மிகப் பெரிய ஹீரோவாக இருக்கிறவர்.. அவரைப் போல ஒரு ஆணை

நான் இதற்கு முன்னால் பார்த்ததில்லை.. இனிமேலும் பார்க்கப் போவதில்லை.."

"இது எனக்கும் தெரியும்மா..."

"அவரை அவருக்காகத்தான் நான் காதலித்தேன் அத்தை.. அவரும் அப்படித்தான்.. என்னை எனக்காகவே காதலித்தார்.."

"இதெல்லாம் இப்ப எதுக்கு.. விட்டுவிடு.."

"விலகிவிடுகிறேன் அத்தை.. அவரை விட்டு விடுகிறேன்.. எங்காவது கண்காணாத தொலைவிற்குப் போய்விடுகிறேன்.. நீங்க மட்டும் சந்தோஷமா இருங்க.. இப்படி சோகமா இருக்காதீங்க..."

நர்மதாவின் மனம் நெகிழ்ந்துவிட்டது..

பிரபாகரனின் பேச்சுக்கு எதிர்பேச்சு இல்லை என்று நர்மதாவே வாய் திறந்து சொல்கிறாள்.. பிரபாகரனோ.. மாலினியுடன்தான் அவனது திருமணம் நடக்கும் என்பதை அறிவித்துவிட்டான்.. அந்த பேச்சிற்கு எதிர்பேச்சை நர்மதா சொல்லப் போவதில்லை.. அதை மாலினி நன்கு அறிவாள்...

இருந்தும் அவள் நர்மதாவின் முன் மண்டியிட்டு அமர்ந்திருக்கிறாள்.. மனப்பூர்வமாக நீ அனுமதி கொடுத்தாள் மட்டுமே உன் வீட்டில் மருமகளாக வருவேன்.. இல்லா விட்டால்.. விலகிப் கண்காணாமல் போய்விடுகிறேன் என்று சொல்கிறாள்..

அவளின் அந்தச் செயல் நர்மதாவின் மனத்தில் இருந்த கலக்கத்தை ஓட்டிவிட்டது..

"அத்தை.. எனக்கு சசிரேகாவைப் பார்க்கும்போது பொறாமையாக இருக்கும்.. இப்படிப்பட்ட பணக்கார வீட்டில் அவள் மருமகளாக வந்திருக்கிறாளேன்னு இல்லை.. உங்களைப் போல பெரிய மனம் படைத்தவங்- களுக்கு மருமகளாய் வந்திருக்கிறாளேன்னு தான்..."

நர்மதாவின் முகத்தில் கனிவு மீண்டிருந்தது...

"அன்றைக்கு சசிக்காக உங்க அண்ணன் மகளையே திட்டிப் பேசினீங்க.. 'என் மகன்'.. 'என் மருமகள்' இப்படி விட்டுக் கொடுக்காத பாசத்தை எந்த மாமியார் கொடுக்கிறாங்களோ.. அந்த மாமியாருக்கு மருமகளாக வருபவள் புண்ணியம் செய்தவள்..."

நர்மதாவின் இதயம் பாகாய் உருகியது..

"அந்தப் புண்ணியம் செய்தவளாக நானிருக்கணும்னு தான் நான் ஆசைப்படுகிறேன் அத்தை.. பிரபாகரனுக்கு மனைவியானால் உங்க மனத்தாங்கலுக்கு ஆளாவேன்னா.. எனக்கு அந்த வாழ்க்கையே வேண்டாம் அத்தை..."

மாலினி அழுதுவிட்டாள்.. இப்போது நர்மதா பழைய நர்மதாவாக நிமிர்ந்துவிட்டாள்..

'இவள் எனக்கு மருமகளாக வருவதற்கு முழுத் தகுதி படைத்தவள்..' என்ற எண்ணம் மட்டுமே அவளுக்கு ஓடிக் கொண்டிருந்தது..

இந்த சொத்து சுகம் எதுவும் வேண்டாம்.. உன் மருமகள் என்று முழு மனதாக நீ ஏற்றுக்கொண்டாலே போதும் என்று சரணடைகிறவளா.. நர்மதாவிற்கு போட்டி யாக அந்த வீட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவாள்..?

பெரிய மனம் படைத்தவங்க வீட்டில் வாழப் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று சொல்பவளா.. நர்மதாவின் மகளுக்கு.. தாய்வீட்டுச் சீர்வரிசையை கடைசி வரை அனுப்பும் கடமையை மறப்பாள்..?

ஸ்வேதாவைக்கூட இந்த விஷயங்களில் சந்தேகப் படலாம்.. மாலினி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள்..

நர்மதா மனம் தெளிந்தாள்.. பழைய கம்பீரம் மீண்டவளாக மாலினியின் தலையை பாசத்துடன் வருடினாள்...

"எழுந்திரும்மா.. பிரபாகரனின் தேர்வு என்றைக்குமே சோடை போகாதுங்கிறதை நீ நிரூபித்துவிட்டாய்.. இந்த

வீட்டுக்கு மூத்த மருமகளாக வருகிறதுக்கு முழுத்தகுதியும் உனக்கு மட்டும்தாம்மா இருக்கு.."

அப்படியே நர்மதாவின் மடிசாய்ந்தபோது மாலினி அழுதுவிட்டாள்...

'இதைவிட பெரிய பேறு வேறு என்ன இருக்கப்n பாகிறது..?'

"தேங்க்ஸ் அத்தை.."

"அழாதே.. திடீர்னு உங்க விஷயத்தைக் கேள்விப் பட்டதும் எனக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகிருச்சு.. ஆயிரம் தான் இருந்தாலும் பெற்ற மனசு இல்லையா.. அது நாலையும் யோசிக்கத்தானே செய்யும்..?"

"ஐ ஆம் ஸாரி அத்தை.. நான் மறைக்கணும்னு நினைக்கலே..."

"போகுது விடு.. இப்போதைக்கு இதை யாரிடமும் சொல்லிக்க வேணாம்.."

காயத்ரியின் திருமணத்தை மனதில் வைத்துக் கொண்டு நர்மதா கூற...

"நானும் அதையேதான் பிரபாவிடம் சொன்னேன் அத்தை.." என்றாள் மாலினி..

"என்ன சொன்னேம்மா..?"

"காயத்ரியின் கல்யாணம் முடிகிற வரை இதை வெளியே சொல்லிக்க வேணாம்னு நினைத்தேன்.."

எப்படி இந்த ஒருமித்த சிந்தனை வந்தது என்று திகைத்துப் போனாள் நர்மதா.. மாலினியின் மீது அளவு கடந்த அன்பும் நம்பிக்கையும் அவளுக்கு உண்டானது..

அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்துப் பேசியபடி அறையை விட்டு வெளியே வருவதைக் கண்ட ஸ்வேதாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன...

அதுவரை அவளே நர்மதாவின் அறைக்குள் இயல்பாக போனது கிடையாது...

'சொர்க்கவாசல்..' என்று தான் நர்மதாவின் அறையைப் பற்றி மாணிக்கவாசகத்திடம் ஸ்வேதா கிண்டலாக குறிப்பிடுவாள்..

அவ்வளவு எளிதாக நர்மதா அவளது அறைக்குள் மற்றவர்களை அனுமதித்து விடமாட்டாள்..

அவளுடைய பிள்ளைகள் மட்டுமே உரிமையுடன் அவளுடைய அறைக்குள் சென்று வருவார்கள்.. சசிரேகாவே கருணாகரன் இல்லாமல் தனியாக நர்மதாவின் அறைக்குப் போக மாட்டாள்.. வேலையாள்கள்.. நர்மதா அழைத்தால் தான் போவார்கள்..

அப்படிப்பட்ட சொர்க்கவாசல் மாலினிக்கு மட்டும் எப்படி எளிதாகத் திறந்தது என்ற கேள்விக்கான விடை மட்டும் ஸ்வேதாவிற்கு கிடைக்கவில்லை.

பிரபாகரனின் காதல் விஷயம் நர்மதாவின் காதுக்கு இன்னும் போகவில்லை என்றே அவள் நம்பினாள்..

அவளுக்கு நர்மதாவின் குணம் தெரியும்.. சசிரேகாவை அவ்வளவு எளிதாக அவள் மருமகளாக அங்கீகரித்து விடவில்லை.. பிரபாகரனின் பிடிவாதத்திலும் தலையீட்டிலும் அது நடந்து முடிந்தது..

அந்தக் கதை தொடர்கதையாவதை நர்மதா ஒருபோதும் விரும்ப மாட்டாள் என்பதுதான் ஸ்தேவாவின் கணிப்பு...

குறைந்தபட்சம் பிரபாகரனின் காதல் தெரிந்துவிட்டால் நர்மதா, மாலினியிடம் முகம் கொடுத்துப் பேசுவதையாவது தவிர்த்து விடத்தான் முயலுவாள்..

ஆனால்.. அவர்கள் இருவரும் அவ்வளவு பிரியத்துடனும் பாசத்துடனும் பேசியபடி வந்ததைக் கண்ட ஸ்வேதா..

'இன்னும்.. அத்தையம்மாவுக்கு விஷயம் தெரியலை போல இருக்கு.. விஷயம் தெரியும்போது.. இருக்குடி மாலினி உனக்கு..' என்று கறுவிக் கொண்டாள்..

அவளுக்கு மட்டும் நர்மதாவின் விஷயமும் தெரிந்து அவள் மாலினியை மருமகளாக ஏற்றுக்கொள்ளத் தயாராகியும்

விட்டாள் என்று தெரிந்திருந்தால் என்னவாகி இருப்பாளோ...

அது தெரியாமல்.. நர்மதாவிற்குத் எதுவும் தெரிய வில்லை என்ற எண்ணத்தோடு ஒருவிதமான சிரிப்புடன் எதிரே வந்தாள் அவள்..

"என்ன அத்தை.. மாலினி உங்களையும் விடவில்லையா..?" என்று அவள் கேட்டதும்..

"எதைச் சொல்கிறாய்..?" என்று விழித்தாள் நர்மதா..

"அதுதான்.. இந்த வீட்டின் காமெடி ஷோ நடத்து வதில் மாலினி எக்ஸ்பெர்ட்டாகிக்கிட்டு வருகிறாளே.

அது உங்களுக்குத் தெரியாதா..? இந்த வீட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் இவளுக்கு பரம ரசிகைகள் தெரியுமா..?"

ஸ்வேதா விஷமப் புன்னகையுடன் பேசிக் கொண்டே போக, நர்மதாவின் முகம் மாறிவிட்டது..

81

**வாய் உதிர்க்கும் பேச்சுகள்.. பேச்சுகளாக உயிர்ப்பது..**

**உன்னிடத்தில் மட்டும்தான் என்பதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

இதற்கு முன்னாலும் மாலினிக்கு ஆதரவாக ஸ்வேதா வைக் கண்டித்து பேசியிருக்கிறாள்

நர்மதா.. அப்போது நிலைமையே வேறு.. மாலினி அந்த வீட்டின் விருந்தாளி.. ஸ்வேதா.. நர்மதாவின் அண்ணன் மகள்.. நர்மதாவின் மகன்கள் மனம் திரும்பினால் அந்த வீட்டின் மருமகளாக வருகின்ற வாய்ப்பு உள்ளவள்...

அதனால்.. வீட்டுப் பெண்ணாக இருப்பவள்.. விருந்தாளியாக வந்திருப்பவளிடம் அவமரியாதையாய் நடந்து கொள்ளலாமா என்ற எண்ணத்துடன் தான் அப்போதெல்லாம் நர்மதா, ஸ்வேதாவைக் கண்டிப்பாள்..

கோட்டையூர் ஜமீன் வமிசத்தில் சிறிய மனம் படைத்தவர்களாக யாரும் இருக்கக்கூடாது என்பதும் அவளுடைய கோபத்திற்கு காரணமாக இருந்தது..

ஆனால்.. இன்றைய நிலைமையே வேறு.. இன்று மாலினி அந்த வீட்டின் மருமகளாக வரவிருந்தாள்.. ஸ்வேதாவை நர்மதாவின் இரண்டு மகன்களும் மறுத்து விட்டனர்..

இப்போது.. ஸ்வேதாதான் அடுத்த வீட்டுப் பெண்.. மாலினிதான் வீட்டுப் பெண்..

தன் மருமகளை ஸ்வேதா கேலி பேசுவதா என்ற கொதிப்பு நர்மதாவிற்கு அதனால்...

"என்ன உளறுகிறாய்..?" என்று அதட்டினாள்..

"உளறலா.. உண்மை அத்தை.. உண்மை.. மாலினிக்கு வாயைத் திறந்தால் காமெடி பேச்சுத்தான் வரும்.. அதனால் தான் உங்களிடம் என்ன காமெடி பண்ணினாள்னு கேட்டேன்..?"

ஸ்வேதா ஏளனமாய் கூறியபடி மாலினியைப் பார்க்க.. அவள் முகம் மாறாமல் அமைதி காத்தாள்.. அதே சமயத்தில் காயத்ரியுடன் ஏதோ பேசியபடி ஹாலில் அமர்ந்திருந்த சசிரேகா முகம் கறுத்தாள்..

"சிரிக்கத் தெரிந்தவர்கள்தான் மனிதப் பிறவிகள் ஸ்வேதா.. மாலினிக்கு அதையும் தாண்டி சிரிக்க வைக்கத் தெரிந்திருக்கு.. உனக்கு சிரிக்கவும் தெரியலை.. சிரிக்க வைக்கவும் தெரியலை.. உன்னையெல்லாம் எந்தக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது..?"

நர்மதா நறுக்கென்று கேட்டுவிட்டாள்.. ஸ்வேதாவின் முகம் பேயறைந்ததைப் போல ஆகிவிட்டது.. அவள் ஜாடையாக சுற்றுமுற்றும் பார்த்தாள்...

மாடிப்படிகளில் பவித்ரா இறங்கி வந்து கொண்டிருந்தாள்.. ஏதோ வேலையிருப்பதைப் போல பொன்னியும் செந்தாமரையும் அங்கே நின்றிருந்தார்கள்.. பரந்தாமனுடன் பேசியபடி தினகரன் உள்ளே வந்து நின்றிருந்தான்..

அவர்கள் அத்தனை பேரும் நர்மதா பேசியதைக் கவனித்துவிட்டதை உணர்ந்தவளுக்கு அவமானமாகப் போய்விட்டது...

தினகரன் சும்மாவே மாலினிக்கு ஜால்ரா அடிப்பான்.. ஸ்வேதாவைக் கண்டாலே அவனுக்கு ஆகாது...

இன்று இரண்டுக்கும் சேர்த்து ஒன்றுபோல் சந்தர்ப்பம் கிடைத்துவிட...

"ஹா.. ஹா.." என்ற சிரிப்புடன் நர்மதாவின் பேச்சில் கலந்து கொண்டான்...

"ஏம்மா.. சிரிப்பதைப் பத்தி ஸ்வேதாவிடம் கேட்டால் இவளுக்கென்ன தெரியும்.. கடுப்படிப்பதைப் பத்திக் கேளுங்க.. பிட்டுப்பிட்டு வைப்பாள்.. மொட்டை ரம்பம் போடுவதைப் பத்தி ஆராய்ச்சிக் கட்டுரையே எழுதிவிடுவா, மத்தவங்களை மட்டம் தட்டுகிறதைப் போலப் பேசுவதற்கு பல்கலைக்கழகமே நடத்திவிடுவா.. இத்தனையையும் விட்டுவிட்டு சாதாரண மனித ஜீவன்கள் செய்கிற செயலைப் பற்றியெல்லாம் இவகிட்ட போயா கேட்கிறது..? அதையெல்லாம் மனிதப்பிறவிகள் கிட்டக் கேட்கணும்மா.."

ஸ்வேதாவின் முகம் விகாரமானது.. இவனே அவள் வேண்டாமென்று தூக்கி எறிந்துவிட்டான்.. அதற்கப்புறமும் இவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டு மென்று அவளுக்கென்ன தலையெழுத்தா..

அதனால்.. "அத்தான்?" என்று ஆத்திரத்துடன் அழைத்தாள்..

"தினா அத்தான் ஸ்வேதா.. அதெல்லாம் மறந்து விட்டதா.. இல்லை இனி வேலைக்காகாதுன்னு தெரிந்து போய்விட்டதா..?"

"ஷட் அப் அத்தான்.. தேவையில்லாம பேசாதீங்க.."

"உன்னைச் சொன்னால் மட்டும் இப்படி மூக்குக்கு மேல் கோபம் வருகிறதே.. இதை போலத்தானே மத்தவங்களுக்கும் இருக்கும்..?"

"மத்தவங்கன்னு ஏன் சொல்கிறீங்க..? மாலினிக்கும்னு சொல்லுங்க..."

ஸ்வேதா இடக்காக பேசியபடி மாடிப்படியில் நின்று கொண்டிருந்த பவித்ராவைப் பார்த்தாள்.. அவள் முகம் வெளுத்தது...

'நிஜம்தானே.. மாலினிக்காக பரிந்துக்கிட்டுத் தானே.. தினா அத்தான் ஸ்வேதாவைத் திட்டுகிறார்..' என்று அவள் நினைத்தாள்..

"அப்படியா.. நீ மாலினியை மட்டுதான் வம்புக்கு இழுக்கிறாயா..?" என்ற குரல் வாசல் பக்கமிருந்து வந்தது..

அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. பிரபாகரன் கடினமான முகத்துடன் வந்து கொண்டிருந்தான்.. அவன் பார்வை ஸ்வேதாவைத் துளைத்தது.. அவள் வெறுப்புடன் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"உன்னால் கலகம் செய்யாமல் ஒரு நிமிடம்கூடச் சும்மா இருக்க முடியாதா ஸ்வேதா.." பிரபாகரன் நிதானமாகக் கேட்டான்..

"நான் என்ன செய்தேன்..?" ஸ்வேதா எதிர்த்துக் கேட்டாள்...

"எதைச் செய்யவில்லை..?" அதே அழுத்தத்துடன் பிரபாகரனின் கேள்வி வந்து விழுந்தது...

"நான் செய்ததைச் சொல்லுங்க..?"

"சொல்ல மாட்டேன்கிற தைரியமா உனக்கு..?"

"எனக்கா தைரியமில்லை..?"

"ஹ.. உனக்குத் தைரியமில்லை என்று கூமுட்டை கூடச் சொல்லமாட்டான்.. நான் ஏன் அப்படிச் சொல்லப்

போகிறேன்.. உன் தைரியத்தின் அளவைத்தான் நான் பார்த்திருக்கிறேனே..."

"அத்தான்.. கேட்பதற்கு ஆளில்லை என்பதைப் போல நீங்கள் மேலே மேலே பேச வேண்டாம்.. எனக்கு ஒன்று என்றால்.. கருங்கல்லே கிளம்பி வந்துவிடும்..."

இது நர்மதாவிற்கு ஸ்வேதா விடுத்த மறைமுக எச்சரிக்கை.. இதைப் புரிந்துகொள்ளாமலிருக்க நர்மதா ஒன்றும் முட்டாள் இல்லையே.. அவள் முகம் மாறியது.. பிரபாகரன் கோபமானான்...

"உங்க அண்ணன் மகள் சொல்வதைக் கேட்டீங்களாம்மா.."

"விடு பிரபா.. அவளுக்குப் பேசத் தெரிந்தது அவ்வளவுதான்.."

"ஊஹீம்.. அவ்வளவுதான்னு இவளை ஈஸியா எடை போட்டுறாதீங்க.. இவள் பேச ஆரம்பித்தால் அதற்கு எல்லையே கிடையாது.."

"இத்தனை நாள் பொறுத்தோம்.. காயத்ரியின் கல்யாணம் வரைக்கும் பொறுத்து தொலைவோம்.."

"இத்தனை நாள் பொறுத்ததே அதிகம்மா.. இவள் வந்த பின்னால் வீடு.. வீடாக இல்லை.. வெளியே உழைத்து விட்டு வருகிற ஆண்பிள்ளைகள்.. வீட்டுக்குள் நுழைந்தால் நிம்மதியாக உட்கார வேண்டும்.. இப்படிப் பெண்களின் வம்பளப்புக்கு பஞ்சாயத்து பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது.. வீட்டை வீடாக இருக்க இவள் விடுகிறாளா..?"

பிரபாகரனின் வார்த்தைகளில் இருந்த உண்மையை நர்மதாவின் மனம் உணர்ந்தது.. தன்னால் அல்லவா பெரிய மகன் இப்படி வேதனைப்பட்டு ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டான் என்று அவள் மனம் வருந்தினாள்..

"பெரிய வார்த்தையை எல்லாம் பேசாதே பிரபா.. நீ இவ்வளவு தூரத்திற்கு யோசித்தால் நான் இப்போதே போன் போட்டு பெரியப்பாவிடம் சொல்லிவிடுகிறேன்.."

"இதை அன்னிக்கே நீங்க சொல்லியிருக்கணும்.. இவளை அவங்க கூடவே நீங்க அனுப்பியிருக்கணும்.."

"இப்ப என்ன கெட்டுப் போச்சு பிரபா.. நான் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து விடுகிறேன்.."

"எதுக்கும்மா..? இவளே நம்மைக் கேள்வி கேட்க கருங்கல்லில் இருந்து ஆள்களை வரவழைக்கணும்னு சொல்லிட்டா.. உங்க பெரியப்பாவுக்கு போன் போடுங்க.. கருங்கல்லில் இருந்து எத்தனை ஆள் வேண்டுமானாலும் கிளம்பி வரட்டும்.. இந்த பிரபாகரனை எதிர்கேள்வி கேட்க இனி ஒரு ஆள் பிறந்துதான் வரணும்.. நானும் என்னன்னு ஒருகை பார்த்து விடுகிறேன்..."

ஸ்வேதாவிற்கு முகம் சிறுத்துவிட்டது.. அவளை வீட்டை விட்டு அனுப்ப நர்மதா முயன்றது வேலையாள்கள் வரை அனைவருக்கும் தெரிந்துவிடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை.. ஏன்.. பவித்ராவிற்கே அந்த செய்தி அப்போதுதான் தெரிந்தது.. அவள் ஒருவிதமாக ஸ்வேதாவை பார்த்து வைத்தாள்..

அவள் மாலினியை மட்டம் தட்ட நினைக்க.. அதுவே அவளுக்கு வினையாக வந்து முடிந்துவிட்டது..

இப்போது கருங்கல்லுக்கு செய்தி போனால்.. ஆளவந்தார் அவளை உண்டு.. இல்லையென்று பண்ணி விடும் அபாயம் அவளுக்கு இருந்தது.. எப்போதுமே ஆளவந்தாருக்கு பெற்ற பிள்ளைகளைவிட.. தம்பி மகளின் மீதுதான் பாசம் அதிகம்..

'பெரியப்பா' என்று ஆரம்பித்து நர்மதா.. எல்லா வற்றையும் சொல்லிவிட்டால்.. தன் குடும்பத்திலிருந்தே மாணிக்கவாசகத்தை தள்ளி வைத்துவிட அவர் யோசிக்க மாட்டார்...

பிரபாகரனின் குடும்பத்தில் குழப்பம் விளைவிப் பதற்காக ஸ்வேதா, காயத்ரியின் திருமணத்தை சாக்காக வைத்து தங்கியிருந்தாலும்.. இடையிலேயே அவள் கிளம்பிப் போனால் எல்லோரும் ஏதேனும் ஒரு காரணத்தை யூகித்து கதை பேச வாய்ப்பு இருக்கிறது..

இது பணிந்து போக வேண்டிய நேரம் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்..

"அத்தை.. இப்ப நான் என்ன சொல்லிவிட்டேன்னு அத்தான் இவ்வளவு கடுமையாகப் பேசுகிறார்.. நான் விளையாட்டுக்குத்தானே பேசினேன்..?" என்று நர்மதாவிடம் அவள் நியாயம் கேட்டாள்..

நர்மதாவிற்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.. இப்படியொரு பெண்ணைப் பெற்றிருக்கும் மாணிக்கவாசகத்தை மனதிற்குள் திட்டினாள் அவள்..

"விளையாட்டு வினையாகும்னு தெரியாதா உனக்கு..?"

"எனக்கு அதெல்லாம் தெரியாதே அத்தை.. நீங்க பெரியவங்க, நீங்க சொல்லிக் கொடுங்க.. கேட்டுக்கறேன்.."

"சொல்லிக் கொடுக்கும் அளவிற்கு நீ குழந்தையும் இல்லை.. சொல்லிக் கொடுக்க எனக்குப் பொறுமையும் இல்லை.."

"இனி இப்படி நடக்காது அத்தை.. என்னை நம்புங்க.."

"ஊஹூம்.. எனக்கு அந்த நம்பிக்கை போய் விட்டது.."

"எனக்காக பார்க்கலைன்னாலும்.. அப்பாவுக்காக பாருங்க அத்தை.."

"அதை நான் பார்த்துக்கிட்டு இருந்தால்.. என் மகனுக்கு யார் பதில் சொல்வது..?"

"சரி.. எங்க அப்பாவுக்காக பார்க்கலைன்னாலும் உங்க பெரியப்பாவுக்காவாவது பாருங்க.."

ஆளவந்தாரின் பேச்சு வந்ததும் நர்மதா கொஞ்சம் கோபம் குறைந்தாள்..

"பிரபா.. காயத்ரியின் கல்யாணத்துக்கு இன்னும் ஒரு மாதம்தான் ஊடே இருக்கு.. எண்ணி இருபது நாள்.."

"அம்மா.. மாதத்துக்கு முப்பது நாள்கள்.. மறந்து விட்டீங்களா...?"

"பத்து நாள்களுக்கு முன்னாடியே காயத்ரியின் கல்யாணத்தை நடத்தி வைக்க என் பெரியப்பாவும் அண்ணன்களும் கிளம்பி வந்து விடுவாங்களே.."

"ஓ.. நீங்க அப்படி வருகிறீங்களா..?"

"ஆமாம்.. இருபது நாள் நாம் இவளைச் சமாளித்தால் போதும்.. இவள் வீட்டு ஆள்கள் வந்த பின்னால்.. அது அவங்க பொறுப்பு.. நமக்கென்ன வந்தது..?"

## 82

**சிட்டுக் குருவியைப் போல..**

**உனைச் சுற்றி சிறகடிக்கும் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

'எப்படியிருந்த நான் இப்படியாகி விட்டனே..' ஸ்வேதா மனம் வெதும்பினாள்..

இருபது நாள்கள் இவளைச் சமாளிக்க வேண்டும் என்று கோட்டையூர் ஜமீன் வமிசத்தை கவலை கொள்ளச் செய்ததை அவளது வெற்றி என்று எடுத்துக் கொள்வதா.. இல்லை.. வீட்டிலிருக்கும் வேலையாள்கள் முன்னிலை யிலேயே அவள் அந்த வீட்டில் இருக்கப்போகும் நாள்களை விரல் விட்டு எண்ணிய கொடுமையை நினைத்து விக்கி விறைப்பதா..?

இது வெற்றியா.. தோல்வியா..?

எதையும் கணக்கிட்டு விடும் ஸ்வேதாவினால் இதை மட்டும் கணக்கிட முடியவில்லை..

எது எப்படியாக இருந்தாலும்.. மாலினியின் வரவுக்குப் பின்னால் அவளது செல்வாக்கு அந்த வீட்டில் சரியத் தொடங்கியதை மட்டும் அவளால் மறக்க முடியவில்லை..

அதற்கு முன்னாலேயும்.. அவளுக்கு அந்த வீட்டில் பெரிதாக செல்வாக்கு இருந்து விடவில்லைதான்.. ஆனால்.. வீட்டை விட்டு அவளை வெளியேற்றும் அளவுக்கு.. யாரும் அவளை வெறுக்கவில்லை..

'எல்லாம் இவளால்தான்..'

மாலினியை நினைத்துப் பல்லைக் கடித்தாள் ஸ்வேதா, அவளுடைய மார்த்தாண்ட வாசம்.. மாலினி வருவதற்கு முன்.. மாலினி வந்ததற்குப் பின் என்று இரண்டு பாகமாக பிரிந்து அவளது மனக்கண்ணில் ஓடியது..

"சரி.. சரி.. எல்லோரும் காலாகாலத்தில் படுத்து தூங்கப் போங்க.. நாளைக்கு விடிவதற்கு முன்னாலேயே திருவனந்தபுரம் ஸ்ரீபத்மநாப ஸ்வாமி கோயிலுக்குக் கிளம்பணும்." நர்மதா உத்தரவிட்டாள்..

'சபை கலைந்ததாக்கும்..' என்ற நினைவுடன் அசட்டையாக மாடிப்படி ஏற முனைந்த ஸ்வேதாவை.. நர்மதாவின் குரல் தடுத்து நிறுத்தியது..

"ஸ்வேதா.."

"அத்தை..?"

"நாளைக்கு கோயிலுக்கு நீயும் கிளம்ப வேண்டும்.. இன்றைக்கு சண்டையை இங்கேயே விட்டு விட்டு.. காலையில் பதவிசாக கிளம்பப் பார்.."

"சரிங்க அத்தை.."

எங்கே தன்னை வேண்டாமென்று சொல்லிவிடுவார் களோ என்ற கவலையுடன் இருந்த ஸ்வேதாவின் முகம் மலர்ந்து விட்டது...

அவள் புள்ளிமானைப் போல துள்ளிக் குதித்து மாடிக்கு ஓடினாள்.. பிரபாகரன் அதிருப்தியுடன் தாயின் முகம் பார்த்தான்...

"அவ எதுக்கும்மா..?"

"கோயிலுக்குப் போகும்போது அவளை ஒதுக்கி விட்டு நாம் மட்டும் போகக்கூடாது பிரபா.. அது நியாயமில்லை.."

"என்னவோ செய்ங்க.."

பிரபாகரன், மாலினியின் மேல் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு.. அவனது அறைக்குப் போய்விட்டான்...

மறுநாள்.. விடிவதற்கு முன்னாலேயே மார்த்தாண்டத்திலிருந்து கார்கள் புறப்பட்டு விட்டன...

பிரபாகரன் காரோட்ட.. அவனது காரில் மாலினியும் கருணாகரனும் சசிரேகாவும் ஏறிக்கொண்டார்கள்..

தினகரன் ஓட்டிய காரில்.. பவித்ராவும் நர்மதாவும் காயத்ரியும் ஏறிக் கொண்டனர்..

ஸ்வேதா.. இரண்டு கார்களில் எந்தக் காரில் ஏறிக் கொள்வது என்று யோசிக்க ஆரம்பித்தாள்...

அவளுக்கு மாலினியை பிரபாகரனிடம் இருந்து பிரிக்க வேண்டும்.. அதே சமயம்.. பவித்ராவையும் தினகரனிடமிருந்து பிரித்தாக வேண்டும்...

அவள் 'பிங்கி.. பிங்கி.. பாங்கி..' என்று இரண்டு காரிகளில் எந்தக் காரில் ஏறுவது என்று முடிவெடுக்கும் முன்னதாகவே அவள் தங்கள் காரில் ஏறிவிடக்கூடாது என்ற திட்டத்துடன் பிரபாகரனும் தினகரனும் போட்டி போட்டுக் கொண்டு காரைக் கிளம்பி விட்டார்கள்.. விட்டு விட்டுப் போய் விடுவார்களே என்று திகிலடைந்து போய்விட்டாள் ஸ்வேதா.. நல்லவேளையாக.. நர்மதா தலையை நீட்டி..

"ஸ்வேதா.. இந்தக் காருக்கு வா.." என்று அழைத்துக் கொண்டாள்..

தினகரனுக்கு மாலினி போகும் காரில் போக முடியாத எரிச்சலோடு.. அவன் பக்கத்தில்

ஸ்வேதா அமர்ந்து கொண்ட எரிச்சலுடன் சேர்ந்து கொண்டது...

கிளப்பிய காரை அவன் நிறுத்தியே விட்டான்...

"என்னடா..?" என்று வினவினாள் நர்மதா..

"அம்மா.. நீங்களோ.. இல்லை காயத்ரியோ முன் ஸீட்டுக்கு வாங்க.." கண்டிப்பான தொனியால் கூறினான் அவன்...

"தினா அத்தான்.." ஸ்வேதா செல்லமாய் சிணுங்க..

"இதோ பார்.. நான் ஏற்கெனவே கடுப்பில் இருக்கிறேன்.. இதில நீ வேற.. ஆர்ட்டிஃபிஷியலா பேசி உயிரை எடுக்காதே.. பேசாம பின் ஸீட்டுக்குப் போய்விடு.." என்று எரிந்து விருந்தான் தினகரன்..

"ஏன்.. நான் உங்க பக்கத்தில் உட்கார்ந்தால் கார் ஓடாதா..?"

"அதுக்குப் பதில் நான் ஓடிவிடுவேன்.. போதுமா..?"

ஸ்வேதாவின் முகம் சிறுத்துப்போனது.. அவள் வேறு வழியில்லாமல் இறங்கி பின் ஸீட்டிற்கு வந்தாள்.. காயத்ரிக்கு தூக்க கலக்கம்.. அவள் நர்மதாவின் மடியில் சாய்ந்து தூங்க ஆரம்பிக்க.. திருமணமாகப் போகும் செல்ல மகளை எழுப்பிவிட நர்மதாவிற்கு மனமில்லை...

"இவன் ஒருத்தன்.. தேவையில்லாம வம்பிழுப்பான்.. ஸ்வேதா அவனிடம் வாய் கொடுக்காம நீ பின்ஸீட்டுக்கு வாம்மா.. பவித்ரா! நீ முன் ஸீட்டுக்குப் போ.." என்று அவள் ஆணையிட்டு விட்டாள்..

ஸ்வேதா அசைவற்று நின்றுவிட.. பவித்ராவிற்கு கைவிரல்கள் தந்தியடிக்க ஆரம்பித்தன.. எதிர்பாராத அந்த இனிய வாய்ப்பை நினைத்து அவளது நெஞ்சம் இனித்தது...

ஸ்வேதாவின் கண்ணுக்கு முன்னிலேயே பவித்ரா முன் ஸீட்டிற்கு சென்று தினகரனுக்கு அருகில் அமர்ந்து

கொண்டாள்..

"சீக்கிரமாக வா ஸ்வேதா.."

நர்மதா, இன்னொவா காரின் பின் பக்க ஸீட்டைச் சுட்டிக் காட்டினாள்..

முன் பக்கத்தில் தினகரனும் பவித்ராவும் அமர்ந்திருக்க.. நடுப்பக்கத்தில்.. நர்மதா ஓரமாய் அமர்ந்திருக்க.. அவளது மடியில் தலை வைத்து காயத்ரி உறங்கிக் கொண்டிருக்க.. பின் பக்க ஸீட்டில் ஸ்வேதா மட்டும் தனியாக அமர்ந்தாள்..

'தனித்து விட்டேன்..' அவள் மனதில் துயரம் பொங்கியது...

கார் ஒருவழியாக கிளம்பியது.. முன்னால் சென்ற பிரபாகரனின் கார் போன சுவடே தெரிய வில்லை.. தினகரன் காருக்கு வேகத்தைக் கூட்ட.. அது பறந்தது..

"எதுக்குடா இவ்வளவு வேகமாய் காரை ஓட்டுற..?" நர்மதா கடிந்து கொண்டாள்..

"அண்ணனின் காரை பிடிக்க வேண்டாமா..? என்ன பவி.. நான் சொல்வது கரெக்ட்தானே.." தினகரன் பக்கத்திலிருந்த பவித்ராவைப் பார்த்துச் சிரித்தான்...

"பவியா.. அவள் பெயர் பவித்ராடா.." என்றாள் நர்மதா...

"மாலினி இப்படித்தான் கூப்பிடுகிறாள்.. என்ன பவி.. அவள் மட்டும்தான் உன்னை செல்லமாய் கூப்பிடணுமா..? நான் கூப்பிட்டால் ஆகாதா..?"

தினகரன், பவித்ராவைப் பார்த்து கண்சிமிட்ட.. பவித்ராவின் முகம் சிவந்துவிட்டதை அந்த இருளிலும் நர்மதாவால் உணர முடிந்தது..

'பெருமாளே.. இந்த அருமையான பெண்ணை.. பெரியவனுடன் சேர்த்து வைக்க நினைத்தேன்.. இப்ப இளையவனுக்கு நீ கண் காட்டுகிறாய்.. எல்லாம் உன் திருவிளையாடல்..' நர்மதா மனதிற்குள் சிலிர்த்துக் போனாள்..

"என்னம்மா.. உங்க அண்ணன் மகள் என்னைப் பார்த்தால் ஊமையாகி விடறா.. இவளென்ன பேசாமடந்தையா..?" தினகரன், நர்மதாவிடம் கேட்டான்..

"அவ பாவம்.. அத்தை மகனிடம் பேச வெட்கப்படுகிறாள்டா.. இப்ப உனக்கு என்ன வேணும்.. பவின்னு இவளைக் கூப்பிடணும்.. அவ்வளவுதானே.. நீயாச்சு.. உன் மாமன் மகளாச்சு.. உனக்கில்லாத உரிமையா.. தாராளமாய் கூப்பிட்டுக்க.."

நர்மதா, தினகரிடம் விளையாட்டுப் போலக் கூறவும், அவன் பவித்ராவைத் திரும்பிப் பார்த்தான்...

அதிகாலை குளிர்காற்று அவன் உடலைத் தொட்டுச் செல்ல, அப்போதுதான் பூத்த புதுமலர் போல பவித்ரா அழகாக இருந்தாள்.. அவளது கூந்தலில் இருந்து முல்லைப் பூவின் மணம் காற்றில் மிதந்து வந்து அவனது நாசியை வருடியது.. அவன் மனம் மயங்கினான்..

"ஸோ... என் மாமன் மகளிடம் எனக்கு வானளாவிய உரிமை இருக்குன்னு என் அம்மாவே டிக்ளேர் பண்ணியாச்சு.. கேட்டுக்கிட்டியா பவி.. எனக்கு உன் மேல் இருக்கும் உரிமையின் அளவை.."

இதைக் கேட்ட பவித்ரா.. நாணத்துடன் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொள்ள.. இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதா வயிறு எரிந்தாள்..

'ஒரு நாளாவது இந்த அத்தைக்காரி.. என்னை இப்படி இந்தம்மாவின் மகன்களோடு கோத்து விட்டிருக்குமா..? இப்ப இந்த வேலை செய்யுதே.. பவித்ரா மட்டும்தான் தினகரனுக்கு மாமன் மகளா.. நான் யார்..? நான் என்ன தினகரனுக்கு சித்தப்பன் மகளா..?'

தினகரன் முன்னால் சென்றுகொண்டிருந்த பிரபாகரனின் காரைப் பிடித்துவிட்டான்.. கண் பார்வை வட்டத்துக்குள் பிரபாகரனின் கார் வந்ததும்.. காரின் வேகத்தை சீராக்கினான்..

"அப்பாடி.." நிம்மதிப் பெருமூச்சுவிட்ட நர்மதா.. கண்களை மூடித் தானும் தூங்க ஆரம்பித்தாள்..

புலர்ந்தும் புலராத அந்த அதிகாலை நேரத்தில் கார் சென்று கொண்டிருக்க, அருகிலிருந்து பவித்ராவை பார்வையிட ஆரம்பித்தான் தினகரன்..

அவனது பார்வையை உணர்ந்த பவித்ரா.. கைவிரல்களால் காரின் ஸீட்டில் கோலமிட்டாள்.. கால் பெருவிரலால் காரில் கால் வைக்கும் பரப்பில் கோலமிட்டாள்..

அவள் கோலமிடும் அழகை ரசித்தபடி.. காரில் பழைய பாடல்களில் சிடியை போட்டு ஓடவிட்டான் தினகரன்..

"ஒரு பக்கம் பார்க்கிறா...

ஒரு கண்ணை சாய்க்கிறா..

அவ.. உதட்டைக் கடித்துக்கிட்டு...

மெதுவா சிரிக்கிறா.. சிரிக்கிறா.. சிரிக்கிறா.."

பவித்ரா உண்மையிலேயே உதட்டை கடித்துக் கொள்ள, தினகரனின் பார்வை அவளது உதட்டின் மீது படிந்தது...

"காலாலே.. நிலத்திலே..

கோலம் போட்டுக் காட்டற..

கம்பி போட்ட ஜன்னலிலே..

கன்னத்தை தேய்க்கிறா.."

இப்போது தினகரன் பாடலுடன் இணைந்து பாடிய வாறு பவித்ராவைக் குறும்புடன் பார்த்தான்.. அவள் முகம் சிவக்க பின்னலை எடுத்து.. முன்பக்கம் போட்டுக் கொண்டு.. அதை நீவ ஆரம்பித்தாள்...

"பின்னலை முன்னால் போட்டு..

பின்னிப் பின்னிப் காட்டறா..."

பாடலின் வரிகளைக் கேட்டதும் அவசரமாக அவள் பின்னலை பின்னால் விட்டுக் கொள்ள.. தினகரன் வாய்

விட்டுச் சிரித்தான்..

"ஏன் பவி.. இப்படி வெட்கப்படறே.."

"அப்.. அப்.. அப்.."

"பொறு.. எதுக்கு இப்ப தந்தியடிக்கிற.. அப்படி யெல்லாம் இல்லைன்னு சொல்கிற.. அதுதானே.."

"ம்ம்ம்.."

தினகரனுக்கு பவித்ராவின் அந்த நாணத்தை பிடித்துப் போய் விட்டது.. அவன் மாலினி அந்தக் காரில் ஏறிக் கொள்ளாததை மறந்தே விட்டான்..

83

**உனைத் தேடும் மனத்துடிப்பில்..**

**என் உலகம் சுழல்வதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

கேரளாவின் மிகப் பெரிய கோயிலான ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோயில்.. திருவனந்தபுரத்தின் முக்கிய அடையாளம்.. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஆய் வம்சத்தினர் ஸ்ரீபத்மநாப ஸ்வாமி கோயிலைக் கட்டினார்கள்.. கி.பி... ஆயிரத்து எழுநூற்றி ஐம்பதாம் ஆண்டில் மன்னன் மார்த்தண்டவர்மன் தன் அரசையே கோயிலுக்கு தானமளித்தார்...

அகிலத்தை அளந்த அந்த உலகளந்த பெருமாளையே திருவிதாங்கூர் அரசின் அரசனாக்கி.. தன்னை கடவுளின் சேவகனாக ஆக்கி.. கோயிலை ஆட்சியின் மையமாக்கினார்.. இது அவருடைய விஷ்ணு பக்தியின் ஆழ்ந்த வெளிப்பாடு...

திருவிதாங்கூர் வம்சத்தை நிறுவி.. தெற்கு கேரளத்தை ஐக்கியப்படுத்திய மார்த்தாண்ட வர்மா, சிற்றரசுகளை கையகப்படுத்தினார்.. ஒருமுறை டச்சுப் படையினரை வீழ்த்தி கேரளாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான மிளகு வர்த்தகத்தை வசப்படுதினார்..

தங்கம் அவருக்கு தண்ணீராகக் கொட்டியது.. கி.பி. ஆயிரத்து எழுநூற்றி ஐம்பதில் அவர் கோயிலை புதுப்பித்து இறைவனை அரசனாக அறிவித்தார்.. வர்மாவின் வம்சாவளியினர் தங்களை பத்மநாப தாசர்கள் என்றே அழைத்துக் கொண்டார்கள்..

தமிழகத்தில்கூட.. மதுரையை ஆண்டது மீனாட்சியும் சோமசுந்தரக் கடவுளும்தான் என்று புராணம் கூறுகின்றது...

ஆனால்.. திருவிதாங்கூர் அரசை பத்மநாப ஸ்வாமியின் பெயரால்.. மார்த்தாண்ட வர்மாவும் அவருடைய சந்ததியினரும் ஆண்டதை வரலாறு கூறுகின்றது...

முன்னது பக்தி.. பின்னது நிஜம்.. அடுத்து வந்த அந்நிய படையெடுப்புகள் அனைத்தும் கோயிலை குறி வைத்தன.. ஆயிரத்து எழுநூற்றி தொண்ணூறில் திப்புசுல்தான் இந்தக் கோயிலை ஆக்கிரமிக்க படையெடுத்து தோற்றார்...

அப்பேர்ப்பட்ட கோயிலின் உள்ளே அவர்கள் காலடி எடுத்து வைத்தார்கள்..

"இந்தக் கோயிலில்தானே.. ஒரு லட்சம் கோடிக்கு மேலே பொக்கிஷம் கிடைத்தது.." என்று விசாரித்தாள் ஸ்வேதா...

"ஒரு லட்சம் என்பது அதன் தற்கால மதிப்பீடு.. அதன் தொன்மையை வைத்துக் கணக்குப் பார்த்தால்.. இதைவிட பல மடங்கு அதிகமாக வரும்.." என்றாள் காயத்ரி...

"இந்தத் தங்கத்தை என்ன செய்வாங்க...?" அப்பாவியாய் வினவினாள் பவித்ரா..

"என்ன செய்யப் போகிறாங்கன்னு தெரியலை.. என்னைக் கேட்டால்.. இதை கவர்மெண்ட் எடுத்துக்கணும்" என்றான்

தினகரன்..

"இதை எடுத்துக் கொள்ள அவங்க யார்..?" மாலினியின் விழிகள் சிவந்தன...

மாலினியுடன் வாதாட சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் தினகரன் தீவிரமாக வாதாடத் தொடங்கினான்..

"என்ன மாலினி இப்படிக் கேட்டுவிட்டீங்க.. இந்தியா ஏழை நாடு.."

"இதைச் சொல்வது ஒரு பரம்பரை கோடீஸ்வரர்.."

"என்னை வைத்தே மற்றவங்களை எடை போட்டால் எப்படி..?"

"உங்க குடும்பத்து பரம்பரை குடும்ப நகைகளை கவர்மெண்ட் கிட்டே கொடுக்கச் சொல்லி நான் சொன்னால் நீங்க கொடுத்து விடுவீங்களா..?"

"இது தனி மனித சொத்து..."

"மனிதனுக்கே இவ்வளவு உரிமை இருக்கும் போது. இறைவனுக்கு எவ்வளவு உரிமை இருக்கும்? இந்த பொக்கிஷம் ஸ்ரீபத்மநாப ஸ்சுவாமியைச் சேர்ந்தது.."

"இதை வைத்து இந்தியாவின் கடனை அடைக்கலாமே.."

"இது மட்டும்தான் உங்க கண்களை உறுத்துகிறதா.. ஊழல் செய்த அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் அவங்களுக்கு உரிமையில்லாமல் எத்தனை லட்சம் கோடிகளை சுருட்டியிருக்காங்கன்னு நாம தினமும் பேப்பரில் படிக்கிறோமே.. அதைப் பறிமுதல்

செய்தால் அதை வைத்து இந்தியாவின் கடனையும் அடைத்துவிடலாம்.. உலக வங்கிக்கு நாம் கடன் கொடுத்து வட்டி வாங்க ஆரம்பிக்கலாம்.."

"இருந்தாலும்.. இந்த அளவு சொத்து கோயிலுக்கு இருப்பதைவிட மக்களுக்குப் போய்ச் சேரலாமே.."

"என்ன பேசறீங்க நீங்க.. இது அத்தனையும் மன்னர் மார்த்தாண்டவர்மா விட்டுக் கொடுத்தது.. ஆசைகளுக்கு பிறப்பிடமான அரச வம்சத்தில் வந்த ஒரு அரசர்..

தன்னை கடவுளின் சேவகனாக அறிவிக்கிறார்.. விஷ்ணுவை.. இந்த கோயிலின் பத்மநாப ஸ்வாமியை அரசன் என்று சொல்கிறார்.. அவருக்கு இருந்த பற்றில்லாத தன்மை உங்களுக்கு இல்லையா..? அவர் இந்தச் சொத்துக்களை கோயிலுக்கு விட்டுக் கொடுத்தது கடவுளுக்கு.. பத்மநாப ஸ்வாமிக்கு.. அரசாங்கத்துக்கு இல்லை.. இதை மனதில் வைத்துக் கொண்டு பேசுங்க..."

"மக்களின் நல்வாழ்வைப் பற்றி நீங்க யோசிக்க மாட்டீங்களா..?"

"மக்களின் வாழ்வைக் கவனிக்க அரசாங்கம் இருக்கு.. அரசாங்கத்தைப் பலப்படுத்த ஆயிரம் வரிகள் இருக்கின்றன.. இத்தனை நாளாய் எப்படி இருந்ததோ அப்படியே இனியும் இருக்க வேண்டியதுதானே.."

"இதுவரை சரி.. இப்போது கோயிலின் ரகசியம் வெளிப்பட்டு இருக்கிறதே..."

"இது வெளிப்பட்டிருக்கக் கூடாது என்பதுதான் என் கருத்து..."

"புரியவில்லை மாலினி.."

"இந்திய ஆன்மிகம் பலம் வாய்ந்தது தினகரன்.. இதன் வேர்களோடு நாம் விளையாடக் கூடாது.. இந்தியக் கோயில்கள் பழமையின் சின்னங்கள்.. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.. இத்தனை நாளாக.. இத்தனை கோடி பெறுமானமுடைய பொக்கிஷம்.. கோயிலின் நிலவறையில் பத்திரமாக இருந்திருக்கிறது.. இதிலிருந்தே இந்தக் கோயிலில் இருப்பவர்களின் கடவுள் நம்பிக்கை உங்களுக்கு தெரியவில்லையா..? அவர்கள் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.."

"நீங்க முடிவா என்னதான் சொல்ல வரீங்க.."

"இந்தப் பணம் கடவுளின் பணம். எப்படி ஒரு சர்ச்சுக்கு சொந்தமான சொத்துகளின் மீது கை வைக்க அரசாங்கத்துக்கு உரிமையில்லையோ.. எப்படி ஒரு மசூதிக்கு சொந்தமான சொத்துகளின் மீது கை வைக்க அரசாங்கத்துக்கு உரிமையில்லையோ.. அப்படித்தான் இந்த பொக்கிஷங்களின் மீதும் கை வைக்க அரசாங்கத்துக்கு உரிமையில்லை.. இது பத்மநாப

ஸ்வாமி கோயிலின் சொத்து... பத்மநாபரின் சொத்து.."

"நம் இந்தியாவிலதான் இப்படி.. ஏழைகள் பசியோடு இருக்க கோயிலுக்குள் பணம் குவிந்திருக்கும்.."

"இதையே எத்தனை காலம் நீங்க சொல்வீங்க..? நம்ம இந்தியாவில் மட்டும்தான் ஏழைகள் இருக்கிறாங்களா.. வெளிநாட்டில் இல்லையா..? எல்லா நாடுகளிலும் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும் மக்கள் இருக்கத்தான் செய்கிறாங்க. அங்கேயும் ஆலயங்களில் பணமும் சொத்துகளும் குவிந்துதான் இருக்கின்றன..."

"அப்படியா சொல்கிறீங்க...?"

"பின்னே இல்லையா.. நாம் நம்ம நாட்டை விட்டுக் கொடுத்து பேசுவதால்தான் இப்படி ஒரு தவறான பிரசாரம் இருந்து கொண்டிருக்கிறது.. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழில் சுதந்திரம் வாங்கினோம்.. சுதந்திரம் வாங்கி.. எழுபது வருஷங்கள்கூட ஆகவில்லை.. ஒரு நூற்றாண்டை தாண்டுவதற்கு முன்னாலேயே உலக அளவில் இந்தியா முதல் பத்து நாடுகளில் ஒரு நாடாக வளர்ந்திருக்கிறது இதை மறந்துவிட்டீங்களா..?"

"இதுவும் ஒரு பாயிண்டுதான்.."

"ஒரு காலத்தில் நம்ம நாட்டின் வறுமையை படம் பண்ணி புகழையும் பணத்தையும் சம்பாதித்தார்னு சத்யஜித்ரேயின் மேல் குற்றச்சாட்டே இருந்தது.. தெரியுமா..?"

"அவர்தானே முதன்முறையாக 'ஆஸ்கர் அவார்டு' வாங்கிய இந்தியர்..?"

"ஆமாம்.. இன்றைக்கு நம்ம நாட்டின் வறுமையைப் பற்றிச் சொல்லாமல்... அதன் உயர்வு.. கலாசாரம்.. இதைப் பற்றிப் பேசும் படங்கள் நிறைய ஆஸ்கர் அவார்டு தேர்வு கமிட்டிக்குப் போகுது..."

"ஏ.ஆர். ரஹ்மான்தான் ஜெயித்துவிட்டாரே.. 'ஆஸ்கர்' அவார்டை வாங்கி விட்டாரே.."

"தெரிந்தால் சரி.. இனியாவது இந்தியா ஏழைநாடுன்னு ஏலம் போடாமல்.. அவங்கவங்க வேலையைப் பார்க்கலாம்..."

நர்மதா மருமகளாக வரப்போகிறவளின் வாக்கு சாதுர்யத்தை மெச்சியவளாக முன்னால் நடக்க.. பிரபாகரன் பின்தங்கினான்.. குறிப்பறிந்த மாலினி வேகம் குறைக்க.. அவர்கள் இருவரும் இணைந்து மெதுவாக நடந்தார்கள்...

"ஹப்பா.. உனக்கு இவ்வளவு கோபம் வருமா..?" பிரபாகரன் வியப்புடன் வினவினான்..

"ரொம்ப நாளாகவே எனக்குள் இந்த கோபம் இருக்கு பிரபா.. குடிசையோ.. மாளிகையோ அவரவர்க்கு தோதாக ஒரு உரிமைப்பட்ட சொத்து இருக்கில்லையா.. அதையே கடவுள்னு வரும்போது மட்டும் ஏன் பொதுச் சொத்தாக்குகிறாங்க..?"

"தினாதான் காரணம் சொன்னானே.."

"அதுக்குத்தான் அரசாங்கம் இருக்கே.. கோயிலுக்குன்னு பக்தர்கள் கொடுத்த பணம் கோயிலைச் சேர்ந்தது பிரபா.."

"ஆனாலும் ஏதாவது நலத்திட்டம் செய்துதான் ஆகணும் மாலினி.. என் வாதம் இதுதான்..."

"நம்ம ஆன்மிகம் காப்பாற்றப்படணும் பிரபா.. நம்ம நாட்டின் கோயில்கள் ஒவ்வொன்றும் கலைப் பொக்கிஷங்கள்.. அதன் தூண்களில் உள்ள கல்வெட்டு சித்திரங்கள். யுகங்கள் கடந்தும் நிலைத்து நிற்கக் கூடியவை.. அதன் கோபுரங்களின் வேலைப்பாடுகள் காணக்

கிடைக்காதவை.. இதை யெல்லாம் பாதுகாக்கலாம்! சிதிலமடைந்து கொண்டிருக்கும் கோயில்களை புதுப்பிக்கலாம்... வருமானம் அதிகமில்லாத கோயில்களுக்கு பூஜை நடத்த ஏற்பாடு செய்யலாம்.. இப்படி கோயில் சம்பந்தமாக எத்தனையோ வேலைகளைச் செய்யலாமே.."

மாலினியின் இந்த புதிய கோணம் பிரபாகரனைச் சிந்திக்க வைத்தது.. அவள் சொன்ன பின்னால்தான் நிறைய ஊர்களில் ஆலயங்கள் பராமரிப்பின்றி சிதிலப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமை அவனுக்கு நினைவுக்கு வந்தது...

அவன் தன் காதலியை புதிதாக பார்த்தான்...

84

**எனதுயிரே.. உனதுயிரில்..**

**காதலோடு கலந்திடும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"ரயிலிலோ.. பஸ்ஸிலோ போகும்போது நான் எப்பவும் ஜன்னல் பக்கத்திலேயே உட்கார்ந்துக்குவேன் பிரபா.. அது எனக்கு ரொம்பப் பிடிக்கும்..."

திடீரென்று ஏன் மாலினி இதைச் சொல்கிறாள் என்ற நினைவுடன் அவள் முகத்தைப் பார்த்தான் பிரபாகரன்..

"அப்போதெல்லாம்.. ஏதாவது ஒரு ஊரில் இடிந்து போய் விழுகிற நிலைமையில் இருக்கும் கோயில்களைப் பார்ப்பேன். மனசு வலிக்கும்.. கோயிலின் மதில் சுவரில் செடி முளைத்து.. கோயிலைச் சுற்றி முள் வளர்ந்து.. காணக் கிடைக்காத கலைப் பொக்கிஷங்கள் இப்படி கவனிப்பாரில்லாமல் கிடக்குதேன்னு மனது அடிச்சுக்கும்..."

"நிஜம்தான்..."

"அதையெல்லாம் கவர்மெண்ட் சரிசெய்ய முடியாது பிரபா.. அவங்க மக்களைக் கவனிக்க வேண்டியிருக்கு.. ஆனால்.. கோயில்களில் இருந்து வரும் வருமானத்தை இதுபோல இருக்கும் கோயில்களைக் காப்பாற்றலா மில்லையா.."

"செய்யலாம்தான்.."

"செய்யணும்னு சொல்லுங்க.."

"உத்தரவு தேவி.."

"ம்ஹூம்.. நடிக்காதீங்க.. நீங்க ரொம்பத்தான் பயந்தவர்..."

"பின்னே இல்லையா..?"

"இரும்பு மனிதர் பேசுகிற பேச்சைப் பாரேன்.."

"பேச்சைக் கேட்கத்தான் முடியும்.. பார்க்க முடியுமா..?"

"காலையில் ஒரு பார்வைகூடத் திரும்பிப் பார்க்காமல் காரை ஓட்டிவிட்டு.. இப்ப தேவின்னு குழைகிறார்... போங்க பிரபா.. உங்க பேச்சு காய்.."

தீவிரமாக நாட்டில் உள்ள கோயில்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தவள்.. காதலியாக மாறி.. கொஞ்சிப் பேச ஆரம்பித்ததை உணர்ந்துகொண்ட பிரபா கரனின் மனம் மயங்கியது...

"ஏய்.. கருணா என் பக்கத்தில் இருந்தாண்டி.. இவ்வளவு பேசுகிறவள்.. என்னிடம் ஒரு வார்த்தையாவது பேசினயா.. சசியுடன் வாயடித்துக் கொண்டே வந்தாய்.. மார்த்தாண்டத்தில் திறந்த வாயை திருவனந்தபுரம் வந்த பின்னால்தான் மூடினீங்க.. பேச்சு.. பேச்சு.. பேச்சுத்தான்.. உனக்கு வாயே வலிக்காதா மாலினி.."

மாலினி, பிரபாகரனை முறைக்க ஆரம்பித்தபோது முன்னால் சென்றுகொண்டிருந்த சசிரேகா அவளை அழைத்தாள்..

"கோயிலுக்கு சாமி கும்பிட வந்திருக்கிறோம்ங்கிற தால் சும்மாவிடுகிறேன்.. நாளைக்கு இருக்கு உங்களுக்கு.."

மாலினி, சசிரேகாவிடம் விரைந்துவிட.. பிரபாகரன் கருணாகரனுடன் பேசியபடி நடந்தான்..

தங்கத்தால் செய்யப்பட்ட அனந்தசயனப் பெருமாளான பத்மநாப ஸ்வாமியின் திருக்கோலத்தை.. கற்பூர ஒளியில் பார்க்கும்போது கண் நிறைந்து போனது மாலினிக்கு..

காலடியில் மகாலட்சுமி... தொப்புள் கொடியின் தாமரை மலரில் பிரம்ம தேவன் சகிதம் காட்சி கொடுத்தார், ஆதிசேஷனின் மேல் பள்ளிகொண்டிருந்த பரந்தாமன்...

கோயிலைச் சுற்றி வலம் வரும்போது. ஒவ்வொரு தூண்களில் அருகேயும் நின்று மாலினி ரசித்துக் கொண்டே வர.. அவளின் கலையார்வத்தை ரசித்துக் கொண்டிருந்தான் பிரபாகரன்..

காலை உணவுக்கு ஹோட்டலுக்குச் சென்றார்கள்..

"இனி வீட்டுக்குத்தானேம்மா..?" கருணாகரன் செல்போனை கையில் எடுத்தபடி நர்மதாவிடம் கேட்டான்..

"ஆமாம் கருணா.." என்று நர்மதா சொல்லிக் கொண்டிருந்தபோதே பிரபாகரன் இடைமறித்தான்..

"வீட்டுக்கு நைட் போய்க்கலாம்மா.. இப்ப திருவனந்தபுரத்தை சுற்றிப் பார்க்கலாம்.."

இதைச் சொன்னது தன் மூத்த மகன்தானா என்ற ஆச்சரியத்துடன் பிரபாகரனைப் பார்த்தாள் நர்மதா. ஏனென்றால் பிரபாகரன்.. இருபத்து நான்கு மணி நேரமும் வேலை.. வேலையென்று அலைகிறவன்.. காயத்ரியின் திருமணம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதற்காக.. பத்மநாப ஸ்வாமி கோயிலுக்கு குடும்பத்துடன் போய் அர்ச்சனை.. அபிஷேகம் நடத்த வேண்டுமென்று நர்மதா ஆசைப்பட்டாள்.. தங்கையின் மேல் உள்ள பாசத்தால் பிரபாகரனும் அதற்கு ஒப்புக் கொண்டான்...

மற்றபடி.. மணியைப் பார்த்துக் கொண்டே பேச நேரமின்றி ஓடுகிறவன் அவன்..

அப்பபடிப்பட்ட பிரபாகரன்தான் இன்று ஒரு நாள் முழுவதையும் ஊர் சுற்றிப் பார்ப்பத்தில் செலவழிக்க வேண்டும் என்று விரும்புகிறான்..

இந்த மாற்றத்தை அவனுக்குள் கொண்டு வந்து இருப்பது மாலினி என்பதை நர்மதாவால் புரிந்துகொள்ள முடிந்தது. அவளோடு திருவனந்தபுரத்தை சுற்றிப் பார்க்க மகன் விரும்புவதும் அவளது உள் மனதிற்குத் தெரிந்தது..

"வேலை இருக்கிறதே அண்ணா.." கருணாகரன் தயக்கத்துடன் சொன்னான்...

"நமக்கு எப்போதும் வேலைதான். அதுக்காக அதிலேயே மெஷினைப் போல மூழ்கிக் கொண்டிருந்தால் எப்படி கருணா.. முதன்முதலாக வீட்டுப் பெண்கள் எல்லோரையும் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கிறோம்.. உடனே போய் அவங்களை அரண்மனைச் சிறையில் அடைக்கணுமா என்ன? இன்று ஒரு நாளாவது அவங்க ஊரைச் சுற்றிப் பார்க்கட்டுமே.."

பிரபாகரன் கூறியதைக் கேட்ட கருணாகரன் ஜாடையாக சசிரேகாவின் முகத்தைப் பார்த்தான்.. அவள் கண்களில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்டதும் அவனது மனம் இளகிவிட்டது...

'பாவம்.. எவ்வளவு ஆசைப்படுகிறாள். அதை வாய் விட்டுச் சொல்லாமல் மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்கிறாள்.. நானும்தான் அவளை ஒரு நாளாவது வெளியே கூப்பிட்டுக் கொண்டு போயிருக்கிறேனா...'

கருணாகரன் தன் வேலைகளைத் தள்ளிப்போட உடனடியாக முடிவு செய்தான்...

நர்மதா, காயத்ரியின் முகம் பார்த்தாள்.. தினகரனுடன் விளையாட்டுச் சண்டை போட்டுக் கொண்டிருந்த மகளைக் கண்டதும் மனம் கனிந்தாள்..

'நாளைக்கு கல்யாணமாகி இன்னொரு வீட்டிற்கும் போய்விட்டால்.. அவள் புருஷன்கூடத்தான் வந்தாகணும்..

இன்றைக்காவது அண்ணன்களுடன் சந்தோஷமாக பேசிச் சிரிக்கட்டுமே..'

நர்மதா.. பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி ஊர் சுற்றிப் பார்ப்பதை ஆதரித்தாள்...

தினகரன் ஜாடையாக மாலினியையும் நேரடியாக பவித்ராவையும் பார்வையிட்டான்...

'எப்பேர்ப்பட்ட சான்ஸ் கிடைச்சிருக்கு.. மாலினியுடன் ஒரே வீட்டில் இருக்கிறோமுன்னுதான் பெயர்.. அவள் முகத்தை டைனிங் ஹாலில் மட்டும்தான் பார்க்க முடியுது. அங்கேயும் சுற்றியும் அண்ணனும் அம்மாவும் இருப்பாங்க.. பேச முடியாது.. இன்றைக்கு ஒரு நாள் பூராவும் அவள் அருகில் இருக்கப் போகிறேன்.. சைக்கிள் கேப் கிடைத்தால்கூடப் போதும்.. என் மனதை அவளிடம் சொல்லிவிடுவேன்.. போரடித்தால் பார்த்துக் கொள்ள கண்ணுக்கு குளிர்ச்சியா இந்த பவித்ராவும் இருக்கிறாள்.. இந்த நாள் அல்லவோ திருநாள்..'

அவன் உற்சாகத்துடன் அந்த ஊர்சுற்றலை மனதிற்குள் வரவேற்றான்.. தன் மனதிலிருப்பதை பிரபாகரன் வாய் விட்டுச் சொல்லிவிட்டதில் சசிரேகாவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி..

'பெரியத்தான் இந்த அளவுக்கு பெண்களின் உணர்வை புரிந்து வைத்திருக்கிறாரா.. எவ்வளவு சரியாகச் சொன்னார்.. அரண்மனைச் சிறைன்னு... தங்கக் கூண்டாக இருந்தாலும் சிறைபட்டிருக்கும் கிளிக்கு அது கூண்டு தானே..'

அந்த ஒரு நாள் முழுவதும் கணவன் அவளருகேயே இருக்கப் போகிறான் என்பதில் அவளுக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டானது...

தினகரனை ஒளிந்தும் மறைந்தும் பார்க்காமல் நேரடியாகவே பார்க்கலாம் என்ற குதூகலம் பவித்ராவிற்கு.

"வாவ்.. எவ்வளவு அருமையான டூர்.. பெரியத்தானுக்கு கோடி நன்றிகள் சொல்லணும்.. என் தினா அத்தானின்

பக்கத்திலேயே இருக்கப் போகிறேன். அவர் வேறு இன்னிக்கு செமத்தியா என்னை சைட் அடிக்கிறார்.. மனம் விரும்பியவனின் பார்வை தன்மேல் படிவதில் அவளுக்கு அவ்வளவு சந்தோஷம் மனதில் பூத்தது.."

மாலினிக்கு அந்த கேரளத்து மண்ணின் இதமான தட்ப வெப்ப நிலை மிகவும் பிடித்திருந்தது.. அந்த ஊரை விட்டு உடனடியாக கிளம்ப அவளுக்கு மனமில்லை.. அவள் மனதை உணர்ந்தவனாக பிரபாகரன் சொன்னது அவளை சந்தோஷத்தில் ஆழ்த்தியது...

'அத்தைக்குத் தெரிந்த பின்னால் இவர்கூட ஊரைச் சுற்றவும் எனக்கு மனமில்லை.. அதேசமயம்.. இந்த ஊரின் அழகைப் பார்த்ததும்.. இந்த ஊர் பூராவும் இவர்கூடச் சேர்ந்து சுற்றி வரணும்னும் ஆசையாய் இருக்கு.. எப்படித் தான் என் மனசை இவர் படிச்சாரோ.. தனியாகவும் சுற்றாமல் அதேசமயம் என் கூடவே இவரிருக்கிறதைப் போலவும் திட்டம் போட்டுவிட்டாரே...'

அவள் மற்றவர்கள் அறியாத காதல் பார்வையை பிரபாகரனின் மேல் செலுத்தினாள்..

அவளது பார்வையை எதிர்பார்த்திருந்தவன் கண்கள் மின்ன.. அதே பதில் பார்வையை அவளுக்குத் திருப்பிக் கொடுத்தான். காயத்ரிக்கு.. தன் தாயுடனும் கூடப் பிறந்தவர்களுடனும் நாள் பூராவும் சேர்ந்து ஊர்சுற்றப் போவதில் குதுகலம் உண்டானது..

'இன்னும் எண்ணி முப்பதே நாள்கள்தான்.. நான் இன்னொருவரின் சொத்தாக மாறிப் போய் விடுவேன்.. நாற்றங்காலைப் பறித்து வேறு இடத்தில் நடுவதைப் போல என்னை என் குடும்பத்திலிருந்து பெயர்த்தெடுத்து வேறு குடும்பத்தில் சேர்த்துவிடுவாங்க.. இன்றைக்கு எல்லோரோடும் இருக்கப் போகிறதை என் செல்போனில் படம்பிடித்து பத்திரம் பண்ணிக்குவேன்...'

அவள் அப்போதே தன் பிறந்த வீட்டின் ஞாபகங்களைச் சேகரிக்க துவங்கி விட்டாள்...

எப்போதுமே ஒற்றுமையாக இருக்கிறவர்களைக் கண்டால் ஆகாத ஸ்வேதாவிற்கு அந்த சுற்றுலா வேம்பாக கசந்தது...

'இங்கேயிருக்கிற மூன்று ஆண்பிள்ளைகளும் என்னை சைட் அடிக்கப் போவதில்லை. ஒவ்வொருத்-தனுக்கும் அவனுக்கான ஆள் இந்தக் கூட்டத்திலேயே இருக்கிறா. நான் வேஸ்டா.. இதுக சைட் அடித்துக்கிறதைப் பார்த்து வயிறு எரியணுமா..?'

அவளுக்கு எல்லோரையும் இழுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடிவிட வேண்டும் போல இருந்தது. அதை வெளியே சொன்னால் நர்மதா அவளைச் சும்மா விட மாட்டாள் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்..

மனித மனங்கள்தான் எத்தனை விசித்திரமான குணங்களைக் கொண்டது...

அங்கே கூடியிருந்த ஒவ்வொருவரின் மனதில் ஒவ்வொரு விதமான எண்ணம் இருந்தது. அவர்கள் சேர்ந்து தான் ஊரைச் சுற்ற ஆரம்பித்தார்கள். ஆனால், அவர்களின் எண்ணங்கள் தனித்தனியாக இருந்தன.

ஆளுக்கொரு ஆசை என்று சும்மாவா பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள்...

## 85

**நீரோடும் ஓடையிலே.. நின்றாடும் மீனைப்போல...**

**உன்னோடு என் மனது.. ஒட்டி உறவாடுவதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பச்சைப் பசேலென்று கொடி வீடுகள் அடர்ந்திருந்த பூங்காவில் நுழைந்தபோது.. மனம் சிறகடித்துப் பறப்பதை

உணர்ந்தாள் மாலினி.. கடைக்கண்ணால் பிரபாகரனைத் தேடினாள்.. அவன் சன்னமான விசில் சத்தத்துடன் அருகே வந்தான்...

"ஸ்ஸ்.. எல்லோரும் உங்க மேல மரியாதை வைத்து இருக்காங்க..."

"அதுக்கென்ன இப்ப?"

"இப்படி விசிலடித்தால் உங்க இமேஜ் என்ன ஆகும்..?"

"இமேஜ்ங்கிற முகமூடியெல்லாம் நமக்குள் வேணாம்.. இங்கே நான் உன்னுடைய பிரபாகரன் மட்டும் தான்.. நீ என்னுடைய மாலினி மட்டும்தான்.."

மாலினிக்கு அது புரியாமல் போகுமா.. உடனடியாக பிரபாகரனின் மனதை சமாதானப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தவளாக பேச்சை மாற்றினாள்...

"எனக்கு இந்த ஊரை ரொம்பப் பிடிச்சிருக்கு அத்தான்..."

"எனக்கும்தான் நீ அத்தான்னு கொஞ்சுவது பிடித்திருக்கு..."

"அப்போ பிரபான்னு நான் கூப்பிட்டால் பிடிக்காதா..?"

"அது இதைவிட பிடிச்சிருக்குடி..."

"பேச்சில் மயக்க உங்களை மிஞ்ச யாருமில்லை..."

"நீ மயங்கிட்டாலும்..."

"ஏன் அலுத்துக்கறீங்க.."

"இப்படி நான்கடி தள்ளி நடந்து வந்தா விளங்கிடும்.."

"ஸ்ஸ்.. அத்தை.. காயத்ரி.. கருணா அத்தான்னு இத்தனை பேர் நம்மைச் சுத்தி இருக்காங்க.. மறந்துர வேணாம்..."

"அங்கே கருணாவையும் சசியையும் பார்த்துவிட்டு பேசு.."

அத்தனை நாளாக மற்றவர்கள் முன்னால் மனைவியுடன் நெருக்கமாக நின்று பேசாத கருணாகரன்.. கேரளத்துப் பசுமையில் தன் விரதத்தை கைவிட்டவனாக மனைவியுடன் உராய்ந்து நடந்து கொண்டிருந்தான்...

காதலிக்கும்போது தந்த நெருக்கத்தை அதற்குப் பின்னால் மறந்துபோனவனாக இருந்த கணவன்.. அந்த நிலாக்கால நினைவுகளைத் திரும்பவும் அளித்துவிட்ட சுகத்தில் மெய்மறந்து போன சசிரேகா.. கருணாகரனின் கைவிரல்களோடு தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டாள்...

அதைப் பார்த்த மாலினிக்கு பிரபாகரனின் விரலோடு விரல் பிணைத்துக் கொள்ளும் ஆசை வந்தது. அவளது கண்கள் அதை வெளிப்படுத்த.. பிரபாகரன் சுற்றுப்புறத்தை மறந்து ஆர்வமாக அவளருகில் வந்தான்..

"அண்ணா.. இந்தக் கொடிவீட்டுப் பக்கத்தில் நீங்களும் நானும் சேர்ந்து நிற்கிறதைப் போல ஒரு பிக்சர் எடுத்துக்கலாமா..?"

மாலினியின் அருகே மயக்கத்துடன் நெருங்கி நின்றவன் சுதாரிக்கும் முன் மாலினி சுதாரித்துக் கொண்டு விலகி நின்றாள்..

"மாலினி.. எங்க இரண்டு பேரையும் படம்பிடியுங்களேன், ப்ளீஸ்..."

கொடி வீட்டருகில் தமையனின் தோள் சாய்ந்து நின்ற காயத்ரியைப் பார்த்தபோது மாலினியின் மனதிற்குள் ரஞ்சித்தின் நினைவு வந்தது..

பெண்டாட்டி தாசனாக இருப்பவன்.. தங்கையின் விஷயத்தில் மட்டும் மனைவியின் சொல்லை சட்டை செய்யாதது மனதில் எழுந்தது...

"பத்திரமாக இருக்கணும் மாலினி..."

ஆயிரம் முறை தலையைத் தடவிக் கொடுத்து அறிவுரை சொன்னவனின் வார்த்தைகள் நினைவுக்கு வர..

'பத்திரமா இருக்கேன் அண்ணா..' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள் மாலினி...

செல்போனில் கோணம் பார்த்தபோது பிரபாகரன் அவளைப் பார்த்து கண்ணடித்து வைத்தான்.. மாலினியின்

முகம் சிவந்துவிட்டது. கடிந்து கொள்ளும் ரகசியப் பார்வையை அவனை நோக்கி வீசினாள்..

கருணாகரனும் தினகரனும் நெருங்கி வர... நர்மதா, பவித்ராவுடன் பேசியவாறு ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள்..

அண்ணன்மார் மூவரின் நடுவில் நின்று காயத்ரி படம்பிடித்துக் கொள்ள.. சசிரேகா அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"அண்ணா.." என்று கருணா மெதுவான குரலில் எதையோ வினவ.. அவளுக்கு பதில் சொல்லியவண்ணம் மாலினியைப் பார்வையால் தொடர்ந்து கொண்டிருந்தான் பிரபாகரன்...

"இதைப் பாரேன் மாலினி.." அருகிலிருந்த குளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாத்துக்களை சசிரேகா காட்ட.. அதைப் பார்த்த வண்ணம்.. ரகசியமாக பிரபாகரனின் பார்வையை சந்தித்துக் கொண்டிருந்தாள் மாலினி...

"ரகசியமானது காதல்-மிக.. மிக..

ரகசியமானது காதல்...

முகவரி சொல்லாமல்...

முகம்தனை மறைக்கும்...

ஒருதலையாகவும்...

சுகம் அனுபவிக்கும்...

சுவாரஸ்யமானது காதல்.. மிக மிக..

சுவாரஸ்யமானது காதல்..."

காலையில் காரில் ஒலித்த பாடல் வரிகள் இப்போது மாலினியின் மனதில் ஒலித்தது..

அவளுக்கு உலகமே மிக அழகாக இருப்பதைப் போலத் தோன்றியது...

மிருகக்காட்சிச்சாலையில் குரங்கைக் காட்டி..

"அண்ணா.. அதோ உன் இரட்டைப் பிறவி.." என்று தினகரனிடம் சொல்லிச் சிரித்தாள் காயத்ரி..

"இல்லை காயத்ரி.. அது அச்சு அசல் உன் ஜாடையாகவே இருக்கிறதால் நிச்சயம் உன்னோட இரட்டைப் பிறவிதான்.." என்று சிரிக்காமல் சொன்னான் தினகரன்...

"அண்ணா..." சிணுங்கியவாறு அவனை அடிக்கத் துரத்தினாள் காயத்ரி...

மதிய உணவுக்கு இயற்கையோடு ஒட்டிய ஒரு கார்டன் ரெஸ்டாரெண்டிற்கு போனார்கள்.. ஏரியில் படகு சவாரி செய்தார்கள். மாலையில் கோவளம் கடற்கரையியின் ஓர தென்னந்தோப்புகளில் நடந்தார்கள்..

எல்லா நேரங்களிலும் பிரபாகரன், மாலினியின் அருகிலேயே இருப்பதைப் போலப் பார்த்துக் கொண்டான்..

ஹோட்டலில் சாப்பிட உட்காரும்போது மிகத் தற்செயலாக உட்காருவதைப் போல மாலினியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்...

படகுச் சவாரி செய்யும்போது.. மாலினியும் அவனும் மட்டும் படகில் இருக்குமாறு செய்து கொண்டான். மற்றவர்கள் பெரிய படகுகளில் ஏறியபோது ஏறாமல் பின்தங்கி..

"இடமில்லை போல இருக்கே.. மாலினி இந்தப் படகிற்கு வா.." என்று அழைத்துக் கொண்டான்...

"நீங்க பண்ணும் அழும்பு இருக்கே.." மாலினி முணுமுணுத்தபோது...

"அநியாயமாய் பேசாதேடி.. அப்படி நான் என்ன அழும்பு பண்ணிட்டேன்.. உன் கையைப் பிடித்தேனா.. இடுப்பில் கிள்ளினேனா.. தோளில் கை போட்டேனா.. இன்னும்.." என்று சன்னக்குரலில் அடுக்கிக் கொண்டே போனான்..

"அப்பா சாமி.. நான் தெரியாமல் சொல்லிவிட்டேன். அடங்குங்க.." என்று மாலினி கெஞ்சிய பின்னால்தான்..

"அஃது... அந்த பயம் இருக்கட்டும்.." என்று எச்சரித்தபடி பேச்சை நிறுத்தினான்..

மாலினி அவனை ரசித்தாள்.. அவனது அடாவடித் தனத்தை ரசித்தாள்.. அவளுக்காக அவன் செய்த தகிடு தத்தங்களை ரசித்தாள்..

'இவன் என்னுடையவன்.. எனக்காக எதையும் செய்கிறவன்...'

அந்த நினைவே அவளுக்கு இனித்தது...

கோவளம் கடற்கரையின் மணலில்.. நீச்சல் உடையுடன் வெள்ளைக்காரர்கள் நிழல்குடையின்கீழ் படுத்திருந்தார்கள்.. தினகரன் உற்சாகமாகி.. தன் செல்போனில் அவர்களைப் படம்பிடிக்க ஆரம்பித்தான்.. அவனது அந்த அலைபாய்தலைக் கண்டு பவித்ராவின் முகம் கூம்பிவிட்டது...

"அண்ணா..." காயத்ரி சிரித்தபடி ஒற்றை விரலைக் காட்டி தினகரனை எச்சரித்தாள்...

"இதையெல்லாம் கலைக் கண்ணோடு பார்க்கணும் காயும்மா..." அவன் அதற்கு அழகாக விளக்கம் வேறு சொன்னான்...

"கலைக்கண்ணோடு பார்க்கறியா.. அதுவும் நீயா.. யாருகிட்ட காது குத்தற.. நீ போடும் கடலைக்கு பயந்து.. நான் என் ஃப்ரெண்ட்ஸையே வீட்டுக்கு இன்வைட் பண்ணமாட்டேன்.. நீ என்கிட்டயே கதை விடறே.." காயத்ரி அவன் காலை வாரினாள்.

"அப்படியே நீ உன் ஃப்ரெண்ட்ஸ்ஸை அழைச்சுட்டு வந்துட்டாலும்.. நான் அந்த உலக அழகிகளிடம் மயங்கித் தான் விடுவேன். போவியா பேசாம.. உன் ஃப்ரெண்ட்ஸின் மூஞ்சிகளில் எந்த மூஞ்சியும் பார்க்கிற மூஞ்சிகளாவே இல்லை.. இதில் அவளுகளை என் கண்ணில் காட்டாமல் இவள் பாதுகாத்தாளாம்.." தினகரன் அலட்சியமாக தோள்களைக் குலுக்கிவிட்டு காரியத்தில் கண்ணாக இருந்தான்..

பவித்ராவின் முகம் இன்னும் வாட.. ஸ்வேதாவிற்கு மனதிற்குள் சந்தோஷ ஊற்று பெருக்கெடுத்தது...

'நீ சைட் அடிக்கும் உன் அத்தானின் லட்சணத்தைப் பார்த்துக் கொள்..' என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்...

கலக்கமடைந்திருந்த பவித்ராவின் மனதை இன்னும் கொஞ்சம் கலக்குவதற்காக.. தனித்து ஒரு தென்னை மரத்தின் மீது சாய்ந்து நின்றுகொண்டிருந்தவளின் அருகே சென்றாள்..

"என்ன பவித்ரா.. தனியாய் நிற்கிற.." வேண்டு மென்றே குரலில் பரிதாபத்தை வரவழைத்துக் கொண்டு ஸ்வேதா கேட்டாள்..

"ஒன்றுமில்லையே.." சமாளித்துக் கொண்டு பதில் சொன்னாள் பவித்ரா..

"ஒன்றுமில்லைன்னு உன் வாய்தான் சொல்லுது.. முகம் சொல்ல மாட்டேங்குதே..."

"இப்ப உனக்கு என்ன வேணும் ஸ்வேதா.."

"எனக்கு எது வேணுமோ.. எனக்குத் தெரியாது.. ஆனால், உனக்கு நிம்மதி வேணும்.. அது மட்டும் தெரியும்.."

"டூர் வந்த இடத்தில் தேவையில்லாம என் மூடை ஸ்பாயில் பண்ணாதே..."

"ஏற்கெனவே உன் மூடு அவுட்டாகிவிட்டது பவித்ரா.. அதை நான் புதிதாய் ஒன்றும் ஸ்பாயில் பண்ணவில்லை.."

"கொஞ்சம் பேசாம இருக்கியா..?"

"ஏன்..?"

"எனக்கு தலையை வலிக்குது.."

"என் பேச்சைக் கேட்டு வந்த தலைவலியா.. இல்லை உன் ஆள் வெள்ளைக்காரிகளை விதம் விதமாய் போட்டோ பிடிக்கிறானே.. அதைப் பார்த்ததில் வந்த தலைவலியா..?"

"ஸ்வேதா.."

"ஏன் கத்துகிற பவித்ரா.. உனக்குத்தான் சாமர்த்தியம் போதாதுன்னு நான் சொல்லுவேன்.."

"என்ன உளறுகிறாய்..?"

"இது உளறல் இல்லை.. உண்மை.. உன் இடத்தில் மட்டும் மாலினி இருந்திருந்தாள்னு வை.. தினகரனின் பார்வையை வேறுபக்கம் அலையவிட்டிருக்கவே மாட்டாள்.."

பவித்ராவின் தன்னம்பிக்கையைக் குழிதோண்டி புதைத்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா.. அவளின் நிமிர்வு குலைந்து கொண்டிருந்தது...

"என்னால் முடியாதது மாலினியால் மட்டும் எப்படி முடியும்?" குரல் நடுங்க கேட்டாள் பவித்ரா..

"இது என்ன பவித்ரா, முட்டாள் போல இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு வைக்கிற.. மனதுக்குப் பிடித்த பெண் என்ன சொன்னாலும் ஒருத்தன் கேட்டுக் கொள்வானா இல்லையா..?"

ஸ்வேதாவின் இதழ்களில் குரூரப் புன்னகை நெளிந்தது. பவித்ராவின் முகமோ ரத்தத்தை இழந்து வெளுத்தது...

## 86

**உன் ரகசியப் பார்வையிலே...**

**என் ராத்திரி பறி போவதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

உயிருக்குயிராய் ஒருவனைக் காதலிக்கும் பெண்ணிடம்... உன் காதலனின் மனதுக்குப் பிடித்த பெண் நீ

இல்லையென்று சொன்னால் அவள் மனம் என்ன பாடுபடும்..?

பவித்ராவின் மனமும் அந்தப் பாட்டைப் பட்டது..

அதை அறியாத பேதையா ஸ்வேதா..? அவள் ஒரு வகையில் மேதை. என்ன ஒன்று.. தன் மேதாவித்தனத்தை இதுபோன்ற சின்னத்தனமான காரியங்களில் மட்டுமே அவள் செலவழித்து தொலைத்தாள்..

அவள் மட்டும் தன் மேதாவித்தனத்தை ஆக்கப்பூர்வ மான வழியில் பயன்படுத்தியிருந்தால் வாழ்க்கையில் மிக உயர்ந்த இடத்தில் இருந்திருப்பாள்...

அதை விட்டுவிட்டு.. அல்பத்தனமான குறிக்கோளுக்காக தன் வாழ்க்கையின் இரண்டு

மூன்று வருடங்களைத் தொலைத்துவிட்டு அதற்கு காரணமானவர்களை தொலைத்துக் கட்டியே தீருவேன் என்று சபதம் போட்டுக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தாள்..

"போய்விடு ஸ்வேதா..."

"எங்கே போகச் சொல்கிறாய் பவித்ரா.. அந்தக் கடலில் போய் விழச் சொல்கிறாயா.. எனக்கென்ன தலைவிதியா.. அந்தக் கடலில் போய் விழ? நானென்ன உன்னைப் போல காதலனைத் தோற்றுக் கொண்டிருக்கிறேனா..?"

"என்ன சொன்ன..?"

"நீயென்ன செவிடா.. நான் பேசுவது உன் காதில் விழுகவில்லையா..?"

"காதலைப் பற்றி உனக்கென்ன தெரியும்..?"

"அந்தக் கண்றாவியைப் பற்றித் தெரிந்து கொண்டு நீ படும்பாடு போதாதா.. எனக்கென்ன தலைவிதியா.. அந்தப் புதைகுழியில் போய் மாட்டிக்கொள்ள..?"

"உனக்கு என்னைப் பார்த்தால் கேலியாக இருக்கிறதா..?"

"இல்லை.. பாவமாக இருக்கிறது.."

"நீ பரிதாபப்படும் அளவிற்கு எனக்கென்ன ஆகிவிட்டது..."

"அடி.. போடி பைத்தியக்காரி.. நீ காதலிக்கிறவன்.. உன்னை பக்கத்தில் வைத்துக்கிட்டே வேறு ஒரு பெண்ணை உருகி உருகி பார்க்கிறான்.. அரையும் குறையுமாக இருக்கிற வெள்ளைக்காரிகளை விழுந்து விழுந்து போட்டோ எடுத்துத் தள்ளுகிறான். இதை பார்க்கிற எனக்கு உன் மேல் பரிதாபம் வருமா.. வராதா.."

"கடுப்படிக்காதே ஸ்வேதா.."

"நீயும் ஜோக்கடிக்காதே பவித்ரா.. நான் உள்ளதைச் சொன்னால்.. உனக்கெதற்கு உடம்பு எரிகிறது..? இந்தக் கருமத்திற்குதான் நான் இவன்களை காதலிக்கும் வேலையை வைத்துக் கொள்ளவில்லை..."

"நீ காதலித்திருந்தாலும்... அவங்க திரும்பிப் பார்த்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாங்க..."

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பவித்ரா, பதிலடி கொடுத்துவிட்டாள்.. இடக்காகப் பேசிக்கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு முகம் விழுந்து விட்டது...

ஆனால்.. இதற்காகவெல்லாம் பின்வாங்கினால் அவள் ஸ்வேதா அல்லவே...

முதல் நாளிரவு.. பிரபாகரனும் நர்மதாவும் வீட்டைக் கூட்டி.. அத்தனை பேரின் முன்னாலேயும் ஸ்வேதாவை கிழிகிழியென்று கிழித்தார்கள். அதை அப்படியே துடைத்து போட்டுவிட்டு விடியற்காலையில் அவர்களுடன் தொற்றிக் கொண்டவள் ஆயிற்றே...

இந்த பவித்ரா படுத்தும் அவமானமெல்லாம் அவளுக்கு வெறும் ஜுஜுபி!

"உனக்கு இன்னும் உலகம் தெரியவில்லை பவித்ரா.."

"உனக்கு தெரிந்திருக்கிறதே போதும்..."

'இப்படியே இருந்தால் கட்டாயம் ஒரு நாள் நீ ஏமாந்து விடுவாய்...'

"நீயும்தான் கெட்டிக்காரத்தனமாக இருந்து என்னத்தை அள்ளிக் கட்டிக் கொண்டாய்..?"

"என் கதையை விடு.. உன் கதைக்கு வா.."

"அது எப்படி.. நீ மட்டும் என்னைப் பற்றி கதை பேசலாம்.. அதுவே நான் பேசினால் தப்பா..?"

"இதோ பார்.. நான் பிரபாகரனையும் காதலிக்க வில்லை.. தினகரனையும் காதலிக்கவில்லை..."

"அவர்களும் உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை..."

"அதனால் எனக்கொண்ணும் குறைந்து போகாது..."

"எனக்கு மட்டும் குறைந்து போகுமா..?"

"பின்னே இல்லையா.. நீதான் அந்த தினகரனின் மேல் பைத்தியமாக இருக்கிறாயே.."

அது நேரம் வரை பதிலுக்குப் பதில் பேசிக் கொண்டிருந்த பவித்ரா, ஊமையாகி விட்டாள்.. வெற்றிக்குறி முகத்தில் தோன்ற, ஸ்வேதா பேச்சைத் தொடர்ந்தாள்...

"இவ்வளவு நேரமாக தென்னை மரத்தின் மேல் சாய்ந்துக்கிட்டு ஒற்றைக் காலில் தவம் செய்கிறாயே.. அந்த தினகரன் உன்னைத் திரும்பியாவது பார்த்தானா..?"

'இல்லையே' மனம் வருந்தினாள் பவித்ரா..

அவளாக அருகில் போனால் முகமலர்ச்சியுடன் பேசத் தான் செய்கிறான் தினகரன். ஆனால்.. விலகி நின்றால் தேடி வருவதில்லையே..

அவனை வரச் செய்யும் உபாயம் அறியாமல் பவித்ரா தவித்துப் போனாள்...

"நான் திரும்பிப் பார்க்க வைக்கவா..?"

"நீயா.. ஹ..."

பவித்ரா அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினாள்..

அவளது அலட்சியத்தை அலட்சியம் செய்தாள் ஸ்வேதா..

"அவனை என்னைத் திரும்பிப் பார்க்க வைப்பதாக நான் சொல்லவில்லை.. உன்னைத் திரும்பிப் பார்க்க வைக்கவான்னுதான் கேட்டேன்..."

"எரிச்சலைக் கிளப்பாதே ஸ்வேதா..."

"உண்மையை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் உன்னிடமில்லை..."

"நீ என்ன உண்மையைக் கண்டுவிட்டாய்..?"

"நான் கண்டதை உன்னையும் காண வைக்கவா..?"

"வேண்டாம்னா நீ விட்டு விடவா போகிறாய்.. என்னத்தையோ செய்து தொலை.."

"நான் இதைச் செய்ய முடியாது.. நீதான் செய்யணும்.."

"எதைச் செய்யச் சொல்கிற..?"

"மாலினியைக் கூப்பிடு.."

"நீ நிற்கும் இடத்துக்கு அவ வரமாட்டா.."

"அவ வரும் இடத்தில் நானும் நிற்க மாட்டேன்.. அதோ அந்த மரத்துக்குப் பின்னால் போய் நின்று பார்க்கிறேன்..."

"எதைப் பார்க்கப் போகிற..?"

"வேடிக்கையைத்தான்..."

"என்ன வேடிக்கை..?"

"எனக்கு அது வேடிக்கை.. உனக்கோ.. வாழ்க்கை.."

ஸ்வேதா அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.. பவித்ராவிற்கு தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை..

என்னதான் நடக்குமென்று பார்க்கலாமே என்ற நினைவுடன் அவள் மாலினியை அழைத்தாள்...

சசிரேகாவுடன் பேசிக் கொண்டிருந்த மாலினி திரும்பிப் பார்த்தாள்..

"பவி கூப்பிடுகிறா சசி.. போய் என்னன்னு கேட்டு விட்டு வந்து விடுகிறேன்..."

பவித்ராவின் அழைப்பை மதித்து.. மாலினி உடனே வந்ததை நினைத்து பவித்ராவிற்கு பெருமையாக இருந்தது..

"என்ன பவி..?"

"நீ பாட்டுக்கு டூருக்கு வந்துவிட்டு கண்டு கொள்ளாமல் இருக்கிறாயே.. எனக்கு போரடித்தது.. அதுதான் கூப்பிட்டேன்.."

"சரிதான் போ.. நான் உன்னைக் கண்டுகிட்டு என்ன ஆகப்போகுது.. உன் ஆள் உன்னை கண்டு கொள்ளணுமே.. அதனால்தான் ஒட்டுப்புல் போல உன்னோடு ஒட்டிக்கிட்டு அலையாமல் எட்ட நின்றேன்.."

மாலினியின் விளக்கத்தைக் கேட்ட பவித்ராவின் மனம் நெகிழ்ந்தது.. இவள்தான் எப்பேர்ப்பட்டவள்..

"அவர் என்னையெங்கே கண்டுகொள்கிறார்.. அங்கே பார்.. வெள்ளைக்காரிகளை கண்டு கொண்டிருக்கிறார்.."

மாலினி யதார்த்தமாக பவித்ரா கை காட்டிய திசையில் பார்க்க.. தினகரன் அவள் பார்ப்பதை பார்த்து விட்டான்..

அவ்வளவுதான்.. வெள்ளைக்காரிகளை மறந்து வேக நடையுடன் அவர்களை நோக்கி வந்தான்...

"பவி.. உன் ஆள் உன்னைத் தேடிக்கிட்டு வருகிறார்..."

மாலினியின் வார்த்தைகளை நம்பாமல் தினகரன் இருந்த திக்கில் பார்த்த பவித்ரா, திகைத்துப் போனாள்..

'தினா அத்தான் வருகிறாரே..'

குதூகலிப்பதற்குப் பதில் அவளுக்கு மனம் வலித்தது.. அவளது பெண் மனதிற்கு உண்மை தெரிந்தது.. மாலினி

சொல்வதைப் போல அவன் ஒன்றும் அவளைத் தேடி வரவில்லையே...

அவ்வளவு நேரமும் அவள் தனியாக நின்று கொண்டிருந்ததை அவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.. அவளது பார்வை அவனை விட்டு விலகாமல் இருந்ததை உணர்ந்துதான் இருந்தான்..

இருந்தும் அவன் அவளை நாடி வரவில்லை...

மாலினி அவளருகில் வந்து நின்ற அடுத்த நொடியிலேயே அவன் அவளைத் தேடி வருகிறான் என்றால் என்ன அர்த்தம்..

உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல அவனது மனம் அவளுக்குப் புரிந்தது...

அவன் தேடி வருவது மாலினியை...

அதுவரை மாலினியிடம் தோழமையாக இருந்த பவித்ரா.. அந்த நொடியிலிருந்து மாலினியை மனதிற்குள் வெறுக்க ஆரம்பித்தாள்.. அவளுடைய தினகரனின் மனதை கவர்ந்துகொள்ளப் பார்க்கும் ராட்சஸியென்று மனதிற்குள் மாலினியைத் திட்டித் தீர்த்தாள்...

"என்ன மாலினி.. கோவளம் பீச் எப்படியிருக்கிறது?" மாலினியின் கண்ணோடு கண் பார்த்து தினகரன் கேட்டான்..

பவித்ரா என்ற ஒரு ஜீவன் அங்கு நிற்பதை அவன் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.. பவித்ரா மனம் நொந்து வெறுத்தாள்..

"கோவளம் பீச்... கோவளம் பீச்சைப் போல இருக்கிறது.." மாலினி அவனது பார்வையை நேர்கொண்ட பார்வையால் சந்தித்தபடி கூறினாள்..

"ஹா.. ஹா.. இப்படி டைமிங் ஜோக் அடிக்க உங்களால் மட்டும்தான் முடியும்.." தினகரன் பலமாக சிரித்தான்..

'இப்படி நேரம் காலம் தெரியாமல் வழிவதற்கும் உன்னால் மட்டும் தான் முடியும்..' மனதிற்குள் எரிச்சல் பட்டுக் கொண்டாள் மாலினி..

பவித்ராவைப் போன்ற மென்மையான பெண் அவனுக்காக உருகிக் கொண்டிருக்கிறாள். அவளை விட்டு விட்டு கடற்கரைக்கு வந்திருக்கும் வெள்ளைக்கார பெண்களின் பின்னால் 'ஜொள்' விட்டுக் கொண்டு அலையும் இவனை என்ன செய்தால் தகும் என்று அவளது மனம் கோபம் கொண்டது...

"இவ்வளவு நேரமாக நீங்க கோவளம் பீச்சின் அழகைத்தான் ரசித்துக் கொண்டிருந்தீங்களா..?" மாலினி கிண்டலாக கேட்டாள்..

"இயற்கையின் அழகு கடலில் மட்டும்தானா இருக்கு..?" தினகரனின் கேள்வியில் இருந்து பதிலை புரிந்து கொண்டவளின் முகம் மாறியது.. மனம் அருவருத்தது..

"சசியிடம் போகிறேன் பவி.." அவள் சட்டென்று அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்..

மாலினியின் பின்னாலேயே தினகரனின் பார்வை தொடர்வதை மனதிற்குள் துக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் பவித்ரா..

"மாலினி இஸ் ஸோ நைஸ்.. இல்லையா பவித்ரா..?" என்று அவளிடம் கேள்வி வேறு கேட்டு வைத்தான் தினகரன்..

'ஆமாம்டா.. நீ எனக்கு முன்னாலேயே.. இன்னொருத்தியை சைட் அடித்துவிட்டு.. அவளுடைய அழகைப் பற்றி என்னிடம் அபிப்பிராயம் வேறு கேட்டு வைப்பாய்.. நான் உடனே பதில் சொல்லிவிட வேண்டும்.'

பவித்ரா பதில் சொல்லாமல் வெறுமையாக பார்க்க, அவளது பதிலை எதிர்ப்பார்க்காமல் தினகரன் விலகி.. மீண்டும் வெள்ளைக்கார பெண்களை நோக்கி நடந்தான்..

மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்ட ஸ்வேதாவின் பார்வையைத் தாங்க முடியாமல் பவித்ரா கண்கலங்கி

தலைகுனிந்தாள்..

'இன்றைய நாள் அருமையான நாள்..' அன்றைக்குப் பொழுதிற்கான கலகத்தை மூட்டி விட்டுவிட்ட திருப்தியுடன் ஸ்வேதா மனம் குளிர்ந்தாள்..

87

**எனைச் சுற்றியுள்ள மனிதகும்பலில்..**

**உன்னை மட்டும் சுற்றும் என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

வீட்டில் கல்யாணக் களை ஆரம்பமாகி விட்டது என்று சசிரேகா நினைத்துக் கொண்டாள்..

ஆளவந்தார் தனது மூன்று மகன்களின் குடும்பத்துடன் சொன்னபடியே காயத்ரியின் திருமணத்திற்கு பத்து நாள்கள் முன்னாடியே வந்து இறங்கிவிட்டார்..

அவர்களின் கார்கள் அணிவகுத்து பங்களாவிற்குள் நுழைவதை மாடி பால்கனியிலிருந்து பார்த்த கருணாகரன், மனைவியிடம்..

"ஊருக்கெல்லாம் பத்திரிகை கொடுத்தாலும்.. வீட்டை நிறைப்பது இவங்கதான்.. தாத்தா பாட்டி.. மாமாக்களின் குடும்பங்கள் என்று சபையை நிறைத்து விடுவாங்க..." என்று சொல்லி சிரித்தான்...

"தாத்தாவும் பாட்டியும் அன்பானவங்க..."

அவர்கள் பெற்ற மகன்களிடம் அந்த அன்பு இல்லை என்று மனதிற்குள் நினைத்தபடி கூறினாள் சசிரேகா...

"இது இங்கேன்னு இல்லை.. எல்லா குடும்பத்திலும் இருப்பதுதான்.. சொந்தத்தில் பெண்கள் இருக்க..

காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்.. வருகிற அந்தப் பெண்ணிடம் வெறுப்பை காண்பிப்பாங்க.. இதையெல்லாம் கண்டும் காணாமல் விட்டுவிட வேண்டும். அதிகமாக போக நான் விடமாட்டேன்.. அது உனக்கே தெரியுமில்லையா..?" கருணாகரன் மென்மையாக கூறினான்...

கணவனின் அன்பில் மனம் நெகிழ்ந்தாள் சசிரேகா. எத்தனை பேருக்கு இப்படிப்பட்ட கணவன் கிடைப்பான் என்று அவள் மனம் கர்வம் கொண்டது..

"நான் எதுவும் சொன்னேனா..?" அவள் கொஞ்சலாக கேட்டாள்.

"நீ சொன்னால்தான் பரவாயில்லையே.. சொல்லாமல் மனதிற்குள் வைத்துக் கொண்டு மருகும் ரகமாச்சே..." கருணாகரன், மனைவியின் கன்னத்தைக் கிள்ளினான்..

"அப்படியெல்லாமில்லை.. நீங்களாக கேலிபண்ணா தீங்க.." கருணாகரனின் சட்டையின் பொத்தானை நிரடியபடி சசிரேகா முகம் சிவந்தாள்..

திருமணமாகி ஒரு வருடம் கடந்தும்.. அன்றுதான் பார்த்த புதுப்பெண் போல முகம் சிவக்கும் சசிரேகாவின் தன்மை கருணாகரனை மயக்கியது. அவன் மயங்கினான், அந்த மயக்கத்தோடு கிறங்கிய குரலில்,

"சசி.." என்று அழைத்தான்..

அவனது முகம் பார்த்த சசிரேகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

"எப்படிடீ.. நீ எப்போது என்னைப் பார்த்தாலும்.. நான் காதல் சொல்லியபோது பார்த்த பார்வையையே பார்க்கிற..?"

"போதுமே.. வீட்டில் விருந்தாளிகள் வந்திருக்கிறாங்க.."

"இன்னும் வருவாங்க.."

"காயத்ரியின் கல்யாணம் வந்துவிட்டது..."

"அதுக்குத்தானே விருந்தாளிக கூட்டம் கூட்டமா வந்து இறங்கிக்கிட்டு இருக்காங்க.."

"அவங்க முன்னால் நாம இப்படிக் கொஞ்சிக்கிட்டு இருந்தா நல்லாயிருக்குமா..?"

"அப்போ.. வா.. ரூமுக்குள் போய் விடலாம்..."

இதைக் கேட்டதும் சசிரேகாவிற்கு சிரிப்பு வந்து விட்டது...

மனைவியின் மலர்ந்த சிரிப்பை ரசித்துக் கொண்டிருந்தவன்,

"இத்தனை நாளாக இந்தச் சிரிப்பை பூட்டி வைத்திருந்தாயோ.." என்று கனிவோடு கூறினான்..

சசி பேசவில்லை. மௌனமாக இருந்தாள்.. அவளது பூ விரல்களை தனது வலிமையான விரல்களால் நீவிவிட்டவன்,

"மாலினி வந்துதான் உன் சிரிப்பை சிறைமீட்டிருக்கிறாள்.." என்றான்...

"அப்படியெல்லாமில்லை அத்தான்.. நீங்களாக எதையாவது நினைத்துக்காதீங்க.."

"இல்லை சசி.. எனக்குத் தெரியும்.. என் மனதுக்குள் அண்ணனுக்கு முன்னால் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட்ட குற்ற உணர்ச்சி இருந்தது.."

"அதில் தப்பில்லையே..."

"என் அம்மாவுக்கு மகனாகவும் அண்ணன் தம்பி தங்கைக்கு கூடப் பிறந்தவனாகவும் இருக்கணும்கிற துடிப்பில் உனக்கு ஒரு நல்ல கணவனாக இருக்க தவறி விட்டேனோன்னு என் மனச்சாட்சி என்னைப் பார்த்து கேள்வி கேட்கிறது.."

"நீங்கள் என்றைக்கும் நல்ல காதலர்.. அது எனக்குத் தெரியும்.."

"ஐ லவ் யூ சசி.."

"நானும்தான்..."

"இதைக்கூட நாம் மனம்விட்டுச் சொல்லிக் கொள்ள மாலினி சென்னையிலிருந்து வர வேண்டியதாக இருந்தது.."

சசிரேகா.. ஏதோ ஒரு யோசனையுடன் கணவனின் முகம் பார்த்தாள்.. அவன் அதை அறியாதவனாக தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தான்..

"உன்னை மட்டுமில்லை.. அவள்.. அண்ணனுக்கும் சிரிப்பை மீட்டுக் கொடுத்துவிட்டாள்..."

கணவனின் பேச்சுப் போகும் திசையைப் புரிந்து கொண்ட சசிரேகாவின் முகம் மலர்ந்துவிட்டது.. அவளும் அதைத்தானே யோசித்துக் கொண்டிருந்தாள்..?

"உனக்குத் தெரியாது சசி.. அண்ணன் சிறுவயதில் ரொம்பவும் கலகலப்பா இருப்பார்.. என்றைக்கு அப்பா எங்களை விட்டுப் போனாரோ அன்றைக்கே என் அண்ணனிடமிருந்து சிரிப்பு போய்விட்டது..."

சசிரேகாவிற்கும் அது தெரியும். அவள் பிரபாகரனின் மேல் அளவு கடந்த மரியாதையையும் மதிப்பையும் வைத்திருப்பவள்..

"அண்ணன் சிரிப்பை மறந்து போனார்.. இந்தக் குடும்பத்தின் பெயரைக் காப்பாற்ற அவர் இரவும் பகலும் தூக்கமில்லாமல் பசி தாகத்தை மறந்து எப்படி வெறி பிடித்ததனமாக உழைத்தார்னு தெரியுமா..?"

அதுவும் சசிரேகாவிற்கு தெரியும். அதை ஒரு நாளுக்கு ஒரு முறையாவது கருணாகரன் சொல்லாமல் இருந்ததில்லையே..

"அப்படிப்பட்ட அண்ணனிடம் தொலைந்த சிரிப்பு மீண்டு வந்திருக்கிறது. அதைச் சாதித்தவள் உன் சகோதரி..."

சசிரேகா.. மாலினியைப் பற்றி இன்னும் சொல்ல மனம் துடித்தாள்.. எனினும், அவளால் பேச முடியவில்லை...

"அண்ணன் மாலினியைப் பார்க்கும் பார்வையில் காதல் இருக்கு சசி.."

எதை கணவனிடம் சொல்ல முடியாமல் சசிரேகா மனம் தவித்தாளோ.. அதை அவன் சொல்லவும்.. அவள் துடிப்புடன் தலை நிமிர்ந்தாள்.. அவளது விழிகள் பிரகாசித்தன...

கருணாகரன் வாஞ்சையுடன் மனைவியின் தலையைத் தடவிக் கொடுத்தான்..

"இதை என்னிடம் நீ சொல்ல மாட்டாய்.. இதைப் பத்தி பேசவும் மாட்டாய்.. மனதுக்குள் உன் சிரிப்பை பூட்டி வைத்துக் கொண்டதைப் போல இதையும் பூட்டி வைத்துக் கொள்வாய். உன்னை எனக்குத் தெரியாதாடி..?"

"அத்தான்..."

சசிரேகா உணர்ச்சி மிகுதியில் அழுது விட்டாள்.. அவளது கண்ணீர்த் துளிகளை தன் விரலில் துடைத்த கருணாகரன், அன்போடு அவள் கன்னம் தட்டினான்..

"நானும் காதலித்தவன்.. காதலித்துக் கொண்டிருப் பவன். எனக்கு அண்ணனை கண்டுபிடிக்கத் தெரியாதா.. அவர் மாலினியிடம் காட்டும் நெருக்கத்தை எங்களிடம் கூடக் காட்டியதில்லை..."

"மாலினி இயல்பாகத்தான் பழகினாள்..."

"அந்த இயல்பே அண்ணனைக் காதலிக்க வைத்து இருக்கும்..."

"அவள் பணம்.. சொத்து.. செல்வாக்கு.. இதையெல்லாம் பெரிசாக நினைக்க மாட்டாள்..."

"அப்படிப்பட்ட ஒருத்திதான் வேணும்னு அண்ணனும் அடிக்கடி சொல்லுவார்..."

"இதை நானும் எதிர்பார்க்கவில்லை.. மாலினியும் எதிர்பார்க்கவில்லை.."

"இதை நீ சொல்லித்தான் நான் தெரிந்துக்கணுமோ.. என்னடி நீ.."

"நீங்க இதைப் பற்றி யோசிக்கலைன்னாலும் மத்தவங்க யோசிப்பாங்க.."

"அண்ணனுக்கு முன்னால் எந்த யோசனையும் நிற்காது.. அவர் இரும்பு மனிதர். தெரியுமில்லையா..? அந்த இரும்பையும் இளக்கக்கூடிய சக்தி மாலினியிடம் மட்டும் தான் இருக்கு சசி.."

"அப்படின்னா..?"

"காயத்ரியின் கல்யாணம் முடியட்டும்.. அம்மாவிடம் இதைப் பற்றி நானே பேசுகிறேன்..."

நன்றியுடன் கணவனின் முகத்தைப் பார்த்தாள் சசிரேகா...

அவளை நம்பி அந்த வீட்டிற்குள் வந்த மாலினியின் காதலை காப்பாற்றிவிட்ட நிம்மதி அவள் மனதில் எழுந்தது..

'உன்னை நம்பி எங்க பெண்ணை உன் வீட்டுக்கு அனுப்பி வைத்தோம்.. இப்போது இவள் காதல் கீதல்ன்னு இழுத்துக் கொண்டு வந்து நிற்கிறாளே..' என்று ஜானகி ராமனும் காவேரியும் அவளைப் பார்த்துக் கேட்டுவிட்டால்.. அவள் மனது தாங்காது...

அதற்குப் பதிலாக.. தங்கள் வீட்டுப் பெண்ணை... சசிரேகா தன் மைத்துனனுக்கே திருமணம் செய்து வைத்தாள் என்ற பெருமைதான் அவளுக்கு கிடைக்கும்..

மாலினியின் காதலை வெளிப்படுத்தாமல்.. முறைப் படி அவளை பெண் கேட்கும் வேலையை நர்மதாவைக் கட்டாயம் கருணாகரன் செய்ய வைப்பான் என்ற நிம்மதி மனதில் தோன்ற.. அவள் விருந்தினர்களை வரவேற்க கீழே சென்றாள்..

காயத்ரி தன் முன்னால் பரப்பப்பட்டிருந்த புடவைக் குவியலை பார்த்தபடி யோசனையுடன் அமர்ந்திருந்தாள்..

'மே.. ஐ கமின்..' என்று மாலினியின் குரல் ஒலித்தது..

"இது என்ன அண்ணனின் ஆபீஸ் ரூமா.. உள்ளே வாங்க மாலினி.." காயத்ரி உற்சாகத்துடன் சொன்னாள்..

உள்ளே வந்த மாலினி.. புடவைகளுக்கு மத்தியில் அமர்ந்திருந்த காயத்ரியை கண்டதும் திகைத்தாள்..

"என்ன காயத்ரி.. ஜவுளிக்கடை ஆரம்பிக்கப் போகிறாயா..?"

"இல்லைங்க.. ஜவுளிக் கடைதான் இங்கே வந்து இறங்கியிருக்கு.." அலுப்புடன் காயத்ரி கூறினாள்..

"புரியலையே..."

"எனக்கு கல்யாண ஜவுளி எடுக்கணுமில்லையா..?"

"ஆமாம்.. அதுக்குத்தான் முகூர்த்த சேலை.. ரிசப்ஷன் சேலை.. இன்னம்.. 'அந்த நேரத்திற்கான சேலை'ன்னு உன் மாமியார் வீட்டில் எடுத்துத் தள்ளிட்டாங்களே..."

முதலிரவு நேரத்திற்கான சேலையை அந்த நேரத்திற்கான சேலையென்று மாலினி சொல்லிய விதத்தில் காயத்ரி வெட்கினாள்...

"ஹேய்... என்ன ஆச்சு.. கல்யாணப் பெண்.. கனவு காண ஆரம்பிச்சாச்சா..?" மாலினி கேலி செய்தாள்...

"போங்க.. மாலினி.."

"எங்கே போக காயத்ரி..? சென்னைக்குப் போகச் சொல்கிறாயா..? இவ்வளவு நல்ல வேலையை விட்டுவிடச் சொல்ல உனக்கு எப்படி மனம் வந்தது காயத்ரி.. சொல்.. காயத்ரி.. சொல்..."

முதல் நாள் இரவு அவர்கள் நர்மதாவுடன் சேர்ந்து பார்த்த கறுப்பு வெள்ளை திரைப்படத்தில் அதன் கதா நாயகி பேசியதைப் போல மாலினி பேசிக் காட்டவும்.. காயத்ரிக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"உங்களை..! அச்சு அசல் சரோஜாதேவியேதான்.. எப்படித்தான் இப்படிப் பண்ணுகிறீங்களோ..."

"அத்தை பெற்ற பெண்ணே இப்படிச் சொன்னா.. இந்த மாலினியின் மனசு தாங்குமா..?"

அடுத்து விளம்பரத்திற்கு மாலினி தாவ.. காயத்ரிக்கு சிரித்துச் சிரித்து வயிறே புண்ணாகிவிட்டது..

"போதும் மாலினி போதும்..."

"இப்ப சொல்லு.. இந்தச் சேலைகளை யார் வாங்கிக் கொடுக்கிறது..?"

"வேறு யார்..? அம்மாவும் பெரிய அண்ணனும் தான்.."

"அதுக்காக ஜவுளிக்கடையை இங்கே கொண்டு வந்து இறக்கணுமா..?"

"அது வந்து மாலினி.. எங்க பக்கத்தில்.. நகைகள்.. சீர்வரிசைகளைப் போல எத்தனை ரூபாய் விலையில் எத்தனை பட்டுச் சேலைகளை நாங்க கொண்டு போகிறோ முன்னும் பார்ப்பாங்க..."

காயத்ரி தங்களின் பணப் பெருமையைத் தயக்கத்துடன் சொல்ல.. அதை கண்டுகொள்ளாமல் இயல்பாக...

"அப்படியா..." என்றபடி அருகில் அமர்ந்தாள் மாலினி..

சற்றுமுன் அறைக்குள் வந்த ஸ்வேதாவின் கண்களில் தெரிந்த பொறாமைக் கனலையும் மாலினியின் இயல்பான பார்வையையும் ஒப்பிட்டுப் பார்த்த காயத்ரி மனம் கனிந்தாள்..

பவித்ராகூட ஒரு நொடி ஆவலுடன் பார்த்த சேலைக் குவியலை இவளால் மட்டும் எப்படி பற்றில்லாமல் பார்க்க முடிகின்றது..?

## 88

**நீ சொல்லுகின்ற சொல்லில்..**

**சொக்கி நிற்கும் என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

சுற்றியிருந்த புடவைகளின் மேல் பார்வையை ஓட்டினாள் மாலினி..

"சரி, காயத்ரி.. இதையெல்லாம் கடைக்குப் போய் செலக்ட் பண்ணலாமே.. உனக்கு பிரஷ்ஷாக இருகுமே.."

"அம்மா வேண்டாம்னு சொல்கிறாங்க மாலினி, இந்தப் புடவைகள் எல்லாமே விலை அதிகமானவை. குறைந்த விலையே அறுபதாயிரத்தில் இருந்து ஆரம்பிக்குது.. இதை எடுக்க ஜவுளிக்கடைக்கு கிளம்பினால்.. நான் வருகிறேன் நீ வருகிறேன்னு எல்லோரும் வருவாங்க.. வீடு பூராவும் விருந்தாளிங்க கூட்டம்தான்.. கடை தாங்காது.. அத்தோடு.."

'ஒரு கண்ணைப் போல இன்னொரு கண் இருக்காது.. கண் பார்வை பட்டுவிடும்' என்று நர்மதா சொல்லியதை.. மாலினியிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினாள் காயத்ரி..

"கண் பார்வை பட்டுவிடும்னு அத்தை நினைச்சிருப் பாங்க.." என்று மாலினி இயல்பாக கூற.. காயத்ரி மீண்டும் திகைத்தாள்...

"அத்தை நினைப்பதைப் போல்தான் என் அம்மாவும் நினைப்பாங்க... பிறந்ததிலிருந்து இப்படி எத்தனை அட்வைஸை அவங்ககிட்ட இருந்து கேட்டிருக்கிறேன்..? அதனால் எனக்கு பெரியவங்களோட நினைப்பு எப்படி யிருக்கும் என்பதெல்லாம் அத்துப்படி.. ஆனால், நீ கடைக்குப் போனால்.. இன்னும் வெரைட்டியாக நிறைய டிஸைன் பார்த்து வாங்கலாமே காயத்ரி.."

"கன்யாகுமரியிலேயே பெரிய ஜவுளிக் கடை.. இந்த ஜவுளிக் கடை.. அங்கேயிருந்த அத்தனை விலை உசத்தியான சேலைகளும் வந்துவிட்டன.. நான் செலக்ட் பண்ணணும்.. அது மட்டும் தான் பாக்கி.."

"செலக்ட் பண்ணிவிட வேண்டியதுதானே..."

"எங்கே மாலினி.."

காயத்ரி அலுத்துக் கொள்ள..

"உனக்கு எந்தச் சேலையையும் பிடிக்கவில்லையா..? என்று அனுதாபத்துடன் வினவினாள் மாலினி.."

"ஊஹூம்.. எல்லாச் சேலைகளையும் பிடித்திருக்கே.." என்று காயத்ரி கூறவும்.. இப்போது விழுந்து விழுந்து சிரிப்பது மாலினியின் முறையாகிப் போனது...

"சரிதான்.. இதுதானா உன் பிரச்னை..?"

"ஆமாம்..."

"நான் ஒன்று சொல்லவா..?"

"சொல்லுங்களேன்.."

"மொத்தமாக இருக்கிறதில் பிடிக்காத சேலைகளை ஒதுக்கிவிட்டு.. பிடிச்சதா எடுக்கலாம்.. எல்லாமே பிடிச்சிருந்தா என்னதான் பண்றது..?"

"அதைத்தானே உங்ககிட்ட கேட்டுக்கிட்டு இருக்கேன்..."

"எல்லாமே பிடிச்சிருந்தா.. அதுக்குள்ள ரொம்பப் பிடிச்ச சேலைகளை எடுத்து வை.."

"அது பாதிக்கு மேல் தேறுமே.."

"முதலில் அதைச் செய்வோம் வா.."

மாலினியின் ஐடியாவின்படி மிகவும் பிடித்த சேலைகளை காயத்ரி தேர்வு செய்தாள்.. மற்றவற்றை உடனடியாக பெட்டிகளில் வைத்து ஓரமாக அடுக்கி விட்டாள் மாலினி...

"அதைக் கடைசியில் செய்துக்கலாமே மாலினி.."

"ஊஹூம்.. ஒன்றை செலக்ட் செய்துட்டா அதிலேயே நிலைத்து நின்றுவிட வேண்டும். அதேபோல.. ஒன்றை வேண்டாமுன்னு தள்ளிவைத்து விட்டால்.. அதை திரும்பவும் நினைத்தே பார்க்கக் கூடாது..."

மாலினியின் வார்த்தைகளை வியப்புடன் கேட்டாள் காயத்ரி.. அந்த வார்த்தைகள் மாலினியின் குண இயல்பை அப்படியே உணர்த்துவதைப் போல இருந்தன..

"ம்ம்ம்.. இப்போ.. ரொம்ப ரொம்ப பிடிச்ச சேலைகளை செலக்ட் பண்ணு..."

காயத்ரி ஆச்சரியத்துடன் மாலினி சொன்னதைச் செய்தாள்.. முன்பு போலவே காயத்ரி தேர்வு செய்தது போக மிதியிருந்த சேலைகளை மாலினி வைத்து விட்டாள்.

"இப்போ ஃபைனல் செலக்ஷன்.. உன் கையில் இருப்பது இந்தச் சேலைகள்தான்.. இதில் உன்னால் விட்டுக் கொடுக்க முடியாதுன்னு தோணுகிற சேலைகளை யெல்லாம் தூக்கிக்க.."

மாலினி சொல்லிய விதம் கண்டு காயத்ரி சிரித்தாள்...

"பிடித்த சேலைகள்னு சொல்வதைக் கேட்டிருக்கேன்.. அது என்ன.. விட்டுக் கொடுக்க முடியாத சேலைகள்..?"

"இப்ப வேண்டாம்னு தள்ளி வச்சயே.. அந்தச் சேலைகளைப் போல இந்தச் சேலைகளில் உனக்கு வேண்டாமுன்னு தள்ளி வைக்க முடியாத சேலைகள் இருக்குமே.. அதுதான் விட்டுக் கொடுக்க முடியாத சேலைகள்..."

காயத்ரி தேர்வு செய்துவிட்டாள்.. மற்றவைகளை உடனடியாக காயத்ரியின் பார்வையிலிருந்து அப்புறப் படுத்திவிட்டு அவள் தேர்வு செய்திருந்த சேலைகளை மட்டும் பரப்பி வைத்த மாலினி.. அவைகளின் அழகை ரசிக்க ஆரம்பித்தாள்..

"வாவ்.. அருமையான டிஸைன்.. இந்தச் சேலையின் கலர் பட்டுக்களில் கிடைக்காதது.. இந்தச் சேலையைப் பாரேன் காயத்ரி.. முந்தானையின் டிஸைன் அற்புதம்.. இந்தச் சேலையின் பார்டர் கலர் காம்பினேஷன் எக்ஸலண்ட்.."

"நான் செலக்ட் செய்யும்போது நீங்க இதைப் பத்தி யெல்லாம் ஒன்றுமே சொல்லலையே.."

மாலினி நிமிர்ந்து காயத்ரியைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஊஹூம்.. அப்போது நான் சொன்னால்.. என் விருப்பத்தை உன் மேல் திணிப்பதைப் போல இருக்கும்.. கட்டுகிற சேலையைக்கூட மத்தவங்க விருப்பத்துக்காக கட்டக்கூடாது. அதுதான் என் கொள்கை.."

இவள்தான் அடுக்கடுக்காக எத்தனை வியப்புகளைத் தருகிறாள் என்று நினைத்துக் கொண்டாள் காயத்ரி...

"இப்ப நீ சேலைகளை செலக்ட் பண்ணி முடித்து விட்டாய்.. இவையெல்லாம் இனி உன்னுடைய சேலைகள். இப்ப இதைப் பத்தி தாராளமா விமரிசனம் செய்யலாம்.."

அவர்கள் இருவருமாக சேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது.. அறைக்குள் பிரபாகரன் வந்தான்..

"அண்ணா.." என்று தான் சேலைகளை தேர்வு செய்துவிட்ட விவரத்தைக் கூற, தமையனின் முகம் பார்த்த காயத்ரி.. அவனுடைய கண்களில் மாலினியைக் கண்டதும்.. மின்னிய மின்னலைக் கண்டுவிட்டாள்..

பிரபாகரன் பெண்களிடம் நின்று பேசாதவன். அவன் மாலினியின் முகம் பார்த்துப் பேசியதே உலக மகா அதிசயம் என்ற நினைவில் காயத்ரி இருந்தாள்...

இன்று அவன் விழிகளில் தெரிந்த மின்னலைக் கண்டதும் சட்டென்று மாலினியின் முகம் பார்த்தாள்..

எதையும் இயல்பாக எதிர்கொள்ளும் மாலினியின் முகத்தில் வெட்கச் சிரிப்பு வந்திருந்தது.. கண்களில் ஆவல் தெரிந்தது.. அவளது உடலில் ஒருவித பரவசம் உற்பத்தி ஆகியிருப்பதை காயத்ரியால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

இவையெல்லாம் ஷியாம்சுந்தரைப் பார்க்கும்போது காயத்ரியிடம் தோன்றும் அடையாளங்கள்...

இனத்தை இனம்தான் இனம் கண்டுகொள்ளும் காதலனைக் கண்டுவிட்டால்.. பெண்மையிடம் தோன்றும் தவிப்பை அதே நிலையில் உள்ள இன்னொரு பெண்மை எளிதாக கண்டுபிடித்துவிடும்..

காயத்ரி.. பிரபாகரனையும் மாலினியையும் கண்டு கொண்டு விட்டாள்..

"என்ன காயத்ரி.. மெக்கானிக்கல் இன்ஜினீயரம்மா இங்கே உட்கார்ந்திருக்கிறாங்க?" தங்கையிடம் கேள்வி கேட்டபடி மாலினியைப் பார்த்தான் பிரபாகரன்..

"ஞாயிற்றுக்கிழமையில்கூட உன் அண்ணனின் மில்லில் ஆள்கள் வேலை செய்வார்களான்னு கேட்டுச் சொல் காயத்ரி.." வெட்டும் விழிப் பார்வையுடன் பதிலைச் சொன்னாள் மாலினி..

"அதுக்கும் நான் கேட்டதற்கும் என்ன சம்பந்தமாம்..?" பிரபாகரனின் பார்வை மாலினியை விழுங்கியது...

"இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமைங்கிறதுதான் சம்பந்தம்.." மாலினி அவன் பார்வையின் வேகம் தாள முடியாமல் தலை கவிழ்ந்தாள்..

"ஓ.. மேடம் சண்டேயை என்ஜாய் பண்ணுகிறாங் களாக்கும்.. இங்கே சேலைகளை வைத்துக்கிட்டு என்ன செய்கிறாங்க..?"

"எனக்கு சேலை செலக்ட் பண்ண கைட் பண்ணிக் கிட்டு இருந்தாங்கண்ணா.."

"மெக்கானிக்கல் இன்ஜினீயருக்கு மெஷின்களைப் பத்தித்தான் தெரியும்.. சேலைகளைப் பத்தி என்ன தெரியும்..?"

"மில் முதலாளிக்கு குடும்பத்தைப் பற்றித் தெரியும் போது.. எனக்கு சேலையைப் பத்தித் தெரியாதா காயத்ரி.."

"போச்சுடா.. மேடம் போர் முரசு கொட்ட ஆரம்பிச் சுட்டாங்க.. எங்கே நீ செலக்ட் பண்ணிய சேலைகளைக் காட்டு..."

பிரபாகரன் சுவாதீனமாக மாலினியின் அருகில் அமர்ந்து கொள்வதைப் பார்த்தாள் காயத்ரி..

அதை மாலினி ஆட்சேபிக்கவில்லை என்பதும். அவள் இயல்பாக அவன் முகம் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்

என்பதும் அவளது கவனத்தில் பதிந்தது..

"ஸோ.. நைஸ் காயத்ரி.. எல்லாச் சேலைகளும் அழகாக இருக்கு.. இது போதுமா.. இன்னும் வேண்டும் கிறதை எடுத்துக்கம்மா..."

பிரபாகரன் கனிவாகக் கூறியதை.. அவனை விடக் கனிவாக கவனித்துக் கொண்டிருந்த மாலினியைக் கண்டு காயத்ரி மனம் நிறைந்தாள்...

"பிரபாதான் இந்த வீட்டுக்குத் தூண் காயத்ரி.. எனக்குப் பின்னால் அவனுடைய பெண்டாட்டிதான் உனக்குத் தாய்.." நர்மதா அடிக்கடி இவ்வாறு கூறுவாள்..

மாலினியைப் பார்க்கப் பார்க்க.. இந்தத் தாயாக இருக்க அவளைவிட தகுதி வாய்ந்தவள் வேறு ஒருத்தி இருக்க முடியாது என்று காயத்ரிக்கு தோன்றியது...

மறந்தும் 'நீ ஒரு புடவையை எடுத்துக் கொள்' என்று கண்ஜாடையில் பிரபாரகன் உணர்த்தவில்லை..

'உன் தங்கைக்கு இத்தனை சேலைகளை எடுத்துத் தருகிறாயே.. எனக்கு இல்லையா...' என்று மாலினி ஜாடையாகக் கேட்கவில்லை..

அந்தவிதமான கொச்சைத்தனங்கள் இல்லாமல் அவர்கள் ஆழ்ந்த அன்புடன் பார்த்துக் கொண்டார்கள்..

எதையும் எதிர்ப்பார்க்காமல் காதலை மட்டுமே வேண்டும் காதலியின் பார்வையை மாலினியிடம் கண்டாள் காயத்ரி..

எதையும் பணத்தால் வாங்கி விடும் வல்லைமை படைத்த கோடீஸ்வர பிரபாகரன்.. காதலை மட்டுமே கொடுத்து மாலினியின் காதலை வாங்கிக் கொண்டிருந்த விதத்தை அங்கே கண்டாள் காயத்ரி...

தங்கையிடம் பேசிக்கொண்டே மாலினியை பார்வையால் வருடிக் கொண்டிருந்தான் பிரபாகரன்..

அவனது பார்வையின் வீச்சில் தன் வசம் இழந்து கொண்டிருந்தாள் மாலினி..

"காயத்ரி.." என்று அழைத்துக்கொண்டே அறைக்குள் வந்த சசிரேகா, பிரபாகரனைக் கண்டதும் தயங்கி நின்றாள்..

"அப்போ ஜவுளிக்கடைக்கு போன் பண்ணி மீதி சேலைகளை எடுத்துக் கொண்டு போகச் சொல்லிவிடவா..?" என்று கேட்டுவிட்டு பிரபாகரன் அறையை விட்டு வெளியே சென்றுவிட்டான்..

போகும்போது மாலினியின் மீது ஒரு பார்வையை வீச அவன் தவறவில்லை..

அன்று மாலை சசிரேகாவுடன் பேசிக் கொண்டிருந்த போது..

"என் கல்யாணம் முடிந்ததும் நாமெல்லாம் ஒரு வேலை செய்ய வேண்டும் அண்ணி.." என்றாள் காயத்ரி..

"என்ன வேலை..?"

"மாலினியை பெரியண்ணனுக்கு பெண் கேட்கும் வேலை..."

"காயத்ரி..."

சசிரேகா ஆச்சரியத்துடன் நாத்தனாரைப் பார்த்தாள்..

'மாலினி இவள் மனதையும் ஜெயித்து விட்டாளா..?'

## 89

**சுட்டும் விழிச்சுடரில்.. சொக்கும் என் மனதை..**

**கட்டிப் போட்டிருக்கும்.. கந்தர்வ காதலையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"நான் முடிவே பண்ணிட்டேன் அண்ணி.. எனக்கு மாலினிதான் பெரியண்ணியாக வரணும்.." காயத்ரி

தீர்மானமாக கூறினாள்..

"அந்த அளவுக்கு அவள் மேல் உனக்கு அன்பா காயத்ரி..."

"அந்த அளவுக்கு என் அண்ணன் மேல் அவங்களுக்கும்.. அவங்க மேலே என் அண்ணனுக்கும் அன்பிருக்குன்னு நான் நினைக்கிறேன்.."

'இவளும் கண்டுபிடித்துவிட்டாளா..'

"ரெண்டு பேரும் பார்வையிலேயே சாப்பிட்டுக் கிறாங்க.. நானும் ஷியாமும் அடிக்கிறதெல்லாம் என்ன சைட்..? இவங்க அடிக்கிற சைட்தான் தூள்.."

சசிரேகாவின் மனம் அமைதியடைந்தது.. அவளுக்கு நர்மதாவிற்கு இந்த விவரம் தெரியும் என்பது தெரியாது.. காயத்ரி நர்மதாவின் செல்லப் பெண்.. அவள் சொல்லி நிச்சயம் நர்மதா மறுக்க மாட்டாள் என்ற எண்ணம் அவளுக்கு நிம்மதியைக் கொடுத்தது..

'சித்தப்பா.. என் வீட்டுக்காரருடைய அண்ணனுக்கு மாலினியைப் பெண் கேட்கிறாங்க.. நீங்க என்ன சொல்கிறீங்க..?'

ஜானகிராமனிடம் இந்தக் கேள்வியை கேட்கப் போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள் சசிரேகா..

என்னதான் நர்மதாவும் அவள் பெற்ற பிள்ளைகளும் பெருந்தன்மையின் மறுஉருவமாக இருந்தாலும் நர்மதாவின் உறவினர்களின் முன் தான் ஒரு நடுத்தரக் குடும்பத்திலிருந்து வந்தவள் என்ற எண்ணம்தான் சசிரேகாவுக்குள் எழுந்தது..

அவள் மனதில் மிகத் தனிமையாக உணர்ந்தாள்.. அவளது மனத்திற்கு இதமாக இருந்த நாத்தனார் காயத்ரி திருமணம் செய்து கொண்டு போய்விடப் போகிறாள் என்பதும் அவளது தனிமை உணர்வை அதிகப்படுத்தியது..

தோழமையுடன் இருந்த நாத்தனாரும் புகுந்த வீட்டிற்கு போய்விட.. பிரபாகரனுக்கும் தினகரனுக்கும் திருமணமாகி.. அவர்களைப் போலவே கோடீஸ்வர வீட்டுப்

பெண்கள் மருமகள்களாக அந்த வீட்டிற்குள் வந்து விட்டால்.. சசிரேகாவின் நிலைமை என்ன ஆகும்..?

ஏற்கெனவே நர்மதாவின் உறவினர் கூட்டம்.. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் சசிரேகாவின் மனதை புண்படுத்தத் தயங்குவதில்லை..

சசிரேகா மட்டுமே வீட்டு மருமகளாக இருக்கும் போதே இந்த நிலைமை எனும்போது.. வேறு கோடீஸ்வரப் பெண்கள் இருவர் மருமகள்களாக வந்து.. அவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் சசிரேகா என்ன ஆவாள்..?

இந்த எண்ணங்கள் மனதில் இருந்தாலும்.. அதற்காக பிரபாகரனுக்கும் தினகரனுக்கும் பெரிய இடத்திலிருந்து பெண் அமைந்துவிடக் கூடாது என்று சசிரேகா கனவிலும் நினைத்ததில்லை..

அவளுக்குத் தெரியும்.. அவளுக்கு அமைந்தது அதிர்ஷ்டமான வாழ்க்கை என்று.. நர்மதாவின் உறவினர்கள் சொல்லிக் காட்டுவதில் உண்மை இருக்கிறது என்பதை அவள் அறிவாள்..

கருணாகரனின் காதல் பார்வை அவள் மேல் விழாமல் இருந்திருந்தால்.. சசிரேகாவிற்கு இப்பேர்ப்பட்ட குடும்பத்தில் மருமகளாக வந்து வாழும் பாக்கியம் கிடைத்திருக்காது..

பிரபாகரனுக்கும் தினகரனுக்கும் நிச்சயம் பெரிய கோடீஸ்வரக் குடும்பத்தில் இருந்துதான் பெண்கள் அமைவார்கள் என்பதை அவள் அறிவாள்..

வருவதை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் என்றைக்குமே அவளுக்கு உண்டு..

மூச்சு முட்டும் கோடீஸ்வர வீட்டு மருமகள் என்ற வாழ்க்கையில்.. மாலினியின் வரவை ஒரு மாற்றமாக நினைத்துதான் அவள் வரவேற்றாள்...

அவளது தனிமையுணர்வை உடைத்து தன்னம்பிக்-கையைக் கொடுக்கும் தோழியின் துணையாகத்தான்

அவள் நினைத்தாள்..

இப்போது.. அந்தத் தோழியே அவளது புகுந்த வீட்டில் இன்னொரு மருமகளாக மாறிவிடும் நிலைமை உருவாகுகையில் சசிரேகா மனப்பூர்வமான மகிழ்ச்சியைக் கொண்டாள்..

அவளும் மாலினியும் ஒரே வீட்டில் மருமகள்களா..? நினைக்கும்போதே அவளுக்குள் உற்சாகம் ஊற்றெடுத்தது.. மாலினி இருக்கும் இடத்தில் அன்பு இருக்கும்.. அடக்குமுறை இருக்காது.. தன்னம்பிக்கை இருக்கும்.. தனிமை இருக்காது.. மொத்தத்தில் சசிரேகாவின் வாழ்வில் கடைசிவரை தாங்கிப் பிடிக்கும் பிறந்தவீட்டு உறவாக.. உற்ற தோழியாக.. மாலினி கூடவே இருப்பாள்..

அன்று இரவு சசிரேகா நிம்மதியுடன் உறங்கினாள்..

'மல்லிகை' என்ற பெயர் பலகை இருந்த வரிசையில்.. மல்லிகைக் கொடியை நட்டு.. அந்தப் பெயர்ப் பலகையின் மேல் படறவிட்டாள் மாலினி..

"அசத்தறடி.." என்றான் அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த பிரபாகரன்..

"எதைச் சொல்கிறீங்க.." வேலையில் கவனமாக இருந்தபடி மாலினி கேட்டாள்..

"மல்லிகையின் வரிசைக்கு மல்லிகைக் கொடி.. முல்லையின் வரிசைக்கு முல்லைக் கொடி.. ரோஜாவின் வரிசைக்கு பெயர்ப் பலகையைச் சுற்றி ரோஜாப் பூச்செடிகள்.. கலக்கறடி கண்ணம்மா.." கண்ணடித்தான் பிரபாகரன்..

"கொஞ்சம் கேப் கிடைத்தால் போதுமே.. புகுந்து விளையாடுவீங்களே.." மாலினி செல்லமாய் முறைத்தாள்..

"எதைச் சொல்கிற நீ..?" அறியாதவனைப் போல கேட்டான் பிரபாகரன்..

"அடடா.. இவர் அறியாப் பிள்ளைதான்.."

"பின்னே இல்லையா..?"

"இதை உங்க தங்கைகிட்ட சொல்லுங்க நம்பிருவா, நான் நம்ப மாட்டேன்.."

"ஏண்டி..?"

"உங்க வேலையெல்லாம் எனக்குத்தானே தெரியும்..?"

"அப்படி என்ன டகுல்பாச்சி வேலையைக் கண்டு விட்ட..?"

"அசத்தறேன்னு சொன்னீங்களே.. எதைச் சொன்னீங்க..."

"பூங்கொடியைப் பார்த்துச் சொன்னேன்..."

"பூங்கொடியைப் பார்த்துச் சொன்னீங்களா.. இல்லை.. அதை நட்டு வைத்துக் கொண்டிருக்கிறவளைப் பார்த்துச் சொன்னீங்களா..?"

"இரண்டையும்தான்.. இப்ப என்னாங்கிற..?"

"ரெளடி.."

"அப்போ ஹிட்லர்... இப்ப ரவுடியா..?"

"ஆமாம்.. நேற்று எதுக்கு அந்த ஆளை அப்படி அடிச்சீங்க..?"

"அவன் என்ன செய்தான்னு உனக்குத் தெரியுமா..?"

"எதைச் செய்தாலும்.. தவறுக்கு தண்டனை கொடுக்கணும்.. அடிக்கலாமா..?"

"சிமெண்ட் மூட்டைகளை விற்றிருக்கிறான் மாலினி.."

"வேலையை விட்டு நிறுத்தலாமே..."

"அது எனக்குப் போதாது..."

"இது அசுரத்தனம் பிரபா.."

"எது..?"

"அடிப்பது.."

"அவன் செய்தது அயோக்கியத்தனம்.. என்னிடம் இருப்பவங்க வேலையில் முன்னே பின்னே இருக்கலாம்..

அதை நான பொறுத்துக் கொள்வேன்.. திருட்டும் பொய்யும் துரோகமும் இருக்கக்கூடாது.. தொலைத்துக் கட்டிவிடுவேன்.. இதை நீ அசுர குணம்னு சொன்னால்.. ஆமாம்.. நான் அப்படித்தான்.. அசுரன்தான்.."

அந்த அசுரன் அழகாக இருந்தான்.. முன் பக்க சிகை கலைந்து.. பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருந்து தொலைத்தான்.. அவனது கோபம்கூட அழகாக இருந்தது. அவனது கம்பீரம் அவனது அழகுக்கு அழகு சேர்த்தது..

அவனது கழுத்தில் கைகளை மாலையாக்கி.. அவன் கன்னத்தில் முத்தமிட வேண்டும் போல அவளுக்கு இருந்தது.. மனதை மறைக்க அவள் போராடிக் கொண்டிருக்கையிலேயே மீண்டும் அவன் கண்சிமிட்டினான்..

"என்னடி அப்படிப் பார்க்கிற..? என் மேல் ஆசைப்படுகிறாயா..?"

"நினைப்புதான்.. அசுரனின் மேல் யாருக்கு ஆசை வரும்..?"

"உனக்கு வரும்.."

"வராது.."

"பார்ப்போமா.."

அவன் சவால் விட்டான்.. அவனது ஆண்மை அவளை காந்தமாய் அவனுக்கருகில் இழுக்க.. அவள்..

"பார்ப்போம்.." என்று பதிலுக்கு சவால் விட்டாள்..

அவனிடம் தோற்க வேண்டும் என்ற ஆவல் அலை கடலாய் மனதுக்குள் பொங்குவதை இன்பத்துடன் அனுபவித்தாள்..

அவளது புருவங்கள் இறங்கி அவனை சவாலுக்கு அழைத்தன.. அவன் முழுக்கை சட்டையின் கை பாகத்தை மடக்கி விட்டுக் கொண்டான்..

"அட.. முஸ்தீபெல்லாம் பலமாயிருக்கு.." அவள் சீண்டினாள்..

"இருடி.. உனக்கு நான் யாருன்னு காட்டறேன்.." அவன் அவளை நெருங்கினான்..

"அது எனக்குத் தெரியாதா..? நீங்கதான் அசுரனாச்சே.."

"இந்த அசுரன்.. இந்த அழகியை ஸ்வாஹா பண்ணப் போறான்.."

அவன் நெருங்கி வர.. அவள் விலக முயலாமல் எதிர்பார்ப்போடு நிற்க.. அவளது முகத்தை இறுக்கிப் பிடித்து அவன் குனிய முயன்றபோது... கட்டடத்தின் அந்தப் பக்கம் பேச்சுக்குரல் கேட்டது.. தெடர்ந்து காலடியோசை அவர்களை சமீபிக்க.. மாலினி சட்டென்று விலகிக் கொண்டாள்.. பூங்கொடியைப் பார்ப்பதைப் போல அவள் குனிந்து கொள்ள.. பிரபாகரன் ஏமாற்றத்துடன் வந்தவர்களிடம் பேசப் போய் விட்டான்..

மாலையில் வீடு திரும்பும்போது காரில் கருணாகரனும் இருக்க.. மாலினி பின்ஸீட்டில் ஏறிக் கொண்டாள்.. அண்ணனும் தம்பியும் காயத்ரியின் திருமண ஏற்பாடுகளைப் பற்றிப் பேசிக் கொண்டே வர.. மாலினி தன்னை அந்நியமாக உணர்ந்தாள்.. அவளது மனம் பிரபாகரனின் அண்மை கிடைக்காத ஆதங்கத்தில் சிணுங்கியது...

முன்பக்க கண்ணாடி வழியாக மாலினியின் வாடிய முகத்தைப் பார்த்தவாறே தம்பியிடம் பேசிக் கொண்டிருந் தான் பிரபாகரன்.. வீட்டுக்கு வந்ததும் கருணாகரன் இறங்கிப் போய்விட.. தேங்கி நின்றான்.. பின்ஸீட்டிலிருந்து இறங்கிய மாலினியிடம்...

"நாளைக்கு உன் மில்லுக்கு லீவ் சொல்லிவிடு.." என்றான்..

"எதுக்கு.." புரியாமல் விழித்தாள் மாலினி..

பதில் சொல்ல அவன் அங்கு நின்றால்தானே.. புயல் வேகத்தில் வீட்டுக்குள் போய்விட்டான்.. வீடு பூராவும் விருந்தினர் நடமாடிக் கொண்டிருக்க.. அதற்குப்

பின்னால் மாலினியால் அவனைப் பார்க்க முடியாமல் போய்விட்டது..

தலை வலிப்பதைப் போல தோன்ற.. இரவு உணவை அறைக்குக் கொண்டு வரச் சொல்லிவிட்டு சுருண்டு படுத்துவிட்டாள் மாலினி..

சூடான பாலோடு தேடி வந்தாள் சசிரேகா...

"என்னடி செய்யுது..? ஏன் சாப்பிட கீழே வரலை..?"

"கூட்டமா இருக்கு சசி.. அவங்க உனக்கு சொந்தக் காரங்க.. எனக்கு அந்நியம்தானே.. ஐ ஃபீல் அன் ஈஸி.."

"இனி என் சொந்தக்காரங்க.. உனக்கும் சொந்தக் காரங்கதான்.. இந்த பாலைச் சாப்பிடு.."

மறைபொருளாய் பேசிவிட்டு சசிரேகா போய் விட்டாள்.. மாலினி படுத்துத் தூங்க முயன்றாள்.. ஏன் தன் மனம் சோர்வடைகிறது என்று அவளால் உணர முடிந்தது..

அவளது உடலும் மனமும் பிரபாகரனைத் தேடின.. அவன் கிடைக்காத ஏமாற்றத்தில்தான் அந்த சோர்வு..

## 90

**என்றேனும் ஒரு நாளில்.. உன் நிழலில் வாழவேண்டி..**

**ஏங்குகின்ற என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"ஏன் லீவ் போடச் சொன்னீங்க..?"

"காரணமாகத்தான்.."

"என்ன காரணம்..?"

"அதைச் சொன்னால்தான் என்கூட வருவியா...?"

"இந்த விளையாட்டுக்கு நான் வரலே.."

"நான் இன்னும் விளையாட்டையே ஆரம்பிக்-கலையே.."

"ம்ச்சு.. இதுக்கென்றும் குறைச்சலில்லை.."

"ஏண்டி.. இப்ப என்ன ஆச்சு.."

"ஒண்ணும் ஆகலை.."

மாலினி ஜன்னல் பக்கமாய் திரும்பிப் கொண்டாள்.. அவளது கோபத்தை வேடிக்கையாகப் பார்த்தான் பிரபாகரன்...

"எதையும் வாய்விட்டு சொல்லணும்.."

"சொல்லிட்டாலும்..."

"எதுக்கு இப்ப ராகம் போடுகிறவ..."

மாலினி அவனை முறைத்தாள்.. வாய்க்குள் முணு முணுத்தாள்..

"ஆமாம்.. கிட்டே வரவேண்டியது.. ஆள் வந்தால் வேலையைப் பார்க்க கிளம்பிப் போய்விட வேண்டியது.. காரில் பேசலாமுன்னு பார்த்தா.. தம்பியைக் கூப்பிட்டு சீராட்டிக்கிட்டே வர வேண்டியது..."

"ஏய்..."

பிரபாகரன் காரை நிறுத்திவிட்டான்..

"எதுக்கு இப்ப காரை ஓரம் கட்டுகிறீங்க..?"

"என்னடி சொன்ன..?"

"ஒண்ணும் சொல்லலை.."

"எல்லாம் என் காதில் விழுந்தது.."

மாலினி தூரத்தில் வந்து கொண்டிருந்த காரைப் பார்த்தாள்...

"இங்கே ஒருத்தன் பேசிக்கிட்டே இருக்கேன்.. அங்கே என்னடி பார்வை..?"

"இல்லை.. நீங்க கிட்ட வருவீங்க.. அந்தக் காரும் கிட்ட வரும்.."

"என்ன.. சினிமா கினிமா எடுக்கப் போகிறாயா..? ஓபனிங் ஸீனைப் போல கதையளக்கிற..?"

"கிட்ட வரும் காரிலிருந்து உங்க சொந்தக்காரங்க யாராவது இறங்கி வருவாங்க.. நீங்களும் பாசப்பறவையை பறக்கவிடுவீங்க.. அப்புறம் நான் வெறும் பார்வையாளரா உட்கார்ந்து வேடிக்கை பார்க்கணும்.. தேவையா..?"

"உன்னை.."

பிரபாகரன் வேட்கையுடன் அவளை நெருங்க.. அவர்களது காரை நெருங்கிய அந்தக் கார் நின்றது..

"பிரபாகரா.." என்று குரலுடன் ஒருவர் இறங்கினார்..

"நான் சொல்லலை..?" மாலினி எரிச்சலுடன் விலகிக் கொண்டாள்..

"மாமா.." உண்மையிலேயே பிரபாகரன் பாசத்துடன் அவரை அழைத்தவாறு காரை விட்டு இறங்கினான்..

மாமனும் மருமகனும் தழுவிக் கொண்டனர்.. காயத்ரியின் திருமணத்தைப் பற்றி அவர் விசாரிக்க ஆரம்பிக்க.. மாலினி காரில் இருப்பதை அவர் கவனித்து விடாமலிருக்க.. அவரது தோள் தழுவி.. மறைத்து நின்று பதில் சொல்லிக் கொண்டிருந்தான் பிரபாகரன்..

ஒருவழியாக அவர் கிளம்பிப் போனதும் காரில் ஏறியவன்..

"ஊப்ப்.." என்று வாயைக் குவித்து ஊதினான்.. மாலினி சலனமில்லாமல் வெளியே பார்த்துக் கொண்டிருக்க..

"ஸாரிடி.." என்று அவள் தோளில் கை வைத்தான்..

"இப்ப காரைக் கிளப்புகிறீங்களா... இல்லை நான் இறங்கி நடந்து போய்விடவா..?"

வேறு வழியின்றி காரைக் கிளப்பினான் பிரபாகரன்..

"மில்லுக்கு காரை விடுங்க.."

"நான் லீவு போடச் சொன்னேனே.. உன் காதில் விழுகவில்லையா...?"

"விழுந்தது.."

"நீ லீவு போட்டிருக்கிறதைச் சொன்னதும் என் காதில் விழுந்தது.. அப்புறம் எதுக்கு மில்லுக்கு காரை விடச் சொல்கிற.."

"லீவை கேன்சல் பண்ணப் போகிறேன்.."

"அதுக்கு என் பர்மிஷன் வேண்டாமா..?"

"நீங்க யார் எனக்குப் பர்மிஷன் கொடுக்க..?"

"உன் புருஷன்.."

மாலினிக்குள் உணர்வுகள் பொங்கின.. இவன் பாட்டுக்கு இப்படிப் பேசிக் கிளப்பி விடுவான்.. கொஞ்ச நேரத்தில் அவனுடைய சொந்த பந்தங்களோடு கதை பேச போய்விடுவான்.. இவன் பேச்சில் எல்லாம் மயங்கக் கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

"என்னடி.. என் பெண்டாட்டி.. வாயைத் திறந்து பேச மாட்டேன்கிற.. இன்னிக்கு என்ன மௌன விரதமா..?"

"பிரபா.. வேண்டாம்.."

"என்ன வேண்டாம்.. நான் உனக்கு வேண்டாமா..?"

'ஏண்டா இப்படி என்னைப் பாடாய் படுத்தற..?' அவளுக்கு கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது..

அவனது மார்பில் முகம் புதைத்து அவனது முதுகில் கைவிரல்கள் பரவ, அவனைத் தன்னோடு இறுக்கிக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு அவளுக்குள் எழுந்தது..

என்று.. காயத்ரியின் திருமணத்தை முன்னிட்டு வீட்டுக்குள் உறவினர் வந்து குழும ஆரம்பித்தார்களோ அன்றிலிருந்து பிரபாகரனை அவளால் வீட்டுக்குள் தனிமையில் சந்திக்க முடியாமல் போய்விட்டது..

தோட்டத்துக்குப் போனால் அங்கே உறவினர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மொட்டை மாடிக்குப் போனால் அங்கே விச்ராந்தியாக.. வந்திருந்த கார்களின் டிரைவர்கள் பாய் விரித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்..

மாலினி பதறியடித்து கீழே வந்துவிட்டாள்.. ஸ்வேதா கூடக் கேட்டுவிட்டாள்..

"என்ன மாலினி.. முன்போல நீ தோட்டத்திலேயும்.. மொட்டை மாடியிலேயும் வாக்கிங் போகிறது இல்லை போல..."

"அதுதான் உனக்குத் தெரிந்திருக்கே.. தெரிந்து கிட்டே ஏன் கேட்கிற..?"

"சும்மா.. உனக்கு ஆறுதல் சொல்லலாமேன்னுதான்.."

"இதில் ஆறுதல் சொல்ல என்ன இருக்கு..?"

"நிறைய இருக்கு.."

"எனக்குப் புரியலை.."

"உனக்கா புரியாது..?"

ஸ்வேதா விஷமச் சிரிப்புடன் போய்விட்டாள்.. என்றுமே அவளது பேச்சை அலட்சியம் செய்துவிடும் மாலினிக்கு அன்று ஏனோ மனம் துணுக்குற்றது..

அதற்கேற்றாற்போல பிரபாகரனுடன் பேச அவளுக்கு தனிமை கிடைக்காமல் போனது..

காரில் போனாலும் கூட யாராவது வந்தார்கள்.. முன்ஸீட்டில் அவன் பக்கத்தில் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டே போன காலம் போய் மாலினி பின் ஸீட்டில் அமர வேண்டியதாய் போய்விட்டது..

மாலினிக்குள் கலக்கம் சூழ்ந்தது.. ஒரு நிமிடம்.. ஒரே ஒரு நிமிடம்.. அவனுடன் தனிமை கிடைத்தால் போதும். அவனது கை அணைப்பில் கட்டுண்டு நின்றால் போதும். அவளது மனக்கலக்கம் பறந்துவிடும்..

அந்த ஒரு நிமிடத் தனிமை வாய்க்காமல் தள்ளிக் கொண்டே போக.. மாலினி வாடிப் போனாள்..

அவளுக்குள் இருக்கும் துடிப்பு ஏன் பிரபாகரனுக்கு இல்லை..?

இதுதான் அவளது மனச் சிணுக்கத்திற்கான காரணம்..

"ஏண்டி.. காயத்ரியின் கல்யாணம் பக்கத்தில் இருக்குதுல்ல..?"

"யார் இல்லைன்னு சொன்னது..?"

"நீதானே என்னை பெரியண்ணனாய் லட்சணமாய் இருங்கணும்னு சொன்ன..?"

"அடேங்கப்பா.. நான் சொன்னதனால்தான் ஐயா பொறுப்போட இருக்கீங்களாக்கும்.. இல்லைன்னா பொறுப்பில்லாம ஊர் சுத்துவீங்களாக்கும்.."

"இந்த 'உக்கும்..' போடுகிற வேலையை விட்டு விட்டு உருப்படியாய் ஒரு வேலை செய்கிறயா..?"

"எனக்கும் வேலை கொடுத்தாகிறதா..?"

"பின்னே.. சும்மா விடுவேனா.. நீ யாரு.."

"அதையும் நீங்களே சொல்லிருங்க சாமி.."

"என் பெண்டாட்டி.."

மாலினி பல்லைக் கடித்தபடி அவனை முறைக்க ஆரம்பிக்க.. அவனோ..

"என்னடி.. ஒரு மார்க்கமாய் பார்க்கிற..?" என்று விசாரித்து வைத்தான்..

"வேண்டாம்.. என் கோபத்தை கிளறாதீங்க.. சொல்லிட்டேன்.."

"அடச்சீ.. அடங்கு.. இப்ப என்ன ஆச்சுன்னு இந்த குதி குதிக்கிற.. ஏண்டி.. நீ காயத்ரிக்கு அண்ணியில்லையா..?"

இதை இல்லையென்று எப்படிச் சொல்வது.. மாலினி மௌனித்தாள்..

"இதுக்கு மட்டும் வாயைத் திறந்து பதிலைச் சொல்ல மாட்டாயே.. உனக்கு ஏண்டி அவ மேல பொறாமை..?"

"வேண்டாம் பிரபா.. என்னிடம் வம்புக்கு வராதீங்க.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.."

"வந்தால் பேசு.. இப்ப நான் பேசலையா..?"

"உங்க தங்கை மேல எனக்கெதுக்கு பொறாமை..? நீங்க வாங்கிக் கொடுத்திருக்கிற வைரத்துக்கும் பட்டுக்கும் பொறாமைப்படப் போகிறேனா..?"

"அதெல்லாம் உனக்கு வேண்டாமேடி.. உனக்கு வேண்டியது நான் மட்டும்தானே.. நான் உன்னை மறந்துட்டு காயத்ரியின் கல்யாண வேலையில் மூழ்கிட்டேன்.. அந்த கோபம்தானே உனக்கு..?"

"பிரபா.."

அவள் மனத்தைப் படித்ததைப் போல அவன் பேசவும்.. அவளுக்கு கண்கலங்கிவிட்டது.. விழுகப் போகிறேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் விழுந்து சிதற.. பிரபாகரன்..

"மாலினி.." என்று காரை நிறுத்தப் போனான்..

"வேண்டாம்.. நிறுத்தாதீங்க.."

"ஏண்டி.."

"போய்க்கிட்டே இருங்க பிரபா.. இந்தக் காரில் இப்ப நீங்களும் நானும் மட்டும்தான்! இந்த தனிமைக்காக நான் ஏங்கிப் போயிருக்கிறேன்.. இப்ப நீங்க எனக்கு மட்டும் சொந்தம்.. காரை நிறுத்தினால்.. உங்க வீட்டுக்கும் இந்த ஊருக்கும் சொந்தமாகிடுவீங்க.."

பிரபாகரன் காரை நிறுத்தாமல் வேகம் கூட்டினான்.. அவள் நகர்ந்து அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.. தூரத்தில்

ஒரு அணைக்கட்டு தெரிந்தது.. மாலினி வியப்போடு நிமிர்ந்து அமர்ந்தாள்..

"அது டேம் போல இருக்கே.."

"டேம்தான்.. பேச்சிப்பாறை டேம்.. இன்னும் கொஞ்ச தொலைவில் பெருஞ்சாறை டேம் இருக்கு.. இன்னிக்கு பூராவும் நாம இந்த இரண்டு டேம்களைத்தான் சுற்றி வரப் போகிறோம்.."

"நாள் பூராவுமா..?"

"ஆமாம்.."

"காயத்ரி கல்யாண வேலை இருக்கே.."

"அதை சாயந்திரம் போய்ப் பார்த்துக்கறேன்.."

அணைக்கட்டின் வாசலில் காரை அவன் நிறுத்தினான்.. மாலினி இறங்காமல் அவன் முகத்தைப் பார்த்தாள்..

"என்னடி..?"

"எனக்காகவா பிரபா..?"

"இல்லை.. எனக்காக.."

91

**என் முகம் பார்த்து என் உணர்வை..**

**நீ அறிகின்ற பொழுதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

இரு பக்கமும் நீண்டிருந்த சுற்றுச் சுவர்களுக்கு மத்தியில்.. பாலம் போல பரந்து விரிந்து நீண்ட பாதையாக கண்முன் இருந்தது அணைக்கட்டு..

அதன் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்து அணைக்கட்டை வேடிக்கை பார்த்தாள் மாலினி..

ஒரு பக்கம் அகன்று பரந்த ஆறு.. கடலை நினைவுறுத்த.. மறுபக்கம் திறந்துவிடப்பட்டிருந்த மதகுகளில் பொங்கி வழிந்த தண்ணீர்.. அருவியை நினைவுபடுத்தியது..

"வாவ்.." என்று அவள் ரசிக்க.. காற்றில் பறந்த முந்தானையோடு.. கலைந்திருந்த குழல் கற்றையை ஒதுக்கி விட்டபடி தேவதையைப் போல் நின்றிருந்த அவளை ரசித்தான் பிரபாகரன்..

அவனது பார்வையை உணர்ந்தவளாக முகம் சிவந்து சிணுங்கினாள் மாலினி..

"எதுக்கு அப்படிப் பார்க்கறீங்க..?"

"என்கிட்ட என்னடி இருக்கு..?"

"பிரபா..."

"கோடி கோடியாய் பணமிருக்குன்னு சொல்லாதே.. அதை நீ திரும்பிக்கூடப் பார்க்க மாட்ட. நான்கு நாளாய் உன்னோடு தனியாய் நான் பேசலை.. அதுக்காக இந்த அளவுக்கு வாடிப் போயிட்டயே.. என் மேல் அவ்வளவு ஆசையாடி உனக்கு..?"

பேண்ட்டின் இரு பக்க பாக்கெட்டுகளிலும் கைகளை விட்டுக் கொண்டு காற்றில் முடி பறக்க அவன் நின்ற கோலம் அவளைக் கவர்ந்து இழுத்தது..

"ஆமாம்.. ஆசைதான்.." என்றாள் அவள்..

"மாலினி.." அவன் அருகே வர..

"ஸ்ஸ்.. இது பப்ளிக் பிளேஸ்.." என்று விலகினாள்..

மரங்கள் அடர்ந்த பகுதியில் அப்படி விலக அவளால் முடியவில்லை.. யாருமற்ற தனிமையில்.. வெளிச்சம் நுழையாத காட்டுக்குள்.. நீரோடையின் அருகே அவன் அவளைத் தொட்டு தழுவிக் கொண்டபோது அணை உடைந்த வெள்ளமாய் அவன் முகம் பற்றி முத்தங்களைப் பதித்தாள்..

"மாலினி.."

அந்த வேகத்தை எதிர்பார்த்திராதவன் திகைத்தான்.. வேட்கையுடன் அவளை இழுத்து அணைத்தான்.. அவனது கைகள் அவள் மேல் பரவிப்படர.. அவள் கண்மூடி அதை அனுமதித்தாள்..

மரத்தின் கிளையில் சாய்ந்திருந்தவளின் மேல் அவன் சாய்ந்து முத்தம் பதிக்க..

"ஐ லவ் யூ அசுரா.." என்றாள்..

"அசுரனின் வேகத்தை இன்னும் நீ தெரிந்து கொள்ளலை.."

"நீங்க தெரிய வைக்கலைன்னு சொல்லுங்க.."

"ஏய்ய்.."

அவன் வேகத்துடன் இன்னும் அவளை நெருங்கி இறுக்கிக் கொள்ள.. அவனது காதோரமாக அவள் பாடினாள்...

"அழகிய அசுரா.. அழகிய அசுரா..

அத்துமீற ஆசையில்லையா..?

கனவில் வந்து.. எந்தன் விரல்கள்..

கிச்சு கிச்சு மூட்டவில்லையா.."

அவளது பாடல் அவனை அழைக்க.. அவன் அத்து மீறினான்.. அவளது விரல்கள் நிஜத்தில் அவன் மேல் படர்ந்து பரவின...

"வட்ட.. வட்டமாக.. வானவில்லை வெட்டி..

குட்டி.. குட்டி மாலையாக்குவேன்..

புரவிஏறி.. நீயும்.. என்னை

அள்ளிக் கொண்டால்..

மூச்சுமுட்ட.. முட்ட.. சூட்டுவேன்.."

வானவில்லின் துணையில்லாமலே கைகளை மாலை யாக்கி அவன் கழுத்தில் தொங்கினாள் அவள்.. அவன்

புரவியேறி அவளை அள்ளிச் செல்லாமல்.. கைகளால் அவளது இடுப்பை வளைத்து அள்ளிக் கொண்டான்..

"கூடுவிட்டு.. கூடு பாயும்..

வித்தை கற்று..

உன்னை அடைவேன்..."

அவனது முகத்தோடு.. முகத்தை தேய்த்து.. அவனுக்குள் கலந்துவிட அவள் துடித்தாள்.. அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக்கி.. ஓருடலாகி விட அவன் துடித்தான்..

அவளது நீண்ட பின்னல் அவன் முகம் தொட்டுச் செல்ல.. அவன் விழி மூடி மயங்கினான்.. அவளது கண்களுக்குள் கண்கள் பார்த்து.. தவிப்புடன் மூச்சிரைத்தான்..

"கடல் நீலத்தில் கண்கள்..

கொண்ட பெண்ணிடம்..

செல்வம் சேரும்.."

அவள் கண்சிமிட்டிப் பாட.. அவன் அவளது இமை மீது முத்தம் பதித்தான்..

"கருங்கூந்தல் உள்ள பெண்கள்...

தொட்ட காரியம்..

வெற்றி ஆகும்.."

அவனைத் தொட்டு விளையாடிய அவளது பின்னலில் அவன் முத்தம் பதித்தான்..

"உச்சந்தலையில் உள்ள

என் அர்ஜுன மச்சம் சொல்லும்.."

அவளது உச்சந்தலையில் முத்தம் பதித்து அவள் முகம் பார்த்தான் அவன்..

"என்னைச் சேர்பவன் யாரோ..

அவன் சகலமும் பெற்று

வாழ்வான் என்று.."

அன்று அவளை அவன் சேரவில்லைதான்.. ஆனால், ஆண்டாண்டு காலமாய் சேர்ந்து வாழ்ந்துவிட்ட நிறைவும் மகிழ்வும் அவர்களுக்குள் வந்திருந்தது..

அது சேர்க்கையில்லாத சேர்க்கை.. ஒருவரின் மேல் மற்றவருக்கு இருக்கும் ஆசையின் அளவை மனதையும் உணர்வுகளையும் உடலையும் ஆக்கிரமிக்க முடியும்

என்று அன்று அவன் கண்டுகொண்டான்.. மாலினியால் மட்டுமே அவனது ஆண்மையைத் தட்டி எழுப்ப முடியும் என்பதையும் அவன் அன்று கண்டுகொண்டான். எந்தப் பெண்ணாலும் கிளற வைக்க முடியாத உணர்வுகளை அவனுக்குள் கிளர்ந்து எழச் செய்தாள் மாலினி..

அவளுக்கு அவன் மட்டுமே தேவையாக இருந்தான்.. ஊரெல்லாம் அவனது பெயரைச் சொல்லக்கூடத் தயங்கி மரியாதையுடன் இனிஷியலைச் சேர்த்த பெயரின் முதல் எழுத்தை சொல்லி விலகி நின்றபோது.. அவள்-

"அசுரா.." என்று அவனை அழைத்தாள்..

அவனது குடும்பம்கூட அவனிடம் நிழலையும் பாதுகாப்பையும்தான் வேண்டியது.. மாலினி அதைக்கூட அவனிடம் கேட்கவில்லை..

அவள் அவளைத்தான் அவளுக்காக கேட்டாள்.. அவனது காதலைத்தான் கேட்டாள்.. அவனது அண்மையைத்தான் கேட்டாள்.. அவனது அண்மையில் மெய்சிலிர்த் தாள்...

அவனை அவனுக்காக மட்டுமே நேசித்த பெண் அவள்.. அன்று அவளுடன் கழித்த அந்த ஒரு நாள் பொழுதை தன் வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாது என்று உணர்ந்தான் பிரபாகரன்..

அவனது இதழ்களின் ஈரம் அவளது உடலெங்கும் படிந்தும்.. அவள் அதைத் தடை செய்யவில்லை.. முழு மனதாய் அவனிடம் அவளை ஒப்புக்கொடுத்தாள்...

காதலின் வேகத்தை உணர்த்திய பிரபாகரன், அவளது அடைக்கலத்தை பயன்படுத்திக் கொள்ளாமல் கண்ணியம் காத்தான். ஆனாலும் அவளுடன் சேராமல் சேர்ந்தான்.. வாழாமல் வாழ்ந்தான்..

மாலை மயங்கியபோது.. மயங்கிய மனங்களுடன் அவர்கள் வீடு திரும்பினார்கள்..

'அங்கே.. மாலை மயக்கம்..

யாருக்காக..?

இங்கே.. மயங்கும் இரண்டு

பேருக்காக..'

காரில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது... மாலினி மனநிறைவுடன் அவன் மேல் சாய்ந்திருந்தாள்.. அடிக்கடி திரும்பி அவளது உச்சந்தலையில் முத்தமிட்டபடி மெதுவாக காரை ஓட்டினான் பிரபாகரன்..

தூரத்தில் வீடு தெரிந்தது.. மாலினி விலகி எழுந்து அமர்ந்தாள்.. காரை வேகம் குறைத்தான் பிரபாகரன்..

"வீடு வந்துருச்சுடி..."

"ம்ம்ம்.."

"காயத்ரியின் கல்யாண வேலைகளில் இனி முழு மூச்சாய் நான் இறங்கிவிடுவேன் மாலினி.."

"அதுதானே நியாயம்.. ஆனா.. நேரா நேரத்திற்கு சாப்பிட்டு விடுங்க பிரபா. எனக்கு அதுதான் கவலை யாயிருக்கு.."

'இதுதான்.. இவள்..' பிரபாகரன் காதலுற்றான்..

"என்னைக் கவனிச்சுக்கத்தான் நீ இருக்கயே.."

"வெளிப்படையாய் கவனிச்சுக்க முடியுமா..?"

"எல்லாம் காயத்ரியின் கல்யாணம் வரைதான்.. அதற்கு அடுத்த முகூர்த்தத்திலேயே நான் உன் கழுத்தில் தாலியைக் கட்டி விடுவேன்.. அதுக்கப்புறம் நீ வெளிப்

படையாய் என்னை சொந்தம் கொண்டாடலாம்.. கவனிச்சுக்கலாம்.. இன்னும்.."

"இன்னும்..?"

"ராத்திரிகளில் என்னுடன் தூங்கலாம்.."

அவன் கண்சிமிட்டிச் சிரிக்க.. அவள் முகம் சிவந்தாள்..

"ச்சீ.. நீங்க அதிலேயே இருங்க..."

"மாலினி.."

"ம்ம்ம்.."

"நான் உன்னுடையவன்டி.. உன் பிரபாகரன்.."

"எனக்குத்தான் அது தெரியுமே.."

"உன்கூடப் பேச முடியாமல் போனாலும்.. ஏன்.. நின்று பார்க்க முடியாமல் போனாலும் நீ வருத்தப்பட்டுக்க கூடாது..."

"இந்த ஒரு நாள் போதும் பிரபா.. நான் காத்திருப்பேன்..."

"வீடு பூராவும் சொந்தம்.. பந்தம் வந்து இறங்கியிருக்குடி..."

"தெரியுது பிரபா.."

"தேவையில்லாமல் கதை கட்டி விடுவாங்க.. நாம புருஷன் பெண்டாட்டியாகப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லைடி.."

"நம்புகிறேன் பிரபா.."

"காயத்ரி எங்கள் வீட்டுக்கு ஒரே பெண்.. எங்க செல்லத் தங்கை.. அவள் கல்யாணம் குறை சொல்லாத படி நடக்கணும்.."

"ஷ்யூர்.. இப்ப அதுதான் நமக்கு முக்கியம்.. நான் என்னாலான உதவிகளைக் கட்டாயம் செய்வேன்..."

"இது.. இது.. இதைத்தான் உன்னிடம் எதிர்பார்த்தேன்..."

"நீங்க எதிர்பார்க்கலைன்னாலும் நான் என் கடமையைச் செய்வேன்..."

"எதிர்பார்க்காததையெல்லாம் எனக்கு அள்ளி அள்ளி கொடுத்தவளாச்சே நீ.."

"அடி வாங்கப் போறீங்க.. படவா.. முதலில் தங்கை கல்யாணத்தைப் பாருங்க.."

"உனக்குக் கொஞ்சம்கூட என் மேல் பயமே இல்லைடி..."

"எதுக்குப் பயப்படணும்.. நீங்க என்ன சிங்கமா.. புலியா, இல்லை கரடியா..?"

"அசுரன்.."

அவன் சிரித்தான்.. அந்த அழகிய அசுரனின் சிரிப்பில் மனம் மயங்கினாள் மாலினி..

"இப்படிப் பார்த்து.. சிரித்து வைக்காதீங்க பிரபா.."

"ஏண்டி..?"

"என்னை நான் கண்ட்ரோல் பண்ணிக்க வேணாமா..? அது கஷ்டமாப் போயிடும்.."

"மாலினி.."

"ஐ லவ் யூ அசுரா..."

வீட்டு வாசலில் இறங்கியபோதே.. மறுபக்கம் கார் கதவைத் திறந்து இறங்கிய பிரபாகரனை உறவினர் கூட்டம் சூழ்ந்து கொண்டது.. மாலினி தனியாக வீட்டுப் படியேறினாள்...

92

**உறவாக உனைக் கண்ட என்னை..**

**பிரிவைச் சொல்லச் சொன்னால்..**

**என்னவென்று நான் சொல்ல..?**

விழாக் கோலம் பூண்டிருந்த வீட்டில்.. வண்ணத்துப் பூச்சிகளாக வயதுப் பெண்கள் நடமாடிக் கொண்டிருந்தனர்.. வெளியே ஒரு பெண்ணைப் பார்த்தாலே காதல் கணையை வீசிவிடத் துடிக்கும் தினகரனுக்கு வீடு நிறையப் பெண்கள் இருந்தால் எப்படியிருக்கும்..?

அவன் வீட்டை விட்டு நகராமல் செல்போனில் அவர்களைப் படம்பிடித்தபடி பின்னாலேயே அலைந்தான்..

பெரிய வீட்டுப் பெண்கள்.. இயல்பாகவே வைரமும் பட்டுமாக ஜொலிப்பார்கள்.. விழா நாளின் அதிகப்படி அலங்காரத்தில் தேவதைகளைப் போல் உலா வர.. தினகரன் தேன் குடித்த நரியானான்..

பவித்ராவிற்கு அதைப் பார்க்கப் பார்க்க பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது.. மனம் வலிக்க.. அவள் பால்கனியில் நின்று கொண்டிருந்த போது.. வேலையிலிருந்து வீடு திரும்பிய மாலினி அவளைக் கண்டாள்..

வேலையிருக்கிறது என்று பிரபாகரன் முதலிலேயே சொல்லியிருந்தான்.. பரந்தாமன் அவளை அழைத்துக் கொண்டு வந்தார்.. வழியெல்லாம் அவர் பழம் பெருமையைப் பேசிக் கொண்டே வர.. சிரத்தையுடன் அதைக் கேட்டுக்கொண்டே வந்தாள் மாலினி.. சந்தேகம் வேறு கேட்டாள்.. அவள் கேட்ட கேள்விகளையும்.. துணைக் கேள்விகளையும் கேட்டு மகிழ்ந்து போனார் பரந்தாமன்..

"உங்களைப் போல்தான் இருக்கணும்மா.."

"என்னைப் போல எதில் இருக்கணும்ங்கறீங்க.."

"வந்தோம்.. தங்கினோம்ன்னு இல்லாம.. எங்க ஐயாவின் குடும்ப வரலாறை தெரிஞ்சுக்க இவ்வளவு ஆர்வம் காட்டறீங்களே.. அதைச் சொன்னேன்.."

'என்ன செய்வது..? 'உன் ஐயா'... இப்ப 'என் ஐயா..' வாய் ஆகிவிட்டாரே..'

"உங்களைப் போல ஒவ்வொருத்தரும் இருந்தால் நாடு முன்னேறிவிடும்.."

'யோவ்.. இதுக்கும் நாட்டுக்கும் என்ன சம்பந்தம்..?'

"மத்த பொண்ணுகளுக்கு உங்களைப் போல அக்கறை இல்லை.."

'பிழைத்தேன்..'

"வீடு பூரா உறவு ஜனம்தான்.. ஒரு பொண்ணாவது உங்களைப் போல வந்து விசாரிக்குதா..?"

'வந்தால்.. கொன்றுவிட மாட்டேனா..?'

"அதில பாருங்கம்மா.. நம்ம ஐயா மேல நிறையப் பொண்ணுங்களுக்கு ஒரு கண்ணிருக்கு.."

'எனக்கு உங்க ஐயா மேல இரண்டு கண்ணேயிருக்கு..'

"ஆனால்.. நம் ஐயாதான் பிடிகொடுக்க மாட்டேங் கிறாரு.. ம்ஹூம்.."

'அதில் உனக்கு ஏனய்யா இவ்வளவு வருத்தம்..?'

"எங்க ஐயாவுக்கும் இதுபோல ஒரு கல்யாணம் நடந்து அவர் பெண்டாட்டி பிள்ளைகளோடு வாழ்வதைப் பார்த்துவிட்டால் எனக்கு அது போதும்..."

'எனக்கு அது போதாது.. அவரோட பெண்டாட்டியாய் நான் இருக்கணும்.. அவருடைய பிள்ளைகளுக்கு அம்மாவாய் நான்தான் இருக்கனும்..'

"உங்களுக்கு ஏதாவது தோணுதாம்மா..?"

அது நேரம் வரை பரந்தாமனின் தொண தொணப்புக்கு மனதிற்குள்ளேயே பதிலைச் சொல்லிக் கொண்டிருந்த மாலினி.. அவரது இந்தக் கேள்வியைக் கேட்டதும் திருதிருத்தாள்..

"எதைப் பற்றிக் கேட்கறீங்க.."

"வீட்டில வந்து முகாம் போட்டிருக்கிற பெண்களில் முக்கால்வாசிப் பெண்கள் ஐயாவோட முறைப்பெண்கள் தான்..."

"ஓஹோ..."

"அந்தப் பொண்ணுகளில் ஐயாவுக்குத் தோதான பொண்ணு யாருன்னு உங்களுக்கு தோணுது..?"

"தோதான பொண்ணுன்னா..?"

"இதென்னம்மா.. இதுகூடத் தெரியாத பச்சைப் பிள்ளையாய் இருக்கீங்க..."

"ஏதோ இருக்கேன்.. நீங்க விளக்கம் சொல்லுங்க.."

"தோதுன்னா.. பொருத்தமுன்னு அர்த்தம்மா..."

மாலினி பதில் சொல்லாமல் பரந்தாமனையே இமைக்காமல் பார்த்தாள்..

'யோவ்.. உனக்கு என்னைப் பார்த்தால்.. உங்க ஐயாவுக்கு தோதான பொண்ணுன்னு தோணலையா..?'

"என்னம்மா அப்படிப் பார்க்கறீங்க.."

"இல்லை.. இவ்வளவு பெரிய வேலையை என்னை நம்பி ஒப்படைச்சீங்களே.. அதில் மெய்சிலிர்த்துப் போய் விட்டேன்.. ஆமாம் பரந்தாமன் சார்.. என்னைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கணுமுன்னு உங்களுக்கு எப்படித் தோணுச்சு.."

"நீங்கதானேம்மா.. ஐயாவோடவே முக்காவாசி நேரம் இருக்கீங்க.. உங்களுக்கு இந்நேரம் ஐயாவோட குணம் அத்துப்படியாயிருக்கணுமே..."

'இதை மட்டும் உணக்கையாய் சொல்லிவிடு...'

"என்னம்மா யோசிக்கிறீங்க..?"

"இல்லை.. நீங்க எவ்வளவு பெரிய அறிவுஜீவியாய் இருக்கீங்கன்னு யோசிக்கறேன்.."

"எல்லாம் ஐயாவோட டிரெயினிங்கும்மா.."

"நினைச்சேன்.."

'டேய் அசுரா.. இதுக்கே உனக்கு செமத்தியாய் இருக்குடா...'

ஒருவழியாக பரந்தாமனின் தொணதொணப்பில் இருந்து தப்பி.. காரிலிருந்து இறங்கியவள், பவித்ரா பால்கனியில் நிற்பதைப் பார்த்துவிட்டாள்.. அவளது

முகம் கலங்கியிருப்பதைப் போலத் தோன்ற, அண்ணாந்து பார்த்தாள்.. பவித்ரா அவளைப் பார்க்காமல் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

'தோட்டத்திலே யாரை இப்படிப் பார்க்கிறா...'

திரும்பிப் பார்த்த மாலினி திகைத்துப் போனாள்.. பெண்களின் மத்தியில் பிருந்தாவனத்து கிருஷ்ணனைப் போல தினகரன் நின்று கொண்டிருந்தான்..

அவனுடன் பேச ஆர்வம் காட்டிய பெண்களிடம் அவர்களுக்கு குறையாத ஆர்வத்துடன் பேசிக் கொண்டிருந்தான்..

'ஓ.. இதைப் பார்த்துட்டுத்தான் இவ இப்படி நிற்கிறாளா...?'

பவித்ராவின் முகவாட்டத்திற்கான காரணத்தை கண்டுபிடித்தவளாய் மாலினி, பவித்ராவைத் தேடிப் போனாள்...

"பவி.." மாலினி அழைத்ததும்.. சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்ட பவித்ரா, திரும்பிப் பார்த்தாள்..

"ஹேய்.. அழுகிறாயா..?" மாலினி ஆச்சரியத்துடன் வினவினாள்..

தினகரனைப் போன்ற தீராத விளையாட்டுப் பிள்ளையைக் காதலிப்பவள் கண்கலங்கலாமா..? என்று மாலினிக்குத் தோன்றியது..

"இப்ப எதுக்கு உன் கண்ணீரை வேஸ்ட் பண்ணுகிற.."

"கஷ்டமாயிருக்கு மாலினி.."

"கஷ்டமாத்தான் இருக்கும்.. அதுக்காக அழுதால் எல்லாம் சரியாகப் போய்விடுமா..? தெரிந்துதானே காதலித்தாய்..?"

"மாலினி.."

"சொல்லு பவி.. தினகரனின் குணத்தைப் பற்றி உனக்குத் தெரியும்தானே.. தெரிந்துதானே காதலித்தாய்..?"

"இல்லை மாலினி எனக்குத் தெரியாது.."

"தெரியாதா..?"

மாலினி மீண்டும் திகைத்தாள்..

"என்ன பவி சொல்கிற.. நீ அவரின் மாமன் மகள் தானே.. உனக்கு அவர் குணம் தெரியாதா..?"

"தெரியாது.. நான் இவ்வளவு நாள்கள் இந்த வீட்டில் இருந்ததில்லை.."

"ஓ.."

"விஷேங்களில் பார்ப்பதுதான்.. தூரத்திலிருந்து பார்ப்பேன்.."

"இதைத்தான் தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சின்னு சொல்றாங்களோ.."

ஒரு கணம்.. மாலினி தன்னைக் கேலி செய்கிறாளோ என்று பவித்ராவிற்கு தோன்றியது..

'அப்படியெல்லாம் இருக்காது..' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவளாக.. அழமாட்டாத குறையாய் மாலினியின் முகம் பார்த்தாள்..

"நீ கூட என்னைப் புரிந்து கொள்ளவில்லையே.."

"சேச்சே.. அப்படியில்லை பவி.. இப்படி உடைந்து போய் நிற்கிறாயே.. அதனால கேட்டேன்.. தினகரன் ஒரு பிளேபாய் டைப்பும்மா.. உன் காதலால் அவரை மாற்று.."

"முடியுமா..?"

"முடியாது என்பது முட்டாள்களின் அகராதி.. நீ முட்டாளா..?"

"எப்படி மாலினி..?"

"நீ அவரைக் காதலிப்பது அவருக்குத் தெரியுமா..?"

"தெரியாது.."

"ஏன் சொல்லவில்லை...?"

"தயக்கம்.. பயம்.. நடுக்கம்.. இன்னும் நிறைய.."

"ஓகே.. லீவ் இட்.. போனது போகட்டும்.. இனியாவது உன் காதலை அவரிடம் தெரியப்படுத்தி விடு.."

"ஏன் மாலினி..?"

"முட்டாள் பெண்ணே.. உன் காதலைச் சொல்லாமல்.. மத்தவங்களிடம் அவர் 'ஜொள்' விடுவதைப் பார்த்துக் கிட்டு.. ஒளிஞ்சு நின்று அழுவதில் என்ன பிரயோசனம் இருக்குன்னு சொல்லு... இதுவே.. உன் காதலை அவரிடம் சொல்லி.. அவரும் ஏற்றுக் கொண்டால்.. தைரியமாய் நீ அவரைத் தட்டிக் கேட்கலாமில்லையா..?"

"நான் தட்டிக் கேட்டால்தான் அவர் இதை விடுவாரா..?"

பவித்ராவின் ஏக்கம் மாலினிக்குப் புரிந்தது.. இது காதல்.. இவள் காதல் கொண்டவள்.. அந்தக் காதலினால் தினகரனை சொந்தம் கொண்டவள்.. தன் காதலனை எப்படி மற்றவர்கள் சொந்தம் கொண்டாடலாம் என்ற கோபம் இவளுக்கு.. தன் காதலன் எப்படி இதை அனுமதிக்கலாம் என்ற ஆற்றாமை இவளுக்கு..

"பவி.. இப்போ தினகரனைப் பொறுத்தவரை அவர் ஃப்ரீ பேர்டு.. சுதந்திரப் பறவை.. காதல் என்ற கமிட்மெண்டில் சிக்காதவர்.. இதுவே நீ காதலைச் சொல்லி.. அவரும் உன்னை பதிலுக்கு காதலிக்க ஆரம்பித்துவிட்டாருன்ன வை.. அவரே இதையெல்லாம் செய்ய மாட்டார்.."

"நிஜமாகத்தான் சொல்கிறாயா..?"

"ஆமாம்.. மனதில் வைத்துக்கிட்டு மருகுவ- தெல்லாம் மௌளி கதையிலும் சரத்சந்திரர் கதையிலும் வருகிற கேரக்டர்கள் செய்ய வேண்டிய வேலை.. நீ எந்திரன் பட

பீரியடில் இருக்கிற பொண்ணு.. சும்மா வெளுத்துக் கட்ட வேணாமா..?"

பவித்ரா விழி விரிய மாலினி சொல்வதைக் கேட்டு விட்டு நெற்றியில் ஒற்றை விரலைத் தட்டி யோசித்தாள்...

"என்ன யோசிக்கிற பவி.. எப்படி உன் காதலை தினகரனிடம் போய் சொல்வதுன்னா..?"

"ஊஹூம்.. இந்த சரத்சந்திரர் கதையிலதான தேவதாஸ் வருவாரு..?"

"இப்ப தேவதாஸைப் பற்றி ஏன் கவலைப்படுகிற..?"

"இல்ல.. அவர் மட்டும் போல்டா, நான் பார்வதியைத் தான் காதலிக்கிறேன்.. அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொல்லியிருந்தா.. நல்லா இருந்திருக்குமில்ல..?"

மாலினி இமைக்காமல் பவித்ராவைப் பார்த்தாள்..

"இப்ப இது உனக்கு தேவையா..? தேவதாஸ் எப்படிப் போனால் உனக்கென்ன? நீ லேடி தேவதாஸாக மாறிவிடாம உருப்படுகிற வழியைப் பாரு.."

"பார்வதி பாவம் மாலினி.."

"பார்வதியின் பாவத்தை விடு.. இப்ப பவித்ராவின் பாவத்தைப் பாரு.."

"நான் என்ன செய்யணும் சொல்லு..?"

"என்னைக் கேட்டால்.. எனக்கென்ன தெரியும்? என்னைக் கேட்டுக்கிட்டா நீ தினகரனைக் காதலித்த?"

"ப்ளீஸ்.. ப்ளீஸ்.. மாலினி.."

"போகுதுவிடு.. இத்தனை ப்ளீஸ் போடுவதால் பிழைத்துப் போகட்டும்னு விட்டுவிடுகிறேன்.. இப்ப நீ தினகரனிடம் போய் உன காதலைச் சொல்லிவிடு.."

"நான் போய் சொல்வதா..?"

"உன் காதலை நீதான் போய் சொல்லணும்.. உனக்குப் பதிலாக ஸ்வேதாவா போய் சொல்லுவாள்..?"

"ஐயையோ! அவளா.. அவள் போனால் தனக்குக் கணக்கு பண்ணிக் கொண்டு விடுவாளே..."

"இதிலெல்லாம் செம விவரமாய்த்தான் இருக்க.. கவலையே படாதே..

தினகரனைக் கணக்கு பண்ண அவளால் முடியாது.."

'உன்னால்தான் முடியும்னு சொல்ல வருகிறாயா..?' ஏனோ பவித்ராவின் மனதில் இந்த நினைவு ஓடியது...

93

**நொடிப் பொழுதில் என் உயிரைக் குடித்து..**

**நடக்கின்ற உந்தன் பிரிவினையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

மாலினி என்னவோ பவித்ராவின் மேல் பிரியமாகத் தான் இருந்தாள்.. ஆனாலும் அவள் மீது ஒரு விரோத உணர்வு மனதிற்குள் எழுவதை பவித்ராவினால் தடுக்க முடியவில்லை...

தன்னால் கவர முடியாத தினகரனின் கவனத்தை மாலினி கவர்கிறாள் என்பதனாலேயே மாலினியை மனதிற்குள் வெறுக்க ஆரம்பித்திருக்கிறாள் பவித்ரா...

பாவம் மாலினி.. இதை அறியாத வெள்ளை மனத்துடன் பவித்ராவை 'பாவம்' பார்த்துக் கொண்டிருந்தாள்...

"இத்தனை நாளாய் இந்த வீட்டிலேயே டேரா போட்டிருந்தபோது கணக்குப் பண்ண முடியாத தினகரனை இப்போது போய் கணக்குப் பண்ணப் போகிறாளா.. அவளெல்லாம் ஆட்டத்திலேயே இல்லை.. நீ கவலையை விடு.."

பவித்ராவின் கவலை ஸ்வேதாவைப் பற்றி அல்ல.. மாலினியைப் பற்றியது என்று உணராதவளாக மாலினி பேசிக் கொண்டிருந்தாள்..

"என்னால் போய் தினா அத்தானிடம் காதல் சொல்ல முடியாது மாலினி.."

"அதுதான் ஏன்னு கேட்கறேன்.."

"அவர் முகத்தைப் பார்த்தாலே எனக்கு பேச்சு வந்து தொலைக்காது.."

"வெறும் காத்துத்தான் வருமா.. நீ இஞ்சி இடுப்பழகி கேஸா..?"

மாலினி கலகலவென்று சிரித்தாள்.. எங்கே அவளின் சிரிப்புச் சத்தம் தினகரனின் காதில் விழுந்து அவன்.. அவள் இருப்பதை பார்த்துவிடுவானோ என்ற பயத்துடன் பவித்ரா தோட்டத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்..

"சரி, விடு.. நீ வாய் வார்த்தையாய் சொல்ல வேண்டாம்.. லெட்டர் எழுதிக் கொடுத்துவிடு.."

"அப்படியா சொல்கிறாய்..?"

"அப்படித்தான் சொல்கிறேன்.."

"ஆனா.. எப்படி எழுதுவது..?"

"கடுப்படிக்காதே பவித்ரா.. விழுந்து விழுந்து சைட் அடிக்க மட்டும் தெரியுது.. ஆனா.. அதை எழுத மட்டும் தெரியாதுன்னு கதையளக்காதே.. யாருகிட்ட காது குத்தறே..."

"ஸாரி.. ஸாரி.."

பவித்ரா ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு தனித்து அமர்ந்துவிட.. அவள் மனதிலுள்ள காதலை எழுத்தில் வடிக்க.. தனிமையை அவளுக்கு கொடுத்துவிட்டு மாலினி விலகி எழுந்து ஹாலுக்க வந்தாள்...

சசிரேகா பரபரப்பாக போய்க் கொண்டிருந்தாள்..

"என்ன சசி.. நிற்க ரேமில்லாம பம்பரமாக சுத்தறே?"

"நாளைக்கு நீயும் சுத்துவ..."

"நாளைக்கு கதையை நாளைக்கு பார்க்கலாம்.. இப்ப எதுக்கு இந்த ஓட்டம் ஓடுகிற..?"

"வீடு பூரா விருந்தாளிகள் கூட்டம்.. பார்த்துக் கிட்டுத் தான இருக்க..?"

"பார்த்து என்ன செய்ய.. எண்ண முடியவில்லையே.."

"ஒரு செகண்டுக்கு ஒரு ஆள் வந்து இறங்குது.. அப்புறம் எப்படி உன்னால் எண்ண முடியும்.. இவங்களுக்கு டிபன்.. காபி.. கொடுத்து.. நேரா நேரத்துக்கு சாப்பிட வைப்பது என் பொறுப்புன்னு அத்தை சொல்லிட்டாங்க.."

"இப்ப உன் கஷ்டம் என்னன்னு எனக்குப் புரியுது.."

"காலையில் நாலு மணிக்கு காபி கொடுத்துவிட ஆரம்பித்தால்.. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நேரத்துக்கு எழுந்து காபி சாப்பிட்டு முடிய எட்டு மணியாகி விடுது.."

"அடக்கடவுளே.. எட்டு மணிக்கு டிபன் வேளை ஆரம்பிச்சுருமே..."

"ஆமாம்.. டிபன் சாப்பிடுறதும் அதே கதைதான்.. எட்டு மணிக்கு ஆரம்பிக்கிற காலை பந்தி பன்னிரண்டு மணிக்குத்தான் முடியுது..."

"இங்கே பாரு.. அது லன்ச் டயமாச்சே.."

"அதுதான்.. அதேதான் நான் சொல்ல வருவதும்.. பன்னிரண்டு மணிக்கு ஆரம்பிக்கிற மதிய பந்தி முடிய மூணு மணியாகிவிடுது..."

"கிழிஞ்சது போ.. அது ஈவினிங் காபி டிபன் டயம்.."

"என்னத்தைச் சொல்ல.. மூணு மணிக்கு காபி டிபனை நான் கொடுக்க ஆரம்பிச்சு முடிக்கிறதுக்குள்ள ஏழு மணியாயிடுது.."

"அடுத்து நைட் டின்னர் ஆரம்பமா..?"

"ம்ம்.. ஏழு மணிக்கு ஆரம்பிக்கிற ராத்திரி பந்தி முடிய பன்னிரண்டு மணியாகுது.. மாலினி..."

"ஊடே கிடைக்கிற நான்கு மணி நேரத்தில்தான் நீ தூங்கி எழுந்திருக்கணுமா..?"

"குளித்து டிரஸ் மாத்திக்க அதில் ஒரு மணி நேரம் போயிடுதே..."

"பாவம் தான் நீ.. தூக்கம் கெடுது உனக்கு.."

"அதை விடு.. என்னால் அத்தானைக் கவனிக்க முடியலை.. அவர் கூடப் பேசி ஒரு வாரமாச்சு தெரியுமா..?"

"என்னடி இது அநியாயமாய் இருக்கு.. இரண்டு பேருக்கும் ஒரே பெட்ரூம்தானே..."

"ச்சீ.. சத்தமாய் பேசாதே.. நான் ரூமுக்குள் போகும் போது அவர் அசந்து தூங்கிக்கிட்டு இருப்பார்.. அவர் முழிக்கும்போது நான் ரூமில் இருக்க மாட்டேன்.."

"விளங்கிரும்.. இதுதான் நி குடும்பம் நடத்தும் லட்சணமா..?"

"என்ன செய்ய.. பெரிய வீட்டு மருமகள்ங்கிற பெயருக்கு இத்தனை பாடுபட வேண்டியிருக்கு.. சரி.. சரி.. திருநெல்வேலியிலிருந்து வந்திருக்கும் தாத்தாவுக்கு அல்வா பிடிக்காதாம்.. வேற ஸ்வீட் எடுத்துக் கொடுத்து விடணும்.. நான் கீழே போகிறேன்..."

"திருநெல்வேலிக்கே அல்வா பிடிக்காதா..? என்னடி சசி இது? ஆச்சரியமாய் இருக்கே.."

சசிரேகாவிற்கு சிரிப்பு வந்துவிட்டது..

"நீ இருக்கியே.. போடி.. நேரம் காலம் தெரியாம ஜோக்கடிக்காதே..."

சசிரேகா கீழே இறங்கிவிட்டாள்.. மாலினி, பிரபா கரனைப் பற்றி நினைத்துக் கொண்டாள்..

அவனை அவள் பார்த்து மூன்று நாள்களாகின்றன. பந்தியில் உட்கார்ந்து சாப்பிட நேரம் இல்லாததால்.. மாலினி அறைக்கே சாப்பாடைக் கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போய்விடுவதை வழக்க மாக்கிக் கொண்டிருந்தாள்..

'இந்நேரம் அவன் என்ன செய்து கொண்டிருப்பான்?' என்ற நினைவு அவள் மனதில் எழுந்தது.. அவள் தோளில் ஒரு கரம் படிய திரும்பிப் பார்த்தாள்..

"எழுதிட்டேன் மாலினி.. இனி என்ன செய்யணும்..?" என்று கேட்டபடி அங்கே நின்றிருந்தாள் பவித்ரா..

"பூஜை ரூமிலே வைத்துப் பூஜை செய்யணும்.." மாலினி விளையாட்டாகக் கூற..

"அத்தை பார்த்து விட்டாங்கன்னா என்ன செய்யறது.." என்று பவித்ரா கவலையாக கேட்டாள்..

"நிஜமாகவே அப்படி ஏதும் செய்துவிடாதே.. மனதுக்குள் சாமியை வேண்டிக்கோ..."

"வேண்டிக்கிட்டேன்.."

"நேரா.. போய் தினகரனிடம் கொடுத்துவிடு.."

"நானா..?"

"நீதான் போகணும்.."

"என்னால் முடியாது மாலினி.. நான் காரியத்தையே கெடுத்துவிடுவேன்.. அவர் முகத்தைப் பார்த்தாலே எனக்கு கைகால் நடுங்கும்.. பேச்சு வராது.. கடிதத்தை கொடுக்காமலே வந்துவிடுவேன்.."

"இப்படிச் சொன்னா எப்படி பவி.."

"ப்ளீஸ், மாலினி.. இன்றைக்கு விட்டால் இனி என்றைக்கும் தினா அத்தானிடம் என் காதலைச் சொல்ல முடியாது.."

"நாளை என்பது வரவே வராதா..?"

"நாளை வரும்.. அது காயத்ரியின் கல்யாணத்திற்கு முதல் நாளாக வரும்.."

"என்ன சொல்கிற பவி..?"

"நாளைக்கு மறுநாள் காயத்ரியின் கல்யாணம்.. மறந்துவிட்டாயா..?"

"மறக்கலை.. அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"நாளைக்கு மதியமே நாம எல்லோரும் கல்யாண மண்டபத்துக்கு போய்விடணும்..."

"அட, ஆமாம்.."

"காயத்ரியின் கல்யாணம் முடிந்த கையோடு அப்பா என்னைக் கருங்கல்லுக்கு கூப்பிட்டுக் கொண்டு போய் விடுவார் மாலினி.."

"ஓ.. அப்படின்னா நீ உங்க ஊருக்குப் போன பின்னால் போஸ்டில் அனுப்பி வைத்து விடேன்..."

பவித்ரா நிராசையுடன் மாலினியைப் பார்த்தாள். அவளது பார்வையில் தெரிந்த துயரம் மாலினியின் மனதை உலுக்கியது.. அவளது துயரத்தைப் போக்க தன்னால் எதையாவது செய்ய முடியுமா என்று மாலினி யோசிக்க ஆரம்பித்தாள்..

"எங்க ஊரில் என்னைத் தனியே வெளியே அனுப்ப மாட்டாங்க மாலினி.. அப்படியே நான் எதையாவது சாக்கைச் சொல்லி வெளியே போய் போஸ்டில் அனுப்பினாலும் அந்த தபால் தினகரனின் கையில்தான் சேரும்கிறதுக்கு என்ன உத்தரவாதம் மாலினி..?"

"ஸ்பீடு போஸ்டில் அனுப்பு.. கையெழுத்து வாங்கமல் அதை டெலிவரி பண்ண மாட்டாங்க..."

"இன்னாரிடமிருந்து.. இன்னாருக்கு தபால் வந்திருக்குன்னு வீட்டில் சொல்வாங்களா.. மாட்டாங்களா..?"

"நீ அப்படி ஏன் நினைக்கிற..?"

"ஒருவேளை அப்படி நடந்துவிட்டால்..?"

மாலினிக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. பவித்ராவின் பயத்தில் நியாயம் இல்லையென்று அடித்துப் பேச அவளால் முடியவில்லை. பவித்ரா சொன்னவை நடப்பதற்கான வாய்ப்பு நிறைய இருந்தது..

"இதில் இன்னொண்ணும் இருக்கு மாலினி.."

"என்ன..?"

"என் காதலை அவர் ஏற்றுக்கொண்டு விட்டால்.. இன்றைக்கு நைட் பதினோரு மணிக்கு மேலே.. தோட்டத்தில் வந்து என்னைச் சந்திக்கச் சொல்லி எழுதியிருக்கிறேன் மாலினி.."

"பவித்ரா.."

அவளது தைரியம் கண்டு மாலினி ஆச்சரிய மடைந்தாள்.. மாலினியின் கதையே வேறு.. அவளும் பிரபாகரனும் பார்த்த முதல் பார்வையிலேயே வசீகரிக்கப் பட்டார்கள். அவர்கள் மனதில் பொங்கிய காதலை உணர்ந்திருந்தார்கள்.. இருந்தும்.. தனிமையில் பேசிப் பழகவில்லை.. ஏறக்குறைய ஏழு மாதங்கள் கழித்துத்தான் அவர்கள் மொட்டை மாடியில் சந்தித்துக் கொண்டார்கள்..

'ஊமையாய் இருக்கிற ஆளுகளை நம்பவே கூடாது..'

அவள் பவித்ராவை மேலும் கீழும் பார்த்தாள்.. அவளுடைய பார்வையை உணராத பவித்ரா, வேகமாக பேசிக் கொண்டே போனாள்..

"என் மனதிலிருப்பதை அவரிடம் நான் கட்டாயம் சொல்லியாகணும் மாலினி.. நான் ஊருக்குப் போய் விட்டால் இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.. இதற்கு முதலில் என்றால்கூடப் பரவாயில்லை.. தினா அத்தானை இழந்தாலும்.. நான் அதைப் பற்றி

இந்த அளவுக்கு துன்பப் பட்டிருக்க மாட்டேன்.. மனதில் ஒருத்தர் மேல் ஆசை வைத்தோம்.. அது நடக்காமல் போய்விட்டதுன்னு மனதைத் தேற்றிக் கொண்டிருப்பேன்..

இப்ப அப்படி இல்லை.. இந்த அறுபது நாள்களில் அவரை தினமும் பக்கத்தில் இருந்து பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது மாலினி. அவருடன் மனதில் குடும்பம் நடத்தவே ஆரம்பித்துவிட்டேன். இனி அவரை இழக்க வேண்டி வந்தால் என் மனது அதை தாங்காது நான் செத்துவிடுவேன் மாலினி.."

"பவித்ரா.."

மாலினி அதிர்ந்துவிட்டாள்.. பவித்ரா இந்த வார்த்தைகளை உண்மையாகச் சொல்கிறாள் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. பவித்ராவின் காதல் நிறைவேற எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குள் வலுத்தது..

"ஒண்ணு செய்யலாம் பவி.."

அவளையறியாமலேயே அவள் பவித்ராhவுடன் கூட்டு சேர்ந்து விட்டதை உணராதவளாக கேட்டாள் மாலினி..

"என்ன மாலினி..?"

"இந்த வீட்டில் நிறைய வாண்டுகள் இருக்குதில்லையா.."

"கல்யாண வீட்டில் சிறுசுகள் இல்லாம இருக்குமா.."

"அதில் எதையாவது பிடி.."

"பிடித்து.?"

"அது கையில் இதைக் கொடுத்துவிடு.."

"ஐயையோ.."

"அடச்சீ.. அதுககிட்ட லவ் லெட்டரைக் கொடுக்கச் சொல்லலை பவி.. அதுக கையில கொடுத்து.. தினகரனிடம் போய் கொடுத்துவிடச் சொல்லு..."

"அவ்வளவுதான்.. அதுக வீடு பூராவும் தம்பட்டம் அடிச்சிரும்.."

"எல்லாத்துக்கும் பயந்தா எப்படி பவி.."

"மாலினி.. எனக்கொரு யோசனை தோணுது.. சொல்லவா..?"

"அப்பாடி.. உன் பிரச்னையை நீயே பார்த்துக்கறதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா..? சொல்லு.. சொல்லு..."

"நீயே போய் இந்த லெட்டரை அவரிடம் கொடுத்து விடேன்.."

மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது.. பவித்ரா இப்படி ஒரு வேண்டுகோளை வைப்பாள் என்று அவள் எதிர்பார்த் திருக்க வில்லை...

94

**அந்தி மழை நேரத்தில்..**

**என்னைத் தொட்ட சாரலை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

காதலுக்கு தூது போகலாம்.. தவறில்லை.. ஆனால், காதலி கொடுக்கும் கடிதத்தை எப்படிக் கொண்டு போய் காதலனிடம் கொடுப்பது..?

"ஊஹூம்.. நான் மாட்டேன்.." மாலினி மறுத்தாள்..

"ப்ளீஸ்! மாலினி.. நீ மாட்டேன்னு சொல்லிட்டா என் கதி என்னாகிறது..?"

"ஒன்று செய்யலாம் பவி.."

"என்ன?"

"நான் தினகரனிடம் உனக்காகப் பேசுகிறேனே.."

"பேசி..?"

"உன் காதலை எடுத்துச் சொல்கிறேனே.."

'இந்தச் சாக்கில் அவனை உன்னிடம் ஜொள்ளு விட வைக்கப் பார்க்கிறாயா.. நீ என் காதலைச் சொன்னால்.. அவன் உன் முகத்தைப் பார்ப்பானா..? இல்லை.. என் காதலைக் கேட்பானா..? அதுவே.. என் கடிதத்தைக் கொடுத்தாயானால்.. இதில் என் மனதைப் படிப்பான்.. நிச்சயம் என்னைத் தேடி வருவான்..'

பவித்ராவிற்கு மாலினியின் வசீகரத் தன்மையை நினைத்துப் பயமும் இருந்தது.. அதேசமயம்.. தன் காதல் மற்றவர்கள் முன்னால் அம்பலம் ஆகாமல் தினகரனிடம் சொல்லப்பட வேண்டுமே என்ற தவிப்பும் இருந்தது..

அவளுக்குத் தெரிந்து தினகரனை நேரடியாக அணுகிப் பேசக்கூடிய செல்வாக்கு அந்த வீட்டில் மாலினியிடம் மட்டும்தான் இருந்தது..

தினகரன் மற்றவர்களை மதித்து நின்று பேச மாட்டான்.. அவன் மதித்து நின்று பேசுவது ஆறு பேரிடம் மட்டும்தான்.. முதலாவது அவனைப் பெற்ற தாய்.. பவித்ரா வின் அத்தை.. அவளிடம் போய் பவித்ரா காதல் தூதுவிட முடியுமா?

இரண்டாவது நபர் பிரபாகரன்.. தினகரன் முன்னாலாவது பவித்ரா நின்று பேசுவாள்.. பிரபாகரனின் பெயரைக் கேட்டாலே மயக்கம் போட்டு விடுவாள்.. அவனிடமாவது பவித்ரா தன் காதலைச் சொல்லி விடுவதாவது..

மூன்றாவது ஆள் கருணாகரன்.. அமைதியானவன், பண்பானவன். பவித்ராவை நல்ல பெண் என்று நினைத்துக் கொண்டிருப்பவ்ன. அவனைப் பார்க்கும் போது மரியாதை கொடுக்கத்தான் பவித்ராவிற்கு தோன்றும்.. அவனிடம் போய் அவளது மனதை திறந்து பேச முடியுமா..? அதற்கு பதில் பவித்ரா காலம் முழுவதும் கன்னியாகவே இருந்து விடுவாள்..

நான்காவது காயத்ரி.. பவித்ராவிற்கு இணையான வயதுத் தோழி. ஆனாலும்.. வீட்டில் உள்ள பெரியவர்களின்

பேச்சுக்கு கட்டுப்பட்டு வளர்ந்த பெண்.. நர்மதாவிடம் எதையும் மறைக்கும் வழக்கம் காயத்ரிக்கு கிடையாது.. அவளிடம் போய் பவித்ரா.. தன் காதலை உளறி வைத்தால் அவள் என்ன நினைப்பாள்..?

ஐந்தவாது சசிரேகா.. கருணாகரனின் மனைவி.. அவளிடம் அதிகமாக பவித்ரா பேசியது கிடையாது. கணவனின் உறவினர் வீட்டுப் பெண் என்பதற்காக மரியாதையுடன் தலையசைத்துவிட்டுப் போய்விடுவாள்.. அவளிடம் போய் பவித்ரா காதலைப் பேசுவதா..?

ஆறாவது ஆள் மாலினி.. பவித்ராவின் மனதை அறிந்தவள்.. பிரபாகரனின் காதலையும் பெற்றிருக்கிறாள்.. என்ன ஒன்று.. பிரபாகரனின் காதலோடு தினகரனின் சுவாரஸ்யமான பார்வையையும் பெற்றுத் தொலைத்து விட்டாள். அதற்காக பவித்ரா பயந்தால்.. அவளின் காதலை தினகரனிடம் தெரிவிக்க முடியாமலே போய்விடக் கூடும்...

எனவே.. மாலினியிடம் கடிதத்தை கொடுத்து அனுப்பிவிட்டு அவள் ஏதாவது மாய்மால வேலை செய்தால் பிரபாகரனிடம் போட்டுக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்துடன் இருந்தாள் பவித்ரா..

அவளுக்கு ஸ்வேதா சொல்லியிருந்தது நன்றாக மனதில் பதிந்திருந்தது..

'இதுக இரண்டும் பிரபாகரனுக்கு மட்டும்தான் பயப் படும்கள்.. இதுகளைக் கூப்பிட்டு பிரபாகரன் ஒரு சத்தம் போட்டாருன்னு வை.. மாலினியும் தினகரனின் பக்கம் திரும்ப மாட்டா.. தினகரனும் அவள் இருக்கும் திசைப் பக்கம் தலை வைத்துப் படுக்க மாட்டான்..'

தன்னுடைய கடைசி அஸ்திரமாக இதைச் செயல் படுத்தும் முடிவோடு இருந்தாள் பவித்ரா..

காதலுக்காக எதையும் செய்யலாம்.. ஆனால், நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா என்ற கேள்விகளை எல்லாம் அவள் யோசிக்கவே இல்லை.

அவளுக்காக மாலினி, தினகரனிடம் பேசப் போகிறாள். அவளுடைய காதலைச் சொல்லும் கடிதத்தை அவனிடம் கொடுக்கப் போகிறாள் என்பதைவிட.. மாலினியின் மேல் தினகரன் ஆர்வம் காட்டிவிட்டால்.. அதை முறியடிக்க என்ன செய்வது என்று யோசித்து வைத்துக் கொண்டாள் பவித்ரா..

இதை அறியாத மாலினி.. தூது போகும் வேலையை மிகத் தயக்கத்துடன் ஏற்றுக் கொண்டாள்..

"போ.. மாலினி.. அவர் தோட்டத்தில்தான் நிற்கிறார்.."

"கொஞ்சம் பொறு பவித்ரா.. எனக்கு படபடன்னு வருது.."

"அதெல்லாம் எனக்குத்தானே வந்து தொலைக்கும்..?"

"இப்போ.. எனக்கும் வந்து தொலைத்துவிட்டது.."

இவள் ஏன் தினகரனிடம் பவித்ராவின் காதலைச் சொல்ல இந்த பயம் பயப்படுகிறாள்..

பவித்ராவின் மனதில் சந்தேகம் துளிர்விட ஆரம்பித்தது.. ஆனால், அவளை விட்டால் தினகரனிடம் அனுப்ப வேறு ஆள் இல்லாததால் வேறுவழியின்றி மாலினியிடமே கெஞ்ச ஆரம்பித்தாள்..

"சீக்கிரமாய் போ மாலினி.. அவர் வீட்டுக்குள் வந்து விட்டால் கடிதத்தை அவரிடம் கொடுக்க முடியாது.."

"ஏன்.?"

"சுற்றி பத்துச் சொந்தக்காரங்க நின்னுக்கிட்டே இருப்பாங்க.."

"தோட்டத்தில் இருக்க மாட்டாங்களா..?"

"இருட்டின பின்னால் தோட்டத்துப் பக்கம் போக நிறைய பேர் யோசிப்பாங்க.."

மாலினி மெதுவாக படியிறங்கினாள்.. பின் நின்று..

"நீயும் கூடவா பவித்ரா.." என்று அழைத்தாள்..

"நான் எதற்கு? நீ போ.."

"புரியாம பேசாதே.. நீ தனியாகப் போகத்தானே பயப்படுகிறாய்.. நானும் துணைக்கு வருகிறேன். உன் சார்பாய் நானே கடிதத்தையும் கொடுக்கிறேன்.."

'ஒரு வேளை.. தினகரன் என் காதலை மறுத்துவிட்டால்?' பவித்ராவின் மனம் சஞ்சலமானது..

அதை மாலினியின் முன்னால் அவன் சொல்லி விட்டால் பவித்ராவால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?

"வேண்டாம் மாலினி.. நீ மட்டும் போ.. ப்ளீஸ்.. எனக்காக.."

பவித்ராவின் அந்த வார்த்தைக்காகத்தான் மாலினி போனாள்.. பவித்ராவிற்காகத்தான் அந்த வேலையை மேற்கொண்டாள்..

ஆனால், பவித்ரா..?

மாலினி செய்து கொண்டிருந்த அந்த நன்றியை அவள் நினைத்துப் பார்க்கப் போவதில்லை என்று தெரிந்திருந்தால் மாலினி போயிருப்பாளா?

ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்.. தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்.. அங்கே.. ஊரார் காதலை மாலினி உதவி செய்து வளர்த்தாள்..

அதற்கு அவளுக்கு கிடைக்கப் போகும் பலனை அறிந்திருந்தால் அவள் அதைச் செய்திருப்பாளா..?

பவித்ரா மாடிப் பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தபோது.. அதுவரை பூனை போல பால்கனியின் தூண் மறைவில் நின்று நடந்தவற்றை பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்வேதா வெளியே வந்தாள்..

'லட்டு போல சான்ஸ் கிடைச்சிருச்சு...'

இத்தனை நாளாக எதற்காக அவள் காத்துக் கொண்டிருந்தாளோ.. அந்த வாய்ப்பு கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் அவள் பவித்ராவிற்கு காலடிச் சத்தம்

கேட்டுவிடாமல் மெல்லடி வைத்து.. மாடிப்படிகளில் இறங்கி மாலினியைத் தொடர்ந்து தோட்டத்திற்குச் சென்றாள்...

மாலினி முன்வாசல் வழியாக இயல்பாக இறங்கி.. தோட்டத்துக்குள் நின்றுகொண்டிருந்த தினகரனை நோக்கிச் சென்றாள்.. ஸ்வேதா வீட்டின் பக்கவாட்டு வாசல் வழியாக பால்கனியில் நின்றுகொண்டிருந்த பவித்ராவின் கண்களில் பட்டுவிடாமல் தோட்டத்துப் பக்கம் சென்று தினகரனின் பின்பக்க செடி மறைவில் நின்றுகொண்டாள்..

தினகரனை நெருங்கிய மாலினி.. அண்ணாந்து பால்கனியில் நின்றுகொண்டிருந்த பவித்ராவைப் பார்த்தாள்.. தனிமையில் நின்றுகொண்டிருந்த தினகரன் மாலினியைக் கண்டதும் எதிர்பாராத இன்ப ஆச்சரியத்தை கண்களில் பிரதி பலித்தவாறு..

"ஓ.. மாலினி.. நீங்களா..? என்ன இந்த ஒரு வாரமாய் என் கண்ணிலேயே நீங்க படலையே..?" என்று கேட்டான்..

"அது வந்து.. மிஸ்டர் தினகரன்.." தைரியமாக வந்துவிட்டு.. இப்போது பேச முடியாமல் மாலினி திணறினாள்...

"மிஸ்டரா.. இது என்ன புதுப்பழக்கம்..?" அவளது தடுமாற்றத்தை வியப்புடன் பார்த்தபடி வினவினான் தினகரன்..

"ஒன்றுமில்லை.. எனக்கு.. நான்.. உங்களிடம் ஒன்று பேச வேண்டும்.." மாலினி முகம் வியர்த்தாள்..

"என்ன?" தினகரனின் கண்கள் ஒளிர்ந்தன..

அவனைப் பார்த்த உடனேயே வசீகரித்தவள் மாலினி. அவள் இந்த அளவுக்கு படபடப்பாக.. தனியாக வந்து பேசுகிறாள் என்றால்.. அது ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவனது கணிப்பு..

"அது.. வந்து.."

மாலினி ஆரம்பிக்கும்போது.. ஸ்வேதா.. தான் மறைந்து நின்றுகொண்டிருந்த செடியை ஆட்டிவிட்டாள். போதாக் குறைக்கு.. தன் கால் கொலுசுகளை சப்தமெழச் செய்தாள்..

"யாரோ வருகிறாங்க போல இருக்கே.." மாலினி சுற்றுமுற்றும் பார்த்தாள்..

இப்போது தினகரனுக்கு நிச்சயமாகிவிட்டது.. அவன் அறிந்த மாலினி.. இப்படி மறைவாக நின்று பேச மாட்டாள்.. முகம் பார்த்து நேர்கொண்ட பார்வையுடன் பேசுவாள்...

காதல் வந்துவிட்டால் அங்கு கள்ளத்தனமும் வந்து விடும் என்பது அந்த தீராத விளையாட்டுப் பிள்ளைக்குத் தெரியாதா என்ன?

"வந்தால் வரட்டும்.. நானிருக்கும் போது என்ன பயம்..?" அவன் புதிதாக முளைத்த உரிமையுடன் கூறினான்..

மாலினிக்கு இருந்த பதற்றத்தில் அவள் தினகரன் காட்டிய உரிமை கலந்த நெருக்கத்தைக் கவனிக்க வில்லை!

மற்றவர்கள் பார்க்கும் முன்னால் பவித்ராவின் கடிதத்தை தினகரனிடம் சேர்த்துவிட வேண்டும் என்பது தான் அவளுக்கு குறிக்கோளாக இருந்தது..

எப்படியும் மாலினி, தினகரனிடம் அவளது கடிதத்தை சேர்த்துவிடுவாள் என்று அவள் நம்பிக் கொண்டிருக்கிறாள்.. அந்த நம்பிக்கை வீணாகிவிடக் கூடாது...

சட்டென்று தன் கையில் இருந்த கடிதத்தை தினகரனிடம் கொடுத்து விட்டாள் மாலினி..

"இது என்ன?" என்று கேட்டவனிடம்..

"பிரிச்சுப் படிச்சுப் பாருங்க புரியும்.." என்று வேகமாக சொன்னாள்..

"ஏன்.. அதை வாய்விட்டுச் சொன்னால் ஆகாதா..?" தினகரன் உல்லாசமாகச் சிரித்து வைத்தான்..

"அது வந்து.. தினகரன்.." என்று மாலினி, பவித்ரா வின் காதலைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தபோத..

"அட.. தினா அத்தான்.. நீங்க இங்கேயா இருக்கறீங்க..?" என்று கேட்டபடி ஸ்வேதா செடி மறைவிலிருந்து

வெளிப்பட்டாள்..

சட்டென்று தினகரன் கடிதத்தை பேண்ட் பாக்கெட்டில் திணித்துக் கொள்ள.. மாலினி வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டாள்..

'நல்ல நேரத்தில் பூஜை வேளைக் கரடி போல வந்து விட்டாளே..'

மாலினியுடன் பேச முடியாமல் செய்துவிட்ட ஸ்வேதாவை கோபப் பார்வை பார்த்தான் தினகரன்..

"தினா அத்தானுக்கு என்ன வைத்திருக்கிறாய்..?"

"நல்ல நியூஸ் ஒன்றை வைத்திருக்கிறேன்.."

"என்ன நியூஸ்.. நீ எங்களை விட்டு ஒழியப் போகிறாயா..?"

"எப்படி கரெக்டா சொன்னீங்க.. அதுதான் நியூஸ்.."

"போய்த் தொலை.."

"நான் தொலைவது இருக்கட்டும்.. நீங்க மாலினியைக் கணக்கு பண்ணிட்டீங்க போல..."

"அடித்துப் பல்லைக் கழட்டிவிடுவேன்.. மாலினி காதல் பண்ண வேண்டிய பெண்.. கணக்குப் பண்ண வேண்டிய பெண்ணில்லை..."

தினகரன் வேகமாக போய்விட.. அவன் எதற்காகப் போகிறான் என்பதை அறிந்து வைத்திருந்த ஸ்வேதா மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்..

'போடா.. போ.. அந்தக் கடிதத்தை தனிமையில் படிக்கத்தானே போகிறாய்.. அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்குன்னு உனக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும்டா..'

ஸ்வேதா வெற்றிப் புன்னகையுடன் பால்கனியில் நின்றிருந்த பவித்ராவைப் பார்த்தாள்..

95

**பாராததைப் போல் உனைப் பார்ப்பதையே..**

**சேராதது போல் என் இதயம் உனைச் சேர்வதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

'என் பிரியத்துக்குரியவரே...

நான் இரவும் பகலும் நினைப்பது உங்கள் முகத்தை மட்டும்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? மனதில் நினைப்பதை சொல்ல முடியாமல்

நாணம் தடுக்க.. எத்தனை இரவுகளில் தூங்காமல் தலையணையை நனைத்திருக்கிறேன் என்று தெரியுமா? என் காதலை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்ற பயம்.. தோற்றுப் போய் விடுவோமோ என்ற அச்சத்திலேயே என் காதலை வெளியில் சொல்லாமல் எனக்குள்ளேயே புதைத்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கும் நான் வாய்மூடிக் கொண்டிருந்தால்.. இனி என்றைக்குமே நீங்கள் எனக்குக் கிடைக்காமல் போய்விடுவீர்கள் என்ற பயம் என் மனதை வாட்டுகிறது..

அதனாலேயே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.. என் காதலை நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால்... இன்று இரவு பதினொரு மணிக்கு மேல் தோட்டத்திற்கு வாருங்கள்..

நம் எதிர்காலத்தைப் பற்றி நாம் பேசி முடிவு செய்யலாம்...

என்றென்றும் பிரியங்களுடன்

தங்கள் நினைவில் வாடும் காதலி'

கடிதத்தை ஒரு முறைக்கு பல முறை படித்துப் பார்த்த தினகரன்.. பதினொரு மணி எப்போது வரும் என்று அப்போதிருந்தே காத்திருக்க ஆரம்பித்தான்..

பால்கனியின் தூணில் சாய்ந்து அமர்ந்து பவித்ரா, காதல் கடிதம் எழுத ஆரம்பித்ததும் ஸ்வேதாவிற்கு வெறி ஏற்பட்டுவிட்டது.. எங்கே அவள் காதல் சொல்லி.. தினகரன் அதை ஏற்றுக்கொண்டு விடுவானோ என்று அவள் பயந்து போனாள்..

அப்படி மட்டும நடந்துவிட்டால் அவள் பவித்ராவைக் கொன்றே விடுவாள்..

அந்தக கடிதத்தை தினகரனின் கைகளில் அவள் சேர்த்து விடாமலிருக்க என்ன பண்ணுவது என்ற யோசனையுடன் அவள் தூண் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தபோது.. பவித்ரா கையெழுத்துப் போடாமல் கடிதத்தை முடித்து அவள் வயிற்றில் பாலை வார்த்தாள்..

'இந்த முட்டாள்.. இவள் பெயரை கடிதத்தில் எழுத வில்லை...'

பவித்ரா என்னவோ.. கடிதம் வேறு யார் கையிலாவது அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது என்ற பயத்துடன் தன் பெயரை கடிதத்தில் குறிப்பிடாமல் விட்டுவிட்டாள்...

ஆனால், பெயர் எழுதப்படாத அந்தக் கடிதத்தை வைத்து தான் விளையாட வேண்டிய விளையாட்டை ஸ்வேதா தீர்மானித்து விட்டாள்..

தினகரன் வீட்டுக்குள் போனவுடன் ஸ்வேதா வாசலிலேயே நின்றுகொண்டிருந்தாள்.. பிரபாகரன் வரும்போது வாசலிலேயே அவனை மடக்க வேண்டிய கட்டாயத்தில் அவள் இருந்தாள்..

அவன் வீட்டுக்குள் காலடி வைத்துவிட்டால்.. உறவினர் கூட்டமெல்லாம் அவனைச் சூழ்ந்துவிடும்.. என்பதை அவள் அறிவாள்.. அதன் பின்னால் அவனை ஸ்வேதா அணுகவே முடியாது..

அவள் எதிர்பார்த்தபடி பிரபாகரனின் கார் உள்ளே நுழைந்தது.. மற்றவர்கள் வருவதற்கு முன்னால் பிரபாகரனை பிடித்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் இருந்தவள்..

"பெரியத்தான்.." என்றபடி காருக்கு முன்னால் பாய்ந்தாள்..

கார் விலகிச் சென்று நின்றது.. பிரபாகரன் காரை விட்டு இறங்கும் போது..

"ஒரு நிமிஷம் பெரியத்தான்.." என்று அவன் வழியை மறித்தாள் ஸ்வேதா..

"த்சு.. உன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்க வில்லை.. அம்மாவின் வார்த்தைக்காக நான் பொறுத்துப் போகிறேன்.. வழியை விடு.." என்று முகம் சுளித்தான் பிரபாகரன்..

"என் முகத்தைப் பார்க்க உங்களுக்குப் பிடித்தால் எனக்கென்ன.. பிடிக்காவிட்டால் எனக்கென்ன.. ஆனால்.. மாலினியின் முகத்தை இன்றைக்கு நைட் பதினோரு மணிக்கு பார்ப்பதற்காக தினகரன் தோட்டத்துக்கு வரப் போகிறார்.. இதைக் கேட்டுவிட்டு எனக்கென்னன்னு

நீங்க போகப் போகறீங்களா..?" ஸ்வேதா எகத்தாளமான குரலில் கேட்டாள்..

சுற்றுமுற்றும் பார்த்த பிரபாகரன், சட்டென்று ஸ்வேதாவின் கழுத்தைப் பிடித்து நெரித்துவிட்டான்.. அவள் மூச்சு விட முடியாமல் திணறிய கடைசி நொடியில் அவளை விடுவித்தான்...

"ஓடிப்போய் விடு.. இனி உன் ஊருக்கு நீ கிளம்பும் வரைக்கும் என் கண்ணிலேயே படக்கூடாது.." என்று அடிக்குரலில் கர்ஜித்தான்..

வேக மூச்சுக்களை இழுத்துவிட்டு.. தன்னை சமாதானப்படுத்திக் கொண்ட ஸ்வேதா.. அலட்சியமாய் பிரபாகரனைப் பார்த்தாள்..

"என்னைக் கொன்றுவிட்டால்.. நான் சொன்னதில் உண்மை இல்லைன்னு ஆகிவிடுமா? பெண்ணிடம் உங்க வீரத்தைக் காட்ட வேண்டாம் அத்தான்.. இதை உங்க தம்பியிடம் காட்டுங்க.."

"ஏய்.. ச்சீ.. பெண்ணிடம்தான் வீரம் காட்டக் கூடாது.. நீயெல்லாம் பெண்ணில் சேர்த்தியில்லை.. பேய்.."

"அடேங்கப்பா.. நான் பெண்ணில் சேர்த்தியில்லை.. இன்றைக்கு தினகரனை பதினோரு மணிக்கு மேல் தோட்டத்துக்கு வரச்சொல்லி லவ் லெட்டர் கொடுத்திருக் கிறாளே, உங்க காதலி மாலினி.. அவ எதில் சேர்த்தி? பெண்ணிலா.. இல்லை பேயிலா?"

"வாய் வார்த்தைக்கு சொல்கிறேன்னு நினைக்காதே நிஜமாகவே உன்னைக் கொன்று இந்த மண்ணில் புதைத்து விடுவேன்..."

"தாராளமாய் அதைச் செய்யுங்க அத்தான்.. அதுக்கு முன்னால் நான் சொல்வது பொய்யின்னு நிரூபித்துவிட்டுச் செய்யுங்க.."

"உன் வேலையை எனக்குத் தெரியாதா.. தினகரன் கையிலிருந்த பூவை.. என் அம்மா கொடுத்ததாகச் சொல்லி மாலினியின் கைக்கு வர வைத்தவள்தானே நீ.."

"செய்தேன்தான்.. ஆனால்.. மாலினியின் கையில் ரோஜாப்பூவை பார்த்ததும்.. தினகரனின் முகத்தில் மத்தாப்பூ வந்ததே.. அதை நீங்க இல்லைன்னு சொல்லப் போறீங்களா..?"

பிரபாகரன் நிதானித்தான்.. இன்னமும் தினகரனின் விழிகளில் மாலினியைக் கண்டால் மின்னல் வெட்டுவதை அவன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. காயத்ரியின் திருமணம் முடியட்டும்.. மாலினியை மணக்கப் போகும் செய்தியை வெளிப்படையாக அறிவித்து விட்டால் தம்பி மாறிவிடுவான் என்ற எண்ணத்தில் அவன் அதைக் கண்டும் காணாதவன் போல் இருந்துவிட்டான்..

'இன்றைக்கு என்ன வினையை இவன் இழுத்து வைத்துத் தொலைத்திருக்கிறானோ..'

ஒரே தங்கையின் திருமண சமயத்தில் தேவையில்லாத குழப்பங்கள் எழுவதை நினைத்து மனதிற்குள் எரிச்சல் பட்டான் பிரபாகரன்..

"இப்போ நீ என்னதான் சொல்ல வருகிற..?"

"தினா அத்தான் சாயங்காலம் தோட்டத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தார்.. மாலினி அவரிடம் வந்து ஒரு கடிதத்தை கொடுத்துவிட்டு.. 'நைட் பதினோரு மணிக்கு மேல் தோட்டத்திற்கு வாங்க.. மேற்கொண்டு பேசலாம்' முன்னு சொல்லிவிட்டுப் போயிட்டா.. அதைத்தான் நான் உங்களிடம் சொன்னேன்.."

இதை பிரபாகரனால் நம்ப முடியவில்லை.. எதற்கும் இரவு பதினோரு மணிக்கு தோட்டத்திற்கு வந்து பார்த்து விட வேண்டும் என்று அவன் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்..

'மாலினி.. ஏதும் சிக்கலில் மாட்டியிருக்கிறாளோ..'

அவளிடம் விளக்கம் கேட்க செல்போனை எடுத்த வனை உறவினர் படை வளைத்துக் கொள்ள.. திருமணத் தைப் பற்றிய ஏற்பாடுகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தவன் அதை மறந்து போனான்..

ஸ்வேதாவிற்கு அவன் கட்டாயம் இரவு பதினோரு மணிக்கு தோட்டத்திற்கு வருவான் என்று தெரியும்..

அவள் நமட்டுச் சிரிப்புடன் அடுத்த குறியான பவித்ராவைத் தேடிப் போனாள்..

அப்போதுதான் மாலினி வந்து தன் கடிதத்தை சேர்ப்பித்துவிட்ட செய்தியை பவித்ராவிடம் சொல்லி விட்டுச் சென்றிருந்தாள்.. முகமெல்லாம் ரகசியக் கனவு பரவ.. மெய்மறந்து அமர்ந்திருந்தவளின் எதிரே போய் அமர்ந்தாள் ஸ்வேதா...

"என்ன பவித்ரா.. நீ கனவு கண்டது நிறைவேறப் போகுதுன்னு பொய்யான சந்தோஷத்தில் இருக்கிறாயா..?"

"என்ன கனவு.. என்ன சந்தோஷம்? நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன்.."

"என்னிடமே மறைக்க நினைக்கிறாயா? போடி பைத்தியக்காரி.. உன் கனவு மாளிகை.. வெறும் சீட்டுக்

கட்டு மாளிகை.. ஒரு சீட்டை உருவினாலும் போதும்.. மொத்தமும் சரிந்து கலைந்துவிடும்..."

"ஸ்வேதா.."

"அலறாதே.. நீ கோட்டைப் போட்டால்.. மாலினி ரோட்டைப் போட்டுவிட்டு வந்திருக்கிறா.. முட்டாள் போல உன் காதலனை அவளிடம் கோட்டை விட்டுவிட்டு இங்கே ரகசியக் கனவை கண்டுகொண்டிருக்கிறாய்.. உன்னை என்ன சொல்ல..? நீயும் நானும் சித்தப்பா.. பெரியப்பா மகள்கள்தானே.. ஏமாறும் குணம்.. நம் ரத்தத்தில் ஊறிப் போயிருக்கு போல.."

"நீயா ஏமாறுகிறவள்.. நீ ஏமாற்றுகிறவள் ஆச்சே.."

"கிழிச்சேன்.. என் சாமர்த்தியத்தை நீதான் மெச்சிக் கணும்.. நானும் வருஷக்கணக்கில் பிரபாகரனை சுற்றி வந்து பார்த்துவிட்டேன்.. அவன் மனம் திரும்பவில்லை. இவனைச் சுற்றியதற்குப் பதிலாக.. அரச மரத்தைச் சுற்றியிருந்தாலாவது எனக்கு விமோசனம் கிடைத் திருக்கும். நவக்கிரகங்களைச் சுற்றியிருந்தால் நல்ல வாழ்க்கையாவது கிடைச்சிருக்கும்.. இப்போ எல்லாமும் வேஸ்டா போச்சு.. எங்கிருந்தோ வந்த இந்த மாலினி.. என்னிடமிருந்து பிரபாகரனைப் பிடுங்கிக் கொண்டு போனாள்.. இப்போது உன்னிடமிருந்து தினகரனைப் பிடுங்கப் பார்க்கிறாள்.."

"இல்லை.. அப்படி நடக்காது.. அவள் எனக்காக நான் எழுதிய காதல் கடிதத்தை தினா அத்தானிடம் கொடுத்து விட்டு வந்தாள்.."

"அதை நீ எழுதிய கடிதம்னு சொல்லி அவள் கொடுக்கவில்லையே.. அவள் எழுதியதாகச் சொல்லித் தானே கொடுத்தாள்?"

இதைக் கேட்ட பவித்ராவின் முகம் பயங்கரமாக மாறியது.. அவளுக்கும் இது போன் சந்தேகங்கள் முதலிலேயே இருந்தன..

"நீ என்ன சொல்கிறாய்.. உனக்கு எப்படி இது தெரியும்..?"

"நான் தோட்டத்தில்தான் இருந்தேன்.. இவள் நேராக தினா அத்தானிடம் வரவும்.. என்ன பேசுகிறாள்னு ஒளிந்திருந்து பார்த்தேன்.."

"உன் புத்தி இப்படித்தானே இருக்கும்..?"

"என் புத்தி அப்படி இருந்ததால்தான் இன்றைக்கு உனக்கு உண்மை தெரிய வந்திருக்கு.."

"சொல்வதை சரியாகச் சொல்லு.."

"இவள் தினா அத்தானிடம் கடிதத்தைக் கொடுத்தாள்.. அவர் பல்லைக் காட்டிக்கிட்டு வாங்கிக் கிட்டு என்ன இதுன்னு கேட்டார்.. இவள் உடனே 'என் மனசில் இருக்கிறதை எழுதியிருக்கேன் படிச்சுப் பாருங்க அத்தான்'னு சொன்னாள்.."

"வெயிட்.. வெயிட்.. அவள் மனதிலிருப்பதை அவள் எழுதியதாகச் சொன்னாளா...?"

"அப்படித்தாண்டி சொன்னாள்.."

"என்னால் நம்பவே முடியவில்லையே.. அவளா அப்படிச் சொன்னாள்..? இந்த லவ் லெட்டர் ஐடியாவைக் கொடுத்ததே அவள்தானே.."

"நான்தான் ஏற்கெனவே அவளைப் பற்றி சொல்லி விட்டேன்.. அவள் ஒரு ஸாடிஸ்ட் பவித்ரா.. உன்னைத் தூண்டி விட்டுவிட்டு கடைசியில் பார் பவித்ரா.. 'உன் காதலனுக்கு உன் மூஞ்சியைப் பிடிக்கலையாம்.. என் மூஞ்சியைத்தான் பிடிக்கிறதாம்'னு வெற்றியை பறைசாற்ற நினைக்கிறாள் போல.. ஏண்டி.. உனக்கு காதல் தூதுவிட இவளை விட்டால் வேறு ஆளே கிடைக்கலியா.. இவள் தான் கிடைத்தாளா? யாராவது பொக்கிஷத்துக்கு காவல் காக்கிற வேலையை திருடன்கிட்டேயே கொடுப்பாங்களாடி..? என்கிட்ட கொடுத்திருந்தால் நான் போய் கொடுத்திருக்க மாட்டேனா..?"

"யார், நீதானே.. அவளாவது நான் எழுதிய கடிதத்தை அவள் எழுதியதாக மட்டும்தான் சொல்லியிருக்கிறா.. நீ அதோட

விடாமல் நான் வேறு யாரையோ காதலிக் கிறேன்னு என்மேல பழியைப் போட்டு என்னை அவர் நினைத்து விடாமலிருக்க என்னென்ன செய்யணுமோ அத்தனையையும் செய்து விட்டுல்ல வந்துவிடுவ..."

இவள் தன் குணத்தை சரியாக கணித்திருக்கிறாள் என்ற நினைவில் பல்லைக் கடித்தாள் ஸ்வேதா. இவளோடு மோதுவதற்கு இது நேரமல்ல என்பதை உணர்ந்தவளாக பவித்ரா என்னவோ தன்னைப் புகழ்ந்ததைப் போல மலர்ச்சியாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

"இப்படி அவளை நம்பித்தானே இந்த நிலையில் வந்து நிற்கிறாய்..? இப்பப் பாரு.. அவ அந்தக் கடிதத்தை தான் கொடுத்ததா தினகரன் கிட்ட சொல்லிட்டுப் போயிட்டா. எனக்கு என்னன்னா.. மாலினி ஆயிரம் தான் ஸாடிஸ்டா இருந்தாலும் புத்திசாலி.. அது எப்படி நீ எழுதிய கடிதத்தை தான் எழுதியதாகச் சொல்கிறா. நீதான் இப்படிக்கு பவித்ரான்னு கையெழுத்து போட்டிருப்பியே.. அந்தக் கையெழுத்து காட்டிக் கொடுத்துவிடாதா..?"

அறியாதவளைப் போல ஸ்வேதா வினவி வைக்க.. பவித்ராவின் முகம் வெளுத்தது.. அதை ஓரக்கண்ணால் கவனித்த ஸ்வேதா, மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்..

"இல்லையே ஸ்வேதா.."

"எது இல்லை.. உன் மனதில் தினகரனின் மேல் காதல் இல்லையா..?"

"அதுதான் மனது நிறைய இருக்கே.. அந்த லெட்டரில் நான் கையெழுத்து போடவில்லை.."

'இதுதான் எனக்குத் தெரியுமே..' ஒளிந்திருந்து பார்த்திருந்த ஸ்வேதா வெளியே பதற்றமாய் முகத்தை வைத்துக் கொண்டாள்..

"என்னடி சொல்கிற.. அப்போ தினகரன் அதை மாலினி கொடுத்த லெட்டர்ன்னுதான் நினைப்பான்.. நீ கொடுத்த கடிதத்தை அவனிடம் கொடுப்பதற்கு முன்னால் மாலினி பிரித்துப் படித்திருப்பாள்.. கையெழுத்து இல்லைன்னு

தெரிஞ்சதும் உன் வாழ்க்கையில் விளையாடிப் பார்த்துவிட்டாள்."

பவித்ராவின் முகம் பயங்கரமாய் மாறியது.. அவளது உடல் நடுங்கியது..

'விடமாட்டேன்..' அவள் மனதிற்குள் சொல்லி கொண்டாள்..

'மாலினி.. என் வாழ்க்கையில் விளையாட நான் விட மாட்டேன்..'

96

**சூழ்நிலைகள் தினம் மாறி.. சுட்டெரிக்கும் வாழ்க்கையிலே..**

**உன் நினைவே அதைத் தாங்கும் சக்தியினை கொடுப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

'எது நடக்கிறதோ.. அது நன்றாகவே நடக்கிறது என்று திருப்தியுடன் நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா..'

எந்தக் காரியத்தை முடிக்கும் பொருட்டு..

'வெள்ளையனே வெளியேறு..' என்ற ரீதியில்..

'ஸ்வேதாவை கூப்பிட்டுக் கொண்டு போய்விடு..' என்று தீர்மானமாக பிரபாகரன் சொல்லிவிட்ட நிலையிலும் அந்த அவமானத்தை பொருட்படுத்தாமல் அறுபது நாள்கள் பிடிவாதமாக அந்த வீட்டில் தங்கியிருந்தாளோ.. அந்தக் காரியம் அன்று நிறைவேறிவிட்டது..

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..' என்பது வழக்கு மொழி...

'ஒரே இரவில் இரண்டு பிரிவு..' என்பது ஸ்வேதாவின் புதுமொழி..

அந்த ஓர் இரவில் அவள் நினைத்ததை சாதித்து முடித்துவிட்டாள்.. மாலினியை பிரபாகரனிடமிருந்து பிரிக்க பவித்ராவை பிரபாகரனிடம் பேச வைத்துவிட்டாள்..

பவித்ராவிடமிருந்து தினகரனை பிரிக்க.. தினகரனின் வாய்மொழியாலேயே மாலினிதான் அவனை வரச்சொன்னதாக பிரபாகரனிடம் சொல்ல வைத்து.. அதை பவித்ராவை கேட்கவும் வைத்துவிட்டாள்..

காதல் கொண்ட பெண்மனம் எதற்கும் துணியும்..

அந்த துணிச்சலை பவித்ராவிற்கு ஸ்வேதா உண்டாக்கி விட்டாள்.. தன்னை விட்டுத் தன் காதலன் இன்னொரு பெண்ணைப் பார்க்கிறான் என்பதையே பொறுத்துக் கொள்ள முடியாத பெண்மனத்திடம்.. அவள் உன்னை நம்ப வைத்து உன் காதலனை தட்டிப் பறித்துக் கொள்ளப் பார்க்கிறாள் என்பதையும் சேர்த்துச் சொன்னால் என்ன ஆகும்..?

பவித்ரா தன் வாழ்வையும் பாழடித்து மாலினியின் வாழ்வையும் பாழடிக்கத் துணிந்துவிட்டாள்...

அவள் மட்டும் பொறுமையாக அந்த ஓர் இரவை கடந்திருந்தால் இரவு முழுவதும் மாலினிக்காக காத்திருந்த தினகரன் மறுநாள் மாலினியிடம் போய்.. 'ஏன் நீ வர வில்லை?' என்று கேட்டிருப்பான்..

'அடேய் முட்டாளே.. உன்னை வரச் சொன்னது நானில்லை.. பவித்ராதான் வரச் சொன்னாள்..' என்று மாலினியும் சொல்லியிருப்பாள்.. அவளது காதல் கைகூடியிருக்கும்..

ஆனால், மாலினி துரோகம் பண்ணிவிட்டாள் என்று நினைத்துவிட்ட பவித்ரா பொறுமை காக்கவில்லை.. அவள் எதையாவது செய்யத் துடித்தாள்.. அதற்கு ஸ்வேதாவும் வழி சொல்லிக் கொடுத்தாள்..

"நீ பதினோரு மணிக்கு முன்னாலேயே தோட்டத் துக்குப் போய் செடிமறைவில் நின்று கொள்.."

"அதுமட்டும் என்னால் முடியாது ஸ்வேதா.. அத்தான்.. என் காதலை ஏற்றுக்கொண்டிருந்தால் அவர் முன்னால் தைரியமாக போய் நிற்பேன்.. அவர் மாலினியை மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் போது வலியபோய் நான் நிற்பதா..?"

"உன்னை யாருடி.. தினகரனிடம் நேராகப் போய் பேசச் சொன்னது..?"

"வேறு என்னதான் நான் செய்ய?"

"எதுவும் செய்ய வேண்டாமா..? அந்த மாலினியை எதுவுமே செய்ய வேண்டாமா..?"

பவித்ராவின் கண் கலங்கியது.. முகம் சிவந்தது..

"ஏதாவது செய்ய வேண்டும்.. ஆனால், என்ன செய்வதுன்னுதான் எனக்குத் தெரியலையே.."

"நான் சொல்வதைச் செய்..."

"நீ நல்லதையே சொல்ல மாட்டாயே.."

"மாலினிக்குத்தானே அது கெடுதலாக முடியும். அவளைப் பற்றி இனி உனக்கென்ன கவலை.."

"நீ சொல்வதும் சரிதான்.. என்னன்னு சொல்லு.."

"நீ முதலில் போய் ஒளிந்து கொள்.. தினகரன் வருவான்.. காத்திருப்பான். ஆனால், மாலினி வரமாட்டாள்.."

"என்னிடம் மாட்டிக் கொள்வாள்னு பயந்துவிடு வாளா..?"

"அவள் உன்னிடமும் என்னிடமும் பயப்பட மாட்டாள்.. அவள் பயப்படுகிற ஆளே வேறு.. அவர் யாருன்னு சொல்லு.."

"பெரியத்தானா..?"

"ஆமாம்.. அவர் தினகரனிடம் பேச வருவார்.. அவர் இருக்கும் போது அவள் எப்படி வருவாள்..?"

"பெரியத்தான் எப்படி கரெக்டா பதினோரு மணிக்கு அங்கே வருவார்..?"

"என்னை என்னன்னு நினைத்தே?"

"என் நினைப்பைப் பற்றி நான் சொன்னேன்னா நீ தாங்க மாட்ட.."

"அப்போ சொல்லாதே.. ஆயிரம்தான் இருந்தாலும் நீ என் சித்தப்பாவின் மகள்.."

"அந்தக் கொடுமையைத் திருப்பித் திருப்பி நினைவு படுத்தாதே.. விஷயத்துக்கு வா.."

"என் காதில் மாலினி சொன்ன வார்த்தைகள் விழுந்ததுமே அதை பெரியத்தானிடம் சொல்லிவிட்டேன்.."

"பற்ற வைத்துவிட்டாய்னு சொல்லு.."

"அதைப் பற்றி உனக்கென்ன வந்தது..? நீ செய்யாததை நான் செய்திருக்கேன்னு நினைத்து சந்தோஷப்படு.."

"என் நிலைமைக்கு எனக்கு சந்தோஷம் வருமா..?"

"வராவிட்டால் விட்டுவிடு.. பிரபாகரன், மாலினியை நம்புகிறார்.. அதனால் தினகரனிடம் விளக்கம் கேட்க கட்டாயம் தோட்டத்துக்கு வருவார். பெரியத்தானிடம் நல்லவள் போல் வேஷம் போடும் மாலினி அங்கே கட்டாயம் வரமாட்டாள்.. ஒரு வகையில் இதுவும் நல்லதுக்குத்தான்.."

"யாருக்கு நல்லது..? உனக்கா..?"

"நம் இரண்டு பேருக்கும்தான்.."

"உன்னோடு என்னைக் கூட்டுச் சேர்க்காதே.."

"சேராவிட்டால் போ.. ஆனால்.. தினகரனின் வாய் மொழியால் உண்மையை நீ தெரிந்துகொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.. ஏன் நான் இதைச் சொல்கிறேன்னா.. இன்னும் உன் மனதில் ஒரு மூலையில் மாலினி இதைச் செய்திருக்க மாட்டாள் என்ற குருட்டு நம்பிக்கை ஒட்டிக் கொண்டிருக்கிறது. நீ காதாலேயே அதைக் கேட்டுவிட்டால்தான் நான் சொல்வது உண்மைன்னு நம்புவாய்.."

எப்படி தன் மனதில் உள்ளதை இவள் பிட்டுப் பிட்டு வைக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் பவித்ரா.. மாலினியின் மீது அவள் மனதில் வன்மம் எழுந்தபோதும்.. இன்னும்கூட அவள் இதைச் செய்திருப்பாள் என்று பவித்ராவால் நம்ப முடியவில்லைதான்..

"நீ உண்மையை உணர்ந்து கொண்டதும் என்ன செய்யணும்னு நீயே முடிவு பண்ணிக்க.."

"என்ன ஆச்சு ஸ்வேதா..? இத்தனையும் சொன்னவள் கடைசி நிமிஷத்தில் கழண்டு கொள்ளப் பார்க்கிறயே.. என்ன விஷயம்..?"

"நான் சொல்லித்தான் நீ எதையும் செய்யணுமா என்ன..? நீயே புத்திசாலி.."

"அது உனக்கு இப்போதுதான் தெரிந்ததா?"

"மீன்குஞ்சுக்கு நீந்தச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.."

"நான் மனுஷப்பிறவி.. மீன்குஞ்சு உவமானத்தை விட்டுவிட்டு விஷயத்துக்கு வா.."

"உனக்கே தெரியும்.. தினகரனையும் மாலினியையும் கண்டிக்க பிரபாகரன் ஒருவரால்தான் முடியும்.."

"ஆமாம்.. அதுக்கென்ன?"

"உன் கண் முன்னால் லட்டு போல பெரியத்தான் தனியே அகப்பட வோகிறார்.. அவரிடம் உன் காதல் தோற்றுப்போன கதையைச் சொல்லி அழுது புலம்பணும்னு நான் சொல்லித்தானா உனக்குத் தெரியணும்..?"

"தினா அத்தானும் கூட இருப்பாரே.."

"உன் தினா அத்தான் பெண்கள் இருக்கும் இடத்தில் தான் நிற்பான்.. அவனுடைய பெரியண்ணனின் பக்கத்தில் ஒரு வினாடிகூட நிற்க மாட்டான்.. ஓடிவிடுவான்.. மற்ற நாள்களிலேயே இப்படின்னா.. நாளைக்கு மறுநாள் தங்கச்சி கல்யாணத்தை வைத்துக்கிட்டு.. மாலினி வரச்

சொன்னாள்னு தோட்டத்தில் நிற்கிறவன் எப்படி அங்கேயே நிற்பான்..? அண்ணன்காரனுக்கு விளக்கத்தை சொல்லி விட்டு நடையைக் கட்டிவிடுவான்.."

"ஒரு வேளை.. தினா அத்தான்.. பெரியத்தானிடம் உண்மையை மறைத்து விட்டாருன்னா?"

"ஊஹூம்.. அது என்னவோ தெரியவில்லை.. இந்த அண்ணன் தம்பிகள் மூணு பேரும் மகா ஒற்றுமை பவித்ரா.. என்ன அயோக்கியத்தனம் செய்தாலும் அண்ணன்காரனிடம் தினகரன் அதை மறைத்து பொய் சொல்லமாட்டான்.."

"நல்ல குடும்பத்துக்கு அதுதான் அடையாளம்..."

"அந்த அடையாளத்தை அவங்களே வைத்துக் கட்டும்.. நமக்கு அது வேணாம்.. நீ ஆகிற வேலையைக் கவனி.. பேசிப் பேசி மணி பதினொண்ணே ஆகப்போகுது.. நீ ஓடிப்போய் ஒளிந்து கொள்ளும் வழியைப் பார்.. ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்.."

"என்ன?"

"இந்த சான்ஸை நீ விட்டுவிட்டா.. நீ காலத்துக்கும் பெரியத்தானிடம் இதைப் பற்றி பேச முடியாது.."

"உண்மைதான்.. கல்யாணம் முடிந்த கையோடு என்னை ஊருக்கு கூப்பிட்டுக்கிட்டு போயிடுவாங்க.."

"உன்னை அந்தப் பக்கம் அனுப்பிவிட்டு.. இந்தப் பக்கம் தினகரன், மாலினியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் பண்ணிக் கொள்வான்.."

"அப்படி நடந்துவிடுமா என்ன?"

"நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.. ஏன்னா.. தினகரன் படுஸ்பீடான ஆள்.. மாலினி காதல் சொன்ன போதே கையைப் பிடிக்காவிட்டால் அண்ணன்காரன் முந்திக்குவான்னு மனதில் பயம் இருக்கும்.."

"பெரியத்தான் பாவமில்லையா..?"

"பாவம்தான்.. அவர் பாவத்தை யார் பார்ப்பா.. நீ மனது வைத்து பார்த்தால்தான் உண்டு. நீ பெரியத்தானிடம் மாலினியின் துரோகத்தைப் பற்றிச் சொல்லுவதால் உன் காதலை மட்டும் நீ காப்பாற்றிக் கொள்ளவில்லை.. பெரிய அத்தானின் காதலையும் சேர்த்துக் காப்பாற்றப் போகிறாய். உனக்கே தெரியும்.. ஏற்கெனவே பெரியத்தானுக்கு முன்னால் கருணா அத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டார்.. இப்போது காயத்ரிக்கு கல்யாணம் நடக்கப் போகுது.. இதில் தினாவும் மாலினியை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டான்னு வை.. காலத்துக்கும் பெரியத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டார்.. அவர் இரும்பு மனிதர்.. ஒன்றை நினைத்துவிட்டால் அதிலேயே நிலைத்து நிற்கும் ரகம்.. தினகரனைப் போல அலைகிற ரகமில்லை.."

"நீயும் கூட வாயேன் ஸ்வேதா.."

"ஊஹூம்.. நான் சொல்லிக் கொடுத்துதான் நீ பேசறேன்னு என்மேல் வீண்பழி வந்துவிடும்.. நான் வரலைசாமி.. நான் இத்தனை சொன்னதே அதிகம்.. உனக்கா புத்தியிருந்து பிழைத்துக்கணும்னா பிழைத்துக்க.. எனக்கெதுக்கு ஊர் வம்பு..?"

வம்புக்கு அஞ்சிய அடக்கஒடுக்கமான ஸ்வேதா.. நினைத்ததை நடத்தி முடித்துவிட்ட களைப்பில் நீண்ட காலத்திற்குப் பின்னால் நிம்மதியாக தூங்கப் போனாள்..

சாவி கொடுக்கப்பட்ட பொம்மையாக பவித்ரா.. கொந்தளிக்கும் மனத்தோடு தோட்டத்தின் செடி மறைவில் ஒளிந்து கொள்ளப் போனாள்..

ஓர் இரவு..! புகழ்பெற்ற அறிஞர் அண்ணாத்துரைக்கு புகழ் சேர்த்த கதை.. ஓர் இரவில் அவர் எழுதி முடித்த கதை.. அந்த ஓர் இரவு தந்த திருப்பத்தைப் போல எண்ணற்ற திருப்பங்களைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருந்த இந்த ஓர் இரவின் பதினொரு மணி.. நெருங்கிக் கொண்டிருந்தது..

செடி மறைவில் மூச்சடக்கி காத்திருந்தாள் பவித்ரா. வீட்டுக்குள் நடமாட்டம் குறைந்திருப்பது அவள் கண்ணில் பட்டது.. சற்று நேரத்தில் தினகரன் வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டான்.. சுற்றுமுற்றும் பார்த்தபடி தோட்டத்திற்கு வந்தான்.. பவித்ராவிற்கு வியர்த்துவிட்டது..

மொட்டை மாடியில் படுத்திருந்தவர்களை விசாரிப்பது போல இருளில் மறைந்து நின்று தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பிரபாகரனின் புருவம் ஏறியது.. ஸ்வேதா சொன்னதைப் போல தினகரன் தோட்டத்திற்குப் போகிறானே..

என்ன செய்யலாம் என்று அவன் யோசித்தான்.. மாலினி ஒருவேளை தினகரனைப் பார்க்க தோட்டத்- திற்குப் போய்விடுவாளோ..

பிரபாகரன் நெற்றிப்பொட்டைத் தட்டிக் கொண்டான்.. அவனுக்கு மாலினியின் மீது துளிக்கூட சந்தேகமில்லை.. அவன் மாலினியுடன் வாழாமல் வாழ்ந்து பார்த்து விட்டவன்.. அவனிடம் தன் உடலையும் மனதையும் முழுமனதாய் ஒப்படைத்தவள் மாலினி..

அவள் போய் தினகரனை தோட்டத்துக்கு வரச் சொல்லியிருப்பாளா? ஆனால், தினகரன் தோட்டத்துக்குப் போகிறானே..

உண்மையை அறிய வேண்டுமானால் தினகரனுடன் அவன் உடனடியாகப் பேசியாக வேண்டும்..

பிரபாகரன் வருவதை செடிமறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவிற்கு ஸ்வேதாவின் புத்தி கூர்மையை நினைத்து வியப்பேற்பட்டது..

குட்டி போட்ட பூனை போல நடை பழகிக் கொண்டிருந்த தினகரன், பிரபாகரனைக் கண்டதும் நின்றுவிட்டான்..

"என்ன தினா.. இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிற..?"

"ஜஸ்ட் வாக்கிங்.. வேற ஒண்ணுமில்லை அண்ணா.."

"நடுராத்திரியில் வாக்கிங்கா..? என்கிட்ட பொய்கூட நீ சொல்லுவியா..?"

"அண்ணா.."

"எனக்கு எல்லாம் தெரியும் தினா, நீ யாருக்காக காத்திருக்கிறாய்..?"

பிரபாகரனின் வார்த்தைகள் கண்டிப்புடன் வெளியே வரவும், தினகரன் கைபிசைந்தான்.. அண்ணனுக்கு தெரிந்து விட்டது என்ற உணர்வுடன்...

"மாலினிக்காக காத்திருக்கிறேன் அண்ணா.." என்று சொல்லிவிட்டான்..

ஒரே நேரத்தில் இடி பிரபாகரன்.. பவித்ரா.. இருவரின் தலையிலும் இறங்கியது.. பவித்ரா கண்மூடி அந்த வேதனையை ஜீரணித்துக் கொள்ள முயன்றாள்..

'கடைசியில் ஸ்வேதா சொன்னது உண்மையாகி விட்டதே.. மாலினி எனக்குத் தூரோகம் செய்துவிட்டாளே...' அவளுக்கு மனம் தாங்கவில்லை..

பிரபாகரனின் மனநிலையே வேறு.. அவன் தம்பிகளுக்கும் தங்கைக்கும் அண்ணன் ஸ்தானத்தில் இல்லாமல் ஒரு தகப்பனின் ஸ்தானத்தில் இருப்பவன்..

அவனுக்கு மனைவியாகப் போகும் மாலினி.. தினகரனுக்கு அண்ணியாகப் போகிறவள் இல்லையா? அண்ணியென்றால் தினகரன் அவளை தாய் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க வேண்டியவன் இல்லையா..?

அவன் இப்படி அறியாமல் பேசுகிறானே என்பது தான் பிரபாகரனுக்கு..

"உளறாதே தினா.. உனக்கு என்னவாயிற்று? மாலினி இந்த நேரத்தில் எதற்காக உன்னைப் பார்க்க வரவேண்டும்..?"

"அதை மாலினியிடம்தான் கேட்கணும் அண்ணா.."

"உன்கிட்ட கேட்பதற்கு அவள் ஏன் பதில் சொல்லணும்..? எனக்குப் புரியலை தினா.."

"இந்தக் கடிதத்தை படித்துப் பாருங்கள் புரியும். இந்தக் கடிதத்தை என்கிட்ட கொடுத்துட்டு மாலினி வேகமா போயாச்சு.. நான் கடிதத்தில் சொன்னபடி வந்து மாலினிக்காக காத்திருக்கிறேன்.."

தினகரன் கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்த பிரபாகரனுக்கு அழுவதா.. இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லை..

97

**உன் சின்னஞ்சிறு பார்வையிலே..**

**சிறகடிக்கும் என் மனதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்தக் கடிதத்தை பார்த்த முதல் பார்வையிலேயே.. அதிலிருந்த கையெழுத்து மாலினியின் கையெழுத்தில்லை என்பதை புரிந்துகொண்டான் பிரபாகரன்.. ஆனால், இதை எப்படி தினகரனுக்கு சொல்வது என்றுதான் பிரபாகரனுக்கு புரியவில்லை..

அவன் அதைச் சொல்வதாக இருந்தால்.. அந்த அளவுக்கு மாலினியை அவன் அறிந்து வைத்திருப்-பதையும் சொல்லியாக வேண்டும்.. மாலினி தன்னைக் காதலிக்கிறாள் என்று நம்பிக் கொண்டு நடு இரவில் தோட்டத்தில் வந்து நிற்பவனிடம் இதை எப்படிச் சொல்வது?

அதனால் வேறு வழியில் அதை எழுதியது மாலினியல்ல என்பதை அவனுக்கு புரியவைக்க முயற்சி செய்தான் பிரபாகரன்..

"தினா.. இதை எழுதியது மாலினிதான்னு எப்படி நிச்சயமாய் நீ சொல்கிற.. இதை வேறு யாராவது எழுதி யிருக்கலாமில்லையா..?"

"இல்லை அண்ணா.. இதை மாலினியே நேரில் வந்து என்னிடம் கொடுத்தாள்.. வேறு ஒருத்தர் எழுதியிருந்தால் இன்னார் எழுதியிருக்காங்க.. என்னிடம் கொடுத்துவிட்டாங்கன்னு மாலினி சொல்லியிருக் கலாமே.. அப்படிச் சொல்ல வில்லையே.. படித்துப் பாருங்க.. புரியும்னு சொல்லிவிட்டு வேகமாய் போயாச்சே.."

"இதில் மாலினியோட கையெழுத்தில்லையே.."

"வேறொருத்தங்க கையெழுத்தும் இல்லையே.."

"எது எப்படியாக இருந்தாலும்.. நீ மாலினியைச் சந்திக்க இந்த நேரத்துக்கு தோட்டத்துக்கு வரலாமா? வீடு பூராவும் நம்ம சொந்தபந்தம் நிறைஞ்சிருக்காங்க.. நம்ம ஒரே தங்கைக்கு நாளை மறுநாள் விடிஞ்சா கல்யாணம் யாராவது நீ மாலினியோடு இந்த ராத்திரி வேளையில் தோட்டத்தில் நின்று பேசிக் கொண்டிருப்பதை பார்த்தால் என்ன ஆகும் தெரியுமா.. நம்ம குடும்பத்துக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. நம்ம சம்பந்தி வீட்டுக்கு இது தெரிஞ்சா கல்யாணம் நடப்பதே கேள்விக்குறியாகி விடாதா?"

வேறு வழியில்லாமல் பலவற்றையும் சொல்லி தம்பியை பயமுறுத்த ஆரம்பித்தான் பிரபாகரன்..

"தப்புத்தான் அண்ணா.. மன்னிச்சுருங்க.. நானும் மாலினியுடன் அதிக நேரம் நின்று பேச நினைக்கவில்லை.. என் காதலை ஏற்றுக்கொண்டால்.. ராத்திரி பதினோரு மணிக்கு தோட்டத்துக்கு வாங்கன்னு எழுதியிருக்கு.. அதனால்.. காதலை நான் ஏற்றுக்கிட்டேன் என்று காட்டவே தோட்டத்திற்கு வந்தேன். மாலினி வந்தவுடனே இதைச் சொல்லிவிட்டு உடனே போயிடுவேன்.."

இதைச் சொன்னது தினகரனாக இல்லாமல் வேறு ஒருவனாக இருந்திருந்தால் அந்த இடத்திலேயே அவனை கொன்று புதைத்திருப்பான் பிரபாகரன்..

ஆனால், சொன்னவன் உடன்பிறந்தானாகிப் போய் விட்டதால் பல்லைக் கடித்துக் கொண்டு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவன்..

"மாலினி வரமாட்டாள் தினா.."

"உங்களுக்கெப்படித் தெரியும்.."

"இங்கே வரத்தான் படியிறங்கிக் கொண்டிருந்தாள் போல.. நான்தான் இந்த நைட் நேரத்தில் தோட்டத்துப் பக்கம் என்ன வேலைன்னு கேட்டேன்.. திரும்பிப் போயிட்டாள்.."

"ஏன் அண்ணா அப்படிச் சொன்னீங்க..?"

"இந்தக் கதையெல்லாம் எனக்கெப்படித் தெரியும்.? சரி.. சரி.. எல்லாத்தையும் விடிந்தவுடன் பேசிக்கலாம் போய் படு.."

"இல்லைன்னா.. மாலினி உங்களுக்குப் பயந்து திரும்பிப் போயிருந்தாலும்.. நீங்க போனதை கன்ஃபர்ம் பண்ணிட்டு திரும்பவும் என்னைப் பார்க்க வரலாமில் லையா..? அதனால் நான் இருந்து பார்த்துவிட்டுப் போகிறேன்.. நீங்க போங்க.."

"ஏண்டா.. நான் இவ்வளவு தூரத்துக்கு சொல்கிறேன்.. அது உன் மரமண்டையில் ஏறலையா.. ஏண்டா இப்படி படுத்தறே.."

முதன்முதலாக தமையனை எதிர்த்துப் பேசினான் தம்பி.. முதன்முதலாக தம்பியை கடிந்து கொண்டான் தமையன்..

இதுவரை இதுபோன்ற நிகழ்வு அந்தக் குடும்பத்தில் நடந்ததில்லை..

"அண்ணா.. நான் உங்க தம்பி.. உங்களுக்கே தெரியும்.. நம்ம குடும்பத்தில் நாம யாரும் வாக்கு தவற மாட்டோம் என்பது.."

"இதில் வாக்கு தவற என்னடா இருக்கு..?"

"என்ன அண்ணா இப்படிச் சொல்லிட்டீங்க.. மாலினி என்மேல் நம்பிக்கையாக இந்தக் கடிதத்தை எழுதியிருக்கு அதன் கேள்விக்கு நான் பதில் சொல்லியாகணுமா வேணாமா.."

மாலினியிடம் பேசாமல் தினகரன் அந்த இடத்தை விட்டு நகரமாட்டான் என்பது புரிந்துபோக.. பிரபாகரன் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான்..

"நீ மாலினியிடம் செல்போனில் உன் பதிலைச் சொல்லு..."

"எனக்கு மாலினியின் செல் நம்பர் தெரியாதே.."

இதைக் கேட்டதும் பிரபாகரனின் மனதில் சாரல் அடித்தது.. அவனுடைய காதலி அவனிடம் மட்டும் தான் மணிக்கணக்காக பேசுவாள்.. மற்றவர்களுக்கு அவளுடைய செல் நம்பரைக்கூட கொடுக்க மாட்டாள்..

இப்படிப்பட்டவள் எதற்காக இப்படியொரு காதல் கடிதத்தை தினகரனிடம் கொண்டு வந்து கொடுத்தாள் என்பதுதான் பிரபாகரனுக்குப் புரியவில்லை..

அவன் தன் செல்போனை எடுத்தான்.. மாலினியின் நம்பர்களை அழுத்தினான்.. மறுமுனையில் மாலினியின் குரல் ஆவலுடன் ஒலித்தது..

"பிரபா.. நீங்களா.. தேங்க்ஸ் டு காட்.. இன்னும் எத்தனை நாளைக்கு ஒரே வீட்டில் இருந்துக்கிட்டு உங்களைப் பார்க்கவோ பேசவோ முடியாம இருக்கணும்னு நான் தவிச்சுக்கிட்டு இருக்கேன் தெரியுமா.."

பிரபாகரனுக்கு மனம் நிறைந்தது.. அவனுடைய காதலி.. அவனின் நினைவாகவே இருக்கிறாள்.. இங்கே அவனுடைய தம்பி அவள் இந்த ராத்திரி நேரத்தில் தோட்டத்திற்கு வருவாள் என்று நம்பிக் கொண்டு காத்திருக்கிறான்..

என்ன நடந்தது என்று மாலினியிடம் தினகரனின் எதிரிலேயே கேட்க முடியாத பிரபாகரன்.. அறைக்குப் போனபின் அவளிடம் அதைக் கேட்டுக் கொள்ளலாம் என்ற நினைவுடன்..

"ஸாரி ஃபார் தி டிஸ்டர்ப்பென்ஸ் மாலினி.. இங்கே தினகரன் உனக்காக தோட்டத்தில் காத்திருக்கிறான்.." என்று சொந்தமில்லாத குரலுடன் சொன்னான்..

மறுமுனையில் ஒரு வினாடி நிசப்தம் நிலவியது..

"எனக்காக காத்திருக்கிறாரா.. எதற்கு?"

"அதை நீதான் அவனிடம் கேட்க வேண்டும். ஒன்செகண்ட் மாலினி.. தினா.. மாலினி லைனில் இருக்கிறாள் பேசு.."

தினகரன் ஆவலுடன் போனை வாங்கிக் கொண்டான்..

"ஹலோ.. மாலினி.." என்றான்..

மாலினிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. இதை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.. பவித்ராவின் காதலை அவளுடைய அனுமதி இல்லாமல் மற்றவர்களிடம் வெளிப்படுத்துவது நாகரிகம் இல்லை என்று மாலினி நினைத்தாள்.. அது பவித்ராவைக் காட்டிக் கொடுத்ததைப் போலாகும் என்பது அவளது எண்ணம்..

பவித்ரா, மாலினியிடம் தன் கடிதத்தை தினகரனிடம் கொடுத்துவிடும்படி தான் வேண்டிக் கொண்டாள்.. காதலை எடுத்துச் சொல்லச் சொல்லி வேண்டிக் கொள்ளவில்லை. அது மாலினியின் மனதில் பதிந்திருந்தது..

இப்போது இப்படி ஒரு பிரச்னை கிளம்பியிருக்கிறது.. தினகரன், மாலினிக்காக தோட்டத்தில் காத்திருப்பதாக பிரபாகரன் கூறுகிறான்..

இது எப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை..?

'இந்த பவித்ரா இன்னும் தோட்டத்துக்குப் போகவில்லையா..?' என்று எரிச்சல்பட்டவள்..

"சொல்லுங்க தினகரன்.. ஏன் எனக்காக காத்திருக்கிறேன்னு உங்க அண்ணனிடம் சொன்னீங்க.." என்றாள்..

தினகரன் நிதானித்தான்.. தங்களது காதலை பிரபாகரனிடம் ஏன் தெரியப்படுத்தினீங்க என்று மாலினி கேட்பதாக அவன் பொருள் கொண்டு விட்டான்..

"என்ன செய்வது மாலினி.. எனக்கு அண்ணனிட மிருந்து எதையும் மறைத்துப் பேசி வழக்கமில்லையே.." என்று சொல்லிவைத்தான்..

மறுமுனையில் கேட்டுக்கொண்டிருந்த மாலினிக்குத் தூக்கிவாரிப் போட்டது. தினகரன் பேசுவதை பிரபாகரன் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்ற நினைவே அவளை கொன்று தின்றது..

பவித்ராவின் காதலுக்கு உதவி செய்யப் போய்.. அவளுடைய காதல் சிக்கலில் மாட்டிக் கொள்வதா..

"நான் என்ன கேட்கிறேன்.. நீங்க என்ன பதில் சொல்கிறீங்க.." என்று கோபத்துடன் வெடுவெடுத்தாள் மாலினி..

"ஐ ஆம் ஸாரி மாலினி.. நீ அந்தக் கடிதத்தில் எழுதி யிருந்தபடி.. நான் தோட்டத்துக்கு வந்துவிட்டேன்.. ஆனால்.. அண்ணனைப் பார்த்ததும் நீ வராமல் திரும்பிப் போய்விட்டாய்.. நான் உன் காதலை ஏற்றுக்கொண்டதை உனக்குத் தெரியப்படுத்த வேண்டாமா..? அதற்குத்தான் இந்த போன்.. ஸாரி எகெய்ன்.. என்னிடம் உன் செல் நம்பர் இல்லாததால் அண்ணனே போன் போட்டுக் கொடுத்தார்.."

தினகரன் பேசிக் கொண்டே போக.. கொஞ்சநஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த தூக்கக் கலக்கமும் பறந்து போய்விட.. மனக் கலக்கத்துடன் அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் மாலினி..

'போச்சு.. சும்மாவே பிரபாகரன் சாமியாடுவான்.. இவன் வேறு இப்படி உடுக்கையடித்து வைக்கிறான்.. இனி என் காதல் என்ன கதியாகுமோ...'

"தினகரன்.. உங்களுக்குப் புண்ணியமாகப் போகும். அந்த லெட்டரில் யார் கையெழுத்து இருக்குன்னு பார்த்து விட்டுப் பேசுங்க..."

"நீதான் லெட்டரில் கையெழுத்தே போட வில்லையே கண்ணம்மா.."

'ஊஹூம்..' இவனிடம் பேசினால் வேலைக்கே ஆகாது.. பைத்தியம் பிடித்துவிடும் நிலைக்கு ஆனானாள் மாலினி..

"போனை உங்க அண்ணனிடம் கொடுங்க.."

"அவரிடம் பயம் வேண்டாம் மாலினி.. நானிருக்கிறேன் உனக்கு.. அண்ணனிடம் நம் காதலைப் பற்றி நான் பேசிக் கொள்கிறேன்.."

'நீ முதலில் பேசிப் பேசியே என்னைக் கொல்லாதேடா சாமி..' மாலினி தினகரனை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்..

"போனை உங்க அண்ணனிடம் கொடுக்கப் போறீங்களா இல்லையா.."

"எதுக்கும்மா இவ்வளவு கோபம்? இனி இதுபோல் நடக்காது. நீயும்தான் உன் செல் நம்பரை என்னிடம் கொடுத்திருக்க வேண்டாமா... கொடுத்திருந்தால் இப்படி நடக்குமா.. தோட்டத்துக்கு வரச் சொல்வதை விட்டுவிட்டு செல்போனில் பதில் சொல்லுங்கன்னு சொல்லியிருக்கலாமே.. உனக்கு ஏன் இந்த ஐடியா தோன்றவில்லை..?"

'இதை உன்னையெல்லாம் ஒரு மனிதன்னு நினைத்து உருகி உருகி காதலிக்கும் பவித்ராவிடம் போய் கேளு..' தலையில் கை வைத்தாள் மாலினி..

"தினகரன்.. கொஞ்சம் கருணை காட்டுங்க.. ப்ளீஸ்.."

"நான் காதலையே காட்டுகிறேன் கண்ணம்மா.."

'ஐயோ.. சாமி.. தாங்கலையே..' மாலினி அழுது விட்டாள்..

"ஏன் அழுகிற கண்ணம்மா.." தினகரன் பதறினானே யொழிய போனை பிரபாகரனிடம் கொடுக்கவில்லை..

பிரபாகரனின் புருவங்கள் உயர்ந்தன.. அவன் ஏறக்குறைய போனை தினகரனிடமிருந்து பறித்தான்..

"என்ன மாலினி..?" என்றான்..

"பிரபா.. அந்தக் கடிதத்தை நான் எழுதவில்லை பிரபா.."

'அதுதான் எனக்குத் தெரியுமே..'

"வேறு ஒருத்தர் எழுதிக் கொடுத்தாங்க.."

'அதுதான் யார்..?'

"அவங்க தினகரனை உயிருக்குயிராய் காதலிக் கிறாங்க.."

'அந்த உயிருக்குயிரான காதலி.. நேரே வந்து தினாவிடம் பேச மாட்டாளாமா.. காதல் தூதுக்கு நீதான் அகப்பட்டாயா..'

"என்மேல் தப்பில்லை பிரபா.."

'உன்மேல் தப்புன்னு நான் சொன்னேனாடி..?'

"அவங்க சாஃப்ட் டைப்.. கெஞ்சிக் கேட்டு அழுதாங்க.. இரக்கப்பட்டு விட்டேன் பிரபா.."

'இப்போ உன் பெயரைச் சொல்லிக்கிட்டு இவன் தோட்டத்தில் வந்து நிற்கிறானே.. இதுக்கு என்ன பண்றது..?'

"ப்ளீஸ், பிரபா.. என்னைக் காப்பாத்துங்க.."

பிரபாகரன் பதில் சொல்லாமல் போனை அணைத்தான்.. மறுமுனையில் மாலினி திகிலடைந்தாள்..

"என்ன சொல்கிறாள் அண்ணா..?"

"உன்னிடம் காலையில் பேசுகிறாளாம்.."

மாலினியை அவள்.. இவளென்று தினகரன் பேசியதை விரும்பாத கோபத்துடன் பிரபாகரன் பதில் சொன்னான்..

"அதை என்னிடம் சொல்லியிருக்கலாமே.."

"ஏதோ வீட்டுக்குப் பெரியவன் என்ற நினைவில் என்னிடம் சொல்லிவிட்டாள்.. உனக்குத்தான் அந்த நினைவு

இல்லாமல் போய்விட்டது.."

"ஸாரி அண்ணா.."

"இனிமேலாவது இந்த இடத்தைவிட்டுப் போகலா மில்லையா..?" தினகரன் கிளம்பப் போனவன்.. தயங்கி நின்றான்..

"என்னடா..?" என்றான் பிரபாகரன் எரிச்சலுடன்..

"மாலினியின் செல் நம்பர் எனக்கு வேணும் அண்ணா.."

"அதை நான் கொடுத்தால் நன்றாக இருக்காது.. அவளிடமே கேட்டு வாங்கிக் கொள்.. அதுதான் முறை.."

"அதுவும் சரிதான்.. குட்நைட் அண்ணா.."

தினகரன் உற்சாகமாக தோட்டத்தை விட்டுச் சென்றான்.. சற்றுத் தொலைவுக்குப் போனதும் விசில் சத்தம் கேட்டது.. பிரபாகரனுக்கு மாலினியின் மேல் கோபம் எழுந்தது..

'இவள் என்ன என்ன வினைகளையெல்லாம் இழுத்துக் கொள்கிறாள்..'

பிரபாகரன் யோசனையுடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.. யாருமில்லையென்று உறுதிபடுத்திக் கொண்டு செல்போனை கையில் எடுத்தான்.. மாலினியின் நம்பரை அவன் அழுத்திக் கொண்டிருந்தபோது..

"அத்தான்.." என்ற மெலிதான குரல் அமானுஷ்ய மாய் ஒலித்தது..

என்ன விவரம் என்று மாலினியிடம் கேட்பதற்காக அவளை போனில் அழைத்துக் கொண்டிருந்தவன்.. சட்டென்று போனை அணைத்துவிட்டு மீண்டும் சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.. செல்போனில் மணி இரவு பன்னிரண்டு என்று காட்டவும்.. அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது..

இந்த ஆளரவமற்ற இருட்டில்.. தோட்டத்து செடிகளுக்கு இடையில்.. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு 'அத்தான்..' என்ற அழைப்பு வந்தால் எப்படியிருக்கும்..?

'என்னடா இது.. மோகினிப் பேய் எதுவும் வந்துவிட்டதா..?'

அவன் புருவங்கள் ஏற யோசித்துக் கொண்டிருக்கும் போது.. அந்த மோகினிப் பேய் செடி மறைவில் இருந்து வெளிப்பட்டது.. அவன் பார்வை கூர்மையாக்கியது..

"பவித்ரா.. நீயா..?" என்றான் ஆச்சரியத்துடன்..

"நானேதான் பெரியத்தான்.."

"இந்த நேரத்தில் இங்கே என்னம்மா பண்ணிக்கிட்டு இருக்கிற..?"

அவள் பதில் சொல்லாமல் விசும்பி அழுகவும்.. பிரபாகரனின் இறங்கிய புருவங்கள் மீண்டும் ஏறின...

98

**உன்னைக் கண் பார்க்க முடியாமல் போனாலும்..**

**என் மனம் பார்க்கும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

இந்த இரவில்தான் எத்தனை ஆச்சரியங்கள் அடுக்கடுக்காய் அணிவகுத்து வருகின்றன என்று பிரமித்தான் பிரபாகரன்..

அவன் அறிந்த வாசவனின் மகள் பவித்ராவே வேறு.. அவள் பேசக்கூடப் பயப்படுவாள்.. மாலை மயங்கினால்.. வாசலில்கூட வந்து நிற்க மாட்டாள்.. பெரியவர்களின் துணையின்றி தனித்து எங்கேயும் செல்ல மாட்டாள்.. முக்கியமாக பிரபாகரனின் முன் நிற்கக்கூட மாட்டாள்..

மாமன் மகள் என்ற மரியாதைக்காக பிரபாகரன் நலம் விசாரிக்கும்போது.. நன்றாக இருக்கிறேன் என்று வாய் திறந்துகூடச் சொல்ல மாட்டாள்.. லேசான தலை

அசைவுதான்.. குனிந்த தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்ததில்லை..

அப்படிப்பட்ட பவித்ராவா.. இந்த நள்ளிரவில் ஆள் இல்லாத தனிமையில் கொஞ்சம்கூட அச்சமின்றி தோட்டத்தில் வந்து நிற்கிறாள்..?

அதைவிட ஆச்சரியமாக பிரபாகரனை அழைத்து.. அவனுடன் பேச விரும்பி முன்னால் வேறு வந்து நின்று வைக்கிறாளே.. வந்து நின்றதும் இல்லாமல் விசும்பி அழுது வேறு வைக்கிறாளே..

பிரபாகரன் தர்மசங்கடத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.. யாராவது அவனையும் பவித்ராவையும் அந்த நேரத்தில்.. தோட்டத்தின் தனிமையில் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று இருந்தது அவனுக்கு..

'இந்தப் பெண்ணுக்கு என்னுடன் பேச வேறு நேரமும் இடமும் கிடைக்கவில்லையா..?'

பவித்ராவைப் பார்க்கும்போது ஒரு தங்கையைப் பார்ப்பதைப் போல்தான் பிரபாகரன் பாசமாக பார்த்து வைப்பான்..

அவன் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிற பெண்ணுடன் அவனை இணைத்து வைத்துப் பேசிவிட்டால் அவனால் நிச்சயம் தாங்கிக் கொள்ள முடியாது.. அதே சமயம்.. இந்த நடுநிசியில் அவனிடம் தோட்டத்தில் வந்து நின்று அழுபவளிடம் காரணம் கேட்காமலும் அவனால் இருக்க முடியவில்லை..

அதனால்.. வருவத வரட்டும் என்று அவள் முகம் பார்த்து கனிவாகப் பேசினான்..

"எதுக்கும்மா அழுகிற..? என்கிட்ட என்ன விஷயம்னு சொல்லு.."

"அத்தான்.." பவித்ரா கேவினாள்..

"அழுகாமல் விஷயத்தைச் சொல்லுமா.. நீ எப்போது இங்கே வந்தே..? ஏன் வந்தே..?"

"நான் தினா அத்தான் வருவதற்கு முன்னாலேயே இங்கே வந்துவிட்டேன்.."

"இந்த இருட்டு வேளையில் உனக்கு தோட்டத்தில் என்ன வேலை..?"

"அத்தான்.. மாலினி எழுதியதாக தினா அத்தான் சொன்ன கடிதத்தை எழுதியது நான்தான்.."

"என்ன?"

புரியாத புதிர் விடுபட்டு விட்ட உற்சாகத்தில் பிரபாகரன் வினவினான்..

"நீயா அந்த லெட்டரை எழுதின..?"

"ம்ம்ம்.."

"அதை எதுக்கு மாலினிகிட்ட கொடுத்துவிட்ட?"

"எனக்கு பயமாக இருந்தது.."

"பயப்படுகிறவள் காதல் கடிதம் எழுதக்கூடாது.."

பிரபாகரனுக்குள் கோபம் குமிழிட்டிருந்தது.. அவனுடைய மனைவியாகப் போகிறவளை.. அவனது தம்பி.. காதலயாக நினைத்துவிட்டான்.. அந்தச் சூழ்நிலையை இந்தப் பெண் உருவாக்கிவிட்டாள் என்ற ஆத்திரம் அவனுக்கு..

"எனக்கு வேறுவழி தெரியலை அத்தான்.. எனக்கு சின்ன வயதிலிருந்தே தினா அத்தானின் மேல் உயிர்.. அவரை காதலித்தேன்.."

"அதைச் சொல்லித் தொலைக்க வேண்டியது தானே.."

"எப்படி அத்தான்..? இந்த வீடே கதின்னு வருஷக் கணக்கில் கிடந்த ஸ்வேதாவையே நீங்க தூக்கி எறிஞ்சிட்டீங்களே.. என் காதலை வெளியே சொன்னால் எனக்கும் அந்தக் கதிதானே வரும்..?"

"முட்டாளா நீ..? அவளும் நீயும் ஒண்ணா..?"

"இரண்டு பேருமே உங்களுக்கு மாமன் மகள்கள் தானே..."

"பைத்தியம்.. பைத்தியம்.. இப்ப தினாவின் மேல் உனக்கிருக்கும் உண்மையான காதல்.. சுட்டுப் போட்டாலும் அவளுக்கு வராது.."

"எனக்கு அதெல்லாம் தெரியாது அத்தான்.. என் மனதிலிருப்பதை தினா அத்தானிடம் சொல்லி விடணும்கிற வேகம் மட்டும்தான் எனக்கு இருந்தது.."

"அதுவாவது இருந்ததே.. அந்தமட்டிலும் சந்தோஷம்.."

"அவரிடம் சொல்லி.. அவர் என் காதலை ஏற்றுக் கொண்டால் இதை வெளியே சொல்வது.. அவர் ஏற்றுக் கலைன்னா.. ஒதுங்கிவிடவேண்டியதுன்னு என் மனதில் முடிவு பண்ணியிருந்தேன்.."

"உன்னைப் போய் வேண்டாமுன்னு அவன் சொல்வானா..?"

"அதுதான் சொல்லிவிட்டாரே.."

பவித்ராவின் குரலில் இருந்த வெறுமை பிரபாகரனைத் தாக்கியது...

"சேச்சே.. அப்படியெல்லாம் மனம் உடைந்துவிடக் கூடாது.. அவனிடம் நான் பேசுகிறேன்.. உன் காதலைப் பற்றி நான் சொல்லுகிறேன்.."

"இதை ஏன் பெரியத்தான் மாலினி செய்யவில்லை..?"

"பவித்ரா.."

பிரபாகரன் அதிர்ந்துபோனான்.. இப்படியொரு கேள்வியை பவித்ராவிடமிருந்து அவன் எதிர்பார்க்க வில்லை...

"நான் பெண் அத்தான்.. என்னால் என் மனதை என்னைப் போல இருக்கும் இன்னொரு பெண்ணிடம் தான் சொல்ல முடியும்.. இன்றைக்கு விஷயம் கைமீறிவிட்டது.. வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது. அதனால் உங்க முன்னால் நின்று நியாயம் கேட்கும் துணிச்சல் எனக்கு வந்திருக்கிறது. இந்த துணிச்சல் முதலில் வராதே..."

"அதற்காக மாலினியின் மேல் எதுக்கு குறை சொல்கிறாய் பவித்ரா..?"

"மாலினி யார் பெரியத்தான்..? உங்கள் காதலி.. எனக்கு எல்லாம் தெரியும் அத்தான்.. அப்படிப்பட்டவள் தினா அத்தானிடம் எப்படிப் பழகியிருக்க வேண்டும்..? தள்ள நின்று பழகியிருக்க வேண்டுமா.. இல்லையா..?"

பிரபாகரனின் புருவங்கள் சுளித்தன..

"இத்தனைக்கும் தினா அத்தானுக்கு மாலினியின் மேல் ஒருவித மயக்கம் இருந்தது அவளுக்கே தெரியும். இருந்தும் ஏன் பழகினாள்..?"

"அவள் பழகியதை நீ பார்த்தாயா..?"

"என் மேல் கோபப்படாதீங்க பெரியத்தான்.. இந்தக் கோபத்தை உங்க மாலினியிடம் காட்டுங்க.. என் கடிதத்தைக் கொண்டு வந்தவள் இதை பவித்ரா கொடுத்தனுப்பினாள்ன்னு சொல்லணுமா.. வேண்டாமா..? மொட்டையாகப் பிரித்துப் படித்துப் பாருங்கன்னு சொல்லிவிட்டுப் போனால் கையெழுத்தில்லாத கடிதத்தைப் பார்த்துவிட்டு அவர் என்ன நினைப்பார்? மாலினிதான் எழுதியிருக்கிறாள்னு நினைப்பாரா இல்லையா..?"

"உன் கையெழுத்தை நீயேன் போடவில்லை...?"

"ஒரு பாதுகாப்பு உணர்வுதான்.. வேறென்ன.."

"கையெழுத்தில்லாத கடிதத்தை நீ கொடுத்துவிட்டு மாலினியின் மேல் எதற்காக பழி போடுகிறாய் பவித்ரா..? இது கொஞ்சம்கூட நல்லாயில்லை.. கடிதத்தில் நீ கையெழுத்தைப் போடவில்லைன்னு அவள் கனவா கண்டாள்..? அவளுக்கு அது எப்படித் தெரியும்..?"

"நீங்க சொல்வது வேடிக்கையாக இருக்கு பெரியத்தான்.. மாடியிலிருந்து என் கடிதத்தை வாங்கிக் கொண்டு போய் தோட்டத்தில் கொடுத்தவள் இடையில் அந்தக் கடிதத்தை பிரித்துப் படிக்காமலா இருந்திருப்பாள்..?"

இப்படியும் கூட நன்றிகெட்டுப் போய் பேச முடியுமா என்று வெறுப்புடன் பவித்ராவைப் பார்த்தான் பிரபாகரன்..

'இத்தனை நாளாய் இவளை மென்மையான பெண்ணுன்னு தவறாய் நினைச்சிட்டேனோ..'

"அடுத்தவங்களின் கடிதத்தை.. அதுவும் காதல் கடிதத்தை பிரித்துப் படிக்கிற அளவுக்கு மாலினியை நாகரிகமில்லாதவள்னு நினைத்துவிட்டாயா பவித்ரா..? இந்த அளவுக்கு சந்தேகப்படுகிறவள் மாலினியிடம் உன் காதல் கடிதத்தை கொடுத்து விட்டிருக்கவே கூடாது.."

"விதி அத்தான்.. எல்லாம் என் தலைவிதி.. இந்த இருட்டு நேரத்தில் தோட்டத்தில் வந்து உங்களிடம் நியாயம் கேட்க இப்போது வந்திருக்கிற இந்த தைரியம் முதலிலேயே இருந்திருந்தால் என் கதி இப்படி ஆகியிருக்காது என் காதலை நானே பார்த்துக் கொண்டிருப்பேன்.."

"ம்ச்சு.. செய்வதையும் செய்துவிட்டு இப்போது அழுது புலம்பி என்ன பிரயோஜனம்.. இப்போது காயத்ரியின் கல்யாணம்தான் எனக்கு முக்கியம்.. மத்த பஞ்சாயத்தெல்லாம் அப்புறம்தான்.."

"அப்போ என் கதி என்னாகிறது..?"

"உனக்கென்ன குறை..? நீ ஊருக்குப் போ.. நான் மெதுவாக தினகரனிடம் பேசிப் பார்க்கிறேன்.."

"கடைசி வரைக்கும்.. மாலினியைக் கண்டிக்கிறேன்னு ஒரு வார்த்தை உங்க வாயிலிருந்து வரலையே..."

"அவளைக் கண்டிக்க என்னம்மா இருக்கு..?"

"இத்தனைக்கு பிறகும் இப்படிச் சொல்கிறீங்களே பெரியத்தான்.. உங்க தம்பி பினாத்தியதைக் கேட்டுக் கிட்டுத்தானே இருந்தீங்க.. அந்த அளவுக்கு அவர் மனசை கலைத்துவிட்டாள் மாலினி.."

"எல்லாம் உன்னாலே வந்ததுதான்.."

"மாலினியால் எதுவும் வரலையா.. ஒன்றை நினைவில் வைச்சுக்கங்க பெரியத்தான்.. மாலினி நினைத்திருந்தால் என்னையும் தினா அத்தானையும் சேர்த்து

வைத்திருக்கலாம்.. ஆனால், அவள் அதைச் செய்யவில்லை.."

"அதனால் அவளுக்கு என்னம்மா லாபம்..?"

"தினா அத்தானை அவளைச் சுற்றிவரச் செய்யலாமே.. அதுதான் லாபம்.. பார், உன் காதலன் உன்னை விட்டுவிட்டு என்னைச் சுற்றுகிறான்னு என்னிடம் பீற்றிருக்கலாமே.. அதுதான் லாபம்.."

"நீ அதிகமாக பேசுகிறாய் பவித்ரா.."

"நான் பாதிக்கப்பட்டவள் பெரியத்தான்.. பேசத்தான் செய்வேன். உங்க மாலினி என் காதலனை அபகரிக்கப் பார்ப்பாள்.. நான் அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கனுமா..?"

"பவித்ரா.."

கையை ஓங்கிவிட்டான் பிரபாகரன்.. அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த பவித்ராவைக் கண்டதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்..

"போ.. இங்கேயிருந்து.."

"பெரியத்தான்.."

"போன்னு சொல்கிறேனா இல்லையா.. இது என் தங்கையின் கல்யாணம் நடக்கப் போகிற வீடு.. நீ அதில் கலந்துகொள்ள வந்தவள்.. வந்த வேலையை விட்டு விட்டு தேவையில்லாததையெல்லாம் செய்துவிட்டு.. இப்போ நடுராத்திரியில் என்னிடம் வந்து நியாயம் கேட்கிறாயா.. நியாயம்? அறைந்து பல்லைக் கழட்டிவிடுவேன் ஜாக்கிரதை.. யாரிடம் வந்து யாரைப் பற்றி என்ன பேசுகிறாய்..?"

"பெரியத்தான்.."

"என்னிடம் பேசாதே.. சேச்சே.. வாசவன் மாமா நல்ல முறையில் பெண்ணை வளர்த்து வைத்திருக்கிறார்னு நினைத்தேன்.. நீ ஸ்வேதாவை நல்லவளாக்கி விட்டாயே.."

"பெரியத்தான்..."

"அவள் உன்னைப் போல அடக்க ஒடுக்கமாக வேஷம் போட மாட்டாள்.. நீ ஊமை போல இருந்துக்கிட்டு எவ்வளவு பெரிய பேச்சையெல்லாம் பேசுகிறாய்.. உன்னைப் போய் நல்ல பொண்ணுன்னு நினைத்தேனே.."

"பெரியத்தான்.."

"வாசவன் மாமா முகத்திற்காக பார்க்கிறேன்.. இங்கேயிருந்து போய்விடு.. என்னைக் கொலைகாரனாக்கி விடாதே.."

பவித்ரா பயந்து போய் பின்வாங்கினாள்.. பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டாள்..

'ச்சே.. ஒரு சின்னப்பெண்.. என்னவெல்லாம் பேசி விட்டாள்..'

தினகரன், மாலினியை உரிமை கொண்டாடியது ஒரு புறம் மனதை போட்டு அரிக்க.. பவித்ராவின் குற்றச் சாட்டு.. மறுபுறம் அவனது மனதை போட்டு அறுத்தது.. அவனது கோபம் மாலினியின் பக்கம் திரும்பியது..

ஆவேசத்துடன் செல்போனை எடுத்து மாலினியின் செல்போன் எண்களை அழுத்தினான்..

"பிரபா.." என்றாள் அவள் தீனமான குரலில்...

தினகரன் பேசியதையெல்லாம் பிரபாகரன் கேட்டுக் கொண்டிருந்திருப்பானே என்ற அவமான உணர்வு அவளைப் பிடுங்கித் தின்றது..

"கதவைத் திறந்து வைடி.." என்றான் அவன் அழுத்தமான குரலில்..

"பிரபா.." அவள் புரியாமல் மீண்டும் கேட்டாள்..

"உன் ரூம் கதவைத் திறந்து வைய்யுன்னு சொன்னேன்.." அவன் குரலில் பூகம்பம் ஒளிந்திருந்தது..

மாலினி பதறிப் போய் விட்டாள்.. அவன் சொல்வதை ஜீரணித்துக் கொள்ள அவளால் முடியவில்லை.. அது திருமண வீடு.. மதுரையில் ஏதேனும் ஒரு இடத்தில் ஆட்கள் விழித்துக் கொண்டே இருப்பார்களாம்.. அதனால் அதை தூங்கா நகரம் என்று அழைப்பார்கள்..

அதைப் போல அந்த வீடு தூங்கா வீடாக இருந்தது.. அதன் ஏதாவது ஒரு மூலையில் ஆட்கள் விழித்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தார்கள்..

அந்தச் சூழ்நிலையில்.. நள்ளிரவில்.. அவள் அறைக்குள் பிரபாகரன் வருவதை யாராவது பார்த்தால் என்ன ஆகும்..?

பிரபாகரன்.. மாலினி.. இருவரின் கௌரவமும் காற்றில் பறந்துவிடாதா..? அதை தினப்படி நடக்கும் இயல்பான நிகழ்வாக மற்றவர்கள் நினைத்துவிட மாட்டார்களா..?

"புரிந்துதான் பேசுகிறீங்களா பிரபா..?"

"உன்கூடப் பேச எனக்கு நேரமில்லை.. சொன்னதைச் செய்.."

"வேண்டாம் பிரபா.. இது கல்யாண வீடு.."

"அந்த அக்கறையும்.. நினைப்பும் உன் மனதில் இருந்திருந்தால் இந்த அர்த்தராத்திரி ஜாமத்தில் என்னை இப்படி அலைக்கழித்திருப்பாயா..? பெண்ணாடி நீ? பேய்.."

"பிரபா.. நீங்களா இப்படிப் பேசுகிறீங்க..?"

"நான் உன்னிடம் என்ன சொல்லியிருந்தேன்..? இது என் ஒரே தங்கையின் கல்யாணம்.. இது எந்தக் குறையு மில்லாமல் நன்றாக நடக்க வேண்டும்னு சொன்னேனா.. இல்லையா..?"

"ஆமாம் பிரபா.."

"நீ என்ன செய்து வைத்திருக்கிறாய்..?"

"நானென்ன செய்தேன்..?"

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேண்டி.. முதலில் கதவைத் திறந்து வை.. அங்கே வந்து உன்னைப் பேசிக் கறேன்.."

பிரபாகரன் செல்போனை அணைத்துவிட்டான்.. இயந்திரம் போல் எழுந்த மாலினி விளக்கை அணைத்து விட்டு அறைக்கதவைத் திறந்து வைத்தாள்.. புயல் போல பிரபாகரன் வந்து சேர்ந்தான்..

99

**அர்த்த ஜாம வேளையிலே...**

**அலைக்கழிக்கும் உன் நினைவை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

தலைமுடி கலைந்து.. கண்கள் சிவந்து கோபாவேசத்துடன் உள்ளே வந்த பிரபாகரனைக் கண்டதும் பதறிப்போய் ஒரடி பின்னே நகர்ந்தாள் மாலினி. அவன் கதவைச் சாத்தித் தாழிட்டதும் அவளுடைய பதற்றம் இன்னும் அதிகமாகியது..

"என்ன காரியம் செய்கிறீங்க..?"

"நீ செய்து வைத்திருக்கும் காரியத்தைவிட இது மோசமில்லை.."

"யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பாங்க..?"

"தினகரனும் பவித்ராவும் உன்னைப் பற்றி நினைப் பதைவிட மோசமாக நினைத்துவிட மாட்டாங்கடி..."

"பவித்ராவா.. அவளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்துவிட்டதா..?"

"ஏன்.. இன்னும் மறைத்து வைத்து நாடகமாட ஏதாவது ஸீனை யோசித்துக் கொண்டிருந்தாயா..?"

"நாடகமாடினேனா.. நானா..?"

"பவித்ரா அவ மனசில் இருந்த காதலை.. இரண்டு மாசத்துக்கு முன்னாலேயே உன்னிடம் சொல்லிவிட்டாளாமே.. உண்டா.. இல்லையா..?"

"சொன்னாள்தான்.."

"அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை..?"

"அவளுடைய அந்தரங்கத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறாள்.. அதைப் பற்றி உங்களிடம் நான் சொன்னால் அது அவளைக் காட்டிக் கொடுத்ததைப் போல ஆகிவிடாதா.. அந்தரங்கம் புனிதமானதுன்னு கண்ணதாசன் சொல்லியிருக்கிறார். அந்தப் புனிதத்தை அம்பலப் படுத்தக் கூடாதுன்னு நான் நினைத்தேன்.. அது தப்பா..?"

"மத்தவங்களிடம் நீ மறைச்சதுக்கு இந்தக் காரணத்தைச் சொல்லலாம்.. என்னிடம் எப்படிடீ நீ இதை மறைக்கலாம்..? இதைப்போல எத்தனை விஷயங்களை நீ மறைத்திருக்கிறாய்..?"

முதல் சாட்டையடி பிரபாகரனிடமிருந்து வெளிப் பட்டது.. அதன் வீச்சின் வேதனையில் கண்மூடி கலங்கி நின்றாள் மாலினி. அவளுடைய பிரபாகரனா அவளைப் பார்த்து அப்படிக் கேட்டுவிட்டான்..?

அவளுடைய அதிர்ந்த பார்வையைக் கண்டும் பிரபாகரன் அவள் மேல் இரக்கம் காட்டவில்லை...

"என் சம்பந்தப்பட்ட எதையும் உங்களிடமிருந்து நான் மறைத்ததில்லை..."

"பவித்ராவின் காதலுக்கு நீ தூது போனது உன் சம்பந்தப்பட்ட விஷயமில்லையா.. அதை நீ என்னிடமிருந்து மறைக்கவில்லையா..? நீ இன்ஜினீயரிங் படித்தவள்தானே.. உன்னை யார் இந்த வேலையைப் பார்க்கச் சொன்னது..?"

"நான் போவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை பிரபா.. முடியாதுன்னுதான் சொன்னேன்.. ஆனா.. அவ அழுதாள்.. இரக்கமாயிருச்சு.."

"இரக்கப்பட்டாயா.. அவள் உன்னைப் பற்றி என்னிடம் என்ன கேட்டாள்னு தெரியுமா.. நீதான் அவளுடைய காதலைக் கலைத்துவிட்டியாம்.. நீ நினைத்திருந்தால் அவளையும் அவளுடைய காதலனையும் சேர்த்து வைத்திருக்கலாமாம்.. நீ அதைச் செய்யாமல் தினகரனை அவளிடமிருந்து அபகரிக்கப் பார்க்கிறாயாம்.. தினகரனுக்கு உன் மேல் ஒரு கண் இருப்பது தெரிந்தும் நீ ஏன் அவனிடம் நின்று பேசினாய்னு கேட்கிறாள்.. அவனை உன்னைச் சுற்றிவரச் செய்வதில் உனக்குச் சந்தோஷமுன்னு சொல்கிறாள்.."

"பவித்ராவா இப்படிச் சொன்னாள்..?"

"அவள் சொன்னதில் என்ன தப்பிருக்கு.. அவளிடத்தில் நான் இருந்திருந்தாலும் இப்படித்தான் நினைத்திருப்பேன்.. கேட்டிருப்பேன்.."

இது பிரபாகரனிடமிருந்து வெளிப்பட்ட இரண்டாவது சாட்டையடி.. ஏற்கெனவே குற்றுயிராய் நின்றவளை அது வீரியத்துடன் தாக்கியது.. மனதில் குருதி கொட்ட மாலினி உறைந்து போய் நின்றாள்..

"நான் பார்க்க வளர்ந்த சின்னப்பெண்.. என்னை நிற்க வைத்துக் கேள்வி கேட்கிறாள்.. உன் காதலி.. என் காதலனை களவாடப் பார்க்கிறாள்.. இது நியாயமான்னு என்னிடம் நியாயம் கேட்கிறாள்.. இது யாரால்..? உன்னால்.. உன்னால்தாண்டி எனக்கு இந்த நிலைமை வந்தது..?"

"ஐ ஆம் ஸாரி..."

"எதுக்கு ஸாரி கேட்கிறாய்.. பவித்ரா என்னைக் கேள்வி கேட்டதற்கா.. இல்லை.. தினகரன் என் முன்னாலேயே உன்னை வார்த்தைக்கு வார்த்தை கண்ணம்மான்னு கூப்பிட்டானே.. அதை காது குளிர என்னைக் கேட்க வைத்ததற்கா..?"

"உங்க தம்பி அப்படி உளறியதற்கு நான் எப்படி பொறுப்பாவேன்..?"

"நடிக்காதேடி.. பவித்ரா சொன்னதைப் போல.. அவன் குணம் உனக்குத் தெரியாதா..? தெரிந்தும் அவனிடம் தோட்டத்தில் நின்று சிரித்து சிரித்துப் பேசினாய். கவிதை சொன்னாய்.. அவன் கையிலிருந்த ரோஜாப்பூவை நீ கையில் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தாய்.."

"அது அத்தை கொடுத்துவிட்ட பூ.."

"அதைப் பற்றி உனக்குத் தெரியாது இல்லையா.. அது தினகரனின் கையில் இருந்த பூதான்.. என் அம்மா கொடுத்துவிட்டதாக ஸ்வேதா கொடுத்து அனுப்பியிருக்கிறாள்.."

"அது எனக்குத் தெரியுமா..?"

"எதுதான் உனக்குத் தெரிந்தது..? உன் கையில் இருந்த பூவைப் பார்த்ததும் தினகரன் முகத்தில் பல்ப் எரிந்ததே.. அது உனக்குத் தெரியவில்லையா..?"

"நான் தினகரனை அவாய்ட் பண்ணினேன்.."

"எப்படி அவாய்ட் பண்ணின..? உன் மனதில் நான் இருப்பதை மறைமுகமாய் அவனிடம் சொல்லி அவாய்ட் பண்ணினாயா.. இல்லையே.. அதைச் சொல்ல உனக்கு மனமில்லை. அதைச் சொல்லியிருந்தால்.. அண்ணின்னு கூப்பிட வேண்டியவன்.. அவள் இவள்னு உன்னை உரிமையோடு என்கிட்டயே பேசியிருப்பானா..? என்னை நீ காதலிப்பதை அவனிடமிருந்து ஏண்டி மறைத்தாய்? இதுக்கு இரண்டு காரணம்தான் இருக்க முடியும்.. ஒன்று.. பவித்ரா சொன்னதைப் போல அவனை நீ உன் பின்னால் சுற்ற வைக்க நினைத்திருக்க வேண்டும்.. இது தெரிந்தால்

அவன் விலகி நிற்பானே.. அதுக்காக.. இதை அவனிட மிருந்து நீ மறைத்திருக்கணும்.. நீ ஃப்ரீயாக இருந்தால் தானே அவன் வந்து உன்னிடம் காதல் சொல்வான்..? இரண்டாவது.. நீ என்னை உண்மையிலேயே காதலிக்க வில்லை.. உண்மையாக நீ என்னைக் காதலித்திருந்தா.. இதை அவனிடமிருந்து மறைக்க நினைத்திருக்க மாட்டாய்.."

இது மூன்றாவதாக பிரபாகரன் வீசிய சாட்டையடி.. ஏற்கெனவே குற்றுயிரும் குலையுயிருமாக நின்றிருந்த மாலினியை அது வேரோடு வெட்டிச் சாய்த்தது.. அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்து விட்டாள்..

அவளுடைய அந்த நிலையை கொஞ்சம்கூட பிரபாகரனைப் பாதித்ததாகத் தெரியவில்லை.. அவன் மாலினியை வெறுப்புடன் பார்த்தான்..

"தினகரனும் பவித்ராவும் ஒன்றுபோல ஒரு விஷயத்தைச் சொன்னாங்கடி.. நீ தினகரனிடம் கடிதத்தைக் கொடுத்தபோது.. அதை கொடுத்தது பவித்ரான்னு சொல்லவேயில்லையாமே.. அது ஏண்டி..? மொட்டையாக லவ் லெட்டரைக் கொடுத்து பிரிச்சு படிச்சுப் பாரு.. புரியும்னு சொல்லிவிட்டுப் போனாயாமே.. அவங்களுக்கும் உன்னைப் பற்றி புரிஞ்சுருச்சு.. எனக்கும் உன்னைப் பற்றி புருஞ்சுருச்சு.. தினகரன் அந்தக் கடிதத்தை எழுதியது நீதான்னு தீர்மானமாய் நினைச்சுட்டான்.. நீ நினைக்க வைச்சிட்ட.. இதை உன்னிடமிருந்து நான் எதிர்பார்க்கலைடி.. நான் முதலிலேயே உன் மனதில் தினகரனைப் பற்றி ஏதும் எண்ணமிருக்கான்னு கேட்டேனா.. இல்லையா.. என்கிட்ட இல்லைன்னு சாதிச்சயேடி.. இப்ப என்ன ஆச்சு.. நீ தினகரனுக்கு நூல் விட்டிருக்கிறாய்.."

செத்த பிணத்தை பிரபாகரனிடமிருந்து வெளிப்பட்ட சாட்டையடிகளால் என்ன செய்ய முடியும்..?

மாலினி அசைவற்று அமர்ந்திருந்தாள்..

"என் அப்பா போனபோது நான் இக்கட்டான நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.. அதுக்குக் கூட நான் கலங்கி நின்றதில்லை.. ஆனால், இந்த ஒரு ராத்திரியில் நான் பார்த்ததும்.. கேட்டதும்.. என்னைக் கலங்கடிச்சுருச்சுடி.. புரட்டிப் போட்டு அடிச்சுருச்சு.. என்கூடப் பிறந்தவன் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் காதலியை அவனுடைய காதலிங்கிறான்.. அவனைக் காதலிக்கிறவ உன் காதலி.. என் காதலனை என்கிட்டேயிருந்து பிடுங்கப் பார்க்கிறான்னு சொல்கிறா, இதைவிட ஒரு மனுஷனுக்கு நிம்மதி கெட வேறு ஏதும் இருக்காடி..?"

மாலினியிடம் மௌனம் குடிகொண்டிருந்தது..

"எங்க வீட்டுப் பெண்ணுக்கு நாளைக்கு கல்யாணம்டி.. நாளைக்கு சாயங்காலம் இந்த வீட்டிலிருந்து கல்யாணப் பெண்ணா.. மண்டபத்துக்கு கிளம்பினா.. நாளைக்கு மறுநாள் இன்னொருத்தன் வீட்டுப் பெண்ணாகி மறுவீட்டு விருந்திற்குத்தான் திரும்பி வருவாடி.. அவளை அண்ணனுக்கு அண்ணா.. தகப்பனுக்கு தகப்பனா வளர்த்தேண்டி.. அவ கல்யாணத்தை நிம்மதியாக நான் நடத்த முடியுதா..?"

மாலினியிடமிருந்து பதில் வரவில்லை..

"காதலிச்சது ஒரு பாவமாடி..? அதுக்காக நீ என்னை இந்தப் பாடுபடுத்துவாயா.. இதுக்கு முதலிலேயே தினகரனிடம் நீ பழகியிருக்கலாமேடி.. எனக்கும் பவித்ராவுக்கும் இத்தனை மனவலி வந்திருக்காதே..."

வெறுமையான ஒரு பார்வையை மாலினி பார்த்தாள்..

"அன்னிக்கு அணைக்கட்டுக்கு போயிருந்தப்பவே நான் உன்னை ஆண்டிருக்கணும்டி.. விட்டு வைத்தது என் தப்புத்தான்.. அழகிய அசுரா.. அத்துமீற ஆசையில்லை யான்னு கேட்டயே.. அத்துமீறியிருக்கணும்.. அப்படி அன்னிக்கு அத்துமீறியிருந்தேன்னா இன்னைக்கு நீ அத்து மீறியிருக்க மாட்ட.."

இப்போது மாலினியின் விழிகளில் ஒரு தீவிரம் வந்தது...

"என்னை நம்பி உன்னை நீ ஒப்படைச்சே.. கல்யாணம் பண்ணிக் கொள்ளாம.. அதிக உரிமை எடுத்துக்க கூடாதுன்னு நான் விலகி நின்னேன்.. அதுதான் தப்பாப் போச்சு.. இப்ப அந்த உரிமையை நீ வேறு ஒருத்தனுக்கு கொடுக்கலாமுன்னு நினைச்சிட்ட போல.."

மாலினி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

"காதலிக்கிறவளை தொட்டு அணைக்கலாம்.. அவளோடு குடும்பம் நடத்த முடியாது.. குடும்பம் நடத்தவும் கூடாது.. அது முறையில்லன்னு நினைச்சு விலகிப் போனேன்.. அதுவே.. நீ வேறு ஒருத்தனுக்கு பச்சைக் கொடி காட்டறதுக்கான தகுதியை உனக்குக் கொடுத்துருச்சில்ல..?"

மாலினியின் முகத்தில் ரத்தம் பாய்ந்து சிவந்தது தெளிவாக தெரிந்தது..

"என் அம்மாவிடம் நம் காதலைப் பற்றி நான்தான் சொன்னேன்.. நீ சொல்லலை.. அன்னிக்கே நான் யோசிச்சிருக்கணும்டி.. காதலிக்கிறவ, ஏன் காதலைப் பற்றிப் பேச பயப்படுகிறாள்னு.."

நீ என்னை தூரத்துக்குப் போவாயோ.. அத்தனை தூரத்துக்குப் போ என்பதைப் போல மாலினி மௌனமாக அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்...

"உன்னிடம் நான் சொல்லியிருந்தேனேடி.. காயத்ரியின் கல்யாணம் முடிந்தவுடன் அடுத்த முகூர்த்தத்திலேயே நம்ம கல்யாணம்னு.. ஒரு வேளை அதற்காகத்தான் நீ அவசரப்பட்டு விட்டாயோ.. இந்தக் காதல் கடித ஐடியாவே நீ கொடுத்ததுதானாமே.. காயத்ரியின் கல்யாணம் முடிந்தவுடன் நம் கல்யாணப் பேச்சை நான் எடுத்துவிடுவேன்னு திட்டம் போட்டு காய் நகர்த்தினாயா..?"

பேசு.. உன்னைக் காதலித்துவிட்டதற்காக என்ன வேண்டுமானாலும் பேசு.. நான் கேட்டுக் கொள்கிறேன் என்று மாலினி அமர்ந்திருந்தாள்..

"தினகரன் முடிவே பண்ணிவிட்டான்.. நீ அவனைத் தான் காதலிக்கிறாய்னு.. அவன் வந்து என்னிடம்.. அண்ணா.. நான் மாலினியைக் காதலிக்கிறேன்னு சொன்னா நான் உன்னை விட்டுக் கொடுத்திடுவேன்னு நினைச்சிட்டயா.. நம்ம கல்யாணத்தை நடத்தறதுக்குப் பதில் அடுத்த முகூர்த்தத்தில் அவனுக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணி வைத்துவிடுவேன்னு கணக்குப் போட்டாயா..?"

மாலினியைக் காயப்படுத்தும் வெறியோடு கொட்டித் தீர்த்து விட்டான் பிரபாகரன்.. எதற்கும் அசைந்து கொடுக்காமல் எல்லாவற்றையும் மௌனமாக சகித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் மாலினி..

"பவித்ரா பாவம்டி.. தினகரனை உண்மையாக காதலிச்சாள்.. அவ காதலை இப்படி அழிச்சிட்டயே.." என்று கடைசியாக ஒரு அம்பை எய்துவிட்டு.. கதவைத் திறக்கப் போனான் பிரபாகரன்..

அவனது கையை இறுக்கமாகப் பிடித்துத் தடுத்தாள் மாலினி.. அந்த இரும்பு மனிதனாலும் கையை உருவிக் கொள்ள முடியாத இரும்புப் பிடியாக அது இருந்தது..

100

**நீ விட்டுச் சென்ற வாசத்தில்..**

**என் சுவாசம் வாழ்வதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

கோபத்தை வெளிப்படுத்தும் வகை அறியாமல் திட்டித் தீர்த்து விட்டான் பிரபாகரன்.. அவனால் சகித்துக் கொள்ள முடியாத தினகரனின் காதல் வசனம் கிளப்பிய வெறியை மாலினியைப் புண்படுத்துவதன் மூலம் சரிசெய்து கொள்ள முடியும் என்று நினைத்தான் அவன்..

ஆனால், அவனது மனம் இரு மடங்கு கனமாகி ரணமாகியது.. எதையும் தாங்கும் இதயம் படைத்தவன் தவித்துப் போனான்.. ஏதோ ஒரு பாதுகாப்பில்லாத உணர்வு அவனை அலைக்கழித்தது..

சட்டென்று தினகரன், மாலினியின் மேல் காதல் வயப்பட்டதும்.. அதைவிடச் சட்டென்று ஒரு சொல்லை பவித்ரா சொல்லிவிட்டதும்.. பிரபாகரனை வெகுவாக பாதித்துவிட்டன..

அவன் மனது ஒரு நிலையில் நிற்காமல் அலை பாய்ந்து கொண்டிருந்தது.. அவனது ஒரே செல்லத் தங்கையின் திருமண வேலைகளில் ஈடுபட முடியாத அளவிற்கு அவன் மனம் களைத்துப் போயிருந்தான்..

மாலினியைத் திட்டித் தீர்த்தால் அது சரியாகிவிடும் என்று ஆரம்பித்தவன்.. அவன் மனதிலிருந்தவற்றை கொட்டிக் கவிழ்த்து விட்டான்.. அப்போதும் அவன் மனம் அமைதியடையவில்லை. அலைபாய்தல் நிற்கவில்லை. வேறுவழியின்றி கிளம்பினான்...

கதவைத் திறந்து வெளியேறப் போனவனை தடுத்து நிறுத்திய மாலினியின் கையை உதற அவனால் முடிய வில்லை..

"கையை விடுடி.. உன் விளக்கத்தைக் கேட்க எனக்குப் பொறுமையில்லை. என் காதில் பூச்சுற்ற நினைக்காதே.."

மாலினி எதுவுமே பேசவில்லை.. அவன் கையைப் பற்றி இழுத்தாள்.. அவள் என்ன செய்ய நினைக்கிறாள் என்று புரியாதவனாக அவன் அவள் இழுத்த இழுப்பிற்கு போனான்..

"இப்ப எதுக்குடி என்னை நிறுத்தறே..? புதிதாய் ஏதும் கதை சொல்லப் போகிறாயா..?"

அவள் புதிதாகத்தான் கதை சொல்ல ஆரம்பித்தாள்.. அவன் கேட்டு வாய் மூடு முன்னால் அவன் கழுத்தை வளைத்தாள்.. எம்பி.. அவனது இதழ்களில் முத்தம் பதித்தாள்..

அந்த முத்தத்திற்குத்தான் எத்தனை சக்தி? பிரபாகரனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அவனையறியாமல் அவனது கரங்கள் அவளை வளைத்துக் கொண்டன.. அவர்கள் கட்டிலில் சரிந்தார்கள்..

மாலினி அவனை விலக அனுமதிக்காமல் தழுவிக் கொண்டாள்.. ஏன் அவள் எல்லைகளைக் கடக்கிறாள் என்பதைப் புரியாதவனாக.. பிரபாகரன் தன்னை அவளிடம் ஒப்படைத்தான்.. அவளைப் பதிலுக்கு எடுத்துக் கொண்டான்..

அவனது பதற்றம்.. கோபம்.. அலைக்கழிப்பு.. அலை பாய்தல் அத்தனையும் அடங்கி சமனப்பட்டு விட்டன.. அவள்மீது பரவிப் படர்ந்தவன் வேட்கையோடு அவளை ஆண்டு முடித்துவிட்டான்..

கலைந்து.. களைத்துப் படுத்திருந்தவளின் முடி கோதி... எல்லையற்ற மனத்திருப்தியோடு முத்தமிட்ட வனுக்கு.. இழந்த சக்தி மீண்டிருந்தது.. அவன் பழைய இரும்பு மனிதனாக திடம் பெற்றுவிட்டான்..

அத்தனை நாளாக மாலினி அவனிடம் தன்னை ஒப்படைத்தபோது தள்ளி நின்று கண்ணியம் காத்தவன்.. இன்று மட்டும் ஏன் அவள் தன்னை ஒப்படைத்த அடுத்த வினாடியே அவள் மேல் படர்ந்தான்..?

கல்யாணத்திற்கு பின்னால் மீறவேண்டிய எல்லை களை காதலிக்கும்போது மீறக்கூடாது என்ற கொள்கை யோடு இருந்தவன், ஏன்.. அன்று மட்டும் அத்தனை எல்லைகளையும் கடந்தான்..?

தினகரன் இனி அவளிடம் சொந்தம் கொண்டாடக் கூடாது என்ற வெறியா? பவித்ரா இனி அவளைக் குற்றம் சொல்லிவிடக்கூடாது என்ற ஆவேசமா..?

எதுவாக இருந்தாலும்.. அறைக்குள் வந்தபோது இருந்த ஆவேச பிரபாகரனாக அவன் அப்போது இல்லை.. அவளை விட்டு விலகி.. வெளியே செல்ல மனமில்லாமல் ஒட்டிப்

படுத்துக் கொண்டான்.. அவள் நகர்ந்து அவன் மார்பில் தலை வைத்துக் கொண்டாள்..

வெளிக்காற்று உள்ளே வருவதற்காக சற்று முன்னால் பிரபாகரன் திறந்து வைத்திருந்த ஜன்னலின் வழியாக ஆகாயத்தில் பவனி வந்த முழுநிலவு தெரிந்தது. தோட்டத்திலிருந்து வந்த குளுமையான காற்று.. இப்போது அவனது மனத்திற்கு இன்பத்தைத் தந்தது..

மெதுவான குரலில் மாலினியின் காதுகளில் பாடினான்..

"அன்றொரு நாள்.. இதே நிலவில்..

அவள் இருந்தாள்.. என்னருகே..

நான் அடைக்கலம் கொண்டேன்..

அவள் அழகை..

நீயறிவாயே வெந்நிலவே.."

அவன் உடல் மேல் படர்ந்திருந்த அவளது மெல்லிய கைவிரல்களை நீவிவிட்டு முத்தமிட்டான்...

"அந்த ஒருநாள்..

ஆனந்தத் திருநாள்..

இன்று நினைத்தால்..

என்னென்ன சுகமோ..

பாதிவிழிகள் மூடித்திறந்தே..

பார்க்கும் வேளையிலே..

நீயும் பார்த்தாயே வெந்நிலவே.."

லேசான வெளிச்சம் வெளியே பரவத் தொடங்க.. பிரிய மனமில்லாமல் எழுந்தான் பிரபாகரன்.. அவன் மார்பில் தலை வைத்திருந்த மாலினியை விலக்கி முத்த மிட்டான்..

"போகணும்டி.. எல்லாத்துக்கும் என்னைத் தேடுவாங்க.."

மௌனமாக தலையசைத்து விடை கொடுத்தாள் மாலினி.. அது நேரம் வரை அவள் ஒரு வார்த்தைகூடப் பேசாததை அப்போதுதான் உணர்ந்தான் பிரபாகரன்..

அவர்கள் கூடிக் கலந்த அந்த வேளையில்கூட அவள் எதையும் பேசவில்லை என்பது அப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது..

"கோபமாடி..?"

இல்லையென்று தலையாட்டினாள் அவள்..

"த்சு.. எனக்கு என்னாச்சுன்னே தெரியலைடி.. அவன் என் முன்னாலேயே போனில் உன்னிடம் கொஞ்சுகிறான்.. அந்தப் பவித்ரா என் முன்னால் நின்று பேசக்கூடப் பயப்படுவாள்.. இன்றைக்கு என்னை நிற்க வைத்து அத்தனை கேள்விகள் கேட்கிறாள். மனசு தாங்கலைடி.. அதான் என்னென்னவோ பேசிட்டேன்.. மனசில் எதையும் வைச்சுக்காதே.."

சரியென்பதாய் தலையாட்டினாள் மாலினி..

"என்கூட பேச மாட்டியா..? இந்த ரூமுக்குள் வருகிறப்போ நான் உன் காதலன் மட்டும்தாண்டி.. இப்போ.. உன் புருஷன்.. உன் புருஷன்கிட்ட நீ கோபப் படுவியா..?"

மாலினி சிரிக்க முயன்றாள்.. அவளுக்கு சிரிப்பு வரவில்லை..

"என் கோபத்தை நான் யார்கிட்ட காட்டுவேன்னு சொல்லு.. உன்கிட்டதான் காட்ட முடியும்.. நான் எங்கே போவேண்டி..? அதான் உன்னிடம் வந்து கொட்டிவிட்டேன்.."

மாலினியின் கண்கள் கலங்கின.. அவள் உதட்டைச் சுளித்து இமைகளைக் கொட்டி தன்னை சரிப்படுத்திக் கொண்டாள்..

"போனது போகட்டும்.. விட்டுவிடு.. இனி எல்லாத்தையும் நான் பார்த்துக்குவேன்.. காயத்ரியின் கல்யாண சமயத்திலே எந்தப் பஞ்சாயத்தும் வேண்டாம்.. அவ கல்யாணம் முடியட்டும்.. தினாவிடம் நான் பேசிக்கறேன்..

நான் சொன்னால் அவன் கேட்டுக்குவான்.. பவித்ராவைப் பெண் கேட்டுப் போய்விட்டால் அவளும் சமாதானமாகிடுவா.. நீ மனதைப் போட்டு உழப்பிக் கொள்ளாதே..."

மாலினியின் அமைதியான முகத்திலிருந்து பிரபாகரனால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.. சோர்வாக நின்றிருந்தவளை பரிவோடு பார்த்தான் அவன்..

"உன் தூக்கத்தை கெடுத்துட்டேனில்ல..? போகுது போ.. ஆனா.. நீ என் நிம்மதியையும் அமைதியையும்

மீட்டுக் கொடுத்துட்ட.. நீ மட்டும் எதைப் பற்றியும் யோசிக்காமல் உன்னை என்னிடம் கொடுக்கலைன்னா நான் என்னவாகியிருப்பேன்னு எனக்கே சொல்லத் தெரியவில்லை மாலினி. எல்லாத்துக்கும் தேங்க்ஸ்..."

சுவரில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தவளின் கன்னம் தொட்டு வருடி அவளது நெற்றியில் முத்தமிட்டான் பிரபாகரன்.. ஏதோ நினைவுக்கு வந்தவனாக.. அவள் முகம் பார்த்தான்..

"காயத்ரியின் கல்யாணத்துக்கு உனக்கும் சசிக்கும் ஒன்றுபோல ஒரே நிறத்தில் பட்டுப் புடவை எடுத்திருக்-காங்க அம்மா.. உன்னிடம் கொடுத்தாங்களா..?"

மாலினி பேசாமல் இருந்தாள்..

"அப்புறம்.. இந்தக் கல்யாணத்துக்கு சென்னையில இருந்து உன் குடும்பத்தார் வருவாங்க.."

மாலினிக்கு இது புதிய செய்தி.. தினமும் போனில் பேசும் அவளுடைய குடும்பத்தார் ஏன் இதை அவளிடம் சொல்லவில்லை..?

"சசியின் வீட்டுக்கு அம்மாவும் நானும் நேரே போய் கல்யாணப் பத்திரிக்கை வைத்துவிட்டு வந்தோ மில்லையா.. அன்றைக்கே சென்னைக்கு காரை விடச்சொல்லி அம்மா சொல்லிட்டாங்க.. சசியின் குடும்பத்தைப் போல மாலினியின் குடும்பமும் நம்ம

சம்பந்தக்காரங்க குடும்பம்தானே.. நேரில் போய் அழைக்கணும்னு சொல்லிட்டாங்க.. எனக்கு ஹெவி வொர்க்.. உன்னிடம் செல்போனில் பேசக்கூட முடியவில்லை.. இதையும் சொல்ல முடியலை.."

மாலினியின் விழிகளில் யோசனை வந்திருந்தது..

"கிளம்புகிறேன்டி.. சமர்த்தாய் இரு.. ஒரு நான்கு நாள்கள் மட்டும் பொறுத்துக்க.. கடமையை முடிச்சிட்டு உன்கிட்ட திரும்பி வந்துவிடுகிறேன்.. அதுக்குப் பின்னால உன்னை ஊரறிய என் பெண்டாட்டியாக்குறது தான் என் முதல் வேலை. அதுக்கப்புறம் இந்த மாதிரி கச்சடா-வெல்லாம் உனக்கும் எனக்கும் நடுவே வரவே வராது.."

மாலினி எதையோ சொல்லத் துடித்தாள்.. ஆனால் சொல்லவில்லை. பிரபாகரனுக்கு நின்று பேச நேரமில்லை.

"மத்தவங்களுக்காக பாவப்படாதே.. நீ உன்னை மட்டும் பார்த்துக்க.. எனக்கு நீ மட்டும்தான் முக்கியம்.. யாருகிட்டயும் எதையும் பேசாதே.. தள்ளி நில்லு.. நீ உன்னைப் பார்த்துக்கிட்டால் தான் நான் நிம்மதியாக கல்யாண வேலைகளைப் பார்க்க முடியும். என்ன.. பார்த்துக்குவியா..?"

மாலினியின் தலை மேலும் கீழும் அசைந்தது..

"குட் கேர்ள்.. பை.. கதவைச் சாத்திக்க.."

பிரபாகரன் போய்விட்டான்.. கதவை அடைத்து விட்டு.. அதன் மீது சாய்ந்து சரிந்து அமர்ந்த மாலினி.. முழங்கால்களில் தலையைப் புதைத்து கண்ணீரை உகுத்தாள்..

சற்றுமுன் பிரபாகரனிடமிருந்து வெளிப்பட்ட வார்த்தை சாட்டையடிகளால் அவள் மனம் ரணப்பட்டுக் கிடந்தது..

அந்த மரண காயம் சாகும் வரை ஆறாது என்பதை உணர்ந்தவளாக அசைவற்று அமர்ந்திருந்தாள் மாலினி..

கட்டிலின் மீது அவள் பார்வை படிந்தது.. சற்று முன்னால் அதில் நிகழ்ந்தவற்றை நினைத்துக் கொண்டவளின் முகம்

மென்மையானது.. அவளது காயத்தை மருந்திட்ட மயிலிறகால் தடவிக் கொடுப்பதைப் போல அந்த நினைவு அவளது மனதை தடவிக் கொடுத்துச் சென்றது..

அவளை அடைந்த பின்னால் பிரபாகரனின் முகத்தில் தெரிந்த அமைதியையும் நிம்மதியையும் நினைத்துக் கொண்டாள்.. மயிலிறகின் வருடல் அதிகமானது..

ஜன்னலில் வெளிச்சம் பரவத் தொடங்கியது.. மாலினி எழுந்து குளியலறைக்குள் புகுந்தாள்.. அவள் குளித்து உடை மாற்றிக் கொண்டிருந்தபோது.. அறைக்கதவு தட்டப் பட்டது.. திறந்தாள்..

"காபி குடிச்சதும் அம்மா உங்களை அவங்க ரூமுக்கு வரச் சொன்னாங்கம்மா.." என்றாள் செந்தாமரை..

தலையை அசைத்த மாலினி, காபியை குடித்தபடி செந்தாமரையின் முகத்தைப் பார்த்தாள்.. அவள் முகத்தில் எதிர்பார்ப்பு தெரிந்தது..

"என்ன செந்தாமரை இப்படிக் குண்டடிச்சிட்ட..? விசிலை ஊதினா சத்தம் வரும்.. உடம்பு ஊதினா சத்தம் வருமா?" என்று ஒரு வார இதழில் படித்த ஜோக்கை இயல்பாகக் கூறினாள்..

செந்தாமரை கேட்டது கிடைத்துவிட்ட மகிழ்வோடு வெளியேறினாள்..

## 101

**என் நெஞ்சில் எழும் நினைவலைகள்..**

**நிற்காமல் சுழன்றடிப்பதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

நர்மதாவின் அறைக்கதவை மெதுவாக தட்டினாள் மாலினி..

"உள்ளே வாம்மா.." என்ற அன்பான நர்மதாவின் குரல் கேட்டது..

உள்ளே போனாள்.. அறைக்குள் சசிரேகாவும் நின்று கொண்டிருந்தாள்..,

"இந்தாம்மா..."

ஒரு தட்டில் சேலை.. பூ.. நகைப்பெட்டியுடன் நர்மதா நீட்டினாள்.. ஏற்கெனவே பிரபாகரன் சொல்லியிருந்தாலும் அதை வாங்கிக் கொள்ள மாலினி தயங்கினாள்..

"என்னம்மா யோசிக்கறே.. உனக்கும் சசிக்கும் ஒன்றுபோல புடவையும் நகையும் எடுத்திருக்கிறோம் வாங்கிக்க.."

"புடவை போதும் அத்தை.. நகை வேண்டாம்.."

"ஏன் வேண்டாம்.. என்கிட்ட மறுத்துப் பேசுவியா..?"

சசிரேகா கண்ஜாடையில் வாங்கிக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்த, மாலினி வாங்கிக் கொண்டாள்.. அறையை விட்டு வெளியே வரும்போது..

"இன்னிக்கு சாயங்காலம்.. சித்தப்பா.. சித்தி.. அண்ணா எல்லோரும் வருகிறார்களாமே.. அப்பா சொன்னார்.." என்றாள் சசிரேகா..

'ம்ஹூம்.. ஊருக்கே தெரிந்திருக்கு.. எனக்குத் தெரியலை...'

"என்னடி என்னவோ போல இருக்கே..?" சசிரேகா கவலையுடன் மாலினியின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்..

"காய்ச்சல் அடிக்குதே.." என்றாள் கவலையுடன்..

"லேசான காய்ச்சல்தான்.. டேப்லெட் போட்டால் சரியாகிடும்.." மாலினி, சசிரேகாவை அமைதிபடுத்துவதைப் போல சிரித்தாள்..

"முதலில் அதைச் செய்.. நான் விருந்தாளிகளை கவனிக்கப் போகிறேன்.." சசிரேகா அவசரமாய் போய் விட்டாள்..

மாலினி படியேறினாள். எதிரே தினகரன் அவசரமாக வந்தான்..

"மொட்டை மாடிக்கு வா.. உன்கூடப் பேசணும்.."

மாலினியின் பதிலை எதிர்பார்க்காமல் அவன் முன்னால் சென்றுவிட.. கையில் நர்மதா கொடுத்துவிட்ட பொருள்களை வைத்திருந்த மாலினி.. அறைக்கதவை திறந்து அவைகளை வைத்துவிட்டு வெளியே வந்தாள்..

மாடி பால்கனியில் சோகச் சித்திரமாய் பவித்ரா அமர்ந்திருப்பது அவளது கண்ணில் பட்டது.. கண்களில் யோசனை படர.. மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் ஏறினாள்..

"என் பின்னாலேயே வரவேண்டியதுதானே..? எவ்வளவு நேரமாக காக்க வைக்கிறாய்..?"

குட்டி போட்ட பூனையைப் போல உலவிக் கொண்டிருந்த தினகரன் படபடத்தான்..

அத்தனை நாள்களாக அவன் அந்த உரிமையையும் கோபத்தையும் காட்டியதில்லை என்பது மாலினியின் மனதில் பதிந்தது..

'கையெழுத்து இல்லாத.. காதல் கடிதத்திற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா?' மாலினியின் பார்வையில் ஓர் உதாசீனமும் நிமிர்வும் வந்திருந்தன..

"இந்தப் பழக்கம் எப்போதிருந்து வந்தது தினகரன்?" என்றாள் அவள் அதட்டலாக...

"கோபமா மாலினி..? உனக்குப் பிடிக்காத பழக்கம் எது எது என்கிட்ட இருக்குன்னு சொல்லு.. நான் மாற்றிக் கிறேன்.." தினகரன் குழைந்தான்...

"சசிக்கலை.." என்றாள் மாலினி எரிச்சலுடன்...

தினகரனின் முகம் மாறியது.. காதல் கடிதம் கொடுத்தவள் பேசுகிற பேச்சாக இது இல்லையே...

"முதலில் வா.. போன்னு கூப்பிடுவதை நிறுத்துங்க இதுக்கு முன்னால் நீங்க இப்படி என்னைக் கூப்பிட்டது இல்லையே.."

"இதுக்கு முன்னால் இதை நீ எனக்கு கொடுத்ததும் இல்லையே.."

தினகரன் காதல் கடிதத்தை நீட்டினான்.. அதை வாங்கிய மாலினி.. அதன் எழுதப்படாத பின்பக்கத்தை திருப்பி.. மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் வைத்தாள்..

"பேனாவைக் கொடுங்க.." தினகரனிடம் கை நீட்டினாள்..

அவன் புரியாமல் எடுத்துக் கொடுத்தான்.. அதை வாங்கியவள் மடமடவென நர்மதாவின் பெயரை எழுதி.. அவர்களின் வீட்டு முகவரியை எழுதினாள்.. தினகரனிடம் பேனாவையும் அந்தக் கடிதத்தையும் நீட்டினாள்! அவன் வாங்கிக் கொண்டான்..

"பாருங்க.. உங்க முன்னாலே தான் எழுதினேன்.. என்கையெழுத்து இதுதான்.. உங்க முட்டைக் கண்ணை முழிச்சு நல்லா பார்த்துக்கங்க.."

தினகரன் திகைப்புடன் அதைப் பார்த்தான்.. கடிதத்தில் இருந்த கையெழுத்தும் மாலினியின் கையெழுத்தும் வேறு வேறாக இருந்தன...

"அப்போ..?"

"இதை நான் எழுதவில்லை.. யூ நோ மிஸ்டர் தினகரன். நான் வேறு ஒருத்தரைக் காதலிக்கிறேன். என் மனதையும் உடலையும் அவருக்கு சொந்தமாக்கிக்கிட்டார் அவர்.. நான் இன்னொருவரின் உடைமை. ஸோ.. என்னைக் காதலிக்கிறேன்னு வாயால்கூட சொல்லி வைக்காதீங்க. அது பெரிய பாவம்.."

"மாலினி..."

"நீங்க என் பெயரைக்கூடச் சொல்லக்கூடாது. இதுக்கு மேல் என் காதலைப் பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன்.. நான் இன்னொருவரின் மனைவி. அதை மனதில் வைத்துக் கொண்டு பேசுங்க.."

"இந்தக் கடிதத்தை எழுதியது..?"

"பவித்ரா.."

"பவித்ராவா..?"

தினகரன் ஆச்சரியப்பட்டுப் போனான். அவனைக் கண்டதும் நாணத்துடன் தலை கவிழ்ந்து கொள்ளும் பவித்ராவின் மலர் முகம் அவனது நினைவில் எழுந்தது..

'அவளா என்னை இந்த அளவுக்கு காதலிக்கிறாள்..?'

"பவித்ராவேதான்.. அவளுக்கு சிறுவயதிலிருந்தே உங்கள் மேல் பிரியமாம்.. அதை வெளியே சொல்ல முடியாத குடும்பச் சூழ்நிலை.. மனதில் போட்டு புதைத்துக் கொண்டு இத்தனை நாளும் இருந்திருக்கிறாள்.. இப்போது இரண்டு மாத காலம் உங்கள் அருகிலேயே இருந்துவிட்டவளுக்குப் பிரிந்து போக முடியவில்லை.. இன்றைக்கு காயத்ரியின் கல்யாணத்திற்காக மண்டபத்துக்கு கிளம்பினால் நாளைக்கு கல்யாணம் முடிந்த கையோடு மண்டபத்திலிருந்தே அவளுடைய ஊருக்கு கூப்பிட்டுக்கொண்டு போய் விடுவார்களாம். அவள் என்ன ஸ்வேதாவா..? இங்கேதான் இருப்பேன்னு அடம்பிடிக்க? நேற்று உங்களிடம் காதலைச் சொல்ல முடியலைன்னா.. அதுக்கப்புறம் எப்போதுமே சொல்ல முடியாதுன்னு அவளுக்குள் ஒரு பயம். அதனால் என்னிடம் கெஞ்சினாள். நான் அவளுடைய கடிதத்தை உங்களிடம் கொடுத்து விவரம் சொல்ல வந்தேன். ஸ்வேதா வந்துவிட்டாள்.. சரி.. பவித்ராவின் கடிதத்தைத்தான் சேர்த்துவிட்டோமேன்னு எதுவும் சொல்லாமல் வந்துவிட்டேன். பவித்ரா இப்படிக் கையெழுத்தைப் போடாமல் என் கழுத்தை அறுத்து வைப்பாள்னு நான் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை தினகரன்.."

"ஐ ஆம் ஸாரி மாலினி.."

"நீங்கள் எனக்குக் கூடப் பிறந்த பிறப்பைப் போல தினகரன். உங்கள் மேல் சகோதர பாசம்தான் எனக்கு வந்திருக்கிறது. ஒரு நாள்கூட உங்களை நான் வித்தியாசமாக நினைத்ததில்லை. பவித்ராவின் கடிதத்தை நான் பிரித்துப் பார்க்கவில்லை தினகரன். அது நாகரிகமாகுமா.. சொல்லுங்க..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்..."

"நான் அவள் மேல் இரக்கப்பட்டேன்.. அவள் ரொம்ப நல்ல பெண் தினகரன். உங்களை உண்மையாக காதலிக்கிறாள்.. உயிருக்குயிராய் காதலிக்கிறாள். நீங்க அவளுக்கு கிடைக்கலைன்னா உயிரையே விட்டு விடுவாள்.."

"ஓ.. நோ.."

"இந்தக் காதல் காணக் கிடைக்காதது தினகரன்.. இதை கைநழுவ விட்டு விடாதீங்க.. பவித்ராவைப் போன்ற ஒரு பெண்ணின் காதல் கிடைக்க நீங்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்..."

இதுதான் மாலினி.. சின்னத்தனங்கள் அற்றவள்.. அவளை மிகவும் தாழ்வாக பவித்ரா பேசியிருப்பதை அறிந்த பின்னாலும் அவளுடைய காதலையும் அவளையும் உயர்த்திப் பேச மாலினியால் மட்டுமே முடியும்...

ஒரு வகையில் பவித்ராவின் கேள்வியில் நியாயம் இருப்பதை அவள் உணர்ந்தாள். அது.. பவித்ராவின் மனதையும் காதலையும் அறிந்தும் ஏன் மாலினி அதை தினகரனிடம் சொல்லவில்லை என்பதுதான்..

தினகரனிடம் இயல்பாக பேசக்கூடியவள் மாலினி. பேச முடியாதவள் பவித்ரா.. அப்படியிருக்கையில் பின்னவளின் காதலை முன்னவள் தினகரனுக்கு தெரியப்படுத்தியிருக்கலாமே என்ற மனத்தாங்கல் பவித்ராவின் மனதில் எழுவது இயல்புதான்..

ஆனால், பவித்ரா கேட்டுக் கொள்ளாமல் அவளைப் பற்றி தினகரனிடமும் பிரபாகரனிடமும் மாலினி பேசப் பிரியப்படவில்லை..

பெரிய குடும்பத்து மனிதர்களிடையே யார் மனதில் என்ன இருக்கிறது என்று யாராலும் கணிக்க முடியாது என்ற நினைவு அவளுக்கு...

அவர்களின் குடும்ப அரசியலில் தலையிடுவது அநாகரிகம் என்று அவள் நினைத்தாள்.. தினகரனின் மனதில் என்ன இருக்கிறது என்று அவனைப் படைத்த பிரம்மாவே வந்து சொன்னால்தான் உண்டு...

காலையில் மாலினியை சைட் அடித்து வைப்பவன்.. வெளியே போகும்போது எதிர்படும் பெண்களை யெல்லாம் சைட் அடித்து விட்டு வீடு வந்து சேர்ந்து.. வீட்டில் இருக்கும் பவித்ராவிடமும் கடலை போட்டு வைப்பான்..

அப்படிப்பட்டவனிடம் போய் பவித்ராவின் காதலைப் பற்றி மாலினியால் எப்படிப் பேச முடியும்?

அவன் இயல்புக்கு பவித்ராவை அவன் விரும்பாமல் போய்விட்டால் பவித்ராவின் காதல் வெளிப்பட்டும் பிரயோஜனமில்லாமல் போய்விடுமே..

பிரபாகரனிடம் பவித்ராவைக் காட்டிக் கொடுக்க முடியாது. மாலினிதான் பாவம் என்ன செய்வாள்..?

பவித்ரா மட்டும் ஒரு வார்த்தை.. ஒரேயொரு வார்த்தை.. என் காதலைப் பற்றி பெரியத்தானிடம் பேசு என்று மாலினியிடம் கேட்டுக் கொண்டிருந்தால் மாலினி கட்டாயம் அதைச் செய்திருப்பாள்...

பிரபாகரனுக்கு விஷயம் தெரிய வந்திருந்தால் தம்பியிடம் பேசி அவனை சம்மதிக்க வைத்திருப்பான்.. எல்லாம் எளிதாக சுபமாக முடிந்திருக்கும்.

ஆனால், பவித்ரா அதைச் செய்யவில்லை.. அவளுடைய காதல் வெளிப்பட்டுவிட்டால் குடும்பத்தில் உள்ள

பெரியவர்கள் அவளைத் தாழ்வாக நினைத்து விடுவார்களே என்று பயந்தாள்..

வருடக் கணக்கில் ஸ்வேதா இருக்கும் வீட்டில்.. பவித்ராவுக்கு ஆதரவாக மாலினி எதையாவது பேசி வைக்கப் போக.. அது வெளியே தெரிந்துவிட்டால் ஸ்வேதாவைப் பிடிக்காமல்தான் மாலினி அப்படிச் செய்தாள் என்ற பழி அவள் மேல் வந்தவிடாதா..? ஆனானப்பட்ட நர்மதாவே மாணிக்கவாசகத்திடம் பொறுமையாகப் போகும் போது மாலினி எந்த மூலைக்கு?

என்னதான் பிரபாகரன் அவளைக் காப்பாற்றி விடுவான் என்றாலும், காதலித்தவனுக்கு தர்மசங்கடத்தை உண்டு பண்ணிவிடக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சி மாலினிக்கு..

என்னதான் ஏழு கடல்.. ஏழு மலை தாண்டி ஓடி ஒளிந்தாலும் வருகின்ற துன்பம் வந்துதான் தீரும் என்பதைப் போல என்னதான் மாலினி யோசித்து ஜாக்கிரதையாய் செயல்பட்டாலும் பிரபாகரனுக்கு தர்மசங்கடத்தை உண்டு பண்ணாமலிருக்க அவளால் முடியாமல் போனது...

பவித்ரா கூழுக்கும் ஆசை.. மீசைக்கும் ஆசை என்ற நிலையில் இருப்பவள்.. அவளுக்கு தன் காதலும் நிறைவேற வேண்டும்.. அதேசமயம் அவளுடைய பெயரும் வெளியே வரக்கூடாது..

பவித்ராவின் மீது நட்பு பாராட்டிய ஒரே குற்றத்திற்காக மாலினி சிலுவை சுமந்துவிட்டாள்..

சுமந்த சிலுவையின் பாரத்தோடு பவித்ரா கேட்டதைச் செய்தும் விட்டாள்.. தினகரனிடம் பவித்ராவின் காதலைப் பற்றிச் சொல்லிவிட்டாள்..

"என்னிடம் அவள் பேசியிருக்கலாமே மாலினி.."

"பயம்.. தயக்கம்.. வெட்கம்.. வேறு என்ன?"

"ஐ ஆம் ஸாரி.. உங்களிடம் தப்பாக பேசிட்டேன்.."

"லீவ் இட்டுன்னு அதை என்னால் சொல்லிவிட முடியாது. நான் என்னவோ பிள்ளையாரைத்தான் பிடிக்கப் போனேன்.. அது ஆஞ்சநேயராக வந்து அமைந்துவிட்டது.."

"எங்களால் உங்களுக்கு மனவருத்தம்.."

பன்மையாக தினகரன் பேசியதிலிருந்து அவன் பவித்ராவுடன் ஒன்றுபட்டுவிட்டான் என்பதை உணர்ந்து கொண்டவளாக மாலினி லேசான தலை அசைவுடன் தினகரனிடம் விடை பெற்றுக் கொண்டாள்..

அவளையறியாமல் உருவாகிவிட்ட சூழல் சரியாகி விட்டதில் அவளுக்குள் நிம்மதி ஏற்பட்டது.

இனி பிரபாகரனுக்கு தினகரனிடம் பேச வேண்டிய சங்கடம் ஏற்படாது. தினகரன் எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டான்..

அவள் மொட்டை மாடியிலிருந்து கீழே செல்ல படிக்கட்டுக்கு போனபோது.. மேல் படியில் பவித்ரா நின்றிருந்தாள்..

'இவள் கீழே பால்கனியில் உட்கார்ந்திருந்தாளே..' என்று யோசிக்கும்போதே.. பளிச்சென்று மாலினிக்கு விஷயம் புரிந்துவிட்டது..

தினகரன் எங்கே சென்றாலும் பவித்ராவின் பார்வை அவனைப் பின்தொடரும் வழக்கமுடையது. அவள் தினகரன் மொட்டை மாடிக்குச் செல்வதைக் கவனித்திருக்க வேண்டும். அவனைப் பின்தொடர்ந்து மாலினி செல்வதைக் கண்டதும் அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க பின்தொடர்ந்திருக்க வேண்டும்...

'காதல் ஒரு மனுஷியை என்ன வேலைகளையெல்லாம் செய்ய வைக்கிறது..' மாலினிக்குள் எண்ணம் வந்தது..

பவித்ராவா இப்படி ஒட்டுக் கேட்க முயன்றாள் என்ற கேள்வி அவளுக்குள் எழுந்தபோதே.. முதல் நாள் இரவே அவள் அந்த வேலையை ஆரம்பித்து விட்டாள் என்பது மாலினியின் நினைவுக்கு வந்தது..

மாலினியின் பார்வையைக் கண்ட தினகரன், அவள் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்

என்று புருவங்களை உயர்த்தியபடி அருகே வந்தான். பவித்ராவைப் பார்த்ததும்.. காதல் பொங்க..

"பவித்ரா.." என்று உணர்ச்சிப் பொங்க அழைத்தான்..

பவித்ரா தன் காதுகளை நம்ப முடியாமல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் கண்களில் தெரிந்த காதலைக் கண்டதும் திக்குமுக்காடி விட்டாள்..

வழக்கம் போல் பேச வார்த்தைகள் வராமல் திணறிக் கொண்டிருந்தவளிடம்..

"முட்டாள்.. என்னிடம் பேச உனக்கு என்ன பயம்? வீணாக மாலினியை ஏன் இதில் இழுத்துவிட்டாய்..? பார்.. அவங்களுக்கு நம்மால எத்தனை தொந்தரவு..?" என்று உரிமையாக கடிந்து கொண்டான் தினகரன்..

"அத்தான்.. நான்.. வந்து.."

"அதுதான் வந்துவிட்டாயே.. என்னைப் போன்ற ஆளுக்கு உன்னைப் போல ஒரு பேசாமடந்தைக் காதலி அமைந்திருக்கிறாள் பாரேன்.. இதுதான் இறைவனின் விளையாட்டுப் போல.."

இதைக் கேட்டவுடன் பவித்ராவின் முகம் வாடி விட்டது...

"அப்போ என்னைப் பிடிக்கலையா அத்தான்.."

"ஹப்பா.. இத்தனை வருஷத்தில் நான்கு வார்த்தைகளைச் சேர்ந்தாற் போல இப்போதுதான் பேசியிருக்கிறாய். ஸோ.. நீ திக்கு வாயில்லை என்று கன்ஃபர்ம் ஆகிவிட்டது.. பிழைத்தேன்.."

"போங்க அத்தான்.." என்று பவித்ராவும் சிணுங்கவும்,

"யோசித்துச் சொல்லு பவித்ரா.. கல்யாண வீட்டில் என்னை கரெக்ட் பண்ணன்னே டீன் ஏஜ் பட்டாளம் கிளம்பி வந்திருக்குது.. நீ போன்னு சொன்னால் அவங்களிடம் போய்விடுவேன்.." என்று சொன்னான் தினகரன்..

"ஐயோ அத்தான்.." பவித்ரா மருண்டு விழித்தாள்..

"மக்கு.. இத்தனை பயந்தாகுளியா நீ.. விளையாட்டுக்குச் சொன்னேன்.." என்று சமாதானப் படுத்தவும் ஆரம்பித்தான் அவன்..

அவர்களை பேசவிட்டு விலகி மாலினி படிக்கட்டில் கால் வைத்தபோது பவித்ராவின் கரம்.. அவளது கரத்தைப் பற்றியது..

"மாலினி.." நன்றிப் பெருக்குடன் பவித்ரா அழைத்தாள்..

மாலினியின் கை பவித்ராவின் கைக்குள் அகப்படாமல் விலகியது.. அவள் முகம் கடினமாக இருந்தது.. தினகரன் அறியாமல் தன் உதாசீனத்தையும் புறக்கணிப்பையும் பவித்ராவிற்கு உணர்த்திவிட்டு மாலினி படிக்கட்டுகளில் விரைந்து இறங்கிவிட்டாள்..

பவித்ரா விக்கித்துப் போய் விட்டாள்.. அவளது மனக்கண்ணில் மனம்விட்டுச் சிரித்துக் கொண்டிருக்கும் மாலினியின் முகம் தோன்றியது. நட்புடன் கை நீட்டிய அவளது கரம் தோன்றியது..

அந்த மாலினி இன்று கரம் விலக்கி இறுக்கமான முகத்துடன் பவித்ராவை விட்டு விலகிப் போகிறாள்...

இனி என்றுமே அவளது நட்பு திரும்பக் கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட பவித்ராவிற்கு கதறியழ வேண்டும் போல இருந்தது..

## 102

**உனைப் பார்க்காதபோது பேச நினைக்கும் வார்த்தைகள்**

**உனை பார்க்கின்றபோது தொண்டையில் சிக்கிக் கொள்வதை**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஒன்று கிடைத்தால் ஒன்றை இழக்க வேண்டும் என்பது விதி போல.. கிடைக்கவே கிடைக்காது என்று ஏங்கித் தவித்த காதல் பவித்ராவிற்கு கிடைத்துவிட்டது.. கிடைப்பதற்கரிய நட்பாக கிடைத்த மாலினியின் நட்பு அவளைப் பிரிந்து போய்விட்டது..

காணக் கிடைக்காத பொக்கிஷம் மாலினி.. அவள் தன் காதலனிடம்கூடச் சொல்லக்கூடாது என்று தோழியின் அந்தரங்கத்தை மறைத்து வைத்து பாதுகாத்தாள். அதுவே அவளுக்கு எதிராகத் திரும்பியது. இருந்தும் அவள் பொய்யாமொழிப் புலவரின் வாக்குப்படி..

"இன்னா செய்தாரை ஒறுத்தல்-அவர்

நாண நன்னயம் செய்துவிடல்.."

என்று பவித்ராவிற்கு நன்மை செய்துவிட்டுப் போய் விட்டாள். இப்போது மாலினியைக் குற்றம்சாட்டிய பவித்ரா தன் மனச்சாட்சியின் முன் குற்றவாளியாக தலைகுனிந்து நின்றாள்..

தினகரன், பவித்ராவுடன் மனம்விட்டுப் பேசினான்... தன்னை இந்த அளவுக்கு காதலிக்கும் காதலியை அவனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.. அவர்கள் மொட்டை மாடியிலிருந்து இறங்கிவரும்போது மனதால் ஒன்றுபட்டவர்களாக இறங்கி வந்தார்கள்..

இதை அறியாதவளாக ஸ்வேதா.. தான் எடுத்த காரியத்தை முடித்துவிட்ட பெருமையை மாணிக்கவாசகத் திடம் பீற்றிக் கொண்டிருந்தாள்..

"ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்து விட்டேன் அப்பா.. தினகரனின் வாயால் மாலினியின் மேல் அவனுக்கிருக்கும் காதலை சொல்ல வைத்து விட்டேன்.. அதை பிரபாகரனும் பவித்ராவும் ஒரே நேரத்தில் கேட்கவும் வைத்துவிட்டேன். காதலில் தோற்றுப் போய் விட்ட பவித்ரா, கட்டாயம் பிரபாகரனை பிடிபிடியென்று பிடித்திருப்பாள்.. அவன் அந்தக் கோபத்தை அப்படியே மாலினியிடம் காட்டியிருப்பான்.. இனி பவித்ராவும் தினகரனின் பக்கம்

திரும்ப மாட்டாள்.. பிரபாகரனும் மாலினியின் பக்கம் பார்க்க மாட்டான்..."

"ஏம்மா! இந்த தினகரன், மாலினியை கரெக்ட் பண்ணிவிட்டான்னா என்ன பண்ணுகிறது..?"

'கரெக்ட்' பண்ணும் விஷயத்தை பெற்ற மகளிடம் கேட்கும் உணர்வின்றி மாணிக்கவாசகம் கேட்க.. பரிமளம்..

"நல்ல அப்பன்.. நல்ல மகள்.." என்று தலையில் அடித்துக் கொண்டாள்..

"இல்லப்பா.. மாலினி அதற்கு இடம் கொடுக்க மாட்டாள்.. அண்ணனை காதலித்துவிட்டு தம்பியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் ரகம் அவளில்லை.."

ஸ்வேதா என்னவோ.. வெளிநாட்டு சதியை முறியடித்து விட்ட முக பாவனையுடன் கூறிக் கொண்டிருக்க.. பரிமளம் இடைமறித்தாள்..

"அம்மா.. ராணி மங்கம்மாதேவி.. மங்கம்மா சபத்தை முடிச்சிட்டயா..? இனியாவது பெண்ணாய்.. லட்சணமாய் எங்ககூட கிளம்பி வருகிறாயா..?"

"இனிமேல் எனக்கு இங்கென்னம்மா வேலை?"

பரிமளம் நிம்மதியுடன் அப்போதே மகளின் பொருள்களை அடுக்கி வைக்க ஆரம்பித்தாள்...

காயத்ரிக்கு அழகுபடுத்த வந்திருந்த அழகு நிலையப் பெண்களுக்கு ஆலோசனைகள் கூறி.. காயத்ரியை தயார் செய்து கொண்டிருந்த மாலினி.. சசிரேகா அழைக்கவும் ஹாலுக்கு வந்தாள்..

"என்ன சசி..?"

"சித்தப்பா.. சித்தி.. அண்ணன்.. அண்ணியெல்லாம் வந்திருக்காங்க பாரு.."

மாலினி அவசரமாக வாசலுக்கு ஓடினாள்.. சென்னையிலிருந்து வாடகைக் கார் எடுத்துக் கொண்டு

வந்திருந்த அவளின் குடும்பத்தார் இறங்கி.. அந்த வீட்டை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

"அடேங்கப்பா.. சினிமாவில்கூட நான் இப்பேர்ப்பட்ட மாளிகையை பார்த்ததில்லைங்க.. உங்க பெரியப்பா மக கெட்டிக்காரிதான்.." என்று ராதிகா.. ரஞ்சித்திடம் கூறிக் கொண்டிருந்தாள்..

"அவளா இந்த வீட்டைக் கட்டினாள்..?"

"இந்த வீட்டைச் சேர்ந்தவனை கட்டியிருக்கிறாளே.."

"உனக்கு அப்படி ஒரு கெட்டிக்காரத்தனம் இல்லாமல் போய்விட்டதேன்னு வருத்தமா இருக்கா..?"

"இந்த வாயைப் பிடுங்குகிற வேலையெல்லாம் வேண்டாம்.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்கும்போதே...

"அண்ணா.." என்று மாலினி ஓடிவந்து ரஞ்சித்தை கட்டிக் கொண்டாள்..

"ம்ம்.. உங்க குடும்பத்துப் பெண்களே கெட்டிக் காரங்கதான். பக்கத்தில் நான் நிற்கிறேன்.. பெத்த தாய்.. தகப்பனும் நிற்கிறாங்க.. நேரா ஓடிவந்து உங்ககிட்ட பாசமலரை மலர வைக்கிறாளே.. எனக்கெல்லாம் இந்தக் கெட்டிக்காரத்தனம் வராது.." ராதிகா நொடித்தாள்..

"வந்த இடத்தில் அடக்கி வாசிடி.." ரஞ்சித் முறைத்தான்..

"மாலினி.."

"அம்மா.."

"எப்படிம்மா இருக்க?"

"நல்லாயிருக்கேன்ப்பா.."

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது நர்மதா வாசலுக்கே வந்து விட்டாள்..

"வாங்க.. வாங்க.." என்று அவர்களை வரவேற்றவள்..

"மாலினி.. மாடியில் உன் ரூமுக்கு பக்கத்து ரூம் களில் இவங்களை தங்க வையம்மா.." என்று அன்பொழுக கூறினாள்..

ஜானகிராமனுக்கு மகளுக்கு அந்த வீட்டிலிருக்கும் செல்வாக்கைக் கண்டு ஒரே வியப்பு.. ராதிகாவிற்கு மனதிற்குள் பட்சியே கூவ ஆரம்பித்து விட்டது..

'இந்த வீட்டில் கல்யாணமாகாத இரண்டு ஆண் பிள்ளைகள் இருக்கிறதா சொல்லிக்குவாங்களே.. அவர்களில் யாருக்காவது ஒரு ஆளுக்கு இவளை பிடித்துப் போய் விட்டதா..?'

அவர்கள் மாடியேறினார்கள். சற்று நேரத்தில் காயத்ரியை பெண்ணழைத்துக் கொண்டு போக கார்கள் வந்துவிட.. அவர்களும் திருமண ஜோதியில் ஐக்கியமாகி.. கூட்டத்தோடு திருமண மண்டபத்திற்கு கிளம்பினார்கள்..

மறுநாள் காலையில் நடந்த திருமணத்தில் சசிரேகாவும் மாலினியும் ஒரே நிறத்தில்.. ஒரே டிஸைன் பட்டுப் புடவைகளை அணிந்து கொண்டு திருமண மண்டபத்தில் வலம் வந்ததைக் கண்ட காவேரிக்கு மனதிற்குள் பூரிப்பு..

"என்னவோ நல்லது நடக்கப் போகுதுங்க.." கணவனிடம் கூறினாள்..

"எனக்கும் அப்படித்தான் தோணுது.." நம்ப முடியாத திகைப்புடன் ஜானகிராமன் பதில் சொன்னான்..

"மார்த்தாண்டத்துக்கு அவ வேலைக்குப் போக வேணாம்னு சொன்னீங்க.."

"அதிர்ஷ்டதேவதை அழைக்குதுன்னு அப்ப எனக்குத் தெரியாமல் போச்சே.."

திருமண மண்டபத்தில் நிற்க நேரமில்லாமல் அலைந்து கொண்டிருந்தான் பிரபாகரன்.. முகூர்த்த நேரத்தில்.. காயத்ரியின் திருமணம் நல்ல முறையில் நடைபெற்றதும் அவனது முகத்தில் நிம்மதியும் கடமையை முடித்து விட்ட

நிறைவும் வந்தது.. அதை அவனறியாமல் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலினி..

அன்று மாலையில் அவளுடைய குடும்பம் கிளம்பிய போது மாலினியும் தன் பெட்டிகளை எடுத்து வைத்தாள்..

"என்னம்மா.." ஜானகிராமன் புருவங்களை உயர்த்தினார்..

"நானும் வருகிறேன்ப்பா.." அமைதியாகச் சொன்னாள் மாலினி..

"உன் வேலை..?"

"ரிஸைன் பண்ணிட்டேன்.."

"ஏன்..?"

"பிடிக்கலைப்பா.. எனக்கு மார்த்தாண்டத்தில் இருக்க போரடிக்குது. நீங்க சொல்வதுதான் சரி.. சென்னையிலேயோ.. இல்லை.. பெரிய சிட்டிகளிலேயோ வேலை கிடைத்தால் போய்க்கறேன்.. இந்த வேலை வேண்டாம்.."

இப்படிப் பேசுபவளை எப்படி மறுத்துப் பேசுவது என்பது புரியாமல் ஜானகிராமனும் காவேரியும் விழித்தனர். கனவு கலைந்து போன ஏமாற்றம் அவர்களுக்கு.. இப்படி ஒரு நொடியில் அந்த விட்டுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லாமல் மாலினி செய்துவிடுவாள் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை..

"நல்லா யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தயா..?" கடைசி முயற்சியாக ஜானகிராமன் கேட்டுப் பார்த்தார்..

"ஆமாம்ப்பா.. யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்.." மாலினி தெளிவாக பதில் சொல்லிவிட்டாள்..

காயத்ரியுடன் அவளது புகுந்த வீட்டிற்கு நர்மதாவும் அவளுடைய குடும்பத்தாரும் போய்விட்டதால்.. பிரபாகரனும் சசிரேகாவும் அப்போது வீட்டில் இல்லை..

ஆளவந்தார் தரப்பு.. அவரவரின் குடும்பங்களோடு கிளம்பிவிட்டதால்.. ஸ்வேதாவும் பவித்ராவும் அங்கு

இல்லை.

வேலையாள்கள் மட்டும் இருந்த வீட்டில் மாலினியை தடுத்து நிறுத்த வேண்டிய ஆள்கள் யாரும் இல்லை..

"என்னம்மா நீங்களும் கிளம்புகிறீங்க.." என்று பொன்னி திகைக்க..

"எனக்கு சென்னையில் வேலை கிடைத்திருக்கு பொன்னி.. நான் என் வீட்டு ஆள்களோடு போகிறேன்.. அத்தை வந்தவுடன் சொல்லிவிடு.." என்று கூறி விடை பெற்றுக் கொண்டாள் மாலினி..

"அப்போ.. திரும்பி வர மாட்டீங்களா.." என்று ஏக்கத்துடன் கேட்ட செந்தாமரையின் கன்னம் தட்டி..

"வரமாட்டேன்.." என்று சிரித்தாள் மாலினி..

அந்த வீட்டை விட்டுக் கார் கிளம்பியபோது.. அந்த வீட்டையும் தோட்டத்தையும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள் மாலினி...

வாய்விட்டு வெளிப்படையாக அழ முடியாமல் அவள் மனம் அழுதது..

"இந்த தோட்டத்தில்தான் அவரை முதன்முதலில் பார்த்தேன்.. இந்த நீச்சல்குளத்தின் பக்கத்தில்தான் அவரிடம் மயங்கி நின்றேன்.. இந்த வீட்டின் மொட்டை மாடியில்தான் என்னிடம் அவர் காதலை சொன்னார்.. இந்த வீட்டின் அறையில்தான் என்னை அவர் சொந்தமாக்கிக் கொண்டார்.."

மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்தது..

மாலினி அந்த வீட்டை விட்டுப் போய்விட்டாள்..

இரண்டு நாள்கள் கழிந்த பின்னர்.. மறுவீட்டு விருந்திற்கு காயத்ரியையும் ஷ்யாம்சுந்தரையும் அழைத்துக் கொண்டு திரும்பி வந்த நர்மதாவின் குடும்பம் மாலினியைக் காணாமல் திகைத்தது...

"சசி.. மாலினி போகிறதுக்கு முன்னால் உன்னிடம் எதுவும் சொல்லலையா..?" பிரபாகரன், சசிரேகாவிடம் விசாரித்தான்..

"இல்லையே அத்தான்.. காயத்ரியின் கல்யாணத்துக்கு முதல் நாளில் அவளுக்கு நல்ல காய்ச்சல்.. வாடிப் போயிருந்தாள்.. சரியாய்ச் சாப்பிட வில்லை.. பேசவில்லை. கல்யாண வேலைகளில் என்னாலும் அவளைக் கவனிக்க முடியாமல் போய்விட்டது.." சசிரேகா கையைப் பிசைந்தாள்..

"என்ன நடந்தது பிரபா..?" நர்மதா பெரிய மகனை தனியாக அழைத்து விசாரித்தாள்..

அவன் என்னவென்று சொல்லுவான்..?

"பவித்ராதான் அந்தக் கடிதத்தை எழுதியிக்கிறாள் அண்ணா.. மறுநாள் காலையில் மாலினி என்னிடம்

வந்து சொல்லிட்டாங்க.. அவங்க யாரையோ காதலிக்கிறதாகவும் சொன்னாங்க.. ஒருவேளை

அவரைத் தேடிக்கிட்டுப் போயிட்டாங்களோ!"

தினகரன் சந்தேகம் கேட்க.. பிரபாகரனுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

## 103

**நெஞ்சினிலே உன் நினைவலைகள்..**

**நித்தம் என்னைக் கொல்லுவதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"என்மேல் பவித்ரா பைத்தியமா இருந்திருக் கிறாண்ணா.. எனக்குத்தான் இது தெரியலை.. நான் மாலினி கிட்ட ஸாரி கேட்டுக்கிட்டேன்.. அவங்கதான் பவித்ராவைப் பற்றி

எல்லாத்தையும் என்கிட்ட சொல்லி.. என்னையும் அவளையும் சேர்த்து வைத்தாங்க..

ஷி இஸ் ஸோ கிரேட்.. என் மேல் கோபப்படாமல்.. அதேசமயம் கண்டிப்பான தோரணையில் பேசினாங்க.. என்னை அவங்களோட கூடப் பிறந்தவனைப் போல நினைச்சாங்களாம்... அவங்க அதைச் சொல்லவும்.. எனக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. நான் எப்படியெல்லாம் அவங்ககிட்ட உளறிவிட்டேன்னு வெட்கமாகிவிட்டது.."

பிரபாகரனுக்கு தம்பியிடம் பேச வேண்டிய வேலையில்லாமல் மாலினி செய்துவிட்டதை பிரபாகரன் புரிந்து கொண்டான்..

"பவித்ரா அழுதுட்டாண்ணா.. மாலினிகிட்ட தேங்க்ஸ் சொன்னா.."

இனி அவள் நன்றி சொல்லி ஆகப்போவது என்ன.. என்ற நினைவுடன் உதட்டைக் கடித்துக் கொண்டான் பிரபாகரன்..

மறுவீட்டு விருந்திற்கு தங்கை வந்திருக்கும்போது.. மாலினியைத் தேடிக் கொண்டு போக முடியாத சூழ்நிலையில் மாட்டிக் கொண்டான் பிரபாகரன்..

"மாலினிக்கு போன் செய்து பேசினியாம்மா.." என்று சசிரேகாவிடம் கேட்டான்..

"ஸ்விட்ச் ஆஃப்ன்னு வருது பெரியத்தான்.. சித்தப்பா விடம் பேசினேன்.. நான் பேசும் போதெல்லாம் மாலினி வெளியே போய்விட்டாள்னு சொல்லிட்டார்.. என்ன நடந்ததுன்னே தெரியலையே பெரியத்தான்.." அவள் பதிலுக்கு புலம்பினாள்..

என்ன நடந்தது என்று புரிந்த பிரபாகரன், அதை வெளியே சொல்ல முடியாமல் மனதில் வைத்துக் கொண்டு அல்லாடினான்.

திரும்பத் திரும்ப மாலினியின் செல்போனிற்கு தொடர்பு கொள்ள முயன்றான்.. 'ஸ்விட்ச் ஆஃப்..' என்று வந்தது.. தவித்துப் போனான்.

முதல் நாள் அவள் அவனிடம் தன்னை ஒப்படைத்ததை நினைவுக்கு கொண்டு வந்தான்.. அவன் மேல் கோபமிருந்தால் அவள் அதைச் செய்திருப்பாளா..? பிரித்து போக நினைப்பவள் உடன் வாழ எப்படி நினைத்தாள்?

தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாய் அவன் பித்துப் பிடித்து அலைந்தபோது மாலினியிட மிருந்து அவனுக்கு விரைவுத் தபால் ஒன்று வந்து சேர்ந்தது..

"பிரபா.. உனக்கு ஸ்பீடு போஸ்டு வந்திருக்குப்பா.."

"வாங்கி வைத்திருக்கிறீங்களாம்மா.."

"ஊஹீம்.. நீ கையெழுத்துப் போட்டால்தான் தருவாங்களாம்.."

மில்லில் என்றால் அவனுடைய உதவியாளர்கள் கையெழுத்துப் போட்டு வாங்கியிருப்பார்கள். ஒருவேளை அப்படி வேறு யாரும் வாங்கி வைக்கக்கூடாது என்பதைற்காகத்தான் வீட்டு முகவரிக்கு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்களோ?

'யார் அந்த புத்திசாலி?' என்று யோசித்தவனுக்கு மாலினியின் நினைவு வந்தது..

அவள்தான் இப்படியெல்லாம் யோசிப்பாள் என்ற நினைவுடன் காரில் ஏறி தபால் அலுவலகத்திற்கு பறந்தான். அவனது யூகம் பொய்க்கவில்லை. மாலினிதான் அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தாள்.

வீட்டுக்கு வரும் வரை பொறுமை காக்க முடியாமல் அவசரமாக காரை சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு கடிதத்தை பிரித்துப் படித்தான்..

'அன்புள்ள அத்தான்..'

உங்களுக்கு நான் பெயர் சொல்லி அழைப்பதை விட.. அத்தான் என்று அழைத்தால் மிகவும் பிடிக்கும். அதனால் அத்தான் என்றே இந்தக் கடிதத்தில் அழைக்கிறேன்.

அத்தான்..! எப்போதுமே.. மனதில் இருப்பதுதான் வெளியில் வரும். அன்று கோபத்தில் உங்கள் மனதிலிருந்ததைத்தான் வெளியே கொட்டினீர்கள். அதையும் உங்கள் வாயால் நீங்களே சொன்னீர்கள்.

என்னைப் பற்றிய உங்களின் அபிப்பிராயம் அதுவாக இருக்கம்போது.. நாம் காதலிப்பதில் அர்த்தமே இல்லையே.

காதலுக்கு அடிப்படை நம்பிக்கை.. அந்த நம்பிக்கை ஆரம்பத்தில் இருந்தே உங்களுக்கு என்மீது இல்லாமல் போய்விட்டது..

தினகரனைப் பற்றிய பேச்சை நீங்கள் எடுத்தபோதே நான் என் எதிர்ப்பை காட்டிவிட்டேன். ஆறு மாத கால அளவில் உங்களிடம் மௌனித்திருந்தேன். இருந்தும் நீங்கள் அவரைப் பற்றிய சந்தேகத்தை உங்கள் மனதிலிருந்து அகற்றவே இல்லை.

பவித்ரா ஒருவகையில் சுயநலவாதி. அவளுடன் ஒப்பிடும்போது ஸ்வேதா எவ்வளவோ மேலானவள். அவள் தன்னைப் பற்றி போலியான மதிப்பீட்டை உருவாக்கியதில்லை. ஆனால் பவித்ரா.. மென்மையானவள். சாது.. பயந்தவள் என்ற போலி மதிப்பீட்டை உருவாக்கி வைத்திருந்தாள்.

நான் அவளது வெளித்தோற்றத்தில் ஏமாந்து போனேன்...

சத்தியமாக அவளது காதலை நிறைவேற்றத்தான் தினகரனைத் தேடிப் போனேன். நான் காதலிப்பவள்.. காதல் தோற்றுவிட்டால் ஏற்படும் மரண வலி எப்படிப்பட்டதாக இருக்கும் என்ற கவலையில்தான் அவளுக்கு உதவ நினைத்தேன்.

உங்களிடம் ஒரு வார்த்தை அவளைப் பற்றிச் சொல்லியிருந்தால் நீங்கள் அவளது காதலை நிறைவேற்றி வைத்திருப்பீர்கள்.

ஆனால் அத்தான்.. அவளைக் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்று நான் நினைத்தேன்.. நட்பு என்பது நம்பிக்கையையும் ரகசியத்தையும் காப்பாற்றுவது.

அந்த நட்பிற்கு உண்மையாக நான் இருந்தேன். அவள் இருக்கவில்லை. அவளும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை.

என் அம்மா அடிக்கடி சொல்வார்கள்.

'ஒரு வார்த்தை வெல்லும்.. ஒரு வார்த்தை கொல்லும்..' என்று.

உங்கள் வாயிலிருந்த வந்த வார்த்தைகள் என்னைக் கொன்று தின்றுவிட்டன.

அப்படியிருந்தும் ஏன்.. நான் அந்த இரவில் உங்களிடம் அடைக்கலமானேன் என்று கேட்கிறீர்களா?

நீங்கள் சொன்னீர்கள் அத்தான்.. என் கற்பை நான் காப்பாற்றிக் கொண்டது வேறு ஒருவனை மணந்து கொள்ளும் தகுதிக்காக என்று..

அந்தத் தகுதி எனக்கு வேண்டாம்.. என் மனதோடு.. உடலும்.. உங்கள் ஒருவருக்கு மட்டுமே சொந்தம் என்று அறிவுறுத்தவே நான் அதைச் செய்தேன்.

மாலினி உங்களை விட்டு பிரிந்து வந்திருப்பது.. வேறு ஒருவனை மணந்து கொள்வதற்காக இல்லை அத்தான்.

நீங்கள் அப்படியும் நினைத்து பேசி விடுகிற ஆள் தான்.

நான் பிரிந்து வந்திருக்கிறேன்.. நீங்கள் பேசிய வார்த்தைகளை மறந்து உங்களோடு வாழ என்னால் ஒரு போதும் முடியாது என்பதற்காக நான் பிரிந்து வந்திருக்கிறேன்.

உங்களுடைய சகோதரனை.. என் சகோதரனாக நான் நினைத்திருந்தும் 'நீ அவனுக்கும் நூல் விட்டாயா?' என்று கேட்டீர்களே ஒரு கேள்வி...!

அந்தக் கேள்வியைத் தாங்க முடியாமல் பிரிந்து வந்திருக்கிறேன்.

பவித்ராவின் கேள்வியில் நியாயம் இருக்கிறது என்று சொன்னவர்.. என் விளக்கத்திலும் ஒரு நியாயம் இருக்கும்

என்று நினைக்காமல் போனீர்களே. அந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியாமல் பிரிந்து வந்திருக்கிறேன்.

என்னால் உங்களின் நிம்மதி போய்விட்டதாகச் சொன்னீர்கள். இல்லை அத்தான்.. ஒருபோதும் என்னால் உங்களுடைய நிம்மதி பறிபோய் விடாது. நான் உருவாக்கி வைத்த சிக்கலை நானே முடிவுக்குக் கொண்டு வந்த விட்டுத்தான் பிரிந்து வந்திருக்கிறேன்.

தினகரன் உங்களின் தம்பி அத்தான். அவன் ஒரு போதும் உங்களைத் தவறாக நினைத்துவிடக் கூடாது. உங்களிடம் பயமும்.. மரியாதையும்.. மதிப்பும் வைத்திருப்பவன் அவன். அவனிடம் போய் நீங்கள் விளக்கம் சொல்வதா? ஒரு நாளும் அப்படி ஒரு நிலைமை உங்களுக்கு வர நான் விடமாட்டேன்.

அவனிடம் நான் சொல்லிவிட்டேன் அத்தான். எதை நான் செய்யவில்லையென்று.. நீங்களும் பவித்ராவும் என்னைக் கேள்வி கேட்டீர்களோ.. அதை நான் செய்து முடித்துவிட்டேன்.

என் மனதில் அவன் இல்லையென்பதை உணர்த்தி விட்டேன். உங்கள் பெயரைச் சொல்லவில்லை. ஏனென்றால், உங்களின் வாழ்க்கை என்னோடு முடிந்து போய்விடக் கூடாது. நீங்கள் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சந்தேஷமாக வாழ வேண்டும்.

அதனால் நான் ஒருவரை உயிருக்குயிராய் காதலிக்கிறேன் என்பதாக சொல்லிவிட்டேன். தினகரன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பவித்ராவும் அதையே தான் செய்தாள். இனி இவர்கள் இருவரும் உங்களிடம் கேள்வி கேட்க மாட்டார்கள்.

நான் உங்கள் வீட்டில் காலடி வைத்தபோது உங்கள் வீடு எப்படியிருந்ததோ.. அதே சூழ்நிலையை மீண்டும் உருவாக்கிவிட்டுத்தான் நான் பிரிந்து வந்திருக்கிறேன்.

என்ன ஒன்று.. தினகரனையும் பவித்ராவையும் பழைய குணங்களோடு மாற்றிவிட்டு வந்திருக்கும் நான் தான்

நானாக இல்லாமல் போய்விட்டேன்.

என் நினைவுகளின் மிச்சம் மீதிகளை உங்களது நெஞ்சத்திலிருந்தும் தூக்கி எறிந்து விடுங்கள். உங்கள் வீடு.. உங்கள் குடும்பம்.. உங்கள் சகோதர.. சகோதரிகள்.. உங்களின் உறவினர்கள்.. என்று உங்களைச் சார்ந்த அனைத்துமே பழைய கட்டுக்கோப்புடன் இருக்கிறது. இனி அதன் அடிப்படைகளை மாற்றி அமைக்க மாலினி வர மாட்டாள்.

கண்ணதாசனின் சினிமா பாடல் ஒன்று உண்டு..

எல்லோரும் நலம் வாழ..

நான் பாடுவேன்..

நான் வாழ யார் பாடுவார்..?

என் பாடல் நான் பாட..

பலர் ஆடுவார்..

இனி என்னோடு யார் ஆடுவார்..?

உங்கள் வீட்டில் நான் இருந்த நாள்களில் நிகழ்ந்தவைகளுக்காக என்னை மன்னித்து விடுங்கள். மாலினி இருக்கும் இடத்தில் கலகலப்புதான் இருக்கும். சல சலப்பு இருக்காது. முதன்முதலாக அது ஆரம்பித்து உங்கள் வீட்டில்தான்.

அதையும் நான் சரிசெய்துவிட்டுத்தான் பிரிந்து வந்திருக்கிறேன்.

உங்களுக்கு என் மேலிருக்கும் அன்பின் மேல் ஆணையிட்டு கேட்கிறேன். தயவுசெய்து என்னை இனி மேல் தொந்தரவு செய்யாதீர்கள். என்னைப் பெண் கேட்டு வருவது.. என்னைப் பின் தொடர்ந்து வற்புறுத்துவது.. இது எதுவும் வேண்டாம்.. நான் விலகி வந்துவிட்டேன். நீங்களும் அதைப் போல விலகிப் போய்விடுங்கள்.

சிறுவயதிலிருந்தே எனக்கொரு சாபம் உண்டு அத்தான். நான் அதிகமாக எதை நேசித்தாலும் அது என்னிடமிருந்து

விலகிப் போய்விடும். அப்படியொரு வரம் வாங்கி பிறந்தவள் நான்.

ஒன்றை வேண்டாமென்று நினைத்து தள்ளி வைத்து விட்டால்.. மாலினி ஆயுளுக்கும் அதை திரும்பிப் பார்க்க மாட்டாள் . இது உங்களுக்கு தெரியாமல் போய்விட்டது.

உங்களைப் போன்ற ஒருவரை என் வாழ்வில் நான் சந்தித்தேன் என்பதே எனக்குப் போதும். குட் பை!

- மாலினி.

ஒரு முறைக்கு பல முறை அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்த பிரபாகரனின் விழிகள் சிவந்து போயின. அவன் உன்மத்தம் பிடித்தவன் போல வீட்டை நோக்கி காரை ஓட்டினான்.

## 104

**எல்லோருக்கும் எளிதாக கிடைக்கின்ற எதுவும்..**

**என்னிடத்தில் மட்டும் அரிதாகி விடுவதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

கண்மூடி வேண்டி நின்றாள் மாலினி. தீபாராதனை ஒளியில் மலர் கண்கள் சிரிக்க.. இதழ்களில் குறுஞ்சிரிப்பு இழையோட.. அவளது மனப் போராட்டத்தை அறிந்தும் அறியாதவன் போல அந்த மணிவண்ணன் சிரித்துக் கொண்டிருந்தான்.

'ஏன் படைத்தாய் பெருமாளே..? இப்படியொரு வரத்தை கொடுத்து ஏன் என்னைப் பிறக்க வைத்தாய்..? இன்னும் எத்தனை நாள்கள்தான் நான் இந்தத் துயரத்தைப் படுவேன்.? ஒன்று, கொடுக்காதே. கொடுத்துவிட்டால் பிரிக்காதே. நீ எளிதாக சொல்லிவிட்டாய்.. எல்லாமே

மாயைதான் என்று. எதை நான் மாயையாக எடுத்துக் கொள்ள..? என்னைச் சுற்றிப் பரந்திருக்கும் இந்த உலகத்தில் இன்னும் எத்தனை காலம்தான் நான் அன்பைத் தேடி அலைவேன்..? இந்தத் தேடுதலுக்கு ஒரு முடிவே கிடையாதா..?'

"குங்குமம் வாங்கிக்கோங்க.."

அர்ச்சகரின் குரலில் கண் விழித்தவள் கை நீட்டி குங்குமத்தை வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டாள். சந்நிதியைப் பார்த்தாள். மூலஸ்தானத்தில் அவளுடைய தோழனாக அவள் மனதில் விரித்துக் கொண்டிருக்கும் கமலக்கண்ணன் சிரித்துக் கொண்டிருந்தான். அவனது புன்னகையில் எப்போதும் மயங்குவதைப் போல இப்போதும் மனம் மயங்கினாள்.

'சிரிக்கிறாயா கண்ணா.. சிரி.. என் வேதனையைக் கண்டு உனக்கு சிரிப்பு வருகிறது. என் கண்ணீர் துடைக்க உனக்கு மனமில்லை. நான் எந்த வகையில் குறைந்து போய்விட்டேன் கண்ணா..? ஏனிந்த ஏமாற்றம் விடாமல் என்னைத் துரத்துகிறது?'

பிராகாரத்தைச் சுற்றி வலம் வரும்போது.. கடந்து போன மனிதர்களின் மத்தியில் பிரபாகரன் அவளது கண்களுக்குத் தெரிவதை போல இருந்தது.

அவசரமாக விழி கசக்கி.. கூட்டத்தின் மத்தியில் அவன் முகம் தேடினாள். அவன் இல்லை. அவள் மனம் வெறுமையானது.

'பிரமை..' மனம் வெதும்பியவளாக பிராகாரத்தை சுற்றி வலம் வந்தாள்.

'சுகத்தில் விருப்பும்

துன்பத்தில்...

துயரம் இன்றி

அனைத்திலுமே...

அபிமானங்கள்

இல்லாத...

ஆன்றோன் ஞானம்

பெறுவானே..'

சிறு வயதில் பள்ளியில் பாடிய பகவத் கீதையின் சாராம்ச பாடல் மனதில் ஒலிக்க.. மனம் கனக்க.. மெல்லடி வைத்து நடந்தாள் மாலினி.

'யாரால் முடியும்? சந்தோஷத்தையும் துன்பத்தையும் தவிர்த்து எதனாலும் பாதிக்கப்படாமல் எந்த மனித ஜீவனால் இருக்க முடியும்?'

அவளைக் கடந்து ஓடிய சிறுமியின் குண்டுக் கன்னங்கள் அவளை வசீகரித்தன. அவள் தன் குழந்தைப் பிராயத்தை நினைத்துக் கொண்டாள். கவலைகளற்ற வயது... அந்த வயது திரும்பவும் வராதா என்றிருந்தது அவளுக்கு.

முன்னால் போனவனின் பின்புறத் தோற்றத்தைப் பார்க்கும்போது அச்சு அசலாய் பிரபாகரனைப் போலவே இருக்க.. அவள் நடையில் வேகத்தைக் கூட்டினாள். அவன் பிராகாரத்தின் பின்புறம் மறைந்துவிட.. ஓடிப்போய் எட்டிப் பார்த்தாள். அவன் இல்லை.

'எங்கெங்கு பார்த்தாலும் சிவசக்தி என்பதைப் போல இவன் ஏன் எங்கு பார்த்தாலும் என்முன் தோன்றுகிறான்...?'

'யாதுமாகி நின்றாய்...' அவள் உடல் தளர.. பிராகாரத்தின் சுற்றுச்சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

நினைக்கக்கூடாது என்று நினைத்துவிட்டால் மனம் நினைவுகளின்றிப் போய்விடுமா.. என்ன? வானத்தைக் கூட வசப்படுத்திவிடலாம். மனத்தை தன்வசப்படுத்திக் கொள்வது ஒரு மனித ஜீவனால் இயல்கின்ற காரியமா?

'நில்லென்று சொன்னால் மனம்..

நின்றா போகும்?'

திரையிசைப் பாடலின் வரிகள் மனதில் ஒலிக்க.. நடையைத் தொடர்ந்தாள் மாலினி.

'ஏன் என்னை இப்படி ஆட்டிப்படைக்கிறாய் பெருமாளே? சந்தோஷத்தில் இன்பம் அடையாமல்.. துன்பத்தில் துயரம் அடையாமல் யாரால் இருக்க இயலும்? எனக்கும் மனம் இருக்கிறது. அதற்கு உயிரும் உணர்வும் இருந்து தொலைக்கிறது. எல்லாவற்றையும் சமமாக பாவிக்க என்னால் எப்படி முடியும்? நான் என்ன சித்தரா? சந்நியாசியா? இல்லையே...'

பிராகாரத்தை வலம் வந்தவள் அதற்கு மேல் நடக்க முடியாமல் கோயில் பிராகாரத்தின் தூணில் சாய்ந்து அமர்ந்தாள்.. தூரத்தில் தெரிந்த தூணில் சாய்ந்து கொண்டு பிரபாகரன் நின்றியருப்பதைப் போல் தெரிந்தது. அவசரமாக விழியுயர்த்தி பார்வையைக் கூர்மையாக்கிப் பார்த்தாள் அவன் இல்லை.. வெறும் தூண்தான் இருந்தது.

'எனக்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டது..' அவள் மனதில் கூறிக்கொண்டாள்.

'மனுஷியாக இருந்து தொலைக்கிறேனே.. பைத்தியம் பிடிக்காமல் என்ன செய்யும்?'

பிராகாரத்தின் சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓவியம் அவளது கருத்தைக் கவர்ந்தது.

குருசேஷத்திர யுத்த களத்தில்.. படைகளின் மத்தியில் வில்லைக் கீழே போட்டுவிட்டு கரம் குவித்து மண்டியிட்டு பார்த்திபன் வணங்கிக் கொண்டிருக்கிறான்.. புரவிகள் பூட்டிய தேரின் அருகே வலக்கரத்தை உயர்த்தி அவனுக்கு ஆசியளித்து கீதோபதேசம் பண்ணியவாறு மயிலிறகைச் சூடிய கிருஷ்ணன் நின்று கொண்டிருக்கிறான்.

'காண்டீபன் கொடுத்து வைத்தவன்..' கீதோபதேச ஓவியத்தை பார்த்தவாறு மாலினி மனதிற்குள் பொறாமைப் பட்டாள்.

'இப்படியொரு நட்பு யாருக்குக் கிடைக்கும்..? எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் இருந்து

துன்பத்தில் சாய்ந்து கொள்ள தோள் கொடுப்பது வரை எல்லாமுமாக கண்ணன் அவனுக்கு இருக்கும் பாக்கியத்தைப் பெற்ற பாக்கியசாலியல்லவா இவன்.. நீயேன் கவலைப் படுகிறாய்.. உன்னை வழிநடத்த நானிருக்கிறேன் என்று வழி காட்டிய கண்ணனின் நட்பு கிடைக்கும் பேறு பெற்றவனல்லவா அவன்..'

மாலினியின் விழிகளில் நீர் சுரந்தது. அவள் பவித்ராவை நினைத்துக் கொண்டாள்.

'எனக்கு மட்டும் ஏன் அந்த உண்மையான எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளும்... தோள் கொடுக்கும் நட்பு கிடைக்கவில்லை?' அவள் மனம் கேள்வி கேட்டது.

பவித்ராவைப் பற்றிய நினைவுகளில் தன் டைரியில் எழுதிய கவிதையை நினைத்துப் பார்த்தாள் மாலினி.

'நான் தேடிய நட்பு...

வள்ளுவரின் குறள் வாய்ப்பாடம்..

வாய்த்ததெல்லாம்

புருட்டஸ் இனம்...

இவ்வுலகில் முடிவேயின்றி...

நான் தேடும் நட்பு..'

அவளது பார்வை.. மீண்டும் கீதோபதேச ஓவியத்தின் மீது படிந்தது. அவள் மனம் அர்ஜீனனாக ஆசைப்பட்டது.

'பேராசை..' அவளது இதழ்களில் துயரப் புன்முறுவல் மலர்ந்தது. மனம் அவசரக் கவிதையை இதயத்தின் தாள்களில் எழுதியது.

'என் ஆசையென்னவோ..

அர்ஜீனன் ஆக...

உன் அனுமதியின் எல்லையோ..

நான் துரியோதனன் போல..'

அவள் கண்மூடி தூணில் சாய்ந்து கொண்டாள். அவள் முன்னால் யாரோ வந்து நிற்பதைப் போல இருந்தது. அவள் விழி திறக்கவில்லை.

"முடிகிறதா.. உன்னால் முடிகிறதா?" என்ற குரல் கேட்டது.

'இது.. இது.. பிரபாகரனின் குரல் அல்லவா?' அவள் திடுக்கிட்டு கண்விழித்தாள்.

பக்கத்தில் அவன் அமர்ந்திருந்தான். ஒருவேளை பிரமையாக இருக்குமோ என்று கண்கசக்கிப் பார்த்தாள். அவனேதான். அவளையே ஊடுருவிப் பார்க்கும் பார்வையோடு அசையாமல் அவன் அமர்ந்திருந்தான்.

"என்னடி பார்க்கிற..? பிரமைன்னா? அப்படித்தானே இத்தனை நேரமும் நினைச்சுக்கிட்டு இருந்த? என்னை உன் கண் தேடுச்சே.. எதுக்குடி? பிரிந்து வந்துட்ட இல்ல.. மறந்து உன்னால் இருக்க முடியுதா?"

மாலினி இதழ் கடித்து தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"உன் வேலை உனக்கு வேண்டாம்.. என் வீடு உனக்கு வேண்டாம்.. நான் கூடவா உனக்கு வேண்டாம்? என்னை நினைக்காமல் உன்னால் இருந்துவிட முடியுமாடி.. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அது உன்னால் முடியாது.."

மாலினி முகம் திருப்பிக் கொண்டாள். தன்னை அவன் கண்டுகொண்டு விட்டானே என்ற தவிப்பு அவளுள் எழுந்தது.

"நான் என் அம்மாவுடன் உன்னைப் பெண் கேட்டு உன் வீட்டுக்கு வரக்கூடாதுன்னு எழுதியிருக்கிறாய். ஓகே. வரவில்லை. உன்னைப் பின்தொடரக்கூடாதுன்னு எழுதியிருக்கிறாய். இப்போதும் பின்தொடர்ந்து வரவில்லை. பேசிவிட்டுப் போக வந்தேன். இனி பின்தொடர மாட்டேன். நீ சொன்ன வார்த்தைகளை நான் மீற மாட்டேன், ஆனால்.. என்னை இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி சொன்னாயே.. அதை என் ஆயுள் உள்ளவரைக்கும் செய்ய மாட்டேன். ஒன்றை

வேண்டாமென்று விலக்கி வைத்துவிட்டால்.. அதை ஆயுளுக்கும் திரும்பிப் பார்க்காமல் இருப்பது உன் குணமாக இருக்கலாம். ஆனால், ஒன்றை வேண்டுமென்று நினைத்துவிட்டால் அதை ஆயுளுக்கும் நிலைத்து நிற்கச் செய்வது என் குணம். நான் ஏகபத்தினி விரதன். தாலி ஊருக்காக கட்டுவது. உன் மனதறிய நீ என் பெண்டாட்டியாகி விட்டாய். என்னுடன் வாழ்ந்து விட்டாய். இப்போது விலகி நீ வந்துவிட்டால் அன்றைக்கு நடந்தது இல்லையென்று ஆகிவிடுமா?"

மாலினியின் முகத்தில் வெட்கச் சிரிப்பு குங்குமமாக பரவியது. அதை சொந்தத்துடன் பார்த்தபடி அவன் தொடர்ந்து சொன்னான்.

"மீதியிருக்கும் வாழ்க்கையை நீ என்னிடம் திரும்பி வந்தால் வாழ்கிறேன். இல்லையென்றால் அந்த ஒரு நாள் வாழ்க்கையே எனக்குப் போதும். உன்னைத் தொட்ட இந்த விரல்கள் இன்னொருத்தியைத் தொடாது. நான் பிரபாகரன். ஆண்சிங்கம். என்னால் மாலினிங்கிற பெண்சிங்கத்தோடு தான் வாழ முடியும்.."

இதற்குப் பதிலை என்னவென்று மாலினி சொல்வாள்? அவள் மௌனித்தாள்.

"நீயுல்லாத அந்த வீட்டில் எனக்கு மட்டும் என்ன வேலை? நானும் போகிறேன்.."

மாலினி அதிர்ந்து விழித்தாள். அவனைக் கேள்வியாக நோக்கினாள்.

"நீயூயார்க்கில் என் நண்பன் தொழில் தொடங்கப் போகிறேன். என்னையும் அதில் பார்ட்னராகிக் கொள்ளச் சொல்லி ரொம்ப நாளாக நச்சரிக்கிறான். நான் தான் குடும்பப்பொறுப்பை விட்டுவிட்டு வெளிநாட்டுக்கு ஓடுவதா என்று யோசித்துக் கொண்டிருந்தேன், இப்போது என் சம்மதத்தை என் நண்பனிடம் சொல்லிவிட்டேன்.."

"அப்போ.. உங்க வீடு.. அத்தை.. காயத்ரி... இதையெல்லாம் யார் பார்த்துக்குவாங்க?" முதன்முதலாக வாய் திறந்தாள்

மாலினி.

பிரபாகரனின் கண்கள் மின்னின. அவன் பார்வை கூர்மையாகியது..

"இதைப் பற்றி உனக்கென்ன கவலை? சொல்லாமல் கொல்லாமல் ஓடிவந்தவள் இதைப் பற்றியெல்லாம் கேட்கக்கூடாது. ஏய்.. நான் உன் புருஷன்டி.. உன்னைக் கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லையா?"

"அதுக்காக எதைக் கேட்பது என்ற அளவுகோலில்லையா?"

"புருஷன்.. பெண்டாட்டிக்குள் எந்த அளவுகோலும் இல்லை.."

"நீங்கள் வாய்க்கு வந்ததைக் கேட்பீங்க.. நான் கேட்டுக்கொண்டிருக்கணுமா?"

"ஆமாண்டி.. அவன் என் கண் முன்னாலேயே உன்னைக் கண்ணம்மா என்பான்.. என்னடான்னு கேட்டால்.. என்னை மாலினி நடுராத்திரியில் தோட்டத்திற்கு வரச்சொல்லி காதல் கடிதம் கொடுத்தாள்ம்பான். அதை ஏன்னு உன்கிட்ட நான் கேட்டுவிடக்கூடாது. அந்த பவித்ரா, உன் காதலி.. என் காதலனை பிடுங்கிக்கறான்னு கம்ப்ளெயிண்ட் பண்ணுவாள். அவளுக்கெல்லாம் போய் பாவப்படு-கிறாயேன்னு உன்னை திட்டிவிடக்கூடாது. உடனே வேலையை ரிஸைன் பண்ணிவிட்டு வீட்டை விட்டு வந்துவிடுவாய்.. உன்னைப் பிரிந்து வந்துவிட்டேன். மறந்து வந்துவிட்டேன். துறந்து வந்துவிட்டேன்னு பக்கம் பக்கமாய் வரைந்து பிரிவுக் கடிதம் எழுதி அனுப்பி வைப்பாய். சும்மா சொல்லக்கூடாதுடி. உன் கையில் தமிழ் கொஞ்சி விளையாடுது. என்ன ஒண்ணு.. அதை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு.. நம் காதலை அழிக்கிறதுக்கு பயன் படுத்தப் பார்க்கிறாய்?"

"பிரபா.. வேண்டாம்.. என் கோபத்தை கேலி பண்ணாதீங்க?"

"அடச்சை.. வாயை மூடு.. நீ பண்ணி வைத்த வேலைக்கு கௌதம புத்தனுக்கே கோபம் வந்திருக்கும். எனக்கு வராதா.. நல்லவேளை.. என் சொந்தக்காரப் பயலுக

எல்லாம் பயந்த ஆளுக.. ராத்திரி நேரத்தில் தண்ணீர் இருக்குமிடத்தில் பேய் உலாவும்னு நீச்சல் குளத்துக்குப் பக்கத்தில் வரலை.. அதனால் நம்ம மானம்.. மரியாதை பிழைச்சுச்சு. எவனுக்காவது தைரியம் வந்து.. தோட்டத்துக்குப் பக்கத்தில் வந்திருந்தால்.. அங்கே நடந்த நாடகத்துக்கு இந்நேரம்.. நான் கட்டிக் காப்பாற்றி வைத்திருந்த கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் மானம்.. காற்றில் பறந்திருக்கும்.."

மாலினி தலையில் கைவைத்துக் கொண்டு குனிந்து கொண்டாள்.

"நான் போகிறேன்.. இனி உன் வழிக்கு வர மாட்டேன். உன்னை மறக்கவும் மாட்டேன்.."

பிரபாகரன் போய்விட்டான். மாலினி அசைவற்று அமர்ந்திருந்தாள்.

105

**தேடி வந்த கண்ணனின் பின்னாலே..**

**ஓடிச் சென்ற ராதையின் மனதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

இரவு முழுவதும் தூங்காமல் விழித்துவிட்டு.. விடியற்காலையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த மாலினியை காவேரி எழுப்பினாள்...

"தூக்கம் வருதும்மா.." மாலினி கண் திறக்காமல் சிணுங்கினாள்..

"அதுதான் வேலையை விட்டுவிட்டு வந்துட்டயே.. நினைச்ச நேரமெல்லாம் தூங்கிப் பொழுதைக் கழிக்கலாம். இப்ப

எழுந்து வா.. தூக்கம் எங்கேயும் ஓடிப்போய் விடாது. அதை மெதுவாய்.. அப்புறமாய்.. தூங்கிக்கலாம்.."

"இப்பவே எழுந்து நான் என்ன செய்யப் போகிறேன்?"

"நீ ஒண்ணும் வெட்டி முறிக்க வேண்டாம்.. சசி வந்திருக்கிறாள். எழுந்து வா.."

மாலினியின் தூக்கம் பறந்துவிட்டது. அவள் அவசரமாக எழுந்து கட்டிலில் அமர்ந்தாள்.. அதற்குள் அறைக்கதவைத் திறந்து கொண்டு சசிரேகா உள்ளே வந்தாள்.. அவள் விழிகள் மாலினியை குற்றம்சாட்டின.. காவேரி குறிப்பறிந்தவளாக வெளியேறி விட்டாள்..

"சசிதான் வந்திருக்கிறேன்.. என்னை உனக்கு நினைவிருக்கில்ல?"

"என்னடி சசி.. இப்படியெல்லாம் பேசுகிற...?"

"நீ செய்து வைத்திருக்கும் வேலைக்கு உன்னைக் கொஞ்ச சொல்கிறாயா? உனக்கு நான் என்னடி கெடுதல் பண்ணினேன்..? ஏன் என் வாழ்க்கையோடு விளையாடிப் பார்க்கிறாய்.. இதுக்குத்தான் மார்த்தாண்டத்திற்கு தேடி வந்தாயா..?"

"நீ ஒருத்திதான் பாக்கி.. நீயும் எதையாவது பழியைத் தூக்கிப்போடு தாயே.."

"நீ உன்னைப் பற்றியே யோசி.. மற்றவர்களைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்காதே.. அவசரக்குடுக்கை.. உன்னால் எனக்கு நிம்மதியே போச்சு.."

"எனக்கு வாழ்க்கையே போச்சு.."

"என் வீட்டு ஆள்களால் எப்பவுமே உனக்கு வாழ்க்கை போகாதுடிம்மா.. உன்னால்தான் என் வீட்டின் சந்தோஷம் போகும். நீ வன்மம் பிடிச்சவடி.."

"என்ன நடந்ததுன்னு தெரியாமல் பேசாதே..."

"நீ சொன்னாயா.. எதையாவது என்னிடம் வாய்விட்டுச் சொன்னாயா? நீயும் அப்படித்தான்.. பெரியத் தானும்

அப்படித்தான். உங்க மனதை வெளியில் சொல்லாமல் புதைத்து வைத்துக்கிட்டு உங்க இஷ்டம் போல ஆடிப் பார்க்கறீங்க.. பெரியத்தான் வெளிநாடு போகிறார். போகிறதுக்கு முன்னால தினகரனுக்கும் பவித்ராவிற்கும் கல்யாணத்தை பண்ணி வைத்துவிட்டு போகணும்னு நினைக்கிறார். வீட்டில் எல்லோருக்கும் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டு அவர் தனிமரமாய் சொத்து சுகம் சொந்த பந்தத்தை விட்டுவிட்டு கண்காணாமல் போகட்டும்.. நீ உன் பிடிவாதத்தை பிடித்துக் கொண்டு தொங்கு.. மன்னிக்கத் தெரிந்தவ தாண்டி மனுஷி..."

சசிரேகா பொரிந்து தள்ள.. மாலினி.. "சசி.." என்று விம்மி அழுதாள்..

"நீயேண்டி அழுகறே.. அழவேண்டியவ நானு. இனி என்கூட பவித்ராவும் சேர்ந்துக்குவா.. பெரியவர் தனிமரமாய் நிற்க.. குழந்தை பெற்றுக்கறது குற்றம்னு என் புருஷன் நினைப்பதை இப்பவே வாய்விட்டு தினகரன் சொல்லிட்டான்.. வேறு யாருக்காவது பவித்ராவைக் கட்டி வைத்து விடுவாங்கன்னுதான் அவ கழுத்தில் தாலியைக் கட்டப் போகிறானாம்.. சின்னவன் ஜொள்ளுதான் விடுவான்.. மத்தபடி.. அண்ணன்மார்களின் குணம் அப்படியே அவனிடமும் இருக்கும்.."

"இதெல்லாம் உன் வீட்டுப் பிரச்னை.. என்கிட்ட ஏண்டி சொல்கிற..?"

"அறைஞ்சேன்னா.. அத்தனை பல்லும் உதிர்ந்து விடும். என் பெரியத்தானை வீட்டை விட்டுத் துரத்தவா நீ ஊர்விட்டு ஊர் வந்த? அவர் என்னடி தப்பு பண்ணினார்? கேப்டன் இல்லாத கப்பலின் கதிதான் நாளைக்கு என் குடும்பத்துக்கு வரப்போகுது. நீ நிம்மதியாய் எவனையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு குடித்தனம் நடத்து.."

"நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லை.."

"அப்ப.. இந்த வீட்டின் நிம்மதியையும் குழிதோண்டிப் புதைக்கப் போகிறேன்னு சொல்லு.. உன் அண்ணிகாரி நான் உள்ளே வரும்போதே ஒரு மார்க்கமாய் பார்த்தா..

மார்த்தாண்டத்தில் என்ன நடந்தது.. ஏன் எங்க மாலினி வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டாள்னு என்கிட்டயே கேட்டா.. அவ வாய்விட்டுக் கேட்டதை சித்தப்பாவும்.. சித்தியும் அண்ணனும் கண்களால் கேட்டாங்க.. இப்ப நீ கல்யாணம் வேண்டாமுன்னு சொன்னா.. உன் அண்ணியே காவியம் பாடி.. ஊரெல்லாம் ஒலிபரப்புவா.. அப்புறம் சித்தப்பாவும் சித்தியும் என்ன ஆவாங்களோ..?"

"பயமுறுத்துகிறாயா..?"

"இல்லைன்னு நான் சொல்லப் போவதில்லை. இப்ப நான் வந்தது வேறொன்றையும் உன்னிடம் சொல்லி விட்டுப் போகத்தான்.."

"என்னன்னு சொல்லித் தொலை..."

"பெரியத்தான் ஆக்ஸிடெண்டாகி ஹாஸ்பிட்டலில் கிடக்கிறார்..."

சசிரேகா கண்கள் இடுங்கக் கூற.. மாலினி பதறி எழுந்தாள்.. அவள் உடல் நடுங்கியது..

"என்னடி சொல்கிற.. பாவி.. இதைச் சொல்லாமல் இந்நேரம் வரைக்கும் கதையளந்தியே.."

"பொறு.. எதுக்கு இந்த குதி குதிக்கிறே.. உனக்கு தகவல் சொல்லக்கூடாதுன்னு பெரியத்தான் கண்டிப்பா சொல்லிட்டார்.. நீ வந்தாலும் அவர் உன்னைப் பார்க்க மாட்டார்.."

"அதைச் சொல்ல நீ யாருடி..? அவருக்கு என்ன ஆச்சு..?"

"உன்னைப் பார்க்க சென்னைக்கு வந்துட்டு திரும்பிய மனிதர்.. கண் மண் தெரியாம காரை ஓட்டியிருக்கிறார்.. ஆக்ஸிடெண்ட் ஆகியிருச்சு.. இப்ப உனக்கு நிம்மதியா...?"

"உன்னைக் கொன்றுவிடுவேன் சசி.. டாக்டர் என்ன சொல்கிறார்?"

"உயிருக்கு ஆபத்தில்லையாம்.. ஆனால் கை.. கால்.. தலைன்னு ஒரு இடம் விடாம அடிபட்டு கட்டுப் போட்டிருக்கு..

சாப்பாடு.. தண்ணியில்ல.. குளூகோஸ் இறங்கிக் கிட்டு இருக்கு..."

"வாடி போகலாம்.." மின்னல் வேகத்தில் மாலினி கிளம்ப..

"எங்கே.. கிளம்புகிறா..?" என்று அறைக்குள் காபியுடன் வந்த காவேரி கேட்டாள்..

"என்கூடத்தான் சித்தி.. மார்த்தாண்டம் வருகிறாள்..", மாலினி அறியாமல் சசிரேகா கண் சமிக்ஞை செய்ய, காவேரி புரிந்துகொண்டு மௌனமாகி விட்டாள்..

சசிரேகாவுடன் காரின் பின்ஸீட்டில் மாலினி அமர்ந்து கொள்ள, காரைக் கிளப்பினான் கருணாகரன். அப்போது தான் அவனைப் பார்த்த மாலினி ஆச்சரியத்துடன்...

"அத்தான்! நீங்க ஏன் வீட்டுக்குள் வரவில்லை?" என்று கேட்டாள்..

"என் அண்ணன் இருக்கும் நிலையில் என்னால் மாமனார் வீட்டுக்குள் வந்து விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது.." கடினமான முகத்துடன் சொன்னான் கருணாகரன்..

"கேட்டுக்கடி பிசாசே.. இனி காலமெல்லாம் என் புருஷன் சிரிக்கக்கூட மாட்டார்.. என் அண்ணனே வெளிநாடு போயிட்டார்.. எனக்கு சிரிப்பு ஒரு கேடான்னு கேட்பார்.. நீ இருக்கும் இடத்தில் சிரிப்பிருக்குமே மாலினி இப்ப இப்படி என்னை அழ வச்சிட்டயே.."

சசி வராத கண்ணீரைத் துடைத்துக் கொள்ள, மாலினிக்குள் குற்ற உணர்வு எழுந்தது..

மார்த்தாண்டத்தின் பிரபலமான மருத்துவமனைக்குள் கார் சென்று நின்றது.. மாலினி இறங்கி ஓடினாள்.. சசிரேகா பின்னால் தொடர்ந்தாள்..

"ரூம் நம்பர் இருபத்து நாலுடி.." சசியின் குரல் காற்றில் வந்தது..

மாலினி இருபத்து நான்காம் எண் உள்ள அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினாள்.. கட்டிலில் கண் திறவாமல் உடலெல்லாம் கட்டுக்களோடு பிரபாகரன் படுத்திருந்தான்.. மாலினி அதிர்ந்து வாய் பொத்தி அழுதாள்..

"அத்தான்.. என் அத்தான்.." என்று அவள் தலையில் அடித்துக் கொள்ள..

"பாட்டாடி பாடி வைக்கிற.." என்று அவள் பின்னால் வந்த சசிரேகா கடுப்படித்தாள்..

"என்னைக் கொல்லாதே சசி.. என்னால்தானே இவருக்கு இந்த நிலைமை?"

"தெரிந்தால் சரி.." சசிரேகா அறைக்கதவை மூடிக் கொண்டு சென்றுவிட்டாள்..

மாலினிக்கு பிரபாகரன் இருந்த நிலைமையைப் பார்த்து மனம் தாளவில்லை. உடலெல்லாம் கட்டுக்கள் போடப்பட்டிருக்க.. கட்டுக்கள் இல்லாத ஒரே இடமான அவனது பாதங்களில் தலை வைத்து கதறியழ ஆரம்பித்தாள்..

"நான் பாவி அத்தான்.. உங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டேன்.. நீர் அடித்து நீர் விலகுமா..? நீங்கள் அடித்தால் நான் விலகிப் போவதா..? காலமெல்லாம் உங்கள் காலடியில் கிடந்திருக்க வேண்டாமா..? நீங்கள் ஒரு சொல் சொன்னால் நான் என்ன குறைந்தா போய் விடுவேன்..? உங்களைத் தண்டித்துவிட்டேனே அத்தான்.. நீங்கள் அடிபட்டுக் கிடக்க.. நான் மட்டும் காயமில்லாமல் இருப்பதா..? எனக்கும் இந்த வலியும் வேதனையும் வரட்டும்... "

மாலினி சுற்றுமுற்றும் பார்த்தாள்.. நீண்ட கைப்பிடி யோடு இருந்த கத்தி கையில் பட.. அதை எடுத்துக் கையை வெட்டிக் கொள்ளப் போனாள்.. கட்டுப்போடப் பட்டிருந்த பிரபாகரனின் கரம்.. அவளது கரத்தை இறுக்கிப் பிடித்து கத்தியை விழச் செய்தது.. அவனது கை அவள் கையை

சுண்டியிழுக்க.. அவள் அவனது மார்பில் விழுந்தாள். மறுகணம் அவனது இறுக்கிய அணைப்பில் கட்டுண்டாள். அவனது கரம் அவனை ஆக்டோபஸ் போல வளைக்க..

'அடிபட்டவனின் பிடியாக இது இல்லையே..' என்ற சந்தேகம் அவளுக்கு வந்தது..

"அத்தான்.." என்று அவள் நிமிர்ந்து பார்க்க..

"உன் அத்தான்தான்.." என்று ஹெல்மெட்டைக் கழற்றுவதைப் போலத் தலையைச் சுற்றிப் போடப் பட்டிருந்த கட்டுக்களை.. தொப்பி போல கழட்டி வைத்துச் சிரித்தான் பிரபாகரன்..

"உடம்பில் இருக்கும் கட்டுக்கள்..?" மாலினி திகைக்க..

"இதோ அதையும் கழட்டிவிட்டால் போச்சு.." இலகுவாகக் கூறியபடி.. சட்டையைக் கழற்றுவதைப் போல உடலைச் சுற்றியிருந்த கட்டுக்களில் இருந்து விடுபட்டு வெளியே வந்தான்...

"பார்த்துக்க.. உடம்பில் ஒரு கீறலும் இல்லை.." பிரபாகரன் மீண்டும் அவளைத் தன்னிடம் இழுத்துக் கொண்டான்..

"அடப்பாவி.. ஹிட்லர்கூடப் பொய் சொல்வாரா?"

"காதல்னு வந்துவிட்டால் எல்லோரும் பொய் சொல்வாங்க.."

"அதுக்காக இப்படியா..? என் உயிரே பறந்துருச்சு.."

"வேற என்னடி செய்யச் சொல்கிற.. நீதான் பிடி வாதத்துக்கு பிறந்து தொலைச்சிட்டாயே.. என்னைத் தேடி உன்னை வரவைக்கணும்னா எனக்கு வேறுவழி தெரியலை.."

"வந்தவளுக்கு திருப்பிப் போக வழி தெரியாதா..?"

"பொய்யாக நான் நடத்திய இந்த நாடகத்தை உண்மையாக நடத்திக் காட்ட எனக்குத் தெரியாதா.. நீ என்னை விட்டு விலகி ஓர் அடி எடுத்து வைத்தாலும்.. என் உயிர் என் உடலில் தங்காது. அப்புறம். உன் இஷ்டம்.."

"ஐயோ.." மாலினி பதறி அவனது வாயைப் பொத்தினாள்.. அவனது வாயை மூடியிருந்த அவளது உள்ளங்கையில் அவன் முத்தம் பதித்தான்..

"நான் தோற்றுவிட்டேன்.." அவன் மார்பில் முகம் புதைத்தாள் மாலினி..

"ஊஹீம்.. என்னை ஜெயித்துவிட்டாய்.." அவளது இதழில் இதழ் பதித்தான் பிரபாகரன்..

106

**யாரோ என்று நான் நினைத்தவனே..**

**யாதுமாகி என்மனதில் குடி கொண்டதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அந்த மூடப்பட்டிருந்த அறைக்குள் பிரபாகரனின் ஆக்கிரமிப்பில் கண்மூடியிருந்த மாலினியின் மனம் நிறைந்திருந்தது... அவளது வாழ்க்கையிலேயே முதன் முறையாக அவள் தோற்றிருக்கிறாள். இருந்தாலும்.. அந்தத் தோல்வி ஏன் இத்தனை இனிப்பாக இருக்கிறது என்று அவள்தன் மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்..

இதுவரை ஒன்றை வேண்டாமென்று விலக்கி வைத்து விட்டால் அவள் அதை மீண்டும் நினைத்துப் பார்த்ததில்லை..

இதை நினைக்கும்போதே...

'பிரபாகரனை நீ வேண்டாமென்று விலக்கி வைத்தாயா?' என்று அவளது மனம் அவளை கேள்வி கேட்டது.

அந்தக் கேள்விக்கு மாலினிடம் பதிலில்லை. அவள் விலகிப் போனாள். ஆனால்.. அவனை விலக்கிப் போனாளா?

'எங்கே?' மாலினி தன் மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்.

அவளா அவன் நினைவுகளை உடன் அழைத்துக் கொண்டு போனாள்? தூங்கும்போதும் அவனது நினைவு அவளை விட்டு விலக மறுத்து ஒட்டிக்கொண்டு நின்றால்.. அவள்தான் என்ன செய்வாள்?

"என்னடி யோசனை..?" அவளது கன்னத்தில் தன் மூக்கை வைத்து உராய்ந்தபடி பிரபாகரன் வினவினான்.

"ஒன்றுமில்லை.."

"ஒன்றுமில்லைன்னு நீ சொன்னால்தான் ஆயிரம் இருக்குன்னு அர்த்தம்.. சும்மா சொல்லு.."

"நான் திரும்பவும் மார்த்தாண்டத்தில் கால் வைப்பேன்னு நான் நினைக்கவே இல்ல.."

"இது என்னுடைய மண்.. இங்கே கால் வைக்காமல் வேறு எங்கே கால் வைக்க நினைத்தாய்?"

பிரபாகரனின் குரலில் கடுமை இருந்தது. அவனது கோபம் மாலினியின் மனதை தென்றலாய் வருடியது.

"எதுக்கு இந்த கோபம்..?"

"எதுக்குன்ன உனக்கு தெரியாதா?"

"இப்படி எக்குத்தப்பாய் பேசி வைத்தால் நான் திரும்பவும் சென்னைக்கே ஓடிவிடுவேன்."

"ஓட கால் இருந்தால்தானே.. நான் ஒடித்துவிடுவேன்.."

"ஒடித்து விடுவீங்களா.. நீங்க என்ன கசாப்பு கடைக்காரா?"

"இல்லைடி.. உன்னைப் போல ஒரு பிறவியைக் காதலிச்சுத் தொலைத்தவன்.."

"இவ்வளவு அலுத்துக்கிறவர் எதுக்கு என்னை வர வழைச்சாராம்?"

"உம்.. தாலி கட்டி குடும்பம் நடத்தத்தான்.."

"அதுதான் அன்றைக்கே தாலி கட்டாமலே குடும்பம் நடத்தி முடிச்சாச்சே.. இனியும் என்ன?"

அதுவரை எரிச்சலுடன் பேசிக்கொண்டிருந்த பிரபாகரன் கிளர்ந்தான். அவளை இறுக்கி.. புரண்டான். மாலினியின் மேல் சரிந்து அவள் முகம் நோக்கியவன் அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

"முதல் நாள் குடும்பம் நடத்திவிட்டு.. மறுநாள் சொல்லிக்காமல் ஓட உன்னால் மட்டும்தாண்டி முடியும்.."

"நான் சொல்லியிருந்தால் உடனே.. 'டாட்டா.. பை.. பை..' ன்னு சொல்லி அனுப்பியிருப்பீங்களாக்கும். விட மாட்டேன்னு அழிச்சாட்டியம் பண்ணியிருப்பீங்களே.."

"அதுக்கு உங்கள் ஊரில் அழிச்சாட்டியம்னு பெயரா?"

"மார்த்தாண்டத்திலும் அதுக்கு அப்படித்தான் பெயர்.."

"அறைஞ்சு பல்லைக் கழட்டி விடுவேன்.."

"இது ஆறாவது தடவை.."

"எது?"

"நீங்க அறைந்து பல்லைக் கழட்ட நினைப்பது.. உங்களைக் காதலிக்கும்போதே பல்செட்டுக்கு ஆர்டர் கொடுத்திருக்கணும் போல இருக்கே..."

பிரபாகரன் சிரித்துவிட்டான். குறும்பு கொப்புளிக்கும் மாலினியின் முகத்தைக் காதலுடன் பார்த்தவன்.. அவளது கண்ணிமையில் முத்தமிட்டான்.

"இந்த வாய்தாண்டி உன்னை வாழ வைக்குது.."

"ம்ஹீம்.. எதுக்கெடுத்தாலும் சான்ஸ் கிடைச்சதுன்னு ஒரு உம்மாவைக் கொடுத்துவிடவேண்டியது தானா?"

"அதில உனக்கு என்னடி நஷ்டம்.. எது குறைஞ்சிருச்சுன்னு இந்த கஷ்டம்?"

"ஒரு நஷ்டமும் கஷ்டமும் இல்லை. ஸ்வேதாவெல்லாம் சொன்னான்னு அதைக் கேட்டுக்கிட்டு என்னை வேவு

பார்க்க தோட்டத்துக்கு வந்த ஆள்தானே நீங்க... இப்பக் கொஞ்சி முத்தம் கொடுத்துட்டா எல்லாம் சரியாப்போகுமா?"

மாலினியின் அடி மனதில் இன்னும் கோபம் கனன்று கொண்டிருப்பதை உணர்ந்த கொண்டாள் பிரபாகரன்.

அது உண்மையின் கோபம்.. என்னை எப்படி நீ சந்தேகிக்கலாம் என்று உண்மையாக அவனைக் காதலித்தவள் காதலிக்கிறவள்.. கொள்ளும் கோபம்.

நீ தொட்ட மனதை.. வேறொருவன் தொட முடியுமா என்று நீதி கேட்கும் கோபம்.. 'சொன்ன மொழி தவறு மன்னவனுக்கே..' என்று பாரதியின் கண்ணம்மாவாக.. அவனது கண்ணம்மா சொல்லும் கோபம்.

மாலையிட்டால்தான் உன் மனைவியா என்று கேட்காமல் கேட்கும் வகையில் அன்று இரவு அவனுடன் கலந்தாளே.. அந்த மனைவி கொண்ட கோபம்.

அவளது கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய கடமை தனக்கிருப்பதை பிரபாகரன் உணர்ந்தான்.

"வேவு பார்க்கத்தான் நான் தோட்டத்துக்கு வந்தேன்னு உனக்கெப்படித் தெரியும்?"

"வேற எதுக்கு வந்தீங்க?"

"என்னதான் நடக்குதுன்னு தெரிஞ்சுக்க வந்தேன்.."

"அதுவும் ஒரு வகையில் வேவுதானே.."

"இல்லை.. நாட்டைக் காப்பாற்றுகிற மன்னன்.. ராத்திரி நேரத்தில் மாறுவேஷம் போட்டு நாட்டைச் சுற்றி வருவானாம். அவன் என்ன ஒற்றனா? நாட்டில் என்ன நடக்குதுன்னு தெரிந்து கொள்ள வேண்டியது அவனுடைய வேலையில்லையா.. அது போல என் வீட்டைக் காப்பவன் நான்.. என் வீட்டில் எனக்குத் தெரியாமல் என்ன நடக்குதுன்னு தெரிந்துகொள்ள வேண்டியது எனக்கு அவசியம். நான் அதற்காகத்தான் வந்தேன். இந்த விஷயத்தில் நீ சம்பந்தப்படாமல் வேறு யார்

சம்பந்தப்பட்டிருந்தாலும்.. நான் அந்த நேரத்தில் தோட்டத்துக்கு வந்துதான் இருப்பேன்.."

"அதுதான் ஏன்?"

"என் வீட்டில் கல்யாணம்.. வீடு பூரா சொந்த பந்தம்.. இந்தச் சமயத்தில் என் வீட்டுத் தோட்டத்தில்.. ராத்திரி பதினோரு மணிக்கு ரகசிய சந்திப்பு நடக்கப் போகுது.. அது எனக்கு தெரிய வருது.. நான் என்ன செய்யணும்னு நீ நினைக்கிறாய். இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துத் தூங்கியிருக்கணும்னு நினைக்கிறயா?"

"அதுக்காக.. ஸ்வேதா சொன்னதை நம்பிவிடலாமா?"

"நான் நம்பினேனாடி.. அடித்துப்.."

"பல்லைக் கழட்டி விடுவீங்க.. அப்படித்தானே..."

பிரபாகரன் ஆரம்பித்து வைத்ததை மாலினி முடிக்க.. அவன் ஆசையாக அவள் கன்னத்தில் இதழ் பதித்தான்.

"ஆரம்பிச்சுட்டீங்களா.. சைக்கிள் கேப்புல.. காரியத்தைச் சாதிக்கிறதில் நீங்க கில்லாடியாச்சே.. பேச்சு பேச்சாய் இருக்க.. இவர் காதல் பண்ணுவதை மட்டும் விடாமல் இருக்கிறார். ஸ்வேதா பேசியதுக்கு தலையை ஆட்டிவிட்டு என்னைக் கொஞ்ச வந்துவிட்டார்.."

"ஸ்வேதா சொல்லுவதை நம்பியிருந்தா.. அன்றைக்கே உனக்கும் எனக்கும் சண்டை வந்திருக்கும்.."

"என்னிக்கு?"

"தினகரன் கொடுத்த பூவை.. நீ கையில் பத்திரப் படுத்திக் கொண்டு வந்த அன்னிக்கு.."

"என்னது?"

மாலினி கோபத்துடன் விலகப் போனாள். பிரபாகரனின் பிடி இரும்புப்பிடியாக இருந்தது. அவளால் விலக முடியவில்லை. ஆனாலும் கோபத்தை கண்களிலும் முகத்திலும் அவள் வெளிப்படுத்தனாள்.

"எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா இப்படி ஒரு வார்த்தையை என்கிட்ட வந்து சொல்வீங்க.? நீங்க மாறலை பிரபா.."

"நான் மாறலைதான்.. மாறவும் மாட்டேன். என்றைக்குமே உன் பிரபாகரனாகத் தான் நான் இருப்பேன். முதலில் நீ ஒன்றைத் தெரிந்த கொள்ளுடி.. அன்னிக்கு நீ கொண்டு வந்த பூ.. அம்மா கொடுத்து விட்ட பூவில்லை.."

"என்ன சொல்கிறீங்க?"

மாலினியின் விழிகளில் அதிர்ச்சி தெரிந்தது. அவளையும் ஏமாற்ற ஆள் இருக்கிறதா.. முதன்முதலாக தன் புத்திசாலித்தனத்தில் மீது அவளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

"தினகரன் பூவைப் பறிச்சுக்கிட்டு உள்ளே வந்தான். அதை மாடி பால்கனியிருந்து நானும் ஸ்வேதாவும் பார்த்தோம்.."

"அவ கூட எதுக்கு நீங்க ஜோடி போட்டுக்கிட்டு நின்னீங்க?"

காதலியின் பொறாமையை நினைத்து பிரபாகரனுக்கு சிரிப்பு வந்தது.

"சிரிக்காதீங்க..."

"பின்னே என்னடி..? அவ கூட ஒரு மனுஷன் ஜோடி போட்டு நிற்பானா?"

இதைக் கேட்ட மாலினிக்கும் சிரிப்பு வந்து விட்டது. அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"சிரிப்பு வந்தால் சிரிச்சிரணும்.. அடக்கிக்கக் கூடாது.."

"உங்க வாயில் இருந்துதான்.. நீங்க ரெண்டு பேரும் ஜோடி போட்டுக்கிட்டு நின்றதாக வார்த்தை வந்தது.."

"இரண்டு பேரும் பார்த்தோமுன்னுதான் சொன்னேன். ஜோடி போட்டுக் கொண்டு பார்த்ததாகச் சொல்லவில்லை.."

"ஜோடி போடாம எப்படி ஒண்ணாப் பார்த்தீங்களாம்.."

"ஊஹூம்.. தனித்தனியாத்தான் பார்த்தோம்.."

"புரியலை..."

"அவ கண்ணால் அவ பார்த்தா.. என் கண்ணால் நான் பார்த்தேன்.."

"ஜோக்கு?"

"அப்படித்தான் வச்சுக்கயேன்.."

"சிரிப்பு வரலை..."

"ஏதோ என்னாலானது இந்த ஜோக் அளவுதான்.. உன்னளவுக்கு ஜோக் சொல்ல என்னால் முடியுமா..? நீ யாரு.. செந்தாமரையை 'ஏ' ஜோக் சொல்லி அசத்தியவளாச்சே..."

மாலினியின் முகத்தில் வெட்கம் சூழ்ந்தது.

"ச்சீ.. இதை எல்லோர் முன்னாலயும் சொல்லி வைக்காதீங்க.."

"நான் சொல்லமாட்டேன். ஆனால், சொந்தாமரை சொல்ல மாட்டாள்னு நான் கேரண்டி கொடுக்க மாட்டேன்.."

"அதைச் சொல்லுங்க.. அவளே ஒரு வெகுளி.."

"அதனாலதான் அவ ஸ்வேதா சொல்லியதை அப்படியே நம்பி அவ கொடுத்துவிட்ட பூவை அம்மா கொடுத்து விட்டதாகச் சொல்லி உன் கையில் கொண்டு வந்து கொடுத்துட்டா.."

மாலினி 'ஆ' வென்று வாய் பிளந்துவிட்டாள். அவள் விழிகள் விரிந்தன.

"என்னத்தான் சொல்கிறீங்க..?"

"ஆமாடி.. எனக்கு உன் கூடப் பேசணும்னு ஆவல்.. நான் தோட்டத்திற்கு வர நினைச்சு. பால்கனிக்கு வந்து நின்னேன்.."

"அங்கே.. தோட்டத்தில் உங்க தம்பி என்னிடம் கடலை போட்டுக்கிட்டு இருந்தாரு.."

"கரெக்டா சொல்லிட்ட.. அதை பல்லைக் கடித்துக் கிட்டு நான் பார்த்துக்கிட்டு நின்றிருந்தேன். அதை என் பின்னால் பூனை போல வந்து நின்ன ஸ்வேதாவும் பார்த்துட்டா.."

"அவ பேசாம மாடலிங் பண்ண போயிருக்கலாம்.."

"ஏன் அப்படிச் சொல்கிற..?"

"அவளுக்கு ஹீயூமன் வாக்கே வருவதில்லை. கேட் வாக்தானே வருகிறது. அதனால்தான் அப்படிச் சொன்னேன்.."

"எங்கிட்டு இருந்துடி இப்படிப் பேசக் கத்துக்கிட்ட?"

பிரபாகரன் கண்கள் மின்ன அவளை நெருங்க.. மாலினி செல்லமாக அவன் முகத்தைத் தள்ளிவிட்டுச் சிணுங்கினாள்.

"ரூட் மாறாதீங்க அத்தான்.."

"என்னத்தான்.. தினகரனும் மாலினியும் பேசிக்கிட்டு இருக்காங்க போலன்னு என்னிடம் கேட்டாள்.."

இதைக் கேட்டதும் மாலினியின் முகம் மாறிவிட்டது.

"ஐ ஆம் ஸாரி அத்தான்.. என்னால்தானே அவ இப்படி உங்ககிட்ட கேட்டுவிட்டாள். நான் தினகரனைப் பார்த்தவுடன் உள்ளே போயிருக்கணும். எப்படியும் நீங்க தோட்டத்துக்கு வந்துவிடுவீங்கங்கிற நினைவில் நின்னுட்டேன்.."

"ஒருவழியாய் நீ உள்ள போயிட்ட.. இவன் சும்மா இருக்காமல் ஒரு ரோஜாப்பூவை பிடுங்கிக்கிட்டு உள்ளே வந்தான். இந்த ஸ்வேதா மறக்காமல் என்னைப் பார்த்து.. அந்தப் பூவை தினா அத்தான் யாருக்காக பறித்துக்கிட்டுப் போகிறான்னு கேட்டு வைச்சா.."

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"நிச்சயமா உனக்காக இல்லைன்னு சொன்னேன்.."

இதைக் கேட்டதும்.. மாலினியின் முகத்தில் புன்னகை படர்ந்தது.

"நீங்க இருக்கீங்களே... அப்பப்பா.. ஆனாலும்.. நீங்களும் தினகரனும் ஸ்வேதாவை ரொம்பத்தான் வாருகிறீங்க.."

"அவ அதுக்கெல்லாம் அடங்குகிற ரகமில்லை.."

"அதுதான் எனக்குத் தெரியுமே.."

"தினா மாடிக்கு வெறுங்கையோடு வந்து தொலைச்சான். அவன் பின்னாடியே நீ ரோஜாப் பூவை மகிழ்ந்து மகிழ்ந்து பார்த்துக்கிட்டு பொக்கிஷத்தைப் போலக் கொண்டு வந்த.."

"கடவுளே.. அது நான் உயர்வாக நினைக்கிறவங்க கொடுத்த பூவுன்னு வேற சொல்லித் தொலைச்சேனே..."

"தெரிஞ்சால் சரி.. தினகரன் தேன் குடிச்ச நரியைப் போல கண்கள் மின்ன உன்னைப் பார்க்கிறான். ஸ்வேதா இளக்காரமாக என்னைப் பார்க்கிறா. அந்த நிலைமையிலயும் உன்னை நான் கேள்வி கேட்டேனாடி?"

"என் பிரபா.."

மாலினி காதலுடன் பிரபாகரனின் கைளுக்குள் புகுந்து கொண்டாள்.. இப்போது பிரபாகரன் தேன் குடித்த நரியானான். கண்கள் மின்ன காதலுடன் மாலினியை இறுக்கிக் கொண்டான்.

"காரில் போகும்போது தான் அது அம்மா கொடுத்து விட்ட பூவுன்னு நீ சொன்ன.. எனக்குச் சந்தேகம் தட்டியது. தினகரன் கொடுத்துவிட்ட பூ அம்மா கொடுத்து விட்ட பூவாக உன் கையில் எப்படி வந்தது?"

மாலினியின் முகம் மறைத்த முடி விலக்கி.. பிரபாகரன் கேட்டான். அவள் திகைத்து விழித்தாள்.

107

**காதல் என்ற உணர்வை..**

**உன் கண்கள் சொன்ன கதையை..**

**என்னவென்று நான் சொல்ல...?**

"எப்படி வந்தது?" குழந்தையாகக் கேட்டாள் மாலினி.

"ம்ம்.. அதை என் கிட்ட கேளு.." செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான் பிரபாகரன்.

"இல்லை அத்தான்.. செந்தாமரை பொய் சொல்ல மாட்டாள்.."

"நிச்சயமாய் அவள் பொய் சொல்லமாட்டாள். அவள் மட்டுமில்லை.. என் வீட்டிலும் சரி.. என் தொழில்களிலும் சரி.. என்னிடம் வேலை செய்பவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்.."

"காண்பிடென்ஸ்?"

"யெஸ்.. அதிலும் குறிப்பாக என் வீட்டு வேலையாள்கள் பொய் சொல்ல மாட்டாங்க.. நம்பிக்கைக்குரிய வங்களா இருப்பாங்க. செந்தாமரை வெகுளி... பொன்னியிட மெல்லாம் இந்த வேலை நடந்திருக்காது.."

"அதைச் சொல்லுங்க.. அவ படுவிவரமான ஆளு..."

"ம்ம்ம்.. ஸ்வேதாவையெல்லாம் வந்து பாரு வட்டப் பாறைக்குன்னு சொல்லி விடுவாள்.."

"வட்டப் பாறைக்கு வருவதா?"

"அது சவாலுக்கு அழைக்கும் லாங்வேஜ்.."

"இன்ட்ரஸ்டிங்..."

"ஏண்டி... காதலிக்கிறவனைக் குற்றவாளியாக்கி விட்டு.. நீ இன்ட்ரஸ்டிங்குன்னு கதை கேட்கிறயா?"

"சும்மா ஒரு இன்ட்ரஸ்டில சொல்லிட்டேன் அத்தான்.. நீங்க இதுக்குப் போயி கோவிச்சுக்கலாமா?"

மாலினி அவனுடைய சட்டை பித்தானைத் திருக ஆரம்பித்தாள்.

"அதுக்கு ஏன் பட்டனை பிய்க்கிற?"

"அத்த்த்தான்..."

"வெட்கமாக்கும்.. அது ஏண்டி இந்த பொம்பளைக எல்லாம் வெட்கம் வந்தால் ஆம்பளைகளின் சட்டைப் பொத்தானை பிய்த்து எறியணும்னு ஒரு வெறியோட கிளம்புகிறீங்க..."

"இதைப் பற்றி வேணும்னா நான் பிஹெச்.டி. பண்ணி விட்டு.. என் ஆராய்ச்சிக் கட்டுரையை உங்க கிட்ட சமர்ப்பிக்கிறேன்."

"அதுதானே.. என்னடா.. இவ அதிசயமா வாயை அடக்கி பொத்தான் மேலே குறியாய் இருக்கிறாளேன்னு நினைச்சேன்.. நான்தான் ஏற்கனவே சொல்லிட்டேனில்ல.."

"என்ன சொன்னீங்களாம்?"

"வாய்தான் உன்னை வாழ வைக்குதுன்னு சொன்னேன்.."

"செந்தாமரை ஏன் அந்தப் பூவை அத்தை கொடுத்ததாகச் சொல்லி என்னிடம் கொடுத்தாள்னு சொன்னீங்களா?"

"எங்கே நீ சொல்ல விட்ட?"

"உங்க வாயைப் பொத்தினேனா?"

"அதையெல்லாம் எங்கே நீ செய்கிற..? அன்றைக்கு அணைக்கட்டில் அணை உடைந்த வெள்ளமாய் என்னை மூச்சுத் திணற வைத்தவள்தான்.. அதுக்குப் பின்னால.. அந்த தோட்டத்துக் கதை நடந்தப்போ.. நடுராத்திரியில தீவிரம் காட்டிவை.. அடுத்த நாளே.. என்னை

அவள் பறந்து போனாளே..

என்னை மறந்து போனாளே... - ன்னு

பாட்டுப் பாட வைத்துவிட்டுப் பறந்து விட்டாயே... இப்பவும் நான்தான் உன் வாயைப் பொத்த வேண்டியிருக்கிறது.."

பிரபாகரனின் இதழ்கள் மாலினியின் இதழ் மீது படிந்தன. மாலினி பொங்கி வரும் உணர்வுப் பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டவளாக கண்மூடிக் கொண்டாள். பிரபாகரன் கள்ளுண்ட வண்டாக மயங்கிப் போனான்."

"மாலினி..."

"ம்ம்ம்.."

"ஐ லவ் யூடி.."

"எனக்கு இது தெரியாது பாருங்க.. இதையே எத்தனை தடவைதான் சொல்வீங்க?"

"மூச்சுக்கு முந்நூறு தடவை.. என் வாழ்நாள் பூராவும் சொல்வேன்.."

மாலினி அவன் கழுத்தை கைகளால் வளைத்துக் கொண்டாள்.. அவன் கண்களுக்குள் எதையோ தேடினாள்.

"என்னடி?"

"நான் என்ன அத்தனை அழகா அத்தான்..? என் மேல் ஏன் இத்தனை உயிராய் இருக்கீங்க?"

"இதே கேள்வியை நானும் கேட்கலாமில்லையா.. நான் கோடீஸ்வரன்னு சொல்லாதே.. நான் நாடோடியாக இருந்திருந்தாலும் நீ என்னை இதே ஆவேசத்துடன் காதலித்திருப்பாய்.."

'இதுபோதும்..' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் மாலினி.

இந்தப் புரிதல்.. அவளது காதலின் அளவையும் வேகத்தையும் அவள் வாய் விட்டுச் சொல்ல வேண்டிய அவசியமில்லாத புரிதல்.. அது அவளுக்கு கிடைத்தது மிகப் பெரிய வரமல்லவா?

அவளது காதலின் எல்லை.. வானத்தின் அளவு.. அதைப் புரிந்து கொண்டவன் அவளது காதலன்.

அதைப் போல அவனது காதலின் அளவுக்கும் வானம் தான் எல்லை... அதை மாலினியும் புரிந்து வைத்திருந்தாள்.

மனநிறைவுடன் அவனது விரல் கோத்துக் கொண்டாள் மாலினி. காதலியின் சரணாகதியைப் புரிந்து கொண்டாலும்.. அவளது குற்றச்சாட்டிற்கான விளக்கத்தை சொல்லியாக வேண்டும் என்று பிரபாகரன் நினைத்துக் கொண்டான்.

அரைகுறையாக இதை விட்டால்.. என்றெனும் ஒரு நாளில் மீண்டும் இந்தக் கேள்வி வெடித்து எழுந்துவிடும் அபாயம் இருந்தது.

தன்னிலை விளக்கத்தை பிரபாகரன் சரிவரக் கொடுக்காவிட்டால்.. இன்று பிரபாகரனைப் பிரிந்து செல்லத் துணிந்த மாலினி.. நாளை.. அதே வேலையைத் திரும்பவும் செய்து விடுவாள்.

அதனால் மாலினியின் மீதிருந்த மயக்கத்திலிருந்த வெளிவந்து அவளது விரல்களை நீவி சொடக்கெடுத்தபடி பிரபாகரன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"சொந்தாமரையிடம் அப்படிச் சொல்லி ஸ்வேதா பூவைக் கொடுத்திருக்கிறாள்.."

"ஸ்வேதா மிரட்டினாளா?"

"ஹூம்.. மிரட்டலுக்கெல்லாம் செந்தாமரை பயப்பட மாட்டாள். ஒருவேளை ஸ்வேதா அப்படிச் செய்திருந்ததால் செந்தாமரை அந்தப் பூவை வாங்கியிருக்கவே மாட்டாள் அப்பவே அம்மாவிடம் போய் சொல்லியிருப்பாள். ஸ்வேதா கெட்டிக்காரி.."

"என்ன பாராட்டெல்லாம் பலமாயிருக்கு?"

"கெட்டிக்காரின்னுதானேடி சொன்னேன்.."

"அதைக்கூட நீங்க எதுக்கு சொல்கிறீங்க..."

"சரி, தாயே.. இனி சொல்லவில்லை..."

"அஃது.. அந்த பயம் இருக்கட்டும்.."

"செந்தாமரைக்கு உன் மேல் பிரியம் ஜாஸ்தி.."

அதைக் கேட்ட மாலினியின் முகம் கனிந்தது. அவள் 'ஆம்' என்ற பாவனையில் தலையை ஆட்டினாள்.

"செந்தாமரைக்கு மட்டுமில்லை.. நம் வீட்டில் வேலைபார்க்கிற எல்லோருக்குமே உன்மேல் பிரியம் ஜாஸ்தி தான்.."

"ம்ம்ம்.."

"வீட்டு எஜமானனுக்கு.. அவங்க எல்லோரையும்விட பிரியம் ஜாஸ்தி.."

"அவனுக்கு நீதான் உயிர்.."

"இதுதான் சாக்குன்னு கொஞ்ச ஆரம்பிக்காம விஷயத்தை சொல்லுங்க.."

"அம்மா.. அன்னிக்கு காலையில தோட்டத்துக்குப் போனாங்களாம்.."

"போயி?"

"அந்த ரோஜாப் பூவை பார்த்தாங்களாம்.."

"உங்க வீட்டுத் தோட்டத்தில் ரோஜாக் கூட்டமே இருக்கே.. அதில அந்தப் பூவை மட்டும் அத்தை உற்றுப் பார்த்தாங்களாமா?"

"இது உனக்கும் எனக்கும் தெரியும். செந்தாமரைக்கு தெரியுமா?"

"அதை சொல்லுங்க.."

"அது அன்னிக்குதான் மலர்ந்த பூவாம்.."

"அட..."

"அதனால்.. அதைப் பறித்து உன்கிட்ட மட்டும் கொடுக்கச் சொல்லி ஸ்வேதா கையில் அம்மா கொடுத்து விட்டாங்களாம்.."

"அதுக்கு அவங்களுக்கு வேறு ஆளே கிடைக்காதா.. ஸ்வேதாவிடம் போய் அத்தை அதைக் கொடுப்பாங்களா?"

"இதை பொன்னின்னா யோசித்துப் பார்த்திருப்பா.. செந்தாமரைதான் களிமண்ணாச்சே.. அதனால்தானே செந்தாமரையை இந்தக் காரியத்துக்கு ஸ்வேதா செலக்ட் பண்ணியிருக்கிறா..."

"கெட்டிக்காரிதான்.."

"இதை நீ சொல்லலாம்.. நான் மட்டும் சொல்லக் கூடாதா?"

"சொல்லக் கூடாது.."

"சொல்லலை.. போதுமா. இப்ப விஷயத்துக்கு வா..."

"வந்தேன்.."

"செந்தாமரை கிட்ட இதை சோகமாய் சொல்லி.. பாரு செந்தாமரை.. என் அத்தைக்கு இருக்கிற ஓரவஞ்சனையை.. இந்த ஸ்பெஷல் பூவை எனக்குக் கொடுக்காம.. என் கையிலேயே கொடுத்து மாலினிகிட்ட கொடுக்கச் சொல்லி என் அத்தை சொல்கிறாங்க.. என் மனது தாங்குமா.. நீயே சொல்லுன்னு நியாயம் கேட்டிருக்கிறாள்.."

"அடக்கடவுளே..."

"உனக்குத்தானே மனசு தாங்காது.. எனக்குத் தாங்கும்னு சொல்லி.. செந்தாமரை அந்தப் பூவை ஸ்வேதா கிட்ட வாங்கிக்கிட்டு வந்து உன்கிட்ட கொடுத்து.. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாய் ஸ்வேதா சொன்னதை உன்னிடம் ஒப்பித்துவிட்டும் போய் விட்டாள்.."

"பெருமாளே.. அது தெரியாமல் நான் அந்தப் பூவை தினகரனின் கண் எதிரிலேயே கொண்டாடினேனே..

அங்கே ஸ்வேதாவும் இருந்து தொலைத்தாளே.. உங்க மனசு என்ன பாடுபட்டிருக்கும்?"

"இப்ப வந்து இதைச் சொல்லு.. எனக்கு நல்லாவந்திரும் வாயில... அப்பக்கூட நான் உன்னிடம் கோபப்பட்டேனாடி?"

"உம்முன்னு இருந்தீங்க.."

"அதைக்கூடச் செய்யலைன்னா நான் ஆம்பளையாடி?"

"ஐ ஆம் ஸாரி அத்தான்.."

"இதுக்கொண்ணும் குறைச்சலில்லை. செய்வதையெல்லாம் அறியாமல் செய்துவிட வேண்டியது.. விஷயம் தெரிந்தவுடன் பச்சைப் பிள்ளை போல முகத்தை வைத்துக் கொண்டு 'ஸாரி'ன்னு சொல்ல வேண்டியது. உனக்கு இதே வேலையாப் போச்சுடி.."

"நானும் பச்சைப் பிள்ளை போலத்தான்.. அத்தான்.."

"யாரு..? நீ பச்சைப் பிள்ளை? அதை அணைக்கட்டுக்குப் போவதற்கு முன்னால் சொல்லியிருந்தா நம்பியிருப்பேன்..."

மாலினி லஜ்ஜையுடன் பிரபாகரனின் கையைக் கிள்ளினாள்.

"ஸ்ஸ் ஆ.. வலிக்குதுடி..."

"இதை விட என் மனம் வலிக்குது. உங்களுக்கு எப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலையை உண்டாக்கி-யிருந்தேன்?"

"நீ என்னடி செய்வ.. இது ஸ்வேதா ஆடிப் பார்த்த விளையாட்டு.. தினகரன் கொடுத்த பூவை நீ கை நிட்டி வாங்கியிருக்க மாட்டாய்னு எனக்குத் தெரியும். ஆனால், அந்தப் பூ உன்னிடம் எப்படி வந்ததுன்னு என் மனதைப் போட்டு கேள்வி குடைந்து கொண்டிருந்தது. உன்னிடமும் அதைக் கேட்க முடியாது. நீ சுயமரியாதை சுந்தரி.. இப்ப பெட்டியைக் கட்டினவ அப்பவே பெட்டியைக் கட்டித் தொலைச்சிருப்ப..."

பிரபாகரன் அலுத்துக் கொள்ளவும்.. மாலினி உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவனது பார்வை அவளது இதழ் மீது படிய... அவசரமாக சரிசெய்து கெண்டாள்.

"தற்காப்பு எச்சரிக்கை?" அவன் கண்சிமிட்டினான்.

அவள் முகம் சிவந்தாள். அவன் உல்லாசமாக நகைத்தான்.

"நீயாக பூ மேட்டரை எடுத்து நியாயம் கேட்ட.. அது அம்மா கொடுத்துவிட்ட பூவுன்னு நீ சொன்னதும் எனக்கு சிக்கலின் நூல் முனை கிடைத்துவிட்டது. உன்னை மில்லில் இறக்கிவிட்டு.. வீட்டுக்குப் போனேன். அம்மாவிடம் கேட்டேன். அவங்க பூவைக் கொடுக்கலைன்னு சொல்லி.. செந்தாமரையைக் கூப்பிட்டு விசாரித்தாங்க. பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது..."

"கடவுளே.. அத்தையிடம் தினகரனைப் பற்றிச் சொல்லிட்டீங்களா.."

"இல்லையில்லை.. ஆனால் ஸ்வேதா இனிமேல் நம்ம வீட்டில் இருக்க கூடாதுன்னு சொல்லிட்டேன்.."

"அத்தான்..."

மாலினிக்கு ஆளவந்தாரின் குடும்பத்தின் அருமை தெரியும். நர்மதாவிற்கு அவர்கள் எந்த அளவிற்கு முக்கியமானவர்கள் என்பதை புத்திசாலியான அவள் புரிந்து வைத்திருந்தாள். அதனாலேயே பவித்ராவின் காதல் நிறை வேற அவள் துணை செய்யத் துணிந்தாள்.

அப்படிப்பட்ட நர்மதாவிடம்.. அவளின் அண்ணன் மகள் அந்த வீட்டில் இருக்கக் கூடாதென்று மாலினிக்காக பிரபாகரன் சொன்னானா?

"என்னடி அப்படிப் பார்க்கிற?"

"அவள் உங்க மாமாவின் மகள்.. அத்தான்.."

"இருக்கட்டுமே.."

"எனக்காக அவளை வீட்டை விட்டுப் போகச் சொன்னீங்களா?"

"அடிதான் வாங்கப் போகிற.. நீ என் உயிர்டி.."

"அவளை வீட்டை விட்டுப் போகச் சொன்னது எனக்குத் தெரியும். ஆனால், எனக்காக வீட்டை விட்டுப் போகச் சொன்னது இப்போதுதான் தெரியும்.."

"இப்போ சொல்லு.. நானா உன்மேல் சந்தேகப்படுகிறவன்?"

"இல்லைதான்.. ஆனாலும்..."

மாலினி இழுத்தாள்.. இன்னும்கூட அவள் முழுதாக சமாதானமாகவில்லை என்று பிரபாகரனின் மனம் உணர்ந்தது.

'எப்படிச் சமாதானமாவாள்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் அவன். அவன் பேசிய வார்த்தைகள் அப்படிப்பட்டவை.. சகோதரனைப் போல் உன்னை நினைக்கிறேன் என்று தினகரனிடம் சொன்னவள் மாலினி..

அப்படிப்பட்டவளிடம் போய்.. தினகரனுக்கும் நூல் விட்டாயா என்று கேட்டுத் தொலைத்தவன் பிரபாகரன்.

அப்புறம் எப்படி அவள் சமாதானமாவாள்?

"பார்.. மாலினி..." என்று அவன் ஆரம்பித்தான்..

அவள் உடனே அவனைக் காதலுடன் பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

கண்களில் மயக்கத்துடன்.. ஆவலாக.. அவனையே அள்ளிப் பருகுவதைப் போல அவள் பார்த்ததைக் கண்டவன் மனம் கிறங்கிப் போனான்.

"இப்படிப் பார்த்தால் எப்படிடீ விளக்கம் சொல்வது?" அவன் முக தாபத்துடன் அவள் முகத்தை நெருங்கியது.

**மனதாலே நீ என்னருகிலிருக்கும் உணர்வை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"நீங்கதானே அத்தான்.. என்னைப் பாருன்னு சொன்னீங்க?" மாலினி சிணுங்கினாள்.

"அதுக்காக இப்படியா என்னைப் பார்த்து வைப்ப?"

"எப்படிப் பார்த்தேனாம்?"

"அப்படியே பார்வையிலேயே என்னைச் சாப்பிட்டுட்டடீ..."

மாலினி அவனது சட்டையின் வாசம் பிடித்து கண் மூடிக் கிறங்கினாள். அவளது காதோரமாக இதழ் பதித்த பிரபாகரன்,

"எல்லாம் சரிதான்.. இவ்வளவு காதலை என்மீது வைத்திருக்கிறவள்.. பிரிஞ்சு ஓடுகிறயே.. அதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியலை.." என்றான்.

மாலினி பதில் சொல்லவில்லை. அவளது மனதின் சிணுக்கம் பிரபாகரனுக்குப் புரிந்தது.

"ஸ்வேதாவை ஊருக்கு அனுப்ப அம்மா முயற்சி செய்தாங்க. ஆனால், இத்தனை மாதங்களாக இங்கே இருந்தவளை காயத்ரியின் கல்யாண சமயத்தில் திருப்பி அனுப்பினா தேவையில்லாத விமரிசனங்கள் வரும்.. அதனால.. அவளோட கல்யாண வாழ்க்கை பாதிக்கப்படும்னு தாத்தா சொல்லியிருக்கிறார். அம்மாவால் அதை மறுத்துப் பேச முடியல.."

"ஒருவகையில் அது நியாயம்தான் அத்தான்.."

"அதனால்தான் நான் காயத்ரியின் கல்யாணம் முடிகிற வரை அவள் இங்கே இருக்க அனுமதித்தேன்.."

"நீங்க... அதை தவிர்த்திருக்கவே முடியாது.."

"அறுபது நாள்கள்... ஸ்வேதாவிற்கு அது மிக அதிகமான நாள்கள். ஒரு நாள் கிடைத்தாலே அவள் அதில் விளையாடிப் பார்த்துவிடுவாள். அறுபது நாள்கள் என்பது அவளுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி.."

"ம்ம்ம்.."

"நான் ஜாக்கிரதையாகத்தான் இருந்தேன்.. என்றைக்கு அவள் என் வீட்டிலேயே விளையாடிப் பார்க்க ஆரம்பித்து விட்டாளோ... அதற்குப் பின்னால் அவளைப் பெண்ணென்று எளிதாக நினைத்துவிட முடியவில்லை.."

"பெண்ணென்றால் உங்களுக்கு எளிதா?"

"எந்த மடையனாவது அப்படிச் சொல்வானா.. பெண் ஆதிசக்தியாச்சே.."

"இப்படிச் சொல்லிச் சொல்லியே எங்களுக்கு சூடம். சம்பிராணி காட்டி வீட்டுக்குள் அடைச்சு வச்சிருங்க.."

"வீட்டுக்குள் அடைந்து கிடந்தாலும்.. எங்களை ஆட்டிப் படைக்கிற சக்தி நீங்கதானேடி.. நான் பெண்ணுங்கிறதால் எளிதாகச் சொல்லவில்லை. பெண்கள் பொதுவாக இரக்கம் காட்ட வேண்டிய லிஸ்டில் இருப்பவர்கள்.."

"ஐயோ பாவம் கேஸூன்னு சொல்கிறீங்க.."

"ஏண்டி.. முன்னால் போனால் கடிக்கிற.. பின்னால் வந்தால் உதைக்கிற. ஒரு நிலையில் இருக்க மாட்டயா... ஒண்ணு இப்படி இரு.. இல்லைன்னா அப்படி இரு. ஒரு மனுஷன் உன்னைக் காதலிச்சுத் தொலைத்ததிற்காக இப்படியா பாடாய்ப்படுத்துவ?"

பிரபாகரனின் வார்த்தைகள்தான் சுள்ளென்று வந்தன. அவன் என்னவோ அவளுடைய கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்து கொண்டிருந்தான்.

அதைக் கண்ட மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"ஏண்டி.. உனக்கு ரோஷமே இல்லையா?"

"யாரு.. எனக்கு ரோஷமில்லை?"

"ஆமாம்.. நான் திட்டிக்கிட்டு இருக்கேன்.. என்னவோ.. உன்னைக் கொஞ்சிக்கிட்டு இருப்பதைப் போல மகிழ்ந்து போய் சிரிக்கிறயே..."

"இந்த லட்சணத்தில் திட்டினால் மகிழாமல் என்ன செய்வாங்களாம்.."

இப்போது மாலினியின் சிரிப்பு பிரபாகரனையும் தொற்றிக் கொண்டது.

"போடி அரட்டை.. ஸ்வேதா விளையாடிப் பார்க்க நினைத்தது  நம் வாழ்க்கையில்டி. அவள் உன்னையும் என்னையும் பிரிக்கப் பார்த்தாள். தினகரனையும் என்னையும் பிரிக்கப் பார்த்தாள். அவள் ஆபத்தாவனவள்னு தெரிந்த பின்னால் நான் அலர்ட்டாகத்தான் இருந்தேன். ஆனால், அவள் சைலண்டாக விளையாடிப் பார்த்துட்டாள்..."

"என்னிடம் அவளது பாச்சா பலிக்காது அத்தான்.."

"பவித்ராவிடம் பலித்து விட்டதே..."

பவித்ராவின் பேச்சு வந்ததும் மாலினி மௌனமாகி விட்டாள். அவளது மனநிலையை புரிந்தவனாக பிரபாகரன் அவளது பதிலை எதிர்பார்க்காமல் பேச்சைத் தொடர்ந்தான்.

"பவித்ராவின் ஆங்கிளில் இருந்து இதைப் பார்க்க வேண்டும் மாலினி.. தினகரன் உன்னிடம் வழிந்ததென்னவோ உண்மைதான். அவள் தினகரனை எவ்வளவு காதலிக்கிறாள் என்று உனக்குத் தெரியும் தானே. நீயும் காதலித்துக் கொண்டிருப்பவள் மாலினி. அப்படி உயிருக்குயிராக காதலிக்கும் காதலனின் மனதில் வேறொரு பெண்ணின் மீது ஆர்வம் இருப்பது தெரிந்தால் அவளுக்கும் பொறாமை வரும்தானே..."

மாலினி பதில் பேசவில்லை.

"அதுக்கு நீ பொறுப்பாக முடியாதுதான். ஆனாலும் மாலினி.. நீ அவளைப் புரிந்துகொள்ள டிரை பண்ண

வேண்டும்.."

மாலினி, பிரபாகரனிடமிருந்து விலகி அமர்ந்து.. கை விரல் நகங்களை ஆராய ஆரம்பித்தாள்.

"உனக்கு பவித்ராவைப் பத்தின பேச்சு பிடிக்கலைன்னு தெரியுது. ஆனாலும் பேச வேண்டியதை பேசித்தானே ஆகணும்..? ஸ்வேதா, பவித்ராவின் மனதில் மெல்ல மெல்ல விஷத்தை ஏற்றியிருக்கிறள். அறுபது நாள்களில் அவள் மனதை கலங்கடித்திருக்கிறாள். பாவம் பவித்ரா.. பேதைப் பெண். ஸ்வேதாவின் பேச்சை அவள் நம்பாவிட்டாலும் தினகரன் உன் மேல் ஆர்வமாய் இருக்கிறான்னு தெரிந்ததும் உடைந்து போய்விட்டாள்..."

'நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்.. நான் வாயைத் திறக்கவே மாட்டேன்' என்று கங்கணம் கட்டிக் கொண்டவளாக மாலினி பிடிவாதமாக மௌனம் சாதித்தாள்.

"என்னைப் பற்றி எல்லோரும் 'இரும்பு மனிதன்' னு தான் சொல்வாங்க.."

"நானும் அப்படித்தான் சொல்வேன்.."

"அப்படிப்பட்ட என்னையே கலங்கடிக்கப் பார்த்தவள் ஸ்வேதா. பவித்ராவை விட்டு வைப்பாளா..? அன்றைக்கு தோட்டத்துக்கு தினகரனை சந்திக்க நீ வரப் போவதாக இவள் வாசலியேயே காத்துக் கொண்டிருந்து என்னிடம் சொன்னபோது எனக்கு தூக்கிவாரிப் போட்டுவிட்டது. வாசல் போர்டிகோபில் கொஞ்சம் வெளிச்சம் கம்மியாக இருந்தது. சட்டுன்னு அவ கழுத்தைப் பிடித்து நெரித்து விட்டேன்.. இன்னும் ஒரு விரல் ஆழமாகப் பதிந்திருந்தால் கூட அவள் உயிரை விட்டிருப்பாள்..."

"ஐயோ.."

மாலினி பதற்றத்துடன் வாய் பொத்திக் கொண்டாள். பிரபாகரனின் முகத்தில் கோபம் வந்திருந்தது..

"அவள் அன்றைக்கே என் கையில் சாக வேண்டியவள் தப்பித்து விட்டாள்.."

"என்ன அத்தான் இது..?"

"வேறு என்ன செய்ய மாலினி.. உன்னைப் பற்றி அபாண்டமாக அப்படி ஒரு வார்த்தையைச் சொல்கிறாள். அவளை உயிரோடு விடுவதா..?"

மாலினி ஸ்தம்பித்துப் போய்விட்டாள்.. அவளுடைய பிரபாகரன் அவளை உடனே சந்தேகித்து விடவில்லை. பழி சொன்னவளை கொல்லத் துணிந்திருக்கிறான் என்ற நினைவு அவளது நெஞ்சத்தை நிறைத்தது..

"காயத்ரியின் கல்யாண சமயம் என்பதால் கையை எடுத்தேன்.. அவள் மூச்சுவிடத் திணறுகிற அந்த நிலைமையிலும் என்னைப் பார்த்து சவால் விட்டாள் மாலினி.."

"என்ன சவால்..?"

"தினகரன் நைட் பதினோரு மணிக்கு தோட்டத்துக்கு வருவான்.. அவனிடம் போய் அவன் யாருக்காக காத்திருக்கிறான்னு கேளுங்க.. அதை விட்டுட்டு என் கழுத்தை நெரிக்காதீங்கன்னு சொன்னா.. அவ்வளவு ஆணித்தரமா அவள் சொன்னபின்னாலும்.. நான் உன்னிடம் கேள்வி கேட்கவில்லை மாலினி. இதை நினைவில் வைத்துக்கொள்.."

அது உண்மையென்பதை மாலினியும் உணர்ந்துதான் இருந்தாள்..

"என்ன நடக்கிறது என்று மாடி பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்... தினகரன்.. தோட்டத்துக்குப் போனான்.. இந்த நடுராத்திரியில் அவனுக்கு தோட்டத்தில் என்ன வேலைன்னு கோபம் வந்தது. ஸ்வேதா விளையாடிப் பார்க்கிற விளையாட்டில் தெரியாமல் அவன் மாட்டிக் கொண்டானா என்ற யோசனையுடன் அதை ஊர்ஜிதம் பண்ணிக் கொள்ளத்தான் தோட்டத்துக்குப் போனேன்.. உன்மேல் சந்தேகப்பட்டு போகவில்லை.."

"எனக்கு இது எதுவும் தெரியாது அத்தான்.."

"அதுதான் எனக்கு அன்னிக்கே தெரியுமே.. நீ ஏதோ சிக்கலில் மாட்டியிருக்கிறது மட்டும் எனக்குத் தெரிந்தது. என்ன சிக்கல்னு எனக்குத் தெரியவில்லை.."

"எனக்கே அது தெரியாதே.. நான் நிம்மதியாக தூங்கப் போய்விட்டேன்.."

"அது தெரியாமல் இந்தப் பைத்தியக்கார தினகரன் தோட்டத்தில் உனக்காக காத்துக் கொண்டிருந்தான்.."

"நீங்களாச்சும் என்னிடம் இப்படியிப்படின்னு சொல்லியிருக்கலாமில்ல?"

"எப்படியெப்படின்னு சொல்லுவேன்.. இது கத்தி முனையில் நடக்கிற சமாசாரம்டி.. அத்தனை தூரத்துக்கு ஜாக்கிரதையாக இருந்தும்.. கடைசியில் என்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் போய்விட்டது மாலினி நீயும் நானும் பிரியும் நிலை வந்து சேர்ந்தது.."

"நானும் நிறையத் தடவை யோசித்து விட்டேன் அத்தான்.. என்மேல் எந்தத் தவறும் இருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை.."

"இல்லை மாலினி... உன்மேல் ஒரு தவறும் இல்லை பவித்ரா கேட்டதைப் போல நீ தினகரனிடம் போய் என்னைக் காதலிப்பதை பட்டுன்னு சொல்லிவிட முடியாது.."

"உங்களுக்கு என்னைப் புரிகிறதா அத்தான்..?"

"நல்லா புரிகிறது.."

"காதல் என்பது மிகவும் தனிப்பட்ட.. அந்தரங்கமான உணர்வு.. அதை நெருங்கிய தோழியிடம் பகிர்ந்து கொள்ளலாம்.. அந்நிய ஆளிடம் பகிர்ந்துகொள்ள முடியாது. உங்களுக்கு ஒன்று தெரியுமா..?"

"என்னடி..?"

"சசியிடம்கூட நான் இதை பகிர்ந்துகொண்ட தில்லை.. அவளாகத் தெரிந்து கொண்டதுதான். அந்த வகையில் என் மனதிலிருந்ததை நான் பகிர்ந்துகொண்ட ஒரே ஜீவன் பவித்ரா மட்டும்தான். அவளை அந்த அளவுக்கு உயர்வாக நினைத்தேன்.. மதித்தேன்.."

"இப்போது அவள் வருத்தப்படுகிறாள் மாலினி.."

"காலங் கடந்த வருத்தத்தால் யாருக்கு என்ன பயன்? என் அம்மா அடிக்கடி சொல்வாங்க.. வார்த்தைகளைக் கொட்டாதே.. அதைத் திரும்பவும் அள்ள முடியாதுன்னு.. அது எந்த அளவுக்கு உண்மையாகிருச்சுன்னு பாருங்க.. பவித்ரா பேசியதை அவளாய் திரும்ப வாங்கிக்க முடியுமா..?"

"அவ சூழ்நிலை அப்படி.."

"எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நீங்கள் என்னைக் கேள்வி கேட்கவில்லையே அத்தான்.. என்னைக் கேள்வி கேட்கும் உரிமை உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் உள்ளது. அவள் யார் என்னைக் கேள்வி கேட்க?"

"அறியாப் பெண்ணுடி.. விட்டுத் தள்ளு.."

"இல்லை அத்தான்.. அவள் எல்லாம் அறிந்தவள் தான்.. அவ்வளவு சுலபமாக உங்களைப் போல என்னால் விட்டுத் தள்ளுன்னு போய் விட முடியாது.."

"ஒரு காலத்தில் உனக்கு அவள் பெஸ்ட் ஃப்ரெண்ட் மாலினி.."

"அதுக்காகத்தான் அந்தக் கருமாந்திரம் பிடித்த காதல் தூது போகும் வேலையைச் செய்ய நான் ஒப்புக் கொண்டேன். அவள் மனதிலிருப்பதை மறைக்காமல் என் ஒருத்தியிடம்தான் சொன்னாள்.. அவளுடைய காதல் நிறைவேறாமல் போய்விடுமோன்னு பயந்து அழுதாள்.. அவள் மேல் இரக்கப்பட்டேன்.. அதற்கு கைமேல் பலன் கிடைத்து விட்டது. நீங்க மேலே சொல்லுங்க.."

"இந்தத் தினகரன் பயல் குட்டிப் போட்ட பூனையைப் போல தோட்டத்தில் உலாத்திக்கிட்டு இருந்தான்.. ஆனா ஒண்ணு மாலினி.. பயல் என்னிடம் விஷயத்தை மறைக்கவே நினைக்கலை.."

"அதை நீங்கதான் மெச்சிக்கணும்.. தப்புத் தப்பாய் யூகம் பண்ணிவிட்டு.. அண்ணனின் காதலிக்காக தோட்டத்தில் உலாவுவாராம்.. அந்த மன்மதக் கொடுக்கிற்காக இந்த அருமை அண்ணன் பரிந்துக்கிட்டு வருவாராம்.."

"அண்ணனின் காதலின்னு அவனுக்குத் தெரியுமாடி..?"

"ஏன்.. ஹிட்லர் சார்.. அதைத் தம்பியிடம் சொல்ல வேண்டியதுதானே.. ஏன் இந்த விஷயத்தில் தம்பியிடம் ஊமையாகிப் போனார்..?"

"அது வந்து.."

"என்னத்தை வந்து.. போயின்னு இழுக்கறீங்க.. பெரிதாய் உங்க மாமன் மகளுக்காக வக்காலத்து வாங்கி னீங்களே.. அவ எதுக்கு என்னைக் குத்தம் சொன்னா.? உங்களைக் குற்றம் சொல்ல வேண்டியதுதானே..?"

"உனக்கு அது ஒரு குறையா..?"

"பின்னே.. இல்லையா.. உங்க தம்பிதான் என்னிடம் ஒரு மார்க்கமாய் வழிகிறாருன்னு உங்களுக்குத் தெரியும் தானே.. அவரைக் கூப்பிட்டு. தம்பி.. தம்பி.. நீ வழிகிறாயே.. அவள் உனக்கு அண்ணின்னு சொல்ல வேண்டியதுதானே..?"

"தானாய் தெரியட்டும்னு விட்டுவிட்டேண்டி.. வீட்டில் கல்யாண வேலைகள் நடந்து கொண்டிருந்த போது இதைச் சொல்லாட்டி என்ன.. எப்படியும் காயத்ரி கல்யாணம் முடிந்தவுடன் அடுத்த முகூர்த்தத்தில் உன் கழுத்தில் தாலியைக் கட்டப் போகிறேன்..

அப்ப அவனாகத் தெரிந்து திருந்திக் கொள்ளட்டும்.. அதுக்குள்ள அவசரப்பட வேணாம்னு நினைச்சேண்டி.."

"நீங்க அமைதியாய் இருந்தீங்க.. சரி.. குடும்பத்திற்கு மூத்தவர்.. காதல் அது இதுன்னு தம்பி.. தங்கையிடம் சொல்லச் சங்கடப்படுகிறார்னு நினைத்து நானும் ரகசியம் காத்தேன்.. இது ஒரு தப்பா..?"

"தப்புன்னு நான் சொன்னேனா..?"

"அன்னிக்கு சொன்னீங்களே.."

"அதுக்குத்தான் பட்டு அனுபவித்து விட்டேனே.. உனக்கு அது போதாதா..?"

பிரபாகரன் இப்படிக் கேட்டதும்.. மாலினிக்கு கண் கலங்கிவிட்டது. அவள் அவனது கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்..

"ஐ ஆம் ஸாரி அத்தான்.."

"எத்தனை தடவைதான் ஸாரி கேட்ப..?"

"உங்களை பனீஷ் பண்ணிட்டேன்.."

"உன்னையும் சேர்த்துத்தானே தண்டித்துக் கொண்டாய்.. என்னைப் பிரிந்து நீ இருந்து விடுவாயா..?"

'முடியாது..' என்ற பாவனையில் தலை அசைத்த மாலினி.. பிரபாகரனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்..

"உங்க அம்மா கேட்டபோது கூட நான் நம் காதலைப் பற்றி அவங்களிடம் சொல்லவில்லை அத்தான்.. அப்படி யிருக்கும்போது தினகரனிடம் போய் எப்படி நம் காதலைப் பற்றிப் பேசுவேன்..? அவரிடம் நான் பொதுவாகத்தான் பேசுவேன் அத்தான்.. அதிகமாக பேச மாட்டேன்.."

மாலினியின் கண்ணிலிருந்து பெருகிய நீர் பிரபாகரனின் சட்டையை நனைக்க.. அவன் இரக்கத்துடன் அதைத் துடைத்து விட்டான்..

109

## கொட்டுகிற அருவியைப் போல..

**என்னைக் கட்டிவைக்கும் உன் நினைவை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பிரபாகரனின் மனம் துயர் கொண்டது. அவனுடைய காதலி அப்பழுக்கற்றவள். ஆனாலும் அவன் வார்த்தைகளால் காயப்பட்டாள். அவனைப் பிரிந்தும் சென்றாள். பிரபாகரன் ஏன் அவளுக்கு அந்தத் துன்பத்தைக் கொடுத்தான்?

யோசித்துப் பார்க்கும்போது.. சொல் பொறுக்காத அவனுடைய குணம்தான் காரணம் என்று அவனுக்கு பிடிபட்டது.

இந்த ஒன்றை வைத்தே ஆதிமுதல் இன்று வரை மனிதர்கள்.. மற்றவர்களின் வாழ்வில் விளையாடிப் பார்க்கிறார்கள் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

எப்படியும் வாழலாம் என்று இருப்பவர்களுக்கு இந்த சொல்லால் ஒரு பிரச்சனையும் இல்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதியுடன் வாழ்பவர்களைத்தான். இந்த சொல்லானது துரத்தி வந்து பந்தாடுகிறது.

"ஏய்ய.. நான் உன்னைக் குற்றம் சொல்லணும்னு நினைக்கலைடி. தினகரனிடம் என்னடான்னு கேட்டேன். அவன், மாலினிக்காக காத்திருக்கிறேன்னு என்னிடமே சொல்கிறான். என் நிலைமையையும் கொஞ்சம் நீ யோசித்துப் பார்க்கணும்.. இதுவே ஸ்வேதா எனக்காக காத்திருக்கிறேன்னு உன்னிடம் சொன்னால் உனக்கு ரத்தம் கொதிக்குமா கொதிக்காதா?"

"அவளைக் கொன்றே விடுவேன்.."

"ஆத்திரம் ஆத்திரமாக வருதில்ல.. அதுபோலத் தானே எனக்கும் இருக்கும்.? உனக்கே தெரியும்.. எனக்கு ஸ்வேதாவைக் கண்டாலே ஆகாதுன்னு. அப்படியிருந்தும் அவளை நீ கொல்வேன்னு சொன்னால் என்ன அர்த்தம்..

என்னிடம் யாரும் உரிமை கொண்டாடினால் நீ சகித்துக்கொள்ள மாட்டாய்னுதானே அர்த்தம்?"

"அதில் தப்பொன்றும் இல்லையே.."

"அதே கோபம்தான் எனக்கும் வந்தது.."

"ஆனால், அந்தக் கோபம் தினகரனின் மேல் வரவில்லை.. என்மீது வந்தது.."

"தப்பு.. தினகரனின் மேல்தான் கோபம் வந்தது. அவனை அதட்டினேன். அவன் சொன்ன செய்தி என்னைக் குழப்பியது.."

"அதுதான்.. பவித்ராவின் காதல் கடிதம்.."

"அதை நீ கொடுத்ததாக அவன் சொன்னான். அவன் பொய் சொல்ல மாட்டான்.."

"அது உண்மைதானே. அதை நான்தானே கொடுத்தேன். நான் கொடுத்ததால் அது நான் எழுதிய கடிதமாக ஆகிவிடுமா?"

"கொட்டிக்காரத்தனமாப் பேசாதே. இந்த இடத்தில் தவறு உன் மீதுதான் இருக்கு மாலினி. நீ அதை பவித்ரா வின் கடிதம்ன்னு சொல்லிக் குடுத்திருக்கணும்.."

"நான்தான் ஸ்வேதாவைப் பார்த்தவுடன் அதை சொல்ல முடியாமல் போச்சுன்னு சொன்னேனே. அதில் கையெழுத்தைப் போடாமல் பவித்ரா எழுதியிருப்பாள்னு நான் கனவா கண்டேன்?"

"அவளிடம் அதைக் கேட்டிருக்க வேண்டாமா?"

"லவ் லெட்டர்.. அவளோட பர்சனல் இஷ்யூ இல்லையா.. அதைப் போய் நான் கேட்கலாமா?"

"உன் டீஸன்ஸியைத் தூக்கி குப்பையில் போடு. இதைச் சொல்லித்தான் பவித்ராவின் காதலையும் என்னிடம்மிருந்து மறைத்துத் தொலைத்தாய். அவள் தன்னோட பர்சனல் மேட்டரில் உன்னைச் சம்பந்தப்

படுத்துகிறோமுன்னு கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாளா?"

"அவள் வேறு.. நான் வேறு அத்தான். என்னால் இப்படித்தான் இருக்க முடியும். அவளைப் போல முதுகில் குத்த என்னால் முடியாது.."

"மாலினி.. மாலினி.. உனக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னே எனக்குத் தெரியலை. உனக்கும் எனக்குமிடையே ரகசியம் எதுக்குடி?"

"இனி மறைக்கமாட்டேன் அத்தான்.."

"இது போதும் எனக்கு... தினாவிடம் ரூமுக்குப் போன்னு சொன்னா அவன் லெட்டரைக் கொடுத்தான். அது உன் கையெழுத்தில்லை. அதைச் சொன்னால்.. உனக்கு எப்படித் தெரியுன்னு அவன் என்னிடம் கேள்வி கேட்டு வைப்பான். அதனால்தான் உனக்குப் போன் பண்ண வைத்தேன். அந்த ராஸ்கல் என்னடாவென்றால் என் முன்னாலேயே உன்னைக் கண்ணம்மான்னு கொஞ்ச ஆரம்பித்துவிட்டான். எனக்கு உடம்பெல்லாம் மிளகாயை அரைத்துப் பூசியதைப் போல ஆகிவிட்டது..."

"எனக்கும் அதைவிட கொடுமையாக இருந்தது. திடீர்னு போன் பண்ணி கண்ணம்மாங்கிறார்.. அதிர்ச்சியாகிட்டேன்.."

"அப்பவும் நீ பவித்ராவின் பெயரைச் சொல்லித் தொலைக்கவில்லை.."

"அவளைக் கேட்காமல் எப்படிச் சொல்வது?"

"நீ அவளுக்காகப் பார்த்தாய்.. அவள் உனக்கு கிரீடமா சூட்டினாள்? தினகரனை அனுப்பிவிட்டு உன்னிடம் விவரம் கேட்க போனை எடுத்தால்.. 'அத்தான்'னு அழுதுகிட்டு முன்னால் வந்து நிற்கிறாள். ஒரு நிமிஷம்.. அர்த்தராத்திரி நேரத்தில் மோகினிப் பேய் வந்துருச்சேன்னு பயந்து போயிட்டேண்டி.."

அதைக் கேட்ட மாலினி சிரிக்கவில்லை. அவள் மனம் அன்றைய இரவின் நிகழ்வுகளில் மூழ்கி இருந்தது.

"அவபாட்டுக்கு லட்டு லட்டாய் கேள்விகளை கேட்க அரம்பித்துவிட்டாள். கடைசியில் பொறுக்க மாட்டாமல் அடிக்கக் கை ஓங்கினதற்கு அப்புறம்தான் அடங்கினாள்..."

மாலினி உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"தினகரன் உன்னிடம் கொஞ்சிய ஆத்திரம் ஒருபுறம்.. பவித்ரா உன்மீது சொன்ன குற்றச்சாட்டுகள் இன்னொரு புறம்னு நான் கொந்தளிச்சுட்டேன் மாலினி.. அதனால் தான் என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க முடியாம வாய்க்கு வந்தபடி பேசிட்டேன். ஐ ஆம் ஸோ ஸாரி..."

இந்த வார்த்தைகளுக்கு என்ன பதிலைச் சொல்வது?

மன்னிப்பூ கேட்கிறவனிடம்.. அதனால் என்ன பரவாயில்லை என்று சொல்ல அவளுக்கு மனமில்லை. அவன் பேசிய வார்த்தைகளின் தன்மை அப்படிப்பட்டது. அவை மன்னிக்கக்கூடிய வார்த்தைகள் அல்ல.

அதே சமயம்.. அவனிடம் கடுமை காட்டி விலகிச் செல்லவும் அவளால் முடியவில்லை. அவன் அவளுடைய காதலன். அவளுடைய உயிர். அவளுடைய சுவாசம். அவளுக்கு அனைத்துமாக ஆகிப் போனவன். அவன் மன்னிப்பென்று அவள் முன் நிற்கும்போது.. அவனை மறுத்து விலக அவளால் எப்படி முடியும்?

மாலினி எதுவும் பேசாமல் அவனது தோளில் முகம் புதைத்தாள். பிரபாகரனுக்கு அவளது மனம் புரிந்தது. அவளுடைய குண இயல்புக்கு அவள் அவனைத் தேடி வந்ததே அவன் மேல் அவள் கொண்டிருக்கும் கரை காணாத காதலினால்தான் என்பதை அவன் உணர்ந்து தான் இருந்தான்.

"இனி இப்படி நடக்காது கண்ணம்மா.." என்று குற்ற உணர்வுடன் கூறினான்.

மாலினிக்கு மனம் தாங்கவில்லை. அவளுடைய பிரபாகரன் மனம் வருந்துவதா.. அதை அவள் பார்த்துக் கொண்டிருப்பதா?

"அட.. ஹிட்லருக்கு தணிந்து பேசவும் தெரியுமா?" என்று கலகலவென்று சிரித்தாள் அவள்.

'மன்னித்து விட்டேன்' என்றும் கூறாமல்.. அதே சமயம்.. 'மன்னிக்க மாட்டேன்...' என்றும் முகம் திருப்பாமல்.. அந்தப் பேச்சையே தவிர்த்து பழைய கலகலப்புடன் ஒட்டிக் கொண்ட காதலியின் மேல் அவனுக்கு இன்னும் காதல் கூடியது.

"மாலினி..."

"ம்ம்ம்.."

"இந்த ஹிட்லர் உன்னிடம் மட்டும்தான் தணிந்து போவான்.. இது உனக்குத் தெரியும்தானே?"

அவளுக்கா தெரியாது.? சிங்கத்தை தன் சிறு கம்மலில் சிறைபிடித்துக் கொண்ட அந்த வசீகரி.. அவனைப் பார்த்துக் கண்சிமிட்டினாள்.

"ஸோ.. நான் ஹிட்லரிடம் மாட்டிக்கிட்டேன்னு சொல்லுங்க.."

"என்னடி கண்ணடிக்கிற?"

பிரபாகரன் கிளர்ந்து.. அவளது கன்னம் தேட.. அவள் முகம் திருப்பிச் சிரித்தாள்.

"கண்ணடித்தேனா.. எப்போ அத்தான்.. எப்படிக் கண்ணடிக்கிறதுன்னுகூட எனக்குத் தெரியாதே..."

அவள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொள்ள.. இப்போது பிரபாகரன் சிரித்தான்.

"ஹிட்லரிடம் மாட்டிக்கிட்டதில் நீ வருத்தப் பட்டதைப் போல எனக்குத் தெரியலையே!"

"இதையெல்லாம் சொல்லிக்கிட்டா இருப்பாங்க?"

"சொல்லாமல் தெரியும்ங்கிறயா?"

"ஆமாம்.. வேற என்ன.."

"சொல்லாமல் தெரிஞ்சுக்கிட்டது.. வேறு விஷயங்களைடி.."

மாலினி கன்னம் சிவந்து.. அவனது கை பிடித்துக் கிள்ளினாள்.

"சரக்குன்னா கையிலிருந்து கால் கிலோ சதையை எடுத்து விடுவதுன்னு ஒரு முடிவோட இருக்க போல.."

"ஆமாம்.. இப்ப என்னாங்கறீங்க அதுக்கு?"

மாலினி நழுவி.. கட்டிலை விட்டு கீழே இறங்க முயன்றாள். பிரபாகரன் கை பிடித்து அவளை நிறுத்தினான்.

"பேசியது போதும் அத்தான்.. இது ஹாஸ்பிடல் ரூம்.."

"நம் வீடு அரண்மனைதாண்டி.. ஆனால் அங்கே இப்படி தனியாய் ஒரு ரூமுக்குள்ள உட்கார்ந்து நாம் பேச முடியாது. அதுக்குத்தான் இந்த ஹால்பிடலில் வந்து படுத்தேன்.."

"கெட்டிக்காரத்தான்.. இதையெல்லாம் திட்டம் போட்டுச் செய்யறதில் கில்லாடியாச்சே நீங்க..."

"அதனால்தான் சொல்கிறேன்.. மீதியையும் கேட்டுவிட்டு போ.."

"என்ன சொல்லப் போகுறீங்க?"

"இப்படியே நீ வீட்டுக்கு வந்துவிடு மாலினி.."

"வந்து?"

"உன் ரூமில் தங்கிக் கொள்.."

"தங்கி?"

"என்னடி கேள்வி மேல் கேள்வி கேட்கிற..."

"நான் வேலையை விட்டு விட்டேன் அத்தான். மறந்துட்டீங்களா?"

"உன்னை யாரு வேலைக்குப் போகச் சொன்னது?"

"உங்க வீட்டில் தங்க எனக்குக் காரணம் வேண்டாமா?"

"நான் காரணத்தைச் சொல்லவா?"

"சொல்லுங்க.."

"என் பொண்டாட்டி என்னுடன்தான் நிழலாக இருப்பாள்.."

"கேட்க நன்றாகத்தான் இருக்கு.."

"பார்க்கவும் நன்றாகத்தான் இருக்கும்.."

"நடக்கிறதைப் பேசுங்க அத்தான்.."

"நடக்கிறதுதானே.. பேசிட்டால் போச்சு.. உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்.. அது வரை நீ நம் வீட்டில் உன் ரூமில் இரு.. நம்ம கல்யாணத்துக்கு பின்னால்.. நம் ரூமுக்கு வந்துவிடு.."

"நீங்க ரூமிலேயே இருங்க..."

மாலினி சிரித்தபடியே கிளம்ப முயன்றாள். பிரபாகரன் தீவிரமான முகபாவத்துடன் அவளைத் தடுத்து நிறுத்தினான்.

"இப்ப என்னதான் சொல்ல வரீங்க.."

"நீ போகக்கூடாது.."

"அத்தான்... முதலில் நான் சென்னைக்குப் போனது வேறு... இப்போது போகப் போவது வேறு.. புரிந்துக்கங்க..."

"இரண்டு தடவையும் பிரிந்துதான் ஓடுகிறாய்.. இதிலென்னடி பெரிய ஆறு வித்தியாசம் இருக்கு?"

"முதலில் போனதுதான் பிரிந்து போனது. இந்தத் தடவை போவது.. நீங்க பெண் கேட்டு வருவதற்காக போவது. நம் கல்யாணம் வரைக்கும் நான் சென்னையில் தான் இருந்தாகணும்... புரிஞ்சுக்கங்க..."

அவர்கள் ஹாஸ்பிடல் அறையை விட்டு இயல்பாக பேசிச் சிரித்தபடி வெளியேறினார்கள்.

"சசி... அங்கே பார்.." என்றான் காரில் காத்துக் கொண்டிருந்த கருணாகரன்.

"ஹப்பா.. ஒற்றுமையாக ஆகிட்டாங்க.. இப்பத்தான் நிம்மதியாச்சு.." என்hறள் சசிரேகா.

"அண்ணன்கூட சோர்ந்து போவாருன்னு நான் இப்பத்தான் பார்க்கிறேன். அந்த அளவுக்கு அண்ணி அவரைப் பாதிச்சிருக்காங்க.." கருணாகரன் கார் கதவைத் திறந்தபடி கூறினான்.

"அண்ணியா?" சசிரேகா வியப்புடன் கேட்டாள்.

"அண்ணிதான்.."

"யாரைச் சொல்கிறீங்க.. மாலினியையா?"

"வேறு யாரைச் சொல்வாங்க..? மக்கு..."

"அவளை.. அவங்க இவங்கன்னு வேற செல்கிறீங்க?"

"அண்ணனின் மனைவியை வேற எப்படிக் கூப்பிடுவாங்க?"

"அவ என் சித்தப்பாவின் மகள்.. எனக்குச் சம வயது.."

"ஸோ வாட்.. யாராக இருந்தாலும் என் அண்ணனுக்கு மனைவியானால் எங்களுக்கு அண்ணி தான். நாங்க 'அவங்க.. இவங்க..'ன்னுதான் பேசுவோம்.."

"எப்படியோ கூப்பிட்டுக்கங்க.. என்னை மட்டும்.. 'வாங்கக்கா.. போங்கக்கா'ன்னு கூப்பிட வைச்சுராதீங்க. மாலினி என்னை அடித்து விடுவாள்.."

சசிரேகா சொல்லிக் கொண்டிருக்கும்போதே பிரபாகரனும் மாலினியும் சமீபித்து விட்டனர்.

"யாரை சசி அக்கா என்கிறாய்?"

"வேறு யாரை அப்படிச் சொல்வேன். எல்லாம் உன்னைத்தான் சொல்லிக்கிட்டு இருக்கேன்.."

"அப்படிக் கூப்பிட்டு நீ என்னைவிட இளம் வயதாகிக்கலாமுன்னு பார்க்கிறயா?"

"கேட்டீங்களா அத்தான்.. இது எனக்குத் தேவைதானா?"

"ஓ.. இதை உன் வீட்டுக்காரர் சொல்லிக் கொடுத்தாரா?"

"ஆமாமாம்.. நீ பெரியத்தானை கணக்கு பண்ணிட்டல்ல.. அதனால் இவருக்கு நீ அண்ணியாகி விட்டாயாம்.."

"யாரு கணக்கைப் பற்றிப் பேசுவது? என் பெரியப்பா மகள் சசிரேகாவா? அன்னிக்கு ஒரு நாள் நான் கணக்கைப் பற்றிப் பேசியதும்.. கன்யாகுமரிக் கடலில் விழப்போன மாதர் குல மாணிக்கமா பேசுவது? என் காதுகள் என்னை ஏமாற்றுகின்றனவா?"

மாலினி காதுகளுக்கு மேல் கையைக் குவித்துவைத்த வண்ணம் கேட்கவும். சசிரேகாவுக்கு வெட்கமாகிவிட்டது. அவள் மாரியாதையுடன் பிரபாகரனை பார்த்த வண்ணம் அமைதியாகி விட்டாள்.

"ஏ.. வாலு.. இப்பத்தான் சசி இயல்பாக பேசி சிரிக்கிறாள். உனக்கு அது பொறுக்கலையா?" பிரபாகரன் சிரித்தவாறு மாலினிக்கு கார் கதவை திறந்துவிட்டான்.

110

**சொட்டும் மழைத்துளி போல்......**

**என் நெஞ்சில் ஒட்டும் உன் நினைவை...**

**என்னவென்று நான் சொல்ல...?**

கருணாகரன் காரை ஓட்ட.. பிரபாகரன் லேசாக திரும்பிய வாக்கில் அமர்ந்து பின்ஸீட்டில் அமர்ந்திருந்த மாலினியிடமும் சசிரேகாவிடமும் பேசிக் கொண்டிருந்தான்.

"கணித மேதை ராமானுஜம்கூட கணக்கைப் பற்றி இவ்வளவு ஆராய்ச்சி பண்ணிருக்க மாட்டார்.. உன் சித்தப்பா மகள் அவரையும் மிஞ்சி விட்டாள் இல்லையா சசி?"

சசிரேகா புன்னகைத்தாள். மாலினி அவளைப் பார்த்த படி..

"உங்க முன்னால் இவ என்னிக்கு வாயைத் திறந்து பேசினாள்?" என்று பிரபாகரனைப் பார்த்துக் கேட்டாள்.

"அதுக்கு ஏன் என்னை முறைக்கிற?"

"நீங்க என் பெரியப்பா மகளை அப்படி அரட்டி வச்சிருக்கீங்க.."

"நான் பூச்சாண்டி பாரு.. அரட்டி வச்சிருக்கேன்.."

"ஆக்சுவலா நான் உங்களைப் பார்க்கிறதுக்கு முன்னால உங்களைப் பத்தி அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்.."

"ஹிட்லருன்னு இல்ல நினைச்சே..?"

"ஹிட்லர் பூச்சாண்டிதானே..? அந்தப் பஞ்சாயத்தை விடுங்க. இப்ப இந்தப் பஞ்சாயத்துக்கு வாங்க.."

"ஊம்.. என்னைச் சின்ன கவுண்டராக்கிட்ட.."

"சும்மாவா கேட்டையூர் ஜமீன்தாருன்னு சொல்லிக்கிறது. அப்பப்ப இப்படி நாட்டாமை வேலையெல்லாம் பார்க்க வேண்டாமா?"

"உன்கிட்ட நாட்டாமை வேலை பார்த்தாலும்..."

"ஏன்.. எனக்கென்னவாம்.."

"நான் தீர்ப்புச் சொன்னா.. மகாராசி.. உடனே கேட்டுவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பே..."

"கேட்காமல் என்ன செய்வேனாம்?"

"நாட்டாமை.. தீர்ப்பை மாற்றிச் சொல்லுன்னு சவுண்டு கொடுப்ப.."

இதைக் கேட்ட சசிரேகா அடக்க முடியாமல் சிரித்து விட.. கருணாகரன் காரை ஓட்டியபடி பின்பக்கம் திரும்பி மாலினியைப் பார்த்து புன்னகைத்தான்.

"நீங்களும் உங்க அண்ணன்கூட சேர்ந்துட்டீங்களா அத்தான்?" மனத்தாங்கலுடன் மாலினி வினவினாள்.

"ஆமாங்க அண்ணி.." என்றான் கருணாகரன்.

மாலினிக்கு தூக்கிவாரிப் போட்டது.

"என்னையா சொன்னீங்க?" என்று சந்தேகத்துடன் கேட்டாள்.

"உங்களைத்தான் அண்ணி.." என்று தெளிவாக கூறினான் கருணாகரன்.

"ஐயையோ.. நிஜமாகவே நீங்க என்னை வாங்க அண்ணி.. போங்கண்ணின்னு சொல்கிறீங்களா.. நான் விளையாட்டுக்கு இல்லை பஞ்சாயத்து வைத்தேன்.." மாலினி அலறினாள்.

"ஏன்.. இப்ப அவன் கூப்பிட்டதில் என்ன தப்பு இருக்கு?" பிரபாகரன் நிதனமாக வினவினான்.

"என்ன.. தப்பு இருக்கா.. இவர் யாரு தெரியுமில்ல.."

"இது என்ன கேள்வி.. என் தம்பி.."

"என் பெரியப்பா மகளின் ஹஸ்பெண்ட்.."

"அதுக்கு முன்னாலேயே இவன் என் தம்பி.."

"விளையாடாதீங்க.. சசியின் ஹஸ்பெண்ட் எனக்கு அத்தான்.. அவர் போய் என்னை வாங்க.. போங்கன்னு சொல்வதா?"

"இதோ பார்.. என்னைக் கல்யாணம் பண்ணுவதற்கு முன்னால் நீ அவனுக்கு மைத்துனி.. 'வா.. போ'ன்னு பெயர் சொல்லிக் கூப்பிட்டிருப்பான். என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பின்னால் நீ அவனுக்கு அண்ணி. வாங்க.. போங்கன்னுதான் கூப்பிடுவான்.."

கருணாகரன் தமையன் பேசுவதை ஆமோதிப்பது போலத் தலையை ஆட்டினான். மாலினி தலையில் கை வைத்துக் கொண்டாள்.

"ஜாடிக்கு ஏத்த மூடி..." என்று சசிரேகாவிடம் சொன்னாள்.

"அப்படின்னா?" சசிரேகா ஆவலுடன் அர்த்தம் கேட்டாள்.

"அண்ணனுக்கு ஏத்த தம்பின்னு அர்த்தம்டி..."

"பார்த்தாயா.. அவங்க இரண்டு பேரும் எவ்வளவு ஒற்றுமையாய் இருக்காங்க..."

"இதை எதுக்கு இப்ப என்னிடம் சொல்கிற?"

"நாமளும் அவங்களைப் போல இருக்க வேண்டாமா?"

"இந்த ஈயடிச்சான் காபியெல்லாம் எனக்கு வேலைக்கு ஆகாது.."

"அதுதானே பார்த்தேன்.."

வீடு நெருங்கவும்.. மாலினி பதற்றத்துடன் நகத்தை கடிக்க ஆரம்பித்தாள்.

"நகத்தை எச்சில் பண்ணாதே.." பிரபாகரன் அதட்டினான்.

மாலினி அவசரமாக நகம் கடிப்பதை நிறுத்தினாள்..

"இப்ப எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகிற?"

"அத்தை கேட்டால் என்ன பதிலைச் சொல்வது?"

"எதைக் கேட்பாங்கன்னு நினைக்கிற?"

"ஏன் வேலையை ரிஸைன் பண்ணிட்டு சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு ஓடினேன்னு கேட்டால் என்ன செய்வது?"

"கேட்டால் பதிலைச் சொல்லு.."

"ஐயையோ.."

"இவ்வளவு பயமிருக்கிறவள் சொல்லாமல் கொள்ளாமல் கம்பியை நீட்டியிருக்கக் கூடாது. உன் அத்தையிடம் இதைச் சொல்லு.."

"எதைச் சொல்ல?"

"நல்லவர்க்கு அழகு சொல்லாமல் கம்பியை நீட்டுவது.. நான் நல்லவள் அத்தை.. அதனாலதான் சொல்லாம கம்பியை நீட்டிட்டேன்னு சொல்லு.."

"அத்தான்.." மாலினி அழமாட்டாத குறையாக கெஞ்ச ஆரம்பித்தாள்.

"போகுது போ.. இப்ப சசியும் கருணாவும் உன்னிடம் ஏதாவது கேட்டாங்களா..? அதுபோல அம்மாவும் எதையும் கேட்க மாட்டாங்க.."

"சசி கேட்டாள்.."

"உடனே நீ பதிலைச் சொல்லிட்டுத்தான் மறுவேலை பார்த்தியாக்கும்."

"ஹி..ஹி..ஹி.."

"போதும்.. அசடு வழியாதே.. அம்மா எதுவும் கேட்க மாட்டாங்க. கேட்டால் நான் பார்த்துக் கொள்கிறேன்.."

"நான் இன்றைக்கே சென்னைக்குத் திரும்ப வேண்டும்.."

பிரபாகரன் திரும்பி மாலினியை முறைத்தான். அவள் அடங்கிப் போனாள்.

"நீ சென்னைக்குத் தனியாகப் போக முடியுமா? துணைக்கு சசிரேகாவும் வர வேண்டாமா?"

"அவள் எதுக்கு?"

"அவள்தானே உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தாள்.."

"நான் தனியாக பஸ்ஸில் போய்க் கொள்வேன் அத்தான்.."

திரும்பவும் பிரபாகரன் முறைக்க ஆரம்பிக்க...

"நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி அனல் பார்வை பார்க்கறீங்க?" என்று சந்தேகம் கேட்டாள் மாலினி..

"பிரபாகரனின் பெண்டாட்டி.. மார்த்தாண்டத்- திலிருந்து சென்னைக்கு தனியாக பஸ்ஸில் போவதா?"

"இது வேற இருக்கா?"

"இனி கடைசிவரை இப்படித்தான் இருக்கும்.."

"இப்ப என்னை என்னதான் செய்யணும்னு சொல்கிறீங்க?"

"சசியும் சுருணாவும் இன்றைக்கு ரெஸ்ட் எடுத்துவிட்டு நாளைக்கு காலையில் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு சென்னைக்கு கிளம்புவாங்க.."

"அப்பாடி..." நிம்மதிப் பெருமூச்சு விட்ட மாலினி.. பிரபாகரனின் விசித்திரமான பார்வையில் எதையோ உணர்ந்தவளாக..

"என்ன ஆச்சு?" என்று வினவினாள்..

"சென்னைக்குப் போவதில் உனக்கு அவ்வளவு நிம்மதியா?" அவன் ஒரு மாதிரியான குரலில் வினவினான்.

"பாருடி சசி... உன் பெரியத்தான் பேசுவதை. சென்னையில் அப்பாவும் அம்மாவும் என்னைப் பற்றிக் கவலைப்பட மாட்டாங்களா.. இதுக்கு முன்னால் எனக்கு இங்கே வேலையிருந்தது.. இப்ப வேலையை ரிஸைன் பண்ணிட்டேன். எந்தக் காரணத்தைச் சொல்லிக்கிட்டு நான் இங்கே தங்க முடியும்?" மனத்தாங்கலுடன் சசிரேகா விடம் மாலினி நியாயம் கேட்டாள்.

"இவள் சொல்வதும் சரிதானே பெரியத்தான்.." சசிரேகா, மாலினிக்காக பரிந்து பேசினாள்.

பிரபாகரன் பதில் சொல்லாமல் நேராக அமர்ந்து கொண்டான். வீட்டுக்குள் கார் நுழைந்தது. மாலினி அந்த வீட்டையும் தோட்டத்தையும் ஆவலுடன் பார்த்தாள்.

இனி பார்க்கவே பார்க்க முடியாது என்று நினைத்த நினைவுச் சின்னங்களை மீண்டும் பார்த்தபோது அவளுக்கு கண் கலங்கி விட்டது.

"என்னடி.." என்றாள் சசிரேகா.

"இனி இங்கே திரும்பி வரவே மாட்டேன்னு நினைத்திருந்தேன் சசி.." மாலினியின் குரல் கம்மியது.

பிரபாகரனின் உடல் விறைப்பானதை கருணாகரன் கவலையுடன் உணர்ந்தான். மாலினி காரை விட்டு இறங்கியதும் செந்தாமரை அருகே ஓடி வந்தாள்.

"இத்தனை நாளா என் கண்ணுக்குள்ளேயே இருந்தீங்கம்மா.."

"இவ்வளவு பெரிய உருவத்தை உன் கண்ணுக்குள் வச்சிருந்தியா.. எப்படி செந்தாமரை... உனக்கு கண் வலிக்கலையா?"

"ஹா..ஹா.. சோக்கும்மா.. சோக்கு.."

செந்தாமரை சிரிக்க ஆரம்பிக்க..

"ஆரம்பிச்சுட்டியா?" என்றாள் சசிரேகா.

"நான் எங்கேடி ஆரம்பிச்சேன். அவளா ஆரம்பிச்சு வைக்கிறா.." என்றாள் மாலினி.

"என்னவோ போ.. இவ உன்னைக் காணாம ரொம்பத் தான் ஏங்கிப் போயிருந்தா.. நீ வந்துட்ட இல்ல. இனிமே குட்டி போட்ட பூனையைப் போல உன்னையே சுற்றிச் சுற்றி வரப்போகிறா பாரேன்..."

சசிரேகா சொல்லியதற்கு ஏற்ப.. செந்தாமரை, மாலினியின் பின்னாலேயே செல்லப் பிராணியைப் போல தொடர்ந்தாள்.

ஹாலின் சோபாவில் அமர்ந்திருந்த நர்மதாவைக் கண்டதும் மாலினிக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

"வாம்மா.." என்று வரவேற்றாள் நர்மதா.

மாலினி பதில் சொல்லாமல் அவளருகே சென்று அவள் பாதம் தொட்டு வணங்கி நிமிர்ந்தாள்.

நர்மதாவின் முகம் மென்மையானது.

"நல்லாயிரும்மா.." என்றாள் கனிவாக.

"அத்தை.. நான் வந்து.. என் வேலையை.. வந்து.. மாலினி திணறினாள்."

"வேண்டாம் மாலினி.. விட்டுவிடு.." என்றாள் நர்மதா...

"அத்தை..."

"நீ புத்திசாலி.. எதையும் காரணமில்லாமல் செய்ய மாட்ட. அதைப் போல என் மகன் தீவிரவாதி. அவனுடையதை விட்டுக் கொடுக்கமாட்டான். எது நடந்திருந்தாலும் அது உங்களுடையது. நான் தலையிடக்கூடாது. ஆனால், ஒன்று.. நீ இந்த வீட்டுக்குள் இருந்து கொண்டே போராடியிருக்கலாம். ஏன் சென்னைக்குப் போனாய்?"

"வேலை செய்ய எனக்கு சக்தியில்லை அத்தை.. வேலையை விட்டு விட்டு என்ன காரணத்தைச் சொல்லி நான் இந்த வீட்டில் தங்க முடியும்?"

"இனி காரணம் தேடும் நிலையை என் மருமகளுக்கு நான் வைக்க மாட்டேன்.."

மாலினி, காயத்ரியைப் பற்றி விசாரித்தாள். நர்மதா கல்யாண வீடியோவை போட்டுக் காட்ட.. ஆர்வமாக சசிரேகாவுடன் பேசியபடி அதைப் பார்த்தாள். கல்யாண ஆல்பத்தை ரசித்தாள். பொன்னிக்கும் செந்தாமரைக்கும் ஜோக்குகளைச் சொன்னாள். மதிய உணவிற்கு பிறகு அவளது அறையில் நான்றாகத் தூங்கி எழுந்தாள். மாலையில் குளித்து.. உடைமாற்றி.. தோட்டத்தில் நடந்தாள். நீச்சல்குளத்தில் அருகே இருந்த மரப்பெஞ்சில் அமர்ந்து பழைய நினைவுகளை அசை போட ஆரம்பித்தாள்.

"எப்போ வந்தீங்க அண்ணி?" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்..

எதிரே தினகரன் நின்றுகொண்டிருந்தான். மாலினி பதறிபோய் எழுந்து கொள்ள முயன்றாள்.

'இத்தனை நாள் கழித்து இப்போதுதான் என் பிரபாவுடன் சேர்ந்திருக்கிறேன். மறுபடியும் இவனா?'

அவள் விழிகளில் அப்பட்டமான பயம் தெரிந்ததை தினகரன் வருத்தத்துடன் கவனித்தான்.

"என்ன அண்ணி எழுந்திருக்கறீங்க. என்னைப் பார்த்தால் பயமாய் இருக்கா.. நான் அந்த அளவுக்கு உங்க வாழ்க்கையைப் பாதிச்சுட்டேனா?"

மாலினி நிதானித்தாள்.. தினகரன் 'அண்ணி..' என்று அழைத்து 'வாங்க.. போங்க..' என்று மரியாதையுடன் பேசுவது அப்போதுதான் அவளுடைய புத்திக்கு உறைத்தது.

'உனக்கு நானிருக்கிறேன் கண்ணம்மா..' என்று பிதற்றியவனா இவன்.? மாலினி ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

'நான் காண்பது கனவா.. இல்லை நனவா.. என் கண்ணெதிரே நிற்பது மன்மத ராசா தினகரனேதானா?'

"என்னண்ணீ அப்படிப் பார்க்கறீங்க.." தினகரன் இதமான குரலில் வினவி வேறு வைத்தான்.

"ஒன்.. ஒன்று.. ஒன்றுமில்லை.." மாலினி வார்த்தைகளால் தந்தியடித்தாள்.

"உட்காருங்க அண்ணி..." தினகரன் மரப்பெஞ்சில் அமர்ந்து கொண்டான்.

"இருக்கட்டும்..."

'இருந்திருந்து இவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு உரையாடுவதா?' என்ற நினைவில் மறுத்தாள் மாலினி.

"என் கூட உட்கார்ந்து பேசக்கூட நீங்க யோசிக்கிற அளவுக்கு நான் உங்களைக் கொடுமைப் படுத்திட்டேன் எனக்கு மன்னிப்பே கிடையாது அண்ணி..." தினகரன் குழந்தையாக கண்கலங்கினான்.

111

**முத்திரை பதித்து நீ விலகிய போது...**

**நித்திரை துறந்து.. நான் சிலையாகிப் போனதையே**

**என்னவென்று நான் சொல்ல..?**

தினகரன்... நர்மதாவின் செல்லப்பிள்ளை.. பிரபாகரனுக்கு பிரியமான தம்பி.. தீராத விளையாட்டுப் பிள்ளையாக துறுதுறுப்பாக வளைய வந்தவன். அழகான பெண்களைக் கண்டால் அலைபாயும் மனத்தையுடையவன். அதை மறைக்காமல் பார்வையில் வெளிப்படுத்தி விடுபவன்.

அப்படிப்பட்ட தினகரன். மாலினியிடம் கண்கலங்கினாள்.

"என்னை மன்னிக்க மாட்டீங்களா அண்ணி?" என்று மன்னிப்பை வேண்டினான்.

மாலினி மனம் கசிந்துவிட்டாள். அவன் அருகே பெஞ்சின் ஓரமாக இடைவெளிவிட்டுத் தள்ளி அமர்ந்தாள்.

"எனக்குத் தெரியாது அண்ணி.. உங்க மனசுக்குள்ள பெரியண்ணா இருப்பாருன்னு நான் நினைத்துக்கூடப் பார்க்கலை.." தினகரனின் குரலில் தவிப்பு தெரிந்தது.

"போனதைப் பேச வேண்டாம் தினகரன். விட்டு விடுங்க.." மாலினி ஆறுதலாகப் பேசினாள்.

"எப்படி அண்ணி விட முடியும். அன்றைக்கு ராத்திரி அண்ணனின் எதிரேயே நான் உங்களிடம் என்னவெல்லாம் பேசிவிட்டேன்..? அண்ணன் ஒரு வார்த்தை.. ஓரேயொரு வார்த்தைகூட ஏன் மனம் புண்படப் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றார். நானெல்லாம் ஒரு மனுஷனா அண்ணி?"

"சேச்சே.. பெரிய வார்த்தைகளையெல்லாம் பேச வேண்டாம் தினகரன். நீங்க என்ன தெரிந்தா செய்தீங்க?"

மாலினி சமாதானப்படுத்தும் விதத்தில் பேசினாள்.. ஆனால், சமாதானமாக மாட்டேன் என்ற ரீதியில் தலையை ஆட்டி தினகரன் அதை மறுத்தான்.

"இல்லை அண்ணி.. நீங்க என்னிடம் அதிகமாக பேச மாட்டீங்க. விலகி விலகிப் போவீங்க. அதுவே எனக்கு உங்க மேல் இருந்த ஆர்வத்தை அதிகமாக்கிருச்சு..."

'இது என்னடா வம்பா போச்சு...' மாலினி தர்ம சங்கடத்துடன் மௌனமானாள்.

"எங்க பெரியண்ணனை மனதில் நீங்க வைத்து இருப்பது தெரிந்திருந்தால் நான் உங்கள் பாதம் தொட்டு வணங்கி விட்டு விலகிப் போயிருப்பேன் அண்ணி.."

தினகரனின் வார்த்தைகள் இப்போது மாலினியை குற்ற உணர்வில் ஆழ்த்தியது.

'இதைத்தானே பவித்ராவும் சொன்னாள்.. ஒருவேளை நான் இவனிடம் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டுமோ..'

இப்போது மனம் தவிப்பது மாலினியின் முறையாகிப் போனது...

"தப்பெல்லாம் என் மேல்தான் தினகரன். நான் உங்களிடம் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால்.. நீங்களும் விலகிப் போயிருப்பீங்க. எல்லோருக்கும் இத்தனை மனவருத்தம் வந்திருக்காது..."

"நீங்க என்ன செய்வீங்க அண்ணி..? அண்ணனைக் காதலிப்பதை உங்கள் வாயால் என்னிடம் சொல்ல முடியாமல் போனதுக்கு காரணம் இல்லாமல் இருக்காது..."

"ம்ம்ம்.. உங்க பெரியண்ணன்.. எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருப்பவர். காயத்ரியின் கல்யாண சமயத்தில்தான்.. நாங்க எங்க மனதிலிருப்பதை ஒருவரிடம் ஒருவர் சொல்லிக் கொண்டோம். அந்தச் சமயத்தில் அதை வெளியே சொல்வது காயத்ரியின் கல்யாணத்தைப் பாதிக்கும் என்ற நினைவுதான் எனக்கு.."

"நினைத்தேன் அண்ணி.. நீங்கள் இப்படித்தான் எதையாவது யோசித்திருப்பீங்கன்னு. எங்க வீட்டுக்கு மருமகளாக வருவதற்கு முன்னாலேயே நீங்க எங்க வீடைப் பற்றி இவ்வளவு யோசிச்சிருக்கீங்க. ஆனா நான்.. அண்ணியாக வரப் போகிறவங்களிடம் அதிகப்படியா பேசிவிட்டேன்."

"நீங்க இவ்வளவு தூரத்திற்கு வருத்தப்பட்டால்.. உங்க பெரியண்ணனும் வருத்தப்படுவார். வேண்டாம் தினகரன்.. நடந்ததை மறந்துவிடுங்க. நான் என்றைக்குமே உங்களை என் கூடப் பிறந்த பிறப்பாகத்தான் நினைக்கிறேன்.."

"நான் உங்களை என் அம்மாவாகவே நினைக்கிறேன்.."

ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்டுவிட்டு தினகரன் எழுந்து போய்விட்டான்.

மாலினி திரும்பி அந்த மாளிகை போன்ற பிரமாண்டமான வீட்டைப் பார்த்தாள்.

அந்த வீட்டைப் போலவே அதில் இருப்பவர்களின் மனதும் பெரியது விசாலமானது. பரந்த விரிந்தது என்று நினைத்துக் கொண்டவளின் மனம்.. சொல்லத் தெரியாத ஒரு நெகிழ்ச்சியில் அமிழ்ந்திருந்தது.

முதல் நாள் வரை அவள் பின்னால் சுற்றியவன்.. அவள் மனதில் வேறு ஒருவனின் நினைவும் காதலும் இருப்பதைத் தெரிந்தும் பின் வாங்குகிறான்.

அவனது அண்ணன்தான் அந்தக் காதலன் என்று தெரிந்தும் அலறி அடித்துக் கொண்டு அவளது பாதம் தொட்டு மன்னிப்பை வேண்டுகிறான்.

இப்படிப்பட்ட மனிதர்களின் மத்தியில் வாழ்வதல்லவோ வாழ்க்கை.!

இவர்கள் யார்.. மாலினி யார்? புகழ்பெற்ற கோட்டையூர் ஜமீன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த மாலினியிடம் பாசத்தோடும் பயபக்தியோடும் பேசுகிறார்கள். சுற்றியுள்ள அனைத்துக் கோடீஸ்வரக் குடும்பங்களும் அந்தக் குடும்பத்தில் பெண் கொடுத்து.. பெண் எடுப்பதை மிகப் பெரிய வரமாக நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கையில்.. அவர்கள் அந்த மணமாலையை மனப்பூர்வமாக மாலினியின் கழுத்தில் சூட்டுகிறார்கள்.

இதெல்லாம் யாரால் நடந்தது?

பிரபாகரன் என்னும் இரும்பு மளிதனால் நடந்தது.

மாலினியின் மனம் தளும்பியது.. அவள் வாய் விட்டு பாட நினைத்தாள்..

"அந்த வானத்தைப் போல..

மன்ம படைத்த மன்னவனே...

பனித்துளியைப் போல...

குணம் படைத்த தென்னவனே...

மஞ்சளிலே... ஒரு நூலெடுத்து...

அந்த விண்ணுக்கும்.. மண்ணுக்கும்

சம்பந்தம் உண்டுன்னு...

சொன்னது யாரு...?

அது மன்னவன் தேரு...."

மாலினி மெல்லிய குரலில் கண்மூடிப் பாடிக் கொண்டிருந்தபோது.. அவள் தோளில் கரம் விழுந்தது. கண் திறவாமலே அது யார் என்பதை உணர்ந்தவள்.. அறியாதவள் போல வினவினாள்.

"யாரு?"

"உன் மன்னவன்.."

மாலினி கண் விழிக்காமலே நகைத்தாள்.. அவனது தோள் சாய்ந்தாள்.

"நான் விண்... நீ மண்ணா?"

"ஆமாம்.."

"நீ இந்த விண்ணிலிருக்கும் தேவதைடி.."

மாலினி அதைக் கேட்டதும் கண் விழித்து.. அவனைக் காதலோடு பார்த்தாள்.

"என்னை தேவதையாக்கியது நீங்கள்தான்.."

"என்னைக் காதலனாக்கியது நீதான். அப்பா.. நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்த்ததில்லைடி.."

"எதை?"

"இப்படி சென்னையிலிருந்து ஒரு புயல் வந்து மார்த்தாண்டத்தில் மையம் கொண்டு.. என்னைச் சிக்க வைத்து திணறடிக்கும்னு.."

"நான் புயலா?"

கேட்டவள் தென்றல் என்பதை உணர்வுபூர்வமாக உணர்ந்திருந்த பிரபாகரன் மனம்விட்டுச் சிரித்தான். மையலுடன் அவளை இறுக்கிக் கொண்டான்.

இருள் போர்வை அவர்களைச் சுற்றி கவிழ்ந்திருக்க.. அவர்கள் வழக்கமாக பேசிக்கொள்ளும் ரகசிய பாஷைகளை பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

"ஆமாம்.. காரில் வரும்போது ஏன் அவ்வளவு கோபப்பட்டீங்க..?"

"உன்னைத் திரும்பவும் என் வாழ்க்கைக்குள் இழுப்பதற்குள் எனக்கு மூச்சு முட்டிவிட்டது. ஒருவழியாய் உன்னை என்னிடம் இழுத்து வந்துவிட்டேன்னு நினைத்து நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டால்.. நீ திரும்பவும் சென்னைக்கு ஓடுவதை நிம்மதியாக நினைத்தால் எனக்கு எப்படியிருக்கும்.. அதில் 'அப்பாடி'ன்னு நிம்மதிப் பெருமூச்சை வேற விடற.."

"த்சு.. காலா காலத்தில் என் கழுத்தில் மூன்று முடிச்சைப் போடுகிற வழியைப் பாருங்க. எனக்குத் தாங்கலை.."

"ஏய்.. மாலினி.. உனக்குமா?"

பிரபாகரன் தாபத்துடன் அவளை நெருங்க.. மாலினி அவசரமாக தள்ளி அமர்ந்தாள்.

"பொறுங்க.. பொறுங்க.. இப்ப எதுக்கு இந்தப் பாய்ச்சல்?"

"நீதானேடி சொன்ன?"

"என்னன்னு சொன்னேன்?"

"என்னைப் போல உனக்கும் தாங்கலைன்னு...."

மாலினிக்கு வெட்கமாகி விட்டது. அவள் தான முடியாத நாணத்துடன் பிரபாகரனின் தோள்பட்டையைக் கிள்ளினாள்.

"ஆரம்பிச்சுட்டியா.. இப்ப எதுக்கு கிள்ளறே..."

"வலிக்குதா?"

"நீ கிள்ளினால் எல்லாம் வலிக்குமா? எறும்பு கடிச்சதைப் போல இருக்கு.. நீதானேடி.. எனக்குத் தாங்கலைன்னு இப்பச் சொன்ன?"

"ராமா.. இதையே எத்தனை தடவைதான் சொல்வீங்க?"

"இதுக்கெல்லாம் கிருஷ்ணான்னு சொல்லணும்.."

"ஏன்.. இரண்டும் பெருமாளின் பெயர்தானே..."

"இருந்தாலும்.. காதல்னு வந்துட்டா.. கிருஷ்ணன் தான் சூப்பர்மேன்.."

"இதில ஆராய்ச்சி பண்ணவிட்டா பிஹெச்.டி. வாங்கிட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்க. நான் தாங்கலைன்னு அதைச் சொல்லலை.."

"வேற எதைச் சொன்னாய்?"

"அத்தான்.. இந்தக் கல்யாணம்.. தாலி.. சடங்கு.. சம்பிரதாயமெல்லாம் இந்த ஊருக்காக இனி நடக்க வேண்டியது. என்றைக்கு நீங்க.. அருவிக்கரையில் என் கழுத்தில் இந்தச் சங்கிலியை தாலியாக நினைச்சுக்கன்னு சொல்லிப் போட்டீங்களோ.. அன்றைக்கே நமக்கு கல்யாணமாகி விட்டது.."

"அன்னிக்கு அந்த நடுராத்திரியில் ஃபர்ஸ்ட் நைட்டும் நடந்துவிட்டது.."

"நீங்க அதிலேயே இருங்க.."

"இல்லைடி செல்லம்.. நீ சொல்ல மறந்துவிடக் கூடாது பாரு. அதுதான் எடுத்துக் கொடுத்தேன்.."

"ஐய்யே... வழியுது.."

"எதுடி?"

"ஜொள்ளு.. துடைத்துக்கங்க.."

"அது எதுக்கு வேஸ்டா.. இருந்துட்டுப் போகட்டும். பாரதியாரே 'ஜொள்ளு விடத் தவறேல்..'ன்னு பாடி வச்சிருக்கார்.."

"அவர் 'ஆண்மை தவறேல்'ன்னு சொன்னதாகத் தான் எனக்கு நினைவு..."

"நான் இப்படித்தானே படிச்சேன்.."

"படிப்பீங்க.. படிப்பீங்க.. பாரதியார் உயிரோடு இல்லைங்கிற தைரியம் உங்களுக்கு.."

மாலினி, பிரபாகரனின் தோள்மீது செல்லமாக குத்த.. அவள் கைபற்றி அதில் முத்தம் பதித்து.. தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான் பிரபாகரன்.. மாலினி பேச்சிழந்தாள்...

"சொல்லுடி..."

"எதைச் சொல்ல.."

"உனக்கு தாங்க முடியாத உணர்வைக் கொடுக்கும் விஷயம் எதுன்னு சொல்லு.."

"எனக்கு நீங்க வேற்று மனிதன் இல்லை.."

"நீ என் பெண்டாட்டிடீ.. இதையா தாங்க முடியலை..."

"அத்தான்.. இப்படிப் பேசினா நான் அழுதுடுவேன்.."

"உன் கண்ணில் நீர் வழிந்தால் - என் நெஞ்சில்

உதிரம் கொட்டுமடி....

என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா

என்னுயிர் நின்னதன்றோ..."

பிரபாகரன், மாலினியின் உச்சந்தலையில் முகம் புதைத்து அவளது காதோரமாக பாட.. மாலினி வானில் பறந்தாள்.

"இப்படியெல்லாம் பாடாதீங்க.."

"ஏன்..."

"எனக்கு மனதைப் பிசையுது.."

"ஹௌ டு எக்ஸ்பிளெயின் இட்?"

"என்ன?"

"என்னவென்று நான் சொல்ல?"

"எதை?"

"என் மனதிலிருக்கும் உணர்வுகளை.. அதைத்தான் பாட்டால் வெளிப்படுத்தினேன்.. ஐ லவ் யூடி கண்ணம்மா.."

"எனக்கு உங்க பக்கத்திலேயே இருக்க வேண்டும் போல இருக்கு அத்தான்.. நொடிப் பொழுதுகூட விலக மனமில்லை.."

"அப்போ.. சென்னைக்குப் போகாதே.."

"போக மாட்டேன்.. இந்த ஊரும் உலகும் அறிய.. உங்கள் பெண்டாட்டின்னு என்னைச் சொல்லிவிட்டு கூப்பிட்டுக்கிட்டு வந்து விடுங்க. அதன் பின்னால்.. என் உயிருள்ள வரை ஏன் உயிர் மறைந்த பின்னாலும் உங்களை விட்டுப் பிரிய மாட்டேன். சுற்றிச் சுற்றி வருவேன்.."

"மாலினி.. என் கண்ணம்மா.."

"இதைத்தான் தாங்கவில்லைன்னு நான் சொன்னேன்.."

"சொல்லிட்ட இல்ல.. இனி பாரு.. ஜெட் வேகத்தில் எல்லாத்தையும் முடிச்சிட்டு.. உன்னைக் குதிரையில் தூக்கிக் கொண்டு வந்து விடுகிறேன்.."

"இது என் வீடு அத்தான். ஆனால்.. இதிலிருக்க நான் என் அப்பா அம்மாவிடம் இப்போது அனுமதி வாங்க வேண்டும்.."

"தேவையில்லை.. நீ நாளைக்கு சென்னைக்கு கிளம்பிப் போ.. நான் அம்மாவுடன் வந்து பெண் கேட்கிறேன்.."

"என் அத்தான்.."

மாலினி மனம் நிறைந்து போனவளாக அவளது மனதில் நிறைந்தவனின் தோள் சாய்ந்து கண் மூடினாள்.

## 112

**உன் சிரிப்பில் என்னிதயம்..**

**உவகை கொள்ளுவதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

ராதிகாவிற்கு மர்மம் தாங்கவில்லை. வேலை பார்க்கப் போன நர்த்தனார் அவளுடைய மூன்று விட்ட பெரியப்பாவின் மகள் வீட்டில் தங்குகிறாள்.. ஓசியில் இருக்க இடம் கொடுத்து.. வயிற்றுக்கு சாப்பாட்டையும் போட்ட அந்த கோடீஸ்வரக் குடும்பத்து வீட்டின் பெண்ணுக்கு கல்யாணம் நடக்கிறது. அந்தக் கல்யாணத்துக்கு ராதிகா வின் மாமனார்.. மாமியாரை அழைக்க அந்தக் கோடீஸ்வரியே நேரில் வருகிறாள். திருமணத்துக்குப் போன இடத்தில் தடபுடலாக வரவேற்பு கிடைக்கிறது..

'சரிதான்.. நாத்தனார் இங்கே பலமாய் காலை ஊன்றி விட்டாள் போல..'

என்று நினைத்தால்.. கல்யாணம் முடிந்த கையோடு இவர்களின் குடும்பத்தோடு நாத்தனாரும் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு கிளம்புகிறாள்.. 'என்ன ஆச்சு..?' என்று கேட்டால்.. 'வேலை போச்சு..' என்று பதிலைச் சொன்னாள்...

'ஏன் வேலை போச்சு..' என்று பார்த்தால்.. அவளாக வேலையை விட்டுவிட்டு கிளம்பியிருக்கிறாள்...

'எதுக்கு வேலையை விட்டுவிட்டா உங்க தங்கை..?' என்று கேட்டால்.. எப்போதும் குழைகின்ற கணவன்.. அப்போது மட்டும் முறைக்கிறான்...

'என்னவாக இருக்கும்..' என்று மாமியாரின் வாயைக் கிளற முனைந்தால் மற்ற நேரங்களில்.. மகனைக் கூப்பிட்டுக் கொண்டு மருமகள் தனிக்குடித்தனம் போய்விட்டால் என்ன செய்வது என்று பயந்து பதில் சொல்லும் மாமியார்.. அந்தக் கேள்விக்கு மட்டும் அனல் பறக்கப் பார்க்கிறாள்..

மற்றவர்களிடம் கேட்பானேன்.. சம்பந்தப்பட்ட வளிடமே கேட்டுவிடலாம் என்று நாத்தனாரின் மேல் பாச மழையைப் பொழிந்து கேள்வி கேட்டால்.. அவள் பக்கத்து தெரிவிலிருக்கும் பானுவின் வீட்டு விஷயம் வரை ஒளிவுமறைவில்லாமல் சொல்லிவிட்டு.. அவளுடைய விஷயத்தை மட்டும் அம்போவென்று விடுகிறாள்...

'அட.. அந்த பானுவின் வாயையாவது கிளறலாம்..' என்று பார்த்தால்.. அவள் என்றைக்கோ ராதிகாவின் கணவன் ரஞ்சித்தின்மேல் ஆசைப்பட்டதை நினைவில் வைத்துக் கொண்டு ராதிகாவை சக்களத்தியை முறைப் பதைப் போல முறைத்துக் கொண்டு முகம் திருப்பிக் கொள்கிறாள்..

'சோதனை மேல் சோதனை..

போதுமடா சாமி..'

என்று ராதிகா வாய்விட்டுப் பாடாத குறைதான்.. நாத்தனாரைப் பற்றிய வம்புச் செய்தியை பிறந்த வீட்டில் ஒளிபரப்ப முடியாத சூழ்நிலையில் அவள் நொந்து நூலாகிப் போனாள்...

அந்த வார இறுதியில் அவள் பிறந்தவீட்டிற்குப் போனபோது...

அவளின் அம்மா ஆவலுடன்..

"ராதிகா.. கேட்டாயாடி இந்தச் சேதியை.." என்று ஏதோ ஒரு செய்தியைச் சொல்வதற்காக அருகில் வந்து அமர்ந்தாள்..

"அட போங்கம்மா.. நீங்க வேற வயித்தெரிச்சலை கிளப்பாதீங்க.." ராதிகா அலுத்துக் கொண்டாள்..

"என்னடி மகளே.. இவ்வளவு விரக்தியாய் பேசற..?"

"பின்னே என்னம்மா.. வாழுகிற வீட்டில் என்ன நடக்குதுன்னே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.. இதில் ஊர் கதையைக் கேட்டு நான் என்ன செய்யப் போகிறேன்..?"

"அதைத்தாண்டி நானும் சொல்ல வந்தேன்.."

"எதைம்மா..."

"எல்லாம் உங்க வீட்டுக் கதைதான்.."

"எங்க வீட்டு ராமாயணம் எனக்கே தெரியலை.. உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுச்சு.."

"உன் நாத்தனாரின் ஒன்றுவிட்ட பெரியப்பா இருக்காரில்ல.. அதுதாண்டி.. அந்த சசியின் அப்பா.."

"அவர் ஒன்றுவிட்ட பெரியப்பா இல்லை.."

"பின்னே.. சொந்தப் பெரியப்பாவா.."

"இல்லைம்மா மூன்று விட்ட பெரியப்பா"

"மூன்று விட்ட பெரியப்பாவா..?"

ராதிகாவின் அம்மா முகவாயில் கை வைத்துக் கேட்க..

"அட.. ஆமாம்மா.. அப்படி.. சுற்றி வளைத்து சொந்தம் வருது.." என்று சுவாதீனமாகச் சொன்னாள் ராதிகா..

"என்னடி இது ஆச்சரியக் கழுதையாக இருக்கு.. சொந்த அண்ணன் தம்பி வீட்டிற்குப் போனாலே பல்லில் பட பச்சைத் தண்ணி கிடைக்காது.. இதில் சுற்றி வளைச்சு வர்ற சொந்தக்காரங்க வீட்டிலயா.. உன் நாத்தனார் ஒரு வருஷமா டேரா போட்டிருந்தா..?" ஆச்சரியப்பட்டுப் போனாள் ராதிகாவின் அம்மா..

"ஆமாம்மா.." என்று பொறாமையுடன் கூறினாள் ராதிகா..

"ம்ஹூம்.. அதுக்கெல்லாம் ஒரு முகராசி வேண்டும்.." என்று நொடித்துக் கொண்டாள் ராதிகா அம்மா..

"அந்த சசிரேகாவின் அப்பாவுக்கு சொந்தக்காரர் ஒருத்தரை உன் அப்பா போன வாரம் நடந்த நம்ம உறவுக்காரங்க வீட்டுக் கல்யாணத்தில் பார்த்தாராம்.. அப்போ அவர் ஒரு செய்தியைச் சொன்னாராம்.."

"என்னவாம்..?"

"அந்த சசிரேகாவின் மாமியார் வீடு பெரிய கோடீஸ்வரக் குடும்பமாமே.."

"ஜமீன் பரம்பரைம்மா.."

"அந்த வீட்டுக்காரங்களுக்கு உன் நாத்தனாரை பிடித்துப் போச்சாம்.."

"இதுதான் எனக்குத் தெரியுமே.."

"சசிரேகாவின் மச்சினர் ஒருத்தர் இருக்காராமில்ல.."

"ஆமாம்மா.. அண்ணனுக்கு முன்னாலே தம்பிக்கு கல்யாணமாகிருச்சு.."

"அவருக்கும் உன் நாத்தனாரை பிடிச்சுப் போச்சாமே.."

இது ராதிகாவிற்கு புதிய செய்தி.. அவள் மார்த்தாண்டத்திற்கு போயிருந்தபோது பிரபாகரன் நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தான்.. அதனால் அவன் மனதில் மாலினியின் மேலிருக்கும் மையல் அவளுக்குத் தெரியாமலே போய் விட்டது..

"நிஜமாகவா சொல்கிறீங்க..?"

"ஆமாண்டி.. அவங்க வீட்டிலிருந்து மாலினியைப் பெண் கேட்டு வரப் போகிறாங்களாம்.. உன் நாத்தனாருக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயாடி.."

ராதிகாவிற்கு பிரமிப்பாக இருந்தது.. மாலினி சென்னையில் பிறந்து வளர்ந்த பெண்.. எங்கேயோ.. மார்த்தாண்டத்தில் அவளுக்கு மாப்பிள்ளை

அமைந்திருப்பதை ஆச்சரியத்துடன் அவள் நினைத்துப் பார்த்தாள்..

அதிகமாக அண்ணியின் வம்புக்கு வராமல்.. தான் உண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கிப் போகும் மாலினியிடம் என்றுமே ராதிகா விரோதம் பாராட்டிய தில்லை...

"அவளுக்கென்னம்மா.. அவ படிப்புக்கும் அழக்குக்கும் இப்படிப்பட்ட மாப்பிள்ளைதான் அமையும்ன்னு எனக்கு என்னிக்கோ தெரியுமே.."

"என்னடி இது இப்படிச் சொல்கிற.. உனக்கு அவளைப் பிடிக்காதே..."

"பிடிக்காதுதான்.. அவ குணம் சரியில்லைன்னு பிடிக்காமல் போகலை.. அவளைப் பெத்தவங்க அவமேல் உயிராய் இருப்பாங்க.. என் புருஷன் பாசமலராய் பாசத்தை அவமேல் கொட்டுவார்.. இப்படி என் மாமனார் மாமியாரின் பாசத்தையும் என் புருஷனின் பிரியத்தையும் பங்கு போட வந்துவிட்டாளேங்கிற பொறாமைதான் எனக்கு.. மற்றபடி மாலினி நல்ல பெண்.. அவள் நல்லபடி வாழட்டும்ங்கிற எண்ணம் எனக்கிருக்கும்மா.."

113

**ராத்திரியில் காணும் ரகசியக் கனவில்..**

**உன் முகம் மட்டுமே.. உலா வருவதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

ஒவ்வொரு மனிதர்களின் மனதிலும் ரகசிய அறைகள் பல உண்டு.. காலம் வரும்போது அது திறக்கும்.. அப்படித் திறக்கும்போத வெளிப்படும் அவர்களின் மனஉணர்வுகள் அவர்களை மேலும் அழகுபடுத்தும்..

ராதிகாவின் மனதிலிருந்த ரகசிய அறைகளில் ஒன்று அன்று திறந்து கொண்டது.. அதில் வெளிப்பட்ட அவளது பெருந்தன்மை உணர்வைக் கண்ட ராதிகாவின் அம்மா ஆச்சரியப்பட்டுப் போனாள்..

எந்தப் பெண்தான் நாத்தனாருக்கு பிறந்தவீட்டில் கிடைக்கும் பாதுகாப்பையும் பாசத்தையும் கண்டு தனக்கு பொறாமை ஏற்படுவதை ஒப்புக்கொள்வாள்..?

ராதிகா அதை ஒப்புக்கொண்டாள்.. அவளின் அம்மாவிற்கு மகளின் அந்தச் செயல் கண்டு பெருமை ஏற்பட்டது..

"அம்மா.. எனக்கென்று சொந்தமாக இருக்க.. நான் உரிமை கொண்டாட ஒரு வீடு வேண்டாமா..? அதற்காகத் தான் என் புருஷனோடு தனிக்குடித்தனம் போகணுமுன்னு நினைத்தேன்.. மற்றபடி எனக்கு மாலினியின் மேல் விரோதம் கிடையாது.."

"இவ்வளவு பெரிய வீட்டில் இருந்து உன் நாத்தனாரைப் பெண் கேட்டு வரப் போகிறாங்களே.. என்னவாக இருக்கும்..?"

"அவங்க மகனுக்கு கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கும்.."

"என்னடி இப்படிச் சொல்கிற..?"

"வேற எப்படிச் சொல்லச் சொல்கிறீங்க.. எதுக்குப் பெண்கேட்டு வருவாங்க.. கல்யாணம் பண்ணிக்கத்தானே பெண் கேட்டு வருவாங்க..?"

"பெரிய கண்டுபிடிப்பைச் சொல்லிட்டட போ.. எதுவும் காதல் விவாகரமா இருக்குமோன்னு கேட்டேன்.."

"அப்படி ஒண்ணும் எனக்குத் தெரியலைம்மா.."

"பின்னே எதுக்கு உன் நாத்தனார் வேலையை விட்டுவிட்டு மூட்டையைக் கட்டிக்கிட்டு வந்துவிட்டாளாம்..?"

"அதுதான் எனக்கும் புரியலைம்மா.. வீட்டில யாருகிட்ட கேட்டாலும் இதைப் பற்றி வாயே திறக்க மாட்டேங்கறாங்க.."

"அதனாலதான் காதல் விவகாரமான்னு கேட்டேன்.."

"காதல் விவகாரமாக இருந்தால்.. அவ எதுக்கு வேலையை ரிஸைன் பண்ணிட்டு வரணும்? எனக்கென்னவோ அவ வேலைபார்த்த இடத்தில் ஏதாவது பிரச்னை வந்திருக்கணும்னு தோணுது.."

"அப்படியா சொல்கிற..?"

"ஆமாம்மா.. காதலிச்சிருந்தா அவ நிச்சயம் மார்த்தாண்டத்தை விட்டு வந்திருக்க மாட்டா..."

"அதுவும் சரிதான்.."

"அவங்களுக்கு இவளைப் பிடிச்சிருந்திருக்கும்.. அவங்க வீட்டுப் பெண் கல்யாணத்தை நடத்திவிட்டு வந்து பெண் கேட்கலாமுன்னு நினைத்திருப்பாங்க.. இவ வேலை பார்க்கிற இடத்தில் பிடிக்காம போய் வேலையை ரிஸைன் பண்ணிவிட்டு வந்திருக்கணும்.. சரி.. இப்பப் போய் பெண் கேட்கலாமுன்னு நினைத்து கிளம்பியிருப்பாங்க.."

"நீ சொல்றதைப் போலத்தான் இருக்குமா..?"

"அம்மா.. மாலினி.. சசியின் மச்சினரைக் காதலிச் சிருந்தா.. வேலையில் ஏற்படும் பிரச்னைகளை சமாளிச்சுக் கிட்டு மார்த்தாண்டத்திலேயே மையம் கொண்டிருப்பா.. அவ அங்கிருந்து கிளம்பி வந்தப்பவே.. இது காதல் விவகாரமில்லைன்னு நமக்குத் தெரிய வேணாமா..?"

ராதிகா வீட்டுக்கு வந்தவுடன்.. கணவனைத் தேடிப் போனாள்.. அவன் காபியுடன் உட்கார்ந்திருந்தான்..

"என்னங்க காபி சாப்பிடுகிறீங்களா..?"

"இல்லைடி.. பீர் சாப்பிடுகிறேன்.."

"என்னங்க இப்படிப் பேசுகிறீங்க..?"

"வேற எப்படிப் பேசச் சொல்கிற.. அம்மா வீட்டுக்குப் போனா காலா காலத்தில வீட்டுக்கு வரணும்கிற அறிவு வேணாமா..? ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தால்.. ஒரு வாய் காபித் தண்ணி கொடுக்க பெண்டாட்டி இல்லே.. அம்மா போட்டுத் தருகிற காபியைக் குடிச்சுக்கிட்டு இருந்தால்.. அதுக்கும் ஒரு கேள்வியைக் கேட்கிறா.. இதைப் பார்த்தா காபின்னு தெரியுதில்ல.. அப்புறமும் என்ன கேள்வி வேண்டிக்கிடக்கு கேள்வி.."

ரஞ்சித்திற்கு ராதிகாவின் மேல் அபாரமான காதல்.. அவன் வீட்டுக்கு வரும்போது மனைவி அங்கிருக்கா விட்டால் அவனுக்கு கண் மண் தெரியாமல் கோபம் வந்து விடும்..

"அம்மா வீட்டில் அம்மாவோடு பேசிக்கிட்டு இருந்தேங்க.. அதான் கொஞ்சம் நேரமாகிருச்சு.."

"உன் அம்மா வீட்டுக்குப் போனால் நீ உன் அம்மா வோட மட்டும்தான் பேச முடியும்."

ரஞ்சித்தின் குத்தல் மொழி சுருக்கென்று அம்பாக ராதிகாவின் இதயத்தில் தைத்தது.. எதிர்த்து ஒரு கேள்வி கேட்க முடியாத நிலையில் அவள் பல்லைக் கடித்துக் கொண்டு கணவனைப் பார்த்தாள்..

"எதுக்கு என்னைத் தேவையில்லாம வம்புக்கு இழுக்கறீங்க..."

"அப்படிப்பட்டவங்க வீட்டுக்கு நீ ஏன் போகணும்..?"

"இது நல்ல கதையாய் இருக்கே.. இன்னும் இருக்கப் போவது எத்தனை காலமோ.. இருக்கிற வரைக்கும் பெத்தவங்களையும் கூடப்பிறந்தவங்களையும் பாசமா பார்த்து விட்டு வந்தால்கூடவா தப்பு..?"

"என்னை வம்பிழுக்காதீங்கன்னு சொல்லிட்டு.. நீதான் இப்ப வம்பைக் கட்டி இழுக்கறே.."

"இப்பத்தான் என் பிறந்த வீடு இப்படி ஆகிப் போயிருச்சு.."

"சரி.. சரி.. சண்டையை விடு.."

ரஞ்சித் வெள்ளைக் கொடியைக் காட்டி சமாதானத்திற்கு வந்தான்.. ராதிகா சற்று நேரம் முகத்தைத் தூக்கிக் கொண்டு இருந்துவிட்டு ஒருவழியாக சமாதானமானாள்..

"அம்மா ஒரு விஷயம் சொன்னாங்க.."

"அவங்க ஓராயிரம் விஷயம் சொல்லியிருப்- பாங்களே.."

"அதில இந்த ஒரு விஷயம் மட்டும்தான் உங்களுக்கு தேவையானது.."

"என்னவாம்..?"

"நம்ம மாலினியை சசிரேகாவின் மச்சினருக்குப் பெண் கேட்டு வரப் போகிறாங்களாமே.. என் அம்மா சொல்லித்தான் எனக்கு இந்த விஷயம் தெரியுது.. நான் இந்த வீட்டு மருமகள்னுதான் பேரு.. எனக்கு இந்த விஷயம் தெரியலை. என் அம்மாவுக்கு இது தெரிஞ்சிருக்கு. இதை எங்கே போய் நான் சொல்ல.. எந்த சுவரில் தலையை முட்டிக்க..?"

மனைவியின் மனத்தாங்கலில் நியாயம் இருப்பதாக ரஞ்சித் நினைத்தான்.. அவன் மாலினியின் அண்ணன்.. அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் மாலினியைப் பெண் கேட்டு பெரிய இடத்திலிருந்து வரப் போகிறார் கள் என்று தெரியவில்லை.. அவனுடைய மாமியாருக்கு இந்த விஷயம் தெரிகிறது என்றால்.. அது அவனுக்கு குறைவு தான் என்று அவன் நினைத்தான்..

அவன் அறையை விட்டு வெளியே வந்து காவேரியை அழைத்தான்..

"அம்மா.. அம்மா.."

"என்னடா.." சமையலறையில் கை வேலையாக இருந்த காவேரி.. ஈரக்கையை புடவை முந்தானையில் துடைத்துக் கொண்டே வெளியே வந்தாள்..

"அப்பா எங்கே..?"

"ஹாலில் இருக்கிறார்.."

"நீங்களும் கொஞ்சம் ஹாலுக்கு வாங்க.."

ரஞ்சித்.. மனைவி பின்தொடர ஹாலுக்குப் போகவும்.. காவேரியைப் பயம் பிடித்துக் கொண்டது.

'இவன் தனிக்குடித்தனம் போகப் போகிறேன்னு சொல்லப் போகிறானோ..' அவசரமாக அடுப்பை அணைத்து விட்டு ஹாலுக்கு விரைந்தாள் காவேரி..

தொலைக்காட்சியில் செய்தியில் ஆழ்ந்திருந்த ஜானகி ராமனின் எதிரே அமர்ந்தான் ரஞ்சித்..

ராதிகா கதவோரமாக நின்றுகொள்ள.. காவேரி பதற்றத்துடன் கணவன் முகத்தையும் மகனின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்...

"என்னப்பா.. என்ன விஷயம்..?"

"நான் யாருப்பா..?"

ஜானகிராமன் திகைத்துப் போனார்.. மகனிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை..

"என்னடி... இவன் இப்படிக் கேட்கிறான்..?" என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார்..

'அப்பாடி.. இவன் தனிக்குடித்தனத்தைப் பற்றி பேச வரவில்லை.. இது வேற ஏதோ ஒரு விஷயம்..' காவேரி நிம்மதியாகி.. அந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள ஆயத்தமானாள்.

"எனக்கும் இவன் ஏன் இப்படிக் கேட்கிறான்னு தெரியலையேங்க.. ஏண்டா ரஞ்சித்.. யாரு என்ன

சொன்னாங்கன்னு இப்படிப் பேசிக்கிட்டு வருகிற.." என்று மகனைப் பார்த்து கேட்டும் வைத்தாள்...

உடனே ராதிகாவிற்கு கோபம் வந்துவிட்டது.. அவள் கச்சை கட்டிக் கொள்ளாத குறையாக மாமியாரின் மேல் பாய்ந்தாள்..

"ஏன்... உங்க மகனுக்கு சுயபுத்தி கிடையாதா.. நான் சொல்லித் தந்துதான் பேசுகிறாருன்னு நீங்க எப்படிச் சொல்லலாம்..?"

"ஏம்மா.. நான் உன்னை எப்போ குற்றம் சொன்னேன்.. யாரு என்ன சொன்னாங்கன்னுதானே கேட்டேன்..?"

"அதுக்கு என்ன அர்த்தம்..?"

"அதுக்கு இப்படியா அர்த்தம்..?"

"வேறு எப்படித்தான் அர்த்தம்.."

"எனக்கு இந்த சூட்சுமம் எல்லாம் தெரியாதும்மா.. நான் யதார்த்தமான பொம்பளை..."

"அப்போ.. நான்தான் சூட்சுமக்காரி யதார்த்த மில்லாத பொண்ணு.."

"ஏம்மா.. நான் அப்படியா சொன்னேன்..?"

"கேட்டீங்களா.. கேட்டீங்களா.. உங்க கண் எதிரிலேயே உங்க காதுபடவே உங்க

அம்மா என்னை எப்படியெல்லாம் பேசுகிறாங்க.. இதைக் கேட்டுக்கிட்டு சும்மா உட்கார்ந்திருக்கிறீங்களே..."

"இப்ப எதுக்கும்மா என் மகனைக் கிளப்பி விடுகிற.."

"அவர் என் புருஷன்..."

"அதுக்கு முன்னாலேயே எனக்கு மகன்.."

"அப்போ.. என் புருஷன்மேல் எனக்கு உரிமையில்லையா..? இதுக்குத்தான்ங்க.. உங்ககிட்ட படிச்சுப் படிச்சுச் சொன்னேன்.."

"என்னத்தம்மா பள்ளிக்கூடத்தில் படிச்சுப் படிச்சு சொல்லாம வீட்டுக்குள்ள வந்து என் மகன்கிட்ட படிச்சுப் படிச்சு சொன்ன…?"

"எப்ப… சரிப்பட்டு வரலைன்னு தெரிஞ்சு போச்சோ அப்ப சேர்ந்து இருக்கிறதும் சரிப்படாதுன்னு.."

மறைமுகமாக தனிக்குடித்தன எச்சரிக்கையை ராதிகா அறிவுறுத்த.. பொங்கிய பாலில் தண்ணீரைத் தெளித்த கதையாய் காவேரி உடனடியாக அடங்கிப் போனாள்..

"ஏம்மா ராதிகா.. குடும்பமுன்னு இருந்தா ஆயிரம் இருக்கும். அதுக்காக சரிப்பட்டு வரலைன்னு நீ சட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்தா எப்படிம்மா.. இது உன் வீடு. நாங்க உன் புருஷனைப் பெற்றவங்க. உனக்கும் பெற்றவங்க போலத்தான். நீரடிச்சு நீர் விலகுமா?"

காவிரி.. பரிபூரண சரணாகதிக்கு வந்துவிட….

'அஃது.. அந்த பயம் இருக்கட்டும்' என்ற முறைப்புடன் ராதிகாவும் அமைதியாகப் போனாள்.

பெண்களின் உள்வீட்டுப் போரினால்.. தலையில் கை வைத்துக் கொண்ட ஜானகிராமன்.. பரிதாபமாக..

"என்னடா ரஞ்சித் இது.." என்று மகனிடம் அழ மாட்டாத குறையாக வினவினார்.

"ராதிகா கொஞ்சம் பேசாமல் இருக்கியா.." ரஞ்சித் மனைவியிடம் திரும்பிச் சொன்ன இந்த வார்த்தைகளுக்கு..

'ஏய்.. அடங்குடி…' என்ற அர்த்தம் என்பதை அறிந்து வைத்திருந்த ராதிகா அடங்கிப் போனாள்.

"உன் பெண்டாட்டியை ஏண்டா அடக்குகிற.. ஆரம்பித்து வைத்தது நீதானே…"

"என்னத்தை ஆரம்பித்து வைத்தேன்?"

"நான் யாருன்னு கேட்டா.. அதுக்கு என்னடா அர்த்தம்? நீ யாருன்னு உனக்குத் தெரியாதா.. அது தெரியாமலா இத்தனை நாளும் இருந்த?"

"கடுப்பை கிளப்பாமல் பதில் சொல்லுங்கப்பா.."

"நீ என் மகன்.."

"மாலினிக்கு யாரு?"

"உனக்கே இது நியாயமாய் இருக்காடா?"

"பதிலைச் சொல்லுங்கப்பா.."

"மாலினிக்கு அண்ணன்.."

"அவளைப் பெரிய இடத்திலிருந்து பெண் கேட்டு வரப்போகிறாங்க.. இதைப் பற்றி ஒரு வார்த்தை என்கிட்ட நீங்க சொன்னீங்களா?"

காவேரிக்கு புரிந்துவிட்டது. அவளிடம் ரகசியமாக சசிரேகா கூறிய செய்தியை கணவனிடம்கூடப் பகிர்ந்து கொள்ளாமல் அவள் மனதிற்குள் வைத்திருந்தாள். இப்போது அது வெளியே தெரிந்துவிட்டதால் மகன் கோபம் அடைந்திருக்கிறான்.

'யார் சொல்லியிருப்பா..' என்ற யோசனையுடன்,

"யாருடா உனக்கு இதைச் சொன்னது?" என்று கேட்டுவிட்டு.. அதற்கும் மகனிடம் வாங்கிக் கட்டிக் கொண்டாள் அவள்.

ஜானகிராமன் புருவங்கள் முடிச்சிட மனைவியைப் பார்க்கவும்.. அதைப் பற்றி எதுவும் தெரியாதவளைப் போல இருக்கவேண்டிய அவசியத்துக்கு ஆளானாள் காவேரி...

114

**உன் நினைவில் எனது மனம்...**

**உல்லாசம் கொள்வதையே...**

**என்னவென்று நான் சொல்ல?**

சசிரேகா கூறிய செய்தியைக் கேட்டவுடன் இறக்கையில்லாமலே வானத்தில் பறந்தாள் காவேரி.

"மாலினியின் மேல் என் பெரியத்தானுக்கு நோக்கமிருக்கு சித்தி... என் மாமியாரும் நாத்தனாரும் அதை ஆதரிக்கிறாங்க. எங்க வீட்டுக்காரருக்கு இதில் பூரண சம்மதம். நாங்க நல்ல நாள் பார்த்து மாலினியைப் பெண் கேட்டு அங்கே வரதா இருக்கோம் சித்தி.."

"இதை உங்க சித்தப்பாவிடம் சொல்லிவிடவா சசி.."

"இப்ப வேணாம் சித்தி.. அவர் மாலினியை தப்பா நினைச்சுக்குவார். நானே போன் பண்ணி சித்தாப்பாவிடம் சொல்கிற விதமாய் சொல்கிறேன்.."

"அதுவும் சரிதான்.. அம்மாடி சசி..."

"என்ன சித்தி?"

"ரஞ்சித்தும் ராதிகாவும் கூட மாலினியின் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கல. நீ அவளோட பெரியப்பா மகள். நீ இந்த அளவுக்கு யோசித்து அவளுக்கு ஒரு நல்லது பண்ணியிருக்கயே.. உனக்கு எப்படி நன்றி சொல்கிறதுன்னே எனக்குத் தெரியலைம்மா.."

"பெரிய வார்த்தையெல்லாம் பேச வேண்டாம் சித்தி.. மாலினி என் பெரியத்தானைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்.. எனக்கும் இந்த வீட்டில் ஆதரவு கூடும் சித்தி. என் சுயநலமும் இதில் இருக்கு.."

"எப்படியோ.. முன்னே பின்னே தெரியாத குடும்பத்தில் பெண்ணைக் கொடுத்துவிட்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்கவேண்டிய தேவையில்லாமல் உன் மாமனார் வீட்டிலேயே பெண் கொடுப்பதைப் பற்றி எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?"

"புரியுது சித்தி.."

"நீங்க.. கூடப் பிறந்தவங்க மாதிரி ஒற்றுமையா இருந்த பொண்ணுக.. உங்க மனசுப்படியே ஒரே வீட்டில் வாழப் போகிறீங்க.."

"அந்த சந்தோஷம்தான் சித்தி எனக்கு..."

"நல்ல வார்த்தை சொல்லயிருக்க.. சீக்கிரமாவே உன் சித்தப்பாவிடமும் அண்ணனிடமும் இதைப் பற்றிக் சொல்லி விடு..."

"கட்டாயம் சொல்லி விடுகிறேன் சித்தி.. இப்பவே சொல்லியிருப்பேன். ஆனால்.. இதை என் மாமியாரே சித்தப்பாவிடம் சொன்னால்தான் முறையாக இருக்கும். அவங்க சொல்லாமல் நான் சொல்லக் கூடாது.."

"வேண்டாம்.. வேண்டாம்.. அவங்களே சொல்லிக்கட்டும். ஏன்.. மாலினி வேலையை விட்டுவிட்டு வந்து விட்டாளாம்?"

"அவளுக்கு அந்த மில்லில் ஏதோ பிரச்னையாம்.."

"உன் பெரியத்தானுடன் மாலினி எப்படிப் பழகினாள்?"

"வித்தியாசமாய் பழகவில்லை சித்தி.."

"அன்னிக்கு திடீர்னு வந்து மாலினியை.. மார்த்தாண்டத்திற்கு கூப்பிட்டுக் கொண்டு போனயே.. அதுதான் கேட்டேன்.."

"மாலினியின் மில்லில் பெரியத்தான் ஏதோ பேசி சமரசம் பண்ணி வைத்தாராம். இவகிட்டச் சொன்னால் இவ ஈகோவை பிடிச்சுத் தொங்கிக்கிட்டு வர மாட்டேன்னு சொல்லுவா.. அதனால.. அவ கூட வேலை பார்க்கிற ஒருத்தருக்க உடம்பு சரியில்லைன்னு ஒரு பொய்யைச் சொல்லி அவளைக் கூப்பிட்டுக் கொண்டு போனேன் சித்தி.."

"மில்லில் பேசி சமாதானம் பண்ணினாங்களா?"

"அது ஆச்சு. ஆனால்.. அதுக்குள்ள எங்க வீட்டில் மாலினியைக் கல்யாணம் பண்ணிக்கிற பேச்சு வந்துருச்சு. மாலினியும் சமாதானமாகிட்டாலும் அங்கே தொடர்ந்து வேலை பார்க்கப் பிரியப்படலே. அதனால.. அவளை இங்கே இருக்கச் சொல்லாம கொண்டு வந்து விட்டுட்டு வந்துட்டேன்.."

"அவ்வளவுதானே.. நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்.."

"நானிருக்கிறேனே சித்தி.. நீங்க பயப்படுகிறதைப் போல எதையும் நடக்க விடுவேனா?"

காவேரி மனநிம்மதியுடன் போனை வைத்தாள். அவளது மனதின் ஒரு மூலையில்.. மகளைப் பற்றி எழுந்த சந்தேகம் மறைந்துவிட்டது.

'சே.. வீணாய்.. எதையெதையோ நினைத்து விட்டேன். அவங்களாக ஆசைப்பட்டுத்தான் பெண் கேட்டு வருகிறாங்க போல..'

மகளின் எதிர்காலம் அவர்கள் கனவில்கூட நினையாத அளவிற்கு வளமாய் அமைந்துவிட்டதில் காவேரிக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் மருமகளைப் பற்றிய எரிச்சல்களை மறந்து தானே வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்து கொண்டிருந்தாள் காவேரி.

திடீரென்று மகன் போர்க்கொடி தூக்கி நியாயம் கேட்பானென்றோ... அதை கணவரும் ஆதரித்து வைப்பார் என்றோ எதிர்பார்த்திராத காவேரி.. எப்படி இந்த நிலைமையை எதிர்கொள்வது என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"என்ன காவேரி.. இங்கே என்னதான் நடக்குது?"

"எனக்கும் ஒன்றும் தெரியலைங்க. நம்ம ரஞ்சித்து தான் எதையோ சொல்கிறான். அவன்கிட்டயே என்னான்னு கேட்போம். ஏண்டா ரஞ்சித்.. உன் தங்கையைப் பெரிய இடத்திலிருந்து பொண்ணு கேட்டு வரப் போகிறாங்கன்னு யாரு உனக்குச் சொன்னது?"

"ஏன்.. சொன்னவங்களைப் பிடிச்சு சண்டை போடப் போகிறீங்களா?"

"நான் எதுக்குடா அவங்ககிட்ட சண்டை போடப் போகிறேன்?"

"எதுக்கு இந்த விஷயத்தை என் மகன்கிட்ட சொன்னீங்கன்னுதான்.."

"ராமா.. நீ சொல்லித்தான் எங்களுக்கே இந்த விஷயம் தெரியும். ஆமா.. அந்த பெரிய இடம் எந்த இடம்டா?"

காவேரி.. மகளின் வாழ்க்கைக்காக சிறப்பாக நடித்து விட்டாள். ஜானகிராமன்.. தன் மனைவி.. தன்னிடமிருந்து எதையும் மறைக்கவில்லை என்று மனது சமாதானம் அடைந்தார்.

"ஆமாம்டா ரஞ்சித்.. அந்த இடம்.. எந்த இடம்?" ஜானகிராமனும் சேர்ந்து கேள்வி கேட்க.. ரஞ்சித் குழம்பிப் போனான்.

"என்னப்பா இது.. உண்மையிலேயே உங்களுக்கு இந்த விஷயம் தெரியாதா?"

"தெரியாதே.."

"நம்ம சசியின் மச்சினருக்கு மார்த்தாண்டத்திலிருந்து நம்ம மாலினியைப் பெண் கேட்டு வரப் போகிறாங்களாமே?"

"என்னது?"

ஜானகிராமன் 'ஆ' வென்று வாய் பிளந்தார்.

"காவேரி.. நிஜமாகச் சொல்லுடி.. இதைப் பற்றி உனக்கு எதுவும் தெரியுமா?"

"சசி.. உங்க மூன்று விட்ட அண்ணனின் மகள். அவள் உங்களை விட்டுவிட்டு என்னிடம் வந்து செய்தியைச் சொல்லுவாளா? ரஞ்சித்.. எனக்கென்னவோ.. உன் அப்பா.. விஷயத்தை தெரிந்துகொண்டே நம்மகிட்ட இருந்து அதை மறைத்திருக்கிறாருன்னு தோணுதுடா..."

காவேரி மகனை முடுக்கிவிட.. அவன் தகப்பனாரைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

"ஏண்டா நீ வேற.. இந்தப் பார்வை பார்க்கிற? எனக்குத் தெரிந்தால் உனக்குச் சொல்லாமல் இருப்பேனா.. நீதானே

மாலினிக்கு அண்ணன்.. உன் உதவியில்லாம.. தனியாய் மாலினியின் கல்யாணத்தை நான் நடத்திவிட முடியுமா?"

ஜானகிராமன் இந்தக் கேள்வியைக் கேட்டதும்..

'ஆஹா...' என்று மனதிற்குள் சுதாரித்துக் கொண்டாள் ராதிகா.

"ஏங்க.. அதுதான் மாமாவே அவருக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்கிறாரே.. நீங்க ஏன் அவருகிட்ட மேலே மேலே கேள்வி கேட்கறீங்க. அவருக்கு இல்லாத பொறுப்பா நமக்கு வந்துவிடப் போகுது.. பெண்ணைப் பெற்றவருக்கு எதையெதை எப்படியெப்படிச் செய்யணுமுன்னு தெரியாதா?"

மருமகளின் பேச்சைக் கேட்டு பல்லை நறநறவென கடித்துக் கொண்டாள் காவேரி.

'எதையெதை எப்படியெப்படிச் செய்யணுமுன்னு எங்களுக்குத் தெரியுதோ.. இல்லையோ.. எதையெதை புருஷனிடம் எப்படியெப்படிப் பேசணுமுன்னு இவளுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கு..'

"இது அப்பாவுக்கும் எனக்குமான பேச்சு... நீ கொஞ்சம் பேசாமல் இருக்கயா ராதிகா.." ரஞ்சித் கடுமையான குரலில் கூறினான்.

தன்னிடமிருந்து பெற்றவர்கள் எதையும் மறைக்க வில்லை என்று தெரிந்ததுமே அவனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

அவனுக்குத் தெரிந்த செய்தியை உடனடியாகத் தந்தைக்கு தெரியப்படுத்திவிட்டு.. மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பேச வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு.

'அதுதானே.. தங்கைன்னா உடனே இவருக்கு பாசம் பொத்துக்கிட்டு வந்துடுமே..' ராதிகா பல்லைக் கடித்துக் கொண்டாள்..

"இது எப்படிடா உனக்குத் தெரியும்?"

"ராதிகாதான் சொன்னாள்ப்பா..."

"ஏம்மா ராதிகா.. உனக்கெப்படித் தெரியும்?"

"என் அம்மா சொன்னாங்க மாமா..."

நதி மூலம்.. ரிஷி மூலத்தைக்கூட எளிதாக கண்டு பிடித்து விடலாம். ஆனால், இதுபோன்ற செவிவழிச் செய்திகளின் மூலத்தை எளிதில் கண்டுபிடித்துவிட முடியாது என்று தன் அனுபவத்தில் கண்டிருந்தார் ஜானகிராமன்.

ராதிகாவின் அம்மா எதிரிலிருந்தாலாவது அவளிடம் எப்படித் தெரியுமென்று கேட்டு வைக்கலாம். அந்த இடத்தில் இல்லாத சம்பந்தகாரம்மாவிடம் எப்படி கேள்வி கேட்பது?

அதற்குப் பதில்.. அவருடைய மருமகளிடமே செய்தியின் மூலத்தை அறிந்து கொள்ளக் கேள்வி கேட்க ஆரம்பித்தார் ஜானகிராமன்.

"அவங்களுக்கு யார் சொன்னதாம்?"

"நம்ம சசியோட அப்பாவோட ஊருக்காரர் ஒருத்தர் சொன்னாராம் மாமா.."

"அந்த ஊருகாரருக்கு யார் சொன்னதாம்?"

"நம்ம சசியோட அப்பாவோட தூரத்துச் சொந்தக்காரர் ஒருத்தர் சொன்னாராம்.."

"அந்த தூரத்து சொந்தக்காரருக்கு யார் சொன்னதாம்?"

"சசியோட அப்பா சொன்னாராம்.."

"அவருக்கு யார் சொன்னதாம்?"

"சசி சொன்னாளாம்.."

"சசிக்கு யார் சொன்னதாம்.."

"இது என்ன மாமா கேள்வி? அவ வீட்டு ஆளுக சொல்லியிருப்பாங்க.."

"அதெப்படி.. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாம.. ஊரு பூரா இந்தப் பேச்சை உலவ விட்டிருக்காங்க.? பெண்ணைப் பெற்றவன் குத்துக்கல்லைப் போல இருக்க... மத்தவங்க

என் மக கல்யாணத்தைப் பத்தி பேசியிருக்காங்களா..ரஞ்சித்.. சசிக்கு போனைப் போடு.. அவகிட்டயே என்னான்னு கேட்போம்.."

'இது என்னடா.. கிணறு வெட்டாமலே பூதம் கிளம்புகிறது..' காவேரி கையைப் பிசைந்தாள்.

அவளது அபயக்குரல் காதில் விழுந்ததைப் போல.. போனின் மணி ஒலித்தது.

"ஏங்க.. உங்க செல்போன்தான் அலறுது.." காவேரி ஜானகிராமனின் செல்போனை எடுத்துக் கொடுத்தாள்.

"ஏண்டி.. அருமையான பழைய பாட்டை ரிங்டோனாய் வச்சிருக்கேன்... இதைப் போய் அலறுதுன்னு சொல்கிறயே.."

மனைவியைக் கடிந்து கொண்டே போனை வாங்கிப் பேசிய ஜானகிராமன்... தடாலென்று சோபாவை விட்டு எழுந்தார்.

"வணக்கங்கம்மா... சௌக்கியம்தானுங்க.. என் பெண்டாட்டியும் சௌக்கியம்தான். மகனும் மருமகளும் நல்லா இருக்காங்க. மாலினி லைப்ரரி வரைக்கும் போய் இருக்கிறா. அங்கே.. மார்த்தாண்டத்தில் எல்லாம் சௌக்கியங்களா..."

'ம்ஹூம்.. செல்போனில் பேசும்போது.. இந்த நலம் விசாரித்தலை கொஞ்சம் குறைத்துக்கிட்டுப் பேசினால் ஆகாதா. நலம்.. நலமறிய ஆவல்னு ஒற்றை வரியில் பேச இவங்களுக்கு யாராவது கற்றுக் கொடுத்தால் தேவலை..'

ரஞ்சித் மனைவியைப் பார்க்க.. அவள் கணவனின் எண்ணம் புரிந்தவளாக கேலியாக சிரித்தாள்.

"என்கிட்ட முக்கியமான விஷயம் பேசணுமா.. சொல்லுங்கம்மா... ம்ம்.. ம்ம்... ரொம்ப சந்தோஷம்ங்க.. நீங்க எங்க வீட்டில் பெண் எடுக்க நாங்க கொடுத்து வைத்திருக்கணும்... வார வெள்ளிக்கிழமை நாள் நல்லாயிருக்கா? அன்னிக்கே வருகிறீங்களா.. சரிங்கம்மா.. நாங்க காத்திருக்கோம்..."

ஜானகிராமன் உடலை கேள்விக்குறியைப் பேல வளைத்துப் பணிவுடனும் பவ்யத்துடனும் பேசினார்.

ரஞ்சித் தலையில் அடித்துக் கொண்டான்.

"ஏம்ப்பா.. இது சாதாரண செல்போன்தானே?"

"ஆமாம்ப்பா.."

"இதில் பேசினா.. உங்க உருவம் அங்கே தெரியுமா?"

"தெரியாதுதான்."

"அப்புறம் எதுக்கு உடம்பை வில்லா வளைச்சு.. இப்படி போஸ் கொடுக்கஹறீங்க.."

"ஒரு மரியாதைதாண்டா தம்பி.."

"நீங்களும் உங்க மரியாதையும். நிறைய பேர் இப்படித்தான் செய்கிறாங்க.."

"அதை விடு.... சசி சொன்னது நிஜம்தாண்டா ரஞ்சித்... வர வெள்ளிக்கிழமை மார்த்தாண்டத்திலிருந்து மாலினியைப் பெண் கேட்டு நர்மதாம்மா வரப் போகிறாங்க.."

'கடவுளே! உனக்கு நன்றி..'

காவேரி பூஜையறையை நோக்கி விரைந்தாள். ஜானகிராமன்.. வெள்ளிக்கிழமை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி ரஞ்சித்திடம் கலந்து ஆலோசிக்க ஆரம்பித்தார். தங்கையின் திருமணம்.. தன்னை முன்னிறுத்தி நடக்கப் போகிறது என்ற நிறைவில் அவனும் பொறுப்பாக தகப்பானாருக்கு யோசனைகள் சொல்லிக் கொண்டிருந்தான்.

## 115

**என்னருகே நீயிருக்கும் போது...**

**கத்தரி வெயிலும்.. சித்திரை மழைச் சாரலாவதை...**

**என்னவென்று நான் சொல்ல?**

வீட்டின் பின்பக்கமிருந்த படிக்கட்டில் அமர்ந்து எதிரேயிருந்த துளசி மாடத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் பவித்ரா. மாடத்தின் நான்கு பக்கமும் இருந்த சிறு பீடங்களில் அகல் விளக்கு எரிந்து கொண்டிருக்க.. அதன் நடுமையத்தில் துளசிச் செடி அழகாக.. கம்பீரமாக.. காற்றை வரவேற்பதைப் போல லேசாக தலையாட்டிக் கொண்டு நின்றிருந்தது.

"உடல்.. மனம்.. ஆன்மா.. பரிசுத்தம்.."

துளசிச் செடியின் பவித்ரத்தைக் குறிக்கும் வார்த்தைகள் இவை... துளசி புனிதமானது. வைகுண்டத்தில் வசிக்கும் அந்த அனந்தயனனின் அன்புக்குரியது.

புராண காலத்து கதைகள் பல துளசியின் பெருமைகளையும் மகிமைகளையும் கூறுகின்றன.

ஒரு சமயம் கிருஷ்ணனின் எடைக்கு எடை தங்கம் தருவதாக சத்யபாமா கூறினாளாம். ஒரு பக்கம் கிருஷ்ணன் அமர்ந்திருக்க, மறுபக்க தராசுத் தட்டில் செல்வங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டன.

அகிலத்தை அளந்த அந்த உலகளந்த பெருமாளுக்கு ஈடாக தங்கத்தையும் வைரத்தையும் அளித்துவிட முடியுமா?

தராசுத் தட்டு இறங்கவில்லை. கிருஷ்ணன் ஹாயாக.. கால்நீட்டி சத்யபாமாவை ஒன்றும் அறியாதவர் போலக் கள்ளப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

சத்யபாமா கைகளைப் பிசைந்தாள். கண்ணீர் விட்டாள். செய்வதறியாதவளாக தவித்தாள். அப்பொழுது அங்கே ருக்மிணி வந்தாள். செய்தி கேட்டதும் அமைதியாக தன் கணவரின் இன்னொரு மனைவியிடம் கூறினாள்.

"கண்ணனுக்கு இந்த பொன்னும் மணியும் ஈடாகுமா? அவன் அன்பிற்கும் பக்திக்கும் கட்டுப்படுபவன். ஆசைக்கு கட்டுப்படுபவனல்ல.. அவன் தண்ணீரைப் போன்ற தாயுள்ளம் கொண்ட தயாநிதி. அவனை வசப்படுத்த வைரங்களை அளித்தாயா... நீயே சரணம் என்ற அவன் காலடியில் விழுந்து விட்டால் கண்ணன் நம்மைக் காக்க

ஓடோடி வருவான்... என் குறை தீர்க்க உனக்கு மனமில்லையா என்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தால் தவறாமல் அதற்குப் பதிலளித்து நமக்கு அவன் மேலிருக்கும் உரிமையை உறுதி செய்வான். அப்பேர்ப்பட்ட காதலனை... கணவனைப் பெற்ற நாம் பாக்கியசாலிகள். நமக்கே அவனது மகிமை புரியாமல் போகலாகுமா? இனியொரு முறை இப்படிப்பட்ட அபத்தமான காரியத்தை செய்யாதே...."

ருக்மிணி, கண்ணனை வலம் வந்து கண் மூடி வேண்டிக்கொண்டாள். பின்னர் அருகிலிருந்த ஒரு துளசி இலையை எடுத்து பக்தியுடன் தங்கமும் வைரமும் குவிந்ததிருந்த தராசுத் தட்டில் வைத்தாள்.

உடனே அங்கொரு அதிசயம் நிகழ்ந்தது. துளசி வைக்கப்பட்டிருந்த தட்டு தாழ்ந்து இறங்கியது. பெருமாள் அமர்ந்திருந்த தட்டு உயர்ந்து ஏறியது. இரண்டும் சரிசமமாக ஆன காட்சியை வியப்புடன் கண்டாள் சத்யபாமா.

மகாவிஷ்ணுவின் எடைக்கு எடை ஈடாகக்கூடிய சக்தி வாய்ந்தது துளசி என்பது இதற்கு அர்த்தமல்ல.

தனக்கு ஈடான மதிப்பையும் மரியாதையையும் துளசிக்கு அந்த நாராயணனே வழங்கியிருக்கிறார் என்பது தான் இதன் அர்த்தம்.

அப்படிப்பட்ட துளசிக்கு ஈடானது மாலினி கொடுத்த தன்னலமற்ற அன்பு. அந்த துளசியின் நாயகன் கண்ணன் அர்ஜீனனிடம் அன்பு பாராட்டியதைப் போல மாலினியும் பவித்ராவிடம் நட்பு பாராட்டினாள்.

ஸ்வேதாவை மதித்துப் பேசாதவள்... பவித்ராவை மதித்துப் பேசினாள். உடன்பிறந்த சகோதரிக்கு நிகரான சசிரேகாவிடம் வெளிப்படுத்தாத தன் அந்தரங்கத்தை பவித்ராவிடம் வெளிப்படுத்தினாள். ஆளவந்தாரின் குடும்பம் பெண் கொடுக்க வேண்டுமென்று கனவு

கண்ட கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் மூத்த மகனான பிரபாகரனின் மனதை வசப்படுத்தியிருந்தவள் பவித்ரா விற்காக காதல் தூது சென்றாள்.

அந்த மாலினியின் மனதை பவித்ரா உடைத்து விட்டாள். அவள் பிரபாகரனின் காதலை வேண்டாமென்று தூக்கி எறிந்துவிட்டு.. பார்த்துக் கொண்டிருந்த வேலையையும் விட்டுவிட்டு.. மார்த்தாண்டத்தைவிட்டு வெளியேற பவித்ரா காரணமாகி விட்டாள்.

'எனக்கு மன்னிப்பே கிடையாது...' பவித்ரா மௌனக் கண்ணீரை உகுத்தாள்.

'எனக்குப் பேய்தான் பிடித்துவிட்டது. இல்லாவிட்டால் பெரியத்தானிடம் கேட்கக்கூடாத கேள்விகளை நான் கேட்டிருப்பேனா..' தன்னைத் தானே வெறுத்தாள் பவித்ரா.

'என் காதல் வாழ வேண்டும்.. மாலினியின் காதல் அழிய வேண்டுமென்று நினைத்து விட்டேனே..

நான் எப்படிப்பட்ட ராட்சஸி? அந்த நடு ராத்திரியில் தோட்டத்திற்குப் போய் செடி மறைவில் ஒளிந்துகொள்ள தைரியமிருந்த எனக்கு தினா அத்தானிடம் காதலைச் சொல்ல ஏன் தைரியம் வரவில்லை?' பவித்ரா மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்.

'பயம்... எங்கே என் காதலை தினா அத்தான் மறுத்துவிடுவாரோ என்ற பயம். அந்த மறுப்பைவிட.. மற்றவர்களுக்கு அது தெரிந்துவிடுமோ என்ற பயம். 'பவித்ரா அடக்கமானவள். யாரையும் ஏறெடுத்துப் பார்க்காதவள்.. ஒன்றும் அறியாத பச்சை மண்...' என்ற பிம்பம் கலைந்துவிடுமோ என்ற பயம்...' பவித்ராவின் மனதை உண்மை சுட்டது.

அது அவளை கூறு கூறாக்கி சித்ரவதை செய்தது.

'நான் வேஷக்காரி...' பவித்ரா தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'பொய் முகமூடியை அணிந்தவள். நல்லவள் போல வேஷம் போட்டவள். என்னிடம் உண்மை இல்லை. என் காதலைப் பற்றிய உறுதி இல்லை. நேர்மை இல்லை. நான் சாந்தமானவள் என்பது பொய். நான் கொடூரமானவள். என் காதலுக்காக மாலினியின் காதலை பலி கொடுக்கத் தயங்காதவள். நானும் ஒரு பெண்ணா.. சே...' பவித்ரா தன் முகத்தை உலகத்திற்கு காட்ட விரும்பாதவள் போல முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

'எனக்காக போனாளே... என்னை நம்பி என் கடிதத்தைக் கொண்டு போய் தினா அத்தானிடம் கொடுத்தாளே. நான் எழுதிய கடிதத்தை அநாகரிகமாய் அவள் பிரித்துப் படிப்பாளென்று நான் எப்படி நினைத்தேன்?' பவித்ரா வெளிச்சத்தைப் பார்க்க அஞ்சியவளாக தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

'அத்தான் சொன்னாரே.. அவள் கடிதத்தை கொடுக்கும்போது.. எதையோ சொல்ல வாய் திறந்தாளாம். ஸ்வேதா வந்ததால் 'பிரித்துப் படித்துப் பாருங்க.. புரியும்..' என்று அவசரமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாளாமே. அவள் எதையும் சொல்லாமல் கடிதத்தை கொடுத்தாள் என்று நான் நினைத்தது எவ்வளவு பெரிய தவறு?' பவித்ராவின் விழிகளில் கண்ணீர் நிற்காமல் ஊற்றெடுத்து.

'அவள் தினா அத்தானிடம், இது பவித்ரா கொடுத்த கடிதமென்று சொல்லவில்லையென்று நான் கோபப்பட்டேனே.. அதே சமயம்.. அவள் தான்தான் எழுதியதாகவும் சொல்லவில்லையே. இதை தினா அத்தான் பெரியத்தானிடம் சொன்னதை என் காதினில் கேட்ட பின்பும் எப்படி நான் பெரியத்தானிடம் அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கத் துணிந்தேன்...?' பவித்ராவின் கன்னங்கள் கண்ணீரில் நனைந்திருந்தன.

'பெரியத்தானே தினா அத்தானிடம் தன் காதலை வெளிப்படுத்தாதபோது.. மாலினி எப்படி வெளிப்படுத்துவாள்? என் அந்தரங்கம் வெளிப்படக்-கூடாதென்று நான் நினைத்ததைப் போலத்தானே

மாலினியும் நினைத்திருப்பாள். ஒரு பெண்ணாக இருந்தும் என் தோழியின் மனது எப்படி எனக்குத் தெரியாமல் போய் விட்டது?' பவித்ரா கண்மூடி இருளில் புதையுண்டு போக விரும்பினாள்.

'என் மனதில் தினா அத்தானின் மேல் உண்மையான காதல் இல்லை. உண்மையான காதலுக்கு உறுதி இருந்திருக்கும். தீவிரம் இருந்திருக்கும். நீ என்னை நினைக்காதபோதும்.. நான் உன்னை நினைக்காமல் இருக்க மாட்டேன் என்று அறைகூவும் தைரியம் இருந்திருக்கும். என்னிடம் இது எதுவுமே இல்லையே...' பவித்ரா... கடந்து போன காலங்களில் தன்னைப் பற்றிய சுய ஆராய்ச்சியின் ஈடுபட்டாள்.

'தினா அத்தான் என் காதலை ஏற்றுக்கொள்ளா விட்டால்.. அது வெளியே தெரிந்துவிடக் கூடாது என்று ஏன் நான் நினைத்தேன்..? இன்னொருவனை திருமணம் செய்து கொள்ள.. அது தடையாக இருக்கும் என்பதனால் தானே.. நீயில்லாவிட்டால் எனக்கு வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளை என்ற நிலையில் இருந்து கொண்டு காதலைப் பற்றிப் பேச எனக்கு என்ன தகுதியிருக்கிறது..?' பவித்ரா உதடு கடித்தாள்.

'வாசவனின் மகள் பவித்ரா.. பெயருக்கேற்றாற் போல பவித்ரமானவள். இந்தப் பெயர் மாறக்கூடாது என்றுதானே.. தினா அத்தானின் மீது எனக்கிருந்த காதலை நான் மறைத்தேன்? நான் பவித்ரமானவளா? ஒளிந்து மறைந்து தினா அத்தானை கள்ளப்பார்வை பார்க்க நான் தயார். அதுவே வெளிப்படையாக அவருக்கு எதிரே நின்று முகம் பார்த்து காதல் சொல்ல நான் தயாரில்லை. ஏனென்றால்.. எனக்கு என் இமேஜ் மிக முக்கியம்.. யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத அடக்கமான பெண் என்ற என் பிம்பம் கலைந்துவிடக் கூடாது என்பதில் நான் கவனமாக இருப்பவள்..'

சுயபரிசோதனை எத்தனை வலி மிகுந்தது என்று பவித்ரா அன்று உணர்ந்தாள்.

அவள் மனதில் மாலினி எழுந்தாள்.. பால் போன்ற முகத்துடன் வெள்ளைச் சிரிப்புடன்.. அவள் நட்புக்கரம் நீட்டிய அந்த நாள் ஞாபகம் நெஞ்சினிலே வர.. பவித்ரா அப்படிப்பட்ட நட்பை இழந்துவிட்ட வலியை உணர்ந்தாள்.

தினகரனும் பிரபாகரனும் வாசலிலே நின்று கொண்டிருந்த நாளில் தோட்டத்து இருளின் மறைவில் நின்று கொண்டு தினகரனை தான் பார்த்ததை நினைவு கூர்ந்தாள் பவித்ரா..

'அன்னிக்கே நான் தினா அத்தானைத்தான் பார்க்கிறேன்னு தெரிஞ்சதும் மாலினி சந்தோஷப் பட்டாளே.. அப்படிப்பட்டவளைப் போய் நான் என்னவெல்லாம் பேசி விட்டேன்..' நினைத்து நினைத்து மனம் வெந்தாள் பவித்ரா...

அவளுக்குப் பின்னால் வேகமான காலடியோசை கேட்டது.. உட்கார்ந்த வாக்கிலேயே தலை நிமிர்ந்து பார்த்தாள்.. வாசவன் பரபரப்புடன் அவள் முன்னால் வந்து நின்றார்..

"தினகரன் வந்திருக்கிறான் பவி.."

அவர் குரலில் கனவு நிறைவேறிவிட்ட சந்தோஷம் அப்பட்டமாகத் தெரிந்தது.. வானத்து நிலாவை எட்டிப் பிடித்திருந்தால்கூட அவர் அந்த அளவுக்கு சந்தோஷம் கொண்டாடியிருக்க மாட்டார்.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பெண்ணைக் கொடுக்கப்போகும் அதிர்ஷ்டம் கைகூடி விட்டதில் அவர் திக்குமுக்காடிப் போயிருந்தார்..

அவரது சந்தோஷத்தில் கொஞ்சம்கூடப் பாதிக்கப் படாதவளாக அவரை வெறுமையுடன் பார்த்தாள் பவித்ரா...

"என்னம்மா இப்படிப் பார்க்கிற? தினகரன் வந்திருக்கிறான்ம்மா..."

"அப்படியா..?"

உயிரில்லாத வார்த்தையை உதிர்த்த மகளைக் கவலையுடன் பார்த்தார் வாசவன்.. 'வெண்ணெய் திரள்கையில் தாழி உடைந்துவிடுமோ..'

"ஏம்மா.. நான் என்ன சொல்கிறேன்னு காதில் வாங்கிட்டுத்தான் பேசறயா.. தினகரன் வந்திருக்கிறான்னு சொன்னேன்ம்மா..."

"வரட்டுமேப்பா.."

"ஏம்மா.. புத்தியோடதான் பேசுகிறாயா..? கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பெண்ணைக் கொடுப்பதை உன் பெரியப்பா லட்சியமா வைத்திருந்தார். அவர் நினைத்தது நடக்கலை. நான் நினைத்தது நடந்திருக்கு.. எனக்கு அது கை கூடி வந்திருக்கு.. அதிர்ஷ்டக் காற்று நம் பக்கம் அடிச்சிருச்சுன்னு நானே ஆனந்தத்தில் ஓடிவரேன்.. நீ என்னவோ இது சாதாரண விஷயம் போல அப்படியான்னு கேட்டு வைக்கறியே.. வந்திருக்கிறது தினகரன்ம்மா.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் இளைய வாரிசு.."

"அதுக்கு என்னை என்னப்பா செய்யச் சொல்கிறீங்க.."

வாசவனின் முகம் கடுமையாக மாறியது.. அவர் மகளின் முகத்தை உறுத்துப் பார்த்தார்..

"என்னம்மா பழக்கம் இது..? பெரியவர்களின் வார்த்தையை மதிக்காமல் இருக்க எங்கு கற்றுக் கொண்டாய்..?"

"அப்பா.."

"ஒன்றை நினைவில் வைத்துக் கொள் பவித்ரா.. நான் உனக்கு அப்பான்னு சொல்லிக் கொள்வதை விட தினகரனுக்கு மாமனார்னு சொல்லிக்கத்தான் ஆசைப்படுகிறேன்.. அதுதான் எனக்குப் பெருமையும்கூட.. தினகரன் நம் வீட்டிற்கு வந்திருக்கிறான்.. வாங்கன்னு வரவேற்றால்.. பவித்ரா எங்கே மாமா.. நான் அவளைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்னு உரிமையோடு கேட்கிறான்.. இது எனக்கு எதிர்பாராமல் கிடைத்திருக்கும் சந்தோஷம். இது நிலைக்கணும்.. சொல்லிட்டேன்.."

அவர் படபடத்துக் கொண்டிருக்கும்போதே.. தினகரன் அங்கே வந்துவிட்டான்... அவசரமாக எழுந்து நின்ற பவித்ராவை அவன் காதலுடன் பார்க்க.. அவனது பார்வையை வாசவன் திருப்தியுடன் பார்த்தார்..

116

**நீ கிடைத்தபின்னும் கிடைக்காததைப்போல..**

**என் நெஞ்சகமே தவிப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

தினகரன், வாசவன் வீட்டிற்கு வருவதே அபூர்வம்.. அப்படி வந்தவன் ஹாலில் உள்ள சோபாவில் மிதப்பாக அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டு குசலம் விசாரிக்காமல் வீட்டின் பின்பக்க முற்றத்திற்கே வந்து விட்டதைக் கண்டு உள்ளம் குளிர்ந்து போனார் வாசவன்..

"ஹி.. ஹி.. நான் சொல்லலையா பவிம்மா.. மாப்பிள்ளை வந்தவுடன் உன்னைத்தான் தேடினாருன்னு.."

தினகரன் காதலுடன் பவித்ராவைப் பார்த்து.. அவள் கண்களில் பதிலுக்கு காதலைத் தேடி எதிர்பார்ப்புடன் நிற்கையில்.. பவித்ரா தனது பார்வையை விலக்கிக் கொண்டாள். அவன் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. நெற்றி சுருங்கியது. புருவங்கள் முடிச்சிட.. அவள் முகத்தைப் பார்த்தான். எப்போது அவனைக் கண்டாலும்.. அவள் முகத்தில் தோன்றி நிற்கும் நாணம் அன்று இல்லை. மாறாக சஞ்சலம் இருந்தது. அவனைக் கண்டதும் அவளது உடலில் தோன்றும் நடுக்கமும் அன்று இல்லை. ஒரு சோர்வு தெரிந்தது.

"உடம்பு சரியில்லையா பவி.." என்றான் கவலையுடன்.

"அதெல்லாம் இல்லை மாப்பிள்ளை.." என்றார் வாசகன் அவசரமாக.

"சோர்ந்து தெரிகிறாயே.."

"மதியத் தூக்கம் இன்னும் போகவில்லை மாப்பிள்ளை."

"எனிதிங் ராங்?"

"நத்திங் ராங் மாப்பிள்ளை"

"நீங்கள்தான் பவித்ராவா?"

"ஹி.. ஹி.. அவளுக்காக நான் போசினேன் மாப்பிள்ளை.."

"ஏன்.. அவளுக்கு வாயில்லையா? அவள் பேச மாட்டாளா?"

"அது வந்து மாப்பிள்ளை..."

"மாமா.. நான் பவித்ராவுடன் தனியாகப் பேச வேண்டும்.."

"அதுக்கென்ன... தாராளமாகப் பேசுங்க. பவி.. மாப்பிள்ளையை மாடிக்கு கூப்பிட்டுக் கொண்டு போம்மா..."

"அதுக்குப் பதில் நீங்க உள்ளே போகிறீங்களா மாமா.."

"அப்படியா சொல்கிறீங்க மாப்பிள்ளை.." அப்போதும் போகாமல் வாசவன் தயங்கி நிற்க..

"அப்படித்தான் சொல்கிறேன்.." என்று கடுமையுடன் சொன்னான் தினகரன்.

ஊரில் உள்ள தெய்வங்களையெல்லாம் அழைத்து.. மகள்.. தினகரனிடம் ஒழுங்காகப் பேசித் தொலைக்க வேண்டும் என்று வேண்டியவாறு அங்கே இருந்து நகர மனமில்லாமல் நகர்ந்தார் வாசவன்.

தனிமையில் விடப்பட்ட பவித்ராவின் முகத்தையே கூர்ந்து பார்த்தான் தினகரன்.

'இப்படி ஒரு நாளுக்காகத்தானே இத்தனை நாளாய் தவமிருந்தேன்..' பவித்ராவின் கண்கள் கலங்கின.

'இதற்காகத்தானே மாலினியின் மனதை கூறு போட்டாய்?' என்று அவளது மனம் கேள்வி கேட்டது.

வாசவனின் கனவும் பவித்ராவின் கனவும் ஒன்று தான். ஆனால், நினைவுகளில் வேறுபட்டவை.

வாசவனின் கனவு.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தில் பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்பது.

பவித்ராவின் கனவோ தினகரனின் இதயத்தில் இடம் பிடிக்க வேண்டும் என்பது.

இன்று அவளின் கனவு பலித்துவிட்டது. ஆனால்.. அதற்கான சந்தோஷம்தான் அவள் மனதில் ஏற்படாமல் போய்விட்டது.

"என்ன விஷயம் பவித்ரா?" தினகரன் உரிமையுடன் வினவினான். அதற்கு முன் அவனிடம் சகஜமாகப் பேசிப் பழக்கமில்லாத பவித்ரா.. மெல்ல தலைநிமிர்ந்து அவன் விழிகளைப் பார்த்தாள்.

உயிர்ப்பில்லாத அந்தப் பார்வையைக் கண்டதும் அவன் துணுக்குற்றான்.

"பவித்ரா.." என்றான் திகைப்பாக.

"ம்ம்ம்.."

"ஏன் இப்படி இருக்கிறாய்?"

"எப்படி இருக்கிறேன்?"

"எதையோ பறிகொடுத்தவளைப் போல இருக்கிறாய்.."

'பறிகொடுத்தவளைப் போல....'

அந்த வார்த்தையைக் கேட்டதும் மீண்டும் கண்கலங்கினாள் பவித்ரா.

"பறிகொடுத்துவிட்டுத்தான் நிற்கிறேன்.." உடைந்த குரலில் கூறினாள்.

தினகரனுக்கு அவள் ஏன் இந்த அளவுக்கு துக்கப்படுகிறாள் என்று புரியவில்லை. அவனுடைய காதலுக்காக ஏங்கியவளுக்கு அவனது காதல்தான் கிடைத்துவிட்டதே.. இன்னும் எதற்காக இந்தத் துக்கம்?

"எனக்காக ஏங்கினாய்.."

"ம்ம்ம்.."

"நான்தான் உனக்கு கிடைத்து விட்டேனே.."

"ஆனால்.. இதற்கு பணயமாக.. கிடைப்பதற்கரிய ஒரு நட்பை இழந்துவிட்டேனே.."

"என்ன சொல்கிறாய்.. எனக்கொன்றும் புரியவில்லை.."

"புரியாது அத்தான்.. உங்களுக்கு ஒன்றும் புரியாது. அது புரியும்போது என்னை நீங்கள் வெறுத்து விடுவீர்கள்.."

"முட்டாள்.. இதுதான் உனது பயமா.. உன் கலக்கத்திற்கு இதுதான் காரணமா? நீ தேவதை பவித்ரா.. உன்னைப் போய் நான் வெறுப்பதா?"

"உண்மை தெரியும்போது.. தேவதையாக உங்கள் கண்களுக்கு இப்போது தெரிபவள்.. பிசாசாக தெரிவேன் அத்தான்.."

"நீயே உன்னைக் குறைவாய் பேசாதே.. என்ன நடந்ததுன்னு சொல்லு.."

பவித்ரா சொன்னாள்.. ஒளிவுமறைவின்றி அனைத்தையும் சொன்னாள்.

"உங்கள் மேலிருந்த காதல் எனக்குள் பொறாமையைத் தூண்டிவிட்டு விட்டது அத்தான். நான் மாலினியை சந்தேகப்பட்டு விட்டேன். அதையும் பெரியத்தானிடம் போய் கேட்டுவிட்டேன்.."

"பெரியண்ணனிடம் கேட்டாயா.. சே.. என்ன பெண் நீ... மாலினி என் அண்ணி... எனக்குத்தான் அது தெரியாது. உனக்குமா அது தெரியாது?"

"தெரியும்.. அதை ஏன் அவள் உங்களிடம் தெரியப்படுத்தவில்லை என்று பெரியத்தானிடம் கேட்டுவிட்டேன்.."

"இவ்வளவு பேசுகிறவள்.. நீ வந்து என்னிடம் சொல்லியிருக்க வேண்டியதுதானே.. உனக்கென்ன வாயில்லையா.. உன் காதலைச் சொல்லத்தான் உனக்கு தைரியம் பத்தாது.. மாலினியின் காதலைப் பற்றிச் சொல்லவுமா தைரியம் பத்தாது?"

"அதைச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் விட்டுவிட்டு அவள் மேல் பழியைப் போட்டு விட்டேன்.."

தினகரன் யோசனையுடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். பவித்ரா நீதிபதியின் முன் தீர்ப்பை

எதிர்பார்த்து காத்திருக்கும் குற்றவாளி போல தலைகுனிந்து நின்றாள்.

தினகரனிடம் நடை நின்றது. அவன் அவள் முகத்தைப் பார்த்தான். எப்போதும் பார்க்கும் பவித்ராவின் முகமாக அது அப்போது இல்லை. பவித்ராவின் முகம் தினகரனுக்கு அன்றுதான் மலர்ந்த பூவை நினைவுபடுத்தும். இன்றோ வாடிய பூவாக கண்கலங்கி நின்றாள் அவள்.

'இப்படியே இவளை மறுகவிட்டால்.. சருகாகி விடுவாள்..' தினகரனின் மனம் அவள் மேல் இரக்கம் கொண்டது.

"உன் மீது தவறில்லைன்னு என்னால் சொல்ல முடியாது பவித்ரா... நீ அந்தக் காரியங்களைச் செய்திருக்கக் கூடாது..."

"ம்ம்ம்.."

"காதலிக்கத் தெரிந்தவளுக்கு அதை வெளிப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு.. அடுத்தவர்களை அந்தக் காரியத்தில் ஈடுபடுத்தியிருக்கக் கூடாது.."

"ம்ம்ம்.."

"ஈடுபடுத்தியவள் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். உதவி செய்ய வந்தவங்களின் மேல் சந்தேகப்பட்டிருக்கூடாது.."

"ம்ம்ம்.."

"சந்தேகத்தை மனதில் புதைத்துக் கொண்டு விலகிப் போயிருந்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கக் கூடாது. தேவதைகள் பழிவாங்க மாட்டார்கள்.."

இதுவரை அவன் பேசியதை பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த பவித்ரா இதைக் கேட்டதும்.. கசப்புடன்

சிரித்தாள்.

"நான் தேவதையில்லை அத்தான்.."

"தேவதையாகத்தான் இருந்தாய். என்னைப் போல ஒருவனை காதலித்து தொலைத்துவிட்டதால் இந்த நிலைமை உனக்கு வந்துவிட்டது. இல்லாவிட்டால் நீ தேவதையாகத்தான் இருந்திருப்பாய்..."

"என்னை உயர்வாக பேச வேண்டாம் அத்தான். அந்தத் தகுதி எனக்கில்லை. நான் தேவதையில்லை. ராட்சஸி..."

"எனக்கு என்றுமே நீ தேவதைப் பெண்தான். வருத்தப்படாதே. செய்துவிட்ட காரியத்தை ஒளிவுமறை-வில்லாமல் என்னிடம் சொன்னாயே.. அப்போதே நீ உயர்ந்து விட்டாய்.."

"அத்தான்.."

"மற்றவங்க உன்னைச் சுயநலமானவள்னு நினைக்கலாம்.. நான் நினைக்கமாட்டேன். காதல் பொதுநலம் பார்க்காது. சுயநலம் மட்டும்தான் பார்க்கும். அப்படிப் பார்க்கலைன்னா அது காதல் இல்லை..."

இப்போது பவித்ரா விசும்பி அழ ஆரம்பித்தாள். தினகரன் ஆதரவாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவனது காலடி நிழல் கிடைக்குமா என்று ஏங்கியவளுக்கு.. அவனது அன்பான அணைப்பே கிடைத்து விட்டது.

பசித்த வயிறுக்கு பழைய சோறே அமிர்தம்.. இங்கே தேவாமிர்தமே கிடைத்தும் அதை அள்ளிப் பருக முடியாத வறியவளாக பவித்ரா ஆகிப் போனாள்.

"அழாதேம்மா.. நீ நினைத்திருந்தால் இதையெல்லாம் என்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கலாம்.. பெரியண்ணா எந்தக் காலத்திலும் தம்பியின் மனைவியாக வரப் போகிறவளைப் பற்றி தம்பியிடம் குறைவாகப் பேசும் வேலையைச் செய்ய மாட்டார். மாலினி அண்ணியும் அன்றைக்கும் சரி.. அடுத்து வந்த நாள்களிலும் சரி.. நீ

சொன்னவைகளைப் பற்றி ஒரு வார்த்தைக்கூடச் சொல்லவில்லை.."

"அவள் சொல்லமாட்டாள்.. நட்புக்கான தர்மத்தை அவள் காப்பாற்றினாள். நான் காப்பாற்றவில்லை. காட்டிக்கொடுக்காதது நட்பு. அப்படிப்பட்ட உயர்ந்த நட்பை அவள் எனக்குக் கொடுத்தாள். நான்தான் அதைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளாமல் கைநழுவ விட்டு விட்டேன்.."

"இதுக்கு என்ன சொல்வதுன்னே எனக்குத் தெரியவில்லை பவித்ரா.."

"நீங்க என்ன சொல்ல முடியும்..? அவள் என் காதலைப் பற்றி உங்களிடம் சொல்லவில்லைன்னு குற்றம் சொன்னேனே.. நான் அவளைச் சொல்லச் சொல்லயிருந்தால்.. அவள் கட்டாயம் சொல்லியிருப்பாள். நான் அதைச் சொல்லவில்லை. கடிதத்தை கொடுக்கும் போது ஸ்வேதா கூட இருந்தாளாமே..."

"யெஸ்.. மாலினியண்ணி என்னிடம் கடிதத்தை கொடுத்துவிட்டுப் பேச ஆரம்பிச்சாங்க. கரெக்டா அந்த வினாடியில் ஸ்வேதா அங்கே ஆஜராகிவிட்டாள். அது தான் எப்படின்னு எனக்குப் புரியவே இல்லை.."

"அவளையெல்லாம் புரிந்துகொள்ளணும்னு நமக்கு அவசியமில்லை.."

"யூ ஆர் கரெக்ட்.. கழுகுக்கு மூக்கு வியர்த்ததைப் போல வந்த நிற்கிறாளேன்னு நினைத்துக்கிட்டே கடிதத்தை வாங்கிக்கிட்டேன். பேச ஆரம்பித்த அண்ணியும்.. கடிதத்தைப் படிச்சுப் பாருங்க. புரியும்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க.."

அன்று இரவு தோட்டத்தில் மாலினியை வார்த்தைக்கு வார்த்தை கண்ணம்மா என்று அழைத்து வைத்தவன்.. இன்று மரியாதையுடன் 'அண்ணி..' என்று கூறுவதை வியப்புடன் கவனித்தாள் பவித்ரா.

எல்லோரும் உண்மையைத் தெரிந்துகொண்டவுடன் உடனடியாக மாறிவிட்டார்கள். அவரவர்களின் நிலைக்கு திரும்பி விட்டார்கள்.

அவளால்தான் அது முடியவில்லை. திரும்பி வர முடியாத ஒருவழிப் பாதையில் பயணித்து விட்டாள்.

'கண்ணம்மா' என்று அழைத்த தினகரனால் மாலினியை 'அண்ணி' என்று அழைத்து மரியாதை காட்ட முடியும்.

ஆனால்.. அந்தக் கோட்டையூர் ஜமீன் குடும்பத்தின் ஆணிவேராகவும் அஸ்திவாரமாகவும் இருக்கும் அந்தக் குடும்பத்தின் தலைவனான பிரபாகரனை இனி பவித்ராவினால் முகம் நிமிர்ந்து பார்க்க முடியுமா?

பழையபடி அவனிடம்.. 'பெரியத்தான்' என்று அழைத்து உரிமையுடன் பேசத்தான் முடியுமா?

ஆலமரம் போல அந்தக் குடும்பத்திற்கு நிழல் கொடுத்துக் கொண்டிருப்பவன் அவன்.

அவனது தம்பிக்கு மனைவியாக.. அந்த நிழலில் இளைப்பாற பவித்ராவினால் இனி முடியுமா?

அவனது மனைவியாக வரப் போகிறவளைப் பற்றி பவித்ரா பேசிய வார்த்தைகளை ஆயுளுக்கும் பிரபாகரன் மன்னிக்க மாட்டான். மறக்கவும் மாட்டான்.

அந்த நெருடலோடு அவனது குடும்பத்தில் மருமகளாக பவித்ரா வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று.

மாலினியின் நட்பு.. இனி ஒரு நாளும் பவித்ராவிற்கு திரும்பிக் கிடைக்கப் போவதில்லை. அதைப்போல பிரபாகரனின் பாசமும் அவளுக்குக் கிடைக்கப் போவதில்லை.

## 117

## எல்லோரும் சிரித்திருக்க...

நான்மட்டும் அழும் நிலையை...

என்னவென்று நான் சொல்ல?

கிடைப்பதற்கரிய நட்பையும் பாசத்தையும் தொலைத்துவிட்டதைப் பவித்ரா உணர்ந்தாள். இந்த உலகில் எவ்வளவுதான் தேடினாலும் கிடைக்காதது உண்மையான அன்பும் பாசமும் நட்பும். அவை அனைத்தும் பிரபாகரனிடமிருந்தும் மாலினியிடமிருந்தும் அவளுக்குக் கிடைத்தன. அதை அவளே உடைத்து சுக்கு நூறாக்கி விட்டாள். இனி அதை நினைத்துப் பயன் என்ன இருக்கப்போகிறது.?

அன்போ.. நட்போ.. பாசமோ தானாக கிடைக்க வேண்டிய ஒன்றல்லவா? அதை வேண்டிப் பெற முடியுமா? இயல்பாக மனதில் சுரக்கவேண்டிய இந்த உணர்வுகளை இரந்து பெற முடியுமா?

பவித்ரா மனம் குமுறினாள். நந்தவனத்து ஆண்டியைப் பற்றிய பாடலை.. சிறுவயதில் அவள் படித்திருக்கிறாளே.. இருந்தும் ஏன் அதை மறந்து தொலைத்தாள்..

'நந்தவனத்தில் ஒரு ஆண்டி - அவன்

நாலாறு மாதமாய் குயவனை வேண்டி...

கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி....'

பவித்ராவின் நிலையும் அந்த ஆண்டியின் நிலையும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்றுதான். பவித்ரா ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

"ஏன் இப்படி உன்னையே வருத்திக்கற பவித்ரா?"

"என்னால் முடியவில்லை அத்தான்.."

"எது முடியவில்லை.. என்னைக் காதலிக்க முடியவில்லையா?"

தினகரனின் கேள்வியைக் கேட்டதும் சட்டென்று விழியுயர்த்தி அவனது பார்வையோடு தன் பார்வையைக் கலந்தாள் பவித்ரா.

அடிபட்ட பறவையின் வேதனையும் எல்லையில்லாத காதலையும் ஒருசேர அந்தப் பார்வையில் கண்ட தினகரன், மனம் தாளாமல் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

மனம் நிறைந்திருந்தவனின் மார்பில் முகம் புதைத்திருந்தும் பவித்ராவிற்கு எதிர்பார்த்த மன அமைதி கிட்டவில்லை. அதை உணர்ந்தவனாக தினகரன் அவளது காதோரம் கூறினான்..

"மறந்துவிடு பவித்ரா.. எல்லாத்தையும் மறந்து விடு.."

"முடியவில்லையே அத்தான்.."

"உன் வார்த்தைகளால் எந்தவிதப் பாதிப்பும் வரவில்லை பவித்ரா.."

"ஒரு வேளை வந்திருந்தால்.. மாலினி ரோஷக்காரி யென்பதை உடனடியாக நிரூபித்தாளே அத்தான்.. வேலையை ரிஸைன் பண்ணிவிட்டு பெரியத்தானிடம் சொல்லிக்காம மார்த்தாண்டத்தை விட்டுப் போய் விட்டாளே.."

"உனக்குப் பெரியண்ணனைப் பற்றித் தெரியாது. இந்த உலகத்தின் எந்த மூலைக்கு அண்ணி சென்றிருந்தாலும் தேடிப் பிடித்து அவங்களை சிறையெடுத்துக்கிட்டு வராம விடமாட்டார்.."

"ஒருவேளை பெரியத்தான் அப்படிச் செய்யாமல் விட்டிருந்தால்? நான் அவரிடம் கேட்ட வார்த்தைகளை நீங்கள் கேட்கவில்லை. அந்த வார்த்தைகளின் தன்மை அப்படிப்பட்டது. அதில் ஒரு நியாயம் இருப்பதாக அவர் நினைத்திருந்தால்?"

"அப்படித்தான் எதுவும் நடக்கவில்லையே.."

"ஒருவேளை நடந்திருந்தால்?"

"இப்படி.. ஒரு வேளை.. ஒரு வேளைன்னு நடக்காத வைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது புத்திசாலித் தனமில்லை பவித்ரா.."

"நான் புத்திசாலியில்லை அத்தான்.. முட்டாள்.."

"அதுதான் எனக்குத் தெரியுமே. எந்தப் புத்திசாலியாவது ஸ்வேதாவின் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்வாளா?"

"ச்சு.. நானாவது.. அவள் வார்த்தைகளைக் கேட்டுக் கொள்வதாவது. நான் என்றைக்குமே அவளை நம்பியதில்லை அத்தான்.."

"அன்றைக்கு மட்டும் ஏன் அவளை நம்பினாய்?"

"அவளை யார் நம்பியது..? எனக்குத்தான் உங்களைத் தெரியுமே..."

"என்ன தெரியும்?"

"மாலினியின் மேல் உங்களுக்கு ஒரு மயக்கம் இருந்ததைப் பற்றித் தெரியும்..."

இதைக் கேட்டதும் தினகரன் சங்கடமுற்றான். அதை இல்லையென்று மறுக்க அவனால் முடியவில்லை.

"பவித்ரா.. மாலினி எனக்குப் பெரியண்ணி.."

"இப்போதுதான் அந்த உறவுமுறை... இதுக்கு முன்னால்?"

"போனதை விட்டுவிடேன்.. ப்ளீஸ்..."

"விட்டுவிடத்தான் நினைக்கிறேன் அத்தான். மாலினியை மனதார நீங்க அண்ணியென்று சொன்ன பின்னால் நான் இதைப் பேசக்கூடாது.. பேசவும் மாட்டேன்."

"அப்பாடி.. காப்பாத்திட்ட பவி.."

"ஆனால்..."

"இன்னும் என்ன ஆனால்னு ராகம் போட்டு என்னைக் கலவரப்படுத்தறியே பவித்ரா.."

"என் கண்ணார உங்களின் மயக்கத்தைக் கண்ட பின்னால்.. ஸ்வேதாவின் வார்த்தைகளை அலட்சியம் செய்ய என்னால் முடியவில்லை.."

"உனக்கு இது ஒரு சாக்கு.."

"நிச்சயமாக இல்லை.. நான் என் காதலைச் சொல்லத் தான் தோட்டத்தில் உங்களைத் தேடி வந்தேன். நீங்க பக்கத்தில் நிற்கும் என்னை விட்டுவிட்டு பால்கனியில் நின்றுகொண்டிருந்த மாலினிக்கு கையாட்டினீங்க..."

"ஏய்ய்... அதையெல்லாமா நினைவில் வச்சிருக்க?"

"அது மட்டும்தானா.. மாடி ஹாலில் என்னிடம் சுவரஸ்யமாக பேசிக்கிட்டு இருந்தவர்.. மாலினி வந்தவுடன் என்னை அம்போன்னு விட்டுவிட்டு அவளுடன் பேச ஆரம்பித்தீங்க..."

"என்ன பவித்ரா இது..."

"இன்னும் இருக்கு அத்தான்.. திருவனந்தபுரம் போயிருந்தப்போ.. கோவளம் பீச்சில்.. என்னை மறந்து விட்டு வெள்ளைக்காரிக பின்னால் ஜொள்ளு விட்டுக்கிட்டு போய்விட்டீங்க.."

"அது ஒரு குற்றமா பவி..? இது வாலிப வயசு..."

"ஓஹோ.. அப்படிப்பட்ட வெள்ளைக்காரிக பக்கத்தில் இருக்கும்போதே மாலினியின் குரலைக் கேட்டதும் அவங்களை மறந்துட்டு மாலினிகூடப் பேச ஓடிவந்தீங்க..."

"இருந்தாலும் உனக்கு இவ்வளவு ஞாபகசக்தி இருக்கக்கூடாது பவித்ரா. எனக்கு பெண்டாட்டியாக ஆகப்போகிறவளுக்கு இவ்வளவு புத்திசாலித்தனமும் ஞாபக சக்தியும் இருக்கக் கூடாதே... அது தப்பாச்சே..."

"இதிலிருந்து எனக்கொரு விஷயம் மட்டும் தெளிவாகப் புரிந்தது அத்தான்.."

"இது வேறயா.. நீ கலங்கியிருக்கிற நிலைமையிலேயே என்னைக் கலங்கடிக்கிறவ... இதில தெளிவாக வேறு புரிந்து வைத்தால் என் கதி என்ன ஆவது? இது எங்கே போய் முடியப் போகுதோ..."

"உங்கள் மனதிலிருந்து என்னை மறக்க வைக்கிற சக்தி வேறு எந்த அழகான பெண்ணுக்கும் உண்டு. ஆனால்.. எந்தவொரு அழகான பெண்ணையும் மறக்க வைக்கிற சக்தி மாலினியிடம் மட்டும்தான் உண்டு.."

"ஸ்டாப் இட் பவித்ரா.. அவங்க இப்ப என் அண்ணி.."

"நான் நேற்றுக் கதையைப் பேசினேன்.."

"நேற்றிலேயே நீ இருப்பது நல்லதல்ல.."

"நிச்சயமாய்.. நான் பெரியத்தானிடம் கோபப்பட்டதற்கான காரணத்தைச் சொன்னேன்.."

"நீ என்னிடம்தானே கோபப்பட்டிருக்கணும்.. நான் தானே தவறு செய்வதன்? அதை விட்டுவிட்டு ஒரு பாவமும் அறியாத என் பெரிய அண்ணனிடமும் அண்ணியிடமும் ஏன் கோபப்பட்டாய்?"

"உங்களைத்தான் காதலித்து தொலைத்து விட்டேனே.."

"அந்த உரிமை என்மேல் உனக்கிருந்துச்சில்ல.. அப்புறமும் ஏன் அவங்களிடம் கேள்வி கேட்டாய்?"

பவித்ரா மௌனமானாள். எரிச்சலடைந்திருந்த தினகரன்.. மெல்ல கோபம் தணிந்தான். பவித்ராவின் முகத்தைப் பார்த்தான். அவன் மனம் கனிந்தது.

இதுவரை அவனிடம் பெண்கள் மயக்கத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள். காதலைச் சொல்லவில்லை. முதன்முறையாக அவனை உயிருக்குயிராய் காதலித்த ஒரு பெண்ணை அவன் சந்தித்து இருக்கிறான். அவளின் மனம் நோவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை.

"ஏய்ய்.. இங்கே வா.."

அவன் கரம் நீட்டி அழைக்க.. அவள் பூக்குவியலாக அவனது கைக்குள் புகுந்து கொண்டாள்.

"என்னைப் பார்.."

பார்த்தாள்.

"நான் சொல்வதைக் கேள். ஒரு வார்த்தை... நீ உன் காதலைப் பற்றி என்னிடம் சொல்லியிருந்தால் இது நடந்திருக்காது. நீ சொல்லவில்லை. அதனால் நான் வழக்கம் போல ஜொள்ளு விட்டு விட்டேன்.."

பவித்ரா மனச்சிணுங்கலுடன் கண் மூடிக்கொண்டாள்.

"நடந்ததை மறந்து விடு.. பெரியண்ணனுக்காக மாலினியைப் பெண் கேட்க இந்த வாரம் நாங்க எல்லோரும் சென்னைக்குப் போகிறோம்.."

"நிஜமாகவா.."

பவித்ராவின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. அவளது தோழியின் காதல் ஜெயித்துவிட்டதில் அவளுக்கு எல்லையில்லாத சந்தோஷம் ஏற்பட்டது.

"நிஜமாகத்தான்.."

அவளது உண்மையான மகிழ்ச்சியைக் கண்ட மனநிறைவில் தினகரன் முதன்முதலாக பவித்ராவின் நெற்றியில் முத்தமிட்டான்.

அதை எதிர்பார்த்திராத பவித்ரா, உடல் நடுங்கிப் போனாள். நிற்கச் சக்தியில்லாமல் ஒரு கொடியைப் போல தொய்ந்து தினகரனின் மேல் சாய்ந்தாள்.

அதுவரை உணராத ஓர் இன்ப உணர்வை தினகரன் அன்று உணர்ந்தான். அவன் பெண்களை அறியாதவன் அல்ல.. ஆனால், காதல் கொண்ட பெண்ணை அவன் அறிந்ததில்லை.

அன்றுதான் அப்படிப்பட்ட அற்புத உணர்வை அவன் அறிந்தான். கொடியாகி தன்மேல் படர்ந்திருந்தவளின் கன்னத்தில் முத்தமிட்டு காதோரமாக அவன் பேசினான்.

"அண்ணனின் கல்யாணம் முடிந்தவுடன் நம் கல்யாணம்தான் பவித்ரா..."

அதுவரை கிறங்கிப் போனவளாக அவளது கைப்பிடியில் அடங்கியிருந்த பவித்ரா.. அவனிடமிருந்து விலக முயன்றாள்.

"ஏன் பவித்ரா?"

"வேண்டாம்.."

அவனுக்குள் கோபம் கனன்றது.. கண்கள் இடுங்க அவளைப் பார்த்தான்.

"எது வேண்டாம்.. நான் உனக்கு வேண்டாமா?"

"கல்யாணம் வேண்டாம்.."

தினகரனுக்கு கோபம் இன்னும் அதிகமாகியது.

"என்னோடு உனக்குக் கல்யாணம் வேண்டாமா?"

"வேண்டாம்.."

"பின்னே எவனைக் கட்டிக் கொள்ளப் போகிற?"

"கல்யாணமே எனக்கு வேண்டாம் அத்தான்.."

"முட்டாளாடி நீ.. கல்யாணம் பண்ணிக்காம நீ இருந்துவிட முடியுமா?"

"நான் இருப்பேன்.. எனக்கு உங்க காதல் போதும். கல்யாணம் வேண்டாம்.."

"அடிவாங்கப் போகிற... இதுக்கு அர்த்தம் என்னன்னு தெரியுமா?"

"தெரியும்.."

"தெரிந்துமா சொல்கிற?"

"ஆமாம்.."

"உன்னை என்ன செய்வதுன்னே எனக்குத் தெரியலை பவி. சரி.. உனக்கு கல்யாணம் வேண்டாம். நானும் உன்னைப்

போல இருந்துவிட முடியுமா? என் வீட்டில் அதுக்கு விட மாட்டாங்களே..."

"நீங்க கல்யாணம் செய்துக்கங்க.."

"யாரைக் கல்யாணம் பண்ணிக்க?"

"இந்த உலகத்தில் பவித்ரா மட்டும்தான் பெண்ணுன்னு இல்லை. கோடிக்ணக்கில் பெண்கள் இருக்கிறாங்க.."

"அப்படியா.. இன்னொருத்தியைக் கட்டிக்கிட்டு நான் குடும்பம் நடத்தவா?"

"ம்ம்ம்.."

"நீ அதைத் தாங்கிக் கொள்வாயா?"

பவித்ரா பதில் பேசவில்லை.. அவள் முகம் கூம்பி விட்டது. தினகரன் அவளை மேலும் சீண்டினான்.

"அப்ப.. நீ என்னைக் காதலிக்க மாட்டாயா?"

"காதலிப்பேன்..."

"நானும் உன்னைக் காதலிக்க நினைத்தால்?"

"காதலிங்க..."

இப்படிச் சொன்னவளை ஆச்சரியத்துடன் பார்த்தான் தினகரன்.

118

**உன்னைக் கண்டவுடன் என் மனது..**

**ரகசியமாகப் பாடுவதையே...**

**என்னவென்று நான் சொல்ல..?**

"என்னடி சொல்கிற.. கல்யாணம் பண்ணிக்க மாட்ட.. ஆனால், காதலிக்க மட்டும் செய்வாயா?"

பவித்ரா பதில் சொல்லாமல் தினகரனின் கையை வளைத்துப் பிடித்து அவனது தோளில் மேல் சாய்ந்து கொண்டாள்.

அவளின் அந்தச் செய்கை தினகரனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் அவளது உச்சியில் இதழ் பதித்தான். அவனது மனம் அவளது காதலைக் கண்டு தளும்பியது.

"ஏண்டி.. காதலிக்கு மனைவிங்கிற பெயர் கிடைக்காது.."

"எனக்கு அது வேண்டாம்.."

"வேறு என்னதான் வேண்டும்?"

"நீங்க வேண்டும் அத்தான்.. நீங்க மட்டும்தான் வேண்டும்.."

பவித்ரா கண் மூடிக் கூறினாள். தினகரன் அவளது காதலில் கிறங்கிப் போனான்.

"நான் வேண்டும்னா.. அதுக்கு கல்யாணம் வேண்டும் பவித்ரா.."

"என்னால் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாது.."

"அதுதான் ஏன்.. என்னைப் பிடிக்கலையா?"

வேண்டுமென்றே தினகரன் கேட்டான். அவள் இமைக்காமல் அவனைப் பார்த்தாள்.

"இந்தப் பார்வைக்கொண்ணும் குறைச்சலில்லை.. காதலிப்பாளாம்.. கல்யாணம் மட்டும் வேண்டாமாம். நல்ல குடும்பத்தில் பிறந்த பொண்ணு இப்படிப் பேசலாமா.. என்னைப் பிடிக்கலை.. தெரியாத்தனமாய் காதல் கடிதம் கொடுத்து விட்டேன்னு சொல்கிறதா இருந்தால் சொல்லு. உன் அப்பாவிடம் பேசி.. என்னைவிட பெட்டராக உன் மனதிற்கு பிடித்த மாப்பிள்ளையாக நான் பார்க்கச் சொல்கிறேன்.."

"உங்களைத் தவிர வேறு யாரையும் எனக்குப் பிடிக்காது.."

தினகரனின் மனதில் தென்றல் அடித்தது. ஆனால் பவித்ராவின் மனதில் புயலடித்துக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.

"என்னதாண்டி உனக்குப் பிரச்னை?"

இதமாக வினவினான் தினகரன். கண்கலங்க முகத்தை திருப்பிக் கொண்டாள் பவித்ரா.

"எனக்கு நான்தான் பிரச்னை.. என் மனம்தான் பிரச்னை.."

"என்கிட்டக் கூடச் சொல்லமாட்டாயா?"

"உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன் அத்தான். ஒரு காலத்தில் நீங்க எனக்கு எட்டாக் கனியாக இருந்தீங்க.."

"இப்பத்தான் கிட்டத்துக் கனியாக வந்து விட்டேனே.. நீதான் சும்மா இருந்தவனைக் கிளப்பி விட்டுவிட்டு தள்ளிப்போகிறாய்.."

"இப்படி ஒரு நாள் வருமான்னு ஏங்கித் தவம் கிடந்தேன்.."

"தவத்திற்கு பலனைத் தரத்தான் நினைக்கிறேன். நீதான் அதை மறுக்கிறாயே.."

"உங்களுக்காக.. உங்களின் இந்தக் காதலுக்காகத் தானே நான் என் சிநேகிதியின் மனச்சிறகை ஒடித்தேன்?"

"பவித்ரா!"

தினகரன் அதிர்ச்சியுடன் அழைத்தான். அவள் சுற்றிச் சுற்றி எங்கே வருகிறாள் என்று அவனுக்குப் புரிந்துவிட்டது.

"ஆமாம் அத்தான்.. உங்களின் மேலிருக்கும் இந்த அதிகப்படியான காதல்தான் என்னை அப்படியொரு சிநேகிதத் துரோகத்தை செய்ய வைத்தது. மாலினியின் மனதை ஒடித்த இந்தக் காதலின் வெற்றி எனக்கு வேண்டாம்.."

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் திகைத்துப் போனான் தினகரன்.

"உங்களை அவள் பறித்துக் கொள்வாளோ என்கிற ஆங்காரம்தானே என்னை அப்படியொரு ராட்சஸத்தனமான கேள்விகளைக் கேட்கவைத்தது..? அப்படிப்பட்ட காதல் எனக்கு வேண்டாம்.."

"நான் என்ன செய்தேன் பவித்ரா..? எனக்கு எதற்கு இந்தத் தண்டனை?"

"தண்டனை உங்களுக்கு இல்லை அத்தான். எனக்குத்தான் தண்டனை கொடுத்துக் கொள்கிறேன்.. அவள் நல்லவள் அத்தான்.. மிகமிக நல்லவள். அவள் மேல் எப்படிப்பட்ட பழியைச் சுமத்தினேன்.. எதற்காக? உங்கள் மேல் நான் வைத்திருந்த வெறித்தனமான காதலுக்காக. அவள் மனதை பொசுக்கிவிட வைத்த இந்தக் காதல் எனக்கு வேண்டாம்.."

"நீ காதலை மறுக்கும்போது.. என்னையும் சேர்த்து மறுக்கிறாய் பவித்ரா. இது உனக்கு புரியவில்லையா?"

"தெரியும் அத்தான்.. தெரிந்தேதான் நான் இதைச் செய்கிறேன்.."

"மாலினியும் அண்ணனும் பிரிந்திருந்தால் நீ செய்வது சரி.. அவர்கள் சேர்ந்துவிட்ட பின்பு நீ இந்த முடிவை எடுப்பது சரியில்லை.. அவ்வளவுதான் நான் சொல்வேன்.."

"அவர்களின் காதல் ஜெயித்துவிட்டதற்கு அவர்களின் உண்மையான காதல்தான் காரணம். நான் காரணமில்லை. பிரித்து வைத்த நான்.. அவர்களைச் சேர்த்து வைக்க ஒரு துரும்பையாவது கிள்ளிப் போட்டேனா.. இல்லையே..."

"நீ அண்ணியிடமும் அண்ணனிடமும் மன்னிப்பு கேட்டுவிடு.."

"அப்படிக் கேட்டுவிட்டால் எல்லாம் சரியாகி விடுமா?"

"நீ வீண்பிடிவாதம் பிடிக்கிறாய்.."

"இல்லை.. காலத்திற்கும் அழியாத பழி புரூட்டஸிற்கு வந்து சேர்ந்தது. அவன் எதைச் சொல்லியிருந்தாலும்.. அவன் செய்த அந்த சிநேகிதத் துரோகத்திற்கு ஈடு கட்டியிருக்க முடியுமா? மற்றவர்கள் கத்தியால் குத்தியதில்தான் சீஸருக்கு வலி ஏற்பட்டது. புரூட்டஸை கத்தியுடன் பார்த்தபோதே அவன் உயிரை விட்டானே.. அது ஏன்? என் துரோகமும் அதைப் போலத்தான் அத்தான்.."

"பவித்ரா.. நீ இவ்வளவு நல்லவளாக இருந்து தொலைக்கக்கூடாது.."

"அதனால்தானே என்னை நம்பி.. எனக்காக கடிதத்தை எடுத்துக்கிட்டு உங்களிடம் மாலினி காதல் தூதாக வந்தாள். அவளுக்கு நான் பதிலுக்கு செய்த கைம்மாறு என்ன? அவளுடைய காதலனிடம் அவப்பெயர் வாங்கிக் கொடுத்ததுதானே?"

"நீ ஏதோ வேகத்தில் செய்துவிட்டாய்.."

"நீங்க எனக்காகப் பேசுகிறீங்க அத்தான். உங்க மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க.. என் காரியத்தை நீங்க மன்னித்து மறப்பீங்களா? உங்களால் அது முடியுமா?"

'எப்படி முடியும்?' தினகரன் மௌனம் சாதித்தான்.

மென்மையானவள் என்று அவன் நினைத்திருந்த பவித்ரா செய்துவிட்டிருந்த காரியம்.. அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

அவளே சொன்னதைப் போல ஒருவேளை பிரபாகரனும் மாலினியும் பவித்ரா செய்த அந்தக் காரியத்தால் பிரிந்து போயிருந்தால்.. தினகரன், பவித்ராவை சும்மா விட்டிருக்க மாட்டான். கொன்றே போட்டிருப்பான்.

பிரபாகரனின் மேல் அவன் வைத்திருந்த பாசம் அத்தகையது. நல்லவேளையாக பிரபாகரனும் மாலினியும் ஒன்றுசேர்ந்துவிட்டார்கள். மாலினியிடம் மனம் விட்டுப் பேசி.. தினகரன் மன்னிப்பையும் பெற்றுக் கொண்டுவிட்டான்.

அந்த ஒரு காரணத்தினாலேயே தினகரனால் அமைதியுடன் பேச முடிந்தது.

"சொல்லுங்க அத்தான்.. உங்களால் அது முடியுமா?"

"உண்மையைச் சொல்வது சில சமயம் கஷ்டமான விஷயம் பவித்ரா. நீ என்னைக் காதலிப்பவள். அதற்காகவாவது என்மேல் கருணை காட்டு.. இனியொரு தரம் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்காதே.."

பவித்ரா அதைக் கேட்டதும் கசப்புடன் சிரித்தாள்.

"விடை சொல்ல முடியாத கேள்விகள்.. கசப்பான உண்மைகள்னு.. இந்த வாழ்க்கைதான் நம் முன் எத்தனை சவால்களை வைக்கிறது. பார்த்தீங்களா அத்தான்.."

"நீ விரக்தியில் பேசுகிறாய்.."

"விரக்திதான். கடைசிவரை என் மனதில் இந்த உணர்வுதான் இருக்கும். காதல் உணர்வு பொசுங்கி விட்டது.."

பவித்ரா பொங்கி அழுதாள். மனம் தாங்காத தினகரன் அவளை மார்போடு சேர்த்துக் கொண்டான். அணை உடைந்த வெள்ளமாக அழுது முடித்தவள் அவனை விட்டு விலகி நின்றாள்.

"உள்ளே போகலாம்.. வாங்க அத்தான்.."

"ஏன்.. யாராவது தேடி வந்து விடுவாங்களோன்னு நினைக்கறியா?"

"ஊஹூம்.. என் வீட்டு ஆள்களாவது.. உங்களோடு பேசும்போது தொந்தரவு செய்ய வருவதாவது.."

"பின்னே எதற்கு உள்ளே போகணும்கிற? இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கலாமே.."

"வேண்டாம்.. அது என் மனதை பாதிக்கும்.."

"பாதித்தால்தான் என்ன?"

"என் முடிவில் நான் உறுதியாயிருக்கணும்னு நினைக்கிறேன்.."

"அதுக்காக பேசக்கூடக் கூடாதா?"

"என் மனசு அலைபாயும் அத்தான். இன்னும் கொஞ்ச நேரம் உங்க கூடவே இருக்கணும்னு ஆசைப்படும்.. அது நான் எடுத்திருக்கும் இந்த முடிவைப் பலவீனப்படுத்தும்.."

மனத்தை மறைக்காமல் அவள் பேசிய விதம் அவனைக் கவர்ந்தது. அவளின் துயரம்கூட ஒருவகையில் அவனை ஈர்த்தது. தான் செய்த தவறிற்கு தண்டனை கொடுத்துக் கொள்ளும் அவளது குணம் அவனை வசீகரித்தது. அவளை விட்டு விலகுவதைப் போல கஷ்டமான ஒன்று இந்த உலகத்தில் இல்லை என்று அவன் நினைத்தான்.

அதை வாய்விட்டு அவளிடம் அவனால் சொல்ல முடியவில்லை. கேட்கும் மனநிலையில்தான் அவள் இல்லையே.

'விட்டுப் பிடிக்கலாம்..' என்ற முடிவுடன் அவன் வீட்டிற்குள் செல்லத் திரும்பினான்.

பவித்ராவின் மனம் அடித்துக் கொண்டது. அவன் கிளம்பப் போவதை அவளால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

"கிளம்பிட்டீங்களா அத்தான்.."

"ம்ம்ம்.. நீதானே போகச் சொன்னாய்.."

"என் நிலைமையைப் பார்த்தீங்களா அத்தான். கடல் நீருக்கு மத்தியில் குடிநீரைத் தேடும் நிலைமைக்கு வந்து விட்டேனே.."

"சும்மா புலம்பாதேடி.. உன் பெரியப்பாவின் மகள் ஸ்வேதா.. எங்கள் வீட்டில் எத்தனை கலகம் பண்ணினான்னு உனக்குத் தெரியுமா? பொழுது விடிந்து பொழுது போகும் வரை அவளுக்கு இதே வேலைதாண்டி. உன்னைப் போல அவள் புலம்பிக்கிட்டா இருந்தா?"

"அவள் செய்த எதற்காவது மாலினி கலங்கியிருப்பாளா அத்தான்? பதிலுக்குப் பதில் பதிலடி கொடுத்துக்கிட்டே இருப்பாளே.. என்னிடம் மட்டும் ஏன் அத்தான் ஒரு வார்த்தைக்கூட கேட்கவில்லை..? ஏன் இப்படிச் செய்தாய் பவித்ரான்னு ஒரு கேள்வி.. ம்ஹூம்.. அவள் கேட்கவில்லையே.. வாய் திறந்து கேட்கவில்லையே.. அப்படிக் கேள்வி கேட்கக்கூட என்னிடம் பேச அவள் பிரியப்படலை அத்தான்."

தினகரன் வானத்தைப் பார்த்தான்.. கரும் மேகங்கள் சூழ்ந்திருந்தன.

"மழை வரும் போல.." என்றான்.

"இந்த ஊருக்கு வராது அத்தான்.." என்றாள் பவித்ரா.

"ஏன்?"

"இங்கேதான் நான் இருக்கிறேனே.. என்னைப் போல சிநேகிதத் துரோகி இருக்கும் ஊரில் மழை எப்படிப் பெய்யும்?"

அவளின் பேச்சைக் கேட்டு தினகரன் கவலையில் ஆழ்ந்தான். தாழ்வுமனப்பான்மையும் குற்ற உணர்வும் ஒன்றாகச் சேர்ந்து பவித்ராவை புதைகுழிக்குள் அமிழ்த்துவதைப் போல அமிழ்த்திக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

அவள் முழுவதும் அழிந்துவிடும் முன்னால் அவளைக் காப்பாற்றிவிட வேண்டும். ஆனால்.. எப்படி அதைச் செய்வது?

பவித்ராவின் முகத்தைப் பார்க்காமல் மளமளவென்று வீட்டுக்குள் சென்றான். வாசவன் வாயெல்லாம் பல்லாக..

"வாங்க மாப்பிள்ளை.. சாப்பிடலாம்.." என்று அழைத்தார்.

மறுக்க நினைத்தவனுக்கு ஒரு யோசனை உதயமாக..

"பவித்ராவை பரிமாறச் சொல்லுங்க மாமா.." என்றான்.

பழம் நழுவி பாலில் விழுந்து.. அதுவும் நழுவி வாய்க்குள் விழுந்ததைப் போன்ற மகிழ்ச்சிக்கு ஆளானார் வாசவன்.

"இதோ வரச் சொல்கிறேன். அதைவிட அவளுக்கு வேறு என்ன வேலை?" என்ற பின்பக்கம் பாய்ந்தோடினார்.

தினகரன் கை கழுவி விட்டு டைனிங் டேபிளில் அமர்ந்தான். சற்று நேரத்தில் வந்த பவித்ராவின் முகம்.. பலத்த வாக்குவாதத்திற்குப் பின்னால் தகப்பனாரிடம் அவளது மறுப்பு எடுபடாமல் வந்திருக்கிறாள் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

'எனக்குப் பரிமாற மறுத்தாயா..' தினகரனின் பார்வை அவளைக் குற்றம் சாட்டியது.

தலைகுனிந்தபடி அவள் பரிமாற ஆரம்பித்தாள்.. வாசவன் மெதுவாக தூண்டிலை வீசினார்.

"இப்படியே பிரம்மச்சாரியாய் எத்தனை நாள்தான் இருப்பீங்க மாப்பிள்ளை..."

"எனக்கு கல்யாணம் ஆகிற வரைக்கும் இருப்பேன் மாமா.." தினகரன் கிண்டலாகப் பதில் சொன்னான்.

"காலாகாலத்தில் அந்தக் கழுதையை பண்ணிப்புட வேண்டியதுதானே.." பிடி கிடைத்த மகிழ்ச்சியால் வாசவன் பேசினார்.

"கழுதையை எல்லாம் கல்யாணம் பண்ணிக் கொள்கிறதாக இல்லை மாமா.." அவனும் இடக்காக பதில் சொன்னான்..

அவனது பார்வை பவித்ராவின் மீது படிந்தது.

## 119

**எட்டாத உயரத்தில் நீயிருந்தபோதும்..**

**உன்னை எட்டிப் பிடித்துவிடத் துடிக்கும் மனதை...**

**என்னவென்று நான் சொல்ல?**

தினகரனின் பார்வையை உணர்ந்த பவித்ரா முகம் சிவந்தாள். வாசவன் தூண்டிலில் மீன் சிக்கிவிட்டதைப் புரிந்து கொண்டார். அவர் மனம் உற்சாகக் கூவல் கூவியது.

எத்தனை வருஷத்து கனவு இது?

"என்ன மாப்பிள்ளை இது.. உங்களைப் போய் கழுதையைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நான் சொல்லுவேனா?"

"வேறு யாரைப் பண்ணிக்கன்னு நீங்களே சொல்லுங்க.." தினகரன் சாவதானமாக பிரியாணியைக் காலி செய்தவாறு கூறினான்.

இந்தக் கேள்விக்காகத்தானே வாசவனும் காத்திருந்தார்.

"என்னைக் கேட்டால்.. நான் என்ன சொல்லுவேன்.. என் மகளைக் கட்டிக்கங்கன்னு சொல்லுவேன்.."

"நீங்க கொடுத்தால் கட்டிக் கொள்ள மாட்டேன்னா நான் சொல்கிறேன்?"

"மாப்பிள்ளை..."

வாசவன் ஆனந்தப் பிரமிப்பில் ஆழ்ந்துவிட்டார்.

"மாமா?" தினகரன் விநயமாக வினவினான்.

"நிஜமாகவா சொல்கிறீங்க?"

"பொய் சொல்லும் வழக்கம் எங்க கோட்டையூர் ஜமீனுக்கே கிடையாது மாமா.."

"இதை நீங்க சொல்லணுமா? உங்க பரம்பரையைப் பற்றி எனக்குத் தெரியாதா.. எப்பேர்ப்பட்ட பரம்பரை அது?"

"அந்த வீட்டுக்கு உங்க பெண் மருமகளா வரப் போகிறா.."

"சந்தோஷம் மாப்பிள்ளை.. ரொம்ப சந்தோஷம்.. எப்ப பொண்ணு கேட்டு வரப் போகிறன்னு என் தங்கச்சியிடம் பேசிவிடவா?"

"தாராளமாகப் பேசுங்க.. இப்ப இல்லை. என் பெரியண்ணன் கல்யாணத்துக்குப் பின்னால இதைப்

பற்றி அம்மாகிட்டப் பேசுங்க.."

"நல்லதாப் போச்சு.. நீங்களும் ஒரு வார்த்தை. இதைப் பற்றி உங்க அம்மாகிட்டப் பேசிடுங்க மாப்பிள்ளை.."

"இப்ப ஊருக்குப் போனவுடன் உடனடியாக அதைத்தானே செய்யப் போகிறேன். ஆனால் மாமா..." தினகரன் இழுக்க...

"என்ன மாப்பிள்ளை?" என்று திகிலோடு கேட்டார் வாசவன்..

'இவ்வளவு நேரமும் நல்லாத்தானே பேசிக்கிட்டு இருந்தான். கடைசி நேரத்தில் ஒரு இக்கன்னாவைப் போடுகிறானே...' வாசவன் மனதிற்குள் பதறினார்.

"உங்க பொண்ணுதான் பிடி கொடுத்து பேச மாட்டேன்கிறா.." தினகரன் போட்டுக் கொடுத்தான்.

வாசவன் பல்லை நறநறவென்று கடித்தபடி மகளைப் பார்த்தார்.

"அது வேற ஒண்ணுமில்லை மாப்பிள்ளை.. செல்லம் அதிகமா கொடுத்துவிட்டேன். அதுதான் பெத்தவங்க பேச்சை மீறச் சொல்லுது.."

"கூடாதே.. நம்ம குடும்பத்தில் இப்படி இருக்கக் கூடாதே.."

"அதையெல்லாம்.. நான் பார்த்துக்கிறேன் மாப்பிள்ளை.. எங்கிட்ட விஷயத்தை சொல்லிட்டீங்கல்ல.. இனி இந்த விஷயம் என் பொறுப்பு.."

வாசவன் உத்தரவாதம் கொடுக்க.. தினகரன் அவர் அறியாமல் பவித்ராவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவள் மனதுக்குள் மத்தாப்பூ பொரிய... தன்னைத் தானே அதட்டிக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தினகரன் கை கழுவப் போகும்போது பின்னாலேயே துண்டை எடுத்துக் கொண்டு போகச் சொல்லி வாசவன் வற்புறுத்த.. வேறுவழியின்றி பின்தொடர்ந்தாள்.

"சோதிக்கிறீங்களா அத்தான்?" துண்டை நீட்டியபடி கேட்டாள்.

"இதை சோதனைன்னு ஏன் நினைக்கிற.. நான் சாதிக்கிறேன்னு நினைக்க வேண்டியதுதானே.." அமர்த்தலான குரலில் சொல்லியபடி துண்டை வாங்கி கையைத் துடைத்துக் கொண்டான் தினகரன்.

"நினைத்ததை சாதிக்க நினைக்கறீங்களா?"

"நீ நினைத்ததை நான் சாதிக்க நினைக்கிறேன்.."

"நான்தானே உங்களைக் காதலித்தேன்?"

"அது கூட உனக்கு நினைப்பில் இருக்கா?"

"நீங்க என்னைக் காதலிக்கலை.. அதுவும் என் நினைப்பில் இருக்கு..."

"இப்பக் காதலிக்கிறேனேடி.."

"காலங்கடந்த காதல். இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம்?"

"எனக்குப் பிரயோஜனம்.."

"ஏன் அத்தான்.. உங்க அழகுக்கும் அந்தஸ்துக்கும் எத்தனை பெண்கள் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க வரிசையில் வருவாங்க தெரியுமா?"

"எனக்கு ஊரில் உள்ள பெண்கள் வேண்டாம். நீ ஒருத்தி மட்டுமே போதும்.."

இதைப் பேசுவது தினகரன்தானா என்று இருந்தது பவித்ராவிற்கு. அழகிய பெண்களைக் கண்டுவிட்டால் அவர்களிடம் கடலை போடாமலிருக்கக் கூடாது என்ற கொள்கையுடைய அவளுடைய தினகரனா இப்படிப் பேசுவது?

இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க மாட்டோமா என்று ஒரு காலத்தில் ஏங்கிக் கிடந்தவள்.. இன்று அந்த

வார்த்தைகளைக் கேட்டும் குதூகலிக்க முடியாமல் இருப்பது யார் கொடுத்த சாபத்தினால்?

பவித்ராவின் மனம் ஊமையாக உள்ளுக்குள் அழுதது.

"தயவுசெய்து இந்தப் பேச்சை விட்டுவிடுங்க அத்தான்.."

"எந்தப் பேச்சை விடச் சொல்கிற?"

"என் அப்பாவைத் தூண்டிவிடும் பேச்சைச் சொல்கிறேன்.."

"நானா அவரைத் தூண்டிவிடுகிறேன்..? அவர் தான்ம்மா எனக்கு தூண்டில் வீசுகிறார்.."

தினகரனின் பேச்சைக் கேட்ட பவித்ராவிற்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

'இந்த அப்பாவும்தான்.. ஏன் இப்படிப் பேசித் தொலைக்க வேண்டும்..'

"அவர் தூண்டிலை வீசினால் வீசிவிட்டுப் போகட்டும். உங்களுக்கென்ன வந்தது. நீங்க என்ன மீனா.. அதில் மாட்ட?"

"அட.. நீ கூட நல்லாப் பேசறயே.."

"உங்க பக்கத்தில் நிற்கிறேனில்ல.. அந்தக் காத்துக் தான் இந்தப் பக்கமும் கொஞ்சம் அடிக்குது..."

"இங்கே பாருடா.. என் மாமன்மகள் போட்டுத் தாக்குவதை.."

"அப்பாவுக்கு ஆசை காட்ட வேண்டாம்.."

"நீ மட்டும் எனக்கு ஆசை காட்டிவிட்டு மோசம் பண்ணலாமா?"

"என் நிலையைச் சொல்லிட்டேன்.."

"அப்பா ஃபோர்ஸ் பண்ணினால் மட்டும் நான் சம்மதித்து விடுவேனா?"

"சம்மதிக்காமல் என்ன செய்வாய்?"

துண்டை அவள் தோளில் போட்டுவிட்டவன் உல்லாசமாகக் கேட்டான். அவள் இறுக்கமான குரலில் பதில் சொன்னாள்.

"செத்து விடுவேன்.."

"என்னடி சொன்ன?"

தினகரனின் முகம் மாறியது. அவன் கோபத்துடன் அவள் கையை அழுந்தப் பிடித்தான். அவள் முகம் வலியால் சிணுங்கியது.

"செத்துவிடுவாயா..? எனக்குப் பெண்டாட்டியாக வருவதற்குப் பதில் செத்துவிடுவதே மேல்ன்னு முடிவு பண்ணிட்டயா?"

"ஐயோ, அத்தான்.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை.."

"நீ எந்த அர்த்தத்தில் சொன்னாலும் அதற்கு நான் எடுத்துக்கிற அர்த்தம் இது ஒண்ணுதான். சாவாயா.. சா.. நானும் உன்னோடு சேர்ந்து சாகிறேன்.."

பவித்ரா சத்தமில்லாமல் அழ ஆரம்பிக்க.. தினகரன் விலகி வெளியே நடந்தான். போவதற்கு முன்னால் நின்று அவளைத் திரும்பிப் பார்த்து.

"நான் உன் அப்பாவிடம் சொன்ன வார்த்தை மாறாது.. எங்க கோட்டையூர் ஜமீன் பரம்பரையில் வாக்கு மாற மாட்டோம். நானும் மாற மாட்டேன்.. என் அண்ணனின் கல்யாணத்திற்குப் பின்னால் உன்னைப் பெண் கேட்டு கட்டாயம் நான் வருவேன். நீ சம்மதிக்கலைன்னா தூக்கிட்டுப் போய் தாலி கட்டுவேன். நான் சிங்கம்டி.. பிரபாகரனின் தம்பி. காதலித்தவளை விட்டு விலகி ஓட மாட்டேன்.." என்று சொல்லிவிட்டு வேகமாகப் போய்விட்டான்.

பவித்ரா அசையாமல் நின்றாள். அவள் மனம் இன்பமான வலியில் ஆழ்ந்திருந்தது.

நர்மதா பகல் தூக்கத்தில் இருந்தபோது அவளது செல்போனின் மணி ஒலித்தது. எடுத்துப் பார்த்தான்

வாசவன் அழைத்தார்.

"சௌகிக்கியமா அண்ணா.. பவித்ரா சௌக்கியமா?" என்று கேட்டாள் நர்மதா..

"உன் புண்ணியத்தில் அவளுக்கு ஒரு குறையும் இல்லை நர்மதா.." என்றார் வாசவன்.

"அண்ணி என்ன செய்கிறாங்க..?"

"தினகரன் சொன்ன செய்தியைக் கேட்டு ஒரு சுற்றுப் பெருத்துப் போய் விட்டாம்மா.."

தினகரன் இவர்கள் வீட்டுக்குப் போயிருந்தானா? நர்மதாவின் புருவம் ஏறியது.

அவள் அறியாமல் மகன் அவளுடைய ஒன்றுவிட்ட அண்ணனின் வீட்டிற்குப் போனதை அவள் ரசிக்கவில்லை.

"தினா அங்கே வந்திருந்தானா?"

நர்மதாவின் குரல் மாறுபாட்டை வாசவன் சட்டென்று உணர்ந்து கொண்டார். உடனடியாக பேச்சின் போக்கை மாற்றினார்.

"நேற்றுக்கூட உன்னை நினைத்துக்கிட்டேன் நர்மதா..."

"அப்படியா அண்ணா.."

"ஆமாம்மா.. அப்பாவுடன் பேசிக்கிட்டு இருந்தபோது அவர் உன்னை நினைத்துக் கவலைப்பட்டார்.."

தான் மாணிக்கவாசகத்தின் தம்பி என்பதை நிரூபித்தார் வாசவன். எதைச் சொன்னாள் நர்மதா இளகுவாள் என்ற சூட்சுமத்தை அறிந்து வைத்திருந்து அதைச் சரியான தருணத்தில் பிரயோகித்தார்.

ஆளவந்தாரின் மேல் அளவு கடந்த பாசம் வைத்து இருந்த நர்மதா அவர் பெயரைக் கேட்டதும் இளகிவிட்டாள்.

"பெரியப்பா என்னை நினைத்துக் கவலைப் பட்டாரா.. எதுக்குண்ணா?"

"அவர் காலத்திற்குப் பின்னாலே நாங்க உனக்கு தாய்வீட்டுச் சீதனத்தை தவறாம கொடுப்போமான்னு அவர் சஞ்சலப்படுகிறார்."

"அதை நினைச்சு வருத்தப்படுகிறாரா?"

நர்மதாவின் இதயம் பாகாக உருகிவிட்டது. அதை அவளது குரலில் அறிந்து கொண்ட வாசவன், அடுத்த அஸ்திரத்தை பிரயோகித்தார்.

"அவர் சொல்லித்தான் நான் தாய்மாமன் சீரை செய்யணுமா நர்மதா..? எனக்கு சாகும் வரை அந்தக் கடமை இருக்கும்மா.."

"அண்ணா.." நர்மதா நெகிழ்ந்து விட்டாள்.

"நான் அப்பாவிடம் சொன்னேன்ம்மா.. என் பெண்களுக்கு சீர்செய்ய மறந்தாலும் மறப்பேன். ஆனால்.. நர்மதாவிற்கு சீர்செய்ய மறக்கவே மாட்டேன்னேன்.."

"இதை நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா அண்ணா.."

"அப்பா மனசில ஒரு கனவிற்கு நர்மதா.."

இரும்பு இளகிவிட்டதை அறிந்தவர்.... மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"என்ன கனவு அண்ணா?"

"நம் சொந்தம்.. நம் தலைமுறையோடு முடிந்து போகாமல் தொடர்கதையாய் தொடரணும்னு அப்பா ஆசைப்பட்டார்.."

"அதுக்கென்ன அண்ணா.. அழிகிற சொந்தமா நம் சொந்தம்?"

'நீ இப்படி காவியம் பாடியே உயிரை வாங்கு..' மனதிற்குள் திட்டியவாறு.. வெளியே புன்னகையுடன்,

"உண்மைத்தான்ம்மா.. நம்ம சொந்தம் அழியாத சொந்தம்தான்.. நமக்குப் பின்னாலே.. நம்ம பிள்ளைகள்

இந்த சொந்தத்தை வளர்ப்பாங்களா? நினைச்சுப் பாரு.." என்று சொன்னார்..

"நீங்க சொல்வதிலேயும் உண்மை இருக்கு அண்ணா.." என்றாள் நர்மதா.. யோசனையுடன்.

"அதனால்தான் நான் அப்பாவிடம் சொன்னேன்.. நம்ம ஸ்வேதாவிற்கு என்ன குறை..? அவளை நர்மதா மருமகளாக்கிக்கிட்டா என்னன்னு கேட்டேன்.."

இதைக் கேட்ட நர்மதா.. அலறிவிடுவாள் என்று வாசவனுக்கு மிக நன்றாகவே தெரியும்.

## 120

**காணாததைக் கண்டதைப் போல…**

**உன்னைக் கண்ட மனம் பரபரப்பதை…**

**என்னவென்று நான் சொல்ல..?**

இது ஒரு யுக்தி.. பக்கத்து இலைக்கு பாயசம் போடச் சொல்லும் யுக்தி. காலம் காலமாக புத்திசாலிகள் கடைப்பிடித்து வரும் யுக்தி.

வாசவனும் அதைக் கடைப்பிடித்தார். நர்மதா தன் அலறலை மறைத்துப் பதிலைச் சொன்னாள்.

"இல்லையண்ணா.. ஸ்வேதாவை இந்த வீட்டுக்கு மருமகளாக்க முடியாது.."

"ஏம்மா?"

"பிரபாவுக்கும் சரி.. தினாவுக்கும் சரி.. அவள் மேல் பிரியமில்லை அண்ணா. என் பிள்ளைகளுக்கு இஷ்டமில்லாத எதையும் நான் செய்யமாட்டேன். அது உங்களுக்குத் தெரியுமே.."

"ஆமாமாம்.. நீ சொல்கிறதைக் கேட்ட பின்னால் தான் என் மனசுக்குப் பட்ட ஒன்றை உன்னிடம் சொல்லணுமுன்னு தோணுது.."

"என்னண்ணா?"

"நம்ம தினா மாப்பிள்ளையின் மனசில பவித்ராவின் மேல பிரியம் இருக்கிறதைப் போல எனக்கு மனசுக்கு படுதும்மா.."

"நிஜமாகவா சொல்கிறீங்கண்ணா?"

நர்மதாவின் குரலில் இத்தனை உற்சாகத்தை வாசவன் எதிர்பார்க்கவில்லை. அவருடைய மகளை மருமகளாக்கிக் கொள்ள நர்மதா இவ்வளவு ஆர்வம் காட்டுவாளென்று அவருக்கு இத்தனை நாளாக தெரியாமல் போய்விட்டதே என்று அவர் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

அவருக்கு நர்மதாவின் மனதைப் பற்றி என்ன தெரியும்..? முதல் இரண்டு மகன்களைப் போல கடைசி மகனும் எந்தப் பெண்ணைக் கை காட்டப் போகிறானோ என்ற பயத்தில் இருந்தவள் அவள்.

மகளை நல்ல வேளையாக உறவினர் வட்டாரத்தில் திருமணம் பண்ணிக் கொடுத்துவிட்டோமென்ற நிம்மதியுடன் இருந்தவளுக்கு அடுத்து ஒரு நிம்மதியைத் தேடிப் பிடித்துக் கொடுத்து விட்டார் வாசவன்.

"உங்களுக்கு இது நிச்சயமாகத் தெரியுமா?"

நர்மதா இவ்வளவு தூரம் இந்தத் திருமணப் பேச்சை விரும்பிக் கேட்பாள் என்பதை அறிந்து கொண்ட பின்னால் தேங்கி நிற்க வாசவன் என்ன முட்டாளா?

பச்சை விளக்கு எரிந்துவிட்ட சந்தோஷத்தில் வாசவன் மடமடவென்று தினகரன் வீட்டிற்கு வந்து போன செய்தியை ஒப்பித்து விட்டார்.

"என்னாலேயே நம்ம தினகரன் மாப்பிள்ளை என் வீட்டுக்கு வந்ததை இன்னும் நம்ப முடியலை நர்மதா.. உங்க அண்ணி

ஆச்சரியத்தில் வாய் பிளந்துவிட்டான்னா பார்த்துக்கயேன்."

"இது என்னண்ணா.. நீங்க என்ன அந்நியமா.. அசலா.. என் பிள்ளை உங்க வீட்டுக்கு வர உரிமையுள்ளவன்தானே.."

வாசவனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை..

'இது என்ன தங்கச்சி.. இந்த அளவுக்கு பாச மழையைப் பொழியுதே..' என்று வியந்து போனார்.

"அப்படித்தான் நானும் உன் அண்ணியிடம் சொன்னேன்.."

"இன்றைக்கு விடிந்த விடியல் நல்ல விடியலா விடிந்திருக்கு அண்ணா. எங்கே என் பெரியப்பாவின் பேத்திகளில் ஒருத்தியைக்கூட எனக்கு மருமகளாக கொண்டு வர முடியுமோ முடியாதோன்னு வருத்தப் பட்டேன். கடவுள் கண் திறந்துவிட்டார்."

நர்மதாவின் மனதில் இப்படியொரு எண்ணம் இருப்பதை அப்போதுதான் அறிந்த வாசவன் மனம் நெகிழ்ந்தார்.

"நீ இந்த அளவுக்கு சந்தோஷப்படுவன்னு எனக்குத் தெரியாமப் போச்சு நர்மதா..."

"என்ன அண்ணா இப்படிச் சொல்லிட்டீங்க.. பெரியப்பாவின் மனதில் இருக்கிற ஆசை எனக்குத் தெரியாதா என்ன.. ஏழைகளின் ஆசையும் கோயில் மணி யோசையும் வேறுபட்டால் என்ன செய்வது.. தர்மமே மாறுபட்டால் எங்கு செல்வதுன்னு ஒரு பாட்டில் சொல்கிறதைப் போல என் ஆசையும் என் பிள்ளைகளின் ஆசையும் வேறு வேறாகிப் போச்சே அண்ணா.. நான் என்ன செய்ய முடியும்? எனக்கு என் பிள்ளைகள்தான் உலகம். அவங்க மனதுக்கு மாறாய் நான் எதையும் செய்ய முடியாது. செய்யவும் மாட்டேன். இப்ப.. தினகரனே பவித்ராவை பிடிக்குதுன்னு சொல்லிவிட்டது தெய்வச் செயல்.."

வாசவனுக்கு இறக்கை இல்லாமலேயே வானில் பறக்கும் உணர்வு ஏற்பட்டது.

"அப்ப நான் அப்பாவிடம் விஷயத்தை சொல்லிவிடவாம்மா..?"

"சொல்லிருங்கண்ணா.. நானும் பெரியப்பாவிடம் பிரபாகரனின் கல்யாணம் முடிவாகியிருப்பதைச் சொல்லணும்.. அப்படியே இதையும் பேசி விடுகிறேன்.."

"பிரபாகரனுக்கு கல்யாணம் முடிவாகிவிட்டதா?"

வாசவன் வியப்புடன் கேட்டார். தினகரன் இதைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே என்ற எண்ணம் அவருக்கு.

"ஆமாண்ணா.. பிரபாகரனுக்கு கல்யாணம் முடிவாகி விட்டது.."

"பெண் யாரும்மா?"

"நம்ம சசிரேகாவின் சித்தப்பா பெண் மாலினி தான்.."

இதை ஓரளவு வாசவன் எதிர்பார்த்திருந்தார். யாரிடமும் அளவாக பேசிப் பழகும் பிரபாகரன்... மாலினியிடம் மட்டும் எந்த அளவுகோலையும் வைத்துக் கொள்ளாமல் பேசிப் பழகியதை அவர் காயத்ரியின் நிச்சயதார்த்த சமயத்திலேயும் அவளின் திருமண சமயத்திலேயும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். கடைசியில் அவரின் கணிப்பு சரியாகிவிட்டது.

'அவளுக்கு வந்த வாழ்வைப் பாரேன்..' வாசவனின் மனதில் பொறாமை உதயமானது.

தினகரன், நர்மதாவின் இளைய மகன்... கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் வாரிசுகளில் ஒருவன் என்றபோதும்.. பிரபாகரனின் அளவற்ற அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெற்றவனல்ல.

பிரபாகரன் ஒரு மாபெரும் சக்தி. அவனது பெயர் சொல்லக்கூட யாரும் தயங்கும் அளவிற்கு மரியாதையை அந்த இளம்வயதிலேயே ஈட்டி வைத்திருப்பவன். அவனுக்கு மனைவியாகும் பெண்ணிற்கு கணவனுக்கு

கிடைத்திருக்கும் மரியாதை அப்படியே துளிக்கூட குறையாமல் கிடைக்கும்.

'கொடுத்து வைத்தவள்..'

அந்தக் கொடுத்து வைத்தவளாக தன் மகள் இல்லாமல் போனதில் அவருக்கு துளியளவு வருத்தம் ஏற்பட்டது.

'ஆயிரம்தான் இருந்தாலும் தினகரன்.. பிரபாகரனுக்கு இணையாக முடியுமா? தம்பியாகத்தான் ஆக முடியும்..' என்ற பெருமூச்சுடன் மனைவியிடம் விஷயத்தைச் சொல்லத் தேடிப் போனார் வாசவன்..

மாணிக்கவாசகம் கொதித்துப் போயிருந்தார்.. அவரது காதில் அமிலத்தைக் காய்ச்சி ஊற்றியதைப் போல அவருக்கு ஆளவந்தாரின் வார்த்தைகள் இருந்தன..

"என்னப்பா சொல்கிறீங்க..?"

"நர்மதா சொன்னதைத்தான் சொல்கிறேன்.. பிரபாகரனுக்கு மாலினியைப் பெண் கேட்டு.. வருகிற வெள்ளிக் கிழமை குடும்பத்தோடு அவள் போகப் போகிறாளாம்.. அதற்கு என்னையும் உன் அம்மாவையும் வரச்சொல்லி கேட்டுக்கிட்டா..."

"எனக்கு ஒரு வார்த்தை சொல்லணுமா.. வேண்டாமா..?"

"கல்யாணத்துக்கு சொல்வாள்டா.. தாய்மாமா சீரை நீயும் உன் அண்ணனும் தம்பியும்தானே செய்யணும்..?"

மாணிக்கவாசகத்தின் பார்வைக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் அந்த இடத்திலேயே ஆளவந்தார் சாம்பலாகியிருப்பார்.. அவருடைய பார்வைக்கு அந்த சக்தி இல்லாததால் ஆளவந்தார் தப்பித்தார்..

"ஏம்ப்பா இப்படி இருக்கறீங்க..?"

"ஏண்டா.. நல்லாத்தானே இருக்கேன்.. சட்டை எதுவும் கசங்கியிருக்கா.. என்ன..?"

ஆளவந்தார் தன்னை ஒருமுறை நன்றாகப் பார்த்துக் கொண்டார்.. மாணிக்கவாசகம் பல்லை நறநறவென்று

கடித்தார்..

"நான் என்ன சொல்கிறேன்.. நீங்க என்ன செய்கிறீங்க..?"

"நீ சொல்வதை உருப்படியா சொன்னால்தானே எனக்கும் புரியும்.."

"என்னை மதிச்சு என்னிடம் ஒரு வார்த்தை இந்தக் கல்யாண ஏற்பாட்டைப் பற்றி நர்மதா சொன்னாளா..?"

"ஓ.. நீ அதைச் சொல்கிறாயா.."

"புரிஞ்சா சரி.."

"எப்படிடா சொல்வாள்.. இல்லை எப்படிச் சொல்வான்னு கேட்கிறேன்.. நீ உன் மகளைக் கட்டிக்கன்னு சொல்லி மாதக்கணக்கில் உன் மகளை அவ வீட்டில் விட்டும் வைச்சே..."

"அதுக்குத்தான் என் மகளை திருப்பி அனுப்பி என் மூக்கை அறுத்தாளே.."

"அந்த வருத்தம் அவளுக்கும் இருக்காதா..?"

"மூக்கறுபட்ட எனக்கு வருத்தமிருக்காது.. மூக்கை அறுத்த உங்க தம்பி மகளுக்கு மட்டும் வருத்தமிருக்கும்.. என்ன நியாயம்ப்பா உங்க நியாயம்..?"

"மாணிக்கம்.. நீ கோபத்தில் பேசுகிற.. நிதானமா உட்கார்ந்து யோசி.. உனக்கு எல்லா நியாயமும் புரியும்.."

"எனக்குப் புரிகிறது இருக்கட்டும்.. உங்களுக்கு ஏதாவது புரிந்ததா..? ஏற்கெனவே அந்த சசிரேகா நம்ம நர்மதாவை மூலையில் உட்கார வைத்திருக்கிறா.. இப்ப அவளோட சித்தப்பன் மகளை பிரபாகரனுக்கு கல்யாணம் பண்ணிவைச்சு.. நம்ம நர்மதாவை காணாம அடிச்சிற மாட்டாங்களா..?"

"பிரபாகரன்தான் அந்த பெண்மேல் ஆசைப்-பட்டுட்டானே.. அப்புறம் என்னடா செய்யறது..?"

"கண்ணுக்கு முன்னால் வயசுப் பெண்ணை நடமாட விட்டா.. எந்த வாலிப வயசுக்காரனுக்குத்தான் கல்யாண ஆசை வராது..?"

"ஏன்.. உன் மகளும் வயசுப் பெண்தானே.. அந்த மாலினிப் பெண்ணாவது.. வேலை பார்க்கணுமுன்னு சென்னையை விட்டு மார்த்தாண்டத்துக்கு வந்தா.. உன் பெண் அவங்கள்ல ஒருத்தனை கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்கிற நோக்கத்தோடத்தான் இங்கே வந்திருக்கிறேன்னு வாய்விட்டுச் சொல்லி.. அந்த வீட்டுக்குள் நுழைந்தாளேடா.. உன் மகள் என் பேரன்கள் முன்னால் நடமாடலையா.. ஏன்.. அந்த இரண்டு பேரில் ஒருத்தனுக்குக்கூட உன் மகளைக் கல்யாணம் பண்ணிக் கணும்னு ஆசை வரலை..?"

"அப்பா.. எனக்கு இரண்டில் ஒன்று இப்பவே தெரிந்தாகணும்.."

"என்னப்பா..?"

"நீங்க எனக்கு அப்பாவா.. இல்லை நர்மதாவுக்கு அப்பாவா..?"

"உனக்கு அப்பா.. நர்மதாவிற்கு பெரியப்பா.. போதுமாப்பா.. சந்தேகம் தீர்ந்ததா..?"

மாணிக்கவாசகத்திற்கு இந்தத் தகப்பனை என்ன செய்தால் தேவலை என்று தோன்றியது.. அவர் கடுப்புடன் தகப்பனைப் பார்க்க.. அவர் பிரியத்துடன் மகனைப் பார்த்து..

"என்னப்பா.. அப்படிப் பார்க்கிற..?" என்று மகா வாஞ்சையுடன் கேட்டு வைத்தார்..

பக்கத்தில் இருக்கும் சுவரில் மடார் மடாரென்று தலையை மோதினால்தான் தன் கோபம் குறையுமென்ற நிலைக்கு மாணிக்கவாசகம் ஆளாகிவிட்டார்..

"ஏம்பா.. உங்களுக்குக் கொஞ்சமவாது அறிவு இருக்கா..?"

"உன்னைப் பெற்றுவிட்டதால் அதைக் குறைவாக எடை போட்டுவிடாதே மாணிக்கம்.. அது நிறைய இருக்கு..."

"இருந்திருந்தால்.. நர்மதாவை நறுக்குன்னு ஒரு கேள்வியாவது கேட்டு வைக்காமல் இருப்பீங்களா..?"

"எதைக் கேட்கச் சொல்கிற..?"

"லட்டு லட்டாய்.. என் பேத்திகள் இருக்க.. இப்படி வெளியே பெண்ணெடுத்துக்கிட்டே இருக்கறியே.. இது நியாயமான்னு கேட்க வேண்டாமா..?"

"அதுக்குத்தான் அவசியமே இல்லையே..."

"என்னப்பா சொல்கறீங்க..?"

"அவள்தான் தினகரனுக்கு நம்ம பவித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாளே.."

மாணிக்கவாசகத்தின் தலையில் அடுத்த இடியைத் தான் இறக்குவதை அறியாமல் ஆளவந்தார் உற்சாகமாகப் பேசப் பேச.. மாணிக்கவாசகம் கண்கள் நிலைகுத்த.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டார்...

## 121

**உன் மனதில் நானிருக்க வேண்டுமென்று..**

**என்மனமே ஏங்கித் தவிக்கும் நிலையை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

"மாணிக்கம்... நான் பெத்த மகனே.. உனக்கு என்னடா ஆச்சு..?" ஆளவந்தார் அலறிய அலறலில் விசாலாட்சி உள்ளேயிருந்து ஓடிவந்தாள்..

"என்னங்க.. என்ன ஆச்சு..?"

"மாணிக்கத்தைப் பாருடி.."

"என்னங்க.. என் பிள்ளை ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறான்..?"

விசாலாட்சி உள்ளே ஓடிப்போய் ஒரு செம்பு நிறையத் தன்னீரைக் கொண்டு வந்து மாணிக்க வாசகத்தின் முகத்தில் அடித்தாள்..

"என்னத்தைங்க சொல்லித் தொலைச்சீங்க. இவன் இப்படி பிரமை பிடிச்சுப் போய் உட்கார்ந்திருக்கிறான்?"

"மாணிக்கம்.. கண்ணைத் திறந்து பாருடா.. உன் அம்மா என்னைக் குற்றம் சொல்கிறா. என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிடாதேடா மகனே..."

விசாலாட்சி.. கையினால் அடிக்க முடியாமல்.. அதற்கு இணையான வேகத்துடன் செம்புத்தண்ணீரால் அடித்தபோதே மயக்கம் தெளிந்துவிட்ட மாணிக்க வாசகம்.. தகப்பனாரின் புலம்பலைக் கேட்டு அவரை ஒரு மார்க்கமாக பார்த்தார்.

"என்னடி விசாலம்.. இவன் இப்படிப் பார்த்து வைக்கிறான்?"

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும். நீங்கதானே உங்க மகன் கூட 'மாட்டலாடிக்கிட்டு' இருந்தீங்க. எனக்கு நல்லா வந்திடும் வாயில.."

"முதல்ல இப்ப உன் வாயில வந்ததுக்கு அர்த்தத்தைச் சொல்லு.. 'மாட்டலாடிக்கிட்டு' இருந்தேன்னு சொன்னாயே.. அதுக்கு என்னடி அர்த்தம்?"

"உம்.. பேசிக்கிட்டுன்னு அர்த்தம்.."

"இப்படிக்கூட தமிழில் அர்த்தம் இருக்குதா.."

"தமிழில் இல்லை... தெலுங்கில் இருக்குது.."

"தமிழ்நாட்டில் பிறந்துட்டு தெலுங்கை ஏண்டி இழுக்கறே..."

"அதை மலையாளம் கலந்த தமிழ் பேசற நீங்க சொல்லக்கூடாது.."

"அதுக்கென்னடி பண்றது.. கன்யாகுமரியிலேயே கேரளத்து பாஷை ஆரம்பிச்சுடுது. கேரளா பார்டரில் இருந்துக்கிட்டு சங்கத்தமிழ் பேச முடியுமா? அதுக்கு நாம கருங்கல்லில் இருந்திருக்கக்கூடாது. மதுரையில் இருந்திருக்கணும்.."

"கருங்கல்லைப் பத்தி அப்புறம் பேசலாம்.. முதல்ல இவனுக்கு என்ன ஆச்சுன்னு பாருங்க.."

மாணிக்கவாசகம் அதற்குள் தன்னுணர்விற்கு மீண்டிருந்தார். ஆளவந்தாரை எரிச்சலுடன் பார்த்தார்.

"ஏண்டா.. அப்போது அப்படி ஒரு பார்வை பார்த்த?"

"எப்படிப் பார்த்தேன்?"

"மந்திரிச்சு விட்ட கோழியைப் போல பார்த்து வச்சயே.."

"அப்பா.. என் கோபத்தை கிளறாதீங்க.. என் தலையில் நீங்க கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டு உங்க தலையில் கல்லைப் போட வேணாம்னு பசப்புகிறீங்களா?"

இதைக் கேட்டதும் ஆளவந்தாருக்கு கோபம் வந்து விட்டது..

"கேட்டயாடி உன் மகன் பேசுகிற பேச்சை?" என்று மனைவியை முறைத்தார் அவர்.

"எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன். மாணிக்கம்.. நீ பேசறது சரியில்லை. ஆமாம்.. சொல்லிட்டேன்.. அது என்னடா வார்த்தை பேசுகிற.. பசப்பறதுன்னா அர்த்தம் என்னான்னு உனக்குத் தெரியுமா?" விசாலாட்சி மகனிடம் சண்டைக்குப் போனாள்.

"அர்த்தம் தெரியாமலாடி இவன் அந்தக் கேள்வியைக் கேட்கிறான்?" ஆளவந்தார் படபடத்தார்.

"இப்ப நீங்க ரெண்டு பேரும் என்ன விஷயத்தை பேசிக்கிட்டு இருந்தீங்க?" விசாலாட்சி யோசனையுடன் கேட்டாள்.

"எல்லாம்.. நம்ம நர்மதாவின் மகனுக்கு நம்ம பேத்தி பவித்ராவைக் கல்யாணம் பண்ணி வைக்கிற விஷயம் தான்.." என்ற யதார்த்தமாகக் கூறினார் ஆளவந்தார்.

'அதுதான் இவன் நெஞ்சைப் பிடித்துக்கிட்டு உட்கார்ந்தானா..'

விசாலாட்சி அனுதாபத்துடன் தன் இரண்டாவது மகனைப் பார்த்தாள்.

"அதுசரி.. இப்ப எதுக்கு அந்த விஷயத்தைப் பேசினீங்க.. கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும்.. கிழவியைத் தூக்கி மணையில வையிங்கிற கதையாய்.. நமக்கு கவனிக்க ஆயிரம் ஜோலி இருக்கிறப்போ அந்தப் பேச்சு இப்ப தேவைதானா?"

"நானா பேசலை விசாலம்.. மாணிக்கம்தான் நர்மதாவைக் குறை சொன்னான்..."

"என்ன சொன்னான்?"

"என் பேத்திகள் இருக்கிறப்போ.. நர்மதா அவளோட மகன்களுக்கு வெளியே பெண்ணெடுத்துக்கிட்டு இருக்காளேன்னு சொன்னான்.."

"நீங்க உடனே.. அப்படியெல்லாம் இல்லைப்பா.. என் தம்பி மகள் தங்கக் கம்பி.. என் பேத்தி பவித்ராவைத்தான் அவளோட கடைசி மகன் தினகரனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறான்னு சொன்னீங்களாக்கும்?"

"அட.. ஆமாம்.. எப்படி விசாலாட்சி.. இப்படிக் கரெக்டா கண்டுபிடிச்ச?"

"வெத்தலையில் மை தடவி ஜோஸியம் பார்த்தேன்.."

"நானும் பார்த்தாலும் பார்த்தேன்.. யாரைக் கேட்டாலும் இடக்கா பதில் சொல்லணும்னா இப்படித்தான் சொல்லி

வைக்கிறாங்க.."

"என்ன சொன்னாலும் உங்களைப் போல ஆளுகள் தான் திருந்த மாட்டீங்களே.."

"இப்ப நான் சொன்னதில என்ன தப்பிருக்கு?"

"ஒரு தப்பும் இல்லை.. இந்த விஷயத்தை நல்ல நேரம் பார்த்து சொன்னீங்க போங்க.."

"யாருடி இவ.. எதுக்கெடுத்தாலும் என்னையே குறைசொல்லிக்கிட்டு.. நம்ம வீட்டுப் பெண்ணை.. நர்மதா மருமகளாக்கிக்கப் போறா.. இது சந்தோஷப்பட வேண்டிய விஷயமில்லையா?"

"ராமா.. இந்த மனுஷனுக்கு எப்படிச் சொன்னாலும் புரிந்து தொலைக்காது. நமக்குத்தான் பவித்ராவும் ஸ்வேதாவும் ஒண்ணு.. இரண்டு பேரும் நம்ம பேத்திகள்.. நம்ம வீட்டுப் பெண்கள்.. மாணிக்கத்துக்கு அப்படியா? அவனுக்கு பவித்ரா பெற்ற மகளில்லையே. தம்பி மகள்தானே."

"இந்த ஆளவந்தாருக்கு மகனாகப் பிறந்து விட்டு தன் மகள் வேற.. தம்பி மகள் வேறன்னு நினைக்கலாமாடி..."

அதுவரை.. கோட்டையூர் ஜமீன் வம்சத்தின் சம்பந்தம் கைநழுவிப் போய்விட்ட சோகத்தில் இருந்த மாணிக்க வாசகம் கோபத்துடன் நிமிர்ந்தார்.

"அப்பா.. கொலைவெறியைக் கிளப்பாதீங்க.."

"என்னடி.. இவன் இப்படி பினாத்தறான்.."

"மாணிக்கம்.. உன் அப்பா குணம்தான் உனக்குத் தெரியுமே. நீதான் கொஞ்சம் பொறுமையாய் போய்த் தொலைடா.."

"விளையாடறீங்களாம்மா.. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாயில்ல என் கதை இருக்கு.."

"ஏண்டி விசாலம்.. காத்திருந்தவள் புருஷனைன்னுல்ல இவன் இப்ப சொல்லணும்.. மாற்றிச் சொல்கிறானே.."

"நீங்கதான் வாயை வைத்துக்கிட்டு வனவாசம் போகாம கொஞ்ச நேரம் அடங்கியிருங்களேன். அவன் ஏற்கெனவே கொலைவெறியில் இருக்கான். இப்ப நீங்க வேற அவனைக் கிளப்பி விடணுமா?"

"அவன் கிளம்புகிறானோ இல்லையோ.. நீ கிளப்பிவிடுகிற முடிவோடதான் இருக்கடி.."

"நான் என் மகன்களைக் கிளப்பி விடணும்னு நினைத்திருந்தா எப்பவோ கிளப்பி விட்டிருப்பேன். போனாப் போகுதுன்னு நீங்க ஆடுகிற ஆட்டத்துக்கு தாளம் போட்டுக்கிட்டு இருக்கேன்.."

"ஓஹோ.. இத்தனை வருஷமாய் உன் மனசில இருந்ததெல்லாம் இப்பத்தாண்டி வெளியில வருது. கொட்டுடி.."

"எதைக் கொட்ட?"

"உன் அப்பன் வீட்டு சீர்வரிசையைச் சொல்லலை.. உன் மனசில இருக்கிறதைக் கொட்டு.."

"அதை நான் கொட்டினா நீங்க தாங்க மாட்டீங்க.. பிழைத்துப் போகட்டும்னு மனசில போட்டு அடக்கிக்கிட்டு இருக்கேன். என் அப்பன் வீட்டு சீர்வரிசையைப் பற்றி எகத்தாளாமா பேச்சு வருது.. ஐந்து பைசான்னாலும் என் அப்பன் வீட்டிலிருந்துதான் எனக்குச் சீர் வருது. பெரியப்பனின் வீட்டில இருந்து வரலை.."

"சொல்லிக்காட்டறயாடி.. என் தம்பி மகளைச் சொல்லிக் காட்டறயா?"

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறீங்க?"

"என் தம்பி மகளுக்கு சீர்செய்வது உன் கண்ணை உறுத்துதா?"

"ஆமாமுன்னு சொன்னா அதை நிறுத்திருவீங்களா?"

"இவ்வளவு தூரத்துக்கு நீ வந்த பின்னால் ஒரு நிமிஷம்கூட நீ இந்த வீட்டில் இருக்கக்கூடாது. வீட்டை விட்டு வெளியே

போடி.."

"இவ்வளவு பேச்சை நீங்க பேசி கேட்ட பின்னாலும்.. இங்கே நான் ஏன் விதியத்து நிற்கப் போகிறேன். இதோ.. என் தங்கமான மகன் மாணிக்கம் இருக்கிறான். இவன் வீட்டுக்குப் போனால்.. என்னைத் தங்கத்தட்டில் வைத்து காலம் பூராவும் காப்பாற்றுவான். வாடா மாணிக்கம்.. நாம போகலாம்.."

தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே தொடங்கிய சண்டை கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான சண்டையாக முற்றி பிரிவு வரை போய்விட..

'இங்கே என்னதான் நடக்குது?' என்று புரியாமல் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார் மாணிக்கவாசகம்.

ஆளவந்தார்.. தன் மூன்று மகன்களுக்கும் திருமணம் முடிந்த கையோடு.. சொத்தை பாகம் பிரித்துக் கொடுத்து விட்டார். மூன்று மகன்களும் தனித்தனியாய் தொழில் தொடங்கி தனித்தனி பங்களாக்களில் வாழத் தொடங்கி வருடக் கணக்காகி விட்டது.

தனக்கென்று ஒதுக்கி வைத்திருந்த சொத்தில்.. தம்பி மகளுக்கு சீர்செய்து கொண்டு பூர்வீக

வீட்டில் விசாலாட்சியோடு தனிக்குடித்தனம் செய்து கொண்டிருந்தார் ஆளவந்தார்.

சொக்கனுக்கு மீனாட்சி என்றால்.. ஆளவந்தாருக்கு விசாலாட்சி என்று உறவினர் வட்டாரத்தில் அவர்களுக்குப் பெயர் உண்டு.

வள்ளுவனையும் வாசுகியையும் போல வாழ வேண்டும் என்று அந்தப் பக்கத்து மக்கள் சொன்னதில்லை.

ஆளவந்தாரையும் விசாலாட்சியையும் போல வாழ வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள்.

அப்படிப்பட்ட பிரசித்திபெற்ற ஒற்றுமையான தம்பதிகளான ஆளவந்தாரும் விசாலாட்சியும் அத்தனை வருட மணவாழ்க்கைக்குப் பின்னால் கோர்ட் படி ஏறாமல்..

விவாகரத்து வரை போய்விட வைத்த புண்ணியத்தைக் கட்டிக் கொண்ட மாணிக்கவாசகம் திருதிருவென விழித்தார்.

'அடக்கடவுளே.. அம்மாவுடன் வீட்டுக்குப் போனால்.. என் பெண்டாட்டி.. என்னை அடித்தே விரட்டி விடுவாளே..'

பயந்துபோன மாணிக்கவாசகம்.. உடனடியாக தாய்க்கும் தகப்பனுக்கும் சமரசம் செய்து வைக்க முனைந்தார்.

"அடடா.. இப்ப என்ன நடந்திருச்சுன்னு அப்பா மேல இப்படிக் கோபப்படறீங்கம்மா?"

"இன்னும் என்னடா நடக்கணும்..? நானும் மூன்று மகன்களைப் பெற்று வச்சிருக்கேன். என் மூன்று மகன்களும் பெண்களைப் பெற்று வைச்சிருக்காங்க.."

"அதுக்கென்னம்மா இப்ப?"

"அந்த நர்மதாவும் மூன்று மகன்களைப் பெற்று வைச்சிருக்கா.."

"அதுக்குத்தானேம்மா.. என் வயிறு எரியுது.."

"அந்த மூன்று மகன்களுக்கும் என் மூன்று மகன்களின் வீட்டில் இருந்து பெண்ணெடுத்திருக்கணுமா.. வேண்டாமா?"

"அட.. மற்றவங்களை விடுங்கம்மா.. என் வீட்டிலிருந்து பெண்ணெடுத்திருக்கணுமா... வேண்டாமா?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன். அப்படிப்பட்ட வளை தட்டிக் கேட்காத இவருடன் நான் குடித்தனம் பண்ணமாட்டேன்.. வா.. உன் வீட்டுக்குப் போகலாம்.."

"அட.. பொறுங்கம்மா. இப்ப என்ன ஆச்சு.. நர்மதா என் வீட்டில் பெண் எடுக்காட்டி என்ன..

என் தம்பி வீட்டில் பெண் எடுக்கிறாளா இல்லையா? நாம அதைப் பார்ப்போமே.."

"அப்படியா சொல்கிற?"

"அப்படித்தான் சொல்கிறேன்.."

"அப்ப சரி.. நான் உன் வீட்டுக்கு வரலை.."

மாணிக்கவாசகம்.. தப்பித்தேன் பிழைத்தேன் என்று வீட்டை நோக்கி ஓடினார்.

## 122

**சொல்லத் துடிக்கும் உணர்வுகளையே...**

**சொல்ல முடியாமல் போவதையே...**

**என்னவென்று நான் சொல்ல?**

'புயலுக்குப் பின்னால் வரும் அமைதி என்பது இது தானா?'

ஓய்ந்து போய் ஹாலில் இருந்த சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள் விசாலாட்சி. வீட்டில் அமைதி ஆட்சி புரிந்தது. காபியின் மணம் நாசியைத் துளைக்கவும் தலை

நிமிர்ந்து பார்த்தாள். ஆளவந்தார் காபியுடன் நின்றுகொண்டிருந்தார். விசாலாட்சி பரபரப்புடன் எழுந்து கொள்ளப் போனாள். ஆளவந்தார் அவளை கையமர்த்தியவாறு அருகில் அமர்ந்தார்.

"உட்காரு விசாலம்.."

"உங்களை யாரு காபி போடச் சொன்னது? செண்பகமும் வீட்டில் இல்லையே.. காய்கறி வாங்கப் போய்விட்டாளே.."

"நல்லவேளையாக.. அவள் வெளியே போயிருந்தாள்.. இல்லைன்னா நம்ம வீட்டில் நடந்த கூத்து.. கருங்கல்பூராவும் பரவியிருக்கும்.."

"வேற என்னதான் செய்யறது.. காட்டுத்தீயை அணைக்கணும்னா.. எதிரே தீப்பிடிக்க வைக்கணுமாம்..

தீயை தீதான் அணைக்கும்னு நினைச்சேன்.. சண்டையை ஆரம்பிச்சுட்டேன்.."

"நீ கண் ஜாடை காட்டியதும் நானும் புரிஞ்சுக்கிட்டேன். சும்மா சொல்லக்கூடாது விசாலம்.. நீ நல்லாவே நடிச்சே.."

விசாலாட்சி கசப்பாக சிரித்தாள். அந்தச் சிரிப்பில் வேதனை இழையோடியது.

"வேற என்ன செய்ய? பெற்ற பிள்ளையை நம்மால் கட்டுப்படுத்த முடியலை. பேசாமல் இரு கோடுகள் தத்துவத்தை இழுத்துவிட்டேன். மாணிக்கம் அடங்கிட்டான்.."

"ஒரு கோட்டை சிறியதாக்கணும்னா.. அதுக்குப் பக்கத்தில் இன்னொரு கோட்டை பெரிதாகப் போடணும்.. அப்படித்தானே.."

"ஆமாம்.. பாலசந்தர் சினிமாவில் அப்படித்தானே சொல்லியிருக்கார்..?"

"நம்ம காலத்துப் படம்.. இப்பல்லாம் இதுபோல படம் வருதா என்ன?"

"நல்ல சினிமாவுக்கு மட்டும் பஞ்சமில்லை.. உண்மையான பாசம்.. அன்பு.. நட்பு.. இதுக்கும் இப்ப பஞ்சமாகிருச்சு.."

"வாசவனும் நம்ம பிள்ளை.. மாணிக்கமும் நம்ம பிள்ளை.. இரண்டு பேரில் யாருக்குன்னு நாம பார்க்கிறது விசாலம்?"

"அதுதானே.. ஸ்வேதாவும் பவித்ராவும் நம்ம பேத்திகள். இவங்களில் யாரை நர்மதா மருமகளா ஏத்துக்கிட்டாலும் நாம சந்தோஷம்தானே படணும்?"

"என்னவோ போ.. எனக்கொண்ணும் திருப்தி யில்லை.. இதெல்லாம் நல்லதுக்கு நடக்கிறதா என் மனசுக்குப்படலை.."

"சரி... சரி.. விடுங்க. செண்பகம் வந்துட்டா. நடக்கிறது எல்லாம் அந்த நாராயணன் செயல். பெருமாள் மேலே

பாரத்தை போட்டுவிட்டு.. ஆக வேண்டிய காரியத்தை நாம பார்க்கலாம்..."

ஆளவந்தார் எழுந்து மாடிக்குப் போக.. விசாலாட்சி.. செண்பகத்திடம் அன்றைக்கு சமைக்க வேண்டிய மெனுவைச் சொல்ல ஆரம்பித்தாள்.

ஸ்வேதா கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள்.. இளமையாக.. அழகாக.. செழிப்பாக இருந்த தன் பிம்பத்தை அவள் ரசித்துக் கொண்டிருந்தபோது.. மாணிக்கவாசகத்தின் பதற்றக் குரல் கேட்டது.

"ஸ்வேதா.. ஸ்வேதா.."

ஸ்வேதாவிற்கு கண்ணாடியை விட்டு நகர மனமில்லை.

'உனக்கென்ன ஸ்வேதா குறை?' என்று அவள் தன் பிம்பத்தைப் பார்த்துக் கேட்டுக் கொண்டாள்.

'உன் அழகிற்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள அந்த தடிப்பயல்களுக்கு கொடுத்து வைக்கவில்லை..' அவள் தன்னைத்தானே ரசித்துக் கொண்டிருந்தபோது.. மாணிக்கவாசகம் ஆத்திரமாக உள்ளே வந்தார்.

"காட்டுக்கத்தலாகக் கத்துகிறேன்.. உன் காதில விழவில்லையா?"

அவர் கத்தியது காட்டுக் கத்தல்தான் என்பதை நிரூபிப்பதைப் போல.. பரிமளம்.. கீழேயிருந்து மாடிக்கு ஓடி வந்தாள்.

"என்னங்க.. என்ன ஆச்சு? எதுக்கு இந்தச் சத்தம் போடுகிறீங்க?"

"குடிமுழுகிப் போச்சுடி.. அப்புறம் கத்தாமல் எண்ண பண்ண?"

"என்னதான் ஆச்சுன்னு சொல்லுங்களேன்.."

மாணிக்கவாசகம் மனைவியின் கேள்விக்கு பதிலளிக்காமல் மகளை உற்றுப் பார்த்தார்.

அவரது பார்வையின் கோபத்தைக் கண்டு ஸ்வேதா துணுக்குற்றாள்.

"என்னப்பா?"

"நீ எதுக்கும்மா மார்த்தாண்டத்தில் அந்த அறுபது நாளும் தங்கின?"

"அந்த மாலினியை விரட்டுவதற்காகப்பா.."

"பவித்ராவையும் ஏன் உன் கூடத் தங்க வைச்சே.."

"அவள் காலத்துக்கும் தினகரன் இருக்கும் திசைப்பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கக்கூடாது என்பதற்காக.."

"இரண்டையும் செய்துவிட்டாயா?"

"என்னப்பா இப்படிக் கேட்கிறீங்க.. மாலினி வேலையை விட்டுவிட்டே சென்னையைப் பார்த்து ஓடி விட்டாள். பவித்ரா குரங்கெல்லாம் ஒரு ஆளாப்பா? அவளும் காயத்ரியின் கல்யாணத்தன்னிக்கே கருங்கல்லுக்கு வந்துவிட்டாளே.."

"நீ நினைத்தது இரண்டுமே நடக்கவில்லைம்மா..."

"அப்பா..."

மாணிக்கவாசகம் கூறியதன் பொருள் புரிந்தவளாக ஸ்வேதா அலறினாள்.

பரிமளமோ கணவனை முறைத்தாள்.

"இப்ப என்ன அலுவலுக்கு வேலை மெனக்கேட்டு இதை வந்து இவகிட்ட சொல்கிறீங்க?"

"என்னடி சொல்ற?"

"உங்களுக்கு முன்னாலேயே எனக்கு இந்த விஷயம் தெரியும். நான் இவகிட்ட மூச்சுவிட்டேனா?"

"என்கிட்ட ஏண்டி மூச்சுவிடலை?"

"இதோ.. இப்ப ஆடிப் பறக்கறீங்களோ.. இப்படி ஆடிப்பறக்கறதை நிறுத்தத்தான். யார் வீட்டில் கல்யாணம்

நடந்தா நமக்கென்ன? நாம நம்ம பொண்ணு கல்யாணத்தை நடத்தப் பார்ப்போம்.."

"நானே வயித்தெரிச்சலில் வந்திருக்கறேன். என் வாயைக் கிளறாதே.."

"ஊரில நடக்கிற கல்யாணத்தைப் பத்தி வயித்தெரிச்சல் படாம நம்ம பொண்ணுக்கு நல்ல

இடதில் மாப்பிள்ளை தேடுகிற வழியைப் பாருங்க..."

"அம்மா.. பொறுங்க.."

அசையாமல் நின்றிருந்த ஸ்வேதா வாய் திறந்தாள்.

"ஆரம்பிச்சிட்டியா?"

பரிமளம் தலையில் கைவைத்தாள்.

"என்னப்பா நடந்தது?"

"நாளைக்கு மறுநாள் வெள்ளிக்கிழமையன்னிக்கு.. நர்மதாவின் குடும்பம் சென்னைக்குப் போகுது.."

"எதுக்காம்?"

"பிரபாகரனுக்காக மாலினியைப் பெண் கேட்கப்போகுது.."

"எப்படிப்பா.. இது எப்படி நடக்கும்?"

"நடக்குதேம்மா.. இதுக்கே அடிச்சுக்கிட்டா எப்படி? பிரபாகரனின் கல்யாணம் முடிஞ்ச

கையோடு.. தினகரனுக்கு பவித்ராவை நிச்சயம் பண்ணப் போகிறாங்களாம்.."

நிற்க முடியாமல் தள்ளாடி சுவரில் சாய்ந்தாள். ஸ்வேதா. 'இது எப்படிச் சாத்தியம்?' அவள் மனம் அரற்றியது..

எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தாளே.. உடைக்க முடியாத உறவை.. ஓர் இரவில் உடைத்து நொறுக்கினாளே. பிரிக்க முடியாத பந்தத்தை பிரித்துக் காட்டினாளே.

அது அத்தனையும் வீணா? ஸ்வேதா பட்ட பாடு அனைத்தும் விழலுக்கு இறைத்த நீரா?

சறுக்கல் இல்லாத திட்டத்தில் எப்படி ஸ்வேதா சறுக்கினாள்? உடைந்துவிட்ட கண்ணாடித் துண்டுகள் எப்படி மீண்டும் ஒட்டிக்கொண்டன?

"தோற்று விட்டேனேப்பா.." அவள் மறுகினாள்.

"இதுக்குத்தான் நாம் ஒன்று நினைத்தால்.. தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது. நீ நல்லதே நினைத்திருந்தால் நன்மையே நடந்திருக்கும்.. தீமையை நினைத்தாய். அது உனக்கு தீமையாய் வந்து முடிந்துவிட்டது.." பரிமளம் கனல் கக்கினாள்.

"நீ சும்மா இரு.." மாணிக்கவாசகம் மனைவியை அதட்டினார்.

"நீங்க சும்மாயிருங்க.." அவள் கணவனிடம் எரிந்து விழுந்தாள்.

ஸ்வேதா சுவரில் சரிந்து அமர.. பரிமளம் அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.. மகளின் முகத்தை நிமிர்த்தி அவள் விழிகளுக்குள் பார்த்தாள்.

"புரிந்ததா ஸ்வேதா.. மனுஷங்க கையில் எதுவும் இல்லை.. கடவுளின் கையில்தான் எல்லாம் இருக்குன்னு இப்போதாவது புரிந்ததா?"

"அம்மா..." ஸ்வேதா விசும்பினாள்.

"இந்த உலகத்திலேயே அந்த நர்மதாதான் கோடீஸ்வரியாடி..? அவ பெற்ற பிள்ளைகள்தான் மன்மதராசாக்களா? அவளைவிட பெரிய இடத்தில்.. அவ மகனுகளை விட அழகானவனாகப் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொண்டு குடும்பம் நடத்திக் காட்டு.. அப்ப

நீ ஜெயித்தவ. அவங்க கண்ணுக்கு முன்னால் அவங்களைவிட நல்லா வாழ்ந்து காட்டு.. அப்ப நீ ஜெயிச்சவ. அதை விட்டுவிட்டு சூனியக்காரியைப் போல

அவ குடும்பத்தின் நிம்மதியை அழிக்கணுமுன்னு கிளம்புகிறயே.. இதுவா புத்திசாலித்தனம்?"

"அப்ப.. நான் பட்ட வேதனை.. அவமானம்.. இதுக்கெல்லாம் பழிவாங்க வேண்டாமா?"

"அதல்லாம் எதனால் வந்தது..? மதியாதார் தலை வாசல் மிதிக்காதேன்னு ஔவையார் சொல்லியிருக்காங்க. யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமேன்னு கண்ணதாசன் சொல்லியிருக்கிறார். நீ இந்த இரண்டு பேரின் வாக்கையும் கேட்காமல் போயிட்டயே ஸ்வேதா.."

"அப்பா ஆசைப்பட்டாரேம்மா.."

"நீ ஆசைப்பட்டாயா.. உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. அந்த நர்மதாவின் மகன்கள் மேல் உனக்கு ஆசையா?"

ஸ்வேதா யோசித்தாள்.

எப்போதும் கண்ணுக்குத் தெரியாத பிரம்புடன் இறுக்கமான முகத்துடன் நடமாடும் பிரபாகரனின் மேல் அவளுக்குப் பிடித்தம் கிடையாது.

தினகரனோ.. அழகான பெண்களைக் கண்டு விட்டால் ஜொள்ளுவிட்டு தரையைக் கழுவிக் கொண்டு அவர்கள் பின்னாலேயே போய் விடும் உல்லாசி. அவனின் மேலும் அவளுக்கு பிடித்தம் கிடையாது.

"இல்லையேம்மா.."

"அப்புறம் எதுக்கு அவங்களைப் பற்றிக் கவலைப்படுகிற.. அப்பா சொன்னார்.. ஆட்டுக்குட்டி சொன்னாருன்னு. சொல்வார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போகாதேம்மா.. உனக்கு என்ன குறை?"

'ஒரு குறையும் இல்லையே..'

"உன் அழகுக்கு என்ன குறை?"

'அதைத்தானே நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்?'

"நீ அவங்களைவிட உயர்த்தியான இடத்தில் வாழ்க்கைப்படுவாய் ஸ்வேதா.. நன்றாக வாழ்வாய்.."

"அம்மா..."

ஸ்வேதா, பரிமளத்தின் மடியில் படுத்து கண்மூடிக் கொண்டாள். அவள் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. மகளின் துயரம் கண்டு மாணிக்கவாசகம் சங்கடப்பட்டார். பரிமளத்தின் பார்வை அவரைக் குத்திக் கிழித்தது. அவர் வெளியே கிளம்பினார்.

"எங்கே போகறீங்க..?"

"ஸ்வேதாவிற்கு மாப்பிள்ளை பார்க்க. பிரபாகரனின் கல்யாணத்திற்கு முன்னால் என் மகளின் கல்யாணம் நடக்க வேண்டும்.."

"இது ஆம்பளைக்கு அழகு.. ஒரு அப்பனுக்கு அழகு.."

பரிமளம் கொதிப்புடன் பேச.. மாணிக்கவாசகம் தலை கவிழ்ந்து வெளியேறினார்.

"நீ தேவதையாக இருக்கக் கற்றுக் கொள் ஸ்வேதா. பிரியம் காட்டிப் பார். உனக்கு அது திரும்பிக் கிடைக்கும். இனியாவது நீ நீயாக இரு.."

பரிமளம் மகளின் மனதில் உருவேற்றினாள். மெல்ல மெல்ல ஸ்வேதா மாறினாள். பரிமளம் மகளை மாற்றிக் காட்டினாள்.

123

**நிலவொளியில் உன்னுடன் நடந்திடவே...**

**நினைவுகள் ஏங்கும் நிலையினையே..**

**என்னவென்று நான் சொல்ல?**

மாலினி மனதிற்குள் ஒருவித பதற்றம் பரவுவதை உணர்ந்தாள். வரப்போகிற குடும்பம்.. அவளறிந்த குடும்பம் தான். அவளைப் பெண் பார்க்கப் போகிறவன்.. அவளுடன் கலந்து விட்டவன்தான். ஆனாலும் பெண்மைக்கே உரிய எதிர்பார்ப்பும் நடுக்கமும் அவளுக்குள் வேர்விட்டன.

"நீ கெட்டிக்காரிடி.. வேலை பார்க்கன்னு மார்த்தாண்டத்துக்குப் போய்.. மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டு வந்துவிட்டாயே.." பானுவின் குரலில் பொறாமை தொனித்தது.

"ச்சீ.. சும்மா இரு.. அப்பாவின் காதில் விழுந்துவிடப்போகுது.."

"ஆமாம்.. மாப்பிள்ளை எப்படி இருப்பார்?"

"மாப்பிள்ளை போலவே இருப்பார்.."

மாலினியின் குரலில் பெருமை தொனித்தது. அவள் மனக்கண்ணில் பிரபாகரனின் தோற்றம் தோன்றியது. அவள் மயங்கினாள். அந்த மயக்கத்தை உணர்ந்த பானு..

"ஊம்.. ஊம்.. நடத்து" என்று கேலி செய்தாள்.

"ரெடியாகிட்டயா?" காவேரி பரபரப்புடன் அறைக்குள் வந்தாள்.

மாலினி திரும்பித் தாயைப் பார்த்தாள். மெரூன் கவர் பிரிண்டட் சில்க் சேலை கட்டியிருந்தாள்.

அந்தச் சேலையில் பதிக்கப்பட்டிருந்த வெள்ளைக் கற்கள் ஒளிர்ந்தன. அழகாக வெட்டித் தைக்கப் பட்டிருந்த ரவிக்கையின் கைப்பகுதிகளிலும் கழுத்துப் பகுதியிலும் வெள்ளைக் கற்கள் பதிக்கப்ட்டிருந்தன... கழுத்திலும்.. காதிலும்.. கைகளிலும்.. மெரூன் கலர் கல் பதிக்கப்பட்ட.. செட்டாக எடுக்கப்பட்ட நகைகளை அணிந்திருந்தாள். நெருக்கிக் கட்டப்பட்ட மல்லிகைச்சரம் தோளில் வழிந்தது. நெற்றியின் மெரூன் வண்ண ஸ்டிக்கர் பொட்டின் நடுவில் வெள்ளைக்கல் ஒளிர்ந்தது. மகளின் அழகைக் கண்டு பிரமித்தாள் காவேரி.

"எப்படி.. மாப்பிள்ளை மயங்கி விழுந்து விடுவாரில்ல?" பானு சிரித்தாள்.

காவேரி அதைக் கண்டுகொள்ளாமல் வெளியேறவும்.

"அதுதான்.. ஏற்கனவே மயங்கிவிட்டாரே.." என்று கண்சிமிட்டினாள் பானு.

அவள் சொன்னதைப் போலவே.. பெண் பார்க்கவென்று வந்த எல்லோரின் மத்தியிலும் அமர்ந்திருந்த பிரபாகரன்.. அவளை விழுங்கிவிடுவதைப் போலப் பார்த்தான்.

'எப்படிப் பார்க்கிறான் பார்..' மாலினி தரை நிமிர சங்கடப்பட்டாள்.

ஆளவந்தார்.. விசாலாட்சி.. காயத்ரி.. ஷியாம்சுந்தர்.. கருணாகரன்.. சசிரேகா.. நர்மதா..

தினகரன் என்று அனைவரும் வந்திருக்கும்போது பிரபாகரன் இப்படிப் பார்த்து வைத்தால். அவளும் தான் என்ன செய்வாள்?

"பெண்ணுக்குப் பாடத் தெரியுமா?" வேண்டு மென்றே பிரபாகரன் கேட்டான்.

அவளை நிமிர்ந்து பார்க்க வைக்க.. அவன் செய்யும் யுக்தி அது என்று கண்டுகொண்ட மாலினியின் லஜ்ஜை அதிகமானது. அவள் கன்னம் சிவந்தாள்.

"பார்த்தியா காயத்ரி.. உன்னைப் பெண்பார்க்க வந்த போது இதைக் கேட்கணும்னு எனக்குத் தோணலையே.. உன் அண்ணன் எப்படிக் கேட்கிறார் பாரேன்.." ஷியாம் சுந்தர், காயத்ரியிடம் கூறுவதைப் போலப் பலமாகக் கூறினான்.

"உங்களுக்கு அது தெரியலைன்னா அதுக்கு நாங்க என்ன பண்ணுவதாம்?" காயத்ரி செல்லக் கோபத்துடன் கணவனை முறைத்தாள்.

"ஒருவேளை.. பாட்டுக்கும் மாப்பிள்ளைக்கும் ரொம்பத்தூரமோ என்னவோ.." தினகரன் கேலி செய்தான்.

"ஆமாமாம்.. என்னதான் இருந்தாலும்.. உங்க அளவுக்கு சங்கீத ஞானம் எனக்கு வராதுதான்.. ஏன் காயத்ரி.. உன் தினகரன் அண்ணனைப் பாடச் சொன்னால்.. என்ன பாட்டு பாடுவார்.. அவ என்னை.. என்னைத் தேடி வந்த அஞ்சலைன்னு பாடுவாரா?" பதிலுக்கு ஷ்யாம்சுந்தர் கிண்டலடித்தான்.

"அந்தக் காலத்தில நான் உன் பெரியம்மாவைப் பொண்ணு பார்க்கப் போயிருந்தப்போ.. உன் பாட்டி.. அது தான் என் அம்மா.. உன் பெரியம்மாவை என்னவெல்லாம் செய்யச் சொல்லுச்சு தெரியுமா?" ஆளவந்தார், நர்மதாவிடம் கூறியவாறு மலரும் நினைவுகளில் ஆழ்ந்தார்.

"என்ன செய்யச் சொன்னாங்க பெரியப்பா.." நர்மதா மரியாதைக்காக கேட்டு வைக்கப் போக.. உடனே ஆளவந்தார் ஆரம்பித்துவிட்டார்.

"பொண்ணுக்கு ஆடத் தெரியுமா.. பாடத் தெரியுமான்னு ஒரே கேள்வி.. அத்தனைக்கு பின்னாலயும் ஒரு அர்த்தம் இருந்தது நர்மதா.."

"அது என்ன பெரியப்பா.."

"ஆட்டத்தைப் பார்க்கிற சாக்கில்.. பெண்ணுக்கு கை கால் நல்லா இருக்கான்னு பார்த்துவிடலாம். பாட்டைக் கேட்கிற சாக்கில் பெண்ணோட பல் வரிசையையும் குரலையும் பார்த்து.. கேட்டுவிடலாம். எப்படி எங்க அம்மாவோட ஐடியா.."

விசாலாட்சி முறைக்கவும்தான் ஆளவந்தார் அடங்கினார். தினகரன் சிரித்துவிட்டான்.

"எல்லாம் சரிதான் தாத்தா.. முன்பின் பார்க்காத பெண்ணுன்னா.. நீங்க சொல்வது சரிதான். எங்களுக்குத் தான் அண்ணி எப்படி நடப்பாங்க. எப்படிப் பேசுவாங்கன்னு தெரியுமே. அப்புறம் எதுக்கு இந்த பரீட்சை?"

ஆனால்.. அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே உள்ளே போய்விட்ட காவேரி.. வீணையுடன் திரும்பி வந்தாள்.

"என்னங்க இது.. என் மகன் என்னவோ விளையாட்டுக்கு கேட்டான்?" நர்மதா ஆச்சரியத்துடன் சொன்னாள்.

"விளையாட்டாய் கேட்டாலும்.. அவங்க கேட்டதைச் செய்யணும் இல்லையா.. மாலினி

சின்ன வயதிலிருந்து வீணையும் பாட்டும் கற்றுக் கொண்டிருக்கிறா.. கத்துக் கிட்ட வித்தையை அவளும் காட்டட்டுமே.." காவேரி மரியாதையுடன் கூறினாள்.

பிரபாகரன் ஆர்வமாக கால் மேல் கால் போட்டு சாய்ந்து அமர்ந்து விட்டான். நர்மதாவுக்கும் காயத்ரிக்கும் ஆச்சரியம். அவர்களுக்கு மாலினிக்கு வீணை வாசிக்கவும், பாடவும் தெரியும் என்பது தெரியாது. அதை தெரிந்து கொண்டதும் அவள் பாடுவதைக் கேட்க அவர்கள் விரும்பினார்கள்.

மாலினி.. வீணையை மீட்டி சுருதி சேர்த்தாள்.. பின்னர் மெல்லிய.. இனிமையான குரலில் பாட ஆரம்பித்தாள்.

"கண்ணன் மனநிலையை தங்கமே தங்கம்...

கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்..

எண்ணம் உரைத்துவிடில் தங்கமே தங்கம்..

ஏதேனும் செய்வோமடி தங்கமே தங்கம்.."

அவளுடைய கண்ணன் புருவம் உயர்த்தி அவளது இசையை வியந்தான் அவன் மனதில். அணைக்கட்டின் அருகே.. அவள் பாடிய.. 'அழகிய அசுரா..' பாடல் ஒலித்தது.

"நேரம் முழுதும் அப்பாவி தன்னையே

நெஞ்சம் நினைந்து உருகுதடி தங்கமே தங்கம்..

தீர ஒரு சொல் இன்று கேட்டு வந்திட்டால்

அந்த தெய்வம் இருக்குதடி தங்கமே தங்கம்.."

அவள் மனம் பாகாய் கரைந்தது அவளது பாடலில் தெரிந்தது. பிரபாகரன் மனம் மயங்கினான்.

"ஆற்றங்கரை அருகே..

அன்று ஒருநாள்..."

மாலினியின் விழிகள் உயர்ந்து பிரபாகரனைப் பார்த்தன. அவனைப் போலவே அவளும் அணைக்கட்டை நினைத்துவிட்டதை புரிந்துகொண்ட பிரபாகரன் கிளர்ந்தான்.

"எனை அணைத்து

பல கதைகள் பேசியதெல்லாம்..."

அன்று அவன் கூறிய கதைகளை நினைத்து அவளது கன்னம் சிவந்தது. அதை உணர்ந்த பிரபாகரனின் நெஞ்சம் இனித்தது.

"தூற்றி நகர் முரசு சாட்டுவேனென்று

சொல்லி வருகுவாயடி தங்கமே தங்கம்.."

அவர் மிரட்டலாகப் பாடி முடித்தபோது.. அங்கிருந்த அனைவருமே அவளது பாடலில் சொக்கிப் போயிருந்தார்கள்.

124

**பார்வையிலே எனைக் கொல்லும்..**

**உன் பார்வையின் தன்மையினை..**

**என்னவென்று நான் சொல்ல?**

நர்மதா, மாலினியின் கழுத்தில் வைர அட்டிகையைப் போட்டு திருமணத்தை உறுதி செய்தாள். நிச்சயதாம்பூலத் தட்டுக்கள் மாற்றிக் கொள்ளப் பட்டு.. நிச்சயதார்த்த பத்திரிகையும் வாசிக்கப்பட்டது. திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது.

கிளம்புவதற்கு முன்னால் மாலினிக்கு அருகே வந்த பிரபாகரன், "இன்னும் எண்ணி பதினைந்தே நாள்கள் தான்.." என்று முணுமுணுத்து விட்டுச் சென்றான்.

அவன் அப்படி ரகசியக் குரலில் பேசியது மாலினிக்கு பிடித்திருந்தது.

"என்னடி.. உன் ஆள் உன்னிடம் ஏதோ ரகசியம் பேசியதைப் போல இருந்ததே.. என்னவாம்?" பானு குடைந்தாள்.

"நீயே அதை ரகசியம்னு சொல்லிட்ட.. ரகசியத்தை யாராவது வெளியே சொல்வாங்களா?" மாலினி சிரித்து தப்பித்தாள்.

"ஃப்ரெண்ட்ஸுக்குள் என்னடி ரகசியம் வேண்டிக்கிடக்கு?" பானு விடாக்கண்டியானாள்.

'காதல் நட்பைவிட ரகசியமானது...' மாலினியின் இதழ்களில் ரகசியப் புன்னகை உதித்தது.

"ம்ஹும்.. நீ முன்னே மாதிரி இல்லைடி.." பானு பொருமினாள்.

"ஏன்.. அதே கண்ணு.. அதே மூக்கு.. அதே வாய்.. வேணும்னா இந்த டி.வி. விளம்பரத்தில் வருகிறதைப் போல ஏதாவது ஸ்நாக்ஸ் பாக்கெட்டை கையில் கொடு. பிடித்துக்கிட்டு போஸ் கொடுக்கறேன்.. அதுக்குப் பின்னாலாவது நான் நான்தான்னு நீ நம்புவாயா?" மாலினி கலாய்த்தாள்.

"இந்த வாய்க்கொண்ணும் குறைச்சலில்லை.." பானு அலுத்துக் கொள்ள..

"இந்த வாய்தாண்டி என்னை வாழ வைக்குது.." என்று பிரபாகரனின் நினைவுகள் மனதை வருட..

தொலைதூரத்தில் பார்வையைப் பதித்து மாலினி கூறினாள்.

"ஆரம்பிச்சுட்டாம்மா.. ஆரம்பிச்சுட்டா.." பானு தலையில் கை வைத்துக் கொள்ள...

"எதை.. யார் ஆரம்பிச்சது.." என்று காவேரி கேட்டாள்.

"வேற யார் ஆரம்பிச்சது.. எல்லாம் நம்ம மாலினி தங்கம்தான்.." பானு தோழியைக் காட்டினாள்.

"என்ன மாலினி?" காவேரி விசாரிக்க..

"ஒன்றுமில்லைம்மா.. இவள் ஏதோ உளறுகிறாள்.." மாலினி, பானுவை முறைத்தாள்.

"யார்.. நான் உளறுகிறேனா? சொல்லுவடி சொல்லுவ. நீ இதையும் சொல்லுவ.. இதுக்கு மேலயும் சொல்லுவ. புரியாத பாஷையில் உளறிக்கிட்டு இருப்பது நீயா.. இல்லை நானா?"

"நீயென்ன கோபிநாத்தா?"

"நீயென்ன சந்திரமுகியா?"

தோழிகள் இருவரும் சண்டைக்கோழியாய் முறைத்துக் கொள்ள.. காவேரி சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

ஜானகிராமன் திருமணத்திற்கான பட்ஜெட் போடும் வேலையில் அமர்ந்தார். அவரைச் சுற்றி.. குடும்ப உறுப்பினர்கள் அமர்ந்தார்கள்.

"சொல்லு காவேரி.. மாலினிக்கு இன்னும் என்ன நகை போடணும்?" ஜானகிராமன் ஆரம்பித்து வைத்தார்.

"ம்ம்.. அவளுக்கு அட்டிகை மூன்று இருக்கு.. டாலர் செயின்.. ஆரம்.. அரை டஜன் வளையல்கள்... கம்மல்கள்னு செய்து வைத்துட்டோம். இனி என்ன வாங்கலாம்.." காவேரி யோசனையில் அமிழ..

"அப்பா.." என்று தயக்கத்துடன் அழைத்தாள் மாலினி.

"என்னம்மா.. உனக்கு எதுவும் நகைமேல ஆசையாயிருக்கா?" ஜானகிராமன் பாசத்துடன் வினவினார்.

"சொல்லும்மா.. அப்பா கேட்கிறாரில்ல.." காவேரி பாசத்துடன் மகளின் தலையைத் தடவினாள்.

'ம்ஹூம்.. இந்தத் தாங்கலை என் வீட்டில் தாங்கறாங்களா..' ராதிகா மனதிற்குள் குமைந்து கொண்டாள்.

"எனக்கு இருக்கிற நகையே அதிகம்ப்பா.. இதுக்கு மேல நகை எடுக்க வேண்டாம்.." மாலினி மறுத்துப் பேசினாள்.

"நீ குழந்தை.. உனக்கு என்னம்மா விவரம் தெரியும்?" ஜானகிராமன் ஆட்சேபிக்க.. காவேரி அதை ஆமோதித்தாள்.

'குழந்தைக்கு எதுக்கு கல்யாணம் பண்ணப் பார்க்கிறாங்க..' ராதிகா மாமனாரும் மாமியாரும் நாத்தனாரைக் கொஞ்சியதில் எரிச்சல் பட்டாள்.

"அவங்க பெரிய இடம் மாலினி.. அதுக்குத் தகுந்தாற் போல இல்லாட்டியும் ஓரளவுக்காவது நாமும் சீர் செய்யணும்மா.." காவேரி.. தன் மகளை குழந்தையாகவே பாவித்து.. குழந்தைக்கு சொல்வதைப் போல எடுத்துச் சொன்னாள்.

'இன்றைக்கு கல்யாணம் பண்ணி வைத்தா.. பத்தாம் மாசம்.. இவ ஒரு குழந்தையைப் பெற்று கையில் தந்து விடுவா. குழந்தையாம் குழந்தை...' மனதில் நினைப்பதை வெளியில் சொல்ல முடியாமல் ராதிகா பல்லைக் கடித்தாள்.

"அம்மா.. அப்பா சொல்வதும் நியாயம் தான் மாலினி.." ரஞ்சித் பொறுப்பான அண்ணனாகப் பேசி வைக்கவும், ராதிகா பதறிப் போனாள்.

'அடக்கடவுளே.. இந்த மனுஷனும் தலை கொடுக்கப்பார்க்கிறாரே.. உடனே இந்தப் பேச்சை அமுக்கியாகணுமே..'

"ஏங்க.. என்னதான் ஊர்க்குருவி உயர உயரப் பறந்தாலும் அது பருந்துக்கு சமமாகிவிடுமா?" ராதிகா எதையோ

சொல்ல நினைத்து.. எதையோ சொல்லிவைக்க..

"இப்ப யாரை ஊர்க் குருவிங்கறே.. யாரைப் பருந்துங்கிற?" ரஞ்சித் முதன்முறையாக.. தாய் தகப்பனின் முன்னிலையில் கடுமையாக மனைவியைப் பார்த்துக் கேட்டுவிட்டான்.

'ராமா.. மனசில நினைக்கிறது.. வாக்கில வந்து தொலைக்குதே..' ராதிகா சுதாரித்தாள்.

"நான் ஒன்றைச் சொன்னா.. நீங்க வேற ஒன்றை அர்த்தப்படுத்திக்கங்க.. இதுவே உங்களுக்கு பிழைப்பாய் போச்சு..."

"நீ என்னடி சொன்ன? நான் என்னடி நினைச்சேன்.."

"என்னதான் நாம வகைவகையாய் தங்கத்தை வாங்கி பூட்டிவிட்டாலும் வைரங்கள் ஜொலிக்கிற அந்த வீட்டில் எடுபடுமா?"

ராதிகா இப்படிக் கேட்டதும்..

'அதுதானே..' என்பதைப் போல காவேரியும் ஜானகி ராமனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துவிட்டு.. சேர்ந்து மகனின் முகத்தைப் பார்த்தார்கள்.

ராதிகா என்னவோ.. 'ஆதலினால்.. இந்த நகை செய்யும் யோசனையை கைவிட்டுவிட்டு.. ஆகவேண்டிய ஜோலியைப் பாருங்கள்..' என்ற அர்த்தத்தில்தான் சொல்லிவைத்தாள்.

ஆனால்.. அதன் விளைவுதான் நேர்மாறா அமைந்து போனது. "ஆயிரம்தான் சொல்லு ரஞ்சித்.. உன் பெண்டாட்டியின் அறிவு யாருக்கும் வராது.." என்று காவேரி ஆரம்பித்து வைக்க.

'ஆஹா.. என் மாமியார் என்னைப் புகழ்ந்தா அது வஞ்சகப் புகழ்ச்சி அணியாகத்தானே இருக்கும்..' என்று ராதிகா திகிலடைந்து போனாள். அடுத்து காவேரி பேசிய வார்த்தைகள் அதை உறுதிப்படுத்தின.

125

**மழைச்சாரல் எனை நனைப்பதைப் போல்..**

**மனதில் உன் நினைவு வந்து நனைப்பதையே...**

**என்னவென்று நான் சொல்ல?**

"இந்த யோசனை நமக்குத் தோணாம போச்சே.." காவேரி பெருமையாக மருமகளைப் பார்த்து வைக்க.. ராதிகாவின் வயிற்றில் புளி கரைந்தது.

'என்ன யோசனை?' அவள் புரியாமல் திருதிருத்தாள்.

"வைரங்கள் கொட்டிக் கிடக்கிற வீட்டில் வெறும் தங்கத்தோட நம்ம பெண்ணை அனுப்பலாமா?" காவேரி கேட்ட கேள்வியில் ராதிகாவிற்கு மயக்கமே வந்துவிட்டது.

'ஆஹா.. நாம ஒன்று நினைத்தா.. தெய்வம்தான் வேற நினைக்கும். ஆனால்.. என் மாமியார்.. நான் ஒன்றைச்சொன்னால்.. அதுக்கு வேற ஒரு அர்த்தத்தை கண்டு பிடித்து என்னை கவிழ்த்துவிட்டாளே.. இத்தனை நாளாய் இம்புட்டு அறிவை எங்கிட்டு பத்திரப்படுத்தி வைத்திருந்தா இந்த மகராசி?'

ராதிகாவின் அதிர்ந்த பார்வையை அலட்சியமாக எதிர்கொண்ட காவேரியின் பார்வை.

'என் வயசிற்கு உன்னைப் போல எத்தனை ஆள்களைப் பார்த்திருப்பேன். யாருகிட்ட உன் டகுல்பாச்சி வேலையைக் காட்டறே.. நான் காவேரியாக்கும். இத்தனை நாளாய் நான் ஏன் ஊமையாய் போனேன் தெரியுமா. என் மகளின் கல்யாணத்தில் என் மகன் முன்னால் நிற்கணுமுன்னுதான். இப்ப அந்த வேளை கூடி வந்திருச்சு. இனி மேலும் நான் ஊமையாகவே இருப்பேன்னு நினைச்சயா?' காவேரியின் இதழ்களில் மர்மப் புன்னகை தவழ்ந்தது.

அந்தப் புன்னகையின் மர்மத்தை ராதிகா மட்டுமே அறிவாள். ஆனாலும் அறிந்தும் அறியாதவளைப் போல இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவள் ஆளானாள்.

'ம்ஹூம்.. தங்க நகையை எடுக்க விட்டிருந்தா.. ஆயிரக்கணக்கில்தான் செலவாகும். இப்ப வைரத்தில் வந்து நிற்குது.. எத்தனை லட்சங்கள் செலவாகுமோ..'

விட்டால் ராதிகா அழுதிருப்பாள். ஆனால், கணவனின் கோபத்திற்கு ஆளாக மனமில்லாமல் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக இருப்பதைப் போல நடித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்க சொல்வதும் சரிதான்.. ஆனால் வைர நகை வாங்க பணம் நிறைய வேணுமேம்மா.." ரஞ்சித் கவலையுடன் கேட்டதும் ராதிகாவிற்கு போன உயிர் திரும்பி வந்தது.

அவள் இயல்பாக யோசனை சொல்வதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு பேச்சில் கலந்து கொண்டாள்..

"ஆமாமில்ல.. நான் அதைப் பற்றி யோசிக்கலையே.. நம்ம வீட்டுப் பெண்ணுக்கு வைரம் போட்டு விடணும்கிற ஆசையில நம்ம வசதியைப் பத்தி மறந்துவிட்டேன்.." என்று ஆரம்பித்தவள்...

"ஏன் மாலினி.. உனக்கு மாப்பிள்ளையின் அம்மா வைர அட்டிகை போட்டாங்களே.. அந்த டிஸைன் உனக்கு பிடிச்சிருக்கா..?" என்று அப்பாவி போல கேட்டு.. கணவனுக்கு அந்த அட்டிகையைப் பற்றி நினைவுபடுத்தினாள்...

"ஏற்கெனவே மாலினிக்கு அவங்க வீட்டில் இருந்து வைர அட்டிகை போட்டுட்டாங்களேம்மா.. புதுசா நாம செய்ய வேண்டிய அவசியமில்லையே..." என்று யதார்த்தமாக ரஞ்சித்தும் கூறிவிட்டான்...

காவேரிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. அவள் அடுத்த அஸ்திரத்தை பிரயோகிக்க முயலும் முன் ராதிகா முந்திக் கொண்டாள்..

"ஏன் அத்தை.. நாம மாலினிக்கு அறுபது பவுனில் நகை செய்து வைத்திருக்கிறோம்.. சசிரேகாவுக்கு ஆறு பவுன் கூட அவள் பிறந்த வீட்டில் போடவில்லையாமே.. அது நிஜமா..?" என்று அறியாப் பெண் போல காவேரியைப் பார்த்துக் கேட்டு வைத்தாள் அவள்..

மருமகளின் சாதுர்யத்தை கண்கூடாகக் கண்டிருந்த காவேரி.. இந்த தாக்குதலுக்கு எதிர்தாக்குதல் கொடுக்க முடியாமல் திணறிப் போனாள்..

நல்லவேளையாக ஜானகிராமன் அவளுடைய உதவிக்கு வந்தார்...

"எங்க அண்ணன் குடும்பத்தில் அவ்வளவு செய்ததே அதிகம்மா.. சசிக்கு கூடப் பிறந்தவங்கன்னு யாருமில்லை.. என் அண்ணனும் விவசாயி.. நிலமும் அதிகமாக இல்லாதவர்.. ஒரு ஏக்கர் நிலமும் ஒரு ஓட்டு வீடும்தான் அவருக்கு சொந்தம்.. நான் அப்படியில்லையேம்மா.. கைநிறைய சம்பாதித்து சென்னையில் சொந்தமா வீடு கட்டியிருக்கேன்.. என் மகனையும் மகளையும் படிக்க வைத்திருக்கிறேன்.. என் மகனுக்கு நல்ல வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.. என் அண்ணன் சக்திக்கு அவர் சீர்செய்தார்.. என் சக்திக்கு நான் சீர்செய்ய வேண்டாமா..?" என்று மருமகளுக்கு பதில் சொன்னார்..

காவேரி கணவனை மனதிற்குள் மெச்சிக் கொண்டு மருமகளை வெற்றிப் பார்வை பார்க்க.. தோல்வியை அவ்வளவு சீக்கிரத்தில் ஒப்புக்கொள்வேனா என்று ராதிகா அடுத்த கணையைத் தொடுத்தாள்..

"அறுபது பவுனே நம் சக்திக்கு அதிகம்தானே மாமா..."

"என்னம்மா இப்படிச் சொல்கிற.. இப்ப சென்னையில இடம் வாங்கி வீடு கட்டணுமுன்னு கனவில்கூட நினைக்க முடியாது.. ஏதோ என் காலத்தில்.. என் பிள்ளைகள் சின்னஞ்சிறுசுகளாய் இருக்கிறபோதே.. இடத்தை வாங்கிப் போட்டு வீட்டைக் கட்டிட்டேன்.. இந்த வீட்டோட மதிப்பு இப்ப எத்தனை லட்சம்னு உனக்குத் தெரியுமா..? எனக்குப்

பின்னால் இந்த வீட்டை மாலினிக்கா கொடுக்கப் போகிறேன்...?"

அந்தக் கேள்வியில் ராதிகா அரண்டுவிட்டாள்.. வைரத்தை நிறுத்தப் போய்.. வீடு கைநழுவி விட்டால் என்ன செய்வது..?

"அது எப்படி மாமா கொடுக்க முடியும்..? மகனுக்குத்தானே கடைசி வரைக்கும் பெத்தவங்க கூட இருக்கும் கடமை இருக்கு? அதனால் நீங்க வீட்டை உங்க மகனுக்குத்தான் கொடுக்க முடியும்..."

'அப்படி வா வழிக்கு.. உனக்கு கடமையைப் பத்திக் கூட நினைவிருக்கா..?'

காவேரி எரிச்சல்பட்டாலும்.. மருமகளின் வாய்மொழியிலிருந்து அவள் வீட்டைக் கைப்பற்றுவதற்கென்றாவது தனிக்குடித்தனம் போகாமல் கூடவே இருப்பாள் என்று மனதிற்குள் நிம்மதியடைந்தாள்..

"அதனால்தான்ம்மா சொல்கிறேன்.. வீடு மகனுக்கு.. சீர்வரிசை மகளுக்கு.." ஜானகிராமன் பேச்சை முடித்துக் கொண்டார்...

வைர அட்டிகை இருப்பதால்.. வைரத்தோடும் வைர வளையல்களும் வாங்கலாம் என்பது முடிவாகியது..

மாலினி தன் கையிலிருந்த பேங்க் பாஸ் புத்தகத்தை ஜானகிராமனிடம் கொடுத்தாள்...

"என்னம்மா இது..?"

"என் சம்பளப் பணம் அப்பா.. எனக்குத்தான் அங்கே செலவே இல்லையே.. சேர்த்து வைத்திருந்தேன்..."

"உன் பணத்தை வாங்கி.. உனக்கே சீர்செய்தால்.. அது தாய்வீட்டுச் சீதனமாக ஆகாதும்மா.. இதை பத்திரமாக நீயே வைத்துக்கோ.. சீர்செய்ய நானும் உன் அண்ணனும் இருக்கிறோம்..."

ஜானகிராமன் பாஸ் புத்தகத்தை மகளிடமே கொடுத்து விட்டார்...

## 126

**உன் பாதம் பின்பற்றி நான் நடக்கும்போது..**

**சுடுமணல்கூட பனித்துளியாய் மாறுவதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அது ஒரு அருமையான தருணம்.. தன் வீட்டுப் பெண்ணிற்கு பார்த்துப் பார்த்துச் சீர்செய்யும் தாய்வீடு அமைவது பூர்வஜென்ம புண்ணியம்.. ஒற்றைக் காசாக இருந்தாலும்.. அது பிறந்தவீட்டிலிருந்து அனுப்பப்படும் சீர்பொருளாக இருந்தால்.. ஒரு பெண் மனது எவ்வளவு சந்தோஷம் கொள்ளும் என்பதை வார்த்தைகளில் வடித்து விட முடியாது...

அந்த ஒற்றைக்காசில்.. பிறந்தவீட்டில் அவளுக் கிருக்கும் உரிமை தெரியும்.. அந்த ஒற்றைக்காசில்.. பிறந்த வீட்டில் அவளுக்கிருக்கும் சொந்தம் தெரியும். அந்த ஒற்றைக் காசில்.. பிறந்த வீட்டில் அவளை மறக்காத நினைவு தெரியும்.. அந்த ஒற்றைக் காசில் பிறந்தவீட்டில் அவள்மேல் இருக்கும் அக்கறை தெரியும்..

அப்படிப்பட்ட பிறந்தவீட்டைப் பெற்ற பெண் பாக்கியசாலி...

மதுரை மீனாட்சிக்கும் சொக்கநாதருக்கும் நடந்த திருமணத்திற்கு மீனாட்சியின் அண்ணனான அழகர் தாய்வீட்டுச் சீர்வரிசையைக் கொண்டு சென்றதாக புராணம் கூறுகிறது...

"அழகர் ஆற்றில் இறங்குகிறார்..."

வைகைக் கரையில் இருக்கும் மக்களிடம் கேட்டுப் பாருங்கள்.. இந்த நாள் எப்பேர்ப்பட்ட நாள் என்று..

அழகரான பெருமாள் குதிரையில் ஏறி ஆளை மயக்கும் அழகோடு பவனி வரும் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும்...

சித்திரைத் திருவிழாவின் ஓர் அங்கமான இந்த நாளில் தவறாமல் மழை பொழிகிறதே.. அது எப்படி..?

அழகர் ஆற்றில் இறங்கினால்.. அன்று மழை பொழியும்.. இது மதுரை மாநகர மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.. அந்த நம்பிக்கை இது நாள்வரை பொய்த்த தில்லை.. மழை பொழியாமல் மேகமும் பொய்த்ததில்லை...

அழகர் எதற்காக ஆற்றில் இறங்கினார்..?

அவருடைய தங்கையான மீனாட்சியின் திருக் கல்யாணத்திற்காக சீர் எடுத்துக் கொண்டு சீர்செய்ய ஆற்றைக் கடந்து அக்கரைக்கு செல்வதற்காக ஆற்றில் இறங்கினார்..

தெய்வங்களுக்கே தாய்வீட்டுச் சீதனம் தேவைப் படும்போது.. சாதாரண மனிதகுலப் பெண்களுக்கு அது தேவைப்படாதா..?

தாய்வீட்டுச் சீதனம் என்பது வீட்டில் பிறந்த பெண்களை அந்தப் பிறந்த வீடு எவ்வாறு நினைவு கூர்ந்து கௌரவிக்கிறது என்பதற்கான ஓர் அடையாளம்..

மாலினிக்கும் அதைக் குறைவில்லாமல் செய்ய வேண்டும் என்பதில் ஜானகிராமன் உறுதியாக இருந்தார்...

மாலினியின் புகுந்த வீடு கோடீஸ்வரக் குடும்பமாக இருக்கலாம்.. அவர்கள் சீர்வரிசையை எதிர்பார்க்காத பரந்த மனம் கொண்டவர்களாக இருக்கலாம்...

அதற்காக ஜானகிராமன் செய்யவேண்டிய சீர் வரிசையை செய்யாமல் விடமாட்டார்.. அதில் ஒரு சிறு குறைவு வருவதைக்கூடப் பொறுத்துக் கொள்ள மாட்டார்...

அவர் பார்த்துப் பார்த்து சீர்வரிசைகளை வாங்கினார்.. எல்லாவற்றிலும் மனைவியின் கருத்தைக் கேட்டுக் கொண்டார்.. அவருடைய சேமிப்பை எடுத்து தாராளமாக செலவு செய்தார்..

"அப்பா.. இது அதிகம்.." மாலினி சொல்லிப் பார்த்தாள்..

"நீ இதில் தலையிடாதேம்மா.." என்று கண்டிப்பாக அவர் கூறிவிட்டார்...

மாலினியின் வீடு திருமணத்திற்கு தயாராகி விட்டது.. காவேரி மகளை ஜவுளிக்கடைக்கு அழைத்துச் சென்று விருப்பப்பட்ட பட்டுப் சேலைகளை எடுத்துக் கொள்ளச் சொன்னாள்..

"அப்பா ஏற்கெனவே வைர வளையல்கள்.. கம்மல்கள்னு இருக்கிறார்.. இதுவும் எதுக்கும்மா..?" மாலினி தயங்கினாள்..

"இது என் சேமிப்பும்மா.. இது நாள் வரை உன் கல்யாணத்துக்காக நான் போஸ்டாபீஸில் ஆர்.டி. கட்டி சேர்த்து வைத்த பணம்.."

"அம்மா..."

"பத்து ரூபாய் உன் அப்பா கொடுத்தால்.. அதில் இரண்டு ரூபாயாவது மீதம் பிடிக்கலைன்னா நான் என்ன பொம்பளை..? உண்மையான சம்பாத்தியம் சேமிப்புத்தான் மாலினி.. நான் சேர்த்து வைத்தது உனக்காகத்தான்.. உனக்குப் பிடிக்கற சேலைகளை எடுத்துக்க.. விலையைப் பற்றிக் கவலைப்படாதே.."

"என்கிட்ட ஏற்கெனவே பட்டுச் சேலைகள் இருக்கும்மா.."

"இருக்குத்தான்.. ஆனால், கல்யாணமாகிப் போகும் பெண்.. சீர்வரிசைகளோடு எத்தனை புதுப் பட்டுப் புடவைகள் கொண்டு வருகிறான்னு கணக்கு உண்டு.. உனக்கு ஊர் வழக்கம் தெரியாது... எடுத்துக்க.."

காவேரி பரிவுடன் மகளைப் பார்த்தாள்.. மாலினிக்கு காயத்ரியின் திருமணத்தின்போது.. அவள் எடுத்துக் கொண்ட பட்டுப் புடவைகளின் நினைவு வந்தது...

இன்று.. தனது முறை என்ற நினைவில்.. மனம் நிறைய பிடித்த சேலைகளை எடுத்துக் கொண்டாள் மாலினி..

திருமண நாள் நெருக்கத்தில் வந்து.. வீட்டில் உறவினர்கள் வந்து இறங்கினார்கள்.. பிரபாகரன் மணிக்கொரு தரம்

போனில் அவளை அழைத்தான்.. சுற்றிலும் உறவினர் இருக்கும்போது.. செல்போனில் அவன் அழைக்க... தனிமை நாடிச் செல்வதில் சங்கடப் பட்டுப் போனாள் மாலினி..

"ஏண்டி போனை அட்டெண்ட் பண்ண இவ்வளவு நேரம்..?"

"உங்க கிட்ட பாட்டுப் பாடிக் காட்ட ஆசை.. அதுதான் நேரமாகிருச்சு.."

"என்னடி.. எதுக்கும் எதுக்குமோ சம்பந்த மில்லாமல் முடிச்சுப் போடுகிற..? என்ன ஆச்சு உனக்கு..?"

"அழைக்காதே.. நினைக்காதே..

அவைதனிலே.. எனை ஏ ராசா..

ஆருயிரே.. மறவேனே..

இதம் தரும் ஜோதியை மறந்திடுவேனோ..

எனை மனம் நாடிட.. சமயம் இதுதானா..?

காதலினாலே.. கானத்தினாலே..

சோதனையாகவே நீ அழைக்காதே.."

மாலினி இஷ்டத்திற்கு வரிசைப் போட்டு பாடி வைக்க.. பிரபாகரன் வாய்விட்டு கடகடவென்று பலமாக சிரித்தான்...

127

**பூந்தென்றல் காற்று உடலில் பட்டும்..**

**பூந்தளிர் மேனி வியர்ப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

பெண்ணழைக்க கார் வந்துவிட்டது.. காவேரி கண் கலங்கினாள்.. இதற்கு முன்னாலும் அவளை மாதக்

கணக்கில் பிரிந்து.. மாலினி மார்த்தாண்டத்திற்கு சென்றிருக்கிறாள்.. அப்போதெல்லாம் அவள் வேலைக்குப் போகிறாள்.. திரும்பவும் வீட்டுக்கு வந்துவிடுவாள் என்ற உணர்வு இருந்ததால் காவேரி கலங்கவில்லை..

இப்போது அப்படியில்லையே.. இதுநாள் வரை அவளுக்கு செல்ல மகளாக இருந்தவள்.. இப்போது வேறொரு வீட்டிற்கு மருமகளாகப் போகிறாளே..

பூஜையறையில் விளக்கேற்றி வைத்துவிட்டு மகளுக்கு நெற்றியில் குங்கும பிரசாதத்தை இட்டுவிட்டு..

"சாமி கும்பிட்டுக்கம்மா.." என்றாள் காவேரி..

மாலினி.. தெய்வங்களை வணங்கிவிட்டு பெற்றவர்களைச் சேர்ந்து நிற்க வைத்து வணங்கி எழுந்தாள்..

"அண்ணனும் அண்ணியும் எங்கேம்மா..?"

ரஞ்சித்.. ராதிகாவை பார்வையால் அழைக்க.. அவள் வந்து கணவனுடன் சேர்ந்து நின்றாள்.. மாலினி.. அவர்களின் பாதம் பணிந்தபோது ரஞ்சித்.. அழுது விட்டான்..

"நல்லாயிரும்மா.." தங்கையின் தலை மீது கை வைத்து அவன் ஆசீர்வாதம் செய்தபோது, மாலினியும் அவனுடன் சேர்ந்து அழுதாள்...

"என்ன இது சின்ன பிள்ளைகளாட்டம்.. அவள் பெரிய இடத்தில் வாழப் போகிறாள்.. இந்த நேரத்தில் போய் அழுதுகிட்டு..."

ராதிகா, அண்ணனையும் தங்கையையும் அதட்டினாலும் அவளையும் மீறி அவள் கண்களில் நீர் வழிந்தது..

"அண்ணி.."

மாலினி மனம் தாளாமல் ராதிகாவின் தோள் சாய.. அவள் கண்ணீருடன் இளையவளுக்கு புத்தி சொன்னாள்..

"இத்தனை நாளும் நீ எங்க வீட்டுப் பொண்ணு.. விளையாட்டாய்.. துடுக்காய்.. இருந்திருக்கலாம்.. இப்ப

இன்னொருத்தர் வீட்டுக்கு மருமகளாகப் போகிற.. விளையாட்டாய் இருக்கக்கூடாது மாலினி.."

"சரிங்க அண்ணி.."

"நீ வாழப்போகும் வீடு.. பணத்தில் மட்டுமில்லாம.. ஆள்கள் நிறைஞ்சும் இருக்கிற வீடு.. ஆளுக்கொரு குணமிருக்கும்.. அவங்கவங்க மனசறிந்து நடந்துக்கம்மா.."

"சரிங்க அண்ணி..."

"அந்த வீட்டுக் கல்யாணத்துக்கு வந்திருந்தப்ப பார்த்தேன்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர்தான் நிற்காம.. பம்பரமா சுற்றினார்.. நீ அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம் நடத்தப் போகிற.. அவரோட பொறுப்பும் நீ கேட்காமலே உன் தலையில் ஏறும்.. அதைச் சமாளிக்க கத்துக்கணும்..."

"சரிங்க அண்ணி.."

காவேரிக்கு தன் கண்களையும் காதுகளையும் நம்ப முடியவில்லை.. அவளுடைய மருமகளுக்குள் இவ்வளவு ஈரமான மனமும் இருக்கிறதா..?

'கல்லுக்குள் ஈரம்னு சும்மாவா சொன்னாங்க..' அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள்..

ஜானகிராமனுக்கோ.. தன் மருமகளின் அறிவை நினைத்து மனம் கொள்ளாத பெருமை..

"சும்மா சொல்லக்கூடாது ரஞ்சித்.. நம்ம ராதிகா நாலையும் யோசிச்சு எப்படிப் புத்தி சொல்கிறாள்னு பாரு.. நாமளும்தான் கல்யாண வீட்டுக்குப் போனோம். இதெல்லாம் நம்ம கண்ணில் பட்டதா.. இதுதான் நமக்கும் ராதிகாவுக்கும் உள்ள வித்தியாசம்.. ஷி இஸ் ஸோ கிரேட்.."

இதைக் கேட்டதும் ரஞ்சித்திற்கு தன் மனைவியின் மீதான காதல் அதிகமானது.. எப்போதும் மையலுடன் மனைவியைப் பார்த்து வைப்பவன்.. இப்போது அதீதமான மையலோடு மனைவியைப் பார்த்தான்..

காத்திருந்த இன்னோவா காரில்.. மாலினியுடன் ரஞ்சித்தும் ராதிகாவும் ஏறிக்கொள்ள.. காவேரியும் ஜானகிராமனும் உறவினர்களை அழைத்து வருவதற்காக பின்தங்கி விட்டனர்..

ஜானகிராமன் உறவுக்காரர்களுக்கென்று தனியாக ஏ.ஸி. பஸ்ஸை வாடகைக்கு எடுத்திருந்தார்.. அதில் சொந்த பந்தங்களுடன் அவர்கள் ஏறிக்கொள்ள.. இன்னோவா காரை ஏ.ஸி. பஸ் பின்தொடர்ந்தது...

மாலினி.. மணப்பெண்ணாக மார்த்தாண்டத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தாள்..

அவள் மனம்.. முதன்முதலில் அவள் மட்டும் தனியாகக் கிளம்பி மார்த்தாண்டத்திற்கு வந்த நாளை நினைத்துக் கொண்டது..

அன்றும் இப்படித்தான்.. கடலோரக் காற்று முகத்தில் படிந்தது.. கண்மூடி அதை அன்று ரசித்ததைப் போலவே இன்றும் மாலினி ரசித்தாள்..

என்ன ஒன்று.. அன்று.. அறியாத ஓர் ஊருக்குப் போகிற ஆர்வம் இருந்தது.. இன்றோ.. அவளோடு கலந்து விட்டவனுடன் வாழ்க்கையில் ஒன்றுபடப் போகும் நிறைவு இருக்கிறது..

"கன்யாகுமரிக் கடல் அலையே தனிவிதமாகத் தான் இருக்கும்.. உன் வீட்டு ஆள்களும் அந்த ரகம்தான். பார்த்து இருந்துக்க மாலினி.." ராதிகா கடலைப் பார்த்தபடி மீண்டும் அறிவுறுத்தினாள்..

"ஆகட்டும் அண்ணி.."

"இந்தப் பக்கமெல்லாம் மலையாளம் பாதி.. தமிழ் பாதின்னு இருக்கு.."

"ஆனா.. அவர் வீட்டில் எல்லோருமே சுத்த தமிழில் தான் பேசுவாங்க அண்ணி..."

"பாருங்களேன்.. உங்க தங்கை இப்பவே அவ மாமியார் வீட்டை விட்டுக் கொடுக்காம எப்படிப் பேசுகிறா..?"

"உன்னைப் போலவே இருக்கிறான்னு சொல்லு.."

ரஞ்சித்தின் அந்த வார்த்தைகள் பூஞ்சாரலாய் ராதிகாவின் மேல் படிய.. அவள் சிலிர்த்துப் போனாள்..

மார்த்தாண்டத்திற்கு கார் நுழைந்தது.. பெண் வீட்டார் தங்க தனி வீடு எடுத்துக் கொடுத்திருந்தார்கள்..

"கல்யாணம் தக்கலை மில்லில்தான் நடக்கப் போகுது.. நீங்க தங்க இந்த வீடு ஏற்பாடு பண்ணியிருக்கு.. ஏதாச்சும் வசதி குறைஞ்சா சொல்லுங்க.. சரிபண்ணிடலாம்.."

நர்மதாவே பெண்வீட்டாரை நேரில் வந்து வரவேற்று வீட்டைச் சுற்றிக் காட்டினாள்.. தினகரன்.. ரஞ்சித்திடம் வேறு ஏதும் தேவையிருக்கிறதா என்று பார்த்துப் பார்த்து விசாரித்தான்...

ஜானகிராமனும் ரஞ்சித்தும் மனம் குளிர்ந்து விட்டார்கள்..

128

**நீ சித்திரை நிலவாய் கனவில் வந்து..**

**என் நித்திரையை கெடுக்கும் ரகசியத்தை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

சசிரேகா பெண்வீட்டினர் இருந்த வீட்டிற்கே வந்து விட்டாள்..

"நீ அங்கே இருக்க வேணாமா..?" காவேரி கவலைப்பட...

"தேவையில்லை சித்தி.. அத்தையும் காயத்ரியும் அங்கே வருகிற விருந்தாளிகளை கவனித்துக்கிறோம்னு சொல்லிட்டாங்க.. நான் பெண்வீட்டை எந்தக் குறைவு மில்லாம கவனிச்சுக்கணுமாம்.. ஏதாச்சும் குறை-யிருந்தா சொல்லிவிடுங்க சித்தி.. நான் மாப்பிள்ளை வீட்டுக்காரி.." என்று சிரித்தாள் சசிரேகா..

காவேரிக்கு மனநிம்மதியாக இருந்தது.. அதைக் கவனித்த அவளுடைய உறவுக்கார பெண்மணி ஒருத்தி...

"ம்ஹூம்.. நாங்கல்லாம்.. அறியாத இடத்தில பெண்ணைக் கொடுத்திட்டு தவிச்சுக்கிட்டு இருக்கோம்.. நீ கொடுத்து வைச்ச மகராசி.. ஏற்கெனவே உன் வீட்டுப் பெண்ணை இங்கே கொடுத்திருக்க.. இப்ப உன் பொண்ணையும் கொடுக்கப் போகிற.. இதுக இரண்டும் ஒருத்திக்கு ஒருத்தி ஆதரவாக இருந்துக்குவாங்க.. என்னைச் சொல்லு.." என்று வாய்விட்டுச் சொல்லி விட்டாள்..

"கடன்காரி கண்ணை வைத்துவிட்டா..." காவேரி சன்னக்குரலில் சசிரேகாவிடம் முணுமுணுத்தாள்..

சசிரேகா, மாலினியிடம் போய் பேசிக் கொண்டிருந்த போது.. காவேரி உள்ளே வந்தாள்..

"இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்க.." என்றாள்..

மாலினியும் சசிரேகாவும் எழுந்து நின்றவுடன்.. அவர்களுக்கு கற்பூரத்தை சுற்றிவிட்டு.. அதைக் கொண்டு போய் வாசலில் எரியவிட்டு வந்தாள்..

"என்னடி பண்ணுகிறாங்க.."

"தெரியலை..? சுற்றிப் போடறாங்க..."

"எதுக்காம்..?"

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்.. அம்மாவைக் கேளு.." சசிரேகா, காவேரியைப் பார்க்க.. அவள்..

"ஊர் கண்ணெல்லாம் உங்க ரெண்டு பேர் மேல தான்.." என்று காரணம் சொன்னாள்..

காவேரி அறையை விட்டு வெளியே செல்லும் வரை பொதுவாகப் பேசிக் கொண்டிருந்த சசிரேகா..

"தெரியுhமா சேதி..?" என்றாள்..

"சொன்னால்தானே தெரியும்..?"

"ஆளவந்தார் தாத்தாவின் குடும்பம் வழக்கம் போல ஒரு வாரத்துக்கு முன்னாலேயே வந்துட்டாங்க.."

"அதுக்கென்ன இப்ப..?"

"அவரோட பெரிய மகனும் கடைசி மகனும் தான் குடும்பத்தோட வந்திருக்கிறாங்க.. ஸ்வேதாவின் அப்பா குடும்பம் மிஸ்ஸிங்.."

"என்னவாம்..?"

"குடும்பத்துக்கே தலைவலியாம்.."

சசிரேகா கண்சிமிட்டிய விதத்தில் மாலினிக்கு சிரிப்பு வந்துவிட்டது..

"நல்லவேளை.. இங்கே கல்யாண வீட்டில் இருக்கிறவங்க தலைவலியில் இருந்து தப்பிச்சிட்டாங்க.."

சசிரேகா மேலும் வார.. மாலினியின் சிரிப்பு அதிக மாகியது...

பிரபாகரனின் தக்கலை மில் விழாக் கோலம் பூண்டிருந்தது.. அவர்களின் அன்பிற்குரிய முதலாளிக்கு அன்று திருமணம்..

மண்டபத்தில் நடத்தினால் இடம் போதாது என்று.. தக்கலை மில் வளாகத்தையே மண்டபமாக மாற்றியிருந்தார்கள்.. கடுகு போடக்கூட இடமில்லாமல் கூட்டம் நிரம்பி வழிந்தது..

திருமணத்துக்கு மாலினி வேலைபார்த்த மில்லில் இருந்து அனைவரும் வந்திருந்தார்கள்..

"வாழ்த்துக்கள் மாலினி..."

ரமேஷ் ஆர்வமாக பிரபாகரனைப் பார்த்தபடி மாலினியிடம் சொல்ல..

"உங்கள் காதலியின் வேலையைப் பார்த்தீங்களா..?" என்று பிரபாகரனின் காதுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள் மாலினி..

பிரபாகரன் சிரித்துக் கொண்டான்..

பவித்ரா திருமண வேலைகளை இழுத்துப் போட்டு செய்து கொண்டிருந்தாள்.. தினகரன் அவளிடம் பேச முயலும்போதெல்லாம் அதற்கு இடம் கொடுக்காமல் விலகிக் கொண்டிருந்தாள்..

மாலினியின் அருகே வந்து பலமுறை அவள் பேச முயன்றாள்.. மாலினி சலனமில்லாமல் முகம் திருப்பி.. அவள் பார்வையைத் தவிர்த்தாள்.. பவித்ராவின் முகம் கூம்பிவிட்டது...

பிரபாகரன்.. அதிருப்தியுடன் மாலினியைப் பார்த்தான்.. அவன் பார்வையில் குற்றச்சாட்டு தெரிந்தது..

"இது சரியில்லை மாலினி.." மற்றவர்கள் காதில் விழாத வண்ணம் முணுமுணுத்தான்..

"இந்த ஒன்றிலாவது என் குணப்படி இருக்க விடுங்க அத்தான்.." மாலினி கடினமான முகத்துடன் கூறிவிட்டாள்..

"மன்னிக்கிறது பெருந்தன்மை மாலினி.."

"எனக்கு மன்னிக்கத் தெரியாது.."

"ஏண்டி இப்படி இருக்கிற..?"

"நான் இப்படித்தான் இருப்பேன்.. உண்மையான பிரியத்தையும் பாசத்தையும் நட்பையும் கொட்டுவேன்.. அதுக்கு அவங்க உண்மையா இல்லைன்னா வேண்டாம்னு விலக்கி வச்சிருவேன்.. இதுவரைக்கும் அதுக்கு விதிவிலக்கா யாரும் இருந்ததில்லை.. உங்கள் ஒருவரைத் தவிர..."

பிரபாகரன் வாயை மூடிக்கொண்டான்.. சென்னைக்கு பிரித்து சென்றவளை.. ஒருவழியாக மார்த்தாண்டத்திற்கு வர வைத்து மணமேடை வரை கொண்டு வந்துவிட்டான்..

இப்போது பவித்ராவுக்காக பரிந்து பேசப் போக.. அவள் மாலையைக் கழட்டிவிட்டு எழுந்து போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் அவனுக்கு..

"ம்ஹூம்.. மார்த்தாண்டத்துக்கு வேலை செய்யப் போகிறேன்னு உன் நாத்தனார் சொல்லிட்டு வந்தாள்.. இப்ப மகாராணியாய் இல்ல வாழப் போகிறாள்..?"

ராதிகாவின் அம்மாவிட்ட பெருமூச்சில் அந்த ஏரியா முழுவதும் அலை காற்றாகிப் போனது..

"கெட்டிமேளம்.. கெட்டிமேளம்.."

திருமண வீடுகளின் வழக்கமாக.. உறவுக்காரர் ஒருவர் உரத்த குரலில் கூற.. கெட்டி மேளம் முழங்கியது..

பிரபாகரன், மாலினிக்கு தாலிகட்டி ஊரறிய தன் மனைவியென்று பிரகடனம் செய்தான்..

அவனது கரம் பற்றி அக்கினியை வலம் வந்தபோது மாலினியின் மனம் பொங்கித் ததும்பியது..

இன்றிலிருந்து அவள் பிரபாகரனின் மனைவி.. அவனது தாய்க்கு மருமகள்.. தம்பிகளுக்கும் தங்கைக்கும் அண்ணி.. நாளை வரப் போகும் அவனது பிள்ளைகளுக்கு தாய்..

நினைத்தாலே இனிக்கும் என்பது இதுதானா..?

129

**வெண்ணிலா நேரத்தில் நீ வேணுகானம் சொன்னாய்..**

**அந்நொடியில் என் உயிர் கரைந்து உன்னுடனே கலந்ததை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

அது நாள் வரை.. அவள் அடியெடுத்து வைக்காத பிரபாகரனின் அறைக்குள் அடியெடுத்து வைத்தாள் மாலினி...

உடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் பரவசம் உதிக்க.. அவள் மனதில் எதிர்பார்ப்புடன் கூடிய ஒரு இன்ப லாகிரி உருவாகி இருந்தது..

அவன்.. அவள் அறிந்தவன்தான்.. காதோரமாக காதல் சொன்னவன்தான்.. கதைகள் பல பேசியவன் தான்.. யாருமறியாமல் அருவிக்கரையிலும் அணைக் கட்டிலும் அவளைக் கட்டித் தழுவியவன்தான்..

ஆவேசம் வந்த அந்த 'ஓர் இரவில்..' அவளோடு கூடிக் கலந்தவன்தான்..

இருந்தும் ஏனோ.. அவளுக்குள் ஒரு பதற்றம் தோன்றியது.. அவன் புதியவனாக அவள் கண்ணுக்குத் தெரிந்தான்..

மலர்ச் சரங்கள் நெருக்கமாக கட்டித் தொங்கவிடப் பட்டிருந்த கட்டிலின் அருகே கைகட்டி நின்றிருந்தவன்.. அவளது நடுக்கத்தைப் பார்த்து புருவம் உயர்த்தினான்..

"என்னடி..?" என்று வியப்பாக வினவினான்..

"தெரியலை.." அவளுக்கு அந்த அறையின் ஏ.ஸி. குளிரையும் தாண்டி வியர்த்தது...

"இப்படி உட்காரு சொல்கிறேன்..."

பிரபாகரன் அவளது கைபிடித்து கட்டிலில் அமர வைத்துவிட்டு தானும் அருகே அமர்ந்தான்.. அவளது கைவிரல்களை நீவிவிட்டான்...

"எதுக்கு பயம்..?" இதமாக வினவினான்..

"அதுதான் தெரியலைன்னு சொன்னேனே.."

"அழகிய அசுரான்னு கூப்பிட்டு.. அத்துமீற ஆசை யில்லையான்னு கேட்டயேடி.. அன்றைக்கு ஏதோ ஒரு ஆவேசத்தில் அத்துமீறிவிட்டேன்.. அதுபோதுமா..?"

பிரபாகரன் கண்சிமிட்ட.. மாலினி முகம் சிவந்தாள்..

"போதுமே.."

"போதாதுன்னுதானே சொல்லிக்கிட்டு இருக்கேன்.."

"ஹப்பா.. இதைப் பேச விட்டால்.. விடியும் வரை பேசுவீங்களே..."

"அந்தக் கதையெல்லாம் இங்கே வேணாம்.. விடியும் வரை பேசுவேன்.. வாய் பேச்சில்லை.. வேறு பேச்சு.."

பிரபாகரன் அவளை ஆவேசத்துடன் ஆக்கிரமித்தான்.. மாலினி மூச்சுத் திணறினாள்.. இன்ப வலியை உணர்ந்து கிளர்ந்தாள்..

"ஹப்பா.. அசுர வேகம்தான்.."

"நீதானேடி அசுரான்னு கூப்பிட்டு வைத்தே.. அப்ப அனுபவி.."

மாலினி சம்சாரக் கடலில் மூழ்கி முத்தெடுத்தாள்.. விடியும் வரை கதைகள் சொல்லி விடிந்தவுடன் பிரிய மனமில்லாமல் பிரிந்தான் பிரபாகரன்..

ஈரத்தலையை விரிய விட்டு.. ஜன்னல் வழியாக தோட்டத்தைப் பார்த்தாள் மாலினி.. அதிகாலைப் பனியில் மலர்கள் குளித்திருந்தன.. முதல் நாளிரவின் நினைவில் மனதில் உல்லாசம் நிரம்ப.. மாலினி மெதுவான குரலில் பாடினாள்..

"மலர்கள் நனைந்தன பனியாலே -என்

மனமும் குளிர்ந்தது உறவாலே..

பொழுதும் விடிந்தது கதிராலே -சுகம்

பொங்கி எழுந்தது உறவாலே.."

அவள் மனதில் அன்று இல்லாத நிறைவு இன்று இருந்தது. அன்று அவனுக்கு தன்னை நிரூபிக்க தன்னைத் தந்தாள்.. அதில் எல்லையில்லாத மனப் போராட்டம் இருந்தது..

இன்று அது எதுவும் இல்லை.. மேகங்கள் அற்ற நிர்மலமான வானம் போல எந்தவித மனப்போராட்டமும் இல்லாத இனிமையான இரவை அவனுடன் சேர்ந்து சுகித்த இன்ப நினைவுகள் மட்டுமே அவள் மனதில் இருந்தன..

"சேர்ந்து மகிழ்ந்து போராடி - தலை

சீவி முடித்தேன் நீராடி..

கன்னத்தைப் பார்த்தேன் முன்னாடி-பட்ட

காயத்தைச் சொன்னது கண்ணாடி.."

ஜன்னலில் சாய்ந்து நின்று.. அவள் பாடிக் கொண்டிருந்தபோது.. அவளுக்குப் பின்னாலிருந்து பிரபாகரனின் கரம் அவளை இறுக்கியது...

"கன்னத்தில் எங்கேடி காயம் இருக்கு..?"

அவளது காதோரமாக கேட்டவன்.. அந்தக் கன்னத்தில் இதழ் பதித்தான்.. மாலினி.. கண்மூடிக் கிறங்கி அவன் தோளில் சாய்ந்தாள்..

வெனிஸ் நகரின் குளிர் மிகுந்த சீதோஷ்ண நிலை.. ஏரியில் மோட்டார் படகில் மிதந்துகொண்டே.. மேல் தளத்தில் இருந்த ஹோட்டலில் டேபிளின் எதிரேயிருந்த சேர்களில் அமர்ந்து.. அந்தக் குளிருக்கு இதமாக காபியை அருந்தியபோது..

'இந்த உலகம்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது..' என்று மாலினிக்குத் தோன்றியது..

கனமான ஸ்வெட்டர் போன்ற நீண்ட கோட்டை இருவரும் அணிந்திருந்தார்கள்..

பிங்க் கலர் சுடிதாரில்.. முடியை விரிய விட்டு.. கண்களுக்கு குளிர்கண்ணாடி அணிந்து.. அல்ட்ரா மாடர்ன் பெண்ணாக அவன் முன்னால் அமர்ந்திருந்த வளைப் பார்த்து கண்சிமிட்டினான் பிரபாகரன்...

"பெண்டாட்டிகிட்ட யாராவது கண்ணடிப் பாங்களா ஹிட்லர் சார்..?" மாலினியின் குரலில் கேலி இருந்தது..

"உன்னைப் பார்த்தா சைட் அடிக்கத் தோணுதுடி.." பிரபாகரனின் குரலில் கிறக்கம் இருந்தது..

"இருக்காதா பின்னே.. நம் ஊரில்.. நம் வீட்டில் இருந்திருந்தால்.. அடக்க ஒடுக்கமாக சேலை கட்டி.. முடியை இறுக்கிப் பின்னல் போட்டு தலைநிறைய பூவும் நெற்றியிலே குங்குமமுமாக தாலியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு.. உங்க காலைத் தொட்டு கும்பிட்டிருப்பேன்.. உங்களுக்கும் பெண்டாட்டின்னு தோணியிருக்கும்..."

"இத்தனையும் சொன்னவ.. நீ வழக்கமாகப் போட்டுத் தாக்கும் சிச்சுவேஷன் சாங்கை மட்டும் ஏன் விட்டு வச்சிருக்க.. அதிலயும் ஒண்ணை எடுத்துவிட வேண்டியது தானே..."

பிரபாகரன் கிண்டலடித்ததும்.. மாலினி ஒற்றை விரலால் நெற்றிப் பொட்டைத் தட்டி யோசித்துவிட்டு பாடிக் காட்டினாள்..

"ஒரு ஆலயமாகும் மங்கை மனது..

அதை அன்றாடம் கொண்டாடும்..

காலைப்பொழுது.. நல் காலைப்பொழுது.."

"எங்கேயிருந்துடி இவ்வளவு பாட்டையும் பிடிப்ப?"

"பாட்டுக்கா நம்ம ஊரில் பஞ்சம்? சிச்சுவேஷன் சாங் பொருத்தமா இருந்துச்சா.. இல்லையா.. அதை மட்டும் சொல்லுங்க..."

"நீ பாடி அது பொருத்தமில்லாம போகுமா.. சேலை கட்டியிருந்தாலும் கலக்குற.. இப்படி கூலிங்கிளாஸ் மாட்டிக்கிட்டு செம கட்டையாக இருந்தாலும் கலக்கற.. அது எப்படிடீ.." பிரபாகரன் கோந்தில்லாமல் அவளோடு ஒட்டிக்கொண்டான்..

130

**காத்திருக்கும் நிலையினிலும்..**

**பூத்திருக்கும் என் மனதை...**

**என்னவென்று நான் சொல்ல..?**

தேனிலவு முடிந்து பிரபாகரனும் மாலினியும் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து ஒரு வார காலம்தான் ஆகியிருந்தது..

அன்று அதிகாலையிலேயே எழுந்து அவசர வேலையிருப்பதாகச் சொல்லிக் கிளம்பிப் போய் விட்டான் பிரபாகரன்..

வெனிஸ் நகரில் கழித்த இன்ப நாள்களின் நினைவுகளுடன் மெல்லிய குரலில் ஏதோ ஒரு பாடலை வாய்க்குள் 'ஹம்' செய்தவாறு கீழே செல்வதற்காக மாடி ஹாலுக்குள் வந்தாள் மாலினி..

"அண்ணி ஒரு நிமிஷம்.." தினகரன் இறுக்கமான முகத்துடன் அவளுக்கு எதிரே வந்து நின்றான்..

"உங்ககிட்ட பேசணும்..."

"பேசுங்க.."

"பவித்ரா விஷம் குடிச்சிட்டா.. அது உங்களுக்குத் தெரியுமா..?"

"என்னது..?"

மாலினியின் முகம் அதிர்ச்சியை பிரதிபலித்தது...

"அவர் என்கிட்ட இதைப் பத்தி எதுவுமே சொல்லலையே..."

"அண்ணனுக்கோ அம்மாவுக்கோ ஏன்.. வேறு யாருக்குமே இந்த விஷயம் தெரியாது.. எனக்கும் வாசவன் மாமா குடும்பத்தார்க்கும் மட்டுமே இது தெரியும்..."

"என்ன ஆச்சு தினகரன்..?"

மாலினியின் குரல் நடுங்கியது.. இதற்கு ஏதோ ஒரு வகையில் தான்தான் காரணம் என்று அவளுடைய உள்ளுணர்வு சொல்லியது..

தினகரன் அடுத்துக் கூறியவை அனைத்தும் அது உண்மையென்று உறுதிப்படுத்தின...

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மறுத்தாள் அண்ணி.. நான் விடாம ஃபோர்ஸ் பண்ணினேன்.. அம்மா கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சுட்டாங்க.. அவங்க வீட்டில் பெண் கொடுக்க சம்மதம் சொல்லிட்டாங்க.. வரும் முகூர்த்தத்தில் கல்யாணம் வைக்கலாம்னு பேசி வச்சிருந்தோம்... நீங்களும் பெரியண்ணனும் தேனிலவு முடிந்து வர காத்திருந்தோம்.."

"அப்புறம்..?"

"கல்யாணம் நடப்பது உறுதின்னு ஆனவுடன் அவ விஷத்தை குடிச்சிட்டா..."

"அதுதான் ஏன்? அவ எந்த அளவுக்கு உங்களைக் காதலிச்சான்னு எனக்குத்தான் தெரியும் தினகரன்.. உயிருக்குயிராய் காதலிச்சா.."

"அதனால்தான் என்னை வேண்டாம்னு சொல்கிறா.."

"புரியலையே.."

"தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கிறாளாம்.."

இப்போது மாலினிக்கு அனைத்தும் தெளிவாக புரிந்து விட்டது.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு முகத்தைத் திருப்பி விட்டத்தை வெறித்தாள்..

தினகரன் அவள் மேல் அசையாத பார்வையைச் செலுத்தியபடி உடைந்த குரலில் பேசினான்..

"இதுதான் அவளுக்கான தண்டனையாம்.. இந்தக் காதலுக்காகத்தானே என் சிநேகிதிக்கு துரோகம்

செய்தேன்னு அழுகிறாள் அண்ணி.. அப்படிப்பட்ட காதல் வேண்டாம்னு என்னை ஒதுக்குறா அண்ணி.."

மாலினியின் விழிகளில் நீர் தளும்பிவிட்டது.. அவள் அறிவாள்.. பவித்ராவின் காதல் எப்படிப்பட்டது என்று..

அப்படிப்பட்ட காதல் நிறைவேறி அவள் ஆசைப் பட்டவன் அவளுக்கு கிடைக்கிறபோது அவள் அதை மறுக்கிறாளா..?

"இப்போது அவளைக் காப்பாற்றிவிட்டோம் அண்ணி.. அவள் குடும்பத்துக்கு நடந்தது எதுவும் தெரியாது.. அவளிடம் கேள்வி கேட்டால் திரும்பவும் விஷத்தை கையில் எடுத்துவிடுவாள்னு பயந்து கொண்டு யாரும் அவளிடம் வாய் திறக்கவில்லை.. இனியும் இதுபோல அவள் தற்கொலை முயற்சியை செய்ய மாட்டான்னு என்ன உத்தரவாதம் இருக்கு அண்ணி..?" மாலினி பதில் பேச வில்லை..

"உங்க கல்யாணத்துக்கு அவள் வந்திருந்தபோது.. முகம் கொடுத்து நீங்க பேசலையாம்.. இனி வாழ் நாளில் மாலினி என்னுடன் பேசமாட்டாள்னு சொல்லிச் சொல்லி அழுகிறாள் அண்ணி.. என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேன்கிறா..."

மாலினி யோசனையாக நின்றாள்..

"எனக்கு காதல்னா என்னன்னு தெரியாது. எனக்கு அதை அவள் தெரிய வைத்தாள்.. அவ மேல என் உயிரை வைத்திருக்கிறேன் அண்ணி.. அவளுக்கு ஏதாவது ஆகி விட்டால் என்னையும் நீங்க உயிரோடு பார்க்க முடியாது.."

"என்ன பேச்சு இது தினகரன்..?" மாலினி அதட்டினாள்...

"இவ்வளவு நேரமும் சாகத் துணிந்தவளைப் பற்றி சாவைத் தொட்டு திரும்பி வந்திருக்கிறவளைப் பற்றி கதை கதையாய் பேசினேன்.. அது எதுவும் உங்க காதில் ஏறவில்லை.. நான் போய்விடுவேன்னு வெறும் வாய் வார்த்தைக்கு சொன்னதற்கு இவ்வளவு பதறிப் போகிறீங்களே.. இவ்வளவுதானா நீங்க..? உங்களிட மிருந்து இப்படி ஒரு சுயநலத்தை நான் எதிர்பார்க்க வில்லை அண்ணி.." தினகரன் காட்டமாக பேசினான்..

"இது என்ன தினகரன்.. என் கோபத்தைக் காட்டக் கூட எனக்கு உரிமையில்லையா..?"

"யாரிடம் கோபத்தை காட்டுவது அண்ணி..? செய்த தவறுக்கு வருந்தி அதற்கு பரிகாரம் தேடி உயிரை விடத் துணிபவள் கிட்டயா உங்க கோபத்தைக் காட்டுவீங்க..? புறக்கணிப்பு என்பது மிகக் கொடுமையான தண்டனை அண்ணி.. அதற்கு சாவே மேல் என்றுதானே பவித்ரா சாவைத் தேடி விஷத்தை குடித்திருக்கிறாள்..?"

"என்னைக் குற்றவாளியாக்குகிறிங்க தினகரன்.."

"இல்லை அண்ணி.. அவளை குற்ற உணர்வி லிருந்து மீட்டுக் கொடுக்கன்னுதான் உங்ககிட்ட கெஞ்சுகிறேன்.. எனக்கு ஏதாவது ஒன்றுன்னா அண்ணன் தாங்க மாட்டார்.. அண்ணனின் துயரத்தை நீங்க தாங்க மாட்டிங்க.. எனக்காக வேண்டாம்.. பவித்ராவுக்காக வேண்டாம்.. அண்ணனுக்காகவாவது இதைச் செய்யுங்க அண்ணி.. வந்து பவித்ராவைப் பாருங்க. அவகிட்டப் பேசுங்க..."

தினகரன் கெஞ்சிக் கொண்டிருந்தபோது..

"அவ வருவாடா.." என்ற குரல் கேட்டது..

அவர்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. மாடி ஹாலின் வாசலில் இருந்து பிரபாகரன் உள்ளே வந்தான்.. மாலினியைப் பார்த்தான்.. அவனது பார்வையில் கட்டளை இருந்தது..

"நீ கவலைப்படாமல் போ தினா.. மாலினி கட்டாயம் பவித்ராவைப் பார்க்க வருவா.. நான் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்.."

"தேங்க்ஸ் அண்ணா.."

தினகரன் நன்றிகலந்த குரலில் சொல்லிவிட்டுப் போய்விட்டான்..

பிரபாகரன்.. மாலினியின் அருகே வந்து அவள் முகத்தை நிமிர்த்தினான்..

அவளது பார்வையோடு அவன் பார்வை கலந்தது.. அவன் மெல்லக் கூறினான்..

"நீ கருணையுள்ளவ மாலினி.. உன் சிநேகிதியை சாக விட மாட்டாய்.."

131

**எளிதாக நீ பிரிவைச் சொல்லிவிட்டாய்..**

**என்னுயிர் அதைக் கேட்டதும் துடிப்பதையே..**

**என்னவென்று நான் சொல்ல..?**

கட்டிலை ஒட்டி இருந்த ஜன்னலின் வழியாக நீல வானம் தெரிந்தது.. கூட்டுக்கு திரும்பும் பறவைகளின் சத்தம் பவித்ராவின் காதுகளில் விழுந்தது.. அவளது அறையை ஒட்டியிருந்த மரத்தில் அடைந்த அந்தப் பறவைகளை ஏக்கத்துடன் பார்த்தாள் பவித்ரா..

'இப்படியொரு பறவையாக பிறக்காமல் போனேனே..'

விட்டுச் சிறகடிக்க முடியாமல் தன்னை மீட்டு விட்டார்களே என்ற துயரம் அவள் நெஞ்சில் கவிந்தது.. இனித் தினம் தினம் கொல்லும் அந்த ஓர் இரவின் துரோக நினைவுகளுடன் அவள் வாழ வேண்டும்..

"என்ன கொடுமை இது.." அவள் கண்மூடித் கொண்டாள்..

அறைவாசலில் நிழலாடியது.. திரும்பிப் பார்த்தவள்.. விழிவிரிய..

"மாலினி..?" என்றாள்..

"நானே தான்.." மாலினி அறைக்குள் வந்தாள்..

பவித்ரா பரபரப்பாக எழுந்து கொள்ள முயல.. அதைத் தடுத்துவிட்டு அவளருகே கட்டிலில் அமர்ந்தாள் மாலினி..

"ஏண்டி இப்படிச் செஞ்சே..?"

பவித்ராவின் விழி பார்த்துக் கேட்டாள்.. பவித்ரா பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள்..

"நான் துரோகிடி.. என் காதலுக்காக.. உன் காதலை அழிக்கப் பார்த்த வஞ்சகி... என் மேல் இரக்கம் காட்டாதே மாலினி.."

"நீ செய்தது தப்புத்தான். நான் இல்லைன்னு சொல்ல மாட்டேன்.. ஆனா.. அது மூலம் நான் என் காதலை அவருக்கு நிரூபித்துவிட்டுப் பிரிந்து போனேன்.. அவர் விடாமல் என் பின்னால் வந்து அவரைத் தேடி வர வைத்து.. அவரின் காதலை நிரூபித்தார்.. உண்மையான காதலை எந்த துரோகமும் உடைத்துவிட முடியாது பவித்ரா.."

"ஒரு வேளை நீங்கள் பிரிந்திருந்தால்..?"

"பிரிய மாட்டோம்.."

"ஒருவேளை நீங்கள் சேராமலே போயிருந்தால்..?"

"நாங்கள் சேர்ந்துவிட்டோம்.. அது உனக்குத் தெரியாது.."

"எல்லாம் நல்லபடியாக முடிந்ததால் நீ என்னைத் தேடி வந்திருக்கிறாய்.. இதுவே எதிர்மறையாய் முடிந்திருந்தால்?"

"முதலில் நீ எதிர்மறையாய் நினைப்பதை நிறுத்து பவித்ரா.. நாங்க கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் பிரிந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? அவரை விட்டு விட்டு நான் வேறொருத்தனை கல்யாணம் பண்ணியிருப் பேனா? இல்லை.. என்னை மறந்துவிட்டு அவர்தான் வேறொருத்தியை மனதால் நினைத்திருப்பாரா..? எங்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்டி..?"

"மாலினி.."

"உண்மையான காதலுக்கு பிரிவே கிடையாது பவித்ரா.. கண்ணதாசன் பாட்டு ஒன்றைக் கேட்டிருக் கிறாயோ..?"

"நீதான் பாடிக் காட்டேன்.. உன் குரலைக் கேட்டு எவ்வளவு நாளாச்சு..?"

"வெகுதூரம் நீ சென்று நின்றாலும் -உன்

விழி மட்டும் துணையாக வந்தாலும்..

வருகின்ற விழியொன்று தருகின்ற பரிசென்று

உருவாகும் சுகமென்று ஒன்று"

பவித்ரா குழந்தை போலக் கேட்டுக் கொண்டிருந்தாள்.. தனது சிநேகிதியின் கையைப் பிடித்துக் கொண்டே பாடிக் காட்டினாள் மாலினி..

"கேட்டாயா? பிரிவு உடலுக்குத்தான்.. மனத்துக்கு இல்லை. ஒருவரையொருவர் பார்க்காமலேயே வாழ்ந்து முடிக்கும் சக்தியை காதல் கொடுக்கும். காதல் என்றுமே தோற்காது பவித்ரா.."

"நான் செய்ததும் தப்புத்தானே..?"

"தப்புத்தான்.. அதற்குத்தான் ஏகப்பட்ட மனவேதனையைப் பட்டுவிட்டாயே.. இனியும் எதற்கு மருகுகிறாய்..?"

"உன் சிநேகிதியை நீ மன்னித்துவிட்டாயா..?"

மாலினி பதில் சொல்லாமல் சிரித்தாள்.. பிரபாகரன் அந்தச் சிரிப்பின் பொருளை அறிவான்.. பவித்ரா பாவம் அறிய மாட்டாள்..

மன்னிக்கக் கூடிய தவறை பவித்ரா செய்யவில்லை. அவளை மன்னிக்கவும் அவள் செய்த தவறை மறக்கவும் மாலினியால் முடியாது..

அதே சமயத்தில்.. பவித்ராவை குற்ற உணர்வில் அழுந்தவிட்டு சாகடிக்கவும் மாலினியால் முடியாது..

அவள் பவித்ராவை உண்மையாக சிநேகித்தவள்.. அவளுடைய சிநேகிதி அழிந்துபோக அவள் அனுமதிக்க மாட்டாள்..

"எழுந்திரு பவித்ரா.."

"எங்கே மாலினி..?"

"முகம் கழுவி.. டிரஸ் பண்ணிக்க.. நாம் சினிமாவுக்கு போகலாம்.."

"நாம்ன்னா..?"

"நீ.. நான்.. பிரபா.. தினகரன்.."

பவித்ராவின் முகம் ஒளிர்ந்தது.. அவளுடைய சிநேகிதி அவளுக்கு திரும்பவும் கிடைத்துவிட்ட மகிழ்வில் அவள் எழுந்து கொண்டாள்..

ஹாலில் அமர்ந்து காபி சாப்பிட்டபடி வாசவன் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தான் பிரபாகரன்..

"அவ மனசில் என்ன இருக்குன்னு தெரியலையே பிரபா.. தினகரனைப் பிடிக்கலையான்னு கேட்டா.. அவரைத் தவிர வேறு யாரையும் எனக்குப் பிடிக்காதுப்பான்னு சொல்கிறா.. அப்ப கல்யாண ஏற்பாட்டை பண்ணவான்னு கேட்டால் விஷத்தைக் குடிக்கிறா.."

"எல்லாம் சரியாகிவிடும் மாமா.."

"எப்படிப்பா..?"

எதிரில் அமர்ந்திருந்த தினகரனின் கண்களில் மின்னலைக் கண்ட பிரபாகரன்.. தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்..

'இப்படித்தான்..' என்று மனதிற்குள் சொல்லியபடி திரும்பிப் பார்த்தான்...

மாலினியுடன் கலகலப்பாக பேசியபடி படி இறங்கி வந்து கொண்டிருந்த பவித்ரா தினகரனை பார்வையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்..

பளிச்சென்ற முகத்துடன். அழகாக சிரித்தாள்.. பிரபாகரனிடம் நலம் விசாரித்தாள்.. 'ஆ'வென்று வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்த வாசவனிடம்..

"நாங்க சினிமாவுக்குப் போய் வருகிறோம்ப்பா.." என்றாள்..

"எப்படி மாப்பிள்ளை..?" அவர் நம்ப முடியாமல் பிரபாகரனைக் கேட்க..

"இன்னும் அந்த எப்படியிலேயே இருந்தா எப்படி மாமா..? காலா காலத்தில் இவங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் பாருங்க.." என்றான் மாப்பிள்ளை..

"அதுக்குத்தானே.. இத்தனை நாளாய் ஏங்கிக் கிடந்தேன்.." வாசவன் அப்போதே நர்மதாவிற்கு போன் போட்டார்..

அந்த மாத இறுதியில் நடந்த தினகரனின் திருமணத்தில் மணப்பெண்ணின் தோழியாக அருகிலேயே இருந்தாள் மாலினி..

பெண்ணைத் தாரைவார்த்து வாசவன் கொடுத்த போது.. தினகரனின் பெற்றோர்கள் ஸ்தானத்தில் அவளும் பிரபாகரனும் அதைப் பெற்றுக் கொண்டார்கள்..

பவித்ராவை குற்ற உணர்விலிருந்து மீட்டு.. அவளுடைய காதலனுடன் சேர்த்து வைத்துவிட்டாள் மாலினி..

132

**எங்கிருந்தோ நீ வந்து..**

**என் மனதை திருடிச் சென்றதை..**

**என்னவென்று நான் சொல்ல..?**

விளையாட்டு மைதானத்தைவிடப் பெரியதாக.. பரந்து விரிந்திருந்த மொட்டை மாடியில் மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருந்தாள் மாலினி.. அவள் கையில் சாப்பாட்டுக் கிண்ணம் இருந்தது..

"டேய் குட்டி.. நில்லுடா செல்லம்.. அம்மா பாவமில்லையா..?" என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள்..

"இந்த அம்மாவா பாவம்? இவளுக்கு கோபம் வந்தால் கலங்கடிச்சிருவாளே.. நீ இவளுக்கு பாவம் பார்க்காதேடா.." பிரபாகரன் அவள் பின்னால் வந்து கட்டிக்கொண்டான்..

"விடுங்க என்னை.. என் பிள்ளையிடம் என்னைப் பற்றிப் போட்டுக் கொடுக்கறீங்களா..?" போலிக் கோபத்துடன் திமிறிய மாலினி..

"சுதாகரா.. என் கண்ணில்ல.. ஓடாதேடா.. நில்லு.. அம்மாவுக்கு கால் வலிக்குதுடா.." என்று மகனிடம் திரும்பவும் கெஞ்ச ஆரம்பித்தாள்..

இரண்டரை வயசு சுதாகரன் அவள் கையில் அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருக்க.. கால்வலியுடன் களைத்து நின்றுவிட்ட மனைவியைக் கண்டு பிரபாகரன் சிரித்துவிட்டான்..

"இதைப் பாருடா.. என்னை விட்டு விட்டு சென்னைக்கு ஓடின அவனோட அம்மாவை.. தன் பின்னாலே என் மகன் ஓடி வர வச்சிட்டானே.. டேய் சுதா.. இந்த சிங்கத்திற்கு பிறந்த சிங்கக்குட்டின்னு நிரூபிச்சுட்டடா கண்ணா.." பிரபாகரன் இரண்டே எட்டில் மகனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டான்..

"எல்லாம் அப்படியே அவனுடைய அப்பாவின் அழிச்சாட்டியம்தான்.. வீட்டில் எத்தனை இடமிருக்கு.. ஆனாலும் இந்த சின்னய்யாவுக்கு தோட்டத்திலயும் மொட்டை மாடியிலயும் சாப்பாட்டை ஊட்டினால் தான் சாப்பாடு தொண்டையில் இறங்குது.." மாலினியின் இதழ்களில் ரகசியப் புன்னகை மலர்ந்தது...

அதைக் கண்டுகொண்ட பிரபாகரன் கண்கள் மின்னின..

"அவனுக்குத் தானாத் தெரியுதுடா.. இதெல்லாம் அவனோட அப்பனை அவனோட அம்மா வளைச்சுப் போட்டதன் நினைவுச் சின்னங்கள்னு.." பிரபாகரன் மனைவியைப் பார்த்து கண்சிமிட்டினான்..

மாலினி கணவனை காதலுடன் முறைத்தாள்.. அந்த முறைப்பில் தெரிந்த அழைப்பைக் கண்டு பிரபாகரன்

கிறங்கினான்...

"மாற்றிச் சொல்லக்கூடாது ஹிட்லர் சார்.. இந்த இடங்களில்தான் ஹிட்லர் சார் என்னை வளைத்துப் போட்டார்.." மாலினி கித்தாய்ப்பாக புருவங்களை உயர்த்தினாள்...

அவள் விழிகளில் தெரிந்த அழைப்பிலும் இதழ்களில் விரிந்த ரகசியப் புன்னகையிலும் மயங்கிப் போயிருந்தவன்..

"எப்படிடீ வளைத்துப் போட்டேன்.. இப்படியா..?" என்றபடி மகனோடு நின்றுகொண்டிருந்த மனைவியை இறுக்கிக் கொண்டு அவளது கன்னத்தில் முத்தமிட்டான் பிரபாகரன்..

"அப்பா.. நானு.." சுதாகரன் அவனது கன்னத்தைக் காட்ட..

"உனக்கில்லாமலா.. இந்தா.. உனக்கொண்ணு.." என்று மகனின் கன்னத்தில் இதழ் பதித்தான்..

அந்த நேரம் பார்த்து மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் ஒரு மைனா வந்து அமர.. சுதாகரன் அதைச் சுட்டிக்காட்டினான்..

"அப்பா.. குருவி.."

"அது குருவி இல்லைடா மைனா.."

"எனக்கு அந்த மைனா வேணும்.."

சுதாகரன் இறங்கி ஓடிவிட.. நாணிச் சிவந்த முகத்துடன் நின்றிருந்த மனைவியை நெருங்கினான் பிரபாகரன்..

"எனக்கு அந்த மைனா வேண்டாம்.. இந்த மைனா தான் வேண்டும்.."

"அத்தான் வேண்டாம்.."

"நான் வேண்டும்னு சொல்கிறேன்.. நீ வேண்டாம்னு சொல்கிறயா..?"

"சுதா இருக்கிறான்.."

"அவன் மைனாவை பிடிக்க ஓடிட்டான்.."

"யாராவது வந்திருவாங்க.."

"வந்தால்.. புருஷனும் பெண்டாட்டியும் கொஞ்சிக் குலாவிக்கிட்டு இருக்காங்கன்னு திரும்பிப் போயிடுவாங்க.."

"அப்படிக்கூட செய்வாங்களா என்ன?"

"நீதான் பாட்டிலும்.. கவிதையிலும் பின்னிப் பெடலெடுக்கிறவளாச்சே.. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிஇருந்ததும் இந்நாடேன்னு முண்டாசுக் கவிஞர் பாடிவைத்ததை படிச்சதில்லையா..?"

எதற்கு எதை இணை கூட்டுகிறான் என்ற நினைவில் மாலினிக்கு சிரிப்பு வந்தது.. அன்று போல் இன்றும் மனம் படபடக்க பின்னால் நகர்ந்தவள்.. சுவரில் மோதி நின்றாள்.. அவளது தோள் வளைவில் இரு கைகளையும் ஊன்றி சிறை பிடித்தவன்.. கிறங்கிய குரலில்..

"ஒரு குழந்தைக்கு அம்மாவைப் போலவே இல்லைடி.. அன்னிக்கு உன்னை முதன்முதலில் பார்த்ததைப் போலவே இன்னிக்கும் இருக்கே.." என்று கூறியவாறு தன்னுடன் இறுக்கிக் கொண்டான்..

விடுபட விரும்பாமல் அவனது கைகளுக்குள் விருப்பத்துடன் சிக்கிக் கொண்ட மாலினியின் உடலிலும் மனதிலும் பொங்கிய உணர்வுகளை என்னவென்று நான் சொல்ல..?

முற்றும்